தமிழ் நிலையம்
Tamileelam Archive

இரண்டாம் பாகம்



யூதர்களை நோக்கிய பயணம்

EXODUS

LEON URIS

லியோன் யூரிஸ்

தாயகம் நோக்கிய பயணம்

இரண்டாம் பாகம்

வெளியீடு:

சமுநாதம்

வெளியீடு:- ஈழநாதம்

முதற் பதிப்பு:- செப்ரெம்பர் 1992

அச்சுப்பதிப்பு:- ஈழநாதம்

விலை ரூபா 200

பதிப்பாளர்களின் பார்வையில்...

தமிழீழத் தாயகம் நோக்கிய பயணத்தைசோதனைகள், வேதனைகள் இழப்புக்கள் என்பவற்றின் மத்தியிலும் துணிவோடும், தீரத்தோடும், விடா முயற்சியோடும் முன்னெடுத்து வரும் தமிழ் மக்களின் கைகளில் தாயகம் நோக்கியபயணம் என்னும் இந்நூலை தழுவவிடுவதில் நாம் பெருமகிழ்வு கொள்கின்றோம். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக தொலைத்துவிட்ட தமது தாயகப் பூமியை மீட்டெடுப்பதில் யூதர்கள் நடத்திய போராட்டத்தை விபரிக்கும் இந் நவீனத்தின் முதலாம் பகுதியை ஏற்கனவேவெளியிட்டநிலையில், இரண்டாம்பகுதி இப்போது வெளிவருகின்றது.நான்குபாகங்களைக் கொண்ட Exodus என்னும் இந்த நவீனம் தாயகம் நோக்கிய பயணம் என்ற பெயரில் மொழிபெயர்க்கப்பட்டு முதலிரு பாகங்களும் முதல் தொகுதியாக ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளது. பின்னிரு பாகங்களும் இந்த இரண்டாம் தொகுதியில் இடம் பெற்றுள்ளன. முதல் தொகுதி 468 பக்கங்களையும், இரண்டாம் தொகுதி, 446 பக்கங்களையும் கொண்டுள்ளன.

தமிழ் மக்கள் முன்னெடுத்து வரும் தமிழீழத்தாயகம் நோக்கிய பயணத்திற்கு மேலும் துணைசெய்யும் வகையிலான நூல்களை வெளியிடுவதற்கும், போராட்டத்திற்கு உத்வேகத்தையும் உற்சாகத்தையும்[ஊட்டும் வெளியீடுகளை தொடர்வதற்கும், இந்த நூலுக்கு வாசகர்கள் தரும் ஒத்துழைப்பு ஊக்கியாக அமையும். எனவே தான் 'குணம் நாடி குற்றம் நாடி, அவற்றில் மிகை நாடி ,மிக்கதை கொள்ளும்படி' கேட்டுக் கொள்வதுடன் வாசகர்களாகிய உங்களின் ஆதரவை என்றென்றும் எதிர்பார்த்து நிற்கின்றோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

-நன்றி-

- பதிப்பாளர்கள்

அத்தியாயம் ஒன்று

பலஸ்தினக் கூட்டுறவு பேரூந்து நிறுவனத்தின் வெள்ளி, நீலவர்ண பேரூந்துகளின் வரிசை ஒன்று பிள்ளைகளை எதிர் பார்த்து இறங்கு துறையில் காத்துக் கொண்டிருந்தது. உத்தியோகபூர்வக் கொண்டாட்டங்கள், வேகமான, குறைந்தளவு மட்டத்தில் வைத்துக் கொள்ளப் பட்டன. பிள்ளைகள் பேரூந்துகளில் ஏற்றப் பட்டு, பிரிட்டிஷ் இராணுவக் கவச வாகன அணியின் பாதுகாப்போடு துறை முகத்தை விட்டு விரைந்து எடுத்துச் செல்லப்பட்டார்கள். அவர்கள் கண்ணுக் கெட்டாத தூரம் வரை செல்லுமளவும் மக்கள் வாழ்த்தொலி எழுப்பினார்கள். இசைக்குழுவும் இசையெழுப்பியது.

கரேன் தான் இருந்த இடத்தில் இருந்த ஜன்னலைத் திறந்து கிற்றியை நோக்கி ஏதோ சத்தமிட்டுக் கூறினாள். ஆனால், அங்கு எழுந்து கொண்டிருந்த ஓசைகளின் மத்தியில் அது என்னவென்று கேட்க முடியவில்லை. பேரூந்துகள் போய் மறைந்தன. மக்கள் கூட்டமும் கலைந்து விட்டது. பதினைந்து நிமிடங்களில், ஒரு துறைமுகத் தொழிலாளர் குழுவையும் காவலுக்கு நின்ற சில பிரிட்டிஷ் போர் வீரர்களையும் தவிர்த்து இறங்குதுறை ஆளரவமற்றுப் போயிற்று.

எக்ஸோடஸின் இரும்புக் கிராதியருகே அசைவின்றி நின்ற கிற்றி, திடீரென ஏற்பட்ட பரிச்சயமில்லாத நிலையினால் திகைத்துப் போயிருந்தாள். அவள் அங்கே நின்று கொண்டிருக்கிறாள் என்பதை உணர்ந்து கொள்வது கடினமாயிருந்தது. அவள் ஹைபாவை ஏறிட்டு நோக்கினாள். குடாக்களின் அருகே குன்றுகளில் கட்டப்படும் நகரங்களுக்கேயுரிய விசேட அழகோடு கூட மிக ரம்மியமாகக் காட்சி தந்து கொண்டிருந்தது. நீர்ப்பகுதிக்கு அணித்தாக கூட்டமாக அமைந்திருந்த கட்டிடங்களைக் கொண்ட அரபுப்பகுதி அமைந்திருந்தது. மவுண்ட் கார்மேலின் விரல் போன்ற தோற்றம் கொண்ட சரிவு எங்கிலும் யூதர்கள் பகுதி பரந்து கிடந்தது. தன் இடதுபக்கமாக ஹைபாவுக்கு அப்பால் பார்த்த கிற்றியின் கண்களுக்கு மொசூல் எண்ணெய் வயல்களிலிருந்து வரும் எண்ணெய்க் குழாய்கள் முடிவடையும் இடமான ஹைபா எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையின் நீர்கால வடிவங்களைப் போல் தோற்றமளித்த, தாங்கிகள் புகைபோக்கிக் கட்டிடங்கள் தெரிந்தன.

அருகாமையில் இருந்த தகட்டும் துறையில், பலஸ்தீனத்துக்கு எக்ஸோடசைப் போலவே, எப்படியோ வந்து சேர்ந்துவிட்ட, அலியா பெற்றின் சிதிலமடைந்த ஆட்டங்கண்ட பத்துப் பன்னிரெண்டு கப்பல்களை அவள் கண்டாள்.

ஸெவ், டேவிட், ஜோஆப் ஆகியோரும், கிற்றியின் சிந்தனையை ஊடறுத்து, அவளுக்குப் பிரிவுபசாரம் கூறிவிட்டு அவள் உதவிகளுக்கு நன்றி தெரிவித்து விட்டு, அவளை மீண்டும் சந்திக்க எதிர்பார்ப்பதாகவும் கூறிவிட்டுப் போய்ச் சேர்ந்தார்கள். கிற்றி தனிமையாக நின்றுகொண்டிருந்தாள்.

''அழகான நகரம் இல்லையா?'' யாரோ கேட்டார்கள். கிற்றி திரும்பினாள். அரி பென் கானான் அவள் பின்னால் மிக அருகில் நின்று கொண்டிருந்தான். ''நாங்கள் எப்போதும் எங்கள் விருந்தினர்களை ஹைபாவுக்கூடாகத்தான் கொண்டு வருவோம். ஏனெனில், ஹைபா நல்லதொரு முதல் அபிப்பிராயத்தைப் பதிய வைத்துவிடும்.

''பிள்ளைகள் எங்கே போகிறார்கள்?'' அவள் கேட்டாள். ''அவர்கள் அரை டசின் அலியா பெற் இளைஞர் மையங்களுக்குப் பிரித்து அனுப்பப்படுவார்கள். சில மையங்கள் கிபுட்சுகளில் அமைக்கப்பட்டிருக்கின்றன. சில தங்கள் சொந்தக் கிராமங்களிலேயே அமைந்திருக்கின்றன. இன்னும் சில நாட்களில் கரேன் இருக்குமிடத்தை உங்களுக்குச் சொல்ல முடியும் என்று நினைக்கிறேன்.''

''அப்படிச் செய்தால் மிக்க நன்றியுள்ளவளாயிருப்பேன்.''

''உன்னுடைய எதிர்காலத் திட்டங்கள் என்ன கிற்றி?'' வெறுப்புக்கலந்த சிரிப்பொன்றை உதிர்த்த அவள், ''வேறு பல கேள்விகளோடு இதே கேள்வியைத் தான் இப்போ நான் என்னையே கேட்டுக் கொண்டிருக்கிறேன். நான் இந்த நகரத்துக்குப் புதியவள் மிஸ்டர் பென் கானான். இங்கே எப்படி வந்தேன் என்று என்னை நானே கேட்டுக் கொள்வது சிறிது முட்டாள்தனமாகத் தெரிகிறது. நல்ல தாதியாகிய பிறமென்றின் தொழிலுக்கு எப்போதுமே தட்டுப்பாடு இருக்கிறது. எங்கோ ஓர் இடத்தை என்னால் தேடிக்கொள்ள முடியும்.''

''நீ ஓர் இடத்தில் நிலைகொள்வதற்கு உதவ என்னை ஏன் நீ அனுமதிக்கக் கூடாது?''

''நீ ஒய்வொழிச்சல் இல்லாத மனிதன். என்னால் சுயமாக இயங்க முடியும்.''

''நான் சொல்வதைக் கேள். இளைஞர் அலியா உனக்கு மிகப் பொருத்தமான இடம். அமைப்பின் தலைவன் என்னுடைய நெருங்கிய நண்பன். ஜெருசலேமிலேயே உனக்கு ஒரு வேலையை என்னால் ஒழுங்கு பண்ண முடியும்.''

''மிகவும் நன்றி. நான் யாருக்கும் பாரமாயிருக்க விரும்பவில்லை.''

''முட்டாள்தனமாகப் பேசாதே. குறைந்தது... என்னோடு கூட இருப்பதைச் சில நாட்களுக்குச் சகித்துக் கொள்ளக் கூடுமானால் நான் உன்னை ஜெருசலேமுக்கு வாகனத்தில் அழைத்துச் செல்வேன். ரெல் அவிவுக்கு முதலில் போக வேண்டிய வேலை இருக்கிறது. ஆயினும் பரவாயில்லை... உனக்கொரு வேலையைத் தேடித் தரும் வாய்ப்பை எனக்கு இது தரும்.''

எனக்கு இப்படி உதவி செய்யக் கடமைப்பட்டிருக்கிறாய் என்று நீ நினைப்பதை நான் விரும்பவில்லை.''

''எனக்குத் தேவையானபடியால்தான் நான் இதைச் செய்கிறேன்'' என்றான் அரி.

கிற்றி ஒரு நிம்மதிப் பெருமூச்சை விட நினைத்தாள். ஒரு பழக்கமில்லாத மண்ணில் தனியே இருப்பது பற்றிக் குழப்பமடைந்திருந்தாள். அவள் புன்னகைத்து விட்டு அவனுக்கு நன்றி கூறினாள்.

''நல்லது, வீதி ஊரடங்குச் சட்டத்தால் வெறிச்சோடிக் கிடக்கிறது. நான் இன்றிரவு ஹைபாவில் தான் தங்க வேண்டியிருக்கும். ஒரு சில நாட்களுக்குப் போதுமானவைகளை மட்டும் ஒரு பையில் எடுத்துக் கொள். நீ உன்னோடு அதிக பொருட்களை எடுத்துப் போனால் ஒவ்வொரு ஐந்து நிமிடத்துக்கொரு முறை ரிரிட்டிஷார் உன்னுடைய பையைச் சோதிப்பார்கள். உன்னுடைய பொருட்களை முத்திரையிட்டுப் பத்திரமாகச் சுங்கப்பகுதியில் வைக்க ஏற்பாடு செய்கிறேன்.

சுங்கப் பரிசோதனை முடிந்த பிறகு, மலையின் குன்றுகள் தோறும் பரவியிருந்த யூதப்பகுதிக்கு ஒரு வாடகைக்காரை அமர்த்தி ஓட்டிச் சென்றான். உச்சிக்குக் கிட்டவாகப் பைன் மரச்சோலையொன்றில் அமைந்திருந்த ஓய்வெடுக்கும் இடத்தில் தரித்தார்கள்.

''இங்கே இருப்பதுதான் நல்லது. எனக்கு அதிகமான ஆட்கள் அறிமுகமாக இருப்பதால் நகர மத்தியில் தங்கினால், ஒரு நிமிடம் கூட நிம்மதியாயிருக்க விட மாட்டார்கள். இப்போ நீ சிறிது ஓய்வெடுத்துக் கொள். நான் மலையடிவாரத்துக்குச் சென்று நாம் செல்ல ஒரு வாகனத்தை ஒழுங்குபண்ணி விட்டு வருகிறேன். இரவுச் சாப்பாட்டிற்கு முன் நான் வந்து விடுவேன்.''

மாலையில் கார்மேல் மலை உச்சியில் அமைந்திருந்ததும், கீழே உள்ள பகுதிகளைத் தெளிவாகப் பார்க்கக் கூடிய இடமுமான ஒரு உணவுச்சாலைக்கு அரி கிற்றியை அழைத்துச் சென்றான். கீழே தெரிந்த காட்சி மூச்சை இழுத்துப் பிடிக்க வைத்தது. மலைச்சரிவு முழுவதும் புச்சைப் பசேலென்ற மரங்களால் உயிர் பெற்றிருந்ததோடு, இடைக்கிடையே சதுரமான அரபுப்பாணியில் கட்டப்பட்டிருந்த பழுப்புநிற வீடுகளும், மாடிக்கட்டிடங்களும் அரைகுறையாக மறைந்திருந்தன. விசித்திரமான தோற்றம் கொண்ட சுத்திகரிப்பு ஆலை, இந்த உயரத்தில் இருந்து பார்க்கும்போது புள்ளியாக மட்டும் தெரிந்தது. இருள் சூழ்ந்தபோது, ஹார் ஹா - கார்மேலிருந்து, நீர்முனையருகே இருந்த அரபுப் பகுதிக்கு வளைந்து வளைந்து செல்லும் பாதை நெடுகிலும் மின் விளக்குகள், பொற்சரம் போல் ஒளிர்ந்தன.

பரபரப்பு அவளுடலில் பரவிப் பாய்ந்ததோடு, அரி திடீரெனக் காட்டும் கவனிப்பால் மகிழ்ந்து போயிருந்தாள், கிற்றி, யூத ஹைபாவின் நவீனத் தன்மை அவளை வியப்புக்குள்ளாக்கியது. ஏதென்சையும், சலோனிக்காவையும் விட நவீனத் தன்மை கொண்டதாய் இருந்தது. மேசைப் பரிசாரகன் அவளோடு ஆங்கிலத்தில் உரையாடத் தொடங்கியதும், அரிக்குத் தெரிந்த அரை டசின்

ஆட்கள் அவர்களிருந்த மேசையருகே வந்து வாழ்த்துத் தெரிவிக்கத் தொடங்கியதும், பழக்கமில்லாத இடத்தில் இருப்பது போன்ற உணர்வில் பெருமளவைப் போக்கடித்து விட்டன.

உணவருந்தி முடிந்ததும், பிராந்தியை (பிறண்டி) மெதுமெதுவே உறிஞ்சுக் கொண்டிருந்தார்கள். கிற்றியோ கீழே தெரிந்த மனோரம்மியமான காட்சியில், ஆழமாக மூழ்கிப் போனாள்.

''இங்கு என்ன செய்து கொண்டிருக்கிறாய் என்று இன்னமும் யோசித்துக் கொண்டிருக்கிறாயா?''

''ஆமாம் ஏதோ கற்பனையான இடத்தில் இருப்பது போலிருக்கிறது.''

''நாங்கள் போதியளவு நாகரிகம் அறிந்தவர்கள் என்று கண்டு கொள்வாய். நான் சில வேளைகளில் கவர்ச்சிகரமானவனாகக்கூட இருக்க முடியும். உனக்குப் புரியும்தானே. இன்னும் சரியானபடி உனக்கு நன்றி சொல்லக்கூட முடியவில்லை.''

''நீ நன்றி சொல்வத் தேவையில்லை. நீ எனக்கு அருமையான விதத்தில் நன்றி சொல்லிக் கொண்டிருக்கிறாய். இதைப்போல அழகான இன்னோர் இடத்தை மட்டும்தான் ஞாபகப்படுத்த முடிகிறது.''

''அது சான்பிரான்சிஸ்கோ தானே?''

''நீ அங்கே போயிருக்கிறாயா, அரி?''

''இல்லை. ஆனால், இங்குவரும் எல்லா அமெரிக்கர்களும், ஹைபா, சான்பிரான்சிஸ்கோவை நினைவூட்டுவதாகச் சொல்வார்கள்.''

முழு இருள் சூழ்ந்து விட்ட அவ்வேளையில் கார்மேலின் குன்றுகளில் மின் விளக்குகள் எங்கும் ஒளிர்ந்து கொண்டிருந்தன. சிறிய இசைக்குழு ஒன்று, இரவு உணவு வேளை மெல்லிசை ஒன்றை இசைத்துக் கொண்டிருந்தது. அரி கிற்றிக்குச் சிறிது பிராந்தியை வார்த்து விட்டான். இருவரும் தங்கள் குவளைகளை உரசிக் கொண்டனர். திடீரென இசை நின்றுபோகச் சகல உரையாடல்களும் நிறுத்தப் பட்டன.

வியப்பளிக்கும் வேகத்தில், உணவகத்துக்கு முன் வந்து நின்ற ட்ரக் வண்டி நிறைந்த பிரிட்டிஷ் வீரர்கள் அந்த இடத்தைச் சுற்றி வளைத்தனர். ஒரு கப்டனின் தலைமையில் ஆறு வீரர்கள் உள்ளே வந்து சுற்றிப் பார்த்தனர். பின்பு மேசைகளுக்கிடையில் நகர்ந்து, பல மேசைகளுக்கு முன் நின்று அடையாள ஆவணங்களைக் காட்டுமாறு கேட்டு வாங்கிப் பரிசீலித்தனர்.

''இது வழமையான பொழுது போக்குத்தான்'' அரி மெதுவாகக் கிசுகிசுத்தான். ''இது உனக்குப் பழகிப் போய்விடும் ''உள்ளே வந்த வீரர்களுக்குப்

பொறுப்பான கப்டன் அரியின் மேசையை உற்றுப் பார்த்து விட்டு, அதனருகே நடந்து வந்தான். ''இது அரி பென் கானானாக இல்லா விட்டால்...'' என்று கேலி தொனிக்கும் குரலில் தொடங்கிய அவன் தொடர்ந்து, நீண்ட காலமாக உன் படம் எங்கள் விளம்பரப் பலகைகளில் காணப்படவில்லை. வேறு இடங்களில் நீ குறும்பு செய்து கொண்டிருந்தாக கேள்விப்பட்டேன் என்றான்.

''மாலை வந்தனம் சார்ஜன்ற். உங்களுடைய பெயர் ஞாபகமில்லை இல்லாவிட்டால் உங்களை அறிமுகப்படுத்தியிருப்பேன்.''

அந்தக் கப்டன் பற்களைக் கடித்துக் கொண்டே சிரித்தான். ''பரவா யில்லை, உன்னுடையதை நான் ஞாபகம் வைத்திருக்கிறேன். நாங்கள் உன்னைக் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறோம் பென் கானான். அக்ரே சிறையில் உன்னுடைய பழைய இடம் உனக்காகத் தனிமையில் காத்துக் கொண்டிருக்கிறது. யாருக்குத் தெரியும். ஆணையாளர் இம்முறை கெட்டித்தனமாக உனக்கு அந்த அறைக்குப் பதிலாக தூக்குக் கயிற்றையே தரக்கூடும்.'' அந்தக் கப்டன் ஒரு கேலி. யான ராணுவ வணக்கத்தைச் (Salute) செய்துவிட்டுச் சென்றான்.

''எப்படியான அழகான வரவேற்பு பலஸ்தீனத்துக்குள் வரும்போது கிடைக் கிறது. உண்மையில் சொல்லப் போனால், அவன் ஒரு மோசமான மனிதன்'' என்றாள் கிற்றி.

அரி அவள் பக்கமாகச் சரிந்து காதுக்குள் கிசுகிசுத்தான். ''அவன்தான் கப்டன் அலன் பிரிட்ஜஸ் (Allan Bridges). அவன் ஹகானாவின் நல்ல நண்பர்களில் ஒருவன். ஹைபா பகுதிகளில் பிரிட்டிஷாரும், அரபுக்களும் செய்யப் போகிறவை கள் பற்றி முன்கூட்டியே அறிவித்து விடுவான். இப்போ நடந்ததெல்லாம் மேல் தோற்றத்துக்காக நடத்தப்பட்டவைதான்.''

கிற்றி குழப்பத்துடன் தலையை ஆட்டிக் கொண்டாள். ஆவணங்கள் ஒழுங் காக இல்லாமல் இருந்த இரு யூதர்களுடன் அந்த ரோந்துப்பிரிவு புறப்பட்டது. இசைக்குழு, அவர்களைக் கேலி பண்ணுவதுபோல், ''கோட் சேவ் த கிங்.....'' (God Save the King –இங்கிலாந்துத் தேசிய கீதம்.) வரிகளை இசைத்தது.

ரோந்துப் பிரிவு வந்த லொறி புறப்பட்டுப் போனது. ஒரு கணத்தில் எல்லாம் ஒன்றுமே நடக்காதது போல் வழமைக்குத் திரும்பி விட்டது. நிகழ்ச் சிகள் விரைவாக நடந்து முடிந்தது கிற்றிக்கு ஒருவகைத் திகைப்பை அளித்தது. அந்த மக்களின் அமைதியான தன்மை வியப்பூட்டியது.

''சில நாட்களில் இந்தப் பரபரப்புக்களோடு வாழப்பழகி விடுவாய்'' அரி அவளைக் கவனித்துக் கொண்டிருந்து விட்டுச் சொன்னான். ''நீ இதற்குப் பழக்கப்பட்டுப்போவாய். இந்த நாடு, கோபமும், மனக்கிளர்ச்சியும் கொண்ட மக்களால் நிறைந்திருக்கிறது. சிறிது காலத்துக்குப் பிறகு அரிதாக இடைக்கிடை கிடைக்கும் சமாதானமும், அமைதியும் நிறைந்த வாரங்களை என்ன செய்வது என்று திகைத்துப்போவாய். இங்கு வந்தது பற்றிக் கவலைப்படாதே...'' அரி

சொல்லி முடிக்க முன்னரே, அதிர்வு அலை ஒன்று அந்த உணவகத்தில் ஜன்னல்களை உலுப்பிக்கொண்டு மேசைகளில் இருந்த பாத்திரங்களையும் கீழே தள்ளி விட்டது. ஒரு கணத்தில் மிகப்பெரிதான செம்மஞ்சள் நிற நெருப்புக் கோளமொன்று வானில் உயர்ந்து சென்றதைக் கண்டனர். தொடர்ச்சியான வெடிச்சத்தங்கள் சில அந்தக் கட்டடத்தின் அத்திவாரத்தையே உலுப்புவது போல் கேட்டன.

குரல்கள் எழத்தொடங்கின. ''எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை!'' அவர்கள் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையைத் தாக்கி விட்டார்கள்! மக்கபீசின் வேலை இது.

அரி கிற்றியின் கையைப் பிடித்துக் கொண்டே, ''வா நாங்கள் இங்கிருந்து விரைவாகச் சென்றுவிடுவோம். இன்னும் பத்தே நிமிடங்களில் இந்தக் கார்மேல் பள்ளத்தாக்கு பிரிட்டிஷ் போர் வீரர்களால் நிறைந்து விடும்.''

அந்த உணவுச்சாலை சில வினாடிகளிலேயே வெறுமையாயிற்று. அரி கிற்றியை விரைவாக வெளியே கூட்டிவந்தான். அவர்களுக்குக் கீழே எண்ணெய் பயங்கரமாய் எரிந்து கொண்டிருந்தது. முழு நகரமுமே, விரைந்து செல்லும் தீயணைக்கும் படை இயந்திரங்களின் சைரன் ஒலிகளாலும், பிரிட்டிஷ் ரோந்துப் படைகளின் வாகனங்களின் ஒலியினாலும், அல்லோலகல்லோலப்பட்டது.

கிற்றி, தான் வந்ததிலிருந்து கண்ட திடீர் வன்செயல்களைப் பற்றி யோசித்தபடியே அரைவாசி இரவைத் தூக்கமின்றிக் கழித்தாள், அந்த நேரங்களில் அரி தன்னோடு இருந்தது பற்றி அவள் மகிழ்ச்சியடைந்தாள். இவைகளோடு வாழ அவளால் பழகிக் கொள்ள முடியுமா? இதைப்பற்றி யோசிக்க இயலாமல் குழப்பமடைந்திருந்தாள். தான் பலஸ்தினம் வந்தது ஒரு பிழையான செயல் என்பதை மட்டும் அப்போதைக்கு நினைத்தாள்.

அடுத்தநாள் காலையிலும் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை எரிந்து கொண்டு தானிருந்தது. அடர்ந்த புகைப்படலமொன்று முழு ஹைபாவுக்கும் மேல் படர்ந்திருந்தது. இந்தத் தாக்குதல் மக்கபீஸ் பயங்கரவாதிகளின் வேலைதான் என்று செய்திகள் பரவத்தொடங்கின. இந்தத் தாக்குதல் மக்கபீஸ் அணியில் இணையுமுன், ஹீப்ரூ பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக இருந்த பென்மோஷே (Ben Moshe) அதாவது மோசேயின் மகன் – என்பவனால் தலைமை தாங்கி நடத்தப்பட்டிருந்தது. இவன் அக்கிவாவின் கீழ், அப்பகுதிக் கொமாண்டராகச் செயல்பட்டுக் கொண்டிருந்தான். இந்தத் தாக்குதல் மக்கபீஸ் இருமுனைச் செயற்பாட்டின் ஒரு பகுதியாகும். மற்றைய தாக்குதல் பலஸ்தீனத்தின் வேறு பகுதியிலிருந்த லிட்டா விமானத் தளத்தின் (Lydda Aerodrome) மீது நடத்தப் பட்டது. அங்கு அறுபது இலட்சம் டொலர்கள் பெறுமதியான ஸ்பிற்பயர் (Spitfire) யுத்த விமானங்கள் நிலத்தில் வைத்தே பயங்கரவாதிகளால் அழிக்கப்பட்டன. இந்தத் தாக்குதல்கள் எக்ஸோடசை வரவேற்கும் விதத்தில் அமைந்த மக்கபீஸ்களின் பிரத்தியேகப் பாணிச் செயற்பாடுகளாயிருந்தன.

1933ம் ஆண்டு வகையைச் சேர்ந்த சிறு பியட்கார் ஒன்றை அரி பெற்றுக் கொள்ளக் கூடியதாயிருந்தது. வழமையான நிலைமைகளின் கீழ், ரெல் அவிவுக் காண பயணத்துக்கு சில மணி நேரங்களே எடுக்கும். ஆனால், வழமையாகவே நிலைமை சீராக இருப்பதில்லையாதலால், அதிகாலையிலேயே ஹைபாவைவிட்டுப் புறப்படலாம் எனக் கூறியிருந்தான். அவர்கள் கார்மேலிலிருந்து கீழ்நோக்கிக் காரை செலுத்தி, சமாரியாவின் அருகோடு சென்ற கரையோரப் பாதையில் செல்லத் தொடங்கினர். கடற்கரையோரமாக பச்சைப் பசேலென்று தெரிந்த கிபுட்சு வயல்களின் தோற்றம் கிற்றியின் மனதைக் கவர்ந்தது. சூரிய ஒளியில் மேலும் மந்தமாக்கப்பட்டுவிட்ட குன்றுகளின் கவர்ச்சியில்லாத தன்மையோடு ஒப்பிடும்போது, இந்த வயல்களின் வர்ணத் தோற்றங்கள் எழிலாகக் காட்சி தந்தன. ஹைபாவிலிருந்து புறப்பட்ட சில நிமிட நேரங்களில் முதலாவது வீதித் தடையைச் சந்தித்தனர். அதனை எதிர்பார்க்கும்படி கிற்றியை அரி ஏற் கனவே எச்சரித்திருந்தான். அவள் அரியின் பிரதிபலிப்புக்களை அவதானித்துக் கொண்டிருந்தாள் அதிகமான போர்வீரர்கள் அவனை அறிந்திருந்தனர். அவர்கள் அவனுக்கு வழங்கப்பட்டுள்ள மன்னிப்புத் தற்காலிகமானதென உணர்த்தும் வகையில் நடந்து கொண்டாலும், வெளித் தோற்றத்துக்கு அவன் குழப்பம டைந்தவன் போல் தெரியவில்லை.

அரி பிரதான பாதையை விட்டு, கடலருகே இருந்த செசாரியாவின் சிதைவுகளை நோக்கி வாகனத்தைச் செலுத்தினான். அவர்களுக்கான மதிய உணவு, ஒய்வுச்சாலையில் தயாரித்துக் கொடுத்துவிட்டிருந்தார்கள். அந்த உண வைப் புராதான கடல் சுவர்களின் மேல் அமர்ந்தபடி சாப்பிட்டார்கள். 1936-39 களின் கலவர காலங்களின்போது அலியாபெற்றின் பல கப்பல்களைக் கரைதட்டச் செய்த காலங்களில், தன் பெரும்பகுதி நேரத்தைச் செலவிட்ட இடமும், ஜோஆப்பியார்க்கோணியின் கிபுட்ஸ் அமைந்திருந்த இடமுமான ''கடல்வயல்கள்'' எனப் பொருள்படும். ஸ்கொட் யாம் ஐ அங்கிருந்தபடியே சு டிக்காட்டினான் ரோமர்களுடையவும், சிலுவை யுத்த வீரர்களுடையவும் கட்டிடச் சிதைவுகளின் மேல் அரபுக்கள் எப்படித் தங்கள் நகரத்தை நிர்மாணித்திருக்கிறார்கள் என் பதைச் சுட்டிக்காட்டினான். மற்றவர்களின் சிதைவுகளின் மேல் தங்கள் நகரங் களை நிர்மாணிப்பதில் அரபுக்கள் நிபுணர்கள். ஆயிரம் வருட காலத்தில் முழு பலஸ்தீனத்திலும் ஒரேயொரு முழுதான புதிய நகரத்தையே அவர்கள் கட்டி யெழுப்பி இருந்தார்கள். ரோமர்களின் சிற்பங்களும், தூண்களும், செஸாரியா விலிருந்து பெயர்த்து இழுத்தெடுக்கப்பட்டு விட்டன. இவைகளைச் சமாரியா ஷாரோன் மாவட்டம் முழுவதிலுமுள்ள அரபு இல்லங்களில் காணலாம்.

மதிய உணவை உண்டபின் தெற்குத்திசையில் ரெல்அவிக்குப் புறப் பட்டார்கள். போக்குவரத்து நெரிசல் அதிகமிருக்கவில்லை. அரபுப்பயணி களால் அல்லது யூதர்களால் நிறைந்த ஒரிரு பேரூந்துகள் வந்துபோய்க் கொண்டிருந்தன. எப்போதுமே காணக்கூடிய கழுதை வண்டிகளுமிருந்தன. ஒரிரு தடவைகள், சைரன்கள் கிரிச்சிட்ட வேகமாகச் சென்றுகொண்டிருந்த சில பிரிட்டிஷ் வாகனத் தொடர்கள் அவர்களைக் கடந்து சென்று கொண் டிருந்தன. அரபுப்பகுதியைக் கடந்து கொண்டிருந்தபோது இந்தக் கிராமங்க

வினதும், நிலங்களினதும் வித்தியாசமான தோற்றத்தை கிற்றி அவதானித்தாள், அரபுப் பெண்கள் வயல்களில் பாடுபட்டுக் கொண்டிருந்தார்கள். வயல்கள் கற்கள் உள்ளவையாயும், செழிப்பற்றவைகளாயும், தோற்றமளித்தன. பெண்கள் பாதையோரத்தில், தொந்தரவான பெரும் அங்கிகளை அணிந்து பெரும் பாரங்களைத் தலையில்சமன்படுத்திச் சுமந்து சென்று கொண்டிருந்தார்கள். பாதை நெடுகவும் இருந்தகோப்பிக் கடைகள் சூனியத்தை வெறித்தபடி அசையாமல், இருந்து கொண்டோ அல்லது படுத்துக்கிடந்தபடி சொக்கட்டான் விளையாடிக் கொண்டோ இருந்த ஆண்களால் நிறைந்து வழிந்தன.

யாக்கோபின் நினைவு எனப் பொருள்படும் ஷிக்றொன் யாக்கோவ் (Zichron Yakuv) விற்குக் கிழே முட்கம்பி வேலிகளால் சூழப்பட்டிருந்த, கெட்ட சகுனம் போல் தோற்றமளிக்கும், ராக்காட் கோட்டையை முதன் முதலாகக் கண்டனர். சிறிது தொலைவிலிருந்த ஹடேரா (Hadera)வில் அடுத்ததைத் கண்டனர். அதைத்தொடர்ந்து ஒவ்வொரு நகரங்களிலும், குறுக்குச் சந்திகளிலும் தோன்றத் தொடங்கின.

ஹடேராவுக்கு அப்பால், ஹரோன் சமவெளியைச் சூழ இருந்த நிலங்கள் பசுமையாகவும் அதிக செழிப்பாகவும் இருந்தன. அவுஸ்திரேலியா இயூகலிப்ரஸ் மரங்கள் தெருவின் இருபக்கமுமிருந்து இணைந்து வளர்ந்து அளித்த பெரிய வளைவுகளுடாக ஓட்டிச் சென்றனர்.

''நீ காணும் எல்லாம் இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னால் கழிவான நிலங்களாக இருந்தன.'' என்று அரி சொன்னான்.

பிற்பகலில் நீரூற்றின் குன்று எனப்பொருள்படும் ரெல் அவிவுக்குள் நுழைந்தனர்.

மத்தியதரைக்கடல் ஓரமாக வெண்மையாக எழுந்து நின்ற இந்த நகரம் பிற்பகல் வெயிலில் கண்களைக் கூச வைத்தது. கேக்கின் மேல் இருக்கும் அலங்காரங்களைப் போல் ரெல்அவிவ் தோற்றமளித்தது. கரையோரங்களில், நீழல் தரும் மரங்களைக் கொண்ட அகலமான பாதையில், மிக நவீன குடியிருப்புக் கட்டிடங்களின் வரிசைகள் ஊடாக, அரி வாகனத்தை ஓட்டிச் சென்றான் சலசலப்போடும், சன நடமாட்டத்தாலும் அந்நகரம் உயிர் பெற்று விளங்கியது. ரெல் அவிவ்வைக் கண்ட அக்கணமே கிற்றிக்கு அதைப் பிடித்துப் போயிற்று. கடலருகே ஹயார்கன் வீதியிலிருந்த கற்றிமோன் ஹோட்டலினுள் நுழைந்து அறை ஒதுக்கிக் கொண்டான் அரி.

பிற்பகலில் மதிய இடைவெளிக்குப் பின் எல்லாக் கடைகளும், மீளத் திறக்கத் தொடங்கின. கிற்றியும், அரியும் அலென்பி வீதியினூடாக நடந்து சென்றார்கள். கிற்றி, வெளிநாட்டுப் பணத்தை மாற்றி, தனது ஆர்வத்தை அடக்க சில பொருட்களைக் கொள்வனவு செய்து கொண்டாள். மோக்கிறாப் (Mograb) அரங்குக்கும், நகர சதுக்கத்துக்கும் அப்பால் தெருக்கள், சிறுகடைகள் சப்தித்துக் கொண்டே செல்லும் பேரூந்துகளாலும், கார்களாலும், மக்களாலும்

நிறைந்திருந்தன. கிற்றிக்கு எல்லாக் கடைகளையுமே பார்க்க வேண்டி இருந்தது. பத்துப் பன்னிரெண்டு புத்தகக் கடைகளும் இருந்தன. அவைகள் அருகே போய்நின்ற கிற்றி தனக்குப் புரியாத ஹீப்ரூ எழுத்துக்களைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவர்கள் நடந்து, நடந்து பிரதான வியாபார பிரதேசத்தைக் கடந்து, றொத்சைல்ட் வீதிவரை சென்றார்கள். இங்குதான் ஜாபாவில் (Jaffa) இருந்து வளர்வது போல் உருப்பெறத் தொடங்ய ரெல்அவிவின் பழைய நகரம் இருந்தது. இந்த அரபு நகரத்தை நெருங்க கட்டிடங்களும், கடைகளும் மேலும் மேலும் சிதிலமடைந்தவை போல் தோன்றின. இரு நகரங்களையும் இணைக்கும் பாதையில் நடந்தபோது, காலச்சக்கரத்தில் பின் னோக்கி நடப்பது போல் இருந்தது. ஒவ்வொரு அடியையும் எடுத்து வைக்க, வைக்க சூழல் அதிகமதிகம் அழுக்கானதாகவும், அதிகரித்த துர்மணமுள்ளதாகவும், கடைகள் அலங்கோலமானவையாகவும், சிறியவையாகவும் போய்க் கொண்டி ருந்தன. யூதருக்கும் அரபுக்களுக்கும் பொதுவான ஒரு சந்தைக்கூடாகத் திரும்பி ரெல்அவிவ் நோக்கி நடந்தனர். அந்த ஒடுக்கமான பாதை, கடைகளைச் சூழ நின்று, உரத்த குரலில் பேரம் பேசும் சனங்களால் நிறைந்திருந்தது. அலென்பி வீதியின் மறுபக்கத்தால் திரும்பி, மொக்றாபி சதுக்கத்துக்கு வந்து, அருகில் வரிசையாக மரங்களைக் கொண்டிருந்த இன்னொரு அகன்ற பாதையில் பிரவே சித்தார்கள். பக்க நடை பாதைகளில் உணவகங்களைக் கொண்டிருந்த யெஹீடா வீதிதான் அது. ஒவ்வொரு உணவமும் தனக்கேயுரிய நறுமணத்தையும், பிரத் தியேகமான வாடிக்கையாளர்களையும் கொண்டிருந்தது. ஒரு நிறுவனத்தில் சட்டத்தரணிகள் கூடுவர். சோஷலிஸ்ட் அரசியல் வாதிகளுக்கென ஒரு உணவகம் இருந்தது. கலைஞர்களுக்கு என்று ஒரு உணவகம் இருந்தது. பயங்கரவாதக் குழுக்களோடு சஞ்சரிப்பவர்கள் வந்து கூடும் இடமும் ஒன்றிருந்தது. முடிவில் லாத சதுரங்க விளையாட்டுக்களை விளையாடிக் கொண்டிருக்கும் ஓய்வுபெற்ற முதியவர்களுக்கு எனக் கூட ஓரிடம் இருந்தது. பென் யெஹீடா வீதியில் கடைகளிலே எப்போதும் கலகலப்பும், விவாதங்களும் நிரம்பி வழியும்.

சிறிய நாலுபக்க புதினப் பத்திரிகைகளை விற்கும் வியாபாரிகள் ஹீப்ரு மொழியில், லிட்டாவிலும், ஹைபா சுத்திரிகரிப்பு ஆலை மீதும் மக்கபீஸ் நடத்திய தாக்குதல்களைப் பற்றியும், எக்ஸோடசின் வரவுபற்றியும் உரத்துக் குரலெழுப்பிக் கூவிப் பத்திரிகைகளை விற்றுக் கொண்டிருந்தனர். ஆட்கள் தொடர்ந்து கடந்து சென்று கொண்டிருந்தனர். மத்திய கிழக்குப் பாணியில் நடந்து கொண்ட கிழைத்தேயத்தவரும் இருந்தனர். பத்துப் பன்னிரெண்டு ஐரோப்பிய நாடுகளில் இருந்து, நவநாகரிகங்களுடன் வந்திருந்த நல்ல போஷணை பெற்றிருந்த பெண்களும் இருந்தனர். கழுத்தடியில் திறந்திருந்த வெள்ளை மேல்சட்டையும் (Shirt open Neck) காக்கி நீளக்கால்சட்டையும் அணிந்த உள்ளூர் ஆண்களே அதிகம் காணப்பட்டனர். அவர்கள், ஸ்டார் ஒவ் டேவிட் அல்லது ஏதாவது ஹீப்ரூ பதக்கத்துடன் கூடிய மெல்லிய சங்கிலிகளை கழுத்தில் அணிந்திருந்தனர். உள்ளூரில் பிறந்தவர்களின் அடையாளச் சின்னம் போன்ற பெரிய கருமையான மீசைகளைப் பலர் கொண்டிருந்தார்கள். அவர்கள் கடின உழைப்பினால் முரட்டுத்தனமான உடலமைப்பைக் கொண்டிருந்தார்கள். பலர் கிபுட்சுகளின் நீல உடைகளை அணிந்து கால்களில் பாதரட்சைகளை அணிந்

திருந்தனர். உள்ளூர்ப் பெண்களோ, உயர்ந்தவர்களாய், நல்ல அழகிய உடல மைப்பையும், உயர்ந்து தெரிந்த மார்பகங்களையும் கொண்டவர்களாய், எளிமையான உடைகளில் அல்லது நீளக்கால்சட்டைகளையோ அணிந்திருக்கக் காணப் பட்டனர் அவர்களின்நடைகளில்கூட பெருமையும், கர்வமும் பிரதிபலிக்கக்காணப் பட்டன. திடீரென யெஹீடா வீதி நிசப்தமாயிற்று. கிற்றியின் ஞாபகத்தில் உறைந்திருந்த, ஹைபாவின் உணவகத்தில் முதல்நாள் இரவில் ஏற்பட்ட அதே திடீர்மௌனம் போன்றதே இதுவும். ஒலிபெருக்கி பூட்டப்பட்ட ஒரு பிரிட் டிஷ் கவசவாகனம் யெஹீடா வீதியின் மைய பகுதிக்கு ஊர்ந்து சென்றது.

''எல்லா யூதர்களும் கவனியுங்கள். ஆணையிடும் ஜெனரல், ஊரடங்கு உத்தரவொன்றை விடுத்திருக்கிறார். இருட்டுவதற்கு முன் எல்லா யூதர்களும் பாதையை விட்டு அகன்றுவிட வேண்டும். எல்லா யூதர்களும் கவனியுங்கள். ஆணையிடும் ஜெனரல் ஊரடங்கு உத்தரவொன்றை விடுத்திருக்கிறர். இருட்டு வதற்கு முன் எல்லா யூதர்களும் பாதைகளைவிட்டு அகன்றுவிட வேண்டும்.''

பார்த்துக் கொண்டிருந்தவர்களிடம் இருந்து கைதட்டலும், சிரிப்போ சைகளும் வெடித்துக் கிளம்பிற்று. ''கவனமாய்ப்பார்த்துப் போ. அடுத்த சந்தியில் கண்ணிவெடி வைத்திருக்கிறார்கள்'' ஒருவன் கூவினான். ட்ரக் வண்டி கள் சென்றதும் நிலைமை விரைவாக வழமைக்குத் திரும்பியது.

''நாங்கள் ஹோட்டலுக்கு போவோம் ''கிற்றி சொன்னாள்.

''நான் உனக்கு ஏற்கனவே சொல்லியிருந்தேன் அல்லவா. ஒரு மாதம் தொடர்ந்து அமைதியாக இங்கு இருக்கமுடியாது.''

''இது எனக்கு ஒருபோதும் பழக்கப்படாது அரி.'' கிற்றிவாங்கிய பொருட்களைக் கை நிறைய சுமந்தபடி அவர்கள் ஹோட்டலுக்கு திரும்பி வந்தார்கள். ஹோட்டலின் சிறிய மதுபானச் சாலையில் கொக்டேயில் (Cocktail) -பல மதுபானங்களை அளவாகக்கலந்து தயாரிக்கப்படும் பானம்) அருந்தியபின், வெளியே கடலைப் பார்த்துக் கொண்டிருந்த புற்தரையில் இரவுணவை உண்டனர் கடற்கரை யோரமாக புதிய நகரமான ரெல்அவிவ், உலகின் ஆகப் பழைய துறைமுகமான ஜாவாவுடன் சங்கமிக்கும் இடங்கள் கிற்றிக்குத் தொளிவாகத் தெரிந்தது.

''பிரிட்டிஷ் ரோந்துகள், பாதைத் தடைகள் உட்பட மனோகரமான மாலைப்பொழுதை அளித்ததற்காக மிக்க நன்றி.''

''நீ என்னை சிறிது நேரம் மன்னிக்கவேண்டும். இரவுணவின் பின் ஓரிடத்துக்குச் செல்லவேண்டும்'' என்றான் அரி.

''ஊரடங்குச்சட்டம் இருக்கிறதல்லவா?''

''அது யூதர்களுக்கு மட்டுமே பொருந்தும்'' என்றான் அரி.

அரி, கிற்றியை விட்டுவிட்டு ரெல்அவீவில் இருந்து அருகேயிருந்த புறநகர்ப் பகுதியான மலைத்தோட்டம் என்று பொருள்படும் ரமாட்கன் (Ramat Gan) னுக்கு வாகனத்தில் போனான். கூட்டுக்குடியிருப்புக்களோடு கூடிய, ரெல் அவி வோடு ஒப்பிடும்போது,தோட்டங்களும் புற்தரைகளும்சூழ வீடுகளைக் கொண்ட தனிப்பட்ட குடியிருப்புக்களைக் கொண்டதாக அந்நகரம் விளங்கிற்று.

வெண்சாந்தாலும், சிவப்பு ஓடுகள் வேயப்பட்ட கூரைகளையும் கொண்ட குடியிருப்புகள், சிறிய கொட்டகை வீடுகளிலிருந்து, பெரிய மாளிகை போன்ற குடியிருப்புகள் வரை வேறுபட்ட இல்லிடங்களைக் கொண்டிருந்தன. அரி, ஓரிடத்தில் காரை நிறுத்திவிட்டுதன்னை யாரும் பின் தொடராததை உறுதி செய்து கொள்ள, அரைமணிநேரத்துக்கு மேல் நடையில் சென்று கொண்டிருந் தான்

அவன் இறுதியாக, மொன்ரேபியர் வீதி, (Monte Fiore) இலக்கம் 22ல் அமைந்திருந்த, டாக்டர். வை. ராமிர் (Dr. Y. Tamir) வீட்டுக்குச் சென்றான் தட்டப்பட்ட கதவைத் திறந்த டாக்டர். வை. ராமிர், அன்போடு அரியின் கைகளைக் குலுக்கிவிட்டு, கீழே அடித்தளத்துக்கு அழைத்துச் சென்றார்,

ராமிரின் வீடு ஹகானாவின் தலைமைச் செலகமாகும். அந்த நிலத்துக் குக் கீழான அறையில், ரவைக்குவியல்கள், ஆயுதங்கள், அரபு மொழியில், அரபுக்களை அமைதியாக சமாதானத்தைப் பேணும்படி எச்சரிக்கை விடும் பிரசுரங்களை அச்சடித்து வெளிவிடும் அச்சகம் என்பன இருந்தன. அந்த அறை யின் இன்னொரு பகுதியில், ஒரு யுவதி, ஒலிப்பதிவுக் கருவியின் மூன் அரபு மொழியில் துண்டுப்பிரசுரத்தில் இருந்த எச்சரிக்கையைத் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தாள். இந்த ஒலிப்பதிவு செய்யப்படும் நாடா, பின்பு நடமாடும் வானொலி நிலையமான கொல் இஸ்ரேலின் (Kol I srea!) அதாவது ''இஸ்ரேலின் குரல்'' ஒலிபரப்பில் ஒலிபரப்பப்படும். கைக்குண்டு தயாரிக்கும் வேலையும், நிலத்தடி தலைமையகத்தில் இடம்பெறும் நடவடிக்கைகளில் இடம் பெற்றிருந்தன.

டாக்டர் ராமிர் அரியுடன் தோன்றியதும், சகல நடவடிக்கைகளும் ஸ்தம் பிதமாயின. அரியைச் சூழ்ந்து கொண்டு, எக்ஸோடஸ் வெற்றி குறித்துப் பாராட்டுத் தெரிவித்துக் கொண்டார். பல பக்கங்களிலுமிருந்து கேள்விக்கணை கள் அரியை நோக்கிப் பறந்து வந்தன.

''பொறுங்கள், பொறுங்கள் ஆறுதலாகக் கேள்விகளைக் கேட்கலாம்'' கெஞ்சுவதைப் போல் டாக்டர் ராமிர் சொன்னார்.

''நான் அவிடாணைக் காணவேண்டும்'' என்றான் அரி. அவன் அடுக்கி வைக்கப்பட்டிருந்த றைபிள் பெட்டிகளைத் தாண்டிச் சென்று தனியான இடத் திலிருந்த ஒரு அறைக் கதவைத் தட்டினான்.

''உள்ளே வாருங்கள்''

அரி கதவைத் திறந்து, தலைமறைவு இராணுவத்துக்குத் தலைமை தாங்கும், வழுக்கைத் தலைக் குட்டை விவசாயிக்கு முன்னால் போய் நின்றான். அவிடான் தன் ஆட்டங்கண்ட மேசை மேல் இருந்த ஆவணங்களிலிருந்து தலையைத் தூக்கி அரியைக் கண்டதும் புன்னகை செய்தான்.

அரி! சலோம். (Shalom ஹீப்ரூ மொழியில் வணக்கம் எனப் பொருள் படும்) பாய்ந்தெழுந்தபடி சொன்னவன், அரியின் கழுத்தை சுற்றி கைகளால் அரவணைத்து அவனை ஒரு இருக்கையில் தள்ளி இருத்தி விட்டு, கதவைப் பூட்டியவன், சம்மட்டியடிபோல் அரியின் முதுகில், செல்லமாகத் தட்டினான்.

''உன்னைக்காண மிகவும் மகிழ்ச்சியாய் இருக்கிறது.'' பிரிட்டிஷாருக்கு ஒரு முதல்தரமான பாடத்தைப் படிப்பித்தாய். எங்கே எங்கள் பையன்கள்?''

''நான் அவர்களை வீடுகளுக்கு அனுப்பி விட்டேன்''.

''நல்லது அவர்களுக்குச் சில நாள் ஓய்வு தேவைதான். நீயும் சில நாட்கள் ஓய்வு எடுத்துக் கொள்.''

இது அவிடானிடமிருந்து கிடைக்கும் மாபெரும் பரிசாகும். ஏனெனில் கால் நூற்றாண்டு காலமாக தனக்கென்று ஒரு நாள் ஓய்வைக்கூட அவிடான் எடுத்திருக்கவில்லை.

''உன்னோடு வந்த யுவதி யார்''?

''ஒரு அரபு உளவாளி. தேவையில்லாமல் சந்தேகப்படாதே! ''அவள் எங்களுடைய நண்பர்களுள் ஒருத்தியா''? ''இல்லை நண்பியல்ல. கூட வருபவள் கூட அல்ல.''

''வெட்கம் நாங்கள் நல்ல அமெரிக்கக் கிறீஸ்தவர்களைப் பயன் படுத்தலாமே!''

''இல்லை. அவள் யூதர்களை, மிருக்காட்சிச்சாலையின் கூண்டுகளுக்குள் இருக்கும் மிருகங்களைப் பார்ப்பது போல் பார்க்கும் நல்ல பெண் அவ்வளவு தான். நான் நாளைக்கு இளைஞர் அலியாவில், இணைக்க ஹரியற் ஷோல்ற்ஸ் மானை(Harriet Saltzman) சந்திக்க கூட்டிப் போகப்போகிறேன்.''

''தணிப்பட்ட முறையில் ஏதாவது .....?''

''என்னுடைய கடவுளே, அப்படி ஒன்றுமில்லை. நீ உன்னுடைய யூதத் தனமான சந்தேகத்தை வேறெங்காவது திருப்பு.'' அறை மிகவும் வெப்பமாக இருந்தது. அவிடான் ஒரு பெரிய நீலக் கைக்குட்டையை எடுத்துத் தன் வழுக்கை மூன் மண்டையிலிருந்து வியர்வையை ஒற்றி எடுத்தான்.

''மக்கபீஸ்களிடமிருந்து நேற்றுக் கிடைத்த வரவேற்பு மிக அருமையாயிருந்தது. சுத்திகரிப்பு ஆலை குறைந்தது ஒரு வாரத்துக்காவது எரியும் என்று கேள்விப்பட்டேன். உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளதல்லவா.''

அவிடான் தலையை ஆட்டினான். நேற்றுச் செய்தது நல்லவேலைதான், ஆனால், நேற்று முன்தினம் எப்படி நடந்தது? நாளை மறுநாள் எப்படியிருக்கும்? ஒரு நல்ல தாக்குதலைச் செய்தால், மூன்று தோல்வியில் முடிகின்றன. ஒவ்வொரு தடவையும் அவர்கள் இரக்கமற்ற செயல்களில் ஈடுபடும்போதும், தேவையற்ற கொலைகளைச் செய்யும்போதும், முழு யிசுவ்வும் பாதிக்கப்படுகிறது. மக்கபீஸ்களின் செயல்களுக்கு நாங்கள்தான் பதில் சொல்ல வேண்டியிருக்கின்றது. நாளைக்கு ஹேவன் ஹோர்ஸ்டும், உயர் ஸ்தானிகரும் யிசுவ் மையத்துக்குக் கட்டாயம் வருவார்கள். பென்கூரியன் மேசையைக் குத்தி, ஹகானாவைப் பாவித்து அவர்களைக் கைதுசெய்யக் கேட்பார்கள். சில நேரங்களில் என்ன செய்வது என்று எனக்கே தெரியவில்லை. இதுவரையில் பிரிட்டிஷார் ஹகானாவுக்கு எதிராக எதுவும் செய்யவில்லை. ஆனால், மக்கபீஸ் தங்கள் நடவடிக்கைகளைத் தொடர்ந்தால்..... அவர்கள் தங்கள் நடவடிக்கைகளுக்கு நிதி சேகரிக்க வங்கிக் கொள்ளைகளையும் நடத்துகிறார்கள்.'.

''பிரிட்டிஷ் வங்கிகளைத்தானே? அரி எழுந்து நின்று, ஒரு சிகரட்டைப் பற்ற வைத்துக் கொண்டு அந்தச் சிறிய அறைக்குள் அங்கும் இங்கும் நடந்தான் ''நாங்களும் நல்ல தாக்குதல்கள் சிலவற்றைச் செய்ய நேரம் வந்துவிட்டது என்று நினைக்கிறேன்,' என்றான்.

''இல்லை. நாங்கள் ஹகானாவைப் பலி கொடுக்க முடியாது. நாங்கள்தான் முழு யூதர்களையும் பாதுகாக்க வேண்டியவர்கள். சட்ட விரோதக் குடியேற்றம். இப்போதைக்கு அதன் மூலம் அவர்களோடு போராட வேண்டும். பத்து ஹைபா சுத்திகரிப்பு ஆலைகளைத் தகர்ப்பதைவிட, ஒரு எக்ஸோடஸ் போன்ற ஒரு விடயம் மிக முக்கியமானது!!

''என்றைக்காவது ஒரு நாள் நாங்கள் எங்களை ஈடுபடுத்தத்தானே வேண்டும். அவிடான் எங்களுக்கென ஒரு இராணுவமும் இருக்கிறதல்லவா?''

அவிடான் தன் மேசை லாச்சியுள் இருந்து சில கடதாசிகளை எடுத்து அரியின் பக்கமாகத் தள்ளினான். அரி அவற்றுக்கூடாகத் தன் பார்வையைச் செலுத்தினான்.

போர் ஆணை! 6-வது ஆகாய மார்க்கப் பிரிவு.

அரி நிமிர்ந்து பார்த்தான். ''அவர்கள் மூன்று பாரசூட் பிரிகேடுகளை வைத்திருக்கிறார்கள் அல்லவா?''

''தொடர்ந்து வாசி.''

றோயல் கவச பிரிவும் (Royal Armoured Corps), மன்னருடைய சொந்த கூசார்களும் (Kings Own Hussars), 53-வது வூசெஸ் ரஷ்யர் (Worcestershire),

249 ஆகாயமார்க்கப் பிரிவு (Airbourne Park), டிரகன் காவலர்கள் (Dragon Guards) றோயல் லான்சர்ஸ் (Royal Lancers) குயின்ஸ் றோயல் (Queens Royal), கிழக்கு சறே (East Surrey), மிடில்செக்ஸ் (Middlesex), கோர்டன் ஹைலான்டர்ஸ் (Gordon Highlanders), உல்ஸ்ரர் றைபிள்ஸ், (Ulster Rifles), ஹெர்ட்போட்ஷயர் றெஜிமென்ற் (Hertfordshire Regiment) பலஸ்தீனத்திலுள்ள பிரிட்டிஷ் படைப் பிரிவுகளின் பெயர்கள் தொடர்ந்து வந்தவண்ணமிருந்தன. தான் வாசித்த கடதாசிகளை அவிடானின் மேசைமேல் எறிந்துவிட்டு அரி கேட்டான், ''யாரோடு இவர்கள் போராடுகிறார்கள்? ரஷ்ய இராணுவத்துடனா?''

''பார்த்தாயா அரி, ஒவ்வொரு நாளும் பால்மாக்கின் யாராவது ஒரு சூடான இளம் அங்கத்தவனுடன் இதனை வாசிக்கிறேன். ஏன் நாங்கள் தாக்கக் கூடாது? நாங்கள் ஏன் வெளிவந்து போராடக் கூடாது? கேட்பார்கள். ஆனால், இந்த நிலையை நான் விரும்புகிறேன் என்று நினைக்கிறாயா? பிரிட்டிஷ் இராணுவத்தின் போராடும் பலத்தில் இருபது சதவீதத்தை இங்கு வைத்திருக்கிறார்கள். ட்ரான்ஸ் - ஜோர்டான் லீஜன்களைச் சேர்க்காமல் ஒரு இலட்சம் துருப்புகள் இருக்கின்றன. மக்கபீஸ்கள் அகப்படுபவர்களைச் சுட்டுக் கொண்டு, புகழ் வெளிச் சத்தைத் தங்களுக்கு எடுத்துக் கொண்டு, நாங்கள் ஒளிந்திருப்பதாகக் குற்றம் சாட்டிக் கொண்டிருப்பது உண்மைதான்.'' அவிடான் தன் முஷ்டியால் மேசையில் கோபத்துடன் பலமாக அறைந்து விட்டுத் தொடர்ந்து, ''கடவுளின் பேரால் நான் ஒரு இராணுவத்தை வளர்த்தெடுக்க முயற்சிக்கிறேன். எங்களிடம் போராடுவதற்குப் பத்தாயிரம் றைபிள்கள் கூட இல்லை. ஹகானா ஒழிந்தால் நாங்களும் அதனோடு தொலைந்து போவோம்'' என்றான்.

''அரி, மக்கபீஸ் சில ஆயிரம் மரமண்டைகளோடு, நடமாடித் திரிந்து, மறைந்தும் உறையலாம். நாங்கள் தொடர்ந்து தயங்கிக் கொண்டிருக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. நாங்கள் ஒரு மோதலுக்கு இப்போ போக முடியாது. ஹேவன் ஹோர்ஸ்டுக்குக் கோபம் ஊட்டவும் முடியாது. ஒவ்வொரு ஐந்து யூதனுக்கும் ஒரு பிரிட்டிஷ் வீரன் இருக்கிறான்.

அரி பிரிட்டிஷ் துருப்புகளின் பட்டியலை எடுத்து மௌனமாக அதனைத் திரும்பவும் வாசித்தான்.

பிரிட்டிஷாரின் வலைவிரிப்புகள், சுற்றி வளைப்புகள், பரிசோதனைகள், தாக்குதல்கள் ஒவ்வொருநாளும் மோசமாகிக் கொண்டே போகின்றன. பிரிட்டிஷார் கண்டும் காணாதது போலிருக்கும்போது, அரபுக்கள் தங்கள் பலத்தை அதிகரித்துக் கொண்டிருக்கிறார்கள்.''

அரி ஆமெனத் தலையை அசைத்துவிட்டு, ''சரி இங்கிருந்து நான் எங்கே போகப் போகிறேன்?'' என்றான்.

''உனக்கு இப்போதைக்குக் கட்டளைகள் எதுவும் தரவில்லை. வீட்டுக்குப் போ. சில நாட்களுக்கு ஒய்வெடுத்துவிட்டு எயின் ஓர் கிபுட்சின் பால்மாக்கிற்குச் செல். கலிலியிலிருக்கும் ஒவ்வொரு குடியேற்றங்களினது பலத்தை எடை போட்டுத்தா. எதைப் பாதுகாக்கலாம், எதை இழக்கக்கூடும் என்பதை ஆராய்ந்து

சொல். ''நீ இவ்வாறு பேசுவதை முன் ஒருபோதும் நான் கேட்டதில்லை அவிடான்.''

''இதுவரை பிரச்சினைகள் இப்படி மோசமாக மாறவில்லை. லண்டன் மகாநாட்டில், ஒரே மேசையில் எங்களுடன் அமர்ந்து பேசக்கூட அரபுக்கள் மறுத்து விட்டார்கள்.''

அரி கதவை நோக்கி நடந்தான்.

''பராக்கிற்கும், சாராவிற்கும் என் அன்பைத் தெரிவி. வீட்டுக்கு வரும் டேவிட் பென் அமியுடன் நிதானமாக நடந்துகொள்ளச் சொல்லி ஜோர்டானாவுக்குச் சொல். நான் அவனையும் மற்றப் பையன்களையும் எயின் ஒருக்கு அனுப்பப் போகிறேன்.''

''நான் நாளை ஜெருசலேமில் இருப்பேன். வேறு ஏதாவது விஷயம் உண்டா?''

''ஆமாம், முன்னணித்துருப்புகள் பத்தாயிரம் பேரையும் அவர்களுக்கு வழங்கப் போதிய ஆயுதங்களையும் தேடித்தா.''

''ஷலோம் அவிடான்.''

''ஷலோம் அரி. நீ இங்கு வந்தது மிக்க மகிழ்ச்சியளிக்கிறது.'' அரி ரெல் அவிவுக்குத் திரும்பவும் வாகனத்தை ஓட்டிச் சென்றபோது, எரிச்சலான மன நிலையிலிருந்தான். பலநாட்களுக்கு முன் ஒருநாள், ஹகானாவாலும், பால்மாக்காலும், அலியாபெற்றாலும் பல காரியங்கள் செய்ய முயற்சிகள் செய்யப்படுகின்றன என்று அப்போது இளம் வயதாயிருந்த டேவிட் பென் அமிக்குக் கூறியிருந்தான். அவைகளில் சில வெற்றி பெறுவதுண்டு, சில தோல்வியடைவதுண்டு. தொழில் ரீதியாக ஒரு விடயத்தில் ஈடுபடுபவன் தன் வேலையைச் செய்வதுடன் மட்டும் நின்றுவிட வேண்டும். உணர்வுபூர்வமாக அதில் சிக்கிக்கொள்ளக் கூடாது. அரி பென் கானான் ஒரு இயந்திரம். அவன் ஒரு மிகத் திறமையான, துணிச்சலாகக் காரியங்களைச் செய்பவன். சில வேளைகளில் வெற்றியடைவான். சில வேளைகளில் தோல்வியடைவான்.

அப்படியும் எப்போதாவது இந்த விடயங்களை யதார்த்த பூர்வமாக நோக்கும்போது நிலைமை அவனைக் கிட்டத்தட்ட நொருங்கடித்து விடும்.

எக்ஸோடஸ், ஹைபா சுத்திகரிப்பு ஆலை, இங்கே ஒரு தாக்குதல்..அங்கே ஒரு தாக்குதல். ஐம்பதே றைபிள்களைக் கொண்டுவரப் பல போராளிகள் பலியாகிறார்கள். தவித்துக் கொண்டிருக்கும் தப்பிப் பிழைத்தவர்கள், நூறுபேரைக் கடத்தியதற்காக ஆட்கள் தூக்கிலிடப்பட்டார்கள். அவன் ஒரு இராட்சதனோடு போரிடும் சிறிய மனிதனைப்போலிருந்தான். தெய்வீகத் தலையீடு பற்றிய டேவிட் பென் அமியின் விசுவாசம் தனக்கும் இருக்கக்கூடாதா என்றும் யோசித்தான். ஆனால் அரி ஒரு யதார்த்தவாதி.

நடுச்சாலையிலிருந்து சிறிது ஒதுக்குப்புறமாக இருந்த அந்தச் சிறிய மதுச் சாலையிலே, கிற்றிபிறமென்ற் அரியின் வரவுக்காகக் காத்திருந்தாள். அவன் தன்னோடு அவ்வளவு நாகரிகமாக நடந்துகொண்டதால், அவனுக்காகக் காத்திருந்து. அவன் வந்ததும் பல விஷயங்களைப் பேசி அவனோடு ஒரிரு கோப்பை மதுவருந்தவேண்டும் என்றிருந்தாள். அவன் நடுச்சாலைக்குச் சென்று தன் இறப்புக்களைப் பெற்றுக் கொள்ளச் செல்வதைக் கண்டாள்.

''அரி!'' அவள் அழைத்தாள்.

சைப்பிரசில் முதல் முதல் அவனைக் கண்டபோது அவன் முகத்திலிருந்த ஆழ்ந்த சிந்தனை இப்போது பிரதிபலித்துக் கொண்டிருந்தது. அவள், அவனை நோக்கிக் கையை அசைத்தாள். ஆனால், அவளைக் காணக்கூடிய நிலையிலோ அவள் அழைத்ததைக் கேட்கக்கூடிய நிலையிலோ அவன் அப்போது இருக்கவில்லை அவன் அவளை நேராகப் பார்த்துவிட்டுப் படிகளில் ஏறி மாடிக்குச் சென்றான்.

அத்தியாயம் இரண்டு

ஐம்பது எக்ஸ்ஸோடஸ் பிள்ளைகளை ஏற்றியிருந்த இரு பேருந்துகளும் ஹேசரின் இடிபாடுகளின் ரெல் (Tel of Ruins of Hazor(லைத் தாண்டி ஹூலே பள்ளத்தாக்கிற்குள் சென்று கொண்டிருந்தன. ஹைபாவிலிருந்த கலிலிவரை பேருந்தில் பிரயாணம் செய்தவர்கள், ஜன்னல்கள் ஊடாக வெளியேதலையை நீட்டி ஆரவாரத்தோடு தங்களுக்குநீண்ட காலமாக வாக்குப் பண்ணப்பட்ட பூமியின் விந்தைகளைச் சுட்டிக்காட்டிப் பார்த்து மகிழ்ந்துபோனார்கள்.

''டொவ் எல்லாமே மிக அழகாக இருக்கிறது'' கரேன் உரக்கக் கூவினாள். டொவ் ஏதோ முணுமுணுத்ததை, ஏதும் சொல்வதற்குத் தன்னால் அதிகம் பார்க்க முடியவில்லை என்று சொல்வதாகக் கரேன் அர்த்தப்படுத்திக் கொண்டாள்.

அவர்கள் ஹூலேக்குள் அதிக தூரம் சென்று அரிபென் கானானின் இல்லமிருந்த யாட் எல்லுக்கு வந்தார்கள். இங்கே பிரதான பாதையிலிருந்து ஒரு கிளைப்பாதை பிரிந்து லெபனான் எல்லைவரை குன்றுகளிடையே உயர்ந்து சென்றது. கான் டப்னாவுக்குச் செல்லும் வழிபைச் சுட்டிக்காட்டும் பெயர்ப்பலகையை ஒருவருக்கொருவர் காட்டிக்கொண்டார்கள். எரிச்சலான மன நிலையில் மூழ்கியிருந்த டொவ் நீங்கலாக மற்றையோர், எதிர்பார்ப்புகளால் நிரம்பி வழிந்தார்கள். சுற்றிவளைந்து செல்லும் பாதைகளில் பேருந்துகள் சென்று கொண்டிருந்தன. விரைவிலேயே, கிபுட்சுகளினதும், மொசாவ்களினதும் பச்சைப் பசேலென்ற வயல்கள், கம்பளம் விரித்தது போல் தோற்றமளிக்க, ஹூலே பள்ளத்தாக்கு அழகிய காட்சியாக கண்முன்னே தோற்றமளித்தது. ஹூலே வாவியின் பெரிய சதுப்பு நிலங்களைச் சூழ நீள்சதுர வடிவத்தில், பத்துப்பன்னிரெண்டு மீன்வளர்ப்புத் தொட்டிகள் சிறியகுளங்களைப் போல்தோற்றமளித்தன.

மலைப்பாதையில் அரைவாசித் தூரத்தில் இருந்த அரபுக்கிராமமான அபுயேஷாவுக்குள் நுழையும்போது சிறிது வேகத்தைக் குறைத்துக் கொண்டனர். மற்றைய அரபுக் கிராமங்களில் பிள்ளைகள் கண்ட வெறுப்புத்தன்மையும், எதிர்ப்புத் தன்மையும் எதுவும் அபுயேஷாவில் காணப்படவில்லை. சிநேகபூர்வமான கையசைப்புகளால், வரவேற்கப்பட்டார்கள். இரண்டாயிரம் அடி உயரத்தைக் குறிப்பிடும் அறிவிப்பையும் தாண்டி ஏறிச்சென்ற அவர்கள், இளஞர்

அலியா கிராமமான டப்னாவின் பூங்கா எனப்பொருள்படும் கான் டப்னாவுக்கு வந்தனர். அவர்கள் கிராமத்தின் மத்தியில் இருந்த நூறடி நீளமும், ஐம்பதடி அகலமுமான புற்தரைக்கு அருகில் சென்று தரித்தனர். முழு இடமும் ஒரு பெரிய சமவெளியில் அமைந்திருந்தது. மத்தியிலிருந்த இந்தப் புற்தரையைச் சூழ கிராமத்தின் இதயம் போன்ற நிர்வாகக் கட்டிடங்கள் இருந்தன. இங்கிருந்து கிராமத்தின் மற்றைய பகுதிகள் நான்கு திசையிலும் பரந்து சென்றன. எங்கும் பச்சைப் பசேலெனப் பூக்கள், மரங்களுடன் காட்சியளித்தன. எக்ஸோடஸ் பிள்ளைகள் வாகனத்தை விட்டுக் கீழிறங்கியபோது, கிராமத்தின் இசைக்குழு ஒரு இளர்ச்சியூட்டு அணிவகுப்பு இசையொன்றை வாசித்து வரவேற்றது.

அந்தப் பச்சைப் புற்தரையின் நடுவே, யாருடைய பெயரால் அக்கிராமம் அழைக்கப்பட்டதோ, அவள்- டப்னா முழு அளவு சிலையாக நின்று கொண்டிருந்தாள். அவளுடைய உருவம், அரபுக்கள் அவளைக் கொன்ற சமயத்தில் ஹாமிஸ்மாரில் எப்படியான தோற்றத்திலிருந்தாளோ, அப்படியே, கையில் ஒரு றைபிளுடன் ஹுலே பள்ளத் தாக்கைப் பார்த்தபடி இருக்க வெண்கலத்தால் சிலை வடிக்கப்பட்டு நிறுவப்பட்டிருந்தது.

அந்தக் கிராமத்தின் ஸ்தாபகரான, சிறிது கூன் விழுந்த சிறிய தோற்றம் கொண்ட டாக்டர் லிப்பர்மான் (Dr. Libberman) டப்னாவின் சிலைக் கருகே, பெரிய அளவு சுங்கான் ஒன்றைப் புகைத்தபடி நின்று, புதிதாக வந்து நின்று, புதிதாக வந்திருக்கும் இளைஞர்களை வரவேற்றுக் கொண்டிருந்தார். அவர், சுருக்கமாக தான் 1934-ல் ஜெர்மனியை விட்டு வந்து 1940-ல் கலஞ் சென்ற அபுயேஷாவின் முக்தாரான கமால், தாராள மனப்பான்மையோடு, இளைஞர் அலியாவுக்கு அளித்த இடத்தில், கான் டப்னாவை நிறுவியதாகச்சொன்னார். டாக்டர் லிப்பர்மான், ஒவ்வொரு பிள்ளைக்கும் அருகில் சென்று வரவேற்கும் விதத்தில் ஐந்தாறு மொழிகளில், தனித்தனியாக அவர்களோடு சில வார்த்தைகள் உரையாடினார். கரேன் அவரைப் பாத்துக் கொண்டிருந்தபோது, தான் அவரை இதற்கு முதல் எங்கோ கண்டிருப்பது போன்ற உணர்வு ஏற்பட்டது. அவர், அவள் குழந்தையாயிருந்தபோது கண்டிருந்த கொலோனின் பேராசிரியர்களின் நடையுடை பாவனைகளைக் கொண்டிருந்தார் .. ஆனால் அது வெகுகாலத்துக்கு முன்பான கதை... அவளால் சரியாக நினைவுக்குக் கொண்டு வரமுடியவில்லை.

ஒவ்வொரு புதிய பிள்ளையும், கிராமத்தின் ஒவ்வொரு அங்கத்தவர்களாகக் கணிக்கப்பட்டார்கள்.

"இளமென்ற் கரேன் நீங்கள் தானே?"

"ஆமாம்"

"நான் தான் ஜோனா உங்களுடைய புதிய அறைத்தோழி." என்றாள் கரேனை விட வயது சிறிது கூடிய எகிப்திய யூதப்பெண் ஒருத்தி. இரு யுவதிகளும் கைகளைக் குலுக்கிக் கொண்டனர்.

''வாருங்கள் எங்கள் அறையைக் காட்டுகிறேன். இந்த இடம் உங்களுக்குப் பிடித்துப் போகும்.'' டொவ்விடம் பின்பு சந்திப்பதாகக் கூறிவிட்டு, நிர்வாகக் கட்டிடங்களையும், பாடசாலைக் கட்டிடங்களையும் தாண்டி, செடிகளைக் கொண்டிருந்த பாதையின் அருகில் ஒரு நிலப்பரப்பில் கட்டப்பட்டிருந்த கொட்டகைகளை நோக்கி ஜோனாவுடன் நடந்தாள்.

''நாங்கள் அதிர்ஷ்டசாலிகள். வயதுமுதிர்ந்தவர்களாக இருப்பதால் கொட்டகைகளில் இடம் கிடைக்கிறது'' என்றாள், ஜோனா. அந்தக் கொட்டகைக்கு முன் ஒரு கணம் தரித்து, நம்பமுடியாமல் அதையே பார்த்துக் கொண்டிருந்து விட்டு உள்ளே நுழைந்தாள். அது மிக எளிமையாக இருந்தது. ஆனால், இதுவரை. தான் கண்ட அறைகளிலே இதுதான் மிக உயர்வானது என அவள் எண்ணிக்கொண்டாள். ஒரு கட்டில், ஒரு மேசை, ஒரு கதிரை எல்லாம் அவளுக்காக - அவள் சொந்தப் பாவனைக்காக.

சூரேனுக்கு ஒய்வுகிடைத்தபோது மாலையாகிவிட்டது. இரவுணவுக்குப் பின் திறந்த வெளியரங்கிலே வரவேற்பு நிகழ்ச்சியொன்று நடைபெறவிருந்தது.

கரேன், டொவ்வை டப்னாவின் சிலையருகே சந்தித்தாள். பல வார காலங்களுக்குப் பிறகு இன்றைக்கு நடனமாடவேண்டும் போலிருந்தது. கிராமத்தில் வீசிய காற்று உன்னதமாயிருந்தது. கிராமமே சொர்க்கம் போலிருந்தது. கரேன் மகிழ்ச்சியால், வெடவெடத்துக் கொண்டிருந்தாள். அவள் டொவ்வுக்கு அருகே நின்றபடி மலைச்சரிவொன்றில் தெரிந்த அபுயேஷாவின் வெள்ளை நிற வீடுகளைச் சுட்டிக் காட்டினாள். அவர்கள் இருந்த இடத்துக்கு மேலே ராக் காட் கோட்டை ஒன்றான போர்ட் எஸ்தர் காட்சியளித்தது. அவர்களிருந்த இடத்துக்குக் கீழே யாட் எல் மொசாவ்வின் வயல்களுக்கருகே கான் டப்னாவின் வயல்கள் காணப்பட்டன. ஹுலோன் மறு முடிவில், மலைச்சிகரங்களோடு இணைந்ததாக, ட்ரம்பிள்டோர் மரணித்த ரெல் ஹாய் இருந்தது. பள்ளத்தாக்கின் மற்ற அந்தத்தில் ஹெர்மன் மலையும். சிரியாகவும் இருந்தன.

கரேன், ஒலிவ் நீளக்கால்சட்டைகளையும், உயர்ந்த கழுத்தைக் கொண்ட விவசாயிகளின் நீலநிற மேல்சட்டையையும், கால்களில் புதிய பாதரட்சைகளையும் அணிந்திருந்தாள்.

''டொவ், என் வாழ்க்கையில் மிகவும் மகிழ்ச்சியான நாள் இதுதான்'' என்று உரக்கவே கூறினாள்.

ஜோனா நல்ல நகைச்சுவையான பெண். டாக்டர் லிப்பர்மான்தான் உலகத்திலேயே அருமையான மனிதர் என்று அவள் சொன்னாள்.''

அவள் புற்தரையில் உருண்டு பிரண்டுவானத்தைநோக்கி நிம்மதிப் பெருமூச் செறிந்தாள். டொவ் எதுவுமே பேசாமல் நின்று கொண்டிருந்தான். அவள் எழுந்து அமர்ந்து, அவன் கையைப் பிடித்து இழுத்துத் தன் அருகில் அமரச் சொன்னாள்.

''சும்மா விடு'' என்றான் அவன்.

அவள் பிடிவாதம் பிடித்ததால் அவளருகே அமர்ந்தான். அவள் அவனது கைகளை வருடி தோளில் தலை சாய்த்ததால் சிறிது குழப்பமடைந்தான்.

''டொவ், தயவுசெய்து மகிழ்ச்சியாய் இரு. தயவுசெய்து மகிழ்ச்சியாயிரு''

அவன் தோள்களைக் குலுக்கிவிட்டு விலகி உட்கார்ந்தான்.

''சந்தோஷமாயிரேன்''

''அதைப்பற்றி யார் கவலைப்படுகிறார்கள்.''

''நான் கவலைப்படுகிறேன் உனக்கா நான் வேண்டுகிறேன்'' என்றாள் கரேன்.

எனக்காகவும் வேண்டுகிறேன்தான். அவள் அவன் முன்னால் மண்டியிட்டு அவன் தோள்களை இறுகப்பற்றிக் கொண்டாள். ''நீ உன்னுடைய அறையையும், கட்டிலையும் பார்த்தாயா? அப்படி ஒரு அறையில் நீ வசித்து எவ்வளவுகால மாயிற்று?

அவளது கரங்களின் ஸ்பரிசத்தால் புளகாங்கிதமடைந்த டொவ் தன் கண்களைத்தாழ்த்திக் கொண்டான். ''நன்றாக யோசித்துப்பார். இடம் பெயர்ந்த ஆட்களின் முகாம்கள் இனிக் கிடையாது. லாரியோடாட்கள் இல்லை, கராஓலொஸ்கள் இனி இல்லை. சட்டவிரோதக் கப்பல்கள் தேவையில்லை. நாங்கள் எங்கள் சொந்த மண்ணுக்கு வந்துவிட்டோம். டொவ் நான் கனவு கண்டதைவிட இது உன்னதமாயிருக்கிறது.''

டொவ் மெதுவாக எழுந்து பின்புறத்தை அவளுக்குக் காட்டியபடிநின்று கொண்டு, ''இது உனக்கு நல்ல இடமாக இருக்கலாம். நான் வேறு திட்டங்கள் வைத்திருக்கிறேன்.''

''தயவு செய்து அவைகளை மறந்து விடு'' கெஞ்சினாள்..
இசைக்குழு இசைக்கத் தொடங்கியதும், இசையானது புற்றரைவரை பரவியது.

''நாங்கள் அரங்கத்திற்குப் போவோம்.'' கரேன் சொன்னாள்.

அரியும் கிற்றியும் ரெல் அவிவைவிட்டு அகன்று, சாராபான்ட் (Sarafand) டில் உள்ள பெரிய பிரிட்டிஷ் முகாமைத் தாண்டிச் சென்றதும் பலஸ்தீனத்தின் பதற்றத்தை மீண்டும் உணர்ந்து கொண்டாள். ஜெருசலேமுக்குப் போகும் பாதையில் உள்ள முழு அரபுக்கிராமமான ரம்லே ('amle) ஊடாகச் செல்லும் போது ஆத்திரம்கொண்ட அரபுக்கண்கள் தம்மீது பதிவதை உணரக்கூடியதாக இருந்தது. அரியோ, அரபுக்களைப் பற்றியோ, கிற்றியைப் பற்றியோ கவலைப்

படாமல் வேறு உலகத்திலிருந்தான். அன்றுமுழுவதும் பத்துப்பன்னிரெண்டு வார்த்தைகளுக்கு மேல் அவளோடு கதைக்கவில்லை.

ராம்லேக்கு அப்பால், யூடியன் குன்றுகளுக்குள், வளைந்து வளைந்து செல்லும் பாப் எல் வாட் (Bab el wad) பாதையில் திரும்பிச்சென்றது. பாதையின் இருபக்கமும் யூதர்களால் நடப்பட்ட இளம் காட்டு மரங்கள், நிலத்திலிருந்து வளர்ந்து பற்றைகளுக்கு மேலால் நின்றன. குன்றுகளிடையே தூரச்செல்ல, புராதானமான, பயிரிடுவதற்காக மட்டமாக்கப்பட்ட இடங்கள், வெறுமையாக்கப்பட்டிருந்த பூமியில், பட்டினியில் வாடும் நாயொன்றின் நெஞ்சுக்கூட்டு எலும்புகள்போல், தோற்றமளித்தன. முன்பொரு காலத்தில் இதேகுன்றுகளும் மட்டமாக்கப்பட்ட இடங்களும், லட்சக்கணக்கான ஆட்களைத் தாபரித்துக் கொண்டிருந்தன, இப்போதோ, இவை முற்றாகச் சீரழிந்துபோய்கிடந்தன. குன்றுகளின் உச்சியில் அரபுக் கிராமங்கள் கொத்துக் கொத்தாக வெண்மையாகத் தெரிந்தன.

பாப் எல் வாட் இல் ஜெருசேலம் நகரின் மாயகவர்ச்சி கிற்றியைப் பற்றிக் கொண்டது. யூடியன் குன்றுகளுக்கூடாக முதன்முதலாகச் செல்லும் எவரும் தாவிதின் நகரத்தின் ஆட்கொள்ளும் சக்திக்கு தப்பவே முடியாது. என்று சொல்லப்பட்டு வந்தது. இதைத்தான் மிக அதிகமாக உணர்வது பற்றிக் கிற்றி மிக வியப்படைந்தாள். அவளுடைய சமயப் பயிற்சியோ மத்திய மேற்குப் புரட்டஸ்தாந்து தத்துவமாயிருந்தது. அது ஒரு அடிப்படை ஈடுபாட்டோடு அணுகப்பட்டிருந்தாலும், ஆழக்குறைவாகஇருந்தது.உயரஉயரச் செல்லச்செல்லஎதிர்பார்ப்பும் அதிகரித்துச் சென்றன. இப்போ அவள் பைபிளோடு இணைந்திருந்தாலும் இந்த அமைதியான, விசித்திரமான குன்றுகளிடையே, முதல்தடவையாக, பரிசுத்த பூமியில் இருப்பது எப்படியிருக்கும் என உணர்ந்தாள்.

தூரத்தே, ஜெருசலேம் நகரத்தின் அரண்கள் அடிவானத்தில், மங்கலான சாயையாக நீட்டிக் கொண்டிருந்ததோடு, கிற்றியும் ஒரு புதுவிதமான மன எழுச்சியால் நிரப்பப்பட்டாள். யூதர்களால் நிறுவப்பட்ட புதிய நகரத்துள் பிரவேசித்த அவர்கள், ஜாபா வீதி வழியாக, சனப்புழக்கம் நிறைந்த கடைகளைக் கொண்ட முக்கிய வர்த்தகக் கேந்திர நிலையத்தைத் தாண்டி, பழைய நகரின் சுவரை நோக்கி சென்றார்கள். ஜாபா புகுவழியில், அரி திரும்பி, சுவர் அருகோடு வானத்தை கிங் டேவிற் சாலைக்குச் செலுத்தி, சில கணங்களில் கிங் டேவிற் ஹோட்டலின் முன் நிறுத்தினான்.

கிற்றி காரிலிருந்து இறங்கி, பிரிந்து போய் கிடந்த ஹோட்டலின் வலப் பக்கப் பகுதியைப் பார்த்து வாயைப் பிளந்தாள்.

''முன்பு அது பிரிட்டிஷ் தலைமைக் காரியாலயமாக இருந்தது. மக்கபீஸ்கள் அதையெல்லாம் மாற்றிவிட்டனர்.'' என்றான் அரி.

ஹோட்டல், ஜெருசலேமின் கற்களால் கட்டப்பட்டிருந்தது. ஐரோப்பிய பாணியில் மிகுந்த சுமையோடு, மகத்தான தோற்றம் பெற்றிருந்ததோடு,

அதன் நடு அறை டேவிட் அரசருடைய அரசவையின் பிரதிபோல் நிர்மாணிக் கப்பட்டிருப்பதாகவும் சொல்லப்பட்டது. மதிய உணவுக்குக் கிற்றியே முதலில் இறங்கிவந்தாள். பழைய நகரச் சுவர்களைப் பார்த்தால் போலிருந்த சிறிய பள்ளத்தாக்கு ஒன்றை நோக்கிக் கொண்டிருந்தாள். பின்புறப் புற்றரை ஒன்றில் காத்துக் கொண்டிருந்தாள். இந்தப் புற்றரை டேவிட்டுடைய கோபுரத்தின் எதிரில் ஒரு சம்பிரதாயமான பூந்தோட்டத்தினுள் இருந்தது. நான்கு இசைக் கருவிகளைக் கொண்ட இசைக்குழு ஒன்று அவளுக்குப் பின்னால் மதிய உணவு இசையை வழங்கிக் கொண்டிருந்தது.

அரி அப்புற்றரையை நோக்கி இறங்கி வந்தவன் அப்படியே திகைத்துப் போய் நின்றுவிட்டான். கிற்றி அன்று மிக அழகாக இருக்கிறாள். அவன் முன் ஒருபோதும் அவளை இவ்விதமாகக் காணவில்லை. தொளதொளவென கவர்ச் சியான விருந்துக்கு அணியும் உடையொன்றை அணிந்து, பெரிய அளவான விளிம்புகளைக் கொண்ட தொப்பியொன்றையும், வெள்ளைக் கையுறைகளையும் அணிந்திருந்தாள். அந்தக்கணத்தில் தான் அவளைவிட்டு எங்கோ தொலை தூரத்தில் நிற்பதுபோல் உணர்ந்தான். அவனால், தெளிவாகப் புரிந்து கொள்ள முடியாத விதத்தில் நடந்து கொள்ளும், றோம் பரிஸ், ஏன் பெர்லினுடை யவும் அழகிய பெண்களின் ஒரே மொத்த உருவமாக வேறுலகத்தைச் சேர்ந்தவள் போல் மிளிர்ந்தாள். கிற்றிக்கும் டப்னாவுக்கும் இடையே நிறைய வேறுபாடுகள் இருந்தாலும், உண்மையில் அவள் அழகுதான்.

அவன் போய் அமர்ந்து கொண்டு, ''ஹரியற் சோல்ஸ்மானுடன் கதைத் துவிட்டேன். மதிய உணவுக்குப் பின் நேராக அவளைச் சந்திக்கப் போவோம்.'' என்றான்.

''நன்றி. ஜெருசலேம் என்னை உற்சாகப்படுத்துகிறது.''

''ஜெருசலேமுக்கு மர்மமான சக்திகள் இருக்கின்றன. தங்கள் முதல் வருகையின் போது எல்லோருமே பரபரப்படைவார்கள். டேவிட் பென் அலியை எடுத்துக் கொள். அவனை எப்போதும் ஜெருசலேம் கவரத்தவறுவதேயில்லை. நாளைக்கு அவன்தான் உன்னோடு ஜெருசலேமைச் சுற்றி காட்டப் போகிறான் நாளை ஓய்வுநாள். பழைய நகரத்தினுள் உன்னைக்கூட்டிச் செல்ல விரும்பு கிறான்.''

''என்னை அவன் நினைத்திருப்பது மனதுக்கு இனிமையாக இருக்கிறது.''

அரி அவளைக் கூர்மையாகப் பார்த்தான். தான் அங்கு வந்த போதிருந் ததை விட இப்போ அதிக அழகாயிருப்பது போலிருந்தது. அவன் தன் கண்களை வேறுபக்கம் திருப்பி, மேசைப்பரிசாரகனொருவனை அழைத்து, பணிப்புரையை வழங்கிவிட்டுத் திரும்பவும் சிந்தனைக்குள் ஆழ்ந்து போனான். அரி இப்போ ஒரு முடிவுக்கு வந்துவிட்டது போலவும், அதை வெளிப்படுத்த ஆவலாயிருப்பது போலவும் உணர்ந்தாள். பத்து நிமிடம் வரை அவர்கள் ஒரு வார்த்தைதானும் பேசிக் கொள்ளவில்லை.

தன்னுடைய பழச்சேர்க்கை (Salad) யில் சிறிது எடுத்து வாயில் போட்டபடி, ''நான் உனக்கு சளிப்பூட்டுகிறேனா?'' என்றாள்.

''நிச்சயமாக இல்லை''

''நேற்றிரவு நீ போன இடத்திலிருந்து திரும்பியபிறகு நான் ஒருத்தி இந்த உலகத்திலேயே இல்லாததுபோல் நடந்துகொள்கிறாய்.''

''மன்னித்துக்கொள் கிற்றி. நான் இன்றைக்கு ஏதோ நல்ல ஆட்துணையாக இல்லைப் போலிருக்கிறது.''

''ஏதாவது பிரச்சினையா?''

''நிறைய இருக்கின்றன. ஆனால் அவை உன்னையோ, என்னையோ அல்லது எனது இன்றைய மனோநிலையையோ குறித்தவை அல்ல. ஹரியற் சோல்ஸ்மன்னைப்பற்றி உனக்குச் சொல்லவேண்டும். அவள் ஒரு அமெரிக்கப் பெண். இப்போ கிட்டத்தட்ட வயது எண்பதுக்கு மேலிருக்கும். யிசுவ்வில் புனிதர் பட்டங்களைக் கொடுக்க ஆரம்பித்தால் அவள்தான் எங்களுடைய முதல் புனிதராக இருப்பாள். பழைய நகரத்துக்கு அப்பால் அந்தக் குன்று தெரிகிறதல்லவா?''

''அதோ அங்கேயா?''

''அதுதான் ஸ்கோபஸ் மலை. (Mount ScoPus) அந்தக் கட்டிடங்கள் மத்திய கிழக்கிலேயே சிறந்த வைத்தியசாலையொன்றின் கட்டிடங்களுக்கும். முதலாம் உலகப்போரின் பின் ஹரியற் ஒழுங்கு பண்ணிய சியோனிஸ்ட் பெண்களிடமிருந்து அதற்குரிய பணம் வருகிறது. பலஸ்தீனத்தின் அதிகமான வைத்தியசாலைகளும், வைத்திய மையங்களும் அவளது ஹடாஸ்ஸா (Hadassah) அமைப்பினால் நிறுவப்பட்டவைதான்.''

''அவள் ஒரு மகத்தான பெண் போலிருக்கிறது,''

''ஆமாம், அவள் அப்படியானவள்தான். ஹிட்லர் அதிகாரத்துக்கு வந்தபோது, அவள் இளைஞர் அலியாவை உருவாக்கினாள். ஆயிரக்கணக்கான இளைஞர்கள் காப்பாற்றப்படுவதற்கு அவள்தான் காலாக இருந்தாள். பலஸ்தீனம் முழுவதும் பல டசின் கணக்கான இளைஞர் மையங்களை நடத்திவருகிறார்கள். உனக்கும் அவளோடு நல்லாய் ஒத்துப்போகும்.

''ஏன் இதைச் சொல்கிறாய்?''

''இங்கு வாழ்ந்த எந்த ஒரு யூதனும், தன் இதயத்தை இங்கு விட்டுவிடாமல் செல்ல முடியாது. அமெரிக்கர்களும் அப்படித்தான் என்று நினைக்கி

கிறேன். ஹரியற் இங்கு பல வருடக்கணக்காக இருக்கிறாள் ஆயினும் இன்னும் அவள் ஒரு அமெரிக்கப் பெண்ணாகவே பெரும்பாலும் இருக்கிறாள்.

''இசைக்குழு இசைப்பதை நிறுத்தியது.''

ஜெருசலேமை ஒரு மௌனம் சூழ்ந்துகொண்டது.

பழைய நகரத்தின் பள்ளிவாசல் கோபுரத்திலிருந்து முயெஸ்ஸினின் (Muezzin – முஸ்லீம்களை தொழுகைக்குக் கூவி அழைப்போன்) ஒருவன் தன் மக்களைத் தொழுகைக்குக் கூவி அழைக்கும் பாங்கின் குரல் மெலிதாகக் கேட்டது. தொடர்ந்து கிற்றி ஒருபோதும் அனுபவித்திராத ஒரு ஸ்தம்பித தன்மையோடு கூடிய அமைதி படிந்தது.

வீதிக்கு அப்பாலிருந்த கத்தோலிக்க இளைஞர் அமைப்பின் மணிக்கூட்டுக் கோபுத்திலிருந்த மணி, ஒரு பாடலை இசைத்து அடித்தது. அதன் இனிமையான ராகங்கள், குன்றுகளிடையேயும், பள்ளத்தாக்கிலும் பரவிச் சென்றன. தொடர்ந்து திரும்பவும் அமைதி நிலவியது. அப்போ நிலவிய அமைதி, அந்த நேரத்தில் ஏதாவது கதைப்பது ஒரு பாவச்செயல் என்று எண்ணச்செய்வதுபோல் உன்னதமாயிருந்தது. எல்லா உயிரினங்களும், நேரமும், அந்த ஒரு கணத்தில் ஸ்தம்பிதமாகி விட்டது போல்தோன்றியது.

''என்ன ஒரு உன்னதமான உணர்ச்சி'' கிற்றி சொல்லி மகிழ்ந்துபோனாள்.

இப்டியான கணங்கள் மிக அருமையாகவேயிந்த நாட்களில்கிடைக்கின்றன. ''இந்த அமைதி ஒரு ஏமாற்றும் தன்மை வாய்ந்தது எனநான் நினைக்கிறேன்.''

புல்தரைக்கு வரும் வாசலில் ஒரு சிறிய ஒலிவ் நிற மனிதன் நிற்பதை அரி கண்டான் அவனை பார் இஸ்ரேல் (Bar Isreal) என்று அடையாளம் கண்டுகொண்டான். அவனுடாகத்தான மக்கபீசின் தொடர்பு இருந்தது. பார் இஸ்ரேல் அரியை நோக்கித் தலையாட்டி விட்டு மறைந்து விட்டன்.

''என்னைச் சிறிது நேரம் மன்னித்துக்கொள்'' கூறிவிட்டு அரி நடுஅறைக்குள் நடந்து போய் ஒரு பக்கமும் சிகரட்டை வாங்கிக் கொண்டு, புதினப்பத்திரிகைகள் விற்கும் இடத்துக்குப் போய் ஒரு சஞ்சிகையை வாசிப்பது போல் நின்று கொண்டான். பார் இஸ்ரேல் நடந்து அவன் அருகாமைக்கு வந்தான். அவன் மெதுவாக முணுமுணுத்தான், ''உன்னுடைய சித்தப்பா அக்கிவா ஜெருசலேமுக்கு வந்திருக்கிறார். அவர் உன்னைக் காண விரும்புகிறார்.''

''சியோன் குடியமர்த்தல் கழகத்துக்கு இன்று போகவேண்டும். அதன்பின் ஒய்வாகத்தான் இருப்பேன்.''

''ரஷ்யன் வளாகத்தில் என்னைச் சந்தி.'' சொல்லிவிட்டு அவசர அவசரமாகச் சாலைக்குள் இறங்கி நடந்து போய்விட்டான் அந்தத் தொடர்பு மனிதன்.

கிங் ஜோர்ஜ் அவெனியூ என்பது, நிர்வாகக் கட்டிடங்கள், பாடசாலைகள், ஆலயங்கள் ஆகியவற்றை இருமருங்கும் கொண்டிருந்த ஒரு அகன்ற மரங்களடர்ந்த தெருவாகும். நான்கு மாடிகளைக் கொண்ட சியோன் குடியமர்த்தல் கழகக் கட்டிடம் ஒரு மூலையில் இருந்தது. நீண்ட ஒரு வாகன ஓடுபாதை பிரதான நுழை வாயிலுக்கு இட்டுச் சென்றது.

''ஷலே ம் அரி'' தன் வயதுக்கொவ்வாத வேகத்தில் தன் மேசைக்கப்பால் இருந்து பாய்ந்தோடி வந்த ஹரியற் சோல்ஸ்மான் தன் நுனிக்கால்களில் நின்றபடி எழுந்து அரியின் கழுத்தைக் கைகளால் வளைத்து இழுத்து அவன் கன்னத்தில் ஆசைதீர முத்தமிட்டார் ''சைப்பிரசில் அவர்களுக்கு என்ன அருமையான வேலை செய்துவிட்டாய். நீ ஒரு நல்ல பையன்.''

கிற்றி கதவருகில் நின்றபடி எல்லாவற்றையும் அமைதியாக அவதானித்துக் கொண்டிருந்தாள். அந்த வயோதிபப் பெண் அவளை நோக்கித் திரும்பினார்.

''அப்போ, இதுதான் கத்தரீன் பிறமென்ற் அல்லவா?''

''என்னுடைய செல்வமே, நீ மிக அழகாக இருக்கிறாய்.''

''நன்றி. திருமதி சோல்ஸ்மன்.''

''என்னை அப்படிக் கூப்பிடாதே. ஆங்கிலேயரும், அராபியரும் தான் அப்படிக் கூப்பிடுவார்கள். அப்படிக் கூப்பிட்டால் எனக்கு வயது போய்விட்டது மாதிரி உணர வைக்கிறது. அமருங்கள் ..... தேநீருக்குச் சொல்லிவிட்டு வருகி றேன். அல்லது கோப்பி விருப்பமா?''

''தேநீர் பரவாயில்லை.''

''அப்போ பார்த்தாயா அரி .. இப்படித்தான் ஒரு அமெரிக்கப் பெண் இருப் பாள்.'' கிற்றியின் அழகுக்குப் புகழாரம் சூட்டுவதற்பால் அபிநயித்தார். கண் களில் குறும்பு நிழலாடியது.

''எல்லா அமெரிக்கப் பெண்களும் கிற்றியைப் போல் அழகாக இருக்க மாட்டார்கள் என்று நிச்சயமாக நினைக்கிறேன் .....''

''போதும் இரண்டு பேரும் நிறுத்துங்கள். இருவருமாக என்னைச் சங்கடத் துக்கு உள்ளாக்குகிறீர்கள்.''

''உங்கள் இரு பெண்களுக்கும் நான் இடையே இருக்கத் தேவையில்லை. எனக்குச் சில அலுவல்கள் இருக்கின்றன. ஆகவே, நான் ஓடி விடுகிறேன். நான் நேரத்துக்கு வராவிட்டால் ஒரு வாடகைக் காரில் ஹோட்டலுக்குத் திரும்பிப் போக முடியுமா?''

''இப்பவே போகப் போகிறாயா? அந்த வயதான அம்மையார் கேட்டார். தொடர்ந்து, ''கிற்றியும் நானும் எனது வீட்டில் இரவுணவு அருந்தப் போகிறோம். நீ யாருக்கு வேண்டும்?''

அரி சிரித்துவிட்டு வெளியேறிச் சென்றான்.

''அவன் ஒரு அருமையான பையன். அவனைப் போல் பல பையன்கள் எங்களிடமிருக்கிறார்கள். மிகக் கடுமையாக உழைப்பார்கள். இளமையிலேயே மடிந்தும் விடுவார்கள். ''சொல்லிவிட்டு ஒரு சிகரட்டைப் பற்றவைத்து, கிற்றிக்கு அளித்தபடி ''நீ எங்கிருந்து வந்திருக்கிறாய்'' என்றார்.

''இன்டியானா (Indiana – அமெரிக்க மாநிலம்)''

''நான் சான்பிரான்சிஸ்கோ (San Francisco)''

''அது ஒரு அழகான நகரம். ஒருமுறை என் கணவரோடு சென்றிருந்திறேன். திரும்பவும் ஒரு முறை போக விரும்புகிறேன்'' என்றாள் கிற்றி. ''நானும் அப்படித்தான் நினைக்கிறேன். ஒவ்வொரு வருடமும் செல்லச் செல்ல அமெரிக்காவை நினைத்து நான் அதிகம் அதிகம் ஏங்குகிறேன். கடந்த பதினைந்து வருடகாலமாக கொஞ்சக்காலத்துக்கு அங்கே போகவேண்டுமென்றுதான் நினைப்பேன். ஆனால் இந்த உலகம் ஒருபோதும் நிற்பதில்லை. இங்கு உள்வரும் பரிதாபத்துக்குரிய குழந்தைகள் தான் காரணம். ஆயினும் என்னை வீட்டு நினைவுகள் வாட்டுவதுண்டு. வயோதிபம் ஏறிக்கொண்டு வருவதுதான் காரணம் என்று நினைக்கிறேன்.'' என்றார் அவ்வம்மையார்.

''அப்படியில்லை''

''யூத தாயகத்தை மீள நிர்மாணிக்கும் வேலையில் ஈடுபடும் யூதராக இருப்பது அற்புதம்தான். ஆனால் ஒரு அமெரிக்கனாக இருப்பதும் உன்னதமானதுதான். அதை மறந்துவிடாதே இளம்பெண்ணே. ''எக்ஸோடஸ் விஷயம் தொடங்கியது முதல் உன்னைச் சந்திக்க ஆவலாயிருந்தேன். கத்தரீன் பிறமென்ற் நான் மிகவும் அதிகமாக ஆச்சரியப்பட்டுப்போனேன். நான் லேசாக ஆச்சரியப்படுவதில்லை என்பதை உனக்குச் சொல்ல வேண்டும்.''

''என்னைப்பற்றி அறிக்கைகளைத் தேவைக்கதிகமாக மனோகரமான தாக்கிவிட்டார்கள் என்று நினைக்கிறேன்.''

நெருக்கமாகப் பழகவைக்கும் ஹரியற் சோல்ஸ்மானின் சிநேக பூர்வமான நடவடிக்கைக்குப் பின்னால், மிக தந்திரமான மூளையொன்று செயல்பட்டுக் கொண்டிருந்தது. தன்னைச் சுதந்திரமாகப் பழகவிட்டபடி தன்னைப்பற்றி அப்பெண்மணி கவனமாக அளவெடுத்துக் கொண்டிருப்பதை உணர்ந்தேயிருந்தாள். அவர்கள் தேநீரை அருந்தியபடி சம்பாஷித்துக் கொண்டிருந்தனர். அதிகமான சம்பாஷணை அமெரிக்காவைப் பற்றியதாகவே இருந்தது. ஹரியற்றின் நாடு திரும்பும் ஆசை மீண்டும் தலையெடுத்தது. ''அடுத்தவருடம் வீட்டுக்குப் போகத்

தான் வேண்டும். ஏதாவது ஒரு சாட்டைக் கண்டுபிடிக்க வேண்டும். நிதிதிரட்டும் பணியாகவும் அது இருக்கலாம். எல்லா அமெரிக்கர்களும் செஞ்சிலுவைக் சங்கத் திற்குக் கொடுக்கும் தொகையை விட, அமெரிக்க யூதர்கள் எங்களுக்கு அதிக மாகத் தருகிறார்கள் என்பது உனக்குத் தெரியுமா? இவைகளைப் பற்றிச் சொல்லி உன்னை ஏன் சலிப்படையச் செய்யவேண்டும்? அப்போ நீ எங்களுக் காக வேலை செய்ய விரும்புகிறாய், அப்படித்தானே?''

''ஆமாம். ஆனால் என்னுடைய சான்றிதழ்கள் என்னிடம் இப்போ தில்லை, அதற்காக மன்னித்துக் கொள்ளுங்கள்.''

''அவைகள் தேவையில்லை. உன்னைப்பற்றி எல்லா விபரங்களையும் நாம் அறிந்திருக்கிறோம்.''

''அப்படியா?''

''ஆமாம். உன்னைப் பற்றிப் பத்துப்பன்னிரெண்டு அறிக்கைகள் எங்கள் கோவைகளிலுள்ளன.''

''இதுகுறித்து மகிழ்ச்சியடைவதா? அல்லது கோபப்படுவதா? என்று தெரியவில்லை.''

''கோபப்படாதே. இந்தக்காலம் அப்படி. நாங்கள் எல்லோரையும் பற் றிச் சரியாக அறிந்திருக்க வேண்டும். நாங்கள் ஒரு சிறிய சமூகம் என்பதும், இங்கு நடப்பது எதுவும் இந்த வயோதிபக் காதுகளுக்கு எட்டாமல் இருக்காது என்பதையும் போகப் போகப் புரிந்து கொள்வாய். உண்மையில் நீங்கள் வரு முன் உனது கோவையைத்தான் படித்துக் கொண்டிருந்தேன். நீ ஏன் எங்களுக்கு வேலை செய்ய வருகிறாய் என்று யோசித்தேன்.''

''நான் ஒரு மருத்துவதாதி. உங்களுக்குத் தாதிகள் தேவை. அதனால் தான்.''

தலையைப் பலமாக இல்லையென்பது போல் ஆட்டினார், ஹரியற் சோல்ஸ் மான். ''வெளியாட்கள் எங்களிடம் அந்தக்காரணத்துக்காக வருவதில்லை. வேறு ஏதாவது காரணம் இருக்கவேண்டும். நீ அரி பென் கானானுக்காகப் பலஸ்தீனம் வந்தாயா?''

''இல்லை. நான் அவனில் அவ்வளவுக்குப் பிரியமில்லை.''

''அவனில் பிரியமான நூறு பெண்களிருக்கிறார்கள். அவனுக்குப் பிரிய மான பெண் நீ ஒருத்திதான்.''

''நான் அப்படி நினைக்கவில்லை ஹரியற்.''

''நல்லது. எனக்கு மகிழ்ச்சிதான் கத்தரீன். யாட் எல்லிலிருந்து இன்டியானாவுக்கு வெகு தொலைவுதான். அவன் ஒரு ''ஷப்றா'' இன்னொரு 'ஷப்றா' வால்தான் அவனைச் சரியாகப் புரிந்து கொள்ளமுடியும்.''

''ஷெப்றா?''

''ஆம், அதுதான் உள்ளூரில் பிறந்த ஒருவனுக்கு நாம் பாவிக்கும் பெயர். ஷப்றா என்பது பலஸ்தீனம் எங்கும் காணக்கூடிய காட்டு நாகதாளியின் பழமாகும். வெளியில் ஷப்றா முள்ளாயிருக்கும். உள்பக்கம் மென்மையாகவும் இனிமையாகவும் இருக்கும்.''

''அது ஒரு அருமையான விளக்கம்.''

''அரிக்கும் வேறு ஷப்றாக்களுக்கும், உனக்கு அவனது வாழ்க்கையெப்படி இருக்கும் என்று புரியாத மாதிரியே, அமெரிக்க வாழ்க்கை முறையும் புரியாது.',

''நான் நேரடியாகவே கேட்கிறேன். பெருந்தன்மையுள்ள யாரவது எங்களிடம் வரும்போது நண்பனாகவே வருகிறான். நீ நண்பராக வரவில்லை. நீ எங்களில் ஒருத்தியுமல்ல. நீ இந்த யூதர்கள் எனப்படும் விசித்திரமான மனிதர்களால் குழம்பிப்போயிருக்கும் ஒரு அழகான அமெரிக்க இளம் பெண் இப்போ சொல் நீ ஏன் இங்கே வர விரும்புகிறாய்? ''

''அது ஒன்றும் அவ்வளவு மர்மமல்ல. எனக்கு ஒரு சிறிய பெண்ணில் பிரியம். அவள் எக்ஸோடஸில் வந்தாள். நாங்கள் முன்னதாக கராஒலொஸ்ஸில் சந்தித்திருந்தோம். அவளது தந்தையோடு இங்கு இணைந்து கொள்ளும் அவளது முயற்சி துன்பமாக முடிவுறலாம் என்று நினைக்கிறேன். அவளது தந்தையைத் தேடிப்பிடிக்க முடியாவிட்டால் அவளைத் தத்தெடுத்து அமெரிக்காகூட்டிச் செல்ல விருபுகிறேன்.''

''சரி, எனக்குப் புரிகிறது. நீ அடியில் வேறு நோக்கமில்லாதவள். இப்போ விஷயத்துக்கு வருவோம். வட கலிலியில் உள்ள எங்கள் இளைஞர் அலியா கிராமமொன்றில் தலைமைத்தாதி வெற்றிடம் ஒன்று உண்டு. அது ஒரு அருமையான இடம். அதனுடைய பண்ப்பாளர் என்னுடைய அருமையான பழைய நண்பரான டாக்டர் ஏணெஸ்ற லிப்பர் மானாகும். அந்தக் கிராமம் கான் டப்னா என்று அழைக்கப்படுகிறது. அங்கே அதிகமாகச் சித்திரவதைத் தடுப்பு முகாம்களில் வளர்ந்த நானூறு குழந்தைகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு உதவி அவசரமாகத் தேவை.நீ இந்தக்கடமையைப் பாரமெடுப்பாய் என்று நம்புகிறேன். இதற்கான வேதனமும் வசதிகளும் மிகக் சுவார்ச்சிகரமானவை.''

''நான் முதலில் அறிய விரும்புவது..?

''கரேன் ஹான்சளைப் பற்றித்தானே?''

''உங்களுக்கு எப்படித் தெரியும்?''

''நாங்கள் ஒரு சிறிய சமூகம் என்று ஏற்கனவே உனக்குச் சொன்னேன். கரேன் கான் டப்னாவில் இருக்கிறாள்.''

''உங்களுக்கு எப்படி நன்றி சொல்வதென்றே எனக்குத் தெரியவில்லை.''

''அரிக்கு நன்றி கூறு. அவள்தான் இவையெல்லாவற்றையும் ஒழுங்கு பண்ணியவன். அரி உன்னை அங்கு கூட்டிச் செல்வான். அந்த இடம் அவனது வீட்டுக்கு மிக அண்மையிலிருக்கிறது.''

அவ்வயோதிபப் பெண் தன்தேநீர்க்கோப்பையைக் குடித்து முடித்துவிட்டுக் கதிரையில் சாய்ந்தபடியே, ''உனக்கு இன்னொன்றை உறுதியாகக் கூற அனுமதிப்பாயா?''

''நிச்சயமாக''

''நான் இந்த அனாதைக் குழந்தைகளுடன் 1933 இருந்து வேலை செய்து வருகிறேன். பலஸ்தீனத்தோடு அவர்களுக்கு ஏற்படும் பிணைப்பு உன்னால் புரிந்து கொள்ள முடியாததாக இருக்கலாம். சுதந்திரக்காற்றை ஒருமுறை சுவாசித்தபின்.. தேசபக்தியால் நிரம்பப் பெற்றபிறகு... இங்கிருந்து செல்வது அவர்களுக்குக் கடினமான காரியமாகிவிடும். அப்படிப்போனாலும், போகும் இடங்களில் பலஸ்தீனத்தில் இருந்து பிரிந்து வாழும் வாழ்க்கைக்குத் தங்களை ஒருபோதும் சரிப்பண்ணிக்கொள்ள முடிவதில்லை. அவர்களுடைய அர்ப்பணிப்பு மிகத் தீவிரமானது. அமெரிக்கர்கள் வாழ்க்கையின் பல அம்சங்களை, லேசாக எடுத்துக் கொள்கிறார்கள். இங்கோ ஒவ்வொருவரும், சந்தேகத்திலும், பதட்டத்திலுமே கண் விழிக்கிறார்கள். தான் பாடுபட்டு உருவாக்கிய எல்லாம் தன்னிடமிருந்து பறிக்கப்படுமோ என்றுதான் கவலையெல்லாம். அவர்களுடைய மண் இருபத்தினாலு மணிநேரமும் அவர்களோடு பின்னிப் பிணைந்திருக்கிறது. அவர்கள் வாழ்க்கையின் அச்சாணியே, அதுதான். அவர்கள் இருப்பின் அர்த்தமும் அதுதான்.''

''அந்தப்பிள்ளையை இங்கிருந்து புறப்பட என்னால் தூண்டமுடியாது என்று சொல்ல வருகிறீர்களா?''

''நான் சொல்ல வருவதெல்லாம், நீ பிரமாண்டமான எதிர்ச் சக்திகளுக்கெதிராக நீ போராடுகிறாய் என்பதுதான்.''

கதவு தட்டப்பட்டது.

''உள்ளே வரலாம்.''

டேவிட் பென் அமி உள்ளே வந்தான். ''ஷலோம் ஹரியற், ஷலோம் கிற்றி, அரி உன்னை இங்கே காணலாம் என்று சொன்னான். ஏதாவது இடைஞ்சல் செய்கிறேனா?''

''இல்லை. எங்கள் வேலை முடிந்துவிட்டது. நான் கத்தரீனை கான் டப்னாவுக்கு அனுப்பப்போகிறேன்.''

''மிக நல்லது. ஓய்வுநாள் தொடங்கும்போது மியாஷியாறிம்ஜ கிற்றிக் குச் சுற்றிக்காட்டுவது நன்றாயிருக்கும் என்று நினைத்தேன்.''

''மிக நல்லதுதான், டேவிட்.''

''அப்படியானால் நாங்கள் புறப்படவேண்டும். நீங்களும் எங்களுடன் வரலாமே ஹரியற்?''

''இந்தக் கிழட்டு எலும்புகளை இழுத்துக்கொண்டு திரியவா? கடைசி மட்டும் முடியாது. இரண்டுமணி நேரத்தில் எனது மாடிவீட்டில் இரவுணவுக்காக கொண்டு வந்து சேர்த்து விடு.'' கிற்றி எழுந்து நின்று அவ்வயோதிபப் பெண் மணியுடன் கைகுலுக்கி, நன்றி தெரிவித்து விட்டுத் திரும்பியவள் அவன் தன் னையே பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டாள்.

''ஏதாவது பிரச்சினையா டேவிட்?'' கேட்டாள் கிற்றி.

''நீங்கள் இப்படி உடையணிந்து நான் பார்க்கவில்லை. நீங்கள் மிகவும் அழகாக இருக்கிறீர்கள். ''பின்பு தன்னைத்தானே இகழ்ச்சியுடன் நோக்கி விட்டு, ''ஒருவேளை உங்களுடன் கூடவர என்னுடைய உடைகள் தகுதியில் லையோ தெரியவில்லை.''

''விசர்க்கதை கதையாதே. நான் என் புதிய தலைவருக்குக் காட்டத் தான் இப்படி உடையணிந்து வந்தேன்.''

''ஷலோம் குழந்தைகளே. உங்களைப் பிறகு சந்திக்கிறேன்.'' டேவிட் தன்னைத் தேடி வந்தது மிகவும் மகிழ்ச்சியாயிருந்தது, மற்றைய யூதர்களை விட அவனருகில் சௌகரியமாக இருந்தாள். அவர்கள் சியோன் குடியமர்த்தல் கழகத்திலிருந்து தீர்க்கதரிசிகளின் வீதிக்கு நடந்து சென்றார்கள். கிற்றி அவனது கையை எடுத்துக் கொண்டாள். ஆனால், டேவிட் தான் இடங்களைப் பார்வை யிடுபவன் போல் இருந்தான். அவன் ஜெருசலேமைப் பற்றிய பல விடயங்களைப் புதிதாகப் பார்ப்பவன் போல் பார்த்து ஒரு குழந்தையைப் போல் மகிழ்ந்து போனான். தாயகத்திற்கு வந்தது மகிழ்ச்சியாயிருக்கிறது. எங்கள் நகரம் எப் படி? உங்களுக்குப் பிடித்திருக்கிறதா?

''வர்ணிக்க வார்த்தைகள் இல்லை. அளவுக்கதிகமாகக் கவர்வதோடு சிறிது பயமூட்டுகிறது.''

''ஆமாம். நான் சிறுவனாயிருந்த காலம் தொட்டு, ஜெருசலேமைப்பற்றி அப்படித்தான் நானும் உணர்கிறேன். அது என்னைச் சிலிர்ப்படையச் செய்கிறது. சிலிர்ப்படையச் செய்யத் தவறாததோடு, என்னை ஆட்கொள்ளத் தவறுவதும் இல்லை.''

''என்னைக் கூட்டிச் செல்வதற்காக, உன் குடும்பத்தோடு செலவிடும் நேரத்தை ஒதுக்கியதற்காக மிக்க நன்றி.''

''நாங்கள் இன்னும் ஒழுங்காக ஒன்று சேரவில்லை. எனக்கு ஆறு சகோதரர்கள் இருக்கிறார்கள், என்று உங்களுக்குத் தெரியும்தானே அதிகமானோர் பால்மாக்கில் இருக்கிறார்கள். நான்தான் குடும்பத்தில் மிக இளையவன். ஆகவே ஒரு ஒன்றுகூடல் ஒன்று கட்டாயம் இருக்கும். அதில் ஒருவரைத் தவிர மற்ற வர்கள் எல்லோரும் இருப்பார்கள்... அவரைப் பின்பு தனிமையில்தான் சந்திக்க வேண்டும்.

''ஏன் அவர் உடல் நலமில்லாமலிருக்கிறாரா?''

''அவர் ஒரு பயங்கரவாதி. மக்கபீசோடு இருக்கிறார். எங்களுடைய தகப்பனார் அவரை வீட்டுக்குள் வர அனுமதிக்கமாட்டார். அவர் மக்கபீஸ் தலைவர்களுள் ஒருவரான பென் மோஷேயுடன் இருக்கிறார். ஹீப்ரூ பல்கலைக் கழகத்தில் பென் மோஷே எனது விரிவுரையாளராக ஒரு காலத்தில் இருந்தார்.'' நிறுத்திய டேவிட், ஹடாஸ்ஸா வைத்தியமையத்துக்கு அப்பால் தெரிந்த ஸ்கோப்பஸ் மலையையும் அதற்கப்பால் தெரிந்த கிட்ரோன் பள்ளத்தாக்குகளையும் (Kidron Valley) சுட்டிக்காட்டி, ''அங்கு தான் இருக்கிறது பல்கலைக் கழகம்'' என்றான்.

''நீ அதிலிருந்து பிரிந்திருப்பது கஷ்டமாயிருக்கின்றது அல்லவா?''

''ஆமாம். அது உண்மைதான். எப்பவாவது ஒரு நாளைக்கு எனக்கு அங்கு திரும்பிப் போகும் வாய்ப்புக் கிடைக்கும்.''

இருள்சூழ்ந்தபோது ஒரு கரகரப்பான கொம்பு முழங்கியது.

''ஓய்வுநாள்! ஓய்வுநாள்!'' என அறைகூவிச் செல்வது கேட்டது.

ஜெருசலேம் எங்கும் இந்தப் புராதனமான கொம்பு முழக்கம் கேட்டது. டேவிட் தலையில் ஒரு அரைவட்டத் தலையணியை வைத்துக் கொண்டு, கிற்றியைக் கூட்டிக் கொண்டு, தீவிர பழமை வாய்ந்த யூதர்களின் நூறு நுழை வாயில்கள் எனப் பொருள்படும் மியாஷியாறிம் நோக்கி சென்றான்.

மியா ஷியாறிம்மில், சின்ன கோக்குகளுள் எட்டிப் பார்த்தால் யூதர்கள் பல பாணிகளில் பிரார்த்திப்பதைக் காணலாம். யெமன்காரர்களில் சிலர் ஒட்டகத்தின் மீது செல்லும் போது ஏற்படும் அசைவுகளைப் போல் அசைந்து கொண்டே பிரார்த்திப்பார்கள். அரபுக்களின் தலைகளுக்கு மேலால், யூதர்களின் தலை உயர்ந்துவிடும் என்பதால், யேமென்னில் யூதருக்கு ஒட்டகமேற விதிக்கப் பட்டிருந்த தடைக்கு மாற்றாக அவர்கள் இப்படிச் செய்வது வழக்கம்.''

''எனக்குப் புரிகிறது ',

ஸ்பானிய யூதர்களின் வழித்தோன்றல்களை எடுத்துக் கொள்ளுங்கள் . .. ஸ்பானிய நாட்டுக் கலவரங்களின்போது மரணபயத்தை ஊட்டி கத்தோலிக்க மதத்துக்கு மாற்றம் செய்யப்பட்டவர்கள், லத்தின் பிரார்த்தனைகளை உரக்கச் சொன்னாலும், ஒவ்வொரு வசனத்தின் முடிவிலும், ஒரு ஹீப்ரூ பிரார்த்தனையை மூச்சுப் பிடித்துக் கொண்டே மௌனமாகச் செல்வார்களாம். இப்போதும், அது போலவே ஒவ்வொரு பிரார்த்தனை வசன முடிவிலும் மௌனமாகப் பிரார்த்திப்பார்கள்.''

மியாஷியாறிம்முக்குள் நுழைந்தபோது, கிற்றி பேச்சற்றுப் போயிருந்தாள். வீதிகளில், ஒன்றுக்கொன்று தொடர்பாயிருந்த மேல் மாடிகளில் இரும்புக் கம்பிகளாலான வலைச்சுவரைக் கொண்டிருந்த இரண்டடுக்கு மாடிக் கல் வீடுகளைக் கொண்டிருந்தது.

ஆண்கள் தாடியும், பக்கக் கன்னச் சுருள்களையும் வளர்த்திருந்ததோடு, மிருக ரோமங்களை விளிம்பில் வைத்துத் தைக்கப்பட்டிருந்த தொப்பிகளையும், நீள கறுப்பு சாட்டின் (Satin) துணி அங்கிகளையும் அணிந்திருந்தனர்; அரபு உடையிலிருந்த யேமன்காரர்கள் இருந்தனர். பல வர்ணப்பட்டுத் துணிகளாலான ஆடைகளை அணிந்த குர்டிஷ்கள் பொக்காரா நாட்டவர்கள், பேர்சியா நாட்டவர்களும் இருந்தனர். மதக்கிரிகைகளில் ஒன்றான புனித ஸ்நானம் செய்து விட்டு எல்லோரும் பிரார்த்தனையின் போது செய்வதுபோல் விரைவு நடையில் குலுங்கிக்குலுங்கிச் சென்று கொண்டிருந்தார்கள்.

சில கணங்களில் வீதிகள் வெறுமையாகி சனக்கூட்டம் சின்னகோக்குகளுள் சென்றுவிட்டது. இவை அதிகமாக சிறு அறைகளாக அமைந்திருந்தன. ஒவ்வொரு கட்டிடத்திலும் பல சின்னகோக்குகள் அமைந்திருந்தன. இத்தாலி, ஆப்கானிஸ்தான், போலாந்து, ஹங்கேரி, மொராக்கோ, நாட்டுப் பக்தர்கள் இருந்தனர். மியாஷியாறிம் பிரார்த்தனைக் குரல்களாலும், ஓய்வுநாள் பாடல்களாலும், ஹாசிடிம்கள் சாட்டையால் தங்களைத் தாங்களே உருவேறும் வரை அடித்துக்கொண்டு அழும் ஒசைகளாலும் நிரம்பி வழிந்தது. பிரார்த்தனை அறைகளுக்குள் பெண்கள் அனுமதிக்கப்படுவதில்லையாதலால், இரும்புக் கிராதி ஊடாக எட்டிப்பார்ப்பதோடு, கிற்றியும், டேவிட்டும் திருப்திப்பட வேண்டியதாயிற்று.

எப்படியான வினோதமான அறைகள். எவ்வளவு வினோதமான மனிதர்கள். செர்பர்ரோறாவைச் சுற்றி, அழுது குழறிக் கொண்டு கூட்டமாய் வெறி பிடித்தவர்கள் போல் மொய்த்துக் கொண்டிருப்பதைக் கிற்றி அவதானித்தாள். தலையணைகள் மேல் மண்டியிட்டு அமர்ந்து மென்மையாக பிரார்த்தனைகள் சொல்லிக் கொண்டிருந்த யேமன்காரர்களின், தேவதூதர்கள் போன்ற முகங்களைக் கண்டாள். வயது முதிர்ந்த மனிதர்கள் முன்னும் பின்னும் சாய்ந்தபடி, தளர்ந்து போய்விட்ட பிரார்த்தனைப் புத்தகங்களில் இருந்து ஒரே மாதிரியான ஹீப்ரூ மொழிப் பிரார்த்தனை ஒலிகளை வெளிவிட்டுக் கொண்டிருந்ததைக் கண்டாள். ரெல் அவிவின் அழகான ஆண்களிலும், பெண்களிலும் இருந்து இவர்கள் எவ்வளவு தூரத்திலிருக்கிறார்கள்.

எங்களில் எல்லாவிதமான யூதர்களும் இருக்கிறார்கள். நான், அரி உன்னை இந்த இடத்துக்குக் கூட்டி வரமாட்டான் என்பது தெரிந்ததால்தான் நான் உன்னை இங்கு கூட்டி வந்தேன். அவனும் பல ஷப்றாக்களும் இவர்களை வெறுக்கிறார்கள். இவர்கள் நிலத்தைப் பண்படுத்துவதுமில்லை, ஆயுதங்களை ஏந்துவதுமில்லை. அவர்கள் புராதன பாணி யூடாயிசம் ஒன்றை எங்களில் திணிக்கிறார்கள். நாங்கள் என்ன செய்ய முயற்சிக்கிறோமோ அதற்கு எதிர்மறை சக்திகள் இவர்கள். என்னைப்போல், ஜெருசலேமில் ஒருவர் வாழ்ந்தால் இவர்களைச் சகித்துக் கொள்ளவும், இவர்களை இப்படியான வெறித்தனமான செய்கைகளுக்குத் தூண்டியிருக்கக் கூடிய கொடூரமான நிகழ்வுகளைப் புரிந்து கொள்ளவும் முடியும்.

அரி பென் கானான் ரஷ்ய வளாகத்தின் கிரேக்க திருச்சபை ஆலயத்தின் அருகில் காத்துக் கொண்டிருந்தான். இருள் சூழ்ந்தது. எங்கிருந்தோ பார் இஸ்ரவேல் தோன்றினான். அரி அந்தத் தொடர்பு மனிதனைத் தொடர்ந்து ஒரு பக்க ஒழுங்கையுள் சென்றான். அங்கே ஒரு வாடகைக்கார் காத்துக் கொண்டிருந்தது. அவர்கள் இருவரும் காரில் ஏறிக்கொள்ள, பார் இஸ்ரேல் ஒரு பெரிய கறுத்தக் கைக்குட்டையை வெளியிலெடுத்தான்.

''இதற்கு நான் சம்மதப்பட வேண்டுமா?''

''நான் உன்னை நம்புகிறேன் அரி. ஆனால் கட்டளையை மீற முடியாது.''

அரியின் கண்கள் மறைப்பினால் மறைத்துக் கட்டப்பட்டுக் காரின் தளத்தில் படுக்க வைக்கப்பட்டு, ஒரு போர்வையால் மூடப்பட்டான். அரியைக் குழப்புவதற்காக ஒரு இருபது நிமிடநேரம் முழுவதும், அங்கும் இங்கும், சுற்று வழியிலும் சென்றுவிட்டு முந்திய ஜெர்மன் குடியேற்றத் திட்டத்தின் அருகேயிருந்த கட்டாமொன் (Katamon) மாவட்டத்தை நோக்கிக் கார் ஓடியது. வாடகைக்கார் ஓட்டத்தை நிறுத்தியது. அரி விரைவாக ஒரு வீட்டினுள்ளும், பின்பு ஒரு அறையினுள்ளும் அழைத்துச் செல்லப்பட்டுப் பின் கண்கட்டுகளை அவிழ்த்து விடலாம் என அவனுக்குச் சொல்லப்பட்டது.

ஒரு கதிரையையும், ஒரு நடுங்கிக்கொண்டிருந்த மெழுகுதிரி, ஒரு பிராண்டிப் போத்தல், இரு குவளைகள் ஆகியவற்றைக் கொண்ட ஒரே மேசையையும் தவிர வெறுமையாக அறை காட்சியளித்தது. அங்கிருந்த இருளுக்கு அரியின் கண்கள் பழக்கப்பட ஒரு முழு நிமிடம் எடுத்தது. அவனுடைய சித்தப்பாவான அக்கிவா அவனுக்கெதிரில் மேசையருகில் நின்று கொண்டிருந்தார். அக்கிவாவுடைய தலை மயிரும், தாடியும் பனியைப்போல் வெண்மையாகிப் போயிருந்தன. அவன் திரை விழுந்து, சிறிது கூனிப்போயிருந்தான். அரி அவனை நோக்கி மெதுவாக நடந்து சென்று அவரருகில் நின்றான்.

''ஹெலோ சித்தப்பா'' என்றான் அவன்.

''அரி, என் செல்லமே!''

இருவரும் கட்டியணைத்துக் கொண்டனர். வயதானவனோ பொங்கி வரும் உணர்ச்சி வெள்ளத்துக்கு அணைபோட வேண்டியவனானான். அக்கிவா மெழுகுதிரியைத் தூக்கி அரியின் முகத்துக்கு அருகாமையில் பிடித்ததும் அவன் புன்னகை செய்தான்.

''நீ நல்ல தோற்றமளிக்கிறாய் அரி, சைப்பிரசில் நீ செய்தது அருமையான வேலை.''

''நன்றி.''

''நீ ஒரு பெண்ணோடு வந்ததாகக் கேள்விப்பட்டேன்.''

''எங்களுக்கு உதவிசெய்த ஒரு அமெரிக்கப் பெண். உண்மையில் நண்பி என்றுகூடக் கொள்ள முடியாது. நீங்கள் எப்படி இருக்கிறீர்கள் சித்தப்பா?''

அக்கிவா தோள்களைக் குலுக்கி விட்டுக் கொண்டார்.

: தலைமறைவு வாழ்க்கையில் எவ்வளவு எதிர்பார்க்க முடியுமோ அவ்வளவு நன்றாக இருக்கிறேன். உன்னைக் கண்டு நீண்டகாலமாகிவிட்டது. ...நீண்ட காலமாகிவிட்டது. இரு வருடங்களுக்கு மேலாகிவிட்டது. ஜோர் டானா பல்கலைக்கழகத்தில் இருந்தபோது மிகவும் நன்றாய் இருந்தது. ஒவ்வொரு வாரமும் ஒருமுறையாவது அவளைக் காண்பேன். அவளுக்கு இப்போ இருபது வயதாகி இருக்கவேண்டும். அவள் எப்படி இருக்கிறாள்? அவள் இன்னும் அந்தப் பையனை விரும்புகிறாளா?

டேவிட் பென் அமி தானே? ஆமாம். அவர்கள் இருவரும் ஒருவரை யொருவர் மிகவும் விரும்புகிறார்கள். டேவிட் என்னோடு சைப்பிரசில் இருந்தான். அவன் எங்களுடைய இளம் திறமைசாலிகளில் ஒருவன்.''

அவனுடைய சகோதரன் ஒரு மக்கபீ. உனக்குத் தெரியும்தானே. பென் மோஷே, சர்வகலாசாலையில் அவனுக்குக் கல்வி கற்றுக் கொடுத்தார். அவனை நான் சந்திக்கக் கூடுமா?'' ''நிச்சயமாக.''

''ஜோர்டானாவும் பால்மாக்கில் இருப்பதாகக் கேள்விப்பட்டேன்.

''ஆமாம். கான் டப்னாவின் பிள்ளைகளைப் பயிற்றுவதற்கு அவள் தான் பொறுப்பாயிருக்கிறாள். எங்கள் பகுதியிலிருந்து நடமாடும் வானொலி நிலையம் ஒலிபரப்பும் போது அதில் வேலை செய்வாள்.

அப்போ அவள் எனது கிபுட்சுக்கு சமீபமாகத்தான் சஞ்சரிப்பாள் அல்லவா? எயின் ஓரை நல்லாய்க் காண்பாள் அல்லவா?

''ஆமாம்.''

''அவள் எப்போதாவது அது எப்படியிருக்கிறது என்று சொல்லியிருக் கிறாளா?'

''எயின் ஓர் எப்போதுமே அழகாய்த்தானிருக்கும்.

''நானும் ஒரு நாளைக்கு அதனை மீண்டும் பார்க்கக் கூடும். அக்கிவா கதிரையில் அமர்ந்து, நடுங்கும் கைகளால் இரு குவளைகளிலும் சிறிது பிராந் தியை ஊற்றினார். அரி ஒரு குவளையை எடுத்துக் கொள்ள இருவரும் அவை களைத் தொட்டுக் கொண்டனர். லே கெயிம் (Lechaim) என்றான் அவன்.

நான் நேற்று அவிடானைச் சந்தித்தேன் சித்தப்பா. அவர் எனக்கு பிரிட்டிஷ் யுத்த ஆணைகளைக் காட்டினார். உங்களுடைய ஆட்கள் அவை களைப் பார்த்து விட்டார்களா?

''பிரிட்டிஷ் தகவல் சேகரிப்பு-ஆய்வு சேவையில் எங்களுக்கும் நண்பர்கள் இருக்கிறார்கள்.

''அக்கிவா எழுந்து அறையில் நடக்கத் தொடங்கினார்.

ஹேவன் ஹோர்ஸ்ட் எனது அமைப்பை ஒழித்துக் கட்ட முயல்கிறார். மக்கபீஸ்களை அழிக்கும் முயற்சியில் பிரிட்டிஷார் தங்களை அர்ப்பணித்துள் ளார்கள். எங்கள் ஆட்களைச் சித்திரவதைசெய்துள்ளார்கள். தூக்கிலிடுகிறார்கள் எங்கள் தலைமைப்பீடத்தை முற்றாக நாடு கடத்தி விட்டார்கள். பிரிட்டிஷாரை எதிர்த்து துணிவுடன் போராடுவது, போதாதென்று, எங்களிடையே இருக்கும் துரோகிகளையும் எதிர்த்துப் போராட வேண்டியிருக்கிறது.

ஆமாம் அரி... ஹகானா எங்களைக் காட்டிக் கொடுக்கிறது என்று எங்க ளுக்குத் தெரியும்.''

''அது உண்மையல்ல'' அரி மென்று விழுங்கினான்.

''அது உண்மைதான்.''

''இல்லை. இன்றுதான் யிசுவ் மையத்தில் ஹேவன் ஹோர்ஸ்ட் யூதர்கள் மக்பீசை அழித்துவிடவேண்டும் என்று வற்புறுத்தினான். அவர்கள் மறுத்து விட்டார்கள்.''

அக்கிவாவின் நடையின் வேகமும், கோபமும் அதிகரித்தன. ஹகானா விடம் இருந்து பெறாவிட்டால், பிரிட்டிஷார் எங்கிருந்து எங்களைப்பற்றிய தகவல்களைப் பெறுகிறார்கள் என்று நினைக்கிறாய்?'' யிசுவ் மையத்தில் இருப்பவர்கள், மக்பீசை, எல்லா இரத்தம் சிந்துதலையும், எல்லாமரணங் களையும் சந்திக்க வைக்கிறார்கள். அந்தப் பயந்தாங் கொள்ளிகள் தொடர்ந்து காட்டிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். புத்திசாலித்தனமாகத்தான் அதைச் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், காட்டிக் கொடுக்கிறார்கள்! ...காட்டிக் கொடுக்கிறார்கள்! காட்டிக் கொடுக்கிறார்கள்!...''

நான் இதை நம்பப் போவதில்லைச் சித்தப்பா. ஹகானாவிலும், பால் மாக்கிலும் இருக்கும் எங்களில் பலர் போராட ஆவலாயிருக்கிறோம். எங்களை அவர்கள் வெடித்துப்போகும் வரை மட்டுப்படுத்துகிறார்கள். ஆனால் எல்லா வற்றையும் அழிக்க எங்களால் முடியாது.''

''எங்களிடம் சொல்லுங்கள் நாங்கள் அழிக்கிறோம்.''

அரி பல்லைக் கடித்துக் கொண்டு, நாவைக் கட்டுப்படுத்திக் கொண்டான். கிழவனோ தொடர்ந்து புலம்பிக் கொண்டிருந்தான். திடீரென அவனும், கதையைவிட்டு கைகளைப் பக்கலில் தொங்கவிட்டுக்கொண்டான்.

''நான் உள்ளூர விரும்பாமலே, விவாதங்களை உண்டுபண்ணுவதில் நான் திறமைசாலி.'' என்றார் பின்பு.

''பரவாயில்லை சித்தப்பா.''

என்னை மன்னித்துக் கொள் அரி. தயவுசெய்து இன்னும் கொஞ்ச பிராந்தி எடுத்துக் கொள்.''

''இல்லை வேண்டாம். மிக்க நன்றி.''

அக்கிவா தன் பின்புறத்தை அவனுக்காகத் திருப்பிவிட்டு, மெதுவாகக் கேட்டார், ''என்னுடைய சகோதரன் எப்படியிருக்கிறார்?''

''கடைசியாக நான் அவரைக் கண்டபோது, நல்லாய்த்தான் இருந்தார். அவர் மகாநாட்டில் கலந்து கொள்ள லண்டன் போகவிருந்தார்.''

''ஆமாம். என் அன்பு பராக். இறுதி முடிவுரை அவர் கைதத்துக் கொண்டேயிருப்பார்.'' அக்கிவா தன் உதடுகளை ஈரமாக்கிவிட்டு, கேட்டார். ''நீயும், ஜோர்டானாவும், சாராவும் என்னைச் சந்திப்பது அவருக்குத் தெரியுமா?''

''அப்படித்தான் நினைக்கிறேன்.''

அக்கிவா திரும்பி தன் பெறாமகனை நோக்கினான். அவனுடைய முகம் அவனுள் இருக்கும் சோகத்தைப் பிரதிபலித்தது. ''எப்பவாவது எப்பவாவது என்னைப் பற்றிக் கேட்பதுண்டா?''

''இல்லை.''

அக்கிவா தாக்கம் தந்த சிறு சிரிப்பொன்றை சிந்திவிட்டு, கதிரையுடன் சரிந்து அமர்ந்து தனக்காக மேலும் சிறிது பிராந்தியை ஊற்றிக் கொண்டார். ''காரியங்கள் எவ்வளவு வினோதமாயிருக்கின்றன. கோபப்படுபவன் எப்போதுமே நான்தான். பராக் எப்போதுமே மன்னிப்பவனாகவே இருந்தான். அரி நான் மிகவும் களைத்துப் போய்விட்டேன்.''

ஒரு வருடம்... இன்னொரு வருடம்... இன்னும் எவ்வளவு காலம் இருக்கிறது என்று எனக்குத் தெரியாது. நாங்களிருவரும் எங்களுக்கிடையில் ஏற்படுத்தியிருக்கும் வெறுப்பை சரிப்பண்ண ஒன்றாலும் முடியாது. ஆனால்... அவர் தனது இந்த மௌனத்தை உடைக்க மனம் கொள்ள வேண்டும். அரி எங்கள் தந்தையின் பேரால் அவர் என்னை மன்னிக்க வேண்டும்.

○

அத்தியாயம் மூன்று

பழைய நகரம், கிட்ரோன் பள்ளத்தாக்கு (Kidron Valley) ஒலிவ்மின்மலை, (Mount of Olives), சியோன் மலை ஆகியவற்றில் இருந்து நூறு ஆலயமணிகள் வை. எம். சி. ஏ (Y. M. C. A)யின் காரிலோன் (Carillon)னோடு இணைந்து கோரஸ் இசைத்தன: அன்று ஜெருசலேமில் கிறீஸ்தவ ஒய்வுநாளான ஞாயிற்றுக் கிழமை ஆகும்.

டேவிட் பென் அமி கிற்றியை டமாக்கஸ் புகுவழிக்கூடாகப் பழைய நகருக்கு அழைத்துச் சென்றான். அவர்கள் சிலுவைப்பாதையென பொருள்படும் வியா டொலறோசா (Via Dolorosa) வோடு நடந்து கிட்றோன் பள்ளத்தாக்கு சக்காரியஸ் (Zacharias) அப்சலோம் (Absalom) ,மேரி (Mary) ஆகியோரின் கல்லறைகளையும், யேசுநாதர் பரலோகத்துக்கு எழுந்தருளின இடமாகக் கருதப்படும் ஒலிவ்ஸ் மலைகளையும் பார்த்துக் கொண்டிருக்கும், ஸ்ரீபன் புகுவழிக்கு (Stephen Gate) வந்தார்கள். அவர்கள் குறுகலான பாதைகளூடாகவும், மும்முரமான வியாபாரம் நடந்து கொண்டிருந்த சிறிய கடைகளூடனான அரபுச் சந்தைக்கூடாகவும் நடந்து சென்றார்கள். குன்றின் கூரை என்று சொல்லப்பட்ட ஒமாரின் பள்ளிவாசலில், ஒரு ஆயிரம் சோடி காலணிகள் படிகளை நிறைத்திருந்த வயதான யூதர்கள் தங்கள் மாபெரும் தேவாலயத்தின் அழும் சுவரருகே நின்று புலம்பிக் கொண்டிருந்தார்கள்.

இந்த இடம் எப்படிப்பட்ட வினோதமான இடமாக இருக்கிறது. என்று திரும்பவும் கிற்றி பிறமென்ற் ஆச்சரியப்பட்டாள். ஆயிரக்கணக்கான வருடங்களாக, சுமார் நூறு நாகரீகங்கள், இவ்வளவு தூரத்திலிருக்கும் இந்தத் தரிசான குன்றுகளில்தான் சங்கமித்திருக்கின்றன. ஏன் உலகில் மற்றைய இடங்களை விடக் குறிப்பாக இந்த இடத்தின் இந்த வீதியில், இந்த ஆலயத்தில் இது நிகழ்ந்தது? ரோமர்கள் சிலுவையுத்த வீரர்கள், கிரேக்கர்கள், துருக்கியர், அரபுக்கள், அசிரியர், பபிலோனியர், பிரிட்டிஷார் ஆகியோருக்கு இந்த அவதூறு செய்யப்பட்ட ஹீப்ரூக்களின் நகரிலே என்ன தேவை இருந்தது? அது பரிசுத்தமானது. புனிதமானது. அழிவுக்குட்பட்டது. பலமானதும், பலவீனமானதும், மனிதனில் இருக்கும் எல்லா நன்மையான இயல்புகளும் தீமையான இயல்புகளும் அங்கே உருக் கொடுக்கப்பட்டிருந்தன. கல்வாரி – (Calvary) யேசுநாதர் சிலுவையில் மரித்த இடம்)யும், ஜெத்சமெனி (Gethsemane - யேசுநாதர் மரணத்தின் முன் பிதாவை நோக்கி வேண்டுதல் செய்த ஒரு தோட்டம்)யும், இருந்தன.

கடைசி இராப்போசனம் நடந்த அறையும் (யேசுநாதர் இறப்பதற்கு முன் சீடர் களோடு சேர்ந்து உணவருந்தி, கிறீஸ்தவ பூசை முறைகளை நிறுவிய இடம்) இருந்தது. யேசுநாதரின் கடைசி இராப்போசன யூத திருநாளான பாஸ்ஓவர் செடார் (Passover scder) ஐ ஒட்டி நடந்தது.

டேவிட், கிற்றியை, பரிசுத்த செப்பல்சர் (Sepulcher) எனப்படும் யேசு நாதர் சிலுவையில் அறையப்பட்ட இடத்திற்கும், சித்திர வேலைப்பாடமைந்த தூங்கும் விளக்குகளும், மெழுகுவர்த்திகளும் நிரந்தரமாக எரிந்து கொண்டி ருக்கும் யேசுநாதரின் மாபிளாலான கல்லறை இருக்கும் சிறிய அறைக்கும் அழைத்துச் சென்றான். கோடிக்கணக்கான யாத்திரிகர்கள் செய்வது போல் கிற்றியும் அந்தக் கல்லறைக்கு அருகில் மண்டியிட்டு அதனை முத்தமிட்டாள்.

அடுத்த நாள் காலையில் அரியும் கிற்றியும், ஜெருசலேமை விட்டுப் புறப்பட்டு, கலிலியினுள் வடதிசையில் சென்றார்கள். அவர்கள் காலவரம்பற்ற அரபுக் கிராமங்களைத் தாண்டி ஒரு காலத்தில் சதுப்பு நிலமாக இருந்து யூதர்களின் உழைப்பில் மத்திய கிழக்கிலேயே சிறந்த பொன் கொழிக்கும் பூமி யாக மாற்றப்பட்ட ஜெஸ்ரீல் பள்ளத்தாக்கின் கம்பளம் போன்ற பசுமையான நிலப்பரப்பினுள் பிரவேசித்தனர். பாதை ஜெஸ்ரீலைத் தாண்டி நாசரேத் (Nazareth - யேசுநாதர் பிறந்த இடம்.) ஐ நோக்கிச் செல்லத் தொடங்கியதும், திரும்பவும் காலச் சக்கரத்தில் பின்னோக்கிப் போகத் தொடங்கினர். குன்றின் ஒரு பக்கமாகப் பச்சைப் பசேலென்ற ஜெஸ்ரீல் பள்ளத்தாக்கும், மறுபக்கம் சூரியவெப்பத்தால் சுட்டுப் பொசுக்கப்பட்டு, காய்ந்து தரிசாகக் கிடந்த அரபுக் களின் வயல்களும் இருந்தன. யேசுநாதர், தன் இளமைக் காலத்தில் கண்டிருக் கக்கூடிய தோற்றத்திலேயே நசரேத் இன்னமும் இருந்தது.

அரி காரை, நகர் மத்தியிலே நிறுத்தினான். மொய்த்துக் கொண்ட அரபுச் சிறுவர்களை உதறிவிட்டான். ஒரு சிறுவன் மட்டும் விடாப்பிடியாகத் தொடர்ந்து வந்தான்.

''வழிகாட்டி வேண்டுமா?''

''இல்லை.''

''ஞாபகார்த்தப் பொருட்கள்?'' என்னிடம் சிலுவையின் மரத்துண்டு களும், யேசுநாதர் ஆடையின் துணித் துண்டுகளும் இருக்கின்றன.''

''ஓடிப்போ.''

''ஆபாசப் படங்கள்?''

அரி அந்தப் பையனைக் கடந்து செல்ல முயன்றாலும், அவன் விடவில்லை. அவன் அரி அணிந்திருந்த நீளக் கால்சட்டையில் கால்களைப் பிடித்திழுத்தபடி ''என்னுடைய சகோதரி இருக்கிறாள். அவள் ஒரு கன்னிப்பெண்'' என்றான். அரி ஒரு நாணயத்தை அவனுக்குச் சுண்டிவிட்டு விட்டு ''காரை உன் உயிர்போல் பார்த்துக் கொள்'' என்றான்.

நசரேத் நாற்றமெடுத்துக் கொண்டிருந்தது. வீதிகளில் சாணம் குவிந்து கிடந்தது. குருடான பிச்சைக்காரர்கள், நாராசமான ஓசைகளை எழுப்பிக் கொண்டிருந்தார்கள். அழுக்கான கந்தையணிந்த சூழந்தைகள் வெறுங்கால் களோடு கால்களுக்கிடையே ஓடித்திரிந்தார்கள். இலையான்கள் எங்கும் இருந்தன. கிற்றி, அரியின் கையை இறுகப் பற்றியபடியே சந்தைப் பகுதிக்கூடாக அன்னை மேரியின் (யேசுவின் தாயார்) சமையலறையும், யோசேப்பின் (Joseph - யேசுவின் தந்தை) தச்சுப் பட்டறையும் இருந்ததாகச் சொல்லப்படும் இடத்துக்குச் சென் றார்கள்.

நசரேத்திலிருந்து திரும்பிச் செல்லும்போது கிற்றி குழம்பியிருந்தாள். அது ஒரு உதவாத இடம் என்று நினைத்தாள். ''ஆகக் குறைந்தது அங்கே அரபுக்கள் சிநேகபூர்வமானவர்கள். அவர்கள் கிறீஸ்தவர்கள்'' என்றான் அரி.

''அவர்கள் முதலில் குளிக்க வேண்டிய கிறீஸ்தவர்கள்.''

திரும்பவும் அவர்கள் யேசுநாதர், நீரை இரசமாக்கும் தன் முதல் புதுமையை திகழ்த்திய இடமான சிறிய ஆலயமொன்றிருந்த காபர் கானா (Kafr Kanna) வில் தரித்தனர். அது ஒரு அழகான நேரம் ஸ்தம்பித்துவிட்ட அரபுக் கிராமத்தில் இருந்தது.

கிற்றி கடந்த சில நாட்களில் தான் கண்டவற்றைச் சிரணிக்க முயன்றாள். அது ஒரு சிறியளவான பிரதேசம்தான். ஆனால், அதன் ஒவ்வொரு அங்குலமும் இரத்தத்தின் கதையை அல்லது மகிமையின் கதையைத் தன்னுள் கொண்டிருந் தது. சில நேரங்களில் அதன் பரிசுத்ததன்மை மனதை ஆட்கொண்டது. வேறு சில சமயங்களில் ஏற்படக்கூடிய கிளர்ச்சி அருவருப்பாக மாறியது. சில புரிசுத்த ஸ்தலங்களை அவள் காணும்போது அவளைப் பேச்சிழக்கச் செய்யும், வியப்புக் கடலில் மூழ்கடித்தன. சில இடங்களோ களியாட்ட விழாவொன்றில் சூதாட்டம் ஒன்றைச் சந்தேகக்கண்களுடன் நோக்கும் மனநிலைக்கு ஆட்படுத்தின. மியாஷி யாறிம்மின் அழும் யூதர்களும், எரியும் சுத்திகரிப்பு ஆலையும், போர்க்குணம் கொண்ட ரெல் அவிவின் ''ஷப்றா''க்களும், ஜெஸ்ரீலின் விவசாயிகளும், பழைய வையும், புதியவையும் ஒன்றாகச் சங்கமமாகி, ஒவ்வொரு திருப்பத்திலும், ஒற்று மைகளும் வேற்றுமைகளும் கலந்தேயிருந்தன.

யாட்எல்லின் புகுவழியில் அரி திரும்பியபோது நன்றாகப் பொழுது சாய்ந்திருந்தது. அவன் ஒரு மலர்ப்படுக்கையை முன்புறம் கொண்டிருந்த கொட் டகையொன்றின் முன் காரை நிறுத்தினான்.

''அரி, இது எவ்வளவு அழகாயிருக்கிறது. ''கிற்றி சொன்னாள். கொட் டகையின் கதவு திறக்கப்பட சாரா பென் கானான் ஓடிவந்தாள். அரி அரி... அரி கூவிக்கொண்டே ஓடிவந்த அவள் அரியின் அன்பான அரவணைப்புக்குள் சிக்கிக் கொண்டாள்.

''ஷலோம் அம்மா''

,'அரி..... அரி..... அரி.....''

''அம்மா இப்போ அழக்கூடாது..... ''ஸ்..... ஸ் ... ..அழாதீர்கள். அழக் கூடாது.''

பெரும் உடலமைப்பொடு கூடிய பராக் பென் கானான் கொட்டகையை விட்டு வெளியே ஒடிவந்து, மகனை அணைத்துக்கொண்டதைக் கிற்றி கண்டாள்.

''ஷலோம் அப்பா ஷலோம்'' (Shalom Abba)

வயதான அந்த இராட்சத மனிதர், தொடர்ந்து மகனை அணைத்தபடி செல்லமாக முதுகில் பலமுறை அறைந்தபடியும், ''நீ நல்லாகவே இருக்கிறாய் அரி. மிக நல்லாகவே இருக்கிறாய்'' என்று திரும்ப திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தார்.

சாரா தன் மகனின் முகத்தை ஆராய்ந்தாள். ''அவன் களைத்திருக் கிறான். அவன் களைத்திருப்பது உங்களுக்குத் தெரியவில்லையா பராக்?'' என்றாள்.

எனக்கொன்றுமில்லை அம்மா. நான் ஒரு விருந்தினரைக் கூட்டி வந்தி ருக்கிறேன். நீங்கள் இதோ இந்த திருமதி, கத்தரீன் பிறமென்றைச் சந்திக்க வேண்டும் என விரும்புகிறேன். அவள் நாளை கான்டப்னாவுக்கு வேலை செய்யப் போகப்போகிறாள்.'' என்றான்.

''அப்போ நீதான் கத்தரீன் பிறமெற்'' சொல்லியபடியே பராக் தன் இராட்சதக் கரங்களில் அவள் பூங்கரத்தை ஏந்திக்கொண்டார். ''யாட் எல் உங்களை வரவேற்கிறது.'' ''அரி நீ ஒரு முட்டாள்'' அவனுடைய தாயார் அவனைப்பார்த்து கூறினாள். தொடர்ந்து, நீ ஏன் திருமதி கத்தரின் பிறமென்றைக் கூட்டி வருவதாகத் தொலைபேசியில் கூறவில்லை? பரவா யில்லை ..... வாருங்கள் உள்ளே வாருங்கள் .. நீங்கள் போய் நீராடி விட்டு வாருங்கள்..... ஆடைகளை மாற்றிக் கொள்ளுங்கள். நான் ஏதாவது சாப்பிட ஒழுங்கு பண்ணுகிறேன். அப்போதுதான் உங்கள் களைப்பு நீங்கும். உண்மை யிலேயே நீ ஒரு முட்டாள்தான் அரி.'' சாரா கிற்றியின் இடுப்பை அணைத் தபடி கொட்டகைக்குள் நடத்திச் சென்றாள் ''பராக், திருமதி பிறமெற்றின் பயணப்பைகளை கொண்டுவருகிறீர்களா?''

ஜோர்டானா பென் கானான் திறந்த வெளியரங்கினில் புதிதாக வந்தி ருந்த எக்ஸோடஸ் பிள்ளைகளின் முன்னால் நின்று கொடிருந்தாள். அவள்உயர மாக, நேராக, சிலைபோல அழகிய கால்களுடன் நின்று கொண்டிருந்தாள். அவள், தனது சிவந்த முடிகள் தோளுக்குக் கீழேவரை தொங்கிக் கொண்டி ருக்க உன்னதமான எழில் கோலத்திலிருந்தாள். அவளுக்கும் பத்தொன்பது வயதே ஆகியிருந்தது. சர்வகலாசாலையில் இருந்து நீங்கியதிலிருந்து, பல்மாக்கில் சேவை ஆற்றிவந்தாள். எல்லாக்கிராமங்களிலும் இருக்கும் பதினான்கு வயதிற்கு மேற்பட்ட சிறுவர் சிறுமியருக்கு இராணுவப் பயிற்சி கொடுக்கும் கட்டளை (Gadna) அணிக்குத் தலைமை தாங்க அவளை கான்டப்னாவுக்கு

அனுப்பியிருந்தது. கான் டப்னாவில்தான் ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டு ஹுலே குடியேற்றங்களுள் கடத்தப்பட்டு வந்தன. ''இஸ்ரேலின் குரல்'' இரகசிய நடமாடும் வானொலி நிலையம் ஹுலேயின் ஒலிபரப்புகளை நிகழ்த்தும்போது, அதிலும் அவள் வேலை செய்தாள். ஜோர்டானா தன் கான் டப்னா காரியலயத்திலேயே தங்கியிருந்தாள்.

''என் பெயர் ஜோர்டானா பென் கானான்'' அவள் எக்ஸோடஸ் பிள்ளைகளுக்குச் சொன்னாள். தொடர்ந்து, ''நான் உங்கள் கட்னா கொமாண்டர் வருகின்ற வாரங்களில் நீங்கள் வேவுபார்த்தல், செய்தி பரிமாறும் வேலைகள், ஆயுதங்களைத் துப்பரவாக்குதல், கையாளுதல், சிலம்படி போன்றவற்றில் பயிற்றப்படுவதோடு, நீண்டதூரக் கால் நடைப் பயணங்களையும் மேற்கொள்வீர்கள். நீங்கள் இப்போது பலஸ்தீனத்தில் இருக்கிறீர்கள். இனியொரு கணமும் உங்கள் தலைகள் தாழ்ந்து போகவோ, யூதனாய் இருப்பதினால் ஏற்படும் பயத்தை உணரவோ கூடாது. நாங்கள் மிகக் கடுமையாக உழைக்கப் போகிறோம். ஏனெனில், நீங்கள் எரெற்ஸ் இஸ்ரேலுக்குத் தேவை. நாளை எங்கள் முதல் நெடும்தூரக் கால்நடைப் பயணத்தை மேற்கொள்வோம். நாங்கள் குன்று களைத் தாண்டி ரெல் ஹாய்க்குப் போவோம். அறுபது வருடங்களுக்கு முன் எனது தந்தையார் ரெல்ஹாய்க்கூடாகத்தான் பலஸ்தீனம் வந்தார். அங்குதான் எங்கள் மாவீரன் ஜோசப் ட்ரம்பிள்டோர் வீரமரணமடைந்தார். அங்குதான் ட்ரம்பிள்டோர் புதைக்கப்பட்டார். அந்த இடத்தில் ஒரு கல்லில் வடிக்கப்பட்ட சிங்கம், டப்னாவின் சிலை ஹுலேப் பள்ளத்தாக்கைப் பார்த்துக் கொண்டிருப்பது போல், பார்த்துக் கொண்டிருக்கிறது. அந்தச் சிங்கத்தின் மீது, ''தாயக மண்ணுக் காய் மரிப்பது மேலானது'' என்று எழுதப்பட்டிருக்கிறது என்றாள்.

சிறிது நேரத்துக்குப் பின் அவள் நிர்வாகப் பிரிவுக் கட்டிடத்துள் வந்தபோது, தொலைபேசி அழைப்பு ஒன்று வந்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. அவள் தொலைபேசியை எடுத்து ''ஷலோம், ஜோர்டானா பேசுகிறேன்'' என்றாள்.

''ஷலோம். அம்மா பேசுகிறேன். அரி வந்திருக்கிறான்,''

''அரி.''

ஜோர்டானா தன் காரியாலயத்திலிருந்து, குதிரை லாயத்துக்கு ஓடோடிச் சென்றாள். அவள் தன் தந்தையின் வெண்நிற அரபுப் புரவியில் பாய்ந்தேறி, கான் டப்னாவின் புகுவழியால் வேகமாக விரட்டிச் சென்றாள். சேணமெதுவுமிடா மலே வெறும் குதிரையை, அபுயேஷா கிராமம் நோக்கி, தன் சிவந்த மயிர்க்கற்றை கள் காற்றில் பின்னால் பறக்க விரட்டிச் சென்றனர்.

அந்த அரபுக் கிராமத்தினுள் அவள் குதிரையை முழு வேகத்தில் விரட்டிக் கொண்டு வந்ததினால் பலர் பாதுகாப்பைத் தேடி ஒதுங்கிக் கொண்டனர். கோப் பிக் கடைகளில் இருந்த ஆண்கள் திரும்பிப் பார்த்து விட்டு முறைத்தனர். எங்கள் நகரத்தினூடாகக் கால்சட்டையை அணிந்தபடி குதிரையை ஓட்டிச் செல்ல இந்த மரியாதை கெட்ட விபச்சாரிக்கு எவ்வளவு துணிவு! அவள் பராக்கின் மகளும், அரியின் தங்கையுமாய் இருப்பதால் தப்பிப் பிழைத்தாள் என்றாள்.

அரி, கிற்றியின் கையைப் பிடித்து, ''வாருங்கள் இருட்டுவதற்கு முன் பண்ணையின் சில பகுதிகளைக் காட்ட விரும்புகிறேன்'' என்றான்.

''போதுமான அளவு உணவருந்தினீர்களா, திருமதி பிறமென்ற்?''

''நான் வெடித்து விடப்போகிறேன்.''

''அறை சௌகரியமாக இருந்ததா?''

''மிக வசதியாக இருந்தது திருமதி பென்கானான்.''

''அதிக நேரம் தாமதிக்க வேண்டாம். ஜோர்டானா கான் டப்னாவிலி ருந்து வந்ததும் இரவுணவு ஆயத்தமாகிவிடும்.'' சாராவும் பராக்கும் அவர்கள் போவதைப் பார்த்துக் கொண்டிருந்து விட்டு ஒருவரையொருவர் அர்த்தபுஷ்டியு டன் நோக்கிக் கொண்டனர்.

''அவள் ஒரு அழய பெண்தான். ஆனால் எங்கள் அரிக்கு.....''

''ஏய்... ஏய் .. ஒரு யூத அம்மாவாக இருப்பதை நிறுத்து. அவசரப்பட்டு திருமண் ஏற்பாடுகளை மேற்கொண்டு விடாதே'' என்றார் பராக்.

''விசர்க்கதை பேசாதீர்கள் பராக். அவன் அவளைப் பார்க்கும் விதத்தை நீங்கள் அவதானிக்கவில்லையா? உங்கள் சொந்த மகனையே உங்களுக்குப் புரிந்து கொள்ள முடியவில்லையா? அவன் களைத்துப் போய் இருக்கிறான்.

அரியும் கிற்றியும் சாராவின் மலர்த்தோட்டங்கள் அருகே நடந்து பதிவான இரும்பு வேலியருகே வந்தார்கள். அரி தன் காலை அந்த இரும்பு வேலியில் வைத்தபடி மொசாவ்வின் வயல்களைப் பார்த்தான். நீர் விசிறிகள் குளிர்ந்த நீரை விசிறியபடி, சுழன்று கொண்டிருந்தன. செடி கொடிகளோ மெலிதான மாலைத்தென்றலில் மென்மையாக அசைந்து கொண்டிருந்தன. சுற்றுப்புறமோ சாராவின் முன்பனிக்கால ரோஜாப்பூக்களால் நறுமணம் கமழ்ந்து கொண்டி ருந்தது. கிற்றி தன் மண்ணைப் பார்ப்பதை அவதானித்துக் கொண்டிருந்தான். அவள், அரி பென் கானானுக்கு அறிமுகமான நாட்களில் இருந்து, இப்போது தான் முதல் முறையாக அவன் நிம்மதியாயிருப்பது போல் தோன்றியது. இப்ப டியான ''அமைதிக்காலங்கள்'' அவனுக்கு மிக அரிதாகவே கிடைக்கும் என எண்ணிக் கொண்டாள். அத்தோடு ஜெருசலேமில் அவன் அடைந்த குறுகிய அமைதிக் காலமும் அவள் ஞாபகத்தில் நிழலாடியது.

''உன்னுடைய இன்டியானாவைப்போல் இந்த இடம் இல்லை என நினைக்கிறேன்'' அரி சொன்னான்.

''இது பரவாயில்லை''

ஆமாம், ஆனால் உன் இன்டியானாவை சதுப்பு நிலத்திலிருந்து கட்டி எழுப்ப வேண்டியிருக்கவில்லை'' அரி மேலும் பல விஷயங்களை அவளுக்கு

சொல்ல விரும்பினான். அவன் எல்லாவற்றையும் விட்டுவிட்டு, வீடு வந்து தன் நிலங்களைப் பண்படுத்த எவ்வளவு ஆவலாயிருக்கிறான் என்று சொல்ல விரும்பினான். இப்படியான நிலங்களைச் சொந்தமாகக் கொண்டிருப்பது தன் மக்களுக்கு எவ்வளவு மேலான விஷயம் என்று புரிந்து கொள்ளும் படி கெஞ்சிக் கேட்டுக் கொள்ள விரும்பினான்.

கிற்றி, வேலிக்கு மேலால் எட்டிப் பார்த்து, யாட் எல் பிரதிநிதித்துவப் படுத்திய பெருமைக்குரிய உழைப்பின் வெற்றியையும் அதன் அழகையும் ரசித்துக் கொண்டிருந்தாள். அந்தச்சூழலில் அவள்மிகப்பிரகாசமாகத் தெரிந்தாள். அரிக்கு அவளைத் தன் கைகளில் எடுத்து இறுக அணைத்துக் கொள்ள வேண்டும் போலிருந்தது. ஆனால், அவன் அப்படி எதையும் செய்யவுமில்லை. எதுவும் சொல்லவுமில்லை. அவர்கள் ஒன்றாகத் திரும்பி வேலி அருகோடு நடந்து ஒரு களஞ்சியக் கொட்டகைக்கு வந்தார்கள். அங்கிருந்து கோழிகளின் இரைச்சலும், வாத்தொன்றின் கூவலும் கேட்டன. அவன் கதவைத் திறந்தான். கதவின் பிணைச்சல் உடைந்திருந்தது.

''இதைத் திருத்த வேண்டும். இன்னும் எவ்வளவோ விஷயங்கள் திருத்தப்படவேண்டும். நானும் அதிகம் இங்கிருப்பதில்லை. ஜோர்டானாவும் இல்லை. அப்பாவும் அடிக்கடி மகாநாடு என்று போய்விடுகிறார். பென் கானான் பண்ணை கிராமத்திற்கு ஒரு சுமையாகிவிட்டது என்று நான் நினைக்கிறேன்... முழு மொசாவ்வுக்கும் அந்தப் பொறுப்பு சார்ந்தது. எப்பவோ ஒரு நாளைக்கு நாங்கள் எல்லோரும் ஒன்றாக வீட்டிலிருக்கக்கூடிய வாய்ப்புக் கிடைத்தால் ஏதாவது செய்யக்கூடும்..'' பின்பு அவர்கள் ஒரு பன்றிக்கூட்டின் அருகே வந்து நின்றனர். அதனுள்ளே ஒருபெண்பன்றி இரைத்தபடி கிடக்க, பத்துப்பன்னிரண்டு கொழுத்த குட்டிகள் அதனது பால் முலைகளைப் பிடிக்கச் சண்டையிட்டுக் கொண்டிருந்தன.

''நான் ஒரு பழைய வரிக்குதிரைநிபுணராக இல்லாவிட்டால் நான் பன்றிகளைப் பார்த்துக் கொண்டிருப்பதாகச் சத்தியம் செய்வேன்'' என்றான் கிற்றி.

ஸ்..... ஸ்..... உரக்கச் சொல்லக்கூடாது. நில நிதிக்குழுவில் யாராவது ஒற்றுக் கேட்டுக் கொண்டிருப்பார்கள். நாங்கள் எங்கள் யூத தேசிய மண்ணில், வரிக்குதிரைகளை வளர்க்கிறோம் என்றுதான் குறிப்பிடுவோம். கான் டப்னாவில் பிள்ளைகள் இவற்றை பெலிக்கன்கள் என்று குறிப்பிடுவார்கள். கிபுட்ஸில் இன்னும் யதார்த்தபூர்வமாகக் குறிப்பிடுவார்கள். அங்கே தோழர் என்றுதான் குறிப்பிடுவார்கள் (யூதர்களுக்கு பன்றியிறைச்சி தடுக்கப்பட்ட மாமிசமாகும்) களஞ்சியக் கொட்டகை, கோழிக்கூடுகள், இயந்திரங்கள் இருந்த கொட்டகை போன்றவற்றைத் தாண்டி வயல் நிலங்களின் விளிம்புவரை சென்றனர்.

அரி அவளுக்குப் பின்னால் நின்றபடி லெபனான் எல்லையில் குன்றுகளிடையே ஒரு இடத்தைச் சுற்றிகாட்டியபடி, ''இங்கிருந்து கான்டப்னாவைக் காணலாம்'' என்றான்.

''அந்த வெள்ளை வீடுகளா''

''இல்லை அது அபுயேஷா என்று சொல்லப்படும் ஒரு அரபுக் கிராமம் அதற்கு. அப்பால் வலது பக்கமாக அந்த மரங்கள் நிறைந்த சமவெளியில் பார்.''

''ஆமாம் எனக்குத் தெரிகிறது. கடவுளே அது எவ்வளவு உயரத்திலிருக் கிறது. குன்றுகளின் உச்சிக்கப்பால் தெரியும் கட்டம் என்ன?''

''அது எஸ்தர்கோட்டை. பிரிட்டிஷாரின் எல்லை காவல் நிலையம். வாருங்கள் உங்களுக்கு வேறு ஒன்றைக் காட்ட வேண்டும்.'' இருளத்தொடங்கிய போது அவர்கள் வயல்களுக்கூடாக நடக்கத்தொடங்கினர். குன்றுகளின் மேல் அஸ்தமித்துக் கொண்டிருந்த சூரியன் வர்ண ஜாலங்களை அள்ளியிறைத்துக் கொண்டிருந்தது. அவர்கள் வந்து சேர்ந்தவயல்களின் இன்னொரு விளிம்பருகே ஒரு சிற்றாறு ஒன்று ஹுலே வாவியை நோக்கி ஓடிக்கொண்டிருந்தது.

''உங்களுடைய அமெரிக்காவிலிருக்கும் வெள்ளையரல்லாத ஆட்கள் சிலர் இந்த ஆற்றைப்பற்றி மிக அழகான ஆத்மீகப் பாடல்களைப் பாடுவார்கள்.''

இதுதான் ஜோர்டானா ஆறா?''

''ஆமாம்.''

அரி அவளுக்கு அருகே நெருங்கினான். இருவரும் ஒருவரையொருவர் ஆர்வத்தோடு நோக்கினர்.

உனக்கு இதைப் பிடிக்கிறதா? எனது பெற்றேரைப் பிடித்திருக்கிறதா?''

கிற்றி ஆமெனத்தலையை அசைத்தாள். அவள் அரி தன்னை அணைத் துக் கொள்ளக் காத்துக் கொண்டிருந்தாள். அவனது கைகள் எழுந்து வந்து அவள் தோள்களை நெருங்கி வந்தன.

எங்கோ தொலைவிலிருந்து அரி! .. அரி! .. அரி! ..'' யாரோ உரத்துக் கூப்பிடும் குரல், சிவபூசையில் கரடி மாதிரி ஒலித்தது. அவன் சடாரென கிற்றியை விட்டு சுழன்று திரும்பினான். ஒரு குதிரையோட்டி அஸ்தமித்துக் கொண்டிருக்கும் சூரியனின் சிவந்த ஒளியால் சூழப்பட்டு அவர்களை நோக்கி விரைந்து வந்து கொண்டிருந்தார். விரைவிலேயே வரும் உருவத்தை அடையாளம் கண்டுகொள்ள முடிந்தது. நேர் கொண்ட முதுகும், பறக்கும் கூந்தலும் வருப வரைஅடையாளம் கொட்டிவிட்ட.

ஜோர்தானா!''

நுரை தள்ளிக் கொண்டிருந்த குதிரையை அவர்கள் முன்னால் வலித்து நிறுத்திவிட்டு, கைகள் இரண்டையும் மேலே கிளப்பியாபடி மகிழ்ச்சியல் கூக்கு

ரலிட்டபடி, அரியின் மேல் பாய்ந்த வேகத்தில் இருவரும் கீழே புரண்டனர். ஜோர்டானா அரிக்கு மேல் ஏறி, தன் அன்பான முத்தங்களை அவன் முகத்தில் அள்ளிச் சொரிந்தாள்.

''சரி. சரி. போதும் நிறுத்து.''

''உன் ஒவ்வொரு துணிக்கையிலும் எனக்கு அன்புதான்.''

''ஜோர்டானா அவனுக்கு கீச்சு முச்சுக் காட்டவும், அவர்களிருவரும் கட்டிப்புரண்டனர். கடைசியாக அவளைத் தடுத்து நிறுத்த அரி அவளை நிலத்தோடு இறுக்கிப் பிடிக்க வேண்டியவாயிற்று. கிற்றி மிகுந்த மகிழ்ச்சியோடு இவைகளைப் பார்த்துக் கொண்டிருந்தாள். திடீரென ஜோர்தானா அவளைக் கண்டுகொள்ள முகத்தில் உணர்ச்சிகள் உறைந்து போயின. கிற்று இருப்பது ஞாபகத்துக்கு வந்த அரி முகத்தில் அசடு வழிய யோர்தானாவை நிலத்தில் இருந்து எழுப்பி விட்டான்.

''என்னுடைய அடங்காப்பிடாரித்தங்கை இவள்தான். அவள் என்னை, டேவிட் பென் அமி எனத் தவறாக நினைத்துவிட்டாள் போலிருக்கிறது'' என்றான் கேலியாக.

''ஹெலோ ஜோர்டானா!...டேவிட் சொன்னவைகளிலிருந்து உன்னை நீண்டகாலம் அறிந்திருப்பதைப் போன்ற உணர்வேற்படுகிறது...!!சொல்லியபடி கையை நீட்டினாள்.

''நீங்கள் கத்திரீன் பிறமென்ற். உங்களைப் பற்றியும் நிறையக் கேள்விப் பட்டிருக்கிறேன்.'' நீட்டிய கையைப் பற்றிக் குலுக்கியதில் விரோத பாவமே தென்பட்டது. இதனால் குழப்பமடைந்தாள் கிற்றி. ஜோர்தானா திரும்பி குதிரையின் கடிவாளங்களைப் பிடித்து வீட்டை நோக்கி நடத்திச் செல்ல அரியும் கிற்றியும் அவளைத் தொடர்ந்தனர்.

''நீங்கள் டேவிட்டைக் கண்டீர்களா? திரும்பி அவள் அரியைக் கேட்டாள்.

''அவன் சில நாட்களுக்கு ஜெருசலேமிலிருப்பான். இன்றிரவு உனக்குத் தொலைபேசியில் பேசுவதாகச் சொன்னான். உனக்கு ஜெருசலேமுக்குப் போக இயலாவிட்டால், வார இறுதியில் இங்கு வருவதாகச் சொன்னான்.,'

''கான் டப்னாவுக்குப் புதிய குழந்தைகள் வந்திருப்பதால் என்னால் போக முடியாது.

அரி கிற்றியை நோக்கிக் கண்களை அடித்துவிட்டு, ''ஓ அப்படியா ரெல் அவிவில் நான் அவிடானைக் கண்டேன்... அவர் ஏதோ சொன்னார் என்ன அது ஆ ஆமாம் ஏதோ டேவிட்டை எயின் ஒரின் கலிலி ரிகேட்டுக்கு மாற்றப்போவதாகச் சொன்னார்.''

ஜோர்டானா திரும்பினாள். அவளுடைய நீல விழிகள் விரிந்தன. சிறிது நேரம் அவளால் பேச முடியவில்லை. ''அரி உண்மையாகவே சொல்கிறாயா? என்னோடு விளையாடவில்லையே?''

அரி தோள்களைக் குலுக்கிவிட்டு, ''பைத்தியப் பெண்ணே'' என்றான்.

''நீ ஏன் எனக்குச் சொல்லவில்லை?''

''அது அவ்வளவு முக்கியம் என நான் நினைக்கவில்லை.''

ஜோர்டானா திரும்பவும் அரிமேல் பாய்ந்து கட்டிப் புரள நினைத்தாலும் கிற்றியின் பிரசன்னம் அவளைக் கட்டுப்படுத்தி விட்டது. '' எனக்கு மிக மகிழ்ச்சியாயிருக்கிறது'' என்றாள்.

இன்னுமொருமுறை இரவுணவு கிற்றியின் மேல் வலிந்து புகுத்தப்பட்டது. அதை வேண்டாமென்று சொல்வது கிட்டத்தட்ட ''சர்வதேசப் பிரச்சினை'' ஒன்றை ஏற்படுத்துவது போலிருக்கும் என்பதால் கிற்றி, முடிந்தளவு உள்ளே தள்ளினாள். இரவுணவு முடிந்ததும், ஒரு மேசை நிறைந்த நொறுக்குணவு (Snacks) வகை, அரியைச் சந்திக்க வரக்கூடிய நண்பர்களுக்காகச் சாரா தயாரித்து வைத்திருந்தார்.

அன்றிரவு கிட்டத்தட்ட யாட் எல்லில் இருந்த எல்லோரும், அரியைச் சந்திக்கவும், வந்திருக்கும் அமெரிக்கப் பெண்ணைப் பார்த்துத் தங்கள் ஆர்வத்தைத் தீர்த்துக் கொள்ளவும் பென் கானான் வீட்டுக்கு வந்திருந்தார்கள். தெளிவான ஹீப்ரூவில் சொல்லப்போனால், பரபரப்பான ஊகங்கள் அங்கே உருவாகிக் கொண்டிருந்தன. அந்த மக்கள் முரட்டுத்தனமான ஆனால் சிநேக பூர்வமானவர்களாக இருந்ததோடு, கிற்றி, தான் ஒரு ராஜாங்க விருந்தாளியா? என்று ஐயுறும் அளவுக்கு அவளை விழுந்து விழுந்து உபசரித்தார்கள். அவளை நோக்கி எழக்கூடிய கேள்விக்கணை அலைகளிலிருந்து பாதுகாக்கும் நோக்கில் அரி அவள் அருகாமையிலேயே நின்றிருந்தாலும், அப்படிக் கேள்விகளைக் கேட்ட குழுவினரை, கிற்றி சுலபமாக சமாளித்த விதத்தைக் கண்டு வியந்து போனான்.

மாலை ஏற ஏற ஜோர்தானா கிற்றிக்கு முன்பாகக் காட்டிய சினேகபூர்வமற்ற தன்மை வெளிப்படையாகத் தெரியலாயிற்று. அவள் சிறிது விரோத மனப்பான்மையுடன் இருந்தாள். கிற்றிக்கும் அது தெரிந்தேயிருந்தது. அவளால் ஜோர்தானா என்ன நினைக்கிறாள் என்று ஊகிக்க முடிந்தது. ''என் சகோதரனைப் பறிக்க எண்ணும் நீ எப்படிப்பட்டவள்?'' என்ற ரீதியில் அவள் நினைவு போகும் என்று ஊகித்தாள். உண்மையாகவே, ஆர்வம் பொங்க வந்திருந்த யாட் எல் விவசாயிகளை திறமையாக கிற்றி சமாளித்துக் கொண்டிருந்ததை அவதானித்துக் கொண்டிருந்த ஜோர்தானாவின் மனத்திலும் அச்சொட்டாக அதே சிந்தனைதான் ஓடிக் கொண்டிருந்தது. அவளுக்கு கிங் டேவிட் ஹோட்

டலில் தேநீர் அருந்திக்கொண்டும், ஊர்வம்பு பேசிக்கொண்டும் தங்கள் நேரத்தைப் பாழடிக்கும் ஆங்கிலேய அதிகாரிகளின், மென்மையான, வெள்ளைநிற ஒன்றுக்குமுதவாத மனைவிகளைப் போல்தான் கிற்றியும் தோற்றமளித்தாள்.

அரியும், பராக்கும் தனியே கதைக்கக்கூடிய அளவுக்கு கடைசி விருந்தாளியும் விடைபெறும் போது, இரவு மிகத் தாமதமாகிவிட்டது. அவர்கள் தங்கள் பண்ணையைப்பற்றி விரிவாக ஆராய்ந்தார்கள். தாங்கள் அங்கே பிரசன்னமாக இருக்காவிட்டாலும், பண்ணை நன்றாக நடந்து கொண்டிருந்தது. அரி, ஜோர்தானா, பராக் ஆகியோர் நீண்டகாலம் அங்கிருக்காததால், எதுவுமே கவனிப்பாரில்லாமல் போய்விட மொசாவ் அனுமதிக்கவில்லை.

வரவேற்பு விருந்தின் எஞ்சியிருந்த பொருட்களிடையே எதும் மீதியைக் கொண்டிருக்கக்கூடிய கொக் நாக் (Cognac- மதுவகை) போத்தலொன்று இருக்குமா என்று தேடினார். தனக்கும் தன் மகனுக்குமாக இரு குவளைகளில் மதுவை வார்த்துக் கொண்டார். இருவரும் அமர்ந்து, ஆறுதலாக தங்கள் கால்களை நீட்டிக் கொண்டனர்.

''நல்லது இப்போ சொல் பார்ப்போம். உன்னுடைய திருமதி. பிறமென்றின் விஷயமென்னமாதிரி? நாங்கள் அறிய விரும்பும் ஆவலில் வெடித்து விடப் போகிறோம்.'' என்றார்.

உங்கள் எல்லோரையும் ஏமாற்றப் போவதற்காக வருந்துகிறேன். அவள் இங்கு வந்திருப்பது எக்ஸோடஸில் வந்த ஒரு பலஸ்தீனியப் பெண்ணைப் பற்றிய ஆர்வத்தினால்தான். அவள் அந்தக் குழந்தையைத் தத்து எடுத்துக் கொள்ளப் போகிறாள் என்று நினைக்கிறேன்.''

''நாங்கள் நல்ல நண்பர்களாகிவிட்டோம்.''

''அப்போ வேறொன்றுமில்லை?''

''ஒன்றுமில்லை''

''நான் அவளை விரும்புகிறேன் அரி மிக நன்றாக விரும்புகிறேன். ஆனால், அவள் எங்கள் வகையைச் சேர்ந்தவளல்ல. ரெல் அவிவில் அவிடானைச் சந்தித்தாயா?''

''ஆமாம். நான் ஹுலே பால்மாக்கில் அதிகமாக எயின் ஒில் சிறிது காலம் இருக்கவேண்டியிருக்கும். ஒவ்வொரு கிராமத்தின் பலத்தையும் மதிப்பீடு செய்யும்படி அவர் கேட்டுள்ளார்.

''அது நல்லது. நீ அதிககாலம் பிரிந்திருந்ததால் ஏங்கிப் போயிருக்கும் அம்மாவுக்கு சிறிது ஆறுதலாக உன்னோடு செல்லங் கொஞ்சுவதற்கு வசதியாக இருக்கும்.''

''நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?''

''அவிடான், மகாநாடுகளில் கலந்து கொள்ள லண்டன் போகச் சொல்லியிருக்கிறார்.''

''நான் அவர் அப்படித்தான் செய்வார் என்று நினைத்தேன்.''

''உண்மையில் நாங்கள் ஒரு அரசியல் வெற்றியை ஈட்டும்வரை பொறுத்தலையும், போராட்டத்தையும் நடத்த வேண்டும். யூசுவ் இப்போதைக்கு இராணுவ ரீதியான மோதலொன்றுக்கு முகம் கொடுக்க முடியாது. ஆகவே, நான் லண்டனுக்குச் சென்று என்னால் முடிந்ததைச் செய்வேன். இதைச்சொல்வதை வெறுக்கிறேன். ஆனால், பிரிட்டிஷார் எங்களை இன்னொருமுறை முழுதாக விற்றுவிடப் போகிறார்கள்.''

''அரி எழுந்து அறையினுள் நடக்கத் தொடங்கினான். அவிடான் இன்னொரு செயல்பாட்டுக்காகத் தன்னை அனுப்பாதது குறித்து மனம் வருந்தினான். இருபத்தினாலு மணி நேரம் வேலை செய்து கொண்டிருந்தாலாவது, யூசுவ்களை நசுக்கக் காத்திருக்கும் யதார்த்தங்களைப் பற்றிச் சிந்திக்க நேரமில்லாமல் போயிருக்கும்.

''நீ அபுயேஷாவுக்குப் போய் தாஹாவை ஒருமுறை சந்திப்பது நல்லது மகனே.''

''அவன் இன்றிரவு இங்கே வந்திருக்காததைப் பற்றி ஆச்சரியப்பட்டேன். ஏதாவது பிரச்சினையா?''

''முழு நாட்டிலும் என்ன பிரச்சினையோ, அதுதான். அபுயேஷாவின் மக்களோடு நாங்கள் இருபது வருடகாலமாகச் சமாதானமாக வாழ்ந்து வருகிறோம். கமால் என்னோடு அரை நூற்றாண்டு காலம் நண்பனாக இருந்தான். இப்போ..... ஒரு வெறுப்புணர்வு நிலவுகிறது. அவர்கள் எல்லோரையும் பெயர்களைச் சொல்லிக் கூப்பிடுமளவுக்கு நெருங்கிப் பழகினோம். அவர்கள் வீடுகளுக்குப் போய் வந்தோம். அவர்கள் எங்கள் பாடசாலையில் கல்வி கற்றார்கள், திருமணங்களை ஒன்றாகக் கொண்டாடியிருக்கிறோம்... ...அரி அவர்கள் எங்கள் நண்பர்கள்... ஏதாவது தவறு நேர்ந்திருந்தால் சரிப்படுத்தப்பட வேண்டும்.''

''கான் டப்னாவுக்குத் திருமதி பிறமென்றைக் கூட்டிப் போனபின் அவனைப் போய்ச் சந்திக்கிறேன்.''

அரி, ஹீப்ரூ, ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன், ரஷ்ய மொழிகளில் இலக்கியப் புத்தகங்கள் நிறைந்திருந்த புத்தக அலுமாரியில் சாய்ந்து கொண்டான். விரல்களைப் புத்தகங்கள் மேல் ஓட்டியவன் திடீரெனத் திரும்பி, ''ஜெருசலேமில் நான் அக்கிவாவைக் கண்டேன்'' என்றான்.

ஓங்கி அறையப்பட்டது போல் பராக் திடுக்கிட்டுப் போனான். சுயமாகவே, தன் சகோதரன் எப்படியிருக்கிறான் என்ற வார்த்தைகளை வெளியிடப் போன உதடுகளை வலித்து நிறுத்தினார்.

''அவனைப்பற்றி எனது வீட்டில் நாம் கதைக்கத் தேவையில்லை.''

''அவருக்கு மிகுந்த வயதாகி விட்டது. இன்னும் அதிககாலம், சீவிக்க முடியாது. உங்கள் தகப்பனாரின் பேரால் தன்னோடு சமாதானம் செய்து கொள்ளும்படி கெஞ்சிக் கேட்டுக் கொண்டார்.

''நான் அந்தக் கதையைக் கேட்க விரும்பவில்லை. ''கோபத்தால் குரல் குழறியது.

பதினைந்து வருடகால மௌனம் போதாதா?''

பராக் தன் முழு உயரமும் தெரிய எழுந்து நின்று மகனின் கண்களுள் ஊற்று நோக்கினார். ''அவன் யூதர்களை யூதர்களுக்கு எதிராகத் திருப்பினான். இப்போ அவனுடைய மக்கபீஸ்கள் அபுயேஷா மக்களை எங்களுக்கெதிராகத் திருப்புகிறார்கள். கடவுள் அவனை மன்னிக்கலாம் நான் ஒருபோதும் மன்னிக்க மாட்டேன். ஒருபோதும் முடியா.''

''தயவுசெய்து நான் சொல்வதைக் கேளுங்கள்.''

''குட்நைட் அரி.''

அடுத்த நாள் காலையில் கிற்றி, பென் கானான் குடும்பத்தினருக்குப் பிரியாவிடை கூறிவிட்டு உடன்வர, அரி, அவளை யாட்எல்லிலிருந்து கான் டப்னாவுக்குச் செல்லும் மலைப்பாதையில் வாகனத்தில் கூட்டிச் சென்றான். அபுயேஷாவில் வாகனத்தைச் சிறிது நிறுத்திய அரி, ஒருமணி நேரத்தில் சந்திக்கத் திரும்பி வருவதாகத் தாஹாவுக்கு யார் மூலமோ செய்தியனுப்பி விட்டுப் பயணத்தைத் தொடர்ந்தார்கள்.

கார் மலைக்குன்றுகளுக்குள் உயர உயர கிற்றிக்குக் கரேனைக் காணும் ஆவல் வளர்ந்து கொண்டே போயிற்று. ஆனால், கான்டப்னாவை நினைத்து ஐயப்பாடுகள் எழுந்தன. ஜோர்தானா ஒரு பொறாமை கொண்ட சகோதரி போல் நடந்து கொள்கிறாளா, அல்லது தங்களிடையே உள்ள வித்தியாசங்களால் ஆத்திரப்படும் மக்கள் கூட்டத்தின் ஒரு முன்னோடியாக இருக்கிறாளா என்று தெளிவாகப் புரியவில்லை. பலஸ்தீனத்தில் ஒரு பந்தமும் இல்லாத ஒரு அந்நிய ஆளாகத்தான் நீ இருப்பாய் என்று ஏற்கனவே ஹரியற் சோல்ஸ்மான் அவளை எச்சரித்திருந்தார். இந்தத் திசையில் ஒவ்வொருவரும், ஒவ்வொரு பொருளும் சுட்டிக்காட்டிக் கொண்டேயிருந்தன. ஜோர்தானா அவளைக் குழப்பி விட்டாள். கிற்றியும் எல்லோரோடும் இயல்பாகப் பழக முயன்றாலும், தானும் தன் அடி மனத்தில் வரையறைக் கோடுகளை வரைந்தபின் அதை மறைத்துப் பழக முயலு

கின்றோமோ என்றுகூட நினைத்தாள். நான் எப்படியிருக்கிறேனோ அதுதான் நான். ஆட்கள் எப்படியான தன்மை கொண்டிருக்கிறார்களோ அதை வைத்து ஆட்களை எடைபோடும் இடத்தில் இருந்துதான் நான் வந்திருக்கிறேன் என்று கிற்றி நினைத்துக் கொண்டாள்.

இன்னும் சனம் நடமாட்டம் குறைந்த பகுதிகளுள் செல்லச்செல்ல தனிமையாகவும் விசனமாகவும் இருந்தது

''நான் உன்னை விட்டுவிட்டு உடனடியாகவே போகவேண்டும்'' என்றான் அரி.

''நாங்கள் ஒருவரையொருவர் சந்திப்போம் தானே?''

''இடைக்கிடை நீ என்னைக் காணவேண்டும் என்று விரும்புகிறாயா கிற்றி?''

''ஆமாம்.''

''அப்படியானால் தான் முயற்சிக்கிறேன்.''

கடைசி மூலையால் திரும்பியதும் கான் டப்னா வெளி அவர்கள் கண் முன்னால் பரந்து கிடந்தது. டொக்டர். லிப்பர்மான், இசைக்குழு, ஆசிரியர்கள், ஊழியர்கள், எக்ஸோடஸ் பிள்ளைகள் ஐம்பது பேர் எல்லோருமே டப்னாவின் வெண்கல சிலையைச் சுற்றி மத்திய புற்தரையில் கூடியிருந்தனர். தன்னியல்பான, அன்பான வரவேற்பு கிடைத்த அந்தக் கணத்தில் கிற்றி பிற மென்றின் கவலைகள் பறந்துபோயின. கரேன் அவளருகே ஓடிவந்து கட்டியணைத்து விட்டு, முன்பனிக்கால ரோஜாக்களாலான மலர்ச்செண்டு ஒன்றைக் கையளித்தாள். தொடர்ந்து, அவளது எக்ஸோடஸ் பிள்ளைகள் சூழ்ந்து கொண்டு திக்குமுக்காடப் பண்ணிவிட்டனர். அவள் அரி விரைவாக வெளியேறிப் போவதைத் தோளுக்கு மேலால் பார்த்தபோது கண்டுகொண்டாள்.

வரவேற்பு நிகழ்ச்சி முடிவடைந்ததும், டொக்டர், லிப்பர் மானும், கரேனும், கிற்றியுடனிணைந்து, பணியாளர்களின் இரண்டு மூன்று அறைகளைக் கொண்ட குடியிருப்புக்கள் இருந்த மரங்களடர்ந்த சிறு வீதியொன்றினுள் சென்றனர். அந்த மண்வீதியின் மத்தியில் அமைந்திருந்த வெண்சாந்து வீட்டின் முன்னால் தரித்தனர். அந்த வீடு மலர்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. கரேன் ஓடிப்போய் கதவைத்திறந்து விட்டு விட்டு, கிற்றி மெது மெதுவே உள்ளே அடியெடுத்து வைத்தபோது மூச்சை இழுத்துப் பிடித்தபடி பார்த்துக்கொண்டிருந்தாள். வரவேற்பறையும், படுக்கையறையும் இணைந்திருந்த அறையானது எளிமையானதாகவும், ரசனையோடும் அமைக்கப்பட்டிருந்தது. கதவு, ஜன்னல் திரைகளும், இருக்கையாகவும், கட்டிலாகவும் பாவிக்கக்கூடிய கட்டிலையும் மூடியிருந்த துணிகள் தடிப்பான உயர்தர நெகேவ் (Negev) நெய்தலில் உருப்பெற்றவையாக இருந்ததோடு அறை முழுவதும் புத்தம் புதியதாகக் கொய்யப்

பட்ட மலர்களால் கிட்டத்தட்ட மூழ்கிப் போயிருந்தது. கடதாசியில் வெட்டியிருந்த ஒரு புற உருவத் தோற்ற (Cutout) எழுத்துத்தோரணம் ஒன்று ''ஷலோம் கிற்றி'' என்று ஒரு கரையிலிருந்து, மறுகரை வரை தொங்கியபடி வரவேற்றது. அது அவளுடைய எக்ஸோடஸ் பிள்ளைகளால் அமைக்கப்பட்டிருந்தது. கரேன் ஜன்னலுக்கு ஒடிச்சென்று, திரைகளை அகற்ற இரண்டாயிரம் அடி கீழே மனோகரமாகத் தோற்றமளித்த பள்ளத்தாக்குத் தெரிந்தது. இன்னொரு சிறிய அறையும், ஒரு வாசிக்கும் அறை, ஒரு சமையலறை, ஒரு குளியலறை, ஆகியவையும் இருந்தன. எல்லாமே அழகாக அமைக்கப்பட்டிருந்தன. கிற்றியின் முகத்தில் புன்னகை ஒன்று பிறந்து வந்தது.

''நீ திருமதி. பிறமென்ரை பிறகு சந்திக்கலாம். இப்போ போ போ..'' என்று கரேனை வெளியே அனுப்பிவிட்டார் லிப்பர்மான்.

''குட்டை கிற்றி.''

''குட்டை என் அன்பே.''

உங்களுக்கு இது பிடிததிருக்கிறதா? ''டாக்டர் லிப்பர்மான் கேட்டார்.

''இங்கு நான் மிக சௌகரியமாக இருப்பேன்..'

டாக்டர் லிப்பர் மான் இருக்கைக் கட்டிலின் ஓர் ஓரத்தில் அமர்ந்தபடி, ''நீ வருகிறாய் என்று எக்ஸோடஸ் பிள்ளைகள் கேள்விப்பட்ட உடன், இரவு பகல் பாராமல் வேலை செய்தார்கள். அவர்கள் இந்தக் கொட்டகைக்கு வர்ணம் பூசினார்கள். இந்தத் திரைகளைத் தயாரித்தார்கள். செடிகளைக் கொண்டு வந்தார்கள். கான் டப்னாவிலிருக்கும் எல்லாச் செடி கொடிகளும் உங்கள் முற்றத்திலும் இருக்கின்றன. அவர்கள் பெருத்த ஆரவாரமான ஆயத்தங்களைச் செய்தார்கள். அவர்கள் உன்னை மிகவும் நேசிக்கிறார்கள்.''

கிற்றி மிக உணர்ச்சி வசப்பட்டுப் போனாள். ''அவர்கள் ஏன் அப்படிச் செய்யவேண்டும் என எனக்குப் புரியவில்லை.''

''சிறு பிள்ளைகளுக்குத் தங்கள் நண்பர்கள் யார் என்பது குறித்து உள் ளுணர்வு நிறைய உண்டு. கான் டப்னாவை இப்போ சுற்றிப் பார்க்க விருப் பமா?''

''ஆம் இப்போதே பார்த்து விடுவோம்.''

கிற்றி. டாக்டர் லிப்பர்மானை விட ஒரு தலையளவு உயரமாக இருந்தாள். அவர்களிருவரும் மெதுவாக நடந்து நிர்வாகப்பிரிவு கட்டிடங்களை நோக்கி வந்தனர். அவர் மாறி மாறி கைகளைப் பின்னால் கட்டிக் கொள்வதும், தன் சுங்கானைப் பற்றவைக்க நெருப்புப் பெட்டியைத் தேடிப் பைகளைத் தட்டுவதுமாக வந்து கொண்டிருந்தார்.

''நான் ஜேர்மனியிலிருந்து 1933 -ல் வந்தேன். வெகுகாலத்துக்கு முன்னரே என்ன நிகழப்போகிறது என்று எனக்குத் தெரிந்திருந்தது. நாங்கள் வந்து சில நாட்களில் எனது மனைவி இறந்துவிட்டாள். 1940 வரை பல்கலைக்கழகத்தில் மானிடவியலை (Humanities) கற்பித்தேன். அப்போதுதான் ஹரியற் சோல்ஸ்மான் என்னை இங்குவந்து இளைஞர் அலியா கிராமத்தை இங்கு ஸ்தாபிக்க அழைத்தார். உண்மையில் இப்படி ஒன்றைச் செய்யவேண்டுமெனப் பல வருடங்களாகவே விருப்பம் கொண்டிருந்தேன். இந்த முழுச் சமவெளியும், பெருந்தன்மையுள்ள மனிதரான அபுயேஷுவின் காலம் சென்ற முக்தாரால் எங்களுக்கு வழங்கப்பட்டது. எங்களுடைய உறவுகள், எல்லா யூதருக்கும், அரபுக்களுக்கும் ஒரு முன்மாதிரியாக இருக்கக்கூடுமானால் .. உன்னிடம் நெருப்புப் பெட்டி இருக்கிறதா?''

''மன்னித்துக் கொள்ளுங்கள். நான் வைத்திருப்பதில்லை.''

''கவலைப்படாதே நான் அதிகம் புகைப்பிடிக்கிறேன்.''

அவர்கள் புற்றரையின் மையத்துக்கு வந்தனர். அங்கிருந்து பார்க்கும் போது ஹுலே பள்ளத்தாக்கு தரும் தோற்றம் சிறந்ததாக இருக்கும். எங்களுடைய வயல்கள் கீழே பள்ளத்தாக்கின் சமவெளிப்பகுதியில் இருக்கின்றன. அந்த நிலம் யாட் எல் மொசாவ்வால் எங்களுக்குத் தரப்பட்டது.

அவர்கள் சிலைக்கு முன்னால் நின்றனர். இதுதான் டப்னா. யாட் எல்லில் பிறந்த ஒரு பெண்ணான அவள் ஹகானாவுக்காக உயிர்துறந்தாள். அரி பென் கானானுடைய காதலி. அரி பென் கானானுடைய காதலி எங்கள் கிராமத்துக்கு அவள் நினைவாகத்தான் பெயரிடப்பட்டது.''

கிற்றியின் மனதில் ஒரு பொறி- ஆமாம் பொறாமைப் பொறிதட்டியது. டப்னாவின் உந்து சக்தி அவள் சிலையில் கூட பிரதிபலித்தது. நேற்றிரவு பென்கானான் இல்லத்துக்கு வந்திருந்த முரட்டுத்தோற்றம் கொண்ட கான் டப்னா பெண்களிலும், ஜோர்தானா பென் கானானிலும் தெரிந்த முரட்டுத்தனமான மண்வாசனை அவள் சிலையிலும் கிற்றிக்குத் காணக் கூடியதாயிருந்தது.

டாக்டர் லிப்பர்மான் இரு சகோதரர்களும் அங்கும் இங்கும் அனைத்தபடி ''எல்லாத் திசைகளிலும் சரித்திரத்தால் நாங்கள் சூழப்பட்டிருக்கிறோம். பள்ளத்தாக்குக்குக் குறுக்கே ஹெர்மன் மலையை காணலாம். அதன் அருகே புராதனமான டான் உண்டு. இப்படியே ஒரு மணித்தியாலம்வரை என்னால் சொல்லக்கூடும்... இங்கே கடந்தகாலம் நிறைந்திருக்கிறது.'' அந்தச் சிறிய கூன் விழுந்த மனிதன் தன் படைப்பை ஆசையுடன் திரும்பிப் பார்த்துவிட்டு, கிற்றியின் கையைப்பிடித்து வழிநடத்திச் சென்றார்.

யூதர்களாகிய நாங்கள் பலஸ்தினத்தில் முன்பு அறிமுகமில்லாத நாகரீகத்தை உருவாக்கியுள்ளோம். மற்ற ஒவ்வொரு உலக நாட்டினதும் நாகரீக

வளர்ச்சி அதன் நகரங்களிலிருந்து தான் வந்திருக்கிறது. இங்கு, அது எதிர் மாறாக நடக்கிறது. நிலத்தைச் சொந்தம் கொள்ள வேண்டும் என்ற தணியாத தாகம் எங்கள் மக்கள் மனதில் மிகஅதிகளவில் இருந்ததால் அந்த நிலம் இருக் மிடங்களில் இருந்தே எமது பாரம்பரியம் வந்து கொண்டிருக்கிறது. எமது இசை, எங்கள் கவிதைகள், எங்கள் கலைகள், எமது கல்விமான்கள், எமது போர்வீரர்கள், எல்லாருமே மொசாவ்விலும், கிபுட்சுகளிலுமிருந்து வந்தவர்கள் தான். இதோ இந்த குழந்தைகளுக்கான கொட்டகைளைப் பார்த்தீர்களா?''

''ஆமாம்''

''இந்தக் கொட்டகையின் ஜன்னல்கள் எல்லாமே, பள்ளத்தாக்கினை நோக்கிக் கொண்டிருப்பதை அவதானித்திருப்பீர்கள். இது அவர்கள் காலையில் கண்விழிக்கும் போது காணும் முதல் இடமாகவும், படுக்கப்போகும்போது, காணும் கடைசி இடமாகவும் நிலம் இருக்கவேண்டும் என்பதற்காக அப்படி அமைக்கப்பட்டிருக்கின்றது. இங்கு சொல்லிக் கொடுக்கப்படும் பாடங்களில் அரை வாசி விவசாயம் பற்றியவைதான். இந்தக் கிராமத்திலிருந்து வெளியேறிச் சென்ற குழுக்கள் நான்கு புதிய கிபுட்சுகளை தனியாகவோ, மற்றவர்களோடு சேர்ந்தோ நிறுவியிருக்கின்றனர். உணவில் தன்னிறைவு கண்டிருக்கிறோம். நாம் எமது பால்பண்னை, கோழிப்பண்ணை, கால்நடைகளை நாமே சொந்தமாக வைத் திருக்கிறோம். எங்களுக்குத் தேவையான துணிகளில் அதிகமானவற்றை நாங் களே நெய்து கொள்கிறோம். எங்களுக்குத் தேவையான தளபாடங்களை நாங் களே உருவாக்குவதோடு, எங்கள் பண்ணை இயந்திரங்களை எமது வேலைத்த தளங்களில் நாங்களே திருத்திக் கொள்கிறோம். இவையெல்லாம் இந்தப் பிள் ளைகளே செய்கின்றதோடு, நிர்வாகத்தையும் தாங்களே திறம்படச் செய்து வரு கின்றார்கள்.''

அந்தப் புல்தரையின் மறுஅந்தத்தை அவர்கள் சென்றடைந்தனர். நிர் வாகப் பிரிவுக் கட்டிடங்களுக்கு சிறிது முன்னதாக, இந்த அழகான புல்தரை ஒரு நீண்ட பாதுகாப்பு அகழியொன்றால் ஊடறுக்கப்பட்டிருந்தது. இந்த அகழி முழு இடத்தைச் சுற்றி வந்து சூழ்ந்து கொண்டிருந்தது. சுற்றிப் பார்த்த கிற் றியின் கண்களுக்கு மேலும் பல அகழிகளும், ஒரு பாதுகாப்பரணும் தென்பட்டன.

''இவை மிக விகாரமானவை, அத்தோடு போராளிகளைப் பூசிக்கும் தன்மையும் குழந்தைகளிடையே அதிகம். நாம் சுதந்திரத்தை வென்றெடுத்து, ஆயுதங்களை விட மனிதத்தன்மையான வேறு ஏதாவது அடிப்படையின் மேல் வாழத்தொடங்கும் வரை இந்த நிலை இருக்கும் என்று நான் நினைக்கிறேன்.''

அகழி அருகோடேயே நடந்து போனார்கள். அப்படிச் செல்லும்போது ஏதோ வழக்கமில்லாத நிகழ்வொன்று அவள் மனதைப் பாதித்தது. அகழி அமைப்பு சில மரங்களைச் சுற்றிக் கொண்டும் சென்றிருந்தது. ஒரிடத்தில் ஒரு மரத்தின் வேர்த்தொகுதிக்கு மிக அண்மையாக அகழி அகழப்பட்டிருந்தது. வேர்கள் வெளியே தெரிந்து கொண்டிருந்தன. மேல்படை மண்ணுக்குக் கீழே

கற்பார்கள் இருப்பது தெரிந்தது. கற்களுக்கிடையே சில அங்குலங்கள் மட்டும் அளவான சிறிய மண்படைகள் இருந்தன. அந்த மரத்தின் வளரும் முயற்சி இந்த நிலத்தின் தன்மையால் தடைப்பட்டிருந்தாலும் வேர்கள் விடாப்பிடியான ஒரு போராட்டத்தை நடத்திக்கொண்டிருந்தன. வேர்கள் கற்களைச் சுற்றிக் கொண்டும், கற்களுக்குக் கீழாலும் மேலாலும் சிறிய நரம்புபோன்ற வேர்களாகப் படர்ந்து உயிரூட்டக்கூடிய மண்படைகளை கற்பார்களுக்கிடையில் கண்டவிடத்து சிறிது பருமனாகவும் வளர்ந்திருந்தன.

''இந்த மரம் தன் இருப்பிற்காக எப்படிப் போராடுகிறதென்று பாருங்கள். எப்படித் தன் வேர்களைக் கற்களுக்கிடையில் கூட ஊன்ற வைப்பதைப் பாருங்கள்'' என்றாள் கிற்றி. டாக்டர் லிப்பர்மான் ஒரு நிமிடம் சிந்தனையோடு அதைப் பார்த்துக் கொண்டிருந்தார். பின்பு, சொன்னார், ''இந்த மரத்தின் கதைதான் பலஸ்தீனத்துக்குத் திரும்பி வந்த யூதர்களின் கதையும்'' என்றார்.

அரி அபுயேஷாவின் முக்தரான தாஹாவின் கூரை அமைந்த வரவேற்பறையில் நின்று கொண்டிருந்தான். அவனுடைய நீண்டகால நண்பனான இளம் அராபியன், அவன் நடை பயிலுவதைப் பார்த்தபடி, பெரிய பாத்திரமொன்றிலிருந்து பழத்துண்டு ஒன்றை எடுத்துக் கொறித்துக் கொண்டிருந்தான்.

''மகாநாடுகளில் நடந்து கொண்டிருக்கும், இரட்டை நாக்குப் பேச்சுக்கள் போதும். நாங்களிருவரும் நேர்மையாகவே உரையாடலாம் என்று நினைக்கிறேன்'' என்றான் அரி.

தாஹா பழத்தைச் சுண்டிவிட்டபடி, ''நான் உனக்கு எப்படிப் புரிய வைக்க? என்னில் அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன. நான் அவற்றை எதிர்த்துப் போராடினேன்.'' ''எதிர்த்துப் போராடினாயா? தாஹா நீ அரி பென் கானானுடன் பேசிக் கொண்டிருக்கிறாய்.''

''காலங்கள் மாறிக் கொண்டிருக்கின்றன.''

''ஒரு நிமிடம் பொறுத்துக் கொள். எங்களுடைய மக்கள் இரண்டு சகலரத் தொடர்களுக்கூடாக அமைதியாக ஒன்றாக வாழ்ந்திருக்கிறார்கள். நீ யாட் எல் பாடசாலைக்குச் சென்றாய். நீ என்னுடைய தகப்பனாரின் பாதுகாப்பில் என் வீட்டில் இருந்திருக்கிறாய்.''

''ஆமாம். உங்களுடைய கருணையால்தான் நான் உயிர்பிழைத்திருக்கிறேன். இப்போ அதேபோல் உங்கள் கருணையில் தங்கியிருக்கும்படி எங்கள் கிராமத்தையும் கேட்கிறாய். நீங்கள் ஆயுதங்களைச் சேர்க்கிறீர்கள். நாங்கள் ஆயுதங்கள் தரிக்க அனுமதிக்கப்படக்கூடாதா? அல்லது உங்களை ஆயுதந் தரித்த நிலையில் நாங்கள் நம்புவது போல் நீங்கள் எங்களை நம்பவில்லையா?''

''இதைக் கதைப்பது நீயல்ல''.

''நீயும் நானும் தேராகப் போராடும் காலத்தைக் காண நான் உயிரோடிருக்கக் கூடாது என்றுதான் நான் விரும்புகிறேன். ஆனால் சாத்வீகமாகச் செயல்படுவதென்பது எங்களெல்லோருக்குமே கடந்த கால சரித்திரமாகிவிட்டதல்லவா?''

அரி ஆத்திரத்தோடு சுழன்று திரும்பி, ''தாஹா உனக்குள் என்ன புகுந்துவிட்டது. சரி நீ விரும்பினால் திரும்பவும் இதைக் கேட்டுக்கொள். உன்னுடைய கிராமத்தின் கல்வீடுகள் எங்களால் வடிவமைத்துக் கட்டப்பட்டன. உன்னுடைய பிள்ளை எழுத வாசிக்க அறிந்திருப்பது எங்களால்தான் உங்களுக்குக் கழிவு நீர் வாய்க்கால்கள் கிடைத்தது எங்களால்தான். அத்தோடு உன் கிராமத்துக் குழந்தைகள் ஆறுவயதுக்கு முன்பே சாகாமல் பிழைப்பதும் எங்களால்தான். எப்படிச்சரியானமுறையில் விவசாயம் செய்வது என்றும், கௌரவமாக வாழ்வது எப்படி என்றும் நாங்கள்தான் சொல்லிக் கொடுத்தோம். உங்கள் ஆட்களால் ஆயிரம் வருடங்களில் கொடுக்காத பல விடயங்களை நாங்கள் அளித்திருக்கிறோம். உன்னுடைய தகப்பனார் இதை நன்றாக உணர்ந்திருந்ததால்தான் ஒரு அரபுக்காரனை வெறுப்பதற்கோ, சுரண்டுவதற்கோ, இன்னொரு அராபியனை விட ஆள் கிடைக்காது என்று பெருந்தன்மையோடு சொல்லியிருந்தார். உங்களுடைய நல்வாழ்வு யூதர்களோடு இணைந்ததுதான் என்று அவர் அறிந்திருந்ததும், அதைச் செயல்படுத்தும் ஆண்மையும் அவருக்கு இருந்ததுதான் அவர் மரணத்துக்குக் காலாயிற்று'' என்றான்.

தாஹா எழுந்தான். ''இன்றிரவே, அபுயேஷாவுக்கு மக்கபீஸ் வந்து எங்களைக் கொல்ல மாட்டார்கள் என்று உன்னால் உத்தரவாதம் தரமுடியுமா?''

''நிச்சயமாக என்னால் முடியாது. ஆனால், முப்தி என்ன நோக்கத்துக்காகச் செயல்படுகிறான் என்பதை நீ அறிந்திருப்பதுபோல், மக்கபீஸ்களின் நோக்கத்தையும் நீ அறிந்திருக்கிறாய்.''

''யாட் எல்லுக்கு எதிராக நான் கையை ஓங்கமாட்டேன். அந்த வாக்குறுதியை உனக்குத் தரமுடியும் அரி.''

அரி, தாஹா என்ன சொல்கிறான் என்பதை அறிந்துதான் சொல்கிறான் என்று தெரிந்து கொண்டே அங்கிருந்து சென்றான். ஆனால், தாஹா அவன் தந்தை கமலைப்போல் கொண்ட கொள்கையில் உறுதியாயிருக்கும் மனோபலம் அவனுக்கு இருக்கவில்லை. யாட்எல்லும், அபுயேஷாவும் ஒருவருக்கொருவர் சமாதானத்தை வாக்குப் பண்ணிக் கொண்டாலும், சமாதானமாக ஒன்றாக வாழ்ந்த அரபு, யூத கிராமங்களுக்கிடையே ஏற்பட்டு விட்ட பிரிவினை சூழ்நிலை இவர்களுக்கிடையேயும் ஏற்கனவே தோன்றத் தொடங்கிவிட்டது.

தாஹா, தன்னுடைய நண்பன்வீட்டை விட்டு வெளியேறி, சிற்றாறுக்கும் பள்ளிவாசலுக்கும் அருகேயிருந்த வீதியை நோக்கிச் செல்வதை அவதானித்துக் கொண்டிருந்தான். அரி போய் மறைந்த பிறகும், நீண்ட நேரத்துக்கு அசை

யாது அப்படியே நின்று கொண்டிருந்தான். ஒவ்வொரு நாளும் அவன் மேல் பிரயோகிக்கப்படும் அழுத்தங்களின் அளவு அதிகரித்துச் சென்றதோடு, அவன் சொந்தக் கிராமத்திலேயே அவனுக்கெதிரான கருத்துக்கள் தோன்றத் தொடங்கி விட்டன. அவனிடம் நீ ஒரு அரபு, நீ ஒரு முஸ்லீம். ஆகவே நீ சார்ந்திருக் கப்போகும் அணியைச் சீக்கிரமே தீர்மானித்துக் கொள் என நெருக்கினார்கள். அவன் எப்படி அரிக்கும், பராக் பென் கானானுக்கும் எதிராகத் திரும்புவான்? தன்னைச் சுற்றி எழும் குரல்களை எப்படி மௌனமாக்கலாம்?''

அவன் அரியின் சகோதரன் போன்றவன். அல்லது ஒருவேளை அப்படி யிருக்கலில்லையோ? வேதனையளிக்கும் கேள்வியாக இது இருந்தது. குழந்தைப் பராயத்திலிருந்தே, கிராமத்துக்குத் தலைமை தாங்கும் விதத்தில் அவனைத் தயார்படுத்தியிருந்தார். யூதர்கள் பெரிய நகரங்களையும் வீதிகளையும், பாட சாலைகளையும் நிர்மாணித்து நிலங்களை மீட்டெடுத்துள்ளதோடு தெளிவு பெற்றவர்களாயும் விளங்கியது அவனுக்குத் தெரிந்தேயிருந்தது. அவன் அவர் களுக்குச் சரிசமமானவன்தானா? அல்லது வேறு யாருடைய ஆதரவிலும், எறும்புத்துண்டுகளில் சீவித்தும், யூதர்களின் சாதனைகளின் நிழலில் குளிர் காய்ந்து கொண்டும் இருக்கும் தனது சொந்த நாட்டிலேயே இரண்டாந்தரப் பிரஜையாக்கப்பட்டு விட்டவனா?

யூதர்களால் அவன் நன்மையடைந்தது உண்மைதான். தங்கள் சொந்த அரபுக்களை விட யூதர்களால் தன் மக்களுக்குக் கூடிய நலன்கள் கிட்டுமென உணர்ந்த தன் தந்தையால், தன் மக்களும் நன்மையடைந்தது உண்மைதான். ஆயினும் இந்த நன்மையளிப்புகளில் அவன் பங்காளியா? தனது சமத்துவம் உண்மையானதுதானா? அல்லது சொல்லளவில் மட்டும்தானா? அவனை ஏற்றுக் கொள்வதற்குப் பதிலாக சகித்துக் கொள்கிறார்களா?

அரி பென் கானானின் அன்புக்குரிய சகோதரன் போன்றவனா அல்லது ஒரு ஏழை உறவினன் போன்றவனா? அவன் ஒவ்வொருநாளும் பலமுறை இந்தக் கேள்வியைத் தனக்குள்ளேயே கேட்டுக்கொண்டான். ஒவ்வொரு முறையும் பதில் முன்பைவிடத் திடமாக இருந்தது. பெயரளவில் தான் அவன் சகோதரன் என்பதே அது.

யூதர்கள் போதிக்கும் இந்தச் சமஉரிமை என்பது எதைக்குறிக்கிறது? ஒரு அராபியனாக இருந்துகொண்டு எப்போதாவது ஜோர்தானா பென் கானா னைக் காதலிக்கிறேன் என்று சொல்லிவிடமுடியுமா? நீண்டகாலம் வெளியே சொல்லாமலிருப்பதால் வரும் மன உளைச்சல் யாருக்குத் தெரியும்? அவர் களுடைய வீட்டில் வாழ்ந்தகாலத்திலிருந்து, அதாவது அவள் பதின்மூன்றே வயதுக் குழந்தையாக இருந்த காலத்திலிருந்து காதலித்து வருகின்றான்.

அவர்களுடைய சமஉரிமை எவ்வளவு தூரத்துக்குப் பொருந்தும். தாஹா வும், ஜோர்தானாவும் இணைவதை ஏற்றுக் கொள்வார்களா? ஜனநாயகம் பேசும் மொசாவ்கள் எல்லோரும் எமது திருமணச்சடங்குக்கு வருவார்களா?

ஜோர்தானாவிடம் அவன் போய் உன்னைக் காதலிக்கிறேன் என்று சொன்னால் என்ன செய்வாள்? நிச்சயமாகக் காறித்துப்புவாள்.

அவன் மனத்தில் ஒரு தாழ்வு மனப்பான்மை இருந்துகொண்டு, அவன் இதயத்தைச் சுக்கல் சுக்கலாக்கிக் கொண்டிருந்தது. நிலங்களை சொந்தமாக வைத்திருக்கும் ஒரு நிலச்சுவான்தருக்கும், அடிமைக் குடியானவனுக்கும் உள்ள வித்தியாசத்தைவிட குறைவானதாகவே இந்த இடைவெளி இருந்தும் கூட அப்படி நிகழ்ந்தது.

அரிக்கெதிராகத் தன் கையை உயர்த்த முடியாதது போலவே, ஜோர் தானாவைக் காதலிப்பதையும் சொல்லமுடியாது. அவன் தன்னுடைய நண்பர் களோடு போரிடமுடியாது. இருப்பது போலவே, தன்னைச்சுற்றி, அவனிடம் நீ ஒரு அராபியன், நீ யூதரின் எதிரி, சரியோ, பிழையோ அவர்களோடு போரிட்டாக வேண்டும் என்று குரலெழுப்பிக் கொண்டிருந்த சக்திகளையும் எதிர்க்க முடியாதவனானான்.

அத்தியாயம் நான்கு

அந்தச் சிறிய தோற்றம் கொண்ட கூன் முதுகுகொண்ட டாக்டர் ஏனெஸ்ற் லிப்பர்மான், மனித சமூகத்தில் தான் கொண்ட மட்டற்ற அன்பை, கான் டப்னா மூலம் ஒரு ஜீவனுள்ள பொருளாக மாற்றியிருந்தார். அங்கிருந்த சூழ்திலை, ஒரு முதுவேனிற் கால விடுமுறை முகாமிலிருப்பது போல் இயல்பாக இருந்தது. பிள்ளைகளுக்கு விரும்பிய இடத்துக்குப் போய்வரவும், சிந்தனை செய்வதற்கும் பூரண சுதந்திரம் அளிக்கப்பட்டிருந்தது. பாடசாலை வகுப்புகள் அதிகமாகத் திறந்த வெளியில் நடைபெறும். பிள்ளைகள் கட்டைக் கால்சட்டை அணிந்து புல்தரைகளில் படுத்தபடி பாடங்களைக் கேட்டார்கள். அவர்களின் கல்வி கூட இயற்கைக்கு நெருக்கமாக இருக்க வேண்டும் என்பதற்காக இப்படிச் செய்யப்பட்டது.

டாக்டர் லிப்பர்மானின் பிள்ளைகள், உலகின் நாற்றமெடுத்த அதல பாதாளங்களிலிருந்தும், யூத சேரிகளிலிருந்தும் சித்திரவதை தடுப்பு முகாம்களிலிருந்தும் வந்திருந்தார்கள். இருந்தும் கான் டப்னாவில் ஒருபோதும், ஒழுக்கக் குறைவான பாரதூரமான பிரச்சினை எதுவும் எழுந்ததேயில்லை. அமைச்சலின்மை என்பது இருக்கவே இல்லை. திருட்டு என்பதைக் கேள்விப்பட்டதே இல்லை. ஆண், பெண் பாலாரிடையே ஒழுங்கீனம் நிகழ்வது மிக அரிதாகவே இருந்து வந்தது. கான் டப்னா என்பது அவர்களின் வாழ்வாகவே பிள்ளைகளுக்கு இருந்தது. தங்கள் மேல் அன்பு செலுத்தப்படுவதற்குக் காட்டும் பிரதியுபகாரத்தைப் பிரதிபலிப்பது போல் அவர்கள் தங்களைத் தாங்களே பெருமையுடனும், கௌரவத்துடனும் நிர்வகித்து, கட்டுப்பாட்டுடன் நடந்து கொண்டார்கள்.

கான் டப்னாவில் கல்வியினதும், சிந்தனையினதும் வீச்சு மிகப் பரந்ததாயிருந்தது. இதில் பங்கெடுப்போர் 13—19 வயதுக்குட்பட்டோர் என்பதை விசுவசிப்பது மிகவும் கடினம். நூலகத்தில் புனித தோமஸ் அக்குவினாஸ் (St Thomas Aqu'nas -ஆன்மீகத்துறை வல்லுநர்) இந்நூல்களில் இருந்து பிராய்ட் (Freud) -மனோதத்துவத்துறை வல்லுநர்)டின் நூல்கள் வரை கொண்டிருந்தது. ஒரு புத்தகமும் தடை செய்யப்பட்டதாக இருக்கவில்லை. எந்த ஒரு விஷயமும் கற்கப்படுவதற்கு அதிக ஆழமானது என்று ஒதுக்கப்படவில்லை. பிள்ளைகள் தங்கள் வயதுக்கு மீறிய அரசியல் அறிவு முதிர்ச்சியைக் கொண்டிருந்தார்கள்.

ஊழியர்களும், ஆசிரியர்களும் முக்கியமாகப் பிள்ளைகளுள் ஊட்டிய கருத்துத்தான், அவர்களின் வாழ்வுக்கு ஒரு குறிக்கோள் இருக்கிறது என்பதாகும்.

கான் டப்னா ஒரு சர்வதேச ஆசிரியர் குழுவைக் கொண்டிருந்தது. ஈராவியரிலிருந்து, உழைத்து உரமேறிய கிபுட்சுகளின் மண்ணின் மைந்தர்களும் இருந்தார்கள். கிற்றி மட்டுமே, சாதுவாகவும், அதே நேரத்தில் ஒரே அமெரிக்கப் பிரஜையாகவும் இருந்தது முரண்படுவது போலிருந்தாலும் உண்மையான கூற்றாகவே (Paradox) இருந்தது நிரூபணமானது. அவளை அன்புடனும் நோக்கினார்கள், அதே நேரத்தில் சிறிது தூரத்தில் நின்றும் பழகினார்கள். எதிர்ப்பு மனப்பான்மையைப் பற்றிய அவளின் பயங்கள் எவ்வீத ஆதாரமும் அற்றவையாயின. அங்கு நிலவிய ஒருவகைப் புத்திஜீவித்தனம், கான் டப்னாவை, அனாதைகள் புகலிடம் என்பதை விட ஒரு பல்கலைக்கழகம் போலவே தோற்றமளிக்க வைத்தது. பிள்ளைகளின் நலனைப் பாதுகாப்பதை முக்கிய கடமையாகக் கொண்ட ஆசிரியர் குழாமினுள் கிற்றி அன்போடு வரவேற்கப்பட்டாள். ஊழியர்களின் பெரும்பான்மையாரோடு, நட்புப் பூண்டது மட்டுமல்லாமல், அவர்களுடன் கலந்துறவாடும்போது மிக இயல்பாக இருப்பதை உணர்ந்தாள். கிராமத்தின் யூகத் தன்மையால் ஏற்படக்கூடிய பிரச்சினைகள் அவள் எதிர்பார்த்ததை விடச் சிறிதாகவே இருந்தது. கான் டப்னாவில் அனுசரிக்கப்பட்டு வந்த யூடாயிசத்துவம், மதத்தை அடிப்படையாகக் கொண்டதாக இராமல், நேர்மை தேசியத்துவத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது. அங்கே சம்பிரதாய பூர்வமான மதக் கல்வியோ குறைந்தது ஒரு சின்னகோக்கோ இருக்கவில்லை.

பலஸ்தீனம் முழுவதும் வளர்ந்து வந்த வன்செயல்களுக்கு மத்தியிலும், கான் டப்னாவின் உள்ளே, பதற்றத்தையும் பயத்தையும் பரவிவிடாமல் பார்த்துக் கொண்டார்கள். இரத்தக்களரியின் யதார்த்தத் தன்மையிலிருந்து பாதுகாப்பாக இருப்பதற்கு அதன் தனிமைப்படுத்தப்பட்ட தன்மை உதவியது. இருப்பினும், அது அபாயத்தின் அறிகுறிகளிலிருந்து வெகுதூரம் விலகியிருக்கவில்லை. எல்லை அவர்களுக்கு உயரே இருந்தது. எஸ்தர் கோட்டை எப்போதும் அவர்கள் பார்வையிலிருந்தது. அகழிகள், காப்பரண்கள், ஆயுதங்கள், இராணுவப் பயிற்சியளித்தலும் எப்போதும் காணக்கூடியதாகவும் இருந்தன.

வைத்தியப் பிரிவின் கட்டிடம் நிர்வாகப் பிரிவுப் பகுதியில் புல்தரையின் மத்தியின் அருகில் இருந்தது. கட்டிடத்தில் ஒரு சிகிச்சை முறை கற்பிக்கும் நிலையமும் (Clinic) வசதிகள், உபகரணங்கள் நிறைந்த இருபது கட்டில் ஆஸ்பத்திரியும், ஒரு சத்திர சிகிச்சை அறையும் இருந்தன. கடமையிலிருந்த டாக்டரின் சேவையாட் எல் மொசாவோடு பகிரப்பட்டது. அவர் தினமும் வருகை தருவார். பல்வைத்தியர் ஒருவர் இருந்தார். கிற்றியின் கீழ் நான்கு பயிலுநர் தாதிகள் இருந்தனர். ஒரு முழுநேர மனோதத்துவ வைத்தியரும் இருந்தார்.

கிற்றி தனது பிரிவை ஒரு இயந்திரக்கெதியான திறமையோடு இயக்கியதோடு, முழு அமைப்பையும் மறுசீரமைத்தாள். நோயாளிகளை பார்வை இடுவதையும், சிகிச்சை அளிப்பதையும் ஒரு நிலமான திட்டத்துக்கமையச் செய்தாள். அவள் தனது பதவிக்கான மரியாதையை வற்புறுத்திப் பெற்றுக்கொண்டாள். இது கிராமத்தில் பரபரப்பான கதைகளை உருவாக்கிற்று. தனது உதவியாளர்

எளிடமிருந்து தொழில் சார் ரீதியாக எட்டிய தூரத்தில் இருந்து வந்ததோடு கிராமத்தின்மற்றைய பிரிவுகளைப்போல்ஒழுங்கற்ற நிர்வாகம் செய்ய மறுத்தான். மற்றைய சில ஆகிரியர்கள்நெருக்கமாக பழகுவதற்கு இடம் கொடுத்தது போல் கிற்றி கொடுக்கவில்லை.இவை எல்லாம் கான் டப்னா வாசிகளுக்குப் புதினமானதொன்றாகவே இருந்தது. கிராமத்தில் மிகத் திறமையாக இயங்கிய பகுதி, வைத்தியப் பிரிவு என்பதால் தயக்கத்துடனான ஒரு மதிப்பை அவள் பெற்று வந்தாள். சுதந்திரமாக இருக்க வேண்டும் என்ற அளவுக்கு மீறிய ஆவினால், கிற்றி பிறமென்றுக்குப் பழக்கப்பட்டுப் போய்விட்ட கட்டுப்பாடுகளைக் கடைப்பிடிப்பதில் யூதர்கள் அசட்டையாக இருந்தார்கள். ஆனால்அவள் தனது பிரிவை நடத்திய முறைக்காக அவள் வெறுக்கப்படவில்லை. கிற்றி தன் சிருடையைக் கழைந்துவிட்டால், அதிகமானோர் விரும்பி நாடும்,ஒரு நல்ல நண்பியாக அவள் கான் டப்னா மக்களுக்கு விளங்கினாள்.

தன்னுடைய பிரிவை நடத்திச் செல்வதில் அவள் எவ்வளவு கண்டிப்புக் காட்டினாளோ, அவ்வளவுக்கு எதிர்மாறான அன்பைத் தன் பிள்ளைகளுக்குக் காட்டினாள். எக்ஸோடஸின் ஐம்பது பிள்ளைகளும் தங்கள் பிரத்தியேகமாக அடையாளம் காணக்கூடிய பண்புகளைப் பேணி வந்ததோடு, கிற்றியும் அவர்களுள் ஒருத்தியாகத் தொடர்ந்தும், அடையாளம் காணப்பட்டு வந்தாள். ''எக்ஸோடஸ் அன்னை'' எனக் குறிப்பிட்டு வந்தனர் அவளை. எக்ஸோடஸ் பிள்ளைகளின் சிறிது அதிகமாக மனக்குழப்பத்துக்கு ஆளாகியிருந்த பிள்ளைகளின் பிரச்சினைகளில்அவள் நேராகக்கவனம்எடுத்தது இயற்கையான ஒரு நிகழ்வாகவே இருந்தது. மனோதத்துவ வைத்தியருடன், மனோதத்துவ சிகிச்சை நேரங்களில் உதவுவதற்கு தானாகவே முன்வந்தாள். இப்படியாக மனக்குழப்பத்துக்கு ஆளாகியிருந்தபிள்ளைகளோடு பழகும் போதுதான் கைக்கொள்ளும் கடுமையான முறைகளைக்கைவிட்டு தன்னால் எவ்வளவு அன்பையும் ஆதரவையும் கொடுக்க முடியுமோ,அவ்வளவையும் அவர்கள் மேல் அள்ளிச் சொரிந்தாள். கான்டப்னாவும் பலஸ்தீனமும் மனதின் ரணங்களை ஆற்றும் மகத்தான சக்திகளை கொண்டிருந்தாலும்,கடந்த காலத்தில் நடந்த பயங்கரங்கள் இன்னமும், பயங்கரக் கனவுகள், பாதுகாப்பில்லை என்ற உணர்வு, எதிர்ப்புணர்வு போன்றவற்றை விளைவித்துக்கொண்டிருந்ததால், அவர்களோடு பழகும்போது அவளுக்குமிதந்த பொறுமையும், கருணையும் வேண்டிஇருந்தது.

ஒரு வாரத்துக்கு ஒருமுறை காலை நேரங்களில் வைத்திய சேவையை அளிப்பதற்காக டாக்டருடன் அபுயேஷாவுக்குச் சென்று வருவாள். கட்டுமஸ்தான கான் டப்னாப் பிள்ளைகளோடு ஒப்பிடும்போது, அந்த அரபுப் பிள்ளைகள் எவ்வளவு பரிதாபகரமாகத் தோற்றமளித்தார்கள். இளைஞர் அலியா கிராமத்தில் நிலவிய மனோநிலைமையோடு ஒப்பிடும்போது, அவர்களின் வாழ்க்கை எவ்வளவு பொருளற்றதாக இருக்கிறது. அவர்களுடைய வாழக்கையில் மகிழ்ச்சியான சிரிப்புகள் இல்லை. பாடல்கள், விளையாட்டுகள் குறைந்தது குறிக்கோள் கூட இருக்கவில்லை. அது ஒரு நிலையாக நின்றுவிட்ட சீவியமாக இருந்தது. முடிவில்லாத பாலைவனத்தில், நிற்காமல் போய்க் கொண்டிருக்கும் வண்டித் தொடர் போல் இந்தப் புதிய தலைமுறையும் தோன்றியிருந்தது. கோழிகள்,

நாய்கள், கழுதைகளோடு மனிதரும் ஒன்றாகச் சீவித்த ஒற்றையறைக் குடில் களுக்குள் போகும் வேளைகளில் கிற்றிக்கு வயிற்றைப் பிரட்டும். எட்டு அல்லது பத்துப்பேர் ஒரே அறையைப் பயன்படுத்துவார்கள்.

ஆயினும் கிற்றியால் இந்த மக்களை வெறுக்க முடியவில்லை. அவர்களது தகுதிக்கு மிஞ்சி மனதுக்கு மகிழ்வூட்டுபவர்களாகவும், உபசரிப்பவர்களாகவும் இந்த மக்கள் இருந்தார்கள். அவர்களும் வாழ்க்கையின் நல்ல விஷயங்களை அனுபவிக்கத் துடித்தார்கள். மருத்துவம் செய்யச் செல்லும் நாட்களில் எப்போ தும் பிரசன்னாமாயிருக்கும் இளம் முக்தாரான தாஹாவோடு அவள் சிநேகிதம் கொண்டாள். பல சமயங்களில் கிராமத்தின் சுகாதார தேவைகளைத் தவிர்ந்த வேறு விடயங்களையும் தாஹா பேச முயற்சிப்பதையும் கிற்றியால் உணர முடிந் தது. அவனைக் குறித்து ஒரு பரபரப்பை அவளால் உணர முடிந்தது. ஆனால், தாஹா ஒரு அராபியனாக இருந்தான். அதனால் பெண்களோடு சில விஷயங் களைப் பொறுத்தவரை கலந்தாலோசிப்பது முடியாத காரியம். அதனால் தாஹாதான், தன் மனதில் அடிக்கடி எழும் பயங்களை அவளிடம் வெளிக் காட்டாமலே இருந்தான்.

நாட்கள் 1947-ன் முன் பனிக்காலத்தை நோக்கி நகர்ந்தன. கரேனும் கிற்றியும் பிரிக்க முடியாதளவு மிக நெருக்கமாகிப் போயிருந்தார்கள். ஒன்றுமே யில்லாதஇடங்களில்கூடமகிழ்ச்சியைத்தேடிஅனுபவித்தஇந்தஇளம்பெண்காண்டீ ன்னாவில் முழுதாக மலர்ந்து மணம் வீசினாள். மிக விரைவிலேயே காண்டீன்னாவில் பலரும் விரும்பும் ஒரு பிள்ளையாக மாறியிருந்தாள். பருவமுதிர்ச்சிக் காலங் களின் ஆரம்பக் கட்டங்களில் சிக்கலான கட்டங்களில் கிற்றியின் வழிகாட்டலில் நிறையத் தங்கியிருந்தாள். காண்டீன்னாவில் செலவிடப்படும் ஒவ்வொரு நாளும் கரேனை அமெரிக்காவின் கவர்ச்சியிலிருந்து விலக்கி விலக்கிக் கொண்டு செல்லும் என்பதைக் கிற்றி உணர்ந்தேயிருந்தாள். கரேனுடைய தந்தையைத் தேடிக் கண்டு பிடிக்கும் முயற்சி தொடர்ந்துகொண்டிருந்த அதே வேளையில், அமெரிக் காவைப் பற்றிய ஆர்வத்தையும் மடியவிடாமல் கிற்றி பாதுகாத்து வந்தாள்.

டொவ் லன்டவ் ஒரு பிரச்சினையாக இருந்தான். பல சமயங்களில் கரே னுக்கும் அப் பையனுக்கும் இடையே தடை போடலாம் என்றுகூட விரும்பினாள். ஏனெனில், அவர்கள் உறவுஆழமாக்வேர்விடஆரம்பித்திருந்தது. தான்தலையிடுவது அவர்களை இன்னும் நெருக்கமாக்கிவிடும் சாத்தியக் கூறுகள் இருந்ததால், அம் முயற்சியில் இருந்து விலகியே இருந்தாள். அந்தப் டையனுக்காகக் கரேன் காட்டிய அர்ப்பணிப்புகிற்றியைக்குழப்பமடையச்செய்தது. ஏனெனில் டொவ் அவள்செலுத் தியஅன்புக்குப் பிரதியுபகாரமாக எதையுமே அவளுக்குக்கொடுக்கவில்லை. அவன் தன்னுள்ளேயே ஆழ்ந்துபோய் ஒடுசிடுப்பானவனாய் இருந்தான். இப்போ சிறிது அதிகமாக உரையாடினாலும், முறைப்படி பார்த்தால் இப்பவும் கரேனால் மட்டும் தான் அவனோடு தொடர்பு கொள்ளக் கூடியதாக இருந்தது.

கல்வி கற்பது அவனுக்கு ஒரு வெறியாயிற்று. அவன் மிகக்குறைவாகவே கல்வி கற்றிருந்ததால், இப்போ தான் இழந்து போய்விட்டவைகளை ஈடுசெய்யும்

முயற்சியில் மிக ஆர்வமாக ஈடுபட்டான். அவன் சுட்னாவின் இராணுவப் பயிற்சியிலும், விவசாய வேலைகளிலும் இருந்து விதி விலக்களிக்கப்பட்டிருந்தான். தன்னால், முடிந்தளவு விடயங்களை தனக்குள் புகுத்திக் கொண்டான். இரவு பகல் பாராமல், வாசிப்பிலும் கல்வி கற்பதிலும் ஈடுபட்டான். அவனுக்கு இயற்கையாகவே கிடைத்திருந்த கொடையான, வரையும் ஆற்றலில், தன் கவனத்தைத் திருப்பி அதன் உதவியோடு, உடல்கூறு இயல் (Anatomy), வரைதல், கட்டிட நிர்மாணக்கலை, வரைபடங்களை ஆக்குதல் (Blue-printing-கட்டிட இயந்திரப் பகுதிகளை நீல நிற,மை கொண்டு பிரதிபண்ணும் ஒரு முறை-போன்றவற்றில் ஈடுபட்டான். எப்போதாவது ஒருமுறை அவன் மன உளைச் சலை வெளிவிட்டு, மனநிலையை அமைதியாக்கும் வடிகாலான சித்திரங்களை வரைவான். அவனது படைப்புத் திறனையும், அவனது உள்ளார்ந்த சக்தியையும் படம் பிடித்துக் காட்டும் முறையில் அந்த சித்திரங்களில் வெளிப்படும் கருத்துக்கள் அமைந்திருக்கும். சில வேளைகளில் தன்னைச்சுற்றித் தானே எழுப்பியிருக்கும் கட்டை உடைத்துக்கொண்டு வெளிவந்து, கான் டப்னாவின் மக்களோடு கலந்துவிடும் அளவிற்கு சிறிது முன்வந்தாலும், உடனேயே பின்வாங்கி தன் கூட்டுக்குள்ளே திரும்பவும் சென்றுவிடுவான். அவன் தன்னந்தனியே சீவித்து வந்ததோடு, ஒருவித கூட்டு முயற்சிகளிலும் ஈடுபடாமல் இருந்ததோடு,வகுப்பு களுக்கு வெளியே கரேனை மட்டும் சந்தித்து வந்தான்.

கிற்றி அவனது பிரச்சினையைப் பற்றி டாக்டர் லிப்பர்மானிடம் கலந் துரையாடினாள். அவர் டொவ்வைப் போல் பல இளைஞர்களையும், யுவதி களையும், கண்டிருந்தார். டொவ், ஏராளமான திறமைகளை வெளிக்காட்டிக் கொண்டிருக்கும் ஒரு எச்சரிக்கையான புத்திசாலி இளைஞன் என்ற மட்டிலேயே டாக்டர் லிப்பர்மானின் கணிப்பு இருந்தது. அவனில் காட்டப்படும் எவ்வித அனுதாபமும். எதிர்மறை விளைவுகளையே கொடுக்கும் என்று அவர் கருதினார். அந்தப் பையன் தீங்கிழைப்பவனாக இல்லாமலும், இருப்பதைவிட மோசமாகப் போய்விடாத பட்சத்திலும் அவனை அவன்பாட்டில் விட்டுவிட வேண்டும் என்று கருதினார்.

வாரங்கள் செல்ல கிற்றி,அரி தன்னோடு தொடர்பு கொள்ளாததினாலும், வந்து காணாததினாலும் ஏமாற்றமடைந்தாள். டப்னாவின் சிலையும், கீழே இருந்த யாட் எல் மொசாவ்வும் அவளுக்கு அவனை ஞாபகப்படுத்திக் கொண் டிருந்தன. எப்போதாவது, யாட் எல் மொசாவ்வைத் தாண்டிச் செல்ல நேரும் போது சாரா பென் காணானைச் சென்று சந்தித்து வந்தாள். இரு பெண்களும் மிகுந்த நட்புக் கொண்டனர். ஜோர்தானா இதை அறிந்து கொண்டாலும், கிற்றியின் மட்டில் தனக்குள்ள வெறுப்பை மறைக்க முயற்சி எடுக்கவில்லை. கிற்றியோடு கதைக்க நேரும் சந்தர்ப்பங்களில், அந்த இளம் சிவந்த கூந்தல் பெண் அவளை மூர்க்கத்தனமாக நடத்தினாள்.

ஒருநாள் மாலை, அவள் தனது அறைக்குள் வந்ததோடு ஜோர்தானா அவளது விருந்துக்கு அணியும் ஆடையொன்றை முன்னால் பிடித்து அழகு பார்த்த படி கண்ணாடி முன்னால் நின்றுகொண்டிருந்தாள். கிற்றி திடீரென வந்தது அவளை எவ்விதத்திலும், பாதிக்கவில்லை. ''இப்படியான பொருட்களை விரும்

பினால், இது அழகாகத்தான் இருக்கும்'' சொல்லிக்கொண்டே திரும்பவும் அந்த ஆடையை அலுமாரிக்குள் மாட்டினாள்.

கிற்றி அடுப்புக்கு அருகில் நடந்து சென்று தேநீர் தயாரிக்க சிறிது தண்ணீரை வைத்தாள். ''இந்த வருகையின் மூலம், எனக்கு அளிக்கப்படும் இந்த கௌரவத்துக்குக் காரணம் என்ன?'' ஜோர்தானா கிற்றியின் கொட்டகை வீட்டைத் தொடர்ந்து பார்வையிட்டபடி, பெண்மைக்கேயுரிய நளினத்தோடு அவள் செய்திருந்த அலங்காரங்களையும் ரசித்துக் கொண்டாள்.

''எயின் ஓர் கிபுட்சில் சில பால்மாக் துருப்பினர் பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர்.''

''நான் அதைப்பற்றி ஏதோ கேள்விப்பட்டேன்'' கிற்றி சொன்னாள்.

''எங்களுக்குப் பயிற்சியாளர்கள் பற்றாக்குறையாக இருக்கிறது. எல்லாவற்றிலும் எங்களுக்குப் பற்றாக்குறைதானே. நீங்கள் வாரம் ஒருமுறை வந்து எங்களுக்கு, முதலுதவியிலும், கள சுகாதாரத்திலும் பயிற்சி அளிக்கமுடியுமா? என்று கேட்டுக் கொள்ளச் சொல்லியிருக்கிறார்கள்.

கிற்றி, ஜன்னல் திரைகளை விலக்கிவிட்டு, காலணிகளைக் கழற்றிவிட்டு' கட்டிலில் அமர்ந்து கொண்டு, ''நான் என்னைத் துருப்புகளுடன் தொடர்பு ஏற்படுத்தக் கூடிய எதையும் செய்ய விரும்பவில்லை.''

''ஏன் அப்படி?'' ஜோர்தானா வலியுறுத்திக் கேட்டாள்.

''இதைவிட கௌரவமாக உன் கோரிக்கையை மறுக்க வழியில்லை. பால்மாக்கும் இதை ஏன் என்று புரிந்து கொண்டால், நான் மகிழ்ச்சியடைவேன்.''?

''புரிந்து கொள்ள என்ன இருக்கிறது.''

''என்னுடைய சொந்த உணர்வுகள்' நான் எதிலும் ஈடுபடுவதை விரும்பவில்லை.

ஜோர்தானா வெறுப்போடு சிரித்தாள். ''நான் எயில் ஓரில் உன்னோடு பேசுவது நேரத்தைப் பாழடிப்பதாகும் என்று சொல்லியிருந்தேன்'' எனறாள்.

''என் உணர்வுகளை மதிப்பது உனக்கு முடியாத காரியமல்லவா?''

''திருமதி. பிறமென்ற், உலகில் எந்த இடத்திலும் வேலை செய்து கொண்டும் ஒரு ஆள் நடுநிலைமை வகிக்கலாம் பிரச்சினைகளில் இருந்து விலகியிருக்க விரும்பும் நீ புதுமையான இடத்துக்கு வந்திருக்கிறாய்?'' உண்மையில் இங்கு நீ ஏன் வந்திருக்கிறாய்?

''கிற்றி பாய்ந்தெழுந்து, அது உனக்குத் தேவையில்லாத விஷயம்.'' வெடித்தாள் கிற்றி.

கேத்தல் ஒசையிடவும் அடுப்பை அணைத்துவிட்டாள்.

''நீ ஏன் இங்கு வந்திருக்கிறாய் என்று எனக்குத் தெரியும் உனக்கு அரி வேண்டும்.''

''நீ ஒரு திருத்த முடியாத பெண் அல்லவா. தாங்கக்கூடிய அளவு உன் அட்டகாசத்தை நான் தாங்கிவிட்டேன்.''

ஜோர்தானா இதனால் பாதிப்படைந்ததாகத் தெரியவில்லை. மாறாக, ''நீ அவனைப் பார்க்கும் பார்வைகளை நான் கண்டிருக்கிறேன்'' என்றாள்

''அரியை தான் விரும்பியிருந்தால் அதிலிருந்து என்னைத் தடுக்கக்கூடிய கடைசிப் பொருளாகத் தான் நீ இருந்திருப்பாய்.''

''அவன் தேவையில்லை என்று உனக்கு நீயே சொல்லிக்கொள். அதை எனக்குச் சொல்லாதே. நீ அரிக்கேற்ற பெண் அல்ல. நீ எங்களைப்பற்றி எதுவித கவலையும் படத்தேவையில்லை.''

கிற்றி திரும்பி நின்று ஒரு சிகரட்டைப் பற்ற வைத்துக்கொண்டாள். பின்பக்கமாக நெருங்கி வந்த ஜோர்தானா, டப்னாதான் அரிக்குப் பொருத்தமானவள். அவள் அவனைப் புரிந்து கொண்டிருந்தாள். எந்த அமெரிக்கப் பெண்ணாலும் அது முடியாது.'' என்றாள்.

சிற்றி சுழன்று திரும்பினாள். ''நான் கட்டைக் கால்சட்டைகளைஅணிந்து அங்குமிங்கும் ஓடாமலிருப்பதாலோ, அல்லது மலைகளில் ஏறியிறங்காததாலோ சிறுபீரங்கிகளை சுடாமலிருப்பதாலோ, உன்னை விடப் பெண்மையில் ஒரு அவுன்ஸ் அளவுதானும் குறைந்து போய்விடவில்லை. உன்னை விட அல்லது அந்த மதிப்பு வாய்ந்த நிலையை விடவும்தான். உனக்கு என்ன பிரச்சினை என்று எனக்குத் தெரியும். எனக்கு நீ பயப்படுகிறாய்.''

''இது நல்ல பகிடிதான்.''

''ஒரு பெண் எப்படியிருக்கவேண்டும் என்று எனக்கு சொல்லவராதே. உனக்குத் தெரியாது. ஏனெனில் நீ ஒரு பெண்ணேயல்ல. நீ டார்சானுக்குத் தான் சரியான சோடி. நீ ஒரு காட்டில் இருப்பதைப் போல் நடந்து கொள்கிறாய். ஒரு சீப்பும், பிரஸ்சும், உன்னில் இருக்கும் பிழையை ஆரம்பத்துக்குத் திருத்தப் போதும். ''கிற்றி சொல்லிவிட்டு, ஜோர்தானாவைக் கடந்து சென்று தன் துணிமணிகள் இருக்கும் அலுமாரியை அகலத் திறந்து விட்டாள். நன்றாகப் பார்த்துக் கொள். இதுதான் பெண்கள் அணிவது'' என்றாள்.

கோபத்தினால் கண்ணீர் ஜோர்தானாவின் கன்களில் நிரம்பியது. அடுத்த தடவை நீ என்னைச் சந்திக்க விரும்பினால் எனது காரியாலயத்

துக்கு வா. எனது பிரத்தியேக நேரங்களை குழப்புவதை நான் விரும்பவில்லை. என்றாள் இறுக்கமாக. ஜோர்தானா கொட்டகையை அதிரவைக்கும் விதத்தில் கதவை அறைந்து சாத்திக் கொண்டே வெளியேறினாள்.

கரேன் இரவுணவுக்குப் பின்பாக நோயாளர்களைப் பார்வையிட்ட பின் உள்ளே வந்து ஒரு இருக்கையில் சரிந்து அமர்ந்து கொண்டாள்.

''ஏய் இன்று எப்படிப் போயிற்று?'' கிற்றி கேட்டாள். கரேன் கற்பனையான பசுவின் இருமுலைகளைப் பிடித்துப் பால்கறக்கும் பாவனையில் கைகளை அசைத்தாள்.

''பலவீனமான கைகள். எனக்குச் சரியாகப் பால் கறக்கத் தெரியவில்லை. இளவயதுக்குரிய துக்கத்துடன் முணுமுணுத்தாள். ''கிற்றி என் மனது உடைந்து போய்விட்டது. நான் உங்களோடு . கட்டாயம் ..கட்டாயம் கதைக்க வேண்டும்.''

''சொல்லு''

''இப்போ இல்லை. இப்போ கட்னா கூட்டம் ஒன்று இருக்கிறது. நாங்கள் புதிய ஹங்கேரிய றைபிள்களைத் துப்பரவு செய்து கொண்டிருக்கிறோம். சே. எப்படிப்பட்ட நிலையில் அவை இருந்தன? ''என்றான்.

''ஹங்கேரிய றைபிள்கள் சிறிது காத்துக் கொண்டிருக்கலாம். உன்னைத் தொந்தரவு செய்யும் பிரச்சினை என்ன?''

''என்னுடைய அறைத்தோழியான ஜோனாதான். இவ்வளவு நெருக்கமான நண்பிகளாக மாறிக்கொண்டிருக்கும் சமயத்தில், அடுத்த வாரத்திலிருந்து பால்மாக்கில் சேரப்போகிறேன், ''என்கிறாள்.

''கிற்றியின் மனத்தில் திகைப்பூட்டும் அச்சம் ஒன்று ஊடுருவியது. கரேனும் இதேபோல் வந்து சொல்வதற்கு இன்னும் எவ்வளவு காலம் செல்லும்? கிற்றி தன்முன்னால் இருந்த ஆவணங்களை. ஒரு பக்கமாகத்தள்ளி வைத்தாள் ''கரேன் உனக்குத் தெரியும்தானே. இங்கு நல்ல மருத்துவ தாதிகளுக்கும், வைத்திய உதவியாளர்களுக்கும் பற்றாக்குறை இருக்கிறது... பால்மாக் ..குடிமேற்றங்கள் இரண்டையும்தான் சொல்கிறேன். உனக்கு இடம்பெயர்ந்தவர்கள் முகாங்களில் சிறுவர்களோடு வேலை செய்த அனுபவம் நிறைய இருக்கிறது. நானும் இங்கே மனக்குழப்பமடைந்த ஒரு தொகைச் சிறுவர்களைப் பார்மெடுத்திருக்கிறேன். நான் உன்னை இங்கு வந்து என்னோடு வேலை செய்யவும், உன்னை என் உதவியாளர்கப் பயிற்றவும் அனுமதிக்கும்படி டாக்டர் லிப்பார்மானைக் கேட்டால் எப்படியிருக்கும்?.''

''நல்லதுதான் ''சொல்லிவிட்டு மலர்ந்து சிரித்தாள் கரேன்.

''நல்லது. நீ பாடசலை நேரம், முடிந்ததும், வயல்வேலைகளை விட்டு விட்டு எனது காரியாலயத்தில் வந்து வேலை செய்யும் வகையில் விஷயங்களை ஒழுங்குபண்ணுகிறேன்.''

''என்ன சொல்வதென்றே எனக்குத் தெரியவில்லை. மற்றவர்களைப் பொறுத்தவரை இது நியாயமாக இருக்குமா என்று சிந்திக்கிறேன் என்றாள் மெதுவாக.

''நாங்கள் அமெரிக்காவில் சொல்வது போல், அவர்கள் ஒரு விவசாயியை இழந்து போகமாட்டார்கள். ஒரு மருத்துவ தாதியைப் பெற்றுக் கொள்வார்கள்.''

''கிற்றி எனக்கு ஒரு உண்மையை வெளியே சொல்லவேண்டும். இளைஞர் அலியாவுக்கோ, சியோன் குடியமர்த்தல் கழகத்துக்கோ, மத்திய கிபுட்ஸ் இயக்கத்துக்குக்கோ இதைச்சொல்ல வேண்டாம். கான் டப்னாவின் மோசமான விவசாயி நான்தான். எனக்கோ தாதியாக வரத்தான் ஆசையாக இருக்கிறது.

கிற்றி எழுந்து கரேனின் அருகில் வந்து அவள் தோள்களை அணைத்துக் கொண்டாள். ஜோனா இப்போ போய்விட்டதால் நீ எனது இடத்துக்கு வந்து என்னோடு இருக்கலாம் தானே?''

கரேனின் முகத்தில் அந்தக் கணத்தில் தோன்றிய மகிழ்ச்சி, கிற்றி தேடிய பதிலை அவளுக்குக் கொடுத்து விட்டது.

கரேனுக்கு நல்ல சேதியைச் சொல்ல கிற்றி, டாக்டர் லிப்பர்மானின் கொட்டகை வீட்டை விட்டு சிக்கிரமாகவே புறப்பட்டுச் சென்றாள். அன்பைப் பகிர்வது தான் தங்கள் கடமையேயொழிய, சட்டங்களை அமுல்படுத்துவதல்ல என்றும், ஒரு விவசாயி குறைந்து ஒரு தாதி அதிகரிப்பதால் இயக்கத்துக்குப் பெரிதாக ஒரு கேடும் வரப்போவதில்லை என்றும் நிடப்படுத்திக் கொண்டார் டாக்டர் லிப்பர்மான்.

கிற்றி, கரேனிடம் போய்விட்டுத் திரும்பி வரும்போது, மையப் புல்வெளியின் குறுக்காக டப்னாவில் சிலையடியில் வந்து நின்றாள். இன்று இரவு டப்னாவைப் பாதிப்புக்குள்ளாகிவிட்டதாக அவள் உணர்ந்தாள். அவள் இன்று ஒரு வெற்றியையடைந்து இருக்கிறாள்.

அவள் அருகாமையிலேயே கரேன் இருந்துவிட்டால், அவளை ஆக்ரோஷமான, தாக்கும் மனப்பான்மையுள்ள மண்ணின் புதல்வியாவதிலிருந்து தடுத்து விடலாம். ஒரு குறிக்கோளோடு வாழ்வது நல்லது தான் என்று கிற்றி அறிந்தேயிருந்தாள். அளவுக்கதிகமான குறிக்கோள்கள் பெண்மையின் நளினங்களை அழித்துவிடும். ஜோர்டானாவின் பலவீனமான பகுதியில் தான் தங்கிவிட்டதை அவள் அறிந்தேயிருந்தாள், கேள்வியெதுவும் கேளாமல், தன்னுடைய சொந்த மகிழ்ச்சி, தொழில், பெண்மையியல்பு ஆகியவற்றைத் தியாகம் செய்து தனக்

களிக்கப்பட்ட கடமையை நிறைவேற்ற, பிறந்ததிலிருந்து ஜோர்தானா பழக்கப் பட்டிருந்தாள். அமெரிக்காவிலிருந்தும் ஐரோப்பாவிலிருந்தும் வரும் நாகரிக முதிர்ச்சி அடைந்த எழிலான பெண்களுடன் போட்டி போடுவது எப்படியென்று அறியாதவளாயிருந்தாள். கிற்றியைப் போல் இருக்க விரும்புவதாலேயே அவளை அதிகமாக ஜோர்தானா வெறுப்பதைக் கிற்றி புரிந்து கொண்டேயிருந்தாள்.

''கிற்றி'' இருளிலிருந்து யாரோ கூப்பிட்டார்கள்.

''யாரது?''

''நான் உன்னைத் திடுக்கிட வைக்கவில்லை என்று நினைக்கிறேன். அது சரிதான். அவன் அருகில் நெருங்க நெருங்க இப்போதெல்லாம் வழக்கமாகிப் போய்விட்ட என்ன செய்வதென்றே தெரியாத பரிதவிப்பு மேலோங்குவதை உணர்ந்தான்.

''உன்னை இங்கு வந்து பார்க்க முடியவில்லை. மன்னித்துக்கொள் ஜோர்தானா எனது செய்தியைச் சொன்னாளா?''

''ஜோர்தானாவா – ஆமாம்'' கிற்றி பொய் சொன்னாள்.

''எப்படிப் போகிறது வாழ்க்கை?''

''மிக நன்றாகப் போகிறது.''

''நான் வந்தது, நாளை உன்னால் ஒரு நாள்விடுமுறை எடுக்க முடியுமா என்று கேட்கத்தான். நாளை பால்மாக் குழுவொன்று தபோர் மலையில் ஏறப் போகிறது, இது ஒரு தவறவிடக்கூடாத அருமையானசந்தர்ப்பம். நீ என்னோடு வருகிறாயா?''

''நான் வருகிறேன்''.

அத்தியாயம் ஐந்து

விடிந்து சிறிது நேரத்தின் பின், கிற்றியும் அரியும் தபோர் மலை அடிவாரத்திலிருந்த, ஒக்கின் வீடு என்று பொருள்படும் பெத் அலோனி என்ற கிபுட்சுக்கு வந்து சேர்ந்தார்கள். இந்த கிபுட்சில் தான் போர்க்காலத்தில் பால்மாக் உருவாகியது. அரியும் இங்குதான் தன் துருப்புகளுக்குப் பயிற்சியளித்தான்.

தபோர் மலை ஒரு இரண்டும் கெட்டான் இடமாகும். மலை என்று சொல்லும் அளவுக்குப் பெரியதுமல்ல, குன்று என்று சொல்லுமளவிற்குச் சிறியதும் அல்ல. தட்டையான பூமியொன்றின் நடுவிலே கட்டை விரல் ஒன்று திடீரெனப் பூமிக்குள்ளால் எழுந்து நிற்பது போல் அமைந்திருந்தது.

காலையுணவின் பின், அரி, உணவுவகைகள், தண்ணீர்போத்தல், போர் வைகள் கொண்ட பொதிகள் இரண்டை ஆயத்தம் செய்து கொண்டதோடு ஆயுதச்சாலையிலிருந்து ஒரு ஸ்ரென் துப்பாக்கியையும் பெற்றுக் கொண்டான். குளிர்மையாயிருக்கும் காலை வேளையிலேயே, மற்றக் குழுவினருக்கு முன்னதாக மலையிலேறத் திட்டமிட்டிருந்தான். உற்சாக மூட்டும், அருமையான கால நிலை. கிற்றியும் அரிய செயலொன்றைச் செய்யப் போவதினால் கிளர்ச்சியுற்றிருந்தாள். அவர்கள் தபோரியா என்ற மலை அடிவாரத்தின் எதிர்க்கரையிலிருந்த அரபுக் கிராமத்தை தாண்டி, ஒரு ஒடுங்கிய மண்பாதையூடாக மேலே ஏறத் தொடங்கினார்கள். சிறிது நேரத்திலேயே பல கிலோ மீற்றர் தொலைவில் இருந்த குன்றுகளிலிருந்த நசரேத்தை அவர்களால் காண முடிந்தது. காலநிலை குளிர்மையாகவும், அவர்கள் விரைவாக முன்னேறிச் சென்றாலும் முதன் முதலில் தான் கண்டது ஒரு பிழையான கருத்தைத் தரும் காட்சியென்று தெரிந்து கொண்டாள்: தபோர் மலை இரண்டாயிரம் அடிக்கு மேல் உயரமாக நின்று கொண்டிருந்தது. அதனால் தங்கள் முயற்சி முழுநாளும் இடம் பெறப்போகிறது என்று புரிந்து கொண்டாள். தங்களுக்கும், கிராமத்துக்கும் இடைவெளியை அதிகரிக்க அதிகரிக்க தபோரியா சிறிதாகவும், விந்தையானதாகவும் தோன்றத் தொடங்கியது.

அரி திடீரென நின்று, சிறிது எச்சரிக்கையடைந்தான்.

''என்ன அது?''

''ஆடுகள்..... உன்னால் அவற்றின் மணத்தை உணர முடிகிறதா?''

கிற்றி முகர்ந்து பார்த்துவிட்டு, ''இல்லை, எனக்கு எதுவும் மணக்க வில்லை.''

அரியுடைய கண்கள் குறுகிப் போயின. எதிரே தெரிந்த பாதையைக் கூர்மை யாகப் பார்த்தான். அது மலையைச் சுற்றிக் கொண்டே பார்வைக்கு மறைந்து போகும் அமைப்பில் இருந்ததோடு, பார்வைக்குப் புலப்படாத பக்கத்தில் ஒரு மெல்லிய சரிவையும் கொண்டிருந்தது.

அநேகமாக அரபு நாடோடிகளாக இருக்கலாம். இவர்கள் வந்திருப்பதாகக் கிபுட்சில் அறிக்கைகள் வந்திருந்தன. இவர்கள் நேற்றுத்தான் வந்திருக்க வேண் டும். வா, பார்ப்போம்.''

வளைவால் திரும்பியதும், மலைச்சரிவில் பத்துப்பன்னிரெண்டு மயிர்களோ டிருந்த ஆட்டுத் தோல் கூடாரங்களையும், அவற்றைச் சுற்றி மேய்ந்து கொண்டி ருந்த கருமை நிற ஆட்டு மந்தையையும் கண்டார்கள். நைபிள் தரித்திருந்த இரண்டு நாடோடிகள் இவர்களை நோக்கி வந்தார்கள். அரி அவர்களோடு அரபு மொழியில் உரையாடினான். பின் அவர்களைத் தொடர்ந்து அங்கிருந்தவற்றில் பெரிதான கூடாரத்துக்குச் சென்றான். அநேகமாக இது அந்த நாடோடிக் கூட்டத்தில் ஷேக்குடைய - தலைவனுடைய - கூடாரமாக இருக்க வேண்டும். கிற்றி சுழவரப் பார்வையிட்டாள். அவர்கள், மனிதத்துவத்தின் கடைசி நிலை யில் இருப்பவர்கள் போல் தோற்றியது. பெண்கள் நீண்ட கரும் அங்கிகளினுள் புதைந்திருந்தார்கள், அழுக்கும் படைபடையாக அவர்கள் மேல் படிந்திருந்தது.

அவளால் ஆடுகளை முகர்ந்து உணரமுடியாமல் இருந்தாலும், பெண்களின் மனத்தை உணரக்கூடியதாக இருந்தது. துருக்கி சாம்ராஜ்ய காசுக்குற்றிகளால் ஆன திரைகள் முகத்தை மூடியிருந்தன. பிள்ளைகள் அழுக்கான கந்தல்களை அணிந்திருந்தார்.

விகாரமான முகத்தையுடைய ஒருவன்கூடாரத்துக்கு வெளியே வந்து அரியு டன்முகமன்களைப் பரிமாறிக் கொண்டான். சில கணங்கள் அவர்கள் சம்பாஷித்த னர். பின்பு, அரி மெதுவாக கிற்றியிடம், ''நாங்கள் உள்ளுக்கும் போகாவிட் டால் அவனை அவமதித்தது போலாகும். நல்ல பிள்ளைபோல் அவன் தரும் எதையாவது தின்று தொலைத்து விடு. பின்பு போய் வாந்தியெடுக்கலாம்,'' என்றான்.

கூடாரத்தின் உள்பக்கம் மேலும் மோசமாக நாறியது. ஆட்டுத் தோலா லும், ஒநாய்த் தோலாலுமான விரிப்புகளில் அமர்ந்து ஒருவருக்கொருவர் நல் லாசிகளைத் தெரிவித்துக் கொண்டார்கள். கிற்றி அமெரிக்காவில் இருந்து வந் திருப்பது குறித்து, ஷேக்கில் நல்ல அபிப்பிராயம் ஒன்று உருவாகியது. தான் முன்பு திருமதி. ரூஸ்வெல்ற்றின் (Mrs. Roosevelt - அமெரிக்க ஜனாதிபதி யொருவரின் பாரியார்) புகைப்படப் பிரதியொன்று வைத்திருந்த செய்தியை அரியூடாக தெரிவித்துக் கொண்டான்.

வகை வகையான உணவுகள் வந்தன. எலும்பின் ஊன் (Marrow)கலந்த சோறுடன் கூடிய வழுவழுப்பான ஆட்டுக்காலும், கிற்றியின் கைகளுக்குள் திணிக்கப்பட்டது. கிற்றி உணவைக் கொறித்துக் கொண்டிருக்க ஷேக் எதிர்பார்ப்போடு காத்துக் கொண்டிருந்தார். அவள் அசடுவழியச் சிரித்துக் கொண்டே தலையை ஆட்டி உணவு ருசியாக இருப்பதாக தெரிவிக்க முயன்றாள். கழுவப்படாத பழங்களும் பரிமாறப்பட்டன. மிக மிக அழுக்கான கோப்பைகளில், அருவருக்கத்தக்க விதத்தில், அதிக இனிப்பாக இருந்த கோப்பியோடு விருந்து முடிவுக்கு வந்தது. சாப்பிட்டவர்கள் கைகளைக் கால்சட்டைகளிலும் வாய்களை மேல் சட்டையின் கைப்பகுதிகளிலும் துடைத்துக் கொண்டார்கள். மேலும், சிறிது நேரம் உரையாடிக் கொண்டிருந்துவிட்டு, அரி போக விடை பெற்றான்.

முகாமைப் பின் தங்க விட்டு அவர்கள் போனார்கள்.

கிற்றி, உரத்த குரலில் பெருமூச்சொன்றை வெளியிட்டாள். ''அவர்களுக்காக மிகவும் கவலைப்படுகிறேன்,'' என்றாள். ''அப்படிச் செய்யத் தேவையில்லை. உலகிலேயே மிக சுதந்திரமானவர்கள் தாங்கள்தான் என்பதில் அவர்கள் மிக நிச்சயமாக இருக்கிறார்கள். நீ இளம் பெண்ணாக இருந்தபோது, ''பாலைவனக் கீதத்தைப் ''(Desert Song) பார்க்கவில்லையா ?

பார்த்திருக்கிறேன். ஆனால் அந்தக் கதாசிரியர் ஒரு அரபு நாடோடிகளின் முகாமை நிச்சயமாகக் கண்டிருக்க மாட்டார் என்று எனக்கு இப்போ தெரிகிறது. நீங்கள் இரண்டு பேரும் என்ன கதைத்துக் கொண்டீர்கள்?

''இன்றைக்கு நல்லதனமாய் நடந்து கொள்ளும்படியும் பால்மாக்குகளிடமிருந்து மோதிரங்களையும், கடிகாரங்களையும், சேகரிக்க முயலவேண்டாம் என்றும் சொன்னேன்.''

''வேறு என்ன பேசிக் கொண்டீர்கள்?''

''அவன் உன்னை விலைக்கு வாங்க விரும்பினான். உனக்காக ஆறு ஒட்டகங்களைத் தரத் தயாராக இருந்தான்.

''கிழட்டுப்பயல். அவனுக்கு நீங்கள் என்ன சொன்னீர்கள். உன்னைப் பார்க்கும் எவரும் நீ பத்து ஒட்டகங்களின் பெறுமதிக்குரிய பெண் என்பார்கள் என்றேன்.''

உதயமாகிக்கொண்டிருக்கும் கதிரவனின் பக்கம் பார்வையைச் செலுத்திய அரி, ''இப்போதிருந்து வெப்பமாக இருக்கும். இப்போ அணிந்திருக்கும் பாரமான உடைகளைக் களைந்து பொதி செய்து கொள்வோம்'' என்றான்.

கான் டப்னர களஞ்சியங்களில் பெற்றுக் கொண்ட பாரப்பரியமான நீல கட்டைக் கால்சட்டைகளைக் கிற்றி அணிந்து கொண்டாள், நாசமாய்ப் போய்ச்சு. நீ ஒரு ஷப்றாவை- மண்ணின் புதல்வி போல் இருக்கிறாய்.

அவர்கள் தபோர் மலையின் தென்பகுதியை அணைத்தபடி வளைந்து சென்றுகொண்டிருந்த குறுகலான பாதையைத் தொடர்ந்து சென்று கொண்டிருந்தார்கள். சூரியனின் வெப்பமான கதிர்களால் அவர்கள் வியர்த்துவழிந்து கொண்டிருந்தார்கள். இடைக்கிடை இந்த வழி மறைந்து விடும். அப்போது, இவர்கள் மலையில் ஏறவேண்டியிருந்தது. செங்குத்தான சரிவுகளில் அரியின் பலம்மிக்க கைகள் கிற்றியைத் தாங்கி வழிநடத்திச் சென்றன. பிற்பகலில், அவர்கள் இராண்டாயிரம் அடி உயரத்தைக் குறிக்கும் அடையாளத்தைத் தாண்டிச் சென்றார்கள்.

தபோர் மலை உச்சி, தட்டையான மொழுமொழுவென இருக்கும் சுற்பரப்பால் ஆனது. தென்பகுதி விளிம்பு ஜெஸ்ரீல் பள்ளத்தாக்கைப் பார்வைக்கு விருந்தாக்கியது. அது பிரமிப்பூட்டும் காட்சியாக இருந்தது. கிற்றி, ஜெஸ்ரீலைத் தொடர்ந்து, சதுரமாகச் செதுக்கப்பட்டிருந்த வயல்கள், யூதக்குடியேற்றங்களைச் சூழப் பச்சைப் பசலேன்று தெரியும் இடங்கள், அரபுக் கிராமங்களின் வெண்மைநிற கூட்டமைப்புக்கள், இப்படியாக, கார்மேல் மலைவரைக்கும் அப்பால் மத்திய தரைக் கடலையும் காணமுடிந்தது. மற்ற நிகையில் கலிலி கடல் இருந்ததால், பலஸ்தீனத்தின் முழு அகலமும் அவர்கள் கண்முன்னால் விரிந்தது. தொலை நோக்குக்குக் கண்ணாடிகளின் மூலம், அரி சுட்டிக்காட்டக் காட்ட, சவுல், சூனியக்காரியைச் சந்தித்த எயின்டோர் (Ein Dor))ஐயும், கிடியோன் புதைக்கப்பட்டிருந்த இடமும், சவுலும், ஜோனாதனும், பிலிஸ்ரைன்சுடனான யுத்தத்தில் வீழ்ந்துபட்ட இடமுமான, வழுக்கைத் தலைபோல் அமைந்திருந்த ஜில்போவா மலையையும் பார்வையிட்டான்.

''ஏ, ஜில்போவாவின் மலையே, உன்மீது பனி விழாமல் இருக்கட்டும். மழை பொழியாமலிருக்கட்டும். அர்ப்பணிக்கப்படும் தானியங்கள் விளையாமலிருக்கட்டும். வல்லவரின் கேடயம் உன்மீது வீசப்படும். சவுலின் கேடயமும் ..''

''அரி, நீ கவிஞனாகிவிட்டாய் போலிருக்கிறது.'' கண்ணாடிகளைப் பதித்த கிற்றி சொன்னாள்.

''இந்த நாமிருக்கும் உயரம்தான் அதற்குக் காரணம். இங்கு எல்லாக் கவலைகளிலும் இருந்து விலக்கப்பட்டு விடுகிறோம். அதோபார் பெத்சியன் பள்ளத்தாக்கு. பெத்சியன் ரெல்தான் உலகத்திலேயே மிகப் பழைமையான நாகரீகத்தைக் கொண்டிருக்கிறது. இவைகளைப் பற்றி டேவிட்டுக்கு என்னைவிட அதிகம் தெரியும். பலஸ்தினம் முழுவதும், இவ்வாறான நூற்றுக் கணக்கான ரெல்கள் இருக்கின்றன. இவைகளை அகழ்வாராய்ச்சி செய்ய இப்போ ஆரம்பித்தால், நாம் வேலையை முடிக்கும் நேரத்துக்கு எமது தற்போதைய நவீன நகரங்கள், சிதைவுறும் நிலைக்கு வந்துவிடும் என அவன் சொல்வான். இங்கு பலஸ்தினம் சரித்திரப்பாலமாக இருக்கிறது. தற்சமயம் நீ அந்தப் பாலத்தின் மத்தியில் நின்று கொண்டிருக்கிறாய். மனிதர்கள் கற்களால் கோட்டைகளைச் செய்த காலத்திலிருந்து, தபோர் போர்க்களமாக இருந்திருக்கிறது. ஹீப்ரூக்கள் இங்கே ரோமரை எதிர்த்துப் போராடியிருக்கிறார்கள். அரபுக்களுக்கும் சிலுவை யுத்த வீரர்களுக்கும் இடையே ஐம்பது தடவையாவது இது கைமாறியிருக்கும்.

டெபோரா தன் சைனியத்துடன் பதுங்கியிருந்து கானானியர்கள் மேல் இறங்கித் தாக்கியதும் இங்கேதான். காலம் காலமாக யுத்தகளமிது. நாங்கள் வழமையாக என்ன சொல்வோம் தெரியுமா? மோசேஸ் தெரிந்து கொள்ளப்பட்ட குடியினரை மேலும் நாற்பது வருடங்களுக்கு நடாத்திச் சென்று, இதைவிட நல்ல இடமொன்றைக் கண்டு பிடித்திருக்கலாம் என்போம்.''

ரோம, பைசாந்திய (Byzantine), சிலுவையுத்த, அராபிய ஞாபகச் சின்னங்கள், எச்ச சொச்சங்கள் எங்கும் சிதறியிருந்த பைன் மரக்காடு ஒன்றினூடாக நடந்து அச்சமவெளியைக் கடந்தனர். துண்டுகளை இணைத்துச் செய்த சித்திர வேலைப்பாடுகள்' மண்பாண்டங்கள், சுவர்களின் பகுதிகள், கற்கள் என்பன அங்கும் இங்கும் பரவிக் கிடந்தன.

யேசுநாதர் மறுரூபமாகி மோசேசுடனும், எலியாசுடனும், சம்பாஷித்த இடமாகக் கருதப்படும் இடத்தின் அருகே கிரேக்க பழைமைவாத திருச்சபையினதும், றோமன் கத்தோலிக்கத் திருச்சபையினதும் தேவாலயங்கள் இரண்டு இருந்தன.

காட்டுக்கு அப்பால் தபோர் மலையின் அதி உயர்ந்த இடத்தை அடைந்தனர். சிலுவை யுத்த வீரர்களின் கோட்டை ஒன்றும், சிலுவை யுத்த கால முஸ்லிம் கோட்டையொன்றும் (SaracenCastle) காணப்பட்டன. இடிபாடுகளுக்கும் சுவர்களுக்குமூடாக சென்ற அவர்கள் கிழக்குப் பகுதிக் கொத்தளங்களை அடைந்தனர். இந்தப்பகுதி, மலையின் பக்கப் பகுதியில் அமைக்கப்பட்டிருந்ததோடு, கிழக்குக் காற்றுகளின் சுவர் (Wall of Eastwind எனவும் அழைக்கப்பட்டது. சிலுவையுத்தப் படைகளை சலடின் த குர்ட் (Saladin the Kurd) என்பவன் நிர்மூலமாக்கிய இடமாகிய ஹார்ன்ஸ் ஒவ் ஹற்றின் (Hornsof Hattin) னோடு கூடக் கலிலின் கடலின் முழுத் தோற்றமும் பார்வையில் தெரிந்தது.

சுவர்களுக்கு மேல் நின்று கொண்டிருந்த கிற்றியின் கேசத்துக்கூடாக வீசிய காற்று திரும்பவும் குளிர்ச்சியடையத் தொடங்கியது. ஒரு மணி நேரத்துக்கு மேல் அங்கு அவர்கள் அமர்ந்து, அரி கூட்டிக்காட்டிய கணக்கற்ற வேதாகமச் சரித்திர இடங்களைப் பார்த்துக் கொண்டிருந்தனர். இறுதியாகக் காட்டுப்பகுதி கோட்டைப்பகுதிகளை சந்திக்கும் இடத்துக்குச் சென்ற அவர்கள் அங்கே திரும்பவும் தங்கள் கனமான ஆடைகளுக்குள் புகுந்து கொண்டனர். அரி போர்வைகளை நிலத்தில் விரித்துவிட கிற்றி அவற்றில் சரிந்து கிடந்தபடி களைப்போடு கூடிய மகிழ்ச்சியோடு ஏதோ முணுமுணுத்துக் கொண்டிருந்தாள். ''இது ஒரு உன்னதமான பயணம் அரி. ஆனால் ஒரு சிறுமைக்கு வலி இருக்கப்போகிறது.''

அரி முழங்கைகளை ஊன்றி சரிந்து கிடந்தபடி அவளை அவதானித்துக் கொண்டிருந்தான். திரும்பவும், அவனுள், அவளுக்கான ஆசை தலை தூக்கியது. ஆனால் இப்பவும் அவன் மௌனத்தைக் கடைப்பிடித்தான்.

இருள் சூழ்ந்து கொண்டிருந்தபோது, மூவர், நால்வர், ஐவர் கொண்ட குழுக்கள், உச்சியை நோக்கி விரைந்து வந்து கொண்டிருந்தன. இவர்களில் இஸ்

ரேலுக்கு குடிபெயர்ந்திருந்த கருமையான ஒலிவ் நிறத் தோல்களையும் கொண்ட கிழைத் தேயத்தவர்களும், ஆபிரிக்கர்களும், பொன்நிறக் கூந்தலையுடையவர்களும் இருந்தார்கள். நேராக நடக்கும், உடற் கட்டுடைய யுவதிகள் பலர் இருந்தார்கள்.

பெரிய மீசையையும், தாக்குதல் குணமுடைய ஷப்றாக்களும் இருந்தார்கள் அது ஒரு ஒன்றுகூடல் வைபவமாகவே இருந்தது. பால்மாக் குழுக்கள் மறைந்திருக்க வேண்டிய அவசியம் இருப்பதால் சிறிய குழுக்களாகவே வெவ் வேறு கிபுட்சுகளில் பயிற்சி பெறுவது வழக்கம். இது நகரங்களிலும், ஒரே குடியேற்றங்களிலுமிருந்து பால்மாக்கில் இணைந்தவர்கள் ஒருவரையொருவர் சந்திக்கவும், காதலர்கள் ஒருவரையொருவர் சந்திக்கவும், அற்புதமான வாய்ப்பாக அமைந்தது. ஒருவருக்கொருவர், அன்போடு கட்டியணைப்பதாலும், முதுகில் தட்டுவதாலும், முத்தங்களைப் பரிமாறிக் கொள்வதாலும், உற்சாகமாக வாழ்த்துக் கூறிக் கொண்டனர். அவர்கள் தங்கள் பத்தொன்பது, இருபதுகளில் இருந்த அருமையான இளைஞர் கூட்டத்தினராக இருந்தனர்.

ஜோஆப் யார்க்கோனியும், லெவ் ஜில்போஆவும் கிற்றி அங்கு வரப் போகிறாள் என்பதாலேயே வந்திருந்தார்கள். அவளும் அதனால் மகிழ்ச்சி யடைந்தாள்.

டேவிட்டும், ஜோர்தானாவும் கூட வந்திருந்தார்கள். கிற்றியிடம் டேவிட் காட்டிய கரிசனை ஜோர்தானாவுக்கு ஆத்திரத்தை மூட்டினாலும், பிரச்சினை யாகிவிடும் என்பதால் அவள் அமைதியாக இருந்தாள்.

மாலையானபோது கிட்டத்தட்ட இரு நூறு, பால்மாக்கின் இளைஞர் களான போர்வீரர்கள் வந்து சேர்ந்து விட்டனர், நெருப்பை வளர்க்க சுவர் அருகோடு ஒரு குழி வெட்டப்பட்டதோடு, சிலர் முழு இரவும் நெருப்பு மூட்டக் கூடியதாக விறகு தேடுவதில் ஈடுபட்டனர். மூன்று ஆட்டுக் குட்டிகள் நெருப்பில் வாட்டுவதற்காக உப்பிட்டு தயாராக்கப்பட்டன. ஜெஸ்ரீல் பள்ளத்தாக்கின் பின்புறமாகக் கதிரவன் அஸ்தமித்தான். நெருப்பு மூட்டப்பட்டு கொழுந்து விட்டெரிந்தது. ஆடுகள் வாட்டுவதற்காகத் தயார் செய்யப்பட்ட குழிகளின் மேல் வைக்கப்பட்டன. நெருப்பைச் சுற்றி பெரிய வட்ட வடிவில் ஜோடி ஜோடியாக அமர்ந்து கொண்டனர். விருந்தினராக வந்திருந்த கிற்றி அங்கே பிரதான இடத்தில் வலிந்து அமர்த்தப்பட்டு அவளைச் சுற்றி, அரி, டேவிட், ஜெவ் ஆகியோர் அமர்ந்திருந்தனர்.

தபோர் மலையின் உச்சியில் இருந்த அந்த சமவெளியானது விரைவில் பாடல்களால் அதிர்ந்தது. கான் டப்னாவில் பிள்ளைகள் பாடக் கிற்றி கேட்டிருந்த அதே பாடல்கள்தான் அலை நிலத்தை மீட்டெடுத்த நீர் விசிறிகள் பற்றியும், கலிலேயாவினதும் யூடியாவினதும் அழகையும் பற்றி அப்பாடல்கள் கூறின. நெகெவ் பாலைவனம் எப்படி ஆட்கொள்வது போன்ற அழகோடு விளங்குகிறது என்பது பற்றிப் பாடினார்கள். பழைய காவலர் குழுக்கள், ஹகானா, பால்மாக் ஆகியவற்றின் அணிவகுப்பு நடைப் பாடல்களையும் பாடி

னார்கள். தாவீது அரசர் இப்பவும் இஸ்ரேல் மண்ணில் நடந்து கொண்டிருப் பதாகக் கூறும் பாடலொன்றையும் பாடினார்கள்.

ஜோஆப் சப்பணமிட்டு அமர்ந்து, தன்முன்னாலிருந்த மண்ணால் செய் யப்பட்டு முன்பக்கம் ஆட்டுத்தோலைக் கொண்டிருந்த தம்பூர் என்னும் வாத் தியத்தை, புராதன ஹீப்ரூ ராகமொன்றை இசைத்துக் கொண்டிருந்த புல்லா லான புல்லாங்குழல் ஒன்றுக்கு இணையாக தன் விரல் நுனிகளாலும், கையின் அடிப்பாகத்தாலும் திறமையாக இசைத்துக் கொண்டிருந்தான். கிழைத்தே யத்தை சேர்ந்த யுவதிகள் பலர், சாலமன் அரசரின் அரச சபையில் நிகழ்ந் திருக்கக் கூடிய, அதே, மெதுவாக சரிந்தாடுகின்ற, உணர்ச்சியைக்கிளறக்கூடிய சுழன்று சுழன்று ஆடும் முறைகளில், ஆடிக்கொண்டிருந்தனர். ஒவ்வொரு புதிய கீதத்துடனும், ஒவ்வொரு புதிய நடனத்துடனும் விருந்தின் வேகம் அதிகரித்துக் கொண்டிருந்தது.

''ஜோர்தானா'' எங்களுக்கு ஜோர்தானா ஆடவேண்டும். யாரோ உரத்த குரலில் கத்தினார்கள். அவள் அரங்கத்திலே வந்து நின்றதும் வாழ்த்தொலிகள் வானைப் பிளந்தன. ஒரு ஹங்கேரிய கிராமியப் பாடல் இசையொன்றை ஒரு அக்கோடியன் வாத்தியம் இசைக்கத் தொடங்கவும் கூட்டத்தினரும் அதற்கிசை வாகக் கையைத் தட்டத் தொடங்கினார்கள். ஜோர்தானா கூட்டத்தின் அரு கோடு சுழன்று, சுழன்று கூட ஆடுவதற்கு அவர்களிடையே இருந்து ஆட்களை இழுத்தெடுத்து கொஞ்சம் முரட்டுத் தனமான ஹர்டாஸ் (Czardas) எனப்படும் நடனத்தை ஆடினாள். ஒவ்வொருவராகக் களைத்துப் போய் வீழும்வரை தனது சிவந்த கூந்தல் முகத்தில் பறந்து கொண்டிருக்க கொழுந்து விட்டெரிந்த நெருப்பு வழங்கிய பின்னணியில் ஆடிக்கொண்டிருத்தாள். அக்கோடியன் வாத் தியம் இசையின் லயத்தை விரைபடுத்தவும், கூடியிருந்தோரும் கைதட்டும் வேகத்தை அதிகரித்தனர். இதற்கீடாக ஆடி ஆடிக் களைப்பேறி அவளே நட னத்தை நிறுத்தும் வரை ஆடினாள்.

அரை டசினுக்கு மேற்பட்டோர், மத்திக்கு, வந்து யூதக்குடியானவர்கள் ஆடும் நடனமான ''ஹோர'' வை (Hora) ஆடத் தொடங்கினர். ஹோராவை ஆடும்வளையம் அதிகரிக்க அதிகரிக்க அமர்ந்திருத்தவர்கள் எல்லோரும் எழுந்து இணைந்து கொண்டு முதல்வளையத்துக்கு வெளியே இன்னோரு வளையத்தையும் உருவாக்கிக் கொண்டு நடனத்தைத் தொடத்தந்தனர். ஜோஆப்பும், அரியும் கிற்றி யையும் இழுத்தெடுத்து வளையத்தினுள் புகுந்துவிட்டனர். வளையம் ஒரு திசையில் நடனமாடிக் கொண்டே போய், ஓரிடத்தில் தரித்து, பின் பங்கெடுப்பவர்கள் திடீர் அசைவொன்றை செய்து எதிர்த்திசையில் அசைந்தார்கள்.

அவர்கள் நான்கு மணித்தியாலங்களுக்கு மேல் இப்படி ஆடிப்பாடிக் கொண்டிருந்தாலும், வேகம் குறைவதற்கான அறிகுறி எதுவும் தெரியவில்லை. டேவிட்டும் ஜோர்தானாவும் மெதுவே நழுவி, முஸ்லிம் கோட்டையை நோக்கி நகர்ந்து சென்றார்கள். அங்கேயிருந்த அறைகளுடே, கிட்டத் தட்ட ஆடல் பாடல்கள், தம்பூரின் ஒலிகள் கேட்காத இடம் வரை அலைந்து திரிந்தார்கள். அவர்கள் கிழக்குக் காற்றின் சுவரில் அமைந்திருந்த சிறிய

ஒரு அறையை அடைந்தார்கள். அங்கே ஜெஸ்ரீல் பள்ளத்தாக்கில் இருந்து வீசிக்கொண்டிருந்த காற்றின் ஒலியை மட்டுமே அவர்களால் கேட்கக் கூடியதாக இருந்தது. டேவிட் தனது போர்வையைக் கீழே விரித்ததும் அதன் மேல் இருவரும்ஒருவரையொருவர் கட்டியணைத்து முத்தமிட்டு, வருடிக்கொடுத்து இன்பத்தில் மூழ்கினார்கள்.

''டேவிட்..... டேவிட்..... உன்னை நேசிக்கிறேன்.'' உரக்கவே சொன்னாள். காற்றின் ஒலி அடங்கிவிட தூரத்து இசை மெலிதாகவே கேட்டது அவனுடைய கழுத்தில் தன் வாயால் அழுத்தி முத்தமிட்டபடி டேவிட்..... டேவிட்... டேவிட்..... எனத் திரும்பத் திரும்பஅவன் பெயரை கூறிக் கொண்டே உறங்கிப் போனாள். இயல்பு நிறைந்த ஆழ்ந்த குரலில் வேதாகமத் திலிருந்து ஒரு பகுதியை யேமன் பெண் ஒருத்தி அவளுடைய ஆட்கொள்ளும் குரலில் தாவீதின் சங்கீதங்களிலொன்றைப் பாடினாள்.

அணைந்து கொண்டிருக்கும் நீயின் வெளிச்சத்திலே அவர்கள் முகங் களைக் கிற்றி பிறமென்ற் அவதானித்தாள். இது என்னவகையான இராணுவம்? சீருடையும் பதவிகளும் இல்லாத இது என்ன வகையான இராணுவம்? பெண் களும், ஆண்களோடு தோளோடு தோள் நின்று றைபிளாலும் பயணற்றாலும் போராடும் இது என்னவகை இராணுவம்? இந்த யூடியாவின் இளம் சிங்கங்கள் யார்? அவள் அரி பெண் கானானின் முகத்தை நோக்கியபோது ஒரு குளிரான உணர் வலை ஒன்று உடலை ஊருடுவிச் சென்றது. மின்சாரம் பாய்வது போல் ஒரு தெளிவு அவளுக்கேற்பட்டது.

இது அழிந்து போகும் மனிதர்களின் பாடையல்ல! இவர்கள்தான் புராதன ஹீப்ருக்கள். டான்(Dan),றேபென் (Reupan)யூடா(Judah),எப்ரெயிம் (Ephrain) இவர்கள்தான். சாம்சன்களும் (Samsons) டெபோராக்களும் (Deborahs) ஜோஆப்களும் (Joads). சவுல்களும் (Sauls) அவர்கள் தான். இதுதான் இஸ்ரே லின் இராணுவம், உலகின் எந்த சக்தியுமே இதனைத் தோற்கடிக்க முடியாது ஏனெனில், இறைவனின் வல்லமை அவர்களுள் இருக்கிறது.!

அத்தியாயம் ஆறு

சதாம் ஹவுஸ்,
சர்வதேச உறவுகளுக்கானநிலையம்,
லண்டன்.

மத்திய கிழக்கு விடயங்களில் நிபுணரான செசில் பிராட்ஷோ வேறு வேறு இடங்களில் இருந்து வந்திருந்த ஆய்வு அறிக்கைகளைப் படித்துக் கொண்டிருந்தார். மூன்று நாட்களாக தொகுப்புகளை சீரணித்துக் கொண்டிருந்தார். குடியேற்றக் காரியாலயம், அமைச்சு டவுணிங் வீதி 10 ம் இலக்கம் (Downing Street, Number 10-பிரிட்டிஷ் பிரதமரின் உத்தியோகபூர்வ வதிவிட விலாசம்) எல்லாமே அவர்மேல் அழுத்தங்களைப் பிரயோகித்தன. பலஸ்தீனப் பிரச்சினை மிக குழப்பத்திலாழ்ந்திருந்தது. அச்சொட்டான புதிய கொள்கையொன்று வகுக்கப்பட வேண்டும். பிராட்ஷோ இந்த மாதிரியான விடயங்களில் முப்பத்தேழு வருட அனுபவம் கொண்டவர். இந்தக் காலத்துள் சியோனிஸ்டுகளுடனும், அரபுக்களுடனும் நூற்றுக்கு மேற்பட்ட மகாநாடுகளில் கலந்து கொண்டிருப்பார் பெரும்பான்மையான, உத்தியோகத்தர்கள், நம்பியது போலவே, அவரும் பிரிட்டிஷாரின் நலன்கள் அரபுக்களோடு தான் அணைக்கப்பட வேண்டும் என்று நம்பினார். ஒரு முறைக்குப் பல முறையாக அரபுக்களின் பயங்காட்டலையும், பயமுறுத்தலையும் மறைத்துக் காரியமாற்றி வந்தார். இம்முறை அவர்கள் முற்றாகக் கட்டுக்கடங்காமல் போய்விட்டார்கள். அப்போது நடந்து கொண்டிருந்த மாநாடு படுதோல்வியில் முடியப்போகிறது.

கைரோவில் அஞ்ஞாதவாசத்தில் இருந்தபடியே, அரபு உயர் மட்டக் குழுவை முப்தியான ஹாஜ் எல் ஹுசேயினி நடத்துவது இப்போ பூரணமாகத் தெளிவாகி இருந்தது. மதக்கலவரங்கள் கிளம்பும் என்பதால் யுத்தக்குற்றவாளியாக முப்தியை விசாரிக்க நாங்கள் காட்டிய தயக்கம் எங்களை இப்போ ஆட்கொள்ளத் திரும்ப வந்து நிற்கிறது. அரபு மனநிலை முற்றாக நியாயமற்ற, நிலைகளை எட்டிப் பிடித்திருக்கிறது. முன் நிபந்தனைகள் ஏற்கப்படாதபட்சத்தில் யூதரோடு ஒரே மேசையிலிருந்து பேசவும் அவர்கள் மறுத்துவிட்டார்கள்.

பிரிட்டிஷாரும், பிரெஞ்சுக்காரரும் மத்திய கிழக்கைப் பங்கு போட்டுக் கொண்ட சான் றெமோ மாநாட்டிலும் பிராட்ஷோ இருந்தார். பலஸ்தீன கொள்கைப் பிரகடனத்தின் சரத்துக்கள் உருவாக்கப்பட்டபோதும் இருந்தார். பால்போர் பிரகடனம் வெளியிடப்பட்டபோதும் அவர் இருந்தார். பலஸ்தீனத்தின் அரைவாசியை பிரித்தெடுத்து ட்ரான்ஸ் ஜோர்தான் ராஜ்யத்தை உருவாக்கிய

வின்ஸ்ரன் சேர்ச்சிலின் குழுவிலும் இருந்தார். அவ்வளவு வருடங்களிலும், அவ்வளவு முப்தியின் கலவரங்களிலும், மக்கபீஸ் போன்ற வகையான போரா ளிகள் அணியை எதிர்த்து நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கவில்லை. யூதப் பயங்கரவாதிகள் அச்சமூட்டும் உறுதியோடு போரிட்டு வந்தார்கள்.

நாங்கள் திரும்பவும், திரும்பவும் யிசுவ் மையத்தையும், யூத சமூகத்தையும் மக்கபீஸ் என்ற பெயரில் நடமாடும் குண்டர்கள் குழுவை ஒழித்துக்கட்ட பிரிட் டிஷ் அதிகார பீடத்துக்கு உதவும்படி கேட்டுக் கொண்டோம். ஆனால், யிசுவ் வோ தங்களுக்கு இந்தக் குழுவினர் மீது எவ்வித கட்டுப்பாடுமில்லை என்று அறிவித்து விட்டனர். அத்துடன் இக்குழுவினரின் செயற்பாடுகளைப் பகிரங்க மாகக் கண்டித்தும் வந்தனர். ஆயினும், யூதர்களின் பெரும்பகுதியினர் இந்தக் குண்டர்களின் செயற்பாடுகளை இரகசியமாக அங்கீகரித்து வந்தனர். இந்த விடயத்தில் எந்த ஒத்துழைப்பும் எமக்குக் கிடைக்கவில்லை. அத்தியாவசியமாக தேவையில்லாத பிரிட்டிஷ் ஊழியர்களையும், குடும்பத்தவரையும் பாதுகாப்புக் கருதி, பலஸ்தீனத்திலிருந்து வெளியேற்ற வேண்டியது அவசியம் எனத் தீர்மா னிக்கும் அளவுக்கு மக்கபீஸ் செயற்பாடுகள் அளவில் வளர்ந்துவிட்டன.

பரிசுத்த பூமியின் ஒரு அந்தத்திலிருந்து, மறு அந்தம் வரை உலுப்பி யெடுத்த பயங்கரவாதிகளின் அதிகரிக்கப்பட்ட தாக்குதல்களைப் பற்றிய அறிக் கைகளை பிராட்ஷோ திரும்பவும் படித்தார்.

இரு வாரங்களுக்கு உற்பத்தியை நிறுத்தப் பண்ணிய ஹைபா சுத்திகரிப்பு ஆலை மீதான பெரும் சேதம் விளைவித்த தாக்குதலுக்கும் லிட்டாவிமான தளத்தில், ஒரு ஸ்குவாட்ரன் யுத்த விமானங்களை அழித்த தாக்குதலுக்கும் மேலதிகமாக, பத்துப் பெரியளவு வீதிகளில் மறைந்திருந்து தாக்குதல்களும் (Road Ampush) பிரிட்டிஷ் நிலையங்கள் மீதான பதினைந்து பெரும் தாக்கு தல்களும் நிகழ்ந்திருக்கின்றன. ஹகானாவும் அதன் தாக்குதல் பிரிவான பால் மாக்கும் வரவர அமைதியிழந்து வருவதும் சிலவேளைகளில் சமீபத்தில் நிகழ்ந்த தாக்குதல்களில் அவர்கள் பங்கெடுத்திருக்கக் கூடிய சாத்தியக் கூறுகளும் இருப் பதற்குச் சாட்சியங்கள் இருக்கின்றன.

நீர் ஒழுக்கு மிக்க வள்ளங்கள், அலியா பெற்றின் மிதக்கும் சேரிகள், பலஸ்தீனத்தின் கரைகளுக்குச் சட்டவிரோதக் குடியேற்றக்காரர்களைப் பெரும் தொகையில் கொண்டு வந்து சேர்த்தன.

எக்ஸோடஸ் சம்பவத்துக்குப் பிறகு, கடற்படை ரோந்துப் பிரிவுகளின் அதிகரித்த நடவடிக்கைகளுக்கு மத்தியிலும், அலியாபெற்றின் நடவடிக்கைகள் குறிப்பிடத்தக்களவு அதிகரித்துள்ளது. அமெரிக்கா, சான்மிகுவெல், உலோவா, அப்ரில் சுசான்னா, சான் பிலிப்போ ஆகிய கப்பல்கள் எட்டாயிரம் சட்ட விரோதக் குடியேற்றக்காரர்களை, ஐரோப்பாவின் இடம் பெயர்ந்தவர்கள் முகாம் களில் இருந்து கொண்டு வந்து சேர்த்துள்ளன. வேறு இரு கப்பல்களும் வெற்றி கரமாகத் தடையை மீறிச் சென்று தரைதட்டியிருக்கலாம் என்று நம்பக் கார ணங்கள் இருக்கின்றன. மத்திய தரைக் கடல் பகுதியிலிருக்கும் எங்கள் தூதுவ

ராலயங்களும், பிரதிநிதிக் காரியாலயங்களும் குறைந்தது இன்னும் ஐந்து கப்பல் களையாவது சட்டவிரோதக் குடியேற்ற வாசிகளை விரைவில் பலஸ்தீனம் கொண்டு வரும் முயற்சிக்காக அலியாபெத் தயார்படுத்தி வருவதாக அறிவித் துள்ளன.

பிரிட்டிஷ் இராணுவத்தலைமை, சக்தி வாய்ந்த சில படைப்பிரிவுகளைப் பலஸ்தீனத்தில் கொண்டிருக்கின்றது. அந்த சிறிய நாட்டிலே ஐம்பத்தியிரண்டு பெயர்பெற்ற ராக்காட் கோட்டைகள் ஒன்றோடொன்று தொடர்புடைய விதத் தில் வலைப்பின்னல் போல் அமைந்திருந்தன. மேலதிகமாக எஸ்தர் கோட்டை போன்ற எல்லைக்கோட்டைகளும் இருந்தன. ஒவ்வொரு நகரத்திலும் வழ மையான பொலிஸ் படை இருந்தது. இவற்றைவிட ட்ரான்ஸ் ஜோர்தானின் பலம் மிக்க அரபுப் படையணியும் இருந்தது. ராக்காட்களை விட ஹைபா பிர தேசத்தில் அட்லிற்றையும், ஜெருசலேமில் ஸ்நெல்லர் பாடி வீடுகளையும், ரெல் அவிவுக்கு வெளியே, மாபெரும் சாராபாண்ட் முகாமையும் வைத்திருந்தனர்.

அண்மைக்கால மாதங்களில், நோவா (Noah) ஆர்க் (Ark), லொப்ஸ்ரர் (Lopster) மக்கறில் (Mackerel) கோஷஸ் (Cautious) லோன்சம் (Lonesome) ஒக்றேபஸ் (Octopus) கன்ரோன்மென்ற் (Cantonment) ஹார்ப் (Harp) எனப் பெயரிடப்பட்ட தாக்குதல் திட்டங்களை யிசுவ்களுக்குமேல் தொடர்ந்து அழுத் தங்களைப் பிரயோகிக்க நாங்கள் மேற்கொண்டோம். இவைகள் முக்கியமாக சட்டவிரோதக் குடியேற்றக்காரர்களைத் தொடர்ச்சியாக தேடிப்பிடித்தல், சுற்றிவளைப்புக்கள், ஆயுதங்கள் தேடுதல், எங்காவது எமது படைகள் தாக் கப்பட்டால், எதிர்த்தாக்குதல் செய்தல் என்ற அடிப்படையிலேயே நிகழ்த்தப் பட்டன.

யிசுவ்வில் இருக்கும் ஒவ்வொரு யூதனும் நூற்றுக்கு நூறுவிதம் இந்த விடயங்களில் அவர்களோடு ஒத்துழைப்பதால் எமது வெற்றி, மட்டுப்படுத்தப் பட்டதாகவே இருக்கிறது. மலர்ப்பெட்டிகள், கோவை அலுமாரிகள், அடுப்புகள், குளிரூட்டும் பெட்டிகள், மேசைகளின் பொய்க் கால்கள், இன்னும் வேறு ஆயிரம் புத்திசாலித்தனமான மறைவிடங்களிலும் ஆயுதங்கள் மறைத்து வைக்கப்படுவ தால் ஆயுதங்களைக் கண்டுபிடிப்பது என்பது மிகக் கஷ்டமான செயலாகவே இருக்கிறது. ஆயுதங்கள், இந்தக் காரியத்தை விரும்பிச் செய்யும் பெண்களாலும், குழந்தைகளாலும் இடத்துக்கிடம் கடத்தப்படுகின்றன. யூத தகவல் கொடுப் போரைப் பெற்றுக் கொள்ளச் செய்த முயற்சிகள் படுதோல்வியில் முடிந்தன. ஆனால், யூதர்களோ அரபு உளவாளிகளைப் பணத்துக்குப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருப்பதோடு, பிரிட்டிஷ் அணியிலிருக்கும் சில அனுதாபிகளிடமிருந்து தகவல்கள் பெற்றுக் கொள்கிறார்கள். யூதர்கள் கிடைக்கும் பொருட்களிலிருந்து உள்ளூரிலேயே ஆயுதங்களைத் தயார் செய்கிறார்கள். அத்தோடு ஸ்ரென் துப்பாக்கிகள், நிலக்கண்ணிவெடிகள் கைக்குண்டுகள் வரவரத் தரத்திலும், செயல் திறனிலும் மேம்பட்டு வருகின்றன. அண்மையில் ஒரு கிபுட்சில் ஒரு ஆயுதத் தயாரிப்புத் தொழிற்சாலையைக் கண்டுபிடிக்க முயற்சி செய்தபோது பெண்கள் எங்கள் வீரர்கள் மேல் கொதி நீரை ஊற்றினார்கள் .....

பலஸ்தீனத்தில் கட்டுப்பாட்டை நிலைநிறுத்துவது மட்டும்தான் பிராட் ஷோவுக்குப் பிரச்சினை என்றிருக்கவில்லை. வெளிச்சக்திகளின் அழுத்தங்களும் அதிகரித்து வந்தன. இங்கிலாந்திலேயே மக்கள் ஆடம்பரமற்ற வாழ்க்கையின் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துக் கொண்டிருந்ததோடு, பொருளாதாரமும் வீழ்ச்சியடைந்து வந்தது. பலஸ்தீனிய படைப்பிரிவுகளை வைத்திருக்கும் செலவு மிக அதிகமானது. இரத்தக் களரிகளைப் பற்றி ஆங்கிலேயர்களும் வெறுப்படைந் திருந்தனர். உலக அரசியல் அரங்கிலோ அமெரிக்க சியோனிஸ்டுகள் ட்ரூமனின் கவனத்தை ஈர்ந்து அவரை ஒரு அனுதாபியாகச் செய்து விட்டிருந்தார்கள்.

ஒரு இலட்சம் யூதர்களைப் பலஸ்தீனத்துக்குள் அனுமதிக்க வேண்டும் என்ற ஆங்கில - அமெரிக்கக் குழுவின் சிபார்சை அமுல்படுத்தத் தவறியதானது எமது நேசநாடுகள் மத்தியில் எமது மதிப்பை வீழ்த்தி விட்டது. மக்கபீஸ் பங்கரவாதி களின் நடவடிக்கைகளால் ஏற்படும் தலைக்குனிவும் எமது கௌரவத்தை ஊறு படுத்தியிருக்கிறது. அண்மையில் யூத பயங்கரவாதியொருவனுக்குத் தண்டனை விதித்த நீதிபதியொருவரைக் கடத்திச் சென்ற நிகழ்ச்சியின் அளவுக்கு எப் போதுமே பிரிட்டிஷ் அதிகாரத்துக்கு சவால் முளைத்ததில்லை.

செசில் பிராட்ஷோ தன் கொம்பினாலான விளிம்புகளைக் கொண்ட மூக்குக் கண்ணாடியைக் கழற்றிவிட்டு, சிவந்திருந்த கண்களைத் துடைத்து விட்டுத் தலையை ஆட்டிக் கொண்டார். என்ன குழப்பம்! அவர் மீண்டும் ஒருமுறை அறிக்கைகளைப் பார்வையிட்டார். முப்தியின் மருமகனான ஜெமெல் ஹுசெயினி திரும்பவும் படுகொலைகளை நிகழ்த்துவதன் மூலம் அரபுக்களிடையே எதிர்ப் புணர்ச்சியைத் தூண்டிவிட்டுக் கொண்டிருந்தான். அலியா பெற்றுக்கூடாகவும், அக்கிவா தலைமையிலான மக்கபீஸ் ஊடாகவும் ஹகானா பெரும் இடைஞ்சலாக இருந்து வந்தது. எதிர் நடவடிக்கையாக பிரிட்டிஷ் அதிகாரிகள் பகிரங்கமாக வீதிகளில் சாட்டையடிக் குள்ளாக்கப்பட்டார்கள், போர்வீரர்கள் தூக்கிலிடப் பட்டார்கள். போருக்கு முந்திய இரு கலவர காலங்களிலும் பெரும் சுய கட்டுப் பாட்டைக் கடைப்பிடித்த யூதர்கள் அரபுக்களின் ஆக்கிரமிப்பு நடவடிக்கை களால் தாங்கள் கடைபிடித்து வந்த சுயகட்டுப்பாட்டை மெது மெதுவாகக் கைவிடத் தொடங்கியிருந்தார்கள்.

உத்தியோகபூர்வ வட்டாரங்களிலோ, எக்ஸோடஸ் நிகழ்ச்சிக்குப் பிறகு பிராட்ஷோ போராடும் மனப்பான்மையை இழந்துவிட்டதாகப் பேசப்பட்டது. பலஸ்தீனப் பிரச்சினை இறுதிக் கட்டத்தை நெருங்கிக் கொண்டிருந்தது. அந்தச் சிறிய நாடு, பொருளாதார, கேந்திர முக்கியத்துவங்கள் வாய்ந்த இடத்தைக் கொண்டிருந்தது. சாம்ராஜ்யத்தின் சுழலிடமாக அது இருந்தது. ஹைபா கடற் படைத் தளமும், சுத்திகரிப்பு ஆலையும் ஒப்பீட்டளவில் நடு நரம்பு போலிருந்த சூயெஸ்கால்வாயின் அண்மையில் இருந்ததும் பலஸ்தீனத்தைத் தொடர்ந்து வைத் திருக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தின.

பிராட்ஷோவின் மேசை மேலிருந்த உள்ளகத் தொடர்புக் கருவி (Inter-com) அலறியது. ''ஜெனரல் ரெவர் பிறவுன் வந்திருக்கிறார்''.

ஜெனரல் ரெவர்-பிறவுணும் சரத்தில்லாத முகமன்களைப் பரிமாறிக் கொண்டனர். அதிகார வட்டாரங்களிலுள்ள யூத சார்பானவர்களில் ரெவர் பிறவுணும் ஒருவர். அவர்தான் பலஸ்தீனத்தில் பிரிட்டிஷாரின் செல்வாக்கு அஸ்தமிக்கப் போவதை, எக்ஸோடஸ்பிரச்சினை ஆரம்பமாகும்போதே முன்கூட்டி எச்சரித்ததோடு, உண்ணாவிரதம் ஆரம்பிக்க முன்னரே எக்ஸோடசைப் போக விடும்படி எவ்வளவோ கேட்டுக் கொண்டார். பிரிட்டிஷ் ஆதரவுக்கு லாயக்கானவர்கள் யூதர்களே தவிர, அரபுக்கள் அல்ல என்று அவர் எப்போதுமே சொல்லி வந்தார். ஏனெனில், யூதர்கள் எப்போதுமே நம்பிக்கையான நேச அணியினர் என்றும் அரபுக்கள் அப்படியல்ல என்றும் அதற்கு நியாயம் கற்பித்து வந்தார். பலஸ்தீனத்தில் ஒரு யூத பொதுநலவாய நாட்டை உருவாக்க வேண்டும் என்பதற்கு ஆதரவானவராயிருந்தார்.

ரெவர் பிறவுணின் சிந்தனைகள் பிராட்ஷோவையோ அல்லது சதாம் ஹவுஸ் கூட்டத்தினரையோ, அல்லது குடியேற்றக் காரியாலயத்தையோ அசைக்க முடியவில்லை. இந்த இறுதி நேரத்திலும், தாங்கள் எடுத்த பிழையான முடிவை மாற்றத் துணிவில்லாமல், அதனால் ஏற்படும் விளைவுகளைத் தாங்கிக் கொள்ள ஆயத்தமாக இருந்தார்கள். எண்ணெய் வயல்களின் மீதானதும், சூயெஸ் கால்வாய் மீதானதுமான அரபுக்களின் பயமுறுத்தல்கள் தொடர்ந்து இருந்தன.

''நான் அறிக்கைகளின் தொகுப்புக்களைப் பாத்துக்கொண்டிருந்தேன். பிராட்ஷோ சொன்னார்.

ரெவர் பிறவுண் ஒரு சுருட்டைப் பற்ற வைத்து விட்டு, ''ஆமாம், மிக சுவாரஸ்யமாக இருக்கிறது. யூதர்கள் எங்கள் விருப்பப்படி பின் புறமாகக் கடலினுள் அமிழ்ந்துச் செல்ல மாட்டார்கள் போலிருக்கிறது அல்லவா?' பிராட்ஷோ தன்னுடைய பருமனான விரல்களைமேசை மேல் தட்டிக்கொண்டே,' ''நான் உனக்கு ஏற்கனவே சொன்னேன்தானே'' என்ற பாணியில் ஜெனரல் சொன்னதை உள்ளூர வெறுத்துக் கொண்டிருந்தார். ''கில வாரங்களில் நான் ஏதாவது ஒரு சிபார்சைச் செய்யவேண்டும்.'' ''உன்னுடைய ஊசி ஏற்றுவது போன்ற அர்த்தப்படுத்தல்கள் எனக்குத் தேவையில்லை, சேர். கிளரென்ஸ் ஹேவன் ஹோர்ஸ்ற்ஜ தொடர்ந்து வைத்திருப்பது நல்லதா என்பது பற்றிக் கதைக்கவே விரும்பினேன். யூதர்களோடு கடுமையாக நடந்து கொள்ள நேரம் வந்து விட்டது என்றுதான் நினைக்கிறேன்.''

''யுத்தக் குற்றவாளிகள் சிறையிலிருந்து எஸ். எஸ். ஜெனரல்கள் சிலரின் சேவையைப் பெற்றுக் கொள்ள விரும்பாவிட்டால் நீங்கள் நினைக்கும் வேலைக்கு ஹேவன் -ஹோர்ஸ்ற் சரியான ஆள்தான். நாங்கள் இன்னும் பலஸ்தீனத்தில் ஒரு சிவில் அரசை நடத்துகிறோம். ஞாபகமிருக்கிறதுதானே. நாங்கள் ஒரு உயர்ஸ்தானிகரையும் அங்கு வைத்திருக்கிறோம்.''

பிராட்ஷோவின் முகம் அவமானத்தால் சிவந்து போயிற்று. ஒவ்வொரு நாளும் குறைந்து, மூர்க்கத்தனம் அதிகரித்து விட்ட தன் பொறுமையிழக்கும் தன்மையைக் கட்டுப் படுத்திக் கொண்டார். ''ஹேவன் றோர்ஸ்ற்க்கு அதிக அதிகாரங்களைக் கொடுக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது என்று நினைக்கிறேன் அவர் மேசையின் மேலால் ஒரு ஆவணத்தை ரெவர் பிறவுனுக்குக் கையளித்தார்.

அது பலஸ்தீனத்தின் பிரிட்டிஷ் கொமாண்டரான ஜெனரல் சேர். ஆர்னோல்ட் ஹேவன் ஹோர்ஸ்ற், கே. பி. ஈ (Knight of Companion of theOrder British Empire) சி. பி. of the Bath) டி. எஸ்.ஒ (Dishtinguished Serviec order) எம்.சி.(Military Gross) எல்லாம் கௌரவப் பட்டங்கள்) க்கு முகவரியிடப்பட்ட ஒரு கடிதம்.

''நிலைமைகள் வெகு மோசமான நிலைமையை அடைந்து விட்டதால், உடனடியாக நிலைமையைச் சீராக்க உங்களால் வழிமுறைகள் ஏதாவது சிபார்சு செய்யப்படாத பட்சத்தில் பிரச்சினையை ஐக்கிய நாடுகள் சபைக்கு கையளிக்க வேண்டிய கட்டாயம் எனக்கு ஏற்படும்.''

''நன்றாகச் சொல்லியிருக்கிறீர்கள், பிராட்ஷோ. நீங்கள் திகில் கதைகளின் ரசிகராக இருக்கும் பட்சத்தில் ஹேவன் ஹோர்ஸ்ற் ருசிகரமான. சில வழிமுறைகளைச் சிபார்சு செய்வார் என்று நினைக்கிறேன்.''

ஷாபெட் - பலஸ்தீனம்.

எக்லோடஸ் பிரச்சினைக்குப் பிறகு பிரிகேடியர் புரூஸ் சுதர்லாண்டின் சேவையிலிருந்து ஓய்வு பெறும் உத்தரவு விரைவாகவும், ஆரவாரமில்லாமலும் வந்து சேர்ந்தது. அவர் பலஸ்தீனத்துக்கு வந்து, வடகலிலியில், ஹூலே பள்ளத்தாக்கின் புகுவழியில் இருந்த புராதன நகரமான ஷாபெட் அருகே கானான் மலையில் குடியமர்ந்தார். நீண்ட காலத்துக்குப் பிறகு கடைசியாகத் தன் தாயின் மறைவுக்குப் பின்னால் ஏற்பட்ட வருடக்கணக்கான துன்பங்களிலிருந்து விடுதலையும், சிறிது அமைதியுமடைந்தார். வாழ்க்கையில் முதல் தடவையாகப் பயமின்றித் தூங்க முடிந்தது. ஷாபெட்டிலிருந்து 3மைல் தூரத்தில் ஒரு அழகான சிறிய மாளிகையைக் கானான் மலையில் கொள்வனவு செய்து கொண்டார். அவ்விடத்தில் பலஸ்தீனத்திலேயே தூயதான காற்று வீசியதோடு, தொடர்ந்து வீசிய புதிய காற்று முதுவேனில்கால வெப்பத்தை அவ்விடத்தில் முழுதாக ஆதிக்கம் செலுத்த விடாது அடித்தது.

அவரது வீடு வெள்ளைச் சாந்தாலும், சிவப்பு ஓட்டுக் கூரையும், கருங்கற்கள் பதித்த தரையையும் கொண்டிருந்தது. அது அதிகம் அடைபடாமலும், காற்றோட்டமாயும், மத்தியதரைக் கடல் பாணிரசனையோடு அமைக்கப்பட்டிருந்த தளபாடங்களோடும் காணப்பட்டது. அவரின் வீட்டின் பின்பக்கத்திற்கு அப்பால் புல் வளர்க்கப்பட்டிருந்த நான்கு டுனாம்கள் பரப்பளவான குன்றுச் சரிவொன்று இருந்தது. அதை அவர் நாஞூறு கலிலி றோசாச் செடிகள் கொண்ட அழகிய மலர்த் தோட்டமாக மாற்றியிருந்தார்.

பின்புற மலர்த்தோட்டம், பள்ளத்தாக்குக்குக் குறுக்கே, ஷாபெட்டின் வியப்பூட்டும் தோற்றத்தைப் பார்க்கக்கூடிய வகையில், அமைந்திருந்தது. இங்கிருந்து அந்த நகரமானது ஒழுங்கான ஒரு கூம்பு வடிவத்தில் தோற்றமளித்து. ஷாபெட்டின் அகன்ற அடிவாரத்தில் இருந்து ஆரம்பமாகிய பாதைகள் வளைந்து. வளைந்து ஆகாயத்தில் மூவாயிரம் அடி தூரத்திற்கு உயர்ந்திருந்த உச்சியின் அக்ரோபோலிசுக்கு (Acropolis) உயர்ந்து சென்றன. பலஸ்தீனத்தின் பல மலையுச்சிகளைப் போலவே, ஷாபெட்டின் மலையுச்சியும் முன்பு கிரேக்கர்களுக்கும் ரோமர்களுக்கும் எதிரான ஹீப்ரூக்களின் புரட்சிகளின்போது அரணாகத் திகழ்ந்திருந்தது

அவர் தனது நேரத்தைப், பலஸ்தீனத்திலேயே சிறந்தது 'எனக் கருதப்பட்ட, தனது ரோசாத் தோட்டத்தில் நடப்பதிலோ, பரிசுத்த இடங்களுக்குப் பயணம் செய்வதிலோ, ஹீப்ரூவையும், அரபு மொழியையும் கற்பதிலோ, ஷாபெட்டின் வளைந்த இலக்கற்ற புதிர்போன்ற பாதைகளில் அலைந்து திரிவதிலோ செலவிட்டார். நகரம் நிரந்தரமாக வியப்பூட்டுவதாக இருந்தது. அது மலைச்சரிவுகளில் இணைந்ததாகக் காட்சியளித்தது. அதனுடைய ஒடுங்கிய கீழைத்தேய பாணிப்பாதைகள் எதுவித நிலையான வடிவமைப்புமின்றி உச்சியை நோக்கி வளைந்து வளைந்து சென்றன. வீடுகளும், அதேபோலவே, ஒன்றாக நெருக்கியடித்து ஒழுங்கு முறையெதுவும் இல்லாமல் அமைக்கப்பட்டிருந்தன. இவை ஒவ்வொன்றும் தமக்கே உரிய விசேட வடிவமைப்புகளுடனும், காற்றுத் துவாரங்கள் விதவிதமான, வினோதமான அமைப்புகளையுடைய ஜன்னல்கள், கதவுகள், உப்பரிகைகளுடன் நெருக்கமான அந்தப் பாதைகளில் குவிந்திருந்து ஒரு இளம்புரியாத சுவர்ச்சியை உருவாக்கியிருந்தன.

நகரத்தின் பத்திலொரு பகுதியளவு யூத குடியிருப்புகளாயிருந்தன. இங்கே ஏழ்மையான' சக மதத்தைச் சார்ந்தவர்களால் அளிக்கப்படும் தானங்களைக் கொண்டு சீவிப்பதில் திருப்தி காணும் பக்தியான யூதர்கள் வாழ்ந்து வந்தார்கள். ஷாபெட் கபாலா எனப்பட்ட யூத இறைத் தொடர்பியல் விஞ்ஞானத்தின் (Science of Mysticism) மத்திய ஸ்தானமாக இருந்தது. புராதன காலத்தில் இருந்தே இப்பிரிவினர் வேதாகமத்தைக் கற்பதிலும், செபதபத்திலும் சீவிய நாட்களைச் செல வழித்ததோடு, நகரத்தைப் போலவே வினோதமான தோற்றத்தைக் கொண்டிருந்தார்கள். எப்பவோ நல்ல நிலையில் இருந்த மகத்தான பட்டுத் துணிகளின் கந்தைகளையும், அந்த மண்ணுக்கொவ்வாத உடைகளையும் அணிந்து கொண்டு, மிகச் சிறியவையான கடை வரிசைக்களின் ஊடாகப் போய் வருவார்கள். இவர்கள், மிக மென்மையானவர்களாயும், அமைதியானவர்களாகவும் இருந்ததால், தங்களைத் தாங்களே பாதுகாக்க முடியாமல், மூப்தியின் சுலவரங்களில் மிகுந்த பாதிப்புக்குள்ளானார்கள்.

பலஸ்தீனத்தின் நீண்ட சரித்திரம், யூதர்கள் இடைவெளி இல்லாமல் தொடர்ந்து அங்கே இருந்து வந்ததற்கான சான்றுகளை உள்ளடக்கியதாகும். சிலுவை யுத்தவீரர்கள் அவர்களை விரட்டியடித்தனர். ஆனால், அவர்களின் வீழ்ச்சிக்குப் பிறகு கபாலாக்கள் ஷாபெட்டுக்குத் திரும்பி அங்கு வந்து குடியேறித்

தொடர்ச்சியாக அங்கேயே வாழ்ந்து வந்தார்கள். புதைகாடு, நானூறு, ஐநூறு, வருடங்கள் பழமையான கபாலா கல்விமான்களின் சமாதிகளைக் கொண்டிருந்தது. ஷாபெட்டில் புதைக்கப்படும் எவரும், நேரடியாக கான் ஈடனுக்கு அதாவது ஈடன் தோட்டத்துக்குப் போவார்கள், என்று கபாலாக்கள் நம்பினார்கள். அவ்வளவுக்கு அங்கே வீசிய காற்றும் தூய்மையாக இருந்தது.

சின்னஞ்சிறிய சின்னக் கோக்குகள் நிறைந்த நெருக்கடி மிகுந்த பாதைகளூடாக நடந்து செல்வதிலோ, அங்கிருந்த மக்களை அவதானிப்பதிலோ, ராபிக் களுடையவும், கபாலாவைப்பற்றியதுமான நாடோடிக் கதைகளையும், பழங்கதைகளையும், கேட்டு அறிந்து கொள்வதிலோ சலிப்படைந்து விடவில்லை.

அரபுப்பகுதியிலோ, உலகெங்கிலும் அரபு நகரங்களில் வழமையாகக் காணப்படும் விதத்தில் உடைந்த சேதமடைந்த குடியிருப்புக்கள் காணப்பட்டன ஆயினும், ஷாபெட்டில் காணப்பட்ட அருமையான கால நிலையாலும், அழகான காட்சிகளாலும் கவரப்பட்ட அநேக நிலச்சுவான்தார்கள் குடும்பத்தினர் அங்கே இடவசதி மிக்க அருமையான வீடுகளை அமைத்திருந்தனர். கானான் மலையில், யூதர்களின் வீடுகளும், உல்லாச விடுதிகளும் காணப்பட்டன. ஷாபெட்டில் செல்வந்தர்களான அரபுக்களுக்காக இதே மாதிரி ஷாபெட்டின் அரபுப்பகுதியில் வசதிகளிருந்தன. சுதர்லாண்டுக்கு இந்த இரு இடங்களிலுமே நண்பர்கள் இருந்தார்கள்.

மற்றவர்களின் கட்டிடங்களின் சிதைவுகள் மேல் தங்கள் கட்டிடங்களை அமைத்துக் கொள்ளும் அரபுக்களின் வழக்கத்தையொட்டி, ஷாபெட்டிலும், சாதாரண குடியிருப்புகளாக மாற்றப்பட்டு விட்ட புராதனகால (Medieval) கட்டிடங்களின் சிதைவுகள் இருந்தன. ஹங்கேரிய சிலுவை யுத்த வீரர்களின் கன்னியர் மடம் ஒன்றின் மீது நிர்மாணிக்கப்பட்டிருந்த யாக்கோப்பின் புதல்விகளின் பள்ளிவாசல் இதற்கொரு மிக அழகான உதாரணமாகும்.

ஷாபெட்டுக்கு வைக்கப்பட்ட கிரீடம் போல் அதன் அக்ரோபோலின் (Acropolis) விளங்கியது. அதன் உச்சிக்கு வளைந்து வளைந்து செல்கின்ற பாதைகள் பழைய நைற்ஸ் ரெம்பிளர் கோட்டையையும், ஹீப்ரூ கோட்டையொன்றின் சிதைவையும் கடந்து சென்றன. உச்சி ஒரு பைன் மரக்காட்டில் காட்டுப்பூக்கள் கம்பளம் போல் சூழ்ந்திருக்க நின்று கொண்டிருந்தது. அங்கிருந்து தெற்கே, கலிலிக்கடலிருந்து, வடக்கே ஹூலே வாவிவரை ஜோர்தானா நதி வளைந்து வளைந்து செல்லும் அழகைக் காணக்கூடியதாக இருந்தது. அடிவானத்திலோ ஹெர்மன் மலை தோற்றமளித்தது. மெரோன் மலைக்கப்பால் இருந்த கலிலியின் எல்லாக் குன்றுகளையும், பள்ளத்தாக்குகளையும் மேற்குப் பக்கத்தில் தெளிவாகக் காணக்கூடியதாக இருந்தது.

இத்தப் புராதான நகரத்தில் வருடத்துக்கொருமுறை பண்டைய ஹீப்ரூக்கள் வந்து நெருப்பொன்றை மூட்டுவார்கள். இந்த சைகை மற்றைய நகரங்களில் இருப்போரால் அவதானிக்கப்பட்டு, பரிசுத்த நாட்களின் ஆரம்பத்தை ஏனைய

இடங்களுக்கும் அறிவிக்கும். நாள்காட்டிகள் பாவனைக்கு வருவதற்கு முன் பரிசுத்த நாட்கள், பிரதான ராபியினால் கணிக்கப்பட்டு, ஜெருசலேமிலிருந்து தபோருக்கும், அங்கிருந்து ஜில்போடாவுக்கும் அங்கிருந்து ஷாபெட்டுக்கும் ஏன் யூதர்கள் அடிமைத்தனத்திலிருந்த பாபிலோனுக்கும் இந்த மலையுச்சி நெருப்பு களின் மூலம்தான் அறிவிக்கப்படும்.

பார்வையில் தோன்றும் கவிதை போன்ற இந்தப் பூரணமான அழகை ஒரேயொரு விடயம்தான் அபஸ்வரம் போல் குழம்பிக் கொண்டிருந்தது. ஒரு பெரிய விவகாரமான ராக்காட் கோட்டை, கானான் மலைக்குப் போகும் பாதையில், ஷாபெட்டுக்கு வெளியே இருந்தது இது சுதர்லாண்டின் மாளிகைக்கும் தெரிந்து கொண்டிருந்தது.

சுதர்லாண்ட் வடக்கே பிரயாணங்களை மேற்கொண்டார். ஹேஸர் குன் றுகளைப் பார்வையிடவும், லெபனான் எல்லையருகே எஸ்தர் அரசினதும், அபு யேஷாவில் ஜோசுவாவினதும் அடக்க ஸ்தலங்களைப் பார்வையிடவும், இப்பய ணங்களை மேற்கொண்டார். தற்செயலாகத்தான் அவர் கான் டப்னாவுக்குள் போய் டாக்டர் லிப்பர்மானுடனும், கிற்றியுடனும் சினேகித்தை ஏற்படுத்திக் கொண்டது நிகழ்ந்தது. சைப்பிரசில் குறுகிய காலம் ஏற்பட்ட அறிமுகத்தைப் புதுப்பித்துக் கொண்டது ஒரு வரவேற்புக்குரிய விடயமாகக் கிற்றி பிறமென் றுக்கும் சுதர்லாண்டுக்கும் இருந்தது. பிள்ளைகளின் பாதுகாவலரான புனித ராக மாறுவதில் சுதர்லாண்டுக்கும் மகிழ்ச்சியே. அவரது மாளிகைக்கும் ஷாபெட்டுக்கும் தன்னோடு சில மனக்குழப்பமடைந்த பிள்ளைகளை அழைத் துப்போக கிற்றி அவரை வற்புறுத்தி அனுமதி பெற்றுக் கொண்டாள். விரை விலேயே நல்ல நண்பர்களாயினர்.

ஒரு மாலைப்பொழுதில் கான் டப்னாவில் இருந்து திரும்பி வந்த சுதர் லாண்ட், தன் முன்னாள் உதவியாளரான மேஜர் பிறெட் கால்ட்வெல் தனக் காகக் காத்துக் கொண்டிருப்பதைக் கண்டு வியப்புற்றார்.

''நீ பலஸ்தீனத்துக்கு வந்து எவ்வளவு காலமாகிறது பிறெடி?''

''கொஞ்சக் காலம்தான்.''

''எங்கே வேலை?''

''தலைமைப் பணியகம். ஜெருசலேம். தகவல் சேகரிப்பு - ஆய்வுப் பிரிவு. குற்றவியல் தடுப்புப் பிரிவினரோடு இணைந்து வேலை செய்கிறேன். அண்மை யில், உத்தியோகத்தர்களை மாற்றினார்கள். எங்களில் சிலர், ஹகானாவுக்கும், மக்கபீசுக்கும் அனுசரணையாக வேலை செய்திருப்பதாகத் தெரிகிறது. உங்களால் அதை நம்ப முடிகிறதா?''

அது சுதர்லாண்டுக்கு இலகுவாகப் புரிந்து கொள்ள முடியாத விஷயமே.

''உண்மையிலேயே, நீங்கள் எப்படியிருக்கிறீர்கள் என்று பார்க்க வந்த வரத்துத்தான். நான் உங்களோடு மூன்பு வேலை செய்திருப்பதால் உங்களைப் போய்க் காணும்படி ஹேவன் ஹேர்ஸ்ற் கேட்டிருந்தார்.''

''அப்படியா?''

''உங்களுக்குத் தெரிந்திருக்கும் என்று நினைக்கிறேன். நாங்கள் தற்சமயம் அத்தியாவசியமில்லாத பிரிட்டிஷ் பிரஜைகளைப் பலஸ்தீனத்திலிருந்தும் வெளியேற்றும் பொலித் திட்டத்தை (Operation Polly) செயல்படுத்தி வருகிறோம்.''

''அதை எல்லோரும் முட்டாள் திட்டம்என்று குறிப்பிடுவதாகக் (Operation Folly) கேள்விப்பட்டோம். இந்த நக்கலைச் சிறிது மரியாதையாகச் சிரித்தபடி சமாளித்து விட்டுத் தொண்டையைத் தெளிவாக்கிக் கொண்டார்.

''ஜெனரல் ஹேவன் -ஹேர்ஸ்ற் நீங்கள் என்ன செய்யத் திட்டமிடுகிறீர்கள் என்று அறிய விரும்புகிறார்.''

''நான் எதையுமே செய்யத் திட்டமிடவில்லை. இது என் வீடு. இதுதான் நான் இருக்கப் போகுமிடம்.''

பிறெடியின் விரல்கள் மேசைமீது மெதுவாகத் தாளமிட்டன. ''நான் என்ன சொல்ல வருகிறேன் என்றால், அத்தியாவசியமில்லாதவர்கள் வெளியேறியதும், உங்களுடைய பாதுகாப்புக்குத் தான் பொறுப்பேற்க முடியாது என்று நீங்கள் புரிந்து கொள்ள வேண்டுமென்று ஜெனரல் ஹேவன் றேர்ஸ்ற் விரும்புகிறார். நீங்கள் இங்கே இருந்தால் எங்களுக்குப் பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.''

கால்ட்வெல்லின் பேச்சில் இருந்த உள்ளர்த்தம் தெளிவாகப் புரிந்தது. சுதர்லாண்டின் அனுதாபம் எங்கே இருக்கிறது என்று ஹேவன் ஹேர்ஸ்ற்றுக்குத் தெரிந்தேயிருந்தது. அவர் ஹகானாவோடு வேலை செய்யக்கூடும் என்று அவர் அஞ்சினார். உண்மையில் சுதர்லாண்டை வெளியேறிப் போகும்படி சொல்கிறார்.

''அவர் என்னைப்பற்றிக்கவலைப்படுவதற்காக, நான் நன்றியுடையவனாக இருக்கிறேன் என்று ஜெனரல் ஹேவன் ஹேர்ஸ்ற்றுக்குத் தெரிவித்து விடுங்கள். அவர் நிலைமை எனக்குப் புரிந்திருக்கிறது.''

பிறெடி இந்த விஷயத்தை மேலும் வற்புறுத்த விரும்பினாலும், சுதர்லாண்ட் விரைவாக எழுந்து அவருக்கு அங்கு சந்திக்க வந்ததற்காக நன்றி கூறி விட்டு, அவரைக் கூட்டிக்கொண்டு ஒரு சார்ஜன்ட், உத்தியோகபூர்வ வாகனத்தோடு காத்துக் கொண்டிருந்த இடம் வரை வந்து வழியனுப்பி வைத்து விட்டதால், சாத்தியமில்லாமல் போய்விட்டது. அந்தக் கார் ராக்காட் கோட்டையை நோக்கிச் செல்வதைப் பார்த்துக் கொண்டிருந்தார். வழமை போல், பிறெடி தனக்கு ஒதுக்கப்பட்ட வேலையைப் பாழடித்து விட்டார். ஹேவன் - ஹேர்ஸ்ற்றின் எச்சரிக்கையை எடுத்துக் கூறியவிதம் மிகவும் அசட்டுத்தனமானது.

சுதர்லாண்ட் மாளிகைக்குத் திரும்பி வந்து அதைப்பற்றித் திரும்பவும் யோசித்தார். அவர் உண்மையாக ஆபத்திலிருந்தார். கானான் மலையில் தனிமையில் வாழும், அரபு நண்பர்களுடைய, ஒய்வு பெற்று விட்ட ஒரு பிரிகேடியருக்கு மக்கபீஸ் விதிவிலக்கு எதுவும் அளிக்கமாட்டார்கள். ஆனால் அவருக்கு எதுவும் செய்யமுன், மக்கபீஸ்கள் இருதடவைகள் யோசிப்பார்கள். ஹகானாவினால் எவ்வித ஆபத்தும் நேராது. அவர்களோடு சிறிது தொடர்பிருந்தாலும் அவர்கள் காரணகாரியங்களைப் பாத்துத்தான் எதையும் செய்வார்கள். படுகொலைகள் அவர்கள் வழியல்ல. மறுபக்கம் ஹுசெயினி என்ன செய்வான் என்று சொல்ல முடியாது. யூதர்களிடையிலும், சுதர்லாண்டுக்கு நண்பர்கள் உண்டு. அவர்களில் எவரும் அவருக்குத் தெரியாமலே மக்கபீசில் அங்கம் வகிக்கக் கூடும்.

புரூஸ் சுதர்லாண்ட் தன் தோட்டத்துக்கு நடந்து சென்றார். அங்கே முன்பனிக்காலத்து ரோஜாப் பூக்கள் காலத்துக்கு முன்பே பூத்துக் குலுங்கிக் கொண்டிருந்தன. பள்ளத்தாக்குக்கு அப்பால் ஷாபெட்டினை நோக்கினார். இங்கு அமைதியையும், ஆறுதலையும் கண்டடைந்திருக்கிறார். பயங்கரமான கனவுகள் எங்கோ தொலைந்து விட்டன. இல்லை அவர் நாளைக்கு இங்கிருந்து போக மாட்டார். எப்போதுமே போகமாட்டார்.

கால்ட்வெல்லின் கார் சுதர்லாண்டைவிட்டுப் புறப்பட்ட சில நேரத்துக்கெல்லாம், ராக்காட் கோட்டைக்குள் பிரவேசித்தது. நாலு வெளிச்சுவர்களும், காரியாலயங்களையும், படை வீடுகளையும் கொண்டிருந்தன. உள்முற்றம், ஒன்று கூடும் இடமாகவும் வாகனங்களை நிறுத்தும் இடமாகவும் பயன்பட்டது. அவரை யாரோ சந்தித்து குற்றவியல் விசாரணைப் பிரிவுக்குச் செல்லுமாறு கூறினார்கள்.

''இன்றிரவு நீங்கள் திரும்பவும் ஜெருசலேம் போகிறீர்களா? மேஜர் கால்ட்வெல்?'' சி.ஐ.டி இன்ஸ்பெக்டர் கேட்டார்.

பிறெடி தன் கைக்கடிகாரத்தைப் பார்த்து விட்டு ''ஆமாம், போகத் தான் திட்டமிடுகிறேன். இப்போதே புறப்பட்டால் சாயந்தரத்துக்குள் போய் விடலாம்.''

''நல்லது, இங்கே வைத்திருக்கும் ஒரு யூதனை ஜெருசலேம் சி.ஐ.டி விசாரணைக்காகக் கொண்டு போக விரும்புகிறேன். மக்கபீஸ் கைதி. ஆபத்தானவன். நாம் இங்கே இவனை வைத்திருப்பதை மக்கபீஸ் அறிந்திருக்கக்கூடிய வாய்ப்புக்கள் இருப்பதால், அவனை இங்கிருந்து கொண்டு போகக்கூடிய வாகனத் தொடர் ஒன்றுக்காக அவர்கள் காத்திருக்ககூடும். அதனால்தான், உங்கள் காரில் கொண்டுபோவது பாதுகாப்பானது என்று நினைக்கிறேன்.''

''மகிழ்ச்சியோடு செய்கிறேன்.''

''அந்த யூதப் பையனை இங்கு கொண்டு வாருங்கள்.''

கால்களிலும், கைகளிலும் சங்கிலியால் பிணைக்கப்பட்ட ஒரு பதினாலு அல்லது பதினைந்து வயதுடைய ஒரு பையனை இரு சிப்பாய்கள் உள்ளே இழுத்து வந்தனர். வாயில் ஒரு அடைப்பு ஒட்டப்பட்டிருந்தது. அவனுடைய முகம் சி.ஐ.டி யின் மூன்றாந்தரசெயல்களால் காயங்களோடிருந்தது. இன்ஸ் பெக்டர் கைதியின் அருகில் நடந்து சென்றார். ''பென் சொலமனுடைய தேவதூதனுடையதைப் போன்ற முகத்தைப் பார்த்து ஏமாந்து விடாதீர்கள் இவன் ஒரு நாய்மகன்.',

''பென் சொலமன் .. பென் சொலமன் .. அப்படியொரு பெயரைப் பார்த்ததாக எனக்கு ஞாபகமில்லை.''

''நேற்றிரவுதான் இவனைப் பிடித்தோம். ஷாபெட் பொலிஸ் நிலையம் மீது தாக்குதல் நடந்தது. அவர்கள் ஆயுதங்களைத் திருட முயன்றார்கள். இவன் கைக்குண்டால் இரு பொலிஸ்காரர்களைக் கொன்றான். என்னடா எளிய நாயே!''

பென் சொலமன் அலட்சியம் பொங்கும் கண்களால் இன்ஸ்பெக்டரை நோக்கியபடி நின்றான்.

அவனுடைய வாய் மூடியை எடுத்துவிடாதீர்கள். மேஜர் கால்ட் வெல், பிறகு உங்களுக்கு சங்கீதங்களைப் பாடிக்காட்டத் தொடங்கி விடுவான். சரியான வெறி பிடித்த ஒரு மனிதன்

அவன் தெடர்ந்து அவரைப் பார்த்துக்கொண்டிருந்த பார்வையால் ஆத் திரமுற்ற இன்ஸ்பெக்டர் அவனை நோக்கி அடியொன்றை எடுத்து வைத்து அவன் வாய்க்குக் குறுக்காக அறைந்த அறையின் வேகத்தில், குருதி வடிய நிலத்தில் சங்கிலிகளுள் சரிந்து விழுந்தான்.

''இவனை இங்கிருந்து வெளியே கொண்டுபோங்கள்.'' இன்ஸ்பெக்டர் பதட்டமான குரலில் வெடித்தார். அந்தப் பையனைக் கொண்டு போய்க் காரின் பின்புறத் தளத்தில் தள்ளினார்கள். ஆயுதந்தாங்கிய சிப்பாய் ஒருவன் பின்னால் அவனோடிருக்க, கால்ட்வெல் சாரதியின் அருகில் அமர, அவர்கள் ராக்காட் கோட்டைக்கு வெளியே காரை ஓட்டிச் சென்றார்கள்.

''எளிய வேசி மகன்.'' சாரதி அடித்தொண்டையில் முணுமுணுத்தான்' தொடர்ந்து ''எங்களைச்சில வாரங்களுக்கு இந்த யூதர்களை கவனிக்க அனு மதிக்க வேண்டும் என நான் நினைக்கிறேன். ஆமாம். அப்படித்தான் செய்ய வேண்டும்'' என்றான்.

''என்னுடைய நல்பன் ஒருவன் போன் வாரம் கொல்லப்பட்டான்.'' என்றான் பின்னாலிருந்த சிப்பாய் தொடர்ந்து, ''என்ன நல்ல மனிதன் அவன்

மனைவியும் புதிதாகப் பிறந்த குழந்தையும் அவனுக்கு இருக்கின்றனர். மக்க பிஸ்கள் அவனைத் தலைக்கூடாகச் சுட்டிருந்தார்கள்'' என்றான்.

அவர்கள் ஷீன் பள்ளத்தாக்கினுள் பிரவேசித்த போது சிறிது எச்சரிக் கையாயிருப்பதைத் தளர்த்திக் கொண்டனர். இது முழு அரபுப்பிரதேசமாக இருந்ததால், தாக்கப்படும்அபாயம் ஜெருசலேமை நெருங்கிய பிறகுதான் ஏற்படும்

காட்வேல் திரும்பித் தளத்தில் கிடந்த கைதியைப் பார்த்தார். வெறுப் பினால் வயிறு கலங்கியது. அவர் புரூஸ் சுதர்லாண்டை வெறுத்தார். சுதர்லாண்ட் ஹகானாவுக்கு உதவிசெய்கிறார் என்பது அவருக்குத் தெரிந்தேயிருந்தது. சுதர் லாண்ட் ஒரு யூதரை நேசிக்கும் ஆள். சைபிரசில் நிகழ்ந்த படுதோல்வியை வேண்டுமென்றே நிகழ விட்டார்.

தான் கராஒலொஸ் முகாமின் முட்கம்பி வேலிக்கருகே, நின்றபொழுது ஒரு தடித்த யூதப்பெண் தன்மேல் காறித்துப்பியது காட்வெலின் ஞாபகத் துக்கு வந்தது.

அவர் திரும்பவும் தளத்தில் கிடந்த பையனைப் பார்த்தார். காவலன் இருக்கையின் நடுவில் அமர்ந்திருந்தான். அவனது பாரமான காலணிகள் அணிந்த காலொன்று பென் சொலமனின் தலைமேல் இருந்தது. அவனது முகத்திலோ குதூகலம் கொக்கரித்துக் கொண்டிருந்தது,

''ஊத்தை யூதன்'' காட்வெல், அடிக்குரலில் முணுமுணுத்தார்

அவருக்குத் தான் அறிந்த பலபேரின் ஞாபகம் வரிசையாக வந்தது. லண் டன் வைற்சப்பலில் தொப்பி வைத்த உருவங்கள் ஞாபகத்துக்கு வந்தது ஊறு காயின் மணம் இப்போதும் மணப்பது போலிருந்தது.ஈட்டுகடைவரிசைகளும். அவற்றில் மேசைகளின் மேல் குனிந்து இருந்தபடி பிரார்த்தனைகளை முணுமு ணுத்தபடி இருக்கிறவர்கள் எல்லாமே ஞாபகத்துக்கு வந்தது. கறுத்தத் தொப்பிகளுடன் யூத பாடசாலைக்குச் செல்லும் சிறு பையன்களும் ஞாப கத்தில் வந்தார்கள்.

அவர்களுள் முழு அரபுநகரமான நப்லஸ் (Nablus) நோக்கிச் சென்றனர்.

காட்வெல், அதிகாரிகள் கிளப்பையும், அங்கு சொல்லப்படும் பகிடிகளை யும் நினைவு கூர்ந்தார்.தனது தாயார் தன்னை ஒரு கெடுபிடியான யூத டாக்டரின் காரியாலயத்தினுள் அழைத்துச் செல்வதை நினைவு கூர்ந்தார்.

ஹிட்லரின் கொள்கைகள் பிழையானவை என்று இவர்கள் சொல்லுகிறார் கள். ஹிட்லருக்குத்தான் நிலைமை சரியாய்த் தெரிந்திருந்தது. ஹிட்லர் எல்லோ ரையும் தீர்த்துக் கட்டுவதற்கு முன்பு போர் முடிந்து விட்டது துரதிஷ்டவச மானதே. சுதர்லாண்டோடு பேர்கன் - பெல்சனுக்குள் பிரவேசித்ததை நினைவு கூர்ந்தார். சுதர்லாண்ட் தான் கண்டவைகளால் மனம் கலங்கியிருந்தார். காட்வெ

வெல்லுக்கு அப்படியிருக்கவில்லை. யூதர்கள் எவ்வளவு அதிகமாகச் சாகிறார்களோ, அவ்வளவுக்கு நல்லது.

அவர்கள் யிசுவ்வுக்கு எதிர்ப்பு மனப்பான்மை நிரம்பியதாகப் பகிரங்கமாகத் தெரிந்த ஒரு அரபு கிராமத்துக்குள் பிரவேசித்தார்கள். இது ஹுசெயினியின் பலமான ஒரு தளம்.

''காரை நிறுத்து!'' கால்ட்வெல் உத்தரவிட்டார். ''நீங்கள் இருவரும் கவனமாக நான் சொல்வதைக் கேளுங்கள். நாங்கள் இந்தக் கழிசடையை வெளியில் எறிந்து விட்டுச் செல்வோம்'' என்றார்.

''மேஜர் அவர்கள் இவனைக் கொலை செய்து விடுவார்கள்'' என்றான் காவலுக்கு வந்தவன்.

''எனக்கு யூதரில் வெறுப்புத்தான் என்று நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால், எங்கள் கைதியைக் கொண்டு போய் ஒப்படைக்க வேண்டிய கடமை எங்களுக்கு இருக்கிறதல்லவா?'' என்றான் சாரதி.

வாயை மூடு! கால்ட்வெல் அரை வெறித்தனமான குரலில் வெடித்தார். ''நாங்கள் இவனை வெளியே எறியப் போகிறோம் என்று சொன்னேன். நீங்கள் இருவரும், எங்களை வழிமறித்த மக்கபீஸ்கள் அவனைக் கொண்டு சென்று விட்டார்கள் என்று சத்தியம் செய்ய வேண்டும். வேறு ஏதாவது சொன்னீர்களானால் கொன்று அகழிகளில் வீசிவிடுவேன். நான் சொல்வது தெளிவாகப் புரிகிறதா?''

கால்ட்வெல்லின் கண்களில் தெரிந்த வெறியைக் கண்டதும், இரு சிப்பாய்களும் வெறுமனே தலையை ஆட்டினர்.

பென் சொலமன் சங்கிலிகளிலிருந்து விடுவிக்கப்பட்டான். கோப்பிக் கடைக்குக் கிட்டே கார் வேகம் குறைந்தது. அந்தப் பையனைத் தெருவில் வீசி விட்டு அவர்கள் ஜெருசலேம் நோக்கி விரைவாகச் சென்று விட்டனர்.

எப்படி நடக்கும் என்று கால்ட்வெல்லுக்குத் தெரிந்திருந்ததோ சரியாக அப்படியே எல்லாம் நடந்தது. ஒரு மணி நேரத்துக்குள் பென் சொலமன் கொல்லப்பட்டுச் சிதைக்கப்பட்டான். அவனது தலை வெட்டப்பட்டது. உடம்பில்லாத வெறும் தலையை மயிரில் பிடித்துத் தொங்கவிட்டு அதைச் சுற்றிச் சிரித்துக் கொண்டிருந்த இருபது அரபுக்கள் இருக்கப் படம் பிடிக்கப்பட்டது. இப்போவோ, எப்பவோ முழு யூதருக்கும் நடக்கப் போவது இதுதான் என எச்சரிக்கும் வண்ணம் வெளியே அனுப்பப்பட்டது.

மேஜர் கால்ட்வெல் ஒரு பயங்கரமான பிழையை விட்டிருந்தார். பையன் வெளியே வீசப்படுவதைக் கோப்பிக் கடையிலிருந்து பார்த்துக் கொண்டிருந்த அரபுக்களில் ஒருவன் மக்கபீஸ் உறுப்பினன்.

ஜெனரல் சேர். ஆர்னோல்ட் ஹேவன் - ஹேர்ஸ்ற், கேபிஈ, சீபீ. டீஎஸ்ஓ எம்சி. கோபமுற்றிருந்தார். அவர் ஜெருசலேமின் ஸ்நெல்லர் வளாகத்திலிருந்த தன் காரியாலயத்தில் அங்கும் இங்கும் நடந்து கொண்டிருந்தவர், தன் மேசை மேலிருந்த செசில் பிராட்ஷோவின் கடிதத்தை இழுத்தெடுத்துத் திரும்பவும் வாசித்தார்.

நிலைமைகள் மிக மோசமான நிலையை அடைந்து விட்டதால், உடனடியாக நிலைமையைச் சீராக்க உங்களால் வழிமுறைகள் ஏதாவது சிபார்சு செய்யப்படாமல் இருக்கும்பட்சத்தில் பிரச்சினையை ஐக்கிய நாடுகள் சபைக்குக்கையளிக்க வேண்டிய கட்டாயம் எனக்கு ஏற்படும்.

ஐக்கிய நாடுகள் சபைக்கா? சரிதான். உயரமான அந்த செந்தலை மனிதர் ஆத்திரத்துடன் அந்தக் கடிதத்தைக் கசக்கி நிலத்தில் எறிந்தார். ஒரு வாரத்துக்கு முன்புதான் யூத வியாபார நிலையங்களைப் பகிஷ்கரிக்குமாறு உத்தரவிட்டிருந்தார். ஐந்து வருடங்களுக்கு யூதர்களோடு போராடியதற்குத் தனக்குக் கிடைத்த நன்றி இதுதான். இரண்டாம் உலகப் போரின்போது, இந்த யூதர்களை பிரிட்டிஷ் இராணுவத்துள் சேர்க்க வேண்டாமென்று எச்சரித்தார். ஆனால் அவர்கள் கேட்கவில்லை. இப்போ பலஸ்தீனத்தை இழந்து போகுமளவிற்கு நிலைமை வந்து விட்டது. ஹேவன் - ஹேர்ஸ்ற் தனது மேசைக்குச் சென்ற பிராட்ஷோவின் கடிதத்திற்குப் பதில் எழுதத் தொடங்கினார்.

பின்வரும் முடிவுகளை உடனடியாக ஏற்று அமுல்படுத்துவது பலஸ்தீனத்தில் நிலைமையைச் சீராக்கும் என்று நான் பிரேரிக்கிறேன்.

1. சிவில் நீதிமன்றங்கள் இடைநிறுத்தப்பட்டு, எல்லா அபராதங்கள், தண்டனைகள், சிறைத்தண்டனைகள் இராணுவக் கொமாண்டரால் மட்டும் விதிக்கப்பட வேண்டும்.

2. யிசுவ் மையம் கலைக்கப்பட்டு, சியோன் குடியமர்தல் கழகமும் வேறு யூக முகவர் நிலையங்களும் கலைக்கப்பட வேண்டும்.

3. எல்லா யூத செய்திப் பத்திரிகைகளும், பிரசுரங்களும் தடை செய்யப்பட வேண்டும்.

4. சீராக, ஆரவாரமற்ற முறையில் கிட்டத்தட்ட அறுபது வரையான யிசுவ் தலைவர்கள் ஒழிக்கப்பட வேண்டும். இந்த முறையை ஹஜ் அமின் எல் ஹுசெயினி தன் அரசியல் எதிரிகளுக்கு எதிராகப் பாவித்து வெற்றிகரமான முறை என்று நிரூபித்துள்ளார். இதற்கு அரபு கூட்டாளிகளைப் பாவிக்கலாம்.

5. ட்ரான்ஸ் - ஜோர்டானின் அரபுப் படையணியை பூரணமாகப் பாவித்தல்.

6. பலநூறு இரண்டாவது மட்ட தலைவர்களை சிறையிலிட்டு, விரைவாக ஏதாவது தொலைதூர ஆபிரிக்கக் கொலனி ஒன்றுக்கு நாடு கடத்துதல்.

7. ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்ட எந்த கிபுட்ஸ், மொசாவ், கிராமம், அல்லது நகரின் பகுதியொன்றை அழிக்க இராணுவக் கொமாண்டருக்கு அதிகாரம் வழங்குவது. நாடு பூராவும் தேடி சட்ட விரோதக் குடியேற்றக் காரர்களை உடனடியாக நாடுகடத்தல்.

8. ஒவ்வொரு மக்கபீஸ் பயங்கரவாத நடவடிக்கைக்கும் யூதர்கள் எல்லோருக்கும் கூட்டு அபராதங்களை விதிக்கவேண்டும். இந்தக்குண்டர்களைப் பிடிக்கும் வேலையில் யூதர்களைஒத்துழைக்கப்பண்ணும் அளவிற்கு அவை அதிகளவான தாக இருக்க வேண்டும்.

9. முக்கிய மக்கபீஸ் பயங்கரவாதிகள், அலியா பெற் முகவர்கள், ஹகானா தலைவர்கள் பற்றிய தகவல்களுக்கு அதிகளவு சன்மானம் வழங்குதல்.

10. கைது செய்யப்படும் ஒவ்வொரு மக்கபீஸ் பயங்கரவாதியையும், ஸ்தலத் திலேயே தூக்கிலிடுதல், அல்லது சுட்டுக் கொல்லுதல்.

11. எல்லா யூத வர்த்தகங்களையும் பண்ணை உற்பத்திகளையும் பகிஷ்கரித்து யூத ஏற்றுமதி இறக்குமதிகளைத் தடை செய்தல். எல்லா யூத வாகனங் களினதும், சகல பிரயாணங்களையும் பூரணமாகக் கட்டுப்படுத்துதல்.

12. பால்மாக்குகளுக்குப் புகலிடம் கொடுக்கும் கிபுட்சுகளை ஆயுதம் தாங்கித் தாக்குவதன் மூலம் பால்மாக்குகளை அழித்தல்.

எனது படையினர் மிகக் கடினமான சூழ்நிலைகளுக்குக் கீழே பணியாற்ற நிர்ப்பந்திக்கப் பட்டிருக்கிறார்கள். நாங்கள் சட்டங்களை அனுசரித்து, எமது சக்திகளை விரிவான உச்சப் பயன்பாட்டுக்கு உட்படுத்துவதில் இருந்து கட்டுப் படுத்தப் பட்டிருக்கிறோம். மறுபக்கத்தில், மக்கபீஸ், ஹகானா, பால்மாக், அலியாபெற் ஆகியவை எந்தவிதச் சட்டங்களையும் அனுசரிக்காமல், எங்கள் சுய கட்டுப்பாட்டை பலவீனமாகக் கருதித் தாக்குகிறார்கள். எனக்குள்ள சக்திகளைப் பாவித்து செயல்பட அனுமதிக்கப்பட்டால் விரைவிலேயே இங்கு ஒழுங்கு நிலை நாட்டப்படும்.

ஜெனரல். சேர் ஆர்னோல்ட் ஹேவன் ஹோர்ஸ்ற்
கே. பி. ஈ, சி. பி, டி. எஸ். ஓ. எம். ஐ.

சதாம் ஹவுஸ், வெளியுறவுக் காரியாலயம், லண்டன்.

ஜெனரல் ரெவர் பிறவுண் இறுதியாக செசில் பிராட்ஷோவின் காரியா லயத்தை அடைந்த போது அவர் வெளிறிப் போயிருந்தார்.

"பிராட்ஹோ, ஹேவன் ஹோர்ஸ்ற்றின் அபிப்பிராயத்தைக் கேட்டிருந் தீர்கள். இப்போது அது கிடைத்திருக்கிறது."

''அந்த மனிதனுக்குப் பைத்தியம் பிடித்து விட்டதா? என்னுடைய கடவுளே! அவருடைய அறிக்கை அடோல்ப் ஹிட்லரின் ''இறுதித் தீர்வு'' போல் இருக்கிறது.''

பீராட்ஷோ, ஹேவன் ஹோர்ஸ்ற்றின் பன்னிரண்டு அம்ச அறிக்கையை எடுத்துப் பார்த்துவிட்டுத் தலையை ஆட்டினார். ''கடவுளுக்குத் தெரியும். நாங்கள் பலஸ்தீனத்தை வைத்திருக்கவே விரும்புகிறோம். ஆனால், கொலைகள் கிராமங்களை எரித்தல், தூக்கிலிடுதல், பட்டினிபோடுதல்? என்னால் இந்த மிருகத்தனமான அறிக்கையைச் சபார்சு செய்ய முடியாது. நான் சபார்சு செய்தாலும், இதைஅமுல்படுத்தத் தேவையான இராணுவத்தினர் பிரிட்டிஷ் படைகளில் இருக்கிறார்களோ தெரியவில்லை. நான் சாம்ராஜ்யத்துக்காகவே என் வாழ்நாள் முழுவதும் பணி புரிந்திருக்கிறேன், சேர் இளாரன்ஸ். நாங்கள் எத்தனையோ முறை கடுமையான, நியாயமற்ற தடவடிக்கைகளை எமது நலன் கருதி எடுத்திருக்கிறோம். ஆனால், நான் கடவுளையும் நம்புகிறேன். இப்படியான முறைகளால் பலஸ்தீனத்தை வைத்திருக்க முடியாது. இந்த விடயத்தில் எனது கைகளைக் கழுவிக் கொள்கிறேன். வேறு யாராவது ஹேவன் ஹோர்ஸ்ற்றை சபோர்சு செய்யட்டும், என்னால் முடியாது.''

செசில் பிராட்ஷோ, ஹேவன் ஹோர்ஸ்ரின் அறிக்கையை எடுத்துக் கசக்கினார். தன்னுடைய பெரிய சாம்பல் கிண்ணத்தில் அதைவைத்து ஒரு நெருப்புக் குச்சைத் தட்டிப் பற்றவைத்து அது எரிவதை அவதானித்தார். எங்கள் பாவங்களுக்கு மறுமொழி சொல்லத் துணிவிருப்பதற்கு கடவுளுக்கு நன்றி கூற வேண்டும்'' என அவர் முணுமுணுத்தார்

பலஸ்தினிய பிரச்சினை ஐக்கிய நாடுகள் சபையின் கவனத்துக்கு திறந்து விடப்பட்டது.

அத்தியாயம் ஏழு

இப்போ 1947 ன் பின் இளவேனிற் காலமாகியிருந்தது. கிற்றி பிறமென்றின் வாழ்க்கையிலிருந்து அரி பென் கானான் மூற்றாக மறைந்து போனான். தபோர் மலையில் சந்தித்த பிறகு, அவனைக் காணவோ, அவன் செய்திகளைப் பெற வோ இல்லை. ஜோர்தானாவிடம்ஏதாவது செய்தி அனுப்பியிருந்தால், அதை அவள் கிற்றிக்குக் கொடுக்கவில்லை. இரண்டு பெண்களும் மிக அருமையாகவே பேசிக் கொண்டனர். கிற்றி சிறிது சகித்துக் கொண்டு போனாலும், ஜோர்தானா அதைக்கூட ஒரு கஷ்டமான விஷயமாக்கிவிட்டாள்.

பலஸ்தீனியபிரச்சினை தீர்வுக்காக ஐக்கிய நாடுகள் சபைக்கு விடப்பட்டது. ஐக்கிய நாடுகள் சபையோ சிறிய நடுநிலைமையான நாடுகளின் குழுவொன்றை அமைத்து, அவைகளைக் கொண்டு இப்பிரச்சினையை ஆராயச் செய்து, பொதுச் சபைக்கு சமர்பிக்க, சிபார்சுகளைத் தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தது.யிசுவ் மையமும், உலக சியோனிஸ்டுகளும், ஐக்கிய நாடுகள் சபையின் தலையீட்டை ஏற்றுக் கொண்டன. மறுபக்கத்திலோ, அரபுக்கள், பலஸ்தீனப் பிரச்சினைக்கு பக்கசார்பற்ற தீர்வொன்று எட்டப்படுவதிலிருந்து விலகிச் செல்ல, எச்சரிக்கைகள் விஷ்கரிப்புகள், பயமுறுத்தல்கள் மற்றும் தங்களால் இயன்ற வகையில் அழுத் தங்களைப் பிரயோகித்தார்கள்.

கான் டப்னாவில், கட்னா இராணுவப் பயிற்சி வேகப்படுத்தப்பட்டது இந்த இளைஞர் கிராமம் பிரதான ஆயுதக் களஞ்சியமாக மாறிற்று. றைபிள்கள் உள்ளே கொண்டு வரப்பட்டு, பிள்ளைகளால் துப்பரவு செய்யப்பட்டுப் பின் கிராமத்தின் ட்ரக்குளில் ஹுலே குடியேற்றங்களுக்கும், பால்மாக்குக்கும் கடத் தப்பட்டன. பலமுறைகளில் கரேன் வெளியே ஆயுதங்களைக் கடத்திச் செல் லும் முயற்சிகளில் ஈடுபட அழைக்கப்பட்டாள். இப்படியாக ஒதுக்கப்படும் வேலை கள் அவளாலும், மற்றைய பிள்ளைகளாலும் கேள்வி எதுவும் இன்றி ஏற்றுக் கொள்ளப்பட்டன. ஒவ்வொரு முறையும் கரேன் வெளியே செல்லும் போது கிற்றியின் இதயம் அவள் திரும்பி வரும்வரை பதைத்துக் கொண்டிருக்கும். ஆனால் அவள் மௌனத்தைக் கடைப்பிடிக்க வேண்டியிருந்தது. கரேன் விடாமுயற்சியோடு தன் தந்தையைத் தேடும் முயற்சியைத் தொடர்ந்து மேற் கொண்டாள். லாசியோடாட்டில். பிரகாசமாக இருந்த நம்பிக்கைகள் இப்போ மங்கத் தொடங்கியிருந்தன.

அந்தப் பெண் டென்மார்க்கில் ஹான்சென்களுடன் தொடர்பு வைத்துக் கொண்டிருந்தாள். கரேன் ஒவ்வொரு வாரமும் ஒரு கடிதம் எழுதுவாள். ஒவ்வொருவாரமும் ஒரு கடிதமோ அல்லது பொதியோ கொப்பன்ஹேகனில் இருந்து வந்து கொண்டிருந்தன, மேற்றாவும்ஆகே ஹான்சனும்அவளைத்திரும்பப் பெறும் நம்பிக்கையை எப்பவோ கைவிட்டிருந்தார்கள். அவளது தந்தையைக் கண்டுபிடிக்க முடியாவிட்டாலும், அவள் அவர்களுக்குக் கிடைக்க மாட்டாள் என்பதை உணர்ந்தும் செய்தி அவள் கடிதங்களில் புலப்பட்டது. பலஸ்தீனத் துடனும், யூத இனத்தவளாகஇருந்தது பற்றிய நிலைப்பாட்டோடும், கரேனின் ஐக்கியம் முழுமையாக இருந்தது. ஒருவேறுபாடு கிற்றிபிறமென்ற்தான்.

டொவ் லன்டவ் விசித்திரமான மாற்றங்களுக்கு உள்ளாகிக் கொண்டி ருந்தான். சில நேரங்களில் தன் தனிமைக்கூட்டை உடைத்துக் கொண்டு வெளியே வருவது போலிருக்கும். அந்த வேளைகளில், அவனும் கரேனும் தங் கள் உறவிற்குப் புதிய ஆழமான பரிமாணங்களை சேர்த்துக் கொள்வார்கள். தெளிவான நிலைக்கு வரப்பண்ணும் அதே துணிகரம் அவனைத் திரும்பவும் அவன் கூட்டுக்குள் திரும்பச் செய்தது. எப்போதாவது தன் நிலைப்பாட்டைப் பற்றிய சுய விமர்சனம் செய்ய முடிந்தபோது, தான் கரேனுக்கு இழைக்கும் தவறுகளெனத் தான் கருதுபவைகளுக்காகத் தன்னைத்தானே வெறுத்துக் கொள்வான். தன்னில், அவள் காட்டும் விசுவாசம், அவனில் சுய கழிவிரக் கத்தை ஏற்படுத்தியதனால், ஒரே சமயத்தில் அவளை வெறுக்கவும், விரும்பவும் செய்தான். கரேனைத்தன் சம்பந்தத்தினால் கறைப்படுத்த விரும்பாவிட்டா லும், மன வருத்தத்துடனான, தன் ஒரே பிணைப்பை இழந்துவிட அவன் தயாராக இருக்கவில்லை. வெறுப்பினுள் மூழ்கிப்போகும் இந்த நேரங்களில், தன்கையிலிருக்கும் நீல பச்சை குத்தப்பட்ட இலக்கத்தை மணிக்கணக்காகப் பார்த்தபடி இருப்பான். இந்நேரங்களில் தன் கவனத்தைப் புத்தகங்களிலும், சித்திரங்களிலும் மூர்க்கத்தனமாகத் திருப்பி, மற்ற உயிருள்ளவைகளை வெளி யிலடைத்து விடுவான். அவன் அதலபாதாளத்தை தெருங்கும்போது எப்படியோ அவனை மீட்டெடுப்பதில் கரேன் வெற்றி பெற்று விடுவாள். அவனுடைய வெறுக்கும் தன்மை ஆழமாக வேரூன்றாதபடியால், அவளைக் கோபித்துக் கொள்ள முடியவில்லை.

கிற்றி பிறமென்ற் கான் டப்னாவில் இருந்த காலத்தில் தன்னைக் கிரா மத்தின் ஒரு முக்கியமான ஆட்களுள் ஒருத்தியாக நிலைநிறுத்திக் கொண்டி ருந்தாள். டாக்டர் லிப்பர்மான் ஒவ்வொரு நாளும் அதிகம் அதிகமாக அவளில் தங்கியிருக்கத் தொடங்கினார். அனுதாபம் கொண்ட வெளியாள் ஆகக் கருதப் பட்ட அவளால், குடும்பத்துக்கு வெளியே உள்ள எவர் மீதும் தேவையான மேலதிக செல்வாக்கைப் பிரயோகிக்கக் கூடியதாக இருந்தது. டாக்டர் லிப்பர் மானின் நட்பு அவள் இதுவரை அறிந்தவற்றுள் மிகப் பிரயோசனமான ஒன் றாக இருந்தது. அவள் கான் டப்னாவின் வாழ்க்கையில் இரண்டறக் கலந் திருந்தாள். மனக்குழப்பமடைந்திருந்த பிள்ளைகளுக்கு அவள் அற்புதமாக சேவை செய்தாள். இருந்தும் ஒரு திரை இருந்தே வந்தது. அதற்கு ஒரு வகை யில் தானும் பொறுப்பேற்க வேண்டும், என்றாலும், அதை அப்படியே இருக்க விட விரும்பினாள்.

கான் டப்னா வாசிகளை விட, புரூஸ் சுதர்லாண்ட்டோடு மனம்விட்டுப் பழகக்கூடியதாக இருந்தது. அவரோடு இருக்கும் போது ஏதோ தன் சுயமான சூழலில் வாழ்வது போலிருந்ததோடு, தானும் கரேனும், அவரது மாளிகையில் செலவழிக்கும் ஓய்வான கணங்களை ஆவலுடன் எதிர்பார்த்திருக்கத் தொடங்கினாள். அவருடன் இருக்கும் நேரங்களில் தனக்கும், யூதர்களுக்கும் இடையே இருக்கும் வேறுபாடுகள் பற்றித் தான் கொண்டிருந்த அபிப்பிராயங்கள் புதிதாக்கப்படுவதை உணர்ந்தாள்.

ஹரியற் சோல்ஸ்மான் கான் டப்னாவுக்கு இருமுறை வந்தார். இரண்டு சந்தர்ப்பங்களிலும், ரெல் அவிவ் பிரதேசத்திலிருக்கும் புதிய இளைஞர் அலியா கிராமமொன்றைக் கையேற்கும்படி அந்த வயதான அம்மையார் கேட்டுக் கொண்டார். அமைப்பு முறைகளை ஒழுங்கு செய்வதில் வல்லுநராகக் கிற்றி இருந்ததோடு வழக்கமான நடைமுறைகளையும் திடமாகக் கடைப்பிடிப்பவளாக இருந்தாள். அவளுடைய முழு அனுபவமும், ஆற்றலும், கான்டப்னா போல் திறமையாக இயக்கப்படாத வேறுபல இடங்களில் அத்தியாவசியமாகத் தேவைப்பட்டது. கிற்றி பிறமென்ற்றுக்களின் ''வெளியார் செல்வாக்கு'' இளைஞர் அலியா கிராமங்களுக்குப் பெறுமதி மிக்க ஒரு சொத்தாக இருக்குமென ஹரியற் சோல்மான் புத்திசாலித்தனமான நீர்மானமொன்றை எடுத்திருந்தார். ஆனால் கிற்றி அதற்கு மறுத்துவிட்டாள். அவள் கான் டப்னாவில் நிலைபெற்றுவிட்டதோடு, கரேனும் இயல்பாக இருக்கப் பழகிவிட்டாள். வேறு எதிர்பார்ப்புக்கள் கிற்றியிடமிருக்கலில்லை.

இதற்கு வேறொரு முக்கியமான காரணமுமிருந்தது. கட்னாவின் நடவடிக்கைகளுக்கும், ஆயுதக் கடத்தல்களுக்கும் விளக்கமளிக்கவேண்டிய நிலையில் இருக்கக்கூடிய பதவியொன்றை வகிப்பதற்கு அவள் தயாராக இருக்கவில்லை. அப்படி ஏற்றுக்கொண்டால், அது அவளை அந்த நடவடிக்கைகளில் பங்காளியாக ஆக்கிவிடும். கிற்றி தன் நடுநிலைமையை இறுகப் பிடித்துக் கொண்டாள். அவளுடைய வேலை தொழில் சார்புடையதாக இருக்குமே தவிர, அரசியல் சார்புள்ளதாக இருக்காது.

கரேன் கிளமென்றுக்கோ, கிற்றி பிறமென்ற் பெற்றோரின் துணையில்லாமல் தன்னை வளர்க்கும் மூத்த சகோதரி ஒருத்தி போலிருந்தாள். அந்தளவுக்கு கிற்றி அவளுக்கு அவசியமாகிப் போய்விட்டாள். டென்மார்க்கின் ஹான்சன்கள் அவள் வாழ்க்கையில் விலகி விலகிப் போய்க் கொண்டிருந்ததோடு அவள் தந்தையைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லை. டொவ் மட்டுமே எஞ்சியிருந்தான். ஆனால், டொவ், அவளுக்கென எதையும் கொடுத்து கிடையாது. கிற்றி, இந்த, தங்கியிருக்கும் நிலையை ஊக்குவித்ததோடு, தான்கரேனுக்கு எப்போதும் தேவைப்பட வேண்டும் என விரும்பினாள். எரெற்ஸ் இஸ்ரேலின் சக்தி என்ற மறைந்திருக்கும், எதிரியை தோற்கடிக்கும் அளவுக்கு கரேன் தன்னைத் தேட வேண்டும் என அவள் விரும்பினாள். வாரங்கள் செல்லச் செல்ல, விடுமுறைகளும் கான் டப்னாவுக்கு வந்து போயின.

முன்பனிக்காலத்தின் பின்பகுதியில் ருவ் பிசெவாற் (Tuv b' Shevat) எனப்படும், யூதர்களின் வெறித்தனமான மரம் நாட்டும் வழக்கத்தை ஞாபகம் படுத்தும் விழா வந்தது.

பங்குனி மாதப் பிற்பகுதியில் மாவீரர் நாள் வந்தது. எல்லைப்புற மலை முகடுகளின் அருகாமையினால், கட்னா துருப்புக்களை, ஜோர்தானா பென் கானான் நடைப்பயணம் ஒன்றில் தலைமைதாங்கி லெபனானிலிருந்து, பராக்கும் அக்கிவாவும் பலஸ்தீனத்திற்குள் பிரவேசித்த ரெல்ஹய்க்கு அழைத்துச்சென்றாள். இப்போ அது ஒரு புனித பூமியாக விளங்கியது. ட்ரம்பிள்டோரின் கல்லறை அருகே, பால்மாக்கின் வீரர்களும், கட்னாவின் இளம் வீரர்களும், புதிய மாவீ ரர்களுக்கு அஞ்சலிசெய்யக் கூடியிருந்தார்கள்.

மகிழ்ச்சிகரமான பியுறிம் (Purim) திருவிழா வந்தது. மார்டிகிராஸ் (Mardi Gras) சொர்க்கலோக உடுப்புகள் போன்ற வினோத உடைகளிலும், காட்சி ஊர்திகளாலும் அலங்காரங்களாலும் கான் டப்னா ஒரு களியாட்ட விழாக் களம் போல் ஆனது. எஸ்தர் அரசின் பேர்சிய சாம்ராஜ்ய ஆட்சியில் எப்படி யூதர்களைக் காப்பாற்றினாள் என்ற பியுறிம்மின் கதை சொல்லப் பட்டது. அமால் கயிற்றனான தீயவன் ஹமான் யூதர்களை அழிக்க எடுத்த சதி முயற்சியை வெளிப்படுத்தித் தன் மக்களைக் காத்தாள். எஸ்தரின் சமாதி எஸ்தர் கோட்டையின் எல்லையில் கொண்டாட்டங்கள் நிகழ்ந்த இடத்தில் இருந்தது. கான் டப்னாவின் பிள்ளைகளுக்குப் பியுறிம் கதை உண்மையான தாகவே இருந்தது. ஏனெனில் கிட்டத்தட்ட அவர்களில் எல்லோருமே, தற்கால ஹமானாக அவதரித்த அடோல்ப் ஹிட்லரினால் பாதிக்கப்பட்டிருந்தார்கள்.

பாஸ்ஓவர் (Passover) திருவிழாவும் வந்துபோனது. பாஸ்ஓவர் முடிந்து முப்பது நாட்களுக்குப் பின்வரும் பூரணை தினத்தில் லாக் வா ஓமெர் (Lag Ba Omer) திருவிழா, காலப் போக்கில் ரோமருக்கெதிராக இரண்டாவது முறை ஜீப்ரூக்கள் கிளர்ந்தெழுந்ததின் ஞாபகார்த்த தினமாகியது. ரிபேரியாஸ், ஷாபெட், மேரோன் நகரங்களில் புதைக்கப்பட்டிருந்த பெரும் ஞானிகளுக்கு மரி யாதை செலுத்தப்பட்டது. புகழ்பெற்ற தத்துவ ஞானியும், வைத்தியருமான மோசேஸ் மைமோனிட்ஸ் (Moses Maimonides) ராபிக்களான ஹீயா, (Hiya), எலியேசர் (Eliezer) கஹானா (Kahana) ஆகியோரதும் புரட்சிகர ராபியான ஆக் கிவா (Akiva) வினதும் கல்லறைகளிருந்தன. புதுமைகள் செய்த ராபியான மெயாரின் (Meir) கல்லறையுமிருந்தது. இவைகள் எல்லாம் கொண்டாட்டங்கள் தொடங்கிய ரிபேரியாவில் இருந்தன. அங்கிருந்து விழா ஷாபெட் நோக்கி நகர்ந் தது. அங்கிருந்து பக்தர்கள் பெருங்கூட்டமாக, பாதரட்சை தயாரிப்பவனான ஜோஹானன் (Johanan The Sandal Maker) ஹிலெல் (Hillel), ஷமாய் (Shammai) ஆகியோரின் கல்லறைகள் இருந்த மேரொன்னுக்குப் போவார்கள். மெசியாவின் வருகையை வரவேற்கும் கதவோடு கூடிய அந்தப் புராதன சின்னகோக், மெரோ னில் இன்னமும் இருந்தது.

லாக் பா ஓமெரின் போது புகழப்படும் ராபிக்களில், சிமோன்பார் யோஹாய் (Simon Bar Yohai) அதியுயர் வணக்கத்தைப் பெற்றுக் கொள்வார். ரோமச் சட்டங்களை எதிர்த்துப் பார் யோஹாய், பெக்கின் (Pekin's) நகரத்துக்கு ஓடிப் போனார். அங்கே ஒரு குகையில் வாழ்ந்த அவருக்கு உணவுக்கு ஒரு கறோப் (Carob) மரத்தையும், நீருக்கான ஒரு நீரூற்றையும், இறைவன் அவருக்கு அளித் தார். அவர் பதினேழு வருடங்களாகத் தலைமறைவாக வாழ்ந்தார். ஒவ்வொரு வருடமும், ஏதாவது ஒரு நாளில் தன் சீடர்களுக்குத் தடை செய்யப்பட்ட ரோறா வைக் கற்பிக்க மெரோன்னுக்கு வருவார். தலைமறைவு வாழ்க்கையில் கூட, யூடாயிசத்தை அழிந்து விடாமல் வைத்திருந்த ராபிக்கள்தான் தங்கள் மதங்கள் பிழைத்திருப்பதற்குக் காரணம் என முகம்மதியர்களும், கிறீஸ்தவர்களும் சொல் லிக்கொள்வார்கள். யூடாயிசமும், பரிசுத்த ரோறாவும் இல்லாமலிருந்திருந்தால், கிறிஸ்தவமும், இஸ்லாமும் தப்பிப் பிழைத்திருக்கவே முடியாது. ஏனெனில், அவற்றின் ஜீவனும், உதிரமும், யூடாயிசத்தின் போதனைகளில் தான் வேரூன்றி யிருந்தன.

ஷோஹார் (Zohar) என்னும் நூலைப் பார் யோஹாய் எழுதினார். இதுவே மறை பொருள்களுடன் கூடிய கபாலா பிரிவினரின் வழிகாட்டல் நூலாக இருந்தது. ஹசிடிகளும், கீழைத்தேயத்தவர்களும், பலஸ்தீனத்தின் நான்கு மூலை களிலிருந்தும் வந்து பரிசுத்த நகரங்களான ஷாபெட்டிலும், திபேரியாசிலும் குவிந்து மெரோன் சென்று பல பகல்களையும், இரவுகளையும் செபத்திலும், ஆடல்பாடல்களிலும், சிமோன் பா யோஹாயைத் துதிப்பதிலும் செலவிடு வார்கள்.

வைகாசி மாதம் வந்தபோது மழை நின்றுபோய் ஹூலே பள்ளத்தாக்கும் கிரியாவினதும், லெபனானினதும் குன்றுகளும், அழகான பச்சை நிறமாக மாறிய தோடு, பள்ளத்தாக்கு மலர்ந்து மணம்வீசும் காட்டுப்பூக்களின் போர்வையால் மூடப்பட்டதோடு, கலிலியின் இளவேனிற்கால ரோஜாப்பூக்களின் அரும்புகள் அழகிய சிவப்பு, வெள்ளை, செம்மஞ்சள் நிறங்களில் மலர்ந்து சிரித்தன. கான் டப்னாவும் இன்னொரு விடுமுறைக்குத் திரும்பவும் ஆயத்தமாயிற்று. புதிய வருடத்தின் முதல் முதல் அறுவடை செய்யப்பட்ட பழங்களைக் கொண்டு வரும் ஷாவூட் (Shavout) திருவிழாவுக்கு நாள் நெருங்கிக் கொண்டிருந்தது.

விவசாயத்தோடு சம்பந்தப்பட்ட எல்லா விடுமுறை தினங்களுமே பலஸ் தீனிய யூதர்களால் பெரிதும் விரும்பப்பட்டன. ஷாவூட் பெருநாளானது, சூழவர் இருந்த ஹூலே குடியேற்றங்களிலிருந்து வந்து, அந்தப் பெருநாளைக் குழந்தை களோடு சேர்ந்து கொண்டாடுவதை வழக்கத்துக்குக் கொண்டு வந்தது.

ஊட்ஸல் மொஷாவ்விலிருந்து ட்ரக் நிறைய ஆட்கள் வந்துசேரவும் கான் டப்னா களியாட்ட விழாக்களம் போல் மறுபடியும் உருக் கொண்டது. சாரா பென் கானானும் வந்திருந்தாள்.

மேலே லெபனான் எல்லையிலிருந்த க்பார் கிலாடி கிபுட்சிலிருந்தும் விருந்தினர் வந்தனர். வாவிக்கரையிலிருந்த ஆயலெட் ஹஷாஹார் கிபுட்சிலி

ருந்தும் (Ayelet Hashahar) எயின் ஓர் இல் இருந்தும் வந்திருந்தனர். சிரிய எல்லையிலிருந்த டான் இல் இருந்தும் மலையுச்சியிலிருந்த மனாரா (Manara) விலிருந்தும் வந்திருந்தனர்.

அபுயேஷாவிலிருந்து வழமையாக வரும் குழுவில் அரைப்பங்கினரே இம்முறை வந்திருப்பது பற்றியும் தாஹா வராமலே விட்டுவிட்டது பற்றியும் தனது ஏமாற்றத்தை டாக்டர் லிப்பர்மான், கிற்றியிடமும் ஹரியற் சோல்ஸ்மானிடமும் தெரிவித்துக் கொண்டார். அதனுடைய கருத்துத் தெளிவாகவும், துக்கமூட்டுவதாகவும், இருந்தது.

ஒவ்வொரு ட்ரக்குகளும், வரும்போதே அவற்றைக் கிற்றி கண்டாள். அரி பென் கானான் வரவேண்டும் என எதிர்பார்த்தாலும். அவளது ஏமாற்றத்தை மறைத்துக் கொள்ள முடியவில்லை, எரிச்சலூட்டும் ஏளனப் புன்னகையுடன் ஜோர்தானா அவளை அவதானித்துக் கொண்டிருந்தாள்.

எஸ்தர் கோட்டையிலிருந்து சில சிப்பாய்கள் வந்திருந்தனர். இவர்கள் எப்போதாவது ஆயுதங்களைத் தேடிப்பிடிக்கும் முயற்சி தொடங்கவிருக்கும் போது முன்கூட்டியே அறிவிக்கும் ''நண்பர் குழாமில்'' இருப்பவர்களாவர்.

நாள் முழுவதும் மகிழ்ச்சி அலைகள் கரை புரண்டோடின, உடற்பயிற்சி விளையாட்டுப் போட்டிகள் தடந்தன. வகுப்பறைகளும், ஆய்வுச்சாலைகளும் பார்வைக்காகத் திறந்து வைக்கப்பட்டன. நடுபுல்தரையில் ஹோரா நடனங்கள் இடம்பெற்றன. திறந்த வெளியில் இருந்த மேசைகள் அவற்றின் மேலுள்ள உணவுப் பொருட்களின் பாரம் தாங்கமுடியாமல் வளைந்தன. சூரியன் அஸ்தமனமாகியதும், எல்லோரும் பைன் மரக் குவியலொன்றினுள் அமைக்கப்பட்டிருந்த வெளியரங்கினுள் சென்றனர், அரங்கு நீரம்பிவழிந்தது. நூற்றுக்கணக்கானவர்கள் சூழவர இருந்த புற்றரைகளில் படுத்துக் கிடந்தனர், இருள்சூழ்ந்த பொழுது பலவர்ண மின்சுமிழ்கள் பைன் மரங்களிடையே ஒளிர்ந்தன.

கான் டப்னாவின் இசைக்குழு ''ஹற்றிக்வா''வை அதாவது நம்பிக்கையை இசைத்தது. டாக்டர் லிப்பர்மான் சுருக்கமான ஒரு வரவேற்புரையை ஆற்றிவிட்டு, ஷாவூட் அணிநடை ஆரம்பிப்பதற்கான சமிக்ஞையைக் கொடுத்தார். பின்பு, கிற்றி, ஹரியற், சுதர்லாண்ட் ஆகியோரோடு தனது இருக்கைக்குத் திரும்பினார்.

அணிநடைக்கு கரேன் தலைமை தாங்கி வந்தாள். அவளைக் கண்ட அதேகணத்தில் கிற்றிக்குப் பயம் உண்டாகியது. கரேன் ஒரு வெண்குதிரையில் அமர்ந்து, வெள்ளைப் பின்னணியில் நீல ஸ்டார் ஒவ் டேவிட்டைக் கொண்ட கொடியொன்றைத் தாங்கியிருந்த கம்பத்தை சமன் செய்தபடி வந்தாள். அவள் கடும் நீல நிற நீளக்கால்சட்டைகளையும், சித்திர வேலைப்பாடமைந்த விவசாயப் பெண்களின் மேல் அங்கியையும், கால்களில் பாதரட்சைகளையும் அணிந்திருந்தாள். அவளுடைய அடர்த்தியான மண் நிறக்கூந்தல் பின்னப்பட்டு அவளின் சிறிய மார்பகங்களின் மேல் தொங்கிக் கொண்டிருந்தது.

கிற்றி தன் இருக்கையின் கைகளை இறுகப் பற்றிக் கொண்டாள். கரேன், யூதரின் மனப்பாங்கின் மொத்த வடிவமாகக் காட்சி அளித்தாள்.

நான் அவளை இழந்துவிட்டேனா? நான் அவளை இழந்து விட்டேனா? காற்றில் படபடத்த கொடியின் ஒலியில் குதிரை ஒரு வினாடி. குழம்பியது. ஆனால், கரேன் விரைவாக அதனைக் கட்டுப்பாட்டினுள் கொண்டு வந்தது விட்டாள்.

ஹான்சன்களிடமிருந்து விலகிவிட்டது போல், என்னிடமிருந்தும் விலகி விட்டாள் எனக் கிற்றி நினைத்துக் கொண்டாள். ஹரியற் சோல்ஸ்மான் அவனைப் பார்த்துக் கொண்டாள். கிற்றி மெதுவாகப் பார்வையைக் கீழே பதித்துக் கொண்டார்.

கரேன் மேடையின் விளக்கு வட்டத்திலிருந்து விலகிச் செல்ல அணிநடை தொடர்ந்தது. கான் டப்னாவின் ஐந்து ட்ராக்டர் வண்டிகளும் நன்றாக மெருகிடப்பட்டிருந்தன. கிராமத்திலேயே உற்பத்தி செய்யப்பட்ட பழங்கள், மரக்கறி தானிய வகைகள் நிரம்பியதட்டைவண்டிகளை அவை ஒவ்வொன்றும் இழுத்துச் சென்றன. தோட்டத்து மலர்கள் நிரம்பிய ஜீப்புகளுள், ட்ரக்குகளும், பெரிய பயணக்கார்களும் ஊர்வலத்தில் சென்றன. தாண்டிச் சென்ற ட்ரக்குகளில், விவசாயிகளின் உடைகளில், சிறுபிள்ளைகள், குப்பைவாரிகள் கத்திகள் வேறு பல உபகரணங்களையும் தாங்கிச்சென்றனர்.

கால்நடைகள் அடுத்து வந்தன. முன்னால் பசுக்கள், பூக்களாலும் துணிப்பட்டிகளாலும் அலங்கரிக்கப்பட்டு வந்தன. குதிரைகள் பளபளக்கும் பிடரி மயிர்களோடும், பின்னப்பட்ட வால்களோடும், வந்தன. ஆட்டுமந்தைகள், செம்மறியாடுகள் அடுத்துக் கூட்டமாக இட்டுச் செல்லப்பட்டன. அவைகளைத் தொடர்ந்து செல்லமாக வளர்க்கும் நாய்கள், பூனைகள், குரங்குகள், வெள்ளைஎலிகள், பெரிய கன்னப்பையுள்ள எலி போன்றதோற்றம் கொண்ட பிராணிகள் என்பன அன்போடு நடத்தியோ, தூக்கிக் கொண்டோ செல்லப்பட்டன

பிள்ளைகள் தங்கள் பயிரிட்டு, செய்து தயாரித்த துணிவகைகளையும், தாங்களே அச்சிட்ட செய்திப்பத்திரிகைகளையும், தங்களுடைய கலைப்படைப்புக்களையும், கூடைகள், மட்பாண்டப் பொருட்கள் முதலிய வற்றையும் சுமந்து சென்றனர். அவர்களுடைய தேகப்பயிற்சிக் குழுக்கள் அடுத்து அணிவகுத்துச் சென்றன.

அணிவகுப்பு முடிந்ததும் பார்வையாளர்களிடமிருந்து, உற்சாகமான கரகோஷம் எழுந்தது. டாக்டர் லிப்பர் மானுடைய காரியதரிசி அவரை நெருங்கி அவர் காதில் ஏதோ முணுமுணுத்தாள்.

மன்னித்துக்கொள்ளுங்கள், ஒரு முக்கியமான தொலைபேசி அழைப்பு வந்திருக்கிறது. என்று சொல்லிவிட்டு சென்றார் அவர். விரைவாகத் திரும்பி வாருங்கள் ஹரியற் சோல்ஸ்மான். அவர் பின்னால் உரக்கச் சொன்னார்.

பைன் மரங்களிலிருந்த மின் விளக்குகள் அணைக்கப்படவும், அந்த இடம் ஒரு கணம் இருளில் மூழ்கியது. மேடையில் ஒரு வட்டவிளக்கு ஒளிர்ந்தது. திரை திறந்து கொண்டது. தம்பூர் இசைக்கத் தொடங்கியதைத் தொடர்ந்து, புல்லாங்குழலொன்று புராதன இராகமொன்றை இசைக்கத் தொடங்கியது. பிள்ளைகள் றுத்தின் கீதத்துக்கு அபிநயிக்கத் தொடங்கினார்கள். எளிமையான இந்த இரு வாத்தியங்களின் பின்னணியில் அபிநய நடிப்பாக (Pantomime)அது நடிக்கப்பட்டது.

அவர்களுடைய ஆடையலங்காரங்கள், கதையின் கால கட்டத்துக்குப் பொருத்தமானவையாக இருந்தன. நடனமோ, றுத்தினதும், நயோமியுடையவும் (Ruth and Naomi) காலத்தவை போன்று மெதுவாகவும், உணர்ச்சியைத் தூண்டுபவையாகவும் இருந்தன. தொடர்ந்து தபோர் மலையின் மேல் கிற்றி கண்ட நடனக்காரர்கள் போல் உணர்ச்சியோடு, முரட்டுத்தனமாக துள்ளித் துள்ளி ஆடும் நடனக்காரர்கள் வந்தனர். தங்கள் கடந்தகாலத்தை மீள்நிர்மாணம் செய்ய எப்படிச் சிலிக்கிறார்கள். தங்களுடைய இஸ்ரேலின் மகிமையைத் திரும்பப் பெற்றுக் கொள்ளஎப்படியான அர்ப்பணிப்புடன் இருக்கிறார்கள்.

மேடையின் நடுவே கரேன் இப்போ தோன்றினாள். உடனே எதிர்பார்ப்புடன் கூடிய நிசப்தம் ஒன்று ஏற்பட்டது. கரேன், றுத்துடைய பாத்திரத்தை நடித்தாள். அவளுடைய அசைவுகள், அந்த மோவாபயிற் (Moabite) பெண்ணுடைய எளிமையான கதையையும், ரொட்டி வழங்கும் வீடு என்று பொருள் படும் பெத்லேகேம் (Beth-Lehem) சென்ற அவளுடைய மாமியாரைப்பற்றிய கதையையும் எடுத்துக் கூறியது. மக்கபீஸ் பாலத்திலிருந்து வரும் ஒரே கடவுளினதும், அன்பினதும் கதை ஷாவூட்டில் திரும்பக் கூறப்பட்டு வந்தது.

றுத் யூதர்கள் மண்ணில் புற இனத்தவளாக இருந்தாள். ஆயினும் அவள் டேவிட் அரசரின் மூதாதையராக இருந்தாள்.

றுத், நயோமிக்கு அவளோடு கூட ஜூப்ருக்களின் மண்ணுக்கு வரப்போவதைச் சொல்லும் வார்த்தைகளுக்கு கரேன் உருவம் கொடுத்துக் கொண்டிருந்தபோது, கிற்றி அவளை வைத்த கண் வாங்காது பார்த்துக் கொண்டிருந்தாள்.

''எங்கே நீ போகிறாயோ அங்கே நானும் வருவேன்.

எங்கே நீ வாழ்கிறாயோ அங்கே நானும் வாழ்வேன்.

உன்னுடைய மக்கள் என்னுடைய மக்களாவர்.

உன்னுடைய கடவுள் என்னுடைய கடவுளாகட்டும்.''

கிற்றிக்கு முன்னெப்போதையும் விடக் குழப்டமாயிருந்தது. கரேனை இங்கிருந்து பிரித்தெடுக்க முடியுமா? கிற்றி பிறமென்றீதான் இங்கு பிறத்தி

இனத்தவள். எப்போதுமே அவள் பிறத்தி இனத்தவள்தான். ஆனால் அவளால் றுத் சொன்னதுபோல், உன்னுடைய மக்கள் என்னுடைய மக்களாவர்', என்று சொல்ல முடியாது. இதனாலேயே கரேனை இழந்து விட நேருமா?

டாக்டர் லிப்பர் மானின் காரியதரிசி அவள் தோளில் தட்டி,'' நீங்கள் உடனடியாக டாக்டர் லிப்பர் மானின் காரியாலயத்துக்கு வரமுடியுமா?'' என்றாள்.

கிற்றி, மன்னிப்புக் கோரியபடி தனது இருக்கையிலிருந்து நழுவிச் சென்றாள். அவள் அரங்கத்தின் முடிவுக்குச் சென்று திரும்பிப் பார்த்தபோது சிறுவர்கள் அறுவடை நடனத்தை ஆடுவதையும், கரேன் (Boaz) இன் காலடியில் ஆரங்கப்போவதையும் அவதானிக்க முடிந்தது. அவள் திரும்பி அரங்கத்தை விட்டு வெளியேறினாள்.

வழி இருளாயிருந்தது. அகழிகளைப் பற்றி அவதானமாயிருக்க வேண்டியிருந்தது. தன்னுடைய கைமின் விளக்கை ஒளிர வைத்து நிலத்தின் மீது ஒளியைப் பாய்ச்சினாள். அவள் மத்திய புல் தரையையும், டப்னாவின் சிலையையும் தாண்டிச் சென்றாள். அவளுக்குப் பின்னால், தம்பூரின் ஓசையையும், புல்லாங் குழலின் இசையையும் தொடர்ந்து கேட்கக் கூடியதாக இருந்தது. அவள் விரைவாக நிர்வாகக் கட்டிடத்துக்கு அந்த ஒற்றை ஒளியின் வெளிச்சத்தில் நடந்து சென்றாள்.

டாக்டர் லிப்பர் மானின் காரியாலயத்தின் கதவைத் திறந்தாள்.

அவரது தோற்றத்தைக் கண்டு திடுக்கிட்டபடி,

''என்னுடைய கடவுளே, என்ன விஷயம், உங்களைப் பார்த்தால்..''

''அவர்கள் கீரனுடைய தந்தையைக் கண்டுபிடித்து விட்டார்கள்'' அவர் முணுமுணுத்தார்.

அத்தியாயம் எட்டு

அடுத்தநாள் புரூஸ் சுதர்லாண்ட் கிற்றியையும், கரேனையும் ரெல் அவிவிற்கு கூட்டிச் சென்றார். தனக்கு ஏதோ பொருட்களைக் கொள்வனவு செய்ய வேண்டும் என்பது போலவும் கரேனுக்கு நகரத்தைச் சுற்றிக் காட்டப் போவதாகவும் பாவனை செய்து கொண்டாள். அவர்கள் மதிய வேளைக்குச் சிறிது முன்பதாக அங்கு போய்ச் சேர்ந்து, மத்திய தரைக்கடல் பக்கமாக, ஹயார்கன் வீதியில் இருக்கும், கற்றிமோன் ஹோட்டலில் இடமெடுத்துத் தங்கினார்கள். மதிய உணவின் பின் சுதர்லாண்ட் அவர்கள் அனுமதியுடன் அங்கிருந்து அகன்றார். மதியவேளையில் கடைகள் பூட்டப்பட்டிருக்குமாதலால் கிற்றியும், கரேனும் ஹோட்டலில் கீழிருந்த கடற்கரை மணலில் அலைந்து திரிந்து விட்டு சூடு தணியக் கடலில் நீந்திக் களித்தனர்.

மூன்று மணியளவில் கிற்றி ஒரு வாடகைக் காரை அமர்த்திக் கொண்டாள். அவர்கள் வாகனத்தில் ஜாபாவுக்கு சென்றனர். (Jaffa) அங்கே சில அராபிய, பாரசிக பித்தளைச் செம்புப் பொருட்களை நல்ல விலையில் வாங்கலாம் என்று கான் டப்னாவில் ஒரு பிரிவினர் பரிந்துரை கூறியிருந்தனர். தன்னுடைய கொட்டகை வீட்டுக்கும் பொருட்களை வாங்க கிற்றி விரும்பினாள். ஜாபாவின் சந்தைக்கு ஒடுங்கிய வளைந்து வளைந்து செல்லும் பாதைகளூடாக அவர்களை இட்டுச்சென்றது அந்த வாகனம். சிலுவையுத்த சுவர்ச்சிதைவு ஒட்டைகளில் கடைகள் வரிசையாக அமைத்திருந்தன. சிவப்பு அரபு குல்லாய் ஒன்றை சரித்து கண்களை மூடியபடி கடையைப் பாதுகாப்பதற்காக வாசலில் அமர்ந்தபடியே தூங்கிக் கொண்டிருந்த ஒரு பருத்த மனிதனின் முன்னால் போய் நின்றார்கள். கிற்றியும் கரேனும் கடையைப் பார்வையிட்டனர். அது ஐந்தடி அகலமாகவும், அவ்வளவு தூரம் ஆழமில்லாததாகவும், கடையின் மேல் கூரையிலிருந்து, பானைகள், தட்டுகள், சட்டிகள், குவளைகள், பூச்சாடிகள், சாடிகள், மெழுகுதிரித் தண்டுகள். இன்னும் பல பொருட்கள் தொங்கிக் கொண்டிருந்தன. கிழ்த் தரையைக் கூட்டிக் குறைந்தது பத்து வருடமிருக்கும்.

வாடிக்கையாளர்கள் வந்திருப்பதை உணர்ந்து கொண்ட அந்த மனிதன் தூக்கம் கலைந்து எழும்பினான், அவன் அவர்களை உள்ளே வரும்படி அட்ட காசமாகச் சைகை காட்டினான். சில பித்தளைப் பொருட்களை பெட்டிகள் இரண்டிலிருந்து அகற்றிவிட்டு அவைகளை இருக்கைகளாக அளித்தான். பின்பு வெளியே ஓடி, கௌரவத்துக்குரிய விருந்தினர்களுக்குக் கோப்பி கொண்டு வரும்

படி. தன் மூத்த மகனுக்குக் குரல் கொடுத்தான். கோப்பி வந்து சேர்ந்தது. கிற்றியும், கரேனும் கோப்பியை மெதுவாக அருந்திக்கொண்டே, கடை உரிமையாளருடன் புன்சிரிப்புகளைப் பரிமாறிக் கொண்டனர். அவனுடைய மகன் முட்டாள் தனத்தின் மொத்த வடிவம் போல் காட்சி அளித்தான். வெளிவாசலில் நின்று கொண்டிருந்தான். இங்கு நடக்கப்போகும் வியாபாரத்தை அவதானிக்க ஐந்தாறு பார்வையாளர்களும் கடைக்கு வெளியே கூடிவிட்டனர். கதைப்பதற்கு எடுத்துக் கொண்ட முயற்சிகள் தோல்வியில் முடிந்தன. முறுமுறுத்தல்கள், சைகைகள் கைகளை ஆட்டிப் புரியவைத்தல் போன்றவை பொதுவான பாஷையாகக் கைகொடுத்தன. கரேன், டானிஷ், பிரெஞ்சு, ஜேர்மன், ஆங்கிலம், ஹீப்ரூ மொழிகள் பேசக்கூடியவள். கிற்றி ஆங்கிலம், ஸ்பானிய மொழி, சிறிது கிரேக்க மொழி ஆகியவற்றைப் பேசக்கூடியவள். ஆனால், அந்த அராபியனோ, அரபு மொழி மட்டும் தெரிந்தவனாயிருந்தான். அவர் தனது மகனை சந்தையின் மொழிபெயர்ப்பாளனைத் தேடிவரும்படி அனுப்பவும், சிறிது நேரத்தில் அவன் வந்து சேர்ந்தான். அவனது ஆங்கிலம் கொச்சை ஆங்கில மொழி (Pidgin) போல் இருந்தாலும், அவன் அதை மிக கடமையுணர்ச்சியோடு கையாண்டதால் வியாபாரம் தொடர்ந்தது.

கரேனும் கிற்றியும் கடையிலிருந்த பொருட்களை பெண்களுக்கேயுரிய திறமையுடன் புழுதிகளை ஊதி அகற்றிவிட்டு பார்வையிட்டனர். சில பொருட்கள் நூறு வருடப் பழமையான அழுக்குகளில் மூழ்கியிருந்து. தங்கள் பழமைக்குச் சான்று கூறின. பதற்றமான நாற்பது நிமிடக் கையாளுதலில், கடையிலிருந்த எல்லாப் பொருட்களும் யாராவது ஒரு வாடிக்கையாளரின் கைப்பட்டவையாக இருந்தன. அவர்கள் ஒரு சோடி பூச்சாடிகளையும், மிக நேர்த்தியான அருஞ்சுவைப் பொருட்களான மூன்று நீண்ட குழாய்களை உடைய அரபுக் கோப்பிப் பாத்திரங்கள், ஒரு முழு படையணியையும் கையால் செலுக்கியிருந்த ஒரு பாரசீகத் தட்டையும் கொள்வனவு செய்யத் தீர்மானித்தனர். முழுப் பொருட்களையும் துப்பரவு பண்ணி மெருகிட்டுத் தன் ஹோட்டலுக்குக் கொண்டு வந்து தருவதற்கான விலையைக் கிற்றி கேட்டாள். மொழிபெயர்ப்பாளனும், கடை உரிமையாளரும் சம்பாஷணையில் மூழ்கிப்போக, கடைக்கு வெளியே நின்ற பார்வையாளர் இன்னும் நெருங்கி வந்தனர். மொழி பெயர்ப்பாளன் திரும்பி ஒரு பெருமூச்சை விட்டான்.

''இந்த பொக்கிஷங்கள் போவதால் மிஸ்டர் அக்கிம் இன் மனம் உடைந்து விட்டது. அந்தத் தட்டு முந்நூறு வருடம் பழமையானவை என்று அல்லாவின் பெயரால் உறுதி கூறுகிறார்.''

''மிஸ்டர் அக்கிமுடைய உடைந்து போன மனத்தைத் திருத்தியமைக்க எவ்வளவு செலவாகும் என்பதை மட்டும் சொல்.'' கிற்றி கேட்டாள்.

''உங்களுடைய மகள் இவ்வளவு அழகாக இருப்பதால் மிஸ்டர் அக்கிம் விசேட கழிவொன்றை அளிக்கிறார். எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு, பதினாறு பவுண் ஸ்ரேலிங் தாருங்கள்.''

''களவாய் எடுப்பது போன்ற விலை இது'' கிற்றி மெதுவாகக் கிசு கிசுத் தான்.

''அவன் கேட்பதை நீங்கள் அப்படியே கொடுக்கக் கூடாது. பேரம் பேசா மல் அவன் நாளை வீணடிக்கவா பார்க்கிறீர்கள்'' என்றாள் கரேன் வியப்புடன்.

''நான் அவற்றை எடுத்துக் கொண்டு ஓடிவிடப்போகிறேன். அந்தத்தட்டு மட்டும் அமெரிக்காவில் முந்நூறு, நானூறு டொலருக்கு விற்கலாம். ''கிற்றி கிசுகிசுத்தாள்.

''கிற்றி! தயவுசெய்து பொறுங்கள்.,' சொல்லிவிட்டு கரேன், கிற்றிக்கு முன்னால் வந்து நிற்கவும் அக்கிமுடைய முகத்திலிருந்த சிரிப்பு மறைந்து போய் விட்டது.

''ஒன்பது ஸ்ரேலிங் பவுண்களுக்கு மேல் ஒரு சல்லிக்காசும் கூடதரமாட் டோம்'' கரேன் திட்டமாக அறிவித்தாள். மொழிபெயர்ப்பாளர் இவர்களின் அறிவிப்பை மிஸ்டர் அக்கிமிடம் தெரிவித்தான். அக்கிமுக்கு மனவருத்தமாகப் போய்விட்டது. அவன் அழுவதுபோல் குரல் எழுப்பினான். அவனுக்குத் தாப ரிக்க பெரிய குடும்பம் இருக்கிறது. திரும்பவும் தன்னுடைய இரக்கமுள்ள மனதை பிழையாகப் பயன்படுத்துகிறார்கள். இந்தக் கூர்மையான கண்கள் உள்ள பெண் கள் தெரிந்தெடுத்ததெல்லாம், புராதனமான பொருட்கள், என்னுடைய கௌ ரவத்தின் மேல், என் தந்தையின் கௌரவத்தின் மேல், அல்லாவின் தாடியின் மேல் ஆணையாக பதின்மூன்று பவுண்கள்.

''பன்னிரெண்டு தான். அதுதான் கடைசி..' அக்கிம் தன்னை அவர்கள் ஏமாற்றப் பார்ப்பதாகவும். தான் ஏழை அராபியனாக இருப்பதால் என்ன செய் யக்கூடும் என்றும் அழுதான். இந்தக் கெட்டிக்காரப் பெண்களின் கையில் தான் மெழுகுபோல் ஆகிவிட்டதாகவும் சொல்லிவிட்டுப் பன்னிரெண்டரை என்றான். அது ஏற்றுக் கொள்ளப்பட்டது. பேரம் பேசி முடிந்து விட்டதால் கடைக்குள் ளும், வெளியேயும் புன்சிரிப்புகள் மலரத் தொடங்கின.

சிறிது நீளமான கைகுலுக்கும் வைபவம் தொடர்ந்தது. அக்கிம் கிற்றி, கரேன் அவர்களைத் தொடர்ந்து வரக்கூடிய சந்ததிகள் அத்தனை பேரையும் ஆசீர்வதித்தான். கிற்றி, தான் இருக்கும் ஹோட்டலின் பெயரைக் கொடுத்து, சுத்தமாக்கி, மெருகிட்ட பொருட்களை அங்கு கொண்டு வந்ததும் அவற்றுக் கான கொடுப்பனவுகளை வழங்குவதாக வாக்களித்தாள். மொழிபெயர்ப்பாள ருக்கும், அக்கிமின் முட்டாள் மகனுக்கும் சிறு பணத்தை அன்பளிப்பாக வழங்கி விட்டு அவர்கள் அவ்விடத்தை விட்டு அகன்றனர்.

அவர்கள் அந்தச் சந்தையூடாக நடந்து போகும்போது, அந்தச் சிறிய கடைகளுள் அடக்கப்பட்டிருக்கும் பொருட்களின் அளவைப் பற்றியும், பாதை களில் கிடக்கும் அழுக்குகளின் அளவைப்பற்றியும் வியந்தபடி சென்றனர். அந்த வீதியின் முடிவை நெருங்கியபோது, சர்ப்பா (Sapra) வைப் போல் தோற்ற

மளித்த ஒரு மனிதன் கரேனை நெருங்கி ஹீப்ரூவில் சில வார்த்தைகளை விரைவாக பரிமாறிவிட்டு, நடந்து போய்விட்டான்.

''என்னவாம் அவன்?

எனது சீருடையின் நான் ஒரு யூதப்பெண் என்று தெரிந்து கொண்டிருக்கிறான். நீங்கள் ஆங்கிலப் பெண்ணா என்று அறிய விரும்பினான். நான் நீங்கள் யாரென விளக்கியதும், எங்களை உடனடியாக ரெல் அவிவ் திரும்பச் சொன்னான். ஏதோ பிரச்சினை வரப்போகிறதாம்.''

கிற்றி யாதையில் அந்த மனிதனைத் தேடினாள். ஆனால் அவன் மறைந்து போய்விட்டான்.

''அவன் ஒரு மக்கபீயாக இருக்கவேண்டும்'' கரேன் சொன்னாள். ''நாங்கள் கெதியாக இங்கிருந்து போவோம்.''

ஜபாவிலிருந்து வெளியேறும்வரை கிற்றிக்கு மிக பதற்றமாக இருந்தது. அலென்பி வீதியும், றொத்சைல்ட்ப் பெரும் சாலையும், சந்திக்கும் இடத்திற்குக் காரை ஓட்டிச் சென்றார்கள். அலென்பி வீதி புதிய கடைகளால் நிரைந்திருந்தது. றொத்சைல்ட் பெருஞ்சாலையோ இருமருங்கும் மரங்களடர்ந்து மிக நவீன மூன்றுதட்டு வெள்ளைநிறக் குடியிருப்பு வீடுகளின் வரிசையைக் கொண்டதாக இருந்தது. ஜாபாவின் சந்தைக்கு நேர் விரோதமான தோற்றத்தை அது கொண்டிருந்தது. கார்களும், பேருந்துகளும் ஒரே சீரான அளவில் நகர்ந்து கொண்டிருந்தன. ஆட்களும் பெரிய நகரவாசிகளைப் போன்ற பாவனையில் அவசர அவசரமாக நடந்து போய்க்கொண்டிருந்தார்கள்.

''இது மிகவும் கிளர்ச்சியூட்டும் பயணம். நான் வரமுடிந்தது பற்றி மகிழ்ச்சியடைகிறேன். இங்கிருக்கும் பேருந்துச் சாரதிகள், மேசைப்பணியாட்கள், விற்பனையாளர்கள் எல்லோருமே யூதர்கள்தான் என்று நம்புவது எனக்குக் கஷ்டமாயிருக்கிறது. அவர்கள் இந்த முழு நகரத்தையும் நிர்மாணித்திருக்கிறார்கள் ஒரு யூத நகரத்தை. அது என்னத்தைக் குறிக்கிறது என்று உங்களுக்குப் புரிகிறதா?...எல்லாமே யூதருக்குச் சொந்தமான ஒரு நகரத்தைக் குறிக்கிறது'' என்றாள் கரேன்.

கரேனின் வார்த்தைகள் கிற்றிக்கு எரிச்சலூட்டின. ''அமெரிக்காவில் முக்கியமான யூதர்கள் இருக்கிறார்கள் கரேன். அவர்கள் மிக மகிழ்ச்சியாக அமெரிக்கர்களாக இருக்கிறார்கள்.''

ஆனால், அது ஒரு யூத நாடு போல அல்ல. ''எங்கே நீங்கள் போனாலும் என்ன நீங்கள் செய்தாலும், உங்களை நேசிக்கும் உங்களுக்கு சொந்தமான மண் இந்த உலகின் ஒரு மூலையிலும் எங்கோ இருக்கிறது என்று அறிந்திருப்பதைப் போல் அல்ல அது.''

கிற்றி தன் பையில் அவசர அவசரமாக தேடி ஒரு கடதாசித் துண்டை எடுத்தாள். ''இந்த முகவரியுள்ள இடம் எங்கேயிருக்கிறது?'' கரேன் அந்தத்

கடதாசியைப் பார்த்து விட்டு, 'இரண்டு கட்டிடங்களுக்கு அப்பாலிருக்கவேண்டும் எப்போ தீங்கள் ஹீப்ரூவை வாசிக்கப் பழகப் போகிறீர்கள்?'' என்றாள்.

எப்போதுமே முடியாது என்று நினைக்கிறேன். நேற்று ஏதோ வார்த்தைகளை உச்சரிக்கப் போய் என்பற்கள் இரண்டு உடைந்து போய் விட்டன.'' கிற்றி விரைவாகச் சொன்னாள்.

அவர்கள் அந்த விலாசத்தைக் கண்டு பிடித்தார்கள்.

அது ஒரு உடுப்பு விற்கும் கடை.

''நீங்கள் என்ன வாங்கப் போகிறீர்கள்?'' கரேன் கேட்டாள். நான் உனக்கு ஒரு கௌரவமான துணிமணித் தொகுதியை வாங்கப் போகிறேன். பிரி கேடியர் சுதர்லண்டினதும், என்னுடையதும் திருப்பரிசு இது.''

கரேன் அந்த இடத்திலேயே நின்று விட்டாள். '' என்னால் முடியாது என்றாள் அவள்.

''என்ன விஷயம்?''

''நான் அணிபவை அப்படி ஒன்றும் மோசமானவை அல்ல.'

''ஸான் டப்னாவுக்குத் தான் அவை நல்லது.'' கிற்றி சொன்னாள்.

''எனக்குத் தேவையான உடுப்புகள் என்னிடம் இருக்கின்றன.'' கரேன் பிடிவாதமாகச் சொன்னாள். சில வேளைகளில் அவள் ஜோர்தானா பென் கானானைப்போல் பேசுகிறாள் என்று கிற்றி நினைத்துக் கொண்டாள்

''கரேன், நீ ஒரு இளம் பெண் என்பதை மறந்துவிடக் கூடாது. எப்பவாவது ஒருமுறை அழகான ஆடைகளை அணிவதால் இயக்க நோக்கங்களுக்குப் பிழையேதும் ஏற்பட்டு விடாது.''

''நான் பெருமைப்படுகிறேன்.....'' என்று தொடங்கிய கரேனை இடைமறித்த கிற்றி, ''அமைதியாயிரு..'' தீர்மானமான குரலில், சொல்லிய கிற்றி, தொடர்ந்து, ''நீ, வர வர ஒரு ஷப்றாவைப் (மண்ணின் புதல்வி) போல் கதைக்கத் தொடங்கி விட்டாய். கான் டப்னாவிலிருந்து எங்கேயாவது, என்னோடு வந்திருக்கும்போது என்னையும் சுதர்லண்டையும் பெருமைப்படுத்தும் விதத்தில் நடந்துகொள்.'' கிற்றி கோபமுற்றவளாகவும், பிடிவாதமாக இருப்பது போலவும் தோன்றினாள். கரேன் 'தன் உதடுகளைக் கடித்துக் கொண்டு பின்வாங்கி விட்டாள். கடையில் காட்சிக்கு வைக்க பட்டிருந்த, முழுநீள பாவாடை அணிந்திருந்த மாதிரிப் பொம்மைகளைக் கடைக் கண்ணால் பார்த்துக் கொண்டு, ''அப்படிச் செய்வது மற்றப் பிள்ளைகளைப் பொறுத்தவரை அவ்வளவு நியாயமில்லை'' என்றாள் இறுதி முயற்சியாக.

''உனக்கு மகிழ்ச்சிப்படுத்துவதற்காக வேண்டுமானால் இந்த உடைகளை றைபிள்களின் கீழ் ஒளித்துவிடுவோம்.''

சில நேரத்துக்குப் பிறகு கண்ணாடி முன்னால் துள்ளிக் குதித்து மகிழ்ச்சி யுடன் ஒரு தனிநபர் உடைகள் கண்காட்சியே நடத்தி விட்டாள். கிற்றி வற்பு றுத்தி அழைத்து வந்தது பற்றியும் மகிழ்ச்சியடைந்தாள். இது அற்புதமான உணர்ச்சியாகவும் இருக்கிறது. பார்ப்பதும் அற்புதமாக இருக்கிறது. இப்படி யான அருமையான உடுப்புகளை அணிந்து எவ்வளவு காலம்? ''டென்மார்க் கிலா?''..... அது மிக நீண்ட காலத்துக்கு முதலென்பதால் அவள் மறந்தே போய் விட்டாள். கரேன் ஒரு விவசாய யுவதியிலிருந்து நாகரீகமான ஒரு யுவதியாக அடையும் மாற்றத்தைக் கிற்றி மிகவும் மகிழ்ச்சியோடு அவதானித்துக் கொண் டிருந்தாள். பொருட்களை வாங்கிக் கொண்டே அலென்பி வீதி முழுவதும் அலைத்து திரிந்து கைநிறையப் பொதிகளுடன் மொக்றாபி (Mograpi Square) சதுக்கமருகே யெஹுடா வீதியினுள் திரும்பினார்கள். அகப்பட்ட முதலாவது தெரு அருகு உணவுச் சாலையின் இருக்கையில் பொத்தென அமர்ந்தார்கள். கரேன் ஒரு ஐஸ்கிறீம் சோடாவைக் குடித்தபடியே ஆட்கள் போவதும் வருவதுமா யிருந்த அகலப்பரப்பு (Panorama) காட்சியை வைத்தகண் மூடாது பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஒரு கரண்டி ஐஸ்கிறீமை வாய்க்குள் தள்ளிய அவள் ''எனக்கு ஞாபகமிருக் கும் நாட்களில் மிக மகிழ்ச்சிகரமான நாள் இதுதான். டொவ்வும், அரியும் இங் கிருந்தால் பூரணமாக இருந்திருக்கும்'' என்றாள். போற்றுதற்குரிய பெண் இவள் எனக் கிற்றி நினைத்துக் கொண்டாள். அவளுடைய இதயம் மற்றவர்களுக்குக் கொடுப்பதற்கென மட்டும் நன்மைத்தனத்தால் நிறைந்திருக்கிறது.

கரேன் குவளையின் அடியிலிருந்து உறிஞ்சியபடியே தியானத்தில் மூழ்கு பவள் போலிருந்து விட்டு, ''சில வேளைகளில் நாங்கள் ஒரு சோடி கொடித் தோடம்பழங்களைத் தெரிந்தெடுத்திருக்கிறோம் என்று நான் நினைப்பதுண்டு'' என்றாள்.

''நாங்கள் என்றால்.....?'' கிற்றி இழுத்தாள்.

''உங்களுக்குத் தெரியும்..... நீங்களும் அரியும், நானும் டொவ்வும்.''

''எனக்கும் மிஸ்டர் பென் கானானுக்குமிடையே ஏதோ இருக்கிறது என்ற அபிப்பிராயத்தை எது கொடுத்தது என்று எனக்குப் புரியவில்லை. ஆனால், நீ மிகப் பிழையாக ..... மிகப் பிழையாக அனுமானித்திருக்கிறாய்.''

ஆஹா ..... ஆஹா .. அதுதானா நேற்று ஷாஷூட் கொண்டாட்டத்துக்கு முதல் வாசலால் உள்ளே வந்த ஒவ்வொரு ட்ரக்கையும் கழுத்து வாங்கும் வரை பார்த்துக் கொண்டிருந்தீர்கள். அரி பென் கானானைத் தேடாவிட்டால் யாரை அப்படித் தேடிக் கொண்டிருந்தீர்களோ?

''ம்...ம்...ம்... என்று கரகரத்துவிட்டுத் தன் குழப்பமான குற்ற உணர்வை மறைக்கக் கோப்பியை உறிஞ்சத் தொடங்கினாள். கிற்றி தோளை உயர்த்தி விட்டுவிட்டு வானையத் துடைத்துக் கொண்டாள்.

''நீ அவனில் அன்பாயிருக்கிறாய் என்று யாருக்கும் சொல்ல முடியும்.''

''நான் சொல்வதைக் கவனி. விசர்ப் பெண்ணே.....''

''நீ அதை மறுக்க ஆரம்பித்தால், நான் வீதியில் ஹீப்ருவில் அதைப்பற்றி உரத்துக் கூவிக்கொண்டே ஓடுவேன்.''

கிற்றி தன் கைகளை மேலே தூக்கிப் போட்டபடி, ''என்னால் உன்னை வெல்ல முடியாது. எப்போதாவது ஒரு நாளைக்கு முக்கியத்துவம் எதுவும் இணைக்கப்படாமலே, முப்பது வயதுக்கு மேல், ஆகிவிட்ட வயதான பெண்களுக்கு ஒரு ஆண் கவர்ச்சிகரமாக இருக்கக்கூடும் என்பதை நீ உணர்ந்து கொள்வாய். நான் அரியை விரும்புகிறேன். ஆனால், நீ கட்டியிருக்கும் மனோகரமான கோட்டைகளைச் சிதைப்பதற்காக வருந்துகிறேன்.

அவள் சொல்வதைக் கரேன் நம்பவில்லை என்பதை அவளைப் பார்த்த பார்வையே சொல்லியது. அந்தப் பெண் ஒரு பெருமூச்சை விட்டுவிட்டு ஏதோ சொல்லத்தகாத இரகசியம் ஒன்றைச் சொல்லப் போவது போல் கிற்றியின் கையை எடுத்துக் கொண்டாள். உண்மையாகவே ஒருவருக்காகக் கவலைப்படும் இளம் பெண்ணின் முகபாவம் கரேனின் முகத்தில் தெரிந்தது.

''அரிக்கு நீங்கள் தேவைப்படுகிறீர்கள். அதை என்னால் சொல்ல முடியும்.''

கிற்றி கரேனுடைய கைகளை மெதுவாகத் தட்டிக் கொடுத்து விட்டு, அவள் பின்னலில் விலகியிருந்த ஓரிரு மயிர்க்கற்றைகளைச் சரிப்பண்ணி விட்டாள். ''திரும்பவும் நான் பதினாறு வயதிற்குப் போய், விஷயங்கள் தூய்மையானவை யாகவும், குழப்பங்களெதுவும் இல்லாதவையாகவும் இருக்கக் கூடாதா என்று ஆசைப்படுகிறேன். இல்லை கரேன், அரி பென் கானான் போன்றோர் தங்கள் சுயசார்பையே மூலதனமாகக் கொண்ட அபூர்வ மனிதர்கள். தன் தந்தையின் சாட்டையில் தன் பற்களைப் பதித்த நாட்களிலிருந்து அரி பென் கானானுக்கு எவரும் தேவைப்படவில்லை. அவருடைய இரத்தம் சிறிதளவு உருக்காலும், ஐஸ் துகள்களாலும் ஆனது. அவனது இதயம் அதோ ஓடிக்கொண்டிருக்கிறதே பேரூந்தின் இயந்திரம் அதுபோல் இயங்கும் ஒரு பம்பிதான். இவை எல்லாம் சேர்ந்து மனித உணர்ச்சிகளுக்கு மேம்பட்டவனாக அவனை ஆக்கி வைத்திருக் கின்றன.

அவள் மௌனமாகவும், அசையாமலும், கரேனுக்கு அப்பால் பார்த்தபடி யும் அமர்ந்திருந்தாள். ''அப்படியானால் நீங்கள் அவருக்காகக் கவலைப்படுகிறீர் கள் தானே?''

''ஆமாம்.'' சொன்ன கிற்றி பெருமூச்செறிந்தாள். ''நான் கவலைப்பட்டுத் தான் செய்கிறேன். அத்தோடு நீ சொன்னதும் சரிதான். நாங்கள் இரண்டு பேரும், ஒரு சோடி கொடித் தோடைகளைத்தான் தெரிந்தெடுத்துக் கொண்டிருக்கிறோம். நாங்கள் ஹோட்டலுக்குப் போவோம். எனக்காக நீ உடைகளை அணிந்து ஒரு இளவரசி போல் தோன்ற வேண்டும். புரூசும், நானும் உனக்காக ஒரு வியப்பான விடயமொன்றை வைத்திருக்கிறோம். பின்னலைப் பிரித்து விடுவோம்.''

சுதர்லாண்ட் இரவுணவுக்காக அவர்களை அழைத்துச் செல்ல வந்தபோது கரேன் உண்மையிலேயே ஒரு இளவரசி போல்தான் தோற்றமளித்தாள். அவளுக்காகத் காத்திருந்த வியப்பான விடயம் என்னவென்றால், அப்போது ஹபிமா தேசிய அரங்கிலே, பலஸ்தின பில்ஹார்மோனிக் இசைக்குழுவோடு அங்கு வந்திருந்த பிரெஞ்சு பாலே கொம்பனியின், ''(அன்னத்தடாகம்)'' (Swan Lake) என்ற நடன நிகழ்ச்சியைக் கண்டு களிக்க ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது தான்.

நிகழ்ச்சி முழுவதையும் கரேன் தன் இருக்கையின் நுனியில் முன் புறமாகச் சாய்ந்தபடி இருந்து நிகழ்ச்சியை ஆவலுடன் ரசித்தாள். கதாநாயகியான பிரதான பாலே நடனக்காரி (Ballerina) அந்தத் தேவதைக் கதையின் நிகழ்வுகளுடாக மிதந்து செல்வதுபோல் தோற்றமளித்த அங்க அசைவுகளை மிக உன்னிப்பாகக் கவனித்தாள். செயலிழக்கச் செய்து ஆட்கொள்வது போல் அமைந்திருந்த இசையும், அவள் இதயத்தை நிரப்பி விட்டது.

அது எவ்வளவு அழகாக இருந்தது. பாலே போன்ற அழகிய விஷயங்கள் உலகில் இருப்பதை அவள் மறந்தே போயிருந்தாள். கிற்றி பிறமென்ற் தன்னைக் கவனிக்க இருப்பது எவ்வளவு அதிர்ஷ்டவசமானது. கடைசியாக, அரங்கம் நிலநிற ஒளியில் மூழ்கி, இசையும் உச்சக்கட்டத்துக்குப் போனபோது, கதாநாயகனான சிக்பிறெய்ட் (Siegfried) கொடிய வொன் றொற்பார்ட் (Von Rotbart) ஐ தோற்கடிக்க அன்னங்கள் அழகிய பெண்களாக மாறும் இறுதிக்காட்சி நிகழ்ந்தது. மகிழ்ச்சியால் விளைந்த கண்ணீர் துளிகளால் அவள் கன்னங்கள் நனைந்தன.

கிற்றி பாலே நிகழ்ச்சியைப் பார்த்ததை விட, கரேனைப் பார்த்துக் கொண்டிருந்த நேரமே அதிகமாகும். அந்த யுவதியில் உறங்கிக் கொண்டிருந்த எதையோ தான் உலுப்பி விட்டதை அவள் உணர்ந்தாள். கலிலியின் பச்சைப் பசேலென்ற வயல்வெளிகளைப் போலவே, முக்கியத்துவம் வாய்ந்த உலகில் முன்பு தனக்குக் கிடைக்கக் கூடியதாக இருந்த எதையோ அவள் மீளக் கண்டு பிடித்து விட்டிருக்கக் கூடும். இந்த விஷயத்தைக் கரேனின் மனதில் எப்போதும் இருக்கக்கூடியதாகச் செய்யவேண்டும் என்று எண்ணினாள் கிற்றி. அவளில் பெரும்பகுதியை யூதர்கள் வென்றெடுத்து விட்டாலும், அவர்களால் எப்போதுமே வெல்ல முடியாத எவ்வளவோ பகுதிகள் இன்னும் மீதமிருக்கின்றன.

நாளை கரேன் தன் தந்தையைக் காண்பாள். அவளது உலகம் அதன் பின் வேறு திசையில் அசையத் தொடங்கும். இன்று கிற்றி ஏதோஒன்றை வென்றெடுத்துள்ளாள்.

அவர்கள் மிகத் தாமதமாக ஹோட்டலுக்கு வந்து சேர்ந்தார்கள். கரேன் மகிழ்ச்சியில் மிதந்து கொண்டிருந்தாள். அவள் ஹோட்டல் கதவை வேகமாகத் திறந்து விட்டு விறாந்தையூடாகநடனமாடியபடி சென்றாள். பிரிட்டிஷ் அதிகாரிகள் கண்களை வியப்புடன் உயர்த்திப் பார்த்தனர். கிற்றி அவளை விரைவாகத் தூங்கத் தயாராகும்படி அனுப்பிவிட்டு தூங்கமுன் சிறிது மது அருந்துவதற்காகச் சுதர்லாண்டுடன் மதுச்சாலைக்கு வந்தாள்.

''அவளுடைய தந்தையாருடைய விஷயத்தைப் பற்றிக் கூறிவிட்டீர்களா?''

''இல்லை''

''உங்களோடு நான் வரவேண்டுமென விரும்புகிறீர்களா?''

''நான் நினைப்பது என்னவென்றால் ..தனியாகப் போகப்போகிறேன்.''

''அதைப் பற்றிப் பரவாயில்லை.''

''பிறகு நீங்கள் கட்டாயம் அங்கே வரவேண்டும்.''

''கட்டாயம் வருகிறேன்.''

கிற்றி எழுந்து நின்று சுதர்லாண்டின் கன்னத்தில் முத்தமிட்டுவிட்டு, ''குட்நைட் புரூஸ்.''

கிற்றி அறைக்கு வந்தபோது இன்னும் கரேன் நடனமாடிக் கொண்டேயிருந்தாள். ''கடைசிக்காட்சியில் இடம்பெற்ற ஒடெற்றை (Odette) கண்டீர்களா?'' என்றாள், அந்த நடன அடிகளை மீளச் செய்து காட்டியபடி.

''இப்போ, நல்லாக நேரம் போய்விட்டது. நீ ஒரு களைத்துப் போன இந்தியனைப் போலிருக்கிறாய்.''

''ஒ...எப்படியான ஒரு இனிமையான நாள்'' சொல்லிக் கொண்டே தன் கட்டிலில் சாய்ந்தாள்.

கிற்றி, குளியல் அறையினுள் சென்று உடுப்புக்களை மாற்றிக் கொண்டாள். பாலே நடனத்தின் ராகங்களைக் கரேன் வாயால் மெதுவாக இசைத்துக் கொண்டிருப்பதை அவளால் கேட்க முடிந்தது. ''கடவுளே ஏன் அவளுக்கு இப்படி நிகழ வேண்டும். அவளுக்குத் தைரியத்தைக் கொடுத்தருளும். தயவு செய்து தாங்கும் மனவலிமையைக் கொடுத்தருளும்'' கிற்றி தன் கைகளில் முகத்தைப் புதைத்துக் கொண்டு மெதிதாக நடுங்கியபடி தனக்குத் தானே அரற்றினாள்.

இருவில் நித்திரையே வராமல் விழித்துக் கிடந்தாள் கிற்றி. கரேன் அவளது கட்டிலில் அசையும் ஒலிகேட்டுத் திரும்பி, அவள் கட்டிலைக் கிற்றி பார்த்தாள். கரேன் எழுந்து, வந்து கிற்றியின் கட்டிலருகே மண்டியிட்டமர்ந்து, தன் தலை

யைக் கிற்றியின் மார்பில் சரித்துக்கொண்டாள். ''நான் உன்னை மிகவும் நேசிக் கிறேன். கிற்றி, என் சொந்தத் தாயைக் கூட இவ்வளவு நேசித்திருக்க முடி யாது என்றாள் கரேன்.

கிற்றி தலையைத் திருப்பிக் கொண்டு கரேனுடைய தலைமயிரைத் தட விக் கொடுத்தாள். ''நீ இப்போ நித்திரைக்குப் போவது நல்லது. நாளைக்கு எமக்கு ஒய்வொழிச்சல் இல்லாத நாளாக இருக்கும்'' சிறிது தடுமாறிய குரலில் கிற்றி சொன்னாள்.

கிற்றியால் தூங்க முடியவில்லை. ஒரு சிகரட்டுக்குப் பின்னால், இன் னொரு சிகரட்டைப் பற்றியபடி, இடைக்கிடை எழுந்து உலாத்தியபடி விழித் திருந்தாள். தூங்கும் அந்தக் குழந்தையைப் பார்க்கும் ஒவ்வொரு முறையும் அவள் இதயம் இறுகத் தவித்தது. நடு இரவு கழிந்த பின்னும், நீண்ட நேரத் துக்கு ஜன்னல் அருகில் அமர்ந்து அலைகளின் ஓசையைக்கேட்டபடி, கடற்கரைக் கோட்டின் வளையில் இருந்த ஜாபாவைப் பார்த்துக் கொண்டிருந்தாள். கிற்றி, நிம்மதியற்றுத் தூங்கிப்போனபோது, அதிகாலை நான்கு மணியிருக்கும்.

காலையில் எழுந்திருந்தபோது, மிகவும் உற்சாகமிழந்த நிலையிலும், முகம் விகாரமாகியும் கண்களின் கீழ் தூக்கமின்மையால் ஏற்படும் கருவளை யங்களுடனும் காட்சி அளித்தாள் பத்துப் பன்னிரண்டு முறை அந்தக் காரி யத்தைப் பற்றிக் கதைக்கத் தொடங்க முயற்சித்தாள். புல்தரையில் காலை யுணவு மௌனத்தில் நடந்தது. கிற்றி பின் கோப்பியை மெதுவாகச் சுவைத்த படி இருந்தாள்.

''பிரிகேடியர் சுதர்லாண்ட் எங்கே?'' என்றாள் கரேன்.

''தன்னுடைய வேலைகளைக் கவனிக்கப் போய்விட்டார். சிறிது நேர மாகியதும் எங்களை வந்து சந்திப்பார்.''

''இன்று நாம் என்ன செய்யப்போகிறோம்?''

''அப்படியும் இப்படியுமாக ஏதோ செய்யப்போகிறோம்.''

''கிற்றி ... இது... என்... தந்தை... சம்பந்தப்பட்ட விஷயம் அல்லவா?''

கிற்றி தன் கண்களைத் தாழ்த்திக் கொண்டாள்.

''முன்பே இதை ஊகித்து விட்டேன் என்று நினைக்கிறேன்.''

''நான் உன்னை ஏமாற்ற வேண்டும் என்று நினைக்கவில்லை என் செல் வமே,... நான் ...''

''என்ன விஷயம்... தயவுசெய்து எனக்குச் சொல்லுங்கள் .... என்ன பிரச்சினை?''

''அவர் ... மிகவும் ... நோய்வாய்ப்பட்டிருக்கிறார்.''

கரேன் விரல்களைக் கடித்துக் கொண்டாள். அவள் வாய் நடுங்கியது. ''நான் அவரைக் காண விரும்புகிறேன்.''

''அவர் உன்னை அடையாளம் காணமாட்டார் கரேன்.''

கரேன் நிமிர்ந்து, கடலைப் பார்த்துக் கொண்டே, ''இந்த நாளுக்காக நான் நீண்ட காலம் காத்திருந்தேன்.''

''தயவுசெய்து ....'' தொடங்கிய கிற்றியை இடைமறித்த கரேன், ''இரு வருடங்களுக்கு முன்பு போர் முடியப் போகிறதென்று அறிந்து கொண்ட பிறகு ஒவ்வோர் இரவும் ஒரே கனவோடு தான் நான் தூங்கிப் போவேன். நான் கட்டிலில் படுத்திருந்தபடி, நாங்கள் ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொள்வதாகப் பாவனை செய்து கொள்வேன். நான் அவரைச் சந்திக்கும் போது அவர் எப்படி யிருப்பார் என்று நினைத்து வைத்திருக்கிறேன். நாங்கள் ஒருவருக்கொருவர் என்ன சொல்லிக் கொள்வோம் என்றும், கற்பனை செய்து வைத்திருக்கிறேன். கராஓலொஸ்ஸின் இடம் பெயர்த்தோர் முகாமிலும், சைப்பிரசிலும், இருந்த அவ்வளவு மாத காலத்திலும், ஒவ்வொரு இரவும் இதைப் பற்றிக் கனவு கண் டேன். என் தந்தையையும், என்னையும் பற்றித்தான்..... அவர் உயிருடனிருப் பார் என்று எனக்குத் தெரிந்தேயிருந்தது. ஆகவே, சந்திப்பைப் பற்றித் திரும்பத் திரும்ப நினைத்துக் கொண்டிருந்தேன்'' என்றாள்.

''கரேன், தயவுசெய்து நிறுத்து. நீ கனவு கண்ட மாதிரி இது இருக்கப் போவதில்லை.''

அந்தப்பின்னை காலிலிருந்து, தலைவரை மெதுவாக நடுங்கினாள். அவளு டைய உள்ளங்கைகள் வியர்த்தன. அவன் கதிரையிலிருந்து பாய்ந்து எழுந்திருந் தாள். ''என்னை அவரிடம் கூட்டிச் செல்லுங்கள்.''

கிற்றி, அவள் கையை இறுகப் பற்றிக் கொண்டு, ''நீ பயங்கரமான ஒன்றுக் குத் தயாராக வேண்டும்'' என்றாள்.

''தயவுசெய்து வாருங்கள்..... நாங்கள் விரைவில் போவோம்.''

''ஞாபகம் வைத்துக் கொள் .. அது எப்படி நடந்தாலும்..... நீ என்ன கண்டாலும் .... நான் உன் அருகிலே இருப்பேன்..... அதை ஞாபகம் வைத்துக் கொள்வாயா?''

''சரி நான் மறக்க மாட்டேன்.''

கரேனுக்கும், கிற்றிக்கும் முன்னால் அந்த டாக்டர் அமர்ந்திருந்தார்.

''உன்னுடைய தந்தை கெஸ்டாப்போவினால் சித்திரவதை செய்யப்பட் டார் கரேன். போரின் ஆரம்ப கட்டங்களில், தங்களுக்காக வேலை செய்யச் சொல்லி அவரைக் கொடுமைப்படுத்தி இருக்கிறார்கள். கடைசியில், முடியாமல்

கைவிட்டிருக்கிறார்கள். உன்னுடைய தாயாருக்கும், சகோதரர்களுக்கும் ஆபத்து வருமென்று பயமுறுத்தியும், அவரால் வேலை செய்ய முடியவில்லை'' என்றார் டாக்டர்.

''எனக்கு இப்போ ஞாபகம் வருகிறது.'' கரேன் சொல்லி விட்டுத் தொடர்ந்து, ''கடிதங்கள் டென்மார்க் வருவது நின்று போனது ஞாபகம் வருகிறது. என் குடும்பத்தவரைப் பற்றி ஆகேயைக் கேட்கப் பயந்திருந்ததும் ஞாபகம் வருகிறது.''

''அவர் செக்கோஸ்லாவாக்கியாவின் தெரசியன்ஸ்டாட்டுக்கு அனுப்பப் பட்டார். உனது தாயும் .... சகோதரங்களும்.....''

''அவர்கள் முடிவை அறிந்து கொண்டிருக்கிறேன்.''

''தன் மனதை மாற்றிக் கொள்வார் என்ற எதிர்பார்ப்பில் தான் அவரைத் தெரசியன்ஸ்டாட் அனுப்பினார்கள். போரின் பின்னால், உன்னுடைய தாயினதும், சகோதரர்களினதும் முடிவைப்பற்றி அறிந்து கொண்டார். தான் ஜெர்மனியை விட்டு வெளியேறாமல் காலம் தாழ்த்தி, உனது தாயையும், சகோதரர்களையும் அகப்பட வைத்தது குறித்து மிகவும் குற்ற மனப்பான்மை கொண்டிருந்தார். வருடக்கணக்கான சித்திரவதைகள் போதாதென்று, அவர்களின் முடிவைக் கேள்விப்பட்டதும் அவரது மனம் பேதலித்துப் போய்விட்டது.''

''அவர் குணமடைவாரா?''

டாக்டர், கிற்றியைப் பார்த்து, ''அவர் மனோதத்துவ ரீதியாக உற்சாகமிழந்திருக்கிறார்..... அதி தீவிர துக்கத்தினுள் ஆழ்ந்து போயிருக்கிறார்,''

''இதற்கு என்ன பொருள்?'' கரேன் கேட்டாள்.

''கரேன் உன்னுடைய தந்தை குணமடைய முடியாது?''

''நான் உங்களை நம்பவில்லை. நான் அவரைக் காண வேண்டும்'' என்றாள் அந்தப் பெண்பிள்ளை.

''உனக்கு அவரை ஞாபகமிருக்கிறதா?''

''வெகு குறைவாக.''

''உன் ஞாபகத்தில் இருப்பதோடு சேமிப்பது இப்போ அவரைப் பார்க்க முயற்சிப்பதை விட நல்லது.

''அவள் அவரைக் காணவேண்டும். அது எவ்வளவு கடினமான அனுவலாக இருக்கப் போகிறது என்றாலும், சரிதான். தொடர்ந்து இந்தப் பிரச்சினையை வைத்துக் கொண்டிருக்க முடியாது'' கிற்றி சொன்னாள்.

டாக்டர் அவர்களை அழைத்துக் கொண்டு அறைகளுக்கு நடுவேயிருந்த நடைப்பாதையூடாக, அவர்களை அழைத்துக் கொண்டு ஒரு அறையின் முன்னால்

சென்று நின்றார். ஒரு தாதி அந்தக் கதவைத் திறந்து விட்டாள். அவர் கதவைத் திறந்து பிடித்தார்.

கரேன் சிறைச்சாலை அறை போன்ற அந்த அறைக்குள் பிரவேசித்தாள். அந்த அறையில் ஒரு கதிரை, ஒரு சிறிய மேசை, ஒரு கட்டில் என்பன இருந்தன. அவள் சுற்றிவரப் பார்த்துவிட்டு ஒருகணம் உறைந்து போனாள். ஒரு மனிதன் ஒரு மூலையில் தரையில் அமர்ந்து கொண்டிருந்தான். அவன் வெறும் காலோடிருந்ததோடு, தலையும் வாரப்படாமல் இருந்தது. அவன் சுவரில் தன் முதுகைச் சாய்த்து, கைகளை முழங்கால்களைச் கிற்றிக் கட்டியபடி, எதிர்ச் சுவரில் சூனியத்தை வெறிப்பது போல் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவரை நோக்கிக் கரேன் ஒரு அடியை எடுத்து வைத்தாள். அந்த மனிதருடைய முகத்தில் தாடி வளர்ந்திருந்தது. வடுக்களும் காணப்பட்டன. திடீரெனப் பலமாக உதைத்துக் கொண்டிருந்த கரேனின் இதயம் லேசாகியது. இதில் ஏதோ பிழையிருக்கிறது என்று அவள் நினைத்தாள். இந்த மனிதன் யாரோ முன்பின் அறியாத ஒருவன். இது என்னுடைய தந்தையல்ல. தந்தை இவராக இருக்க முடியாது. இதில் ஏதோ பிழை ஏற்பட்டுவிட்டது. அவன் மனதில் திரும்பி நின்று வாய்விட்டுக் கத்த வேண்டும் என்ற அவா ஏற்பட்டது. பார்த்தீர்களா? நீங்கள் பிழை விட்டுவிட்டீர்கள்..... இது ஜோஹான் இளமென்ற் அல்ல!..... இது என்னுடைய தந்தை அல்ல! அவர் எங்கோ என்னை உயிரோடு தேடிக் கொண்டிருக்கிறார் என்று கத்த விரும்பினாள். ஆயினும், தனக்குத்தானே, சிறிது உறுதி செய்து கொள்ள நிலத்தில் அமர்ந்திருந்த அந்த மனிதரின் முன்னால் நின்றாள்.

அவள் அத்தக் குழம்பிய கண்களுள் உற்றுப் பார்த்தாள். நீண்ட காலமாகி விட்டது..... நீண்டதொரு காலம்..... அவளால் ஞாபகப்படுத்திக் கொள்ள முடியவில்லை. ஆனால், அவள் சந்திக்க வேண்டுமென்று கனவுகள் கண்டுகொண்டிருந்த மனிதன் இவரல்ல.

ஒரு கணப்பும், சுங்கான் புகையிலையின் மணமும் இருந்தன. ஒரு அடர்ந்த உரோமங்களையுடைய நாயும் இருந்தது. அதனுடைய பெயர் மக்ஸி மில்லியன். அடுத்த அறையில் ஒரு குழந்தை அழுதது. மிரியம் நான் என் செல்லப் பெண்ணுக்குக் கதையொன்றை வாசித்துக் கொண்டிருக்கிறேன். என்னைக் குழப்பாமல் ஹான்சை அமைதிப்படுத்து.

கரேன் ஹான்சன் இளமென்ற் மெதுவாக அந்த சிந்தனா சக்தியை இழந்து விட்ட சதைப்பிண்டத்துக்கு முன்னாள் மண்டியிட்டு அமர்ந்தாள்.

பொன்னிலிருக்கும் போர்த்தியாரின் இல்லத்தில்எப்போதுமே புதிதாகத் தயாரிக்கப்பட்ட சிற்றுண்டிகளின் மணம் கமழ்ந்து கொண்டிருக்கும். ஞாயிறு தினங்களில் ஒன்றுகூடும் குடும்பத்தினருக்காக முழுவாரமும் சிற்றுண்டிகளைத் தயாரித்த வண்ணமிருப்பர்.

சித்த சுவாதீனமற்ற அந்த மனிதனோ, அந்த அறையில்தான் மட்டும் தான் இருப்பதுபோல் எதிர்ச்சுவரைத் தொடர்ந்து நோக்கிக் கொண்டிருந்தான். பார்த்

தாயா கொலோன் மிருகக் காட்சிச் சாலையில் குரங்குகள் எவ்வளவு விகடத் தோற்றம் தருகின்றன! மிக நல்ல மிருகக் காட்சிச்சாலையொன்றைக் கொலோன் கொண்டிருக்கிறது. திரும்பவும் எப்போ களியாட்டு விழா தொடங்கும்?

அவள் அந்த மனிதனை அவரது வெறுங்கால்களிலிருந்து, வடுக்களோடி குந்த முன் நெற்றிவரை உற்றுப் பார்த்தாள். ஒன்றுமே அவள் கண்ட ஒன்றுமே அவள் தந்தையானது போலிருக்கவில்லை.

யூதர்! யூதர்! யூதர்! சனக்கூட்டம் கத்தக் கத்த அவள் முகத்தில் இரத்தம் வடிய வடிய தன்னுடைய வீட்டுக்குள் ஓடினாள். கரேன் அழாதே. அப்பா உனக்கு அடிக்க விடமாட்டேன்...

கரேன் கையை நீட்டி அந்த மனிதரின் கன்னத்தைத் தொட்டாள். அப்பா என்று அழைத்தாள். அந்த மனிதர் அசையவில்லை, எந்தவித பிரதி பலிப்பையும் காட்டவில்லை.

அந்தப் புகையிரதம் அது நிறைந்த குழந்தைகள் கூட்டம். டென்மார்க் போகப்போவதை அவர்கள் கதைத்துக் கொண்டார்கள். அவளோ கனைத்துப் போயிருந்தாள். ''போய் வருகிறேன் அப்பா'' கரேன் சொன்னாள். ''இதோ என்னுடைய பொம்மையை எடுத்துக் கொள்ளுங்கள். அது உங்களைக் கவனித்துக் கொள்ளும்.'' அவள் புகையிரதத்தின் படிகளில் நின்றபடி கீழே மேடையில் நின்ற தந்தையை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவர் சிறிதாகி சிறிதாகிக்கொண்டே போனார்.

''அப்பா, அப்பா'' கரேன் அழுதபடி தொடர்ந்தாள். நான்தான் கரேன் அப்பா, உங்களுடைய செல்லப்பெண் வந்திருக்கிறேன். நான் வளர்ந்திருக்கி றேன். அப்பா என்னைத் தெரியவில்லையா?''

வாசல் படியில் நடுங்கிக் கொண்டிருந்த கிற்றியை டாக்டர் இறுகப் பிடித் திருந்தார்.

''என்னை அவளுக்கு உதவவிடுங்கள்... பிளீஸ்—'' கிற்றி அழுதபடி கேட்டாள்.

''பொறுங்கள் அங்கே நடப்பது நடக்கட்டும்''

கரேனில் ஞாபகங்கள் நிறைந்து வர, ''ஆமாம்! ஆமாம்! இது தான் என் தந்தை இவர் தான் என்தந்தை'' கதறினாள் அவள்.

அப்பா! கத்திக் கொண்டே அவரை அணைத்துக் கொண்டாள். ''அப்பா என்னோடு பேசுங்கள் தயவுசெய்து ஏதாவது சொல்லுங்கள்! கெஞ்சிக்கேட்கி றேன் ஏதாவது பேசுங்கள்.''

ஜோஹான் கிளமென்ற் என்ற மனிதனாக ஏப்பவோ இருந்த அந்த உருவம், கண்களை வெறுமனே திறந்து மூடியது. தன்னை யாரோ பிடித்திருப்பதை உணர்ந்ததும், ஏதோ ஒரு ஆர்வம் முகத்தில் தோன்றுவது போலிருந்தது. தன்னுடைய அந்தகாரத்தினுள் தனக்கேயுரிய வழியில் ஏதோ ஒன்றைப் புரிய வைக்க முயற்சிப்பது போல் அந்த முகத்திலோடிய உணர்ச்சி ஒரு கணமே நிலைத்தது. திரும்பவும் அந்தத் தோற்றம் உயிரற்ற விதமாக உறைந்து போயிற்று.

அப்பா! அப்பா! அவள் உரக்கக் கதறினாள்.

அவளது கதறல் அந்த வெறும் அறையிலும், வெளியேயிருந்த நீண்ட இடைவெளியிலும் எதிரொலித்தது.

டாக்டரின் புலமான கைகள் அவளைப் பிரித்தெடுத்தது. அறையை விட்டு மெதுவாக அவளை அழைத்துச் சென்றது. கதவு மூடப்பட்டுப் பூட்டப் பட்டது. ஜோஹான் கிளமென்ற் கரேனின் வாழ்க்கையில்இருந்து அகன்றார் நிரந்தரமாகவே. அந்தக் குழந்தை சோகத்தில் அழுதடி கிற்றியின் கைகளுள் துவண்டு விழுந்தாள். ''அவருக்கு என்னைத் தெரியக் கூடவில்லை. ஓ... என்னுடைய கடவுளே..... கடவுளே..... ஏன் என்னை அவருக்குத் தெரியவில்லை?..... கூறுங்கள்.. கடவுளே எனக்குச் சொல்லுங்கள்.

கவலைப்படாதே அம்மா .. கவலைப்படாதே. இங்கே பார். கிற்றி இருக்கிறேன். கிற்றி உன்னோடுதானிருக்கிறேன். கவலைப்படாதே''

''என்னை விட்டு போய்விடாதே கிற்றி ஒருபோதும் என்னை விட்டுப் போய்விடாதே.''

''இல்லை கண்ணே, கிற்றி ஒருபோதும் உன்னை விட்டு போகமாட்டேன்..... ஒருபோதும் விட்டுப் போக மாட்டேன்'' கிற்றி தேற்றினாள்.

அத்தியாயம் ஒன்பது

கரேனுடைய தந்தையைப் பற்றிய செய்தி அவர்கள் வருமுன்னரே, கான் டப்னா பூராவும் பரவிவிட்டது. டொவ் லன்டவ்வை அது மிக அதிகமாகப் பாதித்தது. வார்சோ சேரியின் கீழே ஒரு பதுங்குகுழியில் அவனது சகோதரன் மண்டெக் அவனை அணைத்திருந்த சமயத்துக்குப் பிறகு, இப்போது தான் முதல் தடவையாக தன்னைத் தவிர வேறொருவருக்காக அவனில் கழிவிரக்கம் ஊற்றெடுத்தது. கரேன் கிளமென்ற்றுக்காக அவன் மனதில் தோன்றிய இந்த இரக்கம் அவனது இருண்ட உலகத்தைப் பிரகாசமாக்கும் ஒரு ஒளிக் கீற்றாக விளங்கியது.

அவன் நம்பிக்கை வைக்கக்கூடிய, கவலைப்படக்கூடிய ஒரே ஆளாக அவள்தான் இருந்தாள். உலகில் எவ்வளவோ ஆட்களிருக்க அவருக்கு மட்டும் ஏன் இப்படி நிகழ வேண்டும்? எத்தனை முறை அந்த நாற்றமெடுக்கும் சைப்பிரஸ் முகாமில், தன்னுடைய எளிமையான, சர்வசக்திவாய்ந்த விசுவாசத்தைப் பற்றிக் கரேன் சொல்லியிருக்கிறாள். இப்போ கரேனுக்குப் பாதிப்பு ஏற்பட்டுவிட்டது. அவளுடைய சோகம், அவனுடைய மனதில் ஆழமான துன்பத்தை ஏற்படுத்தியது.

அவளுக்கு இப்போ யார் எஞ்சியிருக்கிறார்கள். அவனும், திருமதி பிறமென்றுமா? அவன் அவளுக்கு யார்? அவன் அவள் வாழ்க்கையில் ஒரு கல்தான் - வெறுங்கல். திருமதி பிறமென்றை வெறுக்க நினைத்தாலும், அவள் கரேனுக்கு ஆதரவாக இருப்பதால் அவனால் அப்படிச் செய்ய முடியவில்லை. கரேனுடைய தந்தை இப்போ அவள் வாழ்க்கையிலிருந்து அகன்று விட்டதால், ஒரு வேளை திருமதி பிறமென்ற் அவளை அமெரிக்காவுக்கு அழைத்துச் செல்லக்கூடும். அவளின் பாதையில் தான் மட்டும் தான் தடையாக இருக்கிறான். அவனை விட்டுவிட்டு அமெரிக்கா போக கரேன் சம்மதிக்க மாட்டாள். அவன் மனதில், ஒரே ஒரு வழிதான் புலப்பட்டது.

கான் டப்னாவில். மக்கபீசுக்கு இரகசியமாக ஆள்சேர்க்கும் ஒருவனாக மோர்டேகாய் (Mordecai) என்றஇளைஞன் இருந்தான். அவனிடம் இருந்துஎங்கு எப்படி அந்த தலைமறைவுஇயக்கத்தோடு தொடர்புகொள்ளலாம் என்று அறிந்து வைத்திருந்தான். கான் டப்னா வளாகங்களின் கொட்டகைகள் ஒருபோதும் இரவில்பூட்டப்படு வதில்லை. ஒரு நாள் இரவு எல்லோரும் இரவுணவு உட்கொண்டிருந்தவேளையில், பல கொட்டகைகளில் நுழைந்து, சில தங்க நகைகளைத் திருடிக்கொண்டு ஜெருசலேமுக்கு ஓடிவிட்டான்.

புரூஸ் சுதர்லாண்ட் நேராக டாக்டர் லிப்பர்மானிடம்வந்து. ஏற்பட்ட அதிர்ச்சியிலிருந்து கரேன் இயல்பு நிலையை அடைய வைப்பதற்காக, கிற்றி அவளை ஓரிரு வாரங்களுக்குத் தன் மாளிகைக்கு அழைத்து வர அனுமதி அளிக்கும்படி கேட்டுக் கொண்டார்.

துன்பியல் நிகழ்வுகளே நிறைந்த தன் வாழ்க்கையை எப்படித் தாண்டி வந்தாளோ, அதே கௌரவத்துடனும், துணிவுடனும் இந்தத் துன்பத்தையும் தாங்கிக் கொண்டாள். கிற்றி பிறமென்ற் புத்திசாலி. அந்தப் பெண்ணை விட்டு ஒருபோதும் விலகி இருக்கவில்லை.

கரேனின் தந்தையின் நிலையும், டொவ் லன்டவின் திடீர் மறைவும் கிற்றிக்கு ஒரு கடுமையான வெற்றியை தேடித்தந்திருந்தன. காலப்போக்கில் கரேனை அமெரிக்காவுக்கு அழைத்துச் செல்ல முடியும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியிருந்தது. கிற்றி, சுதர்லாண்டின் மாளிகையிலிருந்தபோது, இதைப் பற்றி பலமுறை சிந்தித்தாள். கரேனின் துன்பத்தில் தான் லாபமடைய முற்படுவது குறித்து, தன்னைத்தானே வெறுத்துக் கொண்டாலும், அந்த நினைவுகளைத் தவிர்க்க முடியவில்லை. கராஓலொஸ் முகாமின் கூடாரமொன்றினுள் அவளைக் கண்ட நாளிலிருந்து, கிற்றியின் முழு வாழ்க்கையும் அவளைச் சுற்றியே சுழன்று கொண்டிருந்தது.

ஒருநாள் மதிய உணவு நேரத்துக்குப் பிறகு, சுதர்லாண்டின் மாளிகைக்கு அரி பென் கானான் வந்தான். பணியாளன் ஒருவன் சுதர்லாண்டைப் பின்பக்கமிருந்து அழைத்து வரும் வரை அவன் முன் வரவேற்பறையில் காத்துக் கொண்டிருந்தான். சூரிய ஒளியில் படுத்திருந்த பெண்களை விட்டுவிட்டு, சுதர்லாண்ட் முன்பக்கம் வந்தார். இருவரும் ஒரு மணி நேரமளவுக்கு உத்தியோக பூர்வமான விடயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர்.

தங்களுடைய கலந்துரையாடல் முடிந்தபின், சுதர்லாண்ட் அரியைப் பார்த்து, ''உன்னுடைய சிநேகிதி ஒருத்தி இங்கே வந்திருக்கிறாள். அந்த கிளமென்ற் பெண்ணுடன், கிற்றி பிறமென்ற் என் வீட்டு விருந்தாளியாக ஒரு வாரமாகத் தங்கியிருக்கிறாள்'' என்றார்.

''நீங்கள் இருவரும் கூட அருமையான நண்பர்களாகி விட்டதாகக் கேள்விப் பட்டேன்'' என்றான் அரி.

''ஆமாம். நான் சந்தித்த பெண்களிலேயே கத்தரின் பிறமென்ற், ஒரு அருமையான பெண் என்று நினைக்கிறேன். நீ கான்டப்னாவுக்குப் போய் அங்கு சில குழந்தைகளுக்கு அவள் செய்திருக்கும் சேவையைப் பார்க்க வேண்டும். ஆறு மாதத்துக்கு முன் கதைக்க முடியாமலிருந்த ஒரு பையன் இப்போ வாயைத் திறந்து கதைப்பதோடு, பாடசாலை வாத்தியக் குழுவுக்காக ஊது குழலையும் (Bugle) இசைக்கிறான்''

''அதைப்பற்றியும் நான் கேள்விப்பட்டேன்'' பதிலிறுத்தான் அரி.

''நான்தான் கிளமென்ற் பெண்ணையும் கூட்டிக் கொண்டு, இங்கு வரும்படி வற்புறுத்தினேன். அந்தப் பிள்ளையின் தகப்பனைக் கண்டு பிடித்து விட்டார்கள். அந்த மனிதன் குணப்படுத்த முடியாதளவுக்குச் சித்த சுவாதினத்தை இழந்து விட்டார். தாங்க முடியாத அதிர்ச்சிதான். சொல்லவே தேவையில்லை. வாவேன் தோட்டத்துக்குப் போவோம்.''

''இல்லை. வேண்டாம் எனக்கு வேறு வேலை இருக்கிறது.''

''சும்மா விசர்க்கதை பேசாதே. வா.'' என்றுவிட்டு அவன் கையைப் பிடித்து வெளியே அழைத்துச் சென்றார்.

தபோர் மலை சந்திப்புக்குப் பிறகு கிற்றி அரியைக் காணவேயில்லை. அவனைக் கண்டவுடன் திடுக்கிட்டுப் போனாள். அரி, தன்னைப் பற்றிக் கவலைப்படாமல் மெலிந்து போயிருந்தான்.

கரேனுக்கு அரி ஆறுதல் கூறிய விதம் வியப்புக்குரிய விதத்தில் மென்மையாக இருந்ததைக் கிற்றி உணர்ந்தாள். தன் சொந்த மக்களுக்கெனவே பிரத்தியேகமாக ஒதுக்கி வைத்திருப்பது போன்ற மென்மையோடு அதைச் செய்தான். கிற்றியை ஒருபோதும் அவன் அப்படி நடத்தவில்லை. கரேனைத் தங்களில் ஒருவராக ஏற்றுக் கொண்டதால் அப்படி நிகழ்ந்தது என்று கிற்றி யோசித்தாள். அப்படியிருக்கும் என்று நினைத்தபோது, தன்னில் தானே கோபம் கொண்டாள். கரேன் சம்பந்தமாக நிகழும் சம்பவங்கள், சொல்லப்படும் ஒவ்வொரு சொல்லும், கொடுத்த கருத்துக்கள், கரேன் யூத இனத்தவள் என்ற அடிப்படை உறவில் நிகழ்வதாகத்தான் வகைப்படுத்தத் தொடங்கியிருந்ததைக் கிற்றி உணர்ந்தாள். சிலவேளை தான் இல்லாத கருத்துக்களை உருவாக்கிச் சஞ்சலப்படுகிறோமோ என்றும் நினைத்தாள்.

கிற்றியும், அரியும் சுதர்லாண்டின் ரோஜாத் தோட்டத்தினூடாக நடந்து கொண்டிருந்தார்கள்.

''அவள் எப்படியிருக்கிறாள்?'' கேட்டான் அரி.

''அவள் மிகுந்த நிடம் வாய்ந்த, துணிவான பெண். அது ஒரு அதிர்ச்சியளிக்கும் நிகழ்ச்சிதான். ஆனால், அவள் அதைத் திறமையாகச் சமாளித்து விட்டாள்.''

அரி திரும்பி, சுதர்லாண்டும், கரேனும், செக்கர்ஸ் (டாம் போன்ற விளையாட்டு) என்னும் விளையாட்டை விளையாடிக் கொண்டிருப்பதைத் திரும்பிப் பார்த்து விட்டு, ''அவள் ஒரு அழகான பெண்'' என்றான் ஆத்மார்த்தமாகவே.

அவனது வார்த்தைகள் அவளை ஆச்சரியப்பட வைத்தன. இப்படியாக ஒன்றைப் பாராட்டும் தொனியில் அவன் பேசுவதை அவள் கேட்டதேயில்லை. அழகு சம்பந்தமான எதுவும் அவன் மனதை எட்டுகிறதா என்பதில் கூட அவளுக்குச் சந்தேகம் இருந்தது. தோட்டத்தைச் சுற்றிப் பதிவான உயரத்தில் கற்சுவர்

ஒன்று செல்லும் இடம்வரை சென்று நின்றார்கள். சுவருக்கப்பால் பள்ளத்தாக்குக் குன்றின் அடிவாரத்தில் பரந்திருந்தது. அப்பால் ஷாபெட் தெரிந்தது. கிற்றி சுவர்மேல் அமர்ந்து கொண்டு, கலிலியை நோக்கிக் கொண்டிருக்க அரி தனக்கு ஒன்றும் கிற்றிக்கு ஒன்றுமாகச் சிகரட்டுகளைப் பற்ற வைத்துக் கொடுத்தான்.

''அரி, இதுவரை நான் உங்களிடம் தனிப்பட்ட முறையில் ஒரு உபகாரமும் கேட்கவில்லை. இப்போ கேட்கப் போகிறேன்.''

''தாராளமாக.''

''கரேன், தன் தந்தையின் இழப்பைத் தாங்கிக் கொள்வாள். ஆனால், அவளால் தாங்கிக் கொள்ள முடியாத இன்னோர் விஷயமுண்டு. டொவ் லன்டல் கான் டப்னாவில் இருந்து ஒடிப்போய் விட்டான். மக்கபீசில் சேருவதற்காக ஜெருசலேம் போயிருக்கலாம் என்று அனுமானிக்கிறோம். உங்களுக்குத் தெரிந்தது போல், அந்தப் பையனின் பிரச்சினையைத் தனது பிரத்தியேக போராட்டமாக எடுத்துக் கொண்டிருக்கிறாள். அவளுடைய தந்தையின் இழப்பு, டொவ்வின் இழப்பின் தாக்கத்தைப் பலமடங்கு அதிகரித்து விட்டது. அவனைப்பற்றி அவள் மிகவும் கவலைப்படுகிறாள். அவனைக் கண்டு பிடித்து, 'கான் டப்னாவுக்கு நீங்கள் கொண்டு வரவேண்டும் என விரும்புகிறேன். அவனைக் கண்டுபிடிக்கக் கூடிய தொடர்புகள் உங்களுக்கு உண்டு என எனக்குத் தெரியும். கரேனுக்கு அவன் தேவை என்று தெரிய வைத்தால் அவன் வருவான்.''

அரி ஒரு புகைமண்டலத்தை ஊதிவிட்டு, கிற்றியை வியப்புடன் பார்த்தபடி, ''உன்னை எப்படிப் புரிந்து கொள்வது என்று எனக்குத் தெரியவில்லை. அந்தப் பெண் இப்போ உனக்குத்தான் சொந்தம். உனக்குக் குறுக்கே நிற்கக் கூடியவன் அவன்தான். அவனே தன்னைத்தானே விலக்கிக் கொண்டு விட்டான்.''

கிற்றி அவனை ஒரு மாதிரியாகப் பார்த்தாள். ''நீ சொல்வதனால் நான் ஆத்திரப்பட வேண்டும். ஆனால், என்னால் அப்படிச் செய்ய முடியாது. ஏனெனில், நீ சொல்வது உண்மை. உண்மை என்னவென்றால், அவளது துயரத்தின் மேல் எனது சொந்த மகிழ்ச்சியைக் கட்டியெழுப்ப முடியாது. டொவ்வுடைய பிரச்சினை தீராமல் நான் அவளை அமெரிக்காவுக்குக் கூட்டிச் செல்ல முடியாது.''

''அது மிகவும் பாராட்டப்பட வேண்டிய விஷயம்.''

''இது என்னுடைய நேர்மையான நோக்கம் அல்ல. அரி, கரேன் அந்தப் பையன் சம்பந்தப்பட்ட விஷயம் தவிர, மற்றவைகளில் நிரம்பப் புத்திசாலி. எங்கள் எல்லோரிலும் பலவீனமான பகுதிகள் இருக்கின்றன என்று நினைக்கிறேன். அவன் கான் டப்னாவில் இருந்ததால், விரைவில் அவனைப்புரிந்து கொண்டு விலகி விடுவான். அவன் மக்கபீசில் இருந்து கொண்டு விலகியிருந்தால், அவள் அவனது நினைவைச் சரியான அளவுக்கு அதிகமாக வார்த்துக் கொள்வாள்.''

''நான் எளிய வகையில் இதை நோக்குவதைப் பற்றி என்னை மன்னித்து விடு. நீ மிகத் தந்திரமாக வேலை செய்கிறாய்.''

''நான் அந்தப் பெண்ணை நேசிக்கிறேன். இதில் எந்தவிதமான உள்நோக்கங்களோ, கெட்ட நோக்கங்களோ இல்லை.''

''அவளுக்கு உன்னோடு தவிரப் போவதற்கு வேறு இடமில்லையென நிச்சயப்படுத்த முயலுகிறாய்.''

''அவள் போவதற்கு நல்ல இடம் ஒன்று இருக்கிறது என்று அவளுக்கு அறியப்படுத்தத்தான் நான் முயல்கிறேன். நீங்கள், நான் சொல்லப் போவதை நம்பாமல் இருக்கலாம். ஆனால், பலஸ்தீனத்தில் தங்குவதுதான் அவளுக்கு நல்லதென்று எனக்கு நிச்சயமானால், அவள் இருக்குமிடம் இதுவாகத்தான் இருக்கும்.''

''இதை என்னால் நம்ப முடியும் என்று நினைக்கிறேன்.''

''நான் அவளை அமெரிக்காவுக்கு அழைத்துச் செல்ல விரும்புவதால் அவளுக்கு ஏதாவது தீங்கிழைக்கிறேன் என்று நினைக்கிறீர்களா?''

''இல்லை. அது தீங்கே இல்லை.''

''அப்படியானால் டொவ்வைத் திரும்பப் பெற உதவி செய்யுங்கள்.''

ஒரு நீண்ட பொழுது நிலவியது. அரி தன் சிகரெட்டைச் சுவரில் தேய்த்து அணைத்தான். பின்பு தான் செய்வது பற்றிய உணர்வெதுவுமில்லாமலே, சிகரட் கடதாசியை உரித்து மிகுந்திருந்த புகையிலையைத் தூவிப் பரவிவிட்டு கடதாசியைப் பந்துபோல்உருட்டிப் பையில் போட்டுக் கொண்டான். சிகரெட்துண்டுகளை விசி எறிந்து தடயங்களை விட்டுச் செல்லக் கூடாதென்று பி. பி. மல்கம் அவனுக்குப் பயிற்றுவித்திருந்தார். எதிரி, துருப்புக்களைத் தேடும் அரபுக்களுக்குச் சிகரெட் துண்டுகள், ஒளிரும் விளம்பரப் பலகைகளைப் போன்ற தடயங்களாக இருக்கும்.

''என்னால் அதைச் செய்ய முடியாது.'' அரி சொன்னான்.

''உங்களால் முடியும். டொவ் உங்களை மதிக்கிறான்.''.

ஆமாம், நிச்சயமாக அவனை என்னால் கண்டுபிடிக்க முடியும். அவனைக் கான் டப்னாவுக்கு வரும்படி வற்புறுத்தி, பையா, கான்ட டப்னாவில் அசையாமலிரு .... இந்தப் பெண்கள் உனக்குத் தீங்கெதுவும் நேருவதை விரும்பவில்லை என்று சொல்ல முடியும். பலஸ்தீனத்தின் ஒவ்வொரு யூதனும் தன் மனச்சாட்சியின் படி எடுக்கவேண்டிய முடிவைத்தான் டொவ்லன்டவ் எடுத்திருக்கிறான். இதைப்பற்றிய உள்ளுணர்வுகள் மிகவும் வலிமையானவை. இதனால், எனது தந்தையும், சிறியதந்தையும் பதினைந்துவருடங்களாக ஒருவருக்கொருவர் கதைத்துக் கொள்ளவில்லை. டொவ் லன்டவ்வின் ஒவ்வொரு அணுவும், பழி வாங்க வேண்டும் என்று துடிக்கிறது. அவனை இப்போது இயக்கிக் கொண்டிருக்கும்

வேகத்தை நிறுத்த ஒன்றில் கடவுள் அல்லது துப்பாக்கி ரவை ஒன்றினால்தான் முடியும்.''

''நீங்கள் பயங்கரவாதிகளை ஆதரிப்பது போல் தெரிகிறது.''

சிலவேளைகளில் நான் அவர்களுக்காகமுழுதாக அனுதாபப் படுகிறேன். சிலவேளைகளில் நான் அவர்களை வெறுக்கிறேன். எனினும் அவர்களின் செயல் பாடுகளின் நியாய அநியாயங்களைச் சொல்ல நான் விரும்பவில்லை. டொவ் லன் டவ் செய்வது நியாயமல்ல என்று சொல்ல நீயும் நானும் யார்? அவனுக்கி ழைக்கப்பட்டிருக்கும் கொடுமைகளைப் பற்றித் தெரியும்தானே. வேறோர் விஷ யத்தைப் பற்றி நீ தவறான அபிப்பிராயம் கொண்டிருக்கிறாய். அவனைத் திருப்பிக் கொண்டு வந்தால் அந்தப் பெண்ணுக்கு மேலும் துன்பத்தைத்தான் கொடுப்பான். டொவ் செய்ய வேண்டியதை அவன் செய்தேயாக வேண்டும்.''

கிற்றி சுவரிலிருந்து, இறங்கி, தனது பாவாடையைத் தட்டிவிட்டாள். அவர்கள் வாசலை நோக்கிப் போனார்கள். கடைசியாக அவள், ''அரி நீ சொல்வது சரிதான்.'' என்றாள். அவர்கள் வெளியே நடந்து சென்று தனது காரை நெருங்கிய போது, சுதர்லாண்ட் அவர்களோடு இணைந்து கொண்டார்.

''நீங்கள் இங்கு நீண்டகாலம் தங்கப்போகிறீர்களா பென்காணான்?'' அவர் கேட்டார்.

''ஷாபெட்டில் செய்ய வேண்டிய வேலைகள் சில உண்டு. அவைகளை செய்து முடிக்கவேண்டும்.''

நீங்கள் ஏன் திரும்பிவந்து இரவு உணவில் பங்குகொள்ளக்கூடாது.''

''இல்லை நான் .....''

''தயவு செய்து வாருங்கள்'' கிற்றி கேட்டுக்கொண்டாள்.

''சரி வருகிறேன். மிக்க நன்றி.''

''நல்லது ஷாபெட்டில் உங்கள் வேலை முடிந்ததும் திரும்பி வாருங்கள்.''

அரி மலைச்சரிவில் காரைச் செலுத்தி, ராக்காட் கோட்டையை கடந்து பார்வைக்கு மறையும்வரை கைகளை அசைத்துக் கொண்டிருந்தனர்.

''இஸ்ரேலைக் காப்பவன் எவனோ, அவன் ஓய்வெடுக்கவோ நித்திரை கொள்ளவோ முடியாது.'' கிற்றி சொன்னாள்.

''என்னுடைய கடவுளே, கிற்றி நீயும் வேதாகமத்திலிருந்து மேற்கோள் காட்டத் தொடங்கி விட்டாயா?'' அவர்கள் கதவைத் திறந்து பின் விறாந்தையை நோக்கி வரத் தொடங்கினார்கள்.

''அவர் களைத்துப் போய்க் காணப்படுகிறார்.''

''ஒரு வாரத்துக்கு நூற்றிப்பத்து மணித்தியாலங்கள் வேலை செய்தும் அவனது தோற்றம் நன்றாகத்தானிருக்கிறது'' என்றார் சுதர்லாண்ட்.

''இப்படியான அர்ப்பணிப்பை நான் ஒரு போதும் காணவில்லை.'' அல்லது அதை வெறியென்று சொல்வீர்களா? அவரை இங்கு கண்டு நான் வியந்து போனேன். நீங்களும் இந்த விஷயங்களில் ஈடுபட்டிருக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியாது.''

சுதர்லாண்ட் தனது சுங்கான் நிரம்பப் புகையிலையை அடைத்துக் கொண்டார். ''உண்மையில் முழு அளவில் நான் இதில் ஈடுபடவில்லை. ஹகானா என்னிடம் வந்து பலஸ்தீனத்துக்கு வெளியே உள்ள அரபுப்படைகளின் பலத்தை மதிப்பீடு செய்து தரும்படி கேட்டுக் கொண்டார்கள். எளிமையாகச் சொல்லப் போனால், அவர்கள் ஒரு தொழில்சார், பக்கசார்பற்ற அபிப்பிராயத்தையே கேட்டார்கள். கிற்றி உன்னைப் பொறுத்தமட்டில் இந்தவிடயத்தில் எனக்கே நேர்மையாக நடக்கவேண்டிய நேரம் வந்து விட்டதென்று நீ நினைக்க வில்லையா?''

நான் எந்தப் பகுதிக்கும் சார்பாக இருக்கமாட்டேன் என்று உங்களுக்கு ஏற்கனவே சொல்லியிருக்கிறேன் தானே?''

''கிற்றி நீ ஒரு தெருப்புக் கோழியைப் போல் இருக்கிறாய் என்று நினைக்கிறேன். நீ போர்க்களமொன்றின் மத்தியில் இருந்து கொண்டு எனக் கெதுவும் தெரியாது. எனது வீட்டைத் தாக்காதீர்கள் என்று சொல்பவளைப் போல் இருக்கிறீர்கள்

''நான் வெளியேறப் போகிறேன் புரூஸ்''

''அப்படியானால் அதை விரைவாகச் செய்யுங்கள். நீ இப்போ இருப்பது போல் தொடர்ந்தும் நீண்ட காலத்துக்கு இருக்கமுடியும் என்று நினைத்தால், நீ ஒரு முட்டாளின் சொர்க்கத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறாய் என்று தான் அர்த்தம்.''

இப்போதைக்கு என்னால் அப்படியான நிலையை எடுக்க முடியாது. கரேன் இதிலிருந்து மீளும்வரை எனக்கு சிறிது அவகாசம் வேண்டும்.''

''காரணம் அது மட்டும்தானா?''

கிற்றி இல்லையெனத் தலையை ஆட்டினாள். ''நான் ஒரு நேரடி மோதலொன்றை எண்ணிப் பயப்படுகிறேன். சில வேளைகளில், இந்த அவளும்-பலஸ்தீனமும் என்ற விஷயத்தைத் தோற்கடித்து விட்டேன் போல் தோன்றுகிறது.

மற்றைய நேரங்களில், அதாவது இப்போதுள்ள நிலைமை போல் அப்படி வென்றுவிட்டேனோ என்று சோதனை செய்து பார்க்கப் பயமாக இருக்கிறது.''

இரவுணவுக்கு முன், சுதர்லாண்டின் மாளிகையிலிருந்து நகரின் மேல் பிரமாண்டமான முழுநிலவு ஒளிவீசிக் கொண்டிருப்பதைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

''கடவுள் இஸ்ரேல் மக்களுக்கு மூன்று கொடைகளைக் கொடுத்தார். அவை ஒவ்வொன்றும், துன்பத்துக் கூடாகவே வெல்லப்பட வேண்டியவை. அவைகளில் ஒன்றுதான் இஸ்ரேல் மண்.'' என்றார் சுதர்லாண்ட். தொடர்ந்து ''இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பார் யோஹாயின் வார்த்தைகளிவை. அவர் ஒரு ஞானி என்று நான் சொல்வேன்'' என்றார்.

''ஞானிகளைப் பற்றிப் பேசும்போதுதான் ஞாபகம் வந்தது. நான் நாளை கலிலிக்குப் போகிறேன். நீ இன்னும் அங்கு போகவில்லையா? அரி கேட்டான்.

''இல்லை. ஏனென்றால் என்னுடைய பயணங்கள் மிகவும் மட்டுப்படுத்தப்பட்டவை.''

''நீங்கள் கட்டாயம் அதைப் பார்க்க வேண்டும். விரைவிலேயே நீங்கள் போகவேண்டும். சில வாரங்களில் வெப்பம் அதிகரித்து விடும்.''

''நீங்கள் ஏன் அவளைக் கூட்டிப்போகக்கூடாது?'' என்றாள் சுரேன் மெதுவாக.

ஒரு அசௌகரியமான மௌனம் குடிகொண்டது.

''அது ... உண்மையிலேயே ஒரு நல்ல திட்டம். நான் சில நாள் விடுமுறை எடுக்கக்கூடியதாக எனது வேலைகளை ஒழுங்கு பண்ண முடியும், ஏன் நால்வருமே போகக்கூடாது?''

''எனக்கு விருப்பமில்லை.'' என்ற கரேன் தொடர்ந்து, ''நான் ஏற்கனவே இரு முறைகள் கட்னாவுடன் அங்கே சென்றிருக்கிறேன்.'' என்றாள்.

புரூஸ் சுதர்லாண்டும் கரேனின் சாடை காட்டலைப் பிடித்துக் கொண்டார், ''நானும் வரவில்லை. நான் பலமுறை அந்த வாவியைப் பார்த்து விட்டேன்.''

''நீங்கள் ஏன் அரியுடன் போகக்கூடாது?'' கரேன் கேட்டாள்.

''நான் உன்னோடிருப்பது நல்லது என நினைக்கிறேன்'' என்றாள் கிற்றி.

''விசர்க்கதை பேசாதே. நீ இல்லாமலே நாங்களிருவரும் சீவிக்க முடியும். உண்மையாகச் சொல்லப் போனால் உன்னைச் சில நாட்களுக்கு இல்லாமல் பண்ணினால் தான் மகிழ்ச்சியாயிருக்கும். அரியும் சிறீது ஒய்வெடுத்துக் கொள்ளவேண்டியவன் தொற்றமளிப்பது போல் தோன்றுகிறது.''

கிற்றி மனம் விட்டுச் சிரித்தாள். ''அரி இங்கு ஏதோ சதி நடக்கிறது போல் தெரிகிறது. இங்கே இரு கலியாணத் தரகர்கள் திருமண ஒப்பந்தத்தை ஏற்படுத்தும் முயற்சியிலீடுபட்டிருக்கிறார்கள்'' என்றாள் அவள்.

''அவர் சொல்வதைக் கேட்டீர்களா?'' உற்சாகத்துடன் கூவினாள் கரேன்.

''ச்சா ... நான் மனத்தனவில் ஒரு ஷப்றாதான். அரி நீ மாட்டிக் கொண்டாய் போலிருக்கிறது.''

''அது எனக்குப் பொருந்துகின்றது'', என்றான் அரி.

o

அத்தியாயம் பத்து

அடுத்த நாள் காலையில், கலிலிக்கு கிற்றியும் அரியுமாக வாகனத்தில் சென்றார்கள். அவர்கள் அதன் வடக்குக் கரைகளின் அருகே நீண்டிருந்த ஜெனோசார் பள்ளத்தாக்குக்குள் நுழைந்தார்கள். வானிக்கு அப்பால் மண்ணிறமாய்த் தோற்றமளித்த சிரியாவின் குன்றுகள் இந்தத்தாழ்ந்த இடத்தில் இருந்து பார்த்தபோது பூதாகரமாகத் தெரிந்தன. வெப்பமான, புழுக்கமான காற்று அசையாமல் நின்றது.

இதுதான் கடவுளுக்கே சொந்தக் கடல் எனக் கிற்றி எண்ணிக் கொண்டாள். இன்னோருமுறை அவள் அரி பென் கானானுடன் தனித்திருக்கிறாள். இன்னொரு முறை, அவள் முன்பு யூதேயாக் குன்றுகளில் உணர்ந்தது போல் இந்த மண்ணின் நேரம் ஸ்தம்பித்துப் போய்விட்ட தன்மை தன்னை ஆகர்ஷிப்பதை உணர்ந்தாள். அரியோடு இருக்கும்போது மட்டும் ஏன் இப்படிப் பாதிக்கப்படுகிறோம் என்று அவள் வியப்புற்றாள்.

கடல் அருகில் அவன், அவளை கப்பர்நாவும் சின்னகோக்கிற்கு அழைத்துச் சென்றான். இங்கே யேசு சஞ்சரித்து, கற்பித்துக் குணப்படுத்தினார். தான் மறந்து போய்விட்டதாகக் கிற்றி நினைத்திருந்த வார்த்தைகள் அணை நிறந்த வெள்ளம் போல் பிரவகிக்க ஆரம்பித்தன.

யேசுநாதர் கலிலிக்கடலின் அருகில் நடந்து வந்தபோது சீமோன் எனப் பட்ட இராயப்பரையும் (Peter) அவரதுசகோதரனானபெலவேந்திரரும் (Andrew) வலைவீசிக் கொண்டிருக்கக் கண்டார்..... அவர்கள் கப்பர் நாகவுமிற்குள் சென்று ஓய்வு நாளன்று சின்னக்கோக்குச் சென்று போதித்தார்.''

யேசுநாதர் அங்கிருந்து போகவில்லை என்ற உணர்வையேசூழ்நிலைகள் தந்தன. இன்னும் மீனவர்கள் கரையிலிருந்து வலையை வீசிக்கொண்டிருந்தார்கள். ஒருசிறிய கறுப்புச் செம்மறியாட்டுக் கூட்டம் அருகே புல் மேய்ந்து கொண்டிருந்தது. காலம் அசையாமல் நின்றுவிட்டது போல் இருந்து- கப்பர் நாவுமிலிருந்து சிறிது தூரத்தில் இருந்த, மீன்களும், ரொட்டித் துண்டுகளும் பெருகியதாகச் சொல்லப்படும் இடத்தில் அமைந்திருந்த ஆலயத்துக்கு அரி அவளை அழைத்துச் சென்றான். ஆலயத்தின் தரையின் பைசாந்திய (Byzantine) யுகத்துத் துண்டுகளை இணைத்து (Mossic) உருவாக்கும் சித்திர வேலைப்பாடுகளில், இப்பவும் வாவியில் சீவித்து வந்த கொக்கு, நாரை, தாராக்கள் போன்ற இன்னோரன்ன பறவைகள் சித்திரிக்கப்பட்டிருந்தன.

பின்பு யேசுநாதர் மலைப்பிரசங்கத்தை நிகழ்த்தியதாகக் கூறப்படும், பியூற்றிபூட் மலை (Mount of Beautitudes) யில் அமைந்திருந்த சிறிய ஆலையத்துக்கும் சென்றார்கள்.

''நீதியின் பொருட்டு வாதைபடுகிறவர்கள் பாக்கியவான்கள் ஏனெனில் பரலோக ராட்சியம் அவர்களுடையதே. என்னிமித்தம் உங்களைத் துன்பப் படுத்துவார்கள், வாதைப்படுத்துவார்கள், பொய்யான குற்றச்சாட்டுகளைச் சுமத்துவார்கள். இவற்றால் நீங்கள் மகிழ்ச்சி கொள்ளுங்கள். ஆனந்தம் கொள்ளுங்கள். ஏனெனில்விண்ணகத்தில் உங்கள் சன்மானமும் பெரிதாயிருக்கும். உங்கள் வந்த தீர்க்க முன் தரிசிகளும் அவ்வாறே கொடுமைப் படுத்தப்பட்டார்கள்.''

அந்த இடத்திலிருந்து இயேசுநாதர் சொன்ன வார்த்தைகள் இவை அவள் கிறீஸ்தவப் புனிதஸ்தலங்களைக் காணக்காண, அரி பென் காஸான், டேவிட் பென் அமி, தன்னுடைய கரேன் எல்லோருமே, தான் ஒருபோதும் அடையமுடியாத ஆத்மீக நெருக்கத்தோடு அவைகளோடு வாழ்வதான ஒரு குழப்ப நிலைக்கு உள்ளானாள்.

அவர்கள் அங்கிருந்து, மரியமதலேனாளின் (Mary Magdalene) பிறந்த இடமான மிக்டால் (Migdal யேசுநாதரால் மனந்திருந்திய பெண்) ...என்ற உறக்கத்தில் ஆழ்ந்துள்ள அரபுக்கிராமத்தைக் கடந்து ஹோர்ன்ஸ் ஒவ் ஹற்றின் இற்குக் கீழே ட்ரூசின் பிரதான தீர்க்கதரிசியும், மோசேயின் மாமனாருமான ஜெத்ரோ (Jethro) வின் கல்லறையைக் கொண்டிருந்த இடத்தில் சென்றனர். ஆனால், கிற்றியின் கவனம் அவள் மனக்குழப்பத்தால் சிதறடிக்கப்பட்டுக் கொண்டிருந்தது

பின் கார் ஹற்றின் சமவெளியில் இருந்து திரும்பத் தட்டையான சமவெளியொன்றினுள் திரும்பியது. அங்கே கடும் செந்நிற ஒளி ஜாலம் ஒன்று அவர்கள் கண்களைச் சந்தித்தது அந்தச் சமவெளி முழுவதும், சிவந்த நிறக் காட்டுப் பூக்கள் கம்பளம் போல் மலர்ந்திருந்தன.

''எவ்வளவு செந்நிறமாக இது இருக்கிறது.'' வியந்த கிற்றி.

''அரி காரைக் கொஞ்சம் நிறுத்துங்கள்'' என்றாள்.

அவன் காரைப் பாதை அருகில் நிறுத்தவும், அவள் கீழே இறக்கினாள் பூவொன்றைப் பிடுங்கியவள் அதை உற்றுப்பார்த்தவளின் கண்கள் குறுகின. ''நான் இதைப்போல் முன்னெப்போதும் காணவில்லை,'' என்றாள் நடுங்கும் குரல்.

''பண்டைய மக்கபீஸ்கள் இங்குதான் சூழ இருக்கும் குகைகளில் வாழ்ந்தார்கள். இந்தப் பூக்கள் இந்த இடத்தில் மட்டும்தான் மலருகின்றன. ''மக்கபீஸ்கள் இரத்தம்'' என இப்பூக்கள் அழைக்கப்படுகின்றன.''

அந்த சிவந்த மலரை கிற்றி கவனமாக ஆராய்ந்தாள். அது குருதித் துளிகள் போலவே தோற்றமளித்தது. விரைவாக கீழே அந்த மலரைப்போட்டவள் கைகளைப் பாவாடையில் துடைத்துக் கொண்டாள்.

இந்த மண்ணும் அதிலுள்ளவைகளும் அவளைச் சிறைப்பிடிக்கப் பார்க்கின்றன. காட்டுப் பூக்கள்கூட அவளை ஒரு கணமும் அதை மறுத்துவிட அனுமதிப்பது போலில்லை. அது அதன் மண்ணிலிருந்தும் சூழ இருக்கும் காற்றிலிருந்தும், உடம்பில் ஊறுவது போலிருந்தது. அது கிழ்மைப்படுத்தித் துன்புறுத்துவதாக இருந்தது.

கிற்றி பிறமென்றின் மனதில் பயம் அரும்பு கட்டத் தொடங்கியது. உடனடியாகப் பலஸ்தீனம் விட்டுப்புறப்பட வேண்டும் என்று அவளுக்குத் தெரிந்தது. இந்த மண்ணை ஒதுக்கித் தள்ள எவ்வளவு தீவிரத்துடன் முயல்கிறாளோ, அதே தீவிரத்துடன் அந்த மண் அவளை ஆகர்ஷிக்க முயன்று கொண்டிருந்தது. அவள் தன்னைச்சூழ அதை உணர்ந்தாள். கீழே, மேலே, எங்கணும் தன்னை மூச்சுத் திணறவைத்து நொருக்கிவிட தயாராக அந்த ஆகர்ஷிப்பை உணர்ந்தாள். அவர்கள் வடக்குப்புறமாக புதிய யூத புறநகரான கிர்யாத் ஸ்முஏல் அதாவது சாமுவேலின் கிராமம் ஊடாக ரிபேறியாசுக்குள் பிரவேசித்து, இன்னொரு பெரிய ராக்காட் கோட்டையைக் கடந்து குன்றுகளிலிருந்து, நீர்மட்டத்திலிருந்த பழைய நகருக்குள் இறங்கினார்கள். சுட்டிடங்கள் அதிகமாகக் கருங்கற்களால் கட்டப்பட்டிருந்ததோடு, புகழ்பெற்ற புராதன ஹீப்ரு மகான்களின் கல்லறைகளாலும், குகைகளாலும் சூழவர இருந்த குன்றுகள் நிறைந்திருந்தன.

நகரைக் கடந்த அவர்கள் கடலோரமாக இருந்த கலிலியின் ஹோட்டலுக்குள் திரும்பினர். நண்பகல் மிக வெப்பமானதாக இருந்தது. மதிய உணவாக இருந்த கலிலியின் பூனை மீனை (Cat Fish) கொறித்துக் கொண்டிருந்தாள். ஒரு வார்த்தையும் பேசவில்லை. வந்திருக்கவே கூடாது என நினைத்தாள். ''பரிசுத்தஇடங்களிலெல்லாம் பரிசுத்தமான இடமொன்றை இன்னும் உனக்குக் காட்டவில்லை.'' என்றான் அரி.

''அது எங்கே இருக்கிறது?''

''ஷோசான்னா கிபுட்ஸ் - அது தான் நான் பிறந்த இடம்''

கிற்றி புன்னகைத்தாள். தான் குழம்பியிருந்ததை உணர்ந்து அரி தன்னை உற்சாகப்படுத்த முயல்வதை உணர்ந்தாள்.

''அந்த மகத்தான ஆலயம் எங்கே இருக்கின்றது?'' கேலியாகக் கேட்டாள். கிற்றி.

இந்தப் பாதையில் சில மைல் தூரத்தில் ஜோர்தான் ஆறு கடலில் சங்கமிக்கும் இடத்தில் இருக்கிறது. இங்கிருந்த துருக்கிப் பொலிஸ் நிலையத்தில்நான்

பிறக்க இருந்தேன் என்று சொல்லக்கேட்டிருக்கிறேன்' பனிக்காலத்தில் இங்கு உல்லாசப்பயனிகள் நிறைந்திருப்பார்கள். இப்போ பருவகாலம் கடந்து விட்டது. எனினும் முழு வாவியும் எமக்கேயுரியது போல் அனுபவிக்கலாம். நாம் நீச்சலடிக்கப் போகலாமா?''

''அது ஒரு நல்ல எண்ணம் தான்.', கிற்றி சொன்னாள்.

கருங்கல்லால் ஆன ஒரு இறங்கு துறையொன்று ஹோட்டலின் பின்னால் நாற்பது யார் நீளத்துக்கு வாவியினுள் நீட்டிக் கொண்டிருந்தது. மதிய உணவின் பின் அரி முதலில் இறங்குதுறைக்கு வந்தான். அவள் ஹோட்டலில் இருந்து நடந்து வரும்போது அவனது உடலழகைத் தான் பார்ப்பதை உணர்ந்தாள். அவன் அவளை நோக்கிக் கையை அசைத்தான். அரி, திடமான, சக்தியுள்ள மெலிந்த உடலோடு காட்சியளித்தான்.

ஹேய் இன்னும் கடலில் இறங்கவில்லையா?

நான் உனக்காகக் காத்திருந்தேன்.

''இறங்குதுறையின் முடிவில் ஆழம் எப்படி?''

''கிட்டத்தட்ட பத்தடி. அந்தக் கட்டுமரம் வரை நீந்திப் போக உங்களால் முடியுமா?

''நீ ஒரு நீச்சல் போட்டிக்கு அடிபோடுகிறாய்.:' சொல்லிவிட்டு தனது மேலங்கியைக் களைந்துவிட்டு நீச்சலுக்கு அணியும் தலையணி ஒன்றை அணிந்து கொண்டாள். அவள் எப்படி அவனைப் பார்த்தாளோ, அப்படியே அவனும் அவளை நேராகப் பார்வையிட்டான். ஒப்ரா யுவதிகளைப் போல் கட்டுமஸ்தான தேகமாகவும் இராமல், அமெரிக்கப் பெண்ணொருத்தியிடம் எதிர்பார்க்கக்கூடிய மென்மை, வளைவுகளோடு அவளுடைய உடல் காணப்பட்டது. அவர்களுடைய கண்கள் சந்தித்துக் கொண்டன. இருவருக்குமே சிறிது நாணமேற்பட்டது. அவள் அவனைத் தாண்டி ஓடிச் சென்று நீருள் பாய்ந்தாள். அரி அவளைத் தொடர்ந்தான். அவளை விரட்டிப் பிடித்து இரண்டொரு கைவீச்சு, அளவிலேயே முன்னேறக்கூடியதாக இருந்ததைக் கண்டு அவன் மிக வியப்படைந்தான். கிற்றி அழகிய அசைவுகளோடு, நிதானமாக நீந்தியதற்கு ஈடுகொடுக்க அவன் முழு மூச்சாக நீந்தவேண்டியிருந்தது. அவர்கள் கட்டுமரத்தில் சிரித்தபடி போய் ஏறிய போது மிகவும் களைத்துப் போய் இருந்தார்கள்.

''நீ என்னை ஏமாற்றி விட்டாய்.''

''நான் உங்களுக்குச் சொல்ல மறந்துவிட்டேன்.''

''அது எனக்குத் தெரியும், நீ கலாசாலை நீச்சல் அணியில் இருந்தது தானே?''

அவள் மல்லாக்காகப் படுத்துக் கிடந்தபடி திருப்தியுடன் ஆழமான மூச் சொன்றை இழுத்து வெளிவிட்டாள். நீர் குளிர்மையாகவும். உற்சாகமூட்டுவ தாகவும் இருந்ததால், அவள் மனதில் இருந்த கவலைகளையெல்லாம் கழுவிச் சென்று விட்டது.

அவர்கள் ஹோட்டலுக்கு வந்து, விறாந்தையில் கூட்டு மதுவை (Cocktails) அருந்திவிட்டு, இரவுணவிற்கு முன் சிறிது ஓய்வெடுக்கும் நோக்கில் திரும்பிவந்த போது மாலை வெகு நேரமாகிவிட்டது.

அண்மைய வாரங்களில் ஓய்வு சிறிதளவாகவே பெற்றிருந்த அரி படுத்த துமே நித்திரையாகிவிட்டான். அடுத்த அறையில் கிற்றி நடைபயின்று கொண்டி ருந்தாள். காலையில் ஏற்பட்ட உணர்வுத் தூண்டுதல்களிலிருந்தும் பெரிதும் மீண்டிருந்தாள். ஆனால், இந்த உணர்வுகள் வடிந்தோடி விட்டதால் மிகவும் களைத்துப் போயிருந்தாள். அத்தோடு, _ந்த மண் தன்னுள் கொண்டிருந்த பூடகமான சக்திகள் குறித்துச் சிறிது பயம் இன்னமுமிருந்தது.

கிற்றி, ஒரு சாதாரண, புத்தி சுவாதீனமான, திட்டமிட்ட வாழ்க்கைக்குத் திரும்ப ஏங்கினாள். கரேனுக்கும் இதே சிகிச்சை வேறெதையும் விட அவசியம் தேவை, என்றுதானே உறுதி செய்து கொண்டாள். கரேனுடனும், இது குறித்து மேலும் தாமதம் செய்யாமல் விரைவில் பேசவேண்டும் எனத் தன் மனதில் தீர்மா னித்துக் கொண்டாள்.

மாலையானபோது, மகிழ்ச்சியூட்டும் விதத்தில் வெப்பம் தணிந்து போயிற்று. கிற்றி, இரவுணவுக்காக உடைகளை அணியத் தொடங்கினாள். அவள் தனது அலுமாரியைத் திறந்து அங்கு தொங்கிக் கொண்டிருந்த மூன்று ஆடைகளையும் ஆராய்ந்தாள். மெதுவாக அவைகளிலொன்றை எடுத்தாள். ஜோர்தானா பென் கானான் அவளோடு வாதாடி அன்று அவளுடைய உடை அலுமாரியில் இருந்து எடுத்த அதே ஆடைதான் அது. அவள் அன்று இறங்குதுறை யில் தெரிந்த அரியின் தோற்றத்தை நினைவூட்டிக் கொண்டாள். கிற்றிக்கு அது மிக விருப்பத்துக்குரியதாக இருந்தது. தோள்பட்டைகளில்லாத அந்த உடை எடுப்பாகத் தோற்றமளிக்கும் விதத்தில் உடலோடு ஒட்டிக் கொண்டது.

ஹோட்டலில் அவள் கடந்து சென்றபோது ஒவ்வொரு ஆணின் கண் இமை களும் வியப்போடு மேலெழுந்தன. ஒவ்வொரு நாசியும், அவள் பாவித்திருந்த வாசனைப் பொருட்களின் நறுமணத்தால் நிறைத்துக் கொண்டன. அதிர்ச்சி யடைந்த ஒரு மனிதனைப் போல் நின்றபடி, அரி, அவள் சாலையைக் கடந்து வருவதைப் பார்த்துக் கொண்டிருந்தான். அவள் அவனை அண்மித்ததும் தான் தான் அவளை வெறித்துக் கொண்டிருப்பதை உணர்ந்த அவன், இழந்து போய் நின்ற குரலை விரைவாக மீளப் பெற்றுக் கொண்டான்.

''உனக்கு ஒரு வியப்பான ஒரு விஷயம் வைத்திருக்கிறேன். எயின்ஜெல் கிபுட்சில் ஒரு இசை நிகழ்ச்சி இருக்கிறது. இரவுணவின் பின் நேரே அங்கே போவோம்.

''இந்த உடை..... பொருத்தமானதாக இருக்குமா?''

''ம்... ம்... ம் இது மிகச் சிறப்பானதாயிருக்கும்.''

நேற்றிரவு கண்ட முழு நிலவின் வடிவம் இன்றும் அவர்களுக்காக மிகுந்திருந்தது. அவர்களுடைய இயந்திரப்படகு இறங்கு துறையை விட்டு அகன்றபோது சிறிய குன்றுகளின் பின்னாலிருந்து நம்ப முடியாதளவுக்குப் பெரியதாக எழுந்து வந்த சந்திரன் அசைவற்றிருந்த நீரின் மீது பெரும் ஒளிவெள்ளத்தைப் பாய்ச்சியது.

''கடல் எவ்வளவு அமைதியாயிருக்கிறது'' என்றாள் கிற்றி.

''இது பொய்த் தோற்றம். கடவுள் கோபமுற்றால் ஒரு நிமிடத்தில் இதைச் சமுத்திரமாக்கவும் முடியும்.''

அரைமணி நேரத்தில் அவர்கள் நீரைக் கடந்து, மலைக்கணவாயின் நீரூற்று என்று பொருள்படும் எயின் ஜெவ் கிபுட்சின் (Ein Gev) இறங்குதுறையில் இறங்கினார்கள். எயின் ஜெவ் ஒரு துணிகரமான பரிசோதனை போல் இருந்தது. இந்த கிபுட்ஸ் பலஸ்தீனத்தின் மற்றைய பகுதிகளிலிருந்து வேறாகத் தனிமைப் படுத்தப்பட்டிருந்ததோடு, சிரிய நாட்டு மலைகளுக்கு நேர் கீழே அமைந்திருந்தது. ஒரு சிரிய கிராமம் அதற்கு நேர் மேலே அமைந்திருந்ததோடு, கிபுட்சின் எல்லை அடையாளங்கள் வரை அக்கிராமத்தின் வயல்கள் நீண்டிருந்தன. 1938-ல் ஜெர்மனியில் இருந்து வெளியேறி வந்தவர்களால் அமைக்கப்பட்ட இந்தக் கிராமம் கலிலிக் கடலின் மீது கண்காணிப்புச் செய்யக்கூடிய மாதிரியான கேந்திர இடத்தில் அமைந்திருந்தது.

இந்த கிபுட்சானது, சிரிய, ட்ரான்ஸ்-ஜோர்டான் நாடுகளின் எல்லையருகே யார்முக் (Yarmuk) ஆறு உருவாக்கிய இந்த ஆற்றுப் படுக்கையானது மனித வாழ்வின் தொட்டில் என்று கருதப்படக்கூடிய ஒன்றாகும். ஏனெனில், விவசாயிகள் அங்கு நிலத்தினை ஒவ்வொரு நாளும் உழும்போதும், மனிதன் வாழ்ந்திருந்ததற்கான சாட்சியங்கள், சில சரித்திர காலத்துக்கு முற்பட்டவைகளான பொருட்களைக் கூட கண்டெடுத்திருந்தனர். அவர்கள், அந்த இடத்தில் மனிதன் சமூகக் கட்டமைப்போடு வாழ்ந்ததற்கான சாட்சியங்களாக ஆயிரக்கணக்கான வருடங்கள் பழமை வாய்ந்த சீரற்ற கலப்பைகளையும், மட்பாண்டங்களையும் கண்டெடுத்திருந்தார்கள்.

எயின் ஜெவ்வுக்கும், சிரியாவின் குன்றுகளுக்குமிடையேயான எல்லையில் ஒரு பெரும் தூணைப்போன்ற வடிவில் ஒரு சிறிய மலையொன்று நின்று கொண்டிருந்தது. அது சுசிற்றா- (Susitra) அதாவது குதிரை - என அழைக்கப்பட்டது. அதன் உச்சியிலே, பலஸ்தீனத்தில் காணப்படும் ஒன்பது ரோமர்கோட்டை நகரங்களில் ஒன்றின் சிதைவுகள் காணப்படுகின்றன. சூழவர இருக்கும் நிலப்பரப்பின் மீதான சுசிற்றாவின் மேலாண்மை இன்னும் இருக்கிறது.

இங்கு குடியேறிய ஜெர்மனிய முன்னோடிகள், தங்கள் இயல்பு வாழ்க்கையில், இசைக் கலைஞர்களாக இருந்ததோடு, மிகவும் உழைப்பாளிகளாகவும் இருந்

தார்கள். விவசாயத்துக்கும், மீன்பீடிக்கும் மேலதிகமாக கிபுட்சின் ,வருவாயை அதிகரிக்க இன்னொரு உபாயத்தைக் கைக்கொண்டார்கள். அவர்கள் ஒரு இசைக் குழுவை உருவாக்கிவிட்டு, ரிபேறியாசுக்கு வரும் முன்பனிக்கால உல்லாசப் பயணி களை வாவிக்கூடாக, இசை நிகழ்ச்சிகளுக்கு அழைத்து வருவதற்கு இரு படகு களையும், வாங்கினார்கள். இந்த உபாயம் வெற்றிகரமாக அமைந்ததோடு, இந்தப் பாரம்பரியம் வளர்ந்து, பலஸ்தீனத்துக்கு வரும் எந்தக் கலைஞனை யும் அங்கு கவர்ந்திழுத்தது. வாவிக்கரையில் இயற்கைச் சூழலில் அமைந்த ஒரு திறந்தவெளிக் கேட்போர் கூடம் அமைக்கப்பட்டதோடு, வரப்போகும் வருடங் களில் அரங்கத்தை உள்ளடக்கிக் கட்டடங்களைக் கட்டத் திட்டமிடப்பட்டது.

அரி போர்வையொன்றை கேட்போர் கூடமருகே புற்தரையில் விரிக்கவும், இருவருமாக அதில் மல்லாந்து படுத்தபடி, லாக்.பா.ஓமர் (Lag Ba omer) இன் முழுநிலவு சிறிதாகி உயர்ந்து கோடிக்கணக்கான தாரகைகளுக்கு இடமளித்துக் கொண்டிருந்ததை ரசித்துக் கொண்டிருந்தனர். இசைக்குழுவானது பீத்தோவன் (Beethovan பிரபல ஜெர்மன் இசை அறிஞர்) இன் ஆக்கம் ஒன்றை இசைக் கத் தொடங்கியதும், கிற்றிக்குள் இருந்த பதற்றம்இருந்தஇடம் தெரியாமல்போய் விட்டது.அந்தக்கணம் மன நிம்மதியைப்பூரணமாகத் தருவது போலிருந்தது.இதை விடஅழகான சூழல் அமைப்பது முடியாத காரியம் போலிருந்தது. யதார்த்த மற்ற நிலைபோலிருந்த அக்கணம் தொடராதா என்று கிற்றி ஏங்கினாள்.

இசை நிகழ்ச்சி முடிந்து. அரி அவளின் கையைப் பிடித்து, சனக்கூட்டத் திலிருந்து விலக்கி, வாவியருகே இருந்த பாதையொன்றில் அழைத்துச் சென்றான் காற்றில் பைன் மரங்களின் சுகந்தம் இன்னும் ஊடாடியது. கலிலி கடலோ ஒரு கண்ணாடியைப் போல் அமைதியாகக் காட்சியளித்தது. நீர்க்கரை ஓரமாக ஏதோ ஒரு புராதன ஆலயத்தின் மூன்று கற்களால் ஆக்கப்பட்டிருந்த இருக்கை யொன்று அமைக்கப் பட்டிருந்தது.

அவர்கள் அந்த இருக்கையில் அமர்ந்து, கண்சிமிட்டிக் கொண்டிருந்த ரிபேறியாசின் மின் விளக்குகளைப் பார்த்துக் கொண்டிருந்தனர். அரி அவளோடு நெருக்கமாக அமர்ந்திருந்தான். திரும்பி அவனைப் பார்த்த கிற்றி, அரி பெல் கானான் அழகாய்த்தான் இருக்கிறான் என்று நினைத்துக் கொண்டாள். திடீ ரென அவளுக்குள்ளே, அவனை இறுக அணைத்து, அவன் கன்னங்களையும், தலைமயிர்களையும் வருடிக் கொடுக்க வேண்டும் என்ற ஆசை துளிர் விட்டது. கடுமையாக வேலை செய்யாதீர்கள் என்று அவனிடம் சொல்ல வேண்டும் போலிருந்தது. அவனது இதயத்தைத் தனக்கு வெளிப்படுத்திக் காட்டிவிடுங்கள் என்று அவனிடம் சொல்ல வேண்டும் போல் இருந்தது. அவன் அருகிருக்கும் போது தனக்கு ஏற்படும் உணர்வலைகளை அவனுக்குச் சொல்ல விரும்பினாள் ஒரு புதியவனைப் போல் தன்னுடன் பழகாமல் இருவரும் பங்கு கொள்ளக் கூடிய விஷயமொன்றைக் கண்டடையும் படி, கெஞ்சவேண்டும் போலிருந்தது. ஆனால், அரி பென் கானான் புதியவனைப் போலவே இருந்தான். அவளுக்குத் தானும், தன் மனக்கிடக்கைகளை சொல்லத் துணிவு வரவுமில்லை.

கலிலிக் கடல் மெதுவே கலைந்து, கரையில் தாளமிட்டது. திடீரெனப் பலமாக வீசிய காற்றில் நீர்க்கரையோர செடிகள் தலையையாட்டின. அவனது கைகளின் ஸ்பரிசம் அவள் தோள்மீது படர்ந்தபோது அவள் தேகத்திலூடாக இனம்புரியாத உணர்வலை ஒன்று ஊடுருவியது. ''உன் உடல் நிறையக் குளிர் கிறது.'' சொல்லிக் கொண்டே அரி நீட்டிய, அகலம் குறைந்த போர்வையை (Stole) தோள்மீது இறுகப் போர்த்துக் கொண்டாள். இருவரும் நீண்ட நேரத் துக்கு ஒருவரையொருவர் உற்று நோக்கிக் கொண்டிருந்தனர்.

அரி திடீரென எழுந்து நின்றான். ''படகு வருகிறது போலிருக்கிறது. நாங்கள் அங்கு போவது நல்லது'' என்றான். அரி பேசிய வேகத்தைப் போலவே படகு செல்லத் தொடங்கியதும், கலிலிக்கடலும் தன் அமைதியைக் குலைத்து அலையடிக்கத் தொடங்கியது. படகின் முன்புறமிருந்து எழுந்து, நீர்த்துளிகள் அவர்கள் மேல் வாரியிறைத்துக் கொண்டிருந்தது. அரி அவளை நனையாமல் பாதுகாக்கத் தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டான். வாவியின் குறுக் காகப் படகு சென்று கொண்டிருந்த அவ்வளவு நேரமும், கிற்றி கண்மூடியபடி, தலையை அவன் பரந்த மார்பில் சாய்த்து அவன் இதயத் துடிப்பைக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

0

அத்தியாயம் பதினொன்று

பழைய ஜெருசலேம் நகரின் சங்கிலி வீதியிலே, சிதிலமடைந்த நான்காவது தரக் ஹோட்டல் ஒன்றில் டொவ் லண்டவ் இடமெடுத்துக் கொண்டான், அவனுக்கு சொல்லிக் கொடுக்கப்பட்டது. போல், டமாஸ்கஸ் புகுவழியருகே, நெபுளஸ் வீதியிலிருந்த சாலடின் கபேயில் பார் இஸ்ரேலுக்கு, தெரியப்படுத்த வசதியாகத் தன் பெயரையும், தங்கியிருக்குமிட விலாசத்தையும் தெரியப்படுத்தி விட்டு வந்தான்.

தான் கான் டப்னாவில் திருடிக் கொண்டு வந்த தங்க மோதிரங்களையும் காப்புக்களையும் அடகு வைத்துவிட்டு, ஜெருசலேமைச் சுற்றிப் பார்க்கும் வேலையில் ஈடுபட்டான். ''சேரி எலியும்'' திருடுவதில் தேர்ச்சி பெற்றிருந்தவனுமான டொவ் லண்டவ்வுக்கு ஜெருசலேமில் மிக எளிதாக ஊடாட முடிந்தது. மூன்று நாட்களுக்கிடையில், ஜெருசலேம் பழைய நகரினதும், அதைச் சூழவுள்ள வர்த்தக மாவட்டத்தினதும் சகல வீதிகள், ஒழுங்கைகள், மூலை முடுக்குகள் என்பன டொவ்வுக்கு அத்துப்படியாகிவிட்டன. அவனது கூரிய கண்கள் பெறுமதி மிகுந்த பொருட்களைத் தேடிக் கண்டுபிடிக்க, அவனது திறமையான கைகள் அவன் தன்னைப் பராமரிக்கத் தேவையான அளவு பொருட்களைத் திருடிக் கொடுத்தன. ஒடுக்கமான சந்துகள் ஊடாகவும், நெருக்கடி மிகுந்த சந்தையினூடாகவும் திருடிக்கொண்டு தப்பிச் செல்வது அவனுக்கு மிகவும் இலகுவான வேலையாயிருந்தது.

டொவ் தன்பணத்தின் அதிகமானவற்றை புத்தகங்கள், கலைப்பொருட்கள் வாங்கவுமே செலவழித்தான். ஜபா வீதியில் அலைந்து திரிந்து அங்குள்ளபுத்தக விற்பனை நிலையங்களில் சித்திரம், வரைதல் கட்டிட நிர்மாணத்துறை ஆகியவற்றோடு சம்பந்தப்பட்ட புத்தகங்களைத் தேடினான்.

இந்தப் புத்தகங்களோடும், உலரவைக்கப்பட்ட பழங்களோடும் போத்தலடைக்கப்பட்ட மென் பானங்களோடும்; தன் அறைக்குள்ளேயே அடைந்து கொண்டு மிக்கபீஸ் தன்னோடு தொடர்பு கொள்ளும் வரை காத்திருந்தான். மெழுகுதிரி வெளிச்சத்தில் டொவ், புத்தகங்களைப் படித்தான். குன்றின் சிகரத்தையும், அழும் சுவரையும் இணைப்பதும், அரபு யூத வாழ்விடங்களூடாகச் செல்வதுமான சங்கிலியின் வீதியில் நிகழ்ந்த அமர்க்களங்கள் எதுவும் அவனுக்கு உறைக்கவே இல்லை. தன் கண்கள் எரிச்சலெடுக்கும் வரை, அல்லது தன்னால் வாசிக்கமுடியாத அளவுக்கு வாசித்ததும், புத்தகத்தை நெஞ்சுப்படி மார்பில்

கவிழ்த்து வைத்துக் கொண்டு ஒன்றில் வெறுமனே கூரையைப் பார்த்துக் கொண்டிருப்பான். அல்லது கரேன் கிளமென்றைப்பற்றி நினைத்துக் கொண்டிருப்பான்.

அவளைப் பிரிந்திருப்பது தனக்கு இவ்வளவு கடினமாயிருக்கும் என்றோ, ஏற்பட்டுக் கொண்டிருக்கும் இவ்வளவு மன உடல் உபாதைகளைத் தரும் என்றோ உணர்ந்திருக்கவில்லை. கரேன் அவ்வளவு நீண்டகாலம் அவனோடு சேர்ந்திருந்ததால் அவளைப் பிரிந்திருப்பது எப்படியிருக்கும் என்று இதுவரை அவனுக்குத் தெரியாமலேயே இருந்தது. அவளோடு கழித்த ஒவ்வொரு கணங்களையும், ஞாபகத்தில் மீட்டிப் பார்த்தான். காராஒலெக்கிலும், எக்லோடின் மேற்தளன்களிலும் அவன் கைகளில் அவள் உறங்கிய அந்த நாட்களை எண்ணினான். தான் டப்னாவிற்குப் போன முதல் நாளில் அவள் எவ்வளவு ஆனந்தமாயும் அழகாயும் தோற்றமளித்தாள் என்றும் நினைத்தான். அவளுடைய கனிவான உணர்ச்சிகள் வெளிப்படுகின்ற அழகிய முகத்தையும், மென்மையான அவளது ஸ்பரிசத்தையும், அவள் கோபமுறும்போது பட்டென எழும் குரலையும் நினைத்துக் கொண்டான்.

டொவ் தன் கட்டிலின் விளிம்பில் அமர்ந்தபடி கரேனின் நூறுக்குமேலான படங்களை வரைந்து தள்ளினான். தன் நினைவில் நிலைத்திருந்தபடி பல கோணங்களில் அவளை வரைந்தாலும், ஒன்றுமே தன் மனதில் பதிந்திருந்த அவள் அழகிய உருவத்தைப் பிரதிபலிக்காததால் அவற்றைக் கசக்கி எறிந்து விட்டான் .

அவன் இரு வாரங்களாக, அத்தியாவசிய தேவைகட்காக மட்டுமே வெளியே போய்வருவது தவிர்ந்த ஏனைய நேரங்களில் தன் அறையிலேயே அடைந்து கிடந்தான். இரண்டாவது வார முடிவில், அவனுக்குப் பணம் தேவையாக இருந்ததால் சில மோதிரங்களை அடகு வைக்கும் நோக்கில் வெளியே கிளம்பினான். அவன் அக்கட்டிடத்தின் வாசலை அண்மித்தபோது ஒரு மனிதன் நிழல்களிடையே நிற்பதை அவதானித்தான். டொவ் தனது பிஸ்டல் மேல் கையை வைத்தபடி ஏதாவது நேரும் பட்சத்தில் திடீரெனச் சுழன்று திரும்புவதற்கு ஆயத்தமான அந்த மனிதனைக் கடந்து தொடர்ந்து நடந்து போனான்.

"அசைய வேண்டாம். திரும்பவும் வேண்டாம்." ஒரு குரல் இருளிலிருந்து ஆணையிட்டது.

டொவ் அதே இடத்தில் உறைந்து போனான்.

"நீ பார் இஸ்ரேலைப் பற்றி விசாரித்திருக்கிறாய். உனக்கு என்ன வேண்டும்?"

"எனக்கு என்ன வேண்டுமென்று உனக்குத் தெரியும்."

"உன்னுடைய பெயர் என்ன?"

''லண்டவ். டொவ் லண்டல்.''

''நீ எங்கிருந்து வந்தாய்?''

''தான் டப்னா',

''உன்னை அனுப்பியது யார்? ''

''மோர் டேகாய்.''

''நீ எப்படிப் பலஸ்தினத்துக்குள் வந்தாய்?''

''எக்ஸோடஸில்.''

''தொடர்ந்து நடந்து கொண்டேயிரு. திரும்பிப் பார்க்காதே. பிறகு உன்னைத் தொடர்பு கொள்ளுவோம்.''

தொடர்பு ஏற்பட்ட பிறகு டொவ் அமைதியிழந்து போனான் சில நேரங்களில் எல்லாவற்றையும் விட்டெறிந்து விட்டு, கான் டப்னாவுக்குத் திரும்பு வோமோ என்று கூட எண்ணமிட்டான். கரேனைப் பிரிந்திருப்பது மிகவும் கடினமாயிருந்தது. ஐந்தாறு கடிதங்களை எழுதத் தொடங்கிவிட்டு அரை வாசியிலேயே அவற்றைக் கிழித்தெறிந்து விட்டான். இவைகளெல்லாவற்றையும் மறந்து விட வேண்டும் மறந்து விட வேண்டும் என்று திருப்பித் திருப்பித் தனக்குத்தானே சொல்லிக் கொண்டான்.

தன் அறையில் ஒரு நாள் வாசித்துக் கொண்டிருந்தவன் அப்படியே தூங்கிப் போனான். அவன் தன்னை உலுப்பியெழுப்பி ஒரு மெழுகுதிரியை ஏற்றி வைத்தான். தான் தூங்கிப் போய், பழையபடி பயங்கரக் கனவுகள் கண்டு விழிக்கும் போது தன் அறை இருளில் இருப்பதை அவன் விரும்பவில்லை.

கதவில் தட்டிக் கேட்டது.

டொவ் பாய்ந்தெழுந்து, தன் பிஸ்டலை எடுத்துக் கொண்டு பூட்டப்பட்டிருந்த கதவுக்கருகில் நின்றான்.

''இது உன்னுடைய நண்பர்கள்'' வெளி இடைவழியில் இருந்து ஒரு குரல் ஒலித்தது. நிழல்களிடையே இருந்து முன்னர் பேசிய குரல்தான் அது என அடையாளம் கண்டு கொண்டான். அவன் கதவைத் திறந்தான். ஒருவரையும் காண முடியவில்லை.

திரும்பிச் சுவரைப் பார்த்தபடி நில். இருளிலிருந்து ஒரு குரல் கட்டளை இட்டது. டொவ் கீழ்ப்படிந்தான். தனக்குப் பின்னால் இரண்டுபேர் நிற்பதை உணர்ந்து கொண்டான். கண்களை மூடித் துணியொன்று கட்டப்பட இரு சோடிக் கைகள் அவனைப் படிகள் வழியே கீழே நட்த்தி, காத்துக் கொண்டிருந்த கார் ஒன்றில் ஏற்றி, பின்புற தளத்தில் படுக்கவைத்து மூடியபின், பழைய நகரில் இருந்து அழைத்துச் செல்லலானார்கள்.

டொவ் தான் எங்கே அழைத்துச் செல்லப்படுகிறான் என்பதை அறிந்து கொள்வதில் தன் கவனத்தை ஒருமுகப்படுத்திச் செலுத்தினான். கார் கிரீச்சிட்டுக் கொண்டே சொலமன் வீதியுள் சென்று சிலுவையின் பாதையால் சென்று ஸ்ரீபன் புகுவழிக்குச் சென்றது. வார்சாவின் நிலத்தடிக் கழிவு நீர் வாய்க்கால்களின் கருமையூடே, நூறுவரையான வெவ்வேறு பாதைகளைத் தெரிந்து கொண்டிருந்த டொவ்வுக்கு இது சிறுபிள்ளை விளையாட்டுப் போலிருந்தது.

கார் கீழ்க் கியர்களுக்கு ஒரு குன்றில் ஏறும் முகமாக மாறியது. அவர்கள் கன்னியின் கல்லறையைத் (Tomb of Virgin) தாண்டி, ஒலிவ்மலை நோக்கிச் சென்று கொண்டிருக்க வேண்டும் என டொவ் கணித்துக் கொண்டான்; பாதை சீராக இருந்தது. இப்போது அவர்கள் ஹீப்ரூ பல்கலைக்கழகத்தையும், ஸ்கோபஸ் மலையில் அமைந்திருந்த ஹடாஸ்ஸா வைத்திய மையத்தையும் தாண்டிச் சென்று கொண்டிருக்கிறார்கள் என்று அவனுக்குத் தெரிந்தேயிருந்தது.

பேலும் பத்து நிமிடங்கள் வரை ஓட்டிச் சென்றபின் கார் நிறுத்தப்பட்டது.

டொவ் அப்போது தினறுகொண்டிருந்த அவர்களது இடத்தைத் திட்டத் தட்ட அக்கட்டிடத்தின் பகுதியைத் துல்லியமாக, ஹீப்ரூ ராபிக்களின் புராதன உயர் நீதிமன்றமான சனஹெட்றின் (Sanhedrin) களின் கல்லறைகள் அருகே சென் ஹெட்றியா (Sanhedriya) பகுதியில் இருப்பதைக் கணிப்பிட்டிருந்தான்.

அவன் வீட்டுக்குள், சிகரெட் புகை நிறைந்திருந்த ஒரு அறையினுள் கூட்டிச் செல்லப்பட்டு அமர வைக்கப்பட்டான். கிட்டத்தட்ட ஐந்து அல்லது ஆறுபேர் அவ்வறையில் இருப்பதை உணரக்கூடியதாக இருந்தது. இரு மணித்தியாலங்களுக்கு டொவ் விசாரிக்கப்பட்டான். அறையில் சூழவர இருந்து கேட்கப்பட்ட கேள்விகளால் டொவ் பதற்றமடைந்து, வியர்த்து வழிந்தான்.

விசாரணை தொடரத் தொடர அவன் அவைகளைத் தொடர்பு படுத்திப் பார்க்க முனைந்தான். மக்கபீஸ்கள் தங்கள் திறமையான தகவல் சேகரிப்பு ஆய்வு துறைமூலம், டொவ் ஒரு மிகத் திறமையான போலி ஆவணத் தயாரிப்பாளன் என்று தெரிந்து கொண்டிருந்தார்கள். அவர்களுக்கும் அச்சேவை அத்தியாவசிய மாகத் தேவைப்பட்டது. அவன் மக்கபீஸ் உயர்மட்ட அங்கத்தவர்களின் மத்தியில் கொண்டு வரப்பட்டான். அதிகமாக மக்கபீஸ் கொமாண்டர்களும் அங்கிருக்கக் கூடும். கடைசியாக அவர்கள் டொவ்வின் தகுதிபற்றியும், பாதுகாப்பானவன் தானா என்பது பற்றியும் திருப்தி அடைந்தனர்.

"உனக்கு முன்னால் ஒரு திரை இருக்கிறது. அதனூடாக உன் கரங்களை நீட்டு" ஒரு குரல் ஆணையிட்டது. அவன் தன் கைகளைத் திரைக்கூடாக நீட்டினான். அவனது ஒரு கை ஒரு கைத்துப்பாக்கியின் மீதும், மறுகை வேதாகமத்தின் மீதும் வைக்கப்பட்டது. அந்நிலையில் டொவ் மக்கபீசின் உறுதி மொழியை திரும்ப மொழிந்தான்.

"டொவ் லன்டவ் ஆகிய நான் எனது உடல் பொருள் ஆவி அத்தனையும், மக்கபீஸ் சுதந்திரப் போராளிகளுக்குப் பூரணமாக அர்ப்பணிக்கிறேன்.

கேள்வியெதுவும் கேட்காமலே எந்த ஒரு கட்டளைக்கும் கீழ்ப்பணிவேன். எனக்கு மேலே உள்ள தலைமைக்குக் கீழ்ப்படிந்து நடப்பேன். இறக்கும் வரை, சித்திரவதை காரணமாக ஒரு சக மக்கபீசின் பெயரையோ, என்னை நம்பி ஒப்படைக்கப்பட்ட ரகசியங்களையோ வெளியிட மாட்டேன். என் இறுதி மூச்சு வரை யூதமக்களின் எதிரிகளை எதிர்த்துப் போராடுவேன். எனது மக்களின் இயற்கையான சரித்திரபூர்வ உரிமையான, யூதநாடொன்று ஜோர்தான் நதியின் இருகரையில் அமையுமட்டும் என் புனித போராட்டத்தை நிறுத்த மாட்டேன் என் எதிரிகளுக்கான எனது வழி உயிருக்கு உயிரும், கண்ணுக்குக் கண்ணும், பல்லுக்குப் பல்லும் கையுக்கு கையும், எரித்தலுக்கு எரித்தலுமாகவிருக்கும். இவைகளை நான் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோப்பு, சாரா, றெபேக்கா, ராக்கேல், லீயா மற்றும் படுகொலை செய்யப்பட்ட யாவர் பேரிலும், சுதந்திரத்தின் பேரால் வீழ்ந்துவிட்ட என் வீர சகோதர சகோதரிகள் பேராலும், ஆணையிட்டுக் கூறுகிறேன்.

கண்களை மறைத்திருந்த கட்டுகள் டொவ்வின் கண்களிலிருந்து அகற்றப்பட, அவன் முன்னால் மெழுகுதிரி தண்டுகளில் எரிந்து கொண்டிருந்த மெழுகுதிரிகள் ஊதி அணைக்கப்பட்டு, மின் விளக்குகள் ஒளிர விடப்பட்டன. டொவ், கண்களைத் திறந்து கடுமையான முகத்துடன் தோற்றமளித்த ஆறு ஆண், பெண்களைக் கண்டான். அவர்கள் அவன் கையைக் குலுக்கித் தங்களைத் தாங்களே அறிமுகப்படுத்திக் கொண்டார்கள். வயோதிபனான அக்கிவாவும் அங்கு வந்திருந்தார். அவர்களுடைய கள தலைவனான பென் மோஷேயும் வந்திருந்தார். இவரது சகோதரன் ஒருவன் பிரிட்டிஷாருடனான போரில் மரமடைந்திருந்தான். ஒரு சகோதரி பால்மாக்கிலிருந்தாள். ஏழு சகோதரர்களில் ஒருவரான நாஹீம் பென் அமி இருந்தார். மிகுதி ஆறுபேரும் பால்மாக்கில் இருந்தனர். யிசுவ்வின் சுய கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்கக் கூடியவர்களாக இருக்க முடியாததாலோ அல்லது அதை விரும்பாததாலோ இந்த ஆண்களும் பெண்களும் ஒன்றாக இணைந்திருந்தார்கள்.

வயோதிபரான அக்கிவா டொவ்வின் முன்னால் வந்து நின்று, ''நீ எங்களுக்கு மிகவும் பெறுமதி வாய்ந்தவனாயிருக்கிறாய் டொவ் லண்டவ். அதுதான் உன்னை வழக்கமான பயிற்சிகள் எதுவுமில்லாமலே சேர்த்துக் கொண்டோம்.'' என்றார்.

''படங்கள் கீறுவதற்காக நான் உங்களோடு சேரவில்லை,'' வெடித்தான் டொவ்.

''நீ உனக்கு சொல்லப்படுபவற்றை மட்டும் செய்'' பென் மோஷே பதிலிறுத்தார்.

''டொவ் இப்போ நீ ஒரு மக்கபீசாகி விட்டாய். ஹீப்ரு சரித்திர நாயகர்களில் ஒருவரது பெயரை வைத்துக் கொள்ளும் உரிமை உனக்கிருக்கிறது, உன் மனதில் அப்படி ஏதாவது பெயர் ஒன்றை தெரிந்து வைத்திருக்கிறாயா?'' அக்கிவா கேட்டார்.

''கியோரா'' என்றான் டொவ். (Giora) அறையினுள் சிரிப்பு நிறைந்தது. டொவ் பல்லைக் கடித்துக் கொண்டான்.

''கியோராவா? உனக்கு முன்பே அந்தப் பெயரில் பல பேர் இருக்கிறார்கள்.'' அக்கிவா சொன்னார்.

''சின்ன கியோரா'' என்றால் எப்படியிருக்கும்? டொவ், பெரிய கியோரா ஆகும்வரை பரவாயில்லைத்தானே? என்றார் நாஹும் பென் அமி.

''நீங்கள் எனக்கு வாய்ப்புத் தந்தால் விரைவிலேயே நான் பெரிய கியோரா ஆகிவிடுவேன்.''

''நீ ஒரு போலி ஆவணத் தயாரிப்பு நிலையம் ஒன்றை நிறுவிக் கொள். எங்களோடு பிரயாணம் செய். நீ ஒழுங்காக நடந்து உனக்குச் சொல்லப்படும் காரியங்களை நிறைவேற்றினால், இடைக்கிடை நாங்கள் செய்யும் தாக்குதல்களிலும் உன்னைப் பங்கேற்க அனுமதிப்போம்.'' என்றார் பென் மோஷே.

ஜெருசலேமின் கோல்ட்ஸ்மித் ஹவுசிலிருக்கும் அதிகாரிகளின் பொழுது போக்கு நிலையத்தில் மேஜர் பிறெட் கால்ட்வெல் பிரிட்ஜ் விளையாட்டை விளையாடிக் கொண்டிருந்தார். சிட்டு விளையாடுவதில் கவனம் செலுத்த முடியாது பிறடி திணறிக்கொண்டிருந்தார். அவருடைய மனம் திரும்பத் திரும்ப சிஐடி தலைமையகத்துக்கும், கைதுசெய்த பின் மூன்று நாட்களாக விசாரித்து வரும் மக்கபீஸ் யுவதியின் மேலும் சென்று கொண்டிருந்தது. அவளுடைய பெயர் ஆயாலா. இருபது வயதுகளில் இருக்கும் அழகானவள். அவள் சர்வ கலாசாலை இசைத்துறையில் பயின்று கொண்டிருந்தாள். விசாரணை தொடங்கு முன் அவள் அழகாகத்தான் இருந்தாள். இன்னொரு துணிவான யூதப் பெண்ணாக ஆயாலா இருந்தாள். அவள் சிஐடி யினருக்குப் பயப்பட மறுத்தாள். அவள் பிடிபடும் மற்ற மக்கபீஸ்கள் வழமையாகச் செய்வது போலவே, வேதாகமப் பகுதிகளை மேற்கோள் காட்டுவதிலும், தங்களுக்கு நிரந்தரமாக நிகழ்ந்து கொண்டிருக்கும் சீரழிவுகள் பற்றிக் கூறுவதிலும், தன்னுடைய கொள்கையின் நீதியான தன்மையைப் பற்றி பிரகடனப்படுத்துவதிலும் ஈடுபட்டுக் கொண்டிருந்தாள்.

இன்று காலையில் அவர்கள் பொறுமையிழந்து போக மூன்றாந்தர விசாரணை முறைகளுக்கு (Third Degree - தரக்குறைவான முறைகளில் கைதியை சித்திவதை செய்து விசாரித்தல்) ஆயாலா உட்படுத்தப் பட்டாள்.

''உன்னுடைய முறை பிறெடி'' அவரது சகா மேசைக்கப்பால் இருந்து ஞாபக மூட்டினார்.

பிறெடி கால்ட்வெல் விரைவாகத் தன் சிட்டுக்களைப் பார்வையிட்டார். ''பொறுத்துக் கொள்ளுங்கள்'' என்று சொல்லிவிட்டுப் பிழையான சிட் டொன்றை மேசையில் போட்டார். அவருடைய மனம் ஆயாலாவின் மேல் நின்றபடி அவளை ரப்பர் குழாயால் அடித்துக் கொண்டிருந்த இன்ஸ்பெக்டரின் மேல்

தான் இருந்தது. திரும்பத் திரும்ப தட் தட் என அப்பெண்ணின் முகத்தில் மோதி, அவளுடைய மூக்கை நொருக்கி, கண்களை மூடியிருக்கப் பண்ணுமளவிற்கு விங்கப்பண்ணி, அவள் உதடுகளைப் புடைக்கவைத்து சய உருவம் இழக்கப் பண்ணிக் கொண்டிருந்த குழாயின் ஓசை அவருக்குக் கேட்டபடி இருந்தது. ஆனால் ஆயாலா விபரங்களை வெளியிட மறுத்தாள்.

ஆயாலா முற்றாகவே கீழ்ப்படிய மறுத்தாலும் அதைப்பற்றித் தான் கவலைப்படவில்லை என்று நினைத்துக் கொண்டார். அவளுடைய பூத முகத்தை நொருக்கப் போகிறோம் என்ற எண்ணமே அவரை மகிழ்ச்சி கொள்ள வைத்தது.

ஒரு பணியாளன் மேசையை நெருங்கி வந்தான்.

''மன்னிக்கவேண்டும் மேஜர் கால்ட்வெல் உங்களுக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்திருக்கிறது.'' என்றான்.

''மன்னித்துக் கொள்ளுங்கள் நண்பர்களே!'' சொல்லி விட்டுத் தன் கையிலிருந்த சீட்டுக்களை மேசை மேல் கவிழ்த்துப் போட்டவர், அந்த அறையின் மறுகோடியிலிருந்த தொலைபேசியை எடுத்து, ''கால்ட் வெல் பேசுகிறேன்,'' என்றார்.

''ஹலோ மேஜர். இது சிஜடி யின் காவலர் குழுவின் சார்ஜன்ட் பேசுகிறேன் சேர். இன்ஸ்பெக்டர் பார்க்கிங்டன், அந்த மக்கபீஸ் பெண் பேசத் தயாராகி விட்டாள் என்றும், உடனடியாகத் தலைமையகத்துக்கு நீங்கள் வந்தால் நல்லது என்றும் உங்களோடு தொடர்பு கொண்டு அறிவிக்கச் சொன்னார்.''

''சரி வருகிறேன்'' என்றார் பிறெடி.

''இன்ஸ்பெக்டர் பார்க்கிங்டன் ஏற்கனவே ஒரு காரை உங்களுக்காக அனுப்பி வைத்திருக்கிறார். சில நிமிடங்களில் அது அங்கே வந்து விடும்.''

கால்ட்வெல் சீட்டு விளையாடிக் கொண்டிருந்த இடத்துக்கு வந்தார் ''நான் போகவேண்டும். மன்னித்துக் கொள்ளுங்கள் நண்பர்களே. கடமை அழைக்கிறது'' என்றார்.

''துரதிஷ்டம்தான் பிறெடி.''

''துரதிஷ்டமா? நல்ல கதைதான். நான் இதை எதிர்பார்த்துக் காத்திருந்தேன்.'' என்று தனக்குள்ளேயே நினைத்துக் கொண்டார். அவர் கோல்ட் சிமித் ஹவுசின் வெளிப்பகுதிக்கு வர காவலர்கள் இராணுவ மரியாதை செய்தனர். ஒரு கார் வந்து நிற்க, ஒரு போர்வீரன் செலுத்தும் பக்கத்திலிருந்து வெளியே பாய்ந்து வந்து அவரருகே நடந்து வந்து இராணுவ மரியாதையைச் செலுத்திவிட்டு ''மேஜர் கால்ட்வெல் நீங்களா?''

''ஆமாம்.''

''ஜிஜ்டி யிலிருந்து உங்களுக்கான காரைக் கொண்டு வந்திருக்கிறேன். ''அந்தச் சிப்பாய் பின்பக்கக் கதவைத் திறந்து பிடிக்க, பிறெடி பின் இருக்கை பில் ஏறிச் சாய்ந்து கொண்டார். சிப்பாய் காரைச் சுற்றி ஓடி, செலுத்தும் சக்கரத்துக்குப் பின்னால் அமர்ந்து காரை ஓட்டிச் சென்றான். கோல்ட்சிமித் ஹவுன் சிலிருந்து இரு கட்டடங்கள் தள்ளி ஒரு சந்தியின் அருகாமை வளைவொன்றில் வேகம் குறைந்தான். ஒரு நிமிடி நேரத்தில் கதவுகள் விரைவாகத் திறக்கப் பட்டு மூன்று பேர் உள்ளே பாய்ந்து ஏற கதவுகள் மீண்டும் விரைவாக மூடப் பட்டு' கார் மீண்டும் வேகமாகச் செல்லத் தொடங்கியது.

கால்ட்வெல்லின் தொண்டையில் பயத்தால் ஏதோ இறுகுவது போலிருந்தது. அவர் அலறிக்கொண்டே பென் மோஷேக்கு குறுக்காகப் பாய முயன்றார். முன் இருக்கையில் இருந்த மக்கபி ஒருவன் பின்புறம் திரும்பி, கைத்துப்பாக்கியின் குழாயால் கால்ட்வெல்லின் முகத்தில் அடித்தான். பென்மோஷே அவரது மேலங்கியின் மேல்பகுதியைப் பிடித்து உலுப்பித் திரும்பவும் இருக்கைக்குத் தள்ளி விட்டார்.

பயத்தால் கால்ட்வெல்லின் விழிகள் பிதுங்கிப் போயின.

''என்ன நடக்கிறதென்று கேட்கிறேன்?'' ''நீங்கள் குழப்பம் அடைந்திருக்கிறீர்கள் மேஜர் கால்ட்வெல்'' பென் மோஷே அமைதியாகச் சொன்னார்.

''இந்தக் காரை நிறுத்தி என்னை வெளியே இறக்கிவிடு. நான் சொல்லுகிறது கேட்கிறதா?''

''நீங்கள் பதினான்கே வயதான, பென் சொலமன் என்று பெயர் கொண்ட பையனை அரபுக்கிராமம் ஒன்றில் காரில் இருந்து வெளியே விட்டது போல் உங்களையும் விட்டுடுமா? மேஜர் [கால்ட்வெல், இன்று பென் சொலமனின் ஆவி தன் கல்லறையில் இருந்து எங்களைக் கூவி அழைத்துத் தன் மரணத்துக்குக் காரணமானவர்களைத் தண்டிக்கும்படி கேட்டுக் கொண்டது.

வியர்வை கண்களுள் வழிந்து நிறைந்தது. ''அது பொய்..... பொய் ..... பொய்.....''

பென் மோஷே எதையோ கால்ட்வெல் மடியின் மீது எறிந்தான். ஒரு மின் விளக்கின் ஒளியை அதன் மீது பாய்ச்சினான். அது சிதைக்கப்பட்டிருந்த பென் சொலமனின் உடலின் புகைப்படம்.

கால்ட்வெல் இரக்கம் காட்டும்படி கெஞ்சத் தொடங்கினார். பயத்தால் வாந்தி எடுத்தார்.

''மேஜர் கால்ட்வெல் எதையும் பேசும் மனநிலையில் இப்போ இல்லை. தலைமைச் செயலகத்துக்கு அவரைக் கூட்டிச் சென்று, பென் சொலமனின் கணக்கைத் தீர்க்குமுன் அவர் தரக்கூடிய தகவல்களைப் பெற்றுக் கொள்வோம்.''

கால்ட்வெல், பிரிட்டிஷ் இராணுவத்தின் திட்டங்களைப்பற்றி தான்அறிந்த எல்லாவற்றையும் சிஐடி. யின் செயல்பாடுகளைப் பற்றியும் உண்மைகளைக் கக்கி விட்டார். பின்பு பென் சொலமனின் கொலைக்குத்தான்தான் காரணம் என ஒரு ஒப்புதல் வாக்குமூலமும் எழுதிக் கொடுத்தார்.

மேஜர், கால்ட்வெல் கடத்தப்பட்டு மூன்று நாட்களுக்குப் பின் அவரது உடல், சீயோன் மலையில், பழைய நகரத்தின் டங்வாசலருகே காணப்பட்டது. அவரது உடலின்மீது பென் சொலமன்சின் உடலின் படமும், அவர் எழுதிக் கொடுத்த ஒப்புதல் வாக்கு மூலத்தின் நிழற்படப்பிரதியும் காணப்பட்டன. அதற்குக் குறுக்கே கையெழுத்தில், ''கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல்'' எனக் கிறுக்கியிருந்தது.

மேஜர் கால்ட்வெல், டெபோராவோடும், பாரக்கோடுமான தன் யுத்தக் களத்திலிருந்து பின்வாங்கி ஓடிய கானானியனான சிசேராவுக்கு ஜாஏல் என்ன தண்டனையை வழங்கினானோ அதே தண்டனையைப் பெற்றுக் கொண்டார்.

அத்தியாயம் பன்னிரெண்டு

மேஜர் கால்ட்வெல்லின் பழிவாங்கல் கொலை, மிக மோசமான பாதிப்பை ஏற்படுத்தியது. கொலைக்கான காரணம் நியாயப்படுத்தக் கூடியதாக இருந்தாலும், மக்கபீசின் முறை பலரையும் கண்டனம் செய்ய வைத்தது.

இங்கிலாந்திலோ அநேகர் முழு நிலைமைகளையும் பற்றி, வெறுப்படைந்ததோடு, 'பலஸ்தீனத்தைக் கைவிடும்படி தொழிற்கட்சி அரசின் மேல் அழுத்தங்களைப் பிரயோகித்தனர். பலஸ்தீனத்தின் உள்ளோ, பிரிட்டிஷ் இராணுவத்தினர் கோபமும் கவலையும் கொண்டிருந்தனர்.

கால்ட்வெல்லின் உடல் டங் புகுவழி அருகே கண்டுபிடிக்கப்பட்ட இருநாட்களுக்குப் பின், ஆயாலா என்ற பெயர் கொண்ட மக்கபீஸ் கைதி, விசாரணையின்போது தாக்கப்பட்டதால் ஏற்பட்ட உள் இரத்தக் கசிவினால் (internal - Hemorrhages) இறந்துபோனாள். மக்கபீஸ் இதைப்பற்றிக் கேள்விப்பட்டதும். மக்கபீசின் உக்கிரமான பழிவாங்கும் நடவடிக்கைகள் பதினான்கு நாட்கள் நடாத்தப்பட்டன. பயங்கரவாதிகளின் தாக்குதல்களினால் ஜெருசலேம் நடுங்கியது தாக்குதல்களின் கடைசி நாட்களின் உச்சக்கட்டமாக குற்றவியல் விசாரணைப் பிரிவின் தலைமைச் செயலகம் மீதுபட்டப்பகலில் துணிகரமான தாக்குதல் ஒன்று நிகழ்த்தப்பட்டது.

''நரகமான பதினான்கு நாட்கள் ''(Hell's Fortnight) என பின் நாமகரணம் செய்யப்பட்ட மக்கபீசின் கோரத் தாண்டவத்தின் போது, டொவ் லண்டவ், எதைப்பற்றியுமே கவலைப்படாத துணிகரத்தை மிகத் துணிகரமான தீவிரவாதிகள் கூட வியக்கும்படி, வெளிக்காட்டினான். டொவ் நான்கு தாக்குதல்களுக்குச் சென்றான். இறுதித் தாக்குதலின்போது ஜீபடி காரியூலயத்தின் மீது நிகழ்த்த இறுதித் தாக்குதலுக்கு குழுவொன்றுக்குத் தலைமை தாங்கிச் சென்றான். இந்த ''நரகமான பதினான்கு நாட்களின் போது சின்ன சியோராவின் பெயர் நாட்டுத்தனமான துணிகரத்துக்கு உதாரணமாகச் சொல்லப்படும் அளவிற்குப் பிரபல்யமான பெயராயிற்று.

பலஸ்தீனமோ அடுத்த அடிக்காகக் காத்துக் கொண்டிருந்தது. ஜெனரல் ஆர்னோல்ட் ஹோவன் ஹோர்ஸ்ட் முதலில் திகைத்துப் போனாலும் பின்பு இராணுவச்சட்டம், சுற்றிவளைப்புகள், தேடுதல்கள், தாக்குதல்கள், மரண தண்டனைகள், போன்ற யிசுவுக்கு எதிரான நடவடிக்கைகளை எதிர்த்தாக்குதல்களாக கநிழ்த்திஇயல்பாகஇயங்கிக் கொண்டிருந்த தொழில்களையும், வர்த்தகத்தையும்

முடங்கப்பண்ணினார் எல்லாவற்றையும் உள்ளடக்கும் அவரது ''ஒப்பரேசன் ஸ்கிட்'' (கணவாய்மீன் திட்டம்) பலஸ்தீனத்தைச் சூழ்ந்து கொள்ளத் தொடங்கியது.

காஸ்ட்வெல்லுடைய கொலை, ''நரகத்தின் பதினான்கு நாட்கள்'' நிஜடி மீதான இறுதித் தாக்குதல் எல்லாமே பிரிட்டிஷ் அதிகாரத்தை கேலிக்குள்ளாக்கின. மக்கபீஸ் இங்கு அட்டகாசம் செய்து கொண்டிருந்த அதேவேளை அலியா பெற்றும் மேலும் மூன்று சட்டவிரோதக் கப்பல்களைப் பலஸ்தீனக் கரைகளில் கொண்டு வந்து சேர்த்தது. சட்டவிரோதக் கப்பல்களின் வருகை முக்கியத்துவமில்லாமல் போய்விட்டாலும், பயங்கரவாதிகளின் நடவடிக்கைகள் விளைவித்தது போன்ற கௌரவக்குறைவை அவையும் விளைவித்தன. எந்த நிமிடமும் மறைந்திருந்து தாக்குதலுக்குட்படக் கூடும் என்ற எதிர்பார்ப்புடனேயே பிரிட்டிஷ் துருப்புக்கள் யூத நகரங்களின் வீதிகளில் ரோந்து சென்றன.

ஐக்கிய நாடுகள் சபையின் குழு விரைவில் வரவிருந்தது. அவர்கள் வருமுன் யிசுவ்வை செயலிழக்கப்பண்ணிவிட ஹேவன் ஹோர்ஸ்ட் முயன்றார். கட்டுமீறி யூத எதிர்ப்பு நடவடிக்கைகளுக்குப் பெயர் போன அதிகாரிகளினதும் சிபபாய்களினதும் பட்டியல் ஒன்றை அவர் பெற்றுக்கொண்டார். அவர் தானே அந்தப் பட்டியலைக் கவனமாக ஆராய்ந்து, அவர்களில் கொடூரமான இரு அதிகாரிகளையும், நான்கு சிப்பாய்களையும் கொண்ட ஆறுபேரைத் தெரிந்தெடுத்தார். இந்த ஆறுபேரும், ஸ்நெல்லர் படை வீடுகளில இருந்த அவரது வாசஸ்தலத்துக்குக கொண்டுவரப்பட்டு இரகசிய காபபுப் பிரமாணம் செய்விக்கப்பட்டனர். ஐந்து நாட்களுக்குத் திட்டம் தீட்டப்பட்டது. ஆறாவது நாளில் ஹேவன் ஹோர்ஸ்ட் தனது இறுதிக்கட்ட முயற்சியைத் தொடக்கி வைத்தார்.

ஆறுபேரும் அரபுக்களைப் போல் வேடமணிவிக்கப்பட்டனர். அவர்களில் இருவர் இரண்டு தொன் டைனமைற் வெடிமருந்து (Dynamite) நிறைந்த வாகனமொன்றை கிங் ஜோர்ஜ் வீதியூடாக ஓட்டிச் சென்றனர். அந்த வாகனம் சியோன் குடியமர்த்தல் கழகத்தை நோக்கிச் சென்றது. பிரதான புகுவழியுள் செல்லும் நீண்ட ஒடு பாதையை நோக்கி வாகனம் நிறுத்தபபட்டது. அரபு உடுப்புகளில் இருந்த சாரதி செலுத்தும் கருவியை ஒரு நிலையில் இருக்கப் பூட்டிவிட்டு ட்ரக்கை கியர்களில் இட்டு, அதனை இயக்கிவிடடு அதிலிருந்து பாய்ந்து இருவருமாக ஓடி மறைந்தனர்.

ட்ரக்கானது பாதையின் மேலாகப் பாய்ந்து சென்று, திறந்திருந்த கதவூடாக நீண்ட ஒடு பாதையில் சென்றது. ஒரு கணம் சிறிது தடுமாறிய அது, வளைவில் தேய்த்துக் கொண்டு சென்று பிரதான புகுவழியருகே மோதியது. இடிமுழக்கம் போல் ஒரு வெடியோசை கேட்டது. அந்தக் கட்டிடம் அப்படியே தரை மட்டமானது.

அதே கணத்தில் இன்னுமிருவர் இதே மாதிரியான நடவடிக்கை யொன்றை இரு கட்டிடத் தொகுதிகளுக்கப்பாலிருந்த யிசுவ் மையத்தின் மீது, இன்னொரு

டைனமற் வெடிமருந்து நிரப்பப்பட்ட வாகனமொன்றின் உதவியுடன் மேற் கொண்டனர். அந்தச் சமயத்தில் அங்கே ஒரு கூட்டம் நிகழ்ந்து கொண்டிருந்தது. கிட்டத்தட்ட யிசுவ் தலைமைப்பீடம் முழுவதும் அங்கே இருந்தது.

அந்த ட்ரக் இந்தக்கட்டிடத்தை நோக்கிச் செல்லும் வழியில் ஒரு பாதை யோரத் தடையொன்றின் மீது செல்ல வேண்டியிருந்தது. அப்படிச் செல்லும் போது இந்தத்தடையின் மீது மோதியதால் சிறிது திசைமாறிய அந்த வாகனம் இந்தக் கட்டிடத்தில் மோதாமல் பக்கத்துக் குடியிருப்புக் கட்டிடம் ஒன்றில் மோதி அதைத் தகர்த்தது.

இந்த நடவடிக்கையில் ஈடுபட்ட நாலு ராணுவத்தினரும், இதற்காகத் தெரிவு செய்யப்பட்ட குழுவின் மிகுதி இருவராலும் வெவ்வேறு தப்பிச் செல்லும் கார்களில் ஏற்றிக் கொண்டு செல்லப்பட்டார்கள். இரண்டு கார்களும், பிரிட்டிஷ் பாதுகாப்புக்குட்பட்டிருந்த ட்ரான்ஸ் - ஜோர்டான் உள்ளே விரைந்து சென்றன.

ஜெனரல் ஹேவன் ஹேர்ஸ்ற் ஒரே அடியில் முழு யிசுவ் தலைமைப் பீடத்தையும், யூதர்கள் பிரதிநிதித்துவத்தை அழிக்க முயற்சி செய்திருந்தார். நூறுபேர் சியோன் குடியமர்த்தல் கழகக் குண்டுவெடிப்பில் மடிந்தனர். யிசுவ் மையத்தில் ஒருவரும் கொல்லப்படவில்லை. இறந்தவர்களில் இளைஞர்அலியா வின் எண்பது வயது தலைவியான ஹரியற் சோல்ஸ்மானும் ஒருவர்.

குண்டுவெடிப்புகள் நிகழ்ந்து சில கணங்களுக்குள்ளாகவே ஹகானாவினதும் மக்கபீசினதும் தகவல் சேகரிப்பு-ஆய்வுப் பிரிவுகள் பலஸ்தீனம் எங்கும் இதற்குப் பொறுப்பானவர்களைத் தேடி வலைவிரித்தன. அன்று மாலையாகும் முன்னரே இரு அமைப்புகளும் இதற்குப் பொறுப்பான ஆறு அரபுக்களும் பிரிட்டிஷ் இராணுவத்தினரே என்று அடையாளம் கண்டுகொண்டனர். நிரூபிக்க பாவிக் கக்கூடிய எவ்வித சான்றுகளும் இல்லாவிட்டாலும் கூட, இந்தத் தாக்குதல் களுக்கு ஹேவன்-ஹேர்ஸ்ற் தான் பொறுப்பு, அதாவது நேரடியாகவே பொறுப்பு என்பதையும் அறிந்து கொண்டிருந்தனர். யிசுவ் தலைமைப் பீடத்தை அழிக்கும் ஹேவன்-ஹேர்ஸ்ற்றின் இறுதிக்கட்ட முயற்சி அதற்கு நேரெதிரான விளைவையே ஏற்படுத்தியது. முன்னெப்போதும் கண்டிராத வகையில் பலஸ்தீன யூதர்களை அது ஒன்றுபடுத்தியதோடு, ஆயுதந்தாங்கிய சக்திகளான, ஹகானாவையும், மக்கபீசையும் ஒருங்கிணைக்கவும் அது வழிகோலியது. ''ஹேவன் ஹேர்ஸ்ற் அறிக்கை'' யொன்றின் பிரதியைக் ஹகானா எப்படியோ பெற்றுக் கொண்டி ருந்தது. குண்டு வெடிப்புகளின் பின்னணியில் பெறப்பட்ட சாட்சியங்களிலி ருந்து அந்த ஜெனரல் தங்களை அழிப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருப் பதை அறிந்து கொண்டனர். அவிடான், ஸெவ் ஜில்போவை, பார் இஸ்ரே லைச் சந்தித்து, மக்கபீஸ் கொமாண்டர்களோடு ஒரு சந்திப்பை ஒழுங்கு பண்ணும் முகமாக ஜெருசலேமுக்கு அனுப்பி வைத்தார். இப்படியான அணுகு முறை தனித்துவம் வாய்ந்ததாக இருந்தது. இதற்கு முன்பு, 2ம் உலகப்போரின் ஆரம்பத்தில் அவிடான் அக்கிவாவை போர் முடியுமட்டும் பயங்கரவாத நடவ டிக்கைகளைக் கைவிடும்படி கேட்டுக் கொள்ளச் சென்றபோதுதான் அவ்வாறான ஒன்று நிகழ்ந்திருந்தது.

முன்பு ரோமர் படைப்பிரிவுகள் முகாமிட்டிருந்த இடமான, ஜெருசலேமிலிருந்து வரும் பாதையில் ஒரு திறந்த வெளியாயிருந்த வயலொன்றில் அதிகாலை ஒரு மணிக்குச் சந்திப்பு நிகழ்ந்தது. நான்கு பேர் பிரசன்னமாயிருந்தனர். மக்கபீஸ் சார்பில் அக்கிவாவும், பென் மோஷேயும், ஹகானாவின் சார்பில் அவிடானும், ஹகானாவின் தாக்குதல் பிரிவான பால்மாக்கை ஸெவ் ஜில்போவாவும் பிரதிநிதித்துவப்படுத்தினர். இரு ஸ்தாபன பிரதிநிதிகளிடையே எவ்வித கைகுலுக்கல்களோ, முகமன்களோ பரிமாறிக் கொள்ளப்படவில்லை. அவர்கள் ஒருவர் மீது ஒருவர் கொண்டிருந்த அவநம்பிக்கையோடு ஒருவரையொருவர் பார்த்தபடி நின்று கொண்டிருந்தனர். குளிரான காற்று வீசிக் கொண்டிருந்தது.

எங்கள் இரு அணிகளுக்குமிடையே நெருங்கிய ஒத்துழைப்புடனான'' கூட்டுச் செயற்பாடுகளை ஏற்படுத்த அடிப்படை ஏதாவது காணவே இந்தச் சந்திப்பை ஒழுங்குபண்ணினேன்'' அவிடான் சொன்னார்.

அதாவது, ''நாங்கள் உங்கள் கட்டுப்பாட்டின் கீழ் வரவேண்டும் என்று சொல்லுகிறீர்களா? பென் மோஷே சந்தேகத்துடன் கேட்டார். ''உங்கள் குழுவைக் கட்டுப்படுத்தக் கூடும் என்ற எண்ணத்தை நீண்டகாலத்துக்கு முன்பே நான் கைவிட்டுவிட்டேன். இப்போதைய சூழ்நிலையில் உச்சக்கட்டச் செயல் பாடே தேவையாக இருக்கிறது. மூன்று நகரங்களுள்ளேயும் உங்கள் பலம் மிகுந்திருக்கின்றது. எங்களை விடச் சுதந்திரமாக நீங்கள் செயற்படலாம்.''

''அப்போ அதுதான் விடயம். உங்களுடைய ஊத்தைவிஷயங்களை எங்களைக் கொண்டு செய்யப் பார்க்கிறீர்கள் அல்லவா? அக்கிவா வெடித்தான். ''அவர் சொல்வதை முழுவதும் கேட்டுவிட்டுக் கதை அக்கிவா'' என்றான் கல கொமாண்டர்.

இந்த நோக்கமே எனக்குப் பிடிக்கவில்லை. இந்தச் சந்திப்பையும் நான் விரும்பவில்லை பென் மோஷே. இவர்கள் எங்களை முன்பு காட்டிக் கொடுத்திருக்கிறார்கள். இனிமேலும் காட்டிக் கொடுப்பார்கள். அவிடானின் வழுக்கைத் தலை இந்த வார்த்தைகளால் சிவந்து போயிற்று. ''இன்றிரவு உனது வார்த்தைகளைப் பொறுத்துக் கொள்கிறேன் அக்கிவா. ஏனெனில், பல முக்கிய விஷயங்கள், முக்கியத்துவம் பெற்றிருக்கின்றன. எங்களிடையேயிருக்கும் வேறுபாடுகளுக்கு மத்தியிலும், நீ ஒரு யூதன் என்றும், எரெற்ஸ் இஸ்ரேலை நீ நேசிக்கிறாய் என்றும் நம்புகிறேன்.'' ஹேவன் - ஹேர்ஸ்ற்றின் அறிக்கைப் பிரதியொன்றை அக்கிவாவிடம் கொடுத்தான்.

அந்த வயோதிப மனிதன் அதை பென் மோஷேயிடம் கொடுக்க அவன் அதை டோர்ச் விளக்கு வெளிச்சத்தில் பார்வையிட்டான்.

''பதினான்கு வருடங்களுக்கு முன்பே பிரிட்டிஷார் எமது எதிரிகள் என்று கூறியிருந்தேன். ஆனால் நீங்கள் அதை நம்பவில்லை. ''முணுமுணுத்தான் அக்கிவா.

நான், உன்னோடு அரசியல் விவாதம் செய்யவில்லை. நீங்கள் எங்களோடு ஒத்துழைக்க முடியுமா? முடியாதா?'' அவிடான் நேரடியாகவே கேட்டான்

''நாங்கள் முயற்சி செய்கிறோம்'' பென் மோஷே சொன்னான்.

இந்தச் சந்திப்புக்குப் பிறகு, இணைப்புக் குழுக்கள், ஹகானாமக்கபீஸ் இணைந்துமேற்கொள்ளவிருக்கும் வேலைத்திட்டங்களை ஒழுங்குபண்ண விரைந்து வேலைசெய்தன. இருவாரங்களுக்குப் பிறகு, சியோன் குடியமர்த்தல்தகர்ப்புக்கும், யிசுவ்மைய தகர்ப்பு முயற்சிக்குமான பதிலை பிரிட்டிஷார் சந்திக்க நேர்ந்தது.

ஹகானாவினர், ஒரே இரவில், புகையிரதப் பாதை அமைப்புகளை, முற்றாகத் தகர்த்தெறிந்து, பலஸ்தீனத்துக்கு வரும், பலஸ்தீனத்திலிருந்து போகும் சகல போக்குவரத்துகளையும் ஸ்தம்பிக்கச் செய்தனர்.

அடுத்த நாள் இரவு மத்தியதரைக் கடல் நாடுகள் ஆரின் பிரிட்டிஷ் தூதுவராலயங்களினுள் புகுந்து, அலியா பெற் எதிர் நடவடிக்கைகளில் பாவிக்க வென சேகரிக்கப்பட்ட ஆவணங்களை அழித்து விட்டனர்.

ஹகானாவின் பால்மாக் பிரிவு, மொசூல் எண்ணெய் குழாய்களை பதினைந்து இடங்களில் சிதைத்து விட்டனர்.

இவைகளுக்குப் பிறகு, இறுதிக்கட்ட நடவடிக்கையாக, ஹேவன் ஹோர்ஸ்ற்றை ஒழித்துக் கட்டும் முயற்சிக்கு மக்கபீஸ்கள் திட்டமிட்டனர். மக்கபீஸ்கள் ஸ்நெல்லர் வளாகத்தை இருபத்தினாலு மணிநேரமும் கண்காணித்தனர். வளாகத்தினுள்ளும், அங்கிருந்து செல்லும் சகல போக்குவரத்துக்களும் கண்காணிக்கப்பட்டன. எல்லாக் கார்களும் பதிவு செய்யப்பட்டன. முழு வளாகமும் படமாக வரையப்பட்டது.

நான்கு நாட்களுக்குப் பிறகு அது ஒரு முடியாத காரியம் போல் தோன்றத் தொடங்கியது. ஆயிரக்கணக்கான துருப்புகளால் சூழப்பட்டு, பலமான கோட்டையினுள் ஹேவன் ஹோர்ஸ்ற் பாதுகாப்பாக இருந்தான். பிரிட்டிஷ் துருப்புகளைத் தவிர எவரும், அவனது வாசஸ்தலத்துக்கு அருகில் அனுமதிக்கப்படவில்லை. எப்போதாவது, ஹேவன் - ஹோர்ஸ்ற் வளாகத்தின் வெளியே செல்லும்போது பூரண பாதுகாப்போடு சென்று வந்தான். இந்த பாதுகாப்பு அணியைத் தாக்க முயன்றால் குறைந்தது நூறு போராளிகளையாவது மக்கபீஸ் இழக்கவேண்டியிருக்கும்.

திடீரென ஒருநாள் ஒரு பலவீனமான இடம் தென்பட்டது.

ஒரு சிவிலியன் வாகனம், ஒவ்வொரு வாரமும் மூன்று நாட்களுக்கு நள்ளிரவுக்கும், அதிகாலை ஒரு மணிக்கும் இடையே, வளாகத்தில் இருந்து புறப்பட்டுப் போய் விடிவதற்கு சிறிது முன்பதாகத் திரும்பி வருவது அவதானிக்கப்

பட்டது. காரில் ஒரு சாரதி மட்டும் சிவிலியன் உடையில் காணப்பட்டான். இப்படியான வழக்கமற்ற நேரத்தில், ஒழுங்காக இடம்பெற்ற இந்தப் போக்கு வரத்துத் தானாகவே சந்தேகத்துக்குரியதாக ஆகிவிட்டது.

மக்கபீஸ் குழுக்கள், இந்தக்காரின் உரிமையாளரின் பதிவைத் தேடிப் பிடித்துப் பார்த்தபோது, அது ஒரு செல்வந்தனான அராபியக் குடும்பத்துக்குச் சொந்தமானது எனத் தெரிய வந்தது. ஆகவே இது அராபியப் பகுதியிலிருந்து பிரிட்டிஷாருடன் வேலைசெய்யும் யாருக்கோ சொந்தமாயிருக்கவேண்டும் என்றும், அதனால், அதன் மூலம் ஹேவன் ஹேர்ஸ்ற்றை அணுகமுடியாது என்றும் தீர்மானித்தனர்.

இதற்கிடையே, ஹேவன்-ஹேர்ஸ்ற்றின் பிரத்தியேகப் பின்னணி, நடத்தை, பழக்கவழக்கங்கள் என்பன தொகுக்கப்பட்டு ஆராயப்பட்டன. அவன் வாழ்க்கையில் முன்னேறும் நோக்கம் கொண்டவன் என்றும், அதனாலேயே முக்கியமான இடத்தில் திருமணம் செய்திருந்தான் என்றும் மக்கபீஸ்கள் அறிந்திருந்தார்கள். அந்தத் திருமணம் அவனுக்கு அந்தஸ்தையும், பணத்தையும் கொடுத்திருந்தால் அதைப் பாழ்படுத்தும் எதையும் அவன் செய்யமாட்டான். சமூக வாழ்க்கையிலோ, நல்ல ஒரு கனவானின் மொத்த வடிவமாகக் கணிக்கப்பட்டதோடு, மந்தமான எரிச்சலூட்டுபவனாகவே உண்மையில் கருதப்பட்டான்.

மேலுக்கு கௌரவமாகத் தோற்றமளித்த ஹேவன் - ஹேர்ஸ்ற்றின் பின்னணியை ஆழமாகத் தோண்டித் துருவிப் பார்த்தபோது, ஒன்றுக்கு மேற்பட்ட பல்வேறு பெண்தொடர்புகளையும் கொண்டிருந்ததையும் அறிந்து கொண்டனர். பல வருடங்களுக்கு முன் பிரிட்டிஷ் இராணுவத்தில் ஹேவன் - ஹேர்ஸ்ற்றின் கீழ் பணியாற்றிய பலர் மக்கபீசில் இருந்தார்கள். முகாமில் உலாவும் வதந்திகளில் ஹேவன் - ஹேர்ஸ்ற்றுக்கு வைப்பாட்டிகள் இருப்பதும் இடம் பிடித்திருந்தன.

வளாகத்தில் அடைபட்டிருப்பதன் காரணத்தால் தனிமை அவனை வாட்டலாம் என்றும் ஒரு கருத்து மேலோங்கியது. அவன் திருமணத்தால் ஏற்பட்டிருந்த அந்தஸ்தின் காரணமாக முகாமிற்குள் பெண்ணெவளையும் கொண்டு வந்து தொடர்பு கொள்ளத் துணியமாட்டான். வெளியே யாரிடமும் வைப்பாட்டியிடம் தான் போக முயற்சிப்பான். ஆகவே அந்த மர்மக்காரில் வெளியே தெரியாதவண்ணம் அவன் பயணியாக செல்கிறான் என்றும், வளாகத்துக்கும், வைப்பாட்டிக்குமிடையே அடிக்கடி சென்று வருகிறான் என்ற கருத்தும் முன் வைக்கப்பட்டது.

இந்த மர்மத்தைச் சரியாக ஆராயாது கைவிடுவது என்பது மக்கபீசிற்கே ஒவ்வாததான பழக்கமாயிருந்தது. ஹேவன் - ஹேர்ஸ்ற்றின் வைப்பாட்டி யாராக இருக்கலாம்? இதைப்பற்றி ஆராய்வதற்கு வதந்திகள் கூட எதுவும் இருக்கவில்லை. அவன் ஒரு காதல் மாளிகையை வைத்திருந்தால், அதை மிகத் திறமையாக மறைத்து வைத்திருந்தான். எந்த யூதப் பெண்ணும் அவனோடு வாழத் துணியமாட்டாள். ஆங்கிலப் பெண்களெவரும் சுற்று வட்டாரத்தில் இருக்கவில்லை. ஆகவே அது ஒரு அராபியப் பெண்ணாகத்தான் இருக்க வேண்டும்.

காரைத் தொடர்ந்து செல்ல முயற்சிப்பது என்பது, தங்களைத் தாங்களே வெளிக்காட்டிக் கொள்வதிலும், அவனை உற்சாகப்படுத்துவதிலும் போய் முடியலாம். இரவில் தனியே செல்லும் ஒரு காரை வழி மறித்துப் பார்ப்பது அவ்வளவு கடினமான காரியமல்ல, ஆனால், அக்காரில் பயணம் செய்வது ஹேவன். ஹோர்ஸ்ற்றாக இருக்கும் பட்சத்தில், அவனைத் தனியாகப் பிடிக்காமல், அவனை அவன் ஈடுபடும் காரியத்தில் கையும் மெய்யுமாகப் பிடிப்பதே நலமென்று தலைமைப்பீடம் தீர்மானித்தது.

அவர்கள் மறுமுனையிலிருந்து அதாவது காரின் உரிமையாளரின் பக்கத்திலிருந்து தகவல்களைச் சேகரிக்க ஆரம்பித்தார்கள். இந்தப் பணக்கார நிலச் சுவாந்தர்களின் குடும்பத்திலே, அழகிலும், அறிவிலும், பின்னணியிலும் ஹேவன் ஹோர்ஸ்ற் போன்ற ஒருவனைக் கவரக்கூடிய இளம் பெண்ணொருத்தி இருந்தாள். புதிரின் துண்டுகள் ஒழுங்காக இணைய ஆரம்பித்தன.

மக்கபீஸ்கள் குறிப்பிட்ட அரபுக் குடும்பத்தை கண்காணித்ததோடு, அத்த இளம் யுவதியையும் இடையறாது பின் தொடர்ந்தார்கள். இரண்டாவது இரவிலேயே அவர்கள் முயற்சிக்குப் பலன் கிடைத்தது. அந்த இளம் யுவதி, நள்ளிரவில் தன் வீட்டை விட்டுப் புறப்பட்டு, ஹெப்ரோன் – ஜெருசலேம் வீதியில், பணக்கார அரபுக்கள் வாழும் அராப் எல்பாக்குவா (Arab El Baq' a) பகுதியில் இருந்த வீடொன்றுக்கு சென்றாள். அவள் வந்து அரை மணி நேரத்தின் பின், அந்த மர்மமான கார் அந்த வீட்டருகில் வந்து நின்றது. காரின் பின் பகுதியிலிருந்து, ஜெனரல் ஹேவன் - ஹோர்ஸ்ற் வீட்டுக்குள் விரைவாக ஓடிச் சென்றதை மக்கபீசால் காணக்கூடியதாக இருந்தது.

அதே அதிகாலை மூன்று மணிக்கு, இருளிலிருந்து எழுந்த, இரத்தத்தை உறையவைக்கும் மேற்கோள் ஒன்றால் ஹேவன் - ஹோர்ஸ்ற் திடீரென உலுப்பி எழுப்பப்பட்டார்.

''இஸ்ரேலுக்காகப் பழிவாங்கும் இறைவனைத் துதியுங்கள்.''

அவன் கட்டிலில் இருந்து பாய்ந்தெழும்பினான். அந்த அரபு யுவதி கூச்சலிடத் தொடங்கவும் மக்கபீஸ் ரவைகள் அறையைச் சல்லடை போடவும் சரியாக இருந்தது. அன்று காலை பொழுது விடிந்த சிறிது நேரத்தில் பிரிட்டிஷ் இராணுவத் தலைமையகத்துக்கு மக்கபீசிடமிருந்து தொலைபேசி அழைப்பு ஒன்று வந்தது. அவர்களது கொமாண்டரை எங்கே கண்டு பிடிக்கலாம் என்று உபதேசம் செய்யப்பட்டது. அத்தோடு ஹேவன்-ஹோர்ஸ்ட் மரணமடைந்திருக்கும் சூழ்நிலை நன்றாகப் புகைப்படமெடுக்கப்பட்டிருக்கிறது என்றும் தெரிவித்தார்கள். தேவையில்லாத பழிவாங்கல்களை யிசுவுக்கு எதிராக நிகழ்த்தினால் அந்தப் படம் மக்கபீசால் பிரசுரிக்கப்படும் என்றும் எச்சரித்தார்கள்.

தங்கள் ஜெனரல் ஒருவர், அவரது ஆசைநாயகியான அரபுப் பெண்ணின் கட்டிலில் கொலையுண்டு கிடப்பதைக் காட்டும் புகைப்படம் வெளியிடப்பட்டால் ஏற்படக்கூடிய அவப் பெயரைப் பற்றித் தலைமைச் செயலகத்தினர் பலமாகச்

சிந்தித்தனர். முழு விசயத்தையும் மறைக்கத் தீர்மானித்து, அவர் மோட்டார் விபத்தொன்றில் கொல்லப்பட்டதாகப் பகிரங்கமாக அறிவித்தும் விட்டார்கள். மக்கபீசும் அவர் ஒரு மோட்டார் விபத்தில் கொல்லப்பட்டார் என்பது சரிதான் என்று ஒத்த கருத்தை வெளியிட்டார்கள்.

ஜெனரலின் மறைவோடு பயங்கரவாத நடவடிக்கைகள் சிறிது குறைந்து போயின. ஐக்கிய நாடுகள் சபைக் குழு வரப்போகும் விஷயம், நாட்டின் மேல் ஒரு இனம் தெரியாத அமைதிப் போர்வையைப் போர்த்தியிருந்தது. 1947 ஆனி மாதக் கடைசியில், ஐக்கிய நாடுகள் சபையின் பலஸ்தீனத்துக்கான விசேட குழு (United Nations Special Committee on Palastine). ஹைபா வந்து சேர்ந்தது. இது (Unscop) யுன்ஸ்கொப் எனச் சுருக்கமாக அழைக்கப்பட்டது. நடுநிலை யாளர்கள், சுவீடன், நெதர்லாந்து, கனடா, அவுஸ்திரேலியா, குவாதிமாலா, உருகுவே, பெரு, செக்கோஸ்லாவாக்கியா, யூகோஸ்லாவியா, ஈரான், இந்தியா ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள்.

நீண்ட காலமாகவே காரண காரியங்கள் யூதருக்கெதிராக இருந்து வந்தன ஈரான் ஒரு முஸ்லீம் நாடு, இந்தியா ஒரளவு முஸ்லீம்களைக் கொண்ட நாடு, அதன் பிரதிநிதி முஸ்லிமாக இருந்ததோடு, இந்தியா, பிரித்தானிய பொது நலவமைப்பு நாடுகள் அமைப்பிலும் இருந்தது. கனடா, அவுஸ்திரேலியா இரண்டும் கூட, பிரித்தானிய பொதுநல அமைப்பில் உள்ளவைதான். செக்கோஸ்லா வாக்கியாவும், யூகோஸ்லாவியாவும் கம்யூனிஸ்ட் குழுவைச் சேர்ந்தவர்கள். பாரம் பரியமாகவே சியோனிச எதிர்ப்புக் கொள்கைகளைக் கொண்டவை. தென்னமரிக் காவைப் பிரதிநிதித்துவப் படுத்திய உருகுவே, பெரு, குவாதிமாலா ஆகியவை கத்தோலிக்க நாடுகளாய் இருந்ததோடு, வத்திக்கானின் சியோனிசத்தின் மீதான சிரத்தையற்ற மனோபாவத்தையே பிரதிபலிக்கக் கூடும். சுவீடனும் நெதர்லாந் தும் மட்டும்தான் பக்கச் சார்பில்லாத நாடுகள் என்று கொள்ளக் கூடியவை. ஆயி னும், யிசுவ் யுன்ஸ்கொப் (Unscop) ஐ வரவேற்றது.

ஐக்கிய நாடுகள் சபை இந்த விடயத்தில் தலையிடுவதை அரபுக்கள் எதிர்த் தனர். பலஸ்தீனத்தின் உள்ளே அரபுக்கள் பொது வேலை நிறுத்தம் ஒன்றுக்கு அறைகூவல் விடுத்து, ஆர்ப்பாட்டங்களை நிகழ்த்தினார்கள். திட்டுகளும், பயமுறுத்தல்கள் ஆணையிடுதலும் நிறையவே நிகழ்ந்தன. பலஸ்தீனத்துக்கு வெளியேயிருந்த அரபு நாடுகள் யூதருக்கெதிரான படுகொலை இரத்தக் களரி யொன்றை ஆரம்பித்தனர்.

பழைய போராளியும், பேச்சுவார்த்தையில் நிபுணனுமான பராக் பென் கானானை, யிசுவ் மையம் மீண்டும் சேவைக்கழைத்தது. அவர் பென் கூரியன் (Ben Gurion) ஓடும், டாக்டர் வெயிஸ் மானோடும், யுனஸ்கோப்புக்கான ஆலோ சனைக் குழுவில் இணைந்து கொண்டார்.

o

அத்தியாயம் பதினேழு

கிற்றியும், கரேனும் கான்டப்னாவுக்குத் திரும்பி வந்தனர். கிற்றி கரேனோடு விஷயங்களைப் பேசுவதற்குப் பொருத்தமான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்தாள். டொவ் லன்டவ்விடமிருந்து கடிதம் வந்ததும், அதை மேலும் காலந் தாழ்த்தக் கூடாது என முடிவு செய்து கொண்டாள்.

கிற்றி கொடித்தோடை மணம் கொண்ட நீராட்ட நீரைக் கரேனின் தலையில் ஊற்றி, பெரிய துவாய் ஒன்றால், கரேனின் நீண்ட அடர்ந்த மண்நிறக் கூந்தலை வேகமாக இறுகத் துடைத்து விட்டாள்.

''பூ'' என்று வாயால் ஊதியபடி துவாயின் ஒரு மூலையை இழுத்துக் கண்ணில் இருந்த சவர்க்கார்த்தைத் துடைத்து விட்டாள்.

நீர் தேநீர்க் கேத்தலில் கொதித்துக் கொண்டிருந்தது. கரேன் எழுந்து, துவாயைத் தலையைச் சுற்றிக் கட்டிக் கொண்டே தேநீர் தயாரித்தாள். கிற்றி, சமையலறை மேசையில் அமர்ந்தபடி நகத்தை ராவிவிட்டுக் கொண்டிருந்தாள். பின் மிகக் கவனமாக நகச்சாயையை நகங்களுக்குப் பூசிக்கொண்டிருந்தாள்.

''உங்களை என்ன உறுத்திக் கொண்டிருக்கின்றது.'' சமாதானப் படுத்தும் பாணியில் கரேன் கேட்டாள்.

''என்னுடைய கடவுளே, பிரத்தியேகமாக என் சிந்தனைகளில் மூழ்கியிருக்கக் கூட விடுகிறார்களில்லை.''

''ஏதோ பிழைத்து விட்டது. கலிலிக் கடலுக்கு நீ போயிருந்த பயணத்தால் திரும்பியதிலிருந்து ஏதோ பிழைத்துவிட்டது. உங்களுக்கும் அரிக்கும் இடையே ஏதாவது நிகழ்ந்ததா?''

''ஏராளமானவை நிகழ்ந்தன. ஆனால், என் மனதை உறுத்திக் கொண்டிருப்பது அதுவல்ல. கரேன், நாங்கள் எங்களைப்பற்றியும், எங்கள் எதிர்காலம் பற்றியும் பேசவேண்டும். இதை உடனடியாகவே செய்யவேண்டும், என்று நான் நினைக்கிறேன்.''

''எனக்குப் புரியவில்லை.''

தன் நகச்சாயங்களைக் காயவைக்க கிற்றி சிறிது வீசிக் கொண்டாள். அவள் எழுந்து நின்று இசகுபிசகாக ஒரு சிகரெட்டைப் பற்றவைத்துக் கொண்டாள்.

''நீ எனக்கு எவ்வளவு முக்கியமானவள் என்றும், நான் உன்னை எவ்வளவு நேசிக்கிறேன் என்பது உனக்குத் தெரியுமா?''

''தெரியும் என்றுதான் நினைக்கிறேன்'' என்று அந்த யுவதி முணுமுணுத்தாள்.

''கராஒலொஸ்ஸின் அந்த முதல் நாளிலிருந்து நீ எனக்குச் சொந்தமானவளாக இருக்க வேண்டுமென விரும்பினேன்.''

''நானும் அப்படியிருக்கவேண்டும் என்றுதான் விரும்பினேன், கிற்றி!!

''அப்போ நான் எல்லாவற்றையும் கவனமாக ஆராய்ந்து,பார்த்து உனக்கு நல்லதைத்தான் செய்வேன் என்று நம்பவேண்டும். நீ என்னில் விசுவாசம் கொள்ளவேண்டும்''

''ஏற்கனவே அப்படித்தான் செய்கிறேன். உங்களுக்குத் தெரியும்தானே?''

''நான் இப்போது சொல்லப்போவதை முழுதாக ஏற்றுக் கொள்வது உனக்குச் சிலவேளை கடினமாக இருக்கலாம். இந்த முடிவுக்கு வருவது எனக்கும் கடினமாகத்தான் இருக்கிறது. ஏனெனில், இங்கு பல பிள்ளைகளை நான் மனதார நேசிப்பதோடு, கான்டப்ளாலிலும் எனக்கு ஒரு பிணைப்பு ஏற்பட்டு விட்டது கரேன் உன்னை என்னோடு அமெரிக்காவுக்கு என் வீட்டுக்குக் கூட்டிச் செல்ல விரும்புகிறேன்.''

கன்னத்தில் அறையப்பட்டவள் போல் அந்தப் பெண் கிற்றியை பார்த்தாள்.

''வீட்டுக்கு?...இதுதான் எனது வீடு, எனக்கு வேறு வீடுகள் இல்லை.''

''உன்னுடைய வீடு நீ என்னோடு இருக்குமிடமாகவேண்டும் .. எப்போதுமே.''

''எனக்கு அதுதான் தேவை. மற்றெல்லாவற்றையும் விட அதுதான் அதிகமாகத் தேவைப்படுகின்றது. இது மிகவும் விசித்திரமாயிருக்கின்றது.''

''எது?''

''உங்கள் வீடு அமெரிக்காவில் இருப்பதாகக் கூறியது.''

''கரேன் நான் ஒரு அமெரிக்கப்பெண். என் வீட்டை நினைத்து ஏங்குகிறேன்''

அழுவதைத் தவிர்ப்பதற்காகக் கரேன் உதடுகளைக் கடித்துக் கொண்டாள். ''இது மிக விசித்திரமாயிருக்கிறதல்லவா? இப்போதுள்ளது போலவே

தொடர்ந்து இருக்கலாம் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். நீங்கள் கான் டபனாவிலிருப்பீர்கள் நான் ''

''நீ பால்மாக்கில் இணைந்து...பிறகு எங்காவது ஒரு எல்லைப் புற கிபுட் சுக்குச் செல்வாய்.''

''ஆமாம் அதுதான் நான் நினைத்தது.''

''இங்கு நான் பல விஷயங்களை விரும்ப பழகியுள்ளேன். ஆனால் இது என் நாடுமல்ல. இங்கிருப்பவர்கள் என் மக்களுமல்ல.''

''நான் சுயநலமியாக இருந்துவிட்டேன் என்று நினைக்கிறேன்'' என்ற கரேன் தொடர்ந்து, ''நீங்கள் வீட்டை நினைத்து ஏங்குவீர்கள் என்றோ, உங்களுக்காகவே எதையாவது சொந்தமாக வைத்திருக்க விரும்பக்கூடும் என்றோ நினைத்துப் பார்க்க மறந்து விட்டேன்'' என்றாள்.

''எனக்கு எவராவது சொல்லியிருக்கக் கூடிய மிகச் சிறந்த வார்த்தைகள் இவையாகத்தான் இருக்கும்.'' கரேன் இரண்டு கோப்பை தேநீர்களை ஊற்றிக் கொண்டே சிந்திக்க முயன்றாள்.

கிற்றிதான் தனக்கு எல்லாமே என இருந்தாள்.. ஆனால் இங்கிருந்து போவதென்றால்? ''எனக்கு எப்படிச் சொல்வதென்று தெரியவில்லைக் கிற்றி. ஆனால் எனக்கு வாசிக்கத் தெரிந்து கொண்ட நாட்களிலிலிருந்து, யூதராக இருப்பதன் பிரச்சினைகளைப் பற்றி சிந்தித்து வந்துள்ளேன். எனக்கு இன்னும் அதற்குப் பதில் கிடைக்கவில்லை... ஆனால், இங்கு எனக்குச் சொந்தமானஏதோ இருப்பதாகத் தெரிகிறது. அதை எவரும் என்னிடமிருந்துஎடுத்துவிட முடியாது. அது எதுவாக இருந்தாலும், உலகிலேயே மூக்கியமானது அதுதான். என்றைக்கோ ஒரு நாளைக்கு அதற்குரிய வார்த்தை எனக்குத் தெரிய வரலாம். ஆனால்,என்னால் பலஸ்தீனத்தை விட்டுப்போக முடியாது.''

''இங்கு என்னென்ன உனக்குக் கிடைக்கிறதோ அவையெல்லாம், தொடர்ந்து கிடைக்கும். அமெரிக்காவின் யூதர்களுக்கும், மற்றைய நாடுகளிலி ருக்கும் யூதர்களுக்கும் உனக்கிருப்பது போலவே, இந்த இடத்தின் மீது விசுவா சமான உணர்வுகள் உண்டு. இங்கிருந்து போவது அதனை மாற்றிவிடப்போவ தில்லை.

''ஆனால் அவர்கள் அஞ்ஞாத வாசம் செய்பவர்கள்.''

''அமெரிக்காவின் யூதர்கள் தங்கள் நாட்டை நேசிக்கவில்லையா?''

''ஜெர்மனியின் யூதர்களும் தங்கள் நாட்டை நேசித்தார்கள்...!!

''நிறுத்து!'' கிற்றி ஆத்திரத்துடன் கத்தினாள்.

''நாங்கள் அப்படியான ஆட்கள் அல்ல. அவர்கள் உங்களுக்குள் திணித் திருக்கும் பொய்களைக் கேட்க நான் தயாராயில்லை.'' சுத்தியவள் தன்னைத் தானே சிறிது நிதானித்துக் கொண்டாள். ''ஜெர்மனிக்கு நிகழ்ந்தது, தங்கள் நாட்டுக்கு நிகழாவண்ணம் தடுப்பதற்கு தங்கள் உயிரைக்கூடக் கொடுக்குமள விற்கு தங்கள் நாட்டை நேசிக்கும் யூதர்கள் அமெரிக்காவில் இருக்கிறார்கள்.'' அவள் மெதுவாக நடந்து கரேன் இருந்த கதிரையின் பின்னால் வந்து நின்று அவள் தோள்களைத் தொட்டாள். ''இப்படிச் செய்யப்போவது உனக்கு எவ் வளவு கஷ்டமாயிருக்கும் என்று எனக்குப் புரியாதென்றுநினைக்கிறாயா? உன்னை பாதிக்கக் கூடிய எதையும் நான் செய்வேன் என்று நம்புகிறாயா?''

கிற்றி கரேனை நேராகப் பார்த்து அவள் இருந்த கதிரையின் அருகே மண்டியிட்டாள். ''கரேன், நிம்மதி என்பதன் பொருள் என்ன என்று கூட உனக்குப் புரியாது. உன் முழு சிவிய காலத்திலும் பயம் எதுவுமின்றிச் சூரிய ஒளியில் சுதந்திரமாக நடமாட முடிந்தது கிடையாது. இங்கும் கூட அதை விடச் சிறப்பாகவா இருந்துவிடப் போகிறது? எப்போதாவது சிறப்பாக வரும் நினைக்கிறாயா? கரேன் நீ தொடர்ந்தும் ஒரு யூதப் பெண்ணாக இருப்பதை விரும்புகிறேன். உனது நாட்டை நீ தொடர்ந்தும் நேசிக்க வேண்டும் என்றும் விரும்புகிறேன். அதேபோல் உனக்குக் கிடைக்கவேண்டும் என்று நான் விரும் பும் வேறு பல விஷயங்களும் இருக்கின்றன.''

கரேன் கிற்றியிடமிருந்து பார்வையை வேறு பக்கமாகத் திருப்பிக் கொண் டாள்.

''இங்கு இருந்தால் உன் முழு வாழ்க்கையையும் கையில் ஒரு துப்பாக்கி யுடன் தான் செலவிட வேண்டிவரும். நீ அரியையும், ஜோர்தானாவையும் போல கடின சித்தமுள்ளவனாகி விடுவாய்.''

''நீங்கள் இங்கேயே தங்கி விடுவீர்கள் என்று நான் எதிர்பார்த்தது நியாய மில்லைத்தான்.''

''என்னோடு புறப்பட்டு வா கரேன். எங்கள் இருவருக்குமே வாழ்க்கையை வாழ சந்தர்ப்பம் கொடு. நாங்கள் இருவரும் ஒருவருக் கொருவர் தேவைப்படு கிறோம். நாங்கள் இதுவரை பட்ட துன்பங்கள் போதும்.''

நான் இந்த நாட்டைவிட்டுப்போகமுடியுமா என்று எனக்குப் புரியவில்லை... எனக்குத் தெரியவில்லை... சரியாகத் தெரியவில்லை. நடுங்கும் குரலில் அவள் முணுமுணுத்தாள்.

''கரேன், சுருக்குப் பாவாடை அணிந்து குதிரையேற்றம் நீ போக வேண்டும், என்று எப்படி விரும்புகிறேன் என்று உனக்குத் தெரியுமா? திறந்த போட் காரில் நீ உதைபந்தாட்டம் பார்க்கச் செல்ல வேண்டும், தொலைபேசி மணி அடிக்க நீ உனது காதலனோடு கிழுகிழுத்துப்பேச வேண்டும். ஒரு இளவய

துப்பெண்ணில் நிரம்பி இருக்கவேண்டிய அத்தனை குறும்புகளும் உன்னில் நிரம்பி வழிய வேண்டுமல்லாது, கையில் துப்பாக்கி ஒன்றைக் காவிக்கொண்டு நிரியவேண்டும் என்றோ, அல்லது ரவைகளை கடத்தவேண்டும் என்றோ நான் விரும்பவில்லை. உனக்குக் கிட்டாத அநேக விஷயங்களிருக்கின்றன. நீ இறுதி முடிவெடுக்க முன்னர், குறைந்தது, அவைகள் இருக்கின்றனவே என்றாவது நீ அறிந்து கொள்ள வேண்டும். கரேன் தயவு செய்து.. இதற்குச் சம்மதித்து விடு.''

கரேன் வெளிறிப்போயிருந்தாள். அவள் கிற்றியிடமிருந்து சிறிது விலகிப் போய் நின்றபடி, ''டொவ்வை என்ன செய்வது?''

தனது சட்டைப் பையில் இருந்து டொவ்வின் கடிதத்தை எடுத்து கரேனிடம் கொடுத்தபடி, ''இது எனது மேசை மேலிருந்தது. அது எப்படி அங்கே வந்தது என்று எனக்குத் தெரியாது.'.
நிருமதி பிறமென்ற்''

நான் சொல்ல விரும்புவதை ஆங்கிலத்தில் என்னைவிடத் திறமையாக எழுதக்கூடிய ஒருவரால் எழுதப்பட்ட கடிதம் இது. நான் எழுதியதுதான் என்று காட்ட இதை நான் பிரதி செய்துள்ளேன். இது உங்களுக்கு விசேட வழிமுறையில் சேர்ப்பிக்கப்படும். ஏன் என்று உங்களுக்கே புரியும். இந்த நாட்களில் நான் ஓயாமல் வேலை செய்கிறேன். நால் ஞண்பர்களோடிருக்கிறேன். நீண்ட காலத்துக்குப் பிறகு எனக்கு நண்பர்கள் கிடைத்திருக்கிறார்கள். அவர்கள் உண்மையிலேயே நல்ல நண்பர்கள். இப்போ நிரந்தரமான இடமொன்றில் நிலைபெற்று விட்டதால், கான் டப்னாவில் இருக்காமல் வந்துவிட்டது எவ்வளவு மகிழ்ச்சியாயிருக்கிறது என்று தெரிவிக்கவே இதை எழுதுகிறேன். அங்கு எல்லோரும், நீங்கள் கரேன் உட்பட என்னை வெறுப்புக்குள்ளாக்கினீர்கள். நான் நண்பர்களோடு அவர்கள் வேலையிலீடுபட்டிருப்பதால், கரேன் கிளமென்றை இனிச் சந்திக் மாட்டேன் என்று தெரிவிக்கவே இதனை எழுதுகின்றேன். நான் திரும்பி வந்து அவளைக் கவனிப்பேன் என்று கரேன் கிளமென்ற் எதிர்பார்த்திருப்பதை விரும்பவில்லை. அவள் ஒரு குழந்தைதான். இப்போ எனக்கு என் வயதையொத்த முதிர்ச்சியடைந்த [பெண் கிடைத்திருக்கிறாள். நாங்கள் இருவரும் ஒன்றாகத்தான் வாழ்கிறோம்- எல்லாவற்றோடும். கரேன் கிளமென்ற் இங்கு இருக்கமாட்டாள். நீங்கள் அவளோடு அமெரிக்கா போய்விடுங்கள்.

டொவ் லண்டவ்.

கிற்றி கரேனின் கையிலிருந்து அந்தக் கடிதத்தை எடுத்து சுக்கல் சுக்கலாகக் கிழித்தெறிந்தாள். ''நான் ராஜினாமா செய்வதாக டாக்ட்ர். லிப்பர் மானுக்கு அறிவித்து விடுகிறேன். இங்கு மற்ற விஷயங்களை ஒழுங்கு படுத்தியதும், அமெரிக்காவிற்குச் செல்லும் பயண ஒழுங்குகளைச் செய்வோம்.''

''சரி கிற்றி. நான் உங்களோடு வருகிறேன்,'' என்றாள் கரேன்.

அத்தியாயம் பதின்னான்கு

ஒவ்வொரு சில வாரங்களுக்கொரு முறை, மக்கபீஸ் தலைமைப்பீடம் தனது தலைமைச் செயலகத்தை மாற்றிக் கொள்வது வழக்கம். நகரத்தின் பதினான்கு நரட்களுக்கும், ஹோவன்-ஹோர்ஸ்ற்றின் படு கொலைக்கும் பிறகு சிறிது காலம் ஜெருசலேமுக்கு வெளியே போயிருப்பது நல்லதென்று பென் மோஷேயும், அக்கிவாவும் கருதினர். மக்கபீஸ் ஒரு சிறிய அமைப்பாகும். ஒரு சில நூறு முழுநேர உறுப்பினர்களையும், சில ஆயிரம் பகுதி நேரத் தொண்டர்களையும், மேலும் சில ஆயிரம் அனுதாபிகளையும் அது கொண்டிருக்கிறது. நிரந்தரமாக ஓரிடத்தில் தரித்து இருக்க முடியாத காரணத்தினால், தலைமைப்பீட ஆணையிடும் குழு ஐந்தாறு பேருக்கு மேல் கொண்டிருப்பதில்லை. தற்போதைய அதிகரித்த நெருக்கடிகளின் காரணமாக ஆணையிடும் தலைமையக குழு இரண்டாகப் பிரிந்து நான்கு பேர் மட்டும் ரெல் அவிவ் வந்தனர். அக்கிவா, பென் மோஷே, டேவிட்டின் சகோதரனான நாஹூம் பென் அமி, சிறிய கியோராவான டொவ் லண்டவ் ஆகியோர் அக்குழுவில் இருந்தனர். டொவ் தற்போது அக்கிவாவின் பிரத்தியேக விருப்புக்குரியவனாக வளர்ந்திருந்தான். தாக்குதல்களில் பெற்ற புகழாலும், அவனது போலி ஆவணங்களைத் தயாரிக்கும் திறமை அவர்களுக்கு நிறையவே பயன்பட்டதாலும் மக்கபீஸ் ஆணைபிடும் மத்திய குழுவினுள் இடம் பிடித்துக் கொண்டிருந்தான்.

பரபரப்பு நிறைந்த பழைய சந்தைக்கும், மத்திய பேருந்து நிலையத்துக்கும் அருகே, பெனே பெரெக் வீதியில் (Bene Berak) அமைத்திருந்த சக மக்கபீஸ் ஒருவனுக்குச் சொந்தமான, கட்டிடத்தின் கீழ்ப்பகுதிக்கு நான்குபேரும் மாறினார்கள். இந்த வீட்டைச் சுற்றிக் காவலுக்கு ஆட்கள் நிறுத்தப்பட்டதோடு, தப்பிச் செல்லவும் வழியொன்று நிட்டமிட்டு வைக்கப்பட்டது அது சிறந்த ஒரு இடம் போல் தோன்றியது. ஆனால் மோசமான இடமாகவும் மாறக்கூடும்.

பதினைந்து வருடங்களுக்கு மேலாக அக்கிவா சி. ஐ. டி யினரையும், பிரிட்டிஷ் தகவல் சேகரிப்பு - ஆய்வு பிரிவினரையும் ஏமாற்றமடையச் செய்து கொண்டே வந்தார். இரண்டாம் உலகப்போரின் போது வழங்கப்பட்ட பொது மன்னிப்பின் போதுதான் அக்கிவா சுதந்திரமான மனிதனாக இருந்தார். மற்றைய நேரங்களில் தேடப்படுபவராகவே இருந்து வந்தார். அவர்களை எப்போதும் தவிர்த்துக் கொண்டும், தனக்காக ஏற்பாடு செய்யப்பட்ட பல பொறி

களிலிருந்து தப்பித்துக் கொண்டும் வந்தார். அக்கிவாவின் தலைக்குப் பல ஆயிரக்கணக்கான பவுண் ஸ்ரேலிங் விலை வைக்கப்பட்டிருந்தது.

புதிய மக்கபீஸ் தலைமைச் செயலகத்தில் இருந்து அதே பெனே பெராக் வீதியில் மூன்று வீடுகள் தள்ளி இருந்த ஒரு வீட்டில் நிகழ்ந்த நடவடிக்கைகள், சி.ஐ.டி யினரின் அவதானிப்புக்குள்ளாகி இருந்தது. தற்செயலாக நிகழ்ந்த விஷயமே - ஜாபா துறைமுகத்தில் சுங்கப் பகுதியினரைக் கடந்து வெளியே வரும் பொருட்களை அந்த வீட்டில் களஞ்சியப்படுத்தும் சில கடத்தல்காரர்களை அந்த சந்தேக நபர்கள், கீழ்த்தள தலைமைச் செயலகத்துக்கு அருகே ஒழுங்காக் காவலுக்கு நிறுத்தப்பட்டிருந்த அவதானிப்பாளர்களை, வீதியின் மறுபக்கம் அவதானிப்பு நிலையொன்றிலிருந்த எச்சரிக்கையான சிஐடி யினர் கண்டுகொண்டனர். இப்படியாகக் காவலுக்கு நின்றவர்கள் தொலைதூரப் படம் பிடிக்கும் கருவியொன்றினால் (Telescodic Lens Camera) படம் பிடித்து அவர்களில் இருவர் பகிரங்கமாக அறியப்பட்ட மக்கபீஸ் உறுப்பினர்கள் என்று கண்டு கொண்டனர். கடத்தல் காரர்களை அவதானித்துக் கொண்டிருக்கையில், எதிர் பாராத விதமாக மக்கபீஸ் மறைவிட மொன்றைக் கண்டுபிடித்து விட்டனர். மக்கபீசுடனான நீண்ட கால அனுபவம் அவர்களை உடனடியாகச் செயல்படத் தூண்டியது. அவர்கள் விரைவாக ஒழுங்குகளைச் செய்து கொண்டு, முற்றும் எதிர்பாராத விதத்தில் சுற்றி வளைக்க முயன்றார்கள். ஆனால், தாங்கள் மக்கபீஸ் தலைமையகத்துள் செல்லப் போகிறோம் என்று நிச்சயமாகத் தெரிந்து கொண்டிருக்கவில்லை.

மேலே இருந்த மூன்று அறைகளொன்றில் எல் சல்வடோர் கடவுச்சீட்டு ஒன்றைப் போலியாகத் தயாரிப்பதில் சுறுசுறுப்பாக ஈடுபட்டிருந்தான் டொவ். அக்கிவா மட்டும்தான் அவனோடிருந்தான். நாஹூமும், பென் மோஷேயும், ஸெவ் ஜில்போவாவைச் சந்திக்க சென்றிருந்தார்கள். ஜில்போவா பால்மாக்கினதும், ஹகானாவினதும் இணைப்பு ஆளாகச் செயல்பட்டுக் கொண்டிருந்தான். அக்கிவா அந்த அறையினுள் வந்தார்.

சிறிய கியோரா, நீ எப்படி பென் மோஷேயை இன்று தான்போகு மிடத்துக்கு உன்னை அழைத்துப் போகாமல் செய்தாய்?'' என்றார்.

''இந்தக் கடவுச்சீட்டைச் செய்து முடிக்கவேண்டும்'' முணுமுணுத்தான் டொவ். அக்கிவா தன் கைக்கடிகாரத்தைப் பார்த்துவிட்டு, ''அவர்கள் வரும் நேரம்தான்'' சொல்லி விட்டு டொவ்வின் பின்னாலிருந்த படுக்கையொன்றில் சரிந்தார்.

''நான் ஹகானாவை நம்பமாட்டேன்.''

''அவர்களை நம்புவதைத் தவிர தற்போதைக்கு வேறு வழியில்லை'' டொவ் கடவுச்சீட்டுத் தாளைத் தூக்கி தான் அழித்த தடயங்கள், நீரடையாளங்கள் (Watermarks) முத்திரைகள் ஊடாகத் தெரிகின்றனவா என வெளிச்

சத்தில் பிடித்துப் பார்த்தான். அது ஒரு திறமையான வேலையாக இருந்தது. அந்தக் கடவுச்சீட்டின் முன்னாள் உரிமையாளருடைய பெயரும், விபரமும் இருந்த இடத்தில் அவன் கை வண்ணத்தை மிகத் திறமைசாலிகூட இலேசாகக் கண்டுபிடித்து விட முடியாது. டொவ் அந்தத் தாளுக்கு மேலாகக் குனிந்து, எல் சல்வடோர் அதிகாரியின் கையெழுத்தை கிறுக்கிவிட்டுப் பேனையைக் கீழே வைத்தான். அவன் எழுந்து, அந்தச் சிறிய அறையில் அனைதியிழந்தவன் போல் அங்குமிங்கும் நடப்பதும், தாளைத்தூக்கி மை காய்ந்துவிட்டதா என்று பார்ப்பதும், மீண்டும் கைவிரல்களைச் சுண்டியபடி மீண்டும் அங்குமிங்கும் நடப்பதிலும் ஈடுபட்டான்.

''இவ்வளவு பொறுமையற்றவனாக இராதே, சிறிய கியோரா. தலை மறைவு வாழ்க்கையில் காத்துக் கொண்டிருப்பதுதான் கொடுமையான பகுதி. எதற்காகக் காத்துக் கொண்டிருக்கிறோம் என்று அடிக்கடி நினைப்பதுண்டு.''

''நான் முன்பும் தலைமறைவாக வாழ்ந்திருக்கிறேன்'' விரைவாகச் சொன்னான் டொவ்.

''வாழ்ந்திருக்கிறாய்தான்; எழுந்திரு'' சோம்பல் முறித்தபடி தொடர்ந்தார், ''காத்துக் கொண்டு, காத்துக் கொண்டு...காத்துக் கொண்டேயிருத்தல்.. நீ மிக இளமையானவன் டொவ். நீ இப்படி ஆழமாகவும், கடுமையாகவும் யோசிக்கக்கூடாது. இரவும் பகலுமாக கொண்ட கொள்கைக்காக வேலை செய்தேன். இப்படிக் கடுமையாக வேலை செய்ததும் ஒருவகைத் தவறுதான்.''

இவ்வார்த்தைகள் அக்கிவாவிடம் இருந்துவருவது விசித்திரமாயிருக்கின்றது.''

''வயது முதிர்ந்த மனிதனுக்குப் பல விடயங்கள் புரியத் தொடங்கும். காத்துக் கொண்டிருக்கும் வாய்ப்புக்காகக் காத்துக் கொண்டிருக்கிறோம்.அவர்கள் எங்களைப் பிடித்தால் ஆகக் குறைந்தது, நாடுகடத்தல் அல்லது சிலவகாலச் சிறைத்தண்டனை கிடைக்கலாம். ஆனால், இப்போதெல்லாம், தூக்கிலிடுதலும் சித்திரவதை செய்வதுமே தற்போது வழக்கமாகிவிட்டது. அதனால், சொல்லுகிறேன். இப்படி ஆழமாக வேலையில் ஆழ்ந்து போய்விடாதே. எங்கள் சிறிய கியோராவைச் சந்திக்க எத்தனையோ இனிமையான மக்கபீஸ் யுவதிகள் ஏங்குகிறார்கள். நேரம் இருக்கும்போதே அவர்களோடு சிறிது மகிழ்ச்சியையும் அனுபவித்துவிடு.''

''எனக்கு ஆர்வமில்லை'' டொவ் உறுதியாகச் சொன்னான்.

''ஆஹா! அப்போ எங்களுக்குத் தெரியாமலே உனக்கு ஒரு காதலி இருக்கிறாள் போலிருக்கின்றது.'' என்றார் அக்கிவா கேலி தொனிக்க.

காதலி...ஒருத்தி இருந்தாள். முன்பு...ஆனால் இப்போ இல்லை.''உனக்கு ஒரு புதிய காதலியைக் கண்டுபிடிக்கும்படி பென் மோஷேக்கு சொல்லவேண்டும்.

அப்போதான் நீ வெளியே போய் சிறிது மகிழ்ச்சியாக இருக்கலாம்.'' ''எனக்கு அப்படி ஒருத்தி தேவையில்லை. நான் தலைமையகத்திலேயே இருப்பேன். நான் இருக்கவேண்டிய முக்கியமான இடம் அதுதான்.''

வயோதிபர் திரும்பவும் படுக்கையில் சரிந்து யோசித்தார். கடைசியாக அவர் சொன்னார், ''எவ்வளவு தவறாக நினைக்கிறாய் சிறிய கியோரா.மிகத் தவறான கருத்தைக் கொண்டிருக்கிறாய். காலையில் எழுந்தும், உன் வயல்களை நோக்கி, அங்கே வேலை செய்து களைத்து, இரவில் உன்னை நேசிக்கும், நீ நேசிக்கும் ஆத்மா இருக்கும் இடத்துக்கு திரும்பி வரும்படி இருக்கும் இடம் தான் நீ முக்கியமாக இருக்கவேண்டிய இடம்.

கிழவர் திரும்பவும் உணர்வு பூர்வமாகச் சிந்திக்கத் தொடங்கி விட்டார் என்று டொவ் நினைத்தான். அவன் கடதாசியைத் தொட்டுப் பார்த்துக் காய்ந்து விட்டதா? என்று பார்த்துக் கொண்டான். அவன் கடவுச்சீட்டுப் படத்தை அதற்குரிய இடத்தில் ஒட்டிவிட்டான். அக்கிவா தூக்கத்தில் ஆழ்ந்து கொண்டிருக்க டொவ் திரும்பவும் அங்கும் இங்கும் நடக்கத் தொடங்கினான். திருமதி பிறமென்றுக்கு கடிதத்தை அனுபவிய பிறகு ஆக மோசமான மனநிலையாகி விட்டது. தாக்குதல்களுக்குச் செலலவே அவன் விரும்பினான். தாக்குதலுக்குப் பின்.. இன்னொரு தாக்குதல். அதன் பின் தொடர்ந்து ஒன்றுஎனபோக வேண்டும் என்றே விரும்பினான். இப்பவோ, எப்பவோ பிரிட்டிஷார் தன்னைப் பிடித்துத் தூக்கிலிட்டதும், எல்லாமே முடிந்துவிடும என்று அவன் நினைத்தான். எதைப் பற்றியும் கவலையில்லாத நிலையிலிருந்தே அவனுக்கு வீரம் பிறக்கின்றது என்ற நிலை அவர்களுக்குத் தெரியாது. தன்னைச் சுடு என்று எதிரிரவைகளைக் கெஞ்சுவது போல் தாக்குதல்களில் பங்குபற்றினான். இந்த நாட்களில், அவனுக்கு அருகே கரேன் இலலாதால், விஷவாயுகூட கனவுகள் ஏராளமாக வந்தன. திருமதி பிறமென்ற் அவளை அமெரிக்காவுக்குக் கூட்டிச் சென்று விடுவார். அப்படி நடடபதுதான் நல்லது கரேன். இல்லாமல் வாழ்வதில் எவ்வித பொருளுமில்லாததால் குண்டடிபட்டுச் சாகும்வரை தாக்குதல்களில் பங்குபற்றுவதே மேலானது என்று அவன் கருதினான்.

அந்தக் குடியிருப்புக்கு வெளியே ஐம்பது சாதாரண உடையிலிருந்த பிரிட்டிஷ் பொலிசார் பேரூந்து நிலையமருகே மற்ற மக்களோடு கலந்தபடி நின்று கொண்டிருந்தனர். அவர்கள் விரைவாக இயங்கி, எச்சரிக்கை எதையும் கொடுக்க முடியாதபடி, அங்கிருந்த மக்காபீஸ் அவதானிப்புக் குழுவினரைக் கைது செய்து அந்தப் பிரதேசத்திலிருந்து அகற்றி விட்டனர். பிறகு அந்தக் கட்டிடம் இருந்த பகுதி முழுவதையும் சுற்றி வளைத்தனர்.

வேட்டைத் துப்பாக்கிகள், கண்ணீர்ப்புகை, கோடரிகள். பெரும் சுத்தியல்கள் தாங்கியிருந்த பதினைந்து பொலிசார் கதவருகில் கூடினர்.

கதவு தட்டப்பட்டது.

''பென் மோஷேயும், நாஹூமும் தான் போலிருக்கிறது. அவர்களை உள்ளே விடு டொவ்.''

டொவ் சங்கிலி பூட்டைத் கழற்றி ஒரு மயிரிடை வெளிக்குத் கதவைத் திறந்தான். ஒரு பெரும் சுத்தியல் கதவில் மோதி உடைத்துத் திறந்து விட்டது.
'பிரிட்டிஷ்காரர்கள்'' டொவ் அலறினான்.

அக்கிவாவும், சிறிய சியோராகவும் கைதுசெயயப்பட்டுவிட்டனர். பலஸ்தீனத்தின் ஒவ்வொரு உதட்டிலும் அந்தச் செய்தி இருந்தது. பத்து வருடங்களுக்கு மேலாக அவர்களை ஏமாற்றி வந்த அக்கிவா இப்போது அவர்கள் கையில்,

''அப்பட்டமான காட்டிக் கொடுப்பு'' என்று மக்கபீஸ் உரக்கவே குரல் கொடுத்தது இதற்கான பழியைக் ஹகானாமீது சுமத்தியது. பென்மோஷேயும் நாஹூம் பென் அமியும், ஸைவ் ஜில்போவாவுடன் அடிக்கடி கலந்துரையாடி வந்தனர். ஒன்றில், ஜில்போவா அல்லது வேறு ஹகானா உறுப்பினர்கள் அவர்களைத் தொடர்ந்து வந்து மக்கபீஸ் தலைமைச் செயலகத்தைக் கண்டு பிடித்திருக்கக் கூடும். அப்படி இல்லாவிட்டால் எப்படி இது நிகழ்ந்திருக்கக் கூடும்? இரண்டு பிரிவுகளுக்கும் இடையே திரும்பவும் முரண்பாடுகள் தோன்றத் தொடங்கின. மக்கபீஸ் பகிரங்கமாகவே குற்றம் சாட்டினார்கள். நூற்றுக்கு மேற்பட்ட வகையான வதந்திகள் உலாவின. எப்படி ஹகானா இந்தக்காட்டிக் கொடுப்பைச் செய்தது என்பது பற்றியனவாகவே இ ந்தது.

பிரிட்டிஷ் உயர் ஸ்தானிகர் விசாரணை ஒன்றை விரைவாக நிகழ்த்தி, தண்டனையை வழங்குவதன் மூலம், மக்கபீசை மேலும் தளர்ச்சி அடையப் பண்ண முயன்றார். நீண்டகாலமாகவே மக்கபீசின் ஆத்மீகப் பலமாகப் பின்னணியில் இருந்த வயோதிபர் அக்கிவாவுக்குத் தண்டனை வழங்குவதன் மூலம், பிரிட்டிஷ் அதிகாரத்தை மீண்டும் பலஸ்தீனத்தில் நிலைநிறுத்தி மக்கபீஸ் நடவடிக்கைகளைத் தடுக்கலாம் என அவர் கருதினார்.

உயர் ஸ்தானிகர் ஒரு ரகசிய விசாரணைக்கு ஏற்பாடு செய்தார். நீதிபதியின் பெயர் அவருடைய சொந்தப் பாதுகாப்புக் கருதி வெளிவிடப் படவில்லை. அக்கிவாவும், சிறிய சியோராவும் அவர்கள் கைது செய்யப்பட்டுப் பதினான்கு நாட்களுக்குள் மரண தண்டனை விதிக்கப்பட்டார்கள்.

அவர்கள் இருவரும் பலமாகக் காவல் செய்யப்பட்ட ஆக்ரே (Acre) சிறையில் வைக்கப்பட்டனர்.

தன்னுடைய அளவுக்கு மீறிய ஆர்வத்தின் காரணமாக, உயர்ஸ்தானிகர் பாரிய தவ றான்றை விட்டிருந்தார். விசாரணையின்போது பத்திரிகையாளர்

அனுமதிக்கப்படவில்லை. மக்கபீசுக்குக் குறிப்பாக அமெரிக்க ஐக்கிய நாடுகளில், செல்வாககு மிக்க நண்பர்களும், நிதியுதவி வழங்குவோரும் இருந்தார்கள். அக்கிவாவும், சிறிய கியாராவும் குற்றவாளிகளா, குற்றமற்றவர்களா என்ற நிலை, அவர்களின்விசாரணை தொடர்ந்து எழுந்த பலத்த வாதப்பிரதி வாதங்களால் அமிழ்ந்திப் போய்விட்டது. எக்ஸோடஸ் சம்பவத்தைப் போலவே. இவர்களுக்கு அளிக்கப்பட்ட தண்டனையும், வன்மமான கண்டனைக்கு உள்ளாகி உலகின் கவனத்தைபலஸ்தீனிய பிரச்சினை நோக்கி ஈர்த்தது. டொவ்வின் ஒச்விற்ஸ் சித்திரவதைத் தடைமுகாம் சரித்திரம் பரவலாகப் பிரசுரிக்கப்பட்டு ஒரு அனுதாப அலை ஒன்றை ஐரோப்பா எங்கும் தோன்றப் பண்ணியது. விசாரணைநடைபெற்றஇரகசிய விதம் எங்கும் ஆத்திரத்தை மூட்டியிருந்தது. எண்பது வயதானஅக்கிவாவுடையவும்,பதினெட்டேவயதான சிறியகியோராவுடையவும் படங்கள். ஒரு தீர்க்கதரிசியினுடையவும், அவருடைய சீடனுடையதைப் போலவும் வாசகர்களின் கற்பனையில் உலாவந்தன.

செசில் பிராட்ஷோவும் யுன்ஸ்கொப் (Unscop) புடன் பலஸ்தீனம் வந்திருந்தார். எக்ஸோடஸ் விஷயத்தில் என்ன நடந்தது என்ற அனுபவத்தின் காரணமாக, அவர் உயர் ஸ்தானிகருடன் விரைவாக ஆலோசனை கலந்துவிட்டு, உள்நாட்டமைச்சுக்கு அறிவுறுத்தல்களுக்காக விண்ணப்பித்துக் கொண்டார்.

ஐக்கிய நாடுகள் சபைக் குழுவொன்று பலஸ்தீனத்தில் இருந்த சமயத்தில் இப்படியொரு சம்பவம் நிகழ்ந்தது பிரிட்டிஷாருக்கு இக்கட்டான நிலையொன்றைத் தோற்றுவித்திருந்தது. மக்கபீஸ் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதிற்குப் பதிலாக இந்த நிகழ்ச்சி அதிகரித்த புதிய பயங்கரவாதச் செயல்களைத் தூண்டிவிடக்கூடும். பிராட்ஷோவும், உயர் ஸ்தானிகரும் பிரிட்டிஷ் நீதி எவ்வளவு கருணை வாய்ந்தது என்று உலகுக்குக் காட்ட முனைப்பாகச் செயல் பட்டனர். அக்கிவாவினதும், டொவ்வினதும் இரு அந்தங்களில் இருந்த வயதுகளை தங்கள் சாட்டாகவைத்து, கருணை மனு சமர்ப்பித்து இந்த இருவரும் தங்கள் உயிர்களைக் காப்பாற்றிக் கொள்ளலாம் என்று அறிவித்தனர். இந்த நடவடிக்கை எழுந்து கொண்டிருந்த ஆட்சேப அலைகளைத் தணித்தது.

இந்த நல்ல செய்தியைத் தெரிவிக்க, பிராட்ஷோ, உயர்ஸ்தானிகர் இருவருமே ஆக்ரே சிறைக்குச் சென்றனர். அக்கிவாவும், டொவ்வும் சிறை அதிகாரியின் காரியாலயத்துள் கொண்டு வரப்பட்டனர். அங்கே வைத்து இரு அதிகாரிகளும் தங்கள் நோக்கத்தை வெளிப்படையாகத் தெரிவித்தனர்.

''நாங்கள் நியாயமாக நடப்பவர்கள். நீங்கள் கையெழுத்திடுவதற்காக இந்த இரு விண்ணப்பங்களும் தயாரிக்கப்பட்டுள்ளன. உத்தியோகபூர்வமாக இவை இரண்டும் கருணை மனுக்களாகும். ஆனால், உண்மையில், உத்தியோக பூர்வமற்ற முறையில் சொன்னால் இவை வெறும் சம்பிரதாயத்துக்குத்தான்... சட்டத்தின் ஒரு ஓட்டை என்றும் வைத்துக் கொள்ளலாம்'' என்றார் உயர் ஸ்தானிகர்.

அவரைத் தொடர்ந்து பிராட்ஷா, ''நீங்கள் இந்தக் கருணை மனுக்களுக்குக் கையெழுத்திட்டால், நல்லதொரு மாற்று ஏற்பாட்டை எங்களால் ஒழுங்கு பண்ண முடியும். உங்களிருவரையும், நாட்டைவிட்டு வெளியேற்றுவோம். ஆபிரிக்கக் குடியேற்ற நாடுகள் ஒன்றில் குறைந்தளவு சிறைத்தண்டனையை அனுபவிப்பீர்கள். அதற்கிடையில் இங்கு விஷயங்கள் சீராகிவிடும்'' என்றார்.

நீங்கள் சொல்வது எனக்குப் புரியவில்லை'' அக்கிவா சொன்னார். தொடர்ந்து, ''நாங்கள் ஏன் ஆபிரிக்காவில் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும்? நாங்கள் எதுவித குற்றமும் செய்யவில்லை. நாங்கள் எங்களுடைய இயற்கையான சரித்திரபூர்வமான உரிமைகளுக்காகத்தான் போராடினோம். தன்னுடைய நாட்டுக்காகப் போராடும் போர் வீரன் ஒருவன் குற்றவாளியாக எப்போதிலிருந்து கணிக்கப்படுகிறான்? நாங்கள் யுத்தக்குற்றவாளிகள் எங்களுக்குத் தண்டனை வழங்க உங்களுக்கு அதிகாரமில்லை, எங்களுடையது ஒரு ஆக்கிரமிக்கப்பட்ட நாடு'' என்றார்.

உயர் ஸ்தானிகருக்கு வியர்த்து வழிந்தது.

கிழவன் பிடிவாதமாயிருக்கப் போகிறான். அவர் முன்பும், மக்கபீஸ் தீவிரவாதிகள் இந்தக் கருத்தை மனப்பாடமாகச் சொல்வதைக் கேட்டிருக்கிறார். ''அக்கிவா இங்கே பார். இது அரசியல் கருத்தல்ல விவாதம் செய்ய. இது உன் உயிரோடு சம்பந்தப்பட்ட விஷயம். நீர் இந்தக் கருணை மனுவில் கையெழுத்திட வேண்டும், அல்லது தண்டனையை நிறைவேற்றியே தீருவோம்.''

அவர்களுடைய மனத்தாக்கம் முழுதாக முகத்தில் தெரிய நின்று கொண்டிருந்த அந்த இரு மனிதர்களையும், அக்கிவா நிமிர்ந்து பார்த்தார். அக்கிவாவுக்கு ஒன்று மட்டும் புரிந்தது. ஒன்றில் இவர்கள் இதனால் ஏதேனும் பயனடையப் பார்க்கிறார்கள், அல்லது விட்ட பிழையைச் சரிக்கட்டப் பார்க்கிறார்கள்.

''ஏய் பையா, உன்னைத்தான்'' பிராட்ஷா டொவ்வை அழைத்தார். ''நீ தூக்கில் தொங்க விரும்பவில்லை அல்லவா? நீ முதலில் கையெழுத்துப் போடு பிறகு அக்கிவா போடுவார்.''

''பிராட்ஷா அந்த ஆவணங்களை மேசைக்குக் குறுக்காக டொவ் அருகே தள்ளிவிட்டுத் தன் பேனையை எடுத்தார். டொவ் அந்த ஆவணங்களைச் சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்து விட்டு, அவற்றின் மேல் காறித் துப்பினான்.

ஏமாற்றமடைந்து அரைப் பயத்துடன் நின்று கொண்டிருந்த அந்த இரு ஆங்கிலேயர்களைப் பார்த்தார்.

''உனது வாயே உன்னை மரணத்துக்குத் தீர்வையிடுகிறது'', வெடித்தார்.

கருணை மனுக்களை அக்கிவாவும், சிறிய கியோராவும் நிராகரித்து விட்ட செய்தி, பிரிட்டிஷாருக்கெதிரான ஆட்சேபனைகளைப் பத்திரிகைத் தலைப்புகளில்

இடம் பெற வைத்தது. முன்பு மக்கபீஸ்களில் எவ்வித அனுதாபமும் கொண்டிருக்காத ஆரிக்கணக்கானவர்களை, இந்த நடவடிக்கையானது கவர்ந்திழுத்தது. ஒரிரவிலேயே யூதர்களின் எதிர்ப்பின் சின்னமாக அந்தக் கிழவரும் பையனும் மாறினார்கள்.

மக்கபீஸ்களை மடக்குவதற்குப் பதிலாகப் பிரிட்டிஷார் இரு தியாகிகளை உருவாக்கும் வழியில் சென்று கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு வேறு வழியில்லாமல் தூக்கில் போடுவதற்கு, அன்றிலிருந்து பத்தாம் நாளில், நாள் குறித்தார்கள்.

ஒவ்வொரு நாளும் பலஸ்தீனத்தில் பதற்றம் அதிகரித்துக் கொண்டிருந்தது. ஹகானாவினதும், மக்கபீஸ்களினதும் தாக்குதல் சம்பவங்கள் நின்று போயிருந்தன. ஆனால், தாங்கள் ஒரு வெடிமருந்து நிரப்பிய பீப்பாயின் மேல் உட்கார்ந்திருப்பது போல் நாடு முழுவதும் உணர்ந்தது.

தெற்கில், ஹைபாவை இணைக்கும் அரைவட்டக் குடாவொன்றின் வட முனையில் முழு அராபிய நகரமான ஆக்ரே இருந்தது. சிலுவையுத்தகால சிதைவுகளின் மேல் கட்டப்பட்ட ஒரு பயங்கர இடம்தான் ஆக்ரே சிறைச்சாலை. நகரின் வடபகுதியில் தொடங்கி, ஒரு கடற்கரைச் சுவர் அருகோடு நகரின் தென் பகுதி வரை நீண்டிருந்தது. கசாப்புக்கடைக்காரன் என அறியப்பட்ட அஹமட் எல் ஜாசார் அதை ஒரு துருக்கி சாம்ராஜ்யக் கோட்டையாக மாற்றியிருந்தான். நெப்போலியனைக்கூட அது சமாளித்தது. குட்டைச்சுவர்கள், நிலத்தடி அறைகள், சுரங்கவழிகள், கோபுரங்கள், உலர்ந்து போன நீர்நிலைகள், முற்றங்கள் அகலமான சுவர்கள் கொண்ட ஒரு கலவையாகக் காட்சி அளித்தது. சாம்ராஜ்யத்தின் குற்றவியல் சரித்திரத்திலேயே அதிக பயமூட்டும் சிறையாக பிரிட்டிஷார் அதனை மாற்றி வைத்திருந்தார்கள்.

டொவ்வும், அக்கிவாவும் சிறையின் வடக்குப் பகுதியில் இருந்த சின்னஞ் சிறிய அறைகளில், வைக்கப்பட்டார்கள். இவற்றினுடைய சுவர், கூரை, நிலம் எல்லாமே கல்லால் ஆனவை. எட்டடிக்கு ஆறடி அளவில் அறைகள் அமைந்திருந்தன. வெளிச்சுவர் பதினாறடி அகலமானது. வெளிச்சமோ, மலசலகூடமோ இருக்கவில்லை. பூஞ்சணம் பிடித்த மணமொன்று அவ்வறைகளில் எப்போதும் இருந்து கொண்டிருந்தது. கதவுகள் ஒவ்வொன்றும் நல்ல இரும்பில் செய்யப்பட்டிருந்ததோடு உள்ளே பார்ப்பதற்கான சிறு துளைகள் அமைக்கப்பட்டு அவற்றுக்கு மூடிகளும் வெளிப்பக்கத்தில் இருந்தன. பின்பக்கச் சுவரில், இரு அங்குல அகலத்தில் பன்னிரெண்டு அங்குல உயரத்துக்குச் சுவரில் குடையப்பட்டிருந்த துவாரம் தான் அந்த அறையில் இருந்த வேறு திறந்த இடங்களாகும். இவற்றின் மூலம், சிறிதளவு வெளிச்சம் உள்ளே வந்து கொண்டிருந்தது. அதனூடாக, சில மரங்களின் உச்சிகளையும், நெப்போலியனின் குன்றின் வளைவையும் டொவ்வால் காணக்கூடியதாக இருந்தது. அந்த இடம்தான் இந்தியாவைக் கைப்பற்றும் முயற்சியினால், நெப்போலியனால் முன்னேற முடிந்த அதிகபட்ச தூரத்தைக் குறிக்கும் இடமாகும்.

அக்கிவா மிகவும் சிரமப்பட்டுப் போனான். கூரையிலிருந்தும், சுவர்களிலிருந்தும் கொட்டிக் கொண்டிருந்த நீரால் உள்ளே ஏற்பட்டிருந்த குளிர்ச்சி அவருடைய வயது முதிர்ந்த மூட்டுகளினுள் சென்று மிகுந்த வேதனையை உருவாக்கியது.

ஒவ்வொரு நாளும் இரண்டு மூன்று முறைகள் பிரிட்டிஷ் அதிகாரிகள் வந்து தூக்கில் போடுவதைத் தவிர்க்கும் வகையில் ஏதாவது ஒரு மாற்று ஒழுங்குக்குச் சம்மதிக்கும்படி கேட்டுக் கொள்வார்கள். டொவ் அவர்களைப் பொருட்படுத்தவே இல்லை. அக்கிவாவோ வேதாகம மேற்கோள்கள் அவர்கள் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கும்படி பேசி அனுப்பி விடுவார்.

தூக்கிலிடுவதற்கு ஆறு நாட்களிலிருக்கும் போது, அக்கிவாவும், டொவ்வும் தூக்கிலிடும் அறைகளின் அருகே அமைந்திருந்த மரண தண்டனை கைதிகளின் பகுதிக்கு மாற்றப்பட்டார்கள். சிறையின் வேறு பகுதியில் வழமையான பாணியிலான கம்பியிட்ட கதவுகளோடு இந்த அறைகள் அமைந்திருந்தன. தூக்கிலிடும் அறைகளோ நான்கு கொங்கிறீட் சுவர்களையும், கீழே ஒரு ஆழமான குழியையும், கயிற்றைத் தொங்கவிடும் உருக்கு குறுக்கு மரத்தின் கீழ், ஒரு பொறிக் கதவையும் கொண்டிருந்தன. ஒரு மனிதனுடைய எடையைக் கொண்ட மண் மூட்டைகள் பரிசோதனையில் பாவிக்கப்படும். காவலர்கள் அதற்குரிய கைப்பிடியை இழுக்க மண்மூட்டை பொறிக்கதவினூடாக தட்டெனக் கீழே விழும்.

டொவ்வும் அக்கிவாவும், தூக்கிலிடும்போது பாரம்பரியமாக ஆங்கிலேயரால் பாவிக்கப்பட்ட ஊதா நிற நீளக் கால்சட்டைகளும், மேல் சட்டைகளும் அணிவிக்கப்பட்டார்கள்.

அத்தியாயம் பதினைந்து

அதிகாலை ஒரு மணியிருக்கும். புரூஸ் சுதர்லாண்ட் தன் நூலக அறையில் ஒரு புத்தகத்தின் தூங்கிக் கொண்டிருந்தார் கதவில் தட்டும் ஒலி கேட்டுத் துடித்தெழுந்தார். அவருடை பணியாளன், கரேன் கிளமென்றை அறையின் உள்ளே அழைத்து வந்தான்.

சுதர்லாண்ட் கண்களைக் கசக்கிக் கொண்டார்.

''இந்த இரவு வேளையில் நீ இங்கு என்ன செய்கிறாய்?'' கரேன் அவருக்கு முன் நடுங்கியபடி நின்று கொண்டிருந்தாள்.

''நீ இங்கு வந்தது கிற்றிக்குத் தெரியுமா?''; இல்லையெனக் கரேன். தலையை அசைத்தாள். அவளை ஒரு இருக்கைக்கு அழைத்துச் சென்றார் கரேன் வெளிறிப்போய் பதட்டமாயிருந்தாள்.

''நீ ஏதாவது சாப்பிட்டாயா கரேன்?''

' எனக்குப் பசிக்கவில்லை'' என்றாள் அவள்.

''இவளுக்கு சாண்ட்விச்சும் பாலும் கொண்டு வா,'' என்று தனது பணியாளனுக்கு உத்தரவிட்டு விட்டு கரேனைப் பார்த்து, ''இதற்கெல்லாம் என்ன அர்த்தம்?'' என்று கேட்டார்

''எனக்கு டொவ் லண்டவ்வைப் பார்க்கவேண்டும். இதற்கு உதவக்கூடிய எனக்குத் தெரிந்தவர் நீங்கள் ஒருவர்தான்.,!

சுதர்லாண்ட் விரைவாக ஒரு பெருமூச்சை விட்டுவிட்டு கைகளைப் பின்னுக்குக் கட்டியபடியே அறையில் அங்கும் இங்கும் நடந்தார்.

''இந்த விடயத்தில் உனக்கு நான் உதவக்கூடுமாயினும், உன்னை அதுமேலும் பாதிக்கத்தான் செய்யும், இன்னும் சில வாரங்களில் கிற்றியும் நீயும் பலஸ்தினத்தை விட்டுப் போய்விடப் போகிறீர்கள். அவனை மறந்து விட ஏன் செய்யுங்கள் முயற்சிக்கக் கூடாது மகளே?''

''தயவுசெய்து உதவுங்கள்...'' அவள் கெஞ்சினாள். ''அவனை மறந்து விடக்கூடாது என்பதற்கான எல்லாக் காரணங்களும் எனக்குத் தெரியும். அவன் கைது செய்யப்பட்ட நாளிலிருந்து நான் வேறெதையும் பற்றிச் சிந்திக்கவில்லை.

இன்னொருமுறை அவனைக் காணவேண்டும். தயவு செய்து எனக்கு உதவி ஜெனரல் சுதர்லாண்ட்... தயவுசெய்து.''

''என்னால் செய்ய முடிந்ததைச் செய்கிறேன். முதலில் கிற்றியைத் தொலைபேசியில் அழைத்து நீ இங்கிருப்பதைத் தெரிவிக்கிறேன். இதுவரைக்கும் அவள் அரைவாசி குழம்பிப் போயிருப்பாள். அரபு இடங்களுக்கூடாக இந்த நேரத்தில் வந்தது போல் வந்திருக்கவே கூடாது.''

அடுத்தநாள் காலையில் ஜெருசலேமுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டார். உயர் ஸ்தானிகர் உடனடியாக அனுமதி வழங்கினார். அக்கிஷரவையும், டொவ்வையும் மனதை மாற்றும்படி செய்விக்க பிரிட்டிஷார் இன்னும் முயன்று கொண்டிருந்ததால். கிடைக்கும் எந்தத் துரும்பைப் பற்றிக் கொள்ளத் தயாராக இருந்தார்கள். டொவ்வின் பிடிவாதம் என்ற கவசத்தை கரேனின் சந்திப்பு உடைத்துவிடலாம் என எதிர்பார்த்தார்கள். விஷயங்கள் விரைவாக ஒழுங்கு பண்ணப்பட்டன. கிற்றி. கான் டப்னாவை விட்டுப் புறப்பட்டு வர ஷாபெட்டில் வைத்து அவளை சுதர்லாண்ட் ஏற்றிக் கொள்ள மூவருமாக கரையோரமாக இருந்த நஹாரியாவுக்கு வாகனத்தில் சென்றனர். அங்கிருந்த காவல் துறை நிலையத்தில் இருந்து அவர்களைக் காவலுடன் ஆக்ரே சிறைச்சாலைக்கு அதிகாரியின் காரியாலயத்துக்குக் கூட்டிச் சென்றனர்.

ஆக்ரேக்கு வரும் வழியெல்லாம் கரேன் பித்துப்பிடித்தவள் போலிருந்தாள். சிறையினுள்ளோ எல்லாம் அசாதாரணமாகத் தோன்றின.

சிறையதிகாரி உள்ளே வந்தார்.

''எல்லாம் சரி வா பெண்ணே போகலாம்.''

நான் உன்னுடன் வருகிறேன்''என்றாள் கிற்றி.

''நான் அவனைத் தனியாகச் சந்திக்க விரும்புகிறேன்'' உறுதியாகச் சொன்னாள் கரேன்.

சிறையதிகாரியின் காரியலயத்துக்கு வெளியே ஆயுதந் தாங்கிய காவலர்கள் இருவர் கரேனுக்காகக் காத்திருந்தனர்.

பல இரும்புக் கதவுகளூடாக அவளை அழைத்துச் சென்று, கம்பிகளிட்ட ஜன்னல்களுடன் கூடிய முற்றம் ஒன்றுக்கு வந்து சேர்ந்தனர். தன்னைவிகாரமாக நோக்கிக் கொண்டிருந்த சிறைக் கைதிகளின் பார்வைகளைக் காணக்கூடியதாக இருந்தது. கேலிக்குரலில் அவளை அழைக்கும் குரல்கள் சிலவும்,எதிரொலித்தன. அவள் நேராகப் பார்த்தபடி நடந்து சென்றாள். ஒடுங்கியபடிகளால் ஏறி, மரணதண்டனைக் கைதிகள் பிரிவுக்கு வந்தனர். ஒரு முட்கம்பி வேலியிடப்பட்டிருந்த இயந்திரத்துப்பாக்கி நிலையூடாகச் சென்று, ஒரு வாசலை அடைந்தனர். அங்கே பயனைற் கத்திபூட்டிய றைபிள்களுடன் இரு சிப்பாய்கள் காவலில் நின்றிருந்தனர்.

அவள் ஒரு சிறிய அறையினுள் அழைத்துச் செல்லப்பட்டாள். அவளின் பின்னால் கதவு சாத்தப்பட்டு ஒரு வீரன் அந்த இடத்தில் காவலுக்கு நின்றான். அவன் சில அங்குலங்கள் அகலமும், சில அங்குலங்கள் உயரமும் கொண்ட சிறிய துவாரம் ஒன்றைச் சுவரில் திறந்துவிட்டு விட்டு, ''இதற்குள்ளால் அவனோடு பேசுங்கள்'' என்றான்.

அவள் தலையை அசைத்துவிட்டுத் துவாரத்தினூடாக நோக்கினாள். அந்தச் சுவரின் மறுபக்கத்தில் இருந்த இரு அறைகளையும் அவளால் காணக் கூடியதாக இருந்தது. அக்கிவாவை ஒரு அறையிலும், டொவ்வை மற்ற அறையிலும் அவள் கண்டாள். டொவ் தன் ஊதா நிறஉடையை அணிந்தபடி, கூரையைப் பார்த்தபடி மல்லாக்காகப் படுத்துக்கிடந்தான். ஒரு காவலன் அந்த அறையினுள் நுழைந்து அவன் அறையின் பூட்டைத் திறப்பதைக் கண்டாள்.

''எழுந்திரு லன்டவ். உன்னைப் பார்க்க யாரோ வந்திருக்கிறார்கள்.'' என்றான் அக்காவலன்.

டொவ் நிலத்திலிருந்து ஒரு புத்தகத்தைஎடுத்து வாசிக்கத் தொடங்கினான்.

''உன்னைப் பார்வையிட யாரோ வந்திருக்கிறார்கள்'' டொவ் புத்தகத்தின் பக்கத்தைப் புரட்டினான்.

,,உன்னைப் பார்க்க யாரோ வந்திருக்கிறார்கள் என்று சொன்னேன்.''

''உங்களுடைய நல்லெண்ண தூதுவர்கள் எவரும் எனக்குத் தேவையில்லை. அவர்களைப் போகச் சொல்லி நான் சொல்லியதாகக் கூறிவிடு.''

இது எங்களுடையவர்கள் எவருமில்லை. உங்களில் ஒரு ஆள்தான். அதுவும் ஒரு யுவதி லன்டவ்.''

டொவ்வுடைய கைகள் புத்தகத்தை இறுகப் பிடிக்க இதயமோ பலமாகத் துடிக்கத் தொடங்கியது.

''நான் வேலையாயிருக்கிறேன் என்று அவளுக்குச் சொல்லிவிடு'' காவலன் தோளை அசைத்து விட்டு சுவர்த்துவாரமருகே வந்து அவன்யாரையும் பார்க்க விரும்பவில்லை என்று கூறினான்,

டொவ், கரேன் இரைந்து அழைத்தாள். ''டொவ்'' அவளுடைய குரல் மரணக்கைதிகள் அறையில் எதிரொலித்தது. ''டொவ் நான் கரேன் வந்திருக்கிறேன்.

அக்கிவா, படபடப்பாக டொவ்வின் அறையைப் பார்த்தான். அவனோ பல்லைக் கடித்துக் கொண்டு இன்னொரு பக்கத்தைத் திருப்பினான்.

''டொவ்! டொவ்! டொவ்!''

அக்கிவா கத்தினார். அவளோடு பேசு, பையா! என்னுடைய சகோதரன் எனக்கு அளித்துள்ள இந்த மௌனத் தண்டனையோடு உன்கல்லறைக்குப் போ காதே.''

டொவ், புத்தகத்தைக் கீழே வைத்துவிட்டு, படுக்கையிலிருந்து உருண்டு எழுந்தான். தனது அறைக்கதவைத் திறக்கும்படி காவலனுக்குச் சைகை காட்டினான். அந்தத் துவாரத்துக்கு நடந்து சென்றான். அதற்கூடாகப் பார்த்தான். அவளது முகத்தை மட்டும் பார்க்கக் கூடியதாக இருந்தது. கரேன் அவனது உணர்ச்சியற்ற நீல, கோபம் மின்னிக் கொண்டிருந்த கண்களை நேராக நோக்கினான்.

''எனக்கு எந்த விதமான தந்திரங்களும் வேண்டாம்.'' அவன் காரணமாகச் சொன்னான். தொடர்ந்து, ''இங்கே வந்து மன்றாடும்படி உன்னை அவர்கள் அனுப்பியிருந்தால் அப்படியே திரும்பிப் போய்விடு. இந்தக் கேடு கெட்டவர்களிடமிருந்து கருணையைக் கோர என்னால் முடியாது.''

''இப்படி என்னோடு கதைக்காதே டொவ்.''

''உன்னை இவர்கள்தான் அனுப்பியிருக்கிறார்கள் என்று எனக்குத் தெரியும்.''

என்னை இங்கு வரும்படி ஒருவரும் சொல்லவில்லை என்று சத்தியம் செய்வேன்.

''அப்படியானால் ஏன் இங்கு வந்தாய்?''

''இன்னொரு முறை உன்னைக் காண விரும்பினேன்.'' டொவ் தன் பற்களை இறுகக் கடித்து கொண்டு தன் சுய கட்டுப்பாட்டை நிலை நிறுத்திக் கொண்டான். இவள் ஏன் இங்கு வந்தாள்? அவளது கன்னங்களை வருடும் ஆசையில் உயிர் போய்விடும் போலிருந்தது.

''எப்படியிருக்கிறாய்?''

''நன்றாக மிக நன்றாக இருக்கிறேன்.'' நீண்ட மௌனம் நிலவியது.

''டொவ், நீ கிற்றிக்கு எழுதியவையை உண்மையாகத்தான் எழுதினாயா? அல்லது அதை ஏதோ காரணத்துக்காக .....''

''உண்மையாகத்தான் எழுதினேன்.''

''அதை நான் அறிய விரும்பினேன்.''

''இப்போ அறிந்து கொண்டாய்தானே?''

''ஆமாம். தெரிந்து கொண்டேன் ..... டொவ் நான் விரைவில் எரெற்ஸ் இஸ்ரேலை விட்டுப் போகப் போகிறேன். நான் அமெரிக்காவுக்குப் போகிறேன்.''

டொவ் தோள்களைக் குலுக்கினான்.

''நான் வந்திருக்கக் கூடாதென நினைக்கிறேன். உனக்குக் கரைச்சல் தந்ததற்காக மன்னித்து விடு.''

''பரவாயில்லை. சிறிது ஆறுதலைத் தரத்தானே வந்தாய். நான் என்னுடைய காதலியைக் காண விரும்புகிறேன். ஆனால் அவள் ஒரு மக்கபீஸ் ஆக இருப்பதால் இங்கு வரமுடியாது. அவள் என்னுடைய வயதையொத்தவள் புரிகிறதா?''

''புரிகிறது.''

எப்படியென்றாலும் நீ ஒரு அருமையான குழந்தை கரேன் நீ . அமெரிக் காவுக்குப் போய் இங்கு நடந்தவைகளை மறந்து வாழ் உனக்கு நல்லதிஷ்டம் உண்டாகட்டும்.''

''நான் போகலாம் என்று நினைக்கிறேன்'' முணுமுணுத்தாள், கரேன்.

அவள் எழுந்து நின்றாள். டொவ்வுடைய முகத்தில் தெரிந்த உணர்ச்சி களில் மாற்றம் இருக்கவில்லை

''கரேன்!''

அவள் விரைவாகத் திரும்பினாள்.

''நாங்கள் நல்ல நண்பர்கள் என்பதைக் காட்ட இறுதியாக கைகுலுக்கிப் பிரியலாமா... காவலன் அனுமதித்தால் ..''

கரேன் தன் கையைத் துவாரத்தினூடாக நீட்ட டொவ், அதைத் தன் இரு கைகளுக்குமிடையில் இறுகப் பிடித்தபடி, முன்நெற்றியைச் சுவரில் சாய்த்து, கண்களை மூடிக்கொண்டான்.

கரேன் அவன் கைகளைப் பிடித்து துவாரத்துக்குள்ளால் தனது பக்கத் துக்கு இழுத்துதெடுத்தாள்.

''வேண்டாம் .. வேண்டாம்'' அவன் உரக்கக் கத்தினாலும், எதிர்க்கத் தைரியம் வரவில்லை. அவள் அவனது கரங்களை முத்தமிட்டு விட்டு, தன் கன் னத்தோடும், உதடுகளோடும் அழுத்திப் பிடித்தாள். அவனால் அவள் கன்னத் தில் ஓடிக் கொண்டிருந்த கண்ணீரை உணரமுடிந்தது.

அவள் போய்விட்டாள்.

அவனுடைய அறைக்கதவு அவனுக்குப் பின்னால் ''கிளிங்''என்ற ஓசை யுடன் மூடிக் கொண்டது.

டொவ், தன்படுக்கையில் சரிந்து விழுந்தான். தன் முழு சீவிய காலத்திலும் கண்ணீர் விட்டு அழுததாக அவனுக்கு ஞாபகம் இருக்கவில்லை. ஆனால், இப் போது எதுவுமே அவன் கண்ணீரைத் தடுக்க முடியவில்லை. தான் அழுவதை அக்கிவாவோ, காவலாளியோ காணமுடியாதபடி கதவுக்கு முதுகைத் திருப்பிக் கொண்டான். அவன் இதயத்திலிருந்து கண்ணீர் பெருகிவர மெதுவாக அழுதான்.

யுன்ஸ்கொப், பலஸ்தினம் எங்கும் பார்வையிட்டு தேவையான விசார ணைகளை மேற்கொள்ளச் சென்றபோது அவர்களோடு கூட யேசுவ், ஆலோச கராக, பராக் பென் கானானும் பயணம் செய்தார். யேசுவ் பெருமையுடன் தங்கள் நில மீட்புத் திட்டங்கள், வீடற்றவர்களுக்கான புனர்வாழ்வுத் திட்டங் கள், கிபுட்சுகளின் வளர்ச்சி, தாங்கள் நிர்மாணித்த தொழிற்சாலைகள், நகரங்கள் ஆகியவற்றைக் காட்டியது. யுன்ஸ்கொப் அங்கத்தினர்கள் யூத அரபு சமூகங்களி டையே தெரிந்த வேறுபாட்டை உணர்ந்து கொண்டார்கள். சுற்றிப் பார்வை யிட்ட பிறகு சம்பிரதாயபூர்வமாக தங்கள் தரப்பு வாதங்களை முன்வைக்க இரு பிரிவினருக்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

பென் கூரியன், வெயிஸ்மான், பராக் பென் கானான், மற்றும் வேறு பல யேசுவ் தலைவர்களும் யூத தரப்பு நியாயங்களில் உள்ள நெறியான, நீதியான தன்மைகளை மிகத் திறமையாக முன்வைத்து வாதிட்டனர்.

அரபுப் பக்கத்திலோ எல் ஹுசெயினி குடும்பத்தால் தலைமை தாங்கப் பட்ட அரபு உயர் மட்டக்குழு, ஐக்கிய நாடுகள் சபைக்கெதிராக கசப்பான ஆர்ப்பாட்டங்களைத் தூண்டிவிட்டது. மிக உரமான வயிறுகளையே வாந்தி யெடுக்கப் பண்ணும், அழுக்கான புராதன தொழிற்சாலைகள் இருந்த பல நக ரங்களுள் செல்ல குழுவினரை அனுமதிக்கவில்லை. விசாரணைகள் தொடங்கிய போது, அரபுக்கள் உத்தியோக பூர்வமாக அதனைப் பகிஷ்கரித்தனர்.

பலஸ்தினத்தில் நடுநிலை பாதையொன்று இருக்க முடியாது என்ற கருத்து யுன்ஸ்கொப் குழுவினருக்கு உறுதியாயிற்று. திட்டமான நீதியின்படி யூதர்கள் சார்பாகத்தான் முடிவு செய்யப்பட வேண்டும். ஆனால், அரபுக்களின் பயமுறுத் தல்களும் கணக்கிலெடுக்கப்பட வேண்டியிருந்தது.

நீண்டகாலமாகவே யூதர்கள் விட்டுக் கொடுப்புகளுக்கும், பிரிவினைக்கும் தயாராகவே இருந்தார்கள் ஆனால், பேல் ஐப்போன்ற யூத சேரி நிலமொன்று சிருஷ்டிக்கப்படுவது பற்றிப் பயந்திருந்தார்கள்.

சுற்றிப் பார்வையிடுவதும், விசாரணைகளும் முடிவடைந்ததும், யுன்ஸ் கொப் குழுவினர் தங்கள் விசாரணைப் பெறுபேறுகளை ஆய்வு செய்து கொள்ள ஜெனிவாவுக்கு போவதற்கு ஆயத்தம் செய்து கொண்ட அதேவேளை ஒரு உப குழுவொன்று ஐரோப்பாவின் இடம்பெயர்ந்த மக்களின் முகாம்களைப் பார்வை யிடச் சென்றது. இந்த முகாம்களில் இன்னும் இரண்டரை. லட்சம் அளவிலான யூதர்கள் செய்வதறியாது திகைத்துக் கொண்டிருந்தனர். இதன்பிறகு தங்கள் சிபார்சுகளை ஐக்கிய நாடுகளின் பொதுச் சபைக்கு சமர்ப்பிப்பர். பராக் பென்

கானான் மீண்டும் ஒரு முறை, ஆலோசகர் என்ற கோதாவில் தொடர்ந்து செயல் படக் கிடைத்த அழைப்பை ஏற்றுக் கொண்டார்.

அவர் ஜெனீவா செல்வதற்கு சில நாட்களுக்கு முன் சாராவோடு சில நாட்களைக் கழிப்பதற்காக யாட் எல் வந்திருந்தார். அவர் இப்படிக் கிளம்பிப் போவது அடிக்கடி நிகழ்ந்தாலும், சாராவால் இந்தப் பிரிவுகளுக்குப் பழகிப் போய்விட முடியவில்லை. அரியும், ஜோர்தானாவும் பிரிந்திருப்பது கூட அவளுக்குக் கஷ்டமாக இருந்தது.

அரியும், டேவிட் பென் அமியும், ஹாலேக்கான பால்மாக் தலைமையகம் அமைந்திருந்த எயின் ஹிபட்சில் தங்கியிருந்தார்கள். அவர்களும் யாட் எல் வந்தார்கள். ஜோர்தானாவும் பிரியாவிடை இரவுணவு ஒன்றில் கலந்து கொள்ள கான் டப்னாவில் இருந்து வந்திருந்தாள்.

முழு சாயந்தரமும் பராக் பென் கானான் ஏதோ ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கியிருந்தார். யுன்ஸ்கொப்பைப் பற்றி அல்லது போகப்போகும் பயணம் அல்லது நிகழ்கால அரசியல் பற்றி அதிகம் கதைக்கவில்லை. ஒரு குதூகலமற்ற சந்திப்பாகவே அது இருந்தது.

இரவுணவு முடிந்ததும் ஜோர்தானா, ''திருமதி பிறுமென்ற் பலஸ்தீனத்தை விட்டுப் போகப் போவது உங்களுக்குத் தெரியுமா?'' என்றாள்.

''இல்லை, நான் கேள்விப்படவில்லை'' என்றான் அரி ஆச்சரியத்துடன். ''போகத்தான் போகிறாள் டாக்டர் விப்பர்மானுக்கு அறிவித்தல் கொடுத்துவிட்டாள். கிளமென்ற் யுவதியையும் கூட்டிச்செல்கிறாள். பிரச்சினை கிளம்பும் அறிகுறி தெரிந்ததும் ஓடுவாள் என்று எனக்குத் தெரியும்'' என்றாள் ஜோர்தானா.

''அவள் ஏன் போகக்கூடாது. அவள் ஒரு அமெரிக்கப் பெண், அவள் பலஸ்தினம் வந்ததே அந்தப் பெண்பிள்ளைக்காகத்தான்'' அரி சொன்னான்.

''அவள் எங்களுக்கு உபயோகமாக இருக்கவில்லை'' ஜோர்தானா வெடித்தாள்.

''அப்படிச் சொல்வது சரியில்லை'' என்றான் டேவிட்.

''எப்போதும் அவள் பக்கத்தையே சாராதே டேவிட்.''

''அவள் ஒரு அருமையான பெண்மணி'' சொன்ன சாரா பென் கானான் தொடர்ந்து, ''நான் அவளை மிகவும் விரும்புகிறேன். இவ்வழியாகப் போகும் போதெல்லாம் என்னைச் சந்திக்க வருவாள். அந்தக்குழந்தைகளுக்கு எவ்வளவோ நன்மைகள் செய்திருக்கிறாள். அவர்கள் அவளை மிகவும் நேசிக்கிறார்கள்.

''அவள் போய்விடுவதுதான் நல்லது.'' என்றாள் ஜோர்தானா, பிடிவாதமாக ''அவள் அந்தப் பிள்ளையையும் கூட்டிப் போவதுதான் வெட்கத்துக்குரியது.''

ஆனால் அந்தப் பிள்ளையை கெடுத்து வைத்திருக்கும் வித்தில் அவள்தான் ஒரு யூதபபெண் என்றே இனி நினைக்கமாடடாள'' எனறாள.

''அரிக்கு மனவருத்தம் வர நீ ஏன் கதைக்கவேண்டும்'' கோபமாகக் கேட்ட சாரா பென் கானான், தொடர்ந்து ''அவளுக்கான அவன் உணர்வுகள் எப்படியானவை என்று உனக்குத தெரியும்தாமன. அதைவிடவும் அநதப் பெண்ணும் அருமையான குணமுடையவள்', என்றாள்.

''அவளில்லாவிட்டால்தான் அரிக்கு நல்லது என்றாள்'' ஜோர்தானா.

''ஒரு மனிதனுடைய மன்தைப்பற்றித் தீர்மானிக்க நீ யார்? பராக் கேட்டார்.

டேவிட் ஜோர்தானாவின் ைகயை எடுத்துப் பிடித்தபடி ''குதிரைச்சவாரி செய்வோம் என எனக்கு வாக்களித்திருக்கிறாய்'' என்றான்.

'நீயும் அவளுடைய பக்கம்தானே டேவிட்.',

''நான் கிற்றி பிறமென்றை விரும்புகிறேன். வா நாங்கள் குதிரைச் சவாரி போகலாம்.''

ஜோர்தானா கோபத்துடன் எழுந்து வெளியே ஒடினாள்.

''அவர்கள் போகட்டும் விடு சாரா'' சொன்ன பராக் தொடர்ந்து, ''டேவிட் அவளை அமைதிப்படுத்தி விடுவான். எங்கள் மகள் திருமதி.கிற்றி பிறமென்றில் ொறாமை கொண்டிருக்கிறாள்.அதுவும், இயற்கைதான். என்றைக் காவது எங்கள் யுவதிகள் பெண்களாக இருப்பதில் கவனம் செலுத்த வேண்டும்'' என்றார்.

பராக் தன் தேநீரை ரசித்துக் கொண்டிருந்தார். சாரா அவரது இருக் கைக்குப் பின்னால் போய் நின்று தனது கன்னத்தை அவரது அடர்ந்த சிவந்த கேசக்கற்றைகள் மேல் பதித்தாள். ''பராக் நீ இப்படியே தொடர்ந்து டோய்க் கொண்டிருக்க முடியாது. நீங்கள் மனம் விட்டுப் பேசவேண்டும். இல்லையேல் உங்கள் கல்லறைவரை கவலைப்பட்டுக் கொண்டிருப்பீர்கள். ''அவர் தன் மனை வியின் கரத்தைத் தட்டிக் கொடுத்து விட்டு, 'நான் போய் அரியைக் கூட்டி வருகிறேன்'' என்றார்.

''பராக் பென் கானான், அரியைக் கண்டுபிடித்தபோது அரி பழத்தோட் டத்துக்கு அருகில் நின்றபடி, கான் டப்னா இருக்கும் குன்றின்திசையை ஏறிட்டு நோக்கிக் கொண்டிருந்தான்.

''இவ்வளவு தூரத்துக்கு உன்னை அவள் கவர்ந்து விட்டாளா, மகனே?'' அரி வெறுமனே தோள்களைக் குலுக்கினான்.

''நானும் அவளை நேசிக்கிறேன். ''பராக் சொன்னார்.

''என்ன பிரயோசனம். அவள் சில்க் காலுறைகளும், வாசனைத் திரவியங்களும் நிறைந்த உலகத்திலிருந்து வந்தாள். அதற்கே திரும்பிப் போகிறாள்''

பராக், மகனின் கைகளைப் பிடித்துக் கொண்டு, இருவருமாக தங்கள் வயல்களினூடாக நடந்து, ஜோர்தான் நதி தங்கள் வயல்களைக் கடந்து செல்லும் இடத்துக்கு வந்தார்கள். டேவிட்டும், ஜோர்தானாவும் குதிரையில் பறப்பதைக் கண்டார்கள். அவளது சிரிப்போசையை அவர்களால் கேட்கமுடிந்தது.

''பார்த்தாயா? ஜோர்தானா எல்லாவற்றையும் மறந்து சிரிக்கிறாள். எயின் ஓர் பால்மாக்கில் நிலைமைகள் எப்படி?''

''எப்போதையும் போலத்தான் அப்பா. நல்ல பையன்களும் யுவதிகளும் தான். ஆனால் குறைந்தளவு ஆட்கள், குறைந்தளவு ஆயுதங்களுடன் தான் போராட வேண்டியிருக்கிறது. ஏழு இராணுவங்களுக்கெதிரான போரில் வெற்றி கொள்வோம் என்று எதிர்பார்க்க முடியாது.''

எஸ்தர் கோட்டைக்கு அருகே, லெபனானிய குன்றுகளுக்குப் பின்னால் சூரியன் மறையத் தொடங்கவும், நீர் விசிறும் கருவிகள் இயங்கத் தொடங்கின. தந்தையும் மகனும் நீண்டநேரம் தங்கள் வயல்களைப் பார்த்துக் கொண்டிருந்தனர். அவர்கள் இருவருமே தங்கள் வேலிகளைத்திருத்துவதும், வயலைஉழுவதும், மட்டுமே தங்கள் கவனத்தை ஈர்க்கக் கூடியதாக இருக்கும் ஒரு நாள் வராதா என்று தங்களுக்குள் சிந்தித்துக் கொண்டனர்.

''வா, நாங்கள் வீட்டுக்குத் திரும்புவோம். அம்மா தனியாக இருப்பார். அரி சொன்னான்.

அரி போவதற்காகத் திரும்பினான். தன் தந்தையின் கை தன் தோள்களில் படிவதை உணர்ந்து திரும்பினான். அவனுடைய தந்தையின் புகழ்பெற்ற தலை துக்கத்தில் கவிழ்ந்திருந்தது.

''நான் இரண்டு நாட்களில் ஜெனீவா போகிறேன். எப்போதுமே அனுபவிக்காத துயருடன் போகிறேன். பதினைந்து வருடங்களாக எங்கள் உணவு மேசையில் ஒருவர் காணப்படவில்லை. நான் ஒரு பெருமை கொண்ட பிடிவாதம் கொண்ட மனிதனாக இருந்துவிட்டேன். ஆனால்பெருமைக்கு விலையாகத் துயரத்தைத்தான் பெற்றிருக்கிறேன். எனக்கு இப்போ நரகத்தில் இருப்பது போலிருக்கிறது.''

''அரி என் மகனே... என் சகோதரன் அக்கிவா பிரிட்டிஷ் (தூக்குக்) கயிற்றில் தொங்குவதற்கு விட்டு விடாதே.

O

அத்தியாயம் பதினாறு

யுன்ஸ்கொப் புறப்படுவதற்கு முதல் நாளிரவில் ஜெருசலேம் கொதித்துக் கொண்டிருந்தது. அரபுப் பகுதிகளில் தூண்டிவிடும் பேச்சுக்கள் அரபுக் கும்பல்களின் கூக்குரல்களுக்கு மத்தியில் நிகழ்த்தப்பட்டன. நகரம் பல பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களாக முட்கம்பி வேலிகளால் பிரிக்கப்பட்டு ஆயுதம் தாங்கிய போர்வீரர்களால் பாதுகாக்கப்பட்டன. மக்கபீசின் தொடர்பு மனிதனான பார் இஸ்ரேலைத்தேடி அவன் இருக்கக்கூடிய இடங்களுக்கு, பகுதியிலிருந்து பகுதிக்கு அவனைத் தேடி அரி பென் கானான் அலைந்தான். பார் இஸ்ரேல் முற்றாகவே மறைந்து போய்விட்டது. போலிருந்தது. அக்கிவாவும், சிறிய கியோராவும் கைது செய்யப்பட்டதிலிருந்து மக்கபீசுக்கும், ஹகானாவுக்கும் தொடர்புகளற்றுப் போயிருந்தது. ஆயினும் அரிக்கு தகவலளிக்கக் கூடியவர்கள் இல்லாமல் போகவில்லை. எல் காட்டமன் மாவட்டத்தில் ஒரு அறையில் அவன் இருப்பதாக அறிந்து கொண்டான்.

அரி அந்த அறைக்கு நேராகப் போய், சம்பிரதாயம் எதுவும் இல்லாமலே கதவை உதைத்துத் திறந்தான். பார் இஸ்ரேல் சதுரங்கம் விளையாடிக் கொண்டிருந்தான். அவன் நிமிர்ந்து அரியைப் பார்த்துவிட்டுத் திரும்பவும் சதுரங்கப் பலகையை நோக்கித் தன் கவனத்தைச் செலுத்தத் தொடங்கினான்.

''நீ வெளியே போ'' மற்றவனுக்கு அரி கட்டளையிட்டான். அவனை வெளியே தள்ளிவிட்டுக் கதவை மூடினான். ''நான் உன்னைத் தேடிக் கொண்டிருக்கிறேன் என்று உனக்குத் தெரியுமல்லவா?''

பார் இஸ்ரேல் தோளைக் குலுக்கி விட்டு, சுருட்டொன்றைப் பற்ற வைத்துக் கொண்டு, ''நீதான் ஜெருசலேம் முழுவதும் ஐம்பது காதல் கடிதங்களைக் கொடுத்து வைத்திருந்தாயே.''

''அப்படியானால் ஏன் நீ என்னோடு தொடர்பு கொள்ளவில்லை? நான் இருபத்திநாலு மணி நேரமாக ஜெருசலேமிலிருந்தேனே?''

''சரி, நீ இப்போ திடீரென்று உள்ளே வந்து விட்டாய். உனக்கு வேண்டியது என்ன?''

''என்னைப் பென் மோஷேயிடம் கூட்டிப்போ.''

''இப்போ நாங்கள் உங்களுடன் சேர்ந்து இயங்குவதில்லை. ஹகானா கொமாண்டர்கள் எங்கள் தலைமையகத்தை அறிவது என்பது எமக்குப் பெரும் வெறுப்பையூட்டும் செயலாக இருக்கிறது.''

''நீ ஒரு ஹகானா கொமாண்டருடன் பேசிக்கொண்டிருக்கவில்லை. அக்கிவாவின் பெறாமகனான அரி பென் கானானுடன் பேசிக் கொண்டிருக்கிறாய்;''

''அரி தனிப்பட்ட ரீதியில் உன்னை நம்புகிறேன். ஆனால் கட்டளைகளை மீறமுடியாது.''

அரி, பார் இஸ்ரேலைக் கழுத்துப் பட்டிகளைப் பிடித்துக் கதிரையை விட்டுத் தூக்கியபோது, சதுரங்கக்காய்கள் நிலத்தில் சிதறியோடின. அந்தச் சிறிய கீழைத் தேயத்தானை, எடையே இல்லாத ஒரு சாக்கு மூடையைக் குலுக்குவது போல் குலுக்கினான். ''நீ என்னை பென் மோஷேயிடம் கூட்டிச் செல்ல வேண்டும், அல்லது உன் கழுத்தை முறித்து விடுவேன்.

பென்மோஷே தன் கிரேக்க கொலனியில் இருந்த தனது தலைமைச் செயலகத்தில் அமர்ந்திருந்தார். அவனுக்கு அருகில் நாஹும் பென் அமி நின்று கொண்டிருந்தான். இரண்டு பேரும் திகைப்போடிருந்த பார் இஸ்ரேலையும், அரி பென் கானானையும் கோபத்தோடு நோக்கினார்கள்.

''எங்கள் எல்லே ருக்கும் அரியைத் தெரியும் என்பதால்தான் இப்படிச் செய்தேன்.'' பரிதாபமாக முணுமுணுத்தான் பார் இஸ்ரேல்.

''நீ வெளியே போ. உன்னை நாங்கள் பிறகு கவனித்துக் கொள்கிறோம். சரி இப்போ நீ வந்து விட்டாய். இப்போ சொல் உனக்கு என்ன வேண்டும், பென் கானான்?''

அக்கிவாவுக்காகவும், பையனுக்காகவும் என்ன செய்யவிருக்கிறீர்கள் என்று அறிய விரும்புகிறேன்.''

''என்ன செய்யப் போகிறோமோ? ஒன்றுமே செய்யப் போவதில்லை. நாங்கள் என்ன செய்ய முடியும்?''

''நீ ஒரு பொய்யன்.'' அரி சொன்னான்.

''நாங்கள் என்ன செய்தாலும் அது உனக்குத் தேவையில்லாத விஷயம்.'' நாஹும் பென் அமி சிரித்தான்.

அரி தன் முஷ்டியை ஓங்கி மேசையில் குத்திய குத்தில் மேசை உடைந்து போயிற்று. ''இது எனக்குத் தேவையான விஷயம் தான். அக்கிவா என்னுடைய சிறிய தகடபன்.''

டென் மோஷேயும் தன் இறுக்கமான தன்மையை விட்டுக் கொடுக்கவில்லை, ''துரோகிகளுடன் ஒத்துழைத்துக் களைத்துப் போய் விட்டோம்.''

அரி தன்னுடைய முகம் பென் மோஷேயின் முகத்திலிருந்து சில அங்குலங் கள் தூரத்திலிருக்கும்படி குனிந்து, ''உன்னுடைய துணிவை நான் வெறுக்கிறேன், பென் மோஷே. உன்னுடைய துணிவையும் நான் வெறுக்கிறேன் நாஹும் பென் அமி. ஆனால் உங்களுடைய திட்டங்கள் தெரியும் வரை நான் இங்கிருந்து போகப் போவதில்லை.''

''நீ கேட்பது உன் மூளைக்குள்ளால் ஒரு ரவை பென் கானான்.''

நாஹும் உன் வாயை மூடு. அல்லாவிடில் உன்னைத் துண்டு துண்டாய்க் கழற்றி விடுவேன்.''

பென் மோஷே தன் கண்ணாடிகளைக் கழற்றித் துடைத்து விட்டு மீண்டும் அணிந்து கொண்டே, ''இணங்க வைக்கும் அழகிய வழி ஒன்றை நீ வைத்திருக் கிறாய். நாங்கள் ஆக்ரே ஜெயிலுக்குள் போய் அக்கிவாவையும், சிறிய சியோரா வையும், வெளியே கொண்டுவரப் போகிறோம்.''

''அப்படித்தான் நானும் நினைத்தேன். எப்போ?''

''நாளை மறுநாள்.''

''நானும் உங்களுடன் வருகிறேன்.''

நாஹும் ஆட்சேபிக்க முயன்றான். ஆனால் பென் மோஷே தன் கையை உயர்த்தி அமைதியாயிருக்கும்படி தடுத்து விட்டான்.

''இங்கு நீ வந்தது ஹகானாவுக்குத் தெரியவராது என்று நீ உறுதி கூற வேண்டும்.''

''நான் வாக்களிக்கிறேன்.''

"இவருடையது என்ன வகையான உறுதிமொழி?''

''பென் கானான் ஒருவனின் வாக்குறுதியை நான் ஏற்றுக்கொள்ளத் தயாரா யிருக்கிறேன்.''

''ஆயினும் எனக்கு இது பிடிக்கவில்லை.''

''அது சரிப்பட்டு வராது. இது எங்களுக்கு எப்படியான முக்கியத்துவம் வாய்ந்தது என்று தெரியும்தானே?'' அரி, எங்களுடைய பெரும் பலத்தை இதில் ஈடுபடுத்தப் போகிறோம். நீ ஆக்ரே சிறைக்குப் போயிருக்கிறாய் .....

அது எப்படியிருக்கும் என்று உனக்குத் தெரியும் இதை நாங்கள் செய்து முடித்தால் அது பிரிட்டிஷாரின் முதுகெலும்பை முறிப்பதற்கொப்பாகும் ''

ஆக்ரே ஒரு அரபு நகரம். அந்தச் சிறை பலஸ்தீனத்திலேயே மிகப் பலம் வாய்ந்ததாக நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது. உங்களுடைய திட்ட வரை படங்க ளைக் காட்டுங்கள்.''

பென் மோஷே மேசையைத் திறந்து ஒரு கட்டு வரைபடங்களை எடுத் தார். ஆக்ரே சிறையின் சகல பகுதிகளையும் அவை உள்ளடக்கியிருந்தன. நக ரத்தின் அமைப்பு, வெளியிலிருந்து சிறைக்குள் போகக்கூடிய வழிகள். தப்பிச் செல்லும் பாதைகள். எல்லாமே குறிக்கப்பட்டிருந்தன. அரிக்குத் தெரிந்த வரை யில் சிறையின் உட்பகுதி துல்லியமாக வரையப்பட்டிருந்தது. அது சிறையில் கைதிகளாக இருந்தவர்களால் வரையப்பட்டிருக்க வேண்டும். காவலர் நிலை, ஆயுத அறை, பிரதான தொலைத் தொடர்பு அறை ஆகியன சரியான இடத் தில் துல்லியமாகக் குறிக்கப்பட்டிருந்தன.

அரி தாக்குதல் நேர அட்டவணையைப் பரிசீலித்தான். அது மிக நிபு ணத்துவமான முறையில் தயாரிக்கப்பட்டிருந்தது. மக்கபீசால் உள்ளூரிலேயே தயாரிக்கப்பட்ட கனரக வெடிமருந்துகள், கைக்குண்டுகள், நிலக்கண்ணிவெடிகள் என்பன தாராளமாகப் பயன்படுத்தப்பட இருந்தன.

''நீ என்ன நினைக்கிறாய் அரி?''

''எல்லாம் பூரணத்துவமாய் இருக்கின்றன, ஒரு நிலைவரையில். நீங்கள் உள்ளுக்குப் போய், வெளிவரப் போவதுவரை. ஆக்ரேயில் இருந்து தப்பிச் செல்வது அது நிச்சயமாக நடக்காது'' அரி தலையை ஆட்டினான்.

''ஆகக் கிட்டிய கிபுட்சில் வசதியாக ஒளிந்து கொள்ள முடியாது.'' வெடித்தான் நாஹும் பென் அமி.

''தப்பிச் செல்லும் சாத்தியக் கூறுகள் குறைவுதான் என்பது எங்களுக்குத் தெரியும்'' பென் மோஷே ஒத்துக் கொண்டார்.

''குறைவு அல்ல. எதுவுமே இல்லை. நீங்கள் இறந்த கதாநாயகர்கள் ஆகுவதில் பெருமை கொள்பவர்கள் என்று எனக்குத் தெரியும் தானே. மேலும், நீங்கள் சிறந்த தப்பிச் செல்லும் திட்டத்தைத் தீட்டாவிட்டால் நீங்கள் அப் படித்தான் ஆகப்போகிறீர்கள்.''

''அவன் என்ன சொல்லப் போகிறான் என்று எனக்குத் தெரியும். எங் களை ஹகானாவுடனும், கிபுட்சுகளுடனும் ஒத்துழைக்கும்படி சொல்லப் போகிறான்.''

நான் சொல்லப் போவதும் அதுதான். நீங்கள் அதற்கு இணங்கா விட் டால் நிறையப் புதிய தியாகிகளை உருவாக்கப் போகிறீர்கள். பென் மோஷே நீ வீரமுள்ளவன்தான். ஆனால் பைத்தியமில்லை. இப்போதைய திட்டப்படி இரண்டு வீத வெற்றி வாய்ப்பே உள்ளது. என்னை, வேறுபூரணமான தப்பிச் செல்லும் திட்டத்தை அமைக்கவிட்டால் உங்கள் வாய்ப்பு ஐம்பதுக்கு ஐம்பது ஆகிவிடும்.''

''இவனைச் சரியாகக் கவனி. ஒரு மாதிரி வழுக்கலாகப் பேசுகிறான்.'' நாஹூ சொன்னான்.

''தொடர்ந்து சொல் அரி.''

அரி பிரதான வரைபடத்தை மேசை மேல் விரித்துப் போட்டான், ''நான் சொல்வது என்னவென்றால். நீங்கள் சிறையின் உள்ளே மேலதிகமாகப் பதினைந்து அல்லது இருபது நிமிடங்களைச் செலவழித்து அங்கிருக்கும் எல்லாக் கைதிகளையும் விடுவித்து விடுங்கள். அவர்கள் இருபது திசைகளில் பரிந்து சென்று தேடி முயற்சிக்கும் பாலஸ்டினிய படைகளைச் சிதறடித்து விடுவார்கள். இதன் மூலம் பிரிட்டனின ஆட்பலம் குறைக்கப்படும்.

பென்மோஷே ஆமெனத் தலையை அசைத்தார்.

''இப்போ எங்கள் குழுக்களும் சிறிய சிறிய குழுக்களாகப் பிரிந்து வெவ் வேறு திசைகளில் சென்று விட வேண்டும். நான் என்னோடு அக்கிவாலைக் கூட்டிச் செல்வேன். நீங்கள் பையனைக் கூடவே செல்லுங்கள.

''மேலே சொல்'' என்றான் நாஹூம் அமி. அரி பேசப் பேச அதில் நல்ல கருத்துகள் இருப்பது புரிந்தது.

''நான் போகப்போகும் வழியைச் சொல்வதானால், நான் க்பார் மசாறிக் (Kfar Masaryk) க்கு விரையப் போகிறேன். அங்கு அவர்களை ஏமாற்ற வாகனத்தை மாற்றிக கொண்டு மறைவான வீதிகளால, ஹைபாவுக்குத் தெற்கே கார்மேல் மலைக்கு மேல் போகப போகிறேன. டூஸ் கிராமமான (Dusc Village) டலியாற் எல்கார்மில் (Daliyat El Karmil) எனது நம்பக்கைக்குரிய நண்பர்கள் இருக்கிறார்கள். பிரிட்டிஷார் அங்கே தேடுவது என்பதை நினைத்துக் கூடப் பார்க்க மாட்டார்கள்.

''அது நன்றாகத்தான் இருக்கிறது, ''என்ற நாஹூம் தொடர்ந்து, ''ட்ரூஸ்கள நான் அறிந்த யூதர்கள் சிலரை விட நம்பக்கைக்குரியவர்கள்'' என்றான்.

அரி அந்த இகழ்ச்சியைப் பொருட்படுத்தவில்லை. டொவ்வைக் கூட்டிச் செல்லும் இரண்டாவது குழு கரையோரப் பாதையால நஹாரியாவென்று அங்கு பிரிந்து விடும். அந்தப் பிரதேசத்திலிருக்கும் ஐந்தாறு கிபுட்சுகளில் பாதுகாப் பாகத் தங்குவதற்கு என்னால் ஒழுங்கு செய்யமுடியும். டொவ்வை லெபனான் எல்லையில் இருக்கும் மிஸ்மார் கிபுட்சுக்கு கொண்டு செல்லும்படி சொல்ல விரும்புகிறேன். மிஸ்மாரை உருவாக்கும் போது நான் அங்கு இருந்திருக்கிறேன் அந்தப் பிரதேசம் முழுவதும் குகைகளால் நிறைந்திருக்கின்றன. இரண்டாவது உலகயுத்தத்தின் போது உன்து சகோதரன் டேவிட் என்னோடு மிஸ்மாரில் இருந்தான். வருடக் கணக்காக எமது தலைவர்கள் மறைந்துறையும் இடங்களாக

இவைகளைப் பயன்படுத்தினோம். லன்டவ் அங்கே நல்ல பாதுகாப்பாக இருப்பான்.''

பென்மோஷே ஒரு சிலையைப் போல் அமர்ந்து தங்கள் திட்டங்களைப் பார்வையிட்டார். இந்தமறைவிடங்களைவிட்டால், ஒருதற்கொலை தாக்குதலைத் தவிரவேறேதும் மிஞ்சப் போவதில்லை என்று புரிந்தது, அரியின் உதவி இருந்தால் ஒருவாய்ப்பிருக்கும். அனால் அரியின் உதவியை எந்தளவுக்கு ஏற்கலாம்?

''சரி, சரி நீ போய் தப்பும் மார்க்கங்களை ஆயத்தம் செய். உன் பெயர் பென் கானான் என்பதால் தான் இதற்கு ஒப்புக் கொள்கிறேன்.''

குறித்த நாளுக்கு நாலு நாட்கள் இருந்தன.

அக்கிவாவையும், சிறிய கியோராவையும் கயிற்றிலிருந்து நாலு நாட்களே பிரிந்திருந்தன. யுன்ஸ்கொப் லிட்டாவில் இருந்து ஜெனிவாவுக்குப் பறந்து சென்றது. பலஸ்தினம் புயலுக்கு முந்திய மரண அமைதியை உணர்ந்து கொண்டிருந்தது. அரபு ஆர்ப்பாட்டங்கள் நின்று போயின. மக்கபீஸ் தாக்குதல்கள் நின்று போயின. சாதாரண உடையில் இருந்த பிரிட்டிஷ் பொலிசாரால் நிறைந்திருந்த அப்பகுதி ஒரு ஆயுதப்படை முகாம் போல் காட்சி அளித்தது.

குறித்த நாளுக்கு மூன்று நாட்களிருந்தன.

பெரிய பிரித்தானியாவின் பிரதமரின் கடைசி நேர வேண்டுகோள் ஒன்றும் அக்கிவாவினாலும், சிறிய கியோராவினாலும் நிராகரிக்கப்பட்டது.

குறித்த நாள் வந்தது.

ஆக்ரேயில் அன்று சந்தை நாள். விடிந்ததும் கலிலியின் இருபது கிராமங்களிலிருந்து அரபுக்கள் அந்நகருக்கு வந்து குவிந்தனர். சந்தைப் பகுதி, கழுதைகள், வண்டில்கள், உற்பத்திகளால் நிறைந்து வழிந்தது. வீதிகள் போய்வருவோரால் நிறைந்தன.

கிழைத்தேய ஆபிரிக்க யூதர்களும், மக்கபீஸ்களும் அரபுக்களைப் போல் உடையணிந்து சந்தைக்கு வரும் மக்கள் கூட்டத்தோடு கலந்து மெதுவாக ஆக்ரேக்கு உள்ளே வரத் தொடங்கினார்கள். அப்படி வந்த ஒவ்வொரு ஆணும் பெண்ணும் தங்கள் நீண்ட உடைகளின் கீழே டைனமற் குச்சிகளையும், அதற்கான வயர்கள் வெடிக்க வைக்கும் பகுதி (Cap) வெடியூக்கி (Detonator) கள், கைக்குண்டுகள், சிறிய ரக ஆயுதங்கள் ஆகியவற்றை மறைத்து எடுத்து வந்தனர். இப்படியாக, உள்வந்துவிட்ட மக்கபீஸ்கள் சிறைக்கு அருகிலிருந்த கடைக்கு அருகேயும், முழுச் சந்தைக் கூட்டத்தினரிடையேயும் பரவிக் கலந்து நின்றனர்.

பதினொரு மணியாகியது. குறிக்கப்பட்ட நேரத்துக்கு இருமணித்தியாலங்கள் இருந்தன. இருநூற்றி ஐம்பது. மக்கபீஸ் ஆண்களும் ஐம்பது மக்கபீஸ் பெண்களும், அரபு உடையில் ஆக்ரேயில் பரந்திருந்தனர்.

பதினொன்றேகால்- குறித்த நேரத்துக்கு ஒன்றேமுக்கால் மணித்தியாலங் களிருந்தன. ஆக்ரே சிறையினுள் காவலர்கள் மாறினார்கள். சிறையினுள்ளே இருந்த நான்கு மக்கபீஸ் ஒத்துழைப்பாளர்கள் தயார் நிலையில்நின்றிருந்தனர்.

பதினொன்றரை - குறித்த நேரத்துக்கு ஒன்றரை மணித்தியாலங்களி ருந்தன. ஆக்ரேக்கு வெளியே நெப்போலியன் குன்றில் இன்னொரு அணி மக்க பீஸ்கள் ஒன்றுகூடத் தொடங்கினர். நிறைய, பிரிட்டிஷ் ராணுவ சிருடையில் வந்தவர்கள் சிறையருகோடிருந்த கடல்சுவர் அருகே வாகனங்களை நிறுத்தினர். இந்தப் போர்வீரர்கள் விரைவாக நான்கு போர்கள் கொண்ட குழுக்களாகிப் பிரிந்து ரோந்து செல்பவர்கள்போல் வீதியால் செல்லத் தொடங்கினார்கள். ஏராளமான வேறு போர்வீரர்களும் வீதிகளில் நிறைந்திருந்தபடியால், இப்புதிய நூறு வீரர்களை யாவரும் கண்டு கொள்ளவில்லை.

அரி பென் கானான் ஒரு உத்தியோகத்தர்கள் காரில், ஒரு பிரிட்டிஷ் இராணுவம் மேஜரின் சிருடைகளை அணிந்து ஆக்ரே நகருக்குள் வந்தான்' அவ னுடைய சாரதி, சிறைக்கு மேற்குப் புறமாக கடல் சுவர் அருகே வாகனத்தை நிறுத்தினான். அரி' கடல்சுவரின் வடக்குமுனையில் இருந்த பெரிய கொத்தளச் சுவரில் நடந்து சென்று அங்கு காணப்பட்ட பழைய துருப்பிடித்த துருக்கிப் பீரங்கி ஒன்றில் சாய்ந்தபடி நின்றான். அவன் ஒரு சிகரெட்டைப் பற்ற வைத் தபடி, தனக்குக் கீழே கடலலைகள் கடல் சுவரோடு உறவாடுவதைப் பார்த் தடடி நின்றான். நீர் மோதுவதால் வழுக்கையாகிப் போய்விட்ட கரும்பச்சை நிறக் கற்களைக் சுற்றி கடல் நீர் நுரைகள் சுழன்று கொண்டிருந்தன.

பன்னிரெண்டு ஐந்து - குறித்த நேரத்துக்கு ஐம்பத்தைந்து நிமிடங்களி ருந்தன.

ஆக்ரேயின் கடைகள் இரு மணித்தியால மதிய இடைவேளைக்காக ஒவ் வொன்றாக மூடிக் கொண்டிருந்தன. சூரியனின் வெப்பம் வரவர அதிகரித்துக் கொண்டிருந்தது. கோப்பிக் கடைகளில் அழுது வடிந்து கொண்டிருந்த கெய்ரோ வானொலியின் ஒலிகளுக்கு நடுவே, அரபுக்கள் தூங்கி வழிந்து கொண்டிருந் தனர். பிரிட்டிஷ் துருப்புக்களோ வியர்த்து வடிந்து வெப்பம் தாங்காமல் அவ திப்பட்டுக் கொண்டிருந்தனர்.

பன்னிரெண்டு பத்து - இன்னும் ஐம்பது நிமிடங்கள்.

பக்தர்களைப் பிரார்த்தனைக்கு அழைப்போன், எல் ஜாசர் பள்ளிவாச லுக்கு அருகே இருந்த வளைந்து வளைந்து உயரும் கோபுர படிக்கட்டில் ஏறிக் கொண்டிருந்தான். அமைதியை ஊடறுத்த பிரார்த்தனைக்கு அழைப்போனின் குரல் கேட்டுக் முகம்மதியர்கள் பள்ளிவாசல் வளவிலும், வெண்ணிற விதா னத்தைக் கொண்ட பிரார்த்தனை மண்டபத்திலும் திரளத் தொடங்கி, தொழு வதற்காக புனித மெக்காநகர் இருக்கும் திசையில் மண்டியிடத் தொடங்கி னார்கள்,

பன்னிரெண்டு பன்னிரெண்டு - நாற்பத்தெட்டு நிமிடங்கள் இருந்தன வெப்பம், பிரிட்டிஷ் வீரர்களிலும், அரபுக்களிலும் ஒருசட்டைத் தன்மையைத் தோற்றுவித்துக் கொண்டிருந்த நேரத்தில் மக்கபீஸ்கள் தங்கள் தங்களுக்கென ஒதுக்கப்பட்ட இடங்களை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தனர். இரண்டு மூன்று பேர் கொண்ட குழுக்களாக, எவ்வித நோக்கமுமில்லாமல் அலைந்து திரிபவர்கள் போல், சாணம் நிரம்பியிருந்த ஒடுக்கமான குறுக்கு வழிகளூடாக தங்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களை நோக்கி நகர்ந்தனர்.

குழு இலக்கம் ஒன்று, கிறீஸ்துவின் தகப்பன் என்று பொருள் கொண்ட அபு கிறிஸ்ரொஸ் கபேக்கு கிட்ட ஒன்று சேர்ந்தது. இந்தக்கபே குடாவில் அமைந்திருந்ததோடு, அங்கு கோப்பி அருந்திக் கொண்டிருந்தவர்கள் சிறு சிறு அன்பளிப்புகளுக்காக கடல் நீரில் கரணம் அடித்துக் கொண்டிருந்த அரபுச் சிறுவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தனர். அங்கிருந்து குடாவின் முழு நீளத்தையும், அதன் முடிவில் அமைந்திருந்த ஹைபாவையும் காணக்கூடியதாக இருந்தது.

இரண்டாவது பெரிய குழுவொன்று பள்ளிவாசலில் ஒன்று சேர்ந்தது. அவர்கள் பள்ளிவாசல் முற்றத்தில் தொழுதுகொண்டிருந்தவர்களின் இறுதி வரிசைகளில் மண்டியிட்டமர்ந்து அவர்களோடு தொழுகையில் பங்கு பற்றிக் கொண்டிருந்தனர்.

மூன்றாவது குழுவொன்று நூறு வருடங்களுக்கு மேலாக பிரயாணிகள் வண்டித் தொடர்கள் தரிக்குமிடமாகவும், வர்த்தகம் செய்யும் இடமாகவும் பயன்பட்டு வந்த கான் (Khan) சதுக்கத்துக்குச் சென்றனர். அவர்கள் ஒட்டகங்கள், கழுதைகள் சந்தைக்கு வந்துவிட்டு தரையில் படுத்து ஒய்வெடுத்துக் கொண்டிருந்த அரபுக்கள் ஆகியோரிடையே கலந்து விட்டனர்.

நான்காவது குழு, மீன்பிடிக் கலங்கள் அருகேயிருந்த இறங்குதுறையில் ஒன்று சேர்ந்தனர்.

ஐந்தாவது குழு, கடல் சுவரின் நிலக்கதவருகே கூடினர்.

இதே நேரத்தில் பிரிட்டிஷ் சீருடையிலிருந்த நூறு மக்கபீஸ்கள் தங்கள் நிலைகளை நோக்கி நகர்ந்தனர். அவர்கள் மிகச் சுதந்திரமாக நடமாட முடிந்தது. அவர்கள் வீட்டுக் கூரைகளின் மேல் ஏறியும், பக்கவழிகளை அடைத்தும், ஆச்ரே சிறையினுள் செல்லும், வெளியேறும் சகலவழிகளையும் கட்டுப்படுத்தக் கூடிய வகையில் நிலையெடுத்துக் கொண்டார்கள்.

ஆக்ரேக்கு வெளியேகட்சியானஒருகுழுநிலையெடுத்துக்கொண்டது. இவர்கள் எவ்வித மாறுவேடத்தையும் அணிந்திருக்கவில்லை. இவர்கள் நிலக்கண்ணிகளைப் புதைத்துவிட்டு பிரிட்டிஷ் உதவிப்படைகள் எதுவும் ஆக்ரேக்குள் புகுவதைத் தடுக்கும் நோக்கில் இயந்திரத் துப்பாக்கிகளுடன் பாதைகளில் நிலைகளை எடுத்துக் கொண்டனர்.

பன்னிரெண்டு நாற்பத்தைந்து- இன்னும் பதினைந்து நிமிடங்கள்.

தாக்குதல் பிரிவினர்- அதாவது அரபுக்களைப் போல் உடையணிந்திருந்த இருநூற்றி ஐப்பது பேரும் ஒன்று சேர்ந்த இடங்களிலிருந்து தாக்குதல்களைத் தொடங்கவிருக்கும் நிலைகளுக்கு இடம் மாறினார்கள்.

பென் மோஷேயும், பென் அமியுமே முதன் முதலில் இடக்கூக்கு வந்தார்கள். தங்கள் ஆட்கள் குறிக்கப்பட்ட இடங்களை நோக்கி நகர்வதை அவதானித்தார்கள். கூரைகளுக்கு மேல் தங்கள் வீரர்கள் குறிக்கப்பட்ட இடங்களில் இருப்பதைக் கண்டு கொண்டார்கள். சிறையை நோக்கிய அவர்களுக்கு உள் உதவியாளன் ஒருவன் எல்லாம் ஆயத்தம் என்று சமிக்ஞை கொடுத்தான்.

அரி பென் கானான் கொத்தளச் சுவரின் முடிவுக்குச் சென்று சிகரட்டைச் சுண்டியெறிந்து விட்டு, தாக்குதலிடத்தை நோக்கி விரைவாக நடந்தான். சாரதியும் காரை அவனுக்குப் பின்னால் மெதுவாகச் செலுத்தியபடி வந்தான்

தாக்குதல் தொடங்கவிருந்த இடம் நூற்றிஇருபத்தைந்து வருடம் பழமை வாய்ந்த துருக்கி பொது குளியல் மண்டபமாகிய, ஹமான் எல்பாஷா (Hamman -El -Basha) வாகும். எல்ஜாசாரால் நிர்மாணிக்கப்பட்ட இந்தக் குளியல்மண்டபம் ஆக்ரே சிறையின் தெற்குச் சுவரோடு இணைத்துக் கட்டப்பட்டிருந்தது. குளியல் மண்டப பின்புற முற்றம் சூரிய ஒளியில் படுப்பதற்காகப் பாவிக்கப்பட்டது ஒரு தனிப்படிக்கட்டுத் தொகுதி, குளியல் மண்டபக் கூரை வரை சென்றது கூரைசிறையின் சுவரைத் தொட்டுக் கொண்டிருந்தது. மக்கபீஸ்கள் சிறையின் உள்ளேயிருந்து செய்த அவதானிப்புகளால், உள்ளிருக்கும் பிரிட்டிஷாருக்கு, தங்கள் காவல் நிலைகளில் இருந்தபடியே சிறைக்கு வரும் வழிகள், அனைத்தையும், சிறையை நோக்கி நகரும் எதையும் இலகுவாகக் கண்காணிக்க முடியும். ஒரு இடத்தைத் தவிர- என்று அறிந்திருந்தார்கள். அதுதான் தெற்குச் சுவரும் அதனுடனிருந்த குளியல் மண்டபமுமாகும். அங்குதான் அவர்கள் தாக்குதலை நிகழ்த்த இருந்தார்கள்.

ஒரு மணி- குறிக்கப்பட்ட நேரம்.

ஆக்ரே நகரம் சூரிய வெப்பத்தினால் உறக்கத்தினுள் ஆழ்ந்திருந்தது. பென் மோஷே, பென் கானான் பென் அமி மூவரும் மூச்சை ஒருமுறை ஆழமாக இழுத்து விட்டுவிட்டு, தாக்குதலை ஆரம்பிப்பதற்கான சைகையைக் கொடுத்தனர். ஆக்ரே சிறைமீதான தாக்குதல் தொடங்கியது.

முன்னணியில் சென்ற ஐம்பது பேருக்கு அரி பென் கானான் தலைமை தாங்கிச் சென்றான். அவர்கள் விரைவாக குளியல் மண்டபத்துள் புகுந்து பின்புற முற்றத்தை நோக்கிச் சென்றனர். இக்குழுவினர் டைனமற் குச்சிகளைத் தங்களுடன் எடுத்துச் சென்றனர்.

ஆவி பறந்து கொண்டிருந்த குளியல் தொட்டிகளில் அமர்ந்திருந்த அரபுக்கள் பலத்த ஆச்சரியத்துடன் இவர்களைப் பார்த்தார்கள். பயங்கரம் அவர்களைப்

பற்றிக் கொள்ள, குளியல் மண்டபம் ஒரு நிமிடத்தில் குழப்பமாக ஒடிய ஈரமான அரபுக்களால் நிறைந்தது. இரண்டாவது குழுவொன்று உள்ளே வந்து அரபுக்கள் தப்பிச் சென்று அபாய அறிவிப்பு கொடுத்து விடாதபடி, அவர்களை ஆவிபறக்கும் அறைகளில் அடைத்து விட்டனர்.

வெளியே நின்றிருந்த பென் மோஷக்கு, அரி முற்றத்துக்கு வந்து சேர்ந்து விட்டதற்கும், அரபுக்கள் எல்லோரும் உள்ளே அடைக்கப்பட்டு விட்டதற்கு மான சமிக்ஞை கிடைத்தது.

மண்டபத்தின் பின்பகுதி முற்றத்திலிருந்து படிகளில் ஏறி மேலே ஓடிய அரியின் குழுவினர் சிறையின் தென்பகுதி சுவர்களோடு டைனமைற் குச்சிகளை விரைவாக இணைத்தனர். வெடிமருந்துகள், வெடிகருவிகள், கம்பிகள் முதலியன அவர்கள் ஆடைகளின் கீழிருந்து வெளியே வந்தன. இவை விரைவாகவும் திற மையாகவும் பொருத்தப்பட்டன. அவர்கள் முற்றத்தின் பாதுகாப்புக்குப் பின் வாங்கி கீழே படுத்துக் கிடந்தனர்.

செவிப்பறைகளை வெடிக்க வைப்பது போன்ற பெரும் வெடிச்சத்த மொன்று ஆக்ரேயை உலுப்பியது. கற்கள் எங்கும் வெடித்துச் சிதறின, தூசி, துகள் அடங்கி சிறை சுவரில் பெரிய துவாரமொன்று தெரிய கிட்டத்தட்ட இரு நிமிடங்களாகியது.

வெடியோசையோடு இணைந்ததாக உள்ளேயிருந்த உதவியாளர்கள் நால்வரும் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட வேலையைச் செய்தனர். முதலாமவன் ஒரு கைக்குண்டை எறிந்து தொலைபேசித் தொடர்புகளைத் தகர்த்து விட்டான். இரண்டாமவன் பிரதான மின்னிணைப்புப் பெட்டிக்குக் குண்டெறிந்து தகர்த்து மின்சாரத்தையும், அதனோடு கூட அபாய அறிவிப்பு மணித்தொகுதியையும் செயலிழக்கப்பண்ணினான். மூன்றாமவன் சிறைக்கதவுத் திறப்புகளைக் கைப் பற்றினான். நான்காமவன் உடைந்த சுவர்களூடாக உள்ளே வரும் மக்கபீஸ் களுக்கு வழிகாட்ட ஓடிவந்தான்.

அரியுடைய குழுவைச் சேர்ந்தவர்கள் சிறையினுள்ளே புகத் தொடங்கினார் கள். உள் வந்தவர்களின் அரைவாசிப்பேரின் முதல் வேலை ஆயுத அறையைக் கைப்பற்றுவதாக இருந்தது. சில விநாடிகளில் அவர்கள் எல்லோர் கைகளிலும் கனரக ஆயுதங்கள் இருந்தன. அரியின் அடுத்தபிரிவு பிரதான காவலர் வதி விடங்களைத் தாக்கி அவர்களை உதவிப்படைகளாக வெளியேறுவதைத் தடுத்து விட்டனர்.

வெளியில் இருந்த பென் மோஷே ஒவ்வொரு நிமிட இடைவெளியில், பத்து, இருபது பேர் கொண்ட குழுக்களை உள்ளே அனுப்பிக்கொண்டிருந்தான். எல்லோருக்குமே தாங்கள் தாக்க வேண்டியது எங்கே என்று துல்லியமாகத் தெரிந்திருந்தது. காவலர்கள் அவரவர் நிலைகளிலேயே சுட்டு வீழ்த்தப்பட்டார் கள். உப இயந்திரத் துப்பாக்கிகள் கனல் வீச, புராதன செல்வழிகளூடே

பாய்ந்து சென்ற மக்கபீஸ்கள் கைகுண்டுகளையும் வீசி இடையூறுகளைத் தொலைத்தனர். அவர்கள் பல இடங்களுக்கு பரந்து, இலக்குகளைக் கைப்பற்றி திறமையாகத் திட்டமிடப்பட்ட துல்லியமான முறையிலே ஆக்ரே சிறையின் உள்பகுதி முழுவதையும் சுவர் உடைந்து ஆறே நிமிடங்களில் தங்கள் கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வந்தார்கள்.

சிறைக்கு வெளியே இவர்களைப் பாதுகாக்க நிறுத்தப்பட்டிருந்தவர்கள் பிரிட்டிஷ் படையணி மேற்கொள்ளக்கூடிய எவ்வித எதிர்த்தாக்குதல்களையும் சமாளிக்கத் தயாராக நின்றனர். ஆக்ரேக்குள் ஏற்கனவே இருந்த துருப்புகளும், சாதாரண உடைபொலிசாரும் உள்ளே செல்லாதபடி கூரைகள் மேலும், பக்க வழிகளிலும் நின்றிருந்த மக்கபீஸ்கள் தடுத்து விட்டார்கள்.

இருநூறு பேர்களும் உள்ளே சென்றதும், அவர்கள் கதவுகளை உடைத் துக் கைதிகளை விடுவிக்கத் தொடங்கினார்கள். தப்பிச் செல்லும் கைதிகள், அவர்கள் யூதர்களாக, அரபுக்களாக. எப்படியிருந்தாலும் உடைந்திருக்கும் சுவ ருக்குக் கூட்டிச் செல்லப்பட்ட பின் ஆக்ரேக்கூடாக பல திசைகளிலும் தப்பிச் செல்லத் தொடங்கினார்கள்.

அரி கைப்பற்றப்பட்ட திறப்புக்களோடு ஐந்து பேரையும் கூட்டிக்கொண்டு மரணதண்டனை விதிக்கப்பட்ட கைதிகளும், தூக்கிலிடும் அறைகளும் இருந்த பகுதிக்கு விரைந்தான். கதவு திறக்கத் தொடங்கியது. மரணதண்டனை விதிக் கப்பட்டிருந்த இருவரையும் இடையறாது காவல்காத்து வந்த நான்கு போர் வீரர்களும் இரும்புக்கதவை நோக்கிச் சுடத்தொடங்கினார்கள். மற்றவர்களை அரி ஒதுங்கிக் கொள்ளச் சைகை காட்டிவிட்டு ஒரு காந்தக் கண்ணிவெடியைக் கதவில் ஒட்டிவிட்டு கீழே படுத்துக் கொண்டான். கதவுப் பிணைச்சல்களிலிருந்து பிரித்து வீசியெறியப்பட்டது. அரி வாசலருகில் சென்றவன் கைக்குண்டின் பாது காப்புக் கிளிப்பைக் கழற்றி உள்ளே வீசினான். காவலர்கள் தூக்கிலிடும் அறைக் குள் ஓடிவிட்டனர்.

அரியின் குழுவினர் வீரைவாக உள் நுழைந்து, காவலர்களை மடக்கி விட்டு சிறை அறைக்கதவுகளைத் திறக்கத் தொடங்கினர். அக்கிவாவும் டொவ் வும் சிறையிலிருந்து குளியல் மண்டபத்தின் கூரை வழியாகவும் மண்டபத்துக் கூடாகவும் வெளியே அழைத்துச் செல்லப்பட்டனர்.

டொவ் லன்டவ் ஆட்கள் நிறைந்திருந்த ட்ரக் ஒன்றினுள் இழுத்து ஏற் றப்பட்டான். பென் மோஷே அவர்களை போகச் சொல்லிச் சைகை காட்டவும் அவர்கள் நஹாரியாவின் திசையில் விரைந்து சென்றார்கள். இரண்டு நிமிடங் களின் பின் அதிகாரிகளின் கார் வந்து நிற்கவும் அரி அக்கிவாவை அதனுள் ஏற்றிவிட்டான். அவர்கள் வேறொரு திசையில் விரைந்தனர்.

பென்மோஷே மக்கபீஸ்களுக்கு இடத்தை விட்டகலும் வேலையைத் தொடங்கும் சமிக்ஞையாக ஒரு விசிலை ஊதினார். சுவரில் வெடிப்பு நிகழ்ந்து சரியாக இருபத்தொரு நிமிடங்களாகியிருந்தது.

குழப்பமடைந்திருந்த பிரிட்டிஷ் ராணுவப் பிரிவு வீரர்கள் ஆக்ரே சிறையை நோக்கிக் குவிய முயற்சித்தார்கள். அவர்கள் நிலக் கண்ணிகள், வீதித்தடைகள், குறுக்குமறுக்காக பாய்ந்த ரவைகள் முதலியவற்றால் தடுக்கப்பட்டார்கள். ஆக்ரே சிறையினுள்ளேயோ, குழம்பிப்போய் நின்ற பிரிட்டிஷ் வீரர்கள் தப்பிச் சென்ற முந்நூறு பேரையும் துரத்திப் பிடிக்க முயன்றார்கள்.

டொவ் லன்டவ் ஏற்றப்பட்டிருந்த ட்ரக், கரையோரப்பாதை வழியாக விரைத்து சென்றது. அந்த ட்ரக் ஏற்கனவே பிரிட்டிஷாரால் அவதானிக்கப் பட்டு தற்சமயம் ஒன்றுக்குப் பத்து என்ற விகிதத்திலே வாகனங்களால் துரத் தப்பட்டுக் கொண்டிருந்தது. ட்ரக் வண்டி யூத நகரான நஹாரியாவில் சென்று நின்றது. நாஹும் பென் அமி டொவ்வுடன் லெபனான் எல்லைக்கருகாமையில் இருந்த ஹா மிஸ்மார் கிபுட்சுக்கு விரைவாகச் செல்ல மிகுதியானவர்கள் விரட்டி வருபவர்களை தாமதம் செய்யும் நோக்கில் பின்புற காவல் காப்பில் (Rear Guard) ஈடுபட்டனர். இந்த மக்கபீஸ்கள், நாஹும் பென் அமி பாது காப்பான இடமொன்றுக்கு டொவ்வைக் கூட்டிச் செல்லும் வரையான நேரம் வரை பிரிட்டிஷாரை மறித்து வைத்திருந்தினர். ஆனால் அது ஒரு தற்கொலை முயற்சியாகவே முடிந்தது. இந்த முயற்சியில் ஈடுபட்ட எல்லாப் பதினேழு ஆண் களும் பெண்களும் கொல்லப்பட்டனர்.

அரியும், அக்கிவாவும் காரின் பின் இருக்கையில் இருந்தனர். சாரதியும், இன்னொரு மக்கபீசும் முன் இருக்கைகளில் இந்தனர். ஆக்ரேயிலிருந்து இவர்கள் ஒரு உட்பாதைவழியாக க்பார் மாசறிக் கிபுட்சுக்கு விரைந்தனர். நெப்போலி யனின் குன்றடியில், மக்கபீஸ்களின் பாதை தடை நிலையொன்றிலிருந்தவர்கள் இவர்களை மறித்து, பிரிட்டிஷாரின் எதிர்த்தாக்குதலை முறியடிக்க கண்ணிகள் விதைக்கப்பட்டிருந்த பிரதான பாதையை விட்டுவிலகிச் செல்லும்படி கூறினர் இந்தக் குழுவினர் ஆக்ரேக்கு ஊடுருவிச் செல்ல முயன்ற இரு பிரிட்டிஷ் கொம் பனிகளை தடுத்து நிறுத்திக் கொண்டிருந்தனர்.

அரி மிக விரைவாக முடிவொன்றை எடுத்தான். ''இந்த வயல்களுக்கூடாக பிரி டிஷ் பிரிவுகளைத் தாண்டி உன்னால் வாகனத்தைச் செலுத்த முடியுமா? சாரதியை நோக்கி அரி கேட்டான்.

''போய்ப் பார்ப்போம்.''

நடவடிக்கை நிகழ்ந்து கொண்டிருந்த பகுதியை சிறிது தூரத்தில் சுற்றி வளைத்துச் சென்ற பாதையொன்றில் வயல் வரம்புகளில் முட்டிமோதி எழும்பி விழுந்து சென்றனர். அவர்கள் அந்த இரண்டு பிரிட்டிஷ் கொம்பனிகளையும் தாண்டி பிரதான பாதைக்குத் திரும்ப ஒரு மாதிரி வந்து சேர்ந்தார்கள். பத்துப் பன்னிரெண்டு போர் வீரர்கள் பின்னால் துரத்தியபடியே கட ஆரம்பித்தார்கள் பிரதான பாதையில் மீண்டும் ஏறும் வேளையில் சிறி வந்த ரவைகளின் தாக்கத் தில் வாகனம் சிறிது தடுமாறியது. அரி அக்கிவாவைப் பிடித்துக் கீழ்தளத்தில் படுக்கவைத்தான். ரவைகள் அவர்களைச் சூழவும் சீறிசீறிச் சென்று கொண்டி ருந்தன. காரின் சக்கரங்கள் பிடிப்பில்லாததால் மேலதிக பிடிப்பைத் தேடி

கோபமாகக் சுழன்றன. அது கிடைக்காமல் போகவே அதன் சாரதி அதனைப் பின் புறமாகச் செலுத்தி மீண்டும் முன்போக முயன்றான். உப இயந்திரத் துப் பாக்கியுடன் இரு போர் வீரர்கள் கிட்டத்தட்ட அவர்கள் மேல் பாய்வது போல் வந்து விட்டார்கள். பின்பக்க ஜன்னலூடாக அரி அவர்களை நோக்கிச் சுட் டான். அவர்களில் ஒருவன் கீழே வி ழுந்தான். மற்றவன் இவர்களை நோக்கித் துப்பாக்கியை இயக்கினான் அவனுடைய துப்பாக்கியில் இருந்து சிவந்த தீ நாக்குகள் கக்கப்படுவதை அரியால்காண முடிந்தது.

அக்கிவா அலறினார். அந்தப் போர் வீரனின் துப்பாக்கி இன்னோர் முறை ரவைகளைக் கக்கியது. அரி அக்கிவாவின் மேல் விழுவும், கார் திரும்பவும் பிரதான பாதைக்கு ஏறி விரையத் தொடங்கவும் சரியாக இருந்தது.

''அங்கே பின்னுக்கு ஏதும் பிரச்சினையா?''

''நாங்கள் இரண்டு பேருமே குண்டடிபட்டு இருக்கிறோம்.'' அரி எழுந்து தனது வலதுகாலைப் பரிசீலித்தான். காலின் உள்பகுதியைத் தொட்டுப் பார்த் தான். உள்பாகம் விறைத்துப் போயிருந்தது. ரவை ஆழமாக உள் சென்றிருந் தது. இரத்தப்பெருக்கோ, வலியோ இருக்கவில்லை. ஆனால் எரிவு இருந்தது. அவன் மண்டியிட்டமர்ந்து அக்கிவாவைப் புரட்டி, அவரது இரத்தம் தோய்ந்தி ருந்த மேல் சட்டையைக் கிழித்துப் பார்த்தான். அக்கிவாவின் வயிற்றில் காய மொன்று வாயைப் பிளந்திருந்தது.

''எப்படியிருக்கிறார்?''

''மோசம்தான்.''

அக்கிவாவுக்கு உணர்வு இருந்தது. அவர் அரியைத் தனக்குத் கிட்ட இழுத் தார். ''அரி நான் பிழைப்பேனா?''

''இல்லை சித்தப்பா.''

''அப்படியானால் என்னை மறைவான ஒரு இடத்துக்கு கொண்டுபோய் விடு.. உனக்குப் புரிகிறதுதானே?''

''எனக்குப் புரிகிறது'' அரி சொன்னான்.

இந்தத் தப்பிச் செல்லும் வாகனம், இந்தக்காரை மறைத்து விட்டு வேறு ட்ரக் ஒன்றை வழங்க கிபுட்ஸ் ஆட்கள் சிலர் தயாராகக் காத்துக் கொண்டிருந்த கபார் மசாறிக்குச் சென்றது. அக்கிவாவை அவர்கள் வெளியே எடுத்தபோது, இரத்தவாறாக ஒட அறிவு மயங்கிய நிலையிலிருந்தார். அரி ஒரு கணத்தில் சிறிது சல்பாவை (Sulfa) காயத்துக்குள் ஊற்றிவிட்டு அமுக்கு பண்டேஜ் ஒன்றைக் காயத் தில் வைத்துக் கட்டினான். மற்ற இரண்டு மக்கபீஸ்களும் அரியை ஒரு பக்கத் துக்குக் கூட்டிச் சென்றார்கள்.

''நாங்கள் இன்னும் போக முயன்றால், கிழவரால் தாங்க முடியாது. அவருக்கு இங்கேயே வைத்திய சிகிச்சை அளிக்கப்பட வேண்டும்.''

''முடியாது'' அரி சொன்னான்.

''உனக்குப் பைத்தியமா ?''

''நீங்கள் இருவரும் நான் சொல்வதைக் கேளுங்கள். அவருக்கு உயிர் வாழும் வாய்ப்பு எதுவுமில்லை. அப்படி அவர் தப்பிப் பிழைத்தாலும், பிரிட்டிஷார் அவரை இங்கே தேடிக் கண்டு பிடித்து விடுவார்கள். நாங்கள் இங்கே இவரை விட்டுப் போய் இவர் இறந்து போக நேர்ந்தால் அவரது மரணச்செய்தி பலஸ்தீனம் எங்கும் பரவிவிடும். அக்கிவா தப்பவில்லை என்பது எங்களைத் தவிர வேறு யாருக்கும் தெரியக் கூடாது. பிரிட்டிஷாருக்கு எப்படியும் தெரியக் கூடாது.''

இரு மக்கபீஸ்களும் புரிந்ததற்கு அடையாளமாகத் தலையை ஆட்டினர் அவர்கள் ட்ரக்கின் முன் பகுதிக்குள் பாய்ந்து ஏறினர். அரி தன் சித்தப்பாவுடன் பின்பக்கம் ஏறிக்கொண்டான். அவனது கால் வேதனை கொடுக்கத் தொடங்கியிருந்தது.

ட்ரக் வண்டி, ஷெபாவுக்குக் கீழே தெற்குப் புக்கமாக விரையத் தொடங்கியது. கார்மேல் மலையின் அருகோடு சென்ற ஒடுக்கமான பாதையில் ஏறிச் செல்லத் தொடங்கியது. ட்ரக் வண்டி பயங்கரமான வளைவுகளை உடைய மண் பாதையில் தூசிப்படலத்தைக் கிளப்பியபடியே, அவர்களைத் தூக்கி எறிந்தபடி, இரக்கமில்லாமல் அவர்களைக் குலுக்கியடித்தபோதெல்லாம் அரி தன் உணர் விழந்திருந்த சித்தப்பாவை, தன்தொடையில் அணைத்துப் பிடித்துக் கொண்டான். கார்மேல் மலையில் உயர உயர வாகனத்தைச் செலுத்தி ட்ரூஸ்கள் மட்டும் தனிமையான நிலையில் வாழ்ந்து வந்த பிரதேசத்தினுள் பிரவேசித்தார்கள்.

அக்கிவா தன் கண்களைத் திறந்தார். அவர் கதைக்க முயன்றார். ஆனால் அவரால் முடியவில்லை. அரியை அடையாளம் கண்டு கொண்ட அவர், அரியை நோக்கிப் புன்னகைத்துவிட்டு, அவன் கைகளிலேயே துவண்டு சரிந்தார்.

ட்ரூஸ்களின் மலைக்கிராமமான டலியற் எல் காமில்லுக்கு ஒரு மைல் முன்னதாகவே ஒரு பற்றைக்குள் சென்று நின்றது அந்த வண்டி, ஹகானாவின் ட்ரூஸ் போர் வீரனான மூசா ஒரு கழுதை வண்டியுடன் அங்கே காத்திருந்தான்.

அரி ட்ரக் வண்டியிலிருந்து வெளியே தவழ்ந்து வந்தான். தன் காயம் பட்டிருந்த காலை உருவிவிட்டான். அக்கிவாவின் குருதியில் அவன் நனைந்திருந்தான். மூசா அவனை நோக்கி ஓடிவந்தான்.

''எனக்கு அவ்வளவு பிரச்சினையில்லை. அக்கிவாவை எடு அவர் இறந்து விட்டார்.''

களைத்துப்போன அக்கிவாவின் வயோதிபச் சடலம் ட்ரக்கிலிருந்து வண்டிக்குக் கொண்டு செல்லப்பட்டது.

''நீங்கள் இருவரும் மக்கபீஸ்கள். அக்கிவாவின் சாவைப் பென்மோஷே அல்லது நாஹும் தவிர்ந்த யாருக்கும் சொல்லக் கூடாது. இப்போ ட்ரக்கைக் கொண்டு சென்று துப்புரவாக்கி விடுங்கள். நான் சித்தப்பாவைப் புதைத்து விட்டு வருகிறேன்.'' ட்ரக் விரைந்து சென்று விட்டது.

அரி கழுதை வண்டியில் ஏறிக்கொண்டான். அது கிராமத்தைத் தவிர்த்து, காரிமேல் மலைமீது அதிக உச்சியிலிருந்த தெற்கு முகட்டுக்குச் சென்றது. விடியும் வேளையில் அவர்கள் ஹீப்ரூ தீர்க்கதரிசிகளில் பெரிய தீர்க்கதரிசியான எலியாஸ் (Elijah) இன் பீடத்தைக் கொண்டிருந்த ஒரு சிறிய காட்டுப் பகுதியுள் நுழைந்தனர். இந்த இடத்தில்தான், ஜெசபெல்லின் (Jezebel) பால் (Baal) குருக்கள் மாருக்கு எதிராகக் கடவுளின் பலத்தை எலியாஸ் நிரூபித்திருந்தார்.

எலியாசின் படம், ஜெஸ்ரீல் பள்ளத்தாக்கைப் பார்த்தபடி, அமைந்திருந்தது. நிலம் மறக்கப்படவில்லை என்பதற்கான நித்திய சாட்சியம் போல் கீழிருந்த பள்ளத்தாக்குத் தோற்றமளித்தது.

மூசாவும் அரியும், எலியாசின் பீடத்துக்கு அருகாமையில் ஒரு ஆழமான புதைகுழியைத் தோண்டினார்கள்.

''இந்தச் சிவப்பு உடையை அவரிலிருந்து கழற்றிவிடுகிறோம்'' அரி சொன்னான்.

பிரிட்டிஷாரின் தூக்கிலிடும் உடைகள் கழற்றப்பட்டு அக்கிவாவின் உடல் கல்லறைக்குள் உருட்டப்பட்டு மண்ணால் நிரப்பப்பட்டது. அந்த இடம் இலை, குழைகளால் மறைக்கப்பட்டது. மூசா கழுதை வண்டில் நின்ற இடத்துக்கு அரி வரும்வரை காத்திருந்தான்.

''அரி அக்கிவாவின் கல்லறையருகே நீண்டநேரம் மண்டியிட்டு அமர்ந்திருந்தான். யாக்கோவ் றேபின்ஸ்கி கோபத்தில் பிறந்து துன்பத்தில் மடிந்தான். இவ்வளவு தொகையான வருடங்களுக்குத் துன்பத்தை அனுபவித்த பிறகு இறுதியாக, அமைதி கிடைத்திருக்கிறது. வாழ்வில் அவனை ஏமாற்றி விட்ட மனஅமைதி இங்கே அவனுக்குக் கிடைக்கக்கூடும். யூதர்களின் மண்ணைப் பார்த்தபடி நித்தியத்திற்கும் இங்கே அவனால் உறங்க முடியும். என்றைக்கோ ஒரு நாள் அக்கிவா எங்கே துயில் கொண்டான் என்று முழு உலகிற்கும் தெரிய வரலாம். அந்த இடம் யூதர்களின் புனித ஆலயமாக ஆகும்.

''போய் வருகிறேன் சித்தப்பா. உங்கள் சகோதரன் உங்களை மன்னித்து விட்டார் என்று உங்களுக்குச் சொல்லக்கூட என்னால் முடியாமல் போய் விட்டது.''

எழுந்து நின்ற அரி, தள்ளாடத் தொடங்கினான், அவன் வலியில் அலறிக் கொண்டே உணர்விழந்து சரியவும் மூசா அவனருகில் ஓடிச்சென்று தாங்கிக் கொண்டான்.

o

அத்தியாயம் பதினேழு

கிற்றியும் டாக்டர் லிப்பர் மானும் சிறிதும் உற்சாகமில்லாமலே அவரது காரியாலயத்தில் ஏதோ வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

''உன்னைப் பலஸ்தீனத்திலே தங்கியிருக்கப் பண்ணக்கூடிய வார்த்தைகள் எனக்குத் தெரிந்திருந்தால் எவ்வளவு நல்லாயிருக்கும்'' டாக்டர் லிப்பர்மான் சொன்னார். ''நன்றி'' என்ற கிற்றி தொடர்ந்து, ''நான் போகவேண்டிய நேரம் இப்போ நெருங்கிவிட்டதால் ஒரு வெறுமையை உணர்ந்து கொண்டிருக்கிறேன். காரன் டப்னாவோடு இவ்வளவு பிணைப்பு ஏற்பட்டிருக்கும் என்று நான் உணர்ந்திருக்கவில்லை. இரவு முழுவதும், கண்விழித்து இந்தக் கோவைகளைப் பரிசீலித்தேன். இவர்களில் சில இளைஞர்கள் தங்களின் பின்னணியோடு ஒப்பிடும்போது குறிப்பிடத்தக்க விதத்தில் முன்னேற்றமடைந்திருக்கிறார்கள்.''

''அவர்கள் உன்னைப் பிரிந்து வருந்தப்போகிறார்கள்.''

''எனக்குத் தெரியும். நானும் அவர்களின் பிரிவில் வாடப்போகிறேன். எல்லாவற்றையும் இரண்டொரு தினங்களில் பூரணமாக்கிவிடுவேன். உங்களோடு தனிப்பட்ட முறையில் கலந்துரையாட வேண்டிய சில குழந்தைகளின் பிரச்சினைகளும் உண்டு,''

''சரி அப்படியே செய்யலாம்.''

கிற்றி போவதற்காக எழுந்து நின்றாள்.

இன்றைக்கு உணவுச்சாலைக்கு ஒரு அரை மணிநேரம் முன்னதாக வந்து விடுங்கள்.'' அப்படி எதுவும் செய்யாவிட்டால் நல்லது என நினைக்கிறேன். தற்போதைய சந்தர்ப்பம் ஒரு பிரியாவிடை விருந்துக்கு உகந்ததல்ல,''

அந்தச் சிறிய கூன் விழுந்த மனிதர் கையை உயர்த்தி அவள் சொல்லுவதை நிராகரிப்பவர் போல், ''எல்லாரும் வற்புறுத்தினார்கள். என்னால் என்ன செய்ய முடியும்?'' என்றார்.

கிற்றி கதவை நோக்கி நடந்து அதைத் திறந்தாள்.

கரேன் எப்படியிருக்கிறாள்?''

நிறையக் குழம்பிப் போயிருக்கிறாள். டொவ்வைச் சிறையில் போய்க் கண்ட நாள் முதல் அப்படித்தான். ஆக்ரே சிறையுடைப்பைக் கேள்விப்பட்ட

திலிருந்து, நேற்றிரவு முழுவதும் ஒரே பிரச்சினையாயிருந்தது. அவன் தப்பி விட்டானா, இல்லையா என்று விரைவிலேயே அறிந்து கொள்வாள். அந்தக் குழந்தை வாழ்க்கையில் போதுமான அளவு துன்பம் அனுபவித்து விட்டாள். சிறிது காலம் எடுக்கலாம்டாக்டர் லிப்பர்மான்.ஆனால், அமெரிக்காவில் அவளை மிகுந்த மகிழ்ச்சிக்குள்ளாக்கப் போகிறேன்.''

நீங்கள் எங்களை விட்டுப் போவது தவறு என்று நான் நினைக்கிறேன் என்று சொல்லக்கூடிய மனநிலை இருக்கவேண்டும் என்று விரும்புகிறேன். ஆனால் அதை என்னால் சொல்ல முடியாது.

கிற்றி அவருடைய காரியாலயத்தை விட்டு வெளியேறி உலகத்தை உலுப்பிக் கொண்டிருந்த செய்தியைப்பற்றி யோசித்துக் கொண்டே இடைவழி யால் நடந்து கொண்டிருந்தாள். மக்கபீஸ் தரப்பில், பெண்களும், - ஆண்களு மாக இருபது பேர் கொல்லப்படும், இன்னும் பதினைந்துபேர் கைது செய்யப் பட்டும் இழப்பேற்பட்டிருந்தது. இன்னும் எத்தனை பேர் காயம்பட்டுத் தலை மறைவாக இருந்து வருகிறர்கள் என்பது யாருக்கும் தெரியவில்லை. பென் மோஷேயும் கொல்லப்பட்டிருந்தார். இரு உயிர்களுக்குக் கொடுக்கப்பட்ட விலை மிகஅதிகம் போல் தோன்றினாலும் இந்த இரு உயிர்களும் மற்றவை போல்அல்ல என்பதைக் கணக்கிட்டால் அப்படித் தோனறாது. இந்தச்சிறையுடைப்பு பிரிட் டிஷாரில் எஞ்சியிருந்த மனோபலத்துக்கும், பலஸ்தீனத்தில் தொடர்ந்து இருக்கும் விருட்பத்துக்கும் விழுந்த பலத்த அடியாக இருந்தது.

கிற்றி ஜோர்தானாவின் அறைக்கதவின் முன் நின்றாள். ஜோர்தானாவை எதிர்கொள்ளும் எண்ணத்தையே வெறுத்தாள். கதவைத் தட்டினாள்.

''வாருங்கள் உள்ளே.''

கிற்றி உள்ளே வந்தாள். ஜோர்தானா தன் மேசையிலிருந்தபடி கிற்றியை வெறுப்புமிழும் கண்களால் நோக்கினாள்.

''நான் உன்னைக் கேட்கலாமா என்று நினைத்தேன். நேற்றைய தாக் குதலின்போது டொவ் லன்டவ் தப்பிச் சென்றானா என்று உனக்குத் தெரியுமா? அந்தப் பையனோடு கரேனுக்குள்ள பிணைப்பால்... அது தெரிந்தால் அவளுக்கு மிக ஆறுதலாக இருக்கும்.

''எனக்குத் தெரியாது.''

கிற்றி வெளியே போய்க் கொண்டிருந்தவள் கடைசி நிமிடத்தில் திரும்பி, ''இந்தத் தாக்குதலுக்கு அரியும் சென்றிருந்தாரா?'' என்று கேட்டாள்.

''அரி தான் செய்யப்போகும் தாக்குதல்கள் பற்றிய பட்டியல் எதுவும் எனக்குத் தருவதில்லை.''

''உனக்குத் தெரிந்திருக்கும் என்று நினைத்தேன்,''

''எனக்கு எப்படித் தெரியும் அது ஒரு மக்கபீஸ்களின் தாக்குதலல்லவா''?

''அறிய விரும்பும் விஷயங்களைப் பற்றிய தகவல்களை அறிந்துகொள்ள உங்களுக்கு வழிகளிருக்கின்றன.''

எனக்குத் தெரிந்தாலும் உங்களுக்குச் சொல்ல மாட்டேன், திருமதி. பிறமென்ற். நீங்கள் உங்கள் விமானத்தைப் பிடித்துப் பலஸ்தீனத்துக்கு வெளியே செல்வதற்குக் குறுக்கே நிற்க நான் எதையும் விடமாட்டேன் தெரிகிறதா?''

''நாங்கள் நண்பர்களாகப் பிரிந்தால். நல்லதாயிருக்கும். ஆனால் நீ எனக்கு அதற்கு ஒரு சந்தர்ப்பம் கூடக் கொடுக்கப் போவதில்லை என்று தெரிகிறது.

அவள் விரைவாகத் திரும்பிக் காரியாலயத்தை விட்டு வெளியேறி பிரதான கதவை நோக்கிச் சென்றாள், பக்கத்திலிருந்த விளையாட்டு மைதானத்தில் நடந்து கொண்டிருந்த உதைபந்தாட்டப் போட்டியில் எழும் உற்சாகப்படுத்தும் குரல்களைக் கேட்கக் கூடியதாக இருந்தது. மையப்புற்றரையில் சில சிறிய பிள்ளைகள் விளையாடிக்கொண்டிருந்தார்கள். சில பெரியவர்கள் புற்தரையில் படுத்துக் கிடந்தபடி படித்துக்கொண்டிருந்தார்கள்.

கான் டப்னாவில் பூக்கள் மலர்வது இல்லாமல் போவதேயில்லை, என்று கிற்றி நினைத்துக் கொண்டாள். அவைகளின் சுகந்தம் எப்போதும் காற்றில் கலந்திருக்கும்.

கிற்றி நிர்வாகப்பிரிவுக் கட்டிடத்தின் படிகளால் கீழே இறங்கி அகழிகளைக் கடந்து மையப் புல் தரைக்குக் குறுக்காகச் சென்றாள். அவள் டப்னாவின் சிலைக்கருகே வந்து நின்றாள். இந்தமுறை அரியின் இறந்துவிட்ட காதலியில் பொறாமை தோன்றவில்லை. டப்னா எப்போதும் ஹுலே பள்ளத்தாக்கைப் பார்த்துக் கொண்டிருப்பது போல், அவளும் ஹுலே பள்ளத்தாக்கை நோக்கினாள். திடீரென ஒரு தனிமையுணர்வு மனதை வருடத் தொடங்கியது.

''ஷலோம் கிற்றி'' சில குழந்தைகள் அவளைக் கடந்து ஓடிச் செல்லும் போதே கத்திக்கொண்டு சென்றார்கள். அவர்களில் ஒருவன் ஓடிவந்து அவளின் இடையை அணைத்துக் கொண்டான். அவள் அவனது கேசக் கற்றைகளை அளைந்துவிட்டு செல்லும்படி அனுப்பிவிட்டாள். அவள் வைத்தியசாலையை நோக்கி நடந்தபோது மிகவும் தாழ்வு மனப்பான்மையோடு இருந்தாள். கான் டப்னாவை விட்டுப்போவது, தான் நினைத்தது போல் அவ்வளவு இலகுவாக இருக்காது போலிருக்கிறது.

அவள் தனது காரியாலயத்தில் கோவைகளை ஆராய்ந்து சிலவற்றைக் கழித்து விட்டு மிகுதியை ஒழுங்காக தெரிந்து அடுக்கினாள்.

இது மிகவும் புதுமையான உணர்வாக இருக்கிறது என்று கிற்றி நினைத் தாள். சலோன்க்காவை விட்டு வெளியேறியபோது இப்படியான உணர்வு ஏற்பட்டதில்லை. கான் டப்னாவின் யூதர்களின் நம்பியாக மாற அவள் ஒருபோதும் முயற்சித்ததில்லை. இவை எல்லாம், இத்தக் கலை சிக்கட்டத்தில் ஏன் அவளை இழுத்துப் பிடிக்கப் பார்க்கின்றன?

ஒரு சிறந்த முயற்சியின் முடிவாக இருப்பதால் இப்படி நிகழ்கிறதோ? அரி பென் கானானின் நினைவுட்டிவு அவளைப் பாதிக்கப்போகிறது. நீண்டகாலத்துக்கு அவனைப் பற்றி நினைத்துக் கொண்டிருக்கப் போகிறாள். சிலவேளை வாழ்நாள் முழுவதுமே நினைத்துக் கொண்டிருக்கவும் கூடும். காலம் எல்லாவற்றையும் சரிப்படுத்தி, ஒழுங்குபண்ணி விடும் என்று நம்பினாள். பின்பு கரேனுக்கு தான் பெற்றுக் கொடுக்க நினைத்த சகலவற்றையும் பெற்றுக் கொடுக்க முடியும் என்று நினைத்தாள். நல்லதொரு எதிர்காலம் காத்துக் கொண்டிருப்பதையும், இருவரும் ஒன்றாக நல்லதொரு விடுமுறை ஒன்றைக் கழிக்கக்கூடும் என்றும், கரேன் தனது நடனப்பயிற்சியைத் தொடரலாம் என்றும் நினைத்துக் கொண் டாள். அரி பென் கானானின் நினைவுகள் கால போக்கில் மங்கிப் போக லாம், பலஸ்தினம் பற்றிய நினைவுகளும் அப்படியே.

மனச்சிறிது சரியில்லாமல் இருப்பது இயற்கையே எனநினைத்துக் கொண் டாள். செய்து கொண்டிருக்கும் வேலையை விட்டுப் போகும்போதும் இடத்துக் கிடம் மாறும் போது எப்போதுமே, சிறிது மனவருத்தம் உண்டாகத்தான் செய்கிறது.

அவள் தான் கவனித்து வந்த சில பிள்ளைகளைப்பற்றிய தனதுசொந்தக் குறிப்புகளை ஆராய முற்பட்டாள். இவர்கள் குறிக்கப்பட்ட பருத்துவக் கவனிப் புக்கு மட்டும் ஆட்படுத்தப்பட வேண்டிய சடப்பொருட்களா? அல்லது தன் மீது தங்கியிருக்கும் சகலவற்றையும், இழந்த ஜீவன்களா? இவர்களை ஏற்றுக் கொள்ளவும், விரும்பியபோது கைநழுவிவிட்டுச் செல்லவும் தனக்கு உரிமையி ருக்கிறதா? அல்லது தனது சுய இச்சைகளுக்கு மேலாக இவர்களுக்கு ஆற்ற வேண்டிய கடமைகள் மேலும் இருக்கிறதா?

கிற்றி இந்த வழியில் சிந்திப்பதை விரைவாகவே நிறுத்திக் கொண்டாள். அவள் தன்னுடைய மேசையைத் திறந்து தனது கடவுச்சீட்டை எடுத்தாள். கரே னுடைய பிரிட்டிஷ் கடவுச்சீட்டு அவளுடையதற்குப் பக்கத்தில் கிடந்தது. இரண்டு பயணச்சீட்டுகளும் இருந்தன. புறப்பாடு - லிட்டா. சேருமிடம் - நியுயோர்க்.

கீழைத் தேயங்களிலிருந்து மார்க் பார்க்கர் அவர்களைச் சந்திக்க சான் பிரான்சிஸ்கோ வருவான். மார்க் என் அருமை மார்க் அவனைவிட ஒரு அர்ப் பணிப்புள்ள நண்பன் தனக்குக் கிடைப்பானா? சான் பிரான்சிஸ்கோவில் எங் காவது தான் குடியமர மார்க்உதவுவான். குடாப்பகுதிகள் கிற்றிக்கு மிகப் பிரிய மானவை. கோல்டன் கேற் பாலப்பகுதிக்கு மேலே மறின் பகுதியில் அல்லது சர்வ

கலாசாலைக்கு அருகே பேர்க்லியில் போயிருக்கலாம். அவர்கள் நாடக, நடன அரங்குகளுக்கு அருகிலும் அற்புத உலகமாக உள்ள சான் பிரான்சிஸ்கோவுக்கு அருகிலும் இருப்பார்கள்.

கிற்றி தன்னுடைய மேசை லாச்சியை மூடினாள்.

அவள் கோவைகளை எடுத்துத் திரும்பவும் அலுமாரியில் அடுக்கத் தொங்கினாள் அவள் போவது பிழையில்லை...நிச்சயமாகப் பிழையில்லை. டாக்டர் லிப்பர்மானும் அப்படித்தான் சொன்னார். இந்தப் பிள்ளைகள் மட்டில் தனக்குள்ள பொறுப்பின் அளவு என்ன? ஒரு தொழில் ரீதியான அளவுதான். கூடவும் அல்ல.. குறையவும் அல்ல.

கோலை அலுமாரியின் லாச்சிகளை மூடிவிட்டுக் கிற்றி பெருமூச்செறிந்தாள். தன்னைத்தானே தேற்றிக் கொண்டாலும், சந்தேகத்தின் சாயை அவள் மனதில் நிழலிடத் தொடங்கியது. அவள் இதைக் கரேனுக்காக மட்டும் செய்கிறாளா? அல்லது அவள்மீது சுயநலத்தின் காரணமாக கொண்டிருக்கும் அன்பினால் இபபடிச் செய்கிறாளா?

ஏதோ அரவம் கேட்டுத் திரும்பிய கிற்றி, வாயைப் பிளந்தாள். கதவடியில் ஒரு அராபயன் நின்று கொண்டிருந்தான். அவன் விசித்திரமான விதத்தில் உடை அணிந்திருந்தான. அவன் பொருந்தாத அளவுகளில் ஒரு வரிகள் அமைந்த ஐரோபபய பாணி உடையொன்றை அணிந்திருந்தான். அவன் தலையில் ஒரு சிவபபு நிற துருக்கிக் குல்லா வெள்ளைத துணியால் கட்டப்பட்டு விசித்திரமாகக் காடசியளிததது. அவனுடைய கறுத்த மீசை மிகப் பெரியதாக, மெழுகிட்டுக் கூராகக்பபடடிருந்தது.

''உங்களைப் பயமுறுத்த நினைக்கவில்லை'' என்ற அவன், ''நான் உள்ளே வரலாமா?'' எனறு கேடடான்.

''நிச்சயமாக'' என்ற கிற்றி அவன் ஆங்கிலம் பேசியதையிட்டு ஆச்சரியமடைந்தாள். அவன் பக்கத்தில் எங்கோ ஒரு கிராமத்திலிருந்து வந்திருக்க வேண்டும் என்றும், யாரோ சுகவீனமாக இருக்கிறார்கள் என்றும் அனுமானித்துக் கொண்டாள். அந்த அராபியன் உள்ளே வந்து கதவைத் தாழ்ப்பாளிட்டான்.

''திருமதி பிறமென்ற் நீங்கள் தானே?''

''ஆமாம்.''

''என் பெயர் மூசா. நான் ஒரு ட்ரூஸ் இனத்தவன். ட்ரூஸ் இனத்தாரைப் பற்றி உங்களுக்குத் தெரியும்தானே?''

ஹைபாவின் தெற்குப் பகுதியில் கார்மேல் மலைக்கிராமங்களில் வாழும் ஒரு இஸ்லாமிய மதப் பிரிவினர்தான் ட்ரூஸ்கள் என்பதையும், அவர்கள் யூதர்களுக்கு விசுவாசமானவர்கள் என்பதையும் லேசாக அறிந்து வைத்திருந்தாள்.

''நீ உன்னுடைய வீட்டிலிருந்து வெகுதூரம் வந்திருக்கிறாய் அல்லவா?''

''நான் ஒரு ஹகானா உறுப்பினர்.''

கிற்றிக்கு ஏதோ புரிந்து ''அரி ...'' என்று கேட்டுக் கொண்டே துடித் தெழுந்தாள்.

''எனது கிராமமான டலியற் எல் காமிலில் அவர் மறைந்திருக்கிறார். ஆக்ரேத் தாக்குதலுக்கு அவர் தான் தலைமை தாங்கினார். அவர் உங்களைத் தன்னிடம் வரக் கோருகிறார்.'' என்றான்.

கிற்றியினுடைய இதயம் பலமாக துடிக்கத் தொடங்கியது. ''அவர் மிக மோசமாகக் காயமடைந்திருக்கிறார். நீங்கள் வருவீர்களா?',

''வருகிறேன்''

''மருந்துகள் எதுவும் எடுத்துக் கொள்ள வேண்டாம். நாங்கள் மிகக் கவனமாக இருக்கவேண்டும். பல பிரிட்டிஷ் வீதித்தடைச் சோதனை முகாம் கள் இருக்கின்றன. மருந்துகளைக் கண்டால் அவர்கள் சந்தேகப்படுவார்கள். ஒரு ட்ரக் நிறையப் பிள்ளைகளை ஏற்றிக்கொண்டு வருமாறு அரி சொன்னார். நாளை ஒரு ட்ரூஸ் திருமணம் நடக்க இருக்கிறது. இந்த விழாவுக்குப் பிள்ளை களை அழைத்துச் செல்வதாக பிரிட்டிஷாருக்கு கூறலாம். நான் ஒரு ட்ரக்வண்டியை கொண்டு வந்திருக்கிறேன். நீங்கள் ஒரு பதினைந்து பிள்ளைகளைப் படுக்கை விரிப்புகளை எடுத்துக் கொள்ளச் சொல்லி தயாராக்குங்கள்.''

''நாங்கள் பத்து நிமிடங்களில் தயாராகி விடுவோம்.'' என்று சொல்லி விட்டு, டாக்டர் லிப்பர் மானின் காரியாலயத்தைத் தேடி ஓட்டமாகச் சென் றாள்.

பெரும்பாலும் வடகலிலியில் ஒடுக்கமான மலைப்பாதைகள் ஊடாகவான் டப்னாவில் இருந்து மூசாவின் கிராமத்துக்குக் கிட்டத்தட்ட எண்பது மைல்கள் தூரமிருந்தது. சிதிலமடைந்திருந்த மூசாவின் ட்ரக் வண்டி மெதுவாகவே அந்தப் பாதைகளில் போய்க்கொண்டிருந்தது.

எதிர்பாராத உல்லாசப் பயணம் ஒன்று கிடைத்துவிட்ட குதூகலத்தை ட்ரக் வண்டி மலைப்பாதையில் சென்று கொண்டிருந்தபோது உரத்த குரலில் பாட்டுக்களைப் பாடிக் குழந்தைகள் கொண்டாடினார்கள். கிற்றியோடு முன் பக்க சாரதி அறையில் உட்கார்ந்திருந்த கரேனுக்கு மட்டுமே இந்தப் பயணத் தின் உண்மையான காரணம் தெரிந்திருந்தது.

கிற்றி மூசாவிடமிருந்து தகவல்களைக் கறக்க முயன்றாள். அவள் அறிய முடிந்ததெல்லாம் அரி இருபத்தினாலு மணித்தியாலங்களுக்கு முன் காலில் காயமடைந்திருக்கிறான் என்றும், வேதனையிலிருக்கிறான் என்பதும் மட்டுமே. டொவ் லன்டவ்வைப் பற்றி அவனுக்குத் தெரிந்திருக்கவில்லை. அக்கிவா மடிந்து விட்டது பற்றியும் எதுவும் பேசவில்லை.

அறிவுறுத்தல்களை மீறி கிற்றி ஒரு சிறிய முதலுதவி மருந்துப் பொதியில் சல்பா, பண்டேஜ்கள், அயடின் போன்றவற்றை எடுத்துக் கொண்டிருந்தாள். அவை இடபோ முக்கியத்துவமற்றவை போல் முன் ஆசனத்தின் முன்னுள்ள துவாரத்தில் வீசப்பட்டுக் கிடந்தது.

அவளது வாழ்விலேயே ஆழமான பயத்தை இருமுறை மட்டுமே அனுபவித்திருக்கிறாள். சான்ட்ரா சுகவீனமுற்றிருந்தபோது மூன்று பகல்களும், மூன்று இரவுகளும், சிக்காகோவின் குழந்தைகள் வைத்தியசாலையின் போலியோ சிகிச்சைப் பிரிவின் காத்திருக்கும் அறையில் இருந்த போது முதலில் பயத்தை உணர்ந்தாள். எக்ஸோடசின் உண்ணாநோன்பின் செய்திகளுக்காக டோரம் ஹோட்டலில் காத்திருந்தபோது திரும்பவும் பயத்தை அனுபவித்தாள்.

இப்போது பயம் பிடிக்க ஆரம்பித்திருந்தது. அவள் குழந்தைகள் பாடுவதை உணரவில்லை. தன்னை அமைதிப்படுத்த முயலும் கரேவின் முயற்சிகளை உணரவில்லை. அவள் பரபரப்பில் உறைந்துபோயிருந்தாள்.

அவள் கண்களை மூடிக்கொண்டாள். உதடுகள் அசைந்தன. திரும்பத் திரும்ப ஒரே வார்த்தைகளைத் தனக்குத் தானே சொல்லிக் கொண்டாள். ''இஸ்ரேலைக் காக்கும் கடவுளே! நீர் யாராக இருந்தாலும் அரியின் உயிரைக் காத்தருளும். தயவுசெய்து அரியை உயிரோடிருக்கப்பண்ணும்.''

ஒரு மணித்தியாலம் சென்றது. இரண்டு மூன்று என நீண்டது. கிற்றியுடைய பரபரப்பு அவளை ஒரு களைப்பான நிலைக்குக் கொண்டு வந்திருந்தது. அவள் தன் தலையைக் கரேலன் தோள்களில் சாய்த்துக் கொண்டே கண்களை மூடிக் கொண்டாள்.

க்பார் மசாறிக்கின் வளைவில் கடகடத்துக் கொண்டே வாகனம் ஆக்ரேயிலிருந்து அரி தப்பிச் செல்ல உபயோகித்த அதே பாதைகளில் செல்லலானது. அவர்கள் கார்மேல் மலையை நெருங்க நெருங்கப் பாதைகளில் துருப்புகளின் நடமாட்டம் அதிகமானது.

அவர்கள் ஒரு வீதித்தடையில் நிறுத்தப்பட்டார்கள். ''இந்தப் பிள்ளைகள் கான் டப்னாவைச் சேர்ந்தவர்கள். டலியாற்றில் நாளை நடக்கவிருக்கும் ஒரு திருமணத்துக்குப் போகிறார்கள்.''

''எல்லோரும் இறங்குகள்'' பிரிட்டிஷார் ஆணையிட்டனர். அவர்கள் ட்ரக்கைச் சோதனையிட்டார்கள். படுக்கைச் சுருள்கள் எல்லாம் திறந்து பார்க்கப்பட்டன. இரண்டு சுருள்கள் கத்தியால் கிறிக் கிழிக்கப்பட்டன: ட்ரக்கின் கீழ்ப் பகுதி நன்றாகச் சோதனையிடப்பட்டது. மேலதிக ரயர் அதன் பொருத்தும் இரும்பு வளையத்திலிருந்து கழற்றி எறியப்பட்டது. வாகனத்தின் மோட்டர் நன்றாகப் பார்வையிடப்பட்டது. பிள்ளைகளும் சோதனையிடப்பட்டார்கள். இவையெல்லாம் முடியக் கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் சென்றது.

கார்மேல் மலையின் அடிவாரத்தில் பிரிட்டிஷாரின் இன்னொரு தேடுதல் இடம்பெற்றது. கார்மேல் மலையைச் சுற்றி வளைத்து ஏறிச் செல்லும் வளைவு களில் மூசா ட்ரக்கைச் செலுத்தத் தொடங்கியபோது கிற்றி களைத்துப் போயி ருந்தாள்.

எல்லா ட்ரூஸ் கிராமங்களும் மிக உயரத்திலேயே அமைக்கப்பட்டிருக்கின் றன. நாங்கள் ஒரு சிறிய சிறுபான்மை இனத்தவர். முஸ்லீம்களின் தாக்குதல் களைச் சமாளிக்க உயரத்தில் இருப்பதவசியம். கவலைப்படாதீர்கள் இன்னும் சில நிமிடங்களில் டலியாற்றில் இருப்போம்'' என்றான். கிராமத்தின் வெளிப் புறத்தை வாகனம் சென்றடைந்தது. ஒடுக்கமான பாதையில் செல்லத் தொடங் கியதும் கிற்றி தன்னை விரைவாகச் சமாளித்துக் கொண்டு தயாராகி விட்டாள்.

டலியற் எல் காமில் உலகின் கூரையில் உட்கார்ந்திருப்பது போல் தோன் றியது. அதிகமான அரபுக் கிராமங்களின் அழுக்குக்கும் சிதிலத்திக்கும் மாறாக வெண்மையாகப் பளிச்சிட்டுக் கொண்டிருந்தது. அதிகமான ஆண்கள் மீசை வைத்துக் கொண்டிருந்தார்கள். பலரும் மேற்கத்தைய பாணி உடைகளை அணிந் திருந்தார்கள் இவர்களுடைய தலையணியானது மற்றைய அராபியர்களுடை யதை விட வித்தியாசமாக இருந்தது. வெளிப்படையாக தெரிந்த பெருமையும் கௌரவத்தை வெளிக்காட்டிய விதமும் இவர்கள் ஆக்ரோஷமான போராளிக ளாக இருக்கக்கூடும் என்பதைப் பார்த்தவுடனேயே தெரிவித்த தோற்றமும் விசேஷமாக ஏனைய அராபியர்களிடமிருந்து வேறுபட்டிருந்தன. பெண்களும் மிக அழகாக இருந்ததோடு குழந்தைகளும் பிரகாசமான கண்களையும் திடகாத்தி ரமான தோற்றத்தையும் கொண்டிருந்தார்கள். பெண்கள் கண்ணைக் கவரும் வர்ணங்களில் ஆடைகளை அணிந்து தலைக்கு வெள்ளைத் துணியைக் கட்டியி ருந்தார்கள்.

டலியாற் நூற்றுக்கணக்கான விருந்தினர்களால் நிரம்பியிருந்தது. கார் மேலின் சகல ட்ரூஸ் கிராமங்களிலிருந்தும் வந்திருந்த இவர்களோடு கிபுட்ஸ் யூதர்களும் ஹைபா போன்ற தூர இடங்களிலிருந்தும் வந்திருந்தார்கள்.

ட்ரக் வண்டியானது., மணமகனை வாழ்த்த திரண்டிருந்த ஆண்விருந் தினர்களும், கிராமத்தின் வயதானவர்களும் நிறைந்திருந்த கிராமத்தின் திருமண மண்டபத்தைத் தாண்டி, அங்குலம் அங்குலமாக நகர்ந்தது. திருமண மண்டபத் தோடு சேர்ந்து ஒரு விறாந்தை மலைப்பக்கத்தோடு சேர்ந்து அமைந்தி ருந்தது. இருபத்தைந்து யார் நீளமான ஒரு மேசையை அது கொண்டிருந்தது இந்த மேசையில், பழங்கள், சோறு, சரக்குகள் சேர்த்துச் சமைத்த ஆட்டி றைச்சி, வைன்கள், பிராந்திகள், சுவைப்பொருட்கள் பொருத்தப்பட்ட எலும்பு கள்ஆகியவற்றால் நிரம்பியிருந்தது உணவு நிறைந்தபாத்திரங்களை தங்கள் தலை யில் சுமந்தபடி பெண்கள் மேசைக்கும் மேசையிலிருந்தும் .ஓயாது போய் வந்து கொண்டிருந்தார்கள்

மூசா ட்ரக்கை வரவேற்பறைக்குப் பின்னால் நிறுத்தினான். ஐந்தாறு கிராமவாசிகள் குழந்தைகளை வரவேற்க ஓடிவந்தார்கள். பிள்ளைகள் டரக்கி

னால் இறங்கி வரிசையாக, தாங்கள் முகாமிடப் போகும் இடத்துக்குத் தங்கள் தங்கள் படுக்கைச் சுருள்களுடன் சென்று முகாமை அமைத்துவிட்டுத் திரும்பி வந்து கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் நோக்கில் நடந்து சென்றார்கள்.

மூசாவும் கிற்றியும் கரேனும் மத்திய வீதியூடாக வாகனத்தைச் செலுத்திச் சென்றார்கள். இங்கே வெள்ளிப்பட்டு ஆகியவற்றாலான மேலங்கிகளையும், பலவர்ண சித்திரவேலைப்பாடுகள் அமைந்த தலையணிகளையும் அணிந்து கொண்டிருந்த ட்ரூஸ் நடனக்காரர்கள் அட்டகாசமான ஒரு நடன நிகழ்ச்சியை ஆடிக் கொண்டிருந்தார்கள்.

அவர்கள் நேரான வரிசையொன்றில் ஒருவரது கைகள் அடுத்தவரது தோளில் இருக்கும் வண்ணம் வைத்துக் கொண்டிருந்தார்கள். இந்த வரிசையை நேராகவும், உடம்புகளைத் திடமாகவும் வைத்துக் கொண்டு கால்களை ஸ்பிரிங்குகள் மாதிரிப் பாவித்து இடைவிடாமல் நிலத்தில் எம்பி, எம்பி குதித்துக் கொண்டிருந்தார்கள். இந்த வரிசைக்கு முன்னால் நிஸிம் என்று பெயர் கொண்ட பலஸ்தீனத்தில் தலைசிறந்த ட்ரூஸ் நடனக்காரன் ஒருவன் வாயில் ஒரு கத்தியும், கைகளில் ஒரு சோடி கத்தியுமாக வைத்துக் கொண்டு மிக உக்கிரமாகச் சுழன்று சுழன்று ஆடிக்கொண்டிருந்தான்.

அருகாமையில், மூலஸ்தானத்தில் இருந்து ஒரு கவிதை வரியைகளைச் சொல்லுபவர் முன்பிரயத்தனமெதுவும் இன்றி ஒரு கதையைப் பகுதி பகுதியாக இரைந்து சொல்லிக் கொண்டிருந்தார். இப்படிச் சொல்லப்படும் ஒவ்வொரு வரியையும், அவரைச்சுற்றியிருந்த நூறுபேர் வரையாவர்கள் திரும்ப உரக்கக் கத்தினார்கள். கதை போகப்போக ஒவ்வொரு வரியும் உரக்க உரக்கச் சொல்லப்பட்டு, கதையின் முடிவுக்கு அவர் வந்தபோது அரைவாசி ஆண்கள் தங்கள் கைத்துப் பாக்கிகளை உருவி மேலே சுட்டார்கள்.

மூசா ட்ரக்கை பிரதான வீதியிலிருந்து ஒரு ஒடுக்கமான பாதையின் சரிவில் செலுத்திச் சென்றான். அவன் ட்ரக்கை கிழ்மட்ட கியருக்கு மாற்றி வாகனம் கீழே வழுக்கிச் சென்றபோது வேகத்தடையில் காலை அழுத்திக் கொண்டான்.

சரிவின்அடியில் மூசா வாகனத்தை நிறுத்தினான். அடுத்தபாதை வாகனத்தைச் செலுத்த முடியாத அளவுக்கு செங்குத்தாயிருந்தது. மூன்று பேரும் விரைவாக கீழே இறங்கினார்கள். கிற்றி அந்தச் சிறிய முதலுதவி பொதியை எடுத்துக்கொண்டு மூசாவைத் தொடர்ந்து நகரத்தின் பரபரப்புக்கள் எதுவும் காதில் விழாத அளவு தூரத்துக்கு சில வீட்டு வரிசைகளைத் தாண்டிச் சென்றார்கள்.

கிராமத்தின் கடைசி வீட்டருகே போய்நின்றார்கள். இந்த வீடு ஆக்ரோஷமான தோற்றம் கொண்ட ட்ரூஸ் போராளிகளால் காவல்காக்கப்பட்டுக் கொண்டிருந்தது.

மூசா கதவைத்திறந்து பிடித்தான். கிற்றி ஆழமாக ஒரு முறை மூச்சை இழுத்து விட்டு உள்ளே நுழைந்தாள். உள்ளே இன்னொரு ஜோடி காவலர்கள்

உள் கதவொன்றின் முன் நின்று கொண்டிருந்தனர். கிற்றி, கரேனைத் திரும்பிப் பார்த்து, ''இங்கேயே நின்றுகொள் தேவையானால் உன்னைக் கூப்பிடுகிறேன் மூசா தயவு செய்து என்னுடன் உள்ளே வாருங்கள்'' என்றாள்

படுக்கையறை கிட்டத்தட்ட இருளில் மூழ்கியிருந்தது. இது இருந்த உயரத்தின் காரணமாகவும், மெல்கிறீற் நிலத்தின் காரணமாகவும் உள்ளே மிகக் குளிராக இருந்தது. யாரோ அனுங்குவது கிற்றிக்குக் கேட்டது. அவள் விரைவாக ஜன்னலுக்குச் சென்று அதன் மூடிகளைத் திறந்துவிட்டு வெளிச்சம் உள்ளே வர வசதி செய்தாள்.

அரி பித்தளைத் தலைமாட்டோடு கூடிய ஒரு இரட்டைக் கட்டிலில் படுத்துக்கிடந்தான் அவனுடைய கைகளிரண்டும், கட்டிலின் சட்டங்கள் இரண்டை இறுகப் பிடித்திருந்தன. அவன் வேதனையில் நெளிந்தபோது, இழுத்த இழுப்பில் அவை சுயவடிவத்தை இழந்திருந்தன. கிற்றி அவனை மூடியிருந்த போர்வையை இழுத்தெறிந்தாள். அவனுடைய ஆடைகளும் மெத்தையும் அவன் இரத்தத்தால் கறுப்பாகிப்போயிருந்தன.

''அவருடைய கால்சட்டையை கழற்ற எனக்கு உதவிசெய்யுங்கள்'' கிற்றி ''ஆணையிட்டாள். மூசா வியப்பால் அதிர்ந்து போனான். ''சரி கவலைப்பட வேண்டாம்நானே செய்து கொள்கிறேன். இடைஞ்சல் செய்யாமல் விலகி நில்லுங்கள். நீங்கள் தேவைப்படும்போது சொல்கிறேன்.''

அவள் கவனமாக அவன் கால்சட்டையைக் கிழித்து விட்டு அவனைப் பரிசோதித்தாள். அவனது உடல் நிறம் நன்றாவே இருந்தது. நாடித்துடிப்பும் பரவாயில்லாமல் இருந்தது. அவள் இரு கால்களையும் ஒப்பிட்டுப் பார்த்தாள். காயப்பட்ட கால் தேவையில்லாமல் வீங்கியோ அவன் அதிகளவு இரத்தத்தை இழந்து விட்டதுபோலவோ தோன்றவில்லை.

அரி உயிரோடிருப்பதும் அவனுக்கு மோசமான நிலையெதுவும் இல்லையென்று தெரிந்ததும் கிற்றி விரைவாகத் திறமையுடன் செயல்பட்டாள்.

மூசா தயவுசெய்து எனக்கு சவர்க்காரமும், நீரும் துப்பரவான துவாய்களும் கொண்டுவாருங்கள். காயத்தைத் தெளிவாகப் பார்க்கப் போகிறேன். கிற்றி கைகளைக் கழுவிவிட்டுக் காயத்தைச் சுற்றிவரக் கவனமாகத் துடைத்து விட்டாள். அவனுடைய தொடை வீங்கியிருந்ததோடு, ரவை உட்புகுந்திருந்த இடத்தில் வீங்கியது போல் தெரிந்த இடத்தில் இரத்தம் சிறிது கசிந்து கொண்டிருந்தது.

அரியின் கண்கள் சிறகடித்துத் திறந்தது. ''கிற்றி..''.

ஆமாம் நான் வந்து விட்டேன்.''

''கடவுளுக்கு நன்றி.''

''இந்தக் காயத்துக்கு என்ன செய்தீர்கள்?''

''நேற்று அதற்கு மேல் சிறிது சல்பா போட்டேன். நான் ஒரு அழுத்த பண்டேஜையும் வைத்துக் கட்டினேன். ஆனால் அவ்வளவு இரத்தம் போனது போல் தெரியவில்லை.''

''நான் உள்ளே துருவிப் பார்க்கப் போகிறேன். சிறிது வலிக்கும்.''

''பரவாயில்லை.''

அவள் வீங்கியிருந்த இடத்தைத் தொட்டதும் அவன் வலியினால் அனுங்கியபடி, வியர்வையில் மூழ்கிப்போனான். கிற்றி தன் கையை விரைவாக எடுத்துவிட்டாள். அரை மூன்று நிமிடங்கள் வரை வலியால் துடித்தான். அவள், அவன் முகத்தை ஈரத் துவாய் ஒன்றால் துடைத்துவிட்டாள்.

''உன்னால் என்னோடு பேச முடிகிறதா அரி?''

''பேச்சு போகப்போகிறது. இப்போ வந்து வந்து போகிறது. ஒரு கால் காயத்துக்கு நான் தேவையில்லாமல் அலட்டிக் கொள்கிறேன். உன்னுடைய குக் மாவட்டப் பயிற்சியும் இவைகளைப் போன்றவற்றை உள்ளடக்கியிருக்கிறதா?''

அவனுக்கு அது தெரிந்திருக்க வேண்டுமென நினைத்துக் கிற்றி சிரித்துக் கொண்டாள்.

ஓ; எப்போதாவது ஒரு முறையாராவதுஒருத்தியின் கணவன், தன்மனைவியை கள்ளச் சிநேகிதனுடன் கண்டுபிடிக்கும்போது, அகப்படுபவன் அவசரசிகிச்சைப் பிரிவின் வாசலில் போடப்படுவதுண்டு.''

''என்ன அது?''

''என்னால் நிச்சயமாகச் சொல்ல முடியாது. ரவைகள் பல விசித்திரமான வேலைகளைச் செய்யும். அவைகள் எப்படி வளையும் என்பதற்குக் கணக்கேயில்லை. உங்களுடைய நாடித்துடிப்பும், சுவாசமும் நன்றாகவே இருக்கின்றன. அதிர்ச்சி எதுவும் ஏற்படவில்லை. காயத்தை அடுத்துள்ள இடங்களைத் தவிர, உங்கள் கால்கள் வீங்கியும் இல்லை.''

''அதற்கு என்ன கருத்து.''

''அதற்கு கருத்து உங்களுக்கு உள் இரத்தப்பெருக்கு எதுவும் ஏற்படவில்லை என்று நான் சொல்லலாம். பிரதான இரத்தநாளம் எதிலும் ரவை படவில்லை. தொற்று எதையும் காணக்கூடியதாக இல்லை. நீங்கள் அதிஷ்டசாலியென்றுதான் சொல்ல வேண்டும் உங்களுக்கிருக்கும் வலியைப்பற்றித் தான் சிறிது கவலைப்படுகிறேன்.''

''சில மணித்தியாலங்களுக்கொருமுறை உணர்விழந்து கொண்டிருந்தேன்.''

''சிறிது பிடித்துக் கொள்ளுங்கள். திரும்பவும் தடவிப் பார்க்கப்போகிறேன்.

அரி எவ்வளவு தயாராக இருந்தாலும் சிலவினாடிகளுக்கு மேல் வலியைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. துடித்தெழுந்து இருக்கும் நிலைக்கு வந்தவன் மூச்சுத் திணறிக் கீழே சாய்ந்தான்.

''அந்தப் பிசாசு என்னைக் கொல்லப் பார்க்கிறது.''

அவன் விரிப்புக்களை இறுகப் பிடித்து உருண்டு கரைந்து படுத்துக் கொண்டு நடுங்கினான். வலியால் பத்து நிமிடங்கள் வரை துடித்துவிட்டு அசைவதுமின்றிக் கிடந்தான்.

''இதென்ன இது கிற்றி? கடவுளுக்காக விரைவாக ஏதாவது செய்... என்னால்மேலும் தாங்க முடியாது ..''

''நீங்கள் காயம் பட்டபிறகு உங்களால் நடக்க முடிந்ததா?';

''ஆமாம். என்ன விஷயம்கிற்றி?இதுஏன்இப்படி வேதனை தரவேண்டும்?''

அவள் தெரியாதெனத் தலையை ஆட்டினாள். ''நான் ஒரு டாக்டர் அல்ல. என்னால் நிச்சயமாகச் சொல்ல முடியாது. நான் பிழையாகவும் இருக்கலாம்.''

''உனக்குத் தெரிந்ததை எனக்குச் சொல்'' திணறியபடி சொன்னான்.

''சரி... இதுதான் நான் நினைப்பது. ரவை உன் வெளித் தொடையில் உள்ளே சென்று எலும்பில் பட்டிருக்கவேண்டும். அதுஉங்கள் எலும்பை உடைக்கவில்லை. அப்படியிருந்திருந்தால் உங்களால் நடந்திருக்க முடியாது. உள்பக்கமாகவும் போகவில்லை. போயிருந்தால் இரத்த நாளங்கள் எதையாவது பாதித்திருக்கும்.''

''அப்போ என்னவாயிருக்கும்?''

''நான் நினைக்கிறேன், அது எலும்பில் பட்டு சிறிய துண்டுகளைச் சிலிவிட்டிருக்கலாம்அல்லதுஎலும்பில் வெடிபேற்படுத்தியிருக்கலாம்.அதுதான் உங்களுக்கு வேதனையைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. என்னுடைய கணிப்பு என்னவென்றால் எலும்பில் பட்ட ரவை தெறித்து திரும்ப மேல்தோலை நோக்கி வந்திருக்க வேண்டும். அது ஒரு நரம்புக்கருகில் புதைந்து போயிருக்கலாம்,''

''என்ன நடக்கும்?''

''அது வெளியில் வந்தாக வேண்டும். அந்த வேதனை உங்களை ஒன்றில் கொல்லலாம் அல்லது செயலிழக்கப்பண்ணலாம். மலையிலிருந்து கீழே போகும் நிலையில் நீங்கள் இல்லை. அப்படிப் போவது பல விஷயங்களை நடக்கப்பண் ணிவிடும் இரத்தப் போக்கு,... வேறுபல அடுத்த சில மணி நேரங்களில் ஒரு டாக்டரை இங்கு கொண்டுவந்தாக வேண்டும். அல்லாவிட்டால் கடும் பிரச்சினைக்குள் மாட்டிக்கொள்வீர்கள். அந்த ரவை வெளியில் வந்தாக வேண்டும்.''

''அரி, மூசாவைப் பாாத்தான். கிற்றி விரைவாக மூசாவைப் பார்த்து விட்டு மீண்டும் அரியைப் பார்த்தாள்.

''நேற்றைய தாக்குதலில் பங்கு கொண்டு காயம் பட்ட பலர் கலிலி எங்கும் பதுங்கியிருக்கிறார்கள். டலஸ்தீனத்திலிருக்கும் ஒவ்வொரு யூத டாக்டரும் இப்போ கண்காணிக்கப்பட்டுக் கொண்டிருப்பார்கள். நான் அரிக்காக ஒருவரை இங்கு கொண்டுவர முயன்றால் நிச்சயமாக அவர் பின்தொடரப்படுவார்'' என்றான் மூசா.

அவர்களிருவரையும் மாறி மாறிப் பார்த்து விட்டு எழுந்து கிற்றி ஒரு சிகரட்டைப் பற்ற வைத்துக கொண்டாள்.

''அப்படியானால் நீ உடனடியாகச் சரணடைந்துவிட்டு இதை யாரை யாவது விட்டுக் கவனிக்கச் சொல்''

அரி மூசாவைப் பாத்துத் தலையைஅசைக்கவும் அவன் வெளியே போனான்.

''கிற்றி...'' அவன் அழைத்தான். அவள் அவன் கட்டிலின் அருகில் சென்று நின்றாள். அவன் தன் கையை நீட்டி அவள் கையைப் பற்றினான். ''அவர்கள் என்னைத் தூக்கில் போடுவார்கள். இனி உன்னைப் பொறுத்த விஷயம்.''

அவளுடைய தொண்டை உலர்ந்து போயிற்று. அவள் தன் கையை இழுத்துக் கொண்டு போய் சுவரில் சாய்ந்தபடி யோசனை செய்ய முயற்சித் தாள். அரி இப்போ அமைதியாக இருந்தான். அவன் கண்கள் அவளில் நிலைத் திருந்தன.

''என்னால் முடியாது. நான் ஒரு டாக்டரல்ல.''

''நீதான் செய்ய வேண்டும்.''

''ஏதாவது செய்வதற்கு உபகரணங்கள் ஒன்றுமில்லை.''

''நீ செய்யத்தான் வேண்டும்.''

''என்னால் முடியாது . என்னால் முடியாது... அது எவ்வளவு வேதனை யாயிருக்கும் என்று உணரமுடியவில்லையா? அவள் ஒரு இருக்கையுள்பொத்தென

அமர்ந்தாள். அரி நேற்றைய தாக்குதலை தலைமை தாங்கி நடாத்தியது பற்றியும், பிரிட்டிஷார் அவனை இங்கே கைது செய்தால் அவன் தலைவிதி அவன் சொல்லியபடிதான் இருக்கும் என்பதைப்பற்றியும் சிந்தித்தாள். அவள் டொவ்வைப் பற்றிச் சிந்தித்தாள். அவனுக்குத் தன்னைத் தவிர வேறு கதி கிடையாது என்று தெளிவாகவே அவளுக்குப் புரிந்தது. ஒன்றும் செய்யாமல் இருந்தால் மரணத்தை வலிந்து அழைப்பது போலிருக்கும். அவள் இறுக மடித்திருந்த தன் விரல்களைக் கடித்தபடி எழுந்து நின்றாள். ஒப்பனை மேசை மீது ஒரு போத்தல் பிராந்தி இருந்தது. அதை எடுத்துக்கொண்டு அவனருகில்போனாள்.

''இதைக் குடிக்க ஆரம்பியுங்கள். இது முடிந்ததும் வேறு ஒன்று தருகிறேன். நன்றாகப் போதை ஏறட்டும். முடிந்தளவு போதை ஏற்றிக் கொள்ளுங்கள். ஏனெனில், நான் உங்களுக்கு மிகுந்த வேதனையைத் தரப்போகிறேன்.

''நன்றி கிற்றி'''

அவள் விரைவாகக் கதவைத் திறந்தாள்.

''மூசா !''

''என்ன ?''

''வைத்தியத்துக்கு வேண்டிய பொருட்களை எங்கே எடுக்கலாம் ?''
''யாகுர் கிபுட்சுக்குப் போகவேண்டும்.''

''அங்கு யாரையும் அனுப்பி எடுத்துவர எவ்வளவு நேரம் செல்லும் ?''

''அங்கு போவது பிரச்சினையில்லை. திரும்பி வருவதுதான்..... போகும் ஆளால் தெருக்களைப் பாவிக்க முடியாது. ஆகவே காரில் போக முடியாது. இந்த மலைகளில் நடந்து வரத் தொடங்கினால். பல மணி நேரம் பிடிக்கும்..... சில வேளை இன்று பின்னிரவு வரை செல்லலாம்.

''இதோ பார். நான் தேவையான பொருட்களின் பட்டியல் ஒன்றை எழுதுகிறேன். நீ அந்த கிபுட்சுக்கு முடிந்தளவு விரைவில் யாரையாவது அனுப்பிவிடு.''

கிற்றி பின்பும் யோசித்தாள். போகும் மனிதன் இன்றிரவு திரும்பி வரலாம். முற்றாகவே வராமலும் போகலாம். ஒரு கிபுட்சின் மருந்தகம் மயக்க மருந்து போன்றவற்றை வைத்திருப்பது சந்தேகமே. ஆனால் காத்திருக்க முடியாது. இரண்டு லீற்றர் இரத்தப் பிளாஸ்மா (Plasma), பென்சிலின் குப்பிகள், மோர்பைன், மருந்து கட்டும் துணிவகைகள், ஒரு வெப்பமானி, வேறு சில உபகரணங்களின் பட்டியல் ஒன்றை எழுதினாள். காவலர்களில் ஒருவனை மூசா உடனடியாக யாகுரிற்கு அனுப்பி விட்டான்.

''கரேன் உன்னுடைய உதவியும் எனக்குத் தேவை. ஆனால் இந்த வேலை கொஞ்சம் கடினமாக இருக்கும்.''

''என்னால் எதையும் செய்ய முடியும்.''

நல்ல பிள்ளை. மூசா மருந்து வகைகள் எதுவும் உன் வசமில்லையா?''

''கொஞ்சப் பொருட்கள் இருக்கின்றன. அதிகளவில் இல்லை.''

''நல்லது. அந்த முதலுதவித் தொகுதியிலிருக்கும் பொருட்களோடு சமாளிப்போம். உன்னிடம் டோர்ச் லைட்டும்... பாவிக்காத சவர அலகுகளும் இருக்கிறதா..... அல்லது ஒரு நல்ல கூர்மையான சிறிய கத்தி.. ..?

''அவைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.''

''நல்லது. சவர அலகுகளையும், கத்தியையும் அரைமணி நேரம் கொதிக்க வைக்க வேண்டும்.''

மூசா திரும்பி அதற்கான கட்டளையை விடுத்தான்.

''இப்போ சில போர்வைகளை நிலத்தில் போடு. கட்டில் அதிகமாகத் துள்ளுகிறது. அவரை இறுக அணைத்துப் பிடிக்கவேண்டும். கரேன் நாங்கள் அவரைக் கீழே இறக்கியதும் கட்டிலின் அழுக்கு விரிப்புகளை மாற்றிவிடு. மூசா துப்பரவான விரிப்புகளை அவளுக்குக் கொடு.''

''வேறு ஏதாவது தேவையா?'' மூசா கேட்டான்.

''இவரைக் கீழே இறக்கி அசையாமல் இறுகப் பிடித்துக் கொள்ள ஏழெட்டு ஆண்கள் தேவை.''

எல்லா ஆயத்தங்களும் செய்யப்பட்டன. போர்வைகள் நிலத்தில் விரிக்கப் பட்டன. அரி தொடர்ந்து குடித்துக் கொண்டேயிருந்தான். ட்ரூஸ்களில் நால்வர் எவ்வளவு மென்மையாக முடியுமோ அவ்வளவு மென்மையாக அரியைக் கீழே இறக்கினார்கள். கரேன் விரைவாக இரத்தக் கறை படிந்திருந்த விரிப்பு களை அகற்றிவிட்டு, புதியவற்றை விரித்து விட்டாள். சவர அலகுகளும், கத்தி யும், உள்ளே கொண்டு வரப்பட்டன. கிற்றி தன் கைகளைத் தேய்த்துக் கழுவி விட்டுக் காயப்பட்ட பிரதேசத்தையும் கழுவி அயடினை அங்கே பூசிவிட்டாள். அரியைக் கொழுகொழப்பாகப் பேசும் நிலைக்கு பிராந்தி கொண்டு செல்லும் வரை காத்திருந்து விட்டு ஒரு தலையணையை அவன் கழுத்துக்குக் கீழே வைத்துவிட்டு ஒரு கைக்குட்டையைக் கடித்துக் கொள்ளும்படி அவன் வாய்க்குள் திணித்து விட்டாள்.

சரி, நான் ஆயத்தமாகி விட்டேன். அவரைக் கீழே அழுத்திப் பிடியுங்கள். நாங்கள் வேலையைத் தொடங்குவோம். ''ஒருவன் அரியின் தலையைப் பிடித் தான். ஒவ்வொரு கைகளையும் இருவர் பிடித்தனர். நல்ல காலை இருவரும், காயம் பட்ட காலை ஒருவனுமாகப் பிடித்தனர்.

எட்டு ட்ரூஸ்களும் அரியைத் தரையோடு சேர்த்து இறுக அழுத்திப் பிடித்துக் கொண்டனர். கரேன் இந்தக் குழுவின் அருகில் டோர்ச் லைட், பிராந்தி மற்றும் இருந்த குறைந்தளவு மருந்துப் பொருட்களுடன் காத்து நின்றாள். கிற்றி காயத்தின் அருகில் மண்டியிட்டமர்ந்தாள். கரேன் டோர்ச் லைட்டை அதன் மீது ஒளிர வைத்தாள். கிற்றி சவர அலகைக் கையில் எடுத்துக் கொண்டு, ஆயத்தமாக இருக்கும்படி ஆட்களுக்குச் சைகை செய்தாள். அவள் சவர அலகைத் தொடையில் வைத்து வெட்டப் போகும் இடத்தில் மேல் மெல்லிய கோடு போல் கிழித்தாள். பின்பு விரைவாக ஒரே அசைவில் சதைக்குள் அழுத்திக் கீறி ரவைக் காயத்தின் மேல் இரு அங்குல வெட்டொன்றை ஏற்படித்தினாள். அரி பயங்கரமாகத் துடித்தான். மூக்கிலிருந்து சளி வடிந்தோடியது. வேதனையினால் ஏற்பட்ட கண்ணீர் கண்களிலிருந்து வடிந்தோடியது. அவனைப் பிடித்திருந்தவர்கள் அவனைக் கட்டுப் படுத்த மிகவும் கஷ்டப்பட்டனர்.

கிற்றியின் உதடுகள் வெளிறுவதையும், கண்கள் சுழலுவதையும் கண்ட கரேன், சடாரெனக் கிற்றியின் மயிரைப்பற்றி நிமிர்த்தித் தொண்டைக்குள் சிறிது பிராந்தியை ஊற்றி விட்டாள். புரைக்கேறப்பார்த்த கிற்றி தன்னைச் சமாளித்துக் கொண்டு இன்னொரு வாய் பிராந்தியையும் விழுங்கினாள். அரியுடைய கண்கள் செருகிக் கொள்ள ஆசீர்வாதம் போல் வந்த மயக்க நிலைக்குள் மூழ்கிப் போனான்.

கரேன் வெட்டப்பட்ட இடத்தின் மேல் டோர்ச்லைட்டை மீண்டும் ஒளிப்பண்ணினாள். ஒரு கையால் தோலை விரித்துப் பிடித்தபடி, மற்றக் கையின் கட்டை விரலையும், நடுவிரலையும் சதைக்குள் செலுத்தி ரவையைத் தேடினாள் கிற்றி. அவளுடைய விரல் நகம் சுடினமான ரவையில் உராய்ந்தது. இறுதியாக மீதமிருந்த பலமெல்லாம் கூட்டி, அதைப் பிடித்து அசைத்து அவள் காலிலிருந்து கழற்றி எடுத்து விட்டாள்.

அவள் தரையில் உட்கார்ந்து ரவையைத் தூக்கிப் பிடித்து அதைப் பார்த்துக் கொண்டே சிரிக்கத் தொடங்கினாள்.

எல்லா ட்ரூஸ்களும் சிரிக்கத் தொடங்கினர்.

கிற்றி அரைப்பைத்தியம் போல் தேம்பத்தொடங்கினாள்.

''மூசா அவரை விரைவாகக் கட்டிலில் ஏற்றுங்கள். ஒருவரையும் அந்தக் காயத்தைத் தொட விடாதீர்கள்.'' என்றாள் கரேன்.

கரேன், கிற்றியை நிலத்தில் இருந்து எழுப்பில் ஒரு இருக்கையில் அமர்த்தி விட்டாள். கையிலிருந்த ரவையைப் பிடுங்கிவிட்டு அவற்றை சுத்தமாகத்துடைத்து விட்டாள். பின்பு அரிக்குக் கிட்டச் சென்று காயத்தின் மேல் சல்மா பவுடரைக் கொட்டி, அதன் மேல் மெதுவாக ஒரு பண்டேஜைக் கட்டினாள். பிறகு அரியை

மெதுவாகத் துடைத்து விட்டாள். கிற்றி சோர்ந்து போய்க் கிடந்தபடி விம்மிக் கொண்டிருந்தாள்.

கரேன் எல்லாரையும் வெளியே அனுப்பிவிட்டுக் கிற்றிக்கு இன்னும் கொஞ்சம் மதுவை ஊற்றிவிட்டுக் வெளியே போனாள்.

கிற்றி மதுவை உறிஞ்சியபடி அரிக்குக் கிட்டே போய், அவன் நாடித் துடிப்பைப் பார்த்தாள். அவன் கண்களைப் பிரித்துத் திறந்து அதன் நிறத்தைப் பார்வையிட்டாள்.

சரி...அவன் நலமாகிவிடுவான்...

அவள் தன் கையை அவன் மார்பில் வைத்தாள். விம்மல்களுக்கிடையே அரி...அரி...அரி...என முணுமுணுத்துக் கொண்டேயிருந்தாள்.

o

அத்தியாயம் பதினெட்டு

அரி மிகுந்த வேதனையிலேயே இருந்தான். மருந்துகள் வந்து சேரவில்லை. அவனை விட்டு ஒரு வினாடி கூட அகல முடியவில்லை. பலமுறை அரி கையை காலை பலமாக அடித்துத் திறந்திருந்த காயத்தின் நிலையை மோசமாக்குவதைத் தடுக்க மூசாவிடம் ஆட்களைக் கோரவேண்டியிருந்தது.

கிராமத்தின் நடுவேயிருந்த குன்றில் ஆட்டமும் பாட்டும் மகிழ்ச்சியும் இன்னும் தொடந்து கொண்டேயிருந்தது நாள் முழுவதும் மறைத்து வைக்கப் பட்டிருந்த மணமகள் தனிமையிலிருந்து வெளியே அழைத்து வரப்பட்டாள். மணமகனோ ஒரு அளவாக வெட்டப்பட்ட சூட்டும், மேலே தொப்பியொன்றை அணிந்தபடி, குதிரையொன்றில் ஏறி, றைபிள் தரித்திருந்த ட்ரூஸ் ஆண்களிடையே தூவப்பட்டிருந்த மலர்ப்படுக்கையின் மேல் மணமகளை நோக்கிச் சென்றான்.

திருமணச்சடங்கின் பின் வந்திருந்த யூத விருந்தினர்களில் பலரும், கான் டப்னாவின் பிள்ளைகளும் சேர்ந்து ஒரு பாசறைத் தீயை வளர்த்தனர். அதைச் சுற்றி மேலும், பாட்டுகளும் ஹோரா ஒன்றும் நடைபெற்றது. தம்பூரோடும், புல்லாங்குழலோடும் சேர்ந்து ஹீப்ரூரக நடனங்கள் நடைபெற்றன. ட்ரூஸ் நடனக் காரர்களும் அரங்க நடுவில் நடனமாடினார்கள்.

கரேன் வெளி அறையில் தொடர்ந்து இருந்து கொண்டிருந்தாள். நீண்ட இரவில் இடைக்கிடை உள்ளே போய் கிற்றியைச் சிறிது ஒய்வெடுக்கப் பண்ணினாள். காலையில் துரக்கமின்மையாலும், நீண்ட நேரப் பதட்டத்தாலும் இருவருமே களைத்துப் போயிருந்தார்கள். கிற்றி கட்டில் ஓரத்தில், அமர்ந்து, அரி அனுங்கும், அசையும் ஒவ்வொரு முறையும் துடித்தெழுந்து கொண்டிருந்தாள், பொழுது விடிந்தபோதும் மருந்துகள் வந்துசேரவில்லை.

''பிள்ளைகளைக் கூட்டிக் கொண்டு போய் கான் டப்னாவில் விட்டு விடுவது நல்லது.'' அவள் மூசாவிற்குக் கூறினாள். ''வேறு யாராவது ஆங்கிலம் பேசக்கூடியவர்கள் இருக்கிறார்களா?''

''ஆம் இவ்விடத்தில் அவனை இருக்கச் செய்கிறேன்.''

''நல்லது. இங்கு நான் ஓய்வெடுக்க ஒரு கட்டில் அல்லது சோபா இவ்விடத்தில் ஒழுங்கு பண்ண முடியுமா? நான் கொஞ்சக் காலத்துக்கு இங்கேயே இருக்கவேண்டும்.'.

''அதை ஒழுங்கு செய்து விடுகிறேன்.',

கரேன் வாங்கு ஒன்றில் தாங்கி வழிந்து கொண்டிருந்த மற்றொரு அறைக்குள் கிற்றி சென்றாள். அந்தப் பிள்ளையின் கன்னத்தை லேசாகத் தடவி விட்டாள். கரேன் எழுந்து இருந்தபடி ''அவர் சுகமாயிருக்கிறாரா?'' ''இல்லை. அவர் சரியான வேதனையில் இருக்கிறார். நீ, காலையில் பிள்ளை களுடன் யாட் எல்லுக்குப் போக வேண்டும் என நான் விரும்புகிறேன்.''

''கிற்றி... இங்கு..''

''மறுத்துப் பேசாதே. நிலைமைகள் கட்டுப்பாட்டுக்குள் வரும்வரை நான் இங்கு இருக்கவேண்டும், என்று டாக்டர் லிப்பர்மானுக்குக்கூறு.'' ''நாங்கள் நாளை மறுநாள் பலஸ்தீனத்தை விட்டுப் போக இருக்கிறோம்ம?''

கிற்றி இல்லையெனத் தலையை ஆட்டினாள். எங்களுடைய பயணங்களை ரத்துச் செய்து விடு. புதிய ஒழுங்குகளைப் பின்பு செய்து கொள்ளலாம். அவரை நன்றாகப் பார்த்துக் கொள்ளக்கூடிய யாராவது ஒருவரை இங்கு அவர்கள் கொண்டு வரும்வரை நான் இங்கு இருந்தாக வேண்டும். இதற்கு எவ்வளவு காலமெடுக்கும் என்று தெரியவில்லை.

கரேன் கிற்றியை அணைத்துவிட்டுச் செல்ல ஆரம்பித்தாள். கரேன் ஷாபெட்டுக்குப் போய் புரூஸ் சுதர்லண்டுக்கு நான் எங்கிருக்கிறேன் என்று அறிவித்து விடு. என்னைச் சந்திக்க வரமுடியுமா? என கேள். வந்து ஏதாவது பெரிய ஹோட்டலில் தங்கச்சொல். நான் எப்படியாவது அதைத் தேடிக் கண்டுபிடிப்பேன். அவரை எனக்கு சில உடுப்புகளைக் கொண்டு வரும்படி சொல்.''

நண்பகலானபோது, தூற்றுக்கணக்கான விருந்தினர்கள் மெள்ள மெள்ள டலியற் எல் கமாலில் இருந்து அகலத் தொடங்கினார்கள். ட்ரூஸ் மக்கள் தங் கள் மலைக்கிராமங்களுக்கும், யூதர்கள் கிபுட்சுகளுக்கும், ஹைபாவுக்கும் திரும் பிச் சென்றார்கள். ட்ரக் நிறைந்த பிள்ளைகளை மூசா திரும்பவும் கான் டப் னாவுக்கு அழைத்துச் சென்றான்.

இவர்கள் எல்லோரும் போய் முடிந்ததும், ட்ரூஸ்கள் அரியின் அறைக்கு வெளியே இருந்து கடுமையான காவலைத் தளர்த்திக் கொண்டார்கள். ஆங்கி லம் பேசக்கூடிய ட்ரூஸ்காரன் அடுத்த அறையில் காத்திருந்தான்.

இந்த அறிமுகமில்லாத இடத்தில் கிற்றி அரியுடன் தனித்திருந்தாள். இந்த அமைதியின் ஆரம்ப கணங்களில் நடந்து முடிந்த விஷயங்களின் முழுத் தாக்கமும் கிற்றிக்குப் புரிந்தது. அவள் கட்டிலருகே போய் நின்று அவனைப் பார்த்தாள்.

''என்னுடைய கடவுளே! நான் என்ன செய்து கொண்டிருக்கிறேன்?'' மெதுவாகத் தனக்குத் தானே முணுமுணுத்துக் கொண்டாள். இவ்வளவு மாத

காலம் அவனோடு போராடி, கவனமாகத் தான் நிறுவிய எதிர்ப்பு, எல்லாமே தான் அவனருகுக்கு ஓடிவந்த அந்தக் கணத்தில் நொருங்கி வீழ்ந்து விட்டன. இந்தக் கணத்தில் தன்மேல் அரிக்கிருந்த சக்தியைப் பற்றிப் பயப்பட்டாள்.

மாலையில் வெகுநேரம் கழித்து யாகுர் கிபுட்சிலிருந்து மருந்துக்காகப் போன மனிதன் அவற்றுடன் வந்து சேர்ந்தான். அவன் மலைகளுக்கூடாக நீண்ட நேரங்களுக்கு ஒளிந்து மறைந்து வந்து சேர்ந்திருந்தான். பிரிட்டிஷ்ரோந் ஜப், பிரிவுகள் ஆக்ரே சிறையுடைப்பில் காயமடைந்தவர்களை எங்கும் தேடிக் கொண்டிருந்தார்கள்.

கிற்றி விரைவாக ஒரு லீற்றர் இரத்த பிளாஸ்மாவைச் செலுத்தி விட்டு சத்திரசிகிச்சை நடந்த சூழலின் காரணமாக ஏற்படும் என அவள் நினைத்த தொற்றுக்களைத் தடுக்கப் பென்சிலினை நிறையவே அரிக்குள் செலுத்தினாள். திறந்திருந்த காயங்களுக்குத் திரும்பவும் மருந்து கட்டிவிட்டு, கடுமையான வலியைக் குறைக்க மோர்பைன் செலுத்தினாள்.

தொடர்ந்து வந்த இரண்டு பகல்களிலும், இரவுகளிலும் வேதனையைத் தடுக்க அரியை மோர்பைனின் தூக்க மயக்கத்தினுள் ஆழ்த்தி வைத்திருந்தாள். நிமிடத்துக்கு நிமிடம் அவனது உடல் நிலையை அவதானித்து வந்தாள். வெட்டுப் போடப்பட்ட காயம் ஒன்றிணையத் தொடங்கியிருந்தது. பெரிய பிரச்சினை எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை, அரி இடைக் கிடை சிறிதளவு நேரத்துக்கு மாத்திரம் விழித்திருந்தான். அந்த நேரங்களில் ஊட்டமான உணவுகளை உட்கொண்டு வந்தான். விழித்திருக்கும் நேரங்களில் தன்னைச் சுற்றி என்ன நடக்கிறது எல்று புரிந்துகொள்ள முடியாத அளவுக்கு மந்தமான நிலையிலிருந்தான். ட்ரூஸ் கிராமவாசிகளோ, கிற்றியின் பராமரிப்புத் திறமையையும், அவள் ஆற்றலையும்கண்டு வியந்தனர். விசேடமாகப் பெண்கள் கிற்றி ஆண்களுக்கு பணிப்புரைகளை வழங்கிய அழகைக் கண்டு மகிழ்ந்து போயினர்.

அரி, ஆபத்தான கட்டத்தைத் தாண்டிவிட்டான். இனி பூரணசுகமடையக் காலம் தான் தேவை, என்று அறிந்து கொண்ட கணத்திலிருந்து நிச்சய மற்ற தன்மையிலும், பதகளிப்பிலும் கிற்றி மூழ்கினாள். கான்டினாவை விட்டுப் போகும் பிரச்சினை திரும்பவும் அவள் மனதில் அலைமோதியது.

தனது சேவை தேவையாக இருந்த பிள்ளைகளைக் கைவிட்டுத்தான் போகத் தனக்கு உரிமை இருக்கிறதா என்று திரும்பவும் சிந்தித்தாள். தொழில் சார் சேவைக்கும், மனிதாபிமானத்துக்கும் இடையே இருக்கும் எல்லைக்கோடு எங்கே இருக்கிறது?'' கரேனின் நிலமை என்ன? கிற்றியை இழந்துவிடுவோம் என்ற பயத்தினால் மட்டும்தான் கரேன் அமெரிக்கா வருகிறாளா?

கிற்றியின் மனதில் கனத்துக் கொண்டிருந்த எண்ணங்களிலேயே மோசமானது, அவளால் தொடர்ந்தும் நியாயப்படுத்த முடியாத ஒரு காரணமாகும். மூன்றும் ஒருமுறை இந்த விசித்திரமான மக்கள் கூட்டத்தினுள்தன்

விருப்பத்துக்கு மாறகத் தான் இழுத்தெடுக்கப்பட்டிருந்தாள். சைபிரசில் இவர் களுக்காக வேலை செய்யப் போவதில்லை என முடி வெடுத்திருந்த போது தான் கரேனைக் கண்டாள். இப்போ இது ஒரு மீள்நிகழ்வு போலத்தான் தோற் றியது. தான் போகவிருக்கும் கடைசி நேரத்தில் அரியை நோக்கி ஈர்க்கப்படுகி றாள். இது தற்செயலாக நிகழ்வதென்றா அல்லது மேலாதிக்கமான சக்தி ஒன்றால் தன் தலைவிதி உருவாக்கப்படுகிறதா? அவளுடைய அடிப்படைப் பொது அறிவு இந்தக் கருத்தை எதிர்த்தாலும் அது திரும்பத் திரும்ப அவளை ஆட்கொள்ளத் தவறவில்லை. பலஸ்தீனத்தின் சக்திக்கு அவள் பயப்பட்டாள்.

கிற்றியின் பராமரிப்பில் அரி விரைவாகத் தேறி வந்தான். அவன் ஒரு குறிப்பிடத்தக்க மனிதன் எனக் கிற்றி நினைத்தாள். அவன் தாங்கிக் கொண்ட வேதனை ஒரு சாதாரண மனிதனைக் கொன்றுவிட்டிருக்கும். நான்காவது நாள் முடிவிலே மோர்பைனை எவ்வளவோ குறைத்துவிட்டிருந்தாள். காயம் ஆறி வருவதும், தொற்று ஏதும் ஏற்படாதென்றும் நிச்சயமானதும், பென்சிலினை யும் நிறுத்திவிட்டாள்.

ஐந்தாவது நாள் காலையிலே பசியோடும், முகச்சவரம் செய்து சுத்தம் செய்து கொள்ளவேண்டும் என்னும் ஆவலுடனும், உற்சாகமான மனநிலை யிலும், அரி விழித்தெழுந்தான். அரி புத்துயிர்பெற்ற வீரியத்தோடு, எழுந்தி ருந்தபோது, கிற்றி நத்தையைப் போல் தனக்குள் தானே ஆழ்ந்து போனாள். அவள் உணர்ச்சிகள் எதுவும் இடம்பெறாத பந்தமில்லாத தொழில் முறை மனோபாவத்தைக் கைக்கொண்டாள். கட்டளைகளை ஒரு சார்ஜன்ற் - மேஜரின் கம்பீரத்தோடு பிறப்பித்து, அடுத்த வாரத்துக்கான திட்டங்களை முற்றாகவே புதியவன் ஒருவனுக்குச் சொல்வது போல் அரிக்குச் சொன்னாள்.

''இந்த வார முடிவில் உங்கள் மருந்துகளை முற்றாகவே நிறுத்தி விட உத்தேசித்திருக்கிறேன். நீங்கள் உங்கள் காலுக்குப் பயிற்சி கொடுக்கத் தொடங்கி, முடிந்தளவு அசைவை அதற்குக் கொடுக்க வேண்டும் என விரும்பு கிறேன் ஆயினும் வெட்டப்பட்ட இடத்தில் அதிகம் தசை இழுபடுவதை அலு மதிக்காமல் கவனமாக இருக்க வேண்டும். ஏனெனில், அதற்குத் தையல்கள் போடப்படவில்லை.''

''நான் நடக்க எவ்வளவு காலமெடுக்கும்?''

''எக்ஸ்றே இல்லாமல் என்னால் சொல்ல முடியாது. எலும்புகள் சாதா ரணமாக வெடித்திருக்கிறதல்லாமல் துண்டுகள் சிதறவில்லை என்று நினைக்கத் தான் முடிகிறது. அப்படி சிதறியிருந்தால் நீங்கள் இன்னமும் வேதனையில் தான் இருப்பீர்கள். ஆயினும், உத்தேசமாக குறைந்தது ஒரு மாதத்துக்கு நீங்கள் எங்கும் போக முடியாது என்று சொல்ல முடியும்.''

அவனுக்கு மேலாக போர்வையை அவள் போர்த்தியபோது அரி விசில் அடித்தான்.

''நான் சும்மா நடந்து போய்விட்டு வருகிறேன். அரைமணியில் வந்து விடுவேன். ''என்றாள் கிற்றி.

கிற்றி ஒரு கணம் நில் நான் இங்கே பார் நீ மிகவும் கருணையுள்ள வள். நீ என்னை ஒரு தேவதை போல் கவனித்திருக்கிறாய். இன்று காலையில் இருந்து நீ கோபமுற்றிருக்கியாய் போல் தெரிகிறது. ஏதாவது பிரச்சினையா? நான் ஏதாவது செய்து விட்டேனா?

நான் களைத்துப் போயிருக்கிறேன். என்னால் முடிந்தளவு செய்து விட்டேன். ஐந்து இரவுகள் கண்விழித்திருந்தேன். உங்களுக்காக என்னால் ஆடிப் பாட முடியாது. மன்னித்துக் கொள்ளுங்கள்.''

''அதில்லை அதை விட வேறு ஏதோ இருக்கிறது. நீ இங்கு வந்தது பற்றிக் கவலைப்படுகிறாய் அல்லவா?''

''ஆமாம், அப்படித்தான்'' என்றாள் மெதுவாக.

''நீ என்னை வெறுக்கிறாயா?''

''உன்னை வெறுக்க அரி? உன்னைப்பற்றி என் உணர்வுகளை உனக்குத் தெளிவாகத் தெரிய வைத்திருக்கிறேன், அல்லவா? தயவுசெய்து நான் களைத் திருக்கிறேன்...''

''அப்போ என்ன எனக்குச் சொல்.''

''உங்களை நேசித்ததற்காக என்னை நானே நொந்து கொண்டிருக் கிறேன்... வேறேதாவது அறிந்து கொள்ள வேண்டுமா?''

''நீ ஒரு பயங்கரமான சிக்கலான பெண் கிற்றி பிறமென்ற்.''

''அப்படித்தான் நானும் நினைக்கிறேன்.''

''ஏன் நீயும் நானும் எங்கள் காவல் திரைகளை இழுத்து விட்டுக் கொண்டு சந்தித்துக் கொள்கிறோம். உறவாட ஆயத்தமாய் ... ... ஓட ஆயத்தமாய்?

கிற்றி சில கணங்கள் அவனைத் தொடர்ந்து பார்த்தாள்.

''நான் உன்னை விரும்புகிறேன். நீ என்னை விரும்புகிறாய். ஆகவே நாங்கள் இருவரும் படுக்கைக்குப் போவோம், போன்ற உங்களுடைய குழப்ப மில்லாத வகையில் நான் வாழ்வதில்லை என்பதனாலாக இருக்கலாம். பால் மாக் கைநூல் நாற்பத்தி நாலாம் பக்கத்திலிருப்பது: பையன்களும் யுவதிகளும் தனிமைப்படக் கூடாது. பலஸ்தினத்தின் பெண்களே தெளிவாக இருந்து கொள்ளுங்கள். நீங்கள் அவனைக் காதலித்தால் அவனோடேயே தூங்கப் போங்கள்.'' ''நாங்கள் பழமைவாதிகள் அல்ல.''

''ஜோர்தானாவைப் போலவோ, சாகாவரம் பெற்ற உங்களுடைய டப்னாவைப் போலவோ முற்போக்கான சிந்தனைகள் இல்லாதவள் நான்.''

''நிறுத்து'' அரி வெடித்தான். என்னுடைய சகோதரியும், டப்னாவும் வேசிகள் என்று பொருள்படக் கூற உனக்கு என்னுடைய துணிவு வேண்டும். தன் வாழ்க்கையில் ஜோர்தானா ஒரு மனிதனைத்தான் காதலித்தாள், இரண்டு பேருமே வாரமுடிவில் உயிரோடிருப்போமா இல்லையா என்று தெரியாத நிலையில் தன்னை அவனுக்கு அளிப்பது தவறா? நான் டப்னாவை அரபுக் கும்பல்களால் கொலை செய்யப்பட விடாமல் அவளோடு நிம்மதியாக யாட் எல்லில் வாழ்ந்திருக்கலாம் என்று உனக்குப் புரியவில்லையா?

''என்னுடை வாழ்க்கையை ஒரு புனிதக் கடமையாக வாழமுடியாது அரி, நான் விரும்பும் மனிதனுக்கு நான் தேவைப்பட வேண்டும்.''

அதை விட்டுவிடுவோம். நான் நீ எனக்குத் தேவையென்பதை உனக்கு உணர்த்தவில்லையா? என்றான் அரி. கிற்றி வெறுப்போடு சிரித்தாள். ''ஆமாம். உங்களுக்கு நான் தேவைப்பட்டேன். சைப்பிரசில் போலி ஆவணங்களை கராஒலொஸ்ஸில் இருந்து கடத்த திரும்பவும் நான் தேவைப்பட்டேன் உங்கள் கால்களிலிருந்து ரவைகளை வெளியேற்ற... மிகவும் குறிப்பிடத்தக்க ஒன்று உங்கள் மனம்தான் அரி குற்றுயிராக வேதனையில் புரளும்போதும் எல்லாக் கோணத்திலும் உங்களால் சிந்திக்க, முடிகிறது. வழியைத் திட்டமிடுவாய்... ட்ரக்கைப் பிள்ளைகளால் நிரப்பி சந்தேகத்தைத் தவிர்த்து விடுவாய்... நான் உனக்குத் தேவைப்படவில்லை அரி. உங்களுக்குத் தேவைப்பட்டதெல்லாம் பிரிட்டிஷ் வீதித் தடைகளைத் தாண்ட ஒரு ஆள்தான்.''

''நான் உங்களைக் குற்றம் சொல்லவில்லை அரி.'' அவள் தொடர்ந்து சொன்னாள், ''நான்தான் முதலாம் இலக்க அடி முட்டாளாக இருந்து விட்டேன். எங்கள் எல்லோருக்குமே சுமக்க வேண்டிய சிலுவைகள் இருக்கின்றன. என்னுடைய சிலுவை நீங்கள் தான் என நினைக்கிறேன். ஒரு ஷ்ப்றாவுடைய, எதைப்பற்றியுமே கவலைப்படாத, நேர்கொண்ட தன்மையை, என்னால் கைக் கொள்ள முடியாது.''

''அது என்னை ஒரு மிருகத்தைப்போல் நடத்த வேண்டிய தேவையை ஏற்படுத்துகிறதா?

''ஆமாம். ஏனெனில் நீங்கள் அதுதான். நீங்கள்ஒரு இயந்திர மிருகம். ஒரு மனிதப்பிறவியாக இருக்க தகுதியற்ற அளவுக்கு இஸ்ரவேலர்களின் இரண்டாவது வருகையால் பீடிக்கப்பட்டிருக்கிறீர்கள். அன்பைக் கொடுப்பது என்பதன் பொருள் உங்களுக்குத் தெரியாது. உங்களுக்கு தெரிந்ததெல்லாம் சண்டையிடுவது தான். நான் உங்களோடு போரிடுகிறேன் பென்கானான் நான் உங்களைத்தோற்கடிக்கப் போகிறேன் நான் உங்களை மறந்து விடப்போகிறேன்.'' அவள் கோபத்தால் ஏற்பட்ட கண்ணீர் கண்ணில் நிறைந்திருக்க தன் கட்டில்அருகில் வரும்போது அரி மௌனமாக இருந்தான்.

‘‘என்றைக்கோ ஒரு நாளைக்கு உங்களுக்கு யாரும் உண்மையாகவே தேவைப்படும். அது ஒரு பயங்கரமான விஷயமாக இருக்கும். ஏனென்றால் உண்மையாக உதவியைக் கேட்கும் திறமை உங்களிடம் இல்லை.’’

‘‘நீ ஏன்அந்த நடைபயணத்தைத் தொடங்கக் கூடாது’’? அவன்கேட்டான்

‘‘அந்த நடைபயணத்தைத் தொடங்கத்தான் போகிறேன். ஆனால், தொடர்ந்து நடந்து கொண்டிருக்கப் போகிறேன். நல்ல தாதியான கிற்றி பிற மென்றின் கதை முடிந்து விட்டது. சில நாட்களில் பால்மாக்கிலிருந்து யாராவது உங்களைப் பராமரிக்க வந்து சேருவார்கள். அதுவரை நீங்கள் உயிரோடிருப் பீர்கள்.’’

கிற்றி கழன்று திரும்பி கதவைத் திறந்தாள்.

‘‘கிற்றி மனிதனைப் பற்றி நீ வைத்திருக்கும் உயர்ந்த நோக்கு...உனக்கு என்ன வேண்டும்?’’

‘‘அழுவது என்ன என்று தெரிந்த ஒரு மனிதன் வேண்டும். உங்களுக்காக நான் வருத்தப்படுகிறேன், அரி பென் கானான்.’’

கிற்றி அதே காலையிலேயே டலியாற் எல் காமிலை விட்டுப் புறப்பட்டு விட்டாள்.

o

ஏழாவது அத்தியாயம் பத்தொன்பது

புரூஸ் சுதர்லாண்ட் கிற்றிக்காக ஹைபாவின் கியோன் ஹோட்டலில் இரண்டு நாட்களாகத் காத்திருந்தார். மூன்னொரு போதும் யாரையும் கண்டு பெறாத மகிழ்ச்சியைப் பெற்றதாகஅவள் நினைத்தாள். இரவுணவின் பின், கார் பேல் மலையின் சரிவுகளில் பரந்திருந்த நகரின் யூத பகுதியான ஹார் ஹா கார் மேலுக்கு சுதர்லாண்ட் காரை ஓட்டிச் சென்றார்.

அவர்கள் பனோரமாவீதியைப் பார்த்தபடி இருந்த ஒரு இரவு விடுதியினுள் சென்றனர். அங்கிருந்து கீழேயிருந்த நகரம், துறைமுகம், ஆக்ரே வரையான குடாவின் நீளக் கரை முழுவதுமாக பகுதி ஆகியவற்றைப் பார்க்கக் கூடியதாக இருந்தது.

''அந்தப் பிள்ளை எப்படியிருக்கிறாள்.?

,'நலமாயிருக்கிறாள். நீங்கள் வந்ததும் மகிழ்ச்சியாயிருக்கிறது.'' கிழே தெரிந்த காட்சியைக் கிற்றி பார்த்தாள்.நான் இந்த ஹார் ஹா கார்மேலுக்குப் பலஸ்தினத்துக்கு வந்த முதல் நாளிரவே வந்தேன். அரி என்னை இங்கே மேலே அழைத்து வந்தார். எங்களுடைய சம்பாஷணை பதட்டத்துடன் வாழ்வது பற்றி இருந்தது என்று நினைக்கிறேன்.

'இங்கிருக்கும் யூதர்கள், நீங்கள் அமெரிக்காவில் பேஸ் போல் விளையாட்டோடு வாழ்வது போல் துப்பாக்கிகளோடு வாழப் பழகிவிட்டார்கள். அது அவர்களைக் கடும் போக்குடைய மக்களாக ஆக்கிவிட்டது.'

''என்னால் நேராக சிந்திக்க முடியாத அளவுக்கு இந்த மண் என்னைப் பாதித்து விட்டது. எவ்வளவுக்கு நான் விளக்கம் பெற முயற்சிக்கிறேனோ அவ்வளவுக்கு உணர்வுகளும், இனம் புரியாத சக்திகளும் என்னைச் சிறைப்படுத்துகின்றன. இவை என்னை பூரணமாக விழுங்குமுன் இங்கிருந்து அகன்று விட வேண்டும்.''

''கிற்றி, டொல் புத்திரமாக இருக்கிறான் என்று எங்களுக்குத் தெரியும் அவன் மிஸ்மாரில் மறைந்திருக்கிறான். நான் இன்னும் கரேனுக்குச் சொல்லவில்லை.''

''அவருக்குத் தெரியத்தான் வேண்டுமென நினைக்கிறேன். புரூஸ் இங்கே என்ன நடக்கப் போகிறது?''

''யாருக்குத் தெரியும்?''

''ஐ நா. அரபுக்களுக்குப் பணிந்து விடும் என்று நினைக்கிறீர்களா?''

,,அப்படியானால் ஒரு யுத்தம் மூழும்.',

இசைக்குழுவினர் ஆரவாரமான இசையொன்றை எழுப்பினர். அங்கே நிகழ்ச்சியை ஒழுங்கு படுத்திக் கொண்டிருந்தவர் ஹீப்ரூவில் சில கதைகளைச் சொல்லிக் கவர்ச்சியான, உயர்ந்த ''ஷப்றா'' இளைஞனொருவனை அறிமுகப் படுத்தினார். அந்த இளைஞன் வழக்கமான கழுத்துத் திறந்த வெள்ளை மேல் சட்டை அணிந்து, சுறுத்த மீசையுடனும், ஸ்ராார் ஒவ் டேவிற் பதக்கத்துடன் கூடிய சிறிய சங்கிலி ஒன்றை கழுத்தில் அணிந்த வண்ணமாகக் காணப்பட்டான். அவன் ஒரு கிற்றாரை மீட்டி, இஸ்ரேலியர்கள் திரும்பவும் வாக்குப் பண்ணப் பட்ட பூமிக்கு வருவது பற்றிய மனதையுருக்கும் தேசபக்திப் பாடல் ஒன்றைப் பாடினான்.

''க ன் டப்னாவில் என்ன நடக்கப் போகிறது என்று எனக்குத் தெரிய வேண்டும்.''

அராபியர்கள் ஐம்பதினாயிரம் பலஸ்தினியர்களைக் கொண்ட இராணுவத்தையும். எல்லைகளுக்கப்பாலிருந்து இருபதினாயிரம் கூலிப்படையினரையும் திரட்ட முடியும். 36, 39 களின் குழு பங்களில் இப்படியான கூலிப்படையினருக்குத் தலைமை தாங்கிய காலூக்ஜி என்னும் மனிதன் இருக்கிறான். அவன் ஏற்கனவே கொலைகாரக் குப்பல் ஒன்றைச் சேர்த்தெடுப்பதில் சுறுசுறுப்பாக இருக்கிறான். யூதர்களை விட அரபுக்களுக்கு ஆயுதங்களைப் பெற்றுக் கொள்வது இலகுவாயிருக்கிறது. தங்களைச் சூழ சிநேகபூர்வமான பிரதேசங்களைக் கொண்டிருக்கிறார்கள்.

'' மிகுதிக் கதை என்ன புரூஸ்?''

''மிகுதிக் கதை?... எகிப்து, ஈராக் இரண்டுமே ஐம்பதினாயிரம் பேர கொண்ட படைகளை வைத்திருக்கின்றன. எகிப்திய படைகளில் சவூதிஅராபியப் படைகள் சிலவும் இருக்கும். சிரியாவும், லெபனானும் இன்னும் இருபதினாயிரம் பேரைக் களத்தில் இறக்கக்கூடும். ட்ரான்ஸ்-ஜோர்தான் அரபு லீக் படையணியை வைத்திருக்கிறது. இதில் ஆகப்பிந்திய வகை ஆயுதங்களுடன் மிகத் திறமையான வீரர்கள் இருக்கிறார்கள. தற்போதைய நாட்களின் வரைவிலக்கணங்களில் படி அரபுக்களிடம், முதல் தரமான இராணுவங்கள் இல்லை. ஆயினும் பிரங்கிகள், ஆயுதங்கள், விமானங்கள் சகிதம் பல நவீன பிரிவுகளை வைத்திருக்கிறார்கள்.''

''நீங்கள் ஹகானாவுக்கு ஆலோசனை வழங்கினீர்கள். நீங்கள் என்ன சொன்னீர்கள்?''

ஹைபாவிலிருந்து ரெல் அவிவ் வரை ஒரு தற்பாதுகாப்பு வலயத்தை உருவாக்கி அந்தப் பிரதேசத் துண்டைப் பாதுகாக்க முயற்சிக்குமாறு கூறினேன்.

கிற்றி, கதையின் மறுபக்கம் அவ்வளவு நல்லாயில்லை, யூதர்கள் நான்கைந்தாயிரம் பால்மாக் துருப்புகளையும், ஐம்பதினாயிரம் வரையான ஹகானாவின் கடதாசித் துருப்புச்சளையும் வைத்திருக்கிறார்கள். ஏனெனில், அவர்களிடம் பத்தாயிரம் ரைபிள்களே இருக்கின்றன. மக்கபீஸ்களும், இலகுரக ஆயுதம் தரித்த ஆயிரத்துச்சுக் குறைவானவர்களையே களத்தில் இறக்க முடியும். இவர்களிடம் பீரங்கிகளில்லை. இவர்களுடைய விமானப்படை மூன்றே மூன்று வைட்பர் கப் (Piper cubs) களைக் கொண்டது. ஹைபாவில் கட்டப்பட்டிருக்கும் சட்டவிரோதக் குடியேற்றக் கப்பல்கள்தான் அவர்களின் கடற்படை. போர் விரர்களைப் பொறுத்தவரை நாற்பதுக்கு ஒன்று விகிதத்திலேயே, குறைவு பட்டிருக்கிறார்கள். சனத்தொகை நூறுக்கு ஒன்று என்ற விகிதம், தளபாடங்களில் ஆயிரத்துக்கு ஒன்று என்ற விகிதம், நிலப்பரப்போ ஐயாயிரத்துக்கு ஒன்று என்ற விகிதத்தில் இருக்கிறது.ஹகானா என்னுடையதும், பல இராணுவ ஆலோசகர்களதும், ஒரு இறுக்கமான தற்பாதுகாப்புப் பிரதேசத்தினுள் இருந்து கொள்ளுமாறு கூறிய ஆலோசனையை நிராகரித்து விட்டார்கள். ஒவ்வொரு மொஷாவிலும், ஒவ்வொரு கிபுட்சிலும், ஒவ்வொரு கிராமம் கிராமமாகவும் போராடப் போவதாகச் சொல்கிறார்கள். அது கான் டப்னாவையும் உள்ளடக்கும். மேலும் கேட்க விரும்புகிறாயா?''

கிற்றியின் குரல் தளர்ந்திருந்தது. ''இல்லை .. நான் போதியளவு கேட்டு விட்டேன். இது விசித்திரமாக இல்லையா புரூஸ்.?''

''அந்த இளம் பால்மாக் வீரர்களுடன் ஒரு நாளிரவு தபோர் மலையில் இருந்தபோது அவர்கள் தோற்கடிக்கப்பட முடியாதவர்கள் என்று எனக்குத் தோன்றியது... கடவுளின்போர் வீரர்கள் என்று எண்ணத்தோன்றியது. நெருப்பு வெளிச்சமும், நிலவு வெளிச்சமும் எனக்கு விசித்திரமான செயல்களைச் செய்து விடுகின்றன.

''எனக்கும் அப்படித்தான் கிற்றி. நான் எனது இராணுவ சேவையில் தெரிந்து கொண்ட எல்லாமே யூதர்களைவெல்ல முடியாது என்றுகூறுகின்றன. ஆனால் இந்த நிலங்களில் அவர்கள் செய்திருக்கும் வேலைகளைப் பார்த்தபின் புதுமைகளில் நம்பிக்கை கொள்ளாவிட்டால் நீ ஒரு நடக்கக்கூடியதை உணர்பவளாக(realst) இருக்கமாட்டாய்.''

ஓ! புரூஸ் அந்த வகையில் என்னால் நம்பக் கூடுமானால்.''

"யூதர்கள் வைத்திருக்கும் இராணுவம் தான் என்ன மாதிரியானது? துப்பாக்கிகள் இல்லாத, பதவிகள் இல்லாத, சீருடைகள் இல்லாத, சம்பளம் இல்லாத, யுவதிகளும் பையன்களும். பால்மாக் கொமாண்டர் முப்பதே வயதானவன். அவனுடைய மூன்று பிரிகேட் கொமாண்டர்களும் இருபத்தைந்து வயதுக்குட்பட்டவர்கள். ஆனால் இராணுவத்தோடு சம்பந்தப்பட்ட எவரும் நினைத்துப் பார்க்க முடியாத விஷயங்களுமுண்டு. அதையும் அரபுக்கள் ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டும் தாங்கள் வைத்திருப்பதைப் (காதுகாக்க கடைசி ஆண், பெண், குழந்தைகளை இழக்க யூதர்கள் தயாராக இருக்கிறார்கள். அரபுக்கள் சிந்தத் தயாராக இருக்கும் இரத்தம் எவ்வளவு?''

''அவர்களால் வெல்ல முடியுமா? நீங்கள் உண்மையாகவே அதை நம்புகிறீர்களா?''

இதை ஒரு இறைவனின் தலையீடு என்று சொல். அப்படிச் சொல்லுவாயானால்.. அப்படி இருக்கலாம். யூதர்களிடையில் ஏராளமான அரி பென் கானான்கள் இருக்கிறார்கள் என்று நாம் அதைச் சொல்லலாம்.

சிற்றி அடுத்த நாள் கான் டப்னா திரும்பினாள். ஜோர்தானா பென் கானான் தனக்காகத் தன் காரியாலயத்தில் காத்துக் கொண்டிருப்பதைக் கண்டு வியப்புற்றாள். செந்தலையுடைய அந்தப் பெண் (ஷப்ரா சிறிது அசௌகரியத்துடன் காணப்பட்டாள். ''என்ன வேண்டும் ஜோர்தானா? கிற்றி அமைதியாகக் கோட்டாள். ''எனக்கு நிறைய வேலையிருக்கிறது.''

நீங்கள் அரிக்குச் செய்தவைகளைப் பற்றிக் கேள்விப்பட்டோம். ஜோர்தானா மனம் குறுகுறுத்த நிலையில் முணுமுணுத்தாள். ''அதற்காக நான் மிகவும் நன்றியுடையவளாக இருப்பேன் என்று உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.''

''உன்னுடைய தகவல் சேகரிப்பு - ஆய்வுப் பிரிவு மீண்டும் செய்திகளை அனுப்பத் தொடங்கி விட்டது போலிருக்கிறது. என்னுடைய பிரயாணத்தைத் தள்ளிப் போட்டதற்காக மன்னித்துக் கொள்.''

ஜோர்தானா எதுவும் பேசமுடியாது விழித்தாள். பதில் ஒன்றும் சொல்லவில்லை.

''இந்த உதவியை நான் பிரத்தியேகமாகச் செய்ததாகக் கருதிக் கொள்ள வேண்டாம்.'' கிற்றி சொன்னாள், ''இதையே நான் ஒரு காயப்பட்ட நாய்க்கும் செய்திருப்பேன்.''

கிற்றி போவதற்கான திட்டங்களைத் தீட்டினாள். அப்போது டாக்டர் லிப்பர்மான் வற்புறுத்தி மேலும் சில வாரங்கள் இருக்கப்பண்ணி விட்டார். இறுதியாக அலியாபெற்றினால் கடத்தி வரப்பட்டிருந்த நூறு பிள்ளைகளைப் பராமரிக்கச் சேர்க்கப்பட்டிருந்த புதிய அலுவலர்களுக்கும் பயிற்சியளிக்க வேண்டியிருந்தது. இல்லிடங்கள் முடிந்தளவு விரைவாக நிறுவப்பட்டன. இடம் பெயர்ந்தவர்கள் முகாம்களில் இரண்டு வருடங்களுக்கு மேலாக இருந்த இப்பிள்ளைகள் மிக மோசமான நிலையில் இருந்தார்கள்.

இன்னொரு முறை கிற்றி பயணத் திட்டங்களைத் தீட்டினாள். விரைவில் கிர்றியும், கரேனும் கான் டப்னாவிலிருந்தும், பலஸ்தீனத்திலிருந்தும் வெளியேற இன்னும் இருநாட்களே எஞ்சியிருந்தன.

1947 ஆவணி முடிவின்போது யுன்ஸ்கொப் ஜெனிவாவிலிருந்து, பெரும் பான்மையினர், சிறுபான்மையினருக்கான தங்கள் திட்டங்களை அறிவித்தனர். ஜெருசலேமைச் சர்வதேசப் பிரதேசமாகக் கொண்டு (International Territory)

வேறு வேறு யூத அரபுப் பிரதேசங்களாக நாட்டைப் பிரிவினைக்குட்படுத்தும் திட்டங்கள் அறிவிக்கப்பட்டன. நீதியான தீர்வு பற்றிப் பிரச்சினை இருக்கவில்லை. பலஸ்தீனத்துக்கான ஐ. நா. சபை விசேட கொமிட்டி உடனடியாகவே மாதம் அறாயிரம் யூதர்கள் ஐரோப்பாவின் இடம்பெயர்ந்தவர்கள் முகாம்களில் இருந்து பலஸ்தீனத்துக்குள் வர அனுமதிக்கப்பட வேண்டும் என்றும், யூதர்களுக்காக நில விற்பனை, மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டும் எனவும் கோரியது.

நெகெவ் பாலை வனம் (Negev Desert) தங்கள் பகுதியுடன் இணைக்கப்பட வேண்டும் என்று யூதர்கள் விண்ணப்பம் செய்து கொண்டனர். அரபுக்களுக்குப் பல லட்சக்கணக்கான சதுரமைல்கள் கொண்ட அபிவிருத்தி செய்யப்படாத பயன்கொடாத நிலங்கள் இருந்தன. சில ஆயிரம் சதுர மைல்களைக் கொண்ட இந்த நிலப்பகுதியைப் பயன்பாட்டுக்கு உட்படுத்தலாம் என்ற நம்பிக்கையில் யூதர்கள் கோரினர். ஐக்கிய நாடுகள் கொமிட்டியும் அதற்காக உடன்பட்டது. அரை நூற்றாண்டு கால ஏமாற்றங்களாலும், காட்டிக் கொடுப்புகளாலும் சோர்ந்து போயிருந்த யூதர்கள் மையமும், உலக சியோனிஸ்டுகளும் இந்த விட்டுக் கொடுப்புகளுக்கு இணங்குவதாக அறிவித்தன. பிரித்து வழங்கப்பட இருந்த நிலப்பகுதி, நெகெவ் பாலைவனத்தையும் சேர்த்துப் பார்த்தாலும் ஒரு குறைப்பிரசவமான நாடொன்று என்றுதான் சொல்ல முடியும். உண்மையில், அது ஒடுக்கமான இடங்களால் இணைக்கப்பட்ட மூன்று நீளப் பிரதேசங்களைக் கொண்டு ஒரு சோசேஜ் (Sausages) தொடர்போல் இருந்தது. அரபுக்களுக்கும், பரப்பளவில் கூடிய ஒடுக்கமான வழிகளால் இணைக்கப்பட்ட மூன்று நீளப் பிரதேசங்கள் கிடைத்தன. யூதர்கள் தங்கள் நித்திய நகரமான ஜெருசலேமை இழந்தனர். ஷரோன் பகுதியும், சதுப்பு நிலங்களிலிருந்து அவர்கள் மீட்டெடுத்த கலிலியின் பகுதிகளும் அவர்களுக்குக் கிடைத்தன. நெகெவ் ஒரு பயனற்ற பிரதேசம் ஆனால் மேலும் போராடுவதில் பயனில்லை. இது ஒரு அரக்கத்தனமான தீர்வு தான். ஆனால் அவர்கள் அதை ஏற்றுக் கொண்டனர்

யூதர்கள் பதிலளித்தனர். அரபுக்களும் அப்படியே. பிரிவினைப் போருக்கு வழிவகுக்கும் என்றனர். அரபுக்களுடைய பயமுறுத்தல்களுக்கு மத்தியிலும், யுன்ஸ்சொப் தற்போதைய பிரிவினைத் திட்டத்தைப் பொதுச்சபைக்குப் புரட்டாதி நடுப்பகுதியில் நியூயோர்க்கில் சமர்ப்பிக்கத் தீர்மானித்தது.

எல்லா இறுதி ஆயத்தங்களும் செய்யப்பட்டிருந்தன. திரும்பவும் கரேனும் கிற்றியும் போகும் நாளுக்கு முதல் நாள் இரவு ஒன்பது மணி. காலையில் புரூஸ் சுதர்லாண்ட் அவர்களை விட்டார் விமான நிலையத்துக்கு வாகனத்தில் அழைத்துச் செல்வார். அன்று மாலையே ரோமுக்குப் பயணமாவார்கள். பாரமான ட்ரங்குப் பெட்டிகள் முன்னதாகவே கப்பலில் அனுப்பி வைக்கப்பட்டு விட்டன. கொட்டகைகள் காலி செய்யப்படுத்தலுக்குத் தயாராக இருந்தன.

கிற்றி தன் காரியாலயத்தில், இறுதியாகப் பார்வையிட்டு விட்டுக் கோவையில் போட வேண்டிய ஆவணங்கள் சிலவற்றோடு அமர்ந்திருந்தாள். அவள் செய்ய வேண்டி இருந்தவெல்லாம் அலுமாரியில் அவற்றை வைத்து விட்டு லாச்சியை மூடிவிட்டுக் கதவுக்கு வெளியில் நடப்பது மட்டுந்தான். இம்முறை நிரந்

தரமாகவே அவள் முதல் கோவையைத் திறந்து மேலேயே இருந்த ஒற்றையை எடுத்துத் தன் குறிப்புகளைக் கவனித்தாள்.

மின்னா (தகப்பன் பெயர் தெரியாது) வயது 7. மின்னா ஒஸ்விற்ஸ் சித்திரவதைத் தடுப்பு முகாமில் பிறந்தாள். பெற்றோர் யாரெனத் தெரியாது. அவள் போலாந்து நாட்டைச் சேர்ந்தவள் என்று அனுமானிக்கிறோம். அவள் அலியா பெற்றினால் வருட ஆரம்பத்தில் உள்ளே கடத்திவரப்பட்டிருந்தாள் அவள் முதன் முதல் கான் டப்னாவுக்குக் கொண்டு வரப்பட்டபோது, உடலளவில் மிகப் பலவீனமானவளாக இருந்தாள். சுகவீனமாக இருந்தாள். வேறுபல குழப்பங்களும் இருந்தன.

றெபெட் டுபுவாய், வயது 16. பிரான்ஸ் நாட்டவன். றொபெட்பேர்கன் —டெல்சன் சித்திரவதைத் தடுப்பு முகாமில் பிரிட்டிஷ் படையினரால் கண்டு பிடிக்கப்பட்டான். அந்த நேரத்தில் அவன் பதின்மூன்று வயதுடையவனாகவும், ஐம்பத்தெட்டு இறாத்தல் எடையுடையவனாகவும் இருந்தான். இந்தப் பையன் தன் தாய், தந்தை, சகோதரன், ஆகியோரின் மரணங்களை நேரில் பார்த்திருந்தான். இவனுடைய சகோதரி ஒருத்தி, ஜெர்மன் துருப்புகளுடன் பலவந்தமாக விபசாரம் செய்யப்பண்ணப்பட்டு, தற்கொலை செய்து கொண்டிருந்தாள். றொபெட் விரோதமனப்பான்மையைக் காட்டுகிறான். அத்தோடு .....

சாமுவேல் காஸ்னோவிற்ஸ், வயது 12. எஸ்ரோனிய நாட்டவன். குடும்பத்தில் எவரும் தப்பி பிழைத்திருப்பதாகத் தெரியவில்லை. சாமுவேல் கிறீஸ்தவ குடும்பமொன்றின் கீழ் அறையில் ஒழித்திருந்து பின் காட்டுக்குள் செல்ல நிர்ப்பந்திக்கப்பட்டான். அங்கு இரு வருடங்கள் தனிமையாக வாழ்ந்தான்.

றொபெட்டோ பூசெல்லி, வயது 12. இத்தாலிய தேசத்தவன். குடும்பத்தவர். எவரும் தப்பியிருப்பதாகத் தொரியவில்லை. ஒஸ்விற்சில் விடுக்கப்பட்டான். தாக்குதல் காரணமாக வலது கரம் செயலிழந்தது இருப்பதைக் கண்டோம்.

மார்சியா கிலாஸ்கின். வயது 13. றுமேனிய தேசத்தவள். குடும்பத்தினர் எவருமில்லை. லச்சவ்வில் கண்டுபிடிக்கப்பட்டாள்.

ஹான்ஸ் பெல்மான் வயது 10. ஒல்லாந்து நாட்டவன். குடும்பத்தினர் எவரும் உயிருடன் இருப்பதாகத் தெரியவில்லை. ஒஸ்விற்சில் காலைப்பட்டாள். கிறீஸ்தவர்களால் மறைத்து வைக்கப்பட்டிருந்தாள் .....

கோவைகள் தொடர்ந்து இந்தப் பாணியிலேயே போய்க் கொண்டிருந்தன. ''எவரும் தப்பிப் பிழைக்கவில்லை.''

ஒஸ்விற்சில் இருந்த பிள்ளைகளுக்கு எப்போதும் தோன்றும் பயங்கரக்கனவுகள் இவளுக்கும் உண்டு. அவள் எப்போதும் சூட்கேஸ் ஒன்றை அடுக்குவது போல் கனவு காண்கிறாள். இது ஒரு சாவின் அடையாளம். ஏனெ

வில் முகாமிலிருப்போர் பேர்க்கினோவின் விஷவாயுக்கூடங்களுக்கு அனுப்பப் படுவதற்கு முதல் நாளிரவு சூட்கேஸ்கள் அடுக்கப்பண்ணப்படுவது வழக்கம் மனக்கின்ற புகையைக் கனவில் காண்பது எரிகூடங்களில் இருந்து வரும் எரியும் தசைகளின் மணங்களைக் குறிக்கும்.

படுக்கையில் சலம் விடுதல்.

வெளிப்படையான எதிர்ப்பு மனப்பான்மை.

பயங்கரக் கனவுகள்.

சண்டையிடும் மனப்பான்மை (Belligerence)

கிற்றி முன்பொரு முறை தான் ஹரியற் சோல்ஸ்மானுக்கு எழுதிய கடிதத்தின் பிரதியொன்றைப் பார்வையிட்டாள்.
என் அருமைச் சினேகிதியே!

குற்றமிழைக்கக்கூடிய நிலை பைத்தியகாரத்தனத்தின் (Psycho Paths) எல்லையில் ஊசலாடிய பிள்ளைகள் விரைவாகக் குணமடைந்ததற்கும், வியத்தகு பலன்களைக் காட்டியதற்கும், அடிப்படையான பொதுவான காரணி என்ன என்று என்னைக் கேட்டிருந்தீர்கள். உங்களுக்குத்தான் இதற்கான பதில் என்னைவிட தெரியக்கூடும். இந்தப்பதில் முதல் தடவையாக உங்களை ஜெரு சலேமில் சந்தித்த போது எனக்கு நீங்களே கூறியிருந்தீர்கள். புதுமையான இந்த மருந்து ''எரெற்ஸ் இஸ்ரேல்'' என்று அழைக்கப்படுகிறது. இது இயற்கைக்குப் புறம்பானதாகத் தெரியுமளவிற்கு இங்கு பெலமாக இருக்கிறது. அவர்கள் உயிர் வாழ்ந்து தங்கள் மண்ணுக்காகப் போராடுவதை மட்டுமே விரும்புகிறார்கள். இப்படியான சக்தியையும், ஊக்கத்தையும் வயது வந்தவர்களில் கூட நான் ஒருபோதும் காணவில்லை. ... ...

கிற்றி பிறமென்ற் கோவையை மூடினாள்.

அவள் எழுந்து நின்று பல கணங்களுக்கு காரியாலயத்தைச் சுற்றி வரப் பார்த்துக் கொண்டு நின்றாள். பின் விரைவாக விளக்குகளை அணைத்துவிட்டுத் தனக்குப் பின்னால் கதவைப் பூட்டிக் கொண்டாள். அக்கட்டிடத்தின் வெளியே ஒரு கணம் நரித்தாள். எஸ்தர் கோட்டைக்குச் செல்லும் மலைவழியின் இடை நடுவில் பாசறைத் தீ ஒன்று கொழுந்து விட்டெரிவதை கண்டாள். பத்து, பன்னிரெண்டு, பதினான்கே வயதான காட்னா போர்வீரர்களான குழந்தைகள் பாடிக் கொண்டும், ஹோரா ஒன்றை ஆடிக்கொண்டும் இருக்கிறார்கள் போலிருக்கிறது.

அவள் தன் டோர்ச் லைட்டை அடித்துக் கொண்டு புல்தரையைக் கடந்தாள். புதிய அகழிகள் வெட்டப்பட்டிருந்தன. பிள்ளைகளின் இல்லிடங்களின் அருகாமையில் மேலும் பெரிய பதுங்கு குழிகள் அமைக்கப்பட்டிருந்தன.

டப்னாவின் சிலை வழமைபோல் காவல் கடமையில் நின்றிருந்தது.

''ஷலோம் கிற்றி'' பொழுதுபோக்கு மண்டபத்தை நோக்கி ஓடிக்கொண் டிருந்த சிறியவர்களின் குழுவொன்று உரக்கக் கூவிக்கொண்டே சென்றது.

அவள் தன் கொட்டகைக் கதவைத் திறந்தாள். சூட்கேஸ்கள் எல்லாம் சுவரருகே வரிசையாக அடுக்கப்பட்டிருந்தன. எல்லாவற்றிலும் பெயர் சீட்டுக்கள் காணப்பட்டன. அழகுணர்வுடன் கரேனாலும், தன்னாலும் வைக்கப்பட்டிருந்த அழகுப் பொருட்கள் இன்றி அறை வெறுமையாகக் காணப்பட்டது.

''கரேன் நீ இருக்கிறாயா?''

சமையலறை மேசையின் மேல் ஒரு குறிப்புக் காணப்பட்டது.

அன்புள்ள கிற்றி,

என்னுடைய நண்பர்கள் ஒரு பிரியாவிடை பாசறைத் தீயைக் கொண் டாட விரும்பினார்கள். அதிக நேரம் வெளியே தாமதிக்க மாட்டேன். அன் புடன்

கரேன்.

கிற்றி ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டு அறைக்குள் அங்கும் இங்கும் அமைதியின்றி உலாவினாள். அவள் பள்ளத்தாக்கில் தெரிந்த வெளிச் சங்களை மறைக்க ஜன்னல் படுதாக்களை இழுத்துவிட்டாள். அப்போதுதான், ''தன்னுடைய பிள்ளைகள்'' தனக்காகப் பின்னிய துணியைப் பிடித்துக் கொண் டிருப்பது அவள் கவனத்துக்கு வந்தது. அவர்களில் பத்துப்பேர் ஏற்கனவே யூதர்களின் அந்த சோகமான சிறிய ராணுவமான பால்மாக்கில் இணைய கான் டப்னாவிலிருந்து சென்று விட்டிருந்தார்கள்.

உள்ளே புழுங்கிக் கொண்டிருந்தது. அவள் வெளியே போர்டிக் கோவுக்குச் சென்றாள். காற்று ரோஜாப் பூக்களின் மணத்தால் பரிமளித்துக் கொண்டி ருந்தது. மரங்கள், பற்றைகள், புல்தரைகளுக்குள் உள்ளடக்கப்பட்டு அமைக்கப் பட்டிருந்த கொட்டகைகளுக்கு நடுவே இருந்த மண் பாதையால் நடந்துசென்றாள். அவள் பாதையின் முடிவுக்கு வந்து, திரும்பி நடக்க முயன்றபோதுதான் டாக்டர் லிப்பர் மானின் அறையில் எரிந்து கொண்டிருந்த மின்விளக்கொளி யால் கவரப்பட்டாள்.

பாவம் கிழவர் என்று கிற்றி நினைத்தாள். அவருடைய மகன், மகள், இருவருமே சர்வகலாசாலையை விட்டு பால்மாக்கின் நெகெவ் பிரிகேட்டில் இணைந்து எங்கோ தூரத்தில் இருந்தார்கள். அவள் சுதவருகே நடந்து சென்று கதவைத் தட்டினாள். டாக்டர் லிப்பர்மானைப் போலவே, வயதான, மகிழ்ச் சிகரமான, அவருடைய வீட்டைப் பராமரிப்பவன், அவளை அவரது அறைக்கு அழைத்துச் சென்றார். அந்தச்சிறிய தோற்றம் கொண்ட கூன் முதுகுக் கிழவர் ஏதோ மட்பாண்ட துண்டிலிருந்த புராதன ஹீப்ரூவடிவங்களை மொழிபெயர்க்க

முனைந்து கொண்டிருந்தார். மெலிதான இசையில் சூமான் ராகமாலை ஒன்று வானொலியில் ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தது டாக்டர் லிப்பர்மான் நிமிர்ந்து கிற்றியைகண்டவர் தனது உருப்பெருக்கிக் கண்ணாடியைக் கீழே வைத்தார்.

''ஷலோம்'' கிற்றி சொன்னாள்.

அவர் சிரித்தார். இதற்கு முன் கிற்றி ஒரு போதுமே ஹிப்ரூவில் வாழ்த்தியவள் அல்ல.

''ஷலோம் கிற்றி. நல்ல நண்பர்கள் ஒருவருக்கொருவர் பிரியாவிடை கூறிக்கொள்ள அருமையான வார்த்தை அது'' என்றார்.

''ஷலோம் ஒரு அழகிய வார்த்தை தான். நல்ல நண்பர்கள் ஒருவரை யொருவர் சந்திக்கும் போது ஹலோ சொல்வதும் கூடஒரு அருமையான வார்த்தையாகும்.''

''கிற்றி..... என் அன்பு மகளே?''

ஆம். டாக்டர்... ஷலோம்... நான் கான் டப்னாவில் தான் இருக்கப் போகிறேன். நான் சொந்தமானது இந்த மண்ணுக்குத்தான்.

3 ஆம் பாகம் முற்றிற்று.

பகுதி - 04

மகிமையில் விழித்திருத்தல்

என்னில் இரக்கமாயிரும் கடவுளே, என்னில் இரக்கமாயிரும். எனது ஆத்மா உம்மில் நம்பிக்கை கொண்டிருக்கிறது. இந்தப் பிரச்சினைகள் முடியும் வரை உமது சிறகுகளின் நிழலில் என் அடைக்கலத்தைத் தேடிக் கொள்வேன்.

சொர்க்கத்திலிருந்து உதவி அனுப்பி என்னைக் காப்பார். அவரை நிந்தனை செய்தால் அக்குற்றம் என்னை விழுங்கி விடும். கடவுள் தன் இரக்கத்தையும் தன் உண்மையையும் அனுப்புவார்.

என்னுடைய ஆன்மா சிங்கங்களின் இடையில் இருக்கிறது. நெருப்பின் மேலிருக்கும் அவற்றின் இடையில் கூட படுத்துக் கொள்கிறேன். மனிதரின் புத்திரருக்குக் கூட பற்களே ஈட்டிகளும், அம்புகளுமாய் இருக்கின்றன. அவர்களுடைய நாக்குகள் கூரான வாள்களைப் போன்றவை.

என் காலடிகளுக்காக ஒரு வலையை விரித்திருக்கிறார்கள். எனது ஆத்மா தாழ்மையாயிருக்கிறது. அவர்கள் என் முன்னால் அகழ்ந்த குழியின் மத்தியில் தாங்களே வீழ்ந்தார்கள்.

என் மகிமையே எழுந்திரு ..... நான் விடியலை எழுப்புவேன.

தாவீதின் ஐம்பத்தேழாவது சங்கீதம்
(57 th. Psalm of David)

அத்தியாயம் ஒன்று

1947 - கார் காலம்

ஐக்கிய நாடுகள் சபை.
பிளஷ்ஷிங் மெடோ, நியூயோர்க்.

ஆறாயிரம் வருடப் பழமையான யூதர்களின் பிரச்சினை மனிதனின் மனச் சாட்சிக்கு முன்னால் வைக்கப்பட்டிருந்தது.

உலக சியோனிஸ்டுகளை சேர்ந்த கெயிம் வெயிஸ்மானும், மூத்தராஜதந்திரியான பராக் பென் கானானும் பன்னெரண்டு பேர் கொண்ட தூதுக்குழுவொன்றுக்குத் தலைமை தாங்கி, பலப்பரீட்சைக்காக, பிளஷ்ஷிங் மெடோவந்திருந்தார்கள். வருடக்கணக்கான ஏமாற்றங்களாலும், துன்பங்களாலும், பண்படடிருந்த இந்தத் தூதுக் குழுவினர் எந்தவிதமான மாயைகளோடும் வரவில்லை.

சப்பிரதாய பூர்வமற்ற தலைமைச் செயலகம் ஒன்று டாக்டர் வெயிஸ்மானின் பன்ஹற்றன் நடுவில் அமைந்திருந்த வீட்டில் அமைக்கப்பட்டது. குழுவினருக்கு வாக்குகளை வெல்லும் வேலை ஒதுக்கப்பட்டது. வெயிஸ்மானோ உலகெங்கும் வாழும் யூதர்களை தங்கள் தங்கள் அரசாங்கங்களின் கவனத்தை ஈர்க்கவும், தேவையான அழுத்தங்களைப் பிரயோகிக்கவும் தூண்டும் வேலையைத் தனதாக எடுத்துக் கொண்டார்.

பராக் பென் கானான் அனுமதியாக, பின்னணியிலேயே தன் கடமைகளை மேற்கொண்டார் மணிக்கு மணி சமநிலையில் ஏற்படும் மாற்றங்களைக் கண்காணிட்டதும், பலவீனமான இடங்களை ஆய்வுசெய்து கண்டறிந்து, பலப்படுத்துவதும், ஏற்படக்கூடிய திடீர் மாற்றங்களுக்கு ஈடுகொடுத்தது. தன் ஆட்களை அதற்கேற்ப ஒதுக்கீடு செய்வதும், குழுநிலை விவாதத்துக்குத் தலைமை தாங்கிச் செல்வதும் அவர் கடமைகளாகவிருந்தன.

ஆரம்ப பாராளுமன்றப் பாணி இழுத்தடிப்புகளுக்குப் பிறகு பலஸ்தீனிய பிரிவினை நிகழ்ச்சி நிரலில் இடம் பிடித்துக் கொண்டது.

அரபுக்களோ. வெற்றி நிச்சயம் என்ற கணிப்புடனேயே லேக் சக்சஸ் (Lake Success)) சென்றிருந்தனர். அவர்கள் முஸ்லீம் நாடாகிய ஆப்கானிஸ்தானுக்கும், புராதன ராஜ்யமான யெமனுக்கும் ஐ. நா. அங்கத்துவம் பெற்றுக் கொடுத்திருந்ததன் காரணமாக, ஐ. நா. பொதுச் சபையில் அரபு - முஸ்லீம் நாடுகள் கூட்டின் வாக்குப்பலம் பதினொன்றாக அதிகரித்திருந்தது. இந்த

நாடுகள் இரண்டும், இரண்டாம் உலகப் போரின்போது மௌனமாக இருந்து விட்டு, ஐ. நா. வில் அங்கத்துவத்துக்குத் தகுதியாகும் பொருட்டுக் கடைசி நேரத்தில் ஜேர்மனி மீது போரை பிரகடனப்படுத்தி இருந்தார்கள். நேசநாடு களின் வெற்றிக்குக் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியிருந்த யிசுவுக்கோ வாக்குரிமை இருக்கவில்லை.

இந்த பதினொரு வாக்குகளின் பலத்தால் அரபுக்கள், ஐ. நா வின் கவர்ச் சியான பதவிகள் சிலவற்றில் கண் வைத்திருந்த சிறிய நாடுகளின் பிரதிநிதி களுக்கு வலை வீசினார்கள். பிரிவினைக்கு எதிராக வாக்களித்தால் இவ்வாக் குகளை இலஞ்சமாக தருவதாக ஆசை காட்டினார்கள்.

இரண்டு இராட்சத நாடுகளான அமெரிக்காவுக்கும், சோவியத் யூனிய னுக்கும் இடையில் நடைபெற்ற பனிப்போரை முழுமையாகப் பயன்படுத்தி. ஒருவருக்கெதிராக மற்றவரை மோதவிட்டார்கள். ஆரம்பத்திலிருந்தே இந்த இரு நாடுகளின் ஆசீர்வாதம் இல்லாமல் பிரிவினை மசோதா நிறைவேற்றப் பட முடியாது எனக் கருதப்பட்டது. இதற்கு முன்பு இந்த இரு நாடுகளும் எந்த விஷயத்திலும் ஒரே தரப்புக்கு ஆதரவாக செயல்பட்டதில்லை. இனியும் அப்படியே நடந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது.

பிரிவினை மசோதா வெல்ல, மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவைப் பட்டது. அரபு-முஸ்லீம் பிரிவினரின் பதினொரு வாக்குகள் பலத்தைச் சமாளிக் கவே யிசுவுக்கு இருபத்திரண்டு வாக்குகள் தேவைப்பட்டன. அங்கேயிருந்து மேலதிகமாக அரபுக்கள் பெறும் ஒவ்வொரு வாக்குகளுக்கும், எதிராக அவர்கள் இவ்விரண்டு வாக்குகளைப் பெறவேண்டும். கணக்குப்படி பிரிவினையைத் தடுக்க அரபுக்களுக்கு மேலதிகமாக அரை டசின் வாக்குகளே தேவையாகவிருந்தன. பேரம் பேச அவர்களுடைய எண்ணெய் வளம் ஒரு மேலதிகமான காரணியாக இருந்ததினால், இது ஒரு இலகுவான காரியமாக இருக்கும் என எதிர்பார்க் கப்பட்டது.

அரபுக்களல்லாத உலகப் பத்திரிகைகள் பிரிவினையை ஆதரித்தனர். தென்னாபிரிக்காவின் ஜான் ஸ்மட்ஸ்சும், செக்கோஸ்லாவாக்கியாவின் மிதவா தியான ஜான் மசாறிக்கும் பலப்பரீட்சைகளின் முன்னணியில் இருந்தனர். டென்மார்க். நோர்வே நாடுகளும் வேறு சிலவும் இறுதிவரை துணை நிற்கக் கூடும். பிரிவினைக்கான உணர்வலைகள் பலமாக இருந்தாலும் அனுதாபம் மட்டும் போதுமானதாக இருக்கவில்லை.

பிறகு உலக வல்லரசுகளான நாலு நாடுகளும் யிசுவ்வை பொத்தெனக் கைவிட்டன.

சட்டவிரோதக் குடியேற்றத்துக்கு சிநேகபூர்வமாக ஆதரவளித்த பிரான்ஸ் தீடீரென அவதானத்தைக் கைக்கொள்ளத் தொடங்கியது. பிரெஞ்சு குடியேற்ற நாடுகளான மொரக்கோ, அல்ஜீரியா, ரியூனிஷியா ஆகியவற்றில் இருந்த அரபுக்களிடையே பதற்றம் உருவாகத் தொடங்கியது. பிரிவினைக்கு ஆதர வாகப் பிரான்ஸ் வாக்களிப்பது அவர்களிடையே பூகம்பத்தை எழுப்பக்கூடும்.

சோவியத் யூனியனுக்கு வேறு காரணங்களிருந்தன. இருபது வருடங்களுக்கு மேலாக, சியோனிசத்தைத் தடை செய்திருந்தனர். மெதுவாக அரித்து அரித்து அழித்து விடும் முறையில் யூடாயிசத்தை இல்லாதொழிக்கும் வேலையில் ரஷ்யர்கள் இறங்கியிருந்தனர். மதசுதந்திரம் ஏட்டளவில் இருந்தாலும், உண்மையில் இருக்கவில்லை. யூத பத்திரிகைகளோ, நாடக அரங்குகளோ, பாடசாலைகளோ, சமூக வாழ்வோ இருக்கவில்லை. சின்ன கோக்குகள் மட்டுப் படுத்தப்பட்டிருந்தன. முழு மொஸ்கோவிலும், ஒரேயொரு சின்ன கோக்கே இருந்தது. சின்னக்கோக்கின் அங்கத்தினராக இருந்த எவருக்கும் பொதுவுடமைக் கட்சியின் அங்கத்துவம் வழங்கப்படவில்லை. இந்த வழி முறைகளால் புதிய தலைமுறைகளிடையே இருந்து யூடாயிசத்தை ஒழித்துவிட முயற்சித்தார்கள். சியோனிசமும். பிரிவினையும் ரஷ்ய யூதர்களுக்குத் தாங்களும் யூதர்களே என்று ஞாபகமூட்டிக் கொண்டிருக்கும். ஆகவே பிரிவினை எதிர்க்கப்பட்டது.சோவியத் யூனியனுக்குப் பின்னால் பலமான ஸ்லேவ் நாடுகள் நின்றன.

அமெரிக்கா எடுத்த நிலைதான், யிசுவ் அனுபவித்த மிக அதிகமான மன உளைச்சலைக் கொடுத்தது. ஜனாதிபதி, மக்கள், பத்திரிகைகள் எல்லாமே, அனுதாபமுள்ளவர்களாக இருந்தார்கள். ஆனால் சர்வதேசஅரசியல்முறைமைகள் அமெரிக்க அரசை இரண்டும் கெட்டான் நிலைக்குள் தள்ளின.

பிரிவினையை ஆதரிப்பது, ஆங்கிலோ-அமெரிக்க கூட்டுறவை உடைத்து, மேற்குலகின் நட்பு அடிப்படையை உடைப்பது போன்ற செயலாகிவிடும், பெரிய பிரித்தானியா மத்திய கிழக்கில் இன்னும் மேலாதிக்கத்தைக் கொண்டிருந்தது. அமெரிக்க வெளியுறவு கொள்கைகள் பிரிட்டனுடையதோடு இணைந்திருந்தன. பிரிவினைக்கு வாக்களிப்பது பகிரங்கமாக பிரிட்டனை எதிர்ப்பது போலாகிவிடும்.

இதைவிட மேலாக, இன்னொரு பெரிய பயமுறுத்தலுக்கும் அமெரிக்கா முகம் கொடுக்க வேண்டியிருந்தது. பிரிவினை மசோதா வெற்றி பெற்றால், அரபுக்கள் போர் நடக்கும் என்று பயமுறுத்தினார்கள். யுத்தம் வந்தால், ஐ.நா. சபை சமாதானத்தை அமுல் நடத்த நேரிடும். அப்படி நேரிடும் பட்சத்தில் அனுமதிக்கும் படையில், சோவியத்தோ, அதன் எடுபிடி நாடுகளோ தங்கள் படைகளைச் சேர்த்து விடும் சாக்கில் மத்திய கிழக்கில் நிலை கொள்ளக்கூடும். இதுவே அமெரிக்காவின் பெரிய அச்சமாக இருந்தது. ஆகவே பிரிவினையைப் பொறுத்தவரை தனக்கு நஸ்டம் வராமல் இருக்கக்கூடிய பாதையை அமெரிக்கா தெரிந்து கொண்டது.

நான்கு பிரதான சக்திகளில், பிரிவினைக்கு எதிரான பலமான அடியைப் பிரிட்டனே கொடுத்தது. பிரித்தானியர் பலஸ்தீனப் பிரச்சினையை ஐ.நா.வுக்குப் பாரப்படுத்தியபோது, ஐ. நா. இதற்கு ஒரு முடிவும் எடுக்கக் கூடியதாக இருக்காதென்றும், ஆகவே, ஐ. நா. வே பிரிட்டனைப் பலஸ்தீனத்தில் மேலும் தங்கியிருக்கும்படி கேட்கும் என்றும் தான் எதிர் பார்த்தனர். பிறகு யூன்ஸ்கொப் பலஸ்தீனத்துக்குப் போய், விசாரணைகளை நடத்தி, பிரிட்டிஷ் ஆட்சியைக் கண்டிக்கும் தீர்மானத்துக்கு வந்திருந்தனர். இதை விடவும், முழு உலகமுமே இங்கிலாந்து

ஒரு லட்சம் துருப்பினரைப் பலஸ்தீனத்தில் வைத்திருந்தும், ஹகானா, பால்மாக், மக்கபீஸ், அலியா பெற் போன்றவற்றைச் சமாளிக்க முடியாது திண்டாடுவதும், தெரிந்து கொண்டு விட்டது. இது பிரிட்டிஷ் கௌரவத்துக்குப் பலத்த அடியாக இருந்தது. பிரிட்டன் தனது பிடியை மத்திய கிழக்கில் தொடர்ந்து வைத்திருக்க, அரபுக்களின் அனுசரணையைப் பெற்றுக் கொள்ள வேண்டி இருந்ததால், பிரிவினை மசோதாவை மூழ்கடிக்க வேண்டிய தேவை இருந்தது. சோவியத் துருப்புக்கள் மத்திய கிழக்கில் நுழைந்து விடும் என்ற அமெரிக்காவின் பயத்தோடு விளையாடும் நோக்கில் தன் படையணிகளை 1948 ஆவணிக்கு முன் விலக்கிக் கொள்ளப் போவதாக அறிவித்து விட்டது. மேலும் ஐ. நா.வின் தீர்வை அமுல்படுத்தத் தன் துருப்புக்களைப் பாவிப்பதை அனுமதிக்கப் போவதில்லை என்றும் அறிவித்தது. இப்படியாக அமெரிக்காவைத் தடை செய்துவிட்ட பிரிட்டன், தன் பொதுநலவாய அமைப்பு நாடுகளை வாக்களிப்பிலிருந்து விலகியிருக்க வைத்துத் தன்னோடு பொருளாதார ரீதியில் தொடர்பு கொண்டிருந்த சிறிய ஐரோப்பிய நாடுகளின் மேல் அழுத்தங்களையும் பிரயோகித்தது.

மிகுதி நாடுகளின் கதையும் யிசுவுக்கு இதேயளவுக்குப் பாதகமாகத்தான் இருந்தது. பெல்ஜியம், ஒல்லாந்து லக்சம்பேர்க் ஆகிய நாடுகள் பிரிட்டனின் அழுத்தங்களுக்கு அடிபணிந்தன. யிசுவை நம்பியிருந்த வேறு சில நாடுகளும் கைவிடத் தொடங்கின.

ஆசிய நாடுகளின் நிலைகள் அடிக்கடி மாறிக் கொண்டிருந்தன. மணிலா யாலத்துக்கு மணித்தியாலம் அவைகள் தங்கள் மனதையும், வாக்களிக்கப் போகும் திசையையும் மாற்றிக் கொண்டிருந்தனர். தங்களுக்குச் சொந்தமில்லாத ஒரு உலகப் பகுதியில், மேற்கத்தைய நாடுகளின் பிரதிநிதிகளாக யூதர்களிருக்கிறார்கள் என்ற அரபுக் கருத்தை ஏற்றுக் கொண்டதற்கு அடையாளமாகவும். குடியேற்றவாத ஏகாதிபத்தியவாதத்துக்கு எதிரான தங்கள் நித்தியமான வெறுப்பை மேற்கத்திய நாடுகளுக்குக் காட்டுவதற்காகவும், அவர்கள் அரபுக்களுக்குச் சார்பாக நடந்து கொள்வார்கள் எனத் தோன்றியது.

கிரிசுக்கு அரபுக்கள் பேரில் கடும் வெறுப்பு இருந்தாலும், ஒரு லட்சத்து ஐம்பதினாயிரம் கிரேக்க இனத்தவர்கள் எகிப்தில் வாழ்ந்து வந்தார்கள். கிரேக்கர்கள் பிரிவினைக்கு ஆதரவாக வாக்களித்தால், இந்தச் சிறுபான்மையினருக்கு என்ன நடக்கும் என்பதை எகிப்து மிகத் தெளிவாகக் கூறியிருந்தது.

எத்தியோப்பியாவுக்கு எகிப்தின் பேரில் அப்படியொன்றும் அன்பு இருக்கவில்லை. ஆனால் எகிப்தோடு பூகோளரீதியாகவும், பொருளாதாரரீதியாகவும் இணைக்கப்பட்டிருந்தது.

பிலிப்பைன்சின் ரொமியூலோ பிரிவினைக்கு எதிராக நின்றார்.

கொலம்பியரோ வெளிப்படையாக யூத எதிர்ப்பாளர்கள்.

மத்திய, தென் அமெரிக்க நாடுகளின் வாக்குகள் ஐ. நாவின் ஐம்பத்தேழு வாக்குகளில் மூன்றிலொன்றைக் கொண்டிருந்தனர். ஆனால் இவைகளில் அதிகமான நாடுகள் பிரச்சினையை விட்டு அதிக தூரம் விலகியிருந்ததோடு, பக்க சார்

பில்லாதவையாகவும் இருந்தன. ஜெருசலேம் தங்கள் புதிய நாட்டின் தலை நகராக இருக்க வேண்டுமென்று யிசுவ் விரும்பியது. ஜெருசலேமில்லாத யூத நாடு, இதயம்இல்லாத உடலை ஒத்ததாகும் என அவர்கள் கருதினார்கள். மத்திய தென் அமெரிக்க நாடுகள் அதிகமாகக் கத்தோலிக்க மதத்தைச் சார்ந்தவை. ஜெருசலேம் சர்வ தேசியமயமாக்கப்பட வேண்டும் என்று வத்திக்கான் கத்தோலிக்க தலைமைப் பீடம் விரும்பியது. யிசுவ் ஜெருசலேமுக்காக நெருங்கினால், இந்த முக்கியமான ஆ னை யின் வாக்குகளை இழந்து விடநேரிடலாம்.

ஆயினும், யிசுவ், நிச்சயமாக இந்தக் கட்டத்தில் தேவைப்பட்ட புதுமை நிகழாதா என எதிர்பார்த்தபடியே முயற்சி செய்து கொண்டேயிருந்தனர். புரட் டாதி, ஐப்பசி மாதங்கள் முழுவதும், டாச்டர் வெயிஸ்மானும், பராக் பென் கானானும், பேராளர் குழுக்களின் ஆதர்ச உதாரணமாய்ச் செயல்பட்டனர். அடிக்கடி நிகழ்ந்த தலைகீழ் மாற்றங்களால், கவலைப்படவோ அவசரப்பட்டுப் பிழையான உத்திகளைக் கையாளவோ இல்லை.

யிசுவ்விடம் இருந்த பெரிய ஆயுதம் உண்மைதான். யுன்ஸ்கொப் பலஸ் தீனத்தில் கண்டு கொண்ட உண்மைதான் அந்தச் சத்தியம். அதாவது பலஸ்தீனம் சர்வாதிகாரமான ஒரு பொலிஸ் ஆட்சிக்குட்பட்டிருந்தது என்ற உண்மை. அரபுக் களின் ஏமாற்றும் முயற்சி என்ற மெல்லிய திரைக்கூடாகக் காணப்பட்ட, அரா பியர்கள் இருண்ட காலத்துக்குப் பிறகு, கலாச்சார, பொருளாதார சமூக ரீதியாக எவ்விதத்திலும் அபிவிருத்தி அடையவில்லை - என்ற உண்மை. பாழ் நிலையி லிருந்து பயன்தர மாற்றப்பட்ட யூத வயல்களிலும், வெறும் மண்ணிலிருந்து உரு வாகியிருந்த யூத நகரங்களிலும், தெரிந்த உண்மை, கைத்தொழிலினதும், புத்தி ஜீவித்தனத்தினதும், உண்மை, இடம் பெயர்ந்தவர்கள் முகாம்களில் தெரிந்த உண்மை, யூதர் பக்தியாயங்களில் இருந்த மனிதத்துவத்தின் உண்மை, போன் றவை.

குவாட்டமாலாவின் கிரான்டோஸ், கனடாவின் லெஸ்டர் பியர்சன், அவுஸ்திரேலியாவின் இவாட், செக்கோஸ்லாவாக்கியாவின் மசாறிக், தென் ஆபிரிக்காவின் ஸ்மட்ஸ், உருகுவேயின் பப்ரகெற் அநேக சிறிய நாடுகளின் அநேக பிரபல்யமில்லாத தலைவர்கள் எல்லோரும் பிளஷிங் மெடோவில் உண் மையைச் சாகவிடவில்லை.

இறுதியாக, 1947ன் கார்காலக் கார்த்திகை மாதத்தில் எதிர்பார்க்கப் பட்ட "லேக் சக்சஸ் அற்புதம் நிகழத் தொடங்கியது.

பிரிவினையைக் கொள்கையளவில் ஆதரிப்பதான வார்த்தைகள் அவதா னமாகக் கையாளப்பட்டிருந்த அமெரிக்காவின் அறிக்கை வெளி வந்தது.

பிறகு நடந்த ஒரு விஷயம் உலகத்தை உலுப்பி விட்டது. இது வரை இருபது வருடங்களாக சியோனிசத்தை தவ செய்தபிறகு, சோவியத் யூனியன் வியப்படைய வைக்கும் விதத்தில் தன் முடிவை மாற்றி பிரிவினையை ஆதரிப் பதாக அறிவித்தது. ஸ்லேவ் நாடுகளின் ஒரு இரகசிய ஆலோசனையை அடுத்தே இந்த அறிக்கை வெளியிடப்பட்டது. உருக்க மான குரலில், சிந்தப்பட்ட யூதர்

களின் இரத்த ஆறுகளைப் பற்றியும், யூத தாயகக் கோட்பாட்டில் இருக்கும் நீதியைப் பற்றியும் விசின்ஸ்கி பெரும் உரைகளை நிகழ்த்தினார்.

இந்த மனிதநேய முகமூடியின் பின்னால் ரஷ்யர்கள் ஒரு தந்திரமான அரசியல் நடவடிக்கையொன்றில் இறங்கியிருந்தனர். முதல் விஷயம் அவர்கள் வெளிப்படையாகவே அரபுக்களில் அவநம்பிக்கை கொண்டிருந்தனர். அரபுக்கள் காட்டும் கோபம் வாயளவில் மட்டும்தான் என உணர்ந்து கொண்டனர். இன்று பிரிவினைக்குச் சார்பாக வாக்களித்து விட்டு நாளைக்கு வேண்டுமானால் அரபுக்களைத் திரும்ப விலைக்கு வாங்கிவிடலாம் எனத் தெரிந்து கொண்டிருந்தனர். பிரிட்டனை ஒரு சர்வாதிகாரியாகப் படம் பிடித்துக் காட்டுவதும், அதே நேரத்தில் மத்திய கிழக்கில் ரஷ்யா காலூன்றக் கூடிய வாய்ப்பை அளிக்கும் மூல உபாயமே இந்த நடவடிக்கையாகும். ரஷ்யா தான் பிரிவினைக்கு ஆதரவாக வாக்களித்தால், அமெரிக்காவும் வேறு வழியின்றி தன்னைத் தொடர்ந்து செய்ய வேண்டும் என்றும், அல்லது நீதியின் நண்பன் என்ற பெயரை உலகம் முழுவதும் இழந்து விட நேரும் என்றும் அறிந்திருந்தது. இது தொடர்ந்து ஆங்கிலோ, அமெரிக்க ஒத்துழைப்பில், விரிசல் ஏற்படுத்தும், இறுதியாக தன்னுடைய ''மனித நேய பிரகடனத்தின்'' மூலம் அதிகளவு கௌரவத்தை சோவியத் யூனியன் அதிகளவு பெற்றுக்கொள்ளும் வாய்ப்பும் இருந்தது. எனவே திடீரென யிசுவ்வுக்கு விசித்திரமான நட்பு கிடைத்தது.

இரண்டு பெரிய வல்லரசுகளும், தங்கள் தங்கள் அவதானமான வார்த்தைகள் கையாளப்பட்டிருந்த பிரிவினைக்கு ஆதரவான அறிக்கைகளை வெளியிட்டுக் கொண்டிருந்தபோது, ஐ. நா சபை மண்டபங்களிலே, வதந்திகளும் மணிக்கு மணி, ஏராளமாகப் பரவின.

பிரமாண்டமான இந்த சதுரங்க விளையாட்டு தொடர்ந்து நடந்தது. இந்த விஷயங்களை கையாளுதலிலே, கிரான்டொஸ்கும், பியர்சனும் முக்கியமான புள்ளிகளாக மிளிர்ந்தனர். அதிக முயற்சியின் பின்னர், இவர்கள் இருவரும், அமெரிக்காவையும், ரஷ்சியாவையும் ஒரே கூட்டத்தில் பங்குபற்ற வைப்பதில் பிரசித்தமான வெற்றியைப் பெற்றனர் இந்தக் கூட்டம் முடிந்த போது மிகுந்த வியப்பையூட்டிய, பிரிவினைக்கு தாங்கள் இரு நாடுகளும் உறுதியான ஆதரவளிப்பதான ஒரு கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டனர்.

ஐ. நா. பொதுச்சபையில், பிரிவினை மசோதா விவாதிக்கப் படுவதைத் தடுக்க அரபு நாடுகள் இறுதிக்கட்ட முயற்சியொன்றை மேற்கொண்டனர். விரைவிலேயே இதைப்பற்றி ஒரு பரிசோதனை வாக்களிப்பு ஒன்று நடக்கும் என்பது தொளிவாயிற்று. பொதுச்சபைக்கு ஒரு தீர்மானமொன்றைச் சமர்பிக்க சாதாரண பெரும்பான்மையே போதுமானது. ஆனால், இப்படியான வக்களிப்பு இரு பகுதியினரதும், பலத்தைச் சுட்டிக் காட்டும். வக்களிப்பு வந்தது. பிரேரணையும் வெற்றி பெற்று பொதுச்சபைக்கு வந்தது. ஆனால் யிசுவ்வின் தலையில் இடிவிழுந்தது. வாக்களிப்பு முடிவுகள் இருபத்தைந்து வாக்குகள் ஆதரவாகவும் பதின்மூன்று எதிராகவும், மதினேழு நாடுகள் வாக்களிப்பில் இருந்து ஒதுங்கியும், இருநாடுகள் சபையில் பிரசன்னமாகாலும் இருந்தன. இறுதிக் கட்டத்திலும்

இந்த வகை வாக்களிப்பு இடம்பெற்றால் யிசுவுக்கு தேவையான மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைக்காது. பிரான்ஸ், பெல்ஜியம், லக்சம்பேர்க், நெதர்லாந்து, நியுசிலாந்து, ஆகியவை வாக்களிப்பில் கலந்து கொண்டிருக்க வில்லை. பராகுவேயும் பிலிப்பைன்சும் சபையில் பிரசன்னமாக இருக்கவில்லை.

நிச்சயமன பிரிவினை ஆதரவு வாக்குகள் யிசுவுக்குக் கிடைக்கவில்லை என்பதையும், அவர்களுக்குத் தேவையான பெரும்பான்மை கிடைக்கவில்லை என்பதையும் அரபுக்கள் கண்டு கொண்டனர். தங்களுக்கு மேலதிகமாக ஒரிரு வாக்குகள் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு அரபுக்கள் தந்திரோபாயங்களை மாற்றி, பொதுச்சபையில் பலப்பரீட்சைக்கு அறைகூவல் விடுத்தனர்.

புதன்கிழமை, கார்த்திகை 27, 1947.

இறுதி விவாதம் ஆக்ரோஷத்தோடு நடைபெற்றது. யிசுவ் குழுவினர் தங்களுக்கான பொதுச்சபையின் விசேட இடத்தில், தூக்கிலிடுபவனுக்காகக் காத் திருக்கும் மரணதண்டனைக் கைதிகளைப் போல் காத்திருந்தனர். பரிசோ தனை வாக்களிப்பின் முடிவுகள் அவர்களை மிகுந்த அதிர்ச்சிக்குள்ளாக்கியிருந் தது. விவதங்கள் தொடரத் தொடர, அவர்களுக்கான வாய்ப்பு மணிக்கு மணி மங்கி மங்கிப் போய்க் கொண்டிருந்தது. அமெரிக்காவின் நட்பை மனதில் கொண்டு வாக்களிப்பில் இருந்து ஒதுங்கிக் கொள்ளும் என்று எதிர்பார்க்கப்பட்ட கிறீஸ், எகிபதில் இருக்கும் தன் நாட்டவர்கட்கு எகிப்து எதும் செய்யக்கூடும் என்ற அச்சத்தால் பகிரங்கமாகவே பிரிவினையை எதிர்ப்பாக அறிவித்தது.

அமெரிக்காவைப் பின் தொடரும் என்று எதிர்பார்க்கப்பட்ட பிலிப்பைன்ஸ் தன் முடிவை மாற்றிக் கொண்டது. ஹையிட்டிக்கு திடீரென அறிவுறுத்தல் கிடைக்காத நிலை ஏற்பட்டது. லைபீரியா திரும்பவும், மதில் மேல் பூனையா யிற்று. சியாம் அரபுக்கள் பக்கத்துக்குத் தாவியது.

அது யூதர்தளைப் பொறுத்தவரை ''கறுப்புப் புதன்கிழமை'' யாகஇருந் தது.

ஒன்றுமே செய்ய இல்லாத நிலையிலே, யிசுவ்வின் நன்பர்கள்கடைசிக்கட்ட முயற்சியாக கூடுதல், நேரம் பேசி, நேரக்குறைவால் வாக்கெடுப்பு நிகழ்வதைத் தடுக்க முயன்றனர். அடுத்த நாள் அமெரிக்கா நன்றி செலுத்தும் திருநாளாகவும் விடுமுறை நாளாகவும் இருந்தது. அது பெறுமதி மிக்க இருப்பதினாலும் மணி நேரத்தை, வாக்குகளைச் சேகரிக்க பெற்றுத் தரும். இப்படியாக சபை ஒத்தி வைக்கப்படும் வரை விவாதம் வேண்டுமேன்றே இழுத்தடிக்கப்பட்டது.

யிசுவ் பேராளர் குழு குழுநிலை விவாத அறையில் உடன்டியாக கூடியது. எல்லோரும் ஒரே நேரத்தில் கதைக்கப் பார்த்தனர்.

அமைதி! பராக் உரக்கக் கூறினார். ''எங்களுக்கு இன்னும் இருபத்தி நாலு மணி நேரங்களிருக்கின்றன. கலவரமடைய வேண்டாம்.''

டாக்டர் வெயிஸ்மான் பரபரப்பாக உள்ளே வந்தார் ''எனக்கு பரிஸிலிருந்து, லியோன் பிளம் (Leon Blum) நேரிலேயே தலையிட்டு பிரான்ஸ் வாக்கைப் பெற்றுத் தர முயல்வதாக தகவல் வந்திருக்கிறது. பிரிவினைக்கு ஆதரவான உணர்வலைகள் பரிஸில் பெருகியோடுகின்றதாம்'' இது ஒரு உற்சாகமளிக்கும் செய்தியாகவே இருந்தது. ஏனெனில், பிரான்ஸ் முன்னாள் யூத பிரதமரின் குரலுக்கு அங்கு இன்னும் செல்வாக்கிருந்தது.

''கிரீஸையும், பிலிப்பைன்ஸையும் வழிக்குக் கொண்டு வரும்படி அமெரிக்காவைக் கேட்க முடியாதா?'' அமெரிக்கர்களுடன் தொடர்பு கொண்டிருந்த பேராளர் இல்லை யெனத் தலையை ஆட்டினார். ''எந்த ஒரு பேராளர் குழுவுக்கும் அமெரிக்கா அழுத்தங்களைக் கொடுக்கக் கூடாதென்று ட்ரூமன் கண்டிப்பான உத்தரவுகளை விடுத்திருக்கிறார் அந்த நிலையிலிருந்து சிறிதும் விலகமாட்டார்கள்.

''கௌரவமானவர்களாக நடந்து கொள்ள எப்படிப்பட்ட நேரத்தைத் தெரிந்தெடுத்திருக்கிறார்கள்.''

தொலைபேசி அடித்தது வெயிஸ்மான் அதைத் தூக்கினார். ''நல்லது... நல்லது'' என்றார். பேசும் பகுதியின் மேல் கையை வைத்தபடி நகரின் மறுபுறத்திலிருந்து ஸ்மியல் (Shmuel) பேசுகிறான். நல்லது நல்லது ஷலோம்'' தொலைபேசியைத் திரும்ப வைத்தார்.'' எத்தியோபியர்கள் வாக்களிப்பில் ஒதுங்கிக் கொள்ளச் சம்மதித்து விட்டார்கள், என்று அறிவித்தார். அயல் நாடான எகிப்தின் அழுத்தம் காரணமாக எத்தியோப்பியா பிரிவினைக்கு எதிராக வாக்களிக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. வாக்களிப்பில் இருந்து ஒதுங்கிக் கொள்ள எடுக்கப்பட்ட முடிவு, ஹெய்லி செலாஸி (Haile Selassie) யின் பெரும் துணிகரத்தைக் காட்டியது.

யிசுவுக்கு நெருக்கமான ஒரு பத்திரிகையாளன் கதவைத் தட்டிவிட்டு உள்ளே நுழைந்தான். ''சியாமில் ஒரு புரட்சி நிகழ்ந்திருப்பதையும் அறிவீர்கள் நம்புவீர்கள், என்று நினைத்தேன்'' என்றான். அரபுக்கள் இன்னொரு வாக்கை இழந்துவிட்டதனால் எழுந்த மகிழ்ச்சிக் கூவல்கள் அறையை நிறைத்தன.

பராக் விரைவாக நாடுகளின் பட்டியலைப் பார்வையிட்டு வாக்கு மாற்றங்களைக் கண்டுபிடித்தார்.

''எப்படியிருக்கிறது பராக்?''

''ஹையிட்டியும், லைபீரியாவும் எங்களோடு சேர்ந்து பிரான்சும் வந்து, ஏற்கனவே இருக்கும் ஆதரவெதையும் நாம் இழக்காவிட்டால், சமாளித்து விடலாம்.'' அவ்வளவு எளிதாக ஆறுதலடைய முடியாது. இறுக்கமாகவும் பரபரப்பாகவும் அவர்கள் மேற்கொள்ள வேண்டிய வேலைகளைப்பற்றி ஆராய்ந்தனர். இந்தக் கட்டத்தில் ஒரு தனி வாக்கைக் கூட இழக்க அவர்களுக்குச் சக்தியில்லாமல் இருந்தது.

கரவு தட்டப்பட்டு, அவர்களின்பெயர்பெற்ற ஆதரவாளரான குவாட்ட மாலாவன் கிரான்டோஸ் உள்ளே வந்தார். அவர் கண்களில் நீர் நிறைந்திருந்தது

''சிலியின் ஜனாதிபதி. இப்பொழுதுதான் வாக்களிப்பில் இருந்து ஒதுங்கிக் கொள்ளுமாறு தன் தலைப்பட்ட அறிவுறுத்தல்களை டேராளர் குழுவுக்கு அனுப் பியிருக்கிறார். ஆட்சேபம் தெரிவிக்கும் முகமாக டேராளர் குழு ராஜினாமாச் செய்து விட்டது'' என்றார், ' இருக்க முடியாது'' வெயிஸ் மான் அலறினார். ''சிலியின் சியோவிஸ்டுகளுக்கு ஜனாதிபதிதான் கௌரவத் தலைவர்.''

''இந்தப் பச்சையான உண்மை நிலையின் அப்பட்டமான நம்பிக்கைய யற்ற தன்மை எல்லோர் மீதும் இடியை வீழ்த்தியது. சிலியின் ஜனாதிபதி மீது எப்படிப்பட்ட அழுத்தம் கொண்டு வரப்பட்டது. என்று யாருக்குத் தெரியும்?'' அடுத்த இருபத்தினாலு மணி நேரத்தில் எங்கெங்கோ அழுத்தங்கள் பிரயோ கிக்கப்படப் போகின்றன என்று யாருக்குத் தெரியும்?''

வெள்ளிக்கிழமை 29 - கார்த்திகை 1947

சுத்தியல் மேசை மீது மோதியது.

ஐ. நா பொதுச்சபைக் கூட்டம் ஆரம்பமானது. பிரிவினைத் தீர்மானத் துக்கான வாக்கெடுப்பு இப்போ பெயர் கூப்பிடப்பட்டு நடைபெறும். தீர்மானம் வெற்றி பெற மூன்றில் இரண்டு பெரும்பான்மை வேண்டும் பேராளர்கள் மூன்று விதங்களில் பதில் கொடுக்கலாம். ஆதரவு, எதிர்ப்பு, ஒதுங்கிக் கொள் ளுதல்.

ஒரு பயபக்தியான அமைதி மண்டபத்தில் படிந்தது.

''ஆப்கானிஸ்தான்''

''ஆப்கானிஸ்தான் எதிராக வாக்களிக்கிறது.''

முதல் வாக்கு யிசுவ்வுக்குக் கிடைக்கவில்லை. பராக் அதைக் குறித்துக் கொண்டார்.

''ஆர்ஜென்ரீனா''

''ஆர்ஜென்ரீனா அரசு வாக்களிப்பிலிருந்து விலக விரும்புகிறது.',

''வாக்களிப்பிலிருந்து விலகுபவர்கள் தொகையைக் குறைக்க வேண்டும். அவர்கள் எம்மைக் கொன்று விடுவார்கள்'' என்றார் பராக்.

''அவுஸ்திரேலியா''

எவாட், பொதுநலவாய நாடுகள் அமைப்பிலிருந்து முதன்முதலாக எழுந்த போது எல்லோரும் முன்னால் சரிந்து கொண்டார்கள்,

''அவுஸ்திரேலியா பிரிவினைக்குச் சார்பாக வாக்களிக்கிறது'' என்றார் எவாட்.

ஒரு எதிர்பார்ப்பு கலந்த வியப்பொலி அலை மண்டபத்தை ஊடுருவியது வெயிஸ்மான் பராக்கின் செவிகளுக்கருகில் குனிந்தார்.'' இது பொதுநலவாய நாடுகளின் பொதுவான போக்காக இருக்குமா?''

''சொல்ல முடியாது. ஒவ்வொருவராகத்தான் பார்க்க வேண்டும்''

''பெல்ஜியம்''.

''பெல்ஜியம் பிரிவினைக்கு ஆதரவாக வாக்களிக்கிறது. இன்னொரு ஒலி அலை மண்டபத்தினுள் எழுந்தது. சில நாட்கள் முன்பு நடந்த பரிசோதனை வாக்களிப்பில் இருந்து பெல்ஜியம் ஒதுங்கிக் கொண்டிருந்தது. கடைசி நிமிடத்தில் ஸ்பாக் (Spaak) பிரிட்டிஷ் அழுத்தத்தை மீறி செயல்பட்டிருந்தார்.

''பொலிவியா''

''பொலிவியா பிரிவினைக்கு வாக்களிக்கிறது.''

''பிரேசில்''

''பிரேசில் பிரிவினையை ஆதரிக்கிறது.

தென் அமெரிக்க நாடுகள் பக்கம் மாறிவிட்டிருக்கவில்லை. அடுத்த அழைப்பில் ஒரு முக்கிய வாக்கு வரவிருந்தது. சோவியத் யூனியன் ஒரு துரோகத் தனத்துக்கு ஆயத்தமாக இருந்திருந்தால் முழு உலகமும் அதை இப்போஅறியப் போகிறது. ஏனெனில் சோவியத்தின் கைப்பொம்மை நாடான வெள்ளை ரஷ்யாவின் பெயர் அடுத்து இருந்தது.

''பயிலோ ரஷ்யா''

''வெள்ளை ரஷ்யா பிரிவினைக்கு வாக்களிக்கிறது.''

யூதர்கள் எல்லோருமே ஒன்றாக நிம்மதிப் பெருமூச்சொன்றை விட்டனர். ஸ்லாவிய நாடுகள் அணி ஆதரவு வழங்கப்போகிறது. நிலைமை சீரடைந்து விட்டது.

''கனடா''

பியர்சன் எழுந்து திடமாகக் கூறினார், ''கனடா பிரிவினைக்கு ஆதர வாக வாக்களிக்கிறது.''.

இரண்டாவது பொதுநலவாய அமைப்பு நாடு ஒன்று பெரிய பிரித்தானி யாவுக்கு எதிராகப் போய்விட்டது.

''சிலி''

வாக்களிப்பிலிருந்து விலகியிருக்கக் கிடைத்த உத்தரவுக்கு ஆட்சேபமாக இராஜினாமாச் செய்த பேராளர் குழுத் தலைவருக்குப் பதிலாக வேறொரு பேராளர் எழுந்து, ''சிலி வாக்களிப்பிலிருந்து விலகியிருக்கக் கட்டளையிடப் பட்டிருக்கிறது.'' மெதுவாக அவர் சொன்னார்.

''சீனா''

ஆசியாவில் ஆதிக்கம் கொண்ட சக்தியாக வளரத் துடித்துக் கொண்டிருந்த சீனா, இந்தியாவினதும், பாகிஸ்தானினதும் முஸ்லீம்களுக்கு எதிராகப் போகப் பயப்பட்டது.

''சீனா வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை.'' யிசுவ்வுக்கு இது ஒரு பின்னடைவாக இருந்தது.

''கோஸ்ராறிக்கா''

கோஸ்ராறிக்காவின் பேராளரை, ஐ.நா. வின் முக்கிய பதவியொன்றுக்கு ஆதரவளிப்பது என்ற ஒஞ்சத்துடன் அரபுக்கள் முன்னதாக அணுகியிருந்தனர். அவர் எழுந்து நின்று எகிப்தியர்களைப் பார்த்தார்.

''கோஸ்ராறிக்கா பிரிவினைக்கு ஆதரவாக வாக்களிக்கிறது.'' விலைக்கு வாங்கப்பட முடியாத அந்த மனிதன் சிரித்துக் கொண்டு அமர்ந்து கொண்டார்.

''கியூபா''

''கியூபா பிரிவினைக்கு எதிராக வாக்களிக்கிறது.'' இது முற்றாக எதிர் பாராத அதிர்ச்சியாக யிசுவ்விற்கு இருந்தது.

''செக்கோஸ்லாவாக்கியா''

''செக்கோஸ்லாவாக்கியா பிரிவினைக்கு வாக்களிக்கிறது'' என்றார் ஜான் மசாறிக்.

''டென்மார்க் பிரிவினையை ஆதரிக்கிறது.''

''டொமினியன் குடியரசு பிரிவினையை ஆதரிக்கிறது.''

''எகிப்து''

எகிப்து எதிர்த்து வாக்களிப்பதோடு இந்தக் கொடுமைக்குக் கட்டுப்பட்டிருக்காது.''

தலைவரின் சுத்தியல் மேசையில் மோதியது. எகிப்தின் கோபா வேசத்திற்குப் பிறகு ஒழுங்கு நிலைபெற சிறிது நேரமெடுத்தது.

''ஈகுவடோர்''

''ஈகுவடோர் பிரிவினைக்கு வாக்களிக்கிறது.

''எத்தியோப்பியா''

''எத்தியோப்பியா வாக்களிப்பில் இருந்து விலகியிருக்கிறது. இது ஒரு வெடிகுண்டு போல் இருந்தது. எல்லா அரபுக்களின் முகங்களும் திகைப்படைந்து விட்ட உணர்வுகளோடு எத்தியோப்பியனை நோக்கித் திரும்பின. சிரிய பிரதிநிதி ஆத்திரத்துடன் தன் முஷ்டியை ஆட்டினான்.

''பிரான்ஸ்''

முதலாவது வல்லரசு வாக்களிக்கப் போகிறது. தயங்கிக் கொண்டிருந்த பிரான்சின் முறை வந்தது. பரோடி (Parodi) மெதுவாக எழுந்து நின்றார். பிரான்ஸ் வாக்களிப்பிலிருந்து விலகியிருந்தால் யுசுவ்விற்கு அழிவுதான். பிளம்மும் பிரஞ்சு மக்களும் வெற்றியடைந்து விட்டனரா?

''பிரான்ஸ் குடியரசு பிரிவினைக்கு வாக்களிக்கிறது.'' திருப்தி நிரம்பிய குரலில் பரோடி சொன்னார். ஆர்வத்தோடு கூடிய முணுமுணுப்பு அலையொன்று எழுந்தது. அற்புதம் நிகழக்கூடும் என்ற பரபரப்போடு கூடிய எதிர்பார்ப்பு முதன் முதலாக ஏற்பட்டது.

''குவாட்டமாலா''

கிரான்டொஸ், பிரிவினைக்காகப் போராடிய மாவீரன் பேரினார், ''ஆதரவாக'' என்றார் அவர்.

''கிறீஸ்''

'கிறீஸ் பிரிவினைக்கு எதிராக வாக்களிக்கிறது.'. கடைசி நேரத்தில் கிறீஸ் எகிப்தியர்களின் பயமுறுத்தல்களுக்குப் பணிந்துவிட்டது.

''ஹையிட்டி''

கடைசி இரண்டு நாட்களும் உத்தரவுகள் எதுவுமின்றி விடப்பட்டிருந்த நாடுகள்தான் ஹையிட்டி.

''ஹையிட்டியின் அரசு இப்போது தான் பிரிவினைக்கு ஆதரவாக வாக்களிக்குமபடி அறிவுறுத்தல்களை அனுப்பியுள்ளது.''

''ஹொண்டுரஸ்''

ஹொண்டுரஸ் வாக்களிப்பிலிருந்து விலகியிருக்க விரும்புகிறது.''

''ஐஸ்லாந்து''

''ஐஸ்லாந்து பிரிவினைக்கு வாக்களிக்கிறது.'' இந்த உலகின் ஆகப் பழைய குடியரசு ஆகப்புதிய குடியரசை அமைக்க கடுமையாக உழைத்திருந்தது.

''இந்தியா',

''இந்தியா பிரிவினைக்கு எதிராக வாக்களிக்கிறது.''

''ஈரான்''

''ஈரான் எதிராக வாக்களிக்கிறது.''

''ஈராக்''

''ஈராக் எதிராக வாக்களிக்கிறது.'' நாங்கள் யூதர்களை ஒரு போதும் ஆதரிக்கவோ, அங்கிகரிக்கவோ போவதில்லை. இந்த நாளின் பெயரால் அங்கு இரத்தம் சிந்தப்படும். நாங்கள் எதிர்த்து வாக்களிக்கிறோம்.

''லெபனான்''

''லெபனான் பிரிவினைக்கு எதிராக வாக்களிக்கிறது.'' மாலிக் சொன்னார்.

''வாக்களிப்பு எப்படியிருக்கிறது?'' வெயிஸ்மான் பராக்கைக் கேட்டார்.

''பதினைந்து ஆதரவு, எட்டு எதிர்ப்பு, ஏழு விலகியிருப்புகள், இது அவ்வளவு உற்சாகமளிப்பதாக இல்லை. இதுவரை மூன்றில் இரண்டு பெரும் பான்மைக்கு ஒரு வாக்குக் குறைவாகவே யூதர்கள் பெற்றிருந்தார்கள். வாக்களிப்பில் இருந்து விலகியிருப்புகளும் குவியத் தொடங்கியிருந்தன.

''நீ என்ன நினைக்கிறாய் பராக்?''

''அடுத்த மூன்று தென் அமெரிக்க நாடுகளுக்கு வந்ததும் புரிந்து கொள்ளலாம்.''

''வாக்கெடுப்பில் இனி நாம் முன்னேற வேண்டும் என்று நினைக்கிறேன். அரைவாசி வாக்களிப்பு முடிந்த நிலையில் தீர்க்கமான பலம் எமக்கு இன்னமும் கிடைக்கவில்லை'' வெயிஸ்மான் சொன்னார்.

''லைபீரியா''

''லைபீரியா பிரிவினைக்கு வாக்களிக்கிறது.''

''லக்சம் பேர்க்''

பிரிட்டனின் பொருளாதார செல்வாக்கினுள் உட்பட்டிருக்கும் இன்னொரு சிறிய நாடு.

''லக்சம்பேர்க் பிரிவினைக்கு வாக்களிக்கிறது.'' திரும்பவும் பிரிட்டிஷார் கண்டனத்துக்குள்ளாகினர்.

யேசுவ் இப்போது முன்றில் இரண்டுக்கு மேலதிகமாக ஒரு வாக்கைப் பெற்றிருந்தனர்.

''மெக்சிக்கோ''

''மெக்சிக்கோ வாக்களிப்பில் இருந்து விலகுகிறது.''

முழு யேசுவ் தூதுக்குழுவும் வளைந்து நெளிந்தது.

''நெதர்லாந்து''

''நெதர்லாந்து பிரிவினைக்கு வாக்களிக்கிறது.''

''நியூசிலாந்து''

''நியூசிலாந்து ஆதரவாக வாக்களிக்கிறது.''

''நிக்கரகுவா''

''ஆதரவு''

''நோர்வே''

''ஆதரவு''

''பாகிஸ்தான் பிரிவினைக்கு எதிராக வாக்களிக்கிறது.''

நிச்சயமற்ற நாடுகள் அடுத்து வருகின்றன. ''அடுத்த நான்கு நாடுகளில் வாக்குகளை நாம் பெற்றுவிட்டால் நாம் வெற்றி எல்லைக்குள் வந்து விடலாம்'' பராக் தடுமாற்றத்துடன் சொன்னான்.

''பனாமா''

''பனாமா குடியரசு பிரிவினைக்கு ஆதரவாக வாக்களிக்கிறது.''

''பராகுவே''

''பராகுவேக்கு இப்போதுதான் வாக்களிப்பிலிருந்து விலகியிருக்க வேண்டாம் என்று உத்தரவு வந்திருக்கிறது ..... பதிலாக பராகுவே பிரிவினைக்கு ஆதரவாக வாக்கினை அளிக்கிறது.''

''பெரு''

''பெரு பிரிவினையை ஆதரிக்கிறது.''

''பிலிப்பைன்ஸ்''

ஒரு கண்ணிமைப்பொழுதுக்கு உலகம் உறைந்து நின்றது. ரொம் யூலோ பிளஷ்ஷிங் மெடோவிலிருந்து திரும்ப அழைக்கப்பட்டிருந்தார். அவருக்குப் பதிலாக வந்திருந்தவர் எழுந்து நின்றார். ''பிலிப்பைன்ஸ் பிரிவினைக்கு ஆதரவாக வாக்களிக்கிறது.''

ஆரவாரம் ஒன்று எழுந்தது. யூத பேராளர் குழுவின் அங்கத்தினர்கள் நம்பமுடியாத திகைப்புடன் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

''என்னுடைய கடவுளே..... நாம் வெற்றி பெற்றுவிட்டோம், என்று நினைக்கிறேன்'' என்றார் பராக்.

''போலந்து''

''போலந்து பிரிவினைக்கு வாக்களிக்கிறது.''

வாக்கெடுப்பில் யூதர்கள் முன்னேறத் தொடங்கிவிட்டனர். பல வருட கால கொடுமைகளுக்கு போலந்து சிறிய பிராயச்சித்த மொன்றைச் செலுத்தியது. சியாம் பிரசன்னமாயிருக்கவில்லை.

''சவூதி அரேபியா''

வெறுப்பு நிறைந்த குரலில், வெள்ளை அங்கி அணிந்திருந்த அந்த அராயியன் எதிர்ப்பைக் கத்தித் தெரிவித்தான்.

''சுவீடன்''

''சுவீடன் பிரிவினைக்கு வாக்களிக்கிறது.''

வாக்கெடுப்பு இறுதிக் கட்டத்தை நெருங்கியபோது அராபியர்கள் விரக்தியின் விளிம்புக்குத் தள்ளப்பட்டனர்.

''சிரியா''

''சிரியா எதிர்க்கிறது.''

''துருக்கி''

''துருக்கி எதிர்த்து வாக்களிக்கிறது.

பராக் மிகுதிப் பட்டியலைப் பார்வையிட்டார். அரபுக்கள் இன்னொரு வரவிருக்கும் நிச்சயமான வாக்கை விடப் பன்னிரெண்டு வாக்குகளை இதுவரை பெற்றிருந்தார்கள். இன்னமும் அவர்களுகு வாய்ப்பிருந்தது. ஏதாவது கடைசி நேர மாற்றங்கள் நிகழ்ந்தால் அது எல்லாவற்றையுமே குட்டிச் சுவராக்கிவிடும்''.

''யூக்கிரேன்''

''ஆதரவு''

''தென் ஆபிரிக்க யூனியன்''

''ஆதரவு''

''சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் யூனியன்''

விசின்ஸ்கி தன் கால்களில் எழுந்து நின்றார். ''சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் யூனியன் பிரிவினைக்கு ஆதரவாக வாக்களிக்கிறது.''

''டெரிய பிரித்தானிய ஐக்கிய இராச்சியம்''

மண்டபம் நிசப்தமாயிற்று. பிரித்தானியப் பிரதி நிதி எழுந்து நின்று இருண்டிருந்த தன் முகததின் பார்வையை அறையெங்கும் லெத்தினார். பொது நலவாய நடுகள் கைவிட்டு விட்டன.பிரான்ஸ் கைவிட்டுவிட்டது. அமெரிக்கா ஐக்கிய நாடுகளும் கைவிட்டு விட்டது.

''மாட்சிமை தங்கிய மன்னர் பிரானின் அரசு வாக்ளிப்பில் இருந்து விலகியிருக்க விரும்புகிறது. ''தடுமாறிய குரலில் அந்த ஆங்சிலேயன் சொன்னான்.

''அமெரிக்க ஐக்கிய நாடுகள்''

''அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஆதரவாக வாக்களிக்கிறது.''

எல்லாமே முடிந்து விட்டது. பத்திரிகை நிருபர்கள் கடைசி வாக்குகள் அளிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் போதே செய்தியை உலகுக்கு அறிவிக்கத் தொலைபேசிகளை நோக்கிப் படை எடுத்தார்கள். யெமன் அரபுகளுக்கான பதின்மூறாவது வாக்கை அளித்தது. யூகோஸ்லாவியா தனது பெருந்தொகையான மூஸ்லீம் சிறுபான்மையினரை மனதில் கொண்டு வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. உருகுவேயின் போராசிரியர் பப்ரசாற்றும், வெனிசுவேலாவின் பிரதிநிதியும் பிரிவினைக்கான முப்பத்தி இரண்டாவது, முப்பத்தி மூன்றாவது வாக்குகளை அளித்தனர். ரெல் அவிவ்வில் மகிழ்ச்சி ஆரவாரம் வெடித்தது.

இறுதிக் கணிப்பின்போது யூதர்கள் பாரிய வெற்றியொன்றைப் பெற்றிருந்தார்கள். அரபுக்களுக்குப் பதின்மூன்று வாக்குகள் கிடைத்திருந்தன. இதில் பதின்னொன்று. அரபு, முஸ்லிம் நாடுகளுடையவை. பன்னிரெடாவது கிறீசிடம் பயமுறித்திப் பெற்ற வக்குகாகும். காரண காரியங்களை விளக்கி அரபுகளால் திருப்திப்படுத்தக் கூடியதாக இருந்த உலகின் ஒரே ஒரு நட்டை கியூபா பிரதி நிதித்துவப் படுதியது.

இந்த வெற்றியை பிளஷ்ஷிங் மெடோவில் பெற்றவர்களும். அற்புதம் நிகழ்ந்து கொண்டிருப்பதைக் கண்டவர்களும், உண்மை யதார்த்தவாதிகள். ரெல் அவிவின் யூதர்கள் சிறிது நேரமே வெற்றியைக் கொண்டாடினார்கள். யூடியாவை ஒழிப்போம் என்ற கூக்குரல் அரபு உதடுகளிலே இடியோசைபோல் எழுந்து கொண்டிருந்த அந்த நேரத்தில், யூத நாட்டின் சுதந்திரத்தைப் பெற இதை விடப் பெரிய அற்புதங்கள் நிகழவேண்டுமென பென்கூரியனுக்கும் மற்றைய யிசுவ் தலைவர்கட்கும் தெளிவாகத் தெரிந்தேயிருந்தது.

அத்தியாயம் இரண்டு

சிரிய ஜனாதிபதி குவாட்லி நாம் பலஸ்தீனத்தோடு வாழ்வோம் அல்லது செத்துமடிவோம்.

அல் குட்லாபத்திரிகை- கெய்ரோ : ஐந்து இலட்சம் ஈராக்கியர்கள் இந்தப் புனித யுத்தத்திற்குத் தயாராகிறார்கள் பலஸ்தீனத்தின் எல்லைகளுடாக ஒரு லட்சத்து ஐம்பதினாயிரம் சிரியர்கள் படை எடுப்பார்கள். பாரிய பலம்வாய்ந்த எகிப்திய இராணுவம், யூதர்கள் தங்கள் நாட்டைப் பிரகடனப்படுத்த முயன்றால் அவர்களை கடலினுள் வீசிவிடும்.

சிரிய பிரதமர் ஜாமில் மரதாம்: பேசுவதை நிறுத்துங்கள். என் முஸ்லீம் சகோதரர்களே, ஆர்த்தெழுந்து எங்களை வருத்தும் இந்த சியோனிஸ்டுகளை அழித்தொழியுங்கள்.

சவூதி அரேபியாவின் மன்னர் இபின் சவூத் ''ஐந்து கோடி அரபுக்களிருக்கிறார்கள். எல்லா யூதர்களையும் கொல்வதற்காக ஒரு கோடியை இழந்தாலென்ன? இந்த இழப்பு பெறுமதி மிக்கதுதான்.

செலே ஹார்ப் பாஷா - முஸ்லிம் இளைஞர் அமைப்பு உங்கள் வாள்களை உறைகளிலிருந்து யூதருக்கெதிராக உருவுங்கள். அவர்கள் எல்லோருக்குமே சாவுதான்! வெற்றி எமதே!

ஷேக் ஹசன் அல் பானாஹ்: முஸ்லிம் சகோதரத்துவ அமைப்பு. யூதரை அழிக்க எல்லா அரபுக்களும் எழுந்திருங்கள். அவர்களுடைய பிணங்களால் கடலை நிறைப்போம்.

அக்ரம் யாவிதார் - முப்தி பேச்சாளர்: கடைசித்துளி இரத்தம் வரை ஐந்து கோடி அரபுக்கள் போரிடுவார்கள்.

ஹாஜ் அமின் எல் ஹுசெயினி (ஜெருசலேமின் முப்தி) நான் ஒரு புனித யுத்தத்தைப் பிரகடனப்படுத்துகிறேன். என்னுடைய முஸ்லீம் சகோதரர்களே, யூதர்களைக் கொல்லுங்கள்! அவர்கள் எல்லோரையும் கொல்லுங்கள்.

அசாம் பாஷா (அரபு லீக்கின் பொதுக் காரியதரிசி) இது பூண்டோடு அழிக்கும் ஒரு யுத்தமாக இருக்கும். மொங்கோலியப் படுகொலைகளைப் போல் பேசப்படக்கூடிய பாரிய விளைவுகளைக் கொண்ட படுகொலைகளாக இது அமையும்.

ஐ. நா. வின் பலஸ்தீன பிரிவினையைப் பற்றி இதையொத்த வசனங்களிலேயே மற்றைய அரபுத் தலைவர்களும், பத்திரிகைகளும், வானொலிகளும் குரல்

கொடுத்தன. 1947 மார்கழி 1-ம் திகதி, ஐ. நா. வில் வாக்கெடுப்பு நிகழ்ந்து ஒரு நாளைக்குப் பிறகு, அரபு உயர்மட்டக் குழுவின் டாக்டர் காலிடி பலஸ்தினத்தில் ஒரு பொது வேலை நிறுத்தத்திற்கு அறைகூவல் விடுத்தார். இதனால் தூண்டப் பட்ட வன்முறைக் கும்பல்கள், கலவரத்தில் ஈடுபடத் தொடங்கினர். இவர்கள் ஜெருசலேமின் வர்த்தகப் பகுதிக்குள் நுழைந்து கொள்ளையடித்து எரித்துக் கொண்டிருந்தபோது, பிரிட்டிஷ் துருப்புக்கள் வெறுமனே பார்த்துக் கொண்டிருந்தனர்.

அலெப்போவிலும், ஏடெனிலும் தலைவர்களால் தூண்டிவிடப்பட்ட வன் முறைக் கும்பல்கள், கொலை, கொள்ளை, பாலியல் வன்முறை ஆகியவற்றை மனதில் கொண்டு யூத சேரிகளினுள் அடாத்தாகப் புகுந்தனர்.

ஏற்படும் பாதுகாப்பு இடைவெளியை நிரப்பச் சர்வதேச பொலிஸ் படையை அனுப்பாது, கொமிட்டிகளை நிறுவுவதிலும், முடிவற்ற கலந்துரையாடல்களை நடத்துவதிலும், ஐ. நா. சபை ஈடுபட்டது. ஒரு துப்பாக்கியில் கூட தங்கியிருக் காமலே, பிரிவினையை அமுல்படுத்த முடியும் என ஐ. நா. சபை நம்பியது.

யூதர்கள் இதைவிட யதார்த்தவாதிகளாய் இருந்தார்கள். யூத தேசமொன் றிற்கான அடிப்படை அசைக்க முடியாதபடி இடப்பட்டாயிற்று. ஆனால், பிரிட்டிஷார் வெளியேறிய பின், தங்கள் சுதந்திர நாட்டைப் பிரகடனப்படுத்துவ தாயின், அரபுக் கும்பல்களைத் தனியாகவே எதிர் நோக்க வேண்டி வரும் என்று அவர்களுக்குப் புரிந்திருந்தது.

ஐந்து லட்சம் மக்கள், குறைந்த ஆயுதங்களோடு, வெள்ளமாகப் பெருகி வரும் ஐந்து கோடி, வெறுப்பால் பைத்தியங்கள் போல் வரும் அரபுக்களைச் சமாளிக்க முடியுமா? பலஸ்தீனத்தின் உள்ளிருந்த அரபுக்களை எதிர் நோக்க வேண்டியிருந்ததோடு, சூழவர இருந்த நாற்றுக்கு மேற்பட்ட முனைகளில், முறை யாசப் பயிற்றப்பட்ட தேசிய இராணுவங்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

கெயிம் வெயிஸ்மான், ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதற்காக, நிதி சேகரிக்க உலக சியோனிஸ்டு குழுக்களைத் தயாராக்கினார். பிரிவினையின் சிறிய சிறிய அச்சங்களைப் போராடி ஒழுங்குபண்ணவும், ஆயுத ரீதியான ஆதரவைத் திரட்டவும் பராக் பென் கானான் லேக் சக்சசிலேயே தங்கி யிசுவ் தூதுக்குழுவுக்குத் தலைமை தாங்கினார்.

யூதர்கள் சுதந்திரப் பிரகடனம் செய்வார்களா? என்பதே முக்கியமான கேள்வியாயிற்று.

வைகாசி மாதம் வரை இதற்கான பதிலை எதிர்பார்த்து அரபுக்கள் காத் திருக்கவில்லை. தங்கள் வழமையான இராணுவங்களைப் பயன்படுத்தா விட்டா லும், தாமாகவே இணைந்து கொண்டவர்களைக் கொண்டதான பல்வேறு ''விடு தலை இராணுவங்களை'' உருவாக்கிக் கொண்டே சென்றார்கள். பலஸ்தீன அரபுக்களுக்கும் ஆயுதக்குவியல்களைக் கையளித்தார்கள்.

நாஸி எடுபிடியான ஹாஜ் அமின் எல் ஹுசெயினி மீண்டும் செயல்படத் தொடங்கினான். டமாஸ்கசில் தலைமையகத்தை அமைத்துக் கொண்டான். பலஸ்தீன தொண்டர்களுக்கான பணம் மத்திய கிழக்கின் எல்லா அரபுக்களிடமிருந்தும் கறக்கப்பட்டது. 1936-39 கலவரங்களில் முப்தியோடு சேவை செய்த கொள்ளைக்காரனான காவுக்ஜி மீண்டும் கொண்டு வரப்பட்டு ஜெனரலாகப் பதவி உயர்த்தப்பட்டான். ஈராக்கை ஜெர்மானியருக்குக் கையளிப்பதற்கான புரட்சிச் சதியில் அவன் பங்கு வெளியானபோது ஈராக்கை விட்டுத் துரத்தப்பட்டான். போர்க்காலத்தை ஜெர்மனியில் கழித்த அவன், அங்கேயே ஒரு பெண்ணையும் மணந்து கொண்டு, யுத்தக் குற்றவாளிகளுக்கு வழங்கப்பட்ட பொது மன்னிப்பின் போது முப்தியோடு சேர்ந்து அவனும் பிரிட்டிஷாரால் மன்னிக்கப்பட்டான்.

காவுச்ஜியின் முகவர்கள் டமாஸ்கஸ், பெய்ரூட், பக்தாத் ஆகிய இடங்களின் கேடு கெட்ட ஸ்தானங்களில் மனிதத்துவத்தால் ஒதுக்கப்பட்ட கழிசடைகள், கள்வர்கள், கொலைகாரர்கள், பெருஞ்சாலைக் கொள்ளைக்காரர்கள், போதை வஸ்துக் கடத்தல்காரர்கள், வெள்ளை அடிமை வியாபாரிகள் ஆகியோரைக் கூலிக்கு அமர்த்தி, ஒரு நூற்றாண்டுக்கு முன் அரபுக்கள் வெற்றியடைந்திருந்த, யுத்த களத்தின் பேரால் கவர்ச்சிகரமாக ''யார்முக்கின் படைகள்'' என அதற்குப் பெயரிட்டான். இந்த காவுக்ஜியின் தொண்டர்கள், சிரிய இராணுவ அதிகாரிகளான வேறு தொண்டர்களால் பயிற்றப்பட்டனர். உடனடியாகவே, காவுக்ஜியின் படைகள் லெபனான், சிரியா, ஜோர்தான் ஆகிய நாடுகளின் எல்லைகளுக்கூடாக பலஸ்தீன அரபுக் கிராமங்களுக்குள் குவியத் தொடங்கினர். பிரதான தளம், ஜெருசலேமின் வடக்கிலிருந்த அரபுப் பெரும்பான்மை கொண்ட சமாரியாவின் நபுளஸ் நகரில் அமைக்கப்பட்டது.

இதேவேளையில் யூதர்களோ தொடர்ந்து ஆயுதப் பற்றாக்குறை உடையவர்களாகவே இருந்தார்கள். பிரிட்டிஷார் தொடர்ந்து பலஸ்தீனிய கரைகளில் தடைகளை அமுல் செய்து வந்தனர். அலியா பெற்முகவர்கள் இராணுவப் பயிற்சிகளைத் தீவிரப்படுத்தியிருந்த சைப்பிரசின் தடுப்பு முகாம்களிலிருந்து கூட குடியேறுவோரை பிரிட்டிஷார் வரவிடவில்லை. யிசுவமுகவர்கள் உலகெங்கும் ஆயுதங்களைத் தேடியலைந்தார்கள்.

இதற்கிடையில், இரு பகுதியினரிலும் பிரச்சினைகள் இருப்பதால் மத்திய கிழக்குக்கான ஆயுத சந்தையை - ஹிட்லருக்கும் முசோலினிக்கும் எதிராகப் போராடிய ஸ்பானிய மக்களுக்கு எதிராக அறிவித்தது போன்று- தடை செய்தனர். அது அரபுக்களுச்கே உதவியது. ஏனெனில், அவர்கள் தங்களுக்குவேண்டிய ஆயுதங்களை வேறுவழிகளில் பெறக்கூடியதாக இருந்தது.

யுத்த முனைகள் வரையறுக்கப் பட்டுக் கொண்டிருந்தபோது, யிசுவ் மையம் தங்களிடம் பூரண ஆயுதங்கள் தாங்கிய பயிற்சி பெற்ற பால்மாக் போர்வீரர்கள் நாலயிரம் பேர்வரையில்தான் இருப்பதை உணர்ந்து கொண்டனர். மசகபீஸ்களால் ஆயிரம் பேர் வரையில் தான் ஒன்று சேர்க்க முடியும் ஆனால், அவர்களிடம் இருந்து மட்டுப்படுத்தப்பட்ட ஒத்துழைப்பையே எதிர் பார்க்கலாம்.

அவிடானுக்குக் கூடசில விஷயங்கள் சாதகமாக இயங்கிக் கொண்டிருந்தன. பிரிட்டிஷாரால் இரண்டாம் உலகப் போரின்போது போர்ப் பயிற்சியளிக்கப்பட்ட பல ஆயிரக்கணக்கான றிசேவ் துருப்புக்கள் ஹகானாவில் இருந்தனர். இருபது வருடங்களாக தயார் செய்யப்பட்டு வந்த குடியேற்றங்களின் பாதுகாப்பு ஒழுங்குகள் இருந்தன. திறமையானதொரு தகவல் சேகரிப்பு – ஆய்வு அமைப் பொன்றும் இருந்தது. மறுபக்கத்திலோ ஒவ்வொரு நாளும் உள்ளே நுழையும் காவுஜியின் இரத்த வெறிபிடித்த கூலிப்படையினரால் நாளுக்கு நாள் அதிக ரித்து வந்த மேலாதிக்கமான ஆள்பலத்தையும், ஆயுதபலத்தையும் அரபுக்கள் கொண்டிருந்தனர். அரபுக்கள் பக்கத்தில் குறைந்த பட்சம் ஒருவனாவது நல்ல திறமையான தளபதியாக இருந்தான் அவன்தான் முப்தியின் மைத்துனனான அப்துல் காதர்.

எதிர்நோக்கி இருந்த பிரச்சினைகள் போதாதென்று லேலதிக பிரச்சி னையாக பிரிட்டிஷார் முளைத்தனர். பிரிவினையைக் கைவிட்டு, தங்களை இருக்கச் சொல்லும்படி கேட்டு, யசுவ் கருணை மனு அனுப்பும் என்று வைற் சோல் எதிர்பார்த்தது. ஆனால், யூதர்கள் இந்த அடிப்படையில் உதவி கேட்கத் தயாராக இருக்கவில்லை.

கொள்கையடிப்படையில், தாங்கள் வெளியேறும் பகுதிகளில். பெரும் பான்மையாக இருக்கும் சமூகத்துக்கே தாங்கள் விட்டுச்செல்லும், ராக்காற் கோட்டைகளைக் கொடுக்க வேண்டும் என ஒத்துக்கொள்ளப் பட்டிருந்தது. ஆனால், ஒவ்வொரு பகுதியாக வெளியேறியபோதும் கோட்டைகளின் சாவி களை பிரிட்டிஷ் கொமாண்டர்கள், அவை யூதர்களுக்கே சேரவேண்டி இருந் தாலும், பெரும்பாலும் அரபுக்களிடம் கையளித்துச் சென்றனர்.

முன்னைய நாலி போர்வீரர்கள் யார்முக் படையணிகளிலும், மற்றைய'' விடுதலைத் தொண்டர்'' அணிகளிலும் தோன்றத் தொடங்கினர். ஹகானா வானது தனது சரித்திரத்தில் முதல் தடவையாக, யூதர்கள் படையணிகளைத் தயாராக்கக் கோரியபோது, தங்கள் மறைப்புக்களைக்கைவிட்டு வெளிப்படை யாக இயங்கத் தொடங்கியது. முதல் வேட்டுக்கள் தீர்க்கப்படுவதை கேட்க அதிககாலம் செல்லவில்லை. ஹுலே பளத்தாக்கில் கிராமவாசிகள், கூலிப்ப டையினரோடு சேர்ந்து, சமூகக் குடியேற்றங்களான எயின்செயிற்றிம், பிரியா, அமி அட் ஆகியவற்றைத் தாக்கினார்கள் தாக்குதல்- தொலைவில் இருந்தே குறிபார்த்துச் சுடுதல், போன்றவற்றை விட கொஞ்சம் மேலதிகமான நடவ டிக்கையா இருந்ததால், இலகுவாக முறியடிக்கப்பட்டது

ஒவ்வொரு நாளும் நடவடிக்கைகள் அதிகரித்து வந்தன. பாதைகளில் மறைந்திருந்து தாக்குதல், அதிகரித்து வந்ததால், யிசுவ்வின் உயிர்நாடியாக இருந்த, யூத போக்குவரத்துக்கள், அரபுக்கிராமங்களூடாக, அல்லது அருகால் செல்லும்போது தாக்குதலுக்குள்ளாகும் அபாயம் அதிகரித்து வந்தது.

நகரங்களிலோ, நடவடிக்கைகள். வன்மம் கூடியவையாயிருந்தன. ஜெரு சலேமில் குண்டுவெடிப்பு சிதைவுகள் அடிக்கடி காற்றில் பறந்தன. அரபுக்கள் பழைய நகரின், புனித சுவர்களில் இருந்து சுட்டார்கள். விரைவிலேயே நகரம்

போர்ப் பிராந்தியங்களாக பிரிந்தது. பிராந்தியங்களுக்கிடையேயான தொடர்புகள் மரண பயத்தோடேயே மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது. ரெல்அவிவ்வுக்கும், ஜாபாவுக்கும் இடைப்பட்ட பாதைகளில் குறிபார்த்துச் சுடும் நிலைகளும், பாதைத் தடைகளும் ஏற்படுத்தப்படலாயின.

இதுவரையில், மோசமான சண்டை ஹைபாவிலேயே நடந்தது. மக்கபீஸ் தாக்குதல்களுக்குப் பதிலடியாக அரபுக்கள் சுத்திகரிப்பு ஆலையில் செய்த கலவரத்தில் நாற்பது யூதர்கள் பலியாகினர்.

வடக்கே காவுச்ஜியாலும், சல்வாத்தாலும் செய்ய முடியாத அரபுக்களின் நடவடிக்கைகளை ஒழுங்கமைப்பதில் அப்துல் காதர் வெற்றி பெற்றான். பல்ஸ்தினிய அரபுக்களோ, கூலிப்படையினரோ தொடர் தாக்குதல்களை நடத்தத் திறமையற்றவர்கள் என்ற கணிப்பின் மீது ஜெருசலேமைச் சுற்றி, தன் பெரும் திட்டமொன்றைத் தயாரித்தான். அத்தோடு யூதர்களும் குடியேற்றத் திட்டங்களை லேசில் விட்டுக் கொடுக்காமல் அரபுக்களை இரத்தம் சிந்த வைப்பார்கள் என்று தெரிந்து கொண்டிருந்தான். தனது மக்களை உற்சாகப்படுத்த லேசான வெற்றிகளை அடைய வேண்டியது அவனுக்கு அவசியமாக இருந்தது. காதர் இரண்டு தந்திரோபாயங்களைக் கையாண்டான். முதலாவது யூத குடியேற்றங்களைத் தனிமைப்படுத்தி அவைகளைப் பட்டினி போடுதல். இரண்டாவது போக்குவரத்துகளைத் தாக்கிவிட்டு ஓடும் தாக்குதல்களை அதிகரித்தல்.

காதருடைய தந்திரோபாயங்கள் தாக்கத்தை ஏற்படுத்தின அரபுக்களுக்கு நகர்வுச் சுதந்திரம் நிறைய இருந்த அதேவேளை யூதர்கள் நிலைகளிலேயே உறுதியுடன் நிற்க நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். நாள் செல்லச் செல்ல மேலும் மேலும் யூத குடியேற்றங்கள் முற்றுகைக்குள்ளாயின.

அப்துல் காதர் தன் முயற்சிகளுக்கான மையமாக ஜெருசலேமை வைத்துக் கொண்டான். ரெல் அவிவிலிருந்து, ஜெருசலேமுக்குச் செல்லும் பாதை, அபாயகரமான யூடியா குன்றுகளிடையே, வசதியான உயரங்களில் அமைந்திருந்த பல அரபுக் கிராமங்களுக்கருகால் சென்றது. புதிய ஜெருசலேமில் இருந்த ஒரு இலட்சம் யூதர்கள் தனிமைப்படுத்தப்பட்டு, பட்டினி போடக் காதர் காத்திருந்தான், திட்டமிட்டான். இது யிசுவ்விற்கு ஒரு முக்கியமான பலத்த அடியாக இருக்கும்.

இதற்கு எதிர் நடவடிக்கையாக தாங்களே வடிவமைத்த கவசவாகனங்களைப் பெரியளவு வாகன தொடர்களை நடத்திச் செல்ல யிசுவ் உபயோகித்தது. இந்த வாகனத் தொடர்கள் அபாயத்துக்குள்ளாகக் கூடியவையாக இருந்ததோடு ஜெருசலேமுக்கான பாதையில் சிதைந்த வாகனங்கள் நிறையத் தொடங்கின. ஜெருசலேமின் உள்ளே பொருட் தட்டுப்பாடுகள் ஏற்படத் தொடங்கின. ஆட்கள் கவச பேரூந்துகளில் நடமாடவேண்டி ஏற்பட்டது. பிள்ளைகள் குறிபார்த்துச் சுடுவோரின் வீச்செல்லைகளைத் தவிர்த்து விளையாட வேண்டியிருந்தது.

அரபுக்களின் பலம் புதிய ஆயுதங்களாலும், கூலிப்படையினராலும் அதிகரித்து வந்த அதேவேளை, யூதர்களுக்கு எவ்வித ஆறுதலும் கிட்டவில்லை. அப்துல் காதர் முன்பனிக்காலம் முழுவதும் காத்திருந்து விட்டு, உறைந்து பசியால் வாடியிருக்கும் குடியேற்றங்களை ஒன்றொன்றாக பின்பனிக் காலத்தில் ஏப்பமிடத் தீர்மானித்தான்.

ஒரு சிவிலியன் மக்கள் தொகையைப் பட்டினிபோடும் மனித நேயமில்லாத செயலைக் காரணம் காட்டி ஜெருசலேம்- ரெல்அவிவ் பாதையை ரோந்து செய்யும்படி யிசுவ், பிரிட்டிஷாரை கேட்டது. பிரிட்டிஷார் மறுத்துவிட்டனர்.

புத்திசாலியான தலைவனின் கீழ் அரபுக்கள் எடுத்த இந்த விரைவான நடவடிக்கை முதல் கட்டத்தில் யிசுவ்வைக் கீழ் தள்ளியது உண்மைதான். ஹகானா ஒவ்வொரு கிபுட்சையும், மொசாவ்வையும் சிறியளவான ரொப்ரூக்காக மாற்றும்படி உத்தரவிட்டது. தங்கள் நிலத்துக்காக யூதர்கள் இரத்தத்தால் விலை கொடுத்திருக்கிறார்கள். ஆகையால் அரபுக்கள் இவைகளை எடுக்க வேண்டுமானால், இரத்தத்தாலேயே விலை கொடுத்தாக வேண்டும் என்றனர். வீதிச் சமர்கள், யுத்தத்தின் முதல்கட்டத்தை ஆரம்பித்து வைத்தன. சுதந்திரப் பிரகடனம் செய்வதா இல்லையா என்பது இன்னமும் உறுதியாகத் தீர்மானிக்கப்படவில்லை.

அரி பென் கானான் தன்னுடைய காயத்திலிருந்து மெதுவாகவே குணமடைந்து வந்தான். இது அவிடானுக்குப் பிரச்சினையாக இருந்தது. ஏனெனில் மூன்று பால்மாக் பிரிகேட்களில் ஒன்றை அவன் தலைமை தாங்கி நடத்த வேண்டும் என்று அவிடான் விரும்பினார். அவர்களின் முன்னணித் தாக்குதல் அணியான- கலிலியைக் கவனித்த ''ஹனிற்றா'' பிரிகேட், யூடியாவின் மலையாட்கள்'' தெற்கேயிருந்த ''பாலைவன எலிகள்'' ஆகியவையே இந்த மூன்று பிரிகேட்களாகும்.

பிரிகேட் மட்டத்திலிருந்து கீழே இருந்த பால்மாக் கொமாண்டர்கள் எல்லோரும், விறைத்த தலையர்களாகவும், தங்கள் இருபதுகளில் இருப்பவர்களாகவும் தங்களை விசேட படைப்பிரிவினராக கருதுபவர்களாகவும் இருந்தனர். கிபுட்சுகளின் இளைஞர்களும், யுவதிகளுமே பால்மாக்கின் முதுகெலும்பு போலிருந்தார்கள். அவர்கள். இராணுவக் கட்டமைப்பில் கூட சமூக மனப்பாங்கைக் கையாளாண்டார்கள். அடிக்கடி யிசுவ் மையத்தோடு அரசியல் ரீதியாக முரண்பட்டுக் கொண்டதோடு, ஹகானாவின் அதிகாரத்தையும் வெறுத்தார்கள்.

அரி பென் கானான் தன் வயதுக்கு மீறிய முதிர்ச்சியைக் கொண்டிருந்தான். கடுமையான யுத்த மூலோபாயத்தை கவனத்திற் கொண்டு கட்டளைகளை நிறைவேற்றுவதை விட்டு, தனிப்பட்ட யுத்தங்களை நிகழ்த்துவதை அவன் ஆதரிக்கவில்லை. அதிகாரத்துக்குக் கட்டுப்பட்டு நடக்கும் பழக்கம் அவனிடம் இருந்தது காரணமாக பால்மாக் கொமாண்டராக அவன் இருப்பது விருப்பத்துக்குரியதாக இருந்தது. ஆனால் அப்பொறுப்பை சுமக்கும் அளவிற்கு அவன் இன்னும் நலம் பெற்றிருக்கவில்லை. ஒவ்வொரு பிரிகேட்டும், கரடுமுரடான பிரதேசங்

களில் பரந்த இடங்களைப் பாதுகாத்து வந்தன. பால்மாக்குகள் மிகவும் மோசமான நிலைமைகளின் கீழ் வாழ்ந்து வந்தனர். அரியின் கால் இன்னமும் பலவீனமாகவே இருந்தது. அவிடான், மாற்றாக, அரியைப் பலஸ்தீனத்தின் முக்கிய இடமொன்றுக்குக் கொமாண்டராக நியமித்தான். அதுதான் அரியின் சொந்த இடமான ஹுலே பள்ளத்தாக்கு. அவனுடைய அதிகாரத்துக்கு உட்பட்ட பகுதி கலிலிக் கடலின் வட விளிம்பிலிருந்து தொடங்கி, ஷாபெட்டை உள்ளடக்கிய, லெபனான் சிரிய எல்லைகளுக்கிடையில். ஒரு விரலைப்போல் நீண்டிருந்த பள்ளத்தாக்கின் பகுதிகளையும் உள்ளடக்கியிருந்தது சிறிது தெற்கில் இன்னொரு அரபு நாடான ட்ரான்ஸ்-ஜோர்தான் யார்முக் ஆற்றின் அருகோடு எல்லையைக் கொண்டிருந்தது.

காவுக்ஜியின் கூலிப்படைகள்உள்நுழையும் பிரதான இடமாக அரியின் பிரதேசம் விளங்கியது. முழு அளவான போர் மூண்டு, முறையான அரபுப்படைகள் பலஸ்தீனத்துக்குள் படையெடுக்கும் ட்சத்தில் அவர்களின் முதல் இலக்கு நிச்சயமாக ஹுலேப் பள்ளத்தாக்காகத்தான் இருக்கும். இதை படையணிகள் குவியும் சந்தியாக பயன்படுத்தி, ஹுலே பள்ளத்தாக்கைக் கைப்பற்றினார்களேயானால், அதைத் தளமாகப் பயன்படுத்தி, முழுக் கலிலியையும் கைப்பற்றி அதன் பின் ஹைபாவுக்கும், ரெல் அவிவுக்கும் இடையே ஊடுருவி யூதர்களை இரண்டாக உடைத்து விடுவார்கள்.

அரியின் பிரதேசத்திலே, அவனது சொந்த இடமான யாட்எல் உட்பட ஒரு டசினுக்குக் கிபுட்சுகளும், மொசாவ்களும், கிராமங்களும் இருந்தன. இவைகளிலிருந்த முன்னோடி விவசாயிகள் தாங்களே கூலிப்படையினரையும், பலஸ்தீனிய அரபுக்களையும் சமாளிக்கக் கூடியவர்களாக இருந்தனர். பள்ளத்தாக்குச் சமவெளியில் இருந்த குடியேற்றங்கள் ஒன்றுக்கொன்று மிக நெருங்கியிருந்ததால், அரபுக்கள் தலைமைப்படுத்தி முற்றுகையிடும் உத்தியை அவர்கள் மீது பாவிப்பது கடினமாக இருக்கும்.

லெபனான் எல்லையிலிருந்த குன்றுகள் இன்னொருவகை பிரச்சினையைத் தோற்றுவித்தன. இங்கே எஸ்தர் கோட்டை முக்கியத்துவம் பெற்றிருந்தது. ஹுலே பள்ளத்தாக்கு யூதர்களைப் பெரும்பான்மையாகக் கொண்டிருந்ததால், ஒப்பந்தப்படி பிரிட்டிஷ்காரர் எஸ்தர் கோட்டையை அரியிடம் ஒப்படைப்பதாக இருந்தது. எஸ்தர் கோட்டை ஹகானாவின் கையிலிருந்தால். அரியால் லெபனான் எல்லையை திறமையாகக் கட்டுப்படுத்த முடியும்.

அரியின் தலைமைச் செயலகம் அவனது சித்தப்பா நிர்மாணிக்க உதவி செய்த, எல்லாவற்றுக்கும் மையப்பகுதியில் அமைந்திருந்த, வெளிச்சத்தின் நீரூற்று. என்று பொருள்படும் எயின் ஓர் கிபுட்சில் அமைந்திருந்தது சில நூறு பால்மாக் துருப்புகள் அவனோடிருந்தனர். டேவிட், லெவ் ஜில்போவா, யோவாப் யார்க்கோனி, ஆகியோர் உதவியாளர்களாக இருந்தனர். ஒவ்வொரு குடியேற்றத்திலும். இருந்த ஹகானா அமைப்பு மிகப் பலமானதாயிருந்தது. நூற்றக்கு நூறு வீதம், ஆள்வலுவைத் தந்ததோடு நன்றாகப் பயிற்றப்பட்டும் இருந்தார்கள்.

பலஸ்தீனம் எங்கும் யிசுவுக்கு இருந்த பிரச்சினையான ஆயுதக் குறை பாடே அவனையும் வாட்டியது. ஒவ்வொரு நாளும் குடிபேற்றங்களின் கொமாண்டர்கள், துப்பாக்கிகளைக் கேட்டுத்தொல்லை கொடுத்தனர். அவனிடம் எதுவும் இருக்கவில்லை. அவிடானிடமும் எதுவமிருக்க வில்லை.

அரியின் பிரதேசத்தில் வெளிப்படையாகத் தெரிந்த இரண்டு பலவீனமான இடங்களாகக் கான் டப்னாவும், ஷாப்பெட்டும் இருந்தன. எஸ்தர் கோட்டை தன்னிடம் கையளிக்கப்பட்டதும் குழந்தைகள் கிராமத்தைப் பாதுகாக்க முடியும் என்றவாறு அரி நினைத்தான். அபுயேஷாவுக்கூடாகக் கான் டப்னாவுக்குச் செல்லும் பாதையில் தடைகளேற்படாத வரை அக்கிராமத்துக்கு எவ்வித ஆபத்தும் ஏற்படாது.

ஷாபெட் ஒரு தலையிடிதான். உண்மையில் பலஸ்தீனத்தின் எந்தக் கொமாண்டருக்கும் அவ்வளவு பெரிய தலையிடி இருந்ததில்லை. எல்லாக் குடி யேற்றங்களையும், எவ்வகையிலாவது பாதுகாக்கவேண்டும் என்றவாறு யூதர்கள் தீர்மானித்தபோது அப்படிச் செய்ய முடியாதவை என்று சில விதிவிலக்குகளும் இருந்தன. ஷாபெட் அந்த விதிவிலக்குகளில் ஒன்றாகும்.

அந்த நகரம் சூழவர இருந்த நாற்பதினாயிரம் அரபு மக்கள் கடலில், இடையில் ஓர் தீவைப்போல் இருந்தது. ஷாபெட்டுக்கு உள்ளேயோ யூதர்கள் பன்னிரண்டுக்கு ஒன்றென்ற குறைந்த விகிதாசாரத்தில் இருந்தனர் ஷாபெட் டின் யூதர்களில் பெரும்பாலானவர்கள் சுபாலிள்டுகளாகவும், போரிடுவதைப் பற்றி எதுவும் தெரியாதவர்களாகவும் இருந்தனர். எல்லாமாக ஷாபெட்டின் ஹகானாவில், பலசாலிகளான நூறு போராளிகள், இரண்டாயிரத்துக்கு மேற் பட்ட அரபுக்களையும், கூலிப்படையினரையும் எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

மூப்தி தன்னுடைய முதல் இலக்குகளில் ஒன்றாக ஷாபெட்டைக் குறித்துக் கொண்டிருந்தான். பல நூறு கனரக ஆயுதங்களைத் தரித்த கூலிப்படையினர், உள்ளே ஊடுருவி பிரிட்டிஷார் வெளியேறும் தருணத்தை எதிர்நோக்கிக் காத்துக் கொண்டிருந்தனர்.

உள்ளக யுத்த மூலோபாயங்களைப் பொறுத்தவரை யூதர்கள் படுமோச மான நிலையிலிருந்தார்கள். நகரின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த மூன்று நிலைகள், அரபுக்களின் கையிலிருக்கும். யூதபகுதிக்கு நேர்மேலே இருந்த ஒரு காவல் நிலையம், நகரின் உயரே இருந்த காவலரண், கானான் மலையில் இருந்த ராக்காட் கோட்டை எல்லாமே அரபுக்களிடம் கையளிக்கப்படும்.

ஆயுதங்களைப் பொறுத்தவரை, மாதக்கணக்காகப் போர் செய்யப் போதுமான ஆயுதங்கள் அரபுக்களிடமிருந்தன. யூதர்களிடமோ நாற்பது றைபிள் கள், நாற்பத்திரண்டு உள்ளூர் தயாரிப்புகளான ஸ்ரென் துப்பாக்கிகள், ஒரு இயந்திரத் துப்பாக்கி, ஒரு மோட்டார் சில நூறு உள்ளூர் தயாரிப்பான கைக்குண்டுகள் மட்டும் இருந்தன. நூறுக்கும் குறைவான ஆட்களையே ஆயுதம் தரிக்க வைக்க அவர்களால் முடியும்.

பிரிட்டிஷாரே யூதர்களை அங்கிருந்து வெளியேற்ற அனுமதிக்கும்படி அரியிடம் வேண்டிக் கொள்ளும் அளவுக்கு மோசமான நிலையில் ஷாபெட்டின் தற்காதுகாப்பு இருந்தது. அரியின் மேசைக்கு முன்னால் ஹோட்டல் உரிமையாளரும், ஷாபெட்டின் ஹகானாக் கொமாண்டருமான நெமிஸ் முன்னும் பின்னும் நடந்து கொண்டிருந்தான். சுதர்லாண்ட் ஒரு மூலையிலிருந்து அமைதியாக ஒரு சுருட்டைப் புகைத்தவாறு இருந்தார்'

''அப்போ '' கடைசியாக அரி கேட்டான்.

நெமிஸ் மேசைமேல் குனிந்தான். ''நாங்கள் ஷாபெட்டில் இருக்க விரும்புகிறோம், அரி. இறுதி மனிதன் வரை போராடிப் பார்க்கப் போகிறோம் நாங்கள் முடிவெடுத்து விட்டோம்.''

''நல்லது .. எனக்கு மிக்கமகிழ்ச்சி.''

''எங்களுக்கு மேலும் ஆயுதங்களைத் தாருங்கள்''. அரி கோபத்துடன் எழுந்து நின்றான். ஒவ்வொரு நாளும் இருபது தடவைகள்'' எங்களுக்கு மேலதிக ஆயுதங்களைத் தாருங்கள்'' என்ற வசனத்தைக் கேட்க நேர்ந்து கொண்டிருந்தது.

''சுதர்லாண்ட் நீங்கள் கிறீஸ்துவைப் பிரார்த்தியுங்கள். நீ, கொன்பியூசியசைப் பிரார்த்தனை செய் நெமிஸ், நான் அல்லாவைப் பிரார்த்தனை செய்கிறேன். சிலவேளை சொர்க்கத்திலிருந்து மன்னா பெய்தது போல் றைபிள்களும் கொட்டும்.''

''நீ மேஜர் ஹேகலை நம்புகிறாயா? அந்தப் பிரதேச பிரிட்டிஷ் கொமாண்டரைக் குறித்து சுதர்லாண்ட் கேட்டார்.

''ஹோக்ஸ் எப்போதுமே நண்பராகத்தான் இருந்திருக்கிறார்'' அரி பதிலிறுத்தான்.

''அப்படியானால் சரி. அவன் சொல்வதைக் கேட்பது நல்லது. ஷாபெட்டில் இருக்கும் யூதர்களை வெளியேற்ற முழுப் பாதுகாப்பும் தருவதாக அவன் சொல்கிறான். இல்லாவிட்டால் படுகொலைதான் நடக்கும் என உறுதியாகக் கூறுகிறான்.''

அரி ஒரு நீண்ட பெருமூச்சை விட்டு விட்டு ''ஹோக்ஸ் எப்போ போகப் போகிறார் என்று சொன்னாரா?'' என்றான்.

''இல்லை. அது அவருக்கு இன்னும் தெரியாது.''

ஷாபெட்டில் அவர் இருக்கும் வரை ஒப்பீட்டளவில் நாம் பாதுகாப்பாய் இருக்கலாம். அவர் இருக்கும் போது அரபுக்கள் எதையும், அதிகமாகச் செய்ய முயல மாட்டார்கள். அவர் போகுமுன் நிலைமை சீரடைந்தாலும் அடையலாம்.''

ஹோச்னிற்கு இருதயம் சரியான இடத்தில் இருக்கலாம். ஆனால் அவருடைய கொமாண்டர்கள் அவருடைய கையை கட்ட முயற்சிக்கிறார்கள்.'' சுதர்லாண்ட் சொன்னார்.

''அரபுக்கள் ஏற்கனவே எம்மீது இலக்குப் பார்த்துச் சுடவும் எங்கள் வாகனத் தொடர்களைத் தாக்கவும் தொடங்கிவிட்டார்கள்'' என்றான்றெமிஸ்.

''அப்போ முதல் வேட்டுச்சத்தம் கேட்டதுமே ஓடப்போகிறாயா?''

''அரி'' றெமிஸ் அரியின் மட்டத்துக்குக் குனிந்து அழைத்துவிட்டுத் தொடர்ந்து, ''நான் ஷாபெட்டில் பிறந்தேன். எனது சிவியகாலம் முழுவதும் அங்கேயே வாழ்ந்தேன். 1929ல் அரபுப் பகுதிகளில் கேட்ட உருவேற்றும் ஒலியை இன்றைக்கும் என்னால் கேட்கமுடிகிறது. அந்த வெறிபிடித்த கூட்டம் எங்கள் பகுதியினுள் பிரவேசிக்கும் வரை அதன் அர்த்தம் எங்களுக்குப் புரியவில்லை. அவர்கள் எங்களுடைய நண்பர்கள்தான். ஆனால் சித்த சுவாதீனம் இழந்திருந்தார்கள். அந்தப் பரிதாபத்துக்குரிய கபாலிஸ்டுகள் இழுத்துவரப்பட்டு வீதியில் வைத்து தண்டிக்கப்படுவதை நான் நேரில் கண்டேன். மீண்டும் 1939ல் அரபுக்கள் குரலெழுப்புவதைக் கேட்டோம். அதற்கு என்ன கருத்து என்று அப்போது புரிந்து, கொண்டிருந்தோம். மூன்று வருடங்களாக அரபுப் பகுதியிலிருந்து ஏதாவது பலத்த ஓசை எழுந்ததும், ஓடிப்போய்த் துருக்கிக் கோட்டையினுள் ஒளிந்து கொண்டிருப்போம். இம்முறை இங்கேயே இருக்க விரும்புகிறோம். இன்னொரு முறை நாங்கள் ஓடப்போவதில்லை. வயோதிபர்களும் கூடத்தான். இம்முறை அவர்களுக்கு இலகுவாக இருக்கப் போவதில்லை .. என்னை நம்புங்கள் ஆனால் அரி—எங்களிடம் எதிர்பார்க்கப்படும் காரியங்களுக்கும் ஒரு எல்லையிருக்கிறது.''

றெமிஸ் உடன் கடுமையாகக் கதைத்தது பற்றி அரி மிகவும் வருத்தப்பட்டான். ஆமாம் ஷாபெட்டில் இருக்க எடுத்த தீர்மானம் மிகத் துணிகரமானது தான் நீபோய் வா றெமிஸ் அங்கே விஷயங்களை அமைதியாக வைத்திருக்கப் பார். நிலைமைகள் கட்டுப்பாட்டை மீறாமல் பார்த்துக் கொள். நீ மேஜர் ஹோக்ஸை நம்பலாம். இடைநேரத்தில் எனக்குக் கிடைக்கும் எல்லாவற்றிலும் உனக்கு முன்னுரிமை கொடுப்பேன்.''

அவர்கள் போய்விட்டதும், அரி கீழே அமர்ந்து பல்லைக்கடித்துக் கொண்டான். அவனால் என்ன செய்ய முடியும் பிரிட்டிஷார் போனதும் ஒரு ஐம்பது பால்மாக் துருப்புக்களை அவனால் அனுப்பி வைக்க முடியும். ஒன்றுமில்லாததற்கு அது பரவாயில்லை. யாரும் என்ன செய்ய முடியும்? பலஸ்தீனம் முழுவதும் இருநூறு ஷாபெட்டுக்கள் இருக்கின்றன ஐம்பது ஆட்கள் இங்கே. பத்துப் பேர் அங்கே காவுஜ், சஃவாற், காதர் ஆகியோருக்கு இங்கு உள்ள நிலைமைகள் தெரிந்தால் பலஸ்தீனமெங்கும் நேர்த்தாக்குதலையே தொடுப்பார்கள். தொடர்ச்சியான தீர்க்கமான தாக்குதலைத் தடுக்கப் போதுமான வெடிமருந்துஸள் ரவைகள் இல்லை. அரபுக்கள் ஒரு முறை முயன்று, இருக்கும் ஆயுதங்களின் குறைவான தொகையை அறிந்து கொண்டால், அநர்த்தம் விளையுமென அரி பயந்தான்.

வடபகுதி எல்லைக் குடியேற்றங்களைப் பார்வையிடச் சென்றிருந்த டேவிற் பென் அமி உள்ளே வந்தான்.

''ஷலோம் அரி. பாதையில் றெமிஸ்ஸையும், சுதர்லாண்டையும் கண்டேன். றெமிஸ், சிறிது திருட்தியில்லாமல் காணப்பட்டான்.'' என்றான்.

அவனுக்கு அதற்கு ஏராளமான காரணங்கள் உண்டு, சரி.. நீ ஏதாவது விஷயங்களை அறிந்து வந்திருக்கிறாயா?

அரபுக்கள் ச்பார் கிலாடி மீதும், பெற்றுலா மீதும் குறிபார்த்துச் சுடத் தொடங்கிவிட்டார்கள். ச்பார் ஸ்லோல்ட் வாசிகள் சிரிய கிராமவாசிகள் ஏதாவது செய்வார்கள் என்று பயப்படுகிறார்கள். பாதுகாப்பு அரண்கள் குழந்தைகள் காப்பகங்களைச் சுற்றி அமைக்கப்பட்டிருக்கின்றன, எல்லோருமே ஆயுதங்கள் கேட்கிறார்கள்.''

''ஆயுதங்கள்!. ம்.. வேறு என்ன? குறி பார்த்துச் சுடும் வேட்டுக்கள் எங்கிருந்து வருகின்றன?''

''ஆட்டா '' (Aata)

''என்னுடைய பழைய நல்ல ஆட்டா'' என்ற அரி தொடர்ந்து, ''பிரிட் டிஷார் போனதும் எனது முதல் இலக்கு அதுதான். நான் சிறு பையனாக இருந்தபோது சாலையத்தை அரைக்க சென்றபோது என்னை உதைக்க முயன் றார்கள். அப்போதிருந்தே சண்டை பிடிப்பதில் குறியாக இருக்கிறார்கள்' காவல்ஜியின் ஆட்கள் அரைவாசிப்பேர் ஆட்டா வழியாகத்தான் உள்ளே நுழை கிறார்கள் என்று ஊகிக்கிறேன்'' என்றான்.

''...அல்லது அபுயேஷாவில். டேவிட் சொன்னான். அரி கோபமாக நிமிர்ந்து பார்த்தான். இது அரிக்கு மனவருத்தம் உண்டாக்கக்கூடிய இடம் என்று டேவிட் தெரிந்து கொண்டிருந்தான்.

''அபுயேஷாவில் எனக்கு நம்பிக்கையான நண்பர்கள் இருக்கிறார்கள்'' என்றான் அரி.

''அப்படியானால், கூலிப்படையினர் அதற்கூடாகத்தான் வருகிறார்கள் என்று உனக்கு அவர்கள் சொல்லியிருக்க வேண்டுமே?''

அரி பதிலெதுவும் கூறவில்லை.

''அரி, பலதடவைகளில், என் உணர்ச்சிகள் எனது கணிப்பீடுகளை பாதிக்க நான் விடுவது, எனது பலவீனம் என்று எனக்குச் சொல்லியிருக்கி றாய். நீ எந்தளவு அந்த மக்களுக்கு நெருக்கமானவன் என்று எனக்குத் தெரியும். ஆயினும் நீ அங்கே போய் முக்தாருக்கு விஷயங்களைப் புரியவைக்க வேண்டும்,

அரி எழுந்து நடந்து வெளியே போனான். போகும்போது, ''நான் தாஹா வுடன் கதைக்க வேண்டும்'' என்று சொல்லிக்கொண்டே போனான்.

டேவிட், அரியின் மேசைமீது இருந்த கடிதங்களை எடுத்து ஒருமுறை ஆராய்ந்து விட்டு, கீழே போட்டான். அவன் அரிக்குப் பின்னால் நடந்து சென்று, நின்று, ஜன்னலூடாக ஜெருசலேமின் திசையை நோக்கிக் கொண்டு நின்றான். ஒரு சோக அலையொன்று அவனைத்தழுவிச் சென்றது. அரி, அவன் தோளில் தட்டி, ',எல்லாம் சரியாய்ப் போய்விடும்'' என்றான்.

டேவிட் இல்லையென மெதுவாகத் தன் தலையை ஆட்டினான். ''விஷயங்கள் ஜெருசலேமில் மிக மோசமாகிக் கொண்டே வருகின்றன'' என்றான், சோகம் நிரம்பிய குரலில். '' போய் வருவதற்கு வாகன அணிகள் ஏராளமான பிரச்சினைகளை எதிர் நோக்குகின்றன. இந்த நிலை நீடித்தால் இன்னும் சில வாரங்களில் அவர்கள் பட்டினி கிடக்கநேரிடும்.''

அவனுடைய அன்புக்குரிய ஜெருசலேம் முற்றுகையிடப்பட்டிருப்பது டேவிட்டுக்கு எவ்வளவு வேதனையளிக்கிறது என்று அரிக்குப் புரிந்தது.

''நீ ஜெருசலேமுக்குப் போக விரும்புகிறாய் அல்லவா?''

''ஆமாம். ஆனால் உன்னைக் கைவிட்டுப் போகமாட்டேன்'' என்றான் டேவிட்.

''நீ போகத்தான் வேண்டுமென்றால் உன்னை விடுவித்து விடுகிறேன்.''

''நன்றி அரி. உன்னால் சமாளிக்க முடியுமா?''

''நிச்சயமாக ... இந்தக் கால் வலிக்காமல் இருந்தால். இங்கே பார் டேவிட் . நீ போவதை நான் விரும்பவில்லை.''

''நீ குணமாகும் வரை நான் இருக்கிறேன்.''

''நன்றி. நீ ஜோர்தானாவைப் பார்த்து எவ்வளவு காலமிருக்கும்?

''வாரக்கணக்கிருக்கும்.''

''நீ ஏன் கான் டப்னாவுக்குப் போய் அங்குள்ள நிலைமைகளைப் பார்த்து வரக்கூடாது? அங்கே ஒரிரு நாட்கள் தங்கி எல்லாவற்றையும் வடிவாகப் பார்த்து வா.''

டேவிட் சிரித்தான்! ''இணங்க வைப்பதற்கு என்ன அழகான வழிகளை நீ வைத்திருக்கிறாய்.''

★ ★ ★

கிற்றியின் காரியாலயக் கதவு ஒருமுறை தட்டப்பட்டது.

''உள்ளே வாருங்கள்'' என்றாள் அவள்.

''ஜோர்தானா பென் கானான் உள்ளே வந்தாள்.

''உங்களுக்கு வேறு அவசர வேலையில்லாவிட்டால் உங்களோடு ஒரு வார்த்தை கதைக்க விரும்புகிறேன் திருமதி பிறமென்ற்.''

''நல்லது''

''தற்காப்பு நிலைகளைப் பார்வையிட டேவிட் பென் அமி இன்று காலையில் வருகிறார். அதன்பிறகு ஒரு அலுவலர் கூட்டமொன்றை வைக்க இருக்கிறோம்.''

''நான் வருகிறேன்.''

''திருமதி பிறமென்ற் கூட்டத்துக்கு முன்பாக உங்களோடு கதைக்க விரும்புகிறேன். உங்களுக்குத் தெரிந்தது போலவே நான்தான் இங்கே கொமாண்டர். எதிர்காலத்தில் நீங்களும் நானும் நெருங்கிய ஒத்துழைப்போடு செயலாற்ற வேண்டும். நான் உங்களில் பூரண நம்பிக்கை வைத்திருக்கிறேன் என்பதை வெளிப்படுத்த விரும்புகிறேன். உண்மையில் நீங்கள் இங்கே இருப்பது கான்டப்னாவின் அதிஷ்டம் தான் என்று நினைக்கிறேன்.

கிற்றி வியப்போடு ஜோர்தானாவைப் பார்த்தாள்.

''எங்கள் இருவரின் தனிப்பட்ட அபிப்பிராயங்களை விலக்கி வைப்பது தான் முழுக் கிராமத்தின் மனோ நிலைக்கும் நல்லது என்று நான் நம்புகிறேன்.''

''நீ சொல்வது சரியென்று நானும் நினைக்கிறேன்.''

''நல்லது. எங்களுக்கிடையில் ஒரு புரிந்துணர்வு இருப்பது பற்றி மகிழ்ச்சியடைகிறேன்.''

''ஜோர்தானா! உண்மையில் எங்கள் நிலைமை என்ன?''

''உடனடியாக எந்த அபாயமுமில்லை. எஸ்தர்கோட்டை ஹகானாவின் கைக்கு வந்ததும் நிலைமைகள் சிறிது அபிவிருத்தியடையும் என நினைக்கலாம்.''

''ஏதாவது பிழைத்துப்போய் எஸ்தர் கோட்டை அரபுக்களுக்குப் போய் விட்டால்..? அல்லது அபுயேஷாவுக்குள்ளால் போகும் பாதை தடைப்பட்டு விட்டால்..?''

''அப்போது விஷயங்கள் சிறிது அசௌகரியமாகத்தான் இருக்கும்.''

கிற்றி எழும்பி அறையினுள் மெதுவாக அங்கும் இங்கும் நடந்தாள். ''நான் இராணுவ விஷயங்களில் தலையிட விரும்பவில்லை என்பதை தயவு

செய்து புரிந்து கொள். யதார்த்த பூர்வமாகப் பார்த்தால் நாங்கள் முற்றுகைக் குள்ளாகலாம் போலிருக்கிறது.''

''அப்படியான சாத்தியக்கூறு இருக்கிறது'' என்றாள் ஜோர்தானா.

''இங்கே பல குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களையும், மிக வயது குறைந்த பிள்ளைகளையும் இங்கிருந்து அகற்றிவிடும் திட்டங்களைப் பரிசீலிக்க வேண்டும்.''

''அவர்களை எங்கே வெளியேற்றலாம்?''

''எனக்குத் தெரியவில்லை. எங்காவது ஒரு பாதுகாப்பான கிபுட்சுக்கு அல்லது மொசாவ்வுக்கு.....''

''எனக்கு அதுவும் புரியவில்லை திருமதி பிறமென்ற். 'பாதுகாப்பான கிபுட்ஸ்' என்பது ஒரு ஒப்பிட்டளவான சொல்தான். பலஸ்தீனம் என்பது ஐம்பது மைலுக்கும் குறைவான அகலமுடையது. பாதுகாப்பான கிபுட்ஸ் என்று எங்களிடம் எதுவும் கிடையாது. புதிய குடியேற்றங்கள் ஒவ்வொரு நாளும் முற்றுகைக்குள்ளாகிக் கொண்டு இருக்கின்றன.''

''அப்படியானால் நகரங்களுக்கு அனுப்ப முடியாதா?''

''ஜெருசலேம் ஏறத்தாழத் துண்டாடப்பட்டு விட்டது. ஹைபாவிலும் ஜெருசலேமுக்கும் ரெல் அவிவ்வுக்கும் இடையில் தான் மோதல் உக்கிரமாயிருக்கின்றது,''

''அப்படியானால்... ஒரு இடமும் இல்லையா?''

ஜோர்தானா பதில் சொல்லவில்லை. சொல்ல வேண்டிய தேவையும் இருக்கவில்லை.

O

அத்தியாயம் மூன்று

1947 கிறிஸ்மஸ் முதல் நாள்.

நிலம் ஈரலிப்பாகவும், மொர மொரப்பான காற்று வீசிக் கொண்டும் இருந்த கான்டப்னாவின் மீது முன்பனிக் காலத்தின் முதன் மென்பனித் துகள்கள் வீழ்ந்து கொண்டிருந்தன. கிற்றி விரைவாகக் கொட்டகைகள் இருந்த ஒழுங்கைக்குச் சென்றாள். அவளது மூச்சுக் காற்று, சிறிய மேகத்திரளை உருவாக்கியது.

''ஹோம் சிவீரேற் கிற்றி'' என்றார் டாக்டர் லிப்பர்மான்.

''ஷலோம் டாக்டர்.

''படிகளில் ஏறிச்சென்று. கரேன் ஆவிபறக்கும் தேநீர்க்கோப்பையைத் தயாராக வைத்திருந்த அறையினுள் சென்றாள்.

''ப்பூ வெளியில் உறையவைக்கும் குளிராயிருக்கிறது.''

அறை உற்சாகமூட்டுவதாக இருந்தது. கரேன் அதை பைன்மரக்கிளைகள் சோடனைகள், தன் கற்பனை எல்லாவற்றையும் சேர்த்து அலங்கரித்து வைத்திருந்தாள். ஒரு சிறிய மரத்தை அனுமதி பெற்று, வெட்டியெடுத்திருந்த அவள் பஞ்சுகளாலும் கடதாசியில் வெட்டியெடுத்த உருவங்களாலும் அதை அலங்கரித்திருந்தாள்.

கிற்றி கீழே அமர்ந்து, பாதணிகளைக் கழற்றிவிட்டு ரோமத்தோல் செருப்புகளை அணிந்து கொண்டாள். தேநீர் அமிர்தமாயிருந்தது.

கரேன், காட்சி ஜன்னலருகே நின்றபடி, மென்பனி விழ்வதை இரசித்துக் கொண்டிருந்தாள்.

''முதல் மென்பனித் துகள்கள் விழ்கின்ற காட்சிதான் உலகிலேயே மிகவும் அழகான விஷயமென்று நான் நினைக்கிறேன்'' கரேன் சொன்னாள்.

''எரிபொருள் பங்கீடு குறைந்து விட்டால் அப்படி எண்ண மாட்டாய்.''

''இன்று நாள் முழுவதும் கொப்பன்ஹேனையும், ஹான்சன்களைப்பற்றியும் தான் சிந்தித்துக் கொண்டிருந்தேன். டெனமார்க்கில் கிறிஸ்மஸ் என்பது மிக அற்புதமான ஒஷயம். அவர்கள் எனக்கு அனுப்பியிருந்த பரிசுப் பொட்டலத்தைப் பார்த்தீர்களா;''

கிற்றி, அந்த யுவதியின் அருகில் சென்று அவள் கன்னத்தில் முத்தமிட்டு விட்டு, ''கிறிஸ்மஸ் எல்லோருக்குமே ஒரு மகிழ்ச்சியை ஊட்டும் விஷயம் தான்'' என்றாள்.''

''கிற்றி நீங்கள் பயங்கரமான தனிமையை உணர்கிறீர்கள் போலிருக்கிறது.''

''ரொம்மும், சாண்ட்ராவும் இறந்து போனதிலிருந்து கிறிஸ்மஸ் என்பதை மறக்கவே முயற்சித்துக் கொண்டிருக்கிறேன் .... இன்றுவரை.''

''நீங்கள் சந்தோஷமாயிருக்கிறீர்கள் என்று நினைக்கிறேன்.''

''ஆமாம் .. வித்தியாசமான வழியில். ஆத்ம உணர்வுகளில் யூதராக இல்லாமல் கிறீஸ்த ராக இருக்க முடியாது என்பதை உணர்ந்திருக்கிறேன். என்னில் இல்லாதவைகளை நியாயப்படுத்த எவ்வளவோ விஷயங்களை நான் என் வாழ்நாள் முழுவதும் செய்திருக்கிறேன. ஆனால் இ போதுதான், வரையறை இல்லாமல், சன்மானம் எதிர்பார்க்காமல் என்னால் கொடுக்க முடிந்திருக்கிறது.

''உங்களுக்கு ஒரு விஷயம் தெரியுமா? நான் இதை மற்றவர்களுக்குச் சொல்ல முடியாது. ஏனெனில் அவர்கள் அதைப் புரிந்து கொள்ள மாட்டார்கள். ஆனால், இங்கு நான் இயேசுவின் அருகாமையைப பரமாக உணர்கிறேன.''

''எனக்கும் அப்படித்தான் என் செல்வமே.''

கரேன் தன் கைக்கடிகாரத்தைப் பார்த்துவிட்டுப் பெருமூச்செறிந்தாள். ''இன்று நான் நேரத்தோடு உணவருந்த வேண்டும. இ வு காவல கடமையிருக்கிறது.''

''வெளியே சரியாகக் குளிர்கிறது. அதற்கேற்றபடி ஆயத்தமாகப் போ. நான் சில அறிக்கைகளைத் தயாரிக்க வேண்டும். அதை முடித்து விட்டு உனக்காகக் காத்திருக்கிறேன்.''

கரேன் தடிப்பான வெப்பமூட்டும் உடைகளுக்கு மாறிக் கொண்டாள். கிற்றி அந்தப் பெண்ணின் தலையிரைப் பின்னிக் கட்டிவிட்டாள். அதறகு மேலால், பால்மாகின் காலுறை போன்ற தொப்பியைக் காதுகளை மூடும் வண்ணம் இழுத்து விட்டுக் கொண்டாள்.

திடீரென வெளியிலிருந்து உரத்த குரலில் பாடும் ஓசைகள் கேட்டன.

''அது என்ன சத்தம்?'' கிற்றி கேட்டாள்.

''உங்களுக்காகத் தான் பாடுகிறார்கள். இரண்டு வாரமாக இரகசியமாகப் பழகி வந்தார்கள்.';

கிற்றி ஜன்னலுக்கு நடந்து சென்றாள்.

அவளுடைய பிள்ளைகளில் ஐம்பது பேர் வரை, கையில் ஏற்றப்பட்ட மெழுகுவர்த்திகளைக் கையில் பிடித்துக் கொண்டு கொட்டகைக்கு வெளியே நின்றபடி கிறிஸ்மஸ் கரோல் பாடல்கள் இசைத்துக் கொண்டிருந்தனர்.

கிற்றி மேலே கோட் ஒன்றை அணிந்து கொண்டு வெளியே வந்தாள். பிள்ளைகளுக்குப் பின்னால், பள்ளத்தாக்குக் குடியேற்றங்களின் வெளிச்சங்களை இரண்டாயிரம் அடி கீழே காணக்கூடியதாக இருந்தது.

ஒவ்வொரு கதவாக வியப்புற்றிருந்த பார்வையாளர்களால் திறக்கப்பட்டது. அவளால் வார்த்தைகளைப் புரிந்து கொள்ள முடியாவிட்டாலும், இராகம் என்னவோ மிகப் புராதனமான ஒன்றுதான்.

''கிறிஸ்மஸ் வாழ்த்துக்கள் கிற்றி'' கரேன் வாழ்த்தினாள். கிற்றியின் கன்னங்களில் கண்ணீர் பெருக்கெடுத்தது. ஹீப்ரூ மொழியில் ''அமைதியான இரவு ...'' இசைக்கப்படுவதைக் கேட்க நான் உயிர் வாழ்ந்திருப்பேன் என்று கடைசி வரை நினைக்கவில்லை. எனக்குக் கிடைத்த கிறிஸ்மஸ் பரிசுகளிலேயே இதுதான் மிக உன்னதமானது.''

கரேனுக்கு அன்று கான் டப்னாவின் வாசல் கதவுகளுக்கு அப்பால் வெளிப்பக்க அகழிகளிலே காவல் கடமை ஒதுக்கப்பட்டிருந்தது. அவள் கிராமத்தினை விட்டு வெளியேறி வீதி மூலம் கீழே பள்ளத்தாக்கைத் தெளிவாகப் பார்க்கக் கூடிய விதமாக மண்ணால் அமைக்கப்பட்டிருந்த அரணருகே சென்று நின்றாள்.

''நில்!''

அவள் நின்றாள்.

''யார் அது''

''கரேன் கிளமென்ற்''

''அடையாள வார்த்தை என்ன''?

''சாக் சமீச்''

கரேன் ஏற்கனவே காவலில் நின்றிருந்தவளை விடுவித்து விட்டு, அகழிக்குள் பாய்ந்து, ரவைகள் கொண்ட கிளிப் ஒன்றை றைபிள் சேம்பருக்குள் மாட்டி போல்ட்டை இறுக்கிவிட்டு கையுறைகளை மாட்டிக் கொண்டாள். காவல் கடமையில் நிற்பது மிக அருமையான விஷயம் கரேன் நினைத்தாள். முட்கம்பி சுருள்கள் ஊடாக அவள் அபுயேஷாவைப் பார்த்தாள். இங்கே நாலு மணித்தியாலங்களுக்கு, செய்வதற்கு ஒன்றுமில்லாமல் யோசித்துக் கொண்டே ஹுலேம் பள்ளத்தாக்கைப் பார்த்துக் கொண்டு தனிமையில் இருப்பதும் இனிமையாகத்

தான் இருக்கிறது. குளிர்ந்து கொண்டிருந்த முன்பனிக்காற்றில் கலந்து, கிற்றி யின் கொட்டகையிலிருந்து வந்து கொண்டிருந்த குழந்தைகளின் மெல்லிய குர லோசையை அவளுக்குக் கேட்கக்கூடியதாக இருந்தது. மிக மிக உன்னதமான கிறிஸ்மஸ் இது என்று கரேன் எண்ணிக் கொண்டாள்.

தனக்குப் பின்னால் இருத்த மரங்களிடையே ஏதோ அசையும் ஓசை கேட்டது. அவள் மெதுவாகத் திரும்பி, கண்ணை குறுகிக் கொண்டே இருளை ஆராய்ந்தாள். ஏதோ அங்கிருந்து அசைவதை உணர்ந்து கொண்டாள். அவள் உறைந்து போய் அதனைப் பார்த்துக் கொண்டிருந்தாள். ஆமாம் மரங்களுக் கிடையில் ஏதோ இருக்கிறது! ஒரு நிழல் ... பசியுள்ள ஒரு நரியாகவும் இருக் கலாம் என்று அவள் நினைத்தாள்.

கரேன் தன் றைபிளின் பாதுகாப்பு ஆணியைத் தட்டிவிட்டு, றைபிளைத் தோளோடு அணைத்துக் குறிபார்த்தாள். அந்த நிழலுருவம் மேலும் கிட்டே வந்தது.

நில்! அவளது குரல் ஓங்கி ஒலித்தது.

அடையாள வார்த்தை என்ன?

''கரேன்'' ஒரு குரல் உரக்க அழைத்தது.

''டொவ்''

அவள் அகழியிலிருந்து பாய்ந்து ஏறி அவனை நோக்கி ஓடினாள். அவன் அவளை நோக்கி ஓடி வந்தான் சில கணங்களில் ஒருவர் ஒருவரின் அணைப்பிலி ருந்தனர்.

''டொவ், டொவ்! நீதான் என்று என்னால் நம்பவே முடியவில்லை.

அகழியினுள் இருவரும் ஒன்றாகப் பாய்ந்தனர். இருளில் அவன் முகத்தைக் காணப் பெரிதும் முயன்றாள்.

''டொவ்! என்ன சொல்வதென்றே எனக்குப் புரியவில்லை.''

''நான் இங்கு வந்து ஒரு மணி நேரமாகின்றது. உன்னுடைய கொட்ட கைக்கு வெளியே நீ காவல் கடமைக்குப் புறப்படும் வரை காத்திருந்தேன். பின் உன்னைத் தொடர்ந்து இங்கே வந்தேன்'' என்றான்.

கரேன் சுற்றுமுற்றும் பார்த்தாள். ''உனக்கு இது பாதுகாப்பில்லை. நீ பிரிட்டிஷாரிடமிருந்து மறைந்திருக்க வேண்டும்.''

''எல்லாம் சரியாகிவிட்டது, கரேன் எல்லாம் சரியாகி விட்டது. பிரிட் டிஷார் இனிமேலும் எனக்குத் தொந்தரவு தரமுடியாது.

இருளில் அவனை ஸ்பரிசிக்க முயன்றபோது அவள் விரல்கள் நடுங்கிக் கொண்டிருந்தன,

''டொவ் நீ சரியாகக் குளிருகிறாய். ஒரு கம்பளி மேலாடை கூட அணி யவில்லை. உறைந்து கொண்டிருக்கிறாயே.''

''இல்லை இல்லை நான் நன்றாகத்தானிருக்கிறேன்.''

அகழியினுள் மென்பனி வீழ்ந்து கொண்டிருந்தது. திடீரெனநிலவுதெரிந்தது. அவர்கள் ஒருவரையொருவர் பார்க்கக் கூடியதாக இருந்தது.

''நான் ஹாமிஸ்மாருக்கு வெளியே இருந்த குகைகளில் ஒளித்திருந்தேன்.''

''எனக்குத் தெரியும்.''

''நான் நீ அமெரிக்காவில் இருப்பாய் என்று நினைத்தேன்''

''எங்களால் போக முடியவில்லை.''

''நான் இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறேன் என்று யோசிப்பாய் கரேன் கான் டப்னாவுக்குத் திரும்பி வரத்தான் விரும்பினேன். ஆனால் நான் போகும்போது சில கைக்கடிகாரங்களையும், மோதிரங்களையும் எடுத்துச் சென் றிருந்தேன். நான் ஒரு கள்ளன் என்று அவர்கள் நினைத்துக் கொண்டிருப்பார்கள் இல்லையா?''

''இல்லை. டொவ் நீ சுகமாகவும், பாதுகாப்பாகவும் இருந்தால் அது தான் முக்கியம்.

''நான் எல்லோருக்கும் அவரவர்க்குரியதைச் செலுத்தி விடுகிறேன்.''

''அது தேவையில்லை. ஒருவரும் உன்மேல் கோபமாயில்லை.

டொவ் அகழியினுள் அமர்ந்து தலையைத் தாழ்த்திக் கொண்டான். ''ஆக்ரே சிறையில் இருந்த முழுநேரமும் குகையில் இருந்த முழு நேரமும் நான் எனகுள் சிந்தித்துக் கொண்டேன். டொவ் உன்மேல் யாரும் கோபமாயில்லை... டொவ்தான் கோபமாய் இருக்கிறான். தன்னில் தானே கோபமாயிருக்கிறான். உன்னை நான் ஆக்ரே சிறையில் கண்ட அந்த நேரமே யோசித்துக் கொண்டேன் .. நான் சாகவிரும்பவில்லை என்று சொல்லிக்கொண்டேன்... நான் சாகவும் விரும்பவில்லை .. யாரையும் சாகடிக்கவும்விரும்பவில்லை.''

''ஓ! என்னருமை டொவ்.',

''கரேன் வேறொரு காதலி எனக்கிருக்கவில்லை. உன்னைப் போகப்பண் ணத்தான் அப்படிக் கூறினேன்.''

''எனக்குத் தெரியும்,,

,'அப்போதிருந்தே உனக்குத் தெரியுமா?

''நான் என்னை நம்பவைத்தேன், டொவ் ஏனெனில் நீ எனக்காகக் கவலைப்படுகிறாய் என்று நான் நம்பவிரும்பினேன்.

''அதுதான் உன்னில் அற்புதமானதொரு அம்சம் கரேன். நீயே உன்னை சில விஷயங்களை நம்பவைப்பாய், என்னையும் அவற்றை நம்பவைப்பாய். நான் கான்டட்னாவுக்குத் திரும்பி வந்து உன்னைப் பெருமைப்பட வைக்கவேண்டும் என்று நினைத்தேன். நீ போயிருந்தால் கூட உனக்கு இங்கே பெருமை சேர்க்க வேண்டுமென நினைத்தேன்.

கரேன் தனது கண்களை தாழ்த்திக் கொண்டாள்.

''உனக்காக நான் எதையும் செய்வேன்'' அவன் முணுமுணுத்தான். அவள் கையை நீட்டி அவன் கன்னங்களைத் தொட்டாள்.

டொவ், நீ சரியாகக் குளிர்கிறாய். தயவுசெய்து என் கொட்டகைக்குப் போ- நீ கிற்றிக்கு எல்லாவற்றையும் சொல்லலாம். எங்களைப் பற்றி கிற்றிக்கு எல்லாம் புரியும். நான் காவல் கடமை முடிந்து வந்ததும், ஒன்றாக டாக்டர் லிப்பர்மானைக் காணப் போவோம். கவனமாகப் போ. அடையாள வார்த்தை ''ஆனந்தமான விடுமுறை'' என்பதுதான்.''

கரேன் உன்னைப் பற்றி எவ்வளவோ விஷயங்களை யோசித்துக் கொண்டிருந்தேன். இனிமேல் பிழையான காரியங்களையோ அல்லது உன்னைத் துன்படுத்தக் கூடிய காரியங்களையோ செய்யமாட்டேன்''

''அது எனக்குத் தெரியும்''

''உன்னை நான் முத்தமிட அனுமதிப்பாயா?''

''ஆம்.''

சிறிது பயத்தோடு கூடிய தேடுதலுடன் உதடுகள் ஒன்றையொன்று தழுவிக்கொண்டன.

''நான் உன்னைக் காதலிக்கிறேன் கரேன்'' சொல்லி விட்டு அவன் கான்டட்னாவின் வாசலைத் தேடி ஓடினான்.

★ ★ ★

அமெரிக்கப் பேராளரிடம் பராக் பென் கானான், ஆத்திரத்தோடு சொன்னார் : ''தீயவர்கள் புறக்கணிப்பதும், நல்லவர்கள் அமுல் நடத்த மறுப்பதுமான ஒன்றுதான் சர்வதேசச் சட்டம் என்பது.''

சம்பாஷணைகள் எப்படி நன்றாக நடத்தப்பட்டாலும் முக்கிய மாற்றங்களை ஏற்படுத்த அவைகளால் முடியவில்லை. வைகாசி பதினைந்தாம் திகதி

யூதர்கள் சுதந்திரப் பிரகடனம் செய்தால் ஏழு இராணுவங்களைத் தனியவே சந்திக்க வேண்டிவரும்.

காவுக்ஜியின் கூலிப்படையினரும், சவ்வாற், காதர் ஆகியோரின் ஆணையின் கீழிருந்த பலஸ்தீனிய அரபுக்களும் தங்கள் நடவடிக்கைகளை அதிகரித்து வந்தனர். 1948-ம் வருடம், ஒரு முடிவினை எடுக்க வேண்டிய வருடமாக வந்து சேர்ந்தது.

முதல் சில மாதங்களில், பிரிட்டிஷ்காரர்கள் தங்கள் பாரிய இராணுவ அமைப்பை, ஒவ்வொரு இடமாக அகற்றிக் கொண்டு வந்த வேளையிலே அரபுக்கள் துணிகரம் பெற்று வந்ததோடு, சண்டையின் வேகமும் அதிகரித்துக் காணப்பட்டது.

கலிலி (The Galilee).

மனாரா கிபுட்சை முற்றுகைக்குள்ளாக்கியபடி கூலிப்படையினர் லெபனான் எல்லைக் குன்றுகளில் காத்துக் கிடந்தனர். அரை டசின் வரையான வேறு யூத குடியேற்றங்களும் வெளியுலகிலிருந்து துண்டிக்கப்பட்டிருந்தன. ஒலிவ்வின் நீரூற்று என்று பொருள்படும் எயின் செயிற்றிம் மீது அரபுக்கள் ஐந்து நேரடியான தாக்குதல்களை மேற்கொண்டனர். ஒவ்வொன்றும் தோற்கடிக்கப்பட்டன.

சிரிய கிராமவாசிகள் மோதத் தொடங்கினார்கள். அவர்கள் பலஸ்தீன எல்லையைக் கடந்து வடக்குப் பகுதியின் வெளி வட்டத்திலிருந்த யூதக் குடியேற்றங்களான கிபுட்சுகள், டான் ஐயும், க்பார்ஸோல்ட்டையும் தாக்கினார்கள். பிரிட்டிஷ் கொமாண்டரான மேஜர் ஹோக்ஸ் படைகளை அனுப்பிச் சிரிபர்களை எல்லைக்கப்பால் விரட்ட உதவி செய்தார்.

ஆட்டாவில் இருந்த அரபுக்கள், கூலிப்படையினரதும், சிரிய கிராமவாசிகளினதும் உதவியோடு மலையின் தீப்பிழம்புகள் எனப் பொருள்படும் லஹவொட் ஹபாஷானைத் தாக்கினார்கள்.

இஸ்ரேலின் பண்டைய கோத்திரங்களின் ஒன்றின் ஞாபகமாகப் பெயரிடப்பட்ட ரமாட் நப்டாலி தாக்கப்பட்டது.

மேஜர் ஹோக்ஸ் படைகளை ஷாபெட்டில் இருந்து மீளப் பெறும் வரை காத்திருந்த அதேவேளை அரபு நடவடிக்கைகள் அங்கே அதிகரித்து வந்தன, யூதர்களுக்கெதிரான தடைகள் விளைவுகளை ஏற்படுத்தத் தொடங்கியிருந்தன. அந்த கபாலிஸ்டுகளின் நகரத்திலே, உணவு, குடிநீர் பற்றாக் குறைகள் தலைகாட்டின. பிரிட்டிஷார் உதவும் போது மாத்திரமே வாகனத் தொடர்கள் யூத குடியிருப்புகளை வந்து சேரக் கூடியதாக இருந்தன.

ஹைபா (Haifa)

முக்கியமான துறைமுகமான ஹைபா, இருபகுதியினருக்கும் பிரதான இலக்காக இருந்தது. தற்சமயம் தங்கள் துருப்புகளை மீளப் பெறுவதற்கு

(வாபஸ்) வசதியாக பிரிட்டிஷ் கைகளில் அது இருந்தது. ஹைபாவிலே அரபுப் பகுதிக்கு மேலே, ஹார் ஹா கார்மேலில் பலஸ்தீனத்தின் பலம் பெற்றிருந்த யூதநிலைகளில் ஒன்றைக் கொண்டிருந்தனர். வெளிப்படையாகவே, அரபு சார் பான பிரிட்டிஷ் கொமாண்டர், யூதர்கள் வென்றெடுத்திருந்த கேந்திர முக்கியத் துவம் வாய்ந்த இடங்களிலிருந்து அவர்களை விரட்ட தொடர்ந்து முயற்சித்துக் கொண்டிருந்தான்.

மக்கபீஸ்கள் கார்மேல் மலையின் சரிவுகளை உபயோகித்து, பீப்பாய்க் குண்டுகளை அரபுப் பகுதியினுள் உருட்டி விட்டனர். லெபனானிலிருந்து வந்து கொண்டிருந்த அரபுக்களின் ஆயுத வாகனத் தொடர் ஒன்றை மறைந்திருந்து தாக்கி. அதன் அரபுக் கொமாண்டரையும் கொன்று விட்டனர்.

இயல்பான வர்த்தகத் தொடர்புகள் இரு பகுதிகளுக்கும் இடையே நின்று போயின. அரபு லீஜனின் அதிகாரியான அபின் அசாடின், அதிகரித்துக் கொண்டிருந்த கூலிப்படையினருக்குத் தலைமை தாங்கி வந்து சேர்ந்தான். பிரிட் டிஷார் யூதர்களைக் கட்டுப்படுத்திய அதேவேளை ஹார்ஹா கார்மேலின் மேல் தாக்குதல் ஒன்றை மேற்கொள்ளப் போதுமான பலத்தைச் சேகரிக்க அரபுக்களை அனுமதித்துக் கொண்டிருந்தனர்.

ஷரோன் (The Sharon)

இந்த மத்திய சமவெளி' சிலுவை யுத்தங்கள் பல நடந்த இடமாகும். அத் தோடு யூதர்கள் நெருக்கமாகக் குடியிருத்தப்பட்டிருந்த இடமுமாகும். அத னுடைய வடிவத்தின் காரணமாக ''முக்கோணம்'' என்று அழைக்கப்பட்ட மிக நெருக்கமாக அரபுக்கள் குடியிருந்த இடமான சமாரியாவை எதிர் நோக்க வேண்டியிருந்தது. இரு பகுதியினருமே, ஆயத்தமாக இருந்தாலும் இந்தப் போர் முனை, ஒப்பீட்டளவில் அமைதியாக இருந்தது.

ரெல் அவிவ் - ஜாவா (Tel Aviv- Jaffa)

அடுத்தடுத்து இருந்த இந்த இரண்டு நகரங்களிடையேயும், ஒரு போர் முனை தோன்றியிருந்தது வீதிச்சண்டைகளும், ரோந்துகளும் இருபத்தினாலு மணி நேரமும் நடந்தன ஹகானா அணிகளின் மத்தியபகுதியில் மக்கபீஸ்கள் இடம் பெற்றிருந்தனர். இருபக்கத்திலும் தாக்குதல்கள் அடிக்கடி நடந்த வண் ணம் இருந்தன. அரபுக்கள் ஒரு பள்ளிவாசல் கோபுரத்தை அவதானிப்பு நிலை யாகவும், குறிபார்த்துச் சுடும் நிலையாகவும் பாவித்ததோடு. இடையே இருந்த பிரிட்டிஷாரின் நிலைகள், இந்த இடத்தைத் தாக்குவதிலிருந்து யூதர்களைத் தடுத்து வந்தது.

தென்பகுதி (The South)

பரந்திருந்த நெகெவ் பாலைவனத்தில் யூத குடியேற்றங்கள். குறைவாக வும் பிரிந்தும் இருந்தன. அரபுக்களுக்கு இரண்டு பெரிய தளங்கள் அங்கே இருந்தன. பீர்ஷபாவும், ''சாம்சன் புகழ்'' காஸாவுமே அவை அரபுக்களால் இந்த யூத குடியேற்றங்களை பயங்கர முற்றுகைக் குள்ளாக்கி மெதுவாக அவர்

களைப் பட்டினி போட முடிந்தது. ஒவ்வொரு குடியேற்றமும் இவைகளைத் தன்னந்தனியே சமாளித்துக் கொண்டிருந்தாலும். இங்குள்ள அரபுக்கள் துணிகரம் கொண்டவர்களாக இருந்ததோடு, அழுத்தமும் தொடர்ந்து இருந்து அதிகரிக்க ஆரம்பித்தது. யூத விமானப்படை பிறந்தது. அது தொடர் வேலைகட்காக இரு பைப்பர் கப் (Piper cub) விமானங்களைக் கொண்டிருந்தது. இன்னொரு பைப்பர் கப் தங்கள் முதல் குண்டுவீச்சுத் தாக்குதலை தங்கள் ஜன்ன ஓடாகக் குண்டுகளை வீசி நடத்தின.

ஜெருசலேம் (Jerusalem)

அப்துல் காதர், யூத ஜெருசலேம் மீதான தன் பிடியை இறுக்கினான். பாப் எல் வாட் என அழைக்கப்பட்ட ஆபத்தானதும், கஷ்டமுமான யூடியாக் குன்றுகளின் ஊடாகச் செல்லும் பாதை, மூடி அடைக்கப்பட்டது. யூதர்கள் இவற்றின் ஊடாகப் பெரிய வாகனத் தொடர்களில் ஆபத்தின் மத்தியிலேயே கடக்க முடிந்தது. பிரிட்டிஷாரோ, தொடர்ந்து பாதைகளைத் திறந்து வைத்திருக்க உதவ மறுத்து வந்தார்கள். ஜெருசலேமுக்குச் வெளியே, பெத்திலகே முச்சுச் செல்லும் பாதையில், ஹெய்ரோன் குன்றுகளில் நான்கு தனிமையான குடியேற்றங்களை யூதர்கள் கொண்டிருந்தனர். பழைமைவாத யூதர்களால் பாதுகாச்கப்ப டிருந்த இந்த நாலு குடியேற்றங்களும் ஏற்சியோன் குழு என அழைக்கப்பட்டது. அவர்களுடைய நிலைமையோ ஷாபெட்டை விட மோசமானதும், அபத்தானதுமாய் இருந்தது. ஏற்சியோன் குழு யூத பலஸ்தினத்திலிருந்து முற்றாகத் துண்டிக்கப்பட்டிருந்தது. காரியங்களை மேலும், மோசமாக்க ட்ரான்ஸ்-ஜோர்தான் அரபு லீஜன், பிரிட்டிஷ் படைகள் என்ற போர்வையில் ஜெருசலேமுக்கும் இந்தக் குடியேற்றங்களுக்கும் இடையிலான தொடர்புகளைத் தடுத்துக் கொண்டிருந்தனர்.

ஜெருசலேமுக்குள்ளோ உணவு, நீர் தட்டுப்பாடு உச்சநிலை அடைந்தன. குண்டுவீச்சுக்கள், இலக்குப் பார்த்துச் சுடுதல், கவசவாகனப் பயணங்கள், பகிரங்கமான சண்டை என்பன நாளாந்த நடவடிக்கைகளாயின.

ஸ்கோர்பஸ் மலையில் இருக்கும் ஹடாஸ்ஸா வைத்திய மையத்திலிருந்து வந்து கொண்டிருந்த செஞ்சிலுவைச்சங்க வாகனத் தொடரை வழிமறித்த அரபுக்கள் நிராயுதபாணிகளான எழுபத்தேழு யூத டாக்டர்களைப் படுகொலை செய்து, துண்டுதுண்டாக வெட்டிக் குவித்தபோது, திரும்பவும் மோதல் உரமாகியது. இப்போதும், பிரிட்டிஷ் துருப்புகள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

எஸ்தர் கோட்டையைக் கையேற்கும் வேலைக்குச் செல்லமுன்பதாக அரியின் காரியாலயத்துக்கு ஸெவ் ஜில்போவா வந்தான்.

''நாங்கள் எல்லோரும் போக ஆயத்தமாகி விட்டோம்.'' ஸெவ் சொன்னான்.

''நல்லது. கோட்டைவரை வாகனத்தில் செல்வது நல்லது. மேஜர் ஹோச்ஸ் சரியாகப் பகல் இரண்டு மணிக்குக் கோட்டையைக் கையளிப்பதாகக்

கூறியிருக்கிறார். உனக்கும் லியோராவுக்கும் இன்னொரு குழந்தை பிறக்கப் போவதாகக் கேள்விப்பட்டேன், உண்மையா?

''ஆமாம் அது சரிதான்.''

''நீ பிரச்சினையிலிருந்து விலகியிருக்காவிட்டால், வார இறுதி விடுமுறை களைத் தருவதை நிறுத்த வேண்டிவரும்.'' சிரித்தபடி அரி சொன்னான்.

ஸெவ் வெளியே ஓடி, ட்ரக்கை விரைவாக எயின்ஓர் கிபுட்சை விட்டு வெளியே செலுத்தினான். இருபது பால்மர்க் இளைஞர்களும், யுவதிகளும், எஸ்தர் கோட்டையைக் கைப்பற்றக் கூடவே சென்றனர். பிரதான பாதையூடாக வாகனத்தைச் செலுத்தி, ரின் லெபனான் எல்லையிலிருந்த எஸ்தர் கோட்டையை நோக்கி மலைப்பாதைகளில் வாகனத்தைச் செலுத்தினான்.

தன்னுடைய கிபுட்சான, ஸ்டெ ஷிம்ஷொன்- அதாவது சாம்சனின் வய லிற்குக் கடைசித் தடவை போயிருந்ததை நினைவு கூர்ந்தான். லியோரா தான் மீண்டும் கர்ப்பமாயிருப்பதைத் தெரியப்படுத்தினாள். என்ன மகிழ்ச்சியானசெய்தி! கடமையிலீடுபடாத போது ஒரு மந்தை மேய்ப்பவனாக இருந்தான். அது வெகு காலத்துக்கு முன்... தன் மகன்களையும் கூட்டிக் கொண்டு மலைப் பிர தேசங்களுக்குச் சென்று மேய்ந்து தொண்டிருக்கும் மந்தைகளைக் கவனித்தபடி சோம்பலாகப் படுத்திருந்தால் எப்படியிருக்கும்.

இப்படியான சிந்தனைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தான். செய்வதற்கு வேலைகள் நிறைய இருந்தன. எஸ்தர் கோட்டை கைப்பற்றப்பட்டதும் மனோரா கிபுட்சை முற்றுகையிலிருந்து விடுவிக்க வேண்டும். எல்லைகளை, நெடுகரோந்து அனுப்பி கூலிப்படையினரின் உள்வரவைக் குறைக்க வேண்டும்.

அந்தப் பெரிய கொங்கிறீட் பாதுகாப்பரண் முழு ஹஸிலப் பள்ளத்தாக் கையும் மேலாதிக்கம் செய்து கொண்டிருந்தது. கோட்டையின் மேல் ஸ்டார் ஒவ் டேவிட்டை ஏற்றுவது ஒரு ஆறுதல்தான்.

பின்பக்கம் இருந்த குழுவினர் அவன் மலைப்பாதையில் அபாயகரமான வளைவுகளைத் தாண்டிச்செல்லத் தொடங்கியபோது பாடல்களைப் பாட ஆரம் பித்தனர். ஸெவ் தனது கடிகாரத்தில் நேரத்தைச் சரிபார்த்தான். குறித்த நேரத் துக்கு இன்னும் பதினைந்து நிமிடங்கள் இருந்தன. கடைசி வளைவில் அவன் வாகனத்தைத் திருப்பினான். அந்தப் பெரிய சதுரக் கட்டிடம் அடிவானத்தில் சில மைல்கள் தொலைவில் தோன்றியது. தனக்குக் கீழே வெண்ணிறக் கோட் டமாக, மலை ஓரத்தில் அபுயேஷாவும், அதற்கு மேலே பச்சைப் பசேலென்ற புற்றரையில் கான் டப்னாவும் அவனுக்குக் காட்சியளித்தது.

எஸ்தர் கோட்டையிலிருந்து சில நூறு யார் தூரத்தில் சென்றபோது ஏதோ விபரீதமாக நிகழ்ந்திருப்பதை உணர்ந்தான். அவன் வாகனத்தை வேகம் குறைத்து ஜன்னலூடாக எட்டிப் பார்த்தான். பிரிட்டிஷார் வாபஸ் பெறுவதாக இருந்தும் கூட அதற்கான எவ்வித நடவடிக்கைகளும் நிகழ்ந்து

கொண்டிருக்கவில்லை. ஸெவ்நிமிர்ந்து காவல் கோபுர, பிரங்கிக் கோபுரங்களைப் பார்த்தான். அவன் கண்கள் கோபுரத்தின் மீது பறந்து கொண்டிருந்த காவுக்ஜி கூலிப்படையினரின் கொடியைக் காணவும், கோட்டையிலிருந்து துப்பாக்கி வேட்டுக்கள் எழவும் சரியாகவிருந்தது ஸெவ் வேகத்தடையை அழுத்தி வாகனத்தை பாதை ஓரத்துக்குக் கொண்டு சென்றான்.

''வெளியேறித் தப்புங்கள்'' ஆணை பிறந்தது

அவனுடைய துருப்புக்கள் பாதுகாப்பிடங்களை நோக்கிப் பாய்ந்தனர். ட்ரக் தீப்பிடித்துக் கொண்டது. ஸெவ் விரைவாகத் தன் ஆட்களை துப்பாக்கி வேட்டு வீச்செல்லைக்கு வெளியே கொண்டு வந்து, ஒன்று சேர்ந்து, மலைப்பாதை வழியாக இருமடங்கு வேகத்தில் எயின் ஓர் நோக்கிக் கூட்டிச் சென்றான்.

எஸ்தர் கோட்டை அரபுக்களிடம் கையளிக்கப்பட்டு விட்டதை கேள்விப் பட்ட அரி உடனடியாக ஷாபெட் விரைந்து கனான் மலையிலிருந்த ராக்காட் கோட்டைக்குச் சென்றான்.

அவன் நேராக, அந்தப் பிரதேசத்தின் கொமாண்டரான பருத்த உருவமும் சிறிது இருண்ட நிறத் தோற்றத்தையும் கொண்ட மேஜர் ஹோக்ஸின் காரியாலயத்தினுள் புயலெனப் புகுந்தான். கோபத்தோடிருந்த பென்கானான் உள்ளே வந்தபோது ஹோக்ஸ் இரவு முழுவதும் நித்திரை இல்லாததால் தூக்கக் கலக்கத்தில் இருந்தார்.

''ஏய் யூதாஸே!'' அரி குமுறினான்.

''அது என்னுடைய பிழை அல்ல. நீ என்னை நம்பவேண்டுப்'' என்றார் அரைகுறை முணுமுணுப்பில்.

''இல்லை என்னால் அதை நம்ப முடியாது, நீ சொல்வதால் விசேடமாக'' என்றான்.

ஹோக்ஸ் தன் தலையைக் கைகளில் தாங்கிக் கொண்டார்.

''நேற்றிரவு பத்தரை மணியளவில் ஜெருசலேமிலிருக்கும் தலைமைச் செயலகத்திலிருந்து, ஒரு தொலைபேசிச் செய்தி வந்தது. உடனடியாக எனது ஆட்களை எஸ்தர் கோட்டையிலிருந்து வெளியேற்றும்படி ஆணையிட்டனர்.''

''நீங்கள் என்னை எச்சரித்திருக்கலாம்.''

''என்னால் முடியவில்லை.'' ஹோக் முணுமுணுத்தார். ''நான் இன்னும் ஒரு போர்வீரன்தான் பென் கானான். நான்.. நான் இரவு முழுவதும் தூங்கவில்லை. இன்று காலையில் நான் ஜெருசலேமை அழைத்து மீண்டும் எஸ்தர் கோட்டைக்குப் போய், அதைப் பொறுப்பேற்க அனுமதி கேட்டேன்.'' அரி குற்றம் சாட்டும் தோரணையில் அவனை வெறித்துப் பார்த்தான்.

''என்னைப்பற்றி நீ என்ன நினைத்தாலும், அது அதிகமாகச் சரியாகத் தான் இருக்கும்.'' அரி தொடர்ந்தும் வெறித்தபடி இருந்தான்.

''சரி, நீ நினைப்பது போலவே வைத்துக் கொள். எந்தவிதச் சாட்டும் சொல்ல முடியாது.''

''அதுதான் உன் வாழ்க்கை ஹோக்ஸ், தன் மனச்சாட்சியை விழுங்கிய முதல் போர் வீரன் நீயல்ல.''

''கதைத்து என்ன பிரயோசனம், நடந்தது நடந்துவிட்டது.''

''நீ செய்தது உன்னை ஒரு நல்ல போர்வீரனாகக் காட்டக்கூடும் ஹோக்ஸ். ஆனால், நான் உனக்காகத் துக்கப்படுகிறேன். நீதான் கான் டப்னாவின் முற்று கையைக் குறித்து மனச்சாட்சி குடையக் குடைய சிவிக்கப் போகிறவன். இன்னும் உனக்கு மனச்சாட்சி எஞ்சியிருந்தால் ...

ஹோக்ஸ் வெளியேறிப் போனான்.

''நீ அந்தக் குழந்தைகளை மலையில் விட்டுப் போகப் போகிறாயா? அவர் களைக் கூட்டிச் சென்றுவிட வேண்டும்.''

நீங்கள்தான் அதை யோசித்திருக்க வேண்டும். எஸ்தர் கோட்டையில் லாமல், கான் டப்னாவைக் காப்பாற்றிக் கையில் வைத்திருக்காவிட்டால் நாங்கள் முழு ஹூலேப் பள்ளத்தாக்கையும் இழந்து போவோம்.

''இங்கே பார் அரி நான் அந்தப் பிள்ளைகளை வாகனத் தொடரில் அழைத் துச் செல்கிறேன்.''

''அவர்களுக்குப் போவதற்கு இடமெதுவுமில்லை.'' ஹோக்ஸ் தன் முஷ்டியை மேசை மீது ஒங்கிக் குத்தி, அடித்தொண்டையில் ஏதோ முணுமுணுப் பதை அரி பார்த்துக் கொண்டிருந்தான். அவன்தான் கான் டப்னாவை ஒரு தற் கொலை நிலைக்குக் கொண்டு வந்திருந்தான். அவனை மேலும் வருத்துவதில் பயனில்லை. அவனைக் கட்டாயப்படுத்திச் செய்ய வைத்த காரியத்தினால் அவன் பாதிப்படைந்திருப்பது தெளிவாகத் தெரிந்தது.

மேலே வந்து கொண்டிருந்தபோது, அபாயகரமானதாக இருந்தாலும், நீண்டகால அடிப்படையில், கான் டப்னாவின் முக்கிய நிலைபைப் பாதுகாக்கக் கூடிய திட்டமொன்றை அரி மனதில் தீட்டியபடியேதான் வந்தான்.

அவன் ஹோக்ஸின் மேசைமீது குனிந்தபடியே ''நீங்கள் செய்த நிங்கில் பகுதியைக் குறைக்கும் வாய்ப்பொன்றை உங்களுக்குத் தருகிறேன்.''

''இப்போ என்னால் என்ன செய்ய முடியும், பென் கானான்?''

''இந்தப் பிரதேசக் கொமாண்டர் என்ற கோதாவில் கான் டப்னாவுக்கு வந்து எங்களை வெளியேறும்படி ஆலோசனை சொல்லும் உரிமை உங்களுக்கிருக்கிறது.''

''ஆமாம்...ஆனால்...''

''அப்படியானால் அதைச் செய்யுங்கள். நாளை கான் டப்னாவுக்குச் செல்லுங்கள். உங்களுடன் ஐம்பது ட்ரக்குகளை எடுத்துச் செல்லுங்கள். முன்னும் பின்னும் கவச வாகனங்களைக் கொண்டு செல்லுங்கள். எவராவது என்ன செய்கிறீர்கள் என்று கேட்டால், கான் டப்னாவின் பிள்ளைகளை வெளியேற்றப் போவதாகச் சொல்லுங்கள்.''

''எனக்குப் புரியவில்லை. நீ அவர்களை வெளியேற்றப் போகிறாயா?''

''இல்லை. ஆனால், மிகுதியை என்னிடம் விட்டு விடுங்கள். நீங்கள் வாகனத் தொடரோடு வந்தால் போதும்.''

அரியின் மனதில் என்ன இருக்கிறது என்று அறிய ஹோச்ஸ் மேலும், முயற்சிக்கவில்லை. அரி சொன்ன அறிவுறுத்தல்களைப் பின்பற்றி ஆயுதந்தாங்கிய சிறிய ரக லொறிகள், கவச வாகனங்களின் பாதுகாப்புடன் ஐம்பது லொறிகள் கொண்ட வாகனத் தொடரொன்றை கான் டப்னாவுக்குக் கொண்டு சென்றான். ராக்காட் கோட்டையிலிருந்து அரை மைல் நீளமான இந்த ஊர்வலம் ஹோலே நோக்கிச் செல்லும் வழியில் அரபுக்கிராமங்கள் ஊடாகச் சென்றன. மலைப் பாதை வழியே அபுயேஷா ஊடாகச் எஸ்தர் கோட்டையில் இருந்த கூலிப் படையினருக்குத் தெளிவாகத் தெரியக்கூடியதாக ஒட்டிச் செல்லப்பட்டது. நண்பகலளவில் வாகனத்தொடர் கான் டப்னா வந்து சேர்ந்தது.

மேஜர் ஹோக்ஸ் முன்பே ஏற்பாடு செய்திருந்தபடி பிள்ளைகளைக் கிராமத்தினை விட்டு வெளியேற்றுமாறு டாக்டர் லிப்பர்மானுக்கு உபதேசம் செய்தார், பின்னவரோ, அரியின் அறிவுறுத்தல்படி உத்தியோக பூர்வமாக அப்படிச் செய்ய மறுத்துவிட்டார். மதிய உணவுக்குப் பிறகு வாகனத் தொடர் கான் டப்னாவை விட்டுத் தங்கள் தளமான ஷாபெட்டுக்குச் சென்றன.

இதற்கிடையே அரி அபுயேஷாவில் இருக்கும் தன் நண்பர்களில் சிலருக்கு மேஜர் ஹோச்ஸ் கிராமத்தில், இயந்திரத்துப்பாக்கியிலிருந்து மோட்டார்கள் வரை தொன் கணக்கான ஆயுதங்களை விட்டுச் சென்றதாக ''இரகசியமாக'' சொல்லி வைத்தான்.

என்ன இருந்தாலும், யூதர்களின் நண்பனாக வெளிப்படையாக அறியப் பட்ட ஹோக்ஸ், எஸ்தர் கோட்டையை அரபுக்கள் ஆக்கிரமித்ததற்குப் பிராயச் சித்தமாக, தனிப்பட்ட முறையில் இதைச் செய்தார் என்று மிகுந்த நம்பிக்கையுடன் அரி சொல்லி வைத்தான்.

இந்தக் கதை நன்றாகவே விதைக்கப்பட்டது. சில மணி நேரங்களுக்குள்ளாகவே அந்தப் பிரதேசம் முழுவதும் கான் டப்னாவை இனி அசைக்க முடி

யாதெனற கதை பரவிவிட்டது. பிள்ளைகள் பூரணமாக ஆயுதந் தரித்திருக்கி றார்கள். பிள்ளைகள் வெளியேற்றப்படாமலே இருந்தது, இக்கதைக்கு இன்னும் நம்பகத் தன்மையைக் கொடுத்தது. உண்மையிலேயே ஆபத்தான நிலைபொன் றிருக்குமானால் யூதர்கள் பிள்ளைகளை வெளியேற்றி இருப்பார்கள் என்று அரபுக்களுக்கும் தெரிந்திருந்தது.

கான் டப்னாவின் ''பலம்'' இப்படியான விதத்தில் நிலைநிறுத்தப் பட் டது, அரி அபுயேஷாவுக்குச் சென்று அதை மேலும் உறுதிப்படுத்தினான். ஆற்றங்கரை அருகில் கல்வீட்டில் வசித்து வந்த அபுயேஷாவின் முக்தாரான தன் பழைய நண்பன் தாஹாவைச் சந்திக்கச் சென்றான். உணர்வுகள் எப்படித் தான் குழம்பிப் போயிருந்தாலும், வீட்டுக்கு வரும் எவனையும் உபசரிக்காமல் அரபு வீடுகள் இருந்ததில்லை தாஹா உபசரிப்புகளைப் பாரம்பரியமான முறை களின் படி செயது கொண்டிருந்தாலும், தாஹாவிடம் தான் முன்னொரு போதும் காணாத ஒரு இறுக்கமான தன்மை காணப்படுவதை அரி உணர்ந்தான்.

இரண்டு பேரும் உணவருந்தி விட்டு சிறிய சிறிய விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள். சுற்றி வளைத்துப் பேசிக் கொண்டிருந்தது போதும் என்று நினைத்த அரி, தான் அபுயேஷாவுக்கு வந்த விஷயத்துக்கு வந்தான்.

''உன்னுடைய மன உணர்வுகளைத் தெரிந்து கொள்ள வேண்டிய காலம் வந்து விட்டது'' என்றான் அரி.

''என்னுடைய உணர்ச்சிகளுக்கு இப்போது மதிப்பு இல்லாமல் போய் விட்டது.''

''தாஹா நான் இப்போது இந்தப் பிரதேசத்தின் ஹகானாக் கொமாண் டர் என்ற முறையில் பேச வேண்டும் என நினைக்கிறேன்.''

''நான் அபுயேஷா பக்கசார்பில்லாமல் நடந்து கொள்ளும் என்று வாக் குத் தந்திருக்கிறேன்.''

அரி மேசையிலிருந்து எழுந்து நின்று, ஒரு அராபியன் காதுகளுக்கு உறைக்கக் கூடிய வார்த்தைகளைப் பேசினான்.''நீ வாக்குத் தந்தாய். ஆனால் அதை நீயே மீறியும் விட்டாய்.''

தாஹா அவனைக் கோபத்தோடு பார்த்தான்.

''காவுக்ஜியின் ஆட்கள் கும்பல் கும்பலாக அபுயேஷா ஊடாகச் செல்வ தாகக் கேள்விப்பட்டோம்.''

''அப்போ, நீ நான் என்ன செய்ய வேண்டும் என்று நினைக்கிறாய். தயவுசெய்து வராதீர்கள் என்று அவர்களிடம் சொல்ல வேண்டுமென்றா? நானாக அவர்களை அழைக்கவில்லை.

''நானும் அழைக்கவில்லை. இங்கே பார் என் நண்பனே நானும் நீயும் இப்படிக் கதைத்துக் கொள்ள வேண்டியிருக்காத நேரம் ஒன்று இருந்தது.''

''காலங்கள் மாறுகின்றன அரி.''

அரி எழுந்து சென்று ஜன்னலுக்கூடாக ஆற்றின் மறுபக்கக்கரையில் அமைந்திருந்த பள்ளிவாசலைப் பார்த்தான். ''நான் இந்த இடத்தை எப்போதுமே விரும்பினேன். இந்த அறையிலும், அந்த ஆற்றங்கரையிலும், எவ்வளவோ மகிழ்ச்சியான நாட்களைக் கழித்தோம். நீயும் நானும் அங்கே வெளியில் முகாம் அமைத்துத் தங்கியிருந்த இரவுகளை மறந்துவிட்டாயா?

''அது எப்பவோ நடந்த விஷயம்.''

எனக்கு மிக்க நீண்ட ஞாபகசக்தியாக இருக்கலாம். கலவரங்களின்போது, மற்றவர்கள் சண்டைபிடித்துக் கொள்வது எவ்வளவு மடத்தனமானது என்று கதைத்திருக்கிறோம். எப்போதுமே சகோதரர்களாயிருக்க இரத்தத்தின் மேல் உறுதி எடுத்திருந்தோம். தாஹா .. இன்று என்ன சொல்லப் போகிறேன் என்று யோசித்துக் கொண்டே நேற்று முழு இரவும் விழித்திருந்தேன். நீயும் நானும் ஒன்றாகச் செய்த பல காரியங்களை ஞாபகப்படுத்திக் கொண்டேன்.''

''உணர்ச்சி வசப்படுவது உன் இயல்பு அல்ல அரி.''

உன்னைப் பயமுறுத்துவதும் அப்படித்தான். முகமட் காசியும், எஸ்தர் கோட்டையிலிருக்கும் மற்ற மனிதர்களும், பிரார்த்தனைக்காக மண்டியிட்டிருந்த உன் தந்தையைப் படுகொலை செய்த வகையைச் சேர்ந்தவர்கள்தான். பிரிட்டிஷார் இப்பிரதேசத்தை விட்டு விலகியதும், அவன் எஸ்தர் கோட்டையிலிருந்து இறங்கி வந்து கான் டப்னாவுக்கான பாதையைத் தடைசெய்யச் சொல்லி உன்னைக் கேட்கப் போகிறான். நீ அதை அனுமதித்தால், உன்னுடைய மக்களின் கரங்களில் துப்பாக்கிகளைத் திணித்து, யாட் எல்லையைத் தாக்கும்படி கூறப் போகிறான்.''

''அப்போ என்னிடம் என்ன எதிர்பார்க்கிறாய்?''

''நீ என்னிடம் என்ன எதிர்பார்க்கிறாய்? எதிர்க்கேள்வி கேட்டான் அரி. ஒரு காத்திரமான மௌனம் நிலவியது.

''அபுயேஷாவின் முக்தார் நீ. உன் மக்களை உன் தகப்பனார் வழி நடத்தியது போல் நடத்தலாம். கூலிப்படையினரோடு தொடர்பு வைத்திருப்பதை நீ நிறுத்த வேண்டும்.''

''அல்லாவிட்டால்?''

''அல்லாவிட்டால் நீ ஒரு எதிரியாகக் கருதப்படுவாய்.''

''என்ன சொன்னாய் அரி?

''அபுயேஷாவின் அழிவை நீயே தேடிக்கொள்ளப்போகிறாய்.''

தாஹாவோ அரியின் அந்த வார்த்தைகளை நம்பவில்லை. அரி களைத் திருந்தான் அவன் முன்சென்று தாஹாவின் தோள்களில் தன் கையை ஊன்றிக் கொண்டான்.

''தயவு செய்து எனக்கு உதவி செய்.'' என்றான் அரி.''

,'நான் ஒரு அராபியன்'' தாகா சொன்னான்.

''நீ ஒரு மனிதப்பிறவி.சரியான்வற்றிலிருந்து பிழையானவற்றைப் பிரிக்கத் தெரிந்தவன்.''

''நான் ஒரு அழுக்கான அராபியன்''

''உன்னைப்பற்றி நீதான் அப்படி நினைத்துக் கொள்கிறாய்,

''நான் உன் சகோதரன் என்று சொல்கிறாயா?

''சொல்வதென்ன அப்படித்தான் இருந்து வருகிறாய்-''

''நான் உன் சகோதரனானால், ஜோர்தானாவை எனக்குத் தா. ஆமாம், அதுதான் சரி. அவளை எனக்குத் தந்து, அவளை படுக்கைக்கு அழைத்துச் செல்ல விடு. அவள் என் வாரிசுகளைத் தாங்கட்டும்.

அரியுடைய முஷ்டி பறந்து சென்று தாகாவின் அலகைத் தாக்கியது. அந்த அராபியனோ நிலத்தில் தூக்கி வீசப்பட்டான். அவன் பாய்தெழுந்து உள்ளு னர்வின் தூண்டுதலின் இடைப்பட்டியிலிருந்து குத்துவாளை உருவிக்கொண்டு அரியை நோக்கி வந்தான்.

அரி தன்னைப் பாதுகாத்துக் கொள்ள எவ்வித முயற்சியும் செய்யா மலே நேராக நின்றான். தாஹா கத்தியை ஓங்கியவாறு அப்படியே உறைந்து போய் நின்று விட்டு, மறுபக்கம் திரும்பிக் கத்தியைக் கீழே எறிந்தான். அது கலகலத்து ஒலித்தபடி கல்தரையின் மேல் விழுந்தது.

''ஐயோ என்ன செய்து விட்டேன்!'' அரி முணுமுணுத்தான். அவன் முகத் தில், மன்னிப்புக் கேட்கும் தோரணை பொங்க, தாஹாவை நோக்கிச் சென்றான்.

''எனக்குத் தெரியவேண்டியதை எல்லாம் நீ சொல்லி விட்டாய். யூதனே ; என் வீட்டை விட்டு வெளியே போ.''

o

அத்தியாயம் நான்கு

பிளஷ்ஷிங் மெடோவில் ஒரு பயங்கரமான மாற்றம் ஏற்பட்டிருந்தது. பிரிவினையை நடைமுறைப்படுத்த ஆயுதத் தலையீடு அவசியம் என்பதை எதிர்பார்த்தும், அதற்குரிய சர்வதேசப் படையில் சேரவியத் துருப்புகளும் இடம் பெறக் கூடும் என்று பயந்தும் பிரிவினைக்கான தன் ஆதரவை கைவிடும் நோக்கத்தை அமெரிக்கா அறிவித்தது.

யிசுவ்வினர் அமெரிக்காவின் தோல்வி மனப்பான்மையை மாற்றும் இறுதி நேர நடவடிக்கைகளில் இறங்கினர். இந்த முக்கியமான கையாளுகலின் நடுவில், பராக் பென் கானானுக்கு பரீசுக்கு உடனடியாக வந்து சேரும்படி கேபிள் ஒன்று கிடைத்திருந்தது. பிளஷ்ஷிங் மெடோவில் இருந்த வேலைப் பளுவின் காரணமாக இந்தக் கேபிளைப்பற்றி பராக் ஆச்சரியப்பட்டார். ஆயினும், அவர் விமானம் மூலம் உடனடியாகப் புறப்பட்டார்.

அவரை இரண்டு யிசுவ் முகவர்கள் சந்தித்தனர். மிக இரகசியமாக நடத்தப்பட்டுக் கொண்டிருந்த முக்கியமான ஆயுதப் பேரம் ஒன்றில் பங்குபற்றவே பராக் அழைக்கப்பட்டிருந்தார். பிளஷ்ஷிங் மெடோவில் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் மாற்றங்களை அனுசரித்து, ஆயுதக் கொள்வனவே இந்தக் கட்டத்தில் முக்கியமானதொன்று என யிசுவ்வினர் கணிப்பிட்டு, அதில் திறமைசாலியான பராக்கை அதற்கென அழைத்திருந்தனர். அரைடசின் ஐரோப்பிய நாடுகளிலிருந்த ஆயுத விற்பனை ஸ்தாபனங்களைப் பற்றிய தகவல்களை அவர்களுடைய நண்பனான செக்கோஸ்லாவாக்கியாவின் ஜான் மசாறிக்தெரிவித்திருந்தார்.

வாரக்கணக்கான ரகசியமானதும், நுட்பமானதுமான பேச்சு வார்த்தைகளின் பின் விற்பனை ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டன. பிரிட்டிஷ் தடைகளின் கீழ் இன்னமும், இருந்து வரும் பலஸ்தீனத்தின் உள்ளே ஆயுதங்களைக் கொண்டு செல்வது அடுத்த பிரச்சினையாயிற்று.

முதல்கட்ட நடவடிக்கையாக ஆயுதங்களைச் சுமந்து செல்லக் கூடிய ஒரு பெரிய விமானத்தைக் கொள்வனவு செய்து கொள்வது அமைந்தது. வீயன்னாவில் பாவனையில் இருந்து ஒதுக்கப்பட்ட, மேலதிக அமெரிக்க லிபறேற்றர் வகைக் குண்டுவீச்சு விமானமொன்றை அலியா பெற் முகவர்கள் கண்டுபிடித்து அதனை அல்பைன் சாட்டர் பினான்ஸ் இன்கோப்பரேற்றற் என்ற நிறுவனத்தின் பெயரில் வாங்கினர்.

அடுத்ததாக இதன் விமானிகள் குழுவைத் தேட வேண்டியிருந்தது. நாலு தென்னாட்ரிக்க யூதர்களையும், போர்விமானங்களை ஓட்டிய அனுபவமுடைய இரண்டு அமெரிக்க யூதர்களையும் கொண்ட ஆறுபேர் குழுவொன்று தெரிந்தெடுக்கப்பட்டு இரகசியக் காப்புப் பிரமாணமும் செய்து வைக்கப்பட்டனர்.

இறுதியாக, பிரிட்டிஷாரால் கவனிக்க முடியாதபடி சிறிய விமான ஓடுபாதை ஒன்றை அமைக்கும் வேலை இருந்தது, ஜெஸ்ரீல் பள்ளத்தாக்கில் கைவிடப்பட்டிருந்த பிரிட்டிஷாரின் போர் விமானத்தளமொன்று இதற்காகத் தெரிவு செய்யப் பட்டது. அது முழுவதும் யூதர்களைக் கொண்ட பிரதேசமொன்றினுள் இருந்தது. லிபறேற்றர்கள் வந்து இறங்கவும், வெளிப்பட்டுப் போகவும் நிறைய வாய்ப்புக்களைக் கொடுக்கக் கூடியதாக இருந்தது. அல்பன் சாட்டர் பிளைற்ஸ் இன்கோப்பரேற்றற் நிறுவனத்தின் உண்மையான அடையாளத்தை சூழ்ந்திருந்த அதே இரகசியத் திரை ஐரோப்பாவினுள் நடத்த ஆயுதச் சேகரிப்பையும் மூடியிருந்தது.

அது நேரத்துக்கு எதிரான ஓட்டப்போட்டி போலிருந்தது. முதலாவது ஆயுதத் தொகுதி ஐரோப்பாவை விட்டுப் புறப்படக் குறைந்தது இரண்டு வாரமாவது தேவைப்பட்டது. ஆனால் தேவைப்படும் கால எல்லைக்குள் இவை போய்சேரப் பிந்தி விடுமோ என்பதுதான் முக்கியமான பிரச்சினையாக இருந்தது

புதுமையான விதத்தில் ஒரு குடியேற்றம்கூட இன்னும் வீழ்ந்து விடவில்லை. ஆனால் யூத வாகனத் தொடர்கள் சுக்கல சுக்கலாக சிதறிக் கொண்டிருந்தன. நெகெல் பாலைவன குடிநீர்க் குழாய்கள் தடுக்கப்பட்டு விட்டன. சில இடங்களில்பிரதியிடாக உருளைக்கிழங்கு தோல்களையும், ஓலிவ்களையும் பாவித்தனர்.

தனிமைப்படுத்தி - பட்டினி போடும் தந்திரம் முக்கிய கவனத்தை ஈர்த்த ஜெருசலேமின் உள்ளே பாதிப்பை ஏற்படுத்தத் தொடங்கியிருந்தது. ரெல்அவிவில் இருந்து. வரும் வாட் எல்வாட் நெடுஞ்சாலையில் உடைந்த ட்ரக்குகளின் சிதறல்கள் நிறைந்திருந்தன. இடைக்கிடை பெருத்த ஆட், பொருட் தேசங்களுடன் வரும் பெரும் தொடர் வாகன அணிகளால் மடடுமே ஜெருசலேமில் அழிவுகள் தவிர்க்கப்பட்டு வந்தன.

சரித்திரத்தில் முதல் தடவையாக காவுக்ஜியின் கூலிப்படையினர் ஜெருசலேமைப் பிரங்கிகள் கொண்டு தாக்கினர்.

காவுச்ஜி, சவ்பாற், காதர் எல்லோருக்குமே அவசரமாக ஒரு வெற்றி தேவைப்பட்டது. முன் கூறப்பட்டது போல் ''மாபெரும் வெற்றிகள்'' கிடைக்காததால் அரபுக்கள் அமைதியிழந்துவந்தனர்.

முதலாவது யூதகுடியேற்றம் ஒன்றைக்கைப்பற்றும் புகழைப்பெற முயன்றது மூப்தியின் யார்முக் படைகளின், தானே நியமிதுக்கொண்ட ஜெனரலான

காவுக்ஜியே. முதல் தடவை முயற்சியில் கைகூட முடியாத தாக்குதல் ஒன்றைப் செய்யாமல் நிச்சயமான வெற்றியைத் தரக்கூடிய இலக்கு ஒன்றைத் தெரிந்தெடுத்தான்.

காவுக்ஜி இலகுவான இலக்கென்று தான் நினைத்த ஓர் இடத்தைத் தேர்ந்தெடுத்தான். ரைறற் ரிஸ்வி - ராபி ரிஸ்வியின் கோட்டையே முதன் முதலில் வீழ்த்தப்படுவதற்காகத் தெரிந்தெடுக்கப்பட்ட இலக்காகும். ரைறற் ரிஸ்வி கிபுஸ்சில் பழமைவாத யூதர்களில் அநேகமானோர் சித்திரவதைத் தடுப்பு முகாம்களில் இருந்து மீண்டு வந்தோரே. இந்த கிபுட்ஸ் பெத் ஷுயன் பள்ளத்தாக்கின் தென் பகுதியில், மற்றும்படி முழு அரபு ஆதிக்கத்தைக் கொண்டிருந்த. கொண்டிருக்கக் கூடிய, பிரதேசத்தைத் துண்டாடும் நோக்கில் வேண்டுமென்றே ஏற்படுத்தப்பட்ட இடமாகும். கிபுட்சின் தென்பகுதியில் ''முக்கோணம்'' எனப்பட்ட முழு அரபு பலஸ்தீன பிரதேசம் இருந்தது. துப்பாக்கியால் சுடக்கூடிய தூரத்தில் ஜோர்தான் எல்லையிருந்தது. சிறிது வடக்கே விரோத மனப்பான்மை உள்ள அரபு நகரமான பெத் ஷுயன் அமைந்து, கிபுட்சை முற்றாகவே துண்டித்திருந்தது.

ரைறற் ரிஸ்வி ஜோர்தான் பள்ளத்தாக்கைக் காத்து வந்த வடபகுதி எல்லைக் காவல் நிலையங்களில் ஒன்றாகும்

ரைறற் ரிஸ்வியைத் தெரிந்தெடுத்தது பற்றி காவுக்ஜி மகிழ்ந்து கொண்டிருந்தான். ஒருங்கிணைக்கப்பட்ட தாக்குதல் ஒன்றின் முன் சமயசார்பான கிபுட்சின் யூதர்கள் தொருங்கிப் போவார்கள். இந்தக் கொள்ளைக்காரன் நூற்றுக்கணக்கான அரபுக்களை முக்கோணத்தின் நப்ளஸ் தளத்தில் திரட்டிக் கொண்டு தாக்குதலுக்காக நடத்திச் சென்றான்.

காவுச்ஜி தன் வெற்றியை முன்னரேயே அறிவித்து விட்டான். தாக்குதல் நடைபெற முன்னரே இந்தச் செய்தி பத்திரிகைகளில் பிரசுரமாகி விட்டது. அவன் தன் துருப்புக்களைத் தாக்குதல் நிலைகளுக்குக் கொண்டு வந்ததும், பெத்ஷயனின் அரபுப் பெண்கள், போர்க்களத்தின் முனைகளில் வந்து, துருப்புகளின் பின்னால் கிபுட்சுக்குள் நுழைந்து கொள்ளையிடுவதற்காக சாக்குகளுடனும் பாத்திரங்களுடனும் காத்து நின்றனர்.

தாக்குதல், மப்பும் மந்தாரமுமாக இருந்த ஒரு காலைப் பொழுதில் தொடங்கியது. நூற்றி அறுபத்தேழு, போராடக்கூடிய வயதுடைய ஆண்களும், பெண்களும் போர்முனையிலே, அகழிகள் கடினமான தடுப்புக்கள் முதலியவற்றில் அரபுக்களை எதிர்நோக்கிக் காத்திருந்தார்கள். சிறுபிள்ளைகள் கிபுட்சின் ஆகமையத்திலிருந்த கட்டிடத்தில் ஒளித்து வைக்கப்பட்டிருந்தார்கள். ஒரேயொரு இரண்டங்குல மோட்டாரைத் தவிர வேறு கனரக ஆயுதங்கள் எதுவும் கிபுட்சைப் பாதுகாத்து நின்றவர்களிடம் இருக்கவில்லை.

ஒரு எக்காளம் தொனித்தது, அரபு லீயன் அதிகாரிகள் உருவப்பட்ட வாட்டுகளுடன் தாக்குதலுக்குத் தலைமை தாங்கி வந்தனர். ஆட்களின் தொகை

மட்டும் கொண்டே கிபுட்சை வீழ்த்தி விடும் நோக்கில், குவிக்கப்பட்ட முன்புறத் தாக்குதல் ஒன்றிற்காகக் கூலிப்படையினர் திறந்த வயல் வெளிகளிலே பரந்து அவர்களுக்குப் பின்னால் இறங்கி வந்தனர்.

அரபுப்படைகள் தங்களிலிருந்து இருபது யார் வரை நெருங்கும் வரை யூதர்கள் காத்திருந்துவிட்டு, சமிக்ஞை ஒன்றின் பேரில் ஒரே நேரத்தில் சரமாரி யான வேட்டுகளைத் தீர்த்தனர். அரபுக்கள் வெட்டப்பட்ட கோதுமைக் கதிர் களைப் போல் மண்ணில் சரிந்தனர். தாக்குதலில் இருந்த உத்வேகம், இரண் டாம், மூன்றாம். நான்காமீ தாக்குதல் அலைகளை முன்னோக்கி வரப்பண் ணியது. யூதர்கள் ஒவ்வொரு முறையும் தாக்குதலின் முன்னணியில் வந்தவர் களின் காலடிகள் கிபுட்ஸ் மண்ணைத் தொட்டதும், கட்டுப்பாடனான முறையில் தீர்க்கப்பட்ட வேட்டுசளின் மூலம் அவற்றை முறியடித்தனர். யுத்தகளம் மடிந்த அரபுக்களின் சடலங்களால் நிறைந்திருந்தது. காயமடைந்திருந்தவர்களோ, ''நாங்கள் சகோதரர்கள். அல்லாவின் பெயரால் இரக்கம் காட்டுங்கள்'' என்று கதறிக் கொண்டிருந்தார்கள்.

எஞ்சியவர்கள் துப்பாக்கி வீச்செல்லைக்கு அப்பால் ஓடிச்சென்று குழப் பமான முறையில் பின்வாங்கத் தொடங்கினார்கள். காவுக்ஜி அவர்களுக்கு இல குவான வெற்றியைத் தொடர்ந்து கொள்ளையிடலாம் என்று உறுதி கூறியி ருந்தான். இந்த பழைமைவாத யூதர்கள் கும்பல் அவர்களைக் கண்டதுமே ஓடத் தொடங்குவார்கள் என்று சொல்லியிருந்தான். இப்படியான ஒரு போரை எதிர்பார்க்கவில்லை. யுத்தகளத்தின் விளிம்புகளில் காத்திருந்த அரபுப் பெண் களும் ஓடத் தொடங்கினார்கள்.

அரபு லீஜன் அதிகாரிகள் ஓடிக்கொண்டிருக்கும் கூலிப்படையினர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து அவர்களை நிறுத்தியே ஒழுங்கு பண்ண வேண் டியிருந்தது. தலைமை தாங்கியவர்கள் தங்கள் ஆட்களை மீள ஒழுங்கு பண்ணி இன்னொரு தாக்குதலைச் செய்ய ஆயத்தமானார்கள். ஆனால் கூலிப்படை யினரின் மனங்களில் சண்டையிடும் வேகம் எங்கோ அகன்று விட்டது.

ரைறற் ரிஸ்வியின் உள்ளே யூதர்களின் நிலைமை ஆபத்தானதாயிருந்தது. அரபுக்கள் தங்களைப் பலப்படுத்திக் கொண்டும், மோசமாகத் தாக்கினால் தாக்குப் பிடிக்கக் கூடிய அளவுக்கு வெடிமருந்துகள் ரவைகள் இருக்கவில்லை. அதைவிடவும் அரபுக்கள் தங்கள் உத்தியை மாற்றி மெதுவான, சுற்றிவளைக்கும் முறையில் தாக்குதல் செய்ய முயன்றால் அவர்களால் அதைச் சமாளிக்க முடி யாது. அவர்கள் ஒன்றும் செய்ய இயலாத நிலையில் அவசரம் அவசரமாக புதிய வகை உத்தியொன்றைக் கையாள முயன்றார்கள். நன்றாகக் குறிபார்த்துச் சுடக்கூடிய இருபது பேரிடம் இருந்த ரவைகளில் பெரும்பான்மையானவற்றைப் பகிர்ந்து கொடுத்து விட்டனர். மிகுதியானோர் பிள்ளைகள் இருந்த கட்டிடத் துக்குப் பின்வாங்கி, கடைசிச்கட்டச் சண்டை ஒன்றை பயனைற் கத்திகள், பொல்லுகள், வெறுங்கைகளைக் கொண்டு நடத்த ஆயத்தமானார்கள். தொலை நோக்குக் கண்ணாடிகள் மூலம் பார்த்தபோது அரபுக்கள் இன்னொரு தாக்கு

தலுக்கு ஆயத்தமாவதையும், கிபுட்சைத் துவம்சம் செய்யப் போதுமான படைகள் எஞ்சியிருப்பதையும் கண்டார்கள்.

அரபுக்கள் இம்முறை தங்கள் பின்னால் துப்பாக்கி முனைகளில் விரட்டி வந்த அரபு லீஜன் அதிகாரிகளின் தூண்டுதலால் மெதுவாக இறங்கி வந்தார்கள்.

திடீரென வானத்தைப் பொத்துக் கொண்டு கடும் மழை பொழியத் தொடங்கியது. சில நிமிட நேரங்களிலேயே திறந்த வயல்வெளிகள் ஆழமான புதையவைக்கும் சேற்றைக் கொண்டவையாக மாறின. அரபுக்களின் தாக்குதல் வேகம் பெறுவதற்குப் பதிலாக டெபோராவை எதிர்த்துத் தாக்க வந்த கானானியர்களின் ரதங்களுக்கு நடந்தது போல் சேற்றில் புரளத் தொடங்கியது.

முதல் லீஜன் அதிகாரிகள் சமீபமாக வந்ததும் அவர்களைக் குறிபார்த்துச் சுட்டுத் தள்ளினர். காவுஜியின் ''யார்முக் படையணி'' இன்றைக்கு இது போதும் என்று ஓடிவிட்டது.

ரைறற் - ரிஸ்வி படுதோல்வியைப் பற்றி காவுக்ஜீ மிகவும் கொதிப்படைந்தான். தன் கௌரவத்தைக் காப்பாற்ற ஒரு விரைவான வெற்றியைப் பெற வேண்டிய அவசியமிருந்தது. இம்முறை பெரிய இரையொன்றைத் தேடிச் செல்ல முடிவு செய்தான்.

ஜெருசலேமுக்குச் செல்லும் பாதையை விட ரெல் அவிவ்வையும் ஹைபாவையும் இணைக்கும் பாதையேயிசுவுக்குக் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. ரெல் அவிவ் - ஹைபா பாதை துண்டிக்கப்பட்டால், கலிலியிருந்து ஷரோனைப் பிரித்து யூதர்களின் இராணுவவியூகங்களைச் சிதைத்து விடுதல் சாத்தியமாகிவிடும். பிரதான நெடுஞ்சாலையில் அரபுக் கிராமங்கள் இருந்ததால் இரு நகரங்களுக்கும் இடையே, உள்பக்கமான மாற்றுப் பாதைகளைப் பாவித்தே யூதர்கள் போக்குவரத்தை நடத்த வேண்டியிருந்தது. மாற்றுப்பாதைகளில் ஒன்று தான் மிஸ்மார் ஹேமெக் கிபுட்சாகும். அதன் பொருள் பள்ளத்தாக்கின் காவல் நிலை என்பதாகும். ரெல் அவிவையும், ஹைபாவையும் பிரிக்கும் ஆவலில் காவுக்ஜி குறிவைத்து மிஸ்மார் ஹேமெக்கிலேயே.

இம்முறை ரைறற் ரிஸ்வியில் விட்ட பிழைகளைத் திரும்ப விட காவுக்ஜி விரும்பவில்லை. இம்முறை ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆட்களை பத்து 75.மி.மி. மலைப் பீரங்கிகளுடன் கூட கிபுட்சைச் சூழ இருந்த குன்றுகளில் கொண்டு போய்க் குவித்தான்.

மிஸ்மார் ஹேமெக் சூழப்படானதும், அகோர பீரங்கி தாக்குதலினை காவுக்ஜி நிகழ்த்தினான். யூதரிடம் இதற்கு பதிலளிக்க ஒரேயொரு இயந்திரத் துப்பாக்கியே இருந்தது.

ஒரு நாள் முழுவதும் தொடர்ந்த பீரங்கித் தாக்குதலின் பின் பிரிட்டிஷார் போர் நிறுத்தம் ஒன்றை அறிவித்து, கிபுட்சுக்கு வந்து அவர்களை வெளி

யேறும்படி கோரியபோது அவர்கள் மறுத்து விட்ட தனால் முழு விடயத்தையும் கைநழுவி விட்டுப் போய்விட்டார்கள். பிரிட்டிஷாரிடமிருந்து, கிபுட்சினுள்ளே யூதர்கள் ஒப்பீட்டளவில் குறைந்த பலத்துடனிருப்பதைக் கேள்விப்பட்டிருந்தான் காவுக்ஜி. முறையான தகவல் சேகரிப்பு ஆய்வுப் பிரிவுகள் இல்லாததால் அவன் அறியாதது ஒன்றும் இருந்தது. எமெக் பள்ளத்தாக்கு ஹகானாவுக்காகப் பயிற்சி பெற்று வந்த ஆட்களால் நிரம்பியிருந்ததுதான் அது. இரண்டாவது நாளிரவிலே, முழுமையாக ஆயுதம் தரித்த ஹகானாவின் இரு பட்டாலியன்கள் கிபுட்சினுள் இரகசியமாக நுழைந்து விட்டன.

மூன்றாம் நாள் காவுக்ஜி தன் தாக்குதலைத் தொடங்கினான். பயந்து நடுங்கிக் கொண்டிருக்கும் கிபுட்சுக்குப் பதிலாக அவன் சந்தித்தது பயிற்சி பெற்று ஆவலுடன் காத்துக் கிடந்த இரண்டு பட்டாலியன் ஹகானாவினரையே, காவுக்ஜியின் தாக்குதல் முறியடிக்கப்பட்டது.

அவன் தன் ஆட்களை மீளத் திரட்டி, மெதுவான, தொடர் தாக்குதல் ஒன்றை நடத்தினான். அதுவும் முன்போலவே வெற்றி பெறவில்லை. மேலும், மேலும் தாக்குதலை நிகழ்த்தினாலும், சூலிப்படையினரின் சண்டையிடும் ஆர்வம் குன்றிப் போய்க் கொண்டிருந்தது. அவர்கள், தட்டுத்தடுமாறி முன்னேபோய் எதிர்ப்பு அதிகப்படும் போதெல்லாம் பின்வாங்கிக் கொண்டிருந்தார்கள்.

அந்தநாள் முடிந்தபோது காவுக்ஜி தன் படையினர்மேல் கட்டுப்பாட்டை முற்றாக இழந்துவிட்டான். அவர்கள் வெறுமனே யுத்த களத்தை விட்டு வெளி யேற ஆரம்பித்தார்கள்.

கிபுட்சின் உள்ளிருந்து இதை அவதானித்த யூதர்கள் அரபுக்களின் பின் னால் விரட்டிச் செல்ல ஆரம்பித்தார்கள். எதிர்பார்க்கவே முடியாத மாற்றம் ஒன்று நிகழ்ந்து கொண்டிருந்தது. யூதர்கள் தங்களை விரட்டுவதால் கிலியுற்ற அரபுக்கள், நெருங்கி வந்த ஹகானாவிடமிருந்து தப்பி பிடரியில் காலடிபட ஓடினார்கள். இப்படி விரட்டிச் செல்லுதல் பலமைல் தூரத்துக்கப்பால், காலங் காமாக நூறு யுத்த களங்களுக்கு மேல் கண்ட மெகிட்டோ வரை நிகழ்ந்தது. சரித்திரப் பிரசித்தி வாய்ந்த ஆர்மகெடோன் என்ற இந்த யுத்த களத்தில் காவுக்ஜி யின் படைகளை யூதர்கள் முற்றாக முறியடித்தார்கள். இந்தக் கருவறுப்பு, பிரிட்டிஷார் தலையிட்டு யுத்த நிறுத்தமொன்றைக் கட்டாயமாக அமுல்படுத்தும் வரை நிகழ்ந்தது.

யூதர்கள் தங்கள் விடுதலைப் போரின் முதல் வெற்றியைப் பெற்றிருந் தார்கள்.

ஜெருசலேம் பாதை அடைபடாமல் வைத்திருப்பதில் பால்மாக்கின் ஹில் மன் பிரிசேட்டினர் பாரிய பணியை ஆற்றி வந்தனர். இருபதுகளில் தங்கள் கொமாண்டர்களை கொண்டிருந்த இந்த இளவயதுக் கோஷ்டியினர், யூடியாவின் காடுகளிலும், பள்ளத்தாக்குகளிலும், பற்றைகளிலும் ரோந்து போய்வந்ததோடு, வாகனத் தொடர்கள் செல்லும் போது அரபுக்கிராமங்களைத் தாக்கிவிட்டு ஓடி

மறைவதிலும் ஈடுபட்டார்கள். அவர்கள் இருபத்தினாலு மணிநேரமும் பணி யாற்றிக் களைத்திருந்தாலும், மேலும் ஒரு ரோந்துக்கு அல்லது இன்னொரு தாக்குதலுக்கு, அல்லது கடுமையான பிரதேசங்களூடாக இன்னொருமுறை செல் வதற்கோ, கட்டளையிடப்பட்டால் செல்லத் தயாராக இருந்தார்கள்.

''இந்த மாரிகால ஆற்றில் தான் தாவீது அரசர் ஒரு கரந்தடிப்படை வீரராக வாழ்ந்தார்.'' கேட்டுக் கொண்டே இன்னொரு பணிக்காக எழுந்திருந்த பால்மாக் அணியினரின் இரத்தமாகச் சிவந்திருந்த கண்களில் களைப்புத் தெரிந்தது.

''சாம்சன் பிறந்த இடத்தில் தான் நீங்கள் போரிடுகிறீர்கள் என்பதை நினைவில் வைத்திருங்கள்.''

''இந்தப் பள்ளத்தாக்கில் தான் தாவீது கோலியாத்தைச் சந்தித்தான்.''

''இங்குதான் ஜோசுவா சூரியனை ஒரே இடத்தில் நிறுத்திவைத்தார்.''

அடுத்த நாளில் செய்யவேண்டியிருந்த மனிதசக்திக்கு அப்பாற்பட்டது போன்ற வேலைகளைச் செய்வதற்குத் தேவையான ஊக்கத்தை அளிப்பதற்காக வேதாகமத்தின் பகுதிகள் இரவில், இந்தக் களைத்துப் போயிருக்கும் போராளி களுக்கு வாசித்துக் காட்டப்படும். இது காதரின் பிரதேசமாக இருந்ததால், மோதல் அடிக்கடி நிகழ்ந்து வந்தது. கடுமையானதாகவும், இருந்தது. திறமை யானவனான ஒரு தலைவனின் பின்னால் அரபுக்களும் தன்னம்பிக்கையுடன் போரிட்டார்கள்.

ஒரு பெரிய வாகனத்தொடர், எந்தவகையிலும் ஜெருசலேமைப் பாதுகாக் கும் நோக்கிலான இன்னொரு முயற்சிக்காக ரெல் அவிவில் தயாரானது. நெடுஞ் சாலையின் உயரமான ஒரு இடத்தை மேலாதிக்கம் செய்து கொண்டிருந்ததும், சிலுவை யுத்த கோட்டையொன்றில் இருந்ததுமான காஸ்ரெல் என்ற அரபுக்கிரா மத்தை வாகனத்தொடர் போகும் நேரத்தில் தாக்கும் பணி, ஹில்மென் பிரிகேட் டுடையதாக இருந்தது.

காஸ்ரெல் கிராமத்தைப் புகுந்து தாக்கியதே, விடுதலைப் போரில் யூதர்கள் வலிந்து தாக்குதல் ஒன்றை முன்னெடுத்த முதல் சம்பவமாகும். ஒத்துழைப்பு வழங்கிய இருளிலே அபாயகரமான சரிவுகளிலே ஊர்ந்து துணிகரமான அந்தத் தாக்குதலைச் செய்தார்கள். காஸ்ரெலின் உச்சிக்கு இரத்தம் சிந்தச் சிந்தச் சென்ற அவர்கள், அங்கிருந்த அரபுக்களோடு கைகலப்பு யுத்தத்தில் இறங்கி, அவர் களை அங்கிருந்து விரட்டி விட்டார்கள். காஸ்ரெல் நிகழ்வு, தொய்ந்து கொண்டி ருந்த யிசுவ்வின் மனநிலையைத் தூக்கி நிறுத்தியது. ரெல் அவிவிலிருந்து புறப் பட்ட பாரிய வாகனத் தொடர், வாட் எல் வாட்டின் ஒவ்வொரு அங்குலத்தையும், போராடியபடி கடந்து புதிய ஜெருசலேமை நோக்கி நகர்ந்து சென்று, அடைபட் டிருந்த யூதர்களுக்கு மீண்டுமொருமுறை விநியோகங்களைக் கொண்டு வந்து சேர்த்து ஆறுதலளித்தது.

எஸ்தர் கோட்டையிலிருந்த கூலிப் படையினரின் ஹுலேப் பள்ளத்தாக்குக் கொமாண்டரான மொகம்மட் காஸியை நபுளஸ்ஸிலிருந்த தன் தலைமையகத்துக்கு காவுக்ஜி அழைத்தான்.

காவுக்ஜி வெற்றியொன்றைப் பெறுவதற்காக நாயாக அலைந்தான். மாதக் கணக்காக வெற்றி மேல் வெற்றி பெறுவதாக அறிக்கைகளை விட்டுக் கொண்டிருந்தான். முப்தியின் ''ஜெனரல்'' ஆக துருக்கியிலிருந்து, ஜிப்ரால்ரார் முனை வரை பரந்திருக்கும் ஒரு அரபு இராணுவத்துக்குத் தலைவனாகும் கனவை காவுக்ஜி வளர்த்துக் கொண்டிருந்தான். தன்னால் ஒரு குடியேற்றமும் இதுவரை வெற்றி கொள்ளப்படாததற்குப் பிரிட்டிஷ் தலையீடே காரணம் எனவும் குற்றம் சாட்டினான். ஹுலேப் பள்ளத்தாக்கிலிருந்து பிரிட்டிஷார் வாபஸ் பெற்றதும் சாக்கு போக்கு எதுவும் சொல்ல முடியாதிருந்தான்.

காவுக்ஜிவழக்கமானபாணியில்மொகம்மட்காஸியைஇருகன்னங்களிலும்முத்தமிட்டான். பின்பு இருவரும் தங்கள் தங்கள் வீரதீரப் பிரஸ்தாபங்களைப் பற்றி நீண்ட நேரம் கதைத்துக் கொண்டிருந்தனர். தான் எப்படி எஸ்தர் கோட்டையை ''வெற்றி'' கொண்டானென காஸி விபரித்தான். தன்னுடைய அற்புதமான முன்னேறித் தாக்கும் தந்திரோபாயத்தால், ரைறற் ரிஸ்வியிலும், மிஸ்மார் ஹாமெக்கிலும் யூதர்கள் எப்படிப் பலவீனமடைந்திருக்கின்றனர் என்று காவுக்ஜி விபரித்தான்.

''டமாஸ்கசிலிருக்கும் பரிசுத்தர் மூப்தியிடமிருந்து எனக்கு ஒரு தகவல் வந்திருக்கிறது. பிரிட்டிஷார் பலஸ்தீனத்தைக் கைவிடும் தினமாகிய வைகாசி 15-க்கு அடுத்தநாள் ஹாஜ் அமின் எல் ஹுசெயினி வெற்றிகரமான பலஸ்தீன பிரவேசம் செய்ய இருக்கிறார்.''

''முழு இஸ்லாமுக்கும் ஏப்படியானதொரு உன்னதமான நாளாக அது இருக்கப் போகிறது'' என்று மொகமட் காஸி தலையை அசைத்தான்.

சியோனிஸ்டுகள் முற்றாக ஒழிக்கப்படும் வரை பரிசுத்தர் ஷாபெட்டைத் தன் தற்காலிக தலைநகராகத் தெரிந்தெடுத்திருக்கிறார். யூதர்களின் அன்பு நண்பரான மேஜர் ஹோக்ஸ் ஷாபெட்டிலிருந்து போய்விட்டதால் ஒரு வார காலத்தினுள் ஷாபெட்டை நாம் கைப்பற்றி விடுவோம்.

''இந்தச் செய்தி எனக்கு மகிழ்ச்சி தருகிறது.''

''ஆயினும் ஒரு யூதன் தானும் ஹுலேப் பள்ளத்தாக்கில் இருக்கும் வரை பரிசுத்தர் வருவதற்கு ஷாபெட் பாதுகாப்பான இடமாக இருக்க மாட்டாது அவர்கள் குத்துவாள்களை எங்கள் முதுகின் பின்னால் நீட்டிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை முற்றாக அழிக்க வேண்டும்'' காவுக்ஜி தொடர்ந்து சொன்னான்

மொகம்மட் காஸி சிறிது வெளிறிப் போனான்.

''ஹுலேஉனது கண்காணிப்பின் கீழ் வரும் பிராந்தியம் என நம்புகிறேன் சகோதரனே. உடனடியாகக் கான் டப்னாவைக் கைப்பற்ற வேண்டும். கான்

டப்னா விழுந்ததும், மிஞ்சியிருக்கும் சியோனிஸ்டுகளின் கழுத்தை நெரித்து விடலாம்.''

''ஜெனரல் என் கீழ் உள்ள ஒவ்வொரு தொண்டனும் ஒரு சிங்கத்தின் துணி வோடு சியோனிசத்தை மூர்க்கத்துக்கு அர்ப்பணித்த புள்ளவர்களாக இருக்கிறார்கள் என்பதை உங்களுக்கு உறுதி செய்ய விரும்புகிறேன். அவர்கள் எல்லாரும் இறுதித்துளி இரத்தம் வரை போராட உறுதி பூண்டிருக்கிறார்.

''நல்லது, அவர்களுக்கு வேதனமாக மட்டும் மாதாந்தம் ஒரு டொலர் செல வாகிறது எமக்கு.''

காசி தனது தாடியைத் தடவிவிட்டுக் கொண்டு, தனது மோதிரம் அணிந் திருந்த சுட்டுவிரலை உயர்த்தியபடி, ''மேஜர் ஹோக்ஸ், மூவாயிரம் றைபிள்களை யும், நூறு இயந்திரத் துப்பாக்கிகளையும், டசின் கணக்கான கனரக மோட்டார் களையும் கான் டபனாவில் விட்டுச் சென்றிருக்கிறார் என்று எல்லோருக்கும் தெரி யுமே'' என்றான்

காவுச்ஜி பாய்ந்தெழுந்தான்.

''சிறிய பிள்ளைகளின் மூன் தொடை நடுங்குகிறாய் நீ.''

''அல்லாவின் தாடியின் மீது ஆணையாகச் சொல்கிறேன், ஆயிரம் பால் மாக் குருப்டகளை யூதர்கள் அங்கே அனுப்பியிருக்கிறார்கள். அவர்களை என் கண்ணாலேயே கண்டேன்'' என்றான்.

காவுச்ஜி காசியின் முகத்தில் இருமுறை ஓங்கி அறைந்தான்.

''நீ கான் டப்னாவைப் பிளந்து திறக்கப் போகிறாய். நீ அதைத் தரை யோடு தரையாக மட்டப்படுத்தப் போகிறாய். நீ அவர்களின் குருதியில் உன் கைகளைக் கழுவப் போகிறாய். அல்லது உன் பிணத்தைக் கழுகுகளுக்கு இரை யாகப் போடுவேன்.''

அத்தியாயம் ஐந்து

மொகம்மட் காசியின் முதல் நடவடிக்கை அபுயேஷாவினுள் தன்னுடைய நூறு ஆட்களை அனுப்பியதுதான். உடனடியாகவே சில கிராமவாசிகள் எயின் ஓர் பிரட்சுக்குச் சென்று இதை அரிக்கு அறிவித்தார்கள். அபுயேஷாவின் மக்கள் அதிகமாக யூத சார்பானவர்கள் என்பது அரிக்குத் தெரிந்தேயிருந்தது எனவே அவர்கள் நடவடிக்கையைத் தொடங்கும் வரை அரி காத்திருந்தான்.

அபுயேஷாவின் அரபுக்கள் கூலிப்படையினரின் பிரசன்னத்தை வெறுத்தார்கள். பல வருடக்கணக்காக யாட் எல்வின் யூதர்களுடன் அவர்கள் இணக்கமாக வாழ்ந்து வந்திருக்கிறார்கள். அவர்களுடைய வீடுகள் யூதர்களால் நிர்மாணிக்கப்பட்டவை. அவர்களுக்கு யூதர்களோடு கோபமெதுவும் இருக்கவில்லை. அவர்களோடு போராட எந்த ஆர்வமும் இருக்கவில்லை. ஆகவே, அவர்கள் தங்கள் முக்தார் தாஹா தங்களை நெறிப்படுத்தி காசிமுடைய ஆட்களை வெளியேற்ற நடவடிக்கை எடுப்பார் என எதிர்பார்த்திருந்தனர்.

கூலிப்படையினர் வந்ததற்கு ஆதரவாகவோ அல்லது எதிராகவோ எதுவும் பேசாமல் ஒரு வினோதமான மௌனத்தை தாஹா கடைப்பிடித்து வந்தான். அபுயேஷாவின் முதியவர்கள் மக்களை அணிதிரட்டக் கோரியதும், இந்த விஷயத்தைப் பற்றியே விவாதிக்க மறுத்தான். அவனுடைய மௌனம் அபுயேஷாவின் தலைவிதியை தீர்மானித்தது. ஏனெனில் தலைமை தாங்குவதற்கு யாருமில்லாவிட்டால் குடியானவர்கள் செயலற்றுப் போனார்கள். அவர்கள் அமைதியாக ஆக்கிரமிப்புக்கு அடி பணிந்தார்கள்.

காசி, தாஹாவின் எதிர்ப்பற்றதன்மையைத் தனக்குச் சார்பாக கையாள முயற்சி செய்தான். தாஹா மௌனத்தைத் தொடரத் தொடர ஒவ்வொரு நாளும் காசியின் ஆட்கள் துணிவுபெற்று ஒழுங்கற்று நடக்கத் தொடங்கினார்கள். கான் டப்னாவுக்கான பாதை துண்டிக்கப்பட்டது. அபுயேஷாவில், இரு நாள் ஆத்திரம் ஏற்பட்டாலும் தனித்தனியே முணுமுணுக்கும் அளவில் மட்டும் இது இருந்தது. ஒருநாள் அபுயேஷாவின் நான்கு அரபுக்கள் கான் டப்னாவுக்கு உணவு வகைகளை எடுத்துச் சென்றபோது அகப்பட்டுக் கொண்டார்கள். காசி அவர்களைக் கொன்று, அவயவங்களைத் துண்டாடி, அவர்களின் தலைகளை கிராம சதுக்கத்தில் எச்சரிக்கும் விதத்தில் காட்சிக்கு வைத்தான். அந்த நிமிடத்தில் இருந்து அபுயேஷா முற்றாக அடிபணிந்தது.

அரியின் அனுமானம் தவறிவிட்டது. அவன் அபுயேஷாவும் மக்கள் விசேடமாகக் கான் டப்னா ஆபத்திலிருக்கிறது என்பதாலேயே தாஹாவை ஒரு

உறுதியான நிலையை எடுக்கும்படி தூண்டுவார்கள் என்று எதிர்பார்த்திருந்தான். அப்படியாக எதுவும், அவர்கள் செய்யாததும், கான்டப்னாவுக்கான பாதை துண்டிக்கப்பட்டதும் அவனை இக்கட்டான நிலைக்குள் தள்ளிவிட்டன.

பாதை துண்டிக்கப்பட்டதும், காசிமின் பெரும் பீரங்கிகள், எஸ்தர்கோட்டையிலிருந்து, இருபத்தினாலு மணிநேரமும் குண்டுகளைப் பொழியத்தொடங்கின.

கான் டப்னாவின் யூதர்கள் இம்மாதிரியான சந்தர்ப்பத்துக்காக கிராமம் நிர்மாணிக்கப்பட்ட நாள் முதலே பயிற்றப்பட்டிருந்தார்கள். ஒவ்வொருவருக்கும், தன் கடமை தெரிந்திருந்தது. அவர்கள் அவசரகால நிலைமைகளின் கீழ் அமைதியாகவும், விரைவாகவும் செயல்படத் தொடங்கினார்கள்.

பத்து வயதுக்கு மேற்பட்ட சிறுவர்கள் எல்லோருக்குமே, கிராமத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க பங்கு வழங்கப்பட்டிருந்தது. நீர்த்தாங்கி மணல் மூடைகளால் பாதுகாக்கப் பட்டிருந்தது. மின்பிறப்பாக்கிகள், வைத்தியப் பொருட்கள், ஆயுதச்சாலை, உணவுக்களஞ்சியம் என்பன நிலத்தின் கீழ் அமைக்கப்பட்டிருந்தன.

ஈரலிப்பான பதுங்கு குழிகளில் வாழ்க்கை இயல்பாக நடந்துதந்தது. பாடசாலை வகுப்புகள், சாப்பாடு, விளையாட்டு, எல்லா வழமையான நடவடிக்கைகளும்நிலத்தின் கீழேயே நடந்தது. நிலத்தினுள் ஆழமாகப் புதைக்கப்பட்டு, பல யார் ஆழத்துக்கு மண்ணாலும், மண்சாக்குகளாலும் பாதுகாக்கப்பட்டிருந்த பன்னிரண்டு அடிவிட்ட கொங்கிறீட் நீர்க் குழாய்களின் பகுதிகளுக்குள்ளே, அமைக்கப்பட்டிருந்த தட்டுத் தட்டான படுக்கைகளில் தூங்கினர்.

ஷெல் விழுவது சிறிது ஓய்ந்திருக்கும் போது, பிள்ளைகளும் பணியாளர்களும் வெளியே வந்து சிறிது விளையாடி, விறைத்துப்போயிருக்கும் தங்கள் அவயவங்களை நீட்டி நிமிர்த்தி, புற்தரைகளையும் மாந்தோட்டங்களையும் கவனிப்பார்கள். ஒரு வாரத்துக்குள்ளாகவே இரைந்து வரும் ஷெல்கள் இயல்பு வாழ்க்கையின் அசெகரியமான இன்னொரு அம்சம்தான் என்பது போல், பணியாளர்கள் அவர்களைப் பழக்கப்படுத்தி விட்டார்கள்.

எயின் ஓர் கிபுட்சில் அரி இந்தப் பிரச்சினையைப் பற்றிச் சிந்தித்தபடிதான் இருந்தான். எல்லாக் குடியேற்றங்களும் தங்கள் தங்கள் சொந்தப் பாதுகாப்பில் தங்கி நிற்க வேண்டும் என்று இருந்தாலும் கான் டப்னா அறுநூறு பிள்ளைகளைக் கொண்டிருந்ததோடு, ஆக அபாயமான பகுதியில், எஸ்தர் கோட்டையின் கீழ் அமைந்திருந்தது. அங்கே ஒரு மாதத்துக்கான உணவு இருந்தது. நீர்த்தாங்கி தாக்கப் பட்டு இராமல் இருந்தால் நீர் தேவையான அளவு இருக்கும். எரிபொருள்தான் பிரச்சினையாக உருவாகும். மலைப்பகுதிகளின் இரவுகள் மிகவும் குளிராக இருக்கும். ஆனால், டாக்டர் லிப்பர்மான் பெறுமதி வாய்ந்த மரங்களை எரிக்க வெட்டுவதற்குப் பதிலாக குளிரில் நடுங்குவதையே விரும்புவார். கான் டப்னா யாட் எல்லுடன் ஒளிச்சைகைகள் மூலமே

தொடர்பு கொண்டது. தொலைபேசித் தொடர்புகள் துண்டிக்கப்பட்டிருந்தது. இந்தப் பிள்ளைகள் கிராமம் முற்றாகவே துண்டிக்கப்பட்டிருந்தால், இரண்டாயிரம் அடி உயரமான, மலையின் மேற்குப் பக்கமாக, ஆபத்தான, மிகச் சிரமமான, முறையில் இரவின் மறைப்பில் ஏறிச்செல்வதன் மூலமே இந்தக் கிராமத்தைச் சென்றடையக் கூடியதாக இருந்தது.

தொடர்பு கொள்ளுதலும், விநியோகமும் அரியைக் கவலை கொள்ள வைக்கவில்லை. படுகொலைக்குள்ளாகக் கூடும் என்ற பயம் தான் கவலை கொள்ள வைத்தது. கான் டப்னாவின் ''ஆயுதபலம்'' என்ற கதை புஸ்வாணமாக எவ்வளவு காலம் எடுக்கும் என்று அரியால் அனுமானிக்க முடியவில்லை.

தன்னுடைய ஆணைக் கட்டுப்பாட்டுப் பகுதியில் கடுமையாகத் தேடியும், 1880ம் ஆண்டில் தயாரிக்கப்பட்டவையான ஒரு டசின் ஸ்பானியறைபிள்கள், இருபத்து மூன்று உள்ளூர்த்தயாரிப்பான ஸ்ரைன் துப்பாக்கிகள், வழக்கொழிந்து போய்விட்ட ஐந்தே ஐந்து சுற்றுக் குண்டுகளுடன் கூடிய ஹங்கேரிய டாங்கி எதிர்ப்புப் பீரங்கி ஒன்று என்பனவற்றையே திரட்ட முடிந்தது.

ஸெவ் ஜில்போவாவும் வேறு இருபது பால்மாக் துருப்பினர்களும் இந்த உபகரணங்களைக் கான் டப்னாவுக்குக் கொண்டு போய்ச் சேர்க்கும்படி உத்தரவிடப்பட்டனர். ஸெவ்வின் அணியினர் மனித-கோ வேறு கழுதைகளைப் போல் இவைகளைச் சுமந்து செல்ல வேண்டியிருந்தது. ஸெவ்வின் அணியினர் இருளின் அரவணைப்போடேயே புறப்பட்டு முழு இரவும் மேற்குப் பக்க மலைச்சரிவில் ஊர்ந்து சென்றார்கள்.

இந்தப் பயணத்தின் முக்கியமான ஒரு கட்டத்தில் அபுயேஷாவின் எல்லையிலிருந்து சில அடிகள் தூரத்தில் உள்ள ஒரு பகுதியின் முன்னூறு யார் வரையான தூரத்துக்கூடாக, அங்குலம் அங்குலமாக நகர்ந்து செல்ல வேண்டியிருந்தது. அவர்கள் காசியுடைய கூலிப்படையினரை காணவும், அவர்கள் பேசுவதைக் கேட்கவும், அவர்களை முகர்ந்து அறியவும், கூடியதாகவும் இருந்தது.

கான் டப்னாவின் தோற்றம் மனதை வாட்டக் கூடியதாக இருந்தது. அநேக கட்டிடங்கள் பீரங்கிக் குண்டுகளால் தாக்கப்பட்டிருந்தன. அழகான மத்திய புற்றரை துண்டுதுண்டாக்கப்பட்டிருந்தது. கான் டப்னாவில், அமைந்திருந்த டப்னாவின் சிலை அதனுடைய பீடத்திலிருந்து தூக்கியெறியப்பட்டிருந்தது. ஆயினும், பிள்ளைகளின் மனநிலை மிக உற்சாகமாக இருந்ததோடு, தற்பாதுகாப்பு ஏற்பாடுகள் எல்லாமே பூரணமாகவே செயற்பட்டுக் கொண்டிருந்தன. இடுப்பில் ஒரு கைத்துப்பாக்கியைக் கட்டியபடி தங்களை வரவேற்க வெளியே வந்த டாக்டர் லிப்பர் மானின் தோற்றம் ஸெவ்வுக்கு வினோதமாயிருந்தது. இருபது பால்மாக்குகள் மேலதிகமாக வந்து சேர்ந்ததினால் அங்கு நிம்மதிப் பெருமூச்சுக்கள் விடப்பட்டன.

காசி மேலும் பத்து நாட்களுக்கு குண்டுத் தாக்குதலை மேற்கொண்டான் மலைப் பீரங்கிகள் கட்டிடங்களை ஒன்றன் பின் ஒன்றாக தகர்த்து வந்தன. பாதுகாப்பிடம் ஒன்றின் வாசலருகே வெடித்த குண்டு ஒன்றினால் பலியான இரு பிள்ளைகளே கான் டப்னாவில் முதல் இழப்புகளாகும்.

காவுச்ஜிக்கோ நடவடிக்கை தேவையாக இருந்தது. காசியும் இரண்டொரு முறை அரை மனதோடு முன்னேறித் தாக்க முயன்றான். ஒவ்வொரு முறையும், அவனது ஆட்கள் இடைமறித்துத் தாக்கப்பட்டுக் கொல்லப்பட்டனர். ஏனெனில், ஸெவ், கான்டப்னாவின் தற்பாதுகாப்பு ஏற்பாடுகளை விரிவாக்கி எஸ்தர் கோட்டையின் வாசல்வரை விஸ்தரித்தான். பால்மாக் இளைஞர்களும் யுவதிகளும் எஸ்தர் கோட்டையின் அருகாமையிலும் அபுயேஷா அருகிலும் மறைந்திருந்து அரபுக்களின் ஒவ்வொரு அசைவையும் உன்னிப்பாகக் கண்காணித்துக் கொண்டிருந்தனர்.

இதற்கிடையே ஹகானாவின் ரெல் அவிவ் தலைமைச் செயலகத்தில் இருந்து ஒரு தூதுவன் வந்திருந்தான். அரி தன்னுடைய குடியேற்றங்களின் கொமாண்டர்களை எல்லாம் ஒன்றாக வருவித்தான். எல்லைப் புறக் குடியேற்றக் கிராமங்களிலிருந்த சிறு பிள்ளைகளைப் பற்றி ஒரு உயர்மட்ட முடிவு டெல் அவிவில் எடுக்கப்பட்டிருந்தது. எல்லாப் பிள்ளைகளையும், பிரச்சினை அவ்வளவு உக்கிரமடைந்திராததும், கடற்கரை அருகே இருப்பதுமான ஷரோன் - ரெல் அவிவ் பிரதேசத்திற்கு அனுப்பி விட வேண்டும் என்று சிபார்சு செய்யப்பட்டது. அந்தப் பிரதேசங்களின் எல்லாக் கிபுட்சுகளும், மொசாவ்களும் ஒவ்வொரு வீடும் இவர்களை வரவேற்கத் தயாராகக் காத்திருந்தன. இந்த நடவடிக்கையில் மறைந்திருந்த கருத்தை எவருக்குமே ஊகிக்க கூடியதாக இருந்தது. அரபுக்கள் பாதுகாப்பரண்களை உடைத்து உள்புகும் பட்சத்தில் படுகொலைகளில் இருந்து பிள்ளைகளைக் காப்பாற்ற வேண்டிய, அவர்களைப் பிரச்சினை குறைவான இடத்துக்கு அனுப்பி விட, ஹகானாவே முடிவு செய்யும் அளவுக்கு, நிலைமை மோசமடைந்திருக்கிறது என்பதுதான் அதன் பொருள்.

இது ஒரு கட்டளையாக வரவில்லை. ஒவ்வொரு கிபுட்சும், மொசாவ்களும், தங்கள் முடிவுகளைத் தாங்களே எடுத்துக் கொள்ள வேண்டும் எனப் பணிக்கப்பட்டிருந்தது. ஒரு பக்கத்தில் பிள்ளைகள் அருகிலிருந்தால் விவசாயிகள் உக்கிரமாகத் தாக்குவார்கள். மறுபக்கத்தில் படுகொலைகள் என்பது நினைத்துப் பார்க்கவே பயங்கரமான விஷயமாக இருந்தது.

இந்த முன்னோடிகளுக்குப் பிள்ளைகளை வெளியேற்றுவது என்பது இரு மடங்கு வேதனையைக் கொடுத்தது. ஏனெனில் அப்படிச் செய்வது மேலும் பின்வாங்குவதைப் பிரதிபலிக்கும். இவர்களின் பெரும்பான்மையானோர் முன்னைய பயங்கரங்களிலிருந்து தப்பி ஓடி வந்தவர்கள். தங்களுடைய விளை நிலங்கள்தான் பின்வாங்கி ஓடக்கூடிய இறுதி இடம் என்று நினைத்தார்கள். பலஸ்தீனத்துக்கு அப்பால் எந்த இடமும் அவர்களுக்கு இருக்கவில்லை.

ஒவ்வொரு குடியேற்றமும் தங்கள் முடிவுகளை எடுத்தன. நீண்ட காலத்துக்கு முன் அமைக்கப்பட்ட பழைய குடியேற்றங்கள் பிள்ளைகளை அனுப்ப முற்றாகவே மறுத்து விட்டார்கள். மற்றவர்கள் ஒன்றாகவே இருந்து போராடி ஒன்றாகவே மடியப் போவதாக உறுதி கொண்டார்கள், தங்கள் பிள்ளைகளுக்குப் பின் வாங்குதல் என்றால் என்ன என்று தெரியக் கூடாதென்றபோக்கைக் கைக்கொண்டனர். மலைகளில் ஏற்கனவே தனிமைப்படுத்தப்பட்டுத் துன்பங்

களை அனுபவித்துக் கொண்டிருந்தவர்கள் எப்படியோ கண்டுபிடித்துப் பிள்ளைகளை வெளியே அனுப்புவதற்காகக் கொண்டு வந்திருந்தார்கள்.

கான் டப்னாவுக்கான பொறுப்பு யாதரிலும் தங்கியிருந்தது.

அரியுடைய உளவாளிகள், கான் டப்னாவைத் தாக்கும்படி மொகம்மட் காசி மேல், தாங்கமுடியாத அழுத்தங்களை காவுக்ஜி பிரயோகிப்பதாகத் தெரிவித்தனர், உணவு மிகக் குறைந்தளவு நிலைக்குப் போய்விட்டது. எரிபொருள் கிட்டத்தட்டத் தீர்ந்து விட்டது. நீர்த் தாங்கியின் அருகாமையில் வெடித்த குண்டுகளால் பல ஒழுக்குகள் ஏற்பட்டிருந்தன. ஒருவரும் வெளி வெளியாக முறைப்படா விட்டாலும், காட்பரண் வாழ்க்கையின் அவலங்கள் அங்கிருந்த சமூகத்தைப் பாதிக்கத் தொடங்கியிருந்தது.

ஹூலேப் டள்ளத்தாக்கின் கொமாண்டர்கள், கான் டப்னாவின் ஆக வயது குறைந்த குழந்தைகள் வெளியே கொண்டு வரப்படவேண்டும் என்று அபிப்பிராயப்பட்டனர். எப்படி அதைச் செய்வது என்பது தான் பிரச்சினையாக இருந்தது. ஒரு யுத்த நிறுத்தம் இருவகையில் ஆபத்தானது. காசி ஒரு போதும் அதை ஏற்றுக் கொள்ள மாட்டான். அடுத்தது பலவீனத்தை அரபுக் கொமாண்டர்களுக்குக் காட்டிக் கொள்வதாகவும் முடியும் ஒரு வாகனத் தொடரை உள்ளே தடைகளை ஊடறுத்துக் கொண்டு செல்வதானாலும், அபு யேஷாவின் மேல் ஒரு நேரடித் தாக்குதல் செய்வதானாலும் ஹூலேப் பள்ளத் தாக்கிலிருக்கும்முழுப்பலத்தையும் ஒன்றிணைத்துத்தான் முயலவேண்டும். அப்படியும் ஒரு ஐம்பது வீத வெற்றியைத்தான் எதிர்பார்க்க முடியும். இது ஒரு சமரை வெல்லுவதோ, தோற்பதோ மட்டுமல்ல, தோல்வியேற் பட்டால் பிள்ளைகளின் மரணத்தில்தான் போய் முடியும்.

முன்பு பல சந்தர்ப்பங்களில் ஏற்பட்டது போலவே எதிரான பல காரணிகளுக்கு முகங்கொடுத்து. ஏதாவது வழி முறையொன்றை காணும் பொறுப்பு அரியின் மீது சுமத்தப்பட்டது. வேறு வழியே இல்லாததால், அவன் தன் வாழ்க்கையில் முன்னெப்போதுமே போட்டிராத ஒரு துணிகரமான திட்டத்தைத் தீட்டினான்.

தன்னுடைய திட்டத்துக்கான ஆயத்தங்களைச் செய்துவிட்டு, விசேட இடுகணிப் படைப்பிரிவொன்றை அணிவிரிவாக்கப்படுத்தும் பொறுப்பினை டேவிட்டிடம் அளித்து விட்டுத் தான் கான் டப்னா நோக்கிப் பயணமானான். மலையில் ஏறிய ஒவ்வொரு அங்குலமும் அவனைக் கசக்கிப் பிழிந்தது. கால் தொடர்ந்து கொதித்துக் கொண்டிருந்ததோடு, இரவில் பலமுறை களைப்பால் வீழ்ந்து போனான். தனது குறைபாட்டை அப்பிராந்தியத்தைப் பற்றி நுண்ணியமாக இருந்த அறிவால் அவனால் ஈடு செய்ய முடிந்தது. ஏனெனில் அவன் சிறுவனாக இருந்தபோது பத்துப் பன்னிரண்டு முறை அம்மலையில் ஏறியிருந்த அனுபவம் இப்போ கைகொடுத்தது. விடியும் வேளைக்குக் கான் டப்னாவை அடைந்த அவன் உடனடியாக பகுதித் தலைவர்களை கூட்டளைப் பணியகப் பதுங்கு குழியில் கூட்டுவித்தான். ஸெவ், ஜோர்தானா, டாக்டர் லிப்பர்மான், கிற்றி பிறபென்ற் ஆகியோர் அவர்களிடையே இருந்தனர்.

எதுவித விளக்கங்களோ, முன்னுரையோ இன்றி அரி நேராகவே சொன்னான் ''பன்னிரெண்டு வயதுக்குக் கீழ்ப்பட்ட பிள்ளைகள் இருநூற்று ஐம்பது பேர் இங்கே இருக்கிறார்கள். நாளை இரவு இவர்கள் வெளியேற்றப்படுவார்கள்.'' வியப்புடன் விரித்த பத்துப் பன்னிரெண்டு முகங்களை அவன் காணக்கூடிய தாக இருந்தது. ''யாட் எல் மொஷாவ்வில் இப்போ விசேட இடுபணிப்படைப் பிரிவொன்று சேர்க்கப்படத் தொடங்கியிருக்கின்றது. எல்லாக் குடியேற்றங்களிலும் இருந்து நானூறு வீரர்கள் மலையின் மேற்குப் பக்கச் சரிவால் டேவிட் பென் அமியால் வழி நடத்திக் கூட்டி வரப்படுவார்கள். எல்லாம் சரியாக நடந்து அவர்கள் வருவது கண்டு பிடிக்கப்படாவிட்டால், நாளை போழுது விடியும் போது அவர்கள் இங்கு இருப்பார்கள். இவர்களில் இருநூற்றி ஐம்பது பேர். ஆளுக்கொரு குழந்தையைத் தூக்கிக் கொண்டு நாளையிரவு மலையிலிருந்து இறங்குவாகள். மிகுதி நூற்றிஐம்பது பேரும் காவல் படையாக இயங்குவார்கள். இந்தக் காவல் படை ஹுலேப் பள்ளத்தாக்கில் உள்ள எல்லா கனரக தாஸியங்கித் துப்பாக்கிகளையும் கொண்டிருக்கும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.''

அரி பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்தவர்கள், அரிக்குப் பைத்தியமோ என்பது போல் அவனைப் பார்த்தார்கள். ஒரு முழு நிமிடத்துக்கு எவ்வித அசைவோ, ஓசையோ இருக்கவில்லை.

இறுதியாக ஸெவ் ஜீவ்போவா எழுந்து நின்றான். ''அரி, நீ சொல்வதை நான் புரிந்து கொள்ளவில்லை என்று நான் நினைக்கிறேன். உள்ளபடியே இருநூற்றி ஐம்பது பிள்ளைகளை இரவினில் மலையில் இருந்து கீழே காவிச் செல்லவா முயற்சி செய்யப் போகிறாய்?

''ஆம் அப்படித்தான்.''

''பகல் வேளையிலேயே மனிதனுக்குத் கஷ்டமான பாதை அது.''

''இரவில் குழந்தைகளைக் காவிச் செல்வதா? அவர்களில் சிலம் கீழே விழக்கூடும்'' என்றார் டாக்டர் லிப்பர்மான்.

''அந்த அபாயத்தை எதிர்கொள்ளத்தான் வேண்டும்.''

''அரி இவர்கள் அபுயேஷாவுக்கு மிக அருகாமையில் போக வேண்டியிருக்கும். காசியின் ஆட்கள் நிச்சயமாக அவர்களைக் கண்டு கொள்வார்கள்'' என்றான் ஸெவ்.

''அவர்கள் கண்டுகொள்ளாமல் இருக்கத் தேவையான முன்னேற்பாடுகள் எல்லாவற்றையும் கைக்கொள்வோம்.'' எல்லோரும் ஒரே நேரத்தில் ஆட்சேபிக்கத் தொடங்கினர்.

''அமைதியாயிருங்கள்'' வெடித்தான் அரி. தொடர்ந்து இது விவாத மண்டபமல்ல. இங்கிருக்கும் நீங்கள் இதைப்பற்றி யாரிடமும் வாயைத் திறக்க

வேண்டாம். நீங்கள் திகிலடைவதை நான் விரும்பவில்லை. இப்போ எல்லோரும் இங்கிருந்து வெளியே போங்கள். எனக்கு நிறைய வேலை இருக்கிறது.

அன்று பகலில் எஸ்தர் கோட்டையிலிருந்து வந்த பீரங்கித் தாக்குதல் என்று மில்லாதவாறு மும்முரமாயிருந்தது. அரி ஒவ்வொரு பிரிவுத் தலைவர்களுடனும் பேசி வெளியேற்றும் திட்டத்தின் நுண்ணிய விபரங்களினை ஒழுங்கமைத்து, நிமிடத்துக்கு நிமிடமான நேர அட்டவணையையும் தயாரித்துக் கொண்டான்.

விஷயம் தெரிந்த அந்தப் பத்துப் பன்னிரெண்டு பேரும் கவலையும் திகிலும் கொண்ட இதயத்துடன் திட்டத்துக்கான வேலைகளில் ஈடுபட்டனர். ஆயிரம் விஷயங்கள் பிழைத்துப் போகலாம். யாராவது வழுக்கி விழுந்து திகிலை ஊட்டலாம். அபுயேஷாவின் அரபுக்களின் நாய்கள் அவர்களைக் கண்டு அல்லது அவர்களின் வாடையை முகர்ந்து குரைக்கலாம். காசி இந்த முயற்சியைக் கண்டு பிடித்து, எல்லாக் குடியேற்றங்களும் அவரவர்களுடைய கனரக ஆயுதங்கள் இல்லாமல் இருப்பதை உணர்ந்து ஹுலேயின் எல்லாக் குடியேற்றங்களையும் ஒரே நேரத்தில் தாக்கவும் கூடும்...

ஆயினும் அரியினால் செய்யக் கூடியது இதைத்தவிர, வேறு ஒன்றுமில்லை. என்று அவர்கள் உணர்ந்தேயிருந்தனர். இன்னும் ஒரு வாரத்திலோ பத்து நாட்களிலோ கான் டப்னா, வேறு வழியற்ற நிலைக்கு எப்படியும் வந்து விடும் என்பது அவர்கள் அறிந்ததே.

மாலை நெருங்கத் தொடங்கியபோது, விசேட இடுபணிப்படைப் பிரிவுடன் யாட் எல்லில் இருந்த பென் அமி இருட்டியதும் தான் புறப்படப்போவதாக ஒளிச் சைகைகள் மூலம் அறிவித்தான்.

இரண்டாவது நாள் இரவு முழுவதும், நானூறு தொண்டர்களும் மலையின் மேல் ஏறிவந்து, விடியும் முன்பே கான் டப்னாவின் எல்லைப்புறத்துக்கு வந்து சேர்ந்தனர். ஏறியதால் ஏற்பட்ட களைப்பினாலும், பரபரப்பினாலும் அலுத்துப் போய் வந்து சேர்ந்தார்கள். கிராமத்துக்கு வெளியே அவர்களைச் சந்தித்த அரி காட்டுக்குள் அவர்களை மறைத்து வைத்தான். அவர்களை காசியின் ஆட்கள் காண்பதையும், அவர்களால் கான் டப்னாவின் உள்ளே தேவையற்ற வதந்திகள் உருவாகுவதையோ அவன் விரும்பவில்லை.

அவர்கள் முழுப்பகலையும் காட்டுக்குள்ளேயே கழித்தார்கள். சூரியன் அஸ்தமிக்கும் நேரத்துக்கு நாற்பது நிமிடங்களுக்கு முன், ஆறுமணிக்குப் பத்து நிமிடங்கள் இருந்தபோது, திட்டம் முழு அளவில் செயல்படுத்தப்படத் தொடங்கியது.

வெளியே கொண்டு செல்லப்பட இருந்த பிள்ளைகளுக்குச் சரியாக ஆறு மணிக்கு ஐந்து நிமிடங்கள் இருக்கும்போது, உணவூட்டப்பட்டது. அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட பாலில் தூக்க மருந்துத் தூள் கலக்கப்பட்டது. ஆறேகால் ஆகியபோது நிலத்தடியிலான சிமெந்துக் குழாய்களில் இருந்த அவர்கள் பாதுகாப்பான படுக்கைகளில் விடப்பட்டார்கள். அவர்கள் குழுவாக பாடல்களைப்

பாட வைக்கப்பட்டதோடு ஒவ்வொருவராக மருந்தின் சக்தியால் ஆழ்ந்த தூக்கத்தில் மூழ்கிப் போனார்கள்.

ஆறு முப்பத்திரெண்டு, எஸ்தர் கோட்டையின் பின்னால் சூரியன் சென்று மறைந்தது. ஆறு நாற்பதுக்கு முழு ஊழியர்களினதும் கூட்டமொன்றை பிள்ளைகளின் விடுதிக்கு முன் அரி கூட்டினான்.

''நீங்கள் எல்லோரும் அவதானமாகக் கவனியுங்கள். அவன் கடுமையாகச் சொன்னான். இன்னும் சில நிமிடங்களில் வயதில் குறைந்த பிள்ளைகளை வெளியேற்றப் போகிறோம். உங்கள் ஒவ்வொருவருடைய பெயரும் கூப்பிடப்பட்டு உங்களுக்கு ஒவ்வொரு வேலை பகிர்ந்தளிக்கப்படும். எல்லா வேலைகளுமே துல்லியமான நேரக்கணிப்புகளுடன் செய்ய ஆயத்தம் செய்யப்பட்டிருப்பதால், அதிலிருந்து தவறுவது பிள்ளைகளினதும் அவர்களை அழைத்துச் செல்பவர்களினதும், உங்களினதும் உயிர்களுக்கு ஆபத்தாக முடியலாம். கேள்வி கேட்பதையோ, விவாதத்திலீடுபடவோ நான் விரும்பவில்லை. ஒத்துழைக்கத் தவறுபவர்கள் மேல் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

ஆறு நாற்பத்தைந்துக்கு எஞ்சியிருந்த பிள்ளைகளின் உதவியுடன் கான் டப்னாவைச் சூழ காவல்களை ஜோர்தானா பென் கானான் ஏற்படுத்தினாள். கான் டப்னாவினுள் அரபுக்கள் யாராவது ஊடுருவி அங்கு நடக்கும் விஷயங்களை அவதானிப்பதிலிருந்து தடுக்கும் வண்ணம் வழமையான அளவை விட நான்கு மடங்குக்கு காவல் அதிகரிக்கப்பட்டது. ஸெவ் ஜில்போவாவும், கான் டப்னாவில் சேவையில் இருந்த இருபது பால்மாக்குகளும், விசேட பாதுகாப்பினை வழங்கும் முகமாக குன்றுப பகுதிகளுக்கு வெளியேறிச் சென்று நிலையெடுத்துக் கொண்டனர்.

கான் டப்னாவைச் சூழப் பாதுகாப்பு ஏற்பாடுகள் இறுக்கமாக மேற் கொள்ளப்பட்டதும், ஊழியர்களில் இருபது பேர், தூங்கிக் கொண்டிருக்கும் பிள்ளைகளுக்கு முடிந்தளவு வெப்பமூட்டக்கூடிய உடுப்புகளை அணிவித்து ஆயத்தம் செய்யுமுகமாக பாதுகாப்பரண்களுள் இறங்கினார்கள். கிற்றி, ஒவ்வொரு பிள்ளைகளையும், தூக்க மருந்து சரியாக வேலை செய்கிறதா என்று பரிசோதித்தாள். ஒவ்வொரு பிள்ளையின் வாயின் மேலும், தூக்கக் கலக்கத்தில் ஒசையெழுப்பிவிடாதவாறு தடிப்பான பசைப்பட்டி ஒன்று ஒட்டப்பட்டது ஏழரையானபோது உணர்வின்றிக் கிடந்த பிள்ளைகள் உடையணிவிக்கப்பட்டு தயாராக்கப்பட்டு லிட்டனர். இதன் பிறகு, காட்டில் ஒளித்திருந்த விசேட இடுப்பைப்படைக்குழுவினரை அரி உள்ளே அழைத்து வந்தான்.

சங்கிலித் தொடர் போல் நின்ற ஆட்களின் கைகளில் இருந்து கைகளுக்கு மாற்றி பிள்ளைகள் மேலே கொண்டு வரப்பட்டார்கள். கைக்குக் கிடைத்த பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டிருந்த தூக்கு இருக்கைகள், குழந்தைகளை முதுகில் பொதிகள் போல் சுமந்து செல்லக்கூடிய வகையில் கொண்டு செல்கிறவர்கள் முதுகுகளுக்கு அளவாக தயாரிக்கப்பட்டிருந்தன. இது ஒவ்வொரு ஆளினதும் இரு கைகளையும், றைபிளைப் பாவிக்கவும், மலையில் ஏறிச் செல்லவும் வாகாகச் செய்து விடும்.

எட்டு முப்பது ஆகியபோது, இருநூற்றைம்பது பேரும் தங்கள் முதுகில் இருந்த சின்னஞ்சிறிய தூங்கும் பொதிகள் முதுகில் சரியாகப் பிணைக்கப்பட்டிருக்கிறதா என்று பரிசோதனை செய்யப்பட்டார்கள். பின்பு அவர்கள் பிரதான புகுவழிக்கு வெளியே சென்றார்கள். அங்கே பாதுகாப்பாக வந்திருந்த நூற்றைம்பது பேரும் தன்னியக்கத் துப்பாக்கிகளுடன் தயாராக நின்றார்கள். அரியின் தலைமையின் கீழ் அவர்கள் மலை அருகோடு சென்று பக்கவாட்டில் இறங்கிச் சென்றார்கள். ஒவ்வொருவராக பிள்ளைகளும், மனிதர்களும் இரவின் இருளில் கலந்து மறைந்து போனார்கள்.

கான் டப்னாவில் விடப்பட்டிருந்தவர்கள் மௌனமாக பிரதான புகுவழியில் நின்று கொண்டிருந்தார்கள். காலை வரை காத்துக் கொண்டிருப்பதைத் தவிர செய்வதற்கு ஏதுமில்லை. தங்கள் தங்கள் காப்பாலுக்குச் சென்று, தூக்கம் வராத இரவொன்றை, பிள்ளைகளின் பாதுகாப்புக் குறித்து நடுங்கிக் கொண்டிருக்கவும், அவர்களைக் கொண்டு செல்லும் இந்த வினோதமான மனிதத் தொடரின் தலைவிதியை பற்றிக் கவலைப்படுவதிலும், செய்வழிக்க ஒவ்வொருவராகக் கலைந்து சென்றனர். அவர்கள் எல்லோரும் சென்ற பிறகும் ஒரு மணி நேரம் வரை இருளை வெறித்து நோக்கியபடி கான் டப்னாவின் பிரதான கதவருகில் கிற்றி நின்று கொண்டிருந்தாள்.

''இது மிக நீண்ட இரவாக இருக்கப் போகிறது. நீங்கள் குளிரில் நிற்காமல் உள்ளே போயிருக்கலாமே'' பின்னுக்கு ஒரு குரல் கூறியது.

கிற்றி திரும்பினாள். ஜோர்தானா அவளருகில் நின்று கொண்டிருந்தாள் அவர்கள் சந்தித்த முதல் நாளிலிருந்து இன்றுவரையான காலப்பகுதியில் இப் பொழுதுதான் முதல் தடவையாக அந்த சிவந்த தலை ஷப்ராப் பெண்ணைப் பார்க்கும்போது உண்மையிலேயே அவளுக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது. ஜோர்தானா மீதான கிற்றியின் மதிப்பு, கிற்றி அங்கேயே இருக்கத் தீர்மானித்த நாளிலிருந்து வளர்ந்து கொண்டேயிருந்தது. கான் டப்னாவில் அமைதியை நிலை நாட்டுவதில் ஜோர்தானா பெரும் பங்கு வகித்தாள். காட்னாவின் இளம் போராளிகள் மனத்தில், பற்றிக் கொள்ளும் துணிச்சலான மனப்பான்மையை வளர்த்து விட்டிருந்தாள். அவர்கள் உற்சாகமான அனுபவம் பெற்ற போர் வீரர்களைப் போல் நடந்து கொண்டனர். பாதை துண்டிக்கப்பட்ட நாளிலிருந்து இடம் பெற்ற சகல பிரச்சினைகளின் போதும், அவள் சட்டுப்பாடுடனும், திறமையுடனும் செயலாற்றினாள். இருபது வயது கூட ஆகாத ஒரு இளம் பெண்ணுக்கு, இது பெரும் சுமைதான். ஆனால், ஜோர்தானாவிடம் அமைந்திருந்த தலைமைத்துவப் பண்பு, அவளைச் சூழ இருந்தவர்களிடம், தாங்கள் பாதுகாப்பான தலைமையின் கீழ் இருப்பதான உணர்வுகளை நிலை நாட்டியிருந்தது. ''ஆமாம் இது மிக நீண்ட இரவாகத்தான் இருக்கப் போகிறது'' என்றாள் கிற்றி.

''அப்படியானால் நாங்கள் இருவரும் இந்த இரவை ஒன்றாகக் கழிக்கலாம். நான் ஒரு இரகசியத்தைச் சொல்கிறேன். என்னுடைய ஆணையிடும் தலைமையகக் காப்பரணில் ஒரு அரைப்போத்தல் பிராந்தியை ஒளித்து வைத்திருக்கிறேன்.

அதைக் காலி செய்ய இன்றிரவுதான் சரியான நேரம். நீங்கள் போய் எனது காப் பரணில் காத்திருங்கள். நான் வெளியிலிருக்கும் காவல் ஆட்களைக் கூட்டிவர வேண்டும். அரை மணி நேரத்தில் வந்து விடுவேன்'' என்றாள் ஜோர்தானா.

கிற்றி அசையவில்லை. ஜோர்தானா அவள் கையைப் பிடித்து மெதுவாக இழுத்தபடி, ''வாருங்கள் இப்போ நாங்கள் செய்யக் கூடியது எதுவுமில்லை'' என்றாள்.

கிற்றி, தனியே அமர்ந்தபடி, இறுதியாக ஜோர்தானா ஆணைத் தலைமை யகத்துக்கு வந்து சேரும் வரை உணர்ச்சிவசப்பட்டவளாய் சிகரெட்டுக்குப் பின் சிகரெட்டாகப் புகைத்துத் தள்ளிக் கொண்டிருந்தாள். ஜோர்தானா தன் தலையி லிருந்த மண்ணிற ஹகானா தொப்பியை எடுக்கவும், அவளுடைய நீண்ட செந் நிறக் கூந்தல் கற்றைகள் அவள் தோளில் விழுந்து பரவின. அவள் கையை ஒன்றோ டொன்று தேய்ப்பதும், கன்னங்களை அவற்றின் சூட்டில் பிடிப்பதுமாகக் குளிரைப் போக்க மாறிமாறிச் செய்து கொண்டிருந்தாள். மஞ்சுவரில் ஐதாக நிரப்பப்பட் டிருந்த இடத்தில் பிராந்தி ஒளித்து வைக்கப்பட்டிருந்தது. அவள் அதை எடுத்துத் துப்பரவு செய்து விட்டுத் தனக்கும் கிற்றிக்குமாக உரமான அளவில் கோப்பை களில் வார்த்துக் கொண்டாள்.

''லெ கெயிம்'' என்ற ஜோர்தானா ஒரு வாயைக் குடித்துவிட்டு, ''இது நல்ல பிராந்தி'' என்றாள்.

''அபுயேஷா அருகால் அவர்கள் செல்ல எவ்வளவு நேரமாகும்?''

''நடு இரவுக்குப் பின்புதான் போகலாம்.'' ஜோர்தானா பதிலிறுத்தாள்.

''அவர்கள் இந்த முயற்சியில் தீங்கெதுவுமின்றித் தப்பிவிடுவார்கள் என்று, எனக்கு நானே திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்கிறேன். உடனே பிழைத்துப் போய்விடக்கூடிய ஆயிரம் விஷயங்களும் ஞாபகத்துக்கு வந்தன.''

''அதைப்பற்றி யோசிக்காமலிருப்பது முடியாத காரியம்தான். ஆனால் இப்போ எல்லாமே இறைவனின் கையில்தானிருக்கின்றது.''

''கடவுள். ஆமாம், அவர் இங்கு பல விசேஷ விஷயங்களைச் செய்கிறார்'' கிற்றி சொன்னாள்.

''பலஸ்தினத்தில் மதத்தை நீங்கள் காணாவிட்டால் வேறு எங்கும் காண முடியாது. நாங்கள் விசுவாசத்தில் வாழாத நாட்கள் எனக்கு ஞாபகமில்லை. உண்மையில் எங்களை வாழ்வைக்க விசுவாசத்தைத் தவிர வேறு கதியில்லை.''

ஜோர்தானா பென் கானானிடமிருந்து இவ்வார்த்தைகள் வருவது விசித் திரமாகத்தான் இருந்தது. ஆனால், முழுமையான விசித்திரமாகவும் இல்லை. மேலோட்டமாகப் பார்க்கும் போது ஜோர்தானாவின் விசுவாசம் ஆழமான தல்ல போலும் தோன்றுகின்றது... ஆனால் இந்த நிரந்தரமான பதற்றங்களுக்கு மத்தியிலே சீவிக்க அவளுக்கு விசுவாசத்தைத் தவிர வேறு எது உதவியிருக்கக் கூடும்?

''கிற்றி'' திடீரென அழைத்த ஜோர்தானா, ''உன்னிடம் தான் மனம் திறந்து பேசப்போகிறேன். நாங்கள் நண்பர்களாக வேண்டும் என நான் மிகவும் விரும்புகிறேன்'' என்றாள்.

''ஏன் அப்படி ஜோர்தான?''

''ஏனெனில் உங்களிடமிருந்து ஒரு பாடத்தை நான் கற்றுக் கொண்டிருக்கிறேன்... நான் பிழையாக நினைத்திருந்த ஒரு விஷயத்தைப் பற்றியது அது... நீங்கள் இங்கே பிள்ளைகளுக்காற்றிய சேவையை நான் கவனித்து வந்திருக்கிறேன், அரிக்கு செய்தவைகளை நான் அறிவேன். நீங்கள் இங்கேயே தங்க முடிவெடுத்தபோது நான் ஒன்றை உணர்ந்து கொண்டேன்.. உங்களைப் போன்ற ஒரு பெண்ணும்... எங்கள்... மக்களைப்போல் மனத்திடத்தைக் கொண்டிருக்கலாம் என்பதே அது... பெண்மையின் நளினத்துடன் இருப்பது பலவீனத்தின் அடையாளம் என்று நினைத்திருந்தேன்.

''நன்றி ஜோர்தானா'' கிற்றி பலவீனமாகச் சிரித்தாள். ''ஆனால் தற் சமயத்துக்கு உன்னுடைய வகை விசுவாசத்தையும், மனத்துணிவையும் நான் சிறிது கைக்கொள்ளலாம் போலிருக்கிறது. ஏனெனில், இப்போதுள்ள இந்த நிலையில் நான் விழுந்து நொருங்கி விடுவேன் போலிருக்கிறது.''

கிற்றி, ஒரு சிகரெட்டைப் பற்றவைத்துக் கொள்ளவும், ஜோர்தானா இன்னும் சிறிது பிராந்தியை அவளுக்காக ஊற்றினாள்.

''நீங்கள் அரிக்குப் பொருத்தமானவர் தான் என்று இப்போது நான் நினைக்கிறேன்.''

கிற்றி, இல்லையெனத் தலையை ஆட்டினாள். ''நாங்கள் இருவரும் யாரோ கூறியது போல் ஒருவருக்கொருவர் பொருத்தமில்லாத மிக நல்ல மனிதர்கள்.''

''அது மிகவும் துரதிஷ்டமானது கிற்றி.''

கிற்றி, தன் கைக்கடிகாரத்தைப் பார்த்தாள். முன்பு கலந்துரையாடல்களில் இருந்து தெரிந்து கொண்டிருந்தது போல் இந்த நேரத்திற்கு இங்கிருந்து புறப்பட்ட ஆட்களின் நீண்ட வரிசை, கிட்டத்தட்ட செங்குத்தாக இறங்கும் முதல் இடத்தை அடைத்திருக்கும் என்று உணர்ந்து கொண்டாள். பிள்ளைகளுடன் ஒவ்வொருவராக கயிற்றினைப் பாவித்து இறங்குவார்கள். மூப்பத்தைந்தடி அப்படி இறங்கவேண்டும். அங்கிருந்து அவர்கள் நூறு யார் தூரத்தை மண்ணில் வழுக்கியபடி செல்லவேண்டும்.

''உன்னையும் டேவிட்டையும் பற்றிக் கொஞ்சம் சொல்லேன்'' கிற்றி அவசரமாகக் கேட்டாள்.

ஜோர்தானாவின் கண்கள் பளிச்சிடத் தொடங்கின. ''ஆ.. என்னுடைய டேவிட்... எனது மென்மையான, உன்னதமான டேவிட்.''

''எங்கே முதலில் சந்தித்தீர்கள்?''

''ஹீப்ரூ பல்கலைக்கழகத்தில். நான் போய் இரண்டாம் நாள் அவளைச் சந்தித்தேன் அதே கணமே நாங்கள் காதலில் கட்டுண்டோம். இன்றுவரை பிரியவே இல்லை.''

''எனக்கும் கணவருக்கும் கூட அப்படித்தான் நிகழ்ந்தது'' கிற்றி சொன்னாள்.

''ஆனால் நான் அவரைக் காதலிக்கிறேன் என்று உணர்ந்து கொள்ள அவருக்கு மூதல் தவணை முழுவதும் தேவைப்பட்டது.''

''எனக்கு அதைவிட நீண்ட காலம் பிடித்தது'' சொல்லிவிட்டுச் சிரித்தாள் கிற்றி.

''இப்படியான விஷயங்களுக்கு ஆண்கள் மிகவும் தொல்லை கொடுப்பார்கள். ஆனால், முதுவேனில் காலம் வந்தபோது தன் காதலி யார் என்று அவருக்குப் புரிந்திருந்தது. இருவரும் ஒரு புதைபொருள் ஆராய்ச்சிப் பயணமொன்றிற்காக ஒன்றாக நெகெவ் பாலைவனம் சென்றிருந்தோம். இன், பரான் வனாந்தரப் பகுதிகளில் மோசேசும் பத்துக் குலத்தவரும் சென்ற பாதையை துல்லியதாகக் கண்டடைய முயற்சி செய்தோம்.''

''அங்கே மிகவும் தனிமையாயிருக்கும் என்று சொன்னார்களே?''

''இல்லை. அங்கே, நூற்றுக்கணக்கான நாபாத்தியன்நகரங்களிருக்கின்றன. நீர் நிலைகளில் இன்னும்நீர் நிற்கின்றன. அதிர்ஷ்டம் இருந்தால் ஏராளமான புராதனப் பொருட்களைச் சேர்த்தெடுக்கலாம்.''

''அது நல்ல உற்சாகமூட்டும் இடம்போல் இருக்கிறது.''

''அப்படித்தான். ஆனால் வேலைதான் கடினமானது. புராதனப் பொருட்களுக்காக அகழ்வாராய்ச்சி செய்வதில் டேவிட் மிகுந்த விருப்பமுடையவன். எங்களுடைய மக்களின் புராதன மகிமைகள் எங்களைச் சூழ இருப்பதாக மற்ற பலரைப் போலவே அவரும் உணர்கிறார். அதனால்தான் யூதர்கள் இந்த மண்ணிலிருந்து பிரித்திருக்க முடியாதென்று நாங்கள் கருதுகிறோம். டேவிட் அருமையான திட்டங்களைத் தீட்டியிருக்கிறார். போர் முடிந்ததும், இருவரும் சர்வகலாசாலைக்குத் திரும்பபோகிறோம். நான் எனது முதுகலைமாணிப் பட்டத்துக்கும், டேவிட் தனது கலாநிதிப் பட்டத்துக்கும் ஆயத்தம் செய்வோம். பிறகு இருவருமாக பெரிய ஹீப்ரூ நகரமொன்றை அகழ்ந்து மீட்கப் போகிறோம். அவர் இங்கே ஹுலேயிலேயே இருக்கும் ஹேஸர் நகரை மீட்கப்போகிறாராம். ஆனால் இவை கனவுகள் தான். ஏனெனில், அவற்றுக்கு ஏராளமான பணம் தேவை அமைதியும் தான்.'' சொல்லிவிட்டு விரக்தியாகச் சிரித்தவள், ''அமைதி என்பது ஒரு புரிந்து கொள்ள முடியாத வார்த்தைதான். ஒரு மாயை. அமைதி எப்படியிருக்கும் என்று நான் யோசிக்கிறேன்.'' என்றாள்.

''சிலவேளை அமைதி என்பது உனக்கு மந்தமானது போல் தோன்றலாம்.''

''எனக்குத் தெரியவில்லை'' என்றாள், தன் இளவயதுக் குரலில் சிறிது களைப்புத் தொனிக்க என்னுடைய வாழ்க்கையில் ஒரே ஒரு முறையாவது மனிதர் எப்படி இயல்பு வாழ்க்கையை வாழ்கிறார்கள் என்று பார்க்க விரும்புகிறேன்.''

''பயணம் செய்வாயா நீ?''

''பயணம் செய்ய? இல்லை. டேவிட் செய்வது எதுவோ, அதையே நானும் செய்கிறேன். டேவிட் எங்கு போகிறானோ, அங்கு நானும் போவேன். ஆனால், கிற்றி ஒருமுறையாவது வெளியில் போய்வர வேண்டும். என்னுடைய வாழ்க்கை முழுவதும், ''வாழ்க்கை பலஸ்தீனத்தில் தொடங்கி, பலஸ்தீனத்தில் முடிவதாகவே சொல்லித் தந்திருக்கிறார்கள். இருந்தாற்போல் சில வேளைகளில் அந்தரமாக இருக்கிறது. என்னுடைய பல நண்பர்கள் பலஸ்தீனத்தை விட்டுப் போய்விட்டார்கள் ... ஆனால் ஷப்றாக்கள், நாங்கள் போரிடவே பிறந்த வர்க்கத்தினர் போல் இருக்கிறோம். வேறு இடங்களில் எங்களால் இணைந்து வாழ முடியாது. அவர்கள் முந்தியோ பிந்தியோ இங்கேயே திரும்பி வருகிறார்கள். ஆனால், இங்கு வந்தும், விரைவாக வயோதிபம் அடைந்து விடுகிறார்கள்.'' ஜோர்தானா திடீரென்று பேசுவதை நிறுத்திக் கொண்டாள். ''இந்தப் பிராந்திதான் இப்படிப் பேச வைக்கிறது. ஷப்றாக்கள் மது அருந்த முடியாது தெரியும் தானே?''

கிற்றி ஜோர்தானாவைப் பார்த்துச் சிரித்தாள். அந்தப் பெண்ணுக்காகத் தான் முதன் முதலாகக் கழிவிரக்கம் கொள்வதை உணர்ந்தாள். தன் சிகரெட்டை அணைத்து விட்டுக் கைக்கடிகாரத்தைப் பார்த்தாள். நிமிடங்கள் ஆமை வேகத்தில் ஊர்ந்து கொண்டிருந்தன.

''இப்போ அவர்கள் எங்கே போயிருப்பார்கள்.''

''முதல் செங்குத்துப் பாதையில்தான் இறங்கிக் கொண்டிருப்பார்கள்.'' அவர்கள் எலோரையும் இறக்கி முடிக்க இரண்டு மணித்தியாலங்கள் எடுக்கும்.

கிற்றி பலவீனமாகப் பெருமூச்செறிந்தாள். ஜோர்தானா சூனியத்தை வெறித்தாள்.

''நீ என்ன யோசிக்கிறாய்?''

''டேவிட்டைப்பற்றியும் பிள்ளைகளைப் பற்றியும். பாலைவனத்தில் செலவிட்ட முதல் முதுவேனிற்காலத்தில் நாலாயிரம் வருடங்கள் பழமையான ஒரு இடுகாட்டை நாங்கள் கண்டுபிடித்தோம். ஒரு குழந்தையின் பூரணமான எலும்புக்கூட்டை எங்களால் மீட்க முடிந்தது. வாக்களிக்கப்பட்ட பூமியைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் மடிந்ததோ என்னவோ? டேவிட் அந்த எலும்புக் கூட்டைக் கண்டுவிட்டு அழுதார். அவர் அப்படித்தான். ஜெருசலேம் முற்றுகைச்

குள்ளாயிருப்பது இரவும் பகலும் அவரைவாட்டுகிறது. அவர் ஏதோ முட்டாள் தனமாக செய்ய முயற்சிக்கிறார் போல் எனகுத் தோன்றுகிறது எனக்குத் தெரியும்.. நீங்கள் ஏன்படுத்துக் கொள்ளக் கூடாது? கிற்றி. ஏதாவது தெரிய வர நீண்ட நேரமெடுக்கலாம்.''

கிற்றி தனது பிராந்தியை முடித்துவிட்டு கட்டிலில் நீட்டி நிமிர்ந்து படுத்துக் கொண்டு கண்களை மூடிக் கொண்டாள். அவளுடைய மனக்கண்களில் கயிறுகளில் இறக்கப்படும் மனிதர்களின் நீண்ட வரிசையும், அவர்களின் முதுகு களில் தூங்கிக்கொண்டே ஊசலாடும் குழந்தைகளும் தெரிந்தனர். கண்களைக் குறுக்கிகொண்டே. இந்த வரிசைக்கு அருகே, அவர்கள் அருகே வந்து பொறிக்குள் அகப்படும் வரை காத்திருக்கும் அரபுக்கூலிப்படையினரும் தெரிந்தார்கள்.

நித்திரை கொள்வது முடியாத காரியமாக இருந்தது. ''நான் டாக்டர் லிப்பர் மானுடைய காப்பரணுக்குப் போய் அவர்கள் எப்படியிருக்கிறார்கள் என்று பார்த்து வரலாம் என்று நினைக்கிறேன்.''

அவள் ஒரு கப்பளி வைத்துத் தைத்திருந்த மேலங்கி ஒன்றை அணிந்து கொண்டு வெளியே சென்றாள். முழு மாலையிலும், ஷெல் வீச்செதுவும் இடம் பெறவில்லை. ஒரு பயமூட்டும் யோசனை மனத்தில் ஓடியது. சிலவேளை மொகம்மட் காசி ஏதாவது அறிந்துகொண்டு, தன் படையினரை எஸ்தர் கோட்டையிலிருந்து வெளியேற்றி வேறெங்காவது ஆயத்தமாகக் காத்திருக்கக் கூடுமா? அந்த யோசனை அவளுக்குப் பிடிக்கவில்லை. நிலவு அளவுக்கு மீறிப் பிரகாசமாயிருந்தது. இரவும் தெளிவாக இருந்தது. மூடுபனியுள்ள ஒரு இரவு வரை அரி பிள்ளைகளை வெளியேற்றுவதற்குக் காத்துக் கொண்டிருக்கலாம். கிற்றி நிமிர்ந்து எஸ்தர் கோட்டையின் உருவத்தின் விளிம்புகளை காணக்கூடி யாதாக இருந்தது. அவர்கள் கண்டிருக்கக் கூடும் என்று அவள் நினைத்தாள்.

அவள் வளாக பதுங்கு குழிஒன்றினுள் நுழைந்தாள். டாக்டர் லிப்பர்மானும் அவரது ஊழியர் குழாமும், கட்டில் விளிம்புகளில் பரபரப்பால் விறைத்துப் போய்க் காத்திருந்தனர். ஒரு வார்த்தைதானும் ஒருவரும் பேசவில்லை. உள்ளே அவ்வளவு ஆரோக்கியமான நிலை நிலவாததால் அவள் திரும்பவும் வெளியே வந்தாள்.

கரேன், டொவ் இருவரும் காவல் கடமையில் நின்றனர். அவள் ஜோர் தானாவின் கட்டளைப் பணியகத்துக்கு வந்தபோது அவள் போய்விட்டிருந்தாள்.

அவள் கட்டிலில் சரிந்து கால்களை போர்வையால் மூடிக் கொண்டாள். மலையில் அங்குலம் அங்குலமாக நகர்ந்து கொண்டிருக்கும் ஆட்களின் காட்சி அவள் மனத்திரையில் மீண்டும் தெரிந்தது. அந்த நாள் அவளைக் களைத்துப் போகப் பண்ணியிருந்தது. அவள் நித்திரை வயப்பட தொடங்கினாள். நேரம் ஓடிக் கொண்டிருந்தது.

நடு இரவு- ஒரு மணி. கிற்றி கட்டிலில் கைகளையும் கால்களையும் அடித்துக் கொண்டிருந்தாள். பயங்கரமான கனவுகள் அவளை வாட்டிக் கொண்

டிருந்தன. காசியின் ஆட்கள், தங்கள் வாட்கள் மின்ன, கூவிக்கொண்டே இந்த வரிசையின் பின்னால் விரட்டிச் செல்வதாகக்கனவு கண்டாள். காவலுக்குச் சென்றவர்கள் எ லோரும் கொல்லப்பட்டு விட அரபுக்கள் எல்லாப் பிள்ளை களையும் பிடித்து அவர்களுக்காக ஒரு பெரிய பள்ளத்தைத் தோண்டி ..

கிற்றி வியர்க்க விறுக்க பதைக்கும் இதயத்துடன் துடித்தெழுந்தாள் அவள். தன் தலையை மெள்ள ஆட்டிக் கொண்டாள். தலையிலிருந்து கால் வரை நடுங்கியது. அப்போது பார்த்து ஒரு சத்தம் அவள் காதை எட்டியது. காதைக் கொடுத்துக் கூர்மையாகக் கேட்டாள். அவளுடைய கண்கள் பயத்தால் விரிந்தன.

அது எங்கோ தூரத்தில் கேட்கும் துப்பாக்கி வேட்டொலிதான். அவள் தடுமாறியபடியே எழுந்தாள். ஆமாம்! அது துப்பாக்கி வேட்டு ஒலிதான்... அப்யேஷாவின் திசையிலிருந்து வந்து கொண்டிருந்தது. இது கனவல்ல! ஆட்க ளின் வரிசை கண்டு பிடிக்கப்பட்டு விட்டது.

கிற்றி வெளியே ஓடத் தொடங்கியதற்கும், ஜோர்தானா உள்ளே வரு வதற்கும் சரியாக இருந்தது.

''என்னை போக விடு'' கிற்றி கத்தினாள்.

''இல்லை... கிற்றி... வேண்டாம்.''

''அவர்கள் என் குழந்தைகளைக் கொல்கிறார்கள்! கொலைகாரர்கள்! கொலைகாரர்கள்!

கிற்றியைச் சுவரோடு அழுத்திப் பிடிக்க ஜோர்தானா தன் முழுப் பலத் தையும் பிரயோகிக்க வேண்டியிருந்தது. ஆனால் கிற்றி வலிமையோடு போரா டினாள். அவள் கைகால்களை உதறி ஜோர்தானாவின் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டாள். அந்த ஷப்றாப் பெண்ணோ கிற்றியைப் பற்றிப் பிடித்து சுழற்றித் திருப்பி, தோளில் பிடித்துத் தள்ளியதில் நிலத்தில் வீசப்பட்ட கிற்றி விம்மிக் கொண்டிருந்தாள்.

''நான் சொல்வதைக் கேளுங்கள். நீங்கள் கேட்ட வேட்டுக்கள் ஸெவ் ஜில்போவாவும், பால்மாக்கினரும் மேற்கொள்ளும் ஒரு திசை திருப்பும் தாக்கு தலின் ஒலிகள்தான். அவர்கள் எமது ஆட்கள் செல்லும் பக்கத்தின் எதிர்ப் பக்கத்தைத் தாக்கி, காசியின் ஆட்களை எமதாட்களிடமிருந்து வேறு திசைக்கு இழுக்கப் பார்க்கிறார்கள்.''

''நீ பொய் சொல்லுகிறாய்.''

''அது உண்மைதான். சத்தியமாய் அதுதான் உண்மை. தாக்குதல்

தொடங்குமுன் அதுபற்றி யாருக்கும் சொல்ல வேண்டாம் என்று சொல்லி இருந்தார்கள். நான் இங்கே வந்து பார்த்தபோது நீங்கள் தூங்கிக் கொண்டி ருந்ததால் மற்றவர்களை எச்சரிக்கச் சென்றிருந்தேன்.''

ஜோர்தானா, மண்டியிட்டுக் கிற்றியை எழுந்து நிற்கப்பண்ணிக் கட்டி லுக்குக் கூட்டிச் சென்றாள். கொஞ்சம் பிராந்தி மீதமிருக்கிறது. அதைக் குடி யுங்கள்.''

கிற்றி அதை விழுங்கினாள். திக்கித் திணறியபடி அது உள்ளே போனது அவள் தன்னைக் கட்டுடபடுத்திக் கொண்டாள்.

''உங்களை அடித்ததற்காக மன்னித்துக் கொள்ளுங்கள்.''

''இல்லை. நீ சரியான வேலையைத்தான் செய்தாய்.'' ஜோர்தானா கிற்றிக்கு அருகில் அமர்ந்து அவள் கழுத்துப் பகுதியை அழுத்திக் தடவி விட் டாள். கிற்றி தன் தலையை ஜோர்தானாவின் தோளில் வைத்து தன் மனப் பாரம் குறையும் வரை மெதுவாக அழுதாள். பின்பு எழுந்து நின்று தன் தடிப் பான உடைகளை அணிந்து கொண்டாள்.

''கரேனும், டொவ்வும் காவல் கடமையிலிருந்து இப்போ வருவார்கள். நான் எனது காட்பரணுக்குப் போய் அவர்களுக்குச் சிறிது தேநீர் தயாரிக்கப் போகிறேன்.''

இருள் நேரங்கள் தொடர்ந்து நீண்டு கொண்டிருந்தன, முடிவில்லாத இரவைபபோல். இந்த இருளின் மறைவிலே, பால்மாக்குகள் அபுயேஷாவின் மறுபகுதியிலே தாக்குதலை நடத்திக் கொண்டிருந்தபோது, இப்பகுதியிலே ஆட் கள் தங்கள் வயிறுகளால் ஊர்ந்து சென்று, கீழே . கீழே விரைவாக இறங்கிக் கொண்டிருந்தார்கள்.

இரண்டு மணி... மூன்று மணி இங்கே காத்துக் கொண்டிருந்தவர்கள், ஜோர்தானா உட்பட முற்றாகவே உற்சாகமிழந்து திகைப்பான் அமைதியில் மூழ்கிப் போயிருந்தார்கள். ஐந்து பதினைந்துக்கு தங்கள் காப்பரண்களால் வெளியே வந்தார்கள். காலை நேரம் ஐஸ் போல் குளிர்ந்தது. மெல்லிய பனி மூட்டம் ஒன்று மத்திய புல்தரையை மூடியிருந்தது. எல்லோரும் பிரதான வாசலால், மலையின் விளிம்பில் இருந்த அவதான நிலையத்தை நோக்கி நடந் தார்கள்.

இருள் பூமியிலிருந்து விடை பெற்றுக் கொண்டிருந்தது. பள்ளத்தாக்கில் ஒவ்வொரு மின் விளக்காக அணைக்கப்பட்டுக் கொண்டிருந்தன. விடியல் நேரத் தின் அடர் சாம்பல் நிறத்தூடாக எவ்வளவோ கீழே இருந்த தரை தெரியத் தொடங்கியிருந்தது.

தொலைநோக்கிக் கண்ணாடி ஊடாக கீழே மலையில் ஏதாவது அசைவு தெரிகிறதா, என்று பாதுகாப்புக் கடமையில் நின்றவன் உற்றுப் பார்த்துக் கொண்டேயிருந்தான். எதுவுமே தெரியவில்லை.

''அதோ!''

காவல் கடமையில் இருந்தவன் சுட்டிக் காட்டினான். அவர்கள் எல்லேச் ருமே யாட் எல் மொசாவ்வின் திசையில் உற்றுப் பார்த்தார்கள், ஒரு ஒளிர் சமிக்ஞை விளக்கிலிருந்து, புள்ளிகளும் கோடுகளும் மின்னித் தெறித்துக் கொண் டிருந்தன.

''அது என்ன கூறுகிறது? அதற்கு என்ன கருத்து?''

''அது எக்ஸ் 1416 என்கிறது.''

ஒரு கணம் குழப்பம் நிலவியது. செய்தி மீளவும் அனுப்பப்பட்டது. எக்ஸ் 1416 அவர்கள் பாதுகாப்பாகப் போய்ச் சேர்ந்து விட்டார்கள். என் றாள் ஜோர்தானா பெல் கானான்.

''உன்னுடைய கோலை உயர்த்தி, கையைக் கடலுக்கு மேல் நீட்டி, அதனைப் பிரித்து விடு. இஸ்ரேலின் மக்கள் கடலுக் கூடாகக் காய்ந்த தரை யிலே நடந்து போவார்கள்.''

யாத்திராகமம் 14 : 16

சொல்லிவிட்டுக் கிற்றியைப் பார்த்து அச்சமிப்போடு சிரித்தாள்.

O

அத்தியாயம் ஆறு

கான் டப்னாவின் இழைய குழந்தைகள் வெளியேற்றப்பட்டு நான்கு நாட்களின் பின் அறிக்கைகள் பல அரிக்கு வந்து சேர்ந்து கொண்டிருந்தன. அவனுடைய குடியேற்றங்களின் கொமாண்டர்கள் அரபு தாக்குதல்களின் உக்கிரம் குறைந்து வருவதாக அறிவித்தனர். அபு யேஷாவிலிருந்த நண்பர்கள் சிலரிடமிருந்து, காசி அக்கிராமத்திலிருந்த நூறு பேரில் அரைவாசிப்பேரை வாபஸ் வாங்கி எஸ்தர் கோட்டைக்குச் செல்ல உத்தரவிடப்பட்டிருப்பதாக அறிந்ததும் கான் டப்னா மீதான தாக்குதல் எந்நேரமும் நடக்கலாம் என்று அரி தெரிந்து கொண்டான்.

கலிலியெங்கும் இருந்து இறுதியாக எடுக்கக்கூடியதாயிருந்த இருபது பால்மாக்குருப்புக்களுடனும், மீண்டும் கான் டப்னாவுக்கு மலையில் ஏறிச்சென்று, அங்கே நேரடியாகத் தலைமையைப் பொறுப்பேற்கச் சென்றான்.

அவனோடு நாற்பது பால்மாக்குகளும், சண்டையிடக்கூடிய முப்பது ஊழியர்களும், ஜோர்தானாவின் இருநூறு பேர்கொண்ட கட்னா இளைஞர்களும் இருந்தனர். அவனுடைய ஆயுதச்சாலையோ நூற்றிஐம்பது புராதன றைபிள்கள் அல்லது உள்ளூரிலே தயாரிக்கப்பட்ட ஸ்ரென் துப்பாக்கிகள், இரண்டு இயந்திரத் துப்பாக்கிகள், சிலநூறு உள்ளூரில் தயாரித்த கைக்குண்டுகள், கண்ணிவெடிகள், நெருப்புக்குண்டுகள் போன்றவற்றையும், ஐந்து சுற்றுக் குண்டுகளோடு கூடிய அந்தப் பாவனையிலிருந்து அகற்றப்பட்டு விட்ட ஹங்கேரிய தாங்கி எதிர்ப்புப் பீரங்கியையும் கொண்டிருந்தது.

தகவல் சேகரிப்பு - ஆய்வு அறிக்கைகளின்படி தனக்கு எதிராக முகமட் காசி கணக்கற்ற ரவைகளுடனும், பீரங்கிகளின் ஆதரவுடனுமான எண்ணூறு கூலிப்படையினரையும், லெபனான் எல்லைப்புறத்து, ஆட்டா மற்றும் ஏனைய விரோதக் கிராமங்களிலிருந்து வந்திருந்த நூற்றுக்கணக்கான கிராமவாசிகளையும் நிறுத்தியிருந்தான் என்று தெரிய வந்திருந்தது.

அரியுடைய ரவைகளின் நிலைமையும் மோசமாக இருந்தது. தாக்குதல் தொடங்கினால் அதை உடனே முறியடித்து விடவேண்டும் என்று அவனுக்குத் தெரிந்திருந்தது. அவனது அனுகூலம் எதிரியின் போக்கை உணர்ந்திருப்பதில் இருந்தது. ஈராக்கியவழிப்பறிக் கொள்ளைக்காரனான மொகம்மட் காசிக்கு முறையான இராணுவப் பயிற்சி எதுவும் இல்லை. துணிகரச் செயல்களையும் கொள்ளையையும் இரை காட்டியே காவுக்ஜி அவனை அமர்த்தியிருந்தான்

காசியின் ஆட்கள் குறிப்பாக வீரமானவர்கள் என்று அரி கருதவில்லை, ஆனால் அவர்களை வெறிகொள்ளும் விதத்தில் தூண்டிவிடலாம். மோதலின் போது அவர்களது கை ஓங்கினால் கொலைகாரத் தனமாகச் செயல்படுவார்கள், அரபுக்களின் அசட்டைத் தனத்தையும். கற்பனைக் குறைவையும் தனது ஆதரவுச் சக்திகளாகப் பாவிக்க அரி முடிவு செய்தான். காகி எஸ்தர் கோட்டையிலிருந்து குறைந்த நேரடித் தூரம் கொண்ட வழியால் நேர்த் தாக்குதல் ஒன்றையே நடத்துவான், என்ற அனுமானிப்பின் மீதே தனது பாதுகாப்புத் திட்டங்களை அரி அமைத்தான். அரபுக் கூலிப்படையினரோடு, சிறுபையனாக தான் மோதத் தொடங்கிய காலத்திலிருந்து அவர்களின் உத்தி. முன்பக்க நேர்த் தாக்குதலாகவே இருந்து வந்துள்ளது என்பதை நன்குணர்ந்திருந்தான். அவன் தன்னுடைய பாதுகாப்பணிகளை ஒரே இடத்திலேயே குவித்து வைத்திருந்தான்.

அரியுடைய பாதுகாப்புத் திட்டத்திலேயே முக்கியமான இடம் ஒரு புனலைப் போல் நீண்டிருந்த ஒரு பாதை போன்ற கணவாயாகும். இந்தக் கணவாய்க்குள் காசிமை வரவழைத்தால் அரிக்கு நல்ல வாய்ப்புக் கிடைக்கும். எஸ்தர் கோட்டைக்கு வெளியே மிக அருகாமையிலிருந்த பற்றைகளுள்ளும், குன்றுகளுடாகவும் அரபுக்களின் அசைவுகளை வேவு பார்க்கும் நோக்கில் ஸெவ் ரோந்துகளை நடத்திச் சென்றான். காசி ஆட்களை அங்கே குவிப்பதை அவனும் ஊர்ஜிதம் செய்தான்.

அரி கான் டப்னாவுக்கு வந்து மூன்று நாட்களுக்குப் பின், ஒரு சிறியவனான தூதுவன் அரியுடைய கட்டளைப் பணியகத்துக்கு ஓடி வந்தான். காசியுடைய ஆட்கள் கிட்டத்தட்ட ஆயிரம் பேர் எஸ்தர் கோட்டையால் புறப்பட்டு மலைச் சரிவில் இறங்கிக் கொண்டிருப்பதாகச் செய்தி கொண்டு வந்திருந்தான். இரண்டு நிமிடங்களினுள், ''கறுப்பு எச்சரிக்கை'' செய்யப்பட்டு கான் டப்னாவின் ஒவ்வொரு ஆண், பெண், சிறுவர்களும் தங்கள் தங்கள் நிலைகளில் ஆயத்தமாக நின்றனர்.

சேணவடிவில் இருந்த குன்று ஒன்று, காசியின் படையினர், கான்டப்னாவுக்கு மேலே நேரே இருந்த குன்று ஒன்றுக்கு வரும் வரை, அவர்களுக்கு மறைவை அளிக்கும். இது கிராமத்தின் வடபக்கத்திலிருந்து அறுநூறு யார் தூரத்திலும், அரி குறிவைத்திருந்த தோப்பிலிருந்து, இருநூறு யார் தூரத்திலும் இருந்தது.

அரியுடைய ஆட்கள் ஏற்கனவே தயாரித்து வைத்திருந்த இடங்களில் நிலையெடுத்து மௌனமாகக் காத்திருந்தனர்.

விரைவிலேயே குன்றின் மேல் தலைகள் தெரியத் தொடங்கின. சில நிமிட நேரங்களுக்குள்ளே அந்த இடம் கூலிப்படையினரால் நிறையத் தொடங்கிற்று. அவர்கள் தங்கள் முன்னேற்றத்தை நிறுத்தி வியத்தகுவிதத்தில் மௌனமாக இருந்த கிராமத்தை வெறித்துப் பார்த்தபடி நின்றார்கள். அரபு அதிகாரிகளோ இந்த மௌனத்தைப் பற்றிச் சந்தேகம் கொண்டார்கள். இரு பகுதியினராலும் ஒரு வேட்டுக் கூடத் தீர்க்கப்படவில்லை.

எஸ்தர் கோட்டையில் காவல் - பீரங்கி கோபுரத்தில் நின்றபடி, தொலை நோக்கிக் கண்ணாடியூடாக, தன் ஆட்கள் கான் டப்னாவுக்கு மேலிருந்த குன்றில்

நிறைந்திருப்பதைப் பார்த்த காசி, புன்முறுவல் பூத்தான். தன் ஆட்கள் மீது யூதர்கள் ஒரு வேட்டைகூடத் தீர்க்காததால், தன் ஆட்கள் இலகுவாகக் கான் டட்னாவைத் துவம்சம் செய்து விடுவார்கள் என அவன் நம்பிக்கை வளர்ந்தது. கோட்டையிலிருந்து முழங்கிய பீரங்கி ஒன்று தாக்குதலைத் தொடங்குப்படி சமிக்ஞை செய்தது.

கான் டட்னாவில் இருந்தவர்கட்கு, அதிகாரிகள் தங்கள் கூலிப்படையினரை நோச்கி விடுத்த கட்டளைகளும், ஆடம்பரமான பிரசங்கங்களும் கேட்டுக் கொண்டே இருந்தன. இன்னும் குன்றிலிருந்து யாரும் இறங்க முயற்சிக்கவில்லை. கிராமத்தில் நிலவிய அமைதி அவர்களைக் குழப்பத்தில் ஆழ்த்தியது. மேலும், பலர் கிராமத்தைச் சுட்டிக்காட்டிக் கூக்குரலிடலாயினர். அவர்களுடைய கூக் குரல்களும், ஏச்சுக்களும் வரவர அதிகரித்துக் கொண்டே போயின.

''அவர்கள் தங்களுக்குத் தாங்களே வீரமூட்டிக் கொள்ள முயல்கிறார்கள்'' அரி சொன்னான்.

அரபுக்களுடைய உறைய வைக்கும் கூஷணையான பேச்சுக்களால் தங்க ளைக் கட்டுப்படுத்திக் கொள்ளமுடியாமலிருந்தாலும், யூதர்களின் கட்டுப்பாடான படையினர் தங்கள் முகங்களையோ, துப்பாக்கிகளையோ வெளியில் காட்ட வில்லை.

இருபது நிமிடக் கூச்சல் போடுதலுக்குப் பிறகு, திடீரெனக் குன்றிலிருந்து அசைந்த கூலிட்டையினர், பயங்கரக் கூச்சல்களுடனும், மின்னும் வாட கள், பயனைற்றுகளுடனும், உருக்குத் தளபாடங்கள் வானத்தில் நிழலாகத் தோன்று மாப்போல் தொகையாக இறங்கி வந்தார்கள்.

அரியின் பாதுகாப்புத் திட்டத்தின் முதல் கட்டம் இப்போ பரீட்சைக் குள்ளாக்கப்படப் போகிறது. முன்னைய ஒவ்வொரு நாளிரவுகளிலும், வெளியே அனுப்பிய ரோந்துப் பிரிவினரைக் கொண்டு, கான் டப்னாவுக்கு உள்ளிருந்தபடி வெடிச்ச வைக்கக்கூடிய நிலக்கண்ணி வெடிகளைப் பொருத்தி இருந்தான். இந்தக் கண்ணி வெடிகள் நடுவே ஒரு பாதையை உருவாக்கி அரபுக்களைத் தோரப் புக்கு நடுவே வரச் செய்தன.

ஆக முன்புறமானநிலையொன்றிலிருந்த ஸெவ்ஜில்போவா அரபுக்களின்முன் னணிப் படையினர் வேகமாக இறங்கத் தொடங்குமட்டும் காத்திருந்தான். அவர் கள் கண்ணிவெடி வயலை நெருங்கியதும், ஸெவ் பச்சைக் கொடியொன்றைத் தூக்கிப் பிடித்தான். கான் டப்னா உள்ளிருந்து அரி கண்ணிவெடிகளை இயக் கினான்.

ஒவ்வொரு பக்கத்துக்குப் பத்துப் பத்தாக இருபது கண்ணிவெடிகள் ஒரே நேரத்தில் வெடித்தன. இந்தக் கண்ணிவெடிகள் கும்பலின் பக்கவாட்டில் வெடித் ததால், அவர்கள் ஓடுங்கிப்போய், நேராகக் கணவாயின் புனலுக்குடாகச் சென் றார்கள்.

தோப்பின் இரு கரையிலும் அரி தன் நாற்பது பால்மாக் துருப்புகளை, இருந்த, இரண்டு இயந்திரத் துப்பாக்கிகள், கைக்குண்டுகள், நெருப்புக் குண்டுகள் போன்றவற்றோடு நிலையெடுக்கப் பண்ணியிருந்தான். அரபுக்கள் அவர்களுக்கு நேராக வந்தபோது, பால்மாக்குகள் இரண்டு இயந்திரத் துப்பாக்கிகளின் எதிரெதிர் வேட்டுக்களால் தோப்பில் தாராக்களை சுடுவது போல் அவர்களைச் சுட்டுத் தள்ளினார்கள். நெருப்புக் குண்டுகள் வெடித்தபோது, டசின் கணக்கானவர்களை மனிதத் தீவட்டிகளாக மாற்றின. இதற்கிடையில் பால்மாக்குகள் கைக்குண்டுகளையும், தாராளமாக அவர்களிடையில் எறிந்து தள்ளினார்கள்.

இவைகளுக்கு இணையாக பால்மாக்குகள் பட்டாஸ் வெடிக்கட்டுகளையும் கொழுத்திப் போட்டார்கள். மரங்களில் கட்டியிருந்த ஒலிபெருக்கிகளிலிருந்து குண்டு வெடிப்புச் சத்தங்கள் ஒலிபரப்பு நாடாக்களிலிருந்து ஒலிபரப்பப்பட்டன. இயற்கையான செயற்கையான வெடிச்சத்தங்கள் சேர்ந்து காது செவிடுபடும்படி பயங்கரத்தையூட்டின. தோப்பின் இருகரைகளையும் தாக்கி எதிரிகளை அழித்து விட பீரங்கிகளை இயக்கும்படி ஆணையிட்டான். பரபரப்படைந்திருந்திருந்த அரபு பீரங்கி இயக்கும் வீரர்கள், தங்கள் பரபரப்பில் அரைவாசி வேட்டுக்களை தங்கள் டக்கத்து ஆட்கள் நடுவிலேயே தீர்த்தனர். இறுதியாக ஒரு பால்மாக் இயந்திரத் துப்பாக்கியை மௌனமாக்குவதில் வெற்றி கண்டனர்.

முன்னணியில் வந்த அரபுப்படையினர் முற்றாகச் சிறுடிக்கப்பட்டாலும், அவர்கள் தொடர்ந்து வந்து கொண்டேயிருந்தார்கள். அவர்கள் எந்த அளவுக்குத் தூண்டிவிடப்பட்டிருந்தார்கள் என்றால் தற்போதைய அவர்களின் தாக்குதல் சித்த சுவாதினமற்ற ஒருவன் பயத்தால் தாக்குவது போலிருந்தது.

இரண்டாவது இயந்திரத்துப்பாக்கி அதன் சுடுகுழல் எரிந்துபோனதால் செயலிழந்தது. பால்மாக்குகள், குறைவது போல்தோன்றாத தாக்குதலுக்கு எதிராக, தங்கள் நிலைகளைக் கைவிட்டுக் கான்டப்னாவுக்குள் பின்வாங்கினார்கள். அரபுக்களின் தாக்குதல், ஒழுங்கு குலைந்து விட்ட ஓவமிட்டுக் கொண்டே ஓடிவரும் சிறு சிறு கும்பல்களின் அளவுக்கு குறைந்து கிராமத்தின் எல்லையிலிருந்து நூறு யார் வரை வந்துவிட்டது. டேவிட் பென் அமி, அரண்களாலும், மண்சாக்குகளாலும் பாதுகாக்கப்பட்ட ஹங்கேரி தாங்கி எதிர்ப்புப் பீரங்கியை மூடியிருந்தவற்றை எடுத்து விட்டான். அதன் குண்டுகள் தற்போது மறுசீர் அமைக்கப்பட்டு, முன்சென்று வெடிக்கும் பகுதிக்குள் ஒவ்வொன்றிலும் இரண்டாயிரம் ரவைக் குண்டுகள் நிரப்பப்பட்டிருந்தன. அந்தப் பீரங்கி மட்டும் சரியாக இயங்கி விட்டால், ஒரு பீரங்கித் தொகுதியில் இருந்து ஒரே நேரத்தில் பீரங்கிகளை இயக்குவது போலிருக்கும்.

முன்னணியில் வெறியோடு வந்து கொண்டிருந்த அரபுக்கள் கும்பல் ஐம்பது யார் வரை சமீபமாக வந்து விட்டனர்... நாற்பது... முப்பது .. இருபது...

மிக அருசாமையில் வைத்துப் பீரங்கியைக் குறிபார்த்துக் கொண்டிருந்த பென் அமியின் முகத்தில் வியர்வை பொங்கி வழிந்தது.

பத்துயார்...

''முதலாவதைச் சுடு!''

அந்தப் புராதனமான தாங்கி எதிர்ப்புப் பீரங்கி. நிலத்திலிருந்து ஒரு முறை துள்ளி எதிரே ஓடி வந்தவர்களின் முகங்களில் குண்டுகளை உமிழ்ந்தது, இரத்தத்தை உறைய வைக்கும் அலறல்கள் புகையோடு கலந்து எழுந்தன. அவற்றுக்கூடாகத் திரும்பவும் குண்டைச் செம்மையாக மாட்டியபடியே டேவிட், கும்பல் கும்பலாக இறந்தோ, காயமடைந்தோ, பீரங்கியிலிருந்து சில யார்கள் தூரத்தில் வீழ்ந்து கிடந்த எதிரிகளைக் கண்டான். மற்றவர்கள் அதிர்ச்சியோடு பின்வாங்கி ஓடினார்கள்.

முதலாவதைத் தொடர்ந்து இரண்டாவது கும்பல் வந்தது.

''இரண்டாவதைச் சுடு மூன்றாவதைச் சுடு',

பீரங்கியியின் குழாய் பீரங்கியிலிருந்து வெடித்துப் பறந்தது. பீரங்கி செயலற்றுப் போனாலும், தன் பங்கை ஆற்றிவிட்டது. மூன்று வெடிப்புகளில், தோட்டாக் குண்டுகள் நிரம்பிய அதன் குண்டுகள் இருநூறு வரையான எதிரிகளைப் பலிவாங்கிவிட்டது. தாக்குதலின் தீவிரம் மட்டுப்படுத்தப்பட்டு விட்டது.

கடைசியாக ஒருமுயற்சி மேற்கொள்ளப்பட்டது. நூறுவரையான அரபுக்கள் கான்டப்னாவின் எல்லை வரை வந்தனர். அவர்கள், ஜோர்தானா பென்கானாவின் அகழி வெட்டிப் பதுங்கியிருந்த கட்னா இளைஞர்களின் பரந்த தாக்குதலுக்குள்ளாயினர். நிலைகுழம்பி. இரத்தம் சிந்தச் சிந்த சாவு நிரம்பியிருந்த கணவாயின் ஊடாக தப்பிப் பிழைத்திருந்தவர்கள் பின்வாங்கத் தொடங்கினார்கள். அவர்கள், பின்வாங்கத் தொடங்கியதும், ஸெவ் ஜில்போவா தன்னைப் பின் தொடர்ந்து வரும்படி பால்மாக்குகளுக்கு ஆணையிட்டான். அந்த இடையன் நாற்பது பால்மாக் போராளிகளுக்குத், தலைமை தாங்கி பின்வாங்கி ஓடிக் கொண்டிருந்த பல நூறு அரபுக்களைத் துரத்திச் சென்றான். அவர்களைக் குன்றின் மேல் செல்லும் வரை துரத்தி, அப்பாலும் தொடர்ந்து விரட்டிச் செல்லத் தொடங்கினான்.

அரி, தனது கள தொலைகாட்டியினூடாகப் பார்த்தான். ''மடைச் சாம்பிராணி'' கத்தினான் அரி. ''அவன் எஸ்தர் கோட்டையைக் கைப்பற்றப் போகிறான். அவனைக்குன்றோடு நிற்கச் சொன்னேன்'' என்றான்.

''ஸெவ்வுக்கு என்ன நேர்ந்துவிட்டது?'' பல்லைக்கடித்தபடி உறுமினான் டேவிட். வாருங்கள் அவனை நிறுத்த முடியுமா என்று பார்ப்போம், கத்தினான் அரி.

அரி, களத்தில் சிதறிக்கிடக்கும் அரபு ஆயுதங்களைக் கட்னாப் பிள்ளைகளைக் கொண்டு சேகரித்துக் கொண்டு கான் டப்னாவுக்குள் சென்று விடுமாறு அவசர உத்தரவுகளை விடுத்தான்.

அவனது திட்டம். வெற்றியளித்து விட்டது. பதினைந்தே நிமிடங்களில் கிட்டத்தட்ட தன் ஆயுதபலத்தைச் செலவழித்துவிட்டான். ஆனால், காசியின் படையில் அரைவாசிப்பேர் மாண்டு போயோ காயமடைந்தோ வீழ்ந்து கிடந்தனர்.

தன்னுடைய ஆட்கள் கோட்டையை நோக்கிப் பின்வாங்கி ஓடிவருவதைக் காசி கண்டதும் குழப்பம் மேலோங்கியது. ஸெவ் ஜில்போவா மற்றைய பால்மாக்குகளிலிருந்து,இருபத்தைந்து யார் தூரம் முன்னேறி விட்டபோது அது சம்பவித்தது. எஸ்தர் கோட்டையிலிருந்த துப்பாக்கி வீரர்கள், விரட்டி வரும் பால்மாக் படையை நிறுத்தும் முயற்சிக்காக தங்கள் வீரர்களை நிறுத்தும் முயற்சியில் பின்வாங்கும் அவர்களை நோக்கிச் சுடத் தொடங்கினார்கள். சில அரபுக்கள் கோட்டையினுள் புகுந்து கொள்ள முடிந்தது. துரத்தி வரும் யூதர்களுக்குஅண்மையில் இருந்தவர்களை வெளியே விட்டுக் கதவுகள்பூட்டப்பட்டதோடு, அவர்களை நோக்கி வேட்டுக்களையும் தீர்த்தனர். கோட்டையில் இருந்து நாற்பது யார் தூரத்திலிருந்த முட்கம்பிச் சுருளை ஸெவ் கடந்திருந்தான். ''பாதுகாப்பு நிலையெடுங்கள்'' கத்திக் கொண்டே, ஸெவ் நிலத்தில் பாய்ந்து படுத்தபடி கோட்டையை நோக்கி. பால்மாக்குகள் துப்பாக்கி வீச்செல்லைக்கு அப்பால் செல்லும் வரை தன் ஸ்ரென் துப்பாக்கியை இயக்கிக் கொண்டிருந்தான். தனது தாக்குதல் பலனளிக்காது என்பதை உணர்ந்து கொண்ட அவன், திரும்பி குன்றின் சரிவில் ஊர்ந்து பின்னுக்கு வர முயற்சித்தான், கோட்டையில் இருந்து குண்டுமாரிஒன்று அவனைத் தேடி வந்தது. அவன் தாக்கப்பட்டான். அவன் எழுந்து ஓடியபோது திரும்பவும் குண்டடிபட்டு முட்கம்பியினுள் விழுந்து வசமாகச் சிக்கிக்கொண்டான். அ னால் அசைய முடியவில்லை. பால்மாக்குகள் பாதுகாப்பாக நிலையெடுத்த பின் முன்சென்று ஸெவ்வை மீட்டுவரும்முயற்சியில் ஆயத்தமானபோது அரியும் டேவிட்டும் அவர்களருகே வந்து சேர்ந்தனர்.

''ஸெவ் அங்கே. மூள்ளுக்கம்பியில் அகப்பட்டுக் கொண்டான். அரி பெரிய பாறையொன்றின் பின்னால் மறைந்தபடி மேலே நோக்கினான். வெறுமையான நிலப்பரப்பில் ஸெவ்விருக்கும் இடத்திலிருந்து நூறுயார் தூரத்திலிருந்தான். இடையில் பாதுகாப்பாக நிலையெடுக்கக் கூடிய பாறைகளிருந்தன. ஆனால்ஸெவ்வுக்கு அருகாமையில் எதுவும் இல்லாமல் வெறுமனே நிற்கவேண்டி வரும்.

திடீரென கோட்டையில் இருந்து வந்த வேட்டொலிகள் நின்றுபோக ஒரே அமைதியாயிற்று.

''என்ன நடக்கிறது?'' டேவிட் கேட்டான்.

''அவர்கள் ஸெவ்வை இரைபோல் பாவிக்கப் பார்க்கிறார்கள். அவனால் அசையமுடியாதென்று அவர்களுக்குத் தெரியும். நாங்கள் யாராவது மேலே வந்து அவனை மீட்க முயற்சிப்போம் என்று எதிர்பார்க்கிறார்கள்.''

''அந்த நாய்ப் பிறவிகள் ஏன் அவனை ஒரேயடியாகச் சுட்டு விஷயத்தை முடிக்கக் கூடாது?''

உனக்குப் புரியவில்லையா டேவிட். அவன் தனது றைபிளை இழந்து விட்டான். நாங்கள் போகுப்வரை காத்திருந்து விட்டு அவனை உயிரோடு பிடிக்க முயல்வார்கள் தாங்கள் இழந்த எல்லாருக்காவும் அவனில் பழி வாங்குவார்கள்.

''ஓ! என்னுடைய சடவுளே!'' டேவிட் அலுங்கினான். அவன் மறைந்திருந்த இடத்திலிருந்து பாயமுற்பட்டபோது அரி அவனை இழுத்துக் கீழே எறிந்தான்.

''யாராவது எனக்கு இரண்டு கைக்குண்டுகளைத் தாருங்கள். நல்லது. டேவிட் துருப்புகளைத் திரும்பவும் கான் டப்னாவுக்குள் அழைத்துச் செல்.''

''நீ அங்கே தனியே போகத் தேவையில்லை. அரி''

''மடையா, நான் சொன்னதைச் செய்.''

டேவிட், மௌனமாகத் திரும்பி, பின்வாங்குவதற்கான சைகையைக் கொடுத்தான். அவன் திரும்பிப் பார்த்தபோது அரி ஏற்கனவே ஸெவ்வை நோக்கிக் குன்றுகளிடையே மறைந்து மறைந்து ஓடிக்கொண்டிருப்பதைக் கண்டான்.

அரி மேலே வந்து கொண்டிருப்பதை அரபுக்கள் அவதானித்துக் கொண்டிருந்தனர். காயமடைந்தவனை மீட்க யாராவது வருவார்கள் என்று அவர்களுக்குத் தெரியும். அவன் கிட்டே வரும்வரை காத்திருந்து விட்டு அவனையும், காயப்படுத்த முயலவேண்டும்.

.. பிறகு யூதர்கள் இன்னொருவனை அனுப்புவார்கள் பிறகு இன்னொருவன்...

அரி எழுந்து வேகமாக ஓடிச் சென்று ஒரு பாறைக்குப் பின்னே பாய்ந்து படுத்தான். அரபுக்கள் சுடவில்லை. திரும்பவும் ஊரத் தொடங்கியவன் ஸெவ் அகப்பட்டுப் போய்க் கிடக்கும் இடத்திலிருந்து இருபதியார் தூரத்திலிருந்த பாறையொன்றின் பின்னால் போய்ச் சேர்ந்தான். தான் ஸெவ்வுக்கு அருகில் போய். தப்பமுடியாத இலக்காக மாறும் வரை, அரபுக்கள் சுடமாட்டார்கள் என்று அனுமானித்துக் கொண்டான்.

''திரும்பிப்போ! திரும்பிப்போ! ஸெவ் கத்தினான். அரி பாறைக்குப் பின்னிருந்து எட்டிப்பார்த்தான். ஸெவ்வைத் தெளிவாகப் பார்க்கக் கூடியதாக இருந்தது. அவன் முகத்திலும் வயிற்றிலும் இருந்து குருதி பெருகிக் கொண்டிருந்தது. அவன் முள்ளுக் கம்பியில் முற்றாகவே மாட்டிக் கொண்டிருந்தான். அரி நிமிர்ந்து எஸ்தர் கோட்டையைப் பார்த்தான். ஸெவ்வின் மீது குறிபார்த்துக் கொண்டிருந்த றைபிள்களின் முனைகள் சூரிய ஒளியில் மினுங்கிக் கொண்டிருப்பதைக் கண்டான்.

திரும்பிப்போ! திரும்பவும் கத்தினான் ஸெவ். ''என் குடல்கள் வெளியே தொங்கிக் கொண்டிருக்கின்றன- பத்து நிமிடம் கூட உயிர்வாழ மாட்டேன். நீ திரும்பிப் போய் விடு!''

அரி தனது இடுப்புப்பட்டியிலிருந்து இரண்டு கைக்குண்டுகளையும் கழற்றி எடுத்தான்.

''ஸெவ் நான் சில கைக்குண்டுகளை உன்னை நோக்கி வீசப்போகிறேன்.'' ஜெர்மன் மொழியில் கத்தினான் அரி. அரி கைக்குண்டுகளின் வெடிக்க வைக்கும் ஆணியை (Pin) கவனமாக உள்ளே தள்ளி அவை வெடிக்காத வண்ணம் செய்து விட்டுக் கொண்டான். அவன் விரைவாக எழுந்து நின்று அக்குண்டுகளை ஸெவ்வை நோக்கி வீசினான். ஒரு குண்டு ஸெவ்வுக்கு அருகாமையிலேயே போய் விழுந்தது.

ஸெவ் அக்குண்டை எடுத்துக் கிழித்திருந்த தன் வயிற்றருகில் பிடித்துக் கொண்டே, ''நான் எடுத்துக் கொண்டு விட்டேன். நீ திரும்பிப்போ!'' என்றான்.

அரபுக்கள், அரி ஸெவ்வை நோக்கி வருவான் என்று எதிர்பார்த்திருக்க அவர்களை ஏமாற்றி விட்டுக் கிழ்நோக்கி விரைவாக ஓடிச்சென்றான். அப்படியும் அவர்கள் சுடத் தொடங்கியபோது துப்பாக்கிகளின் வீச்செல்லையைத் தாண்டிக் கான்டப்னாவை நோக்கி விரைந்து கொண்டிருந்தான்.

ஸெவ் ஜில்போவா இப்போ தனித்திருந்தான். அவன் உடலிலிருந்து உயிர் மெது மெதுவே பிரிந்து கொண்டிருந்தது. அரபுக்கள் அரை மணி நேரம் வரை ஏதாவது தந்திரங்கள் செய்யக்கூடும் எனக் காத்திருந்தார்கள். வேறொரு யூதன் அவனைக் காக்க வரக்கூடும் என்று எதிர்பார்த்தார்கள். அவனை உயிரோடு கைப்பற்ற விரும்பினார்கள்.

எஸ்தர் கோட்டையின் கதவுகள் திறந்தன. கிட்டத்தட்ட முப்பது அரபுக்கள் ஸெவ்வைச் சூழ்ந்து வளைத்துப் பிடிக்க இறங்கி ஓடிவந்தார்கள்.

ஸெவ், கைக்குண்டின் பாதுகாப்பு ஆணியைத் திருகி வெளியே எடுத்து இழுத்துவிட்டு, தன் தலைக்குக்கிட்டே அதனை அணைத்துப் பிடித்துக் கொண்டு, வெடிக்க வைக்கும் சுரண்டி போன்ற பகுதியை பறக்க விட்டான்.

அரி அந்த வெடிப்புச் சத்தத்தைக் கேட்ட, அதே இடத்திலேயே செயலற்று நின்று விட்டான். அவனது முகம் வெளிறிப்போக அவனது காயமடைந்த கால் அவனைத் தாங்க முடியாது போல் செயலிழந்து போனபோது, அவனது இதயம் அதிர்ந்தது. அவன் தொடர்ந்தும் கான்டப்னாவை நோக்கித் தவழ்ந்தபடி சென்றான்.

அரி தனது கட்டளைப் பணியக காப்பரணிலே தன்னந் தனியனாக உட்கார்ந்திருந்தான. அவனது முகம் ஒரு மெழுகுப் பொம்மையினது போல் இறுகிப்

போயிருந்தது. கன்னத்தில் இடைக்கிடை துடித்துக் கொண்டிருந்த தசை நார்கள் தான் அவனில் உயிர் இருப்பதைக் காட்டிக் கொண்டிருந்தன. அவனுடைய கண்கள் கருவளையம் சூழ்ந்திருந்த குழிகளிலிருந்து மந்தமான முறையில் சூனியத்தை வெறித்துக் கொண்டிருந்தன.

யூதர்கள் இருபத்திநாலு பேரை இழந்திருந்தார்கள். பதினொரு பால்மாக் பையன்கள், மூன்று பால்மாக் யுவதிகள், ஆறு வளாக ஊழியர்கள், நான்கு குழந்தைகள் ஆகியோரே அவர்கள். இன்னும் இருபத்திரெண்டு பேர் காயமடைந்திருந்தார்கள். மொகமட் காசியின் இழப்புகள், கொல்லப்பட்ட நானூற்றிப் பதினெட்டுப் பேரையும் காயமடைந்த நூற்றி எழுபது பேரையும் உள்ளடக்கியிருந்தது.

காசி இன்னொரு தாக்குதலை கான்டப்னா மேல் செய்ய முயற்சிக்க யோசிக்காத அளவு ஆயுதங்களை அன்று யூதர்கள் கைப்பற்றி இருந்தார்கள் ஆயினும், எஸ்தர் கோட்டையும் அபுயேஷாவுக்கூடான பாதையும் இன்னும் அவர்களது கட்டுப்பாட்டிலேயே இருந்தன.

கிற்றி பிறமென்ற் காப்பரணுக்குள் வந்தாள். அவளும் களைப்பின் எல்லையில் இருந்தாள். ''அரபுக்களின் இறந்த, காயமடைந்த ஆட்களில், நீங்கள் விசாரணை செய்ய விரும்பியவர்கள் தவிர்ந்த ஏனையோர் அபுயேஷாவுக்குக் கொண்டு செல்லப்பட்டு விட்டார்கள்'' என்றாள்.

அரி தலையை ஆட்டிவிட்டு ''எங்களுடைய காயப்பட்டவர்கள் எப்படி?''

''இரண்டு பிள்ளைகள் பிழைப்பார்கள் போல்தோன்றவில்லை. மற்றவர்கள் பிரச்சினையில்லை. இந்தாருங்கள் உங்களுக்காக கொஞ்சம் பிராந்தி கொண்டு வந்திருக்கிறேன்.'' என்று நீடினாள் கிற்றி.

''நன்றி.. மிக்க நன்றி.'' அரி அதனை உறிஞ்சிக் குடித்துவிட்டு மௌனமாகவே அமர்ந்திருந்தான்.

''நான் ஸெவ்வின் உடைமைகளை இங்கே கொண்டு வந்திருக்கிறேன். அதிகமில்லை... ஏதோ கொஞ்சம்...சொந்தப் பாவனைப் பொருட்கள்தான்.''

''ஒரு கிபுட்ஸ்காரனிடம் தனதென்று அதிகம் இருப்பதில்லை. அவனது உயிர் உட்பட அவனிடமிருக்கும் எல்லாமே வேறு யாருக்கோதான் சொந்தமாயிருக்கின்றன.'' குரலில் குத்தல் இழையோடக் கூறினாள்.

நான் ஸெவ்வை மிகவும் விரும்பினேன். நேற்றிரவுதான் அவன் மீண்டும் ஆடுகளை மேய்க்கப்போகும் நேரத்தை ஆவலுடன் எதிர்பார்த்திருப்பதாகச் சொன்னான். எப்படியோ .. அவனது மனைவி இந்தப் பொருட்களை பெற விரும்பலாம்.. அவள் தாய்மையடைந்திருக்கிறாள், உங்களுக்குத் தெரியும்தானே.''

''ஸெவ் ஒரு அடி முட்டாள்....எஸ்தர் கோட்டையைப் பிடிக்கப்போனது அவனுக்குத் தேவையில்லாத வேலை.''

ஸெவ்வின் மிகக் குறைந்தளவு பொருட்களைச் சுற்றிக் கட்டியிருந்த துணியைத் தூக்கி அவைகளைப் பார்த்தான். ''ஐயோ நல்லதொரு பெண். இதைத் தாங்கிக் கொள்வாள்'' என்று கூறிய அரி, ஒரு கைலேஞ்சியில் சுற்றப் பட்டிருந்த அவனது உடைமைகளை எரிந்து கொண்டிருந்த அடுப்பினுள் தூக்கி எறிந்தான். ''அவனை ஈடு செய்வது எனக்குக் கஷ்டமான காரியமாயிருக்கும்.''

கிற்றியின் கண்கள் குறுகிக் கொண்டன. ''அப்போ அதுதான் உன்னை யோசிக்க வைக்கிறது. அவனை ஈடுசெய்வது. கஷ்டமாயிருக்கப்போகிறதே என் பதுதான் உன் கவலையெல்லாம் அல்லவா?''

அரி எழுந்து நின்று ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டான். ''ஸெவ்வைப் போன்ற வீரர்களை, மரங்களில் பழங்களை உருவாக்குவதுபோல் உருவாக்கமுடியாது.''

''நீ எதையுமே நெஞ்சார நேசிக்க மாட்டாயா?''

''கிற்றி எனக்குச் சொல். உன் கணவன் ''குடால்கனால்'' யுத்தத்தில் இறந்தபோது அவனது கொமாண்டர் என்ன செய்தார்? அவன் சடலத்தை காவல் காத்துத் துக்கம் கொண்டாடிக் கொண்டா இருந்தார்?''

''அது சிறிது வித்தியாசமான சந்தர்ப்பம் என்று நினைக்கிறேன். அரி குழந் தைப் பருவத்திலிருந்தே ஸெவ்வை நீ அறிவாய். அந்தப்பெண், அவனுடைய மனைவி யாட் எல்லைச் சேர்ந்தவள். அவள் உன்னுடைய பண்ணையிலி ருந்து இரண்டு பண்ணைகளுக்கு அப்பால்தான் வளர்ந்தவள்.''

''நீ என்னை என்ன செய்யச் சொல்கிறாய்?''

''அந்தப் பெண்ணுக்காகவாவது சிறிது கண்ணீர் விடேன்.'' ஒரு கணம் அரியின் முகத்தில் சுருக்கமேற்பட்டது. உதடுகள் நடுங்கின. ஆனால் முகம் திரும்பவும் பழையபடி இறுகிக் கொண்டது.

''போரில் வீரர்கள் இறப்பதைப்பார்ப்பது ஒன்றும் புதிதான விஷயமில்லை. நீ வெளியே போ.''

அத்தியாயம் ஏழு

ஷாபெட்டின் முற்றுகை 1947 கார்த்திகை 29 ம் திகதி நடந்த பிரிவினை பற்றிய வாக்கெடுப்புக்கு ஒரு நாள் பிந்தி ஆரம்பமாயிற்று.

1948இன் இளவேனிற்காலத்தில் எதிர்பார்த்தபடி ஷாபெட்டை விட்டுப் பிரிட்டிஷார் விலகியபோது மூன்றுமுக்கிய நிலைகளை அரபுக்களிடம் கையளித்திருந்தனர். யூத குடியிருப்புகளை எதிர் நோக்கியிருந்த பொலிஸ்நிலையம், நகரையே கண்காணிக்கக் கூடிய நிலையிலிருந்த பாதுகாப்பு அரண்பகுதி, நகருக்கு வெளியேயிருந்த கானான் மலையின் ராக்காட் கோட்டை என்பவையாகும்.

ஷாபெட் தலை கீழாக வைக்கப்பட்டிருந்த ஒரு கூம்பு போலிருந்தது. மேலே, கீழே, பக்கவாட்டுகள் எங்குமே அரபுக்கள் நிரம்பியிருந்த இந்தக் கூம்பின் எட்டிலொரு பகுதியில் மட்டும் யூதர்கள் குடியிருந்தனர்.

யூதர்களிடம் இங்கே அரைவாசி பயிற்றுவிக்கப்பட்ட இருநூறு ஹகானா ஆட்கள் இருந்தனர். இங்கிருந்து வெளியேற மறுத்ததும் கடைசி ஆள் வரை போரிட்டு மடியப் போவதாக அறிவித்ததும், புராதன ஹீப்ருக்களின் மனப்பான்மையை ஒத்திருந்தன. தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்வதில் குறைந்தளவு திறன் கொண்டிருந்த சபாலிஸ்டுகள், முன்பு முதியின் கலவரங்களில் முக்கியமான இலக்குகளாக இருந்தனர். ஆனால், இப்போது எதிர்த்துப் போரிட்டு மரணத்தைத் தழுவ ஆயத்தமாக இருந்தனர். வளைந்து வளைந்து செல்லும் ஒடுங்கிய ஒழுங்கைகளைக் கொண்ட யூத குடியிருப்புகளில் நிறைந்திருந்தவர்களிடையே வியத்தகு மனோதிடம், உத்வேகம் குடியேறியிருந்தது.

பிரிட்டிஷார் போய் ஒரு நாளைக்குப் பின், அரி, ஜோவாப் யார்க்கோனியை, முப்பது பால்மாக் இளைஞர்களுடனும், இருபது பால்மாக் யுவதிகளுடனும் ஷாபெட்டுக்குள் இரகசியமாக அனுப்பிவிட்டான். அவர்களுடைய வருகை அங்கே மிகுந்த கோலாகலத்தை ஏற்படுத்தியது. அது ஒய்வுநாளாக இருந்தது. ஆனால் யார்க்கோனியின் துருப்புக்கள் வீரோதமான பிராந்தியங்களூடாக மிகுந்தகஷ்டப்பட்டு வந்து களைத்துப்போயிருந்தார்கள். மிகுந்த பசியுடனுமிருந்தார்கள். பல நூற்றாண்டு காலங்களில் முதல் தடவையாக, சபாத் ஒய்வுநாள் பழக்கத்திற்கு மாறாக' சபாலிஸ்டுகள் வந்து சேர்ந்திருந்த உதவிப் படைக்குச் சூடான உணவைச் சமைத்து வழங்கினார்கள்.

மூப்திக்கான தற்காலிக தலைநகரமாக ஷாபெட்டை ஒழுங்கு பண்ண விளைந்த காவுக்ஜி, அந்நகரத்தின் யூதபகுதியைத் தாக்கிக் கைப்பற்றுமாறு

கூலிப்படையினருக்கு உத்தரவிட்டான். அரபுக்கள் இதற்கான சில முயற்சிகளில் ஈடுபட்டாலும், தோற்கடிக்கப்பட்டு விரட்டப்பட்டனர். வீட்டுக்கு வீடு, அறைக்கு அறை போரிட்டே ஷொபெட்டைக் கைப்பற்ற முடியும் என்று உணர்ந்து கொண்ட அரபுக்கள், தங்கள் முடிவை மாற்றி தூர இருந்தே குறி பார்த்துச் சுடுவதிலும், முற்றுகை உத்தியிலும் ஈடுபட்டார்கள்,

யூதர்களுக்கு றெமிஸ்சும், யார்க்கோனியும் தலைமை தாங்கினார்கள். பிரிகேடியர் சுதர்லாண்ட் காலான் மலையிலிருந்த தன் மாளிகையை விட்டு விட்டு வந்து றெமிஸ்சின் தொராட்டலில் தங்கியிருக்கும் ஒரேயொரு விருந்தாளி யாக மாறிவிட்டார். இடைக்கிடை அவரிடம் ஆலோசனைகளைக் கேட்டுப் பெற்றுக் கொண்டாலும், அவரது உதவியில்லாமலே யூதர்கள் மிகத் திறமை யாக செயல்படுவதாக அவர் ஒத்துக்கொண்டிருந்தார்.

சுடுவதற்கு வாகான ஒரு பரப்பை வெளியாக்கும் வேலையை றெமிஸ் தன் முதல் வேலையாக எடுத்துக் கொண்டான். யூத வசிப்பிடங்களும், அரபு வசிப்பிடங்களும் மிக நெருக்கமாக அமைந்திருந்ததால் அரபு ரோந்துக்கள் மிக இலகுவாக இவைகளுடாக நுழைந்து தலையிடி கொடுத்ததோடு ஏற்சனவே பலவீனமாயிருந்த பாதுகாப்பு ஏற்பாடுகளை மேலும் விஸ்தரிக்கப்பண்ணினார்கள். தனது படைகளுக்கும், அரபுக்களுக்கும் இடையே இடைவெளியொன்று இருப் பதை அவன் விரும்பினான். யார்க்கோவி சிறு பிரிவொன்றுடன் சென்று எல்லைப் புறங்களில் அமைந்திருந்த ஒரு டசின் வீடுகளைக் கைப்பற்றி அவற்றி லிருந்து சுடத் தொடங்கினான். அதன் பின் அங்கிருந்து பின்வாங்குவான். அரபுக்கள் திரும்பி வரும் ஒவ்வொரு முறையும், யார்க்கோனி அதே வீடுகளைக் கைப்பற்றி விடுவான். இதனால் வெகுண்ட அரபுக்கள், அந்த வீடுகளை யூதர்கள் பயன்படுத்தாமல் தடுப்பதற்காக அவ்வீடுகளை டைனமற் வெடிமருந்து வைத்துத் தகர்த்து விட்டார்கள். றெமிஸ் விரும்பியிருந்ததும் அதுதான். இந்த இரு பிரிவுச்சுமிடையே ஏற்பட்ட இடைவெளி யூதருக்குத் தெளிவாகப் பார்க்கக் கூடியவசதியையும், இலகுவான பாதுகாப்பு வழங்கக் கூடிய வாய்ப்பையும் அளித்தது.

இது பூர்த்தியானதும், றெமிஸ்கம், யார்க்கோணியும் இரண்டாவது உத் தியைக் கையாளத் தொடங்கினர். யார்க்கோனி இருபத்தினாலு மணி நேரமும் ரோந்துகளை அனுப்பி அரபுக்களுக்குத் தொல்லை கொடுக்கத் தொடங்கி னான். ஒவ்வொரு நாளும் இரண்டு மூன்று ரோந்துகளை, குழப்ப மூட்டக் கூடிய குறுகிய பாதைகளுடாகவும், கூரைகள் மேலாகவம் அரபுப். பிரிவினுள் அனுப்பி வந்தான். அவனுடைய பிரிவுகள் தாக்கிவிட்டு ஓடும் தாக்குதல்களினை ஒவ்வொரு முறையும் வெவ்வேறு இடங்களில் செய்து வந்தார்கள். அரபுக்கள் எங்காவது ஒரு இடத்தில் தங்கள் பலத்தைக் குவித்தால் அதுபற்றி உளவாளி கள் மூலம் அறிந்து கொள்ளும் யூதர்கள், எந்த இடத்தைத் தாக்கவேண்டும் என்றும், எந்த இடங்களைத் தவிர்க்க வேண்டும் என்றும் நன்றாக உணர்ந் திருந்தார்கள். அடிக்கடி குத்துகளை அள்ளிவீசும் குத்துச் சண்டைக்காரன் போல், பகல் நேர ரோந்துப் பிரிவுகள் அரபுக்களைக் குழப்பமடையச் செய்தன.

அரபுக்களுக்கு மேலும் சினமூட்டியவை பால்மாக்கின் இரவு ரோந்துப் பிரிவுகள் தான். யார்க்கோனி மொராக்கோவில் வாழ்ந்திருந்ததால், தன் எதிரியைப் பற்றி நன்றாகவே அறிந்திருந்தான். அரபுக்கள் ஒரு மூட நம்பிக்கை கொண்டவர்களாக இருந்ததோடு, இருளைப்பற்றி அளவு கடந்த பயத்தைக் கொண்டிருந்தார்கள். யார்க்கோனி இருளை மேலதிக துருப்புக்களைப் போல் பயன்படுத்தினான். இரவு ரோந்துகளில் வெறுமனே பட்டாஸ்களைக் கொழுத்திப் போடுவதால், அரபுச் சனங்கள் பயப்பிராந்தியில் ஆழ்ந்து வந்தார்கள்.

தங்களுடைய உத்திகளெல்லாம் வேறு வழியின்றி செய்யப்படுபவை என்பதை றெமிஸ்சும், யார்க்கோனியும் ஒத்துக்கொண்டே இருந்தார்கள். உண்மையான பாதிப்பை ஏற்படுத்த அவர்களின் பலம் போதாமலிருந்ததோடு, அரபுக்களின் ஆட்பலம், நிலைகளின் பலம், ஆயுதங்களின் பலம் ஆகியவை அவர்களைப் பாதிக்கத் தொடங்கியிருந்தது. ஹகானா அல்லது பால்மாக் போர் வீரன் ஒருவனை இழந்துவிட்டால், அவனை மாற்றீடு செய்வது முடியாத காரியம். வெடிமருந்துகளின் தட்டுப்பாட்டால் ஒரு ரவையையாவது வீணாகச் செலவழிக்கும் ஹகானா அல்லது பால்மாக் வீரர்களுக்குத் தண்டம் விதிக்கப் பட்டது.

அவர்கள் பாதிக்கப்பட, பாதிக்கப்பட, தங்களின் ஒவ்வொரு அங்குல நிலங்களையும் பாதுகாத், தோடு மனநிலையை, உற்சாகத்தை ஒரு போதும் இழக்கவில்லை. ஒரேயொரு வானொலி மட்டுமே வெளியுலகத்துடன் அவர்களுக்கிருந்த தொடர்பாயிருந்தது. ஆனால், பாடசாலைகள் நேரத்துக்கு நடந்தன. சிறிய செய்திப் பத்திரிகை ஒரு பதிப்பைக் கூடக் கைவிடவில்லை. பத்தியானவர்கள் சின்னகோக் செல்லும் ஒரு நிமிடத்தைக் கூடக் கைவிடவில்லை. ரோந்துகள் மூலம் வெளியே அனுப்பப்படும் கடிதங்களில், கைகளால் வரையப்பட்ட முத்திரைகள் ஒட்டப்பட்டிருந்தாலும், பலஸ்தீனம் முழுவதும், முழுயிசுவ்விலும் அவை ஏற்றுக் கொள்ளப்பட்டன.

மூற்றுகை, முழு முன்பனி, பின்பனிக் காலங்களுக்கூடாகவும் நீடித்தது. இறுதியாக, யார்க்கோனியும், சுதர்லாண்டும், றெமிஸ்சும் உள்ள நிலைமையை ஆராய கூடினர். தங்களில் திறமையாகப் போராடக்கூடிய ஐம்பது பேரை யூதர்கள் இழந்திருந்தார்கள். மா கையிருப்பு கடைசி பன்னிரண்டு சாக்குகளுக்கு இறங்கியிருந்தது ஐந்து நாட்களுக்கு கூட போதாத வெடிமருந்துகளே இருந்தன. தனது ரோந்துப் பிரிவினர்களுக்கு வழங்கப் பட்டாஸ்கள் கூட யார்க்கோனியிடமிருக்கவில்லை. இந்தப் பலவீனத்தைத் தெரிந்து கொண்ட அரபுக்கள், நாளுக்கு நாள் துணிவு கொண்டனர்.

"எமது பிரச்சினைகளைக் கூறி, அரிக்குத் தொல்லை தரமாட்டேன் என்று வாக்குறுதியளித்திருந்தேன். ஆனால், இப்போ எயின் ஓர் போய் அவனைச் சந்திக்கத்தான் வேண்டும். வேறு வழியில்லை." யார்க்கோனி முடிவெடுத்துக் கொண்டான். அன்றிரவே ஷாபெட்டிலிருந்து இரகசியமாகப் புறப்பட்டு அரியின் தலைமைச் செயலகத்துக்குச் சென்றான்.

ஷாபெட்டின் நிலைமையைப் பற்றி ஒரு பூரண விபரத்தை அரிக்கு தெரியப்படுத்தினான். அவன் முடிவாக, உன்னைத் தொல்லைப்படுத்த நான்

விரும்பவில்லை, அரி. ஆனால் இன்னும் மூன்று நாட்களில் நாங்கள் எலிகளைத் தின்னத் தொடங்க வேண்டி வரும்'' என்றான்.

அரி உறுமலை வெளியிட்டான். ஷாபெட்டின் உறுதியான நிலை முழு யிசுவ்வுக்கு முன்மாதிரியாயிருந்தது. அது தற்போது யுத்த மூலோபாய முக்கி யத்துவம் வாய்ந்த நிலையென்பதிலிருந்து, பெறுமதி மிக்க, எதிர்ப்புகளுக்குப் பணைய மறுத்தலின் சின்னமாக மாறியிருந்தது. ஷாபெட்டை நாங்கள் வெல்ல முடிந்தால், முழு கலிலியிலும் அரபுக்களின் உள உரத்தை உடைத்துவிடலாம்.

''அரி, ஒவ்வொரு முறையும் ஒரு ரவையைச் சுடும்போது, அதைப்பற்றி ஒரு விவாதமே நடத்துகிறோம்.''

''எனக்கொரு யோசனை தோன்றுகிறது. என்னோடு வா.''

அரி, ஷாபெட்டுக்குள் உணவுப் பொருட்களைக் கொண்டு செல்ல, ஒரு அவசர இரவு ரோந்தொன்றை ஆயத்தப்படுத்திவிட்டு. ஜோவாப்பைக் கூட்டிக் கொண்டு ஆயுதக் களஞ்சியமொன்றுக்குக் கூட்டிச் சென்றான். உள்பக்க அறை யொன்றில் இருந்த வினோதமான வடிவம் கொண்டிருந்த இரும்பு, நட்டுகள், ஆணிகள், கொண்டு செய்யப்பட்டிருந்த ஒரு பொருளை ஜோவாப்புக்கு அரி காட்டினான்.

''இது என்ன சாமான்?'' ஜோவாப் கேட்டான்.

''ஜோவாப் நீ ஒரு 'டேவிட்' காவைப் பார்த்துக் கொண்டிருக்கிறாய்.''

''ஒரு டேவிட்காவா?''

''ஆமாம். ஒரு சிறிய டேவிட், யூத திறமையால், கையால் உருவாக்கப் பட்டது.''

ஜோவாப், தன் முகவாயைச் சொறிந்து கொண்டான். ஒரு வகையில் இது ஒரு ஆயுதம் போல் தோன்றுவதாகச் சொல்லலாம். ஆயினும், இப்படி யான ஆயுதம் ஒன்று வேறெங்குமில்லை, என்பது பற்றி ஜோவாப் நிச்சயமாக இருந்தான்.

''இதனால் என்ன செய்யக்கூடும்?''

''இது மோட்டார் ஷெல்களைச் சுடக்கூடியது. என்று என்னிடம் சொன் னார்கள்,''

''எப்படி?''

''நாசமாய்ப்போக. எனக்கெப்படித் தெரியும். இதை இன்னும் பயன் படுத்திப் பார்க்கவில்லை. ஆனால், இது மிகவும் வலிமையான செயல்பாடு டையது. என்று ஜெருசலேமிலிருந்து ஒரு அறிக்கை வந்துள்ளது.''

''அரபுக்களுக்கா அல்லது யூதர்களுக்குச் சார்பாகவோ?''

''ஜோவாப் நான் என்ன செய்யப்போகிறேன் என்று உனக்குச் சொல்கி றேன். இந்த ஆயுதத்தை ஒரு பொருத்தமான சந்தர்ப்பத்திற்காக ஒதுக்கிவைத் திருந்தேன். இதை உனக்குத் தருகிறேன். இதை ஷாபெட்டுக்கு எடுத்துச் செல்'' ஜோவாப் அந்த விசித்திரமான உருவம் கொண்ட இயந்திரத்தைச் சுற்றிப் பார்த்து விட்டு. ''ஒரு போரை வெல்லுவதற்காக நாங்கள் எத்தனை விடங் களைக் கையாளவேண்டியுள்ளது'' என்றான்.

அவசரப் பங்கீட்டுணவுகளை ஷாபெட்டுக்குள் கொண்டுவந்த இரவு ரோந் துப்பிரிவு டேவிட்காவையும் முப்பது றாத்தல் வெடிமருந்துகளையும் கொண்டு வந்து சேர்த்தது, அவன் வந்து சேர்ந்ததும், ஜோவாப், ஏ கானாவினதும், பால்மாக்கினதும் கொமாண்டர்களை அழைத்து டே விட்கா எப்படி இயங்கும் என்பது பற்றி முழு இரவும் கலந்துரையாடினார்கள். பத்துப்பேர் அங்கே கூடி யிருந்தார்கள். பத்துவிதமான அபிப்பிராயங்கள் முன் வைக்கப்பட்டன. கடைசி யாக யாரோ பிரிகேடியர் சுதர்லாண்டைக் கூப்பிட்டுக் காட்டுவோம் என்று அபிப்பிராயப்பட்டார்கள்.

பிரிகேடியர் சுதர்லாண்ட் ஹோட்டலில் துயிலெழுப்பப்பட்டு, இழுத்து வரப்படாத குறையாக தலைமையகத்துக்கு அழைத்து வரப்பட்டார். அவர், டேவிட்காவை நம்ப முடியாமல் பார்த்துக் கொண்டேயிருந்தார்.

''யூதரைத் தவிர வேறு ஒருவரும் இப்படியான ஒன்றைத் தயாரிக்க மாட்டார்கள்'' என்று கடைசியில் அபிப்பிராயம் சொன்னார்.

''இது ஜெருசலேமில் திறமையாக இயங்கியதாகச் சொன்னார்கள்''என் றான் ஜோவாப் மன்னிப்புக் கேட்கும் குரலில்.

பிறகு ஒருமணிநேரம் வரை சுதர்லாண்ட் அதிலிருந்த கைப்பிடிகள், நெம்பு கோல்கள். ஆளிகள், குறிபார்க்கும் இடங்கள் என்பவற்றோடு விளையாடிக் கொண்டிருந்தார். அடுத்த ஒரு மணி நேரத்தில் எல்லோருமாகச் சேர்ந்து அதனை இயக்க வைக்கக் கையாளவேண்டிய ஒழுங்குகளைப் பற்றியதொரு முடிவுக்கு வந்தார்கள். அதன்படி அது வெற்றிகரமாக இயங்கவும் கூடும், இயங்காமலும் விடக்கூடும்.

அடுத்த நாள் காலையில் டேவிட்கா, துப்பரவு செய்யப்பட்ட ஒரு வெளி யான இடத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. அரபுக்கள் வசமிருந்த பொலிஸ் நிலையத்தினதும், அதனை அண்டி குறிபார்த்துச் சுடுவதற்கான நிலைகளாக அரபுக்கள் பாவித்து வந்த சில வீடுகளினதும் பொதுவான திசையை நோக்கிய படி வைக்கப்பட்டது.

டேவிட்காவின் ரவைச்சுற்றும் அதைப்போலவே வினோதமான தோற் றத்தைக் கொண்டிருந்தது. அது ஒரு மரச் சுத்தியலைப்போல் தோற்றத்தைக் கொண்டிருந்தது. தலைப்பகுதி, இருப்புக் குழாயொன்றினுள் டைனமைற் வெடி மருந்தையும் வெடிக்க வைக்கும் கருவிகளையும் கொண்டிருந்தது. சிறிது, தடித்த

கைப்பிடி மோட்டாரின் குழாய்க்குள் செல்ல வேண்டும். பீரங்கி இயக்கப்பட்டதும், விசையோடு வெளிவரும் கைபிடி சமன்படுத்தப்படாத இந்த வெடி பருந்துத் தொகையை உந்தித் தள்ளும் என எதிர்பார்த்தார்கள். சுதர்லாண்டே இது சில அடிகள் தூரம் சென்று தங்கள் முன்னாலேயே வெடித்து விடுமோ என்று கவலைப்பட்டார்.

''இதனுள்ள வெடிமருந்து பீரங்கிக் குழாயின் முடிவில் விழுந்து வெடித்தால், அப்படித்தான் நடக்கும் என்று, நம்பிக்கையுடன் நான் எதிர்பார்க்கிறேன். ஷாபெட்டின் முழு யூத சனத்தொகையையும், நாம் இழக்கவேண்டி நேரிடும்'' என்றார் சுதர்லாண்ட்.

''அப்படியானால் ஒரு நீண்ட கயிற்றைக் கட்டி பாதுகாப்பான தூரத்திலிருந்து இதனை இயக்கிப் பார்ப்போம்'' என்றான் றெமிஸ்.

''இதை எப்படிக் குறி நோக்க வைப்பது?'' யார்க்கோனி கேட்டான். இதை குறிநோக்க வைப்பது அதிகம் பிரயோசனப் படப்போவதில்லை. பொதுவான திசையில் குறிபார்த்து இயக்கிவிட்டு நடப்பவை நல்லவையாக இருக்கட்டும் என்று பிரார்த்தனை செய்ய வேண்டியதுதான்.

பிரதான ராபியும், வேறு பல சபாலிஸ்டுகள், அவர்கள் மனைவிமார் ஆகியோர் டேவிட்காவைச் சுற்றி இது தங்கள் எல்லோருக்கும் அழிவு. நாளை கொண்டு வந்து சேர்த்திருக்கிறதா? இல்லையா? என்பது பற்றி விவாதம் நடத்தினார்கள். இறுதியாக, பிரதான ராபி அதன்மேல் விசேட இறைஆசி வழிபாட்டை நடத்தி, மெசியானவ தாங்கள் சட்டிட்டங்களுக்கு அமைந்து நடந்ததால், தங்களைக் கருணையுடன் காப்பாற்றும்படி வேண்டிக் கொண்டனர்.

''சரி நாம் இதை இயக்கிப் பார்த்து விடுவோம்'' என்றான் றெமிஸ் நம்பிக்கையற்ற குரலில்.

கபாலிஸ்டுகள் பாதுகாப்பான தூரங்களுக்குப் பின்வாங்கிக் கொண்டனர். வெடித்துப் பறக்க வைக்கும் பகுதி (Firing Caps) குழாயின் அடிப்பகுதிக்குள் தள்ளப்பட்டு அதற்குரிய குண்டும் தூக்கி உள்ளே செருகப்பட்டது. டைனமற் நிரம்பியிருந்த குழாய் பீரங்கியின் குழாய்க்கு வெளியே பயமூட்டும் விதத்தில் நீட்டிக் கொண்டிருந்தது. வெடிக்கவைக்கும் சாதனத்திற்கு (Firing Mechanism) ஒரு நீண்ட கயிறு இணைக்கப்பட்டது. எல்லோரும் பாதுகாப்பான நிலைகளை எடுத்துக்கொண்டனர். நிலம் ஒரு கணம் ஸ்தம்பித்தது. ''அதை இயக்கு'' யார்க்கோனி சிறிது நடுங்கிய குரலில் உத்தரவிட்டான்.

றெமிஸ் கயிற்றை உதறி இழுத்தான். புதினமான ஒரு காரியம் நடந்தது, சிறிய டேவிட் வெடித்துக் குண்டை வீசியது. கைபிடி போல் இருந்த பகுதி. பீரங்கிக் குழாய்க்கு வெளியே இரைந்தபடி வெளியேற டைனமற் நிறைந்திருந்த பகுதி சுழன்றபடி குன்றுகளை நோக்கி கைபிடிப் பகுதி அதற்கு மேலிருக்க பறந்து சென்றது. அது காற்றைக் கிழித்துக் கொண்டு, சிறிதாகி, சிறிதாகி சென்ற போது வினோதமான ஒரு ஸ் ... ஸ் ... ஸ் என்ற பயங்கர சீறலுடன்

சென்றது. பொலிஸ் நிலையத்துக்கு அருகில் இருந்த ஒரு அரபு வீட்டிற்குள் உடைத்துக் கொண்டு போய்விழுந்தது.

சுதர்லாண்டின் வாய் வியப்பினால் பிளந்து தொங்கியது. கீழ் நோக்கிக் கொண்டிருந்த யார்க்கோவியின் மீசை மேலே போயிற்று. றெமிசின் கண்கள் தெறித்து வெளியே விழுந்து விடும் போலிருந்தது. வயது முதிர்ந்த கபாலிஸ்டுகளோ பிரார்த்திப்பதை நிறுத்திச் சிறிது நேரம் வியப்போடு பார்த்தார்கள்.

விழுந்த ஷெல் இடிமுழக்கம் போல் பயங்கரச் சத்தத்துடன் வெடித்து நகரின் அத்திவாரத்தையே அசைத்தது. குன்றுப்பகுதியின் அரைவாசி தகர்ந்து பறந்து போய் விட்டது போல் தோன்றியது. அதிர்ச்சியால் ஏற்பட்ட மௌனம் ஒரு கணம் நிலைபெற்றது. அதைத்தொடர்ந்து மகிழ்ச்சிக் கோஷங்களும், அணைத்துக் கொள்ளலும், முத்தமிடுதலும், நன்றிப் பிரார்த்தனை நிகழ்த்துவதும், மகிழ்ச்சியாரவாரம் செய்வதும் நிகழ்ந்தது.

''ஜோவின் மீது ஆணையாக ... (உரோமாபுரியின் முக்கிய தேவதை) ஜோவின் மீது ஆணையாக ...'' அவ்வளவு தான் சுதர்லாண்டினால் சொல்ல முடிந்தது.

பால்மாக்குகள் சிறிய டேவிட்டைச் சுற்றி ஹோரா வளையம் ஒன்றில் இணைந்து அதைச் சுற்றிச் சுற்றி நடனமாடினர்.

''வாருங்கள் இன்னோர் சுற்றைச் சுடுவோம்.'' யூதர்களின் உற்சாகக் குரல்கள் அரபுப்பகுதியிலும் கேட்டன. ஏனென்றும் அவர்களுக்குப் புரிந்திருந்தது. குண்டு வெடிக்கும் சக்தத்தை ஒரு பக்கம் விட்டாலும், இந்த பறக்கும் குண்டு வரும்போது எற்படுத்தும் சத்தமே ஒருவனைப் பயப்படுத்திக் கொல்லப் போதுமானதாக இருந்தது. பலஸ்தீனிய அரபுக்களோ, அல்லது கூலிப்படையினரோ இப்படியான ஒரு நிலைமைக்குத் தயாராக தாக்குதலில் ஈடுபட வரவில்லை.

ஒவ்வொரு முறையும் சிறிய டேவிட் இயக்கப்பட்டதும் அங்கே குழப்ப நிலைமை தலைதூக்கியது. நூற்றாண்டுகால கொடுமைகள் சிலவற்றுக்கு யூதர்கள் பழிவாங்கிக் கொண்டிருந்த அதே சமயத்தில், அரபுக்கள் பயந்து நடுங்கிக் கொண்டிருந்தனர்.

டேவிட்கா அரபுக்களுக்கு மிகுந்த கலக்கத்தைக் கொடுத்துக் கொண்டிருப்பது பற்றி யார்க்கோனி, அபிக்குச் செய்தியனுப்பியிருந்தான். அபி, நல்ல தொரு வாய்ப்பு வந்திருப்பதை உணர்ந்து, அதைப் பயன்படுத்தும், ஆபத்தான முடிவு ஒன்றை எடுத்தான். ஒவ்வொரு குடியேற்றங்களிலிருந்தும் சிலரை எடுத்து இரு ஹகானா கொம்பனிகள் வரை சேர்த்தெடுத்துக் கொண்டான். இவர்களை இரவில், டேவிட்காவுக்கு மேலதிக வெடிமருந்துகளுடன் ஷாபெட்டுக்குள் கூட்டிச் சென்றான்.

... ஸ்விஷ் ... ஹூம்!

ஆணிகளால் பூட்டப்பட்டிருந்த பீரங்கியும் அதன் இரைச்சலோடு செல்லுப் குண்டும் நகரத்தை அழித்துக் கொண்டிருந்தன.

... ஸ்விஷ் ஹூம் ... !

டேவிட்கா ஷாபெட்டுக்கு வந்து மூன்றாம் நாள். வானம் பொத்துக் கொண்டு மழை பொழிந்தது. திட்டமிட்ட பட்ட புழுகுகளில் இந்த யுத்தத்தின் ஆகத் திறமையான புழுகு ஒன்றை அப்போது தான் இன்னொரு ஆயுதமாகப் பிரயோகித்தான். அரி பென் கானான்.

அரபு உளவாளிகள் எல்லோரையும் றெமிஸ் இடம் சொல்லி ஒன்று சேர்த்து அவர்களுக்கு விளக்கம் ஒன்றை அளித்தான்.

அவர்களோடு அரபில் உரையாடியபடி சொன்னான். ''உங்களுக்கு இது வரையில் தெரியாதிருந்தால் இதோ கேட்டுக் கொள்ளுங்கள். எங்களிடம் ஒரு இரகசிய ஆயுதம் இருக்கிறது. இதனுடைய தன்மையைப் பற்றி தகவல்களை வெளிவிட எனக்கு அதிகாரமில்லை. ஆனால், ஒன்றை மட்டும் சொல்ல முடியும். அணுகுண்டு வெடிப்புக்குப் பிறகு கடும் மழை பெய்வது உங்கள் எல்லோருக்கும் தெரியும்தானே?'' மேலும் அதிகமாக நான் சொல்லத் தேவையில்லை தானே?'' என்றான்.

சில நிமிடங்களுக்குள்ளாகவே, இந்த உளவாளிகள் சிறிய டேவிட் ஒரு ரகசிய ஆயுதம் என்ற கதையைப் பரப்பிவிட்டார்கள். ஒரு மணி நேரமாகும் முன்னரே ,ஷாபெட்டின் ஒவ்வொரு அராபியனின் வாயிலும், ஒரே வசனம் தான் இருந்தது.

''யூதர்கள் அணுக்குண்டு வைத்திருக்கிறார்கள்.''

''... ஸ்விஷ் ஹூம்?''

சிறிய டேவிட் திரும்பவும் முழங்கத் தொடங்கியது. மழையும் உரமாகப் பெய்யத் தொடங்கியது. அங்கே பீதி பரவத் தொடங்கியது. இரு மணித்தியாலங்களுக்குள்ளாகவே, ஷாபெட்டில் இருந்து செல்லும் வீதிகள், பீதியோடு ஓடும் அரபுக்களால் நிறைந்து விட்டன.

அரி பென் கானான் முன்னூறு பேர் கொண்ட ஹகானா அணியொன்றுக்குத் தலைமை தாங்கி தாக்குதல் ஒன்றை மேற்கொண்டான். இந்தத்தாக்குதல் தானாகவே உண்டான உத்வேகத்தினால் நடாத்தப்பட்டதேயொழிய திட்டமிடப்பட்டதல்ல. இதனால், சில கூலிப்படையினரும், சில கோபமூற்று இருந்த ஷாபெட் அரபுக்களுமாகச் சேர்ந்து பாதுகாப்பு அரண் அருகே செல்ல முடியாமல் தடுத்து விட்டனர். ஆனால் ஷாபெட்டின் சனத்தொகை என்னவோ ஓடிக்கொண்டு தான் இருந்தது.

மூன்று நாட்களின் பின், ஷாபெட் அரபு சிவிலியன் குடிமக்கள் இல்லாமல் வெறுமையாகி விட்ட நிலையிலும் நூற்றுக்கணக்கான கூலிப்படையினர் தங்கள் அணிகளைவிட்டுச் சொல்லாமல் கொள்ளாமல் ஓடிவிட்ட நிலையிலும், அரி பென் கானன், நெமிஸ், ஜோவாப் யார்க்கோனி மூவரும் நன்றாகத் திட்டமிடப்பட்ட மும்முனைத்தாக்குதல் ஒன்றை மேற் கொண்டு பாதுகாப்பு அரணைக் கைப்பற்றினர்.

நிலைமைகள் தலைகீழாக மாற்றப்பட்டு விட்டன. யூதர்கள் அரபு பொலிஸ் நிலையத்தை விட உயரமான இடத்தில் இப்போது இருந்தனர். பல வருடக்கணக்காக சபாலிஸ்டுகளை துன்பப்படுத்தியும், படுகொலை செய்தும் வந்தவர்கள், போராட வேண்டிய ஒரு வாய்ப்புக்குள் தள்ளப்பட்டார்கள். ஆனால் அவர்களோ யூதர்களின் ஆக்ரோஷத்தின் முன் நிற்க முடியாமல் ஓடிக்கொண்டிருந்தனர். பொலிஸ் நிலையமும் வீழ்ந்தது. உடனடியாகவே அரி, நகரில் இருந்து வெளியேறி கானான் மலையிலிருக்கும் பாரிய ராக்காட் கோட்டையில் இருந்து வரக்கூடிய எதிர்த்தாக்குதலைத் தடுக்க வெளியே விரைந்தான். இக் கோட்டை தான் அரபுக்களின் நிலைகளிலே பலமானதாயிருந்தது. ஆனால் கோட்டைக்குச் சமீபமாக வந்து சேர்ந்தபோது திகைப்பில் கைப்பற்ற முடியாத ராக்காட் கோட்டையும், அரபுக்கள் கைவிட்டு ஓடிவிட்டதைக் கண்டு வியப்படைந்தான் அவன் கையில் வந்ததும் ஷாபெட்டை வெற்றி கொள்ளுதல் பூரணமாய் நிறைவேறிற்று.

ஷாபெட்டில் பெற்ற வெற்றி பிரமாண்டமானதாயிருந்தது. பலவீனமான, பாதுகாப்பது கடினம் என்று கருதப்பட்ட நிலைகள் யாவும் பாதுகாக்கப்பட்டிருந்ததோடு, பாதுகாப்பிலீடுபட்டவர்கள் சில நூறு போராளிகளையும், டேவிட் எனப்பட்ட மாயாஜால ஆயுதத்தையும் கொண்டு முழு நகரத்தையுமே கைப்பற்றி இருந்தார்கள்.

இந்த வெற்றி எப்படிக் கிடைத்தது என்பது பற்றிய வாதங்களும், கலந்துரையாடல்களும். நடைபெற்றன. ஷாபெட்டின் சபாலிஸ்டுகளும் இதில் பிரிந்தே நின்றனர். அஸ்கெனாளிம் (Ashkenazim) அல்லது ஐரோப்பிய சித்தாந்தப் பிரிவின் ராபி ஹெயிம் இதற்கு தெய்வீக தலையீடே காரணம் என்பதில் உறுதியாக இருந்தார். இந்தத் தலையீடு ஜோப் (Job) இல் பின்வருமாறு முன்னறிவிக்கப்பட்டிருந்ததாகவும், கூறினார்.

> ''அவன் தன் வயிற்றை நிரப்பி ஆயத்தமானபோது, கடவுள் தன்கோபத்தின் உக்கிரத்தை அவன்மீது திருப்புவார். அவன் உணவருந்திக் கொண்டிருக்கும் போது அவ்வுக்கிரத்தை அவன்மீது பொழிவார். அவன் இரும்பு ஆயுதத்திற்குப் பயந்து ஓடுவான்...''

ஷெப்பார்டிக் (SePhardic) அல்லது கீழைத்தேய சித்தாந்த வகுப்பைச் சேர்ந்த ராபி மெயிர் ராபி ஹெயும்மின் கூற்றை மறுத்தார். எசெக்கியேல் ஆகமத்தில்கூறப்பட்டிருந்தது போல்தான் தெய்வீக தலையீடு இருந்தது என்று கூறினார்.

''அந்தப் பேரொலியிலே உன் சுவர்கள் அசைக்கப்படும் .. உடைக்கப்பட்ட சுவர்களுடைய நகரம் ஒன்றினுள் மனிதர்கள் நுழைவது போல் உன் வாசலால் அவர் நுழைவார்... உன்னுடைய பலமான படையணி மண் ணோடு மண்ணாகும்...''

புரூஸ் சுதர்லாண்ட் கானான் மலையிலிருந்த தன் மாளிகைக்குத்திரும்பிப் போனார். அரபுக்கள் அதனைச் சீரழித்திருந்தனர். அவருடைய அழகான ரோ ஜாப் பூந்தோட்டத்தை மண்ணோடு மண்ணாக மிதித்து அழித்திருந்ததுடன், கதவு தைப்பிடிகள் உட்பட சகல பொருட்களையும், திருடிக்கொண்டு போயி ருந்தார்கள். அதைப்பற்றி சுதர்லாண்ட் சிறிதும் கவலைப் படவில்லை. ஏனெனில், இவையெல்லாம் மீள நிர்மாணிக்கப்படலாம். அவரும், யார்க்கோனியும், றெமிஸ் சும்அவரதுபின் விறாந்தைக்கு வந்து,பள்ளத்தாக்கின் மேலாகஷாபெட்டைநோக்கி னார்கள் அவர்கள் அதிகளவு பிராந்தியை அருந்திவிட்டு கிளுகிளுக்கத் தொடங்கி னார்கள்.

அவர்களோ, வேறு யாருமோ அதுவரை அறியாதிருந்த ஒருபுதிய துன்பியல் அத்தியாத்தை ஷாபெட்டிலிருந்து வெருண்டு ஓடும் மக்கள் தொடக்கி வைத்தி ருந்தார்கள். அரபு அகதிகளின் உருவாக்கம் இங்கேதான் தொடங்கியது. கலிலியின எங்கேயோ ஓரிடத்தில் ஒரு பாவனையிலிருந்து அகற்றப்பட்ட லிபரேற்றர் குண்டு விச்சு விமானமொன்று, தொண்டர்களான தென ஆபிரிக்கர்களாலும், அமெரிக் கர்களாலும் செலுத்தப்பட்டு ஒரு சோடி நீல நிற வெளிச்சங்களைத் தீதியபடி வந்து கொண்டிருந்தது.

இந்த வெளிச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டு சில டோர்ச் வெளிச்சங்கள் ஓடுபாதையைக் காண்பிக்க குருட்டாட்டப் போக்கில் விமானத்தை அங்கே இறக்கினார்கள். பள்ளங்கள் நிறைந்திருந்த ஓடுபாதையில் கடுமையாக முட்டி மோதித் துள்ளி வழுக்கிக் கொண்டே போய் நின்றது விமானம். விமானத்தின இயந்திரங்கள் விரைவாக நிறுத்தப்பட்டன.

ஆட்கள் கும்பல் கும்பலாக வந்து விமானத்தைச் சூழ்ந்துகொண்டு விமா னத்திலிருந்த பொருட்களை இறக்கி அதனைக் காலியாக்கினார்கள். முதல் முதல் வந்த இந்தப் பொதிகளிலே, மிகவும் நவீனமான ஆயுதங்கள் இருந்தன றைபிள்கள், இயந்திரத் துப்பாக்கிகள்,மோட்டார்கள், லட்சக்கணக்கான ரவைகள் போன்றவை விமானத்தின் இடை, வால்பகுதிகளிலும், மாற்றியமைக்கப்பட்டி ருந்த குண்டுகள் வைக்கும் பகுதியிலுமிருந்து விரைவாக இறக்கப்பட்டன. அங்கு வேலை செய்துகொண்டிருந்தவர்கள், சில நிமிட நேரத்தில் லிபரேற்றரைவெறு மையாக்கிவிட்டார்கள்.

பத்துப் பன்னிரெண்டு ட்ரக்குகளில் இவற்றை ஏற்றிவிட அவை அதே தொகையான வெவ்வேறு பாதைகளில் பிரிந்து சென்றன. ஒரு டசின் கிபுட்சு களில் கட்னா இளைஞர்கள் இந்த ஆயுதங்களை சுத்தம் பண்ணி, போராடிக் கொண்டிருக்கும் குடியேற்றங்களுக்கு அனுப்புவதற்காக, தயார்நிலையில் காத்துக் கொண்டிருந்தார்கள். விமானம், மறுபக்கம் திருப்பப்பட்டு, மயிரிழை மேலே

மூம்புதல் ஒன்றன்பின் இன்னொரு தொகுதி ஆயுதங்களைக் கொண்டு வருவ தற்காக ஐரோப்பாவுக்கு பறந்து சென்றது.

அந்தப் பகுதியில் விமானம் ஒன்று வந்திறங்கியதாக அரபுக்களால் தெரி விக்கப்பட்ட குற்றச்சாட்டைத் தொடர்ந்து அடுத்தநாள் காலையில் பிரிட்டி ஷார் அதைப்பற்றி ஆராய அங்கு வந்தனர். விமானம் வந்ததற்கான தடயங்கள் எதையும் அவர்கள் காணமுடியவில்லை. அரபுக்கள் அளவுக்கு மீறிக் கற்பனைக் செய்வதாக அவர்கள் முடிவு செய்து கொண்டனர்.

நான்காவது, ஐந்தாவது தொகுதிகள் வந்து சேர்ந்த நேரத்துக்கு யூதர்கள் வெற்றி மேல் வெற்றியாகக் குவிக்கத் தொடங்கியிருந்தார்கள். கலிலி கடலின் அருகில் இருந்த நிபேறியாஸ், யூதர்களிடம் வீழ்ச்சியடைந்திருந்தது. மாபெரும் கௌர் ராக்காட் கோட்டையை யூதர்கள், கைப்பற்றி திரும்பத் திரும்ப ஈராக் கிய கூலிப்படையினர் மேற்கொண்ட எதிர்த் தாக்குதல்களிலிருந்து அதைக் காத்து வைத்துக் கொண்டிருந்தனர்.

ஷாபெட்டின், வீழ்ச்சியுடன் யூதர்கள் கலிலியிலிருந்து எதிர்ப்பு மனப் பான்மையுடைய, அரபுக் கிராமங்களை அகற்றிவிடும் நோக்கிலமைந்த நன் றாகத் திட்டமிடப்பட்டு ஒருங்கிணைக்கப்பட்ட வலிந்து தாக்கும் திட்டமான இரும்புத் துடைப்பத்தை (Operation Iron Broom) செயல் படுத்தினார்கள். இந்த நடவடிக்கைகளில் இயந்திரத் துப்பாக்கிகள், பூட்டிய ஜீப்புகள் ரவைகளை வாரியிறைத்த வண்ணம் கிராமங்களுக்குள் புகுந்து கிராமவாசிகளைப் பீதியினால் ஓடவைத்தன. ஷாபெட்டின் அரபு மனத்திடத்தில் பெரிய விரிசலொன்றை விழப்பண்ணி, இரும்புத் துடைப்ப நடவடிக்கைக்கு ஒரு உளவியல் ரீதியான மேலாதிக்கத்தையும் கொடுத்தது.

அப்போதைக்கு உள்ளூரில் பல வெற்றிகளை பெற்றிருந்த ஹகானாவினர், தங்களால் வெற்றிகரமாக, வலிந்து தாக்குதல்களை நடத்த முடியும் என்ற துணி. வோடு, முக்கியமான துறைமுகமான ஹைபாவைக் காப்பாற்றும் முயற்சியிலீடு படலாயினர்,

கார்மேல் மலையின் சரிவுகளில் இருந்து ஒவ்வொன்றும், அரபுக்களின் ஒவ்வொரு பலமான இடங்களை குறிவைத்து, நான்முனைத் தாக்குதல் ஒன் றிற்காக ஹகானாவினர் இறங்கி வந்தனர், ஊர்காவல் படையினர், சிரிய லெபனானிய, ஈராக்கிய கூலிப்படையினர்களைக் கொண்ட அரபுப் படையினர், பலமான பாதுகாப்பு அரண்களை அமைத்துக் கொண்டு ஆரம்பத்தில் சமரைச் சமாளித்தனர். துறைமுகப் பகுதியை இன்னும் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த பிரிட்டிஷார் யூதர்களின் தாக்குதலை நிறுத்த, போர் நிறுத்தத்திற்குப் பின் போர் நிறுத்தமாக அறிவித்து கடும் முயற்சியின் பின் கைப்பற்றிய அருமையான கேந்திர இடங்களையும், பறித்துக் கொண்டனர்.

ஒரே சீராக வந்து கொண்டிருந்த யூதர்களின் தாக்குதல்களை அரபுக்கள் தொடர்ந்து நன்றாகவே சமாளித்துக் கொண்டிருந்தனர். ஆனால், சண்டை உச் சக்கட்டத்தை அடைந்தபோது, அரபுக் கொமாண்டரும், அவனது முழு அதிகா

ரிகள் முழுவினரும் மெதுவாக வெளியேறி ஒடிப்போய் விட்டனர். அரபுக்களுடைய எதிர்ப்பு மிகவும் மனோதிடமிழந்து முற்றாகவே முறிந்து போனது. யூதர்கள், அரபுப் பகுதிகளினுள் நுழைந்து கொண்டிருந்தபோதே பிரிட்டிஷார் இன்னொரு போர் நிறுத்தத்தை அறிவித்தார்கள்.

இந்த நிலைமையில் திடீரென ஒரு விசித்திரமான சம்பவம் நிகழ்ந்தது. எல்லோருக்கும் வியப்பளிக்கக் கூடிய வகையில், அரபுக்கள் திடீரென முழு அரபு சனத்தொகையும் தங்கள் இடத்தை விட்டு வெளியேற விரும்புவதாக அறிவித்தனர். ஷாபெட்டிலும் வேறு கிராமங்களிலும் நிகழ்ந்த, அதே விசித்திரமான நிகழ்வு முறையே இங்கும் நிகழ்ந்தது. ஒருவரும் பின்னால் துரத்தி வராமலே முழு அரபுச் சனத்தொகையும், தலைதெறிக்க லெபனான் எல்லையை நோக்கி ஓடியகாட்சி, ஒரு புதிரான சம்பவமாயிருந்தது.

அசதிகள் நிரம்பியிருந்த முழு அரபு நகரமான ஆக்ரேயும், மூன்று நாள் நீடித்த அரைமனதான பலவீனமான எதிர்ப்புக்கு பிறகு ஹகானாவிடம் வீழ்ந்தது. இந்தத் தொற்று நோய், அரபு நகரான ஜாபாவுக்கும் (Jaffa) பற்றிக் கொண்டது. இங்கே மத்திய பகுதியில் நிலைகொண்டிருந்த மக்கபீஸ்கள் தாக்குதல் ஒன்றை மேற் கொண்டு உலகின் அதி பழைய துறைமுகத்தைக் கைப்பற்றினார்கள். ஜாபாவின் அரபுக்கள் ஓடிப்போனார்கள்.

ஜெருசலேம் இடைவழியில் முக்கியமான உயர்ந்த இடமான காஸ்ரெல் இல் இருந்து யூதர்களைக் கலைப்பதில் அப்துல் காதர் வெற்றி பெற்றாலும், ஹகானாவினரும், பால்மாக்குகளும் உடனேயே எதிர்த் தாக்குதலை மேற் கொண்டு, அரபுக்களை அங்கிருந்து விரட்டி விட்டனர். காதர் தன் ஆட்களைத் திரும்பவும் அணி திரட்டிக் கொண்டு இன்னொரு முறை காஸ்ரெல்லைத் தாக்க முயற்சித்தான். அந்த முயற்சியிலே அவன் கொல்லப்பட்டான். மனத்திடத்தை இழந்திருந்த அரபுக்களுக்கு இருந்த நல்ல ஒரேயொரு கொமாண்டரும் கொல்லப்பட்டது பலத்த அடியாக இருந்தது.

1948 வைகாசி மாதம் வந்து சேர்ந்தது. பிரிட்டிஷார், தங்கள் துருப்புக்களை வெளியேற்றுவதை முற்றாக்கிப் பலஸ்தீனத்தில் தங்கள் அதிகாரத்தைக் கைவிட இன்னும் இரு வாரங்களேயிருந்தன.

எல்லைப் புறங்களிலே, எல்லையைக் கடந்து வெற்றி கொண்டுவந்த யூதர்களை அடக்கும் நோக்கில் பழிவாங்கும் மனோ நிலையிலான சிரிய,யெமன், லெபனான், ட்ரான்ஸ்-ஜோர்டான், எகிப்து, சவுதிஅரேபியா, ஈராக் ஆகிய நாடுகளின் இராணுவங்கள் தயாராக நின்று கொண்டிருந்தன.

சுதந்திரமான நாட்டைப் பிரகடனம் செய்வதா? செய்வதில்லையா? என்ற முடிவை எடுக்க வேண்டிய நேரம் நெருங்கி வந்திருந்தது.

O

அத்தியாயம் எட்டு

1947 கார்த்திகைக்கும், 1948 வைகாசிக்கும் இடையில் யூதர்கள் மிகக் குறைந்தளவு வசதிகளுடன், மிகப் பாதகமான நிலைமைகளுடன் போராடி, வெற்றி பெற்று ஒரு காத்திரமான செயலைச் செய்திருந்தார்கள். இந்தக் காலப் பகுதியில், அவர்கள் ஹகானாவை ஒரு தலைமறைவு இயக்கப் பிரிவு என்ற நிலையிலிருந்து ஒரு முறையான அமைப்புள்ளஇராணுவமாக வளர்த்தெடுப்பதில், வெற்றி கண்டிருந்தார்கள். புதிய துருப்புகளையும், அதிகாரிகளையும், பயிற்றுவித்து, யுத்த மூலோபாயங்களைப் பயிற்றும் பாடசாலைகள், கரந்தடித் தாக்குதலை, மரபுவழித் தாக்குதலாக மாற்றியமைப்பதற்கு வேண்டிய நூற்றுக்கு மேற்பட்ட விஷயங்களையும் ஒழுங்கு பண்ணியிருந்தார்கள்.

கைக்குண்டுகளை எறியும் பைப்பர் கப் விமான ஓட்டிகளைக் கொண்ட விமானப்படை, அமெரிக்க, பிரிட்டிஷ், தென்னாபிரிக்க விமானப்படைகளில் சேவையாற்றிய விமான ஓட்டிகளால் ஓட்டப்படும் சில ஸ்பிற்பயர்ஸ் விமானங்களை உள்ளடக்கும் அளவுக்கு வளர்ந்திருந்தது. கிரீச்சிடும் குடியேற்றக் கப்பல்களைக் கொண்டிருந்த கடற்படை இப்போ சில கோர்வெற் ரக கப்பல்களையும் ப. ரி. ரக படகுகளையும் உள்ளடக்கியிருந்தது.

ஆரம்பத்தில் இருந்தே, நிர்வாகம் ,தகவல் சேகரிப்பு-ஆய்வு தலைமைத்துவம் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை யூதர்கள் உணர்ந்திருந்தனர். ஒவ்வொரு நாளும் அனுபவங்களைப் பெற்றபடி இருந்தனர். அவர்கள் பெற்ற வெற்றிகள் நம்பிக்கையை வளர்த்தன. நாங்கள் சிறிதளவு முயற்சிகளை ஒழுங்கு செய்து ஒருங்கிணைக்க முடியுமென நிரூபித்தனர். ஜெருசலேமுக்கான வாகனத் தொடர்கள், இரும்புத் துடைப்பத் திட்டம், உள்ளூர் செயல் பாடுகள் என்பன அவற்றுள் சிலவாகும்.

சவாலை எதிர்நோக்கி வெற்றியும் பெற்றிருந்தனர். ஆயினும், போரிடுவதற்குப் பிரமாண்டமான ஆர்வமெதுவுமில்லாத எதிரியுடன், சிறியஅளவான யுத்தமொன்றிலேயே போரிட்டிருந்தார்கள் என்று அவர்களுக்குத் தெரிந்திருந்தது. அரபுக்களிடம் குறைந்தளவு ஒழுங்கமைக்கும், திறமையும், தலைமைத்துவப் பண்பும், நீண்டகால போர் ஒன்றை சகித்துக் கொள்ள முடியாத தன்மையும் இருந்தன. ஒரு மனிதனைப் போரில் ஈடுபடுத்தக் கூடிய மன, உடல் உறுதிகளை ஆளிக்க சுலோகங்களை விட அதிகமான ஏதாவது தேவையென்பதை அரபுக்களின் தோல்வி எடுத்துக்காட்டியது.

விமானங்கள் நிறைய வந்திருந்த சிறிய ரக ஆயுதங்கள் யிசுவ்வை காப் பாற்றியிருந்தன. முடிவெடுக்க வேண்டிய நேரம் நெருங்கியபோது, அத்தோடு கூட இருந்த இந்த சிறிய ரக ஆயுதங்கள், தாங்கிகள், பீரங்கிகள், நவீன விமா னப்படைகள் கொண்ட மரபு வழி இராணுவங்களுக்கு முகம் கொடுக்க வேண்டும் என்ற யதார்த்த நிலையும் தெளிவாகத் தெரிந்தது.

அரபு நாடுகள் வெறுமனே பூச்சாண்டி காட்டுகின்றன என்று நம்பிய பல ருக்கு, ட்ரான்ஸ் - ஜோர்தானின் அரபு லீஜன். கௌரவிக்க வேண்டிய ஒவ்வொரு அம்சத்தையும் வேண்டுமென்றே மீறியபோது, பயங்கரமான அதிர்ச்சி ஏற்பட்டது. லீஜன், பலஸ்தீனத்தில் .பிரிட்டிஷ் பொலிஸ் படையாகவே செயல்பட்டது. இந்த ''பிரிட்டிஷ்பொலிஸ்படை'' ஜெருசலேம் வீதியிலிருந்த தனிமைப்பட்டி ருந்த எற்சியோன் குழுக் குடியேற்றங்களுக்கு எதிராகப் பகிரங்கமாகவே நடவ டிக்கைகளை எடுத்தது.

எற்சியோன் குழுவில் இருந்த நான்கு கிராமங்களும், மற்றையயிசுவ்கிராமங் களைப் போலவே தங்கியிருந்து போராட முடிவெடுத்திருந்த பழைமைவாத யூதர்களைக் கொண்டிருந்தன. பிரிட்டிஷ் அதிகாரிகளால் தலைமை தாங்கப் பட்ட ட்ரான்ஸ்- ஜோர்தானின் அரபு லீஜன்படையினர், இரக்கமற்ற முறையில் நான்கு கிராமங்கள் மீதும் ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டு வெளியுலக உதவிகளிலிருந்து அவர்களை முற்றாகத் துண்டித்து விட்டனர்.

லீஜனின் முதலாவது இலக்கு, எற்சியோன் கிபுட்ஸ் ஆகத்தான் இருந்தது. கிபுட்சை தகர்த்த பிறகு, லீஜன் முற்றுகையினால் களைத்துப்போய், அரைப் பட்டினியோடிருந்த குடியேற்றவாசிகளைத் தாக்கினர். எற்சியோன் கிபுட்சின் பழைமைவாத யூதர்கள், கடைசிச் சுற்று ரவையும் சுடப்படும் வரை தாக்குப் பிடித்துவிட்டுத்தான் சரணடைந்தனர். லீஜனைத் தொடர்ந்து வந்த அரபுக் கிராம வாசிகள் ஏறக்குறையத் தப்பிப் பிழைத்த எல்லோரையும் படுகொலை செய்தார்கள். லீஜன் இந்தப் பயங்கர ஆட்கொலையைத் தடுக்க முயன்றாலும் முடிவில் நான்கு யூதர்கள் மட்டுமே உயிர் பிழைத்தனர்.

ஹகானா உடனடியாகவே சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கத்தை ரவை கள் முடியும் தறுவாயிலிருந்த மற்றை மூன்று எற்சியோன் குழுக் கிராமங்களின் சரணடைதலை மேற்பார்வை செய்யுமாறு கேட்டுக் கொண்டனர். இந்த நட வடிக்கையே அங்கேயும் படுகொலைகள் நிகழ்வதிலிருந்து தவிர்த்தது.

நெகெவ் பாலைவனத்தில், சாக்கடலின் அருகில், அரபு லீஜன் திரும்பவும் தாக்கியது.

உலகிலேயே மிகவும் உயரம் குறைந்ததும், உயர்வெப்பநிலை உடையது மான இடத்தில் யூதர்கள் நிர்மாணித்திருந்த கிபுட்சைத் தாக்கினார்கள். அது பெத் - ஹா - அறாவா, அதாவது வனத்தின் வீடு - என அழைக்கப்பட்டது.

முதுவேனிற்காலத்தில் நிழலான இடத்திலேயே நூற்றி இருபத்தைந்து பாகை வெப்பம் கொண்டது. யூதர்கள் இந்த இடத்துக்கு வந்த காலத்தில் உயிருள்ள எதுவும் இந்த உப்பு மணலில் வளர்ந்திருந்ததில்லை. அவர்கள் ஏக்கருக்குப் பின் ஏக்கராக மண்ணைக் கழுவி அதிலிருந்த உப்புகளை வெளியேற்றி, மிகவும் கஷ்டப்பட்டு, மழைநீரைத் தேக்க, அணைக்கட்டுகள், நீர் நிலைகள், வடிகால்கள் போன்றவற்றை நிர்மாணித்து, நவீன பண்ணையொன்றை கட்டி எழுப்பினார்கள்.

ஆக அண்மையில் இருந்த குடியேற்றம் தூறுமைல் தொலைவிலிருந்தாலும், தோற்கடிக்க முடியாத எதிர்ச் சக்திகளுக்கு எதிராகப் போராட வேண்டி இருந்ததாலும், பெத் - ஹா - அறாவா அரபு லீஜனிடம் சரணடைய வேண்டி ஏற்பட்டது. மனித சக்திக்கு அப்பாற்பட்ட உழைப்பால் தாங்கள் நிர்மாணித்த இந்த வனத்தின் வீட்டை விட்டு வெளியேறும் போது, யூதர்கள் தங்கள் வீடுகளுக்கும் வயல்களுக்கும் தாங்களே எரியூட்டி விட்டுச் சென்றார்கள். ஆகவே அரபுக்கள் பெத் - ஹா - அறாவா வனத்தின் வீட்டிலும், இரத்தத்தால் தோய்ந்திருந்த எற்சியோன் குழுவையும் வெற்றி கொண்டதன் மூலமும், இப்போதாவது தங்களுக்குத் தேவையாயிருந்த வெற்றிகளைப் பெற்றுக் கொண்டார்கள்.

போரினால் அல்லோலகல்லோலப்பட்டுக் கொண்டிருந்த ஜெருசலேமை விட்டு, பலஸ்தீனத்துக்கான பிரிட்டிஷ் உயர் ஸ்தானிகர் 1948 வைகாசி 13-ம் திகதி, மெதுவாக வெளியேறி விட்டார். அதிகார துஷ்பிரயோகத்தின் சின்னமாக இந்தப் பகுதிகளில் இருந்து வந்த, யூனியன்ஜாக் (பிரிட்டிஷ் தேசியக் கொடியின் பெயர்) கொடிக் கம்பங்களிலிருந்து நிரந்தரமாக அன்று இறங்கிக் கொண்டது.

1948 வைகாசி 14.

ரெல் அவிவில், யிசுவ் தலைவர்களும், உலக சியோனிஸ்ட் தலைவர்களும், நகரின் ஸ்தாபக உறுப்பினரும் முதல் நகர பிதாவுமான மெய்யிர் டிஸென்கொவ் வீட்டில் கூடியிருந்தனர். வீட்டுக்கு வெளியே ஸ்ரென் துப்பாக்கிகள், தாங்கிய காவலர்கள் சனக்கூட்டத்தைக் கட்டுப்படுத்தியபடி நின்றிருந்தனர். கெய்ரோவில், நியுயோர்க்கில், ஜெருசலேமில், பரிசில், லண்டனில, வாஷிங்டனில் பல கண்களும் காதுகளும் இந்த வீட்டை நோக்கித் திரும்பியிருந்தன.

''இது கொல் இஸ்ரேல்- (Kol Isreal)-இஸ்ரேலின் குரல்'' அறிவிப்பாளர் வானொலி நிலையத்திலிருந்து மெதுவாகச் சொன்னார். பிரிட்டிஷ் பொறுப்புகள் பலஸ்தீனத்தில் முடிவுக்கு வருவது பற்றிய ஆவணம் ஒன்று இப்பொழுதுதான் எனக்குக் கையளிக்கப்பட்டிருக்கிறது. அதை நான் உங்களுக்கு இப்போது வாசிக்கப் போகிறேன்.''

''அமைதியாயிருங்கள்! அமைதியாயிருங்கள்! டாக்டர் லிப்பர்மான் தன் கொட்டகையில் இருந்த பிள்ளைகளை அமைதிப்படுத்தினார். வானொலியில் அறிவிப்பாளர் குரல் தொடர்ந்தது. ''இஸ்ரேல் மண் யூதர்களின் பிறந்த மண். இங்குதான் அவர்களுடைய ஆத்மீக, மத, தேசிய அடையாளங்கள் உருவாக்கப்பட்டன. இங்கு அவர்கள் சுதந்திரத்தை அடைந்து, தேசிய, சர்வதேசிய

ரீதியில் முக்கியத்துவம் பெற்ற கலாசாரத்தை உருவாக்கினார்கள். இங்குதான் வேதாகமத்தை எழுதி உலகிக்குக் கையளித்தார்கள்.''

புரூஸ் சுதர்லாண்டும், ஜோவாப் யார்க்கோனியும் தாங்கள் றெமிசின் ஹோட்டலில் விளையாடிக் கொண்டிருந்த சதுரங்க விளையாட்டை நிறுத்திவிட்டு றெமிசோடு கூட வானொலிக்குச் செவிமடுத்தனர்.

''இங்கிருந்து நாடு கடத்தப்பட்ட யூதர்கள், தாங்கள் சிதறியடிக்கப்பட்டிருந்த எல்லா நாடுகளிலும் இருந்தபடியே அதற்கு விசுவாசமாக இருந்தார்கள். தாங்கள் திரும்பி அங்கே வருவதற்கும், தங்கள் தேசிய சுதந்திரத்தை மீள நிலை நாட்டுவதற்குமாகப் பிரார்த்தித்துக் கொண்டிருந்தார்கள்.''

பரிசில் வானொலிக் கருவியில் இரைச்சல் அந்தக் குரலை அழுத்திவிட, பராக் பென் கானானும், யிசுவ் முகவர்களும் அவசர அவசரமாகச் சரியான அலைவரிசையைத் தேடிப்பிடிப்பதிலும், வானொலியை ஓங்கித் தட்டுவதிலும் ஈடுபட்டனர்.

இந்தச் சரித்திர பூர்வமான இணைப்பால் உந்தப்பட்டு, நூற்றாண்டுகளாகத் தங்கள் பிதாப்பிதாக்களுடைய மண்ணுக்குப் போய், தங்கள் சொந்த அரசை நிர்மாணிக்கத் துடித்துக் கொண்டிருந்தார்கள். அண்மைய தசாப்தங்களில் அவர்கள் தொகையாகத் திரும்பி வந்தார்கள். அவர்கள் வனாந்தரங்களை மீளப் பயன்தரு பூமியாக்கித் தங்கள் மொழிக்குப் புத்துயிர் கொடுத்து, கிராமங்களையும், நகரங்களையும் நிர்மாணித்து, சொந்தப் பொருளாதார, கலாசார பலத்தில் நிற்கும், வளர்ந்து வரும் சமுதாயம் ஒன்றையும் உருவாக்கி இருக்கிறார்கள். அவர்கள் சமாதானத்தை நாடுகிறார்கள். ஆனால், தங்களைக் காப்பாற்றிக் கொள்ளப் போராடவும் தயாராயிருக்கிறார்கள். முன்னேற்றத்தின் ஆசீர்வாதத்தை எல்லா ஜனங்களுக்கும் கொண்டு வந்தார்கள்.....''

ஷாபெட்டில், கபாலிஸ்டுகள் இந்த வார்த்தைகள், புராதன தீர்க்க தரிசனங்களை நிறைவேற்றும் வகையில் இருக்கிறதா என்று கவனமாகப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஜெருசலேம் தொடர்புப் பாதையிலே நாய் போல் களைத்திருந்த ஹில்மென் பிரிகேட்டின் பால்மாக் போராளிகள் செவிமடுத்தனர். முற்றுகையால் தனிமைப் படுத்தப்பட்டிருந்த, சுட்டுப் பொசுக்குகின்ற வெப்பத்தோடிருந்த, நெகெவ் பாலைவனத்தின் குடியிருப்புகளிலும் கேட்டார்கள்,

'' ...இந்த உரிமை 1917 மார்த்திகை 2-ம் திகதிய பால்போர் பிரகடனத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்டது. சர்வதேச சங்கத்தின் பிரகடனமும் இதை மீள உறுதிப்படுத்தியது. இது ஒளிவு மறைவில்லா சர்வதேச அங்கீகரிப்பை வழங்கியது ...''

டேவிட் பென் அமியின் ஓர் கிபுட்சின் கொமாண்டர் அலுவலகத்தினுள் ஓடோடி வந்தான். அரி உதட்டில் விரலை வைத்துக் காட்டிவிட்டு வானெலியையும் சுட்டிக்காட்டினான்.

''..... அண்மையில் ஐரோப்பாவில் லட்சக்கணக்கான யூதர்களைப் பாதித்த பேரழிவுகள் இந்தத் தேவையைப் புதிதாக நிரூபித்தன..... ''

சாரா பென் கானான், பாட் எல்லில் இருந்து கேட்டுக் கொண்டிருக்கும் போதே பராக் பென் கானான் அரபு வெள் புரவியில் தன் செந்நிறத் தாடி தனது மேலங்கி மீது பறந்தபடியிருக்க றொஸ் பின்னாவுக்குள் வந்தபோது முதல் தடவையாக அவனைத் தான் கண்டதை ஞாபகப்படுத்திக் கொண்டான்.

யூத அரசொன்றை மீள உருவாக்குவது, எல்லா யூதர்களுக்கும் கதவுகளைத் திறந்து விடுவதோடு, உலக நாடுகளின் குடும்பத்தில் ஒரு சம அந்தஸ்தை யூத மக்களுக்குப் பெற்றுத் தரும்.

டொவ்வும், கரேனும் உணவுச் சாலையில் கைகளை மென்மையாகப் பற்றிக் கொண்டபடி ஒலிபெருக்கியில் சொல்லப்படுவதைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்

இரண்டாவது உலகப்போரின் போது பலஸ்தினத்தின் யூதமக்கள் தாங்கள் முழுதான பங்களிப்பைப் போராட்டத்துக்கு வழங்கினார்கள். 1947 கார்த்திகை 29 ம் திகதி ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்சபை பலஸ்தினத்தில் யூத அரசு ஒன்றை அமைப்பதற்கான பிரேரணையை ஏற்றுக் கொண்டது .... தங்கள் சுதந்திர அரசை அமைப்பதற்கு யூத மக்களுக்குள்ள உரிமை மறுக்கப்பட முடியாதது. மற்றைய நாடுகள் செய்வதைப் போலவே,சுதந்திரமான ஒரு நாட்டில் சுதந்திரமாக வாழுவது யூத மக்களின் இயற்கையான உரிமையாகும்.

''பலஸ்தினத்தில் யூத நாடொன்றை இத்தால் பிரகடனம் செய்கிறோம். இஸ்ரவேல் என்று அது அழைக்கப்படும்.''

கிற்றி பிறமென்ற் தன் இதயம் பலமாகத் துடிப்பதை உணர்ந்தாள் ஜோர்தானா புன்னகை புரிந்தாள்.

''தாங்கள் சிதறியிருக்கும் நாடுகளிலிருந்து குடியேறுவதற்கு யூதர்களை இஸ்ரவேல் அரசு அனுமதிக்கும். இங்கு வாழும் சகல மக்களின் நன்மைக்காவும், அபிவிருத்திகளை மேற்கொள்ளும். இஸ்ரேலின் தீர்க்க தரிசிகள் மொழிந்திருக்கும் வண்ணம் சுதந்திரம், நீதி, சமாதானம் ஆகிய தத்துவங்களின் அடிப்படையில். அமைந்திருக்கும். மத,இன, பால் வேறுபாடுகளைக் கடந்து தன் எல்லாக் குடிமக்களிலதும், சமூக, அரசியல் சம உரிமையைப் பாதுகாக்கும். மத, சிந்தனை கல்வி, கலாசார சுதந்திரங்களுக்கு. உத்தரவாதமளிக்கும். எல்லா மதங்களினதும், பரிசுத்த ஸ்தலங்களைப் பாதுகாக்கும். ஐக்கிய நாடுகள் சபையின் பட்டயப் பிரமானங்களின் சரத்துக்களை விசுவாசத்துடன் கடைப்பிடிக்கும் .....''

''...வேண்டுமென்றே செய்யப்படும் ஆக்கிரமிப்புக்கு மத்தியிலும், இந்த நாட்டின் ஆட்சி அமைப்புகளில், பூரண சம உரிமை கொண்ட பிரஜைகளாக, சமாதானத்தைப் பேணி நாட்டின் அபிவிருத்திக்கான பங்களிப்பை வழங்குமாறு, இங்கிருக்கும் எல்லா அரபுக்குடிமக்களையும் அழைக்கிறோம் ''

''நாங்கள் எங்கள் கரங்களை சமாதான சகவாழ்வுக்காக அண்டை நாடு களுக்கும், அவர்களின் மக்களுக்கும் நீட்டுகிறோம். ஒத்துழைக்குமாறு அன்போடு அழைக்கிறோம்...''

''.. சர்வ வல்லமை பொருந்திய இறைவனில் நம்பிக்கையுடன் எமது கையெழுத்தை இந்தப் பிரகடனத்தில், தாயகத்தின் மண்ணில், ரெல் அவிவ் நகரில் நடந்த தற்காலிக அரசமைப்பு சபையின் அமர்வு ஒன்றில் வைத்து யூத வருடம் 5708 ன் ஐயர் மாதம் (யூத 8 மாதம்) ஐந்தாம் நாள், ஒய்வு நாளுக்கு முந்திய இரவு, ஆங்கில வருடம் 1948 வைகாசி பதினாலாம் நாளன்று இடுகி றோம்,''

இரண்டாயிரம் வருடங்களுக்குப் பிறகு யூத அரசு மீளவும் உருவாகியிருந்தது.

சில மணி நேரங்களுக்குள்ளேயே, ஜனாதிபதி ஹாரி ட்ரூமன் மூலம் இஸ்ரேல் அரசை அங்கிகரித்த முதல் நாடாக அமெரிக்கா திகழ்ந்தது. ரெல் அவிவின் வீதிகளில் மக்கள் கூட்டம் ஹோரா நடனத்தை ஆடிக் கொண்டிருக்கும் போதே எகிப்திய குண்டுவீச்சு விமானங்கள் அந்நகரத்தை அழித்து விடுவதற் காகக் கிளம்பிக் கொண்டிருந்தன. அரபுலகின் இராணுவங்கள் புதிதாகப் பிறந்த நாட்டின் எல்லைகளைக் கடந்து கொண்டிருந்தன.

O

அத்தியாயம் ஒன்பது

அரபு இராணுவங்கள் தனித்தனியாக இஸ்ரேலின் உள்ளே எல்லைகளை மீறி வந்த உடனேயே உடனடி வெற்றிகள் குறித்துப் பெருமையடித்துக் கொண்டார்கள். கற்பனையான வெற்றிகளைப் பெற்ற விதம் குறித்த விளக்கங்களைக் கொண்ட பெருமையான அறிக்கைகளை வெளியிட்டார்கள். யூதர்களைக் கடலிலுள் வீசிவிடக் கூடிய மாபெரும் திட்டமொன்றை வைத்திருப்பதாகத் தெரிவித்தார்கள். மாபெரும் திட்டமொன்று இருந்திருந்தால் கூட, பொதுவான ஒரு கொமாண்டர் இருக்கவில்லை. ஏனெனில் ஒவ்வோரு அரபு நாடும், யார் இராணுவங்களை வழிநடத்துவது என்பது பற்றியும், வெற்றி கொண்ட பின் யார் பலஸ்தீனத்தை ஆளுவது என்பது பற்றியும் வெவ்வேறு தனிப்பட்ட கருத்துக்களைக் கொண்டிருந்தார்கள். பாக்தாத்தும், கெய்ரோவும் அரபுலகத்தின் தலைமைப் பதவிக்கும் ''மாபெரும் அரபுலகம்'' ஒன்றிற்கும் உரிமை கோரின. அரபு புனித நகரங்களான மெதினா, மெக்கா நகரங்களைத் தன்னகத்தே கொண்டிருப்பதால் சவூதிஅரேபியா தலைமைப் பதவிக்கு உரிமை கோரியது. பலஸ்தினம் தனது நாட்டின் பகுதியாதலால் ஜோர்டான் அது தனக்கே வேண்டுமென்றது. சிரியாவோ, பலஸ்தினம் தனது ஒட்டோமான் மாகாணத்தின் தென்பகுதிதான் என்ற நிலையை ஒருபோதும் கைவிட்டதில்லை. ஆக ''ஒன்றிணைந்த'' அரபுக்கள் தாக்கத்தொடங்கினர்.

நெகவ் பாலைவனம்

மிகுந்த விளம்பரம் செயப்பட்ட எகிப்திய ஆக்கிரமிப்புப் படை சினாயின் தளங்களிலிருந்து அரபுக்கள் வசமிருந்த காஸா ஊடாக கரையோரமாக நகர்ந்து வந்தது. முதல் இரண்டு எகிப்திய அணிகளும் தாங்கிகள், கவசவாகனங்கள், பீரங்கிகள், நவீன விமானங்கள் சகிதம் புகையிரதபாதை அருகோடு சென்ற பாதையூடாக வடக்காக நகர்ந்து யூத தற்காலிக தலைநகரமான ரெல் அவிவை நோக்கி வந்தன. தங்களுடைய வியக்கத்தக்க, இராட்சத பலத்தின் முன் யூத குடியேற்றங்கள் சிதறியோடிவிடும் என்று நிச்சயமாக எகிப்தியர்கள் நம்பினார்கள்.

முதலாவது கிபுட்சான நிரிம் இல் எகிப்தியர்கள் நேராகப் புக முயற்சித்து திருப்பி விரட்டப்பட்டார்கள். வழியில் இருந்த இரண்டாவது, மூன்றாவது குடியேற்றங்களிலும் இதே கதியே நிகழ்ந்தது. திகைப்பை ஊட்டிய இந்த நிகழ்வுகளால் எகிப்திய அதிகாரிகள் முயற்சியை மீளாய்வு செய்யவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். இந்தப் பலம் வாய்ந்த இடங்களைத் தவிர்த்து,

கரையோரமாக முன்னேற முடிவு செய்தனர். அப்படிச் சென்றால் தங்கள் விநியோக மார்க்கங்களில் இருந்து வெகுதூரம் சென்று விடுவதோடு, பின்பகுதிகள் போதிய பாதுகாப்பின்மையால், தாண்டிவந்த யூத பிரிவுகளினால் தாக்கப்படக் கூடிய அபாயமும் இருந்தது. ஆகவே, சில முக்கிய இடங்களில் தங்கி நின்று போரிடவேண்டிய அவசியம் ஏற்பட்டது.

எகிப்திய பீரங்கிகள் அந்தக் குடியேற்றங்களைத் தாக்கித் தரை மட்டமாக்கின. எகிப்திய விமானங்கள் அகோரமான குண்டு வீசி அழித்தன. கடுமையான மோதல்களுக்கு பிறகு எகிப்தியர்கள் மூன்று குடியேற்றங்களைக் கைப்பற்றினார்கள். பெரும்பான்மையான குடியேற்றங்கள் எதிர்த்துப் போரிட்டதால் தவிர்த்துச் செல்லப்பட்டன.

எகிப்தியர்கள் படைநடத்தி வந்த பாதையிலே கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் கிபுட்ஸ் நெகாபா -அதாவது நெகெவ்வின் வாசல்-இருந்தது. இந்த இடம் ரெல் அவிவ் செல்லும், வடக்குப் பாதையும், குறுக்காக உட்பகுதியை நோக்கிச் செல்லும் பாதையும் சந்திக்கும் இடத்தின் அருகாமையில் அமைந்திருந்தது. இந்த இடத்தை எகிப்தியர்கள் கட்டாயமாகக் கைப்பற்ற வேண்டிய தேவை இருந்தது.

நெகாபா கிபுட்சிலிருந்து ஒரு மைலுக்கும் குறைவான தூரத்தில் சுவெய்டான் (அதாவது குன்றில் நிறுவும் இராட்சதன்) ராக்காட் கோட்டை இருந்தது. சுவெய்டான் பாரிட்டிஷாரால் அரபுகளிடம் கையளிக்கப்பட்டிருந்தது. கோட்டையிலிருந்து, ஷெல்களை ஏவி நெகாபாவை சின்னாபின்னமாக்கிக் கொண்டிருந்தனர். கோட்டையை எட்டக்கூடிய வீச்செல்லை கொண்ட பீரங்கி எதுவும் நெகாபாவில் இருக்கவில்லை.

நெகாபாவின் விவசாயிகள், முன்னேறிவரும் ஆக்கிரமிப்புப் படைக்குத் தங்களின் முக்கிய சந்தி எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்று உணர்ந்து கொண்டார்கள். அததோடு அவர்கள் வெல்லப்பட முடியாதவர்களும் அல்ல என்றும் அறிந்திருந்தனர். என்ன நடக்கும் என்று உணர்ந்தேயிருந்தார்கள். ஆயினும், அங்கேயே தங்கியிருந்து போராட முடிவு செய்தார்கள். சுவெய்டானில் இருந்து வந்த குண்டுகள் கடைசிக் கட்டிடம் வரை நொருக்கின. நீர்ப்பங்கிடு ஒரு நாளைக்குச் சில துளிகள் என்ற கணக்கில் குறைந்தது. உணவுப் பங்கீடு பட்டினி மட்டத்துக்குக் குறைந்தபோதும், நெகெவ் தொடர்ந்தும் எதிர்த்துப் போரிட்டுக் கொண்டிருந்தது. தாக்குதலைத் தொடர்ந்து தாக்குதல் வந்து கொண்டிருந்த போதும், யூதர்கள் எகிப்தியர்களைத் தோற்கடித்து விரட்டிக் கொண்டிருந்தனர். ஒரு தாக்குதல் தாங்கிகளின் உதவியுடன் வந்தபோது யூதர்களிடம் கடைசி ஐந்து சுற்று, தாங்கி எதிர்ப்புக் குண்டுகளே மீந்திருந்தன. ஆயினும், தான்கு தாங்கிகளை அவர்கள் சிதறடித்தனர். வாரக்கணக்காகப் பணிய மறுத்த அவர்கள் வெற்றி தோல்வியில்லாத நிலையில் எகிப்தியர்களை வைத்திருந்தார்கள். அது பணிய மறுத்தது. புராதன மசாடா ஹீப்ருக்கள் போரிட்டது போல் அவர்கள் போரிட்டதோடு புதிய அரசின் பணிய மறுக்கும் பண்பின் அடையாளச் சின்னமாக அது திகழ்ந்தது.

கரையோரமாக வந்த எகிப்தியப் படைகள், பெரும் அணியொன்றை சுவெய்டானில் விட்டுவிட்டுத் தொடர்ந்து கரையோரமாக முன்னேறின. அவர்கள் ரெல் அவிவுக்கு மிகச் சமீபமாக முன்னேறினார்கள்.

ரெல் அவிவில் இருந்து இருபதே மையில் தூரத்திலிருந்த இஸ்டுட்டில் இஸ்ரேலியர்கள் தங்கள் பாதுகாப்பு அரண்களைப் பலப்படுத்தினார்கள். துறை முகங்களில் ஆயுதங்கள் இறக்கப்பட்டதும். சூட்டோடு சூடாக அவை இஸ்டுட் டுக்கு புதிதாக வந்து சேரும் குடியேற்றவாசிகள் சகிதம் எகிப்திய பிரிவுகளைத் தடுக்க அனுப்பப்பட்டன. எகிப்தியர்கள் தரித்து நின்று, அணிகளை மீள மைப்புச் செய்து, விநியோகங்களை சீராக்கி, தங்களை ரெல் அவிவுக்குள் கொண்டு செல்லக்கூடிய இறுதித் தாக்குதலைச் செய்வதற்கு ஆயத்தமாயினர்.

எகிப்திய ஆக்கிரமிப்புப் படையின் இரண்டாவது பகுதி அங்கிருந்து, திரும்பி, உள்நாட்டுத் திசையில் நெகெவ் பாலைவனங்களை நோக்கிச் செல்லத் தொடங்கியது. அவர்கள் அரபு நகரங்களான, பீர்ஷபா, ஹெப்ரோன், பெத் லேகம் ஆகியவற்றினூடாக எவ்விதபாதிப்புமின்றி, முன்னேறிய போது, எகிப்திய வானொலியும், பத்திரிகைகளும், :வெற்றி மேல் வெற்றியை அவர்கள் குவிப் பதாகப் புகழாரம் சூட்டின.

ஜெருசலேமைத் தாக்கிக் கைப்பற்றும் ''மகோன்னதமான'' நிகழ்ச்சியில் பங்கு கொள்ளும் முகமாக அரபு லீஜன் ஜெருசலேமைத் தாக்கும் அதே நேரத்தில் இரண்டாவது. படையணி தெற்கிலிருந்து தாக்குதலைத் தொடுக்கவேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆயினும், எகிப்தியர்கள் ஜெருசலேமை வெற்றி கொள் ளும் புகழில் பங்குபோடவிரும்பாமல் தாங்களே தனியாக ஜெருசலேமைத்தாக்கச் சென்றனர்.

பெத்லெகேமில் குவிக்கப்பட்ட அவர்கள் ரமாற் ராகேவை -அதாவதுராக் கேலின் குல்று- தாக்கினார்கள். புதிய ஜெருசலேமின் தென்புற அணுகு வழிகளைக் காத்து நின்ற இந்த கிபுட்ஸ் இருந்த இடத்தில் தான் ராக்கேல் ஒருமுறை அஞ்ஞாதவாச வாழ்க்கையிலிருக்கும் இஸ்ரேலின் மக்களுக்காக அழு தார். ரமாட் ரகேலின் விவசாயிகள் தங்களால் முடிந்தளவு எகிப்திய தாக்கு தலைச் சமாளித்த பிறகு, முடியாத கட்டம் வந்தபோது மெதுமெதுவாக ஜெரு சலேமுக்குள் பின்வாங்கி வந்தனர். ஜெருசலேமின் தென்புற நகரப பகுதிகளிலே ஹகானா உதவிப் படையினர் அவர்களை வந்தடைந்தனர். அங்கே வைத்து தங்கள் அணிகளை மீளமைத்துக்கொண்டு, கிபுட்சுக்கு ஆரவாரமாக விரைந்து சென்று, எகிப்தியர்களை வெளியே கலைத்து, பெத்லெகம் வரை துரத்தியடித் தனர்.

ஜெருசலேம் (Jerusalem)

ஜெருசலேமை விட்டு பிரிட்டிஷார் வெளியேறியதும், ஹகானாவினர் அவர்கள் இருந்த இடங்களுக்குள் சென்று அங்கிருந்து காவுக்ஜியின் கூலிப்படை யினர் இருந்த இடங்களைத் தாக்கத் தொடங்கினர். வீதிக்கு வீதி நடந்தசண் டையின்போது, குழந்தைகள் அங்கும் இங்கும் ஓடி ஓடி உதவி செய்வதும்,

தங்கள் தொழில் ஆடைகளிலே இருந்த ஆண்கள் தாக்குதலைத் தலைமை தாங்கி நடத்துவதும் இடம்பெற்றன.

அடுத்த ஹகானா இலக்காக, ஸ்கோப்பஸ் மலையிலிருந்த யூதர்களைப் புதிய ஜெருசலேமோடு தொடர்பு கொள்ள முடியாதவாறு தடுத்துக் கொண்டிருந்த அரபு புறநகரப்பகுதி ஒன்றைக் கைப்பற்றுவது, இருந்தது. இது செய்யப்பட்டு விட்டதும், முடிவொன்று எடுக்கவேண்டி இருந்தது. பழைய ஜெருசலேம் நகரத்தை வென்றெடுக்கக் கூடிய நிலையில் யூதர்கள் இப்போது இருந்தார்கள். பழைய நகரம் அவர்கள் கைக்கு வந்ததும், திடமான, கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடம் அவர்கள் கையிலிருக்கும். பழைய நகரம் அவர்கள் வசம் இல்லாவிட்டால் அவர்கள் பலவீனமான நிலையிலிருப்பார்கள். சர்வதேச அரசியல், புனித ஸ்தலங்கள் நாசமாகிவிடும் என்ற பயம், வெளியுலக அழுத்தங்கள் என்பன அவர்களின் உள்ளேபக்தியான பல்லாயிரக் கணக்கான யூதமக்கள் குடியிருப்பு ஒன்று இருந்தும், பழைய ஜெருசலேமைத் தற்போதைக்கு விட்டு வைக்க முடிவு செய்ய வைத்தன. பழைய நகரத்தில், ஆர்மீனிய ஆலயம் ஒன்றில் அமைந்திருந்த தங்கள் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த, தங்கள் அவதானிப்பு நிலையொன்றினை அங்கிருந்த துறவிகளின் வேண்டுகோளின் பேரில் வாபஸ் பெற்றனர். யூதர்கள் வெளியேறிய மறுகணமே அரபுக் கூலிப்படையினர், அதே இடத்தைக் கைப்பற்றிக் கொண்டு வெளியேற மறுத்தனர். அப்படியிருந்தும் கூட, மூன்று மாதங்களுக்கு, புனிதமான இந்த நகரத்தை உலகின் பரிசுத்தமான இடத்தை, தங்கள் முன்மாதிரியைப் பின்பற்றி அரபுக்கள் தாக்கத் துணிய மாட்டார்கள் என்று யூதர்கள் நினைத்தார்கள்.

ஹகானா இப்போது இறுதியான ஒரு துரோகத்தனத்துக்கு முகம் கொடுக்க வேண்டி வந்தது. பிரிட்டிஷ் வெளியேறியதும், அரபு லீஜனும், ஜோர்தானுக்குப் போய்விடும் என்று அரபு லீஜனின் கொமாண்டரான கிளப் பாஷா (Glubb Pasha) வாக்களித்திருந்தான். ஆனால், பிரிட்டிஷார் ஜெருசலேமை விட்டு வெளியேறிய போது, இந்த வாக்குறுதிகளைப் பகிரங்கமாக மீறிக்கொண்டு அரபு லீஜன் ஜெருசலேமுக்குள் விரைந்தது. லீஜன் தாக்கியது. முன்பு ஹகானாவினர் பிடித்திருந்த சில இடங்களைக் கைப்பற்றிக் கொள்ளவும் முடிந்தது.

புதிய ஜெருசலேமை ஸ்கோப்பஸ் மலையுடன் இணைக்கும் புறநகர்ப் பகுதியை காக்கும் பொறுப்பு மக்கபீகிடம் ஒப்படைக்கப் பட்டிருந்தது. இதை அவர்கள் லீஜனிடம் இழந்து விட்டதால் ஸ்கோப்பஸ் மலையில் இருந்த படையினர் தனிமைப்படுத்தப்பட்டனர். இந்த நேரத்தில் பழைய நகரத்தைத் தாக்கும்படி கிளப் பாஷா அரபு லீஜனுக்கு உத்தரவிட்டான்.

பல வருடக்கணக்காக அரபுக்களுடன் தொடர்பு கொண்டிருந்ததில் எந்தவித எதிர்பார்ப்பு மாயைகளையும் யூதர்கள் கொண்டிருக்க வில்லை. ஆனால் மனத குலத்தின் மிகப் பரிசுத்த ஆலயப்பகுதியைத் தாக்குவது மிகக் கீழ்த்தரமான செயலாக இருந்தது. தங்கள் தற்பாதுகாப்புக்காகவேனும் தங்கள் விரல்களை உயர்த்த மறுக்கும், மிக மிகப் பழமை வாத யூதர்கள் சில ஆயிரம் பேரைத் தவிர லீஜனைத்தடுக்க எவரும் உள்ளே இல்லை. யூதர்கள் தங்களால்

முடிந்தளவு ஹகானவினரை உள்ளேஅனுப்பினார்கள். இவர்களைத் தொடர்ந்து பல நூறு வரை ஆவேசம் கொண்ட மக்கபீஸ் தொண்டர்களும் உள்ளே புகுந்தனர். உள்ளே நுழைந்து விட்டால் தப்பி வெளியேறக்கூடிய பார்க்கம் எதுவும் இந்த அணியினருக்கு இருக்கவில்லை.

ஜெருசலேம் தொடர்பும் பாதை (Jerusa'em Corridor)

ஜெருசலேமில் இருந்து ரெல் அவிவுக்குச் செல்லும் பாதையிலேயே இந்தப் போரின் மோசல்கள், மிக உக்கிரமாக இருந்தன. பால்மாக்கின் ஹில் மென் படைப்பிரிவினர் யூடியாக் குன்றுகளின் அரைடகின் பகுதிகளைக் கைப்பற்றி இருந்தனர். காஸ்ரெல் இப்போ அவர்கள் கையில் நிடமாகச் சிக்கியிருந்தது. பலஸ்தீனமான பாப் எல் வாட் சாலையைத் திறக்கப் போதுமான முக்கிய இடங்களையும், கோம்ப் குபாவையும் தாக்கிக் கைப்பற்றியிருந்தார்கள்.

யூத சரித்திரத்தில் மீக்கமுடிக்க முடியாத புள்ளியொன்று இந்தநேரத்தில் ஏற்பட்டது. உயர்ந்த இடத்தில் இருந்த நெவே சாடிஜ் (Neve Sadij) என்ற அரபுக் கிராமத்தை பாதுகாக்கும்பொறுப்பு மக்கபீஸ்டம் கொடுக்கப்பட்டிருந்தது. விளக்க முடியாத பிரமான சில நிகழ்வுகளின் பிரதிபலனான மக்கபீஸ் துருப்புகளிடையில் திகில் ஏற்பட்டுவிட்டது. அவர்கள் தேவையற்ற விதத்தில் சரமாரியான வேட்டுக்களைத் தீர்க்கத் தொடங்கினார்கள். தொடங்கிவிட்ட அதனை நிறுத்த அரும் பாடுபட்டும் முடியவில்லை. இருநூறுக்கு மேற்பட்ட அரபு சிவிலியன்கள் படுகொலை செய்யப்பட்டிருந்தார்கள். மிகப் பெறுமதி வாய்ந்தவர்களாக திருபணமாகியிருந்த மக்கபீஸ்கள். பல வருடங்களுக்குப் பின்கூட நீக்கப்பட முடியாத கறை ஒன்றை அந்த இளம் நாட்டின் மேல் ஏற்படுத்தி விட்டார்கள்.

ஹில்மென் பிரிகேட், பாப் எல் வாட்டை திறந்து விட்டாலும், பிரிட்டிஷார் அரபுக்களுக்கு ஜெருசலேமுக்கான பாதையை முட்டுக்கட்டை செய்ய வசதி செய்து கொடுப்பது போல் லற்ரறன் ராக்காட் கோட்டையை அவர்களுக்குக் கையளித்திருந்தனர். எல்லா யிகவ் தலைவர்களும் ஏதோ ஒரு நேரத்தில் சிறையிருந்த, முன்னாள் பிரிட்டிஷ், அரசியல் கைதிகளுக்கான சிறைக்கூடமான, லற்ரறன், ஒரு சந்தியில் குறுக்கே அமைந்து பாப் எல் வாட்டில் நுழைவதைத் தடுத்துக் கொண்டிருந்தது.

ஆகவே, லற்ரறன் இஸ்ரேவியர்களின் மிக முக்கியமான இலக்காக மாறிற்று. வேறெதுவும் செய்ய முடியாத நிலையில் கோட்டையைக் கைப்பற்ற விசேட படைப்பிரிவு ஒன்று அமைக்கப்பட்டது. இவர்களில் பெரும்பான்மையானோர் சைப்பிரஸ் தடுப்பு முகாம்களில் இருந்து மீட்டு வரப்பட்ட குடியேற்ற வாசிகளாயும், அல்லது ஐரோப்பாவின் இடம் பெயர்ந்தவர்களின் முகாம்களில் இருந்து கொண்டு வரப்பட்டவர்களாகவோ இருந்தார்கள். இந்தப் பிரிவின் அதிகாரிகளும் ஒரு முக்கிய தாக்குதலுக்கான ஆயத்தங்களைக் கொண்டிருக்கவில்லை. விரைவாகப் பயிற்சியளிக்கப்பட்டு ஆயுதங்கள் வழங்கப்பட்ட இந்தப் பிரிவினர் ஒரு இரவுத் தாக்குதல் ஒன்றை லற்ரறன் மேல் நடத்த முயற்சித்தனர். இத்தத் தாக்குதல் முறையாகத் திட்டமிடப்படாமல், பிழையான முறையில் நடத்தப்பட்டது.

நன்றாகப் பயிற்றப்பட்டிருந்த அரபு லீஜன் இவர்களை மிக லேசாக விரட்டி விட்டது.

தொடர்ந்து இரண்டு இரவுகளில் மேற்கொண்ட வேறு தாக்குதல்களும் இதைப்போலவே தோல்வியில் முடிந்தன. பாப் எல் வாட்டின் இருந்து ஜெருசலேம் வரை ஒரு நீண்ட பிரதேசத்தைப் பாதுகாப்பதில் முழுதாக ஈடுபட்டுக் கொண்டிருந்த ஹில்மென் பிரிகேட், தங்கள் பழுவைப் பாராமல் லற்ரறனின் மேல் தாக்குதல் ஒன்றைத் தொடுத்தனர். ஆனால், முழுமையாக இல்லாவிட்டாலும் ஏறத்தாழ அந்த இடத்தைப் பிடிப்பதில் வெற்றி கண்டனர்.

ஸ்ரோன் என்னும் குறியீட்டுப் பெயரைக் கொண்ட மிக்கிமார்கஸ்என்னும் அமெரிக்கக் கேர்னல் ஒருவர் இஸ்ரேலிய இராணுவத்தில் வந்து இணைந்து கொண்டார். அவரது உத்திகளைப் பற்றிய, ஒழுங்கமைப்புப் பற்றிய அனுபவம் அதிகமாகத் தேவையாக இருந்த ஜெருசலேம் தொடர்புப்பாதைக்கு அனுப்பப்பட்டார். அங்கு அவருடைய முயற்சிகள் பலனளிக்கத் தொடங்கியிருந்தன. குறைந்தளவு காலக்கெடுவில் போக்குவரத்தை மறுசீரமைத்து, யூதர்கள் 'நடவடிக்கை இரும்புத் துடைப்பத்'தில் பாவித்த இயந்திர மயமாக்கப்பட்ட ஜீப்புகளின் தொடரைப் பலமடங்கு அதிகரித்துமிருந்தார். போக்குவரத்து நெருக்கடி உள்ள லற்ரறன் பிரதேசத்தினுள் யுத்த மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடிய ஒரு நன்றாகப் பயிற்றப்பட்ட, சிறந்த தலைமைகளின் கீழ் இயங்கும் படைப்பிரிவுகளை உருவாக்குவதே அவர் முக்கிய நடவடிக்கையாக இருந்தது. அவர் தனது இலக்குகளை நெருங்கிச் செல்கையில், இஸ்ரேலியருக்கு இன்னொரு துன்பியல் சம்பவம் ஏற்பட்டது. மார்கஸ் போரில் கொல்லப்பட்டார். ஜெருசலேம் தொடர்ந்து முற்றுகைக்குள்ளாகியிருந்தது.

ஏரிலேப் பள்ளத்தாக்கு - கலிலிக்கடல்

சிரிய இராணுவம் கலிலிக்கடலின் கிழக்குப் பகுதியில் இருந்தும், ஜோர்தான் ஆற்றிலிருந்தும், தாங்கிகளினதும், விமானங்களினதும் ஆதரவோடு பல அணிகளாக முன்னேறி வந்தன.

முதலாவது சிரிய அணி தனது இலக்காக, பலஸ்தீனத்தின் மிகப் பழைய மூன்று கூட்டுக் குடியேற்றங்களைக் குறிவைத்தது. அரிபென் கானானின் பிறந்த இடமாகிய ஷோசான்னா, ஜோர்தான் நதி கலிலிக் கடலில் கலக்கும் இடத்தில் அமைந்திருந்த டகானியா ஏ, டகானியா பி ஆகிய மூன்றையும் கொண்ட தொகுதி அது.

இந்தப்பகுதிகளில் யூதர்களுக்கு ஆட்பலம் குறைவாக இருந்த காரணத்தினால், அவர்கள் ரிபேரியாசுக்கும் இந்தக் குடியேற்றங்களுக்கும் ட்ரக்குகளைத் தினமும் ஓட்டிச் சென்று, வந்து, தாங்கள் உதவிப் படைகளையும், ஆயுதங்களையும் கொண்டு வருவதாகச் சிரியர்களை நம்பவைக்க முயன்றார்கள்.

ஷோசான்னாத் தொகுதியின் விவசாயிகளிடம் போரிடுவதற்கு சிறிதளவு ஆயுதங்களே இருந்ததால் அவர்கள் அரி பென் கானானிடம் தூதுக்குழு ஒன்றை

அனுப்பினார்கள். ஷோசான்னா தொகுதி அரிபென் கானானின் அதிகாரத்துக்கு அப்பாற்பட்டதாக இருந்தாலும், தன் பிறந்த இடம் என்பதற்காக ஏதாவது உதவி செய்வான் என்று எதிர்பார்த்தனர். கான் டப்னாவில் காசியோடும், ஷாபெட்டில் இன்னொரு சிரிய அணியோடும், போராடுவதில் அரி முழுக்கவனமும் செலுத்தவேண்டி இருந்தது. அவன் தன்னைத் தேடிவந்த தூதுக்குழுவினரிடம், அவர்களை ஒன்று மட்டும் தான் காப்பாற்றக் கூடும், அதுதான் மக்களுக்கு ஏற்படக்கூடிய கோபம் என்று உபதேசம் செய்தான். மோலரோவ் கொக்டெயில்களைத் தயாரித்து வைத்துக் கொண்டு சிரியர்களை கிராமங்களின் உள்ளே வரவிடும்படி சொன்னான். யூதர்களை ஒரு எழுச்சியான தற்பாதுகாப்பு முயற்சியில் ஊக்குவிக்கக் கூடியது, தங்கள் புனித மண்ணில் அராபியர்கள் நிற்பதைக் கண்ணால் காணும் காட்சியாகத்தான் இருக்க முடியும் என்றான் அவன்.

சிரியர்கள் டகானியா ஏ யை முதலில் தாக்கினார்கள். சிரியாத்தாக்கு தலுக்குமுன்னணியில் வந்த தாங்கிகள் கிராமத்தின் நடுவில் உள்ள வீடுகளுக்கு அருகாமையில் வரும்வரை சுட வேண்டாமென்று ஹகானாக் கொமாண்டர்கள் ஆணையிட்டிருந்தனர். சிரிய தாங்கிகள், தங்கள் ரோஜா மலர்த் தோட்டங்களைத் துவம்சம் செய்வதைக் கண்டு அவர்களுக்கு ஏற்பட்ட ஆத்திரத்தின் அளவில், சில அடி தூரங்கள்தாங்கிகளுக்கு அருகாமையில் சென்று குறி தவறாமல் தங்கள் நெருப்புமிழும் போத்தல்களை வீசி முன்னணியில் வந்த தாங்கிகளை எரித்துச் சேதமாக்கிவிட்டனர். சிரிய தாங்கிகளைத் தொடர்ந்து வந்த காலாட் படையினர் ஆத்திரமுற்ற விவசாயிகளுக்கு ஈடுகொடுக்க முடியவில்லை. யூதர்களின் கோபாவேசத்தைத் தாங்கமுடியாமல் பின்வாங்கி ஓடியவர்கள் திரும்பி வரவே இல்லை.

இரண்டாவது சிரிய அணி சிறிது தென்புறமாக ஜோர்தான்— பெத்சியன் பள்ளத்தாக்குகளில் தாக்கியது. அவர்கள் யார்முக் நதி ஓடும், ஷார் ஹா கோலன் ஐயும், மலாடா கிபுட்சையும் கைப்பற்றிக் கொண்டனர். யூதர்கள் எதிர் தாக்குதலை மேற்கொண்டபோது, சிரியர்கள் கிராமங்களை எதிர்த்துத் தரைமட்டமாக்கிவிட்டு, தூக்கிக் கொண்டு போகக் கூடிய எல்லாவற்றையும் கொள்ளையடித்துக் கொண்டு ஓடிவிட்டனர். முன்னதாக ஹகானாவினால் கைப்பற்றப்பட்ட கெலார் கோட்டையை, தொடர்ந்து தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்ததோடு, தங்களுடைய ஜோர்தான் — பெத்சியன் குடியேற்றங்களையும் தங்களுடைய கட்டுப்பட்டிலேயே வைத்துக் கொண்டனர்.

மூன்றவது அணி, ஜோர்தான் நதியின் மேலாக அரிபென் கானானின் பிரதேசமான ஹுலேப் பள்ளத்தாக்கினுள் வந்தனர். அவர்கள் ஜோர்தானின் காவல் நிலை எனப் பொருள்படும் மிஸ்மார் ஹயார்டெனைத் தாக்கிக் கைப்பற்றிக் கொண்டார்கள்.

பின்பு லெபனான் பக்கமாக நிலைகொண்டிருந்த காவுக்ஜியின் கூலிப்படையினருடன் இணைந்து கொள்ளக்கூடிய விதத்தில், ஹுலேப் பள்ளத்தாக்கின் மத்திய பகுதிக்குள் செல்லக்கூடிய விதமாகத் தாக்குதலை மேற்கொள்ளத்

தங்கள் அணிகளை மீளமைப்புச் செய்து கொண்டார்கள். ஆனால் யாட்எல்' ஆயலெட் ஹஷாஹார். க்பார் சொல்ட், டான் மற்றும் பலம் வாய்ந்த குடியேற் றங்களும் தங்கள் அரண்களைப் பலப்படுத்திக் கொண்டு இவர்களுக்கு ஈடுகொ டுத்தார்கள். பிரங்கித் தாக்குதல்களைப் பொறுமையுடன் சகித்து விட்டு. சிரி யர்கள் றைபிள் வீச்செல்லைக்குள் வந்ததும், புலிகளைப் போல் பாய்ந்து போரிட்டனர். ஆயலெட் ஹஷாஹாரில் ஒரு றைபிள் வீரனால் ஒருசிரிய விமா னத்தையே சுட்டு வீழ்த்த முடிந்தது ஆனால். குடியேற்றத்திலிருந்த ஒவ்வொரு கிபுட்சின்க்குகளுக்கும் இந்தப் பெருமை சார்ந்தது.

சிறிது அப்பால்.லெபனோனியர்கள்,குன்றுகளிலும். மெத்துலாவிலும் இருந்த யூத குடியேற்றங்களில் காலடி வைத்தனர். அதிகமாகக் கிறீஸ்தவ அரபுக்களான லெபனானியர்களில், பல தலைவர்களசியோனிசத்துக்குஅனுதாபமுள்ளவர்களாக இருந்ததோடு, போரிடுவதில் ஆர்வம் குறைந்தவர்களாகவும் இருந்தார்கள்.மற் றைய அரபு நாடுகளினால் பழிவாங்கப்படலாம் என்ற பயத்தினாலேயே இவர்கள் ''ஒற்றுமையை எடுத்துக்காட்ட'' போரில் பங்கு பற்றினார்கள். கடுமையான எதிர்ப்பு ஏற்பட்ட முதல் கணமே · அவர்கள் போரிடும் சக்தியாக இல்லாது போவது போல் தோன்றியது

அரபு அணிகள் ஹுலேயில் ஒன்று சேர்வதை அரி வெற்றிகரமாகத் தடுத்து விட்டான். புதிய ஆயுதங்கள் வந்து சேர்ந்ததும், அவன் வலிந்து தாக்குதலைத் தொடங்கினான். ''பாதுகாப்பு - வலிந்து தாக்குதல்'' (De ence-Ofienee Plan) திட்டம் ஒன்றை அரி உருவாக்கினான். நேரடியான அழுத்தத்துக்கு உட்படாத குடியேற்றங்கள் வெறுமனே தாக்குதலை எதிர்பார்த்து உட்கார்ந்து காத்துக் கொண்டிருக்காமல், இலக்குகளை நிர்ணயித்துக் கொண்டு வலிந்து தாக்குதலை நடத்தினார்கள் இந்த வழிமுறையினால், அரிக்கு, சிரியர்களை முற்றாகவே குழப்பத்தில் ஆழ்த்த முடிந்தது. பிரச்சினை கூடிய இடங்களுக்கு, ஆயுதங் களையும், ஆட்களையும் அனுப்பி அவ்விடங்களின் சுமையைக் குறைக்க முடிந் தது. இஸ்ரேலிலேயே பலம் வாய்ந்த பகுதியாக ஹுலேயைச் செய்யக்கூடிய விதத்தில் தன்செய்திப் பரிவர்த்தனை, போக்குவரத்து ஒழுங்குகளை அரி வளர்த் தெடுத்தான். அரிக்கு மிகுதியாக இருந்த ஒரேயொரு முக்கியமான இலக்கு எஸ்தர் கோட்டைதான்.

முழு சிரியப் படையெடுப்புமே குழம்பிப்போய் விட்டது. மிஸ்மார் ஹயார் டென்னையும் ஓரிரு சிறிய வெற்றிகளையும் தவிர படையெடுப்பு படுதோல்வி யாகப் போயிருந்தது. தங்கள் தோல்விகளை ஈடு செய்யச் சிரியர்கள் ஒரு தனிக் கிபுட்சில் கவனம் செலுத்த முடிவு செய்தனர். முன்பனிக்கால கலை நிகழ்ச்சிகளின் தாயகமும், கலிலிக் கடலின் கிழக்குக் கரையோரமாக இருந்ததுமான எயின் ஜெவ் அவர்களது இலக்காயிற்று.

இந்தக் கிபுட்சின் மூன்று பக்கங்களில் உயரமான மூன்று குன்றுகளில் சிரியர்கள் நிலை கொண்டிருந்தனர். கடல் நான்காவது பக்கமாக இருந்தது. கிபுட்சை நோக்கிக் கொண்டிருந்த புராதன ரோம நகரமான, குதிரை என்று பொருள்படும் தாண் போன்ற சுசிற்றா மலையை சிரியர்கள் தங்கள் ஆதிக்கத் தில் வைத்திருந்தனர். இரவில், ரிப்பரியாகிலிருந்து, வாவிக்குக் குறுக்காக வரும்

படைகளைத் தவிர, வேறு தொடர்புகளிலிருந்து எயின் ஜெவ் துண்டிக்கப்பட்டிருந்தது. சிரிய பீரங்கிகள் ஒய்வில்லாமல் கிபுட்சைத் தாக்கின. யூதர்கள் பதுங்கு குழிகளிலேயே வாழ்க்கையை நடாத்தக் கட்டாயப் படுத்தப்பட்டார்கள். அங்கேயே தங்கள் பாடசாலைகள், புதினப்பத்திரிகை, ஏன் தங்கள் சிம்பனி இசைக்குழுவின் பயிற்சியையும் நடத்தி வந்தார்கள். ஒவ்வொரு இரவும் பதுங்கு குழிகளில் இருந்து வெளியே வந்து வயல்களில் வேலை செய்வார்கள். எயின் ஜெவ்வின் தாக்குப் பிடிக்கும் சக்திக்குச் சமமாக நெகெவ் பாலைவனத்தின் நெக்பாவில் நிகழ்ந்த தாக்குப் பிடிப்பை மட்டுமே குறிப்பிடக்கூடும்.

கிபுட்சின் சகல கட்டிடங்களும், சின்னாபின்னமாகத் தகர்க்கப் பட்டிருந்தன. சிரியர்கள் வயல்களை எரித்தனர். திருப்பிச் சுடக்கூடிய அளவு வலிமை வாய்ந்த ஆயுதங்கள் எதுவும் யூதர்களிடம் இருக்கவில்லை. கொடுமையான தண்டனையொன்றுக்கு அவர்கள் ஆட்படுத்தப் பட்டிருந்தார்கள்.

வாரக்கணக்காக பீரங்கித் தாக்குதலை நடத்திய பிறகு, ஆயிரக்கணக்கில் குன்றுகளிலிருந்து தாக்குதலுக்காக இறங்கி வந்தார்கள். இந்தத் தாக்குதலுக்கு, போரிடும் வயதிலிருந்த முன்னூறு கிபுட்ஸிவிக்குகள் முகம் கொடுத்தார்கள். இவர்கள் கட்டுப்பாடான முறையில் வேட்டுக்களைத் தீர்த்ததோடு, குறிபார்த்துச் சுடுவோர் சிரிய அதிகாரிகளைத் தேடிப் பலி கொண்டனர். திருப்பத் திரும்பத் தங்கள் அணிகளை மீளமைத்துக் கொண்டு யூதர்களைக் கடலை நோக்கி விரட்ட முயன்றார்கள். ஆனாலும், பாதுகாத்து நின்றவர்கள் விட்டுக் கொடுக்கவில்லை. சிரிய தாக்குதலின் முதுகெலும்பை உடைத்து முறித்த போது அவர்களிடம் பன்னிரெண்டு சுற்று ரவைகளே எஞ்சியிருந்தன.

எயின் ஜெவ் தாக்குப் பிடித்தது. அத்தோடு கூட கலிலிக் கடலுக்கான யூதர்களின் உரிமை கோரலும் நின்று பிடித்தது.

ஷரோன் - ரெல்-அவிவ் - முக்கோணம்

முழு அரபு நகரங்களான ஜெனின், துல்கார்ம், றமாலா ஆகியவற்றை உள்ளடக்கிய பெரும் நிலப்பரப்பு முக்கோணம் என்ற பெயரில் அமைந்திருந்தது. காவுச்ஜியின் கூலிப்படையினரின்முன்னையதளமாகியநபிஸூஸ், இப்போதுஈராக்கிய இராணுவத்தின் முக்கிய தளமாயிற்று. ஈராக்கியர்கள் ஜோர்தான் நதியைக் கடந்து பெதசியன் பள்ளத்தாக்கினுள் செலலும் அதோகதியான முயற்சியில் படு தோல்விகண்டபின், அரபு சமாரியாவில், தங்கி நின்றார்கள்

முக்கோணத்துக்கு நேரெதிரில் மேற்குப் பக்கமாக ஷரோன் பள்ளத் தாக்கு இருந்தது. ஆபத்தான இந்த இடத்தில் முக்கோண போர் முனையிலிருந்து கடல் பக்கமாகப் பத்து மைல தூரத்தில், ரெல் அவிவ் ஹைபா பாதையின் அருகோடு ஒரு ஒடுங்கிய நிலப்பரப்பை யூதர்கள் கொண்டிருந்தார்கள். ஈராக்கியர்கள் இங்கே ஊடறுக்க முடியுமானால் இஸ்ரேலை இரண்டாகத் துண்டாடிவிடலாம்.

போரிடுதலில், ஈராக்கியர்கள் வெறுப்பைக் காட்டினார்கள். பிழையான முறையில் ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு தாக்குதலை முக்கோண நகரமான

ஜெனின் மேல் யூதர்கள் மேற்கொண்டபோது, ஈராக்கிய அதிகாரிகள் ஒடிவிட் டனர். துருப்புகள் ஓடாததிற்குக் காரணம் அவர்களை அவர்களின் நிலைக ளோடு சேர்ந்துச் சங்கிலியால் பிணைத்திருந்ததே. செறிவாக யூதர்கள் குடியி ருந்த ஷரோனைத் தாக்கும் நோக்கமே, அவர்களுக்கு வேம்பாகக் கசந்தது ஈராக்கியர்கள் அதில் பங்கெடுக்கவே விரும்பவில்லை.

விமான எதிர்ப்பு உபகரணங்கள் வந்து சேருமுன் எகிப்தியர்களின் விமா னத் தாக்குதல்களுக்குப் பலமுறை ரெல் அவிவ் இலக்காயிற்று. ஆயினும், அரபுப் பத்திரிகைகளில் ரெல் அவிவ் எகிப்தியக் குண்டுவீச்சு விமானங்களால் முற்றாகத் தரைமட்டமாக்கப் பட்டதான செய்தி குறைந்தது பத்துப் பன்னி ரெண்டு முறைகளாவது வெளியிடப்பட்டிருக்கும்.

யூதர்கள் சில விமானங்களைச் சேவையிலீடுபடுத்தி, ரெல் அவிவுக்குக் குண்டு வீச வந்திருந்த எகிப்திய குறூய்சர் ரகக் கப்பலொன்றை துரத்தியதன் மூலம் பெரும் ஆகாயப் போர் வெற்றியொன்றை ஈட்டிக் கொண்டார்கள்.

மேற்குக் கலிலி (Western Galilee

ஆறு மாதங்களாகியும், காவுக்ஜியின் கூலிப்படையினர் இன்னும் ஒரு குடியேற்றத்தையாவது வெற்றி கொள்ள முடியாமல் இருந்தனர். காவுக்ஜி தனது தலைமைச் செயலகத்தை, நசரேத்தைச் சூழ இருந்த அரபுக்கள் பெரும்பான்மையாக வாழும், மத்திய கலிலிப் பகுதிக்கு மாற்றினான். இங்கே அவன், ''முன்னேறிவரும்'' சிரியர்கள், லெபனானியர்கள். ஈராக்கியர்கள் ஆகி யோருடன் இணைந்து கொள்ள எதிர்பார்த்துக் காத்திருந்தான். ஆனால், அந்த நாள் வரவேயில்லை. நசரேத் பகுதியில், போரில் எவ்வித சம்பந்தமும் கொள்ள விரும்பாத கிறிஸ்தவ அரபுக்கள் இருந்தார்கள். அவர்கள் காவுக்ஜியை, நசரேத் ராக்காட் கோட்டையிலிருந்து வெளியேறும்படி திரும்பத் திரும்பக் கேட்டுக் கொண்டார்கள்.

அரபு இராணுவங்கள் படையெடுப்பைத் தொடங்க முன், மேற்குக் கலி லியின் பல பகுதிகளும் அரபுக்கள் இல்லாமல் செய்யப்பட்டிருந்தன. ஹைபா யூதர்களிடம் வீழ்சியடைந்திருந்தது. ஹனிற்றா பிரிகேட்டின் ''இரும்புத் துடைப் பம்'' காரணமாகப் பல விரோத மனப்பான்மையுள்ள அரபுக் கிராமங்கள் இல் லாதொழிக்கப் பட்டிருந்தன. அரபு ஆக்ரே வீழ்ச்சியடைந்ததுடன், லெபனானிய எல்லைவரை சகல இடங்களும் யூதர்களின் கட்டுப்பாட்டிலிருந்தன. மத்தியில் இருந்த காவுக்ஜியைத் தவிர கலிலிமுழுவதும் எதிரிகள் எவரும் இல்லாத சுதந்திர இடமாக இருந்தது

பலமாக விளம்பரம் செய்யப்பட்ட அரபுக்களின் மாபெரும் திட்டம் படு தோல்வியில் முடிந்தது. முதல் படையெடுப்பின் அதிர்ச்சியை, குழந்தைப்பருவத் திலிருந்த இந்த நாடு தாங்கி, சமாளித்து விட்டது. உலகம் முழுவதும், இரா ணுவ நிபுணர்கள் இதை நம்பமுடியாமல் தலையைப் பிய்த்துக் கொண்டனர். யூதர்கள் ஒரு உள்நாட்டுப் போரை நூற்றுக்கு மேற் ட்ட முனைகளிலே சந்தித் திருந்தனர். நம்பமுடியாதளதிர்ச் சக்திகளுக்கு எதிராகப் போராடிப் பத்துப் பன்

னிரெண்டுக்கு மேற்பட்ட முனைகளில் முறையான இராணுவங்களை வெற்றி கொண்டிருந்தார்கள்.

அரபுக்களின் வெற்றிகளை விரல்விட்டு எண்ணிவிடலாம். ஆகப்பெரிய வெற்றி, ஜெருசலேமைத் தடைசெய்வதில் முக்கிய பங்கு வகித்துக் கொண்டிருந்த எற்ரறனை இன்னமும் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொண்டிருந்த அரபு லீஜனால் பெறப்பட்டிருந்தது. மிகுதி அரபு இராணுவங்கள் முழுவதும் சேர்ந்து சிறியளவு தொகைக் குடியேற்றங்களேயல்லாது, நகரங்களையோ, மாநகரங்களையோ வெல்ல முடியவில்லை. ரெல் அவிவைத் தாக்கக்கூடிய தூரத்துக்குள் வரத்தான் அவர்களால் முடிந்திருந்தது.

ஆயுதங்கள் இஸ்ரேலுக்குள் வந்து குவிந்தபடி இருந்தன. ஒவ்வொரு நாளும் இஸ்ரேலின் இராணுவ அமைப்பு அபிவிருத்தியடைந்து வந்தது. இஸ்ரேலியர்கள், புதிய நாடொன்றைத் தம்மை அறிவித்துக் கொண்ட தினத்திலேயே ஆறு புதிய குடியேற்றங்களுக்கான அத்திவாரங்கள் இடப்பட்டதோடு, படையெடுப்பின் நடுவிலும், குடியேற்றவாசிகள் புதிய சமூகக் குடியிப்புக்களை உருவாக்கி வந்தார்கள். ஒவ்வொரு நாடாக இஸ்ரேலை அங்கீகரிக்கத் தொடங்கின.

அடி பணிய மறுத்த எயின் ஜெவ், நெக்பா மற்றும் நூறுக்கு மேற்பட்ட மற்றைய குடியேறறக் கிராமங்களும், நீரும் உணவும் இன்றிப் பல நாட்கள் போரிட்ட பால்மாக்குகளும், போர் முனைக்கு நேராகத் தேடிச் சென்ற புதிய குடியேற்ற வாசிகளும், துப்பாக்கிகளுக்குப் பதிலாகப் பல இடங்களில் கையாளப்பட்ட புத்திசாலித்தனங்களும், அசாதாரணமான வீரச் செயல்களைப் பொதுவான காரியமாக்கிவிட்ட துணிகரங்களும், எல்லாமே சேர்ந்து அரபுக்களைத் தடுத்து நிறுத்தியிருந்தன.

இதைவிட மேலான ஒன்றும் இருந்தது, தெய்வீக ஊக்குவிப்பு, இறைவாக்கினரால் முன்னரே கூறப்பட்டிருந்த அவர்கள் தலைவிதி. அவர்களுக்கு முன், சுதந்திரம் வேண்டிப் போராடிய அவர்களின் மூதாதையர்களின் பரம்பரை உணர்வுகள், தாவீது அரசர், பார் கியோரா, பார் கொச்பா, ஆகியோரின் பாரம்பரியங்கள், புலப்படாத சக்தியொன்றிலிருந்த கிடைத்த பலமும், விசுவாசமும் இவை அனைத்தும் அரபுக்களைத் தடுத்து நிறுத்தின.

o

அத்தியாயம் பத்து

பராக் பென் கானான் ஐரோப்பாவில் பல ஆயுதப் பேரங்களையும், ராஜதந்திரக் கடமைகளையும் நிறைவேற்றியிருந்தார். இஸ்ரேலுக்கு திரும்பிப் போக இருந்த ஆர்வம் காரணமாக அங்கு திரும்ப அனுமதி கேட்டார். என்பதாவது வயதைத் தாண்டியிருந்த அவரில், காரியங்களைச் செய்வதற்கேற்ற வலு குறைந்து வந்தது. ஆனால் அதை அவர் ஒரு போதும் ஒத்துக் கொள்ள மாட்டார்.

அவர் தாய்நாடு திரும்புவதற்காகக் கப்பலொன்றில் இடம் பிடிக்க நேப்பிள்ஸ் வந்தார். அந்த நகரத்திலே தலைமைச் செயலகம் அமைத்துப் பணியாற்றி வந்த இஸ்ரேலியர்கள் அவரை வந்து சந்தித்தனர். அவர்களின் அதிகமானோர் கப்பல்கள் எவ்வளவு சீக்கிரம் பெற்றுக் கொள்ள முடியுமே அவ்வளவு சீக்கிரத்தில் ஐரோப்பாவின் இடம்பெயர்ந்தோர் முகாம்களை வெறுமையாக்கி விடத் துடிப்போடு வேலைசெய்து கொண்டிருந்த அலியா பெற் முகவர்களாகும். இடம் பெயர்ந்தோர் முகாம்களில் இருந்த மனிதவலு இஸ்ரேலில் அவசரமாகத் தேவைப்பட்டது. இராணுவ சேவை புரியக் கூடிய வயதில் இருந்தவர்கள் இஸ்ரேலில் காலடி வைத்த உடனேயே பயிற்சி முகாம்களுக்குக் கொண்டு செல்லப் பட்டனர். மற்றையவர்களில் பெரும்பாலானோர் பாதுகாப்பு எல்லைக் குடியேற்றங்களை அமைக்கும் வேலையில் ஈடுபடுத்தப்பட்டனர்.

பராக் டென் கானானின் வரவு ஒரு ஒன்று கூடலுக்கான சந்தர்ப்பமாகிப்போக, இஸ்ரேலிய செயலகத்தில் நடு இரவு தாண்டியும், விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. பிராந்திக்கு மேல் பிராந்தியாக அருந்திக் கொண்டே பராக் பென் கானான் நிகழ்த்திய ''லேக் சக்சஸின் புதுமை'' பற்றியும், தற்சமயம் பேரம் பேசி முடித்திருந்த இரகசிய ஆயுத பேரம் பற்றியும் அவர்கள் திரும்பத் திரும்பக் கேட்டறிய விரும்பினார்கள். சம்பாஷணை போரை நோக்கித் திரும்பியது. ஜெருசலேம், முற்றுகையிலிருப்பது பற்றிப் பொதுவாகவே உற்சாமின்மை காணப்பட்டது. லற்ரறன் மீது மேற்கொள்ளப்பட்ட இன்னொரு தாக்குதலும் வெற்றியளிக்கவில்லை என்ற செய்தியும் வந்திருந்தது. உள்ளே இருக்கும் ஒரு லட்சம் மக்களும் எப்படித் தாக்குப் பிடிப்பார்கள் என்று யாருக்கும் தெரியவில்லை.

வீடிகாலை இரண்டு மணியளவில், வெசுவியஸ் என்ற பெயர் கொண்ட நாலாயிரம் தொன் இத்தாலீய மோட்டர் கப்பலின் காரணமாக இஸ்ரேலியர்கள்

இங்கு நேப்பிள்ஸிலேயே நடத்திக் கொண்டிருக்கும் சிறிய பிரத்தியேகப்போரைப் பற்றினதாக சம்பாஷணை மாறியது. ரயர் நகரத்துக்கு ஆயுதங்களை எடுத்துச் செல்ல இந்தக் கப்பலைச் சிரியர்கள் வாடகைக்கு அமர்த்தியிருந்தார்கள். இதில் ஏற்றப்பட்டிருந்த சரக்குகள், ஐரோப்பாவெங்கும் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததோடு, பத்தாயிரம் றைபிள்கள், பத்து லட்சம் சுற்று ரவைகள், ஆயிரம் இயந்திரத் துப்பாக்கிகள், ஆயிரம் மோட்டார்கள், வேறு பலரக ஆயுதங்கள் ஆகியவற்றையும் உள்ளடக்கியிருந்தது.

ஒரு மாதத்துக்கு முன் வெசுவியஸ் பயணப்படத் தயாராக நேப்பிள்ஸ் துறைமுகத்தில் நின்று கொண்டிருந்தது. இந்தக் கப்பலைப்பற்றியும், அதன் சரக்குகளின் தன்மையைப் பற்றியும் சிநேக பூர்வமான இத்தாலிய சுங்க அதிகாரியொருவரிடம் இருந்து கேள்விப்பட்ட இஸ்ரேலியர்களின் சுழியோடிகள் வெசுவியஸ் புறப்பட இருந்த நாளுக்கு முதல் நாளிரவு, நீர்க்கரையோடு நீந்திச் சென்று, கப்பலின் கீழ் சுழியோடிச் சென்று, காந்தக் கண்ணிவெடிகளைக் கப்பலின் பக்கங்களில் ஒட்டவைத்து விட்டார்கள். இந்தக் கண்ணிவெடிகள் கப்பலின் பக்கங்களில் மூன்று பெரிய துவாரங்களை ஏற்படுத்தினதுமல்லாமல், அவர்கள் எதிர்பார்த்த அளவுக்கு வெடிமருந்துகளை வெடிக்கப் பண்ணத்தவறி விட்டன. கப்பல் முழுதாக மூழ்கிப்போய் விடவில்லை. ஆனால் கட்டப்பட்ட இடத்திலேயே பகுதி மூழ்கிப்போய்க் கிடந்தது. அந்தநேரத்திலிருந்து. நடந்து கொண்டிருக்கும் ஒரு பூனை- எலி விளையாட்டின் மையமாக வெசுவியஸ் ஆகியது.

இந்தப் பல கோடிக்கணக்கான சரக்குகளுக்குப் பொறுப்பாக இருந்த சிரியக் கேணலான பௌட்சி கப்பலை உயர்த்தி, உலர் துறையுள் (கப்பலைப் பிரமாண்டமான தொட்டி போன்ற ஒன்றினுள் செலுத்தி நிறுத்திபபின் கடல் நீரை வெளியேற்றி திருத்த வேலைகள் மேற்கொள்ளுமிடம்) நிறுத்தி, துவாரங்களை அடைப்பித்தான். ரோமிலும், பரிசிலும் இருந்து ஐம்பது அரபு மாணவர்களைஅந்தப்பிரதேசத்தைப்பாதுகாக்கக்கொண்டுவந்தான்கப்பலின்ஊழியர்களான பன்னிரெண்டு பேரை அரபுக்களால் மாற்றீடு செய்தான். கப்பலின் கப்டனும், 1 வது 2 வது அதிகாரிகள் மட்டுமே கப்பலை வாடகைக்கு விட்ட நிறுவனத்தில் இருந்து வந்தவர்களாயிருந்தார்கள். இதனால் அட்டகாசம் பண்ணும் கேணல் பௌட்சியில் மேலும் வெறுப்படைந்த கப்பலின் கப்டன், இஸ்ரேலியர்கள் தனது கப்பலை மீண்டும் சேதமாக்காத பட்சத்தில் அவர்களுக்கு உதவச் சம்மதித்தான். திரும்பவும் வெசுவியஸ் பயணப்படப்போவதானசெய்திஅவர்களுக்குக் கிடைத்தது.

இந்தக் கப்பலை, ரயருக்குப் போய்ச் சேர இஸ்ரேலியர்கள் அனுமதிக்கக் கூடாது. ஆனால் கப்பலை நிறுத்துவது எப்படி? அவர்கள் கப்பல் கப்டனுக்கும், இத்தாலிய அதிகாரிகளுக்கும் கப்பலைத் துறைமுகத்தினுள் வைத்துத் தகர்க்க மாட்டோம் என்று உறுதி அளித்திருந்தார்கள். ஆனால், பெரும்கடலினுள்சென்று விட்டால், மூன்று கோர்வெற்ஸ் ரக (Gorvettes) கப்பல்களைக் கொண்ட இஸ்ரேலியக் கடற்படையால் அதனைக் கண்டு பிடிக்கக்கூட முடியாது.

தான் முன்பு பலமுறை தீர்க்க உதவிய சிக்கலான பிரச்சினைகளால் ஏற்பட்டிருந்த அனுபவம் காரணமாக இந்த நிலைமையின் முக்கியத்துவத்தை நன்றாக

உணர்ந்தார். விடிந்து போனபோது அவர் தனது இன்னுமொரு வியத்தகு திட்டங்களில் ஒன்றைத் தீட்டியிருந்தார்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு வெசுவியஸ் நேப்பிள்ஸ்துறைமுகத்தினைவிட்டு வெளியேறிச் சென்றது. அப்படிச் செல்லும் போதே, வானொலித் தொடர்புக்குப் பொறுப்பான இரண்டாவது அதிகாரியை, மேலதிக பாதுகாப்பு நடவடிக்கையாக அப்பொறுப்பிலிருந்து கேணல் பௌட்சி விடுவித்து விட்டான். திட்டம் தீட்டியவர்களுக்கு வானொலித் தொடர்பு தேவையாக இருக்கவில்லை. வெசுவியஸ் புறப்பட்ட அதே கணம் செய்தி இஸ்ரேலியர்களுக்குக் கிடைத்து விட்டது. துறைமுகத்திலிருந்து வெளியே வெசுவியஸ் வரவும், இத்தாலிய சுங்கப்பகுதியின் கட்டர் ரகக் கப்பலொன்று எச்சரிக்கைச் சங்கொலியுடன் விரைந்து வந்து இடைமறிக்கவும் சரியாக இருந்தது.

இத்தாலி மொழி எதுவும் தெரியாத கேணல் பௌட்சி கப்டனது அறைக்கு விரைந்து சென்று என்ன நடக்கிறது என்று ஆத்திரத்துடன் அதிகாரத்துடன் கேட்டான். கப்டன் தோள்களைக் குலுக்கிக் கொண்டே ''யாருக்குத் தெரியும்'' என்றான்.

''ஹெலோ வெசுவியஸ், ஏறிச் சோதனையிடப்படுவதற்கு ஆயத்தமாக நிற்கவும்'' ஒலிபெருக்கி முழங்கியது.

யேக்கப் ஏணியொன்று கப்பலில் இருந்து தொங்கவிடப்பட இத்தாலிய சுங்கப்பகுதிச் சீருடைகளில் இருந்த இருபது பேர்கள் மடமடவென ஏறி மேலே வந்தார்கள்.

''இதன் பொருள் என்னவென்று எனக்குத் தெரிந்தாக வேண்டும்'', கேணல் பௌட்சி கத்தினான். சோதனைக்காக ஏறிய குழுவினரின் தலைவரான பாரிய உருவத்தையும், சிவப்பு - வெண்மை கலந்த பெரும் தாடியையும், பராக் பென் கானானின் சாயலையும் கொண்டிருந்த ஒருவர் முன்வந்து கேணல் பௌட்சியுடன் அரபு மொழியில் பேசினார். ''உங்களுடைய மாலுமிகளில் ஒருவர் நேரத்துக்கு வெடிக்கும் குண்டொன்றைச் சாமான்கள் வைக்கும் இடத்தில் பொருத்தியிருப்பதாக எமக்குத் தகவல் வந்துள்ளது'' என்றார்.

''அப்படியிருக்க முடியாது'' பௌட்சி கத்தினார்.

''அவனை யூதர்கள் விலைக்கு வாங்கிவிட்டதாக அறிகிறோம்.'' குழுத் தலைவர் உண்மையான கவலை தொனிக்கக் கூறினார். ''குண்டு வெடிக்க முன் துறைமுகப் பகுதியை விட்டுக் கப்பலை நகர்த்த வேண்டும்'' என்றார் தொடர்ந்து.

பௌட்சி குழப்பமடைந்து போனான். அவனுக்குக் கப்பலோடு வெடித்து மூழ்கிடபோகச் சிறிதும் இஷ்டமில்லை. அதேவேளை இந்த விசித்திரமான இத்தாலிய சுங்க அதிகாரிகளையும் கொண்டு, துறைமுகத்துக்கு வெளியே செல்லவும் இஷ்டப்படவில்லை. மறுபக்கத்தில் குண்டுப்பீதி காரணமாகத் தன்னைக் கப்பலில்

இருந்து வெளியேற்றுமாறு கோரித் தன் கோழைத்தனத்தை வெளிக்காட்டவும் அவன் விரும்பவில்லை.

நீங்கள் உங்கள் மாலுமிகளை இங்கே வரிசைப்படுத்துங்கள். நாங்கள் குற்றவாளியைக் கண்டுபிடித்ததும், அவன் குண்டை எங்கே வைத்திருக்கிறான் என அவனே தெரிவிப்பான்'' என்றார் அந்தப் பெரிய தாடியுடன் கூடிய குழுத் தலைவர்.

அரபு மாலுமிகள் குழு ஒருங்கே கொண்டு வரப்பட்டு விசாரணைக்காக முகப்புத் தளத்துக்குக் கொண்டு செல்லப்பட்டனர். இவர்கள் விசாரணை செய்யப்பட்டுக் கொண்டிருக்கும் போது, வெசுவியஸ் மூன்று மைல் எல்லையைத் தாண்டி வெளியே சென்று விட்டது. சுங்கப்பகுதி கட்டர் ரகக் கப்பலும் நேப் பிள்சுக்குத் திரும்பிப் போய்விட்டது. மாறுவேடத்திலிருந்த அலியா பெற் முக வர்கள் பிஸ்டல்களை எடுத்துக் கொண்டு, அவைகளைக் காட்டி, பௌட்சியை யும் மாலுமிகளையும் அடைத்துப் போட்டு விட்டனர். அன்று பகல் பொழுதில் தாங்கள் அங்கிருந்து தூரம் சென்ற பிறகு மாலுமிகளுக்கு ஒரு திசையறிகருவி, ஒரு வரைபடம், ஒரு வலிக்கும் படகு ஆகியவற்றைக் கொடுத்து கடலில் அலைந்து செல்ல விட்டுவிட்டனர். பௌட்சி அவனது அறையிலேயே சிறை வைக்கப்பட்டான். இஸ்ரேலியர்கள் மாலுமிகளாகப் பொறுப்பேற்றுக் கொள்ளக் கப்பல் ஆழ்கடலை நோக்கிப் பறந்தது.

முப்பத்தாறு மணித்தியாலங்களுக்குப் பிறகு, வெசுவியஸ் கபாலச் சின்னம் பொறித்த கொடிகளைப் பறக்கவிட்டபடி வந்த இரு ''கோர் வெற்ஸ்'' ரகக் கப்பல்களைச் சந்தித்தது. கோர்வெற்ஸ்கள் இரண்டும் வெசுவியசின் இரு பக்கத்திலும் தங்களை இணைத்துக் கொண்டன. சரக்குகளையும், மாலுமிகளை யும், மாற்றி ஏற்றிக் கொண்டு, வானொலிக் கருவியை நொருக்கி விட்டுப் போய்விட்டன. பின்பு வெசுவியஸ் நேப்பிள்ஸ் திரும்பியது.

சேணல் பௌட்சி, கோபத்தால் துள்ளிக் குதித்து இந்த நடுக் கடல் கொள்ளையைப் பற்றி முழு விசாரணை நடத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்தான். யூதர்களுக்குக் கட்டர் ரகக் கப்பல்களையும், சீருடையையும் கொடுத்ததாக அரபுக்களால், குற்றம் சாட்டப்பட்ட இத்தாலிய சுங்கப் பகுதி யினர், தங்களுக்கு எதுவுமே தெரியாதென மறுத்தனர். கட்டர்களுடைய போக்கு வரத்துக்கள் எல்லாம் தெளிவாக யாரும் பார்க்கக் கூடிய விதத்தில் பதிவு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவித்தனர். அரபு மாலுமிகள், அரபுக்களின் தோல்வியை ஒப்புக் கொள்ளாத வழக்கத்தைப் பின்பற்றியதால், பன்னிரெண்டு பேரிடமிருந்தும், பன்னிரெண்டு விதமான கதைகள் பிறந்தன. இத்தாலிய அர சின் ஏனைய உத்தியோகத்தர்களோ, கடற்கொள்ளை ஏதாவது நடந்திருந்தால் அதைப்பற்றித் தங்களுக்கு எதுவும் தெரியாதென மறுத்தனர். ஏனெனில், கப்பல் கப்டனும், 1வது, 2வது, அதிகாரிகளும், சரக்குகள் ஏற்றும் பகுதியில் வெடிமருந்துகள் இருந்ததால் மாலுமிகள் தங்களைக் கைவிட்டுப் போனதாகச் சத்தியம் பண்ணிச் சொன்னார்கள்.

விரைவில் இரண்டு சட்டத்தரணிகளும் இந்த விஷயத்தில் ஈடு பட்டு விஷயங்களைக் குழப்பியடித்து விட்டதால் உண்மைக் காரணங்களை வெளிக் கொணரவே முடியவில்லை. வெசுவியஸ் உண்மையில் ஒரு யூதக் கப்பல் என்றும் அதைத்தான் கொள்ளையடித்து விட்டார்கள் என்றும், பௌட்சி ஒரு யூத உளவாளி என்றும், கதைகளை நேப்பிள்சில் இருந்த யூதர்கள் பரப்பி இந்தச் சம்பவம் பற்றிய குழப்பத்துக்கு மெருகு சேர்த்தனர்.

கேணல் பௌட்சி தனக்குத் தெரிந்த ஒரே ஒரு பாதையைத் தெரிந்து கொண்டான். அவன் போலியான ஒரு தற்கொலையை நடத்திக் காண்பித்து விட்டுத் திரும்பவுடன் அவனைப் பற்றிய கதைகள் எதுவும் வராதபடி மறைந்து விட்டான். அவனது மறைவு பற்றிக் கவலைப்பட யாரும் இருக்கவில்லை.

ஆயுதங்கள் மாற்றப்பட்ட இரண்டு நாட்களின் பின் இரண்டு கோர் வெற்சுகளும் இப்போ ஸ்டார் ஒவ் டேவிட்டைப் பறக்கவிட்டபடி, பராக் பென் கானானை ஒரு வெற்றிகரமான பிரவேசத்துக்காக இஸ்ரேல் மண்ணுக்குக் கொண்டு வந்து சேர்ந்தன.

அத்தியாயம் பதினொன்று

ரெல் அவிவுக்குச் சமுகமளிக்குமாறு அரி பென் கானானுக்கு உத்தரவிடப் பட்டது. ரமாற் கன்னில் இருந்த ஓய் வெடுக்கும் சாலையொன்றில் தலைமைச் செயலகம் அமைந்திருந்தது. அதனுடைய தோற்றத்தைக் கண்டு அரி வியப்படைந் தான். கட்டிடத்தின் உச்சியில் ஸ்டார் ஒவ் டேவிட் பறந்து கொண்டிருந்தது. இஸ்ரேலின் புதிய இராணுவத்தின் சீரு டையை அணிந்த காவலர்கள் எங்கும் நிறைந்திருந்தார்கள். உட்பிரவேசிப்பதை அனுமதிக்கும் முன், அடையாள ஆவ ணங்களை பாதுகாப்புப் பொலிசார் கேட்டுச் சரி பார்த்தனர். காரியாலயத்துக்கு வெளியே நூற்றுக்கு மேற்பட்ட ஜீப்புகளும், மோட்டார் சைக்கிள்களும், நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததோடு, எங்கும் இராணுவத்தின் பாணியும், முறுக்கும் நிறைந்திருந்தன.

உள்ளே பெரிய தொலைத் தொடர்புக் கட்டுப்பாட்டுப் பணியகத்தில் தொலைபேசி மணிகள் அடிக்கடி அடித்துக் கொண்டிருந்தன. போர் முனைகளின் விபரங்கள் தெளிவாகக் குறிக்கப்பட்டிருந்த பெரிதாக்கப் பட்ட வரைபடங்கள் மாட் டியிருந்த நடவடிக்கைக் கட்டுப்பாட்டு அறை ஊடாக அரி, அழைத்துச் செல்லப் பட் டான். தகவல் அறையிலோ தொகையான வானொலிக் கருவிகளின் தொகுதி யொன்று போர் முனைகளோடும், குடியேற்றக் கிராமங்களோடும் தொடர்பு கொண்டு கொண்டிருந்தன. ஒரேயொரு மேசையைக் கொண்டிருந்த நடமாடும் ஹகானா தலைமைச் செயலகம் எவ்வளவு தூரம் முன்னேறியிருக்கிறது என்று தனக்குத்தானே அரி சொல்லிக் கொண்டான்.

ஹகானாவின் முன்னைய தலைவரான அவிடான், பிரிட்டிஷ் படைகளில் சேவையாற்றியதால் பயிற்சி பெற்றிருந்தவர்களும் அல்லது நீண்ட காலம் அரபுக் களுக்கு எதிராகப் போரிட்டதால், அரியைப் போல் அனுபவம் பெற்றி நந்தவர் களும் தங்கள் இருபதுகளில் அல்லது முப்பதுகளில் இருந்தவர்களுமான இளைய தலைமுறையினருக்குத் தலைமை பதவிகளை விட்டுக் கொடுத்திருந்தார்.

தற்போது இராணுவத்துக்கும், தற்காலிக அரசுக்கும் இணைப்புப்பாலமாக விளங்கிவந்ததோடு, உத்தியோக பூர்வமாக எந்தப் பதவிகளும், வகிக்காத போதி லும், பொதுவான கொள்கை வகுப்பில் ''முதுபெரும் கொமாண்டர்'' என்ற வகையில் செல்வாக்கோடு விளங்கினார்.

அவர் அரியை அன்போடு வரவேற்றார். அவிடான் களைத்துப் போய்விட் டாரா? அல்லது இப்போதுதான் உத்வேகம் பெற்றிருக்கிறாரா? அவர் மகிழ்ச்

சியாய் இருக்கிறரா? அல்லது சோகமாயிருக்கிறாரா? என்று அரிக்குச் சொல்ல முடியாதிருந்தது. ஏனெனில், அவிடான் எப்போதும் போல், பயபக்தியான முக பாவத்தையே இப்போதும் கொண்டிருந்தார். அவர்கள், அவரது அறைக்குள் பிரவேசிக்கும் போதேதொலைபேசித் தெடர்புகளையும், வேறு இடைஞ்சல் களையும் ஏற்படுத்த வேண்டுமென உத்தரவிட்டுக் கொண்டே சென்றார்.

''இங்கே நீங்கள் ஒரு அற்புத உலகத்தை வைத்திருக்கிறீர்கள்'' என்றான் அரி.

''பழைய நாட்களைப் போல் இல்லைத்தான்'' ஆமோதித்த அவிடான் தொடர்ந்து, ''எனக்கே இதனை நம்புவது கடினமாயிருக்கிறது. ஒவ்வொரு நாள் காலையிலும் இங்கு வாகனத்தில் வரும்போதும், பிரிட்டிஷார் திரும்ப வந்து எங் களையெல்லாம் பிடித்து ஆக்கிரேச் சிறைக்குள் தள்ளி விடுவார்களோ என்று எதிர் பார்த்துக் கொண்டு வரும்படிதான் இருக்கிறது''.

''நீங்கள் சுயமாகவே ஒய்வு பெற்றுக் கொள்வீர்கள் என்று, நாங்கள் யாரும் எதிர்பார்க்கவில்லை.''

இந்த இராணுவத்தையும், பெரிய போரொன்றை நடத்துவதற்கு இளை ஞர்கள்தான் பொருத்தமானவர்கள். என் வயோதிப காலத்தில் கொள்கை வகுப்பில் ஈடுபட விடுங்கள்.''

''போர் எப்படிப் போகிறது?'' அரி கேட்டான்.

''ஜெருசலேம், லற்ரறன் அதுதான் எங்கள் பிரச்சினை. பழைய நகரத் தினுள் இன்னும் நீண்ட காலத்துக்குத் தாக்குப் பிடிக்க முடியாது. நங்கள் விரைவில் தடைகளை உடைத்து அங்கே போகாவிட்டால் புதிய நகரம் எவ்வ ளவு கலத்துக்குத் தாக்குப் பிடிக்கும் என்று கடவுளுக்குத்தான் தெரியும். எப்ப டியோ..... உன்னுடைய மாவட்டத்தில் எங்களுக்கு அருமையாக வேலை செய் திருக்கிறாய்.''

''எங்கள் அதிஷ்டம் இருந்தது.''

''ஷாபெட்டில் அதிஷ்டம் எதுவும் இருக்கவில்லை. அந்தக் கான் டப்னா வின் அற்புதமான குழந்தைகளும் அதிஷ்டத்தினால் தாக்குப் பிடிக்கவில்லை. செய்ததைச் சொல்லப் பின்னிக்காதே அரி பென் செமெலிலும் குழந்தைகள். முற்றுகைக்கு உள்ளாகியிருக்கிறார்கள். அவர்களைத் தாக்க ஈராக்கியர்கள் துணிய மாட்டார்கள். அரி, காவுக்ஜி இன்னும் மத்திய கலிலிப் பிரதேசத்தி லிருக்கிறான். அந்த கழிசடையை அங்கிருந்து விரட்ட வேண்டும். அதற்காகத் தான் உன்னை இங்கே வரும்படி சொன்னேன். உன்னுடைய அதிகாரத்துக்குட் பட்ட பகுதிகளை, அதிகரிக்க விரும்புகிறேன். இந்தத் திட்டத்தை நீ தான் பொறுப்பேற்க வேண்டும். புதிய ஆயுதங்களுடன், ஒரு பட்டாலியன் துருப்புக் களை உனக்கு அங்கு சில வாரங்களில் அனுப்பி வைக்முடியும்.''

''எப்படி அதைச் செய்யலாம் என்று கருதுகிறீர்கள்?''

''நசரேத்தை பிடிக்க முடியுமானால், எல்லாவற்றையும் பிடித்தது போல் தான். முழுக் கலிலியும் எங்கள் வசம் வரும். கிழக்கிலிருந்து மேற்கே செல்லுப்எல்லாப் பாதைகளும் தான்.

''இந்தப் பகுதியில் இருக்கும் அரபுக் கிராமங்களை என்ன செய்வது?''

''அவை உனக்குத் தெரிந்த மாதிரி, அநேகமானவை கிறீஸ்தவ கிராமங்கள். அவைகள் ஏற்கனவே எங்களைச் சந்திக்கத் தூதுக்குழுக்களை அனுப்பி வைத்துள்ளன. அவர்கள், காவுக்ஜியைச் சென்றுவிடும்படி கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். எந்த விதத்திலும் அவர்கள் போரிடுவதில் ஆர்வம் கொண்டிருக்கவில்லை.''

''நல்லது.''

''நாங்கள் இந்த முயற்சியில் ஈடுபடும் முன்னர் உன்னுடைய பகுதிகளை முற்றாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது அவசியம் அரி.''

''எஸ்தர் கோட்டையைச் சொல்கிறீர்களா?''

அவிடான் ஆமெனத் தலையை அசைத்தார்.

''எஸ்தர் கோட்டையைப் பிடிக்க எனக்குப் பீரங்கிகள் வேண்டும். நான் உங்களுக்கு ஏற்கனவே எழுதியிருந்தேன். குறைந்தது மூன்று அல்லது நான்கு டேவிட்காக்கள் வேண்டும்.''

''நீ தங்கம் தரும்படி கேட்கலாமே?''

''இங்கே பாருங்கள் எஸ்தர் கோட்டையின் அணுகு வழிகளை இரு கிராமங்கள் காத்து நிற்கின்றன. நீண்ட தூர வீச்செல்லையை உடைய பீரங்கிகள் இல்லாமல் அந்த இடத்துக்குச் செல்ல முடியாது.''

''சரி நான் அவற்றை உனக்கு அனுப்பி வைக்கிறேன், சொல்லி விட்டுத் திடுதிப்பென எழுந்து நின்ற அவிடான், அறையில் அங்கும் இங்கும் நடக்கலானார். அவருக்குப் பின்னால் போர் நடக்கும் பிராந்தியங்களைக் குறித்திருந்த வரைபடம் இருந்தது. அவிடான், தன்னை ரெல் அவிவுக்கு அழைத்ததில், விசித்தியாசமாக ஏதோ இருப்பது நீண்ட நேரமாகவே அரியின் உணர்வில் உறுத்திக் கொண்டிருந்தது. புதிய திட்டம் ஒன்றை விவாதிப்பதை விட அதிகமான ஏதோ ஒன்று அந்த அழைப்பின் பின்னணியில் இருப்பது தெரிந்திருந்தது. அந்த விஷயத்துக்குத் தான் அவிடான் தன்னை இட்டுச் செல்கிறார் என்று உணர்ந்து கொண்டான்.

வழுக்கைத் தலையரான அந்த மனிதர் மெதுவாகச் சொன்னார் ''அரி, இருவாரங்களுக்கு முன் அபுயேஷாவைக் கைப்பற்றும்படி உனக்கு உத்தரவிடப்பட்டது.

''அப்போ இதற்காகத்தான் என்னை இங்கு அழைத்திருக்கிறீர்கள்''

''கூட்டுப்படை அதிகாரிகள் கூட்டத்தில் இந்த விஷயம் கால்பந்தைப் போல் உதைக்கப்படுவதற்கு முதல் நாமிருவரும் இதைப் பேசித் தீர்ப்பது நல்ல தென்று நான் நினைக்கிறேன்.''

''அபுயேஷா எங்களுக்கு ஒரு அச்சுறுத்தல் அல்ல என்பது பற்றிய அறிக்கையை உங்களுக்கு அனுப்பியிருக்கிறேன்.''

''நாங்கள் வேறு விதமாக நினைக்கிறோம்.''

''அந்தப் பகுதிக் கொமாண்டர் என்ற ரீதியில், இதைப்பற்றிய சரியான கணிப்பீடு செய்வதற்கு எனக்கு அதிக வாய்ப்பிருப்பதாக நினைக்கிறேன்.''

''அதைவிடு. அபுயேஷா மொகம்மட் காசியின் ஒரு தளமாக இருக்கிறது. கூலிப்படையினர் உள்வரும் இடமும் அதுதான். கான் டப்னாவுக்கான பாதையை அது தடுத்துக் கொண்டிருக்கிறது.''

அரி உடல் இறுகிப்போய் வேறெங்கோ பார்த்தான்.

நீயும் நானும் ஒருவரையொருவர் மிக நீண்டகாலமாக அறிந்திருப்பதால் சாக்குப் போக்குக்கு அவசியமில்லை.

அரி ஒரு கணம் மௌனமாயிருந்து விட்டு, ''எனக்கு நடக்க கதைக்கத் தெரிந்த நாட்களிலிருந்து அபுயேஷாவின் மக்களை அறிவேன். திருமணங்களை ஒன்றாகக் கொண்டாடி இருக்கிறோம். நாங்கள் மரண வீடுகளுக்கு ஒன்றாப் போயிருக்கிறோம். நாங்கள் அவர்களுடைய வீடுகளைக் கட்டிக் கொடுத்தோம். கான் டப்னாவை அமைக்க அவர்கள் நிலம் தந்தார்கள்.'' என்றான்.

''இவையெல்லாம் நான் அறிவேன், அரி. எங்களுடைய குடியேற்றங்களில் பத்துப் பன்னிரெண்டு இதே பிரச்சினையைத்தான் எதிர் நோக்குகின்றன. ஆனால், நாங்கள் எங்கள் உயிர்களுக்காகப் போராடிக் கொண்டிருக்கிறோம். எங்கள் மேல் படையெடுக்கச் சொல்லி, நாங்கள் அரபு இராணுவங்களுக்கு அழைப்பு விடுக்கவில்லை.',

''ஆனால், எனக்கு அந்த மக்களைத் தெரியும்.'' கதறினான் அரி' ''அவர்கள் எதிரிகளல்ல. தங்களைத் தங்கள் பாட்டில் விட்டுவிட வேண்டும் என்பதைத் தவிர வேறெதையும் வாழ்வில் எதிர்பார்க்காத வெகு சாதாரண மான விவசாயிகள் அவர்கள்'' என்றான்.

''அரி, அழைத்த அவிடான் விறைப்பாகச் சொன்னார், அரபு இராணுவங்களையும், காவுச்ஜியையும் எதிர்த்து நின்று துணிச்சலைக் காட்டிய பல அரபுக் கிராமங்களை நாங்கள் அறிவோம். அபுயேஷாவின் மக்கள் தாங்களே தான் தங்கள் முடிவை எடுத்துக் கொண்டார்கள். அது விரோத மனப்பான்மையல்லாத இடம் என்று நீ சொல்வது, பொறுப்பில்லாத தனமான சிந்தனை அது அழிக்கப்படத்தான் வேண்டும்...,''

''என்னால் முடியாது'' சொல்லிவிட்டு, அரி போக எழுந்தான். ''போய் விடதே'' அவிடான் மெதுவகச் சொன்னார். ''தயவுசெய்து போய்விடாதே.' அந்தப் பெரிய உருவம் கொண்ட விவசாயி இப்போது நிச்சயமாக களைத்துப் போய்விட்டது போல் தோன்றினார். அவருடைய தோள்கள் தொங்கிவிட்டன ''இந்தப் போரில் இருந்து விலகியிருக்கும்படி, பலஸ்தீனிய அரபுக்களை ஆயிரம் தடவைகள் கெஞ்சிக் கோட்டுக் கொண்டோம். அவர்களுடைய வீடுகளில் இருந்து அவர்களை விரட்ட எவருக்கும் விருப்பமில்லை. விசுவாசம் காட்டிய கிராமங்கள் அவர்கள் பாட்டில் விடப்பட்டிருக்கின்றன. மற்றையவை எங்களுக்கு வேறு வழியில்லாமல் செய்து விட்டன. அவைகள் ஆயுதக் கிடங்குகளாகவும், பயிற்சியளிக்கும் முகாங்களாகவும், எங்கள் வாகனத் தொடர்களைத்தாக்குவதற்கும், எங்கள் கிராமங்களைப் பட்டினி போடுவதகுற்கும் தளங்களாகப் பாவிக்கப் படுகின்றன. இவகைளின் காரணமாக ஒரு இலட்சம் சிவிலியன்கள் ஜெருசலேமினுள் பட்டினியாக இருக்கிறார்கள். இதைபபற்றிப் பல வாரங்கள்விவாதித்தோம் எங்களுக்கு வேறு வழியில்லை. அவர்களைக் கொல்லாவிட்டால் நாம் கொல்லப்பபடுவோம்.,'

அரி ஜன்னலருகில் சென்று ஒரு சிகரெட்டை பற்ற வைத்துக் கொண்டான். உணர்வுகள் பிரவகித்துக் கொண்டிருக்க ஜன்னலூடாகவெளியே பார்த்' தான். அவிடான் சொல்வது சரிதான், அது அவனுக்கும் தெரிந்திருந்தது. அரபுக்களுக்கு கொடுக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் யூத குடியேற்றக் கிராமங்களுக்குக் கொடுக்கப்படவில்லை. யூதர்களைப் பொறுத்தவரைஎதிர்த்து நின்றுபோரிடுவதும் கடைசி ரவை வரை போரிட்ட பிறகு, படுகொலைக்குள்ளாக்கப்பட வேண்டியும் இருந்தது.

'அபுயேஷாவைக் கைப்பற்ற உன் இடத்தில் இன்னொருவனை நியமிக்க முடியும். அந்த வழியில் அதைச் செய்ய நான் விரும்பவில்லை. இதைச் செய்வதற்கு உன் மனது இடம் தராவிட்டால், உன் பகுதியிலிருந்து வேறு பகுதிக்குஇடமாற்றம் பெறும் வசதியை உனக்குத் தருகிறேன்.''

''எதற்கு? என்னொரு அபுயேஷாவை, இன்னொரு பெயரில் கைப்பற்றுவதற்கா?

''நீ உன் பதிலைத் தரும் முன் ஒன்று சொல்ல விரும்புகிறேன். நீ குழந்தையாயிருந்த காலம் தொட்டு உன்னை நான் அறிவேன். பதினைந்து வயதிலிருந்து நீ ஒரு போராளியாக இருக்கிறாய். உன்னைப் போன்ற திறமையுடையவர்கள் எங்களிடம் அதிகம் பேர் இல்லை. இவ்வளவு வருட காலத்திலும் கட்டளை ஒன்றுக்கு நீ கீழ்ப்படியாமல் விட்டதை நான் கண்டதேயில்லை.''

அரி ஜன்னலிலிருந்து திரும்பினான். அவனுடைய முகத்தில், கவலை, துன்பம், கண்ந்து விட்ட தன்மை ஆகியன பிரதிபலித்துக் கொண்டிருந்தன. அவன் ஒரு இருக்கையினுள் துவண்டு போய் அமர்ந்தான். ''செய்யவேண்டியதை நான் செய்கிறேன்.'' வாய் முணுமுணுத்தது.

''திட்டத்தைச் செயல்படுத்த ஆரம்பித்து விடு.''

அரி தலையை ஆட்டி விட்டுக் கதவை நோக்கி நடந்தான்.

''ஒரு விஷயம் நீ இப்போ கேணல் பென் கானான்.

அரி, ஒரு விரக்தியான சிறு சிரிப்பொன்றைச் சிரித்தான். ''நான் மிகவும் கவலைப்படுகிறேன் என்னை நம்பு. மிகவும் கவலைப்படுகிறேன்.'' என்றார் அவிடான்.

கேணல் அரி பென் கானானும், அவனது நிறைவேற்று உத்தியோகத்தர், உதவியாளர் ஆக முறையே மேஜர்கள் பென் அமியும், ஜோவாப் யார்க்கோனி யும் எஸ்தர் கோட்டையைப் பிடிப்பதற்கானதும். அபுயேஷாலை அரபுப் படை களின் தளமாக இயங்குவதிலிருந்து தவிர்த்து விடவுமான - ஒப்பரேசன் பியுறிம்-பியுறிம் திட்டத்தைத் தயாரித்தார்கள். ஹுலேப் பள்ளத்தாக்கில் இறுதிக் கைப்பற்றுதல் இதுவாகத்தான் இருக்கும்.

அவிடான் அனுப்புவதாகச் சொன்ன பீரங்கிகள் வரவேயில்லை. உண்மை யில் அரி அவற்றை எதிர்பார்க்கவும் இல்லை. அவன் ஷாபெட்டிலிருந்து, விசு வாசத்துடன் செயலாற்றும் டேவிட்கா மோட்டரையும் ஐம்பது சுற்றுக் குண்டு களையும் சேர்த்தெடுத்துக் கொண்டான்.

பீரங்கிகளின் துணையில்லாமல், கான் டப்னாவில் இருந்து எஸ்தர் கோட்டை மீது நேரடி முன்பக்கத்தாக்குதல் ஒன்று செய்வது முடியாததெனக் கைவிடப்பட்டது. காசியின் நானூறுக்கு மேற்பட்ட ஆட்கள் இன்னும் அந்தப் பகுதியிலிருந்தார்கள். தரத்தில் சிறந்த, ஆயுதங்கள் எஸ்தர் கோட்டையிலிருந்த தோடு, சிறந்த யுத்த மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த நிலைகளும் அவன் வசமிருந்தன.

அத்தோடு கொன்கிறீட் தடுப்புகளுக்குள் இருக்கும் காவுக்ஜியின் ஆட்கள் ஒரு தற்காப்பு யுத்தத்தில் வழமையைக் காட்டிலும் தங்கள் திறமையை அதிகம் காட்டுவார்கள் என்றும், அரிக்குத் தெரியும்.

அரி மூன்று அரபுக் கிராமங்களைப் பற்றிக் கவலைப்பட வேண்டியிருந்தது. கோட்டைக்குப் போகும் வழியில் முதலாவதாக இருந்தது, அபுயேஷாவே. உயரே, லெபனான் எல்லையில், கோட்டைக்குள் செல்லும் வழியின் இரு பக்கமும் இரு கிராமங்கள் அமைந்திருந்தன. காசி தன் ஆட்களை இந்த இரு கிராமங் களிலும் நிறுத்தியிருந்தான். அரி கோட்டைக்குப் பின்புறமாகச் சென்று தாக்க உத்தேசித்தான். அப்படிச் செய்வதற்கு இந்த இரு கிராமங்களையும் சுற்றிக் கொண்டு போக வேண்டியிருந்தது.

எஸ்தர் கோட்டையைக் கைப்பற்றச் செல்லும் அணியினர் மூன்று பிரிவுக ளாக முன்னேறத் திட்டமிடப்பட்டது. முதல் பிரிவுக்கு அரி தலைமை தாங்கிச் சென்றான். டேவிட்கா, அதன் வெடிகுண்டுகளைச் சுமந்து கொண்டு, ஆட்டு இடையர்கள் பாவிக்கும் குறுகலான பாதைகளால் சென்று லெபனான் எல்லைக் குச் சென்றார்கள். அவனுடைய நோக்கம் அந்த இரு கிராமங்களில் ஒன்றின்

அருகில் செல்வதே. பயணம் மிகக் கஷ்டமானதாகவும், அபாயகரமானதாகவும் இருந்தது. தங்கள் பாதையை வேறு திசைகளுக்கு மாற்றி, மேலதிகமாகப் பல மைல் தூரங்களைச் சுற்றுப் பாதையில் கடந்து, கிராமங்களின் பின்புறங்களுக்கு எவர் கண்ணிலும் படாமல் செல்லப் பாடுபட வேண்டியதாயிற்று. சூழ்ந்திருந்த இருள், மலைப்பயணத்தின் கஷ்டங்கள், டேவிட்காவின் நிறை ஆகியவற்றோடு போராட வேண்டியிருந்தது. முப்பத்தைந்து ஆண்களும், பதினைந்து யுவதிகளும், ஆளுக்கொரு டேவிட்கா குண்டைச் சுமந்து சென்றார்கள். இன்னும் ஐம்பது பேர் பாதுகாப்பளித்துக் கொண்டு வந்தார்கள். அரியுடைய கால்கள் இன்னமும் தொல்லை கொடுத்தாலும், தன்னுடைய பிரிவை மலையின் உயரத்துக்கு இரக்கமற்ற விதமான வேகத்தில் கட்டாயப்படுத்தி நடத்திச் சென்றான். தங்களுடைய இலக்குக்கு விடிவதற்குள் சென்றடையா விட்டால் முழுத் திட்டமும் தோல்வியடைந்து விடும்.

அதிகாலை நான்கு மணிக்கு மலை உச்சிக்கு களைத்துப் போய்வந்து சேர்ந்தார்கள். ஆனால் ஒய்வெடுக்க இப்போ நேரம் இல்லை. உயிர் மூச்செறியும் வேகத்தில் மலைஉச்சிக்கு அருகோடு சென்ற பாதையில் முதல் கிராமத்தை நோக்கிச் சென்றார்கள். கிராமத்திலிருந்து சிறிது அகலச் சென்று, அக்கிராமத்தின் மேல் கண்காணிப்புச் செய்து உதவிக் கொண்டிருந்த ஒரு சிநேக பூர்வமான அரபு நாடோடி இனத்தாவின் ரோந்துப் பிரிவொன்றோடு சந்திப்பை மேற்கொண்டனர். இந்த அரபு நாடோடிகள் அந்தப் பகுதியில் எதிரிகள் எவரும் இல்லையென அரிக்கு அறிவித்தனர்.

அந்தக் கிராமத்திலிருந்து இரு மைல்கள் தூரத்திலிருந்த ஒரு சிலுவை யுத்தக் கோட்டை இடிபாடுகளினுள் தன் பிரிவை ஒளிந்திருக்கப் பண்ணினான் அரி. விடிந்து கொண்டிருக்கும்போது மறைவிடங்களை நாடி, களைப்புடன் சரிந்தார்கள். முழுப்பகல் வேளையும், நாடோடிகள் காவலுக்கு நிற்க, அவர்கள் அங்கே மறைந்திருந்தார்கள்.

அடுத்த தாளிரவு, மற்ற இரு அணிகளும் எயின் ஓர் தலைமைச் செயலகத்திலிருந்து புறப்பட்டன. மேஜர் டேவிட் பென் அமி தனது ஆட்களை மலைச் சரிவில் இப்போது பழக்கப்பட்டு விட்ட பாதையில் நடத்திச் சென்று கான்டப்னா போய்ச் சேர்ந்தான். விடியும்போது கான் டப்னா சென்ற அவன் காட்டுப் பகுதிகளில் மறைந்து கொண்டான்.

இறுதி, அணி மேஜர் ஜோவாப் யார்க்கோனியின் தலைமையில் அரி சென்ற பாதையிலேயே சென்றது. ஆனால், அவர்கள் அரி மறைந்திருந்த கிராமத்தையும், எஸ்தர் கோட்டையையும் கடந்து இரண்டாவது கிராமத்தை அணுக வேண்டி இருந்ததால், அவர்களை விடக் கூடிய தூரம் பயணம் செய்ய வேண்டி இருந்தது. ஆனால், அவர்களைப் போல டேவிட்டையும், அதன் வெடிமருந்துகளையும் சுமந்து செல்ல வேண்டி இருக்காததால் பயணம் அதிவேக விரைவில் நடந்தது. இப்போதும், இந்த அரபு நாடோடிகள் யார்க்கோனியின் பிரிவைச் சந்தித்து, யார் கண்ணிலும் படாமல் அவர்களின் இலக்குக்கு அழைத்துச் சென்றார்கள்.

இரவாகியபோது, அருகாமையிலிருந்த கிராமத்துக்கு, நாடோடித் தலை வனை, அவர்களை சரணடையும்படியான காலக்கெடுவோடு அனுப்பி வைத் தான். அதற்கிடையில் கோட்டையில் ஒளித்திருந்த தன் ஆட்களைக் கிராமத்தின் அருகாமைக்கு நகர்த்தினான். முக்தாரும், அங்கிருந்த காசியின் எண்பது வீரர் களும் இது வெறும் மிரட்டல் என்றும், தங்களுக்குத் தெரியாமல் எந்த யூதனும் தங்களுக்குப் பின்னால் உள்ள மலைக்கு வந்திருக்க முடியாதென்றும், நினைத் தார்கள். நாடோடித் தலைவன், அரியின் ஆட்கள் மலையில் இருப்பதை நிரூபிக்க வேண்டியதன் அவசியத்தை வந்து தெரிவித்தான். அரி, டேவிடகாவை இருமுறை வேட்டுக்களைத் தீர்க்க வைத்தான்.

மண்குடிசைகளில் இருடசின்கள் சின்னா பின்னமாகச் சிதறிவிட்டன. அரபுக்களுக்குத் தேவையான நிரூபணம் கிடைத்து விட்டது. இரண்டாவது குண்டு வீழ்ந்ததுமே, அதிகாரிகளின் தலைமையில் கூலிப்படையினர்கள் லெப னான் எல்லையை நோக்கி விழுந்தடித்துக் கொண்டு ஓடினார்கள். வெள்ளைக் கொடிகள் எங்கும் ஏற்றப்பட்டன. அரி கிராமத்தைக் காக்கத் தன் பிரிவின் சிறு பகுதியை அனுப்பி விட்டு, மிகுதி ஆட்களுடன் யார்க்கோவி ஏற்கனவே தாக்கு தலை ஆரம்பித்து விட்ட இரண்டாவது கிராமத்தை நோக்கி விரைந்தான்.

அரி வந்து இருபதே நிமிடங்களுக்குப் பிறகு, மூன்று டேவிட்கா குண்டுகள் ஏவப்பட்ட பிறகு, கிராமம் சரணடைந்தது. காசியின் இன்னொரு நூறுபேர் லெபனான் எல்லையை நோக்கி ஓடினார்கள். அரபுக்களிடையே பயங்கரத்தை யும், அழிவையும் ஏற்படுத்துவதில், வியப்புக்குரிய அந்த ''சிறிய டேவிட்'' தன் பங்கைக் கச்சிதமாக ஆற்றியிருந்தது. இரு கிராமங்களும் எவ்வளவு விரைவாக வீழ்ந்தனவென்றால், அவை வீழ்ந்து விட்டதே எஸ்தர் கோட்டையில் இருந்தவர் களுக்குத் தெரிந்திருக்கவில்லை. தூரத்தில் கேட்ட டேவிட்காவின் குண்டுகளின் சத்தங்களும், வேட்டுக்களும், தங்கள் ஆட்களே பொழுது போக்குக்காகச் சுடுபவை என்று நினைத்துக் கொண்டார்கள்.

மூன்றாவது நாள் விடிகாலையில், காசியின் ஆட்கள் நூறுபேர் நிலை கொண்டிருந்த அபுயேஷாவுக்கு வெளியே, கான் டட்னாவில் ஒளித் திருந்த தன் ஆட்களை நகர்த்தி, மறைந்திருந்து தாக்கக் கூடிய நிலையொன்றை ஏற்படுத்திக் கொண்டான். அபுயேஷாவில் இருந்து வரக்கூடிய உதவிப் படை யைத் தடுக்கும் விதத்தில் பென் அமியின் ஆட்கள் நிலைபெற்றதும், அரியுடைய தும், யார்க்கோனியினதும் பிரிவுகள் எஸ்தர் கோட்டைக்குப் பின்புறமாக நகர்ந் தன. சிறிய டேவிட் வேட்டுக்களைத் தீர்க்கத் தொடங்கியபோது காசியின் ஆட் கள் நூறுபேரே கோட்டையில் இருந்தார்கள். மற்றவர்கள், லெபனானிலோ, அபுயேஷாவிலோ இருந்தார்கள். சுற்றுக்குப் பின், சுற்றாக டைனமைற் வெடி மருந்தைக் கொண்டு ஓசையிட்டபடி காற்றில் சுழன்று வந்த குண்டுகள் கோட்டை யின் மதில் கரையோரமாக வெடிக்கத் தொடங்கின. ஒவ்வொரு வேட்டும், பிர தான இலக்காகிய இரும்புக் கதவை நெருங்கி வந்து விழ்ந்து வெடித்தன. இரு பதாவது குண்டு சரியாகக் கதவில் வீழ்ந்து அதன் இணைப்புகளிலிருந்து கதவைப் பிடுங்கி எறிந்தது. அடுத்த ஐந்து குண்டுகளும், கோட்டை உள் முற்றத்திலே விழுந்து வெடித்தன.

இயந்திரத் துப்பாக்கிகளின் ரவைகளினதும், இடையிடையே சிறிச்சென்ற டேவிட்கா குண்டுகளினதும், பாதுகாப்பின் கீழ் முதல் அலையில் தாக்கச் சென்ற வீரர்களுடன் அரியும் பாய்ந்து ஊர்ந்து சென்றான்.

உண்மையாகக் கோட்டைக்கு ஏற்பட்ட சேதம் கொஞ்சம்தான் என்றாலும், திடீரெனச் சிராக மேற்கொள்ளப்பட்ட தாக்குதலும், ஏற்பட்ட சப்தங்களும் காசிக்கும் அவனது நம்பத்தகாத போர் வீரர்களுக்கும் தாக்குப் பிடிக்க முடியாதனவாக இருந்தன. உதவிப்படைகள் வரும் என எதிர்பார்த்துப் பல வீனமான ஒரு எதிர்ப்பைக் காட்டினார்கள். அவர்களுக்கு உதவவென அபுயேஷாவிலிருந்து புறப்பட்ட உதவிப்படைகள், டேவிட் பென் அமியின் பொறிக்குள்ளேயே வந்து மாட்டிக் கொண்டன. காசி அதனைத் தொலைநோக்கிக் கண்ணாடியூடாகக் கண்டான். அவன் இப்போ துண்டிக்கப்பட்டிருந்தான். யூதர்கள் பின் கதவு வரை வந்திருந்தார்கள். சரணடைவதற்கான வெள்ளைக் கொடி எஸ்தர் கோட்டையில் ஏறியது.

யார்க்கோவி இருபது பேரோடு கோட்டைக்குள் போய் அவர்களை நிராயுதபாணிகளாக்கி லெபனானை நோக்கி ஓடப்பண்ணினான். இப்போது மிகவும் பணிவுடன் நடந்து கொண்ட காசியும் அவனது அதிகாரிகள் மூவரும் சிறைக்கு இட்டுச் செல்லப்பட்ட வேளையில், கோட்டையின் மீது ஸ்டார் ஒவ் டேவிட் ஏறிக் கொண்டிருந்தது. அரி மிகுதியான ஆட்களை கூட்டிக் கொண்டு டேவிட் மறைந்திருந்து தாக்கும்நிலையை ஏற்படுத்தியிருந்த இடத்தை நோக்கிச் சென்றான். அரபு தளமாக அபுயேஷா செயல்படுவதை முடிவுக்குக் கொண்டும் வரும் அடுத்த கட்ட நடவடிக்கைக்காக அவர்கள் காத்திருந்தார்கள்.

அபுயேஷாவின் மக்கள் மோதல்களைக் கண்டும், சப்தங்களைக் கேட்டும் இருந்தார்கள். தங்கள் கிராமம்தான் அடுத்தது என்று அவர்களுக்கு நன்றாகத் தெரிந்திருந்தது. அரி ஒரு யுத்த இடைநிறுத்தக் குழுவை அனுப்பி வெளியேற விரும்புவோர் இருபது நிமிடங்களில் வெளியேறலாம் என்றும், மீறித் தங்கியிருப் போர் விளைவுகளைச் சந்திக்க வேண்டி வரும் என்றும் அறிவித்தான். அவன் இருந்த வசதியான அவதானிப்பு நிலையிலிருந்து, தன் சிவியகாலமீறாக தன் நண்பர்களாயிருந்த பலர், வெளியேறி லெபனான் எல்லையை நோக்கிச் சென்று கொண்டிருப்பதைக் கண்டான். அவர்கள் போவதைக் கண்டபோது அவனுக்கு வயிற்றைப் பிசைந்தது.

அரை மணி நேரம் சென்றது. இன்னும் ஒரு மணிநேரம் கடந்தது. ''நாங்கள் நடவடிக்கையைத் தொடங்குவோம்'' என்றான் டேவிட்.

''அவர்கள் எல்லோரும் போய்விட்டார்கள் என்று நிச்சயப்படுத்த விரும்புகிறேன் ''

''கடந்த அரைமணி நேரமாக எவரும் வெளியே வரவில்லை. வரவேண்டிய எல்லோரும் வந்துவிட்டார்கள்.''

காத்துக் கொண்டிருக்கும் தன் துருப்பினரிடமிருந்து சிறிது விலகிச் சென்றான் அரி. டேவிட் அவன் அருகில் சென்று ''நான் கட்டளைகளை இடும் பணியை ஏற்றுக் கொள்ளலாமா?''

''நல்லது.''

அபுயேஷா இருந்த சரிவை நோக்கி டேவிட் துருப்புக்களை நடத்திச் சென்றபோது, அரி மலையில் தன்னந்தனியாக நின்று கொண்டிருந்தான். முதல் வேட்டுக்கள் கேட்டபோது, அவன் வெளிறிப்போனான். வெளி விளிம்பு களை அடைந்தபோது, தன் ஆட்களைத் தகுந்த இடங்களிற்கு பிரித்து அனுப்பி விட்டான். இயந்திரத் துப்பாக்கியொன்றின் சடசடப்பும், சிறிய ரக ஆயுதங் களின் சப்தமும் கேட்டன. உடனேயே கீழே விழுந்து குழுக்குழுவாக முன்னே ஊர்ந்து சென்றார்கள்.

அபுயேஷாவின் உள்ளே தாஹாவின் தலைமையில் நூறு அரபுக்கள் போராட முடிவுசெய்து ஆயத்தமாக நின்றிருந்தார்கள். இந்தப் போரில் இந்தக் கிராமத்துக்கான மோதல் ஒரு அரிதாவ நிகழ்வாகும். ஆட்பலத்திலும் யூதர் களின் கை இங்கு மேலோங்கி இருந்தது. முன்னணி அரபு நிலைகள் மீது தானி யங்கித் துப்பாக்கி வேட்டுக்கள் சரமாரியாகத் தீர்க்கப்பட்டன. கைக்குண்டு மழை பொழியப்பட்டது. அரபுக்களின் முதல் இயந்திரத் துப்பாக்கி செயலிழக் பண்ணப்பட்டதும், பாதுகாப்பில் நின்றவர்கள் பின்வாங்க யூதர்கள் நகரிலேயே காலூன்றிக் கொள்ள முடிந்தது.

டேவிட் பென் அமி அணி அணியாக ஆட்களை அனுப்பி, வீட்டுக்கு வீடு, தெருவுக்கு தெரு சண்டையை நடத்த, சிறுசிறு பிரிவுகளாக எதிர்ப்பைக் காட்டியவர்களை மடக்கி இந்தப் போரை நிகழ்த்தினான். இந்த வீடுகள் மண் ணால் அல்லாது, கல்லால் கட்டப்பட்டிருந்ததால், சண்டை மிகவும் மெதுவா கவும், இரத்தம் சிந்தப்படுவதாகவுமே இருந்தது. அங்கே இருந்தவர்கள் கிட்ட டித் தூரங்களில் நின்று போரிட்டார்கள்.

நாள் நீண்டுகொண்டே சென்றது, மலைச்சரிவில், தான் நின்ற நிலையை விட்டு அரி பென் கானான் அசையவேயில்லை. தொடர்ந்து கேட்ட வெடி யோசைகளும், கைக்குண்டுகளின் பேரொலிகளும், ஏன் மனிதர்கள் அலறுவது கூட அவனது காதுகளுக்கு எட்டியது.

அபுயேஷாவின் அரபுக்கள் ஒரு நிலையிலிருந்து இன்னொரு நிலைக்கு பின்வாங்கிக் கொண்டிருந்தார்கள். தாக்குதலின் தீவிரத்தினால், வெவ்வேறு குழுக்களிடையே இருந்த தொடர்பும் அறுக்கப்பட்டது. இறுதியாக எஞ்சியிருந் தவர்கள் அனைவரும் நகரின் விளிம்பிலிருந்த வீதியொன்றினுள் விரட்டப் பட் டனர். தங்கள் கிராமமொன்றைப் பாதுகாக்க அரபுக்கள் நடத்திய போர்களில் எல்லாம் சிறந்த தற்பாதுகாப்புப் போரை நிகழ்த்திய அந்த இடத்தில், முடிவு வரை எழுபத்தைந்து அரபுக்கள் கொல்லப்பட்டிருந்தார்கள். இது ஒரு துன்பம் மிக்க மோதலாயிருந்தது. அரபுக்களுக்கோ, யூதர்களுக்கோ அந்தப் போர் வேண்டியிருந்திருக்கவில்லை.

மீதம் இருந்த கடைசி எட்டுப்பேரும், ஆற்றங்கரை ஓரத்தில் இருந்த முக்தாரின் அழகிய கல் மாளிகைக்குள் விரட்டப்பட்டனர். டேவிட், டேவிட் காவால் தாக்கும்படி கட்டளையிட்டான். அந்த வீடு சின்னாபின்னமாகத் தகர்க் கப்பட்டது. தாஹா உள்ளிட்ட கடைசி எட்டுப்பேரும் கொல்லப்பட்டார்கள்.

டேவிட் பென் அமி வீதியால் நடந்து அரியை அண்மித்தபோது, இருள் சூழத் தொடங்கியிருந்தது. டேவிட் போரிட்டதால் களைத்துப்போயிருந்தான். ''எல்லாம் முடிந்து விட்டது'' என்றான் டேவிட். அரி கண்ணாடி போல் மின்னிய கண்களால் அவனைப்பார்த்தான். ஆனால் எதுவும் பேசவில்லை.

நூறுபேர் மட்டில் அவர்கள் இருந்தார்கள். எல்லோரும் கொல்லப்பட்டு விட்டார்கள். நாங்கள் ... பதினான்கு இளைஞர்களையும், மூன்று யுவதிகளையும் இழந்துவிட்டோம். காயப்பட்ட இன்னும் பன்னிரெண்டு பேர் கான் டப்னாவுக்கு எடுத்துச் செல்லப்பட்டிருக்கிறார்கள்.

அரிக்கு அவன் சொல்வது கேட்பதாகத் தெரியவில்லை. தன்பாட்டில் மலைச்சரிவில் இறங்கிக் கிராமத்தை நோக்கி நடக்கத் தொடங்கினான்.

''அவர்களுடைய வயல்களுக்கு என்ன நடக்கும்? அவர்களுக்கு என்ன நடக்கும்?.. எங்கே போவார்கள்? அரி முணுமுணுத்துக் கொண்டேயிருந்தான். டேவட் அரியின தோள்களைப் பிடித்து நிறுத்தினான்.

''அங்கே போகாதே அரி.''

கீழே தெரிந்த கடல் போன்ற கூரைகளைப் பார்த்தான். மிக அமைதியாக இருந்தது.

''ஆற்றங்கரையிலிருக்கும் வீடு.....''

''இல்லை. அது எப்படி இருந்ததாக ஞாபகமிருக்கிறதோ அப்படியே நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.''

''அவர்களுக்கு என்ன நடக்கப் போகிறது? அவர்கள் என் நண்பர்கள்...''

''அரி நாங்கள் கட்டளைக்காகக் காத்துக் கொண்டிருக்கிறோம். அவனைப் பார்த்த அரி கண்களை மூடிமூடித் திறந்தான். தலையை முடியாதென்பது போல் மெதுவாக அசைத்தான்.

''அப்போ நானே கட்டளையிடுகிறேன்.'' டேவிட் சொன்னான்.

''இல்லை, அரியின் குரல் எங்கிருந்தோ கேட்பது போலிருந்தது. ''நானே கட்டளையைக் கொடுக்கிறேன்.'' என்றவன் நிமிர்ந்து கடைசித் தடவையாகக் கிராமத்தைப் பார்த்தான்.

''அபுயேஷாவை அழித்து விடுங்கள்'' என்றான் அரி.

o

அத்தியாயம் பன்னிரெண்டு

டேவிட் யோர்தானாவின் கரங்களில் துயின்று கொண்டிருந்தான். அவன் தலையைத் தன் மார்போடு இறுக அணைத்திருந்தாள் அவள். அவளால் தூங்க முடியவில்லை. அவள் கண்கள் கொட்டக் கொட்ட விழித்திருந்து இருளினுள் வெறித்துக் கொண்டிருந்தன.

கான்டப்னாவில் இருந்து அரி அவளுக்கு விடுமுறை கொடுத்திருந்தான். அவர்கள் இருவரும் ரெல் அவிவுக்குப் போய்த் தனியாக வார இறுதியைக் கழிப்பதற்காக அல்வாறு செய்திருந்தான். நாளைக்குப் பிறகு அவனைத் திரும்பிக் காண்பதற்கு அத்தகைய சந்தர்ப்பம் கிடைக்குமானால் எவ்வளவு காலம் எடுக்கும் என்று கடவுளுக்கு மட்டும்தான் தெரியும். டேவிட் இப்படியான வேலைகளுக்குத் தானாகவே முன்வருவான் என்று தன் மனதில் ஜோர்தானா எப்பவோ தொடக்கம் நினைத்திருந்தாள். ஜெருசலேம் முற்றுகையிடப்பட்ட நாளிலிருந்து, ஜெருசலேமுக்காக டேவிட் மனம் வருந்திக் கொண்டிருந்தான். அவன் கண்களை நோகிய ஒவ்வொரு தடவையும், அந்தக் கண்களின் தூரப் பார்வையில் பிரதிபலித்த சோகத்தையும். துன்பத்தையும் அவளால் காண முடிந்தது.

அவன் தூக்கத்தில் அசைந்தான். அவனது முன்நெற்றியில் மெதுவாக முத்தமிட்ட அவள், அவன் கேசங்களை வருடினாள். தூக்கத்திலேயே எதையோ நினைத்துச் சிரித்த அவன் திருமபவும் அமைதியாய்த தூங்கிப போனான்.

தன் காதலனின் நலனுக்காக வருந்துகிறாள் என்று சொல்வது, ஒரு ஷப்றா யுவதிக்கு முறையற்ற காரியம் என்று அவள் அறிந்திருந்தாள். புன்னகை புரிந்து அவனை ஊகிக்கப்படுத்தி விட்டுப் பயத்தை மனதில புதைத்துக் கொள்வதே அவள் செய்யக்கூடிய காரியமாகும். கவலையால் பலவீனமாக இருப்பது போல் உணர்ந்த அவள் அவனை இறுக அணைத்துக் கொண்டாள். முடிவற்ற இரவொன்று முழுவதும் இப்படியே அவனை அணைத்துக் கொண்டிருக்க விரும்பினாள்.

ஜெருசலேமின் பிரச்சினைகள் பிரிவினைத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டதிலிருந்தே தொடங்கின. அரபு உயர் மட்டக்குழு, அடுத்தநாள் அறை கூவல் விடுத்திருந்த வேலை நிறுத்தமொன்று கலவரமாக உருவெடுத்து, ஜெருசலேமின் யூத வர்த்தக மையததைக காட்டுமிராண்டித்தனமாக, கொள்ளையிட்டு எரியூட்டும் செயலாக மாறிற்று. அரபுக் கும்பல்கள் இப்படி வெறியாட்டம்

ஆடியபோது பிரிட்டிஷ் துருப்புக்கள் ஒன்றுமே செய்யாமல் வெறுமனே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

ரெல் அவிவிலிருந்து, வரும் யூத வாகனத் தொடர்களை, நெடுஞ்சாலை அருகோடு இருந்த அரபுக் கிராமங்களைப் பாவித்து, அப்துல்காதர் உடனடியாகத் தடை பண்ணியதோடு நகரின் முற்றுகை ஆரம்பமானது. பாரிய மோதல்கள், குன்றுகள், காஸ்ரெல், மற்றைய கிராமங்களைக் கைப்பற்றுவதற்காக நடந்து கொண்டிருந்தபோது, ஜெருசலேமின் யூதர்கள் குளிரில் வாடி, பட்டினி, தாகம் முதலியவற்றால் வருந்திக் கொண்டும், காவுக்ஜியின், அப்துல் காதரின் பீரங்கிக் குண்டுகளினால் தாக்கப்பட்டுக் கொண்டிருந்தார்கள். பால்மாக் ஹில் மென்கள் இந்த நெடுச்சாலையை திறந்தபடி வைத்திருக்கப் போராடிக் கொண்டிருந்த போது யிசுவ்வினர், யூடியாக் குன்றுப் பகுதிகள், சிதைந்த வாகனங்களால் நிறைந்து போகும் வரை, வாகனத் தொடர்களைத் தொடந்து, பாப் எல் வாட் வழியாகச் செல்ல ஏற்பாடு செய்து கொண்டிருந்தார்கள்.

நகரின் உள்ளேயோ, மோதல்கள் குண்டுவீச்சு, மறைந்திருந்து தாக்குதல் ஆகியவற்றோடு ஆரம்பித்து பூரண யுத்தமாக வெடித்தது. கிங் டேவிட் ஹோட்டலில் இருந்து, பழைய நகர சுவர் வரை ஒரு பெரிய பரப்பைத் துப் பரவு பண்ணி வைத்திருந்தார்கள். இங்கே கூலிப் படையினர் குவிந்திருந்தார் கள். அந்த இடம் பெவின் கிராட் என்று அழைக்கப்பட்டது. ஜெருசலேமில் இருந்த ஹகானா கொமாண்டர், இராணுவ விஷயங்களுக்கு அபபாற்பட்ட விஷயங்களையும் கவனிக்க வேண்டியிருந்தது. முற்றுகை நிலைமைகளின் கீழ் உணவளிக்கப்பட்டுப் பாதுகாக்கப்பட வேண்டிய பெரும் சிவிலியன்கள் தொகை யின் பொறுப்பும் அவனில் சுமத்தப்பட்டிருந்தது. குடிமக்களில் பெரும் பகுதி யினராக இருந்த தீவிர பழமை பேணும் மதவெறி யூதர்களும், தாங்கள் போரிட மறுத்தது மட்டுமன்றி அவர்களைக் காப்பாற்ற ஹகானா எடுத்த முயற்சிகளுக்கும் மூட்டுக் கட்டையாயிருந்தார்கள். புராதன காலங்களிலும், ஜெருசலேமின் கொமாண்டர்கள் இவ்வகையான பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்திருந்திருக்கிறார்கள். ரோமர்களுக்கெதிராக முற்றுகைப் போரில், செலட்ஸ் என்ற சமயத் தீவிரவாதப் பிரிவினர்கள் இதேபோல பலத்தைச் சிதறடித்தால், ஜெருசலேமின் வீழ்ச்சி விரைவுபடுத்தப்பட்டு, ஆறு லட்சம் யூதர் களின் படுகொலைக்கும் வித்திட்டது. அந்தச் சமயத்தில், ரோமர்களுக்கெதிராக யூதர்கள் மூன்று வருடங்கள் தாக்குப்பிடித்திருந்தார்கள். தற்போதைய யுத்தத் தில் அதைத் திரும்பவும் செய்யக்கூடிய வாய்ப்புக்கள் இல்லை.

இந்தத் தீவிர பழமை பேணுபவர்களினதும், மதவெறியர்களினதும் இக் கட்டுகளுக்கு மேலதிகமாக மக்கபீஸ்களும் பகுதி நேர ஒத்துழைப்பையே வழங்கி தனியாகப் போர் ஒன்றை நடத்துவதில் ஆர்வங் கொண்டு பிரச்சினையை உண்டு பண்ணினார்கள். அவர்கள் ஹகானாவிற்கு ஆதரவாகச் செயல்பட்ட நேரங்களிலும் குறிப்பிடக்கூடிய அளவு திறமையுடன் செயற்படவில்லை. யூடி யன் குன்றுகளிலே, அளவுக்கு மீறிய செயல்பாடுகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்த பால்மாக்கின் ஹில்மென் பிரிகேட்டும், ஜெருசலேமின் ஹகானாக் கொமாண் டரிடமிருந்து கட்டளைகளை ஏற்றுக் கொள்ளத் தயக்கம் காட்டினார்கள்.

இவையெல்லாம் சேர்ந்து, ஹகானாக் கொமாண்டரால் சீர்பண்ண முடியாத மோசமான நிலைமைகளை ஜெருசலேமிற்குள் உருவாக்கின.

அழகிய ஜெருசலேம் நகர், இரத்த ஆறாகிப் போரின் தழும்புகளைப் பெற்றுக் கொள்ளத் தொடங்கியது. எகிப்தியர்கள் தென்பகுதியிலிருந்து தாக்கி நகருக்குள் பீரங்கித் தாக்குதல்களை நடாத்தி வானத்திலிருந்து குண்டுகளையும் அதன்மேல் வீசினார்கள், அரபு லீஜன், பழைய நகரின் பரிசுத்த சுவர்களை மறைந்திருந்து தாக்குவதற்கு ஏற்ற பாதுகாப்பு அரணாகப் பயனபடுத்தினார் கள். ஆட்சேதம் ஆயிரக்கணக்கில் அதிகரிக்க ஆரம்பித்தது. தனித்துவமான வீரச் செயல்களும், புத்திசாலித்தனங்களுமே மீண்டும் யூதர்களின் தற்காபபு முறைகளின் அடிநாதங்களாக விளங்கின. திரும்பவும் டேவட்கா மோட்டார் வியத்தகு சேவையைப் புரிந்தது. அது போல் ஏராளமாக இருப்பதாக அரபுக் களை ஏமாற்ற இடத்துக்கிடம் மாற்றி வைத்தனர்.

லற்ரறன் கோட்டையை அரபுக்கள் கைப்பற்றியபோது, சிவிலியன் குடி மக்கள் குடிக்கத் தேவையான நீரைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக நீர் இறைக்கும் ஸ்தானத்தை இயங்க வைப்பதாக வாக்குறுதி அளித்திருந்தனர். அரபுக்கள் இதற்கு மாறாக நீர் இறைக்கும் நிலையத்தை தகர்த்து விடடுக் குடி நீரையும் தடை செய்து விட்டார்கள். ஜெருசலேமின் கீழே இரண்டாயிரம் மூவாயிரம் வருடம் பழமையான நீர்நிலைகள் இருப்பது தெரிந்த விஷயமாயி ருந்தது. யூதர்கள் இவற்றைத் தேடிக் கண்டுபிடித்து அவற்றின மேல் மூடியி ருந்தவற்றை அகற்றனார்கள். ஆசசரியப்படத் தகக வகையில் அவற்றில் இன் னும் நீர் இருக்கக் கண்டார்கள். அவசரகால குழாய்கள் நிர்மாணக்கபபடும் வரை இந்த நீர் நிலைகளே யூதர்கள் தாகத்தால் செத்து விடாமல் இருக்க உதவின.

நாட்கள் வாரங்களாகி, வாரங்கள் மாதங்களாகின. ஆயினும், ஜெருச லேம் இன்னும் தாக்குப் பிடித்துக் கொண்டிருந்தது. ஒவ்வொரு வீடும் போர்க் களமாகியது. ஆண்கள், பெண்கள், குழந்தைகள் யாவரும் வெற்றி கொள்ளப் படமுடியாத, விட்டுக்கொடுக்காத மனப்பான்மையுடன் ஒவ்வொரு நாளும் போருக்கான தமது பங்களிப்பை அளித்து வந்தனர்.

டேவிட் பென் அமியின் இதயம் ஜெருசலேமுக்காகக் கண்ணீர் வடித்தது. அல்லும் பகலும் அதன் முற்றுகையே அவன் மனதை வாட்டியது.

அவன் தன் கண்களைத் திறந்தான்.

''நீ ஏன் தூங்கவில்லை?'' ஜோர்தானாவைக் கேட்டான்.

''உங்களிடமிருந்து பிரிந்திருக்கும் நேரங்களில் தூங்குவதற்கு எனக்கு நிறைய நேரம் கிடைக்கும்'' என்று அவள் பதில் கொடுத்தாள். அவன் அவளை முத்தமிட்டுவிட்டு அவளைத்தான் நேசிப்பதாகக் கூறினான்.

''ஓ.. ... டேவிட்..... என்னுடைய..... டேவிட்.....''

இத்தத் தாக்குதலுக்குச் செல்ல வேண்டாம் என அவனைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்ள நினைத்தாள். அவனுக்கு ஏதாவது நடந்தால் அவளுக்கென வாழ்க்கை எதுவும் இருக்காது எனக் கத்திச் சொல்ல விரும்பினாள். ஆனாலும், தன் நாவைக் கட்டுப்படுத்திக் கொண்டாள். ஏனெனில், தான் செய்ய வேண்டியது அதுதான் என்று அவள் அறிந்திருந்தாள். அவனுடைய சகோதரர்களில் ஒருவன் எகிப்தியர்களோடு, நிரிம் கிபுட்சில் போரிடுகையில் கொல்லப்பட்டான். நெகெவ் பாலைவனத்தில், முற்றுகைக்குள்ளாயிருந்த நெத்பாவுக்கு ஹெலிகாப்டர்களை வாகனத் தொடரில் கொண்டு போகும்போது ஏற்பட்ட காயங்களால் அவனுடைய மற்றொரு சகோதரன் செத்துக் கொண்டிருந்தான். டேவிட்டின் இன்னொரு சகோதரனான மக்கபீஸ்களின் நாஹூம் பழைய நகரத்துள் போவதை ஏற்கனவே தெரிந்தெடுத்திருந்தான்.

டேவிட்டுக்கு ஜோர்தானாவின் இதயம் விரைவாகத் துடிப்பது கேட்டது.

''டேவிட் என்னை நேசி!..... என்னை நேசி!'' கெஞ்சினாள் அவள்.

பழைய ஜெருசலேம் நகரத்தில், அரபுக் கும்பல்கள் அரபுலீஜனின் பின்னாலேயே திரண்டு வந்து பல சின்னகோக்குகளையும், பரிசுத்த இடங்களையும் அழித்தார்கள். தங்களிடம் வீழ்ச்சி கண்ட யூத வீடுகளைக் கொள்ளையடித்தார்கள்.

பக்தியான யூதர்களும், அவர்களுடைய ஹகானா, மக்கபீஸ் பாதுகாப்பானர்களும், விரட்டப்பட்டு, விரட்டப்பட்டு கடைசி இரு கட்டிடங்கள் மட்டும் அவர்கள் கையிலிருக்கும் நிலைவரை விரட்டப்பட்டார்கள். அதில் ஒன்றுதான் ஹுர்வா சின்ன கோக்காகும். அவர்கள் எல்லோருமே பூண்டோடு அழிக்கப்படுவதற்கு நாட்கணக்கிலேயே அவகாசம் இருந்தது.

ஜோர்தானா விடியற் காலையின் கதிர்கள் துயிலெழுப்ப எழுந்தாள் அவள் கையைக் காலை நீட்டி திருப்தியுடன் சோம்பல் முறித்தாள் ஏனெனில், இரவின் உறவின் இனிமைகளால் அவள் உடல் நிறைந்திருந்தது. டேவிட்டைத் தேடிக் கைகளால் தடவினாள். அவன் அங்கே இருக்கவிலலை,

திடீரென அதிர்ச்சியுடன் கண்களைத் திறந்தவள் அவன் வெகு அருகாமையிலிருந்து தன்னை நோக்கிக் கொண்டியிருப்பதைக் கண்டாள். முதல் தடவையாக டேவிட் இஸ்ரேலிய இராணுவத்தின் சீருடைகளை அணிந்திருந்தான். அவள் புன்னகை புரிந்து விட்டு நிமிர்ந்து வசதியாகப் படுத்துக் கொண்டாள். அருகில் மண்டியிட்டு அமர்ந்த அவன், குழம்பிப் போய்க் கிடந்த அவள் சிவந்த கூந்தலை வருடிக் கொடுத்தான்.

''நான் உன்னை ஒரு மணி நேரமாக அவதானித்துக் கொண்டிருந்தேன். தூங்கும்போது நீ மிகவும் அழகாக இருக்கிறாய்.''

அவள் கைகளை அகல விரித்து அவனை இழுத்து அணைத்து முத்தமிட்டாள்.

''ஷலோம் மேஜர் பென் அமி'' அவன் காதில் கிசுகிசுத்த அவள் மென்மையாக அதை முத்தமிட்டாள்.

''அன்பே நேரமாகிவிட்டது. நான் போகவேண்டும்.''

''சற்றுப் பொறுங்கள் நானும் உடைகளை அணிந்து கொள்கிறேன்.''

''நான் இப்படியே போய்விடுகிறேனே. அதுதான் நல்லது, என்று நான் நினைக்கிறேன்.''

''ஜோர்தானா தன் இதயம் நின்று விடப்போவது போல் உணர்ந்தாள். ஒரு வினாடிக்கும் குறைவான நேரம் அவனை இழுத்தணைத்துக் கொள்ள வேண்டும் போலிருந்தது. ஆனால், தன் அதிர்ச்சியை மறைத்துக் கொண்டு புன்னகை புரிந்தாள்.

''அப்படியே செய்யுங்கள் அன்பே.''

''ஜோர்தானா... ஜோர்தானா... நான் உன்னைநேசிக்கிறேன்.''

''ஷலோம் டேவிட். விரைவாகச் சென்று விடுங்கள்.''

அவள் சுவர்ப்பக்கமாகத் திரும்பிக் கொள்ள, அவன் முத்தம் தன் கன்னங்களில் படிவதை உணர்ந்தாள். கதவு பூட்டப்படுவது அவளுக்குக் கேட்டது.

''டேவிட்... டேவிட்... தயவு செய்து என்னிடம் திரும்பி வாருங்கள்...'' தனக்குத்தானே முணுமுணுத்துக் கொண்டாள்.

தலைமைச் செயலகத்தின் அருகில், நடவடிக்கைகளின் பொறுப்பாளர் பென் சீயோன் கொண்டிருந்த மாடி வீடொன்றுக்கு, அவிடான் மேஜர் பென் அமியுடன் சென்று கொண்டிருந்தார். முப்பத்தொரு வயதான ஜெனரல் பென் சியோனும் ஜெருசலேமைச் சேர்ந்தவரே. அவர்கள் வந்து சேர்ந்தபோது அவருடைய உதவியாளர் மேஜர் ஒல்ட்டர் மானும் பிரசன்னமாக இருந்தார்.

அவர்கள் முகமன்களையும் நிர்மலில் இறந்த டேவிட்டின் சகோதரனுக்காக அனுதாபங்களையும் பரிமாறிக் கொண்டனர். ''நீங்கள் ஏதோ சுவாரஸ்யமான திட்டமொன்று வைத்திருப்பதாக அவிடான் எங்களுக்குச் சொன்னார்'' என்றார் ஒல்ட்டர்மான்.

''ஆமாம்'' பதிலிறுத்த டேவிட் தொடர்ந்து, ''பிரிவினைக்காக வாக்களிப்பு நடைபெற்ற நேரத்திலிருந்து, அஞ்ஞாதவாசத்திலிருப்போரின் புலம்பல் என் மனதில் எப்போதும் ஒலித்துக் கொண்டிருக்கிறது. உன்னை நான் மறந்து! போனால் ஓ ஜெருசலேமே.....''

பென் சியோனும் தலையை ஆட்டினார். அவரும் இதே போன்றே டேவிட்டின் உணர்வில் பங்கு கொண்டிருந்தார். அவருடைய மனைவி பிள்ளைகள் பெற்றோர் எல்லோரும் அங்கிருந்தனர்.

டேவிட் தொடர்ந்தான். ''லற்ரறன் வரையான பாதை எமது கட்டுப்பாட்டில் இருக்கிறது. லற்ரனுக்கு அப்பால் பால்மாக்கினர் பாப் எல் வாட்டின் அநேக குன்றுகளைக் கைப்பற்றி இருக்கிறார்கள்.''

''லற்றன் தான் எங்களுக்கு இருக்கும் மாபெரும் தடையென்று எங்கள் எல்லோருக்கும் தெரியும்.''

ஒல்ட்டர்மான் விறைப்பாகச் சொன்னார்,

''அவன் சொல்வதை முழுவதாகக் கேட்டு விட்டுக் கதை.'' வெடித்தார் பென் சியோன்.

''நான் யோசித்துக் கொண்டிருக்கிறேன்... என்னுடைய தாயாரின் புன்ன கையைப் போல் அந்தப் பிரதேசம் எனக்குத் தெளிவாக நினைவு இருக்கிறது. கிட்டத்தட்ட ஆறுமாதகாலமாக இந்தப் பிரதேசத்தைப்பற்றி அங்குலம் அங்குலமாகச் சிந்தித்தேன். லற்ரறனைத் தவிர்த்து ஒரு சுற்றுப் பாதையை அமைக்க முடியும் என்று நிச்சயமாக நினைக்கிறேன்.''

ஒரு கணம் அதிர்ச்சியான மௌனம் அங்கே நிலவியது. ''நீ சரியாக என்ன சொல்ல விரும்புகிறாய்?''

''லற்ரறனைச் சுற்றி வளைவாக வீதிக்கு வீதி வரைந்தால் அது பதினாறு கிலோ மீற்றர் தூரத்தைக் கொண்டிருக்கும்.''

''அனால் இந்தப் பதினாறு கிலோமீற்றர்களும் வரைபடத்தில் ஒரு வெறும் கோடாகத்தான் இருக்கும். அங்கு வீதிகள் எதுவுமில்லை. அந்தக் குன்றுகளும், தாண்டிச் செல்லக் கடினமான காடுகளடர்ந்தவை.''

''அங்கே ஒரு வீதி இருக்கத்தான் செய்கிறது.''

''டேவிட் நீ என்ன புலம்புகிறாய்'' அவிடான் வற்புறுத்திக் கேட்டார்.

''இந்த வழியின் பகுதி தூரத்துக்குப் பண்டைய ரோமர்களின் பாதை யொன்று இருக்கிறது. அது குப்பைகள், பற்றைகள், கழுவிவரப்பட்டமண், மண்சரிவுகள் ஆகியவற்றால் முற்றாக மூடப்பட்டிருக்கிறது. ஆனால், நிச்சய மாக அது அங்கே இருக்கிறது. உலர்ந்து போய்விட்ட ஆற்றுப்படுக்கைகளூடாக அந்தப் பாதை எட்டுக் கிலோ மீற்றர் தூரம்வரை செல்கிறது. இங்கே நான் நின்று கொண்டிருப்பது எவ்வளவு நிச்சயமோ, அதுபோல், எஞ்சியுள்ள தூரத் தையும், இந்த உலர்ந்து போய் விட்ட ஆற்றுப் படுக்கைகளினைத் தொடர்ந்து ஊடறுத்துச் சென்று கடக்க முடியும் என்று எனக்கு நிச்சயமாகத் தெரியும்.''

டேவிட் வரைபடத்துக்கு அருகே சென்று லற்ரறனைச் சுற்றி ஒரு அரை வட்டத்தை, பாதைகளைத் தொடுத்து வரைந்தான். அவிடானும், பென் சியோனும் பல கணங்களுக்கு அதையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தனர். ஒல்ட்டர்மான் நம்பிக்கையற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார். ஏற்கனவே, திட்டங்களின் விபரங்கள் சிலவற்றை அரிபென் கானானிடமிருந்து கேட்டுத் தெரிந்து கொண்டிருந்த அவிடான் அவ்வளவு திருப்தி அடைந்தவராகக் காணப் படவில்லை.

''டேவிட் '' சரி இந்தப் பாதை கண்டு பிடிக்க முடியுமென்றே வைத்துக் கொள்வோம். அத்தோடு இந்த உலர்ந்த அற்றுப்படுகைகளூடாக ஆட்டு மந்தைகள் செல்லும் பாதையொன்றையும், கண்டு பிடிக்க முடியும் என்று வைத்துக் கொள்வோம் பிறகு என்ன? ஜெருசலேமின் முற்றுகையை விடுவிப் பதிலிருந்து நீ இன்னமும் வெகு வெகு தூரத்திலிருக்கின்றாய்.''

தயக்கமில்லாமல் வந்தது டேவிட்டின் பதில், ''நான் என்ன சொல்ல விருப்புகிறேன் என்றால், இந்த ரோமர்களின்வீதியில் மேல் புதிதாக இன்னொரு பாதையை அமைத்து, லற்ரறனைக் கைப்பற்ற முயல்வதற்குப் பதிலாக அதைத் தவிர்த்து அதைச் சுற்றிச் செல்வோம்.''

''டேவிட் நீ வரைபடத்தில் கீறியிருச்கிற பாதையின்படி பார்த்தாலும், லற்ரறனில் இருச்கும் அரபு லீஜனின் பார்வையில் படும்படிதான் இந்தப் பாதையை அமைக்க வேண்டி இருக்கும்.''

''துல்லியமாக அப்படித்தான். எங்களுக்கு அவ்வளவு அகலமான பாதை தேவையில்லை. ஒரு ட்ரக் வருவதற்குப் போதிய அகலமிருந்தால் போதும். லற்ரறனில் ஜோசுவா சூரியனை ஒரு நிலையில் நிறுத்தினார். நாங்கள் இரவை ஸ்தம்பிக்கச் செய்வோம். ஒரு பிரிவினர் ஜெருசலேம் பக்கமிருந்தும், ஒரு பிரிவினர் ரெல் அவிவ் பக்கமிருந்து இரவில் அமைதியாகப் பாதையை அமைத்துச் சென்றால் ஒரு மாதத்துக்குள் இந்த மாற்றுப் பாதையை முடித்து விடலாம் என்று நிச்சய மாக எனக்குத் தெரியும். அரபு லீஜனைப் பொறுத்தவரை, கிளுப் அரபு லீஜனை லற்ரறனை விட்டு வெளியே போரிடுவதற்கு நிச்சயமாகக் கொண்டு வர மாட் டான். உங்களுக்கே நன்றாகத் தெரியும். நேரடி யுத்தமொன்றில் இருந்து பாது காப்பாக இருக்கக் கூடிய இடத்திலேயே அவர்களை வைத்திருக்கிறான் அவன்.''

''அது எங்களுக்கு நிச்சயமாகத் தெரியாது. பாதைக்காக அவன் போரிடக் கூடும்.'' ஓல்ட்டர் மான் கூறினான்.

''லீஜனைத் தலைமை தாங்கிப் போருக்கு நடத்திச் செல்ல கிளுப்புக்குப் பயமில்லாவிட்டால் ஏன் முக்கோணத்திலிருந்து தாக்கி இஸ்ரேலை இரண்டாகப் பிரித்து விடவில்லை?''

இந்தக் கேள்விகளுக்குப் பதில் சொல்ல எவராலும் இயலவில்லை. டேவிட் சரியாகத்தான் சொல்கிறான் என்றுதான் எடுத்துக் கொள்ள முடிந்தது. கிளுப், பரந்துபட்ட பிரதேசத்தில் போர் நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதால் ஜெருசலேம் பகுதி, தொடர்பு வழி, லற்ரறன் போன்ற இடங்களுக்கு வெளியே போரிட அவன் அவ்வளவு ஆர்வம் காட்டவில்லை என்றுதான் அங்கிருந்தவர்கள் பொதுவாக அபிப்பிராயப்பட்டனர். இதை விடவும், லீஜனைப் போர் முனையில் சந்திக்க இஸ்ரேலியர்கள், ஆர்வமாகவே இருந்தனர்.

பென் சியோனும், அவிடானும் மௌனமாக அவர்கள் டேவிட்டின் திட்டத் தைப் பற்றிச் சிந்தித்தார்கள்.

இறுதியில் பென் சியோன் டேவிட்டை நோக்கி, ''அப்போ உனக்கு என் னென்ன வேண்டும்?''

''ஒரு ஜீப்பையும், அதை நான் சொன்ன பாதையில் செலுத்திப் பார்க்க ஓரிரவு அவகாசத்தையும் கொடுங்கள்.''

அவிடான் கவலையுள் ஆழ்ந்தான். ஹகானாவின் ஆரம்ப நாட்களில், யாராவது ஒருவரை இழந்து போக நேரும்போது, அவரை அது மிகவும் துன்பப் படுத்தும். அது சொந்த மகனையோ, மகளையோ இழந்து விட்டது போன்ற துன்பத்தைக் கொடுத்தது. சிறிய நெருக்கமான, பழைய யிசுவ்வைப் போன்ற ஒரு சமூகத்திலே, ஒவ்வொரு இழப்பும், ஒரு சொந்தத் துன்பியல் நிகழ்வாகியது. இப்போ, இந்தப் போரோடு அவர்களின் இழப்புக்கள், ஆயிரக்கணக்காக அதிக ரித்ததோடு, இத்தொகையான இழப்புக்கள் இந்தச் சிறிய நாட்டுக்கு அழிவைக் கொடுக்கக்கூடிய தொகைகளாகவும் இருந்தன. இவர்களில் அதிகமானோர், நாட்டின் ஜீவநாடிகள் போன்ற இளைஞர்களும் யுவதிகளுமாவர். எந்த நாடும், எவ்வளவு பெரிதாக இருந்தாலும், சிறிதாக இருந்தாலும், டேவிட் பென் அமி போன்றவர்களை இழக்கச் சாத்தியப்படாது என்று அவிடான், நினைத்தார். டேவிட் தானே ஒரு தற்கொலை முயற்சி ஒன்றைப் பாரமெடுத்துக் கொள்வ தாகத் தோன்றியது. ஜெருசலேமுக்கான பாதை இருக்க வேண்டும் என்று நம் பிக்கை கொண்டிருப்பதால் தான், தன்னால் அப்பாதையைக் கண்டு பிடிக்க முடி யும் என்று அவன் சிந்திக்கிறான் போல் தோன்றியது.

''ஒரு ஜீப்பும் இருபத்தினாலு மணி நேரமும் .....'' டேவிட் கெஞ்சிக் கேட்டான்.

அவிடான் பென் சியோனைப் பார்த்தார். ஒல்ட்டர்மான் தலையை ஆட் டினார். டேவிட் செய்ய முனைவது ஒரு செய்யமுடியாத காரியம். ஜெருசலேம் ஒவ்வொருவர் மனதிலும் கமையாக அழுத்திக் கொண்டிருந்தது. உயிர் நாடியே அதுதான். யூடாயிசத்தின் மூச்சுக்காற்றே அதுதான். 'ஆயினும் ஆரம்பத்தில் இருந்தே ஜெருசலேமை பாதுகாத்து வைத்திருக்க முயன்றதுமுட்டாள் தனமோ?' என்று சியோன் சிந்தித்தார்.

டேவிட்டுடைய பெற்றோர் அனுபவித்து விட்ட துன்பம் போதும் என்று அவிடான் நினைத்தார். ஒரு சகோதரன் கொல்லப்பட்டு, ஒருவன் காயப்பட்டு இன்னொருவன் மக்கபீஸ் தற்கொலைப்படையின் தலைவனாக பழைய ஜெருச லேமின் சுவர்களினுள்ளேயிருந்தான்.

டேவிட், ஒருவரிலிருந்து ஒருவராகப் பித்துப் பிடித்தது போல் பார்த்தான். ''நீங்கள் எனக்கு ஒரு வாய்ப்பைத் தரவேண்டும்'' சொன்னான் அவன்.

கதவு தட்டப்பட்டது. ஒல்ட்டர்மான் செய்திக் குறிப்பொன்றைப் பெற்று பென் சியோனிடம் கையளித்தார். நடவடிக்கைகளின் தலைவரின் முகத்தில் இரத்தம் அற்றுப்போய் விட்டது போல் வெளிறியது. அவர் அந்த ஆவணத்தை அவிடானிடம் கையளித்தார். அவிடான் ஒருபோதும், தன் சுய கட்டுப்பாட்டை இழந்து போனதை அவர்கள் கண்டிருக்கவில்லை. ஆனால் இப்போ அவர் அதை வாசிக்க வாசிக்க கைகள் நடுங்கிக் கண்களில் கண்ணீரும் நிரப்பியது.

அவரது குரல் நடுங்கியபடியே, ''பழைய ஜெருசலேம் இப்போதுதான் சரணடைந்தது.'' என்று அறிவித்தார்.

''அப்படியிருக்க முடியாது.'' ஒல்ட்டர்மான் அலறினார்.

டேவிட் ஒரு கதிரையினுள் துவண்டு சரிந்தான்.

பென் சியோன் தன் முஷ்டியை இறுகப் பிடித்தபடி பல்லைக் கடித்துக் கொண்டார். ''ஜெருசலேம் இல்லாமல் யூத நாடே இருக்க முடியாது'' கத்தினார் அவர். டேவிட்டைப் பார்த்துத் திரும்பினார், ''ஜெருசலேம் வரை போ டேவிட்... மேலே போ ''என்றார்.

இஸ்ரேலின் குடிகளைச் செங்கடல் கரைக்கு அழைத்து வந்த மோசேஸ், கடவுள் நம்பிக்கை அதிகளவில் இருக்கும் ஒருவனை முதலில் கடலில் இறங்கத் தயாராக முன்வரும்படி அழைத்தார் முன் வந்த மனிதனின் பெயர் நாஷோன் ஆக இருந்தது. டேவிட் பென் அமியின் முயற்சிக்கும் ''நாஷோன்'' என்றே பெயரிடப்பட்டது.

இரவிலே, ரெல் அவிவின் தெற்காக இருந்த ரெஹோவொட் நகரிலிருந்து யூடியா நோக்கிப் பயணப்பட்டான். லற்ரறனின் அடிவாரத்திலே பாதையிலிருந்து திரும்பிக் காட்டுப் பகுதிக்குள் வாகனத்தைச் செலுத்தினான். கற்பாறைகள் நிறைந்திருந்த குன்றுகள், பள்ளங்கள், உலர்ந்து போய்விட்ட ஆற்றுப் படுக்கைகள் கொண்ட பிரதேசத்தினுள், செலுத்தினான். டேவிட் பென் அமி வெறியால் உந்தப்பட்டாலும், அவனது உணர்ச்சிகள், தான் செல்லும் கடமையின் முக்கியத்துவத்தால் சீராக்கப்பட்டு, தான்சென்று கொண்டிருக்கும் நிலப் பகுதியின் மீதான அவனது அளவற்ற அறிவால் கட்டுப்படுத்தப்பட்டுக் கொண்டும் இருந்தது.

ஜீப்பானது முட்டி மோதித் திரும்பி, எந்த இயந்திர சாதனமும் படாத சித்திரவதைக்கு எதிராகப் புரட்சி செய்தது. கீழ் கியர்களிலேயே அவதானமாகவும், பொதுவாகவும் லற்ரறன் அருகே வாகனத்தைச் செலுத்தினான். லீஜன் - ரோந்துப் பிரிவொன்றைச் சந்திக்கும் அபாயமும் அதிகமாக இருந்தது.

தூரத்தில் கோட்டையைக் கண்டபோதே அவன் கண்களும் உள்ளுணர்வுகளும் கூர்மையாகி விட்டன. நூற்றாண்டுகள் பழமையான சிதைவுகளால் மூடப்பட்டுக் கிடக்கும் ரோமர்களின் பாதையைத் தேடிக் கொண்டே பயங்கரமான சரிவொன்றில் மெதுவாக வாகனத்தை இறக்கினான், கழுவியோடிக் கிடந்த மண்ணினாலும், சுற்களாலும் அமைப்பைக் கவனமாகத் தொடர்ந்து சென்ற அவன் உலர்ந்து போன இரு ஆற்றுப்படுக்கைகளின் சந்திப்பில் ஓரிடத்தில் அகழ்ந்து சுற்களை எடுத்தான். அவற்றினுடைய அளவுகளும், அமைப்பும் பாதை அங்கே இருப்பதை உறுதிப்படுத்தின. ரோமானிய லீஜன்களின் பாதையின் பொதுவான திசையை நிர்ணயித்துக் கொண்டதும், அவன் விரைவாகப் பயணம்செய்யக் கூடியதாக இருந்தது.

தன்னையும் வாகனத்தையும் இரக்கமில்லாமல் விரட்டியபடி, லற்ரறனைச் சுற்றி, ஒரு வட்டப் பாதையில் டேவிட் பென் அமி சென்றான். பல

தடவைகள் இயந்திரத்தை நிறுத்திவிட்டு, சற்பனையான எதிரிகளின் ஓசைக்காக அப்படியே உறைந்தது போய்க் காதைக் கொடுத்தபடி இருப்பான். பல வேளைகளில் இருளிலேயே வயிற்றால் ஊர்ந்து சென்று உலர்ந்திருந்த கற்பாங்கான ஆற்றுப்படுக்கைகளில் தடவிப்பார்த்து, உறுதிப்படுத்திக் கொள்வான். அந்தப் பதினாறு கிலோ மீற்றர்களும்தான் அவன் கண்டவைகளிலேயே நீளமான தூரமாக அவனுக்கு இருந்தது. இரவு விரைவாக முடிவுக்கு வந்து கொண்டிருந்த தோடு, எதிரியின் ரோந்துகளைச் சந்திக்கும் அபாயமும் அதிகரித்துக் கொண்டிருந்தது.

விடிந்தபோது, பென்சியோனும், அவிடானும் தூக்கமின்மையால்களைத்துப் போயிருந்தார்கள். திகில் அவர்கள் மனங்களில் நிறைந்திருந்தது. டேவிட்டின் முயற்சியின் முட்டாள்தனம் பற்றி இப்போது அர்களுக்கு விளங்கியது. அவனை இவ் ஒருபோதும் திரும்பக் காணமுடியாது என அவர்களின் மனங்களில் நிச்சயப் படுத்திக் கொண்டிருந்தார்கள்.

தொலைபேசி அடித்தது. அவிடான் கேட்கும்கருவியைஎடுத்துக் கேட்டார். ''சங்கேத பாஷையில் செய்திகளை ஒழுங்கு பண்ணும் அறையிலிருந்து பேசுகிறார்கள். ஜெருசலேமிலிருந்து அவர்களுக்கு இப்போது தான் ஒரு செய்தி கிடைத்திருக்கிறது.

''என்ன அது?''

'' ஐ 358''

அவர்கள் பைபிளைத் தேடி ஓடினார்கள். பென் சியோன் இசையாசின் முப்பத்தைந்தாம் அதிகாரம் எட்டாம் வசனத்தை வாசிக்கும் போதே நிம்மதிப் பெருமூச்செறிந்தார். ஒரு நெடுஞ்சாலை அங்கே இருக்கும் .. சிங்கங்கள் எதுவும் அங்கே இருக்காது வேறு கொடூரமான மிருகங்களும் அவ்வுயரத்துக்குப் போக மாட்டாது... ஆயினும் மீட்கப்பட்டவர்கள் அங்கே நடந்து போகலாம் .''.

நிஷோன் ஜெருசலேமுக்குப் போய்ச் சேர்ந்துவிட்டான்!

டேவிட் பென் அமி லற்ரறனைத் தவிர்த்து ஒரு சுற்றுப் பாதையைக் கண்டு பிடித்து விட்டான். ஜெருசலேமுக்கு இன்னும் வாய்ப்பு இருக்கிறது.

ஜெருசலேமின் தொண்டர்கள் ஆயிரக்கணக்கில் இரகசியப் பாதுகாப்புப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டனர். அவர்கள் நகரைவிட்டு வெளியேறி டேவிட் கண்டுபிடித்த வழி நீளவும் புதிய பாதையை மிகுந்த சிரமத்துக்கிடையில் அமைக்கத் தொடங்கினார்கள். டேவிட் ஜெருசலேமுக்குத் திரும்பி வந்ததும், இந்தப் பக்க முடிவிலிருந்து இன்னொரு தொண்டர் படையினர், பாதையை அமைத்து, அங்கிருந்து அமைத்து வரும் ஜெருசலேம் மக்களுடன் இணைந்து கொள்ளத் துடிப்புடன் செயல்பட்டனர்.

இரண்டு விசடே அணிகளும் பகலில் ஒளித்திருந்து விட்டு, இரவில் லற்ரறனில் இருக்கும் அரபு லீஜனின் கண்ணில் மண்ணைத் தூவிவிட்டு வேலை செய்

தனர், மௌனமாக, விரைவாகக் கடினமாக உழைத்த அவர்கள் ஒவ்வொரு பை நிறைந்த மண்ணையும் கைகளினாலேயே காவிச் சென்றார்கள். உலர்ந்த ஆற்றுப் படுக்கைகளூடாகவும், பற்றைக் காடுகளூடாகவும் இரு அணியினரும் ஒருவரை ஒருவர் நோக்கி அங்குலம் அங்குலமாக நகர்ந்து கொண்டிருந்தனர். டேவிட்பென் அமி ஜெருசலேமிற்கு நிரந்தரமாக மாற்றம் கேட்டுப் பெற்றுக் கொண்டான்.

டேவிட்டை ரெல் அவிவில் விட்டு விட்டு வந்த பிறகு ஜோர்தானாவின் மனம் ஒரு நிலையில் இருக்கவில்லை. சிதைந்து விட்ட கிராமத்தினை மீள்நிர் மாணம் செய்யும் வேலை ஏராளமாக இருந்த4கான் டப்னாவுக்கு அவள் திரும்பி வந்திருந்தாள். அதிகமான கட்டிடங்கள், பீரங்கிக் குண்டுகளால் தாக்கப்பட் டிருந்தன. அங்கிருந்து வெளியேற்றப்பட்டிருந்த குழந்தைகள் திரும்பி வந்திருந் தார்கள். கிற்றியின் கொட்டகை அவ்வளவாகச் சேதமடைந்திருக்காததால், அவளுடனும், கரேனுடனும் கூட ஜோர்தானாவும் சேர்ந்து கொண்டாள். இரண்டு பெண்களும் மிக விரைவாகச் சிநேகத்தை வளர்த்துக் கொண்டனர். மற்றவர்களுக்குச் சொன்னால் பலவீனமாகக் கணிக்கப்படக் கூடிய பல விஷயங் களைப் பயமில்லாமல் ஜோர்தானா கிற்றியிடம் சொல்லக் கூடியதாயிருந்தது.

ரெல் அவிவிலிருந்து திரும்பியது முதல், ஜோர்தானா தன் மன நிலையை ஒரு முரட்டுத்தனமாக முகமூடியின் பின்னால் மறைத்துக் கொண்டாலும், அவ ளது மன நிலையை முற்றாகக் கிற்றி புரிந்து கொண்டேயிருந்தாள். டேவிட்டைப் பிரிந்து வந்து இருவாரங்களின் பின் அவள் ஒரு நாள் உணவருந்தும் அறையில் அமர்ந்து நொறுக்குத் தீனியும், தேநீரையும் கிற்றியுடன் சேர்ந்து அருந்திக் கொண்டிருந்தாள். கிற்றி பேசிக் கொண்டிருக்கும் போதே திடீரென வெளிறிப் போன ஜோர்தானா, எழுந்து நின்றவள் திடீரென அறையிலிருந்து வெளியே ஓடிப்போனாள். அவளைத் தொடர்ந்து வெளியே ஓடிப்போன கிற்றி, உணர் விழந்து நிலத்தில் சரியப்போன அவளைத் தாங்கிக் கொண்டாள். அவளைத் தாங்கி, பாதி தூக்கிக் கொண்டும், பாதி இழுத்துக் கொண்டும் தன் காரியாலயத் துள் அழைத்துச் சென்றாள். அந்த ஒப்றாவைக் கட்டிலில் படுக்க வைத்துச் சிறிது பிராந்தியை வலுக்கட்டாயமாகப் புகட்டினாள். ஜோர்தானா சுய நிலையை அடையப் பத்து நிமிடங்கள் எடுத்தது.

''என்ன நடந்தது?'' கிற்றி கேட்டாள்.

''எனக்குத் தெரியவில்லை. இதுவரை இப்படி எதுவும் நடக்கவில்லை. நீங்கள் பேசிக்கொண்டிருந்ததைக் கேட்டுக் கொண்டிருந்தேன். திடீரென உங்கள் குரல் கேட்கவில்லை. உங்களைக் காண முடியவில்லை. இருளாகிப் போன எனக் கூடாகக் குளிரான துன்ப உணர்வொன்று ஊடுருவிச் சென்றது.''

''தொடர்ந்து சொல்...''

''டேவிட் அலறுவது எனக்குக் கேட்டது..... அது மிகவும் பயங்கரமா யிருந்தது.''

''பரவாயில்லை, இளம் பெண்ணே. இப்போ நான் சொல்வதைக் கேள் நீ வெடித்து விடப் போவது போல் பதட்டப்பட்டுக் கொண்டிருக்கிறாய் நீ சில

நாட்கள் ஓய்வு எடுக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன். யாட் எல்லுக்கு அம்மாவிடம் போய்.....''

ஜோர்தானா பாய்ந்தெழுந்தவள் ''முடியாது'' என்றாள்.

''கீழே உட்கார்'' கிற்றி உரமாகக் கட்டளையிட்டாள்.

''இது பைத்தியக்காரத்தனம். நான் வெட்கங்கெட்ட தனமாக நடந்து கொள்கிறேன்.''

''நீ சாதாரணமாகத்தான் நடந்து கொள்கிறாய். நீ உன், உணர்ச்சிகளை உள்ளேயே புதைத்துக் கொள்ளாமல், வெளிக்காட்டி இடைக்கிடை சிறிது கண்ணீ ரையும் சிந்தினால் இப்படிப்பட்ட நினலக்குள் சிக்கிக் கொள்ள மாட்டாய்.''

''நான் இப்படி நடந்து கொண்டதை அறிந்தால் டேவிட் என்மீது வெறுப் புக் கொள்வான்.''

,இந்த விசர்க்கதைகளை நிறுத்து. உன்னுடைய ஷ்ப்றாத்தனமான பெருமைகள் நாசமாய்ப் போகட்டும். நான் உனக்குத் தூக்க மருந்து தரு கிறேன். நேராகப் படுக்கைக்கு போ. ''

''முடியாது'' சொல்லிவிட்டு ஜோர்தானா அறைக்கு வெளியே ஓடி விட்டாள்.

கையாலாகாத்தனமான பெருமூச்சொன்றை கிற்றி வெளி விட்டாள் உணர்ச்சிகளை வெளியே காட்டுவது பலவீனமாக கருதப்படும் என்ற உணர் வுடைய பெண்ணை என்ன செய்ய முடியும். வருடக்கணக்கான பதட்டங்களும் போரும் எல்லா ஷ்ப்றாக்களைச் சுற்றியுமே ஒரு கடினமான போர்வையைப் போர்த்தியிருந்தன. வினங்கிக் கொள்ள முடியாத அளவுக்கு இந்தப் பெருமை கொள்ளல் உக்கிரமானதாயிருந்தது.

இந்தச் சம்பவம் நடந்து மூன்று நாட்களுக்கு பிறகு ஒரு சாயந்தரம் கரேனை டொவ்வின் இடத்துக்கு அனுப்பிவிட்டு, கிற்றி தன் கொட்டகைக்குள் வந்தாள். ஜோர்தானா ஏதோ அறிக்கைகளைத் தயாரித்துக் கொண்டிருந்தாள் கிற்றி அவளிருந்த மேசைக்கு முன்னால் போய் அமர்ந்தாள். நிமிர்ந்து பார்த் துச் சிரித்த ஜோர்தானா கிற்றியின் முகத்தில் தெரிந்த உணர்ச்சிகளைக் கண்டு முகம் விகாரமாய்ப் போனாள். கிற்றி, பேனாவை அவள் கைகளி லிருந்து பிடுங்கி எடுத்து விட்டாள். இருவருமே, சில கணங்கள் எதுவும் பேச வில்லை.

''டேவிட் செத்து விட்டான் அல்லவா?'' என்றாள் ஜோர்தானா.
''ஆமாம்.''

''எப்படி அது நடந்தது? உணர்ச்சி யெதுவுமில்லாத சுரத்தில்லாத குரலில் ஜோர்தானா. கேட்டாள்.

''அரி, சில நிமிடங்களுக்கு முன்தான் தொலைபேசியில் தொடர்பு கொண்டார். விபரங்கள் அவ்வளவு தெளிவாகவில்லை. சில பால்மாக்குகள், சில ஹகானாக்கள் சில மக்கபீஸ்கள் கொண்ட குழு வொன்றைச் சேர்த்தெடுத் திருக்கிறார். அனுமதியில்லாமலே ... பழைய நகரத்தின் சுவர்கள் மீது தாக்கு தல் நடத்த டேவிட் கண்வைத்திருந்தான். ஆனால், அது அவனது சக்திக்கு அப்பாற்பட்டது ஆகியிருக்க வேண்டும். அந்தக் குழுவினர் பழைய ஜெரு சலேமை மீட்டெடுக்கத் தாக்குதல் ஒன்றைச் செய்திருக்கிறார்கள். அவர்கள் சியோன் மலையைக் கைப்பற்றினார்களாம்...''

மேலே சொல்லுங்கள்... ஜோர்தானா சொன்னாள்.

''அவர்களுக்கு வாய்ப்பே இருக்கவில்லை. அது ஒரு தற்கொலை முயற்சி...''

ஜோர்தானா அசையவுமில்லை, கண்களை மூடித் திறக்கவுமில்லை. ''நான் என்ன செய்யப் போகிறேன். என்ன சொல்லப் போகிறேன்'' என்று இரங்கினாள் கிற்றி.

அந்த யுவதி எழுந்து முகவாயை உயர்த்தி நின்றபடி, ''என்னைப் பற்றிக் கவலைப்படாதீர்கள்.'' தெளிவான குரலில சொன்னாள்.

டேவிட் பென் அமிக்காக, ஜோர்தானா கண்ணீர் எதுவும் வைத்திருந் தாளானால், அதை அவள் சிந்துவதை எவரும் காணவில்லை. தன்னுடைய துயரங்களோடேயே அபுயேஷாவின் சிதைவுகளுடே அவள் மறைந்து போனாள். அவள் உண்ணாமல், உறங்காமல், அசையாமல், நீர் கூட அருந்தாமல் நாலு பகல்களும், நாலு இரவுகளும் ஒரே இடத்தில் அமர்ந்து இருந்தாள். பின் அவள் கான் டப்னாவுக்குத் திரும்பி வந்தாள். அரி தன் காதலியின் விஷயத்தில் நடந்து கொண்டது போலவே, ஜோர்தானாவும் டேவிட்டின் பெயரை மறு படியும் உச்சரிக்கவேயில்லை. ஜெருசலேமுக்கான பாதையை டேவிட் கண்டு பிடித்து ஒரு மாதத்தின் பின் ஒரு நாளிரவில், ''பர்மா நெடுஞ்சாலை'' அதா வது லற்ரறனை தவிர்த்து நிறுவப்பட்ட பாதை போட்டு முற்றாக்கப்பட்டது. ஒரு வாகனத் தொடர் இப்பாதையூடாக விரைந்து செல்லவும், ஜெருசலேம் முற்றுகை நிரந்தரமாகவே முடிவுக்கு வந்தது.

அந்தக் கணம் வரை இஸ்ரேல் வாழுமா என்று நிச்சயமாக எவராலும் கூற முடியாதிருந்தது. ஜெருசலேமில் இருந்து வந்த தொண்டர்களும், ரெல் அவிவிலிருந்து சென்ற தொண்டர்களும் கைகுலுக்கிக் கொண்டனர். அதேவேளை. யூதர்கள் தங்கள் சுதந்திரப் போரை வெற்றி கொண்டு விட்டார்கள்.

O

அத்தியாயம் பதின்மூன்று

பல மாதக்கணக்கான கசப்பான, இரத்தம் சிந்தும் போர் அவர்கள் முன்னே காத்துக் கிடந்தாலும், ''பர்மா வீதி'' திறக்கப்பட்டது, யூதர்களுக்கு மிக அவசியமாகத் தேவைப்புட்ட நேரத்தில், கிடைத்த ஆத்மீக எழுச்சியைக் கொடுத்தது.

அரபு நாடுகளின் முதல் படையெடுப்பை யூதர்கள் முறியடித்த பிறகு ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையால் ஒரு தற்காலிகப் போர் நிறுத்தத்தை அமுல்படுத்த முடிந்தது. இரு பகுதியினருமே அதை வரவேற்றார்கள். தங்கள் இராணுவத் தலைமைப் பீடங்களில் மாற்றங்களைக் கொண்டு வரவும் மீள் ஒழுங்கமைக்கவும் அவசியம் இருபபது, அரபுக்களுக்குத் தெளிவாகவே தெரிந்தது. நாட்டை வெற்றி கொள்ள முடியாத காரணத்தால் உலக நாடுகளின் கண்களில் கௌரவத்தை இழந்திருந்தார்கள். மேலும் அதிக ஆயுதங்களைக் கொண்டு வந்து சேர்க்கவும், செயல்பாட்டுத் திறனை அதிகரித்துக் கொள்ளவும், இஸ்ரேலியர்களுக்கும் அவகாசம் தேவைப்பட்டது.

பால்மாக்குகள், அதிதீவிர பழமைவாதிகள், மக்கபீஸ்கள் ஆகியோரின் ஒத்துழைபபு குறிப்பிட்ட அளவுகளிலேயே கிடைத்ததால், தற்காலிக அரசாங்கத்தால் நிலைமையை முற்றாகக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க இயலவில்லை. மத்திய ஆணைக்குழுவிடம் இருந்து கட்டளைகளை ஏற்றுக் கொள்ளாத பட்சத்தில் போர் முனைகளிலிருந்து விலக்கப்படும் அபாயம் இருப்பதை உணர்ந்ததும், பால்மாக்குகள் தனித்து சிறப்புப் படையாக இயங்குவதை விடுத்து, ஒன்றாக இஸ்ரேலிய இராணுவத்தில், இணைந்து கொண்டு தங்களுக்குப் பெருமை சேர்த்தனர். மக்கபீஸ்களும் இது போலவே, இஸ்ரேலிய இராணுவத்தின் விசேட மக்கபீஸ் பட்டாலியன்களாக இணைந்து கொண்டனர். ஆனால், தங்கள் அதிகாரிகளை, தங்களுக்கு தலைமை தாங்கும் உரிமையை வலியுறுத்தினர். ஆனால் தொடர்ந்து, பைபிளில் கூறப்பட்டுள்ளது போல் எழுத்துக்கு எழுத்து, பிழை படாமல் வரும் இரட்சகரை எதிர்பார்த்துக் காத்திருக்கும் மத தீவிரவாதிகளின் விட்டுக்கொடுக்காத மனப்பான்மையை எந்தத் தீவிர சக்திகளாலும் மாற்ற முடியவில்லை.

இந்தப் பிரிவுகள் எல்லாம் ஒன்று சேர்க்கப்படும் விஷயம், முற்றாகிவரும் போது தான், மக்கபீஸ்களை நிரந்தரமாகவே தனிமைப் படுத்திப் பிரித்து விடும் அந்தத் துன்பியல் நிகழ்வு ஏற்பட்டது. மக்கபீஸ்களின் அமெரிக்க ஆதரவாளர்கள், அவசியமாகத் தேவைப்பட்ட அதிகளவு ஆயுதங்களின் தொகுதியொன்றையும், ''அக்கிவா'' எனப்பட்ட என்று பெயரிடப்பட்ட ஒரு சரக்கு விமானத்தையும் கொள்வனவு செய்திருந்தார்கள். இந்த ஆயுதங்களோடு கூட,

மக்கபீஸ் விசேட பட்டாலியன்களில் இணைந்து கொள்ளத் தயார் நிலையில் பல நூறு தொண்டர்களையும் தயாராக வைத்திருந்தார்கள். யுத்த நிபந்தனைகளில், எந்தவொரு பகுதியினரும், மீளஆயுதங்களைப் பெற்றுக் கொள்ளக் கூடாதென்பதும், ஒரு நிலைகளையும் மீளப் பலப்படுத்தக் கூடாதென்பதும் உள்ளடங்கியிருந்தது. அரபு, யூத பகுதியினர் இரு சாராருமே, இந்த ஐ. நா வின் கட்டளையை அலட்சியப்படுத்தினார்கள். இரு பகுதியினருமே, இரகசியமான ஆட்களையும், ஆயுதங்களையும் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தார்கள். இவற்றைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் இருந்த இடங்களுக்கிடையில் நகர்த்தியும் பலத்தை வளர்த்துக் கொண்டார்கள்.

''அக்கிவா'' என்று ஒன்று இருப்பது ஐரோப்பாவிலிருந்த இஸ்ரேலிய ஆட்களால் தெரிய வந்தது. இஸ்ரேலிய தற்காலிக அரசாங்கம், அக்கிவாவும், அதன் உள்ளே இருக்கும் ஆயுதங்களும் தன்னிடம் பாரப்படுத்தப்பட வேண்டும் என வலியுறுத்திக் கேட்டது. இஸ்ரேல் இப்போது ஒரே அரசை அமைத்து, ஒரே போரைச் சந்தித்து வருகிறது. எப்படி இருந்தாலும், மக்கபீஸ் பட்டாலியன் இஸ்ரேலிய இராணுவத்தின் ஒரு பகுதிதானே என்று விவாதித்தனர். இதை மக்கபீஸ்கள் ஆட்சேபித்தனர். அவர்கள், தங்கள் பிரத்தியேக அடையாளத்தை நிலைநிறுத்த விரும்பியதோடு, இந்த ஆயுதங்களும் தங்கள் அங்கத்தவர்களின் பாவனைக்காக விசேடமாகக் கொள்வனவு செய்யப்பட்டவை என்றும் கூறினார்கள்.

அரசோ யுத்த நிறுத்த மீறல் இது என்ற பிரச்சினையைக் கிளப்பியது. மக்கபீஸ்கள் தாங்களே நேராகக் கையாளுவதை விட அக்கிவா விஷயத்தைத் தற்காலிக அரசு கையாண்டால், எவ்வளவோ ரகசியமான முறையில் இந்த ஆயுதங்களை உள்ளே கொண்டு வந்துவிடலாம் எனவும், அரசாங்கத்தினர் கூறினர். போர் நிறுத்தத்தை கௌரவிக்க வேண்டிய கடமைப்பாடு எதுவும் தங்களுக்கில்லை, ஏனெனில் மத்திய கட்டளைப் பணியகத்தின் கட்டுபாட்டின் கீழ் தாங்கள் இல்லையென்றும், மகபீஸ்கள் எதிர்வாதம் செய்தார்கள். ஆகவே இந்தப் பிரச்சினை இழுபடடுக் கொண்டே சென்றது. அரசோ, ஒரேயொரு மைய அதிகார பீடமே இருக்க முடியும் என்றும், மக்கபீஸ்கள், அதற்கெதிராகவும் விவாதித்துக் கொண்டிருந்தனர்.

அக்கிவா அதன் முதல் தொகுதி ஆயுதங்களுடனும், தொண்டர்களுடனும் ஐரோப்பாவிலிருந்து புறப்பட்டது. இந்த ஆயுதங்களும், ஆட்களும் மிக அத்தியாவசியமாகத் தேவைப்பட்ட அரசாங்கமோ, இந்த விமானத்தை இங்கு இறக்காமல் ஐரோப்பாவுக்கே திருப்பி அனுப்பும்படி மக்கபீஸ்களுக்குக் கட்டளையிட வேண்டி ஏற்பட்டது. மக்கபீஸ்கள் இந்த உத்தரவால் மிகவும் ஆத்திரப்பட்டனர்.

''அக்கிவா'' இந்த உத்தரவை மீறிப் பலஸ்தீனத்தை நெருங்கிய போது, விமான நிலையம், அரசு அதிகாரிகளாலும், மக்கபீஸ்களாலும், ஐக்கிய நாடுகள் சபை அவதானிகளாலும் நிறைந்தது. விமானத்தை இறக்க முயற்சிக்காமல் ஐரோப்பாவுக்கே திரும்பிச் செல்லும்படி ஒரு இறுதி எச்சரிக்கையை வானொலி

மூலம் அரசு அனுப்பியது. அக்கிவா மறுத்து விட்டது. அரசு போர் விமானங்களை மேலே போகக் கட்டளையிட்டது. அக்கிவா சுட்டு வீழ்த்தப்பட்டது.

இராணுவத்தினரும், மக்கபீஸ் துருப்புகளினரும் இடையில் மோதல் வெடித்தது. ஆதிரத்தில் மக்கபீஸ்கள் தங்கள் பட்டாலியன்களை இராணுவத்தில் இருந்து வாபஸ் பெற்றுக் கொண்டனர். ஒவ்வொரு பகுதியினரும், மற்ற வரினமேல் வசைகளையும், குற்றச் சாட்டுகளையும் எதிர்க்குற்றச்சாட்டுகளையும், மாறி மாறி விசிக்கொண்டனர். கடைசியாக அக்கிவா விஷயத்தில் இருந்த நீதி இந்த வசைபாடலுக்கும் குற்றச்சாடுக்களுக்கும் அடியில் புதைந்து போயிற்று. மகபீஸ் உறுபினர்களிடையே இந்தவெறுபபு நிரந்தரமாகவே படிந்துபோயிற்று.

இந்தச் சம்பவம் அதிகாரம் இருக்கும் இடம் எது என்பது பற்றிய சந்தேகங்களை நிவர்த்தி செய்து விட்டது. பிரிட்டிஷ் அதிகாரத்தின் கீழ் இருந்த காலத்தில் மகபீஸ்கள் அடிக்கடி கொடுத்த தொல்லைகள் பிரிட்டிஷாரின் வெளியேறும முடிவுகளான காரணிகளில் ஒன்றுதான். ஆனால், பிரிட்டிஷார் வெளியேறிய பறகு இவர்களது பயங்கரவாத உத்திகள், முக்கியத்துவமற்றுப் போயவிட்டதோடு, களத்தில் போரிடும ஒரு மரபுரீதி இராணுவத்திற்கு அவசியமான கடடுபபாடுகளை ஏறறுக கொளவது, மக்கபீஸ்களுக்கு சிரமமாயிருபபது போல் தோனறியது. ஆகவே, போரிடும் அணி என்ற அடிப்படையில் அவர்கள் பெறுமது கேளவிகுரியதாயிற்று.

அவர்களுடைய ஒரே வெற்றி, மனநிலை முற்றாக நொருக்கப் பட்டிருந்த ஜாபாவையே பெறபபடடிருநதது. மறறைய இடஙகளில தோலவிய கணடிருநதனர். நெவே சாடஜ் கபரிமதத்தில் அவர்கள நிகழ்ததிய படுகொலைகள் யூதர்களுக்கு எதிராக எழுந்து நினற பெரும கறையாக இருநதது. மக்கபீஸ்கள் பயனபடுத்திய தநதிரோபாய வியூகஙகளும் செயல வீரர்களுதானே. ஆனால, இதே குணாதிசயங்களே அவர்களை முனறுயான அதிகாரததுக்கு எதிராக புரட்சிசெய்ய வைதததது. அகதிவா சமபவதனுகுப பறகு மகபீஸகள் கோபமுறறு, அகநதை யாலை அரசியல குழுவாக இயஙகினார்களை, ஆயுதபலததின மூலம, எல்லாப் பரசசினைகளுகுகும தீவு கணடுவிடலாம எனபது அவர்கள் சித்தாந்தமாக இருநதது.

ஒரு யாதகாலமாக இரு பகுதியினருடனான பேச்சுவார்த்தைகள் தொடர்ந்தன. ஐகிய நாடுகள சார்பில் செயலாறறிய கவுணட் பெர்னாடொறறுக்கும், அமெரிக்காவை அவரது உதவியாளர் ராலபபுஞ்சிறகும, இரு அணியினரையும் ஒனறு கூடட முடியாமல போயிற்று. முபபது வருடஙகளாக, வளாநது வநதிருந்த ஒன்றை ஒருமாத முயறசியில உடைததுவிட அவாகளால் முடியாமல் போயிறறு. மததிய கிழக்கில இருந்த காவுஜி அடிகடி யுத்த மீறலகளை செய்தபடி இருநதான. பாதாதறகு எதிபதயர்கள யுதத நிறுத்த கால எலலை முடிவடைவதறகு முன்னரே தாகுதலை நிகழ்த்தி நமபிகைகையைச் சிதறடித்தனர்.

இது ஒரு பாரிய தவறாக இருந்தது. ஏனேனில், இது ஒரு புதிய இஸ்ரேலிய நடவடிக்கைத் தொடருக்கு வித்தாக அமைந்தது. அரபுப் படையெடுப்புக்கு எதிராகத் தாக்குப் பிடித்த யூதர்களின் திறமை உலக இராணுவ வல்லுநர்களை வியப்படைய வைத்ததென்றால், இஸ்ரேலிய இராணுவம் முன்னேறித் தாக்கத் தொடங்கியதும், அவர்கள் வாயடைத்துப் போயினர்.

ஜெருசலேம், ரெல் அவிவ் போன்ற நகரங்களின் மீது விமானத்தாக்குதல்களை நடத்தும் எண்ணத்தைக் கைவிடும்படி எச்சரிக்கும் விதத்தில் கெய்ரோ, டமாஸ்கஸ், அம்மான் முதலிய நகரங்கள் மீது இஸ்ரேலிய விமானப்படையினர் நடத்திய விமானத் தாக்குதல்களுடன் போரின்புதிய அத்தியாயம் தொடங்கியது. அரபுக்கள் ஒரு யூதநகரத்தின் மீதும் இதன்பின் விமானக் குண்டுவீச்சுகளை மேற்கொள்ளவில்லை. அரபுக்களுக்கு ஆயுதங்கள் உள்வருவதற்கு முக்கிய துறையாகப் பயன்பட்ட லெபனானின் ரயர் துறைமுகத்துக்குக் குண்டுவீசித் தாக்கியதன் மூலம் இஸ்ரேலிய கோர்வெற்ஸ் ரகக்கப்பல்கள், போரை எதிரியின் வாசல்படிக்கே எடுத்துச் சென்றன.

மாதக்கணக்காக முற்றுகையிடப்பட்டிருந்ததும், சிரியத் தாக்குதல் ஒன்றை முறியடித்திருந்ததும் ஆன எயின் ஜெவ் கிபுட்சின் விவசாயிகள் இப்போ பதிலடி கொடுத்தனர். துணிகரமான ஒரு இரவுத் தந்திரோபாய நகர்வின் மூலம், அவர்கள் சுசிற்றா மலையில் ஏறி அங்கிருந்து சிரியர்களை விரட்டியடித்தனர்.

மத்திய கலிலியின் அரி பென் கானான் காவுக்ஜியை கலைத்துக் கொண்டு ஜெருசலேமைக் கைப்பற்ற விரைந்தான். தனது ஆட்களை அவர்களின் சக்தியின் எல்லை வரை விரட்டியும், இருக்கும் ஆயுதங்கள் உபகரணங்களை புத்திசாலித்தனமாகப் பாவித்தும், கூலிப்படையினரை வெற்றிகரமான தந்திரோபாய நகர்வின் மூலம் முற்றாகவே தோற்கடித்தான். முப்தியின் பிரத்தியேக ஜெனரல் நன்றாக அடிவாங்கி நசரேத்தையும் பறிகொடுத்தான். நசரேத்தின் வீழ்ச்சியோடு, மத்திய கலிலியின் விரோத மனப்பான்மையான கிராமங்கள் வீழ்ச்சி அடைந்ததோடு, காவுக்ஜியும் தன் படைகளுடன் லெபனான் எல்லையை நோக்கி பின்வாங்கி ஓட்டம் எடுத்தான். இஸ்ரேலியர்கள் இப்போ முழுக் கலிலியையும் அதன் வீதிகளையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருந்தனர்.

பாப் எல் வாட்டிலும், ஜெருசலேம் தொடர்பு வழியிலும், ஹில்மென் பிரிகேட்டைச் சேர்ந்தவர்கள் தங்கள் கட்டுப்பாட்டிலிருந்த பிரதேசங்களை விஸ்தரித்து, பெத்லகேமை நோக்கி நகர்ந்தனர்.

நெகெவ் பாலைவனத்தில், எகிப்தியர்களை இஸ்ரேலியர்கள் இக்கட்டான நிலையில் வைத்திருந்தனர். சாம்சன் ஒருமுறை ஆயிரம் நரிகளின் வால்களில் பந்தங்களைக் கொளுத்தி விட்டு அவைகளைப் பிலிஸ்தீன் வயல்களில் விரட்டி விட்டிருந்தார், இப்போ ''சாம்சனின் நரிகள்'' என்று பெயர் சூட்டப்பட்டிருந்த இயந்திரத் துப்பாக்கிகள் பொருத்திய ஜீப்புகள், எகிப்திய விநியோகப் பாதைகளையும், அரபுக் கிராமங்களையும் மின்னல் வேகத்தில் தாக்கின. நெக்பா

கிபுட்சின்மேல் மேற்கொள்ளப்பட்டிருந்த பயங்கரமான முற்றுகை முறியடிக்கப் பட்டது.

முக்கோணத்தை நோக்கிக் கொண்டிருந்த ஷரோன் பள்ளத்தாக்கிலேயே இஸ்ரேலியர்கள் தங்களின் குறிப்பிடத்தக்க பெரிய வெற்றியொன்றைப் பெற் றனர். ஜீப் பிரிவுகளை முழுமையாகப் பயன்படுத்தியும், முந்தைய ஹனிற்றா பிரிகேட்டினால் தலைமை தாங்கப்பட்டும், முன்பு ஜெருசலேமுக்கான பாதையில் இடையூறுகளைச் செய்து கொண்டிருந்த, விட்டாவையும், ரம்லேயையும், தாக்கி உள்ளே புகுந்தனர். அவர்கள் பலஸ்தீனத்திலேயே பாரியதாக் இருந்த லிட்டா விமானத்தளத்தைக் கைப்பற்றி, லற்ரறனை சூழ்ந்து கொள்ளும் நோக்கிலான தந்திரோபாய நகர்வுக்கு ஆரம்ப ஆயத்தமாக, சமாரியன் முக்கோணப் பிரதே சத்தினுள்ளும் புகுந்தார்கள். இப்படியாகச் செல்லும் வழியில், ஈராக்கிய படை களின் எதிர்ப்பையும் ஒதுக்கித்தள்ளி, முற்றுகையிடப்பட்டிருந்த, இன்னொரு சிறுபிள்ளைகளுக்கான கிராமமான பென் ஷெமெனையும் விடுவித்தார்கள். லற் ரறனை சூழ்ந்து கொள்ளும் வேலை கிட்டத்தட்ட முடிவுறும் நிலைக்கு வந்த போது, எல்லா அரபுக்களும் ஒரே குரலில் இரண்டாவது போர் நிறுத்தத்துக்காகக் குரல் கொடுத்தனர்.

இஸ்ரேலிய வெற்றிகள் அனைத்தும் பத்தே நாட்களில் பெறப்பட்டி ருந்தன.

பெர்ணடொற்றும், புஞ்சும் இரண்டாவது போர் நிறுத்தத்திற்கான பேச்சு வார்த்தைகளை மேற்கொண்டிருந்தபோது அரபுலகம் மிகவும் ஆத்திரமடைந் திருந்தது. ட்ரான்ஸ்-யோர்தானின், அப்துல்லா தான் முதலில் எதிர்காலப் போக்கைத் தெளிவாகத் தெரிந்து, புரிந்து கொண்டவன். அவன் இஸ்ரேலிய தற்காலிக அரசாங்கத்தோடு, இரகசியப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்ட அரபு லீஜனைப் போரில் ஈடுபடுத்தாமல் வெறுமனே நிறுத்தி வைக்க ஒப்புக் கொண் டான். இது யூதர்களின் முழுக் கவனத்தையும் எகிப்தின் மேல் திருப்ப உதவும். கைமாறாக பழைய நகரத்தைக் கைப்பற்றவோ லீஜன் மேலாதிக்கம் பெற்றி ருந்த சமாரியன் முக்கோணத்தினுள்ளோ போவதில்லை என்று ஒப்புக் கொண் டனர்.

கொள்ளைக்காரனான காவுக்ஜி திரும்பவும் யுத்த நிறுத்தத்தை முறித்து லெபனானிலிருந்து தாக்கினான். இரண்டாவது போர் நிறுத்தமும் முடிவுக்குவர, வேதாகமத்தில் குறிக்கப்பட்டிருக்கும் லெபனானிய அரசனொருவனின் பெயரி லான ''ஹிராம் நடவடிக்கை'' காவுக்ஜியினதும், முப்தியினதும் கனவுகளை நிரந்தரமாகவே பொடிப் பொடியாக்கி விட்டன. சிதறித் தப்பி ஒடிக்கொண்டி ருக்கும் கூலிப்படையினரை துரத்தியபடியே இஸ்ரேலிய இராணுவம், லெபனானிய எல்லைகளையும் கடந்து சென்றது. லெபனானிய எல்லைக் கிராமங்கள் சரணடை வதற்கான வெள்ளைக் கொடிகளைத் தொகையாகப் பறக்க விட்டன. காவுக்ஜி முறியடிக்கப்பட்டு, துரத்தப்பட்டதுடன், அவர்கள் பெய்ரூட்டுக்கும், டமாஸ்க சுக்கும் போவதைத் தடுக்க எதுவும் இல்லாவிட்டாலும், இஸ்ரேலியர்கள் தங்கள் சொந்த எல்லைக்குத் தாங்களாகவே திரும்பி வந்தனர்.

கலிலியிலிருந்து எதிர்ப்புகள் அனைத்தும் விலக்கப்பட்டு விட்டதாலும், ஷரோன் அமைதியாக இருந்ததாலும், ஜோர்தான் வசமிருந்த இடங்களைத் தாக்குவதில்லை என்று அப்துல்லாவுக்கு உறுதியளித்திருந்ததாலும், இஸ்ரேலிய இராணுவம் தன் முழுக் கவனத்தையும் எகிப்தின் மேல திருப்பக் கூடியதாக இருந்தது.

இஸ்ரேலிய தொடர் வெற்றிகளுக்கான காரணிகளை விளக்குவதில் அரபு லகம் அவசர அவசரமாக முயன்றது. ட்ரான்ஸ் ஜோர்தானின் அப்துல்லா, அரபுக்களின் தோல்விக்கு ஈராக்கைப் பகிரங்கமாகக் குற்றம் சாட்டினான். முக் கோணத்திலிருந்து தாக்கி யூதர்களை இரண்டாகப் பிரித்து விடாமல், முட் டாள்களைப் போல் இளித்துக் கொண்டிருந்ததாகச் சொன்னான். ''செழிப் பான பாறை'' யின் கீழ் மாபெரும் அரபுலகை ஆள கனவு கண்டு கொண்டி ருந்த ஈராக் நீண்ட தொலைவு கொண்ட தங்கள் விதியோகப் பாதைகளைத் தோல்விக்குக் காரணம் காட்டியது. சிரியர்கள் தான் மிக மோசமாகக் குர மெழுப்பினார்கள். அவர்கள், அமெரிக்காவையும், மேற்குலக ஏகாதிபத்திய வாதத்தையும் சாடினார்கள். எகிப்திய இராணுவத்தில் இணைந்து போராடிய சவுதி அராபியர்கள் பொதுவாக, எல்லோரையும் வரிசையாக அரபு நாடுகள் ஒவ்வொன்றையும், குற்றம் கூறினார்கள். எகிப்தியர்களோ, யூதர்களுடன் அப் துல்லா ஒப்பந்தம் செய்ததன் மூலம் காட்டிக் கொடுத்து விட்டதாக ட்ரான்ஸ்- ஜோர்தானைக் குற்றம் சாட்டினார்கள். போரின் குறிப்பிடத்தக்க பக்கவிளை வாக இருந்தது. எகிப்திய தோல்விகளை, வெற்றிகளாகப் படம் பிடித்து. எகிப்திய பத்திரிகைகளும், வானொலியும், பிரசாரம் செய்த முறைதான். இவ்வளவு காலமும் எகிப்திய மக்கள் தங்கள் இராணுவம் வெற்றி பெற்றுக் கொண் டிருப்பதாகவே எண்ணிக் கொண்டிருந்தார்கள். லெபனானியர்களும், யெமெனி யர்களும் மௌனமாகவே இருந்து விட்டனர். போரில் ஈடுபடுவதே ஆரம்பம் முதல் அவர்களுக்கு விருப்பமாக இருக்கவில்லை.

ஒன்றிணைக்கப்பட்ட அரபுலகப் பலத்திற்குத் தோல்விகளை யூதர்கள் தொடர்ந்து ஏற்படுத்திக் கொண்டிருந்தபோது, அரபுலக ஒற்றுமை என்ற மாயை லையத் தொடங்கியது. முன்பு, முத்தங்கள், கைகுலுக்கல்கள், நிரந்தர சகோ தரத்துவத்துக்கான பிரகடனங்கள் இப்போது, ஒருவருக்கொருவர் எதிராகக் கத்தி களை உருவுவதாகவும், வசைபாடலாகவும், இறுதியாக அரசியல் படுகொலை களை நிகழ்த்துவதாகவும், மாறிப் போயின. இறுதியில் பழைய நகரின், ஒமாரின் பள்ளி வாசலிலிருந்து தொழுகை முடிந்து வந்து கொண்டிருந்த அப்துல்லா முஸ்லீம் மத வெறியர்களால் கொலை செய்யப்பட்டான். எகிப்திய பாரூக் அரசர், அரபுப் பாணி ''மெயின் காம்ப்'' (எனது போராட்டம்) புத்தகப் பக்கங்களை உருவேற்றிக் கொண்டிருந்த இராணுவக் கடும் போக்குக் குழுவொன்றினால் எகிப்தை விட்டுத் துரத்தியடிக்கப்பட்டார். அரபுக்களின் முதுபெரும் விளையாட்டுகளான சதியா லோசனைகளும், படுகொலைகளும் இந்நேரத்தில் தலைவிரித்தாடின.

நெகெவ் பாலைவனத்திலே, எதிரிகளின் பலத்துக்கு இணையாக வலுப் படுத்தப்பட்ட, நன்கு ஒருங்கிணைக்கப்பட்ட இஸ்ரேலின் இராணுவம் போரை இறுதிக் கட்டத்துக்குக் கொண்டு வந்தது. நெக்பா கிபுட்சைத் துன்புறுத்தி வந்த சுவெய்டான் - அதாவது மலை மிருகம் - வீழ்ந்தது. சுவெய்டானில் தான் எகிப்

தியர்கள் அதிக அளவில் தங்கள் வீரத்தைக் காட்டினார்கள். போர் நடவடிக்கையின் போது தவிர்த்துச் செல்லப்பட்ட, அதே சமயம் யூத முற்றுகைக்குட்பட்டிருந்த, எகிப்திய சிறுபடைப் பிரிவு நிலைகொண்டிருந்த பாலுஜாவிலிருந்து, பின்னர் நடைபெற்ற போர் நிறுத்தப் பேச்சுவார்த்தைகளின் போது எகிபதியர் வெளியேற்றப்பட்டனர். இந்தப் பிரிவில் இருந்த எகிப்திய அதிகாரிகளில் இளமையுடன் இருந்த ஒரு கப்டன் தான் பின்பு பாரூக் அரசைக் கவிழ்க்கும் சதிக்குத் தலைமை தாங்கினான். அவனது பெயர் கமால் அப்துல் நாஸர்.

எகிப்திய கடற்படையின் பெருமைக்குரிய சின்னமாக விளங்கிய "பாரூக்" கப்பல், ஒரு போர் நிறுத்தத்துக்குச் சில மணி நேரங்களுக்கு முதல் யுத்த தந்திரோபாய அனுகூலங்களைப் (Tactical Advantage) பெறும் நோக்கில் இஸ்ரேலிய நிலைகளுக்குக் குண்டு வீசித் தாக்க முயற்சித்தது. டைனமற் நிரப்பப்பட்ட இஸ்ரேலிய மோட்டார் படகுகள், இலக்குகளை நோக்கிச் செல்லத் தயார் செய்யப்பட்டு அந்தக் குறுாய்சர் ரகக் கப்பலின் பக்கப் பகுதிகளில் மோதவிடப்பட்டு, தகர்க்கப் பட்டு அக்கப்பல் மூழ்கடிக்கப்பட்டது. திடீரென மேற்கொள்ளப்பட்ட இஸ்ரேலின் அதிரடித் தாக்குதலில், பீர்ஷ்பா - அதாவது ஏழு கிணறுகள் - எனப் பொருள்படும் தந்தை ஆபிரகாமின் நகரம் 1948-ன் கார் காலத்தில் வீழ்ச்சியடைந்தது. பீர்ஷ்பாவின் மேலே எகிப்தியர்கள் அரண்களை அமைத்துத் தங்கள் வலுவை அங்கே குவித்து, எதிர்த்துப் போராட ஆயத்தமானார்கள். இந்த அரண்கள் ஊடுருவ முடியாதவை போல் தோன்றின. மீண்டும், அந்த மண் பற்றித் தங்களுக்கிருந்த நுண்ணிய அறிவை யூதர்கள் பயன்படுத்தினார்கள். அவர்கள் ஆயிரக்கணக்கான வருடங்கள் பழமைவாய்ந்த நபாத்தியன் (Nabatean) பாதையொன்றைக் கண்டுபிடித்து, எகிப்திய நிலைகளைச் சுற்றி வளைத்துச் சுற்றுவழியில் சென்று பின்பக்கமாகத் தாக்க முடிந்தது. அந்த நேரத்திலிருந்து அது ஒரு பூரண முறியடிப்பாகவே இருந்தது. ஓடிக்கொண்டிருந்த எகிப்திய இராணுவத்தின் பின்னால் விரட்டிச் சென்ற அவர்கள் காஸாவைத் தவிர்த்து, சினாய்க்குள்ளேயே சென்று விட்டனர்.

> இறைவன் அவளில் மூர்க்கமான மனப்பான்மையைக் கலந்து விட்டார். குடித்த மனிதன் ஒருவன் தன் வாந்தியிலே தடுமாறி நடப்பதைப்போல், எகிப்தைத் தன் முயற்சிகளிலே தடுமாறவைத்தார். தலையோ, வாலோ, மரக்கிளைகளோ, நாணலோ செய்யக்கூடிய வேலைகள் எதுவும் எகிப்துக்கு மீதமிருக்காது. அந்த நாளில் எகிப்தியர்கள் பெண்களைப் போலிருப்பார்கள். தங்கள் மேல் குலுக்கப்படும், ஹோஸ்ற்களின் இறைவனின் (Lord of Hosts) கரத்தைக் கண்டு பயந்து நடுங்கிப் போவார்கள்.

இசையாசின் வார்த்தைகள் நிறைவேறிப் போயின. சூயெஸ்கால்வாயில் இருந்த ஆங்கிலேயர்கள் எகிப்தியர்கள் தோற்கடிக்கப்பட்டதாலும், இஸ்ரேலியர்கள் சூயெஸ்கால்வாய்வரை ஊடுருவி வரக்கூடும் என்ற எண்ணத்தாலும் கலவரமடைந்தார்கள். அவர்கள் இஸ்ரேலியர்கள் முன்னேறுவதை நிறுத்தவேண்டும் அல்லது பிரிட்டிஷ் இராணுவத்தை எதிர் நோக்க வேண்டி வரும் என்றும் எச்சரித்தார்கள். எச்சரிகையாகக் பிரிட்டிஷார் இஸ்ரேலியர்களைப் பயமுறுத்த ஸ்பிற்பயர் போர் விமானங்களை இஸ்ரேலுள் அனுப்பினர். சுதந்திரப் போரின் கடைசி வேட்டுக்களை பிரிட்டிஷாருக்கு எதிராகவே தீர்க்க வேண்டி வந்ததும், ஒரு வகையில்பொருத்தம் தான். இஸ்ரேலின் போர் விமானங்கள், ஆறு பிரிட்

டிஷ் போர் விமானங்களைச் சுட்டுத் தள்ளின. பிறகு, சர்வதேச அழுத்தங்களுக்கு விட்டுக் கொடுத்து எகிப்தியர்களைத்தப்பிச் செல்ல அனுமதித்தது சிதறியடிக்கப்பட்ட எகிப்திய இராணுவம், திரும்பவும் அணிதிரண்டு, கேவிக் கிடமான வீறாப்புடன் செய்ரோவுக்குள் அணிவகுத்துச் சென்று ஒரு ''வெற்றி அணிவகுப்பை'' நாடத்தியது.

இந்த சுதந்திரப்போர் வீர வரலாறாயிற்று. சமாதானப் பேச்சுக்கள் மாதக்கணக்காக நீண்டு சென்றன. அவை எப்படி நடந்தன என்று நூற்றாண்டுக் கணக்காக விவாதங்கள் நடக்கும். வல்லுனர்கள் பிரமித்துப் போயினர். யதார்த்த வாதிகள் குழம்பிப் போயினர்.

பலஸ்தீனத்தின் அரபுக்கள், யூதர்கள் திரும்பி வருவதை விருப்புடன் ஏற்றுக் கொண்டு, அவர்களுடன் சமாதான சகவாழ்வு வாழ்ந்து, ஆயிரக்கணக்கான வருடங்களின் பின், யூதர்கள் கொண்டு வரும் அபிவிருத்தியிலிருந்து தாங்களும் பயன் பெறத் தயாராக இருந்தனர். இந்த மக்கள் சண்டையிட ஒருபோதும் விரும்பியதும் இல்லை, சண்டையிட்டதும் இல்லை. அவர்கள், ஆபத்துக் காலங்களில் அவர்களை விட்டு முதன்முதல் ஓடும் தலைவர்களால் தூரோகமிழைக்கப் பட்டார்கள். அவர்களுடைய துணிவு, கும்பலில் தோன்றும் ஆவேசமாகத்தான் இருந்தது. அவர்கள், அவர்களுக்கே புரியாத, புரிந்தாலும் நம்பிக்கை கொள்ளாத கவர்ச்சியான வசனங்களால் குழப்பப்பட்டார்கள். அவர்கள் இனவாதக் கூச்சல்களுக்குப் பலியாகி இல்லாத ஒரு கடும்போக்கான சியோனிசத்தைப் பற்றிய பயத்தால் நிறைந்திருந்தார்கள். இவர்களது அறியாமையைத் தங்கள் சொந்த நலன்களுக்காக வேண்டுமென்றே பயன்படுத்தினார்கள்.

சில அரபுக்களும், அவர்களுடைய இராணுவங்களும் வீரத்தோடு போரிட்டார்கள். அநேகமாவோர், அப்படிச் செய்யவில்லை. சண்டையில் இலகுவான வெற்றிகள், கொள்ளையடிப்பு ஏற்பழிப்புப் போன்றவையே அவர்களுக்கு வாக்குப்பண்ணப் பட்டிருந்தன. ஒவ்வொருவரும், மற்றவரை மாயையான ஒரு ''அரபு ஒற்றுமை'' யைப் பற்றி உற்சாகப்படுத்திக் கொண்டிருந்தனர். ஆனால், உண்மையில் உள்நோக்கம் தான், இரத்தம் சிந்தும் அளவுக்குப் பெறுமதி மிக்கதாக இருக்கவில்லை.

இஸ்ரேலுக்காக உயிரைக் கொடுக்க யூதர்கள் தயாராக இருந்தார்கள் என்ற விஷயத்தில் சந்தேகமே இருக்கவில்லை. கடைசியில், உலகின் மனச்சாட்சியின் காரணமாக சட்டபூர்வமாக வழங்கப்பட்ட விஷயத்தைக் கூடத் தங்களின் துணிச்சலினதும், குருதியினதும் உதவியோடு தனித்து நின்று போராடி வென்றிருந்தார்கள்.

ஆகவே. இரண்டாயிரம் வருடங்களாகக் கீழே இறக்கப்பட்டிருந்த ஸ்டார் ஒவ் டேவிட் இப்போது எலாத்திலிருந்து மெற்றுளா வரை பட்டொளி வீசிப் பறந்தது. மீண்டும், எக்காலத்திலும் இறக்கப்படுவதற்காக அல்ல என்ற தோரணையில் பறந்தது.

விடுதலைப் போரின் பின் விளைவாக, இந்த நூற்றாண்டின் விரிவாக ஆராயப்பட்டதும், மிகவும் சிக்கலானதுமான பிரச்சினை ஒன்று ஏற்பட்டது.

அதுதான் அரபு அகதிகளின் பிரச்சினை. ஐந்து லட்சத்துக்கு மேற்பட்ட பலஸ்தீன அரபுக்கள் தங்கள் வீடுகளை விட்டு அண்டைய அரபு நாடுகளுக்கு ஓடியிருந்தார்கள். இந்த மக்களின் நிலை பற்றிய கலந்துரையாடல்கள், எல்லாம் ஆக்ரோஷமான வாக்குவாதங்கள், குற்றஞ் சாட்டுதல்கள், குழப்பம், தேசிய வாதம், பழிச்சுமத்தல்கள் ஆகியவற்றில் சிக்குண்டு அமிழ்ந்து போயின. இந்த விஷயம் மிகுந்த ஈடுபாட்டையும் சேறுபூசப்பட்டது போல் நிலையையும் கொண்டிருந்ததால் ஒரு குறித்த நேரத்துக்கு வெடிக்கும் அரசியல் வெடிகுண்டாக வளர்ந்தது.

பராக் பென் கானான் திரும்பும் தன் நாட்டுக்காகச் சேவையாற்ற அழைக்கப்பட்டார். தீர்க்கப்பட முடியாதது போல் தோன்றிய இந்தப் பிரச்சினையைப் பற்றி மூற்றாக அராயுமாறு, இஸ்ரேலிய அரசாங்கத்தால் கேட்டுக் கொள்ளப்பட்டார். அவர் மிகவும் நுணுக்கமாக இந்தப் பிரச்சினையை ஆராய்ந்த தோடு, அவரது குறிப்புகள் பல நூறு பக்கங்களை நிறைத்தன. தம்பிக்கை அளிக்காத விதத்தில் குழம்பிப் போயிருந்தது போலிருந்த இந்தப் பிரச்சினையைப் பற்றித் தெளிவான கண்ணோட்டத்தை ஒரு சுருக்கமான அறிக்கைத் தொகுப்பில் பராக் கொடுத்திருந்தார்.

அரபு அகதிகள் பிரச்சினை பற்றிய அறிக்கைத் தொகுப்பு

விடுதலைப் போரின் பின் விளைவுகளில் மிக பரபரப்பாக விளம்பரப் படுத்தப்பட்டது தான் அரபு அகதிகள் பிரச்சினை. அரபு ஆயுதச்சாலையில் ஒரு பலம் வாய்ந்த அரசியல் ஆயுதமாக இது மாறியிருக்கிறது. அரபுக்கள் இந்த அகதிகளின் பிரச்சினையைப் பிரசாரம் செய்ய மிகுந்த சிரமம் எடுத்துக் கொண்டிருப்பதோடு, யூத கொடூரத்தினை உலகுக்குக் காட்டும் நடைமுறை மாதிரிகளாக அரபு அகதிகள் முகாம்களைத் தொடர்ந்து வைத்திருக்க விரும்புகிறார்கள். உண்மையில் இந்தப் பரிதாபமான ஜீவன்களைப் போய்ப் பார்ப்பவர்கள், அவர்களின் நிலையால் மனக்கஷ்டத்துக்குள்ளாவார்கள்.

பலஸ்தீன அரபு அகதிகளின் பிரச்சினை விசேடமானது என்று உலகுக்குக் காட்டக்கூடும். ஆனால், இதைவிட உண்மையிலிருந்து வெகு தூரத்திலிருப்பது வேறெதுவுமில்லை. மனிதனால் நடத்தப்பட்ட ஒவ்வொரு போரும் அகதிகளையும், வீடற்றவர்களையும், இடம்பெயர்ந்தவர்களையும் சிருஷ்டித்திருக்கின்றன. இன்றைக்கும், இரண்டாம் உலகப் போர் முடிந்து ஐந்து வருட காலமாகியும், ஐரோப்பாவிலும், ஆசியாவிலும் கோடிக்கணக்கானவர்கள் இடம் பெயர்ந்திருக்கிறார்கள். இது போரின் நியதி.

அரபுத் தலைவர்கள் உலகின் அதி உயர்ந்த நீதிமன்றத்தின் தீர்ப்புக்குத் தலைவணங்கிச் சட்டத்துக்கமைய நடந்திருந்தால் இன்று அரபு அகதிகள் பிரச்சினையே ஏற்பட்டிருக்காது. இஸ்ரேல் மக்களை அழிக்க அரபுக்களால் மேற்கொள்ளப்பட்ட ஆக்கிரமிப்பு யுத்தத்தின் தேரடி விளைவாகவே அகதிகள் தோன்றினார்கள்.

பலஸ்தீனிய அகதிகள் பிரச்சினையை அரபுக்கள் தாங்களேதான் உருவாக்கினார்கள். 1947 கார்த்திகை மாதத்து பிரிவினைக்கான வாக்களிப்புக்குப் பிறகு

பலஸ்தீனிய யிசுவ்வினர், பலஸ்தீன அரபுக்களை அமைதியாகவும், சினேகபூர்வ மாகவும், யூதமக்களின் அசைக்கமுடியாத உரிமைகளை மதித்தும் இருக்கும்படி மன்றாட்டமாய் வேண்டினர். வேண்டுமென்றே செய்யப்பட்ட ஆக்கிரமிப்புக்குப் பிறகும் தனது எல்லைகளை மீறி அவர்களது ராணுவங்கள் வந்து கொண்டி ருந்த போதும், இஸ்ரேல் அரசு தனது சுதந்திரப் பிரகடனத்தில் அண்டைய அரபு நாடுகளுக்கு நேசக்கரமே நீட்டியிருந்தது.

சட்டத்துக்குப் பணிந்து நடக்கவும், சக வாழ்வுக்குமாக விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்குப் பதிலாக திட்டமிட்டு யூத மக்களை கொலை செய்வதையும் இஸ்ரேல் நாட்டை அழிப்பதுமான தங்கள் நோக்கத்தையே அரபுக்கள் அளித் தார்கள்.

புதிரான விதத்தில் படையெடுப்பு நிகழ முன்னரே அதிகமான பலஸ்தீன அரபுக்கள் வெளியேறிவிட்டார்கள். ஒப்பீட்டளவில் போர் சிறிதளவில் நடந்து கொண்டிருக்கும் சந்தர்ப்பத்திலேயே, ஹைபா, ஜாபா (Jaffa) கலிலி, ஆகிய நகரங்கள் அகதிகளை உருவாக்கின.

இதற்கு அடிப்படைக் காரணம் பலஸ்தீன அரபுக்கள் பயத்துக்குட்பட்டது தான். பலவருட காலங்களாக இனவாதத் தலைவர்கள் பெரும் தொகையில் யூதர்களைக் கொலை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தை மனதில் ஆழ விதைத்திருந்தார்கள். இந்தத் தலைவர்கள், குடியானவர்களின் படிப்பறிவு இல் லாத தன்மை, அவர்களின் மூட நம்பிக்கைகள், வெறித்தனமான மத ஈடுபாடு ஆகியவற்றோடு விளையாடினார்கள். இந்தத் தலைவர்கள், தங்கள் தங்கள் சொந்த நோக்கங்களைப் பற்றிக் கவலைப்பட்டார்களே அல்லாமல், இந்த ஏழைக் குடியானவர்களைப் பற்றிச் சிறிதும் கவலைப்படவில்லை. இவர்கள் இந்த மக்களுக்கு முற்றாகத் துரோகம் இழைத்தார்கள். குருட்டாட்டமான பயமும், அறிவீனமும் பலஸ்தீனிய அரபுக்களின் முதல் வெளியேற்றத்துக்கான காரணிகளாயின. இந்தப் பயம் உண்மையான காரணங்களின் அடிப்படையில் எழுந்ததா? இல்லை. நெவெ சாடிஜ் என்ற ஒரேயொரு இடத்தில் மட்டும் மன் னிக்க முடியாதபடி குற்றமற்றவர்கள் கொலை செய்யப்பட்டனர். மற்றும்படி பலஸ்தினத்தில் தொடர்ந்து தங்கியிருந்த அரபுக்களுக்கு எவ்வித தீமையும் இழைக்கப்பட வில்லை. சமாதானத்தைப் பேணியஎந்த அரபுக் கிராமமும் இஸ் ரேலியர்களால் எந்த வகையிலும் தீங்கிழைக்கப்பட்டிருக்கவில்லை. போரின் உக்கி ரத்தின் நடுவே, இஸ்ரேலியர்களால் மேற்கொள்ளப்பட்ட நெவெ சாடிஜ் துஷ் பிரயோக உதாரணத்தைச் சுட்டிக் காட்டும்போது, எவரும்பேல்களையும் முப்பது வருடகாலம் ஓரளவு சமாதனம் நிலவிய நாட்களில்அரபுக்களின், தலைமையில் மேற்கொள்ளப்பட்ட யூதப் படுகொலைகளின் எண்ணிக்கைகளையும் ஞாபகமூட்டிக் கொள்ள வேண்டும்.

துல்லியமாக ஆவணப்படுத்தப்பட்டிருக்கும் இரண்டாவது முக்கியமான காரணம் என்னவென்றால், அரசியல். இராணுவ ஆயுதமாகப் பயன்படுத்த, அகதிகள் பிரச்சினையை உருவாக்கும் பொருட்டு அரபுத் தலைவர்களே. சிவிலியன் மக்கள் வெளியேறவேண்டும் என விரும்பினார்கள் என்பதே.

யூத மக்களை முற்றாகக் கருவறுக்க அரபு ஜெனரல்கள் திட்டமிட்டிருந் தார்கள். இதனால், தங்கள் இராணுவ நடவடிக்கைகளுக்கு இடையூறாக,அரபு மக்கள் பெரும் தொகையில் பிரசன்னமாயிருப்பதை அவர்கள் விரும்பவில்லை. அரசியல் வாதிகள் தங்கள் வீடுகளில் இருந்து பலாத்காரமாகத் துரத்தப்பட்ட அரபு அகதிகளைச் சுட்டிக்காட்டுவது மூலம்,யூத மனிதாபிமானமற்ற தன்மையை நிரூபிக்க விரும்பினார்கள்.

இறுதியாக இந்த யுத்தம் அகதிகள் தொகையில் ஒரு பகுதியை உருவாக்கி யிருக்கின்றது. இஸ்ரேல் நாட்டை எதிர்த்துப் போரிட்ட சில அரபுக் கிராமங்கள் தாக்கப்பட்டு அரபுக்கள் அவைகளிலிருந்து விரட்டப்பட்டனர். இதற்காக எந்த மன்னிப்பும் கோரத் தேவையில்லை.

அரபு வெற்றிகளின் பின்னால் அரபுக் கிராம வாசிகள் திரும்பத் தங்கள் வீடுகளுக்கு வந்து, அழிக்கப்பட்டிருக்கும் இஸ்ரேல் நாட்டில் கொள்ளையிடலாம் என அவர்களுக்கு வாக்களிக்கப்பட்டிருப்பது ஆவணங்கள் பூர்வமாக நிறுவப்பட் டிருக்கின்றது. போரைத்தொடர்ந்து இஸ்ரேல் மீது அரபுக்களுக்கு ஏற்பட்டிருக்கும் விரோத மனப்பான்மை வியப்புக்குரியதல்ல. அவர்கள் சர்வதேச ஒப்பந்தங்க ளுக்கு முரணாக சூயெஸ் கால்வாயைத் தடை செய்திருக்கிறார்கள்., வர்த்தக நிறுவனங்களை பகிஷ்கரித்திருக்கிறார்கள். வெளிநாட்டு நிறுவனங்களைப் பயமுறுத்தி இருக்கிறார்கள். எல்லைப் புறக் கிராமங்களைத் தாக்கியி ருக்கிறார்கள். இரண்டாவது முறையும் இஸ்ரவேலை அழிக்க வரப்போவதாகத் தொடர்ந்து பயமுறுத்திக் கொண்டேயிருக்கிறார்கள். இதன் காரணத்தினால், அரசையே அழிக்கக் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கும், விரோத மனப்பான்மை யுள்ள சிறுபான்மையினரை மீளக் குடியேற்றுவது என்பதை இஸ்ரேல் நினைத் துப் பார்க்கக்கூட முடியாது. அரபு அகதிகளைப்பற்றிய மகாபயங்கரமான விஷ யத்துக்கு இப்போது வருகிறோம். அரபு நாடுகளுக்கு இந்த அகதிகள் தேவை யில்லை. அரசியல் ஆயுதங்களாகப் பாவிப்பதற்காகக் கூண்டிலடைக்கப்பட்ட மிரு கங்களைப் போல் துன்பத்தில்வைக்கப்பட்டிருக்கிறார்கள். உதாரணமாகக் காஸா வில், அகதிகள் எகிப்துக்குள் வந்துவிடாதபடி, பாதைகளில் கண்ணிவெடிகள் விதைக்கப்பட்டு ரோந்து செய்யப்படுகின்றது.

ஐக்கிய நாடுகள் சபை பலஸ்தீன அகதிகளை, மீளக் குடியேற்றும் நோக்கத்திற்காக, இருபது கோடி டொலர்களை ஒதுக்கீடு செய்திருக்கிறது. அரபுலகு முழுவதும், செழிப்பான, உற்பத்தித் திறன் கொண்ட வெறுமையான நிலங்கள் கிட்டத்தட்ட எழுபது இலட்சம் சதுர மைல்கள் இருக்கின்றன. உதாரணமாக, சைகிறஸ் - இயூபரடீஸ் பள்ளத்தாக்கு உலகிலேயே வளமைமிக்க, பயன்படுத்தப்படாத உற்பத்தித் திறன் வாய்ந்த நிலங்களைக் கொண்டிருக்கிறது. அங்கே சிறியளவு, நாடோடி இனத்தவர்கள்தான் வசிக்கிறார்கள். இந்தப் பிரதேசம் மட்டும், இந்த ஐந்து லட்சம் அகதிகளை மட்டுமல்லாது, மேலும் ஒரு கோடி, பேரை ஏற்றுக் கொள்ளும் வசதி வாய்ந்தது.

மீளக்குடியமர்த்தல் நிதியில் ஒரு சதம் கூடப் பாவிக்கப்படவில்லை. மறுபக் கத்தில் உற்பத்தித் திறனற்ற நிலத்தில் ஏழாயிரம் சதுர மைல்களை அரை - பாலை வனமாகக் கொண்டிருக்கும் இஸ்ரவேல் நாடு இதுவரை, அரபு நாடுகளிலிருந்து

துரத்தப்பட்ட ஐந்து இலட்சத்துக்கும் அதிகமான யூத அகதிகளை ஏற்றுக் கொண்டுள்ளது. அதேயளவு ஆட்களை மேலும் ஏற்றுக் கொள்ளவும் தயாராக இருக்கிறது.

பலஸ்தீன அகதிகள் மீளக் குடியேற்றுதலை விரும்பவில்லை என்றும், பலஸ்தீனத்தில் இருக்கும் தங்கள் நிலங்களை மீளப் பெற்றுக் கொள்ளவே விரும்புகிறார்கள் என்றும் அரபுக்கள் வாதிடுகிறார்கள்.

இது முட்டாள்தனமான கூற்றாகும்.

இந்த ஏழைக் குடியானவர்கள் இழந்து விட்ட வீடுகளின் மேல் வைத்திருக்கும் பிரியத்தைப் பற்றி அரபுக்கள் முதலைக் கண்ணீர் வடிக்கிறார்கள்.

உண்மை என்னவென்றால், பலஸ்தீனிய குடியானவர்களைப் பலிக்கடாக்களாக்கி, ஆயுதமாகப் பாவித்து அவர்களைக் கைவிட்டவர்கள் அவர்களை மீளவும் பலிக்கடாக்களாக பாவிக்கப் பார்க்கிறார்கள் என்பதே. கூண்டில் அடைத்து வெறுப்போடு உணவளித்து இவர்களை வைத்திருப்பது, இஸ்ரேல் மீது அரபுக்களின் வெறுப்புணர்வைக் கொதிக்கும் நிலையில் வைத்திருக்கும் நோக்கத்துடன் தான்.

பலஸ்தீனத்தின் அரபுக்கள் உண்மையாகவே தங்கள் மண்ணை நேசித்திருந்தால், தகுந்த காரணங்களின்றி அவற்றினை விட்டு ஓடியதை விட்டாலும், பலவந்தமாக அவர்களை வெளியேற்றியிருக்க முடியாது.

இந்த அரபுக்கள் இதற்காகத்தான் சிலிக்க வேண்டும் என்று சொல்லக் கூடியவை மிகச் சொற்பமானவையே. இதற்காகத்தான் போராட வேண்டும் என்று சொல்லக் கூடியவை, அதைவிடச் சொற்பமானவை. தன் மண்ணை நேசிக்கும் மனிதனொருவனது எதிர்ச் செயற்பாடு இவ்வாறாக இருக்க மாட்டாது.

அரபுக்கள் தாங்களே சொல்வதைப் போல் தங்கள் மண்ணை நேசித்திருந்தால், அதற்காகப் போராடி உயிரைக் கொடுத்திருப்பார்கள்.

இஸ்ரேல் நாடு விரிவாக்கக் கொள்கைகளையுடையது என்று அரபுக்கள் உலகிற்குச் சொல்கிறார்கள். பத்து லட்சத்துக்கும் குறைவான மக்கள் தொகையைக் கொண்ட ஒரு நாடு எப்படி இரண்டு கோடி ஐம்பது இலட்சம் மக்களுக்கெதிராக விஸ்தரிக்க முடியும் என்பது ஒரு சுவாரஸ்யமான கேள்வியாகும்.

அரபுக்களுக்கு ஒரு நூற்றாண்டு அமைதி தேவை. அரபு மக்களுக்கு நல்ல தலைமைத்துவம் தேவை. ஆயிரக்கணக்கான அடிமைகளைக் கொண்டுள்ள பாலைவன ஷேக்குகள் அல்ல, வெறுப்பு நிறைந்த மதவெறியர்கள் அல்ல, இராணுவக் கும்பல்கள் அல்ல, இருண்ட காலங்களிலேயே இன்னமும் தங்கள் முழுச் சிந்தனையையும் கொண்டிருப்பவர்கள் அல்ல. அரபு மக்களுக்கு, அவர்களுக்குச் சிவில் உரிமைகள், கல்வி வாய்ப்பு, மருத்துவ வசதி, நிலச் சீர்திருத்தம், சமஉரிமை போன்றவற்றை அளிக்கக்கூடிய தலைவர்களே தேவை.

அதி தீவிர தேசியத்துவ சுலோகங்களைக் கோஷிக்காத, அரபுக்களின் துன்பங்களுக்கெல்லாம் ஒரே தீர்வு, இஸ்ரேல் நாட்டை அழிப்பதுதான் என்ற தீய எண்ணத்தை விதைக்காத, ஆனால், மக்களின் உண்மையான பிரச்சினைகளான அறியாமை, எழுத்தறிவின்மை, நோய் நொடிகளுக்கு முகம் கொடுத்து நிற்கச்கூடிய தலைமையே அரபுக்களுக்கு தேவை.

துரதிஷ்டவசமாக, எப்போதாவது ஒரு முறை தூரதிருஷ்டியுள்ள அரபுத் தலைவன் யாரும் தோன்றினால் பொதுவாகக் கொலை செய்யப்பட்டு விடுவான். அரபுக்களுக்கு அகதிகளை மீளக்குடியேற்றுதலும் தேவையில்லை, அவர்களது துன்பங்களைப் போக்குவதிலும் ஆர்வமில்லை, சமாதானத்தை விரும்பவும் இல்லை.

அரபு மக்களை இருண்ட காலத்துள்ளிருந்து வெளிக் கொணர உதவும் மாபெரும், ஒரேயொரு கருவியுமாக, இன்று இஸ்ரேல் தலை நிமிர்ந்து நிற்கிறது.

நீட்டப்படும் நேசக் கரத்தைப் பற்றிப் பிடிக்கத் தயாராக இருக்கும் தலைமையை அரபுக்கள் பெற்றால்தான் அவர்களை மன, உடல் ரீதியாக ஏழ்மையில் வைத்திருக்கும் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள ஆரம்பிப்பார்கள்.

பராக் பென் கானான்.

○

நான்காம் பாகம் முற்றிற்று

பகுதி - 5:

கழுகின் சிறகுகளுடன்

பாலைவனத்தில் ஒரு குரல் கேட்டது. உன் இறைவனின் வருகைக்கு வழியை ஆயத்தப்படுத்து. பாலைவனத்தில் எம் இறைவனின் பயணத்துக்கு நேரான பாதையொன்றை அமைத்துவிடு.

கடவுளைச் சார்ந்திருப்போரின் பலம் புதுப்பிக்கப்படும். கடவுளின் சிறகுகளுடன் அவர்கள் அரியணை ஏறுவார்கள்.

இசையாஸ் ஆகமம்.

அத்தியாயம் ஒன்று

நோம் அலாஸ்கா 1948-ன் பிற்பகுதி.

ஆர்க்டிக் சேர்கிள் எயார் வேய்ஸின் (வடதுருவ வட்ட விமான போக்குவரத்து நிறுவனம்.) சொத்துக்கள், ஸ்ரெச் தொம்சனால் கடனாக வாங்கப்பட்ட மூன்று இராணுவ மேலதிக சரக்கு விமானங்கள் மட்டுமே.

ஸ்ரெச் போரின்போது அலாஸ்காவில் கடமை புரிந்திருந்தான். நேர்மையாகப் பாடுபட வேண்டிய வேலைகளிலிருந்து தவிர்த்துக் கொள்ள யுக்திகளைத் தெரிந்தெடுப்பதில் மிகவும் புத்திசாலியும் கற்பனைவளம் மிக்கவனுமான இளைஞன் என்று அவன் பெயர் பெற்றிருந்தான் அலாஸ்காவின் இரவுகள் நீண்டதாக இருந்தது. தொம்சனுக்கு ஆலோசனை செய்ய அதிக நேரம் கிடைக்கப் பண்ணியது. ஆலோசனைகளில் செலவிடப்படும் பெரும் பகுதி நேரங்கள் நேர்மையான கடின உழைப்பைத் தவிர்ப்பது எப்படி என்று சிந்திப்பதிலும், அலாஸ்காவின் பயனபாட்டுக்குட்படாத வளங்களை எப்படிப் பயன்படுத்துவது என்பது பற்றியுமே இருந்தது. இரவுகள் நீள நீள ஸ்ரெச்சும் படுத்துக்கிடந்தபடி நீண்ட நேரங்களுக்குச் சிந்தித்தான். ஒரு இரவு அவன் மூளையில் பொறிதட்டியது.

நண்டுகள்.

முழு கடற்கரையோரமும், இதுவரை கைபடாத அலாஸ்கா இராட்சத நண்டுப்படுக்கையால் நிறைந்திருந்தன. இந்த நண்டுகளில் சில பதினாறு அங்குலங்கள் விட்டமுடையவை. சிறிது திறமையான முயற்சியுடன் அமெரிக்க மக்களை அலாஸ்காவின் இராட்சத நண்டுகளுக்காக ஏங்க வைக்கலாம் எனக் கணக்குப் போட்டான். ஒரு வருட காலத்தில், மெயினின் கிங்க இறால்கள், மேரிலாண்டின் ஏரி ஆமைகள், சொறி-கல் மட்டி வகைகள் ஆகியவற்றுக்கீடான ருசியான உணவாக வளர்த்து விடலாம். இக்கடினை ஓட்டு இராட்சத பிராணிகளைப் பனிக்கட்டியில் உறைய வைத்து அமெரிக்காவுக்கு விமானத்தில் கொண்டு போகலாம். ஆர்வமுள்ள விநியோகஸ்தர்கள் இவற்றைப் பிடுங்காத குறையாகக் கொள்வனவு செய்து கொள்வார்கள். அவன் பணக்காரனாகி விடலாம். தன்னை இராட்சத நண்டுகளின் அரசனாகிய ஸ்ரெச் தொம்சன் என்று அழைப்பார்கள் என்றெல்லாம் கற்பனை செய்து கொண்டான்.

தொப்சன் நினைத்தமாதிரி காரியங்கள் நடக்கவில்லை. அவனுடைய இராட்சத நண்டுகளை ரசிக்கும் அளவுக்கு மனித சமுதாயம் மேம்பட்டிருக்கவில்லைப்போல் தோன்றியது. விமானத்தின் விலை, எரிபொருள், விமான மோட்டியின் வேதனம் ஆகியவை, கொண்டு செல்லும் நண்டுகளால் பெறக்கூடிய

வற்றை விட அதிகமாகச் செலவாகின. ஆயினும் எடுத்த முயற்சியை இலேசாகக் கைவிடுபவனல்ல ஸ்ரெச். தந்திரமான முறையில் கணக்குகளை எழுதுவதாலும், தேனொழுகும் பேச்சாலும், தன் கடன்காரர்களை அதிக தொல்லைகள் கொடுக்காமல் இருக்கப்பண்ணி விட்டாலும், அவனிடம் ஒரு விமான நிறுவனம் இருந்தது. பொருட்களைக் கட்டும் நூலையும், கொழுக்கிகளையும், பபிள்கம்மையும் மட்டுமே கொண்டு தனது விமான நிறுவனத்தின் மூன்று விமானங்களையும் பறக்க வைத்து வந்தான். நிலைமைகள் சீரழிந்து வந்தபோது அவனைத் தொழிலில் நிலை நிறுத்த ஒரு வேலை வந்து சேர்ந்தது.

ஸ்ரெச்சின் ஒரு நல்ல திட்டம்தான் அவனது பிரதான விமானமோட்டியான - சிலவேளைகளில் அவன் ஒருத்தன்தான் நிறுவனத்தில் இருப்பான் - பொஸ்ரர் ஜே மக்வில்லியம்ஸ் ஆகும். வழமையாகத் தெரிந்த காரணங்களுக்காக அவனை 'ரெக்ஸ்' என்றே அழைப்பார்கள். பொஸ்ரர் ஜே போரின்போது ஹம்ப்ரக் விமானங்களை ஓட்டியிருந்ததோடு ஸ்ரெச்சர் சொல்வதுபோல், ''எந்த நாசமாய்ப்போன விமான நிறுவனத்திலும் இருக்கக் கூடியவர்களில் தலைசிறந்த விமான ஓட்டி.'' அவன்தான். அவனுடைய திறமை எப்படிப்பட்டதென்றால், நிறைய பனிப்புயலின் நடுவே நகரும் பனிமலை ஒன்றின் முடிவுப் பகுதியில் ஒரு சீ - 47 ரக விமானத்தை இறக்கும் அவனது திறமைக்கு எதிராகப் பந்தயம் கட்ட, நோம்மிலீ எவருமே துணிய மாட்டார்கள். பல சந்தர்ப்பங்களில் இந்தப் பந்தயத்துக்கான பணத்தை ஸ்ரெச்சர் சேகரிக்க முயன்றதுண்டு. அந்நேரங்களில் ஏதாவதொன்று பிழைத்துவிடும். ஒன்றில் பனிப்புயல் உரம் குறைந்துவிடும். அல்லது பொஸ்ரர் போதியளவு குடித்திருக்க மாட்டான். மக்வில்லியம்ஸ் குறிக்கோள் எதுவும் இல்லாதவன். அவன் விமானமோட்டுவதை மிகவும் விரும்புபவன். முதல்தர விமானத்தில், நிர்ணயிக்கப்பட்ட நேர அட்டவணைப்படி, நிர்ணயிக்கப்பட்ட பாதைகளில் பறப்பதில் ஆர்வம் காட்டுவதில்லை. அது சோம்பேறித்தனமான வேலை என்பான். வடதுருவ வட்டத்திலே பறப்பதுடன் இணைந்த அபாயங்கள் தான் அவனுக்குப் பொருத்தமானவை.

ஒருநாள் மக்வில்லியம்ஸ் ஒரு பாதையின் முடிவில் காரியாலயம், நடவடிக்கை தலைமையகம், தொம்சனின் வீடு என ஒருங்கே பயன்பட்டு வந்த கொட்டகைக்குள் வந்தான்.

''நாசமாய்ப்போன ஸ்ரெச்..... வெளியே கிணறு தோண்டுபவனின் பின் பக்கத்தை விடக் குளிராக இருக்கிறது'', ஸ்ரெச்சின் முகத்தில் பழமொழியொன்றில் சொல்வது போல் மஞ்சள் பாடும் பறவையை விழுங்கிய பூனையின் முகபாவம் இருந்தது.

''பொஸ்ரர், ஒரு சூடான காலநிலையுள்ள இடத்துக்குப் போய், உன் சம்பளம் அனைத்தையும் ஒரே தடவையில் ஒரே கட்டாக பெற்றுக்கொள்ள உனக்கு விருப்பமா?

''உனக்கு எப்போதும் சூரமான பகிடிகளை விடத்தான் தெரியும்''

''நான் பகிடி விடவில்லை ரெக்ஸ், நீ ஊகிக்கமாட்டாய்''

"என்னது?''

''ஊகி பார்க்கலாம்''

பொஸ்ரர் தோளைக் குலுக்கிவிட்டு ''விமான நிறுவனத்தை விற்று விட்டாயா?'' என்றான்.

''சரியாக சொன்னாய்.''

பொஸ்ரரின் வாய் பிளந்து போய் தொங்கிவிட்டது.

''இந்த ஓட்டை உடைசலை யார் வாங்குவார்கள்?'' ''நான் அவர்களுடைய சிவிய சரித்திரத்தை விசாரிக்கவில்லை. அவர்களுடைய காசோலை பிரச்சினை இல்லை என்று தெரிந்ததுவேறு எதுவும் எழுதப்படவில்லை''

''எனக்குக் கவலைதான் மிஞ்சும். பரவாயில்லை ஸ்ரெச்சர் இந்த சவ இடமும் எனக்கு அலுத்துப்போய்விட்டது எப்படியோ ... நீ எனக்கு எவ்வளவு தர இருக்கிறது?''

உனக்கு நான் தரப்போகும் ஊக்குவிப்புத் தொகையோடு கூட நாலாயிரம் டொலர்கள் வரும்.''

பொஸ்ரர் ஜே மக்வில்லியம்ஸ் விசில் அடித்தான். சரிதான் அந்தத் தொகை எவ்வளவோ முதல்தர அந்தஸ்தை பெற்றுத்தரும். இங்கிருந்து தென் அமெரிக்கா வரை குடித்துக்கொண்டே போய்ச் சேரலாம். அங்கு தான் போகப் போகிறேன், ஸ்ரெச்சர். அங்கே தென் அமெரிக்க கும்பல் ஏதோடும் சேரப் போகிறேன். அன்டெஸ் மலைக்கு மேலால் டைனமைற்றைக் கொண்டு போவதில் நல்ல காசு கிடைக்கும்.''

''ஒரு சின்ன இடைஞ்சல் இருக்கிறது''

''நானும் அப்படித்தான் நினைத்தேன்''

புதிய உரிமையாளர்களுக்கு இந்த மூன்று விமானங்களையும் நாங்களே ஓட்டிச் சென்று கையளிக்க வேண்டும். இலக்கம் ஒன்றையும் இலக்கம் இரண்டையும் ஓட்டுவதற்கு இருவரைப் பிடித்துவிட்டேன். இன்னொரு ஆளைப் பிடிக்க முடியவில்லை.''

''அந்த இலக்கம் மூன்றை ஓடக்கூடிய அடிமுட்டாள் நான் ஒருவன் தான் என்று தானே சொல்ல வருகிறாய். சரி பரவாயில்லை எங்கே கொண்டு போய் சேர்க்க வேண்டும்?''

''இஸ்ரேல்''

''எங்கே?''

''இஸ்ரேல்?''

''நான் அதைக் கேள்விப்பட்டதேயில்லை.''

''நீ உள்ளே வரும்போது நான் அதைத்தான் வரைபடத்தில் தேடிக் கொண்டிருந்தேன்.''

ஸ்ரெச் தொம்சனும், பொஸ்ரர் ஜே மக்வில்லியம்சுமாக உலக வரை படத்தை மேல் கீழாக அலசினார்கள். பயன் கிட்டாத அரை மணிநேரத்துக்குப் பிறகு ரெக்ஸ் சோகமாக தலையை ஆட்டினான், ''ஸ்ரெச் உன்னை யாரோ நல்லாய் ஏமாற்றிவிட்டார்கள்'' என்றான்.

அவர்களிருவருமாக வெளியே போய் மதுபானச்சாலைகளில் இஸ்ரேல்இருக் கக்கூடும் என விசாரித்தார்கள். அந்தக் குளிரிலேயே ஸ்ரெச்சுக்கு வியர்க்கத் தொடங்கிய நேரத்தில் யாரோ நூலகப் பொறுப்பாளரிடம் கேட்டுப் பார்க்க லாம் என ஆலோசனை கூறினார்கள்.

''பாலஸ்தீனத்தைத்தான் அப்படி சொல்வது. அத்தோடு என்கதவைத் தட்ட நடுஇரவு நல்ல நேரமல்ல'' என்றார் ஆத்திரத்துடன் நூலக பொறுப் பாளர்.

வரைபடத்தில் இன்னொரு தேடுதலுக்குப் பிறகு அந்த இடத்தை கண்டு பிடித்தனர். தலையை ஆட்டி பொஸ்ரர் ''நாசமாய் போன ஸ்ரெச். அந்த இடம் ஒரு சின்ன நகர் பனிமலையை விட சின்னதாயிருக்கிறது. ஒடுபாதை காணாமல் போனால் இறங்கவே முடியாமல் போகலாம்.''

மூன்று வாரங்களுக்குப் பிறகு பொஸ்ரர் ஜே மக்வில்லியம்ஸ் ஆர்க்ரிக் சேர்கிள் எயர்வேர்சின் மூன்றாம் இலக்க விமானத்தை லிட்டா விமான தளத்தில் கொண்டு வந்து இறக்கினான். ஒரு வாரத்துக்கு முதலே விமானத்தில் அங்கு வந்திருந்த ஸ்ரெச் தொம்சன் அவனை வரவேற்க அங்கே நின்றிருந் தான். வெளியே பாலஸ்தீன மத்திய விமான நிறுவனம், எஸ். எஸ் தொம்சன் பொதுமுகாமையாளர் என எழுதியிருந்த ஆடம்பரமான அறையொன்றினுள் பொஸ்ரர் அழைத்துச் செல்லப்பட்டான்.

பொஸ்ரர் ஜே மக்வில்லியம்ஸ்க்கு ஏதோ புரிவது போலிருந்தது.

''பயணம் எப்படி இருந்தது நண்பனே, இங்கு உன்னைக் காண்பது சத்தியமாக மகிழ்ச்சியாக இருக்கிறது''. ''மிக நல்லாயிருந்தது நீ இப்போ எனதுடைய சம்பள நிலுவைகளைக் கொடுத்தால் பரிசுக்கு திரும்பப் போய் விடுவேன். அங்கு ஒரு நல்ல பெண்மீது கண் வைத்திருக்கிறேன். அத்தோடு தியோடிக்கு போக ஒரு மாத அவகாசம் உள்ளது.''

''நிச்சயமாய்த் தருகிறேன், காசோலை இங்கே இரும்புப் பெட்டியில் தயாராக இருக்கிறது.''

பொஸ்ரருடைய கண்கள் வியப்பால் விரிவதை ஸ்ரெச் பார்த்துக் கொண்டிருந்தான்.

''நாலாயிரத்து ஐந்நூறு டொலர்களா?''

''அந்த பேலதிகமான ஐந்நூறு டொலர்களும் தொம்சன் ஏமாற்றுபவன் அல்ல என்று காட்டத்தான்'', ஸ்ரெச்சர் சொன்னான்.

''நீ உண்மையில் ஒரு பெரிய ஆள்தான்... நான் எப்போதுமே அதைக் கூறி வந்திருக்கிறேன்''

''உனக்குத் தெரியுமோ தெரியாது ரெக்ஸ் இது ஒரு சுவாரஸ்யமான இடம். இங்கு இருக்கும் எல்லோருமே யூதர்கள் தான். இங்கு வந்து ஒரு வாரமாகியும் இதற்கு பழக்கப்படுத்திக் கொள்ள என்னால் முடியவில்லை.''

ஸ்ரெச் ஏன் இங்கு வந்தான் என்று பொஸ்ரருக்கு கேட்கத் தயக்கமாயிருந்தது ஆனாலும் கேட்டான்.

''கதவிலிருந்த பெயர் உனக்கு விஷயத்தைச்சொல்லியிருக்குமே பலஸ்தீன மத்திய விமான நிறுவனம். பெயரைக்கூட நான்தான் சூடினேன். இங்கே இருப்பவர்களுக்கு முதல்தரமான விமான நிறுவனத்தை நடத்தி அனுபவமில்லை போலிருக்கிறது. அவர்கள் என்னை நிற்கும்படி கேட்டுக் கொண்டார்கள்.ஆனால் நான் முதன் முதலாக அவர்களுக்கு சொன்னது என்னவென்றால் .....பையனகளே நீங்கள் முதல்தரமான விமானசேவையை நடத்த வேண்டுமானால் ஒரு முதல் தரமான தலைமை விமானி தேவை, என்னிடம் எந்தவிதமான நிறுவனமும் கொண்டிருக்க முடியாதசிறந்த தலைமை விமானிஇருக்கிறான் ..'' சொல்லி முடிக்க முன்னரே துள்ளி எழுந்த பொஸ்ரர் ''நான் போய் வருகிறேன். மீண்டு சந்திப் போம்'' என்றான்.

''என்ன அவசரம்''

''நான் பரிசுக்கு போய்க்கொண்டிருக்கிறேன்''

''இங்கு உனக்கு ஒரு ஒப்பந்தம் வைத்திருக்கிறேன்''

''அதில் எனக்கு ஆர்வம் இல்லை''

''தயவு செய்து நான் சொல்வதை எல்லாம் கேட்டுவிட்டாவது போ''.

''நீ சொல்வதைக் கேட்கிறேன். ஆனால் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. நீந்தித்தான் போக வேண்டுமென்றாலும் பரிசுக்குப் போயே தீருவேன்.''

''கதை இப்படித்தான் போகிறது. நான் சொன்னது போல்இங்கே இருப் பவர்கள் எல்லோருமே யூதர்கள்தான். அதிக யூதர்களை உள்ளே கொண்டு வருவதற்காகத்தான் ஆர்க்ரிச்சேர்கிள் நிறுவனத்தை முழுமையாக கொள்வனவு செய்தார்கள். உலகின் எல்லா இடங்களிலும் இவர்கள் சிதறி இருக்கிறார்களாம். எல்லோருமே இங்கு வர விரும்புகிறார்கள் நாங்கள் செய்யவேண்டியதெல்லாம் அவர்களை உள்ளே கொண்டு வருவதுதான். உனக்குப் புரியவில்லையா? ஒவ் வொரு பயணமும் பணம்தான். உடனடியான பணம்...தலைக்கு இவ்வளவு என்று. நாம் கனவு கண்டது இதுதான் ரெக்ஸ் பையா...என்னோடு நில் பணத்தில் குளிக்கலாம். உனக்கு என்னைப்பற்றித் தெரியும்தானே..நான் சுயநலவாதியல்ல''

''நான் என்னத்தில் குளிடபேன் என்பது எனக்குத் தெரியும் உனக்குறியோ விலிருந்து வாழ்த்து அட்டை ஒன்றை அனுப்புகிறேன்''

''சரி பொஸ்ரர்-உன்னோடு நட்பாயிருந்த காலங்கள் மிக அற்புதமானவை போய்வா.''

''விசர்க்கதை கதையாதே ஸ்ரெச்''

''யார் விசரன்? யார் விசரன்?''

''நோமில் நல்லபடியாக காலத்தைக் கழித்தோம்தானே?''

''உண்மைதான் உண்மைதான்...அருமையாகக் கழித்தோம் என் பின் பக்கம் உறைந்து போனதுதான் மிச்சம் ''

''அதை இங்கே சரிபண்ணிக் கொள்ளேன்.'' அரைமனதோடு கையை ஆட்டினான் ஸ்ரெச்சர்.

''என்ன விஷயம் ஸ்ரெச்சர்? ஏதோ உன் இடுப்பெலும்புகளுக்கிடை யில் கத்தியை செருகிவிட்டது மாதிரி நடந்து கொள்கிறாயே?''

''விஷயத்தை உனக்கு வெளிப்படையாக சொல்லவேண்டும். நான் இப்போ பிரச்சினையில் இருக்கிறேன். எங்களுக்கு சூடான வேலை ஒன்று காத்திருக் கின்றது. ஏடென் என்ற இடத்திலே ஒரு தொகை யூதர்கள் இங்கு அழைத்து வரப்படுவதற்காக காத்துக் கொண்டிருக்கிறார்கள். நான் சில விமானிகளை வேலைக்கு அமர்த்தினேன். அவர்கள் எல்லோரும் பயந்து ஓடிவிட்டார்கள்.''

''அது கடினமான விஷயம்தான். நீ என்னை மாட்ட முடியாது நான் பரி சுக்குத்தான் போகப்போகிறேன்.''

''உண்மைதான் நீ பரிசுக்கு போ. உன்னைப் போலிருந்தால் நானும் அப் படித்தான் செய்வேன். நான் உன்னைக் குறை சொல்ல மாட்டேன்.அந்த மற்ற விமானிகள் வரும்போது அரபுக்கள் அதை சுடக்கூடும் என்றதும் சூடுபோட்ட மனிதக் குரங்குகள் போல் ஓடிவிட்டார்கள்.''

பொஸ்ரர் வெளியே போய்க்கொண்டிருந்தவன் நின்று, திரும்பினான். ''நீ நினைப்பது சரிதான். உன்னுடைய மூளையை சிதறடிப்பதில் பிரயோசனமில்லை இது உண்மையாகவே கடினமான வேலை, ஹம்பர் ஒன்றை ஓட்டுவதை விடவோ அன்டெஸ் மலை மீது டைனமைற்றைக் கொண்டுபோவதை விடவோ கடினமான துதான்'' பொஸ்ரர் ஜே மக்வில்லியம்ஸ்தன் உதடுகளை ஈரமாக்கிக் கொண்டான். ஸ்ரெச் மேலும் பல விபரங்களை சொல்லிக் கொண்டிருந்தாலும் பொஸ்ரர் இரையை விழுங்கிவிட்டது அவனுக்கு புரிந்தேயிருந்தது.

''ஒன்றை மட்டும் உனக்கு சொல்லுகிறேன் ஸ்ரெச். உன் பிரச்சினையை தீர்ப்பதற்காக ஒரே முறை மட்டும் இந்தவேலையைச் செய்கிறேன். நான் திரும்பி வரும் நேரத்துக்குள் வேறொரு விமானியை கண்டுபிடித்துவிடு. ஒரே யொரு முறைதான் போவேன். சரி இந்த நாசமாய்ப்போன ஏடன் எங்கேயிருக் கிறது?''

''எனக்குத் தெரிந்தால் ஏன் இந்தப்பாடு''

''சரி அப்படியானால் ஒரு வரைபடத்தை எடுத்துத் தேடுவோம்.'' அமெ ரிக்க நாடோடி விமானியான பொஸ்ரர் ஜே மக்வில்லியம்ஸ் முன்பு ஆர்க்ரிக் சேர் கிள் என அழைக்கப்பட்ட, பாலஸ்தீன மத்திய விமான நிறுவனத்தின் விமானி யாக லிட்டா விமான தளத்திலிருந்து விமானத்தைக் கிளப்பிய போது 'அரா பிய இரவுகள்' கதைகளின் பாணியில் இருபதாம் நூற்றாண்டு வினோதகதை அத்தியாயம் ஒன்றை ஆரம்பித்தான். செங்கடல் அருகோடு அராபிய தீபகற் பத்தின் அடிப்பகுதியில் பிரிடிட்ஷ் பாதுகாப்புக் குட்பட்டிருந்த ஏடெனுக்கு விமானத்தைச் செலுத்திச் சென்றான்.

இந்தத் தொடர் கதை பொஸ்ரரின் காலத்துக்கு மூவாயிரம்வருடங்களுக்கு முன்னரேயே புராதன ஷீபாநகரில் தொடங்கியிருந்தது. ஷீபா அரசின் காலத் தில் அராபிய தீபகற்பத்தின் தென்பகுதி செல்வம் கொழிக்கும் பகுதியாக இருந்தது. அங்கிருந்த மக்கள் வடிகால்கள், அணைக்கட்டுகள் நீர்நிலைகள் போன்றவற்றை அமைத்து நீரைத் தடுத்து சேமிக்க அறிந்திருந்ததோடு அதைப் பாவித்து சிறந்ததொரு தோட்டத்தையும் அமைத்திருந்தார்கள்.

ஷீபா அரசி, சொலமன் அரசரை வந்து சந்தித்தபிறகு சொலமன் அரசரு டைய பிரஜைகளின் சிலர் இஸ்ரேலில் இருந்து புறப்பட்டு ஷீபாவுக்கு, போய் வர்த்தக வழிகளை பாலைவனத்தூடாகவும், செங்கடல் அருகோடும் அமைத்து ஒரு குடியேற்றத்தையும் தொடங்கும் நோக்கில் சென்றிருந்தார்கள். இந்த யூதர்கள் முதலாவது பெரும் தேவாலயம் வீழ்ச்சியடைய முன்னரே, வேதாகம காலத்தில் பல நூறு வருடங்களுக்கு முன்பே ஷீபாவுக்கு சென்றிருந்தார்கள்.

பலநூற்றாண்டு காலமாக ஷீபாவின் யூதர்கள் செழிப்புற்று வாழ்ந்தார் தங்கள் கிராமங்களில் திறமையான குடியேற்றங்களை நிகழ்த்தி, இணரீதியான வாழ்க்கையின் சிக்கலான அம்சங்களுள் இரண்டறக் கலந்து வாழ்ந்து அரசபையின் பிரமுகர்களாகவும், முக்கிய குடிமக்களாகவும் விளங்கினார்கள்.

பாலைவனத்து மண் மெதுவாகவும் புற்று நோயைப் போல் அரித்து அரித்து செழிப்பான அந்தப் பூமியை கபளீகரம் செய்த கொடூரமான காலம்தொடங்கியது. ஆற்றுப் படுக்கைகள் உலர்ந்துபோயின. பெய்யும்மழைநீரும் காய்ந்து வரண்டிருந்த நிலங்களுள் எங்கோ காணாமல்போயின. இரக்கமற்ற கதிரவனின் வெப்பத்தின் கீழ் மனிதனும், மிருகமும் ஒரேமாதிரி வாடி வதங்கியதோடு, தாகத்தை வெல்ல நடாத்திய போராட்டம் வாழ்க்கைக்கான போராட்டமாகவும் மாறியது. செழிப் பாயிருந்த ஷிபாவும்,அண்டைய நாடுகளும் பொறாமையும் வெறுப்பும் நிறைந்த இனப்பிரிவுகளாக பிரிந்து ஒருவரோடொருவர் அடிக்கடி மோதத் தொடங்கி னர்.

இஸ்லாமிய மதம் பரவத் தொடங்கியபோது, புராதன யூதர்களுக்கு கௌரவமும், அவர்கள் நடவடிக்கைகளுக்கு சுதந்திரமும் வழங்கப்பட்டிருந்தது. எல்லா முஸ்லிம்களும் கைக்கொள்ளப்போகின்ற விதிமுறைகளை எழுதிவைத்த முகம்மது நபி அவர்களே யூதர்களை கண்ணோடு நடாத்த வேண்டும் என்று எழுதி வைத்துள்ளார்கள்.

இந்த யூதர்களின் சமஉரிமை மிககுறுகிய காலமே வழக்கிலிருந்தது.எல்லா முஸ்லிம் நாடுகளிலும் நடந்தது போல் முஸ்லிம்களைத் தவிர மற்றையோர் இழிந்த குலத்தோர் என்பது போல் ஒதுக்கிவைக்கப்பட்டனர். அவர்களுக்கே உரித்தான பாணியில் அரபுக்கள் முணுமுணுப்பதோடு கூடிய கௌரவத்தை யூதர்களுக்கு வழங்கியிருந்ததோடு நியாயமான அளவில் சகிப்புத் தன்மையும் கொண்டிருந்தார்கள். ஐரோப்பாவில் நடந்தது போல் அல்லாமல் அரபுக்களால் யூதர்கள் படுகொலை செய்யப்படுவது திட்டமிட்ட அடிப்படையில் அல்லாமல் திடீரென வெடித்துக் கிளம்பும் வன்செயல்களாலேயே நடைபெற்றன. யேமன் என்று இப்போ அழைக்கப்படும் நாட்டிலே அமைதியான யூத சிறுபான்மையி னரைப் பற்றி கவலைபட நேரமில்லாத அளவுக்கு அரபுக்கள் தங்களுக்குள் ஒருவருக்கொருவர் எதிராக சதிசெய்வதில் ஈடுபட்டிருந்தனர். நூற்றாண்டுக் கணக்கான அடக்குமுறையின் காரணமாக அவர்களும் போர்க் குணங்கள் இல்லா திருந்தனர். எல்லா அரபு நாடுகளிலும் போலவே இங்கும் யூதர்கள்இரண்டாந்தர பிரஜைகளாகவாழ்ந்து கொண்டிருந்தனர்.வழக்கமான அடக்குமுறைச்சட்டங்கள், சமனற்ற வரிவதிப்பு துன்புறுத்தல், அரபுக்களுக்குள்ள சிவில்உரிமைகளை மறுத்தல் போனறவை இருந்தன. துன்புறுத்தலின் அளவு பகுதிக்குப் பகுதி அந்தந்தப் பகுதியில் அதிகாரத்தில் இருந்தவனைப் பொறுத்து வேறுபட்டது. நிலையான ஒரு சட்டமூலம் ஒரு முஸ்லிம் முன் யூதனொருவன் உரத்துக் கதைப்பதையும், முஸ் லிம் ஒருவனுடைய வீட்டைவிட உயரமான வீடொன்றை கட்டுவதையும் ஒரு முஸ்லிமை தொடுவதையும், ஒரு முஸ்லிமை அவன் வலது பக்கத்தில் கடந்து செல்வதையும் தடுத்திருந்தது ஒரு யூதனுடைய தலைஒரு முஸ்லிமுடைய தலைக்கு மேலால் எழுந்து விடக்கூடாது என்பதால் ஒட்டகத்தின் மேல் யூதர் சவாரி செய்வது தடுக்கப்பட்டிருந்தது. முக்கிய போக்குவரத்துச் சாதனமாக ஒட்டகங்கள் விளங்கிய மண்ணில் இந்தச் சட்டம் குரூரமானதாயிருந்தது. கிழைத்தேய பாணி யூதசேரிகளான 'மெல்லாக்' களில் யூதர்கள் வாழ்ந்தனர். உலகம் பரந்து முன் னேறி வந்தது. ஆனால் யேமெனிலோ காலம் ஸ்தம்பித்திருந்தது. காடுகளைப்

போல் புராதனமானதாகவும், நேப்பாளத்தைப்போலவும், தொலைதூர மங் கோலியா போலவும் சென்றடைய முடியாத இடம் போலவும் விளங்கியது. வைத்தியசாலை எதுவும் யேமெனில் இருக்கவில்லை. பாடசாலை, புதினப்பத் திரிகை, அச்சகம், வானொலி, தொலைபேசி, ஒரு முறையான போக்குவரத்துச் சாலை எதுவுமே அங்கு இருக்கவில்லை.

இந்த மண், பாலைவன நிலங்களையும், அபாயகரமான மலைகளையும் கொண்டிருந்தன. இவை ஒட்டகத் தொடர்களின் பாதைகளால் மட்டுமே இணைக்கப்பட்டிருந்தன. மறைவான நகரங்கள் பன்னிரெண்டாயிரம் அடி உயர மலைகளிலே அமைந்திருந்ததோடு அவற்றைச் சூழ இலட்சக்கணக்கான சதுரமைல் கள் கொண்ட பாழ்நிலங்களைக்கொண்டிருந்தன. எழுத்தறிவின்மை கிட்டத்தட்ட நூறுவீதமாயிருந்தது. பிற்போக்கான கைவிடப்பட்ட காடுகளடர்ந்த, வரை படங்களில் குறிக்கப்படாத, இந்த மண்ணின் எல்லைகள் பல இடங்களிலும் வரை யறுக்கப்படாத நிலையிலேயே இருந்தன. இரக்கமுள்ளவரும், சர்வகருணை பொருந்தியவருமான அல்லாவின் பிரதிநிதியும் முகம்மது நபியின் உறவினருமான இமாம் ஒருவரால் யேமென் ஆளப்பட்டது. யேமெனின் இமாம் பூரணமாக ஆட்சி செலுத்தினார். ஒவ்வொரு பிரஜையினதும் வாழ்க்கை அவரால் கட்டுப்படுத்தப் பட்டது. நாட்டின் தங்கமும், விளையும் ஒரே பயிரான கோப்பியும் அவர் கட்டுப்பாட்டிலிருந்தன. ஒரு மந்திரி சபைக்கும் அவர் விளக்க மளிப்பதில்லை. அவர் எந்தவித சிவில், சமூக சேவைகளையும் வழங்கவில்லை. இனக் குழுக்களின் பலத்தைச் சமநிலைப்படுத்துவதின் மூலம் அதிகாரத்தைக் கையில் வைத்திருந்தார். ஏதோ ஒரு இனத்தாரை ஒடுக்குவதிலோ, அல்லது இளைந்தெழும் இனங்களுக்கிடையேயான பாலைவனச் சண்டைகளிலும், பொறா மைகளிலும் ஏதோ ஒரு பகுதியினருக்கு உதவி செய்வதிலுமே எப்பொழுதும் ஈடு பட்டிருந்தார். விரோத மனப்பான்மையுள்ள இனத்தாரில் சிலரைக் கடத்திப் பணயக் கைதிகளாக வைத்திருப்பதன் மூலம் அவர்களைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொண்டார். அவர் நூற்றுக்கணக்கான அடிமைகளை வைத்திருந்தார். மண்டியிட்டு ஆடம்பரமாக அமர்ந்திருக்கும் அவர், விபச்சாரிகளின் மூக்குகளை வெட்டும்படியும் திருடர்களின் கையை வெட்டும்படியும் தன் மனதில்பட்டபடி நீதித் தீர்ப்பளிப்பார். நாகரிகத்தை அவர் வெறுத்ததோடு, தன் சக்திக்குட்பட்ட எல்லாவற்றையும் பாவித்து அதனைத் தன் ராஜ்யத்தினுள் ஊடுருவி விடாமல் பார்த்துக் கொண்டாராயினும், சர்வதேச சதிகளில் கை நனைத்து வந்த வடக்கி லிருந்த பலம்பொருந்திய அண்டைய நாடாகிய சவூதி அரேபியாவுக்கு இருந்த பயத்தால் இடைக்கிடை விட்டுக் கொடுக்கக் கட்டாயப்படுத்தப்பட்டார்.

நாகரிகத்தைப்பற்றிய இமாமின் பயத்தின் ஒருபகுதி, நாகரிகம் தன் நாட்டை அடிமை கொண்டுவிடும் என்ற எண்ணத்தில் இருந்து தோன்றியதுதான்.

அது எவ்வளவுதான் ஒதுக்கமாக ஒரு மூலையில் இருந்தாலும் செங்கடல் ஊடாகக் கீழைத்தேய நாடுகளுக்கான நுழைவாயிலில் அது அமைந்திருந்தது. குடியேற்ற விஸ்தரிப்பு வாதிகளின் பேராசை மிக்க கண்கள் படிந்ததால் யேமன் அடிக்கடி போர்க்களமாயிற்று.

யூதர்களைப் பொறுத்தவரை, பார்ம்பரியமாகவே உதாரகுணமுள்ள கொடுங்கோலனின் பாத்திரத்தையே இமாம் வகித்தார். அவர்கள் கீழ்ப்படிவுள்ளவர்களாக நடந்து கொண்டவரை அவர்களுக்கு ஓரளவுபாதுகாப்பு வழங்கப்பட்டது. இமாம் மிகவும் அவதானமாக நடந்துகொண்டார். ஏனெனில் சிற்ப, கைவினை, வேலைகளில் நாட்டில் திறமைசாலிகளாக யூதர்கள் இருந்தார்கள். அரபுக்கள் திறமை பெற்றிருக்காத, வெள்ளியில் செய்யும்வேலைகள், நகை செய்தல், நாணயம் அச்சிடுதல், தோல்வேலை, தச்சுவேலை, சப்பாத்துத் தைத்தல் மற்றும் நூற்றுக்கணக்கானகலைகளை பரம்பரையிலிருந்துபரம்பரைக்கு கற்பித்து வந்துகொண்டிருந்தனர். அரபுக்கள் ஒன்றில் நிலங்களைப் பண்படுத்தியோ அல்லது அரபு நாடோடிக் கும்பல்களைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள். ஆகவே யூதர்களுடைய திறமைகள் அவர்களுக்கு ஓரளவு பாதுகாப்பைப் பெற்றுக் கொடுத்தன.

யேமெனின் யூதர்கள் தொடர்ந்து யூதர்களாகவே இருந்தது தான் நம்ப முடியாத விஷயம். ஏனெனில் மூவாயிரம் வருடங்களுக்கு மேலாக வெளியுலக தொடர்பெதுவும் இல்லாமல் இவர்கள் இருந்தார்கள். அவர்கள் இஸ்லாமிய மதத்தை தழுவியிருந்தால் அவர்கள் வாழ்க்கை எவ்வளவோ சௌகரியமாக இருந்திருக்கும். ஆயினும் பல நூற்றாண்டுகால தனிமைப்பட்டிருத்தலுக்கு மத்தியிலும் ரோறாவையும், சட்டதிட்டங்களையும், ஒய்வுநாளையும், விடுமுறை நாட்களையும் பவித்திரமாக பேணி வந்திருந்தார்கள். அதிகமான யூதர்கள் அரபு பாஷையில் எழுத்தறிவைக் கொண்டிராவிட்டாலும் எல்லோருமே ஹீப்ரூவைக் கற்றுத் தேர்ந்திருந்தார்கள். அச்சியந்திரசாலைகள் எதுவும் இருக்கவில்லை. எல்லா பரிசுத்தநூல்களும், மிகவும் நுணுக்கமான முறையில் கையால் எழுதப் பட்டு தலைமுறைகளுக்கூடாக கையளிக்கப் பட்டு வந்திருந்தன. யூடியசத்திலிருந்து இஸ்லாம் மதத்துக்கு மாறும்படி நேரடி அழுத்தங்கள் பிரயோகிக்கப் பட்டாலும் அவைகளை எதிர்த்துபோராடி வந்தனர். அனாதைகளை கடத்தி மதமாற்றம் செய்யும் முயற்சியில் இமாம் ஈடுபட்டபோது, யூதர்கள் வயது எப்படியிருந்தாலும் அனாதைகளை திருமணம் செய்யும் பழக்கத்தைக் கைக் கொண்டனர். இப்படியாக சில மாதங்களே வயதையுடைய குழந்தைகள் கணவர்களாகவும் மனைவிகளாகவும் மாறும் சம்பவங்கள் இடம் பெற்றன.

நேரடியான தோற்றத்திலோ, நடையுடைபாவனைகளிலோ, மனப்பான்மையிலோ இந்த நாட்களின் யேமென் யூதர்கள், புராதன இறைவாக்கினர்கள் போன்ற தோற்றத்தைக் கொண்டிருந்தனர். வேதாகம நாட்களை போலவே பலதாரமணம் புரியும் பழக்கத்தைக்கொண்டு வந்தனர். தீயகண், தீயகாற்று, பலதரப்பட்டபேய்கள், ஆகியவற்றில் நம்பிக்கை வைத்திருந்ததோடு அவற்றுக் கெதிரான பாதுகாப்பு தாயத்துக்களையும் கட்டிக் கொண்டிருப்பார்கள். வேதாகமத்தில் சொல்லப்பட்டிருந்தவைகளை வார்த்தைக்கு வார்த்தை விசுவாசித்து வந்தார்கள்.

இத்தனை வருட காலத்துக்கும் யேமெனிய யூதர்கள் ஜெருசலேமை மறந்துவிடவில்லை. அங்கு போகும்படி இறைவன் கட்டளை அனுப்புவதை எதிர்பார்த்து பல நூற்றாண்டு காலமாகப் பொறுமையுடனும், அர்ப்பணிப்பு

டனும் காத்திருந்தார்கள். காலத்துக்கு காலம் தனிப்பட்டவர்களோ, சிறுகுழுக்களோ எப்படியோ யேமனை விட்டு வெளியேறி இஸ்ரேலுக்கு திரும்பி அங்கே சிறு சமூகங்களை உருவாக்கியிருந்தார்கள். அப்போதுதான் இறைவாக்கினர் முன்னுரைத்திருந்தபடி செய்தி வந்தது.

இஸ்ரேல் சுதந்திரப் பிரகடனம் செய்தபோது, யேமென் இஸ்ரேலின்மீது யுத்தப்பிரகடனம் செய்து ஒரு அடையாள படைப்பிரிவு ஒன்றை எகிப்திய இராணுவத்தோடு இணைந்து போரிட அனுப்பியிருந்தது. இந்த நடவடிக்கை இஸ்ரேல் மீளப்பிறந்துவிட்ட செய்தியை, யேமென் யூதருக்கு அறிவித்தது. அவர்களுடைய ராபிக்கள் இறைவனின் செய்தி இதுதான் என்று விளக்கமளித்தனர். தாவீது அரசர் ஜெருசலேமுக்கு திரும்பிவிட்டார்! அவர்களுடைய நீண்ட கால காத்திருத்தல் முடிவுக்கு வரப்போகிறது. ஹஹாம் அதாவது புத்திசாலித்தனமானவர் எழுந்து வாக்களிக்கப்பட்ட பூமிக்கு கழுகின் சிறகுகளின் மேல் செல்லும்படி சொன்னார்!

யேமெனிய யூதர்களின் வெளியேற்றத்துக்கான ஆரம்பசைகையான இந்த எழுச்சி இஸ்ரேலில் இருந்தவர்களின் காதுகளை எட்டியபோது விடுதலைப்போர் இன்னும் நடந்து கொண்டிருந்தது. யேமென் யூதர்களின் தொகை எவ்வளவு என்பது பற்றி குறைவான விபரங்களே தெரிந்திருந்தன. இவர்களை எப்படி வெளியேற்றுவது இவர்களை என்ன செய்வது என்பது யாருக்குமே தெரியவில்லை.

தலைமை ஹஹாம் சர்வகருணையுள்ளவரான இமாமிடம் சென்று யூதர்களை வெளியேற அனுமதிக்கும்படி விண்ணப்பம் செய்து கொண்டார். யூதர்களை அங்கேயே வைத்திருப்பது நல்லது என இமாம் உணர்ந்ததற்கு பல அரசியல் பொருளாதார காரணங்கள் இருந்தன. பழைய ஏற்பாட்டில் யாத்திராகம அத்தியாயங்களை மீள பரிச்சயப்படுத்திக் கொள்ளும்படி ராபி, இமாமுக்கு தெரிவித்துக் கொண்டார்.

இமாம் தன் அந்தப்புரத்தில் மண்டியிட்டு அமர்ந்தபடி பல நாட்கள் யோசித்தார். பத்து கொள்ளை நோய்கள் பற்றிய பயம் இமாமின் நெஞ்சிலிருந்தது. ராபி தான் சொல்லவேண்டியதை சொல்லிவிட்டார். ராபி விண்ணப்பிக்க சிறிது நாட்களுக்கு முன்தான் நெருப்புக்காய்ச்சல் நோய்பரவி அவரது மக்களில் கால் பகுதியினரை பலிகொண்டிருந்தது. இமாம் இது அல்லாவிடமிருந்து வந்த எச்சரிக்கை என எண்ணிக்கொண்டார்.

எல்லா சொத்துக்களையும் இமாமுக்குரியதாக்குதல், தனித்தனி ஆளுக்கான வரியொன்றைக் கட்டுதல், முஸ்லிம்களுக்கு சிற்ப, கைவினை வேலைகளைக் கற்பிக்க சில நூறு யூதர்கள் பணயக் கைதிகளாக இருக்க சம்மதித்தல் ஆகிய நிபந்தனைகட்குட்பட்டு யூதர்களை செல்ல அனுமதிப்பதற்கு இமாம் சம்மதித்தார்.

யேமெனின் யூதர்கள் தங்கள் வயல்களையும் வீடுகளையும் விட்டு விட்டு புறப்பட்டார்கள். தாங்கள் சுமந்து செல்லக்கூடியவைகளை மட்டும் சுமந்து

கொண்டு காடடர்ந்த அபாயகரமான மலைப்பிரதேசங்களூடாகவும், சுட்டெரிக்கும் சூரியன், நூறுமைல் வேகத்தில் காற்று சுழன்றடிக்கும் பரந்த பாழ்நிலங்கள் ஆகியவற்றுக்கூடாக தங்கள் பயணத்தை தொடர்ந்தார்கள்.

ஒலிவ் நிற தோல்களையும், நேர்த்தியான அங்கலாவண்யங்களையும் கொண்ட இத்த மென்மையான மக்கள் மேற்கு பாதுகாப்புக்குட்பட்ட பிரதேசத்தை நோக்கி நடந்தார்கள். அவர்கள் தலைப்பாகைகளையும் சாலமன் அரசரின் அரசவையில் அணிந்திருந்தது போன்ற கோடுகளையுடைய நீண்ட அங்கிகளையும் அணிந்திருந்தார்கள். சானாவின் பெண்கள் வெள்ளை கரைகளையுடைய கறுத்த கவுண்களை அணிந்திருந்ததோடு தங்கள் குழந்தைகளையும் முதுகில் ஏணைகட்டி சுமந்து வந்தார்கள். தீர்க்கதரிசனம் ஒன்று நிறைவேறும், அவர்கள் பயணத்துக்கான கட்டணமாக அவர்கள் வைத்திருந்த மிகசிறியளவு உடைமைகளையும் அரபு இனத்தார் பறித்துக் கொள்ளக்கூடியளவு இலகுவான இரைகளாகி தொடர்ந்து நடந்தார்கள். அராபிய தீபகற்பத்துக்கு அருகோடு இருந்த பாதுகாக்கப்பட்ட பிரதேசங்கள், செங்கடலின் கரைகளிலிருந்து ஏடென் வளைகுடா அருகோடு அராபிய கடலுக்கு அப்பால் பாரசிக வளைகுடாவரை பரந்திருந்த, பெரிது சிறிதான அராபிய ராஜ்ஜங்கள், ஷேக்குகளின் ஆளுகைக் குட்பட்ட இடங்கள், அரபு நாடோடிக் கூட்டங்களின் இடங்கள் ஆகியவற்றைக் கொண்ட சிக்கலான பிரதேசமாகும். பிரிட்டிஷார் இந்தப் பிரதேசத்தை நூற்றுக்கு மேற்பட்ட ஒப்பந்தங்கள் மூலம் கட்டுப்படுத்தி அரபு இனத்தவருக்கு, எண்ணெய் வளங்களுக்கான திறையை ஆயுதங்களிலோ பணத்திலோ வழங்கினார்கள்.கைமாறாக இனங்களுக்கிடையேயான பிரச்சினைகளைக் கட்டுப்படுத்தி பாதுகாப்பையும், போக்குவரத்து வசதிகளையும் பிரிட்டிஷார் வழங்கினார்கள்.

இந்தப் பிராந்தியத்திலே முக்கியமான ஒரு இடம்தான் மேற்குப் பாதுகாப்புக்குட்பட்ட பிரதேசங்களிலிருந்த அரச கொலனியான ஏடன் ஆகும். ஏடன் துறைமுகம் கிழக்கிற்கும் மேற்கிற்கும் இணைப்பு வழியாக இருந்தது. இங்கே கிரேக்கர்கள், பிரிட்டிஷார், அராபியர்கள், யூதர்கள் ஆகியோர் குடியிருந்தனர். கிழைத்தேயத்தின் அழுக்கு, ஆசியாவின் புறம்பான தோற்றத்தன்மை, பிரிட்டிஷாரின் கண்டிப்பு,மிகச்சிறியளவு கைத்தொழில் வளர்ச்சி, ஒரு பயண இடைவெளியில், தங்கும் துறைமுகத்துக்கான காட்டுத்தனமான பரபரப்பு ஆகியவை இங்கே சங்கமமாயிருந்தன. ஒரேநேரத்தில் உற்சாகத்தையும் சலிப்பையும் ஊட்டக்கூடிய இடம் அது.

யேமெனிலிருந்து வெளியேறியவர்களின் இலக்கு ஏடன் துறைமுகமாகவிருந்தது. நேராக பைபிளில் காணப்படுமாப்போல் தோற்றமளித்த தங்கள் எல்லைகளைத்தாண்டி வந்து குவிந்து கொண்டிருந்த இவர்களை என்ன செய்வது என்று பிரிட்டிஷாருக்கே புரியவில்லை. பலஸ்தீன பிரச்சினை குறித்து யூதர்களுடன் இன்னும் முரண்பட்டுக்கொண்டிருந்தாலும், அவர்களால் யேமெனிய யூதர்களுக்கு வெறுப்புக்காட்ட முடியவில்லை.யேமெனியர்கள் உள்வந்து முகாம்களை அமைத்து தங்குவதற்கு, இஸ்ரேலியர்கள் விரைவில் வந்து அவர்களை கூட்டிச் செல்ல வேண்டும் என்ற நிபந்தனையுடன் அனுமதி அளித்தனர். கந்தைகளை அணிந்து கொண்டு, அழுக்காக, பசியாலும் தாகத்தாலும் அரைகுறை உயிரோடு வந்த

அவர்கள் பரிதாபமாகத் தோற்றமளித்தார்கள். ஏறக்குறைய அவர்களுடைய எல்லா சொத்துக்களுமே அரபுக்களால் சூறையாடப்பட்டிருந்தன. ஆனால் ஒவ்வொரு மனிதனும் தனது வேதாகமத்தையும் ஒவ்வொரு கிராமமும் தன் சின்ன கோக்கின் ரோறாவையும் கொண்டுவரத் தவறவில்லை.

ஏடன் துறைமுகத்துக்கருகாமையில் ஹசீட் என்ற இடத்தில் அவசர அவசரமாக முகாம் ஒன்று அமைக்கப்பட்டது. பாதுகாப்பிற் குட்பட்ட மேற்குப் பிரதேசத்தினதும், யேமெனுக்கும் இடையேயிருந்த எல்லைப்புறத்தை இஸ்ரேலியர்கள் கவனித்து வந்தனர். எப்போதாவது புதிய குழுக்கள் வந்து சேர்வது போல் தெரிந்தால் வாகனங்கள் கொண்டு சென்று அவர்களை ஹசீட்டுக்கு கொண்டு வந்தார்கள். ஹசீட்டில் ஆளணியும் விநியோகப் பொருட்களும் தட்டுப்பாடகவே இருந்தது. அங்கிருந்த அமைப்பு வந்து சேரும் தொகைக்கு ஈடு கொடுக்கமுடியாமல் திணறியது.

பேர்பாம் பழங்குடியினரான இவர்கள் விஷயத்தில் குடிவரவு அதிகாரிகள் மேலதிக பிரச்சினைகளை எதிர்நோக்கினர். யேமெனியர்கள் மலசலகூடம். நீர்க் குழாய்கள், மின்சாரவிளக்குகள் என்பனவற்றை புரிந்துகொள்ள முடியாமல் தவித்தார்கள். மூன்றாயிரம் வருடகால முன்னேற்றத்தை சில மணி நேரங்களில் எட்டிப்பிடித்த சமூகத்தினராக இவர்கள் இருந்தார்கள். மோட்டார் வாகனங்கள், மருந்துகள், உடைகள், என்பன அவர்களுக்கு பழக்கமில்லாதவையாகவும், புதுமையூட்டுபவையாகவும் இருந்தன. இவையெல்லாம் ஒரு திகிலூட்டும் அனுபவங்களாய் அவர்களுக்கு இருந்தன. சிலைப்பேன்கள் நிரம்பியிருந்த அவர்களது கந்தைகளை, புதிய உடுப்புகளை அணிவிக்கும் நோக்கில் டாக்டர்களும் தாதிகளும் அகற்ற முனைந்தபோது பெண்கள் வீறிட்டுக் கத்தினார்கள். நோய்நொடி புண்கள் இருக்கிறதா என்று அவர்கள் உடல்களை பரிசோதிக்க அனுமதிக்க மறுத்ததோடு, ஊசிகள் தடுப்பு மருந்துகள் செலுத்த விடாமல் எதிர்த்துப் போராடினார்கள். போஷாக்கின்மையால் அவதிப்பட்ட குழந்தைகளுக்கு சிகிச்சையளிக்க குழந்தைகளை தற்காலிகமாக அப்புறப்படுத்த முயலும் ஊழியர்களுடன் தொடர்ந்து மல்லுக்கட்டினார்கள்.

ஆனால் இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க ஓரளவு தீர்வொன்று கண்டு பிடிக்கப்பட்டதால் விரக்தியடைவதிலிருந்து முகாம் டாக்டர்களும் ஊழியர்களும் தவிர்க்கப்பட்டார்கள். முகாமில் வேலைசெய்த ஆட்கள் அநேகமாக இஸ்ரேலியர்களாக இருந்ததால் அவர்களுக்கு வேதாகமத்தில் தெளிவான அறிவிருந்தது. ஆகவே குறிப்பிட்ட பிரச்சினைக்கு தீர்வளிக்கக் கூடிய தகுந்த வேதாகம பகுதியொன்றை யேமெனியர்களின் ராபிக்கு தெரிவித்தவுடன் எந்த விஷயத்தையும் வெற்றிகரமாக நிறைவேற்ற முடிந்தது. வேதாகம புத்தகத்தில் எழுதியிருக்கும் வண்ணம் எதையும் செய்ய யேமெனியர்கள் தயாராக இருந்தார்கள்.

ஹசீட் முகாம் விரிவடைந்து வந்ததோடு மேலும் யேமெனியர்கள் வருவதாக தகவல்கள் வந்துகொண்டிருந்தன. பிரிட்டிஷாரோடு இஸ்ரேலிய தற்காலிக அரசாங்கம் செய்துகொண்ட ஒப்பந்தப்படி இவர்களை விரைவில் அகற்றிக்

கொள்ள வேண்டும். ஆகவேதான் ஆர்க்டிக் சேர்க்கிள் விமான நிறுவனம், பலஸ்தீன மத்திய விமான நிறுவனமாக மாற்றப்பட்டு புராதன இறைவாக்குகளில் ஒன்றான ''வானத்திலிருந்து இறங்கும்கழுகுகளில்'' இறங்கும் மனிதனாகபொஸ்ரர் ஜே மக்விலியம் பெரிய ''கழுகு'' ஒன்றில் தரையிறங்கினார்.

விமானத்தின் வரவு மிகுந்த பரபரப்பை உண்டாக்கியது. முதலாவது குழுவினர் தங்கள் வேதாகமத்தோடும், குடிநீர்ப்போத்தல்களோடும் விமானத்தளத்துக்கு கூட்டிச்செல்லப்பட்டார்கள். அங்கேபோய்க் கழுகைக் (விமானத்தை) கண்டதும் புரிந்துகொண்டதுபோல் தலையை ஆட்டினார்கள். தான்அனுப்பு வேன் என்றுசொல்லியிருந்ததுபோல்கடவுள்அனுப்பியிருக்கிறார்.ஆனால்அவற்றில் ஏறச்சொன்னபோது ஏறமறுத்துவிட்டார்கள். அந்தக்குழுவில் இருந்த ராபிக்கு அன்று ஒய்வுநாள் என்பது ஞாபகம் வந்துவிட்டது. பெருத்த விவாதம் ஒன்று எழுந்தது. ஆயிரக்கணக்கானவர்கள் இஸ்ரேலுக்குப் போக காத்துக்கொண்டிருப்பதால் கழுகை ஒருநாள் கூடத் தாமதிக்கப்பண்ணுவது முறையில்லாதது என ஹசீட் முகாம் தலைமை அதிகாரி விளங்கினார். கழுகின் சிறகுகளின் கீழ் சப்பணமிட்டு அமர்ந்தபடி அவர்கள் அசைய மறுத்தார்கள். மூவாயிரம் வருடங்கள் காத்திருந்த பிறகு மேலும் ஒருநாள் காத்திருப்பதில் குடிமுழுகிப் போய்விடாது என்றனர்.

பொஸ்ரர் ஜே மக்விலியம்ஸ் இந்தப் புராதனமான பிராணிகளை ஒரு முறை பார்த்தான். அவர்களின் புரியாத பாஷையிலே கண்கள் பிதுங்க செய்து கொண்டிருந்த விவாதங்களுக்கு செவிகொடுத்தவன் ஸ்ரெச் தொம்சனுக்கு வசவு ஒன்றை மொழிந்துவிட்டு நகரத்துக்குள் சென்று நன்றாக போதையிலாழ்ந்து போனான்.

அடுத்த நாள் காலையில் துயிலெழுப்பப்பட்ட அவன் கிரேக்க ஊசோ அரிசி வைன், ஸ்கொச் ஆகியவற்றைக் கலந்து குடித்ததனால் ஏற்பட்டிருந்த பின் விளைவான பயங்கரத் தலையிடியுடன் விமானத் தளத்துக்கு ஏற்றிச் செல்லப்பட்டான். யேமெனியர்கள் தங்கள் ரோறாக்களையும் குடிநீர்ப் போத்தல்களையும் விமானத்தினுள் எடுத்துச் செல்வதைக் கண்டான். அந்த ஊர்வலத்தைப் பார்த்து யேசுக்கிறிஸ்துவே என்று சொல்லத்தான் அவனால் முடிந்தது. ''கப்டன் மக்விலியம்ஸ்'' ஒரு குரல் பின்னாலிருந்து அவனை அழைத்தது. அவன் திரும்பிப் பார்த்தபோது உயர்ந்த நல்ல உடலமைப்புடன் கூடிய ஷப்றா ஒருத்தியைக் கண்டான். அவள் தன்னைத்தானே ஹன்னா என அறிமுகப்படுத்திக் கொண்டாள். அவள் தன் நடுஇருபதுகளில் இருந்ததோடு, கிபுட்சுகளின் பாரம்பரியமான நீல உடைகளை அணிந்து, கால்களில் பாதணிகளை அணிந்திருந்தாள். நான் உங்களோடு பிரயாணிகளைக் கவனிக்கப் பயணம் செய்யப் போகிறேன் என்றாள்.

இந்தக் கணத்திலிருந்து பயணம் பொஸ்ரருக்கு சுவாரஸ்யமானதாக மாறிற்று. தன்னை அவன் ஊன்றிக் கவனிப்பதுபற்றி ஹன்னா ஏதும் கவலைப் படவில்லை. ''ஏதாவது விசேட அறிவுறுத்தல்களைத் தர விரும்புகிறீர்களா? ஏனென்றால் இதுதான் எங்களுடைய முதல் பரிசோதனை முயற்சி'' என்றாள்.

''இல்லை, எதுவுமில்லை. இவர்களை விமான ஓட்டியின் அறையினுள் வராமல் பார்த்துக் கொண்டால் போதும். நீ மட்டும் வரலாம்..... எந்நேரமென்றாலும்.. ... என்னை ரெக்ஸ் என்றே நீ அழைக்கலாம்''.

ஆட்கள் விமானத்தில் ஏற்றப்படுவதை பொஸ்ரர் அவதானித்துக் கொண்டிருந்தான். யேமெனியர்கள் முடிவில்லாத வரிசையில் வந்துகொண்டிருந்தார்கள். ''ஏய் எத்தனை பேரை ஏற்றப் போகிறாய்? எவ்வளவு பேரை விமானம் கொள்ளும் என்று நினைக்கிறாய்?'' ''நூற்றி நாற்பது பேர்கள் பட்டியலிலிருக்கிறார்கள்''. என்ன? உனக்குப் பைத்தியமா? அவ்வளவு பேரோடு இந்த விமானத்தைக் கிளப்பக்கூட முடியாது. ஹன்னா நீ ஓடிப்போய் விமானத்தில் இவர்களை ஏற்றிக் கொண்டிருப்பவர்களிடம் அரைவாசிப்பேரை இறக்கிவிடச் சொல்''.

''கப்டன் மக் விலியம்ஸ், அவர்கள் மிகவும் பாரம் குறைந்த மனிதர்கள்'' கெஞ்சினாள் ஹன்னா.

''சுச்சான் கொட்டைகளும் அப்படித்தான். ஆனால் அவற்றில் ஒரு கோடியை என்னால் கொண்டு செல்ல முடியாது''

''தயவு செய்து மறுக்காதீர்கள். அவர்களால் ஒரு பிரச்சினையும் வராமல் நான் பார்த்துக் கொள்கிறேன்.''

''நீ சரியாகச் சொன்னாய்; நான் மறுக்கமாட்டேன், ஆனால் ஒடுபாதை முடிவில் எல்லோரும் பிணங்களாகத்தான் கிடப்போம்''

''கப்டன் மக்விலியம்ஸ் எங்கள் நிலைமை மிகவும் மோசமானது. இவர்களை ஏடனுக்கு வெளியே கொண்டுபோகும்படி பிரிட்டிஷார் எங்களை வற்புறுத்துகிறார்கள். ஆனால் இவர்கள் நூற்றுக்கணக்கில் தினமும் எல்லையைத் தாண்டி வந்து கொண்டிருக்கிறார்கள்.''

பொஸ்ரர் முணுமுணுத்துக்கொண்டே ஏற்றக்கூடிய நிறைகளைப் பற்றிய அறிவுறுத்தல் அட்டவணைகளை பார்வையிட்டான். அவன் கணிப்புகளை செய்யும்போது அருகிலிருந்த இஸ்ரேலிய தொண்டர்கள் மிகவும் பரபரப்புடன் காத்துக்கொண்டிருந்தனர். அவன் இடையில் நிமிர்ந்து ஹன்னாவின் கண்களை நோக்கும் 'தவறை' செய்தான். பார்த்த அவன் கணிப்புகளை மீளசெய்து அங்குமிங்கும் சிறு தகிடுதத்தங்களையும் தானே செய்து சிறிது அதிஷ்டத்துடன் இந்த பழைய விமானம் எல்லோருடனுமே போகலாம் என்ற 'முடிவுக்கு' வந்தான். மேலே போய்விட்டால் எப்படியாவது அதனை செலுத்திச் சென்று விடுவான். ''பரவாயில்லை அவர்களை அப்படியே உள்ளே விட்டு விடு . எப்படியும் இதுதான் இங்கு எனது முதலும் கடைசியுமான பயணமாக இருக்கப் போகிறது.'' முகாம் பணிப்பாளர் இறுதி விவரங்களைக் கையளித்தார். நூற்று நாற்பத்திரெண்டு யேமெனியர்கள் உள்ளே அடைக்கப்பட்டிருந்தனர். ஹன்னா உணவும் வேறு அவசியப் பொருட்களையும் உள்ளே ஏற்றினாள். அவன் ஏணியால் ஏறி மேலே வந்தான்.

நாற்றம் மூக்கைத் துளைத்தது. ''எல்லோரையும் குளிக்கப்பண்ண நேரம் கிடைக்கவில்லை. நீங்கள் வரப்போகும் நேரம் சரியாக எங்களுக்குத் தெரிந்திருக்கவில்லை'' மன்னிப்புக் கேட்கும் குரலில் ஹன்னா சொன்னாள். பிரதான பகுதியினுள் தன் தலையை நீட்டிப்பார்த்தான். அந்த எளிய மக்களால் முற்றாக அவ்விடம் நிறைந்திருந்தது. அவர்கள் பயந்தபடி சப்பணமிட்டு அமர்ந்திருந்தார்கள். மணம் தாங்க முடியாததாக இருந்தது.

பொஸ்ரர் உள்ளே நுழைந்து கதவைப் பூட்டி தாளிட்டான். இதைத் தொடர்ந்து காற்றோட்டமில்லாத அந்த அறைக்குள், வெளியேயிருந்த நூற்றிருபது பாகை வெப்பம் இந்த மணங்களில் ஏதோ செய்யத் தொடங்கியது. அங்குலம் அங்குலமாக முன்னே நகர்ந்தான். விமான ஓட்டியின் அறையை அடைந்தபோது வினோதமான பச்சை வர்ணம் அவனில் ஒட்டியிருந்தது. காற்றோட்டத்தை உண்டாக்குவதற்காக ஜன்னலைதிறத்தான்.ஆனால் அனல்காற்றுத்தான் வீசியது. அவன் இயந்திரங்களை இயக்கி ஓடுபாதையில் விமானத்தை ஓடவைத்துக்கொண்டிருந்த போது ஜன்னலால் தலையை வெளியே நீட்டி வாந்தியெடுத்தான். ஓடுபாதை வழியே விமானத்தை விரைவாக செலுத்தி கடைசி அங்குலத்தில் வைத்து உயரே அதனை கிளப்பும்வரை வாந்தியெடுத்துக் கொண்டேயிருந்தான். உயரத்தை அடைய பகீரதப் பிரயத்தனம் செய்து கொண்டிருந்தபோது கொடித்தோடைப் பழமொன்றை உறிஞ்சிக் கொண்டிருந்தான். உயரமான இடங்களின் குளிரான சீதோஷ்ணத்தை அடைந்ததும் அவன் வயிறு அமைதி அடைந்தது.

உயரத்தை அடைய அவன் முயற்சி செய்துகொண்டிருந்தபோது பயணம் மிக கரடுமுரடானதாக, விமானம் துள்ளி விழுந்து கொண்டிருந்தது.பாப் எல் மன்டெப்பின் மூலையால் திரும்பி எகிப்து ஒரு பக்கமும் சவூதிஅரேபியா ஒரு பக்கமும் இருக்கத்தக்கதாக செங்கடலின் மத்திய கோட்டில் விமானத்தை செலுத்திச்சென்றான். ஹன்னாவும் மிகவும் அசௌகரியத்துடன் உள்ளே வந்து ''இந்த விமானம் குலுங்குவதை உங்களால் நிறுத்த முடியாதா? அங்கே எல்லோரும் வாந்தியெடுத்துக் கொண்டிருக்கிறார்கள்'' என்றாள் அவள்.

பிரதான பகுதியின் வெப்பத்தை கட்டுப்படுத்திவிட்டு, ''அங்கே போய் காற்றோட்ட ஜன்னல்களை திறந்துவிடு, நான் இன்னும் கொஞ்சம் மேலே போகிறேன். குளிர்ந்த காற்று அவர்களை சரிப்பண்ணிவிடும்''.

மதுபானம் அளவுக்கு மிஞ்சி அருந்தியதால் ஏற்பட்ட பின்விளைவு தலையிடி மண்டையைப் பிளந்து கொண்டிருந்தது. இந்த வேலையை ஏற்றுக் கொள்ளும்படியான தொம்சனின் தூண்டுதலுக்கு ஏன் உட்பட்டேன்? என்று நொந்து கொண்டான்.

அடுத்த அரைமணி நேரத்தில் ஹன்னா திரும்பி வந்து, ''அங்கேஎல்லாரும் உறைந்து போகிறோம் என்று கத்துகிறார்கள், நானும் கூடத்தான்'' என்றாள்.

''உன்னுடைய தேவையை நீயே தெரிந்தெடுத்துக்கொள். வெப்பத்தைத் திறந்துவிட்டால் அங்கே வாந்தியெடுத்துக்கொண்டிருப்பார்கள்'' ''அவர்கள்

குளிரில் இருக்கட்டும்'' மெதுவாக முணுமுணுத்த அவள் திரும்பி தன் பயணி களிடம் சென்றாள்.

சிலகணங்களில் அவள் ஹீப்ருவில் கத்தியபடி ஓடிவந்தாள். ''ஆங்கிலத்தில் கத்து'' என்றான் டொஸ்ரர்.

பிரதான பகுதியை சுட்டிக்காட்டியபடியே ''நெருப்பு... அவர்கள் சூடாக இருப்பதற்காக நெருப்பு மூட்டியிருக்கிறார்கள்'' என்றாள். தானியக்க ஓட்டி யின் கட்டுப்பாட்டில் விமானம் இருந்ததால் அதைவிடடு விட்டு உடல்களை இடமும் வலமும் இழுத்தெறிந்தபடி ஓடிப்போனான். தளத்தின் நடுவில் ஒரு சிறிய நெருப்பு எரிந்துகொண்டிருந்தது. காலால் அதை மிதித்து அணைத்து விட்டு ஹன்னாவின் அருகில் சென்றாள். ஹன்னாவோ அந்தப் பகுதியின் கதவருகில் துவண்டு சரிந்தாள்.

''இந்த ஆட்களுடன் எப்படிப் பேசவேண்டும் என்று உனக்குத் தெரியுமா''? ''ஆமாம்..... ஹீப்ரூவில்.''

உள்ளக ஒலிபெருக்கியின் ஒலிவாங்கியை அவள் கைகளுள் திணித்தவன், ''அடுத்ததன் இடத்தை விட்டு அசைபவன் எவனும் செங்கடலில் நீச்சல் அடிக்கச் செல்வான் என்று சொல்''.

யேமெனிகள் இதற்குமுன் ஒரு ஒலிபெருக்கி ஓசையையும் கேட்டதில்லை. ஹன்னாவின் குரலை ஒலிபெருக்கியில் கேட்டதும், அவர்கள் விமானத்தின் கூரை யைச் சுட்டிக்காட்டியபடி பயந்து, கதறி, ஓடுங்கிப் போனார்கள்.

''இவர்களுக்கு என்ன நடந்தது? நீ அவர்களுக்கு என்ன சொன்னாய்?'' ''இவர்கள் முன்னெப்போதும் ஒலிபெருக்கி ஓசையைக் கேட்டதில்லை. அவர்கள் கடவுளே தங்களுக்கு ஆணையிடுவதாக நினைக்கிறார்கள்.'' ''நல்லது, நீ வேறு மாதிரி எதுவும் சொல்லி விடாதே.''

தொடர்ந்து பலமணி நேரங்களுக்கு எதுவித பிரச்சினையும் இல்லாமல் போயிற்று. விமானத்துக்கு ஆபத்து ஏதும் விளைவிக்கக் கூடாத சிறு சிறு சம்பவங் களே ஏற்பட்டன. பொஸ்ரர் சிறிது ஆறுதலடையத் தொடங்கியபோது மீண்டும் பிரதான பகுதியிலிருந்து பரபரப்பான குரல்கள் கேட்டன. அவன் கண்களை மூடிக்கொண்டு, ''கடவுளே இன்று முதல் நான் நல்ல கிறிஸ்துவனாக இருக் கிறேன். இந்த நாளை நல்லபடியாக முடித்துவிடு'' என்று வேண்டிக் கொண் டான். ஹன்னா திரும்பி வந்தாள்.

''எனக்குக் கேட்கப் பயமாக இருக்கிறது'' முணுமுணுத்தான் பொஸ்ரர்.

''ரெக்ஸ், ஒரு ஆண்குழந்தைக்கு நீ ஞானத் தந்தையாயிருக்கிறாய்''.

''என்ன?''

''இப்போதுதான் ஒரு பிரசவம் நிகழ்ந்தது.''

''ஐயோ..... ஐயோ..... ஐயோ.....''

''ஒரு பிரச்சினையும் இல்லை. பிரசவம் என்பது அவர்களுக்குப் பழக்கமான ஒன்றுதான். தாயும் மகனும் நன்றாக ஒய்வெடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.''

அவன் தன் கண்களை மூடிக்கொண்டு மிடறு விழுங்கினான். ஒரு மணி நேரம் வரை எதுவும் நடக்கவில்லை. சந்தேகத்துடன் யோசித்தான் பொஸ்ரர்– அந்த எளிமையான மக்கள் கழுகின் இயந்திரங்களின் ஓசைக்குப் பழக்கப்பட்டுத் தங்கள் பயணக்கடுமையால் களைத்துப்போய் ஒவ்வொருவராக தூங்கிப் போகத் தொடங்கினர். ஹன்னா பொஸ்ரருக்காக ஒரு கோப்பை சூட்டான கஞ்சி போன்ற திரவ உணவைக் கொண்டு வந்து கொடுத்துவிட்டு அன்றைய நிகழ்ச்சிகளைப்பற்றி நினைத்துச் சிரித்துக் கொண்டனர். யேமெனிகளைப் பற்றியும், போரைப் பற்றியும் ஏராளமான கேள்விகளை பொஸ்ரர் ஹன்னாவிடம் கேட்டான்.

''நாங்கள் இப்போ எங்கே இருக்கிறோம்?''

விமான ஓட்டி, உதவி விமான ஓட்டி, திசைகாட்டுவோன், வானொலி இயக்குனர் எல்லாமாகத் தானே செயல்பட்டுக் கொண்டிருந்த பொஸ்ரர் வரை படத்தைப் பார்த்துவிட்டு, ''நாங்கள் விரைவில் இந்த மூலையால் திரும்பி அககாபா வளைகுடாவின் மீது செல்வோம். வழியில் பாலைவனத்தில் போர் நடக்கும் முன்னணி வரிசைகளை என்னால் காணக்கூடியதாக இருந்தது, ''போர் கெதியில் முடிந்துவிடும் என்று நினைக்கிறேன்.'' ''ஆமாம், போர் கடுமையானது தான். சரி நீ எப்படி இப்படி ஒரு வேலைக்குள் மாட்டிக் கொண்டாய் ''? ''எவ்வளவு கொடுத்தாலும் இவ்வேலைக்கு இருமடங்கு கொடுக்கலாம்.''

ஹன்னா சிரித்தாள். ''எனக்கு வேதனம் தரப்படுவதில்லை.''

''வேதனம் பெறுவதில்லை''?

''இல்லை நான் இங்கு அனுப்பப்பட்டேன். ஒன்றில் இந்த மக்களோடு கூடவே புதிய குடியேற்றம் ஒன்றை அமைக்க செல்வேன். அல்லது இந்த ஆட்களைக் கூட்டிக் கொண்டு செல்லும் வேலையில் தொடர்ந்து ஈடுபடுவேன்.''

''உங்களை நான் இன்னும் புரிந்து கொள்ள முடியவில்லை''

''இதைப் புரிந்து கொள்ள வைப்பது மிகக்கடினம். எங்கள் உணர்வுகள் எப்படியிருக்கின்றன. என்று சில வெளியில் இருக்கும் ஆட்கள் புரிந்து கொள்வதேயில்லை. பணம் என்பது எங்களுக்கு எவ்வித பெறுமதியுமற்றது. இந்த மக்களை இஸ்ரேலுக்குள் கொண்டு செல்வது தான் எங்களுக்கு பெறுமதியானது. பிறிதொரு நேரத்தில் என்னால் தெளிவாக விளக்க முடியும் என்று நினைக்கிறேன்.''

பொஸ்ரர் தோளைக் குலுக்கிக் கொண்டான். புதுமையான எத்தனையோ விஷயங்கள் இப்போ நிகழ்கின்றன. அதைப்பற்றி பரவாயில்லை.

இந்தப்பயணம் பயனுள்ளதுதான். ஆனால் இப்படியான ஒரு பயணமே போதுமானது என்று தனக்குள் யோசித்துக் கொண்டான் பொஸ்ரர்.

கொஞ்ச நேரத்துக்குப் பிறகு அவன் எதிரே சுட்டிக்காட்டி ''அதோ இஸ்ரேல்.....'' என்றான். ஹன்னா ஒலிவாங்கியை நோக்கி ஓடிப்போனாள்.

''நீ என்ன செய்ய முயற்சிக்கிறாய்?''

''தயவு செய்து இதை அவர்களுக்கு சொல்லிவிடு ரெக்ஸ். இந்தக்கணத்துக்காக அவர்கள் ... ... ஆயிரமாயிரம் வருடங்கள் காத்திருந்தார்கள்.''

''அவர்கள் இதைக்கேட்டதும் விமானத்தைக் கிழித்து விடுவார்கள்.''

''அவர்களை அமைதியாக இருக்கப்பண்ணுவது ... . என்பொறுப்பு.''

''சரி ... .. நடத்து''

திரும்பவும் அவன் தன்னியக்க விமான ஓட்டியை இயக்கிவிட்டு, அவர்கள் விமானத்துக்கு திங்கெதுவும் இழைக்காமல் பார்த்துக் கொள்ள அவன்வெளியே போனான். ஹன்னா செய்தியை அறிவித்தாள். அற்புதமான மகிழ்ச்சியாரவாரக்காட்சி ஒன்று அங்கே நிகழ்ந்து கொண்டு இருந்தது. அழுவதும், பாடுவதும், சிரிப்பதும், பிரார்த்தனை செய்வதும், மகிழ்சசிக் கூக்குரல் எழுப்புவதும், நடனமாடுவதும், கட்டியணைப்பதுவும் நிகழ்ந்து கொண்டிருந்தன.

''என்னுடைய கடவுளே, நாங்கள் பருத்தி வெற்றிக் கிண்ணப் போட்டியில் ஜோர்ஜியா தொழில் நுட்பக் கல்லூரியை தோற்கடித்த போது கூட இவ்வளவு ஆரவாரம் அவர்கள் செய்யவில்லை.'' வியந்து போனான் பொஸ்ரர்.

ஒரு யேமெனியப் பெண் பொஸ்ரரின் கையை எடுத்து முத்தமிட்டாள். அவன் கையை இழுத்துக்கொண்டு கட்டுப்பாட்டறைக்குள் திரும்பப் போனான். லிட்டா விமான நிலையத்தை அடையும் வரை உறசாக குரல்களை எழுபபிக் கொண்டேயிருந்தார்கள். விமானம் ஓடுபாதையின இறுதியை தொட்டபோது இவர்களின் குரல்கள் விமான இயந்திரங்களின் ஓசையைக்கூட மூழ்கடித்து விட்டன.

அவர்கள் விமானத்தை விட்டு வெளியேறி, மண்டியிட்டு விழுந்து இஸ்ரேலின் மண்ணை அழுதபடி முத்தமிடுவதை பொஸ்ரர் அவதானித்துக் கொண்டிருந்தான்.

''போய்வாருங்கள் பொஸ்ரர், நீங்கள் போவது எனக்குக் கவலைதான் பாரிசில் உங்கள் நேரத்தை மகிழ்ச்சிகரமாக செலவிடுங்கள்.'' என்றாள் ஹன்னா.

பொஸ்ரர் ஜே மக்வில்லியம்ஸ் மெதுவாக விமானத்தின் படிகளிலிருந்து இறங்கி கீழே வந்தான். அங்கு நிகழ்ந்துகொண்டிருந்த பரபரப்பான காட்சியை உற்றுப் பார்த்தான். அம்புலன்சுகளும், பேரூந்துகளும் காத்துக்கொண்டிருந்தன. ஹன்னாவைப் போன்ற டசின் கணக்கான யுவதிகள் இந்த எளிமையான யேமெனி

யருடன் கலந்து அவர்களை அமைதிப்படுத்திக்கொண்டும், அவர்களின் மகிழ்ச்சியில் பங்கு பற்றிக் கொண்டும் இருந்தார்கள். பொஸ்ரர் ஏதோ புதிய உணர்வலையொன்று அவனுள் பிரவகிக்க படியின் அடியில் உறைந்து போய் நின்றிருந்தான். தன்னை நோக்கி ஸ்ரெச் தொம்சன் ஓடிவந்ததை கூட அவன் கண்டு கொள்ளவில்லை.

''நல்ல வேலை பொஸ்ரர் பையா! எப்படி நமதுபெட்டி, ஈடுகொடுத்ததா?''

''என்ன?''

''விமானம் ஒழுங்காகக் பறந்ததா? என்று கேட்டேன்''

''கழுகைப் போல் பறந்தது''.

குடிவரவு பகுதி அதிகாரிகள்பத்துப்பன்னிரெண்டு பேர்பொஸ்ரரின் கைகளை குலுக்கி, முதுகில் அறைந்து தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

''எப்படி அவர்கள் ஒழுங்காக நடந்து கொண்டார்களா?''

''வழக்கமான பயணமாக இருந்ததா?

''வழமையானதுதான்...மிக வழமையானதாக இருந்தது'' என்றான் பொஸ்ரர்.

மகிழ்ச்சி அலை பிரவகித்துக்கொண்டிருந்த இடத்தை விட்டு ஸ்ரெச், பொஸ்ரரை அப்பால் அழைத்துச் சென்றான். பொஸ்ரர் ஓரிடத்தில் நின்று திரும்பிப்பார்த்தான். ஹன்னா அவனை நோக்கி கையை அசைத்தாள். இவனும் பதிலுக்கு கையை அசைத்தான்.

''நல்லது பொஸ்ரர் நீ இனி பாரிசுக்கு போகலாம். எனக்கு விமானிகள் கிடைத்துவிட்டார்கள். இன்னுமொரு விமானமும் கிடைத்திருக்கின்றது.''

''உனக்கு ஏதும் பிரச்சினையென்றால் இன்னொருமுறை போய்வருகிறேன். ஆனால் அதுதான் எனது கடைசி பயணமாக இருக்கவேண்டும்.''

ஸ்ரெச் தன் தலையை சொறிந்து கொண்டான், ''எனக்கு தெரியவில்லை உன்னை இன்னொரு முறை செல்வதற்கு அமர்த்த முடியும். புதிய விமானத்தைப் பரீட்சித்தும் பார்க்கலாம்'' சொன்ன ஸ்ரெச் தனக்குள்ளே ''அகப்பட்டுக் கொண்டாயா'' என்றுதனக்குள் மகிழ்ச்சியுடன் சொல்லி கொண்டான். ''ஆளை அகப்பட வைத்துவிட்டேன்''. அதுதான் ''மந்திரகம்பளம் நடவடிக்கை''யின் ஆரம்பம்(operation magic Carpet)

'இராட்சத தண்டுப்' புகழ் ஸ்ரெச் தொம்சன், ''பெர்லின்வான் வழித் தொடர் பயணத்தில்'' (Berlin Air-Lift) பங்கு கொண்ட கடினமான, எதற்கும்

தயாரான அமெரிக்க விமானிகளை சேவைக்குத் தேடி அமர்த்திக் கொண்டான். யேமெனியர்களை அவர்களது வாக்களிக்கப்பட்ட பூமிக்கு அழைத்து வரும் சேவையில் ஒவ்வொரு புதிய விமான ஓட்டியும் வெறியோடு மூழ்கிப் போனார்கள்.

பலதருணங்களில் விமானங்கள் சிதறிவிடும்போல் இருந்தாலும். அதிகளவு வேலைசெய்தும், குறைந்தளவு பராமரிப்பிலிருந்தும் ஒரு விமானம் கூட இழக்கப்படவில்லை. மந்திர கம்பளத்தின் விமானிகள், யேமெனியர்களை ஏற்றிச் செல்லும் போதெல்லாம் தெய்வீகபாதுகாப்பு விமானங்களுக்கு கிடைப்பதாக எண்ணத் தொடங்கினார்கள்.

பொஸ்ரர் ஜே மக்வில்லியம்ஸ், பரிசுக்கு கடைசிவரை போகவே இல்லை. யேமெனியர்களை கொண்டுவரும்வரை ஏடெனுக்கு விமானத்தைச் செலுத்திய அவன்பிறகு ''அலிபாபா நடவடிக்கையில்'' ஈராக்கிய யூதர்களை பாக்தாத்திலிருந்து வெளியேற்றச் சென்றான். விமானப் போக்குவரத்துச் சரித்திரத்திலேயே இல்லாதவாறு பொஸ்ரர் மற்ற விமானிகளை விட நீண்டதும் கடினதுமான நேரத்திற்கு பணிபுரிந்தான். ஒரு தொகை குடியேறுவோரோடு அவனது விமானம் விட்டாவில் தரையிறங்கியதும், தன் வீமானத்தின் பராமரிபபு சிரமைப்பு வேலைகள் நடைபெறும்வரை விமானத் தளத்திலேயே சிறிது நித்திரை செய்வான். விமானம் தயாரானதும் மீண்டும் செலுத்திச் செல்வான். அடுத்த சில வருடங்களில் நானூறு தடவைகள் பறந்து, 'பலலட்சக்கணக்கான மைல்களை பறந்து கிட்டத்தட்ட ஐமபதினாயிரம் யூதர்களுக்கு மேல் கொண்டு வந்து சேர்த்தான். ஒவ்வொரு பயணமும்தான் இறுதிப் பயணம் என்று, ஹன்னாவை மணந்து ரெல்அவிவ்வில் ஒரு வீடடைப் பெற்றுக்கொள்ளும்வரை சொல்லிக் கொண்டேயிருந்தான்.

மந்திரகம்பளம்தான் ஆரம்பம், துருக்கி, ஈராக், குர்டிஷ்தான் நாடுகளின் பின்தங்கிய இடங்களிலிருந்தும் வந்தார்கள்.

பாதுகாக்கப்பட்ட கிழக்கு பிரதேசத்தின், ஹட்ரமோட் (Hadhramaut) டிலிருந்து இதுவரை இல்லாமல் போய்விட்டதாக கருதப்பட்ட ஒரு போர்க்குணம் கொண்ட யூத இனக்குழுவொன்று போராடிக் கொண்டே ஏடன்வரைவந்தது.

ஐரோப்பாவின் இடம்பெயர்ந்தவர்களின் முகாம்களிலிருந்து வெளியேறி வந்தார்கள்.

பிரான்ஸ், இத்தாலி, யூகோஸ்லாவிய, செக்கோஸ்லோவாக்கியா, றூமேனியா, பல்கேரியா கிரிஸ், ஸ்கன்டிநேவியா ஆகிய இடங்களிலிருந்து அவர்கள் இஸ்ரேலுக்கு வந்தார்கள். வட-ஆபிரிக்காவின் அகலக்குறுக்கே, அல்ஜீரியா, மொராக்கோ, எகிப்து, ரியூனிசியா ஆகியவற்றின் மெல்லாக்களிலிருந்து எழுந்து வந்தார்கள்.

தென் ஆபிரிக்காவின் செல்வந்த யூதசமூகமும், மிகுதீவிரமான சியோனிஸ்டுகளும் இஸ்ரேலுக்கு சென்றனர். மூவாயிரம் வருடங்களுக்கு முன்பே போய்க் குடியேறியிருந்த இந்தியாவிலிருந்தும் சீனாவிலிருந்தும் வந்தார்கள். அவுஸ்திரேலியா, கனடா, இங்கிலாந்து ஆகிய நாடுகளிலிருந்துவந்தார்கள்.

ஆர்ஜென்ரீனாவிலிருந்து வந்தார்கள். சுட்டெரிக்கும் பாலைவனங்களூடாக சிலர் நடந்து வந்தார்கள். சிலர் விமானம் மூலம் பறந்து வந்தார்கள். சிலர் கால்நடை வண்டிகளில் இறுக அடைக்கப்பட்டு வந்தார்கள்.

சிலர் ஆடம்பர படகுகளில் வந்தார்கள்.

எல்லாமாக எழுபத்தி நாலு நாடுகளிலிருந்து வந்தார்கள். சிதறடிக்கப்பட்டவர்கள், அஞ்ஞாதவாசம் செய்தோர், விரும்பப்படாதவர்கள் எல்லோரும் யூதன் என்று சொல்வது கேலிக்குரியதாக இல்லாத, அந்த உலகின் சிறிய மூலையை தேடி வந்தார்கள்.

அத்தியாயம் இரண்டு

துளித்துளியாக இருந்தது, ஆறாகி, பெரும் மனித வெள்ளமாக பெருகியது. மற்றைய நாடுகளில் இருந்து வெளியேறிய யூதர்கள் இஸ்ரேலின் மக்கள்தொகையை இருமடங்காக்கி மும்மடங்காக்கத் தொடங்கினர். போரால் சீரழிந்திருந்த பொருளாதாரம் குடியேற வந்தோரினால் தடுமாறியது. தாங்கள் அணிந்திருந்தவைகளை தவிர வேறெதுவுமில்லாமல் பலர் வந்தார்கள். பலர் வயோதிபமானவர்களாக இருந்தார்கள். பலர் சுகவீனமாக இருந்தார்கள். கல்வியறிவில்லாத பலர் வந்தார்கள். ஆனால் எந்த நிலையில் வந்தாலும், எப்படிப்பட்ட மேலதிக சுமைகள் ஏற்பட்டாலும், இஸ்ரேலின் நுழைவாயிலிருந்து எந்த யூதனும் திருப்பி அனுப்பப்படவில்லை.

அது ஒரு உருக்கும் பாத்திரம் போலல்லாமல், அமுக்கத்தில் உணவு சமைக்கும் பாத்திரம் போலிருந்தது. ஏனெனில் பல்வேறு தரப்பட்ட சூழ்நிலைகளின் கீழ் வாழ்ந்திருந்த உலகின் சகல மூலைகளிலும் இருந்தும் அவர்கள் வந்தார்கள்.

கூடார நகரங்களும், அலங்கோலமான வளைவுத்தகரங்களாலான கொட்டகை கிராமங்களும், கலிலியிலிருந்து நெகெவ்வரை நிலத்தில் எழுந்து நிற்கலாயின. லட்சக்கணக்கானவர்கள், கன்வஸ்களின் கீழும், அகப்பட்டவற்றின் கீழும் வாழ்ந்து, வைத்திய, கல்வி, நலன்புரி சேவைகளையும் செயலற்ற நிலைக்கு கொண்டு வந்தனர்.

ஆயினும் நாடு முழுவதும் நடப்பவை எல்லாம் நன்மைக்கே என்ற மனப்பான்மை வேரூன்றியிருந்தது. கீழ்நிலைக்குள்ளாக்கப்பட்டிருந்தவர்கள், இஸ்ரேல் நாட்டின்மண்ணில் காலூன்றியதிலிருந்து, அவர்கள் அதுவரை அறியாதிருந்த மனித கௌரவத்தையும் சுதந்திரத்தையும் வழங்கியதால் கிடைத்த சமஉரிமை மனித சரித்திரத்தில் முன்னெப்போதும் இல்லாத வகையில், அவர்களில் ஊக்கத்தையும் குறிக்கோளையும் உருவாக்கிவிட்டது.

ஒவ்வொரு நாளும் புதிய விவசாய குடியேற்றங்கள் தோன்றத் தொடங்கின. புதிதாக வந்தவர்கள் முன்பு வந்த முன்னோடிகள் சதுப்பு நிலங்களை மீட்டெடுக்க கடுமையாக உழைத்தது போலவே பாழ்நிலங்களையும், வனாந்திரங்களையும் மீட்டெடுக்க உழைத்தார்கள்.

நகரங்களும், பட்டினங்களும், மண்ணிலிருந்து திடீர் திடீரென தோன்றத் தொடங்கின.

தென் ஆபிரிக்கர்கள், தென் அமெரிக்கர்கள், கனேடியர்கள் கைத்தொழில் களில் பணத்தைச் சொரிந்தனர். ஆபிரிக்காவையோ, ஆசியாவையோ விடச் சிறந்த உற்பத்தித் திறன் கொண்டதாக இஸ்ரேல் மாறும்வரை தொழிற்சாலை கள் நிர்மாணிக்கப்பட்டன. பொதுவான விஞ்ஞான, வைத்திய, விவசாய ஆராய்ச்சிகள் வெகு முன்னேற்றமான நிலையை அடைந்திருந்தன. இரண்டரை இலட்சம் சனத்தொகையைக் கொண்ட பரபரப்பான தலைநகரமாக ரெல்அவிவ் அபிவிருத்தியடைந்ததோடு, ஹைபா, மத்தியதரைக்கடலின் முக்கிய துறைமுகங் களில் ஒன்றாக வளர்ச்சியடைந்தது. இரு நகரங்களிலுமே கனரக கைத்தொழில் கள் உருவாகின. புதிய தேசத்தின் தலைநகரமாகவும், கல்வி மையமாகவும் இருந்த புதிய ஜெருசலேம், மலைப்பிராந்தியங்களிலுள்ளும் வீரிவடைந்தது.

இரசாயனங்கள், மருந்துச் சாமான்கள், மருந்துகள், சுரங்கத் தொழில், பொறியியல்துறை, சப்பாத்து, உடை தயாரிப்புத் தொழில்கள் இப்படியாக ஆயிரக்கணக்கான தொழில்கள் பெருகின. கார்கள் ஒன்றிணைக்கப்பட்டன. பேரூந்துகள் உருவாக்கப்பட்டன. ரயர்கள் உற்பத்தி செய்யப்பட்டன. விமான ஓடுபாதைகள் நிர்மாணிக்கப்பட்டன. சாலைகள் குறுக்கும் நெடுக்கும் நாட்டை இணைத்தன.

இல்லிடம், இல்லிடம், இல்லிடம். மக்களுக்கு இல்லிடம் அத்தியாவசிய மாக இருந்தது. அதனால், கொன்கிறீட்டானும், இரும்பாலும் அமைந்த கட்டி டங்கள் புறநகர்ப் பகுதிகளிலும் மணித்தியாலத்துக்கு மணித்தியாலம் தோன்றத் தொடங்கின. சம்மட்டியின் ஓசை, துளையிடும் கருவியின் இசை, கொன்கிறீட் கலவை இயந்திரம், ஓட்டும் கருவிகள் இஸ்ரேலில் இயங்குவதை நிறுத்தவே இல்லை.

கலைகள் வளர்ந்தன. புத்தகக் கடைகள் ஹெர்சல் வீதியையும் அலென்பி வீதியையும் நிறைத்தன ஒவ்வொரு கிபுட்சிலும், ஒவ்வொரு வீட்டிலும், ஒவ் வொரு மொசவ்விலும், புத்தக அலுமாரிகள் பத்துப் பன்னிரெண்டு மொழி களில் எழுதப்பட்ட புத்தகங்களால் நிறைந்திருந்தன. இசை வாணர், சித்திரக் கலைஞர்களும், எழுத்தாளர்களும், இந்த உற்சாகமான புதிய சமுதாயத்தை எழுத்துக்களில், சித்திரச் சிலைகளில் இசையிலும் பிரதிபலித்தனர். மெற்றுலா விலிருந்து எலாத்வரை. ஜெருசலேமிலிருந்து ரெல்அவிவ்வரை, உற்சாகமூடடும் உணர்வுகளும், மாபெரும் வளரும் ஒரே நகரம் போன்ற தோற்றமும் நிலை பெற்றன.

எனினும் வாழ்க்கை மிக கடினமாக இருந்தது. இஸ்ரேல் ஒரு செழிப் பில்லாத ஏழை நாடாக இருந்தபடியால் ஒவ்வொரு அடி முன்னேற்றமும் வியர்வை சிந்தியே பெறப்பட்டது. களைப்பூட்டும் நீண்ட வேலை நேரங்களுக்கு, குறைந்த வேதனத்துக்கு தொழிலாளர்கள் உழைத்தார்கள். வெளியே குடியேற்றங் களில் மண்ணோடு போராடிக்கொண்டிருந்தவர்கள் தாங்க முடியாத சூழ்நிலை களின் கீழ் பாடுபட்டு வந்தனர். எல்லா குடிமக்களிடமும் உள்ளே வந்து கொண்டிருக்கும் புதிய குடியேற்றக்காரர்களை தாபரிக்கும் முகமாக உச்சக் கட்ட வரி வசூலிக்கப் பட்டது. நிலத்தைக் கீறி உதிரம் சிந்தி, தங்கள் உடல் களாலும் மனங்களாலும் வெற்றிகொண்டு, இந்த சின்னஞ்சிறிய நாடு வாழவும் வளரவும் வழி சமைத்தனர்.

ஒரு தேசிய விமான சேவை செயற்படத் தொடங்கியது. ஸ்டார் ஒப் டேவிட்டை பறக்கவிட்ட வர்த்தக கப்பல்கள் உலகின் மூலை முடுக்கெங்கும் சென்று வந்தன.

நாகரிகமடைந்த உலகின் மனதைக் கவர்ந்த திடசங்கற்பத்தோடு மக்கள் வாழ்க்கையில் முன்னோக்கிச் சென்றனர். மனஉறுதியாலும் அன்பாலும் செய்யக்கூடியது என்ன என்பதை உலகுக்கு விளக்கும் ஒரு கலங்கரைவிளக்கு போல் இளைய இஸ்ரேல் நாடு எழுந்து நின்றது. இஸ்ரேலில் இருந்த எவரும் தங்கள் வாழ்நாளில் தாங்கள் அனுபவிக்கக்கூடிய வசதிகளுக்காக உழைக்கவில்லை. எல்லாம் எதிர்காலத்துக்காக, வளரும் குழந்தைகளுக்காக, வரப்போகும் குடியேற்ற வாசிகளுக்காக என்பது போல்தான் உழைத்தனர். இந்த உந்துதலின் விளைவாக திடமான இளைய ஷப்றாக்கள், தலைமுறையினர் யூதனாக பிறந்ததால் ஏற்படக்கூடிய எந்த இழிவையும் தெரிந்து கொள்ளாத தலைமுறையினராக உருவெடுத்தார்கள்.

மனித சரித்திரத்தின் இதிகாசங்களில் ஒன்றாக இஸ்ரேல் உருவெடுத்தது.

இஸ்ரேலின் முழுப்பரப்பில் அரைவாசியை நெகெவ் பாலைவனம் கொண்டிருந்தது. அதிகமான பகுதிகள் வனாந்தர பிரதேசங்கள் போலவும், சிலபகுதிகள் சந்திரனின் நிலப்பரப்பை ஒத்ததாகவும் இருந்தன இவைகள்தான் வாக்களிக்கப்பட்ட பூமியைத்தேடி மோசஸ் அலைந்து திரிந்த பாரன், சின்கவனாந்திரப் பகுதிகளாகும். முடிவற்ற கற்பார்கள், மலையிடுக்கு வழிகள், கணவாய்கள் மீது நூற்று இருபது பாகை சுட்டெரிக்கும் வெப்பம் வீசும் வெறுமையான தனிமையான இடமாக இது இருந்தது. மைலின் பின் மைலாக இருந்த கற்பார்கள் குறைந்த பட்சம் ஒரு புல்லாவது வளர்வதற்கு இடமளிக்காதவையாக இருந்தன. உயிருள்ள பிராணி எதுவும், குறைந்த பட்சம் ஒரு பிணந்தின்னிக் கழுகுகூட இங்கே செல்லவில்லை.

நெகெவ் பாலைவனம் இஸ்ரேலின் சவாலாக உருவெடுத்தது. இஸ்ரேலியர்கள் இந்த பாலைவனத்துக்குத் துணிந்து சென்றார்கள். இந்த கருணையற்ற வெப்பத்தின் கீழ் வாழ்ந்து கற்களின் மேல் தங்கள் குடியேற்றங்களைக் கட்டி எழுப்பினார்கள். மோசெஸ் செய்தது போல் அவர்களும் செய்தார்கள். வாழ்க்கை அரும்ப வழி சமைத்தார்கள்: கனிப்பொருட்களை இங்கே தேடினார்கள். சாக் கடலில் இருந்து பொட்டாஷ் எடுக்கப்பட்டது. பலயுகங்களாக மௌனமாகக் கிடந்த சாலமன் அரசரின் செப்புச் சுரங்கங்கள், திரும்பவும் பச்சைநிறத் தாதுப் பொருட்களைக் கொடுக்கச் செய்யப்பட்டன. எண்ணெய் வளம் சிறியளவில் கண்டுபிடிக்கப்பட்டது. இரும்பு தாதுப் பொருளைக் கொண்ட மலையொன்றும் கண்டுபிடிக்கப்பட்டது. நெகெவ் பாலைவனத்தில் வடகரை புகுவாயில்போல் இருந்த பிரீஷீபா, வானை முட்டும் கட்டிடங்கள் கொண்ட பரபரப்பான பாலைவனநகரமாகத் திடீரென மாறிப்போயிற்று.

அக்காபா வளை குடாவின் தென் முனையில் இருந்த எல்லாத், நெகெவ் பாலைவனத்து இடங்களிலேயே மாபெரும் நம்பிக்கையூட்டும் இடமாக விளங்கியது. விடுதலைப் போரின் இறுதியில் இஸ்ரேலிய துருப்புக்கள் இங்கு வந்தபோது

அங்கே இரண்டே இரண்டு மண் குடிசைகளே இருந்தன. எகிப்தியர்கள் அக்காபா வளைகுடாவில் விதித்திருந்த தடையை நீக்கும் பட்சத்தில் இங்கிருந்து கீழைத் தேயங்களுக்கு நேர் பயணப்பாதை ஒன்றைக் கொண்ட துறைமுகமாக்க இஸ்ரேலியர்கள் கனவு கண்டார்கள். அந்த நாளை மனதில் வைத்து ஆயத்தங்களைச் செய்யத் தொடங்கினார்கள்.

இந்த நெகெவ் பாலைவனத்தில் தான் கேனல் அரிபென் கானான் விடுதலைப் போரின் பின் தானாகச் சேவையாற்ற முன்வந்தான். பரம விரோதிகளான எகிப்து, ஜோர்தான், சவுதி அரேபியா ஆகிய மூன்று நாடுகள் சூழ்ந்திருந்த இந்த இடத்தில் ஒவ்வொரு அங்குலத்தையும் ஆராய்ந்து அறியும் பொறுப்பு அவனுக்குக் கொடுக்கப்பட்டது.

அரி தன் துருப்புக்களை, இந்த கொடுமை மிக்க கற்பலகை பார்களினூடாகவும், மனிதபயணத்துக்கு எவ்வகையிலும் தகுதியற்றதுமான உலர்ந்த ஆற்றுப்படுக்கைகளூடாகவும் நடத்திச் சென்றான். அவனது பயிற்சி கொடுக்கும் முறைகளின் கடுமை உலகின் சிலநாட்டு இராணுவங்களால் மட்டுமே பின் பற்றக்கூடியதாக இருக்கும். அதிகாரிகள் தரத்துக்கு பயிற்சி பெற்று வந்தவர்கள் எல்லோருமே, அரியின் மனிதர்களால் தாங்கக்கூடிய அளவு கடுமையான தேகாப்பியாச பயிற்சிகள் பெற அரியிடம் அனுப்பட்டனர்.

அரியுடைய நிரந்தர துருப்பினர்கள் 'நெகெவ்வின்மிருகங்கள்' என்று பெயர் சூட்டப்பட்டனர். அவர்கள் நெகெவ் பாலைவனத்தில் இருக்கும்போது அதை வெறுக்கவும், அதை பிரிந்து இருக்கும்போது அதை நினைத்து ஏங்கவும் பழகிப்போய்விட்ட திடமான மனஓர்மம்மிக்க பாலைவன எலிகளைப் போலிருந்தார்கள். இருபது பாரசூட் பாய்ச்சல்கள், நூறு கிலோ மீட்டர் கட்டாய நடைப்பயணம், பாதை வேலைகள் கைகலப்பு யுத்தப்பயிற்சிகள் எல்லா அனுபவங்களும் சேர்ந்து நெகெவ்வின் 'மிருகங்களை, மனிதருள் மனிதராக உயர்த்தியிருந்தன. ஒரு போர் வீரனும் மற்றவனது வீரத்துக்கு சளைத்தவன் அல்லன் என்பதால் வீரச் செயல்களுக்கான பதக்கம் எதுவும் இஸ்ரேலிய இராணுவத்தால் வழங்கப்படுவதில்லை. ஆயினும் 'நெகெவ்வின் மிருகங்கள்' இன் பெயர்ப் பட்டியை அணிந்திருப்பவன் எவனும் விசேட கரிசனத்துடன் நோக்கப்பட்டனர்.

அரியினுடைய தளம் எலாத் ஆக இருந்தது. அது ஆயிரம் முன்னோடிகள் கொண்ட நகரமாக வளர்வதைக் கவனித்துக் கொண்டிருந்தான். குடிநீர் குழாய்கள் மூலம் கொண்டுவரப்பட்டு, செப்பு சுரங்கங்கள் முழு அளவுஉற்பத்திசெய்து கொண்டிருந்தன. தங்களுடைய தென்பகுதி கோட்டையான இதை பலப்படுத்தும் யூதர்களின் முயற்சியில் சிறிய பாதைகள் பெரும் சாலைகளாயின.

கேனல் அரிபென் கானானுடைய விசித்திரமான போக்குப் பற்றிகதைகள் உலாவின. தன்னுடைய கடுமையானமுகபாவத்தை மிகஅரிதாகவே மாற்றிக்கொள்ளும் அவன், எப்போதாவது சிரிப்பதாகதெரியவில்லை. அவனில் இருந்த சோகமும் ஏக்கமும், தன்னையும் தன் துருப்புக்களையும் மனித சக்திக்கு அப்பாற்பட்ட

அளவுக்கு வேலைசெய்ய விரட்டிக் கொண்டிருந்தது போல் தோன்றியது. இரண்டு வருடங்களுக்கு பாலைவனத்தை விட்டு வெளியேவர மறுத்துவிட்டான்.

★ ★ ★

இரவுத்தாக்குதல் குழுக்களை, அமைத்த பி.பி.மல்கத்துக்கு மட்டும் வழங் கப்பட்டிருந்த 'நண்பன்' என்ற அந்தஸ்து கிற்றிக்கும் வழங்கப்பட்டது. விடுத லைப்போரின் பின் கிற்றி குடியேற்ற வேலைகளில் மூழ்கிப்போய் விரைவிலேயே சியோன் குடியமர்த்தல் கழகத்தின், பிரதான பிரச்சினை தீர்க்கும் ஆளாக மாறிப் போனாள்.

1949 தைமாதம் 'மந்திரக்கம்பளம்' ஆரம்பமானபோது கஷீட் முகாமின் குழந்தைகள் பிரிவின் மருத்துவவசதிகளை ஒழுங்குபண்ண ஏடன் செல்லும்படி கிற்றிகேட்கப்பட்டாள். இந்த வேலையில்தான் மிகத் திறமைசாலி என்று கிற்றி நிரூபித்தாள். குழப்பங்களைத் தீர்த்து அங்கே ஒழுங்கை நிலைநாட்டினாள். கட்டளைகள் இடும்போது கடுமையானவளாகவும், யேமெனிலிருந்து நடந்து வந்திருந்த இளம்பிள்ளைகளைக் கவனிக்கும்போது கருணையுள்ளவளாகவும் நடந்து கொண்டாள். சிலமாதங்கள் போவதற்கிடையில் சியோன் குடியமர்தல் கழகத்தின் முக்கிய அதிகாரியாக வந்துவிட்டாள்.

ஏடெனிலிருந்து மந்திரகம்பள நடவடிக்கைக்காக பாக்தாத் சென்றாள். இந்தத்திட்டம் யேமெனியரை விமான மூலம் அகற்றும் திட்டத்தைப்போல் இருமடங்காக இருந்தது. ஈராக்கில் நிலைமைகள் கட்டுப்பாட்டுக்குள் வந்ததும் கசபிளங்காவின் மெல்லாக்களிலிருந்து இஸ்ரேல் நோக்கிப் போவதற்காக பத்தா யிரக்கணக்கான யூதர்கள், வந்து குவிந்திருந்த மொராக்கேபவுக்கு விரைந்து சென் றாள்.

வெளியேற்ற அலைகள் தோன்றத் தோன்ற இடத்துக்கிடம் சென்று கொண்டிருந்தாள். ஐரோப்பிய இடம் பெயர்ந்தோர் முகாம்களில் தோன்றும் இடையூறுகளை நீக்க அவசர பயணங்கள் பலவற்றை மேற் கொண்டதோடு' ஆளணியையும், அத்தியாவசிய பொருட்களையும் பெற ஐரோப்பா எங்கும் சல்லடை போட்டுத் தேடினாள். இந்தக்குடியேற்ற வெள்ளத்தின் உச்சக்கட்டம் தாண்டி இவைகுறையத் தொடங்கியதும், கிற்றி ஜெருசலேமுக்கு மீள அழைக்கப் பட்டு சியோன் குடியேற்றல் கழகத்தால் இளைஞர் அலியாவில் ஒரு அதிகாரி யாக இணைக்கப்பட்டாள்.

இளம் பிள்ளைகளை உள்ளே கொண்டுவர உதவிய அவள், இப்போதுஅவர் களை சிக்கலான இஸ்ரேலியசமுதாயத்தினுள் இரண்டற கலக்கப்பண்ணும் வேலையில் இறங்கினாள். கான்டப்னா போன்ற கிராமங்கள்தான் இதற்கு தீர்வாக இருந்தன. ஆனால் வந்துசேரும் தொகையினருக்கு இருந்தவை போத வில்லை. வயது முதிர்ந்தவர்கள் இஸ்ரேலிய இராணுவத்தால் கல்வி கற்பிக் கப்பட்டார்கள். இந்தக் கல்வியானது இவர்களை சமூகத்தினுள் இரண்டறக்கலக் கப்பண்ணுவதில், பெரும் தனிக் கருவியாகச் செற்பட்டது. மற்றய விஷயங்க ளோடு ஒவ்வொரு புதிய போர்வீரனும் ஹீப்ரூவை எழுதவும் வாசிக்கவும் கற்பிக் கப்பட்டான்.

இக்காலப்பகுதியின்போது கிற்றிபிறமென்ற் சரளமாக ஹீப்ரூவை பேசக் கூடியவளாக இருந்தாள். ஒரு விமானம் நிறைந்த ஷயரோகியான பிள்ளை களோடும் டொஸ்ரர் ஜே மக்வீலியம்ஸ்சுடனும் விமானத்தில் பறந்து செல்வ திலோ, எல்லைப்புற கிபுட்சுகளுக்கு விஜயம் செய்வதிலோ வெகு இயல்பாக ஈடு பட்டாள். அவளது 'பிள்ளைகள்' இருந்த நூற்றுக்கு மேற்பட்ட இடங்களில் 'ஷலோம்கிவெறெற் கிற்றி' என்பது ஒரு விருதுவாக்கியம் போல் ஆகியது.

இந்தச் சமயத்தில்தான் ஒரே நேரத்தில் இதயத்துக்கு உற்சாகமூட்டுவதும், மனதை உடைப்பதுமான நிகழ்ச்சி சம்பவித்தது. முன்புதான் சுான்டப்பினாவில் பராமரித்து, வளர்ந்து, மணம்புரிந்து வேறு குடியேற்றங்களுக்குச் சென்ற பிள்ளை களின் குழந்தைகளை இப்போ காணத் தொடங்கியிருந்தாள். சைபிரஸ் முகாமி லும் எக்ஸோடசிலும் அவளுடைய குழந்தைகளாக இருந்த இவர்களில் சிலர் இப்போ தங்கள் சொந்தக் குழந்தைகளைப் பெற்றுக் கொண்டிருந்தார்கள். இளைஞர் அலியா வளர்ந்து எந்த அவசரகால நிலையையும் கையாளக்கூடிய நிலைக்கு வருவதை அவதானித்துக் கொண்டே வந்திருந்தாள். அநுபவமற்ற நிலையில் துன்பந்தரும் முதல் பரீட்சார்த்த முயற்சியின் நிலையிலிருந்து, சீராகத் தொழிற்படும் அமைப்பாக அவர்கள் இயங்கிக் கொண்டிருந்த நிலைவரை, நிர் வாக இயந்திரத்தை வடிவமைத்து, ஆட்களையும் பயிற்றியிருந்தாள். தன்னு டைய வேலை இங்கே முற்றுப் பெற்றுவிட்டதென்பதை திடீரென அவள் உணர்ந்து கொண்டபோது அவள் இதயம் களைத்துப் போயிற்று. கரேனுக்கோ, இஸ்ரே லுக்கோ தான் இனிமேல் தேவையில்லை ஆனதால் நிரந்தரமாகவே தான் அங்கிருந்து போய்விட வேண்டும் என முடிவு செய்து கொண்டாள்.

o

அத்தியாயம் மூன்று

பராக் பென்கானான் தன் எண்ப தாவது பராயத்தை அடைந்தார். அவர் பகிரங்க வாழ்க்கையிலிருந்து ஒய்வு பெற்று, யாட் எல்லின் தன் பண்ணை யைக் கவனிப்பதில் திருப்திப் பட்டுக் கொண்டிருந்தார். அவர் அரை நூற் றாண்டு காலம் விரும்பியிருந்ததும் அது தான். இந்த முதிர்ந்த வயதில்கூடப் பராக் பலம் மிகுந்த மனிதராக விளங் கியதோடு, மனத்தளவில் உஷார் கொண் டவராகவும், ஒருநாள் முழுவதும் வயலில் வேலை செய்யக்கூடிய திடகாத்திரத் துடனும் இருந்தார். அவரது நீண்ட தாடி கிட்டத்தட்ட முழுவதும் வெண்மை யாகி விட்டாலும் ஆங்காங்கே பழைய தீக்கொழுந்து போன்ற தாடியின் சுவடு களும் இருக்கத்தான் செய்தன. இன்னமும் அவரது கைகள் உருக்குப் போன்ற உறுதியைக் கொண்டிருந்தன. விடுதலைப் போரின் பின் தொடர்ந்த வருடங்கள் அவருக்கு நிறைந்த மனத்திருப்தியைக் கொண்டு வந்தன. இறுதியாக இப்போது தான் சாராவையும் தன்னையும் கவனிக்க நேரம் கிடைத்திருந்தது.

எப்படியாயினும் அவரது மனமகிழ்ச்சி, அரியினுடையவும் ஜோர்தானா வுடையவும் துன்பங்களினால் குறைபாடுடையதாகவே இருந்தது. டேவிட் பென் அமியின் மரணம் விளைவித்த சோகத்திலிருந்து ஜோர்தானாவால் மீளவே முடிய வில்லை. அமைதியற்றவளாகவும், மூர்க்கமானவளாகவும் இருந்தாள். சிலகாலம் அவள் பிரான்சில் பயணம் செய்ததோடு, கசப்பில் முடிவடைந்த சில திருப்தியளிக் காத உறவுகளையும் ஏற்படுத்திக் கொண்டிருந்தாள். கடைசியாக அவள் டேவிட் டின் நகரமான ஜெருசலேமுக்குத் திரும்பி பல்கலைக்கழகத்துக்கு திரும்பிச் சென் றாள். ஆயினும் அவளை ஒரு நிரந்தரமான வெறுமை சூழ்ந்திருந்தது.

அரி தன்னைத்தானே நெகெவ்வுக்கு நாடு கடத்திக் கொண்டிருந்தான். அரியின் அஞ்ஞாதவாசத்துக்கான காரணம் பராக்குக்குத் தெரிந்திருந்தாலும், தன் மகனைத் தேற்ற அவரால் முடியவில்லை.

தனது எண்பத்தைந்தாவது பிறந்த நாளுக்குப் பிறகு பராக்கிற்கு வயிற்றில் வலி ஏற்படத் தொடங்கியது. பலவாரங்களுக்கு அதைப்பற்றி ஒருவருக்கும் சொல்லவில்லை. அதைப்பற்றி நினைத்துக் கொண்டிருக்கும் போதே வலிகளும் வேதனைகளும் மேலும் ஏற்பட்டன. அதைத் தொடர்ந்து ஏற்பட்ட உபாதை தரும் இருமலைச் சாராவிடமிருந்து மறைக்க முடியவில்லை. ஒரு டாக்டரிடம் செல்லும்படி அவள் வற்புறுத்தினாலும், கடுமையாக ஒன்றுமில்லை என்று சொல்லி அவர் மறுத்து விட்டார். டாக்டரிடம் போவதாக உறுதியளித்த பல சந்தர்ப்பங்களில் கூட ஏதாவது காரணங்களைக் கூறிப் போவதைப் பின்போட்டு விடுவார்.

பராக்கிற்குப் பென்கூரியனிடமிருந்து அழைப்பு ஒன்று வந்தது. மூன்றாவது சுதந்திரநாள் கொண்டாட்டங்களை, அணிவகுப்புக்களைப் பார்வையிடும் விசேட மேடைமீது அமர்ந்து பார்வையிட அவரும் சாராவும் ஹைபாவுக்கு வரமுடியுமா என்று பென்கூரியன் கேட்டார். இது அந்த வயோதிபருக்கு மட்டும் பிரத்தியேகமாக அளிக்கப்பட்டிருந்த கௌரவமாகும். அவரும் வருவதாகச் சொன்னார். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, ஒரு முழுப் பரிசோதனையைச் செய்ய ஒத்துக்கொள்ளும்படி சாரா வற்புறுத்தினாள். அவர்கள் கொண்டாட்டங்களுக்கு ஐந்து நாட்கள் முன்பதாகவே ஹைபாவுக்குப் புறப்பட்டார்கள். பராக் உடம்பை முழுசான ஒரு பரிசோதனைக்கு உற்படுத்தும் முகமாக வைத்தியசாலைக்குச் சென்றார். சுதந்திரத் திருநாளுக்கு முதல் நாளிரவு வரை வைத்தியசாலையிலிருந்தார்.

''டாக்டர் என்ன சொன்னார்கள்?'' சாரா கேட்டாள். பராக் சிரித்தார். ''செமியாக்குணமும், வயது போய்விட்டதுமாம். சில மாத்திரைகளை அவர்கள் எனக்குத் தந்தார்கள்'' என்றார்.

சாரா குறுவித்துறுவிக் கேட்க ஆரம்பித்தாள். ''ஏய் கிழவி நாம் இங்கு வந்தது சுதந்திரத் திருநாளைக் கொண்டாடத்தான்.''

முழுநாளும் சனத்திரள் ஹைபாவுக்குள் வந்தபடி இருந்தது. அவர்கள் இலவசப்பயணங்களிலும், வாகனங்களிலும், விமானத்திலும், புகையிரதத்திலும் வந்தார்கள். நகரம் மனிதக் கூட்டத்தினால் நிறையத் தொடங்கியது. நாள் முழுவதும் பராக் இருந்த ஹொட்டேலுக்கு அவருக்குத் தங்கள் மரியாதையைச் செலுத்த ஆட்கள் வந்தபடி இருந்தார்கள். மாலையில் தீவட்டிகளை ஏந்திய இளைஞர் குழாம்களின் அணிவகுப்போடு, தின விழாக்கள் தொடங்கி வைக்கப்பட்டன. ஹார்ஹா கார்மேலில் இருந்த, மாநகரசபை மண்டபத்தின் முன்னால் இருந்த புற்றரையின் முன் இருந்த விசேட மேடை முன் மரியாதை செலுத்தியபடி அணிவகுத்துச் சென்றார்கள். வழமையான சொற்பொழிவுகளின் பின் கார்மேல் மலையில் வாண வேடிக்கைகள் இடம் பெற்றன.

ஹெரிசல் வீதி நெடுசவும் பத்தாயிரக்கணக்கில் மக்கள் கூட்டம் நிறைந்து வழிந்தது. ஒலிபெருக்கிகள் இசையை ஒலிபரப்பவும், ஒவ்வொரு சில யார்களுக்கும் ஹோரா நடன வளையங்கள் தோன்றலாயின. சுழலும் கால்களும், இசையும், நிறங்களும் கலந்து ஹெரிசல் வீதி ஒரே அட்டகாசமாக இருந்தது. பாராக்கும் சாராவும் ஹோரா வளையங்களில் இணைந்து ஆரவாரமான கைதட்டல்களுக்கு நடுவே நடனமாடினார்கள்.

'நெருப்பின் சகோதரர்கள்' - அதாவது கலவர நாட்களில் பால்மாக்கிலிருந்த போராளிகள் ஒன்று கூடியிருந்த தொழில் நுட்ப கலாசாலைக்குச் சாராவும், பராக்பென்கானாவும் கௌரவ விருந்தினர்களாக அழைக்கப்பட்டார்கள். ஒரு பெரிய பாசறைத்தீ வளர்க்கப்பட்டது. யேமெனியர்கள் ஆடினார்கள், ட்ரூஸ் அரபுக்கள் ஆடினார்கள். ஒரு ஆட்டுக்குட்டி நெருப்பில் வாட்டப்பட்டது. அராபிய கோப்பி தயாரிக்கப்பட்டது. பாடகர் குழுவொன்று, கீழைத்தேய வேதாகம பாடல்களைப் பாடியது. பல்கலைக்கழக வளாகம் எங்கிலும் இளைஞர்

களும், யுவதிகளும் ஒருவரின் கரங்களில் ஒருவர் துயின்றுகொண்டிருந்தார்கள். 'தெருப்பின் சகோதரர்களோ' விடியும் வரை ஆடிப்பாடிக் கொண்டிருந்தார்கள்.

சாராவும் பராக்கும் சிறிது ஆசுவாசப்படுத்திக் கொள்வதற்காக தங்கள் ஹொட்டேலுக்கு திரும்பி வந்தார்கள். விடியப்போது கூட சகல தெருக்களிலும் நடனங்கள் நடந்து கொண்டிருந்தன. சிறிது பகலானபோது அவர்கள் இருவரும் ஒரு திறந்த காரில், மாபெரும் கைதட்டல் ஓசைகளின் நடுவே அணிவகுப்பு செல்லவிருந்த பாதையில் விசேட மேடைக்கு சென்று ஜனாதிபதிக்கு அருகாமையில் நின்று கொண்டனர்.

புராதன யூத குடிமக்களைப் போலவே பதாதைகளை சுமந்து கொண்டு புதிய இஸ்ரேல் அணிவகுத்து நடந்தது. இப்போது பெருமையும், வீராவேசமும் கொண்ட போர்வீரர்களாகிவிட்ட யேமெனியர்கள், நிடகாத்திரமான உயர்ந்த ஷ்ப்ரா வாலிபர்களும்யுவதிகளும்,தென்ஆபிரிக்காவிலும் அமெரிக்காவிலும்இருந்து வந்திருந்தவிமானிகள். உலகின் ஒவ்வொரு மூலையிலும் இருந்து வந்திருந்த போர் வீரர்கள் அணிவகுத்து நடந்தனர். சிறப்பு பாரசூட் படையணி தங்கள் சிவப்பு தலையணியிலும் எல்லைக்காவல் படையணி பச்சைத் தலையணியிலும் அணிவகுத்துச் சென்றனர். தாங்கிகள் உறுமிக்கொண்டே கடந்து சென்றன. தலைக்கு மேல் விமானங்கள் பேரிரைச்சலோடு அணிவகுப்பில் பறந்து சென்றன. இப்போ ஆரவாரம் உச்சக்கட்டத்தை அடையவும், தாடிவளர்த்திருந்த, தோலால் செய்யப்பட்டது போன்ற உருவங்கொண்ட 'நெகெவ்வின் மிருகங்கள்' தங்கள் கொமாண்டரின் தந்தைக்கு மரியாதை செய்தபடி அணிவகுத்து நடந்து சென்ற போது பராக்கின் இதயம் ஒருமுறை துடிப்பதை மறந்து மீண்டும் துடித்தது.

அணிவகுப்பின் பின் மேலும் சொற்பொழிவுகளும், விருந்துகளும், கொண்டாட்டங்களும் நடைபெற்றன. இரண்டு நாட்களுக்கு பிறகு சாராவும், பராக்கும் யாட்எல்லுக்கு புறப்படும்போதும் வீதிகளில் நடனக்காரர்கள் நடனமாடிக்கொண்டேயிருந்தனர்.

யாட்எல்லில் தங்கள் கொட்டகைக்கு போய் சேர்ந்த மறுகணமே பராக் நீண்ட நேரம் பயங்கரமாக இருமிக்கக்கினார். கொண்டாட்டங்கள் முடியும் வரை இருமலை தன்மனோபலம் கொண்டு அடக்கி வைத்திருந்தது போல் தோன்றிற்று. தனது பெரும் இருக்கையினுள் களைத்துப் போய் சரிந்த அவருக்கு சாரா சில மருந்துகளைக் கொண்டு வந்து கொடுத்தாள். ''அங்கு உற்சாகம் கரை புரண்டு ஓடும் அதை உங்களால் தாங்கமுடியாது என்று ஏற்கனவே சொன்னேனே, வயதுக்கு தக்க படி இனியாவது நடக்கப்பாருங்கள்'' என்று புத்தி கூறினாள் சாரா.

பராக்குடைய மனமோ இன்னமும், அந்த தோல்வெயிலில் பொன்னிறம் பெற்று, கடினமான உடலமைப்புடன் அணிவகுப்பில் சென்ற இளைஞர்கள் மேலேயே இருந்தது. ''இஸ்ரவேலின் இராணுவம்...'' முணுமுணுத்தார் தனக்குள்.

''நான் தேநீர் தயாரித்துக் கொண்டு வருகிறேன்''. அன்புடன் அவர் தலைமயிரை குழப்பிவிட்டபடி சொன்னாள் சாரா. பராக் அவர் கையைப்

பிடித்து இழுத்து தன் மடிமேல் அமர்த்திக் கொண்டார். அவள் தனது தலையை அவர் தோள்களில் சாய்த்தபடி, விளக்கம் கேட்கும் பாணியில் அவர் முகத்தை நிமிர்ந்து பார்த்தாள். அவரோ தன் கண்களை வேறுபக்கம் திருப்பிக் கொண்டார். ''கொண்டாட்டங்கள் எல்லாம் முடிந்து விட்டதால் இப்போது டாக்டர் உண்மையில் உங்களுக்கு என்ன சொன்னார் என்று எனக்குச் சொல்லுங்கள்''.

''உனக்கு என்னால் எப்போதுமே சரியாகப் பொய்கூற முடிவதில்லை.''

''தான் பதறிப்போய்விடமாட்டேன்... சத்தியமாய் இப்போது சொல்லுங்கள்?''

''எனக்கு நேரம் வந்துவிட்டது என்பதை புரிந்து கொள். அதிக காலமாகவே நான் இதை அறிந்திருந்தேன், என்று நினைக்கிறேன்'' என்றார் பராக்.

ஒரு சிறிய கதறல் மட்டும் சாராவின் வாயிலிருந்து வெளியேறிது. தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு உதடுகளை கடித்துக் கொண்டாள்.

பராக் மெதுவாக தலையை அசைத்தார், ''அரிக்கும் ஜோர்தானாவுக்கும் சொல்லியனுப்புவது நல்லது!''

''புற்று நோயா?''

''ஆமாம்''.

''இன்னும் எவ்வளவு காலம்?''

''இன்னும் சில மாதங்கள்... இனிமையான சில மாதங்கள்''

ஒரு இராட்சதன் என்று தவிர பராக்கை வேறு எப்படியும் நினைத்துப் பார்க்க முடியாது. ஆனால் இப்போது வாரங்கள் செல்லச் செல்ல அவரது வயது பயங்கரமாக தோற்றத் தொடங்கியது. அவரது திடகாத்திரமான உடலமைப்பிலிருந்து சதைகள் வடிந்துபோய், வயதுக் கேற்றபடி முதுகு வளைந்து அவர் நிறமும் வெளிறிப் போயிருந்தது. அவர் மிகவும் வேதனைக்குட்பட்டிருந்தாலும் அதை மறைத்து வைத்து வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட மறுத்தார்.

அவருடைய கட்டில், மன்னனுடைய வயல்களையும் லெபனானுக்கு அருகேயிருந்த மலைப்பிரதேசங்களையும் பார்த்தபடி நாளைக் கழிக்கத்தக்கதாக ஒரு ஜன்னல் அருகில் ஒழுங்கு பண்ணப்பட்டிருந்தது. அரி வந்து சேர்ந்தபோது பராக் இந்த இடத்தில் இருந்தபடி, அபுயேஷா முன்பு இருந்து தற்போது இல்லாமல் போய்விட்ட இடத்தை துக்கத்துடன் பார்த்துக் கொண்டிருக்கும் போது கண்டான். ''ஷலோம் அப்பா'' தகப்பனாரை கட்டியணைத்தபடியே ''என்னால் முடிந்தளவு விரைவாக வந்தேன்'' என்றான் அரி.

''ஷலோம் அரி... என்னை.. உன்னை பார்க்கவிடு மகனே...எவ்வளவு காலம் கண்டு இரண்டு வருடங்களுக்கு மேலேயே இருக்கும். கொண்டாட்டங்களின் போது உன்னுடைய துருப்புக்களுடன் வருவாய் என்று எதிர்பார்த்தேன்''.

''எகிப்தியர்கள் நிற்சானாவில் வாலாட்டிக் கொண்டிருந்தார்கள். பதிலடி கொடுக்க வேண்டியிருந்தது''

பராக் தன் மகனை கவனமாக ஆராய்ந்தார். நெகெவ்வின் வெப்பத்தில் வெண்கலச்சிலையைப் போல் மாறியிருந்தான். ஒரு சிங்கத்தின் பலத்தைக் கொண்டவன் போல் தோன்றினான். ''நெகெவ் உனக்கு ஒத்துப்போகிறது போலிருக்கிறது''

''அம்மா ஏதோ விசர்க் கதைகள் எல்லாம் கூறுகின்றா? உங்களுக்கு என்ன? ''

''என்னை உற்சாகப்படுத்த முயலாதே மகனே. மகிமையோடு கண்ணை மூடக்கூடிய அளவுக்கு நான் புராதனமான மனிதன்தான். ''

அரி சிறிது பிராந்தியை ஊற்றிவிட்டு சிகரெட் ஒன்றை பற்றவைத்துக் கொண்டான். பராக் தொடர்ந்தும் மகனை ஆராய்ந்து கொண்டிருந்தார். கிழவரின் கண்களில் நீர் மல்கியது.

''உன்னையும் ஜோர்தானாவையும் பற்றிய கவலையை தவிர இந்த நாட்களில் நான் மகிழ்ச்சியாகத்தான் இருக்கிறேன். உங்கள் இருவரையும் மனநிறைவோடு விட்டுப் போகிறேன் என்று தெரிந்தால் நிம்மதியாக போவேன்''.

அரி தன் பிராந்தியை சிறிது சிறிதாக அருந்திக் கொண்டே வேறு பக்கம் பார்த்தான். பராக் அரியின் கையை எடுத்துக் கொண்டார்.

''நீ பாலைவனத்துக்கு வெளியே வர முடிவு செய்வாயானால் ஒரு நாளைக்கு இஸ்ரேலிய இராணுவத்தின் படைத் தளபதியாக வரக்கூடியவன் என்று எனக்கு சொன்னார்கள்.''

''நெகெவ்வில் ஏராளமான வேலையிருக்கிறது அப்பா. யாராவது ஒரு ஆள் அதனைச் செய்யத்தான் வேண்டும். எல்லையைக் கடந்து எங்கள் குடியேற்றங்களைத் தாக்குவதற்காக அரபு நாடோடிகளைக் கொண்ட கொலைக்காரக் கும்பல்களை எகிப்தியர்கள் உருவாக்குகின்றார்கள்.

''நீ மகிழ்ச்சியாய் இல்லை மகனே''

''மகிழ்ச்சியா அப்பா? என்னை உங்களுக்குத் தெரியும். புதிய குடியேற்றக்காரர்களைப்போல் மகிழ்ச்சியை வெளியே தெரியும்படி காட்டிக்கொண்டு திரிபவன் அல்ல நான்''.

''நீ ஏன் உன்னையே இருவருடங்களாக என்னிடமிருந்தும் அம்மாவிடமிருந்தும் பிரித்தே வைத்திருக்கிறாய்?''

''நான் அந்த விஷயத்திற்காக மனம் வருந்துகிறேன்.''

உனக்குத் தெரியுமோ என்னவோ, இந்த கடந்த இரண்டு வருடங்களிலும் வெறுமனே உட்கார்ந்து யோசிக்கக்கூடிய, ஆடம்பர வசதியாக, நேரம் கிடைத்திருக்கிறது. தனிமையில் உட்கார்ந்து சிந்திப்பது மிகவும் உன்னதமானதொரு காரியம். இந்த கடைசி சில வாரங்களில் இன்னும் அதிக நேரம் கிடைத்திருந்தது. எல்லாவற்றையும் பற்றி சிந்தித்தேன். நான் உங்களுக்கு நல்லதொரு தகப்பனாக இருக்க வில்லை, என்று எனக்குத் தெரியும். ஜோர்தானாவையும் உன்னையும் பொறுத்த வரை என் கடமையில் தவறிவிட்டேன்.''

''அப்பா இப்படியான ஒன்றுமில்லாத கதைகளை கதைக்கவேண்டாம். என்னைப் பற்றி அதிகம் கவலைப்படாதீர்கள்.''

''இல்லை, நான் சொல்வதில் உண்மை இருக்கிறது. இப்போ அது எனக்கு மிகத் தெளிவாகப் புரிவது போலிருக்கிறது. நீ, ஜோர்தானா, நான் . உங்களுக்காகவும் சாராவுக்காகவும் என்னால் தரமுடிந்த சிறிய அளவு நேரம் .. குடும்பம் என்று பார்த்தால் இது பிழை.''

அப்பா தயவுசெய்து வருத்தப்படாதீர்கள் நான் கொண்டிருக்கும் அன்பையும் புரிந்துணர்வையும் எந்தவொரு மகனும் கொண்டிருக்கமாட்டான். உண்மையில் எல்லா தகப்பன்மாருமே தங்கள் தங்கள் பிள்ளைகளுக்கு இன்னும் அதிகம் செய்திருக்கலாம், என்று நினைப்பார்கள் போலிருக்கிறது.''

பராக் இல்லையென்பது போல் தலையை ஆட்டினார். ''நீ ஒரு சிறுவனாயிருக்கும் போதே பெரிய மனிதனைப் போல் உழைத்தாய். நீ பன்னிரெண்டு வயதாக இருக்கும் போதே என்னோடு, தோளோடு தோள் நின்று இந்த சதுப்பு நிலங்களை மீட்கப் பாடுபட்டாய். உன்னுடைய கையில் என்றைக்குச் சாட்டையை வைத்தேனோ அன்றையிலிருந்து உனக்கு நான் தேவைப்படவில்லை.''

''நான் இதைப்பற்றி மேலும் கேட்க விரும்பவில்லை. எதிர்காலத்துக்கு எங்களால் செய்யக் கூடியதை இந்த நாட்டுக்குச் செய்வதற்குத்தான் நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இதுதான் நீங்கள் வாழ்ந்த வாழ்க்கையும், இப்போ நான் வாழ்ந்து கொண்டிருக்கும் வாழ்க்கையும். உங்களை நீங்களே வருத்திக் கொள்ள நான் அனுமதிக்க மாட்டேன். எங்களுக்கு வேறு வழியிருக்காத தால்தான் இந்த மாதிரி வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.''

எனக்கு நானே சொல்லிக் கொள்ள முயல்வதும் அதுதான். அரி, நான் வேறு என்னத்தைச் சொல்ல? ஒரு பூத சேரி பற்றி? தடுப்பு முகாம்கள் பற்றி? கருவழிக்கும் போறணை பற்றி? இப்போ வாழும் இந்த வாழ்க்கைக்கு ஈடாக எதையும் கொடுக்கலாம் என்று நான் கூறுவேன். ஆயினும் எங்களுக்குக் கிடைத்திருக்கும் இச் சுதந்திரம்..... அதற்கான விலை மிகவும் உயர்ந்ததுதான். எவ்வளவு உக்கிரமாக நாங்கள் இதை நேசிக்கிறோமென்றால், அதனைக் காப்பாற்ற நாங்கள் பல டார்சான்களை (வீரதீரச் செயல் புரியும் காட்டில் மிருகங்களோடு வாழும் கற்பனை கதாநாயகன்) உருவாக்கி விட்டிருக்கிறோம். இரத்தவாறான

வாழ்க்கையையும், கடவுக்கு முதுகைக் காட்டிக் கொண்டு போராட வேண்டிய பாரம்பரியத்தையும்தான் எங்களால் உங்களுக்குத் தர முடிந்திருக்கிறது.''

''இஸ்ரேலுக்காகக் கொடுக்கப்படும் எந்த விலையும் பெரிதாக இருக்க மாட்டாது'' என்றான் அரி.

''இல்லை அது உயர்வு போல்தான் தெரிகிறது ..... என் மகனின் கண்களில் துக்கத்தின் சாயையைக் காணும்போது''

''ஜோர்தானிடமிருந்து டேவிட் பென்அமியை நீங்கள் பிரிக்கவில்லை. யூதனாகப் பிறந்ததற்காகக் கொடுக்கப்பட்ட விலை அது. உங்கள் தந்தை இறந்தது போல், சேரியில் வன்முறை கும்பலால்கொலையுண்டது போலல்லாமல் ஒருவன் தன் நாட்டுக்காக உயிரை விடுவது மேலல்லவா?''

''ஆனாலும் என் மகனின் கண்ணில் தெரியும் துக்கத்தின் சாயைக்குப் பொறுப்பு நான்தான்.'' பராக் தனது உதடுகளை ஈரமாக்கி விட்டு உமிழ் நீரை விழுங்கினார். தொடர்ந்து ஜோர்தானா, கிற்றி பிறைமென்றின் அருமை நண்பியாக மாறிவிட்டாள்.

கிற்றியுடைய பெயர் உச்சரிக்கப்பட்டதும் அரி சிறிது அதிர்ந்து போனான்.

''அவள் இப்போ ஒரு புனிதவதியாக விட்டாள். ஹீலேக்கு வந்தால் எங்களை வந்து பார்க்காமல் போகமாட்டாள். நீ போய் அவளைச் சந்திக்காதது சரியான பிழை'' என்றார்.

''அப்பா..... நான்... ''

''அந்தப் பெண்ணின் கண்ணில் உனக்காகப் பெருகும் ஆவலை என்னால் கண்டு கொள்ள முடியாது என்று நினைக்கிறாயா? ஒரு மனிதன் அன்பைக் கொடுப்பது இப்படித்தானா?..... பாலைவனத்தில் ஒளித்திருந்து ..... ஆமாம் அரி எல்லாவற்றையும் இப்பவே வெளிப்படையாகக் கதைத்து விடுவோம். நீ அவளிடமிருந்து தப்பி ஓடி உன்னையே மறைத்துக் கொண்டாய். அதை ஒத்துக் கொள்..... என்னிடம் ஒத்துக் கொள்... உனக்கு நீயே சொல்லிக் கொள்''.

அரி தான் அமர்ந்திருந்த கட்டிலின் விளிம்பிலிருந்து எழுந்து அப்பால் நடந்து விட்டான்.

அந்தப் பெண்ணிடம் போய் உன் இதயம் அவளுக்காக ஏங்குறது என்று சொல்ல முடியாமல் உன் மனதை என்ன தடுத்துக் கொண்டிருக்கிறது?

அரி தன் தகப்பனாரின் பார்வை முதுகுப்பக்கம் சுட்டெரிப்பதை உணர்ந்தான். கண்கள் தாழ்ந்திருக்க அவன் மிகமெதுவாக திரும்பினான்.

''தான் தேவையாக இருந்தால் நான் கெஞ்சிக்கொண்டு தவழ்ந்து வரவேண்டியிருக்கும் என்று அவள் எனக்கு ஒரு முறை சொன்னாள்.'' என்றான், அரி

''அப்படியானால் நீ தவழ்ந்து போய் கெஞ்சு''

''என்னால் அப்படிக் கெஞ்ச முடியாது . கெஞ்சுவது எப்படியென்று எனக்குத் தெரியாது. உங்களுக்குப் புரியவில்லையா தந்தையே ..அவள் விரும்புவது போன்ற மனிதனாக என்னால் இருக்க முடியாது.''

பராக் துன்பமாக பெருமூச்சு விட்டார். அங்குதான் நான் உனக்கு என் கடமையில் தவறிவிட்டேன். அரி, உனக்கு தெரியுமா? நான் பல லட்சக்கணக்கான தடவைகள் உன் தாயாரிடம் மண்டியிட்டு தவழ்ந்திருப்பேன். சீவிப்பதற்கு அவள் தேவை என்பதால் அப்படித் தவழ்ந்து போயிருப்பேன். என் பலம் அவள் தான். நான் கண்ணீரென்றால், தாழ்ந்து போவதென்றால் என்னவென்று தெரியாத ஒரு தலைமுறையை உருவாக்குவதில் பங்காளியாக இருந்திருக்கிறேன். அதற்காக கடவுள் என்னை மன்னிக்கட்டும்.

''அவளும் இப்படித்தான் ஒரு முறை எனக்குச் சொன்னாள்.'' முணு முணுத்தான் அரி.

''நீ மென்மையான உணர்வுகளை பலவீனமாக கருதுகிறாய். நீ கண்ணீர் சிந்துவதை அவமரியாதைப்படுத்துவதாக நினைக்கிறாய். இன்னொருவரில் தங்கியிருப்பதை பின்வாங்கி ஓடுவதற்குச் சமமாக நீயே உன்னை நம்பவைத்துக் கொண்டிருக்கிறாய். அன்பைக் கொடுக்க முடியாத அளவுக்கு நீ குருடனாக இருக்கிறாய்.''

''என்னால் செய்ய முடியாததை என்னால் செய்ய முடியாது தானே.'' உரக்கவே கூறினான் அரி.

''உனக்காக மிக வருத்தப்படுகிறேன். அரி, உனக்காகவும் வருத்தப்படுகிறேன். எனக்காகவும் வருத்தப்படுகிறேன்.''

அடுத்த நாள் காலையில் காருக்கு தந்தையை கைகளில் சுமந்து சென்ற அவன் அரைநூற்றாண்டுக்கும் மேலான காலத்துக்கு முதல் அவரும் அவர் சகோதரன் அக்கிவாவும் பலஸ்தீனத்துக்குள் வந்த அதே இடமான ரெல்ஹாய்க்கு காரை ஓட்டிச் சென்றான்.

அரபு நாடோடிக் கும்பல்களுக்கெதிராக குடியேற்றங்களை பாதுகாப்பதற்காக நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஆயுதம் ஏந்தி சஞ்சரித்த முதல் யூதர்களான 'காவலர் குழுவைச்' சேர்ந்தவர்களின் கல்லறைகள் அங்கே வரிசையாக இருந்தன. இந்தக் 'காவலர் குழுவில்' ஒருவனாகத்தான் றொஸ் பின்னாவில் சாராவைத் தான் சந்தித்ததை நினைவு கூர்ந்தார் பராக்.

கல்லறைகளின் இடுகற்கள் இருவரிசையிலிருந்தன. இன்னும் பல இடங்கள் இன்னும் உயிரோடிருக்கும் 'காவலர்குழு' அங்கத்தவர்களுக்காக தயாரிக்கப்பட்டு காத்துக்கொண்டிருந்தன. எலிஜா முனையிலிருந்து அக்கிவாவின் புகழுடம்பு இந்தக் கௌரவமான இடத்துக்கு கொண்டுவரப்பட்டிருந்தது. அக்கிவாவுடைய கல்லறைக்கு அடுத்த இடம் புராக்குக்காக ஒதுக்கப்பட்டிருந்தது.

தன்நாட்டைப் பாதுகாக்கும் அரசனொருவனது குறியீடு போல் பள்ளத் தாக்கை நோக்கிக்கொண்டிருந்த சிங்கத்தின் இலையடிக்கு, கல்லறை வரிசை களை கடந்து தந்தையாரை தூக்கிச் சென்றான். சிங்கத்தின் அடியில் தளத்தில் எழுதப்பட்டிருந்த வார்த்தைகளை இருவருமாகவே வாசித்தனர்.

''தன்நாட்டுக்காய் உயிர் கொடுத்தல் உன்னதமானது'' பராக் பள்ளத் தாக்கைப் பார்த்தார். எங்கும் குடியேற்றங்களாகவே இருந்தன. ஆயிரம் குடிக் யேற்ற வாசிகளைக் கொண்ட நகரம் ஒன்று அவர்களுக்கு கீழே எழுந்து கொண்டிருந்தது. இருள் சூழும் வரை அங்கேயே தயங்கித் தயங்கி நின்ற தந் தையும் மகனும் விளக்குகள் ஒவ்வொன்றாக ஏற்றப்பட்டு, பல்லாயிரக்கணக் கான விளக்குகளின் ஒளிக்கதிர்கள் சேர்ந்து பள்ளத்தாக்கை சூழவும், தன்னம் பிக்கையால் ஆன கோட்டை ஒன்றை அமைப்பது போன்ற தோற்றத்தை ரசித் துக்கொண்டிருந்தார்கள். இறைவனின் கரம் என்று பொருள் கொண்ட யாட் எல் அவைகளுக்கு மத்தியில் நின்று கொண்டிருந்தது. அதற்கு சிறிது தொலை வில் அமைந்திருந்த கோணென் இல் கஷ்டங்களைப் பாராமல் உழைக்கக்கூடிய புதிய இளைஞர் குழுவொன்று குடியேற்றமொன்றை அமைக்கும் ஆரம்பவேலை களில் ஈடுபட்டுக்கொண்டிருந்தது. அவர்கள் சிறிய எல்லையிலிருந்து சில யார்கள் தூரத்தில் கூடாரங்கள் அமைத்து தங்கியிருந்தார்கள். கோணென்னிலும் விளக் குகள் சுடர்விட்டன.

''உயிர் கொடுப்பதற்காக ஒரு நாடு இருப்பதும் உன்னதமானது தான்'' என்றார் பராக்.

அரி தந்தையாரைச் சரிவில் சுமந்து சென்றான்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு பராக் தன் தூக்கத்திலேயே மீளாதுயிலில் ஆழ்ந்துபோக, திரும்பவும் ரெல்ஹாய் எடுத்துச்செல்லப்பட்டு அக்கிவாவுக்கருகில் அடக்கம் செய்யப்பட்டார்.

அத்தியாயம் நான்கு

விடுதலைப்போரின் இறுதிக் கட்டங்களில், டொவ் லன்டவ்இஸ்ரேலிய இராணுவத்தில் இணைந்து, எகிப்தியருக்கு எதிரான ''பத்துக் கொள்ளை நோய்கள்'' நடவடிக்கையில் பங்கு கொண்டான். சுவெய்டானை கைப்பற்றிய தாக்குதலில் அவன் காட்டிய வீரத்துக்காக களப் பதவியுயர்வு வழங்கப்பட்டான். கேர்ணல் பென் கானானின் 'நெகெவ் வின் மிருகங்களில்' ஒருவனாக பல மாதங்களை செலவிட்டான். இந்த இளைஞனது திறமைகளை கவனித்த அரி மேலும் பரிசோதனைக்காக அவனை வடக்கே அனுப்பிவைத்தான். இதன் பின் நெகெவ் பாலைவனத்தை மீட்டெடுக்க திட்டமிடப்பட்டிருந்த அதிகஎதிர்பார்ப்புக் களோடு கூடிய நீர்ப்பாசனத்திட்டங்களுக்கான விசேட பயிற்சி வகுப்புகளில் கலந்து கொள்ள ஹைபா தொழில்நுட்பக் கல்லூரிக்கு செல்லும்படி அவனை இராணுவம் பணித்தது. டொவ் தான் திறமையான கல்விமான் தான் என அங்கே நிரூபித்தான்.

முன்பு தன்னைச் சூழ்ந்திருந்த இருளைக் கிழித்துக் கொண்டு வெளியே வந்திருந்தான். இப்போ நகைச்சுவை நிரம்பி வழிந்து, உற்சாகமான மனப் பான்மையோடு, கஷ்டப்படுவோருக்கு அதிக புரிந்துணர்வை காட்டுபவனாக வளர்ந்திருந்தான். மெலிந்திருந்தாலும், எளிதில் உணர்ச்சி வசப்படும் சுபாவம். கொண்ட கவர்ச்சியான இளைஞனாக உருமாறியிருந்தான் டொவ். அவனும் கரேனும் ஒருவரை ஒருவர் ஆழமாகக் காதலித்தனர்.

இந்த இளமையான உறவு, அடிக்கடி ஏற்படும் பிரிவுகள், நிச்சயமற்ற தன்மைகள், நிரந்தரமாகவே இருந்த பதற்றங்கள் ஆகியவற்றால் பாதிக்கப் பட்டு வந்தது. மண்ணும் துன்பத்தில் ஆழ்ந்திருந்தது, அவர்களும் அப்படியே இருவருக்கும் வெவ்வேறான முக்கியமான பணிகள் காத்திருந்தன. இவர்களது கதையும் இஸ்ரேலில் வழக்கமான கதைதான். அரியுடையவும் டப்னாவுடை யவும் போல், டேவிட்டுடையவும் ஜோர்தானாவுடையதையும் போல் ஒவ்வொரு முறையும் ஒருவரொருவரை காணும் போது ஆசையும், இயலாத்தன்மையும் அவர்களில் வளர்ந்து கொண்டேயிருந்தது. கரேனை பூஜித்து வந்த டொவ், இருவரிலும் கூடிய மனஉறுதியைக் கொண்டிருந்தான்.

இருபத்தொரு வயதானபோது பொறியியல் படைப்பிரிவில் கப்டனாக பணிபுரிந்து கொண்டிருந்த அவன், தனது துறையில் தலைசிறந்தவனாக வருவான் என எல்லோராலும் கருதப்பட்டான். தொழில் நுட்பக் கல்லூரியிலும், ரெஹோவட்டின் பெயிஸ்மான் ஆராய்ச்சி கழகத்திலும் கல்வி கற்பதில் தன் நேரத்தைச் செலவிட்டான்.

விடுதலைப்போரின் பின் கான்டப்னாவிலிருந்து வெளியேறிய கரேனும்இராணுவத்தில் இணைந்தாள். அங்கே தாதிகள் பயிற்சியைத் தொடர்ந்தாள். கிற்றியோடு வேலை செய்ததால் பெற்றிருந்த பெறுமதிமிக்க அனுபவத்தின் காரணமாக தன் அடிப்படை பயிற்சியை விரைவிலேயே முடித்துக் கொள்ள முடிந்தது. தாதித் தொழில் கரேனுக்கு மிக நன்றாகவே ஒத்துப்போனது. கிற்றியின் சுவட்டிலேயே தானும் என்றாவது ஒரு நாள் குழந்தைகளை சுவனிப்பதில் திறமைசாலியாக விளங்கவேண்டும் என விரும்பினாள். அவள் ஷிரோனில் ஒரு வைத்தியசாலையில் சேவைக்கமர்த்தப்பட்டாள். இது அவளுக்கு மிகவும் வசதியாக அமைந்து விட்டது. கிற்றி ஜெருசலேமில் இருக்கும்போது அவளைப் பார்க்கச் செல்லவும் அடிக்கடி ஹைபாவுக்கு சென்று டொவ்வை காணவும் முடிந்தது.

கரேன் கிளமென்ற் ஹான்சன் அழகான ஒரு யுவதி என்ற நிலையிலிருந்து அற்புதமான ஒரு பெண்ணாக உருவெடுத்தாள். அவளது இளம் வயதை அலங்கரித்து, அவள் முதிர்ச்சியடைந்த போதும் தொடர்ந்த மென்மையியல்பும் இரக்கமும் இப்போ பூரணத்துவம் பெற தொடங்கியிருந்தன. கிற்றியின் ஆழ் மனதிலே, கரேன் தன்னோடு அமெரிக்கா வரக்கூடும் என்ற எண்ணம் தோன்றும். ஆனால் அது ஒரு அவாவுள்ள நினைப்பாகத்தான் இருந்தது. யதார்த்தமான சில கணங்களில், கரேனுக்குத் தான் இனித்தேவையில்லையென புரிந்து கொள்வாள். இஸ்ரேலுக்குத் தன் கடமையை செய்து முடித்துவிட்டது போலவே கரேனுக்கும் தன் கடமையை நிறைவேற்றியிருந்தாள். கரேன் இப்போ இஸ்ரேலுக்குத்தான் உரிமையாக இருந்தாள். பிரித்தெடுக்க முடியாதபடி ஆழமாக வேருன்றியிருந்தாள். தனக்கும் கரேன் இப்போ தேவையில்லை என்றும் கிற்றி புரிந்து கொண்டிருந்தாள். அந்தப் பிள்ளையை விட்டு பிரியமுடியாதென்று முன்பு எண்ணிக் கொண்டிருந்தாள். ஆனால் அந்த வெறுமை, உணர்வுகள் பட்டினி போடப்பட்ட தன்மை, வருடக்கணக்காக சுயநலம் பாராதுதன்குழந்தைகளுக்கு ஆற்றிய அர்ப்பணிப்புள்ள சேவை மூலம் நீக்கப்பட்டிருந்தது.

கரேனை விட்டுப் பிரிந்து போகலாம் என்று தெரிந்து கொண்டதோடு. எங்காவது, எப்போதாவது இன்னொரு முறை சிரான வாழ்க்கையும் உண்மையான மகிழ்ச்சியும் தனக்காக காத்திருக்கின்றன என்று எண்ணவும் துணிவு கொண்டாள்.

கரேனையும் தன்னையும் பொறுத்தவரை இஸ்ரேலை விட்டுப் போவது பற்றி எவ்வித பயமும் கொள்ளவில்லை. அவள் பயமெல்லாம் இஸ்ரேலைப் பற்றியதாகவே இருந்தது.

அரபுக்கள் இஸ்ரேலின் எல்லைகளிலே தங்கள் புண்களை ஆற்றியபடி, தங்களின் பரவலாக விளம்பரப்படுத்தப்பட்ட இரண்டாவது சுற்றுத் தாக்குதலில், இந்த சிறிய, புதிய நாட்டின் மேல் பாய்ந்து அதனை அழித்து ஒழித்து விடக் காத்துக் கொண்டிருந்தார்கள்.

அரபுத்தலைவர்கள், கலப்பைகளை தங்கள் மக்களுக்கு தருவதற்கு பதிலாக துப்பாக்கிகளை வழங்கினார்கள். இஸ்ரேலின் பலத்தைக் கண்டு சமாதானம் செய்து கொள்ள விரும்பியோர் கொலை செய்யப்பட்டனர். பழையபடி

ஆவேசமான அறைகூவல்கள், அரபு பத்திரிகைகளில் இருந்தும் அதன் வானொலி களிலிருந்தும், தலைவர்களிடமிருந்தும், முஸ்லிம் பிரசங்கக்கூடுகளிலிருந்தும் ஒலிக்கத் தொடங்கின.

வக்கிர புத்தியுடைய மனிதர்களால் ஏற்கனவே நன்றாக சுரண்டப்பட்டி ருந்த அரபு மக்கள், ஆயுதங்களுக்கான கொடுப்பனவுகளுக்கு தேவையாயிருந்த கோடிக்கணக்கான டொலர்களுக்காக மேலும் ஓட்டச் சுரண்டப்பட்டனர்.

அகதிகள் பிரச்சினை தீர்க்கப்படமுடியாத ஒன்று என்பது போல் திரித்துக் காட்டப்பட்டது.

பாலஜாவின் முற்றுகைக்குள் சிக்கி வெறுமனே குந்திக்கொண்டிருந்த இராணுவ கப்டனான நாசர், இப்போது ஒரு எதிர்கால ஹிட்லரைப் போல் அரபு மக்களுக்கு வெறியூட்டினான்.

சர்வதேச சட்டங்களுக்கு முரணாக இஸ்ரேலின் கப்பல்களுக்கும் இஸ்ரே லுக்கு சரக்குகளை ஏற்றிவந்த கப்பல்களுக்கும் சூயெஸ் கால்வாய் ஊடாக செல்வதற்கு எகிப்து தடை விதித்தது.

எலாத்திலிருந்து ஒரு துறைமுகத்தை யூதர்கள் இயக்குவதை தடை செய் யும் வகையில் அக்காபா வளைகுடா தடை செய்யப்பட்டது.

தங்களுடைய அதி புனித ஆலயமாக இருந்த சாலமன் அரசரின் ஆலய சுவர்களுக்கு சென்று சுதந்திரமாக வழிபட உரிமை வழங்கியிருந்த போர்நிறுத்த ஒப்பந்தத்தை, ஜோர்டான் லீஜன் அலட்சியப்படுத்தியது.

எல்லா அரபு நாடுகளும் இஸ்ரேலை அங்கீகரிக்க மறுத்தன. எல்லா அரபு நாடுகளுமே இஸ்ரேலை அழிக்க சங்கற்பம் செய்து கொண்டன.

தொடர்ந்து வந்த நடவடிக்கையோ மிகவும் விஷமத்தனமாயிருந்தது. அராபியர்கள், விசேடமாக காஸாபகுதியிலிருந்த எகிப்தியர்கள் பெதாயீன் (அரபு கொமாண்டோக்கள்) கும்பல்களை, இஸ்ரேலியர்களைக் கொலை செய்யும் நோக்கத்திற்காக ஒழுங்கு செய்தனர். இந்த கும்பல்கள் ஒவ்வொரு இரவும் கொலை செய்யவும் வயல்களை எரிக்கவும், நீர்க்குழாய்களை வெட்டவும், அழிவு வேலைகளை மேற்கொள்ளவும் எல்லைகளைக் கடந்து வந்தன. வெறுப்பை உமிழும் தலைவர்களால் ஊக்குவிக்கப்பட்ட இந்தக் கும்பல்களில் துன்பத்துக் குள்ளாயிருந்த பாலஸ்தீன அகதிகளும் சேர்க்கப்பட்டுப் பயன்படுத்தப்பட்டனர்.

இஸ்ரேல் ஏற்கனவே இருந்த பல சுமைகளுடன், யதார்த்தமான பிரத் தியட்ச உண்மையொன்றை ஏற்றுக் கொள்ள வேண்டியவர்களாயிருந்தது. ''ஹிட்லர் யூதர்களை கருவறுக்கப் போவதாக சொன்னபோது உலகம் அதை நம்பவில்லை. அரபுக்கள் அதை சொல்லும்போது இஸ்ரேலில் உள்ள நாங்கள் அதை நம்புகிறோம்.'' என்பதே அது.

பையன்களுக்கும் பெண்பிள்ளைகளுக்கும் இராணுவப்பயிற்சி கட்டாயமான தாக இருந்தது. இளம் வயதிலேயே ஆயுதங்களைக் கையாள பயிற்சி பெற் றார்கள். ஒவ்வொரு ஆண்களும் நாற்பத்தைந்து வயதுவரை வருடாந்தம் ஒரு மாத இராணுவப் பயிற்சி டெற்றார்கள். மக்கள் தொகை விகிதாசாரத்தோடு ஒப்பிடும்போது இஸ்ரேலில் தான் உலகிலேயே மிகப்பெரிய திறமையாக ஒழுங் கமைக்கப்பட்ட நிலையான குடிப்படை (Standing Militia) இருந்தது.

கொடுமைக்கு பெயர்பெற்ற பெதாயின் கும்பல்கள், கொடுமைக்குப் பின் கொடுமையாக நிகழ்த்திக் கொண்டே இருந்தனர். எல்லைப்புறக் குடியேற்றங் களின் குழந்தைகள் இல்லங்களுக்கு குண்டு வீசியது மூலம் கொடுமையின் எல் லையை எட்டிப்பிடித்தனர்.

இறுதியாக திருப்பி தாக்குவதைத் தவிர இஸ்ரேலுக்கு வேறு வழி இல்லாமல் போயிற்று. இஸ்ரேலின் இராணுவம் கொல்லப்படும் ஒவ்வொரு வருக்கும் பத்துப்பேரைக் கொல்ல சங்கற்பம் செய்தது. துரதிஷ்டவசமாக அரபுக்கள் புரிந்து கொண்ட ஒரேஒரு மொழி திருப்பித்தாக்கு ''என்பதாகவே'' இருந்ததோடு அவர்களை தடுத்து நிறுத்தக்கூடிய வழி அது மட்டுமாகத்தான் இருந்தது.

பாதுகாப்புக்காக இஸ்ரேல் மேற்கொண்ட நடவடிக்கைகளில் 'நவஹால்' களை அமைத்ததும் ஒன்றாகும். நவஹால் என்பது யுத்தமூலோபாய முக்கியத் துவம் வாய்ந்த இடங்களில் இராணுவ திவிரமாக்கப்பட்ட குடியேற்றங்களை அமைத்தல் ஆகும்.

இளைஞர்களையும், யுவதிகளையும் கொண்ட பல இளைஞர் குழுக்கள் ஒரே பிரிவாக பயிற்சியை பெற இராணுவத்தில் சேர்ந்து கொண்டனர். அடிப் படை பயிற்சிகள் முடிந்ததும் இவர்கள் எல்லைகளிலே ஒருங்கிணைக்கப்பட்ட விவசாய-தற்பாதுகாப்பு குடியேற்றங்களை அமைக்க அனுப்பட்டனர். இஸ்ரேல் எல்லைகளைச் சுற்றி தசையால் சுவரொன்றை அமைப்பது பெதாயின் பயங்க ரங்களுக்கு அளிக்கப்படும் பதிலின் ஒரு பகுதியாக இருந்தது. பதினைந்து இருபது வயதுக்குட்பட்ட இந்த இளைஞர்களின் குடியேற்றங்கள், எல்லைகளி லிருந்து சில யார்கள் தூரத்திலேயே அமைந்திருந்ததால் எப்போதும் எதிரியின் வாய்க்குள் தலையை நீட்டிக் கொண்டிருப்பதைப் போல் இருந்தார்கள்.

எல்லைப் புறங்களிலே நிலைமைகள் மிகக் கொடூரமாக இருந்தன. போர் வீரன்- விவசாயிகளாக இருந்த இளைஞர்களின் வேதன விதம் வருடத்துக்கு மூப்பது டொலர்களாக இருந்தது. மரணம் அவர்களுக்கு ஒரு பக்கத்திலும், உற் பத்தி திறனற்ற நிலம் மறுபக்கத்திலும் இருந்தன. ஆயினும் நாட்டின் இன்னு மொரு புதுமையான நிகழ்வாக- இஸ்ரேலின் இளைஞர்கள் தாமாக்வே முன் வந்து தங்கள் முழு வாழ்க்கையையும் எல்லைப்புற குடியேற்றங்களில் செலவிட் டனர். அவர்கள் ஆரவாரம் எதுவுமின்றி அமைதியாக சென்றனர். அரிக்கு, ஜோர்தானாவுக்கு, டேவிட்டுக்கு, யோவாப்புக்கு, ஸெல்புக்கு போலவே அவர் களது கடமையாக அது இருந்தது. தங்களுக்கென லோகாயத நன்மைகள் எதை யும் எதிர்பார்க்காமலே, வாழ்ந்தார்கள்.அவர்கள் வாழ்ந்ததெல்லாம் இஸ்ரேலுக் காகவும், அதன் எதிர்காலத்துக்காகவுமே.

இந்த எல்லைகளில் ஆகப் பிரச்சினைக்குரிய பகுதியாக காஸா பிரதேசம் இருந்தது. ஒரு விரலைப்போல் இஸ்ரேலுக்குள் நீட்டிக் கொண்டிருந்த இடம், விடுதலைப்போர் முடிவில் கைவிடப்பட்ட எல்லைக் கோடாக விடப்பட்டிருந்தது. சாம்சன், வாசல்களை தூக்கி விட்ட புராதன இடமான இங்கே இப்போது புதிய வாசல்கள் இருந்தன. பாலஸ்தீனிய அரபு அகதிகள் முகாம்களின் வாசல்கள் இருந்தன. பலிக்கடாக்களாக்கப் பட்ட அரபுக்கள் இங்கே சூனியத்தை வெறித்தபடி பொழுதைப் போக்கவிடப் பட்டிருந்தனர். உலக நாடுகளின் பரோபகாரங்களைப் பெற்றுக் கொண்டிருந்த வேளையில், இவர்களுக்குள் எகிப்திய ஆட்சி அதிகார வர்க்கத்தினர் வெறுப்பை நிரப்பினர். எகிப்தியர்களின் ஆதரவிலான பெதாயின்களின் பிரதான தளமாகவும் பயிற்சி முகாமாகவும் காஸா பகுதி விளங்கியது.

இந்த இடத்தில் தான் எதிரியின் கூட்டிலிருந்து பத்து கிலோ மீட்டருக்கும் குறைவான தூரத்தில் இருபத்திரெண்டு இளைஞர்களும், பதினாறு யுவதிகளும் ஒரு நிஹால் குடியேற்றத்தை அமைக்க வந்து சேர்ந்தனர்.

அதற்கு நிஹால் மிட்பார்- அதாவது பாலைவனத்து சிற்றாறு- என்று பெயர் சூட்டப்பட்டது.

பதினாறு யுவதிகளுக்குமிடையில் தாதியான கரேன்ஹன்சன் கிளமென்றும் இருந்தாள்.

வெயிஸ்மான் கழகத்திலே தன் படிப்பை முடித்துக் கொண்ட டொவ் ஹ ூலே பள்ளத்தாக்கின் நீர் திட்டமொன்றுக்கு இடமாற்றம் செய்யப்பட்டான். கடமைக்குச் சமுகமளிக்குமுன் நிஹால் மிட்பாருக்குச் சென்று கரேனைச் சந்திக்கு முகமாக ஐந்து நாள் விடுமுறையைப் பெற்றுக் கொண்டான். அவள் தன்னுடைய குழுவோடு சென்றுவிட்டதிலிருந்து அவர்கள் ஆறுவாரங்களாகப் பிரிந்திருந்தார்கள்.

நெகெவ் பாலைவனத்தில் ஒதுக்குப் புறத்தைச் சென்றடைய டொவ்வுக்கு ஒருநாள் முழுதும் பிடித்தது. ஒரு மண்பாதை, பிரதான பாதையிலிருந்து பிரிந்து காஸா பிரதேசத்தருகோடு நாலு கிலோ மீட்டர் தூரம் சென்று குடியேற்றத்தை அடைகிறது.

நிஹால் மிட்பாரில் பெரும்பகுதி கன்வஸ்களாலானதாகவே இன்னும் இருந்தது. ஒரு உணவருந்தும் கொட்டகை, ஒரு வேலை உபகரணங்கள் களஞ்சியம், ஒரு சோடி காவற் கோபுரங்கள் மட்டுமே அமைக்கப்பட்டிருந்தன. நீர்த்தாங்கியும், நீர்ப்பாசன குழாய்களும் கிட்டத்தட்ட முடிந்து கொண்டிருந்தன. அந்தக் காற்று வீசிக்கொண்டிருந்த, தனித்த, நிர்மானுஷ்யமான சூரியவெப்பம் சுட்டெரிக்கும் மூலையின் நடுவில் நின்றுகொண்டிருந்த இந்தச் சில கட்டிடங்கள் உலகின் அந்தத்தில் நின்று கொண்டிருப்பதாகத் தோன்றின. உண்மையில் அவை ஒன்றுமில்லாமையின் விளிம்பில்தான் நின்று கொண்டிருந்தன. அடிவானத்திலே காஸா பிரதேசத்தின் புறவுருத்தோற்றம் தெரிந்தது. முட்கம்பி வேலிகள் கொண்ட அகழிகள் பாதுகாப்பு நிலைகள் எதிரியை நோக்கிக் கொண்டிருந்தன.

முதலாவது டினாம் நிலம் உழப்பட்டுக் கொண்டிருந்தது. டொவ் புகுவழியில் நின்று ஒரு கணம் அவதானித்தான். நிஹால் மிட்பார் உற்சாகம் தருவதாக இருக்கவில்லை. ஆனால், திடீரென அந்த இடம் அவன் பார்வையில் உலகிலேயே அழகிய பூங்காவனமாக மாறிப்போயிற்று. ஏனெனில் வைத்தியசாலைக் கூடாரத்திலிருந்து அவனை நோக்கிக் கரேன் ஓடிவந்து கொண்டிருந்தாள்.

டொவ்! டொவ்! கத்திக்கொண்டு வெறுமனே காட்சியளித்த மண்ணிறக் குன்றின் மேலால் ஓடி வந்தவள் காத்துக் கொண்டிருந்த அவன் கரங்களுள் பாய்ந்தாள். தங்கள் இதயங்களின் பரபரப்பாலும், ஒருவரொருவரின் ஸ்பரிசத்தால் ஏற்பட்ட மகிழ்ச்சியாலும் வேகமாகத் துடித்துக் கொண்டிருக்க ஒருவரையொருவர் இறுக அணைத்துக் கொண்டிருந்தனர்.

ஒருவரொருவரின் கரங்களைப் பிடித்துக்கொண்டிருக்க, கரேன் அவனை நீர்த்தாங்கிக்குக் கூட்டிச் செல்ல, அங்கே அவன் தன் தூசிபடிந்த முகத்தைக் கழுவிவிட்டு நீண்ட நேரம் நீரைப் பருகினான். பிறகு கரேன் அவனைக் குடியேற்றத்திலிருந்து சற்று அப்பால் இருந்த பாதையால், குன்றுக்கு அப்பால் சில நபாத்தியன் சிதைவுகள் இருந்த இடத்துக்கு அழைத்துச் சென்றாள். அதுதான் ஆக முன்னணியில் இருந்த காவல் நிலை. இதுதான் தனியான இளைஞர்களும், யுவதிகளும் ஒருவரையொருவர் சந்திக்கும் விருப்பத்துக்குரிய இடம்.

கரேன் காவலிலிருந்தவனை நோக்கி, காவலைத்தான் பொறுப்பெடுப்பதாக சைகை செய்ததும் காவலிலிருந்தவன் புரிந்து கொண்டு விலகிப் போனான். அவர்கள் சிதைவுகட்கூடாகச் சென்று, புராதன ஆலயமொன்றின் மறைவான இடத்துக்குச் சென்று காவலில் நின்றவன் கண்ணுக்கு மறையும் வரை காத்துக் கொண்டிருந்தார்கள். கரேன் முட்கம்பிகளூடாக உற்றுப் பார்த்தாள். எல்லாம் அமைதியாக இருந்தன.

தாங்கள் கொண்டுவந்த றைபிள்களைச் சுவரோடு காத்தி வைத்து விட்டு ஒருவரையொருவர் கட்டியணைத்து முத்தமிட்டுக் கொண்டனர்.

''ஓ டொவ், கடைசியாக வந்து சேர்ந்து விட்டாய்''. உன்னைக் காணாமல் நான் செத்து விடுவேன் போலிருந்தது என்றாள் அவள்.

நிமிர்ந்து அவனைப் பார்த்தவள் ''இந்தக் கணத்தை விட அற்புதமானது ஏதாவது இருக்க முடியுமா?''

''அமர்ந்து கொள்'' சீண்டும் வண்ணம் அவன் கட்டளையிட்டான்.

''என்ன விஷயம் டொவ்?''

''நான் ஹுலே திட்டத்துக்குமாற்றப்பட்டது உனக்குத் தெரியும் தானே?''

''ஆமாம் தெரியும்''.

''நல்லது நேற்று என்னைக் கூப்பிட்டு அனுப்பியிருந்தார்கள். ஹுலேயில் முதுவேனிற் காலம் முடியும் வரைதான் அங்கிருக்கச் சொன்னார்கள். பிறகு

மேல்படிப்புக்காக அமெரிக்கா போகச் சொல்கிறார்கள். மசாசூ செட்ஸ் தொழில் நுட்பக் கல்லூரிக்குப் போகப் போகிறேன்''.

கரேன் கண்களை மூடிமூடித் திறந்தாள்.

''அமெரிக்காவுக்கு ; படிப்பதற்கு?''

''ஆமாம் இரண்டு வருடங்களுக்கு..... இங்கு வந்து உனக்குச் சொல்லும்வரை தாங்க முடியவில்லை''.

அவள் விரைவாகத் தன்னைத்தானே வலிந்து சிரிக்கப் பண்ணினாள். ''எவ்வளவு அருமையான விஷயம் டொவ். எனக்குப் பெருமையாயிருக்கிறது. அப்போ இன்னும் ஆறேழு மாதங்களில் நீங்கள் போய்விடுவீர்கள் அல்லவா?''

''நான் இதுபற்றி அவர்களுக்கு ஒரு பதிலும் சொல்லவில்லை, உன்னோடு கலந்துரையாட விரும்பினேன்''.

''இரண்டு வருடங்கள் என்பது நீண்ட ஒன்றல்ல.'' கரேன் சொன்னாள் தொடர்ந்து, ''நீதிரும்பி வரும்போது கிபுட்ஸ் நிர்மாணிக்கப்பட்டு முடிந்து விடும். இரண்டாயிரம் டுனாம்கள் செய்கை பண்ணிக்கொண்டிருப்போம். ஒரு நூலகம், நிறையக் குழந்தைகளைக் கொண்ட ஒரு குழந்தைகள் காப்பகம்.....'' அவள் முடிக்க முன்னரே இடைமறித்த டொவ், ''ஒரு நிமிடம் பொறு..... நீ இல்லாமல் நான் அமெரிக்காவுக்கோ வேறு எங்குமோ போகப் போவதில்லை. நாங்கள் இருவரும் இப்போதே மணந்து கொள்வோம். அமெரிக்காவில் சிறிது பிரச்சினையாகத்தான் இருக்கும். அவர்கள் எனக்கு அதிக உதவித் தொகையைத் தர முடியாது. வகுப்புகளின் பின் வேலை செய்ய வேண்டியிருக்கும். நீயும் தாதித் தொழிலுக்குப் படித்து வேலையும் செய்யலாம். எப்படியாவது சமாளித்துக் கொள்ளலாம்''.

கரேன் மிக அமைதியாக இருந்தாள். அவள் நிமிர்ந்து பார்த்துத் தூரத்தில் காஸா உயரத் தெரிவதையும், காவல் கோபுரங்களையும், அகழிகளையும் பார்த்தாள்.

''என்னால் நிஹால் மிட்பாரை விட்டுவிட்டு வர முடியாது'', மெதுவாக முணுமுணுத்தாள். ''இங்கே இப்போதுதான் தொடங்கியிருக்கிறோம். பைபன்கள் எல்லோரும் ஒரு நாளைக்கு இருபது மணி நேரம் வேலை செய்கிறார்கள்''.

''கரேன் நீ விடுமுறை எடுக்க வேண்டும்''.

''இல்லை, என்னால் முடியாது. நான் போனால் மற்றவர்களுக்கு மேலும் கடினமாக இருக்கும்''.

நீ எடுக்கத்தான் வேண்டும். நீ இல்லாமல் நான் போகப் போவதில்லை. இது எப்படியான சந்தர்ப்பம் என்று உனக்குப் புரியவில்லையா? நான் இரண்டு வருடங்களில் திரும்பி வரும்போது, நீர்ப்படிவம், கிணறு தோண்டுதல், குழாய்கள் என்பவற்றைப்பற்றி என்னென்ன தெரிந்திருக்க வேண்டுமோ, அவற்றை

எல்லாம் தெரிந்து கொண்டுதான் வருவேன். அப்போ இன்னும் பூரணமாக இருக்கும். நாங்கள் இருவரும் நிஜால் மிட்டாரில் ஒன்றாக இருக்கலாம். நான் எங்காவது அருகாமையில் பாலைவனத்தில் வேலை செய்வேன். எனது சம்பளம் கிபுட்சுக்குக் கிடைக்கும். கரேன் இப்போது இருப்பதை விட இஸ்ரேலுக்கு ஐம்பது மடங்கு பெறுமதி வாய்ந்தவனாக அப்போது நான் இருப்பேன்.''

அவள் எழுந்து அவனுக்கு தன்பின்பக்கத்தைக் காட்டியபடி நின்றாள்கு ''அது உனக்கு ஏற்றதுதான். நீ அமெரிக்காவுக்கு போகவேண்டியது உனக். முக்கியம். நான் இங்கே இருக்க வேண்டியது அதைவிட முக்கியம்.''

டொவ் வெளிறிப் போனான். தோள்கள் தொங்கிப் போயின, ''உன்னை மகிழ்ச்சியாய் வைத்திருக்கலாம் என்று நினைத்தேன் .. .''

அவள் திரும்பி அவனைப் பார்த்தாள். ''நீ போக வேண்டும் என்பது உனக்குத் தெரியும். நான் இருக்க வேண்டும் என்பதும் உனக்குத் தெரியும்.''

''இல்லை முடியாது- உன்னைப் பிரிந்து இரண்டு வருடங்களுக்கு இருக்க என்னால் முடியாது. இரண்டு நாட்களுக்கு கூட இருக்க என்னால் இபோ முடியாது. அவன் எழுந்து நின்று அவள் கையைப் பிடித்து இழுத்து அவள் முகத்தை முத்தங்களால் நிறைத்தான். அவளும் முத்தத்துக்கு முத்தம் ஈடாகத் தந்தாள். இருவருமே அழுதனர். திரும்ப திரும்ப உன்னை நான் நேசிக்கிறேன் என்று மாறி மாறிச் சொல்லிக் கொண்டார்கள். அவர்களின் கன்னங்கள் குறு வேர்வையிலும் கண்ணீராலும் நனைந்தபடி ஒருவரின் கைகள் மற்றவரின் உடலை ஸ்பரிசித்துக் கொண்டிருந்தபடியே நிலத்துக்காக சரிந்தனர்.

''இப்போதே என்னை ஏற்றுக் கொள்'' அவள் மொழிந்தாள். டொவ் துடித்தெழுந்து நின்று கொண்டே நடுங்கினான். தன்னுடைய முஷ்டியை இறுக்கிப் பிடித்துக் கொண்டான். ''இல்லை நாங்கள் இத்தோடு நிறுத்திக் கொள்வோம்''

கரேனுடைய விம்மல் ஒலியைத் தவிர அமைதியாக இருந்தது. டொவ் அவளருகில் மண்டியிட்டு அமர்ந்தவன் ''தயவு செய்து அழாதே கரேன்'' என்றான்.

''ஓ, டொவ், நாங்கள் என்ன செய்யப் போகிறோம்? உன்னைப்பிரிந்திருக்கும்போது நான் சிவித்திருக்காத மாதிரித்தான் இருக்கிறது. ஆனால், நாங்கள் சந்திக்கும் ஒவ்வொரு முறையும் ஒரே மாதிரித்தான் முடிவடைகிறது. நீ என்னை விட்டுப் போனதும் பல நாட்களுக்கு நான் விரகதாபத்தால் வாடிப் போய்விடுகிறேன்''.

''எனக்கும் அப்படித்தான் இருக்கிறது. இது என்னுடைய பிழைதான். நாங்கள் கவனமாக இருக்க வேண்டும். மணம் முடிக்கும் வரை எதுவும் பிசகிவிடக் கூடாது'' என்றவன் அவள் எழுந்து நிற்க உதவினான்.

''என்னை அப்படிப் பார்க்காதே கரேன், ஒருபோதும் உனக்குத் தீங்கிழைக்க நினைக்க மாட்டேன்.''

''நான் உன்னைக் காதலிக்கிறேன் டொவ். உன்னை நாடுவது குறித்து அச்சப்படவோ வெட்கப்படவோ இல்லை.''

''உனக்குப் பிழையான எதையும் செய்யமாட்டேன்'' என்றான் அவன். வலுக்கட்டாயத்தால் இறுகிப்போன உடல்களோடும், காதலால் மின்னிக் கொண்டிருந்த கண்களோடும் அவர்கள் அசையாமல் நின்றார்கள். ''நாங்கள் கிபுட்சுக்குத் திரும்பிப் போவோம்'' என்றாள், கரேன் கடைசியாகத் தன் குரலில் தனிமை தொனிக்க.

★ ★ ★

கிற்றி இஸ்ரேலின் அதிகமான பகுதிகளில் பயணம் செய்திருந்ததோடு, கடுரம் நிறைந்த குடியேற்றங்கள் பலவற்றையும் கண்டிருந்தாள். நஹால் மிட்பாருக்குச் செல்லும் போதே அது நரகத்தின் விளிம்பு போன்ற இடத்தில் இருப்பதை உணர்ந்தாள். எந்த நிலைமைக்கும் தயாராகச் சென்றாலும், ஆத்திரமான அரபுக்கள் வரும் பாதையில் உருவாக்கப்பட்டிருந்த இந்தப் போறணை போன்ற இடத்தைக் கண்டதும் அவள் இதயம் கலங்கித் தவித்தது.

மூன்று மாதங்களில் செய்து முடிக்கப்பட்டவைகளை, வெளியரங்கமாகத் தெரிந்த பெருமையுடன் கரேன் கிற்றிக்குச் சுற்றிக் காட்டினாள். மேலதிகமாகச் சில கட்டிடங்கள் அமைக்கப்பட்டிருந்தன. மேலும் சில டுனாம் நிலங்கள் பண்படுத்தப்பட்டிருந்தன. ஆனால், பொதுவாக அது ஒரு மனதை உடைக்கும் காட்சியாகவே இருந்தது. பகலில் சித்திரவதை போன்ற பலமணி நேரம் கடும் வேலை செய்தபின் இரவில் காவல் கடமை செய்யும் இளைஞர்களையும், யுவதிகளையும் அந்த இடம் பிரதிநிதித்துவப்படுத்தியது.

''போதுமான நீரைப் பெறக்கூடுமானதாக இருந்தால் இன்னும் சில வருடங்களிலேயே எங்கும் மரங்களும் மலர்களும் தோன்றிவிடும்'' என்றாள் கரேன்.

அவர்கள் சூரியனின் வெப்பத்திலிருந்து, கரேனின் வைத்தியசாலை கூடாரத்தினுள் சென்று ஆளுக்குக் கொஞ்சம் நீரை அருந்தினார்கள். கூடாரத்தின் கதவுத் திரை ஊடாக வெளியே பார்த்தாள். முட்கம்பி வேலிகளும், அகழிகளும் பார்வைக்குத் தென்பட்டன. தூரத்தில் சில இளைஞர்களும், யுவதிகளும் வயலில் வேலை செய்துகொண்டிருக்க இன்னும் சிலர் றைபிள்களுடன் அவர்களுக்குக் காவலாக, அவர்களின் பின்னால் நடந்து கொண்டிருந்தார்கள். 'வாளில் ஒரு கையும் கலப்பையில் ஒரு கையும்' அப்படித்தான் ஜெருசலேமின் சுவர்களையும் மீள அமைத்தார்கள். கிற்றி கரேனை நோக்கினாள். அந்த யுவதி எவ்வளவோ இளமையாகவும் அழகாகவும் இருந்தாள். இன்னும் சில வருடங்கள் இங்கு இருந்தால் தன் வயதுக்கு மீறிய வயோதிபத்தை அடைந்து விடுவாள்.

''அப்போ நீங்கள் உண்மையிலேயே உங்கள் நாட்டுக்கு திரும்பப் போவதற்குத் திட்டமிடுகிறீர்கள் அல்லவா? என்னால் அதை நம்பக்கூட முடியவில்லை'' என்றாள் கரேன்.

ஒரு வருட விடுமுறை எடுக்கப் போவதாகத்தான் அவர்களிடம் சொல்லியிருக்கிறேன். அண்மைக் காலங்களில் வீட்டைப்பற்றிய ஏக்கம் அதிகமாக இருக்

கிறது. இப்போ நீயும் இல்லாததால்... கொஞ்ச நாளைக்கு ஆறுதலாயிருக்கலாம். என்று நினைத்தேன். நான் திரும்பவும் இஸ்ரேலுக்கு வரக்கூடும்... ஆனால் நிச்சயமில்லை.''

''எப்போ போகப் போகிறீர்கள்?''

''பாஸ் ஓவர் திருநாளுக்கு பிறகு''

''அவ்வளவு விரைவாகவா? நீங்கள் இல்லாமல் மிகவும் பயங்கரமாக இருக்கும் கிற்றி''.

''நீ இப்பொழுது ஒரு முதிர்ந்த பெண். உனக்கென ஒரு வாழ்க்கை இருக்கிறது.''

''நீங்கள் இல்லாத வாழ்க்கையை என்னால் நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை.''

''நாங்கள் கடிதமூலம் தொடர்பு கொள்வோம். எப்போதும் நெருக்கமாகவே இருப்போம். யாருக்குத் தெரியும் இந்த எரிமலை போன்ற இடத்தில் நாலு வருடங்களைக் கழித்த எனக்கு உலகின் மற்றைய பாகங்கள் சோம்பல் தனமாகத் தெரியலாம்.''

''நீங்கள் கட்டாயமாகத் திரும்பி வரவேண்டும், கிற்றி.''

கிற்றி புன்னகைத்தாள், காலம்தான் சொல்ல வேண்டும். டொவ் இந்த நாட்களில் எப்படியிருக்கிறான்? அவன் பாடசாலைப் படிப்பை முடித்து விட்டதாகக் கேள்விப்பட்டேன்.

கிற்றி டொவ்வின் பக்கம் சார்பாகப் பேசக்கூடும் என்பதால் டொவ் அமெரிக்காவுக்குப் போகும்படி கேட்கப்பட்டதை அவளுக்குச் சொல்லாமலே தவிர்த்து விட்டாள்.

''அவர்கள் அவனை ஹாலேக்கு அனுப்பியிருக்கிறார்கள். ஹாலே பள்ளத்தாக்கை, வாய்க்கால்களை அகழ்ந்து கலிலிக் கடல் மட்டத்துக்கு இறக்கி வாவி முழுவதையும் பயிரிடுவதற்காக மீளப் பெற்றுக் கொள்ளும் திட்டமொன்றைத் தயாரித்து வருகிறார்கள்.''

டொவ் ஒரு முக்கியமான இளைஞனாக வந்துவிட்டான். அவனைப்பற்றி மகத்தான விஷயங்களை எல்லாம் கேள்விப்பட்டேன். பாஸ்ஓவர் திருநாளுக்கு இங்கே அவனால் வர முடியுமா?''

''அப்படித் தெரியவில்லை''

ஒரு முறை விரல்களைச் சுண்டிய கிற்றி, ''ஆ நான் நல்ல ஒரு திட்டம் வைத்திருக்கிறேன். பாஸ் ஓவருக்கு யாட் எல்லுக்கு வரும்படி ஜோர்தானா அழைத்திருக்கிறாள். நானும் வருவதாக உறுதியளித்திருக்கிறேன். டொவ்வும்

அருகில் தானே வேலை செய்து கொண்டிருக்கிறான் நீயும் ஏன்யாட் எல்லுக்கு வரக்கூடாது?''

''நான் பாஸ்ஓவருக்கு கிபுட்சிலேயே இருக்கவேண்டியிருக்கும்.''

''இங்கு பல பாஸ்ஓவர்களுக்கு நீ இருக்கலாம். நீ வருவது எனக்கு ஒரு பிரியாவிடை பரிசு மாதிரி இருக்கும்.''

கரேன் புன்னகைத்தபடி ''நான் வருகிறேன்'' என்றாள்.

''நல்லது சரி உன் ஆள் எப்படியிருக்கிறான்?''

''நல்லாய்த்தான் இருக்கிறார் என்று நினைக்கிறேன் ..''என்று உற்சாக மற்ற குரலில் இழுத்தாள் கரேன்.

''ஏன் ஏதாவது வாக்குவாதப்பட்டாயா?''

''இல்லை. அவர்என்னோடு வாக்குவாதப்படமாட்டார். கிற்றி சில வேளை களில் அவர் நடந்து கொள்ளும் நேர்த்தியான முறையைப் பார்த்தால் வாய் விட்டுக் கத்தவேண்டும் போல் இருக்கும்.''

''அப்படியா? தன் கண் இமைகளை உயர்த்தியபடி கிற்றி தொடர்ந்து ,'நீ இப்போ உன் பதினெட்டு வயதுக்கு மீறி வளர்ந்துவிட்டாய்'' என்றாள்.

''என்ன செய்வது என்றே எனக்குத் தெரியவில்லை, கிற்றி அவனைப் பற்றி எண்ணும்போது எனக்கு பைத்தியம் பிடித்துவிடும்போல் இருக்கிறது. ஆனால் ஒவ்வொரு முறையும் நாங்கள் சந்திக்கும்போது அவர் நேர்த்தியான மனிதனாகி விடுவார் அவர்கள் அவரை வேறெங்கும் அனுப்பிவிடக்கூடும் .... அப்படி நேர்ந்தால் நாங்கள் மணந்து கொள்ள இரு வருடங்கள் செல்லக்கூடும் அதற்குள் நான் உடைந்து சிதறிவிடுவேன்.''

''நீ அவனில் ஆழமான அன்பு வைத்திருக்கிறாய்அல்லவா?''

''அவன் அரவணைப்பை நினைத்து ஏங்கியே செத்துவிடுவேன் போலிருக் கிறது.இப்படிக் கதைப்பது முறையில்லை என்று நினைக்கிறேன்.''

''இல்லை கண்ணே இந்த முறையில் ஒருவரிடம் அன்பு செலுத்துவது என்பது உலகத்திலேயே அற்புதமான விஷயம் தான்.''

''கிற்றி அவனோடு உறவாட எவ்வளவோ ஆசையாயிருக்கிறது. அது தவறா?''

அது தவறா? கிற்றிக்கு அந்தமுறை, கட்டிலின்மேல் நின்றபடி ஜோர்தானா டேவிட்டுடன் பிரத்தியேகமாக கழித்த சில கணங்களுக்காக அவளை விபச் சாரியெனஅரிக்கு சுட்டிக்காட்ட முயன்றதை நினைவு கூர்ந்தாள். அது தவறா? எவ்வளவுதடவைகள் தான் சொல்லி விட்ட அந்த வார்த்தைகளுக்காக மன வருத்தப்பட்டாள். டேவிட் இறந்து இப்போ மூன்று வருடங்களாகி விட்டாலும் ஜோர்தானா இன்னும் ஆழ்ந்த சோகத்தில் இருந்தாள். வெளிக்குத் தெரிந்த

உறுதியான ஷப்ரா மேலோட்டின் உள்ளே நொருங்கிய உள்ளம் ஒன்றைத் தான் அவள் தன் சவக்குழிக்கு எடுத்துச் செல்லப் போகிறாள். அப்போ அது தவறா? கரேலுக்கும் டொவ்வுக்கும் எத்தனை 'நாளைகள்' வரப்போகின்றன. முட் கம்பிவேலிக்கு அப்பால் இருக்கும் ஆதிரத்துடனான கும்பல்கள் அவர்களை வாழவிடுவார்களா? கரேன்.. என்னுடைய அருமையான குழந்தையே...

''அவனோடு கரேன் உன்னால் முடிந்தளவு உறவாடு.''

''ஓ என் அருமைக் கிற்றி',.

''ஆமாம் என் கண்ணே, நீ அவனோடு உறவாடு''.

''அவருக்கு மிகவும் பயம்''

''அப்படியானால் பயப்படாமல் இருக்க நீ உதவு. நீ அவனுக்குரியவள் தான். அப்படியிருப்பதில் தவறொன்றுமில்லை.''

கிற்றி தனக்குள் ஒரு வெறுமையை உணர்ந்தாள். கரேனை நிரந்தரமா கவே தாரைவார்த்து விட்டாள். கரேனுடைய கைகள் தன்தோள் மேல் படி வதை உணர்ந்தாள்.

நீங்கள் இதுபோல் அரிக்கு உதவக்கூடாதா? அவன் பெயர் உச்சரிக்கப் பட்டது அவள் இதயம் ஒரு முறை அடிக்கமறந்து மீண்டும் துடித்தது. ''ஒருவர் காதலை செலுத்தும்போது மற்றவர் அப்படிச் செய்யாமல் இருந்தால் அது காதலல்ல''

அவர்கள் இருவரும் நீண்ட நேரம் மௌனமாக இருந்தார்கள். கிற்றி கூடாரத்தின் வாயிலடிச்சுச் சென்று வெளியே நோக்கினாள். இலையான்கள் அவளைச் சூழ ரீங்காரித்துக் கொண்டிருந்தன திடீரென சுழன்று கரேனை நோக்கி திரும்பியவள் ''நீ இங்கு வந்தது எனக்கு அடியோடு பிடிக்கவில்லை என்று உனக்குத் தெரிவிக்காமல் என்னால் போக முடியாது'' என்றாள்.

''எல்லைகள் பாதுகாக்கப்பட வேண்டும், மற்றவர்களை அந்த வேலையை செய்யவிடலாம் என்று சொல்வது மிக இலகுதான்.''

''நஹால் மிட்பார் தோன்றி மூன்றே மாதங்கள் தான். அதற்கிடையில் ஒரு இளைஞனும், ஒரு பெண்ணும் பெதாயின்களால் கொலையுண்டு "உங்கள் இடுகாட்டில் உறங்குகின்றார்கள்.''

''நாங்கள் அந்தமாதிரி சிந்திப்பதில்லை கிற்றி, எங்களில் இருவர் கொல் லப்பட்டாலும் ஐம்பது பேர் புதிதாக வந்திருக்கிறார்கள். இன்னும் ஐம்பது பேர் இங்கிருந்து ஐந்து கிலோமீட்டர் தூரத்தில் புதிய குடியேற்றமொன்றை அமைக்க வந்திருக்கிறார்கள் என்றால் அது நாங்கள் இங்கே வந்ததால் தான் இன்னும் ஒரு வருடத்தில் குழந்தைகள் காப்பகமும் நிறுவப்பட்டு, ஆயிரம் டுனாம்கள் வரை பயிர்செய்யப்பட்டிருக்கும்.

''இன்னும் ஒரு வருடத்தில் நீயும் கிழவியாக ஆரம்பித்துவிடுவாய். ஒரு நாளைக்கு பதினெட்டு மணித்தியாலங்கள் கஷ்டப்பட்டுவிட்டு இரவுகளை அகழிகளில் கழித்துக் கொண்டிருப்பாய். உனக்கும் டொவ்வுக்கும் இங்கே கிடைக்கக் கூடியதெல்லாம் எட்டடிக்கு பத்தடி அளவான அறையொன்றுதான். உங்கள் உடம்பில் இருக்கும் உடுப்புகள் கூட உங்களுக்கு சொந்தமாக இருக்காது''

''நீங்கள் தவறாக நினைக்கிறீர்கள். எனக்கும் டொவ்வுக்கும் எல்லாமே இங்கு கிடைக்கும்...''

''ஆமாம் எல்லாமே கிடைக்கும், உங்கள் கழுத்தைப் பிடிக்கக் காத்திருக்கும் கொலை வெறி கொண்ட இரண்டரை லட்சம் அரபுக்கள் உட்பட...''

''அந்தப் பரிதாபப்பட்ட ஜீவன்கள் மேல் எங்களால் கோபங் கொள்ள முடியாது.'' என்ற அவள் தொடர்ந்து, ''நாளுக்குப் பின் நாளாக மாதத்தை தொடர்ந்து மாதங்களாக அங்கே மிருகங்கள் போல் அடைபட்டு இருந்து கொண்டு எங்களுடைய வயல்கள் தினமும் பச்சைப்பசேல் என மிளிர்வதை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்'' என்றாள்.

கிற்றி ஒரு இருக்கையுள் சரிந்து கொண்டவள் முகத்தைத் தன் கைகளுக்குள் புதைத்துக் கொண்டாள்.

''கிற்றி ..... நான் சொல்வதைக் கேளுங்கள்...''

''என்னால் முடியாது''

''தயவு செய்து..... தயவு செய்து நான் சொல்வதைக் கேளுங்கள். டென் மார்க்கில் சிறு பெண்ணாக இருந்தபோதே ஒரு யூத இனத்தவளாக ஏன் பிறந்தேன் என்று கேட்டுக் கொள்வது உங்களுக்குத் தெரியும். அதற்கான பதில் இப்போ எனக்குத் தெரியும். நாங்கள் பலவீனமானவர்கள் என்றோ, ஆபத்து ஏற்படும் போது ஓடுவோம் என்றோ கடவுள் எங்களைத் தெரிந்தெடுக்கவில்லை. ஆறாயிரம் வருடங்களாக, கொலைகளையும், துக்கத்தையும் இழிவாக நடத்தப் படுவதையும் தாங்கிக் கொண்டு விசுவாசத்தைக் கைக்கொண்டிருக்கிறோம். எங்களை அழிக்க முயன்றவர்களை விட அதிக காலம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். உங்களுக்குப் புரியவில்லையா கிற்றி.....? இந்தச் சிறிய பூமி எங்களுக்காகத் தெரிந்தெடுக்கப்பட்டது. ஏனென்றால் இது அனைத்துலகம் சங்கமமாகும் இடமாக இருப்பதால் தான்; இது மனிதனுடைய காட்டுத் தன்மையின் விளிம்பில் இருப்பதால் தான். தன்னுடைய மக்கள் இருக்க வேண்டுமென இறைவன் விரும்பிய இடமும் இதுதான்..... எல்லைகளில் நின்று மனித வாழ்வின், மூலைக் கற்களாக விளங்கும் அவருடைய சட்டங்களைப் பாதுகாக்க, எங்களுக்கு இருக்க வேறெந்த இடம் வேண்டும்?''

''இஸ்ரேல் தன் முதுகைச் சுவரோடு அழுந்த வைத்துக் கொண்டு போராடிக் கொண்டிருக்கிறது.'' ''கிற்றி உரக்கவே சொன்னாள். அது முன்பு நின்றதும் அப்படித்தான். உங்களை அழிக்கக் காத்துக் கொண்டிருக்கும் காட்டு மிராண்டி களை எதிர்த்து எதிர்காலத்திலும் அப்படித்தான் நிற்கப் போகின்றது.''

''இல்லை கிற்றி இல்லை, இருளுக்கும் ஒளிக்கும் இடையேயான இணைப்புப் பாலம் ஆகத்தான் இஸ்ரேல் இருக்கிறது.''

திடீரென கிற்றிக்கு எல்லாமே தெளிவாகப் புரிந்தது..... வெகு அழகாகப் புரிந்தது..... அப்போ இதுதான் அந்தப் பதில்..... இருளுக்கும் ஒளிக்கும் பால மாக இஸ்ரேல் இருக்கிறது.

o

அத்தியாயம் ஐந்து

எல்லா இரவுகளிலும் யூதருக்கு முக்கியமான இரவொன்று இருந்தது. அதுதான் மதவிடுமுறையான பாஸ் ஓவர். எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மீண்டதன் ஞாபகார்த்தமாகவே பாஸ் ஓவர் கொண்டாடப்படுகிறது. மூல அடக்கு முறையாளர்களான எகிப்தியர்கள் எல்லாக் காலத்தில் வாழ்ந்த எல்லா யூதரினதும் அடக்குமுறையாளர்களின் சின்னமாக இருந்தார்கள்.

பாஸ்ஓவரின் உச்சக்கட்டமாக அதற்கு முந்திய நாளிரவு, கிடைத்த சுதந்திரத்துக்கு நன்றியறிதலாகவும், அது இல்லாதவர்கட்கு நம்பிக்கையூட்டும் நோக்கிலும் விடுதலை விழாவான செடெர் கொண்டாடப்படுகிறது.

இஸ்ரேலின் மறுபிறப்புக்கு முந்திய வருடங்களில், அஞ்ஞாதவாசம் செய்வோருக்கும், சிதறடிக்கப்பட்டிருந்தோருக்குமாக செடெர் ''..... அடுத்த வருஷம் ஜெருசலேமில்'' என்ற வார்த்தைகளுடன் முடிவு பெறும்.

பிரார்த்தனைகள், கதைகள், பாஸ் ஓவருக்கான பாடல்கள் அடங்கியதும், அதன் பகுதிகள் மூவாயிரம் வருடங்களுக்கு முன் எழுதப்பட்டதுமான ஒரு விசேட புத்தகம் செடெரின் போது வாசிக்கப்படும். எகிப்திலிருந்து நடைபெற்ற வெளியேற்றத்தின் கதையைக் குடும்பத் தலைவர் வாசிப்பார்.

வருடத்தின் மிக முக்கியமான நேரம் செடர்தான். குடும்பத் தலைவி இதற்காக ஒரு மாதகாலத்துக்கு முன்பிருந்தே ஆயத்தமாவார். அழுக்குகள் அகற்றப்பட வேண்டும். பாஸ் ஓவருக்கான விசேட உணவுகளும், அலங்காரங்களும் தயாராக்கப்பட வேண்டும். இஸ்ரேல் எங்கும், அரைப் பைத்தியம் பிடித்தது போல் செடெருக்கு ஆயத்தங்கள் நடைபெற்றன. சமூக குடியேற்றங்களில் செடெர் மேசைகளில் நூற்றுக்கணக்கானவர்கள் அமர்ந்திருப்பார்கள். மற்றப் பல வீடுகளில் சிறிய எளிமையான செடெர் நடைபெறும். பாஸ் ஓவருக்கு முந்திய நாள் இரவின் முடிவு நெருங்க நெருங்க எதிர் வரும் மாபெரும் விழாவின் எதிர் பார்ப்புகள் தாங்க முடியாத அளவிற்குப் பெருகிவிடும்.

யாட் எல்வில், பென் கானான் இல்லத்தே நடைபெறும் செடெர் எளிமையான முறையில் அமைவதாகவிருந்து. எப்படியிருப்பினும், பாரம் பரியங்களையும், கிரியைகளையும் எழுத்துக்கு எழுத்து சாரா கடைப்பிடிக்க வேண்டியிருந்தது. அது அன்பிற்காகச் செய்யப்படும் உழைப்பாக இருந்ததால் அதை இழந்துவிட அவள் இடம் கொடுக்கவில்லை. கொட்டகையின் உள்ளேயும் வெளியேயும் அழுக்கெதுவுமின்றிச் சுத்தம் பண்ணப்பட்டது. பெருநாளன்று அறைகள் எல்லாம் பெரிய அளவிலான கலிலி ரோஜாக்களால் நிரப்பப்பட்டன. கிரியைகளுக்கான மெனோரா, - மெழுகுவர்த்தித் தண்டு, ஒளிவீசும் அளவுக்கு மெருகிடப்

பட்டிருந்தது. பல டசின் கணக்கான விசேட பாஸ் ஓவர் தின்பண்டங்கள் தயாரிக்கப்பட்டிருந்தன. சாராவும் தனது மிக நேர்த்தியான உடையை உடுத்திருந்தாள்.

பாஸ் ஓவருக்கு முந்தின பகலில் கிற்றியும், சுதர்லான்ட்டும் அவரது மாளிகையிலிருந்து வாகனத்தில் யாட்எல் நோக்கிப் பயணப்பட்டனர்.

''நீ இஸ்ரேலை விட்டுப் போகும் எண்ணம் துர்ப்பாக்கியமானது. எனக்குப் பிடிக்கவேயில்லை'', சுதர்லான்ட் குறைபட்டுக் கொண்டார்.

''இதைப்பற்றி நான் நீண்ட நேரம் யோசித்தேன், புரூஸ். அதுதான் நல்லது. அமெரிக்காவில் நாங்கள் சொல்வது போல் 'சிரித்துக் கொண்டிருக்கும் போதே அவர்களை விட்டுப் போய்விடு' என்பதற்கொப்ப போய்விடப் போகிறேன்.''

''குடிவரவு அதன் உச்சக்கட்டத்தைத் தாண்டி விட்டதாக நீ உண்மையில் நினைக்கிறாயா?''

முதல் வெள்ளம் வடிந்து விட்டதென்று சொல்லலாம். ஐரோப்பாவில் அடைபட்டிருக்கும் போலந்து யூதர்களைப் போன்று வெளியேறக் காத்துக் கொண்டிருக்கும் சிறிய சமூகங்கள் இருக்கக் கூடும். எகிப்தில் இருக்கும் யூதர்களின் தலையில் எந்நேரமும் இடிவிழக்கூடும். ஆனால் முக்கிய விஷயம் என்னவென்றால் எந்த நெருக்கடியையும் சமாளிக்கக்கூடிய ஆள்வலுவும், வசதிகளும் இப்போ இருக்கின்றன.''

''நீ சிறிய நெருக்கடிகளைப் பற்றி பேசுகிறாய். பெரியவைகளை என்ன செய்வது?''

''எனக்குப் புரியவில்லை.''

அமெரிக்கா அறுபதுலட்சம் யூதர்களையும், சோவியத்ரஷ்யா நாற்பது லட்சம் யூதர்களையும் கொண்டிருக்கின்றன. அவர்களைப்பற்றி என்ன சொல்கிறாய்?''

கிற்றி ஆழமாக சிந்தித்து விட்டு ''அமெரிக்காவில் இருந்து வரக்கூடிய யூதர்கள் இரண்டில் ஒருவகைப்பட்டவர்கள். ஒன்றில் பழைய முன்னோடிகளின் நாட்களை சேர்ந்த இலட்சிய வாதிகளாயிருப்பார்கள். அல்லது பொய்யான பாதுகாப்பிடத்தைத் தேடும், நரம்புக் கோளாறினால் அவதிப்படுபவர்களாக இருப்பார்கள். துன்பப்படுத்தப்படுவதற்கு பயந்து யூதர்கள் அமெரிக்காவில் இருந்து வரவேண்டியிருக்கக் கூடிய நாள் வரும் என நான் எதிர்பார்க்கவில்லை. அப்படி ஒரு நாள் வந்தால் அதைக்காண நான் உயிரோடிருக்க விரும்பவில்லை. ரஷ்யாவிலோ ஒருவரும் அறியாத புதிரான மனதை ஆட்கொள்ளும் விதத்திலான கதையொன்றிருக்கிறது'' என்றாள்.

''என் ஆர்வத்தை தூண்டி விட்டு விட்டாய்'' என்றார் சுதர்லாண்ட். சித்தாந்தங்களிலும், பரிணாம வளர்ச்சியினாலும் யூதர்களை விழுங்கி தங்கள் மக்களுடன் இரண்டறக் கலந்துவிட அவர்கள் முயற்சி செய்தது உங்களுக்குத் தெரியும். அவர்கள் வயதுபோனவர்களை இறக்கவிடுவதன் மூலம் புதிய தலை முறையை பிறப்பிலிருந்தே கொள்கை விளக்க மூளைச்சலவை செய்வதன் மூலமும் அவர்களின் சொந்த அடையாளத்தை இழந்து விடப்பண்ண முயற்சி செய் தார்கள். ரஷ்யாவில் யூத எதிர்ப்பு மனப்பான்மை இன்னும் நிலவுவது உங் களுக்கு தெரியும்தானே?''

''நான் கேள்விப்பட்டிருக்கிறேன்.''

போன பெரும்விழாநாளன்று புதினமான ஒரு விஷயம் நிகழ்ந்தது. சோவியத்துகள் தங்கள் முயற்சியில் தோல்வியை தழுவிக் கொண்டிருக்கிறார்கள் என்று நிரூபித்தது. இஸ்ரேலின் உயர் ஸ்தானிகர். மொஸ்கோவில் செயல்பட அனுமதிக்கப்பட்டிருக்கும் ஒரேயொரு சின்ன கோக்கிற்கு சென்றிருந்தார். முப்பது வருடகாலமௌனத்துக்கு பிறகு முப்பதாயிரம் யூதர்கள் அவரைக் காணவும், அவரைத் தொடவும் வீதிகளில் குழுமினார்கள். ஆமாம், ரஷ்யாவில் இருந்து ஒரு மாபெரும் குடியேற்ற அலை என்றைக்காவது ஒரு நாள் வரத் தான் போகிறது.

இந்தக் கதை சுதர்லாண்டை ஆழமாக பாதித்தது. அவர் மௌனமாக இருந்தார். அதே பழைய கதைதான். அவர் மனதில் அடிக்கடி எழும் சித்தாந்தம் அது. ''ஒரு யூதன் எப்போதுமே தன் அடையாளத்தை இழப்பதில்லை...அவன் எழுந்து நின்று தன் அடையாளத்தைப் பற்றி வெளிப்படையாக பிரகடனப் படுத்தும் உண்மையின் நாள் எப்போதாவது வருகிறது.'' அவர் தனது அரு மைத் தயாரைப் பற்றிய நினைவுகளில் மூழ்கினார்..

அவர்கள் பிரதான வீதியிலிருந்து யாட் எல் மொசாவ்வினுள் திரும்பி னார்கள். இவர்களை சந்திக்க சாராபென் கானான் கொட்டகையிலிருந்து வெளியே ஓடி வந்தார். கட்டியணைப்புகளும், பெருநாள் வாழ்த்துகளும் மழை போல் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

''நாங்கள் தான் முதலில் வந்திருக்கிறோமா?''

''டொவ் வந்துவிட்டான். ஏற்கனவே உள்ளே இருக்கிறான். வாருங்கள் உள்ளே வாருங்கள்.''

டொவ் கதவருகில் அவர்களை சந்தித்தான். சுதர்லான்டின் கையைப் பிடித்து குலுக்கியடொவ் கிற்றியை அன்போடு அணைத்துக் கொண்டான். அவள் அவனை கைக்கெட்டிய தூரத்தில் பிடித்துக்கொண்டு, ''மேஜர் டொவ் லண்டவ், ஒவ்வொரு முறையும் உன்னைக் காணும் போதும் நீ அதிகம் அதிகம் நல்ல தோற்றத்தைப் பெற்று விடுகிறாய்.''

டொவ்வை வெட்கம் சூழ்ந்து கொண்டது. சாராவின் வரவேற்பறையி லிருந்த ரோஜாப் பூக்களை சிறிது பொறாமையுடன் சுதர்லான்ட் பார்த்துக் கொண்டிருந்தார்,

''எங்கே எல்லாரும் போய்விட்டார்கள்?'' கேட்டாள் கிற்றி. ஜோர்தானா நேற்றிரவு தான் ஹைபாவுக்கு போனாள். விரைவாக வந்து விடுவதாக சொன்னாள்'' என்றாள் சாரா.

''நேற்று முன்தினம் நஹால் மிட்பாரிலிருந்து புறப்படப்போவதாக கரேன் எனக்கு கடிதம் எழுதியிருந்தாள். நேற்றுப் புறப்பட்டிருப்பாள். இங்கு வருவதற்கு போதியளவு நேரம் விட்டுத்தான் புறப்பட்டிருக்கிறாள். நேற்றிரவு ஹைபாவில்தங்கியிருக்கலாம். ஷாபெட்டுக்கு இந்தப்பக்கம்இலவச சவாரியில்தான் எப்படியும் வரவேண்டும்.''

கவலைப்படாதே செடெருக்கு சரியானநேரத்தில் வந்துசேர்ந்துவிடுவாள்.

கரேன் வந்து சேராததைப் பற்றி ஏமாற்றமாயிருந்தாலும் மற்றவர்கள் முன்னால் அதைக் காட்டிக் கொள்ளவில்லை. போக்கு வரத்து பெரும் நெருக்கடியாயிருக்கும். விசேடமாக விடுமுறை நாட்களில் பெரும் நெருக்கடியாயிருக்கும்' ''உங்களுக்கு ஏதாவது உதவி செய்ய வேண்டுமா?'' என்று கிற்றி சாராவை கேட்டாள்.

''நீங்கள் வெறுமனே உட்கார்ந்து மகிழ்ச்சியாயிருங்கள். ஏற்கனவே உன்னைக் கேட்டு மொஷாவ் காரியாலயத்திலிருந்து பத்துப்பன்னிரெண்டு தொலை பேசி அழைப்புக்கள் வந்துவிட்டன. ஹூலே முழுவதும் இருக்கும் உன் பிள்ளைகள் நீ வரப்போவதை அறிந்திருக்கிறார்கள், செடெருக்கு முதல்நாள் இங்கே வரப்போவதாக சொல்லியிருக்கிறார்கள்.'' சொல்லிவிட்டு சாரா சமைய லறைக்கு விரைந்தார்.

கிற்றி டொவ்வைப் பார்த்து ''உன்னைப் பற்றி நல்ல விஷயங்களை கேள்விப்பட்டேன்.'' என்றாள். அந்த இளைஞனோ தோள்களை குலுக்கி விட்டான்.

''அதிகம் அடக்கமாக இராதே டொவ். ஜோர்தான் குடிநீர் திட்ட மொன்றை நீ தயாரிப்பதாக அறிந்தேன்.''

''சிரியர்கள் எங்களை அனுமதித்தால் கைகூடும். அவர்கள் அப்படிச் செய்யமாட்டார்கள். விசித்திரம் தான். என் திட்டத்தால் இஸ்ரேலைவிட பத்துமடங்கு பயனடையப் போவது சிரியாவும், ஜோர்தானும் தான். இஸ்ரேலுக்குள் மேலதிகமாக ஒரு அவுன்ஸ் நீராவது வருகிறது என்றால் கட்டாயம் எதிர்ப்பார்கள்.''

''ஏன் என்ன பிச்சினை?'' சுதர்லான்ட் கேட்டார்,

''ஜோர்தான் நதி செல்லும் வழியை சில கிலோ மீற்றர்களுக்கு மாற்ற வேண்டும். அவர்களது அவதானிப்பாளர்கள் வந்து பார்க்கலாம் என்று கூறியும், நாங்கள் பாதுகாப்புக்காரணங்களுக்காக அப்படி செய்ய இருப்பதாக அரபுக்கள் கூறுகிறார்கள். ஏதாவது ஒரு ஒழுங்கு செய்யலாம் என்று நினைக்கிறேன்.''

ஆழமாக மூச்சை இழுத்துவிட்டான் டொவ், அவன் எதையோ நினைத்துக் குழம்பிக் கொண்டிருப்பதை சுதர்லான்ட் உணர்ந்தார். அவன் கிற்றியுடன் ஏதோ தனிமையில் பேசவிரும்புவதையும் உணர்ந்தார். அவர் மெதுவாக வர வேற்பறையின் அடுத்த பக்கத்துக்கு நகர்ந்து சென்று புத்தக அலுமாரியில் இருந்த புத்தகங்களில் தன்னை மூழ்கடித்துக் கொண்டார்.

''கிற்றி, கரேன் இங்கு வருமுன் அவளைப்பற்றி உங்களுடன் பேச வேண்டும் என்று நினைத்திருந்தேன்.'' என்றான் டொவ்.

''அதற்கென்ன கதைப்போம்'' என்றாள் கிற்றி.

''அவள் சரியான பிடிவாதக்காரியாக இருக்கிறாள்.''

''எனக்குத் தெரியும். சில வாரங்களுக்கு முன் நஹால் மிட்பார் சென்றிருந்தேன். நீண்ட நேரம் பேசிக்கொண்டிருந்தோம்.''

''எனக்கு அமெரிக்காவில் படிக்க ஒரு வாய்ப்புக் கிடைத்திருப்பதைப்பற்றி உங்களிடம் சொன்னாளா?''

''அவள் சொல்லவில்லை. ஆனால் எனக்குத் தெரியும். நான் இப்போ நீண்ட காலம் இஸ்ரேலிலேயே இருந்துவிட்டதால் நானும் ஒரு உளவுப்பிரிவை எனக்கெனவே அமைந்திருக்கிறேன்.''

''எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. அவள் தனது கிபுட்சுக்கு விசுவாசமாகஇருக்கிறாள். அவள் அதைவிட்டு விட்டு வர மறுத்து விடுவாள் என்று நினைக்கிறேன். என்னால்...இரு வருடங்களுக்கு அவளைப் பிரிந்து இருக்க முடியாது.''

''நான் அவளை சரிபண்ண முயலுகிறேன்'' கிற்றி புன்னகைத்தாள். இப்போது அவள் சிறிது இளகி வந்து கொண்டிருக்கிறாள். எல்லாம் நல்ல மாதிரி நடக்கும் என்றாள்.

முன் கதவு அகலத் திறக்கப்பட்டது. தனது செந்நிற கூந்தல் அலைபாய ஜோர்தானா தன் இரு கைகளையும் விரித்தபடி ''ஷலோம்...எல்லோருக்கும்'' என்றாள்.

''அம்மா இங்கே வாருங்கள். உங்களுக்கு ஒரு எதிர்பாராத விஷயம் ஒன்றை வைத்திருக்கிறேன்.'' ஜோர்தானா உரக்க அழைத்தாள். சாரா வெளியே விரைந்து வரவும் அரி கதவால் உள்ளே வரவும் சரியாக இருந்தது.

''அரி!''

அவனை அணைத்துக் கொண்ட அதே நேரம் கண்களில் ஆனந்தக் கண்ணீர் நிரம்ப தன் கைக்குட்டையையும் தானாகவே அவள் கை தேடி எடுத்துக் கொண்டது.

''அரி, ஏய் ஜோர்தானா, சிவப்பு மயிர் பிசாசே ஏன் அரி வருவதை சொல்லவில்லை?'' செல்லமாக கடிந்து கொண்டாள்.

''ஒரு ஆளுக்கு மேலதிகமாக உணவு வகைகள் செய்திருக்காமலா இருந்திருக்கப் போகிறீர்கள் என்று நினைத்தேன்'' என்றாள் தாயை அணைத்துக் கொண்டபடி.

''சரியான பசாசுகள்!''. அவர்களை நோக்கி தன் விரல்களை ஆட்டிய படி மன நெகிழ்ச்சியுடன் தன் கண்களைத் துடைத்துக் கொண்டாள். எங்கே பார்ப்போம் எப்படியிருக்கிறாய் என்று. ''மகனே அரி நீ களைத்திருக்கிறாய். கடுமையாக வேலை செய்கிறாய் போலியிருக்கிறது.''

இன்னொரு முறை கட்டியணைத்துவிட்டு கிரித்தார்கள்.

அப்போதுதான் அரி கிற்றி பிறெமென்ரை கண்டான். அவர்கள் இருவரும் ஒருவரையொருவர் உரமாக நீண்ட நேரம் நோக்கிக் கொண்டிருக்க அறையில் ஒரு அசௌகரியமான மௌனம் சூழ்ந்தது. இந்தச் சந்திப்பை மிகக் கவனமாக ஒழுங்கு பண்ணியிருந்த ஜோர்தானா ஒருவரிலிருந்து ஒருவருக்கு தன் பார்வையை செலுத்தினாள்.

கிற்றி மெதுவாக எழுந்திருந்து தன் தலையை ஆட்டினாள்.

''ஷலோம் அரி'' அவள் மெதுவாக கிணுகிணுத்தாள்.

''ஷலோம்'' பதிலுக்கு அவனும் முணுமுணுத்தான்.

''சிறிது ஆறுதலாக அமருங்கள்'' சொல்லிய ஜோர்தானா சாராவைப் பிடித்து இழுத்துக் கொண்டு சமையலறைக்குள் மறைந்தாள்.

டொவ் அரியின் கையைக் குலுக்கிவிட்டு ''ஷலோம் பிரிகேடியர் பென் கானான்'' என்றான். கிற்றி டொவ்வை அவதானித்துக் கொண்டிருந்தாள். அந்த இளைஞனின் கண்களில், 'நெகெவ்வின் மிருகங்களின்' தலைவனாகக் கிட்டத்தட்ட ஒரு இதிகாச நாயகனைப் போல் வளர்ந்து விட்ட அரியின் பேரில் கொண்ட மதிப்பு நிரம்பி வழிந்தது.

''ஷலோம் டொவ். நீ நன்றாகவே இருக்கிறாய். பாலைவனத்தில் இருக்கும் எங்களுக்கு நீ தண்ணீரைக் கொண்டு வரப்போவதாகக் கேள்விப்பட்டேன்.''

''நாங்கள் அதற்காக மிகக் கடுமையாக உழைப்போம், பிரிகேடியர்''. சுதர்லான்ட்டும், அரியும் கைகளைக் குலுக்கிக் கொண்டனர். உங்கள் கடிதம் கிடைத்தது சுதர்லான்ட். நீங்கள் எலாத்துக்கு எந்த நேரம் வந்தாலும் வரவேற்பதற்குக் காத்திருக்கிறேன்.'' ''நெகெவ்வை நேரில் காண வேண்டுமென்று மிகுந்த ஆவலாக இருக்கிறேன். ஒரு வசதியான நேரத்தை ஒழுங்கு பண்ணிக் கொள்ளலாம் அல்லவா?''

''அப்படியே செய்யலாம், உங்களுடைய தோட்டம் நன்றாக வளர்ந்ததா?''

நான் இதைச் சொல்லத்தான் வேண்டும். உங்களுடைய அம்மாவின் ரோஜாக்களைக் கண்டுதான் நான் முதன் முதலாகப் பொறாமைப்பட வேண்டியுள்ளது. அந்த அளவுக்கு அது நன்றாக வந்திருக்கிறது. என்னுடைய மாளிகையில் ஒரு சாயந்தரத்தைக் கழிக்காமல் எலாத் போக உன்னை அனுமதிக்கப் போவதில்லை.''

''பார்ப்போம்''

சுதர்லான்ட், அரிக்கும் கிற்றிக்குமாகத் தன் பார்வையைச் செலுத்தியதும் மீண்டும் ஒரு அசௌகரியமான மௌனம் அறையில் சூழ்ந்து கொண்டது. அவள் அரியின் மீது வைத்த கண்ணை எடுக்கவேயில்லை.

சுதர்லான்ட் டொவ்வின் அருகில் நடந்து சென்று அவனை அழைத்துக் கொண்டு அறையிலிருந்து விரைவாக வெளியேறிப் போகும் போதே ''மேஜர் லன்டவ், நீங்கள் எப்படி ஹுலே வாவியைக் கலிலிக் கடலுக்குள் இறக்கப் போகிறீர்கள் என்பதைச் சொல்லுங்கள். இது ஒரு பெரிய வேலை அல்லவா?...'

அரியும் கிற்றியும் மட்டுமே தற்போது அறையிலிருந்தனர்.

''நீங்கள் நலமாகவே இருக்கிறீர்கள்'' என்றாள் கிற்றி கடைசியாக.

''நீங்களும் தான்.''

திரும்பவும் அவர்களுக்கிடையில் ஒரு மௌனம் நிலவியது.

''நான், ...ம் .....கரேன் சிறுமி எப்படியிருக்கிறாள். இங்கு வருவாளா?''

''ஆமாம். அவள் வருவாள். எந்நேரமும் அவளை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.''

''சிறிது தூரம் நடந்து..... நடந்து சென்று விட்டு வரலாமா? வெளியே சிறிது உற்சாகமாயிருக்கும்.''

''சரி போகலாம்'' கிற்றி சொன்னாள்.

அவர்கள் வேலியைக் கடந்து, வயல்களின் ஓரமாக நடந்து, ஒலிவ்த் தோப்பைக் கடந்து ஜோர்தான் ஆற்றுக்கு வரும்வரை பேச்செதுவுமில்லாமல் நடந்தார்கள். இளவேனிற் காலம். பிறந்துவிட்டதற்கான சான்றுகள் காற்றின் சுகந்தத்திலும், காணும் எல்லாவற்றிலும் நிறைந்திருந்தன.

அரி இரண்டு சிகரெட்டுக்களைப் பற்றவைத்து ஒன்றைக் கிற்றிக்குக் கொடுத்தான். அவள் தன் ஞாபகத்தில் சிறை வைத்திருக்கும் உருவத்தைவிட மிக அழகாகத் தோன்றுகிறாள் என அரி நினைத்தான்.

அரி தன்னை வைத்த கண் வாங்காமல் பார்ப்பதைக் கிற்றி உணர்ந்தாள். ''எனக்குச் சரியான வெட்கமாக இருக்கிறது..... எலாத்துக்கு இதுவரை

வராததையிட்டு. பீர்ஷீபாவிலிருக்கும் கொமாண்டர் என்னை விமானத்தில் அழைத்துப் போக ஐந்தாறு முறை முன்வந்தார். நான் அதனைப் பார்க்கத்தான் வேண்டும் அல்லவா?''

''அங்கு மலைகளும், பாய்கின்ற நீரும் உண்மையிலேயே மிக அழகானவை.,

''நகரம் வளர்ந்து வருகிறதா?''

''நாங்கள் தடையை உடைத்து, கிழைத் தேயத்துக்கான துறைமுகமாக அதைத் திறந்து விட்டால் உலகிலேயே வேகமாக வளரும் நகரம் அதுவாகத் தான் இருக்கும்.''

''அரி ... அங்கே நிலைமை எப்படி இருக்கிறது?'' ஆர்வத்துடன் கேட்டாள்.

''இதுவரை எப்படியிருந்ததோ அப்படி ..... இனி எப்படி இருக்கப் போகிறதோ அப்படி இருக்கிறது.''

''பெதாயின் கும்பல்கள் வர வர மோசமாக நடந்து கொள்கிறார்கள் அல்லவா?''

அந்தப் பரிதாபத்துக்குரிய ஜீவன்கள் அல்ல எமது உண்மையான எதிரிகள். முழு மத்திய கிழக்கையும் கைப்பற்றும் நோக்கில் படைகளைக் குவித்துக்கொண்டிருக்கிறார்கள். நாங்கள் தப்பிப்பிழைத்திருக்க வேண்டுமானால் நாங்கள் முதலில் தாக்க வேண்டும். அரி சிரித்தான்.

''எனது பையன்கள் என்ன சொல்கிறார்கள் தெரியுமா? எல்லையைக் கடந்து சினாய்மலையைப் பிடித்து அங்கே கடவுளைத் தேடிக் கண்டு பிடித்துப் பத்துக் கட்டளைகளை அவரிடமே திருப்பிக் கொடுத்துவிட வேண்டுமாம். அதனால் தான் எங்களுக்கு இவ்வளவு பிரச்சினைகளாம்.....''

நுரைத்துக் கொண்டே ஓடிக்கொண்டிருந்த ஆற்றைச் சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு, ''எனக்குக் கரேனைப் பற்றித்தான் அதிகம் கவலை. அவள் காஸாப் பகுதில் இருக்கிறாள்... .. நஹால் மிட்பார்.''

''பயங்கரமானஇடம்தான். ஆனால் அங்கே உள்ள இளைஞர்களும்திறமையானவர்கள். சமாளித்துக் கொள்வார்கள்.''

ஆம். அரி அந்தப் பாணியில் தான் மறுமொழி சொல்ல முடியும் என கிற்றி நினைத்துக் கொண்டாள்.

''நீங்கள் அமெரிக்காவுக்குத் திரும்பப் போவதாக கேள்விப்பட்டேன், கிற்றி ஆமெனத் தலையை அசைத்தாள்.

''நீங்கள் பிரசித்தி பெற்ற பெண்ணாக வந்து விட்டீர்கள்.''

''அளவுக்கதிகமான ஆர்வத்தால் அப்படிச் சொல்கிறார்கள்.''

''நீங்கள் அடக்கத்தைக் காட்டுகிறீர்கள்.''

''நான் இல்லாமல் இஸ்ரேல் சீவிக்கும் என்று நிச்சயமாக நினைக்கிறேன்,''

''நீங்கள் ஏன் போகிறீர்கள்?''

''டொவ்வைக் கண்டீர்கள் தானே?.... இப்போ அவன் மேஜர் டொவ் லன்டவ். அவன் நல்லதொரு இளைஞன். கரேனை நல்ல கரங்களில் ஒப்படைத்துச் செல்கிறேன். எனக்குத் தெரியவில்லை..... சில வேளை எனக்குக் கிடைக்கும் வரவேற்புக் குறைவதை நான் விரும்பவில்லையோ என்னவோ ..... இங்கே நான் முழுதாக இணைய முடியவில்லையோ..... வீட்டைப்பற்றிய கவலை பிடித்திருக்கலாம்..... காரணங்களும் ஏராளமாக இருக்கின்றன. இல்லாதது போலவும் இருக்கின்றது. எப்படியோ நான் ஒரு வருட விடுமுறை எடுத்துக் கொண்டு போய் நன்றாகச் சிந்திக்க விரும்புகிறேன்..... வெறுமனே சிந்திக்கவேண்டும்.''

''சில வேளைகளில் நீங்கள் செய்வது புத்திசாலித்தனமான காரியமாகவும் இருக்கலாம். அன்றாட வாழ்க்கையின் அழுத்தங்கள் இல்லாமல் சிந்திக்க முடிவதும் எவருக்கும் நல்லதுதான். இந்த ஆடம்பரமான விஷயம், என் தந்தையாருக்கு இறுதி இரண்டு வருடங்கள் வரை மறுக்கப்பட்டிருந்தது.''

திடீரென்றுஇருவருக்குமே பேசிக்கொள்ளவார்த்தை யெதுவுமின்றிப்போய் விட்டது.

''நாங்கள் வீட்டுக்குத் திரும்பிப் போவோம். கரேன் வரும்போது, அங்கே இருக்க விரும்புகிறேன். அதை விடவும் 'என் பிள்ளைகள்' என்னைச் சந்திக்க வரக்கூடும்'' என்றாள் கிற்றி.

''கிற்றி தயது செய்து ஒரு நிமிடம்.''

''என்ன?''

''ஜோர்தானாவுக்கு நீங்கள் அளித்த நட்புக்காக மிகவும் நன்றியுடையவனாக இருக்கிறேன் என்று உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். நீங்கள் அவளை நல்லமாதிரி நடத்தியிருக்கிறீர்கள். அவளது அமைதியின்மை பற்றி நான் மிகவும் கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன்.''

''அவள் மனமகிழ்ச்சியில்லாத பெண்ணாகவே இருக்கிறாள். அந்தப்பையனை எவ்வளவு தூரம் காதலித்தாள் என்று ஒருவருக்கும் தெரியாது.''

''இது எப்போ முடியும்.''

''எனக்குத் தெரியாது. இங்கு அதிக காலம் வாழ்ந்து விட்டதாலோ என்னவோ நானும் ஒருஉறுதியானநல்லவைதான் நடக்கும் எனஎதிர்பார்ப்பவர்களாக வந்து விட்டேன். ஜோர்தானாவின் வாழ்விலும் என்றோ ஒரு நாள் மகிழ்ச்சி ததும்பலாம்.''

கேட்கப்படாத கேள்விகள்..... கேட்கப்படாத வார்த்தைகள். அவர்களுக் கிடையில் தொங்கிக் கொண்டிருந்தன. அவளுக்கு என்றாவது மகிழ்ச்சி கிடைக் குமா? ..... அவனுக்கும் கிடைக்குமா என்றாவது?

''நாங்கள் திரும்பிப் போவோம்'' கிற்றி சொன்னாள்.

அன்று பகல் முழுவதும் கான்டப்னாவிலும், வேறு பத்துப்பன்னிரெண்டு ஹுலே குடியேற்றங்களிலிருந்தும் கிற்றியின் 'பிள்ளைகள்' அவளைக்காண வந்த படி இருந்தார்கள். யாட் எல் மக்கள் அரியைக்காண வந்தார்கள். பென்கானான் விட்டுக்கு தொடர்ந்து போக்குவரத்து நடந்து கொண்டிருந்தது. அவர்கள் எல் லோரும் கிற்றியை முதல்தரம், மேம்போக்கான நிலையிலும் அசௌகரியமான கண்டதை ஞாபகப்படுத்திக் கொண்டனர். இப்போதோ அவர்களோடு அவர்கள் பாஷையிலேயேஉரையாடிய அவளை எல்லோரும் மதிப்போடு பார்த்தனர்.

அவளது பிள்ளைகளில் அநேகமானோர் அவளோடு சில நிமிடங்களை செலவிட அதிக தூரத்திலிருந்து வந்திருந்தார்கள். சிலர் புதிதாகத் தாங்கள் மணம் முடித்திருந்த மனைவியை அல்லது கணவரை காட்டி அறிமுகப்படுத்தி னார்கள். கிட்டத்தட்ட எல்லோருமே இஸ்ரேல் ராணுவத்தின் சீருடைகளில் இருந்தார்கள்.

சாயந்தரம் நெருங்கியபோது கூட கரேன் வந்து சேராததால் கிற்றி மிகவும் கவலையடைந்தாள். பலமுறை டொவ் அவள் வரும் அறிகுறி தெரிகிறதா என்று பார்க்க பிரதான வீதிக்கு சென்று வந்தான்.

இரவு நெருங்கியபோது சந்திக்க வந்திருந்த எல்லோரும் தங்கள் தங்கள் செடெரை ஆயத்தப்படுத்தும் முகமாக சென்றுவிட்டிருந்தனர்.

''இந்தப் பெண் எங்கே போய்விட்டாள்?'' ஏமாற்றத்தால் விளைந்த எரிச்சலில் கிற்றி வெடித்தாள்.

''சில வேளை சுற்றுவழியில் வருகிறாளோ என்னவோ? என்றான் டொவ். அப்படியானால் தொலைபேசியில் தான்தாமதமாக வருவேன் என்று அறி விப்பதுதானே. இப்படி யோசனையில்லாமல் காரியங்களை செய்வது கரேனின் வழக்கமில்லையே,'' என்றாள் கிற்றி.

''என்ன கதை இது கிற்றி. இன்றைக்கு ஒரு தொலைபேசி அழைப்பை எடுக்க பாராளுமன்றத்திலே ஒரு மசோதாவை நிறைவேற்றினால் தான் முடியும் என்பது போல் கடினமானதென்று தெரியும்தானே.''

அரி கிற்றி அவதிப்பட்டுக் கொண்டிருப்பதைக் கண்டு, ''நான் மொஷாவ் காரியாலயத்துக்கு சென்று ஒரு முன்னுரிமை தொலைபேசி அழைப்பை அவளது கிபுட்சுக்கு எடுத்து அவள் கிபுட்ஸோடு கதைக்கிறேன். சிலவேளை இடையில் அவள் எங்கு தங்குவாள் என்று அவர்களுக்கு தெரிந்திருக்கலாம். அவளைத் தேடிப்பிடிக்க இலகுவாக இருக்கும்.''

''அப்படிச் செய்தால் நல்லதுதான்.'' கிற்றி சொன்னாள்.

அரி போய் சிறிது நேரத்துக்கு பிறகு சாரா உள்ளே வந்து செடெர் மேசை எல்லோரும் பார்வையிட தயாராக இருப்பதாக தெரிவித்தார். ஒரு மாத உழைப்புக்கு கிடைக்கப்போகும் அவளது வெற்றியின் கணம் இது. அவள் உணவருந்தும் அறையின் கதவைத் திறந்துவிட விருந்தினர்கள் ஆ . ஆ . ஊ . ஊ என வியந்து கொண்டே நுணிக்காலால் நடந்து உள்ளே வந்தனர். உண்மையில் விடுதலைத் திருநாளுக்கு தகுதியான ஒரு மேசையாக அது விளங்கியது.

வெள்ளிப் பாத்திரங்களும், மற்றைய கோப்பைகளும் ஒளிச்சுடர்களை உமிழ்ந்தன. அவை வருடத்தில் ஒருநாள், இந்த பரிசுத்தமான நாளில் மட்டும் தான் பாவிக்கப்படுபவையாக இருந்தன. வெள்ளியினாலான மெழுகுவர்த்தித் தண்டுகள் மேசை நடுவில் பளீரிட்டன மெழுகுதிரி தண்டுகளுக்கு அடுத்ததாக சித்திர வேலைப்பாடுகளமைந்த தனி வெள்ளியாலான ஒரு கிண்ணம் காணப் பட்டது. அது 'எலியாசின் கிண்ணம்' என அழைக்கப்படும். அது அங்கே திராட்சை இரசத்தால் நிரப்பப்பட்டு நீர்க்கதிகியை வரவேற்க வைக்கப்படுவதாகும். அந்த கோப்பையிலிருந்து பானம் செய்ய அவர் வரும்போது, இரட்சகரின் முன்னோடி யாக வருவதாக ஐதீகம்.

விசேட இரச, வெள்ளிக் கோப்பைகள் அந்தந்த இடங்களில் இருந்தனக் இந்தக் கோப்பைகள் கடவுளின் நான்கு வாக்குறுதிகளான முன்னழைத்துச் செல்லுதல், விடுவித்தல், ஈடேற்றுதல், இஸ்ரேலின் குழந்தைகளை எடுத்து கொள்ளல் ஆகியவற்றை நினைவு கூரும் வகையில், செடெரின் போது நான்கு முறைகள் நிரப்பி அருந்தப்படும். மகிழ்ச்சியை குறிக்கும் இரசமானது, பாரோ வுக்கு எதிரான பத்துக் கொள்ளை நோய்களைப் பற்றி வாசிக்கப்படும் போதும், பாரோவின் இராணுவம் செங்கடலில் மூழ்கடிக்கப்பட்டதை நினைவுகூரும் பாட லான மிரியத்தின் பாடல் பாடப்படும் போது உறிஞ்சிக் குடிக்கப்படும்.

தலைமை ஆசனத்தில் வாசிப்பவர் வசதியாக இருக்கும் வண்ணம் தலை யணை ஒன்று வைக்கப்பட்டிருந்தது. புராதன காலத்தில் சுதந்திர மனிதர்கள் தான் வசதியாக இருக்கலாம். அடிமைகள் நேராக இறுக்கமாக இருக்கப் பண் ணப்பட்டார்கள்.

மத்தியில் மெழுகுதிரி தண்டுகளின் அருகில், அடையாளமான உணவு களைக் கொண்டிருக்கும் தங்கப்பாத்திரம் ஒன்று இருந்தது. எகிப்தில் இருந்து இஸ்ரேலின் மக்கள் புளிக்கவைக்காத மாவில் செய்யப்பட்ட ரொட்டியை கொண்டு போக வேண்டிய அளவுக்கு அவசர அவசரமாக எகிப்திலிருந்து வெளி யேறவேண்டி இருந்ததை ஞாபகமூட்டும் வகையில், புளிக்காத மாவில் செய்த மறஸோஸ் எனப்படும் ரொட்டியும் இருந்தது. சுதந்திர மனவுறி காணிக்கையை குறிக்கும் முட்டையும் இருந்தது. இளவேனிற்காலம் வரப்போவதைக் குறிக்கும் நீர்ப்பாத்திரம், மகாதேவாலயத்தில் இறைவனுக்கு அளிக்கப்பட்ட காணிக்கை களை நினைவு கூர ஆட்டின் முழங்காலுக்கும், கணுக்காலுக்கும் இடைப்பட்ட பகுதி, ஆகியனவும் இருந்தன. விதைகள், சதுரமாக வெட்டப்பட்ட அப்பிள் கள் கொண்ட கலவையும், மாறர் எனப்பட்ட கசப்பான மூலிகைகளும் இருந்தன

சாரா செல்லமாக அவர்களை வெளியே விரட்ட எல்லோரும் வரவேற் பறைக்கு சென்றனர். அவர்கள் அங்கே வந்ததும் அரியை முதலில் கண்டது

ஜோர்தானாதான். அவன் வெளிறியமுகத்தோடும், அதிர்ச்சியுற்ற கண்களோடும் கதவு நிலையில் சாய்ந்து கொண்டு நின்றிருந்தான். இப்போது எல்லோரும் அவனை வெறித்துப் பார்த்தனர். அவன் பேச முயன்றான். ஆனால் முடிய வில்லை, ஒரு கணம் கடந்ததும் விஷயம் எல்லோருக்கும் புரிந்துவிட்டது, ''கரேன்! எங்கே அவள்;'' அலறினாள் கிற்றி. அரியுடைய தாடைகள் அசைந்தன. தலை கவிழ்ந்து கொண்டது.

''எங்கே அவள்!''

கரேன் இறந்துவிட்டாள். காஸாவிலிருந்து வந்த பெதாயீன் கும்பல் ஒன்றினால் நேற்றிரவு கொலை செய்யப்பட்டுவிட்டாள்.''

கிற்றி துயரமான அலறல் ஒன்றை வெளிவிட்டு விட்டு நிலத்தில் உணர் விழந்து துவண்டு விழுந்தாள்.

கிற்றி கண்களைவெட்டிவெட்டி திறந்துகொண்டாள். புருசும், ஜோர்தானா வும் அவளருகே மண்டியிட்டு அமர்ந்தனர். விஷயம் திரும்பவும் ஞாபகத்தில் உறைக்க அவள் ஒரு பக்கமாக திரும்பி விம்மத் தொடங்கினாள். கண்கள் வீங்கிக் கொண்டன.

''என்னுடைய குழந்தை . என்னுடைய குழந்தை .'' அவள் மெதுவாக எழுந்து அமர்ந்தாள். ஜோர்தானாவும் புருசும் அதிர்ச்சியில் உறைந்து போயி ருந்தனர். அவர்கள் சோர்ந்து போய் துக்கத்தில் மூழ்கியிருந்தார்கள்.

''கரேன் போய்விட்டாள்.. கரேன் போய்விட்டாள்.''

''அவளுக்காக நான் இறந்திருக்கலாமே...'' என்று ஜோர்தானா அழு தாள்.

கிற்றி தட்டுத்தடுமாறி எழுந்து நின்றாள்.

''கீழே படுத்திரு அம்மா...தயவு செய்து கீழே படுத்துக்கொள்''சுதர் லாண்ட் சொன்னார்.

அவரின் கைகளை உதறித் தள்ளிய அவள், ''நான் டொவ்வைப் பார்க்க வேண்டும். அவனிடம் போக வேண்டும்.''

தட்டுத்தடுமாறி சென்ற அவள் இன்னொரு அறையின் மூலையொன்றில் உள்வாங்கிய கண்களுடனும், சோகத்தால் அவலட்சணமாகிப் போயிருந்த முகத் துடனும் உட்கார்ந்திருப்பதைக் கண்டாள். விரைந்து போய் அவனைதன் கரங் களுள் அரவணைத்துக் கொண்டாள்.

''டொவ் . என் அருமை டொவ்'' அழுதாள் கிற்றி.டொவ் தன்தலையை அவள் நெஞ்சில் புதைத்துக் கொண்டவன், மனமுடைந்து போய் அழுதான். கிற்றி ஆதரவாக அவனை அங்கும் இங்கும் ஆட்டிக் கொண்டே இருவருமாக

பென் கானான் கொட்டகையில் இருள் சூழும் வரை அழுதார்கள். ஒருவரி டமும் அழுவதற்கு கண்ணீர் மீதமிருக்கவில்லை.

''நான் உன்னோடேயே இருப்பேன் டொவ். நான் உன்னைப் பார்த்துக் கொள்வேன் டொவ். இதைத் தாங்கிக் கொள்ள முயற்சிப்போம் டொவ்.''

அந்த இளைஞன் தடுமாறியபடி எழுந்து நின்றான்.

''நான் சமாளித்துக் கொள்வேன் கிற்றி. நான் தொடர்ந்து வாழத் தான் போகிறேன். அவள் என்னைப்பற்றி பெருமை கொள்ள வைப்பேன்.''

''டொவ் உன்னைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். இதன்காரணமாக திரும்பி பழைய வழிமுறைகளுக்கு போய்விடாதே.''

''இல்லை. நான் அதைப்பற்றி யோசித்தேன். கரேனால்அவர்களைவெறுக்க முடியாததால் என்னாலும் வெறுக்க முடியாது. ஒரு சேராசியைக்கூட அவளால் வெறுக்க முடியாது. அவர்களை வெறுப்பதால் அவர்களை ஒருபோதும் வெல்ல முடியாது, என்று அவள் சொல்லுவாள்.''

சாராபென்கானான் கதவருகில் வந்து நின்றார். ''எல்லோரும் துன்பத் தால் உடைந்து போயிருக்கிறோம், என்று எனக்குத் தெரியும். ஆனால் செடெர் சடங்குகள் தொடர்ந்து நடக்க வேண்டும்.'' என்றார் கழிவிரக்கத்துடன்.

கிற்றி, டொவ்வை பார்க்க அவன் தலையை அசைத்தான். எல்லோரும் துன்பமாக ஒரு ஊர்வலமாக உணவருந்தும் அறைக்குச் சென்றனர். ஜோர்தானா அறைக்கதவுக்கு வெளியே கிற்றியை நிறுத்தினாள்.

''அரி தொழுவத்திலே தனியே அமர்ந்திருக்கிறார். தயவு செய்து அவரிடம் போகிறீர்களா?

கிற்றி கொட்டகையிலிருந்து நடந்து சென்றாள். மொசாவ்வின் மற்றைய வீடுகளின் வெளிச்சங்களை பார்த்தாள் அந்த வீடுகளில் செடர் தொடங்கி விட்டது. அந்த கணத்தில் அந்தந்த வீடுகளில் தந்தைமார்கள், காலம் கால மாக சொல்லி வந்தபடியும், இறுதிக் காலம்வரை எதிர்காலத்தில் சொல்லப் போவது போலவும், புராதன கதையான எகிப்திலிருந்து யூதர்கள் வெளியேறி யது பற்றிய கதையை தங்கள் தங்கள் குடும்பத்தினருக்கு சொல்லிக்கொண்டிருப் பார்கள். மழை சிறிய அளவில் விழத்தொடங்கியது தொழுவத்திலிருந்து வந்து கொண்டிருந்த லாந்தர் விளக்கொன்றின் தடுமாறும் ஒளியை நோக்கி கிற்றி விரைவாக நடந்து சென்றாள். அவள் உள்ளே பிரவேசித்து சுற்றுமுற்றும் பார்த் தாள். ஒரு வைக்கோல் கட்டின் மேல் அவளுக்கு தன் முதுகைக் காட்டியபடி அரி அமர்ந்திருந்தான். அவனுக்குப் பின்னால் போய் நின்றவள், அவன் தோள் களில் கையை வைத்தாள்.

''அரி செடெர் தொடங்கும் நேரமாகிறது.''

அவன் திரும்பி அவளைப் பார்த்தான். யாரோ ஓங்கி அறைந்ததுபோல் அவள் பின்னால் ஓரடி போய் நின்றாள். இதுவரை தான் எந்த மனித ஜீவனது முகத்திலும் கண்டிராதவகையில், துன்பத்தால் விகாரமாகி இருந்த அரியின் முகத்தைக் கண்டு அவள் அதிர்ச்சியடைந்தாள். அரிபென் கானாவின் கண்கள் சோகத்தால் நிரம்பியிருந்தன. அவன் அவளைப் பார்த்தான். ஆனால் அவளை காண்பதை உணர்வதாக தெரியவில்லை. அவன் திரும்பி முகத்தை கைகளில் புதைத்துக்கொள்ள தோள்கள் தோல்வியினால் துவள்வது போல் துவண்டன...

''அரி செடெரை நாம் நிறைவேற்றவேண்டும்''

''என் வாழ்நாள் முழுவதும்...என்வாழ்நாள் முழுவதும் என் அன்புக்குரியவர்களை அவர்கள் கொல்வதைப் பார்த்துக்கொண்டிருந்தேன். அவர்கள் எல்லோருமே போய்விட்டார்கள் . எல்லோருமே.''

அந்த வார்த்தைகள் தாங்கமுடியாத விரக்தித் தன்மையின் எட்டமுடியாத ஆழத்திலிருந்து வந்தன. தனக்கு முன்னால் இப்போது வித்தியாசமாக மாறியிருந்த கிட்டத்தட்ட தெளிவாகத் தெரியக்கூடிய விதத்தில் துன்பத்தால் வாட்டப்படுகிற உருவத்தைக் கண்டு வியப்பும், பாதி பயமும் கொண்டாள்.

நான் அவர்களுடன் இருக்கிறேன். நான் ஆயிரம் முறை இப்படி இறந்திருக்கிறேன் உள்ளே நான் வெறுமையாயிருக்கிறேன். என்னுள் ஒன்றுமில்லை.''

''அரி . அரி...''

''இந்தக் குழந்தைகளை ஏன் இப்படியான இடங்களில் சீவிக்க நாம் அனுப்ப வேண்டும் என்னுடைய அருமையான குழந்தை...அந்த தேவதை...ஏன் ...அவளையும் ஏன் அவர்கள் கொல்ல வேண்டும்...?''

அரி தட்டுத்தடுமாறி எழுந்து நின்றான். அவனை அரி பென்கானானாக்கிய பலம், சக்தி, கட்டுப்பாடு எல்லாமே அவனை விட்டுப் போய்விட்டன. இது ஒரு களைத்துப்போயிருந்த, அடிபட்டுத் தேய்ந்து போன முண்டம் மட்டுமே.

சூரியன் உதிக்கும் ஒவ்வொரு தடவையும் ஏன் எங்கள் உரிமைக்காக திரும்பத் திரும்ப போராட வேண்டியிருக்கிறது?

வருடக்கணக்கான பதற்றம், வருடக்கணக்கான போராட்டம், வருடக் கணக்கான மனச்சிதைவுகள் எல்லாமே மாபெரும் அலையாக பொங்கிப்பிரவா கித்தன. அரி தனது துன்பம் நிரம்பிய முகத்தை மேலே வானத்தை நோக்கி நிமிர்த்தி தன் முஷ்டிகளையும் தலைக்கு மேலே உயர்த்தினான்.

''கடவுளே! கடவுளே! எங்களை ஏன் எங்கள் பாட்டில் விடுகிறார்க ளில்லை! ஏன் எங்களை, அவர்கள் வாழ விடக்கூடாது'' அவனுடைய சக்தி வாய்ந்த தோள்கள் தொங்கிப்போக கைகள் மார்பில் இறங்கின. அவன் நின்ற படியே மெலிதாக நடுங்கினான்.

''ஓ அரி!... அரி! கிற்றி அழுதாள்,'' உனக்கு நான் என்ன செய்துவிட் டேன்! உன்னை நான் புரிந்து கொள்ளவில்லை? அரி என் அன்பே... நீ எப்படி துன்பப்பட்டிருக்க வேண்டும். உன்னை மேலும் துன்பப்படுத்தியதற்காக எனக்கு மன்னிப்புக் கிட்டுமா?

அரி களைத்து வடிந்து போயிருந்தான். அவன் ஒரு லாயத்தின் அருகால் நடந்து வந்தான். ''நான் நானாக இல்லை''. அவன் முணுமுணுத்தான். தயவு செய்து இங்கே நடந்ததை யாரும் அறியப்பண்ணி விடாதே.''

''நாங்கள் உள்ளே போவது நல்லது. அவர்கள் எங்களுக்காக காத்துக் கொண்டிருக்கிறார்கள். '' என்றாள் கிற்றி.

''கிற்றி!''

அவன் மெதுவாக நடந்து அவள் அருகில் வந்து கண்களுக்குள் பார்க்க கூடிய தூரத்தில் நின்றான். மெதுவாக கீழே மண்டியிட்டவன் கைகளை அவள் இடுப்பைச் சுற்றிக் கட்டிக்கொண்டு தலையை அவளோடு சேர்த்து இறுகப் பிடித்துக் கொண்டான்.

அரி பெண் கானான் அழுதான்.

அது கேட்பதற்கு ஒரு அந்நியமான கொடுமையான சத்தமாக இருந்தது. இந்தக் கணத்தில் அவன் வாழ்நாளில் இவ்வளவு நாளும் அழத்துணியாத பல சந்தர்ப்பங்களுக்காகவும் அழுத அவன் அழுகையில், அவனது ஆத்மா சுண்ணீ ராக பெருக்கெடுத்தது. ஆழமே தெரியாத துன்பத்தோடு அவன் அழுதான்.

கிற்றி அவன் தலையை தன்னோடு சேர்த்தணைத்துக் கொண்டு அவன் கேசக் கற்றைகளை வருடிவிட்டபடி ஆறுதலான வார்த்தைகளை சொல்லி தேற்றிக்கொண்டிருந்தாள்.

''என்னை விட்டுப் போகாதே'' அரி கெஞ்சுவது போல் அழுதான்.

இந்த வார்த்தைகளைக் கேட்க அவள் எப்படி ஆவலாயிருந்தாள்! ஆமாம் நான் இருப்பேன், இந்த இரவு சில நாளைகளுக்குமாக, ஏனெனில் அரி உனக்கு இப்போ நான் தேவை என்று கிற்றி நினைத்துக் கொண்டாள். உன் வாழ்க் கையில் முதல் தடவையாக கண்ணீரையும் தாழ்ச்சியையும் இப்போ நீ காட்டி னாலும், நீ அவைகளைப்பற்றி வெட்கப்படுகிறாய். இன்றைக்கு நான் உனக்கு தேவைப்படலாம். ஆனால் நாளைக்கு மீண்டும் அரிபென் கானான் ஆகிவிடுவாய். துன்பத்துக்குப் 'பழகிப் போய்விடுகிற அகந்தையான, சக்திவாயந்த அரி பென் கானான்களின் மொத்த உருவாகிவிடுவாய் .. அதற்குப் பின் என்னை உனக்கு அதற்கு மேல் தேவைப்படாது அவள் நினைப்பு இப்படியாக நீண்டது.

அவள் அவனுக்கு எழுந்து நிற்பதற்கு உதவி செய்து விட்டு கண்ணீரை துடைத்துவிட்டாள். அவன் பலவீனமாயிருந்தான். கிற்றி அவனது தோள்க ளுக்கு மேலாக தன் கைகளை வைத்து இறுக அணைத்துக் கொண்டாள்.

'.பரவாயில்லை அரி என்மீது நீசாய்ந்து கொள்ளலாம்.'' அவர்கள் தொழுவத்திலிருந்து மெதுவாக நடந்து சென்றார்கள். சாளரத்துக்கூடாக சாரா மெழுகுதிரிகளை கொழுத்திவிட்டு பிரார்த்தனை ஒன்றை சொல்வதைக் காணக்கூடியாதாக இருந்தது.

அவன் நின்று அவளை விட்டு விட்டு தன்னை சுதாகரித்துக்கொண்டு திரும்பவும் தன் சுய பலத்தோடு உயரமாக நின்றான்.

அவ்வளவு விரைவிலேயே அவன் திரும்பவும் அரிபென் கானானாகி விட்டான்.

''நாம் உள்ளே போகுமுன் உனக்கு ஒன்றை சொல்ல வேண்டும். உன்னைக் காதலிப்பதைப்போல் நான் டப்னாவை ஒரு போதும் காதலிக்கவில்லை என்று சொல்ல வேண்டும். என்னோடு' பங்கிட வேண்டிய வாழ்க்கை எப்படியிருக்கும் என்று உனக்குத் தெரியும்தானே?''

''நான் அறிவேன் அரி.''

நான் மற்ற மனிதர்களைப் போலல்ல .. இந்த நாட்டின் தேவைகளுக்கு முன்னால், மற்றக் காரியங்களுக்கு முன்னால் எனக்கான உன்தேவை முக்கியம் எனை நான் சொல்ல வருடக்கணக்காகலாம்... ஏன் சொல்ல முடியாமலேபோக லாம். உன்னால் அதை புரிந்து கொள்ள முடியுமா?

''நான் புரிந்து கொள்வேன். எப்போதுமே.''

எல்லோருமே உணவருந்தும் அறையினுள் செல்ல ஆண்கள் தலையோடு பொருந்தும் அரைவட்ட தொப்பிகளை அணிந்து கொண்டனர்.

டொவ், ஜோர்தானா, அரியும் கிற்றியும், சுதர்லான்டும் சாராவும். அவர்களுடைய இதயங்கள் வேதனையால் வெடித்துக்கொண்டிருந்தன. மேசையின் பிரதான இடத்துக்கு பராக்கின் இடத்தை எடுத்துக் கொள்ள அரி நடந்த போது சுதர்லான்ட் அவன் கையைப் பற்றினார்.

நீ குறையெண்ணமாட்டாயென்றால் .. இங்குபிரசன்னமாயிருக்கும் வயதில் முதிர்ந்த யூத ஆண் நான் தான்... செடெரை நான் சொல்லலாமா?'' சுதர்லான்ட் கேட்டார்.

''அது எங்களைப் பெருமைப்படுத்தும்.'' அரி சொன்னான்.

மேசையின் பிரதான இடத்துக்கு குடும்பத் தலைவனின் இடத்தை ஏற்க சுதர்லான்ட் நடந்து சென்றார். எல்லோரும் அமர்ந்து தங்கள் தங்கள் ஹக்காடா பிரதியை திறந்து வைத்துக் கொண்டனர். சுதர்லான்ட் ஆரம்பிக்கும்படி டொவ் லன்டவ்வுக்கு தலையை அசைத்து சைகை செய்தார்.

டொவ் தன் தொண்டையை சரிப்பண்ணிவிட்டுவாசித்தான். ''வருடத்தின் மற்றைய இரவுகளை விட இந்த இரவு ஏன் விந்தியாசமாக இருக்கிறது?''

இந்த இரவு முக்கியமானது. ஏனெனில், எமது மக்களின் சரித்திரத்தில் முக்கியமான கணமொன்றை கொண்டாடுகின்றோம். அடிமைத்தனத்திலிருந்து சுதந்திரத்தினுள் வெற்றியோடு அவர்கள் பிரவேசித்ததை இந்த இரவில் நாம் கொண்டாடுகிறோம்.

-முற்றும்-

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
01	26	அழகோடு கூட	அழகுடன்
07	03	காணா	கான
07	21	புராதான	புராதன
08	27	ஒட்டிச்	ஒட்டிச்
09	17	இன்னெரு	இன்னொரு
09	19	உணவமும்	உணவகமும்
09	24	ஒய்வு	ஓய்வு
10	12	விடுத்திருக்கிறர்	விடுத்திருக்கிறார்
10	26	தொளிவாக	தெளிவாக
11	16	செலகமாகும்	செயலகமாகும்
18	18	புதிதாக வந் தின்று	இச் சொல்லினை நீக்கி விடவும்
20	03	மகிழ்ச்சியாயிரு	மகிழ்ச்சியாயிரு
21	07	புராதான	புராதன
22	03	பார்த்தால்	பார்த்தாற்
23	14	தொரிகிற	தெரிகிற
24	23	விட்டன்	விட்டான்
28	23	விருபுகிறேன்	விரும்புகிறேன்
29	05	சொல்வதேன்றே	சொல்வதென்றே
29	06	அவள்	அவன்
31	17	அனுமதிக்கமாட்ட்டார்	அனுமதிக்கமாட்டார்
31	29	கேட்டாது	கேட்டது
34	23	நீண்டகால்மாகி விட்டது	இச்சொல்லைநீக்கிவிடவும்
35	05	பயிற்றுதவர்க்கு	பயிற்றுவதற்கு
41	35	மேற்பட் சிறுவர்	மேற்பட்டசிறுவர்
45	01	வெள்ளை	வெள்ளை
45	31	கிளப்பியாபடி	கிளப்பியபடி
45	31	மகிழ்ச்சியல்	மகிழ்ச்சியால்
46	10	வேண்டியவாயிற்று	வேண்டியதாயிற்று
46	10	கிற்று	கிற்றி
46	26	ஜெருசலேமிலிருப்பான்	ஜெருசலேமிலிருப்பான்
47	08	விட்து	விட்டது
52	14	பிடிததிருக்கிறதா	பிடித்திருக்கிறதா
53	22	ஓரு	ஒரு
54	02	தனியார	தனியாத
54	07	கொட்டகைளைப்	கொட்டகைகளைப்

60	37	வற்புறித்திப்	வற்புறுத்திப்
61	11	கழைந்துவிட்டால்	களைந்துவிட்டால்
61	25	செரிந்தாள்	சொரிந்தாள்
61	10	வெறுக்கப்டவில்லை	வெறுக்கப்படவில்லை
61	36	வாழக்கையில்	வாழ்க்கையில்
64	32	கிற்றி	இச் சொல் நீக்கப்பட வேண்டும்
65	07	கண்டிருக்கிறோன்	கண்டிருக்கிறேன்
66	10	கட்டயாம்	கட்டாயம்
67	01	பாடசலை	பாடசாலை
69	10	சிறுயதும்	சிறியதும்
72	07	நோக்குக்குக்	நோக்குக்
75	30	தொடத்ந்தனர்	தொடர்ந்தனர்
78	30	சேர்ந்தன	சேர்த்தன
80	08	ஈர்ந்து	ஈர்த்து
81	19	பாத்துக்	பார்த்துக்
81	26	கில	சில
83	03	தோற்றமளித்து	தோற்றமளித்தது.
84	14	வீடுளை	வீடுகளை
84	35	புராதான	புராதன
87	07	பாத்துத்தான்	பார்த்துத்தான்
87	24	ஜெருசலேம்	ஜெருசலேம்
88	20	தெடர்ந்து	தொடர்ந்து
93	11	எத்தைனையோ	எத்தனையோ
94	25	ட்ரக்குளில்	ட்ரக்குசளில்
95	05	கைவிட்டிருந்தார்ாள	கைவிட்டிருந்தார்கள்
95	07	உணர்ந்தும்	உணர்த்தும்
95	30	கிர	கிரா
96	14	இயக்கப்பபடாத	இயக்கப்படாத
96	34	கொடுத்து	கொடுத்தது
99	21	குவியயொன்றினுள்	குவியலொன்றினுள்
100	05	வந்தது	வந்து
100	10	கொண்டார்	கொண்டாள்
104	24	செலுத்கி	செதுக்கி
106	04	சிருடையின்	சிருடையில்
115	08	கிற்றிக்	சுற்றிக்
115	15	அவன்	அவள்
122	31	வருடங்களக	வருடங்களாக
128	09	வந்த	முன்வந்த
128	31	குரல்	குரலில்
130	02	பயனிகள்	பயணிகள்

139	21	மர	மரண
148	14	எண்ணைய்	எண்ணெய்
153	23	அர	அதி
153	29	தவிர்ப்பதற்க்காக	தவிர்ப்பதற்காக
156	33	டாக்ட்ர்	டாக்டர்
157	21	ஆணியிடும்	ஆணையிடும்
161	06	செயயப்பட்டு விட்டார்	செய்யப்பட்டு விட்டனர்
162	06	கண்டனைக்கு	கண்டனத்திற்கு
165	10	அமைந்திந்ருத	அமைந்திருந்த
166	03	புத்தகத்தின்	புத்தகத்தின் மீது
166	27	செய்யுங்கள்	இச்சொல்லை நீக்கிவிடவும்
167	02	செய்யுங்கள்	இச்சொல்லை வசனமுதலில் சேர்க்கவும்
178	35	அமைக்கவிட்டால்	அமைக்காவிட்டால்
179	06	அங்கிக்கும்	அங்கிருக்கும்
180	06	அனால்	ஆனால்
182	32	கட்சியாள்	கடைசியான
183	01	உடையனிந்திருந்த	உடையணிந்திருந்த
183	15	இனைத்து	இணைத்து
186	19	இந்தனர்	இருந்தனர்
191	12	கொல்லப்படும்	கொல்லப்பட்டும்
197	36	கொண் ருந்தார்கள்	கொண்டிருந்தார்கள்
198	17	வரியைகளைச்	வரிசைகளைச்
205	09	ஏற்படித்தினாள்	ஏற்படுத்தினாள்
205	20	ஒளிப்பண்ணினாள்	ஒளிரப்பண்ணினாள்
215	03	மூழும்	மூளும்
215	24	பே	பேர்
216	04	இருக்கின்றன	இருக்கின்றன
219	17	மனப்பான்மையைக்	மனப்பான்மையை
223	02	பிரச்சனையை	பிரச்சனையை
223	04	பழமையான	பழைமையான
224	26	ஆதரித்தனர்	ஆதரித்தன
224	35	திடீரென	திடீரென
225	36	பிரிட்டினை	பிரிட்டனை
227	22	ஈவித்தனத்தினதும்	சாவித்தனத்தினதும்
228	06	உணர்ந்று	உணர்ந்து
228	35	வக்களிப்பு	வாக்களிப்பு
228	33	தொளிவாயிற்று	தெளிவாயிற்று
228	39	பிரசன்னம்மாகாலும்	பிரசன்னமாகாமலும்
229	13	திருக்கும்	திருக்கும்
229	15	விவரங்கள்	விவாதங்கள்
229	18	எதும்	ஏதும்

229	24	நன்பர்கள்	நண்பர்கள்
229	26	முயற்சிக்யாக	முயற்சியாக
230	5	முன்னான்	முன்னாள்
231	8	நம்பிக்கைய	நம்பிக்கை
232	7	எழுந்நது	எழுந்தது
237	17	யியன்	பியன்
238	10	லெுத்தினார்	செலுத்தினர்
238	11	நடுகள்	நாடுகள்
238	14	ஆங்சிலேயன்	ஆங்கிலேயன்
238	21	பதின்மூறாவது	பதின்மூன்றாவது
238	29	நட்டை	நாட்டை
238	30	படுதியது	படுத்தியது
241	10	புகுந்தனர்	புகுந்தன
243	12	லேலதிக	மேலதிக
243	28	பளத்தாக்கில்	பள்ளத்தாக்கில்
246	13	ட்சத்தில்	பட்சத்தில்
255	10	கிறீஸ்தராக	கிறீஸ்தவராக
264	20	நம்பவேண்டுப்	நம்பவேண்டும்
264	25	தலைமைழ	தலைமைச்
267	1	யாதெனற	யாதென்ற
269	16	பாய்தெழுந்து	பாய்ந்தெழுந்து
271	17	போம்ச்சேரப்	போய்ச்சேரப்
271	26	தேசங்க	சேதங்கள்
272	1	ஒன்றைப்	ஒன்றைச்
272	7	கிபுசில் பழமை	கிபுட்ஸ்ஸில் பழைமை
272	36	லீயன்	லீஜன்
272	37	வாட்டுகளுடன்	வாள்களுடன்
273	10	கட்டுப்பாடனான	கட்டுப்பாடான
273	35	பெரும்பாண்மை	பெரும்பான்மை
274	13	பற்று	பற்றி
274	26	குறிவைத்து	குறிவைத்தது
274	31	சூழப்படானதும்	சூழப்பட்டானதும்
277	32	கொண்டிருக்கிறா	கொண்டிருக்கிறார்
279	36	அபுயேஷஷாந்வி	அபுயேஷாவின்
280	15	நடந்துதந்தது	நடந்துவந்தது
280	25	அசெகரியமான	அசௌகரியமான
281	25	கூயதாகவும்	கூடியதாகவும்
284	14	தாளியங்கித்	தாளியங்கித்
284	25	சிலம்	சிலர்
284	27	எதிர்கொள்ள்ததான்	எதிர்கொள்ளத்தான்
285	33	பிள்ளைகளுக்குக்	பிள்ளைகளுக்குச்
289	04	ஜோர்தான	ஜோர்தானா?

289	28	அடைத்திருக்கும்	அடைந்திருக்கும்
290	19	அதிர்ஷடம்	அதிர்ஷ்டம்
291	31	பழமையான	பழைமையான
292	02	எனகுத்	எனக்குத்
292	23	காணக்கூடியாதாக	காணக்கூடியதாக
295	01	எல்லேச்	எல்லோ
295	02	ஒளிர	ஒளிச்
296	01	இழைய	இளைய
298	34	கண்னிவெடிகள்	கண்ணிவெடிகள்
298	34	வொடித்	வெடித்
299	02	நெருப்புத்	நெருப்புக்
299	08	தாராளமக	தாராளமாக
299	18	சிறடிக்கப்பட்டாலும்	சிதறடிக்கப்பட்டாலும்
300	26	பாத்தான்	பார்த்தான்
301	30	தீடீரென	திடீரென
302	03	எல்லோருக்காவும்	எல்லோருக்காகவும்
304	31	எதிர்பார்த்திருப்தாகச்	எதிர்பார்த்திருப்பதாகச்
307	02	விரடபட்டன	விரட்டப்பட்டன
308	18	பாதுகாத்தோடு	பாதுகாத்ததோடு.
308	34	கொண்னர்	கொண்டனர்
309	15	ஆண்கள்	ஆணிகள்
310	06	விடங்களை	விடயங்களை
310	11	டே விட்கா	டேவிட்கா
315	08	தைப்பிடிகள்	கைப்பிடிகள்
316	28	நான்முனைத்	நான்குமுனை த்
319	28	மற்யை	மற்றைய
321	35	வானெலி	வானொலி
322	24	நன்மைக்காகும்	நன்மைக்காகவும்
322	31	பிரமானங்களின	பிரமாணங்களின்
325	7	குண்டுவீசி	குண்டுகளைவீசி
327	36	கீழ்த்த	கீழ்த்
327	37	ரமான	தரமான
328	36	ஒரு	ஒரு என்னும் சொல் நீக்கப்பட வேண்டும்
329	12	ஜெருகலேம்	ஜெருசலேம்
329	34	ஒட்டிச்	ஒட்டிச்
330	32	கட்டுப்பட்டிலேயே	கட்டுப்பாட்டிலேயே
330	33	மூன்றவது	மூன்றாவது
330	37	கூலிப்பா	கூலிப்ப
331	14	ஒற்றுமையை	ஒற்றுமையை
333	01	ஒடி	ஒடி
334	14	குடியிப்புக்களை	குடியிருப்புகளை
335	14	முடியுமே	முடியுமோ

335	29	உற்சாமின்மை	உற்சாகமின்மை
336	02	ஆயுதங்சளை	ஆயுதங்களை
337	26	குண்டோன்றை	குண்டொன்றை
338	37	கைவிட்டுய்	கைவிட்டுச்
340	22	கொண்டு	இச் சொல்நீக்கப்பட வேண்டும்.
340	30	இரணுவத்துக்கும்	இராணுவத்துக்கும்
341	20	நங்கள்	நாங்கள்
341	22	கலத்துக்குத்	காலத்துக்குத்
341	35	வைக்முடியும்	வைக்கமுடியும்
343	17	ஒன்றாப்	ஒன்றாகப்
244	2	விடதே	விடாதே
344	2	மெதுவகச்	மெதுவாகச்
344	06	கோட்டுக்	கேட்டுக்
344	12	இவகைகளின்	இவைகளின்
344	15	கொல்லப்ப	கொல்லப்
346	27	புறப்பட்ன	புறப்பட்டன.
348	35	வேண்	இது நீக்கப்பட வேண்டும்
349	14	செயலிழக்	செயலிழக்கப்
351	1	யோர்தானாவின்	ஜோர்தானாவின்
351	10	ரெல் அவிவ்	டெல் அவிவ்
352	03	அவிவ்	டெல் அவிவ்
352	12	தொடந்து	தொடர்ந்து
353	20	அகற்றனார்கள்	அகற்றினார்கள்
353	22	செதது	செத்து
354	27	கொண்டியிருப்பதைக்	கொண்டிருப்பதைக்
355	27	மறந்து!	!நீக்கப்படவேண்டும்.
357	02	ஆற்றுப்படுகைகளுடாக	ஆற்றுப்படுக்கைகளுடாக
357	17	பக்கமிருந்து	பக்கமிருந்தும்.
360	11	அர்களுக்கு	அவர்களுக்கு
360	32	அமைத்து	இச் சொல்நீக்கப்பட வேண்டும்
360	35	விசடே	விசேட
364	13	இருபபது	இருப்பது
365	25	கட்டுபாட்டின்	கட்டுப்பாட்டின்
366	10	சந்கே	சந்தே
370	08	விளங்ங்கிய	விளங்கிய
371	05	நாடத்தியது	நடாத்தியது
373	12	Jaffa	Jffa
373	33	சமாதனம்	சமாதானம்
374	08	யிருச் கின்றது	யிருக்கின்றது
383	14	சூடடினேன்	சூட்டினேன்
385	34	வாழ்ந்தார்	வாழ்ந்தார்கள்

391	11	தட்டுப்படாகவே	தட்டுப்பாடாகவே
402	29	உற்சாகமூடடும்	உற்சாகமூட்டும்
405	36	செற்பட்டது	செயற்பட்டது.
415	6	குடிக்யேற்ற	குடியேற்ற
415	14	உழைக்கச்கூடிய	உழைக்கக்கூடிய
416	35	கல்லூரியிலும்	கல்லூரியிலும்
419	24	அனுப்பட்டனர்	அனுப்பப்பட்டனர்.
421	2	தருவதாழ	தருவதாக
421	24	காத்தி	சாத்தி
423	6	நின்றாள்கு	நின்றாள்
423	7	உனக்	உனக்கு
423	14	இபபோ	இப்போ
424	2	இலை	இல்லை
432	23	தயாரைப்	தாயாரைப்
433	31	பிச்சினை	பிரச்சினை
434	16	அமைந்திருக்கிறேன்	அமைத்திருக்கிறேன்
435	9	போலியிருக்கிறது	போலிருக்கிறது
437	25	பகுதில்	பகுதியில்
438	21	தயது	தயவு
439	9	நிலையிலும்	நிலையில்
442	5	தடுமாறிபடி	தடுமாறியபடி
445	01	பேகாதே	போகாதே
445	15	நீ சாயிந்து	நீசாய்ந்து
445	18	காணக்கூடியாதாக	காணக்கூடியதாக